D
V2:11,31 N73
31N73-3731
61611

Tamil Nadu Legislative Assembly Debates

SEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

22nd, 23rd, 24th and 26th March 1973.

VOLUME XXXVII (*Nos.* 1 *to* 4).

Thursday, 22nd March 1973.

	PAGES.
Personnel of the Government of Tamil Nadu ..	i–vi
Principal Officers of the Tamil Nadu Legislative Assembly	vii
List of members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies	ix–xvi
1. Questions and Answers	1–30
2. Announcement—	
Release of Thiru S. M. Durairaj, M.L.A. ..	30
3. Privilege Matter—	
Publication of reply of the Hon. Chief Minister to a question on the Floor of the House in a distorted manner in the daily "Thennagam"	30–31
4. Point of Information—	
Arrest and release of Thiru S. M. Durairaj, M.L.A.	31

PAGES.

A—cont.

5. Voting on Demands for Grants for the year 1973–74—*cont.*

Demand No. 3—Motor Vehicles Acts Administration ..
Demand No. 35—Road Transport Schemes ..
Demand No. 48—Capital Outlay on Road Transport Schemes 32–105

6. Papers laid on the Table 105–106

Friday, 23rd March 1973.

1. Questions and Answers 119–143, 146–148

2. Request for Half-an hour debate 143–146

3. Adjournment Motion—

Failure to settle the dispute between the workers and the management of Wimco .. 148–151

4. Voting on Demands for Grants for the year 1973–74—*cont.*

Demand No. 15—Police 151–311

5. Papers laid on the Table 313

Saturday, 24th March 1973.

1. Questions and Answers 347–374

2. Adjournment Motion—

Disagreement by the Central Government for the Nationalisation of Madras Aluminium Company by Tamil Nadu Government .. 374–381

3. Calling Attention—

Shortage of fertilisers and the consequent hardship caused to the ryots in Tiruttani taluk, Chingleput District 382–384

PAGES.

4. Voting on Demands for Grants for the year 1973–74—*cont.*

Demand No. 24—Cinchona ..
Demand No. 40—Forests ..
Demand No. 49—Capital outlay on Forests .. .. ..
Demand No. 26—Khadi .. 384-418

5. Papers laid on the Table 449

Monday, 26th March 1973.

1. Questions and Answers 453–482

2. Adjournment Motion—

Closure of a section of Ennore Thermal Plant 482–493

3. Government Bills—

Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1973 493–494

Tamil Nadu Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1973 494

4. Demand for Supplementary Grants 1973–74 (Final) 494–497

5. Announcement—

D.S.G. 1973–74, last hour and date for the receipt of Cut Motions 498

6. Voting on Demands for Grants for the year 1973–74—*cont.*

Demand No. 12—Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. ..
Demand No. 10—Milk Supply Schemes 498–560

Demand No. 4—General Sales Tax and other Taxes and Duties—Administration .. 560–603

7. Papers laid on the Table 603–604

வெளியீடு—30—6—1973]
Issued—30—6—1973]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு

OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1973 மார்ச் 22

Thursday 22nd March 1973

தொகுதி XXXVII—எண் 1

Volume XXXVII—No. 1

©
தமிழ் நாடு அரசு
1973

GOVERNMENT OF TAMIL NADU
1973

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU

THIRU KODARDAS KALIDAS SHAH

Members of the Council of Ministers.

1. THE HON. DR. M. KARUNANIDHI, (Chief Minister)-in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Information and Public Relations, Cinematograph Act, Newsprint control, Tamil Nadu Drainage and Water-supply Board, Slum Clearance Board, Film Technology, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation and Youth Service Corps.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, (Minister for Education and Local Administration)-in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, (Minister for Public Health)-in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, (Minister for Labour)-in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, (Minister for Harijan Welfare)-in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Service, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, (Minister for Revenue)-in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச் சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, பயண அனுமதிச் சீட்டுகள், சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, உணவு உற்பத்தி, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அறக்கட்டளைகள், பால்வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம் ஆகியவை நீங்கலாக பால் உற்பத்தி.

7. THE HON. THIRU S. MADHAVAN, (Minister for Industries)-in-charge of Industries, Taxtiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, (Minister for Public works)-in-charge of Public Works, Minor irrigation including special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR, (Minister for Co-operation)-in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Passports and Prices and Supplies of Goods Act.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, (Minister for Agriculture)-in-charge of Agriculture.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY, (Minister for Food)-in-charge of Food, Food Production, Khadi and Village Industries and Rural Industries Project.

12. THE HON. THIRU K. RAJARAM, (Minister for Backward classes)-in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

13. THE HON. THIRU O. P. RAMAN, (Minister for Electricity)-in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, (Minister for Transport)-in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

15. THE HON. THIRU M. KANNAPPAN, (Minister for Religious Endowments)-in-charge of Religious Endowments, Ex-Servicemen, Bhoodan, Gramdan and Milk excluding Operation, Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ.,பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. பழனிவேல் ராஜன்.
திரு. என். கணபதி.
திரு. நா. வீராசாமி.
திரு. கே. ஏ. வகாப்.
திரு. ஏ. சுவாமிதாஸ்.
திரு. நா. காசிராமன்.

சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

கூட்டுச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்

உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம், திரைப்படத் தொழில் நுட்பவியல், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், இளைஞர் அணி.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, சட்ட மன்றம், நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், சிறணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனவளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
1 அண்ணாமலை, திரு. சி.வி. எம்.	காஞ்சிபுரம்.
2 அபுசாலி, திரு. எம். ஏ.	புவனகிரி.
3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை	அரவக்குறிச்சி.
4 அரங்கண்ணல், திரு. இராம.	எழும்பூர்.
5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா).	உப்பிலியப்புரம்.
6 அழகர்சாமி, திரு. சோ.	கோவில்பட்டி.
7 அழகுத் தேவர், திரு. எஸ்.	சாத்தூர்.
8 அனந்தநாயகி, திருமதி த. ந.	மயிலாப்பூர்.
9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்).	புரசைவாக்கம்.
10 அன்புச்செழியன், திரு. நீ.	பெரியகுளம்.
11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. ..	ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.)
12 ஆதித்தனர், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்).	ஸ்ரீவைகுண்டம்.
13 ஆலடி அருணா, திரு. வி.	ஆலங்குளம்.
14 ஆல்டா எம். பௌலர், திருமதி ..	நியமன உறுப்பினர்.
15 ஆறுமுகம், திரு. அ.	எடப்பாடி.
16 ஆறுமுகம், திரு. எஸ்.	வீரபாண்டி.
17 ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
18 இரத்தினசபாபதி, திரு. மு.	விளாத்திக்குளம்.
19 இராசகோபால், திரு. க. மு.	உத்திரமேரூர்.
20 இராசகோபால், திரு. வீ.	வந்தவாசி.
21 இராசமாணிக்கம், திரு. அ.	நாகப்பட்டினம்.
22 இராசமாணிக்கம், திரு. கு.	ஆடுதுறை.
23 இராசரத்தினம், திரு. டி.	ஸ்ரீபெரும்புதூர்.
24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்).	சேலம்-2.
25 இராசு, திரு. ஜெ. எஸ்.	பெரம்பலூர் (செ.வ.)
26 இராதாகிருட்டிணன், திரு. எம். ..	தண்டராம்பட்டு.
27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. ..	பரங்கிமலை.
28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.

டர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
92 சாரதி, திரு. மா. பா.	வேலூர்.
93 சிதம்பரம், திரு. சித.	காரைக்குடி.
94 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ.	சேரன்மகாதேவி.
95 சிவபெருமாள், திரு. கோ.	அரியலூர்.
96 சிறைமீட்டான், திரு. தொ. க.	பரமக்குடி (செ.வ.)
97 சீனிவாசன், மாண்புமிகு திரு. பெ. (துணைத் தலைவர்).	விருதுநகர்.
98 சீனிவாசன், திரு. தொ. ப.	போளூர்.
99 சின்னசாமி, திரு. அ.	செயங்கொண்டம் (செ.வ.)
100 சின்னசாமி, திரு. ஆர்.	தர்மபுரி.
101 சின்னசாமி திரு. மு.	மொடக்குறிச்சி.
102 சின்னசாமி, திரு. வ.	ஏற்காடு (ஆ. வா.)
103 சின்னராசு, டாக்டர் ச. அ.	ஹரூர் (செ. வ.)
104 சின்ன வெள்ளையன், திரு. சி.	சேந்தமங்கலம் (ஆ. வா.)
105 சுந்தரம், திரு. ஒ. என்.	திண்டுக்கல்.
106 சுப்பிரமணியம், திரு. ஏ.	சிங்கநல்லூர்.
107 சுப்பிரமணியம், திரு. எஸ். கே.	சத்தியமங்கலம்.
108 சுப்பிரமணியம், திரு. கே. எம்.	தியாகராயநகர்.
109 சுப்பிரமணியன், திரு. மா.	ஈரோடு.
110 சுப்பிரமணியன், திரு. வீ.	உளுந்தூர்பேட்டை.
111 சுப்பு, திரு. க.	ராஜபாளையம்.
112 சுப்பையா, திரு. ஆ. கு.	கோட்டூர் (செ. வ.)
113 சுப்பையா, திரு. கே. வி.	ஆலங்குடி.
114 சுப்பையா, திரு. ச.	சங்கரன்கோயில் (செ வ.)
115 சுப்பையா, திரு. வ. ஆர்.	கடயநல்லூர்.
116 சுருளிவேல், திரு. மு.	போதிநாயக்கனூர்.
117 சுரேந்திரன், திரு. எம்.	மேட்டூர்.
118 சுவாமிதாஸ், திரு. எ.	பத்மநாபபுரம்.
119 செபமாலை, திரு. கோ.	மங்களூர் (செ. வ.)
120 ஜெயராமன், திரு. கி.	சேலம்-1.
121 செல்லத்துரை, திரு. வீ.	ஓமலூர்.(செ. வ.)
122 செல்லையா, திரு. குழ.	பேராவூரணி.
123 செல்வராஜ், திரு. எம்.	விருத்தாசலம்.
124 சேதுராமன், திரு. சி.	சிவகங்கை.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
125 சோனையா, திரு. த.	மானாமதுரை.
126 சோமசுந்தரம், திரு. ந.	வலங்கைமான் (செ. வ.)
127 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ்.	அருப்புக்கோட்டை.
128 சௌந்தரபாண்டியன், திரு. பெ.	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
129 டென்னிஸ், திரு. என்.	கிள்ளியூர்.
130 தங்கமணி, திரு. கே. டி. கே.	மதுரை மேற்கு.
131 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்).	திருச்சிராப்பள்ளி-2.
132 தருமலிங்கம், திரு. ந.	ரிஷிவந்தியம் (செ.வ.)
133 தவமணித்தேவர், திரு. வி.	சேடப்பட்டி.
134 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி.	நாட்ராம்பள்ளி.
135 தியாகராசன், திரு. அ.	திருமயம்.
136 தியாகராசன், திரு. இ. எஸ்.	திருத்தணி.
137 திருப்பதி, திரு. கு.	மதுரை (சென்ட்ரல்).
138 துரைசாமி திரு. ஏ. க.	குடியாத்தம்.
139 துரைசாமி, திரு. சு.	திருப்பூர்.
140 துரைமுருகன், திரு.	காட்பாடி.
141 துரைராஜ், திரு. சு. ம.	திருவள்ளூர் (செ.வ.)
142 தூயமணி, திரு. மே. சி.	மேட்டுப்பாளையம்.
143 தேவராசன், திரு. எம்.	உதகமண்டலம்.
144 தேவேந்திரன், திரு. அ.	நன்னிலம் (செ. வ.)
145 தோப்பூர் திருவேங்கடம், திரு.	கணியம்பாடி.
146 நடராசன், திரு. ஈ. எம்.	அந்தியூர்.
147 நடராசன், திரு. எஸ்.	தஞ்சாவூர்.
148 நரசிம்மன், திரு. வ. சி.	ஆரணி.
149 நல்லசாமி, திரு. எஸ்.	கரூர்.
150 நாகராஜன், திரு. க.	வடமதுரை.
151 நாகலிங்கம், திரு. பா.	பொன்னேரி (செ.வ.)
152 நாச்சிமுத்து, திரு. நா.	ஒட்டஞ்சத்திரம்.
153 நாச்சியப்பன், திரு. வ. எம். டி.	ஆத்தூர்.
154 நாச்சியப்பன், திரு. ந.	சங்கராபுரம்.
155 நாராயணசாமி, திரு. மா. வே.	திருவொற்றியூர்.
156 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்).	திருவல்லிக்கேணி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
29 இராமநாதன், திரு. சி.	அறந்தாங்கி.
30 இராமலிங்கம், திரு. இரா.	தூத்துக்குடி.
31 இராமலிங்கம், திரு. செ.	கடலாடி (செ.வ.).
32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்).	மேலூர் தெற்கு (செ.வ.).
33 இராமன், திரு. மூ.	கண்டமங்கலம் (செ.வ.).
34 இராஜாங்கம், திரு. என்.	குறிஞ்சிப்பாடி (செ.வ.).
35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே.	கன்னியாகுமரி.
36 இளங்கோவன், திரு. கோ.	திருவையாறு.
37 இளஞ்செழியன், திரு. வீ. சா.	விராலிமலை.
38 எட்டியப்பன், திரு. பூ.	பெரணமல்லூர்.
39 எட்மண்ட், திரு. க. உரொ.	திருச்செந்தூர்.
40 கணபதி, திரு. என்.	பாபநாசம்.
41 கணபதி, திரு. டி.	நாங்குனேரி.
42 கணேசன், திரு. எல்.	ஒரத்தநாடு.
43 கணேசன், திரு. சி.	குற்றாலம்.
44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்).	கிணத்துக்கடவு.
45 கண்ணன், திரு. எம். ஆர்.	பேஸின் பிரிட்ஜ்.
46 கதிரவன், திரு. கா. மு.	தென்காசி.
47 கந்தசாமி, திரு. கே.	உசிலம்பட்டி.
48 கந்தசாமி, திரு. கே. பி.	சாத்தான்குளம்.
49 கந்தசாமி, திரு. எம்.	குளித்தலை.
50 கந்தப்பன், திரு. செ.	திருச்செங்கோடு.
51 கரிவேங்கடம், திரு. மா. வெ.	பாலக்கோடு.
52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்).	சைதாப்பேட்டை.
53 கருணாநிதி, திரு. தாழை மு.	திருவாரூர் (செ.வ.)
54 கருணாநாதன், திரு. சோ.	கூனூர்.
55 கருப்பையா, திரு. ஆ.	கங்கைகொண்டான் (செ.வ.)
56 காசிராமன், திரு. நா.	கும்பகோணம்.
57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி	முதுகுளத்தூர்.
58 காமாட்சி, திரு. கு.	திருவரம்பூர்.
59 கார்த்திகேசன், திரு. வீ.	இராதாபுரம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
60 காவேரிமணியம், திரு. சொ.	திருப்பரங்குன்றம்.
61 காளிமுத்து, திரு. கா.	சிவகாசி.
62 கிட்டப்பா, திரு. என்.	மாயூரம்.
63 கிருட்டிணன், திரு. நா.	பேரணம்பட்டு (செ. வ.)
64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.	நெல்லிக்குப்பம்.
65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ.	திருச்சிராப்பள்ளி-1.
66 கிருஷ்ணன், திரு. கே. ஆர்.	ஊத்தங்கரை.
67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ்.	மதுரை (கிழக்கு).
68 குமாரசாமி, திரு. அ. சே.	திருக்கோயிலூர்.
69 குமாரசாமி, திரு. கே. என்.	பல்லடம்.
70 குருசாமி, திரு. நா. வெ.	ஆண்டிப்பட்டி.
71 கேசவலு, திரு. தே.	கள்ளக்குறிச்சி.
72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ்.	உதனப்பள்ளி.
73 கோபால், திரு. எம்.	குன்னத்தூர் (செ. வ.)
74 கோபால், திரு. கே. பி.	கம்பம்.
75 கோவிந்தசாமி, திரு. வி. செ.	காவேரிப்பட்டினம்.
76 கோவிந்தராசன், திரு. ஆர்.	கடலூர்.
77 கோவிந்தராசன் துரை, திரு.	கந்தர்வகோட்டை.
78 கோவிந்தன், புலவர் கா.	செய்யாறு.
79 கோவை செழியன், திரு.	காங்கேயம்.
80 சகாதேவன், திரு. எஸ்.	செஞ்சி.
81 சங்குமுத்து தேவர், திரு. ச.	அம்பாசமுத்திரம்.
82 சதாசிவம், திரு. செ.	ஆண்டிமடம்.
83 சண்முகசுந்தரம், திரு. அ. ப.	பொள்ளாச்சி.
84 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்).	திருவண்ணாமலை.
85 சண்முகம், திரு. பெரி.	திருவாடானை.
86 சண்முகம், திரு. மு.	விழுப்புரம்.
87 சத்தியமூர்த்தி, திரு. மு.	புதுக்கோட்டை.
88 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்).	பெரம்பூர் (செ.வ.
89 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே.	இராமநாதபுரம்.
90 சம்பத், திரு. டி. வி.	செம்பனார் கோவில்.
91 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதி. (2)
157	நைனாமலை, திரு. இரா.	ராசிபுரம்.
158	பத்மநாபன், திரு. பொ.	திருநெல்வேலி.
159	பத்மாவதி, திருமதி. எ. கோ.	முகையூர்.
160	பரந்தாமன், திரு. ஆ.	கடம்பத்தூர்.
161	பரமசிவம், திரு. எம்.	தாரமங்கலம்.
162	பலராமன், திரு. என். எஸ்.	அரக்கோணம்.
163	பழனிசாமி, திரு. நா.	பொங்கலூர்.
164	பழனிசாமி, திரு. என். கே.	பெருந்துறை.
165	பழனிசாமி, திரு. மு.	வெள்ளக்கோயில்.
166	பழனிச்சாமி, புலவர். சி.	பழனி (செ.வ.)
167	பழனியப்பன், டாக்டர் ச. மு.	கோபிசெட்டிபாளையம்.
168	பழனியம்மாள், திருமதி வி. ப. ..	தாராபுரம்.
169	பழனிவேலன், திரு. க.	வரகூர்.
170	பழனிவேலன், திரு. மு.	நாமக்கல்.
171	பழனிவேலு, திரு. பி.	ஆத்தூர்.
172	பழனிவேல் ராஜன், திரு.	தேனி.
173	பன்னீர் செல்வம், திரு. எம்.	ஆம்பூர் (செ. வ.)
174	பாண்டுரங்கம், திரு. சி.	செங்கம் (செ. வ.)
175	பாலகிருட்டிணன், திரு. கு.	மன்னார்குடி.
176	பாலசுந்தரம், திரு. வை.	அச்சரபாக்கம் (செ.வ.).
177	பாலையா, திரு. எ.	கௌச்சல்.
178	பெரியசாமி, திரு. கு.	கொடவாசல்.
179	பெரியசாமி, திரு. தி. ஒ.	அவினாசி.
180	பெருமாள், திரு. செ.	காட்டுமன்னார்கோயில்.
181	பெருமாள், திரு. எ. ஆர்.	காரியப்பட்டி.
182	பொம்மன், திரு. கு. அ.	கூடலூர் (செ. வ.)
183	பொன் சொக்கலிங்கம், திரு. பி. ..	சிதம்பரம்.
184	பொன்னப்ப நாடார், திரு. ஆர்.	விளவங்கோடு.
185	பொன்னுமலை, திரு. தி.	பனைமரத்துப்பட்டி.
186	பொன்னுரங்கம், திரு. எ. எம். ..	சோளிங்கபுரம்.
187	மணலி கந்தசாமி, திரு. சி.	திருத்துறைப்பூண்டி.
188	மணியன், திரு. பி. எஸ்.	சோழவந்தான்.
189	மதியழகன், திரு. கே.எ.	ஆயிரம் விளக்கு.
190	மருதாசலம், திரு. என்.	பேரூர் (செ. வ.).

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதி. (2)
191	மலைக்கண்ணன், திரு. வீ.	இளையாங்குடி.
192	மலைச்சாமி, திரு. பெ.	மேலூர் வடக்கு.
193	மன்னியப்பன், திரு. சி.	கிருஷ்ணகிரி.
194	மாணிக்கம், திரு. என்.	பென்னகரம்.
195	மாணிக்கவாசகம், திரு. இரா.	தொண்டாமுத்தூர்.
196	மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்)
197	மாரிமுத்து, திரு. எ. ஆர்.	பட்டுக்கோட்டை.
198	மாரிமுத்து, திரு. மூ.	தலைவாசல் (செ.வ.)
199	மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்..
200	முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். ..	மேலப்பாளையம்.
201	முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. ..	லால்குடி.
202	முத்து, திரு. வ.	சங்கரி (செ. வ.)
203	முத்துசாமி, திரு. ப.	வேடசந்தூர்.
204	முத்துச்செல்வன், திரு. பு. செ. ..	முசிறி.
205	முத்துவேல், திரு. ந.	வானூர் (செ. வ.)
206	முத்தையா, திரு. கே. கே.	கடலூர்.
207	முத்தையா, திரு. எம்.	ஒட்டப்பிடாரம் (செ. வ.)
208	முருகையன், திரு. எஸ்.	கலசப்பாக்கம்.
209	முனியாண்டி, திரு. ஆ.	நிலக்கோட்டை (செ. வ.)
210	முனு ஆதி, திரு. மு.	திருப்போரூர்.
211	முனுசாமி, திரு. ரா. ரா.	மேல்மலையனூர்.
212	மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம்.	துறைமுகம் (சென்னை நகரம்).
213	மோசஸ், திரு. ம.	நாகர்கோயில்.
214	ரங்கநாதன், திரு. கே.	கோயம்புத்தூர் (கிழக்கு).
215	ராமசாமி, திரு. இ.	வால்பாறை.
216	ராமசாமி, திரு. ஜி.	திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்).
217	ராமராசன், திரு. வ. க.	பவானிசாகர் (செ. வ.)
218	ராஜா, திரு. எ. எம்.	பவானி.
219	ராஜாராம், திரு. ஜி.	திண்டிவனம்.
220	ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ.	திருமங்கலம்.
221	லத்தீப், திரு. எம். எ.	வாணியம்பாடி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
222 வகாப், திரு. கே. எ.	.. ராணிப்பேட்டை.
223 வடிவேலு, திரு. சீ. க. ..	.. தொட்டியம்.
224 வடிவேல், திரு. எஸ்.	.. சீர்காழி (செ. வ.)
225 விசுவநாதன், திரு. செ. கோ.	.. செங்கல்பட்டு.
226 வீராசாமி, திரு. நா.	.. ஆற்காடு.
227 வெங்கடசாமி, திரு. பி. ..	.. ஹோசூர்.
228 வெள்ளத்துரை, திரு. அ. ..	.. வாசுதேவநல்லூர்.
229 வேதாசலம், திரு. மு.	.. வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்).
230 வேலப்பன், திரு. சி. வே. ..	.. கபிலமலை.
231 வேழவேந்தன், திரு. கா. ..	.. கும்மிடிபூண்டி.
232 ஜேம்ஸ், திரு. ஜே.	.. திருவட்டார்.
233 ஜோதி வெங்கடாசலம், திருமதி.	.. ஸ்ரீரங்கம் (செ. வ.)
234 ஹாண்டே, டாக்டர், எச். வி. ..	.. பார்க் டவுன் (சென்னை நகரம்).
235 வெற்றிடம்	.. கோயம்புத்தூர் (மேற்கு).

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1973 மார்ச் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

FREEDOM FIGHTERS' PENSION.

*461.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon the Chief Minister be pleased to state—

(a) whether a representation has been received by the Government from the Tamil Nadu Freedom Fighters' Council during November 1972 regarding irregular payment of Freedom Fighters' Pension; and

(b) if so the particulars thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) திருவாளர் ஜி. திருவேங்கடம், எம். எம். சுப்பிரமணியம் ஆகிய இருவரும் உண்மையான விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்ல என்று சொல்லப்படுவதாகத் தமிழ்நாடு விடுதலைப் போராட்ட வீரர்கள் குழுவின் இணைப்பாளர் திரு தளவாய் என்பவர் 1972 நவம்பர் திங்களில் அரசின் நாட்டத்திற்குக் கொண்டு வந்தார். அவர்கள் விடுதலை வீரர் ஓய்வூதியத்தைச் சட்ட விரோதமாகப் பெற்று வருகின்றனர் என்றும் அவர் குற்றம் சாட்டினார். இதுபற்றி விசாரணை செய்யப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். திரு ஜி. திருவேங்கடம், விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுபவர் ஆவார். ஓய்வூதியம் வழங்க ஒப்பளிப்பதற்கு முன் அவர் விடுதலைப் போராட்ட வீரர் தானா, சான்றுள்ளதா, என்பன குறித்து சென்னை, மத்திய சிறைச்சாலையில் விசாரித்து சிறைச் சான்றிதழும் பெறப்பட்டது. வெளிநாட்டுத்துணி விற்கும் கடைகளின் முன் மறியல் செய்ததற்காக 12—6—1930 முதல் 11—12—1930 வரை அவர் சிறையிலிருந்தார். மேலும், சிறைச்சாலையில் அவர் இருந்ததற்குச் சான்றாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் திரு சி. சுப்பிரமணியம் அவர்களிடமிருந்தும், வடசென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியிடமிருந்தும், பெற்ற சான்றிதழை வாங்கி அனுப்பியிருந்தார். 1—1—1969 முதல் அவருக்கு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கப்பட்டது. திரு. எம். எம். சுப்பிரமணியம் என்னும் பெயருடைய எவரும் விடுதலைப் போராட்ட வீரரர் ஓய்வூதியம பெறவில்லை என்று, சென்னை, சம்பள கணக்கு அதிகாரி தெரிவித்தார். எனவே, சட்டவிரோதமாக அவர்களுக்கு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது என்னும் திரு. தளவாய் சுமத்திய குற்றச்சாட்டு ஆதாரமற்றதாகும்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் உண்மையிலேயே விடுதலைப் போராட்ட வீரர்கள்தான் என்பதற்கு அதிகாரிகளைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறதா ? அது மட்டும் அல்லாமல், இப்படிச் சில பெரிய காங்கிரஸ்காரர்களிடமிருந்து அவர்கள் சிபார்சுச் சீட்டு வாங்கிக்கொண்டு வந்தால் இத்தகைய ஓய்வூதியம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்கள் இல்லையென்றாலுங்கூட, அவர்கள் பேரிலுள்ள அனுதாபத்தினால் சில பேருக்கு சிபாரிசுச் சீட்டுகள் கொடுக்கப்படுவதாக அறியப்படுகிறது. அப்படிப் பட்ட தகவல் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெரிய காங்கிரஸ் தலைவர்கள் அல்லது முன்னாள் காங்கிரஸ் அமைச்சர்கள் சான்றிதழ் தரும்போது, தங்களோடு அவர்கள் சிறையில் இருந்தார்கள் என்ற வகையில் குறிப்பிட்டிருந்தால் அது பரிசீலிக்கப்பட்டு, தகுதியுடையவர்களாக இருந்தால் அவர்கள் விடுதலைப் போராட்ட ஓய்வூதியம் பெறத் தகுதி பெற்றவர்கள் என்ற பட்டியலில் சேர்க்கப்படுகிறார்கள். அவர்கள் உண்மையானவர்களா என்று கண்டுபிடிப்பதற்கு சிறைச்சாலையில் அவர்கள் இருந்ததற்கான சான்றிதழும் கோரப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, தமிழக விடுதலைப் போராட்ட வீரர்கள் விருதுகள் பெற டில்லிக்குச் சென்றிருந்த போது, மற்ற மாநிலங்களிலிருந்து வந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் தமிழக சர்க்கார் தந்துவரும் ஓய்வூதியத்தைக் கேள்விப்பட்டு மிகவும் ஆச்சரியப்பட்டதாகச் சொல்கிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒன்றிரண்டு மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் இந்த ஓய்வூதியம் தரப்படுவதாகத் தகவல் இல்லை. ஒருவேளை அதனால் அவர்கள் ஆச்சரியப்பட்டிருக்கக்கூடும்.

திரு. ஆ. பரந்தாமன் : இப்படித் தவறான செய்திகளைச் சொல்லி இந்த ஓய்வூதியத்தைப் பெற்றுவிடுபவர்களிடமிருந்து மீண்டும் அந்தத் தொகையை அரசு வசூலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்ல என்று சொல்லப்பட்டதுதான் தவறான தகவல். திரு. திருவேங்கடம் என்பவர் விடுதலைப் போராட்டவீரர் என்பது உண்மையான தகவல். அவரைக் குறித்து திரு தளவாய் என்பவர் சொன்னதுதான் தவறான தகவல்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத்தைப் பெற குறிப்பிட்ட காலம் சிறைபடாமலிருந்தாலுங் கூட, விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் உடல் ஊனமுற்றிருந்தால் அவர்களுக்கு ஓய்வூதியம் தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு உரிய நிலையில் உள்ளவர்கள் இல்லையென்றாலுங்கூட அரசு அப்படிப்பட்டவர்களையெல்லாம் சில நேரங்களில் அனுதாபத்தோடு கவனித்து ஆவன செய்து வருகிறது.

திரு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு அளிக்கின்ற ஓய்வூதியத்திலும், அதுபோல் தாமிர பத்திரம் பெற்றவர்களுக்குக் கொடுக்கின்ற ஓய்வூதியத்திலும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா ? இரண்டு பேர்களுக்கு ஒரே மாதிரி ஓய்வூதியம் கொடுக்கப்படுகிறதா ? அப்படியென்றால், தாமிர பத்திரம் பெற்றவர்களை மத்திய சர்க்கார் மதிக்கும் வகையில் இன்னும் சற்று அதிக அளவு ஓய்வூதியம் மத்திய சர்க்கார் அளிக்க வேண்டும் என்று நம்முடைய அரசாங்கம் ஏதாவது சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆறு மாதங்களுக்கு மேல் சிறைச்சாலையில் இருந்தவர்களுக்கு மத்திய சர்க்கார் சற்று அதிகத் தொகை வழங்குகிற அளவில் ஓய்வூதியத் திட்டத்தை இப்பொழுது அமுல்படுத்தி வருகிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், தாமிர பத்திரம் பெற்றவர்களாக இருந்தாலும் பெறாதவர்களாக இருந்தாலும், அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இப்பொழுது அளிக்கப்படுகிற மானியத்தைத்தான் பெற்று வருகிறார்கள்.

திரு ந. தருமலிங்கம் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் ஓய்வூதியத்தைப் போல் விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைச்சாலைக்குச் சென்ற தியாகிகளுக்கும் வழங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விலைவாசி உயர்ந்திருக்கிற காரணத்தால் அப்படிப்பட்ட திட்டம் எதும் அரசின் கையில் இல்லை.

திரு கே. எ. வகாப் : மத்திய சர்க்கார் அளிக்கும் ஓய்வூதியத்தை நம்முடைய மாநில அரசாங்கம் அளிக்கும் ஓய்வூதியத்தைக் கழித்துக் கொண்டு கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. நம்முடைய தமிழக அரசை விட அவர்களிடத்தில் அதிக அக்கரை காட்ட வேண்டிய மத்திய சர்க்கார் இதைக் கழிக்காமல் அவர்களுக்குத் தர அரசு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆறு மாத காலம் சிறையில் இருந்த அப்படிப்பட்டவர்களுக்கு ரூ. 200 என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ரூ. 75 மாநில சர்க்காரிடமிருந்து பெற்றுவிடுவதைக் கழித்துக்கொண்டு தருவதுதான் முறை என்று மத்திய சர்க்கார் கருதுகிறது. அதிலே நாம் குறுக்கிடத் தயாராக இல்லை.

திரு ஆ. பரந்தாமன் : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் சிலர் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தாலும், அதற்கான சான்றிதழை அவர்கள் பெற முடியவில்லை. அப்படிப்பட்டவர்கள் இந்த ஓய்வூதியத்தைப் பெற அரசு எந்த வகையில் ஆவன செய்யும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் முன்பே சொன்னேன் அப்படிச் சான்றிதழ் பெற முடியாதவர்கள் தங்களோடு சிறையில் இருந்த காங்கிரஸ்காரர்களில் பெரியவர்கள் அல்லது முன்னாள் அமைச்சர்கள் மூலமாகச் சான்றிதழ் பெற்றால் அது பரிசீலிக்கப்படுகிறது என்று

சொன்னேன். அப்படிப் பல பேர் முன்னாள் அமைச்சர்களிடமிருந்தும், காங்கிரஸ் பெரியவர்களிடமிருந்தும் இதுபோன்ற சான்றிதழைப் பெற்றிருக்கிறார்கள். அவைகளைப் பரிசீலித்து ஏற்றுக் கொள்ளப்பட்டவை சிலவும், ஏற்றுக்கொள்ளப்படாதவை சிலவும் உள்ளன.

திரு. ந. தருமலிங்கம் : 1967-ம் ஆண்டுக்கு முன்னால் எத்தனை விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கிறது ? அதற்குப் பிறகு கழக ஆட்சியில் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1966-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. 1966-ம் ஆண்டு ஐந்து பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. 1—1—1967 முதல் 21—3—1973 வரையில் 7,673 பேருக்கு இந்த ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. இரத்தினசபாபதி : காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கட்டபொம்மன் வாரிசுகளுக்கு அரசியல் தியாகிகளுக்கு அளிக்கப்படுவதுபோல் ஓய்வூதியம் தரும் முயற்சியை நிராகரித்ததுபோல் இல்லாமல் இப்பொழுது இந்த அரசு ஏற்றுக் கொண்டு அளித்து வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வீரபாண்டியக்கட்டபொம்மனுடைய சந்ததியினர்களுக்கு இந்த அரசு அவர்களுடைய கோரிக்கையை ஏற்று வீரபாண்டியக்கட்டபொம்மன் குடும்பத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியக் கட்டபொம்மன்துரை, திரு. சைவ வீரபாண்டியதுரை, திரு. ஊமைத்துரை என்பவருடைய மக்களான திரு. சுப்பிரமணிய கட்டபொம்மன்துரை, திரு. ஜெகவீரபாண்டியதுரை, திரு. சின்னபொம்முதுரை ஆகிய ஐந்து பேர்களுக்கு இந்த ஓய்வூதியம் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அளிக்கப்படுகிறது.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, எப்பொழுதும் இல்லாத அளவிற்கு இந்த அரசு வந்ததற்குப் பின்னால் விடுதலை போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் தரப்படுகிற நேரத்திலே இந்த அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி நடைபெறுகிறபொழுது ஒரு சிலர் அரசுக்கெதிராக அதற்றில் ஈடுபட்டு கெடுதல் விளைவிக்கின்றார்களே, அவர்களைப்பற்றிய புகார்கள் வந்தால் அதைப் பரிசீலித்து ஓய்வூதியம் அவர்களுக்குத் தரப்படுவதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஓய்வூதியம் தரப்படுவது அரசாங்கத்தை அவர்கள் வாழ்த்த வேண்டுமென்பதற்காக அல்ல. ஏற்கனவே அவர்கள் செய்த தியாகத்திற்கு மதிப்புக் கொடுத்து அரசு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து வருகிறது. அவர்கள் நன்றி பாராட்ட வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது.

திரு. காதர்பாஷா என்கிற வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, கட்டபொம்மன் வாரிசுக்கு நம்முடைய அரசு தியாகிகள் மானியம் வழங்கி வருவதைப் போன்று சின்ன மருது, பெரிய மருது போன்றவர்களின் பரம்பரையினருக்கும் தியாகிகள் மானியம் வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உண்மையான வாரிசுகள் யார் என்று தெரிந்தால் அதைப்பற்றிக் கவனிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைவதற்காக ஏற்பட்ட போராட்டத்திலே ஈடுபட்ட தியாகிகளுக்கு பென்ஷன் வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்று ஏற்கனவே முதலமைச்சர் அவாகள் கூறியிருக்கிறார்கள். அதற்கான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த விவரங்கள் எந்த அளவிற்குச் சேகரிக்கப்பட்டிருக்கின்றன, அதைப் பற்றி அரசாங்கம் என்ன முடிவு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே சிறை சென்றவர்களுக்கு இதுபோன்ற ஓய்வூதியம் தரப்படுமா என்ற கேள்விக்கு நான் பதில் அளிக்கும்போது திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கன்னியாகுமரி தாய்த்தமிழகத்தோடு இணைவதற்காகப் போராடியவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படுமா என்று கேட்டார்கள். நான் அதற்குப் பதிலளிக்கும்பொழுது இரண்டும் சேர்த்து ஆலோசிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். இரண்டும் சேர்த்து ஆலோசிக்கப்படும்.

திரு. சங்கரலிங்கனார் குடும்பத்திற்கு ஓய்வூதியம்.

* 462 வினா—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்காக உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் குடும்பத்திற்கு அரசு உதவித்தொகை அளிக்க திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம். தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்காக உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் மனைவி திருமதி செந்தியம்மாளுக்கு மாதம் ஒன்றுக்கு ஓய்வூதியம் ரூ. 150 26—1—1970லிருந்து அவர் ஆயுள்வரை அரசு 1970 பிப்ரவரி மாதம் வழங்கியுள்ளது.

திரு. இ.எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, திருத்தணி வட்டம் தமிழகத்தோடு இணைவதற்காக சிலம்புச் செலவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் சிறைசென்றவர்களுக்கும், அதிலே உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்கும் மானியங்கள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாடு, மொழி, எல்லை இவைகளைக் காக்கப் போராடியவர்கள் யாராக இருந்தாலும் அரசு கவனிக்கும்.

திரு. மே.சி. தூயமணி : தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்காக உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கு சென்னை நகரிலே சிலையமைக்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : இன்னும் அவர்கள் சொந்த ஊரில் சிலை அமைத்ததாகத் தகவல் இல்லை. அதற்குப் பிறகு அதைக் கவனிக்கலாம்.

<u>திரு. ஆ. பரந்தாமன்</u> : தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே தமிழகத்தின் வரலாற்றை எழுதுகிற நேரத்திலே அதிலே தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் பெயரும் இணைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்பதற்காகப் போராடியவர்கள் பெயர்கள் எல்லாம் தமிழ்நாடு பெயர்வந்த வரலாறு எழுதப்படுகிற நேரத்திலே நிச்சயமாக இடம்பெறும்.

<u>திரு. ப. முத்துசாமி</u> : மொழிப் போராட்டத்திலே உயிர்நீத்த தியாகிகள் குடும்பத்திற்கும் இதுபோன்ற மானியங்கள் கொடுக்க அரசு முன்வருமா ?

<u>மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்</u> : ஏற்கனவே அதற்குப பதில் சொல்லியிருக்கிறார்கள்.

<u>திரு. வை .பாலசுந்தரம்</u> : காங்கிரஸ் ஆட்சியிலே உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த சங்கரலிங்கனார் பிறந்த ஊரிலே. காங்கிரஸ் ஆட்சி அவருக்கு நினைவாலயம் எழுப்பப்பட்டது உண்மையா ?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : காங்கிரஸ் ஆட்சியிலே அவர் இறந்ததுதான் நினைவு.

<u>திரு. ந. தருமலிங்கம்</u> : சட்டப் பேரவைத் துணைத்தலைவரவர்களே, அதேபோல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது உயிர்நீத்தத் தியாகிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற சலுகைகளை உயர்த்த அரசாங்கம் முன் வருமா ?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : இப்பொழுதுதான் அப்படிப்பட்ட குடும்பங்களுக்கு மானியத்தொகை அளிக்கப்பட்டு அது அமுலில் இருந்து வருகிறது. உடனடியாக உயர்த்த உத்தேசம் இல்லை.

<u>திரு. கே. எ. வகாப்</u> : தலைவர் அவர்களே, இந்த நாட்டின் பெயர் மாற்றத்திற்காக உயிர் துறந்த திரு. சங்கரலிங்கனார் போன்றவர்களுக்கு சிலையமைப்பதை விட்டுவிட்டு அவர்களுடைய வாரிசுகளுக்குக் கல்விச் சலுகைகள், மற்ற குடும்ப உதவிகள் இவற்றைச் செய்து நல்ல பயனுள்ள வகையிலே செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : இதை மனத்திலே வைத்துதான் சங்கரலிங்கனார் துணைவியாருக்கு 1970-ம் ஆண்டு முதல் அவர் ஆயுள்வரை மாதம் ரூ. 150 ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்தது. சங்கரலிங்கனார் நினைவாக இந்த மண்ணுக்குத் "தமிழ்நாடு" என்று பெயர் வைத்திருக்கிறோம். அதுவே அவர்கள் செய்த தியாகத்திற்கு நல்ல மரியாதை ஆகும்

Development of Bharathanatyam.

*463 Q.—THIRU N. DENNIS.—Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) the steps taken by the Sangeetha Nataka Sangam to promote the Bharathanatyam in this State ; and

(*b*) the details of the Barathanatyam vidwans who have been encouraged in this respect ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ.,இ) விடை* அச்சடிக்கப் பட்டு அவையில் வைக்கப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS.—May I know whether the Government will start an institute of Bharatha Nattiyam, as it has international repute ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : பரத நாட்டியத்தைச் சொல்லிக் கொடுப்பதற்காக பல்வேறு பள்ளிகள் இருந்து வருகின்றன. கர்நாடக சங்கீத இசைக் கல்லூரியில் பரத நாட்டியம் சொல்லிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் சென்ற இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

<u>திரு. ந. தருமலிங்கம்</u> : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரதநாட்டியம் என்ற பெயரிலே ஆண்களும் பெண்களும் கட்டிப்பிடித்து ஆபாச நடனம் நடத்துகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அந்தக் கலைக்குக் களங்கம் கற்பிக்கின்ற அத்தகைய பேர்வழிகள்மீது கடும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : அப்படிப்பட்ட நடன நிகழ்ச்சிகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அரசுக்குத் தெரியாது. பரதநாட்டியத்திற்கு என்று சில இலக்கணங்கள், முறைகள், வகைகள், இருக்கின்றன. அந்த முறையிலேதான் சிறந்த முறையிலே போற்றிப் பாராட்டப்படுகிறது. அது நல்ல முறையிலே வளர்ச்சியும் பெற்று வருகிறது. உலக நாடுகளில் இருந்து இங்கு வந்து தங்கி சிலர் அதிலே தேர்ச்சி பெற்றுச் செல்கின்ற பாங்கினையும் நாம் காணுகிறோம். இந்தக் கலையிலே தேர்ச்சிப் பெற்றவர்கள் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கே அரங்கேற்றம் செய்து சிறந்த பாராட்டுதல்களைப் பெற்றும் இருக்கிறார்கள்.

<u>திரு. மே.சி. தூயமணி</u> : தலைவர் அவர்களே, திருக்கோயில்களின் மூலமாகத்தான் இந்தப் பரதநாட்டியம் முன்னாலே வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? தஞ்சையிலே இராஜராஜ சோழன் நிவந்தம் என்ற ஒன்றை ஏற்படுத்தி அந்தக் கலை நல்ல முறையிலே வளர்க்கப்பட்டிருக்கிறது. எனவே திருக்கோயில்கள் மூலமாக இதனை வளர்க்க அரசு முயற்சிக்குமா ?

* 107—108-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திருக்கோயில்கள் மூலமாகத்தான் என்றல்ல. நமக்குத் தெரிந்த அளவிற்குத் திருக்கோயில்கள் மூலமாக என்று கூறுகிறோம். அந்தக் காலத்திலேயே பொது அவை, வேந்தவை என்ற இரண்டு அவைகள் இருந்தன என்றும் அந்த இரண்டு அவைகளிலே பொதுவாக எல்லோரும் பார்க்கக்கூடிய அவை பொது அவை என்றும் வேந்தன் மட்டும் அமர்ந்து பார்க்கக்கூடிய அவை வேந்தவை என்ற அளவிலேயும் இரண்டு அவைகளிலே நடைபெற்று வந்திருக்கின்றன என்பதை வரலாற்று மூலமாக நாம் காண்கிறோம்.

நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய சான்றுகள் எல்லாம் கோயில்கள்தான், கோயில்கள் மூலம்தான் கிடைத்திருக்கின்றன. வேறு பல கட்டடங்களிலோ அல்லது அரண்மனைகளிலோ நமக்குச் சான்றுகள் கிடைக்காத காரணத்தினாலேதான் கோயில்களிலே கிடைத்த சான்றுகளை வைத்துக் கொண்டு கோயில்கள் மூலமாக வளர்ந்திருக்கிறது என்று சொல்கிறோம். ஆகவே கோயில்களிலும் வளர்ந்திருக்கின்றன. வேறு பல இடங்களிலும் வளர்ந்திருக்கின்றன.

திரு சொ. காவேரிமணியம் : பரத நாட்டியக் கலையினுடைய நுண்பொருடகளை, சாதாரண மக்களுக்கு விளங்குவதற்காக அரசின் சார்பிலே பயிற்று நிலையங்கள் ஏதாவது இருக்கின்றனவா? இல்லையென்றால் ஏதாவது நிறுவுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கர்நாடக இசைக் கல்லூரியிலே பரதநாட்டியம் கற்றுக் கொடுப்பதற்கான பிரிவு துவக்கப்பட்டு நடைமுறையிலே இருந்துவருகிறது. இதைத் தவிர தனியார்கள் பல்வேறு முயற்சிகள் மூலம் அந்தக் கலையைச் சொல்லிக் கொடுத்துவருகிறார்கள்.

திரு ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இப்பொழுது பெண்கள்தான் அதிகமாக கலையிலே பயிற்சி பெற்று வெளி நாடுகளுக்குச் சென்று அரங்கேற்றம் செய்கிறார்கள். தமிழ்நாட்டிலேயே ஆண்களும் அந்தக் கலையிலே தேர்ச்சிபெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களையும், ஊக்குவித்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு பெயர் பெற்ற சிலர்—ஆண்களும் பெண்களும் இருசாராரும்—செல்கிறார்கள். சிலர்—அங்கேயே சென்று குடியேறியும் விடுகிறார்கள். அங்குச் சென்று அறிமுகப்படுத்திய காரணத்தினால் இங்கும் சிலர் வந்து பயிற்சியை மேற்கொள்கின்றார்கள். ஆனால் பெண்கள்தான் பெரும்பாலானவர்களாக இருக்கிறார்கள்.

திரு கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, பரதநாட்டியம் ஒரு கலை மட்டுமல்ல, நல்ல தேகப் பயிற்சி என்பதால் கல்லூரிகளிலே அதை விரும்புகின்றவர்கள் படிக்கக்கூடிய வகையிலே அதைப் பாடமாகத் துவக்கி அரசு ஊக்கம் அளிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிகளிலே அதற்கான பாடத்திட்டங்கள் வகுப்பதற்கான செயற்குறிப்பு இல்லை. கர்நாடக இசைக் கல்லூரியிலே அப்படிப்பட்ட பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, நாடகக் கலையை வளர்ப்பதற்கு ஒரு பயிற்சிப் பள்ளியை உருவாக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பிலிம் இன்ஸ்டிட்யூட்டோடு சேர்த்து நாடகக் கலைப் பயிற்சியும் அளிப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நாட்டிய நாடகத்திற்கு மானியம் அளிக்கின்ற திட்டத்தின்கீழ் சிறந்த நாட்டிய நாடகத்திற்கு மூன்று ஆயிரம் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சந்திரகாந்தாவின் சிவகாமியின் சபதம் என்ற சிறந்த நாட்டிய நாடகம் இப்பொழுது நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. அந்த நாடகத்திற்கு மானியத் தொகை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சிபாரிசு பண்ணலாமா நீங்கள்? (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தக் குழுவினருக்கு நிதி உதவி செய்ததாகத் தகவல் இல்லை. அவர்கள் முறைப்படி விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, பாரதப் பண்பாட்டை விளக்கும் பாரம்பரியமுள்ள ஒரு கலையாகவும் இது இருப்பதால், இந்தக் கலையை உலகெங்கும் பரப்புவதற்கு மத்திய அரசினுடைய உதவி கோரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பொதுவாக, சங்கீத நாடக சங்கத்திற்கு மத்திய அரசு உதவி தரப்படுகிறது. குறிப்பிட்டு, இதற்கென்று தரப்படவில்லை. மத்திய அரசு சார்பாக பரிசுகள் தரப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே 3 ஆசிரியர்களும் 4, 5, கலை வல்லுநர்களும் அத்தகைய பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

திரு வி. கே. இராஜாப்பிள்ளை : முன்பு அரசர்கள் அல்லது வேந்தர்கள் ஆட்சி செய்து வந்த காலத்தில் அரசவை ஆஸ்தானக் கவிஞர்கள் என்பவர்களை நியமித்து அவர்களுக்கு ஊக்கம் அளித்ததைப் போல, இப்பொழுதும் பரத நாட்டிய வித்துவான்களை, மற்றும் கலை வல்லுநர்களை அரசாங்க வித்துவான்களாக அல்லது ஆஸ்தான வித்துவான்களாக நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை. ஆனால் பல்வேறு துறைகளிலே,

கலைத் துறைகளிலே திறமைபெற்று விளங்குகிறவர்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள், சான்றிதழ்கள், பாராட்டுக்கள், பட்டங்கள் வழங்குகின்ற முயற்சி கடந்த 10, 15 ஆண்டுகாலமாகத் தொடர்ந்து வருகிறது.

குளித்தலையை நகராட்சியாக்கல்

*464 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை பேரூராட்சியை நகராட்சியாக மாற்றியமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அமுலுக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை பற்றி அரசு ஒரு முடிவு எடுத்தப் பின்னர் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

திரு. அ. பரந்தாமன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளை, நகராட்சிகளாக மாற்ற வேண்டுமானால் முன்பு ரூ. 10,000 வருமானம் இருக்கவேண்டுமென்று இருந்தது. இப்பொழுது அதை ரூ. 30,000 ஆக உயர்த்தியிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். அது உண்மையா? அப்படியென்றால், ரூ. 30,000 வருமானம் இல்லாத நகராட்சிகளை மீண்டும் பேரூராட்சிகளாக மாற்றுகின்ற செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைப்பற்றியெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. பேரூராட்சிகள், நகராட்சிகளாக வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 20,000 மக்கள் தொகை இருக்கவேண்டும். வருவாய் ரூ. 1 லட்சமாவது இருக்கவேண்டும். அந்த வகையிலே பேரூராட்சிகள் நகராட்சிகளாக்கப்படும். சிற்றூராட்சியைப் பேரூராட்சியாக்குவதற்கு 5,000க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருக்கவேண்டும். ரூ. 20,000-க்கு மேற்பட்ட வருவாய் இருக்க வேண்டும். இது 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டதன் காரணமாக, இப்பொழுது மக்கள் தொகை வளர்ந்திருக்கிற அளவுக்கும் வருவாய் இனங்கள் வளர்ந்திருக்கின்ற அளவுக்கும் அந்தத் தொகையை உயர்த்தலாமா என்பது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, குழித்துறை பேரூராட்சிக்கு அமைச்சர் சொன்ன எல்லா முறைகளும் அமைந்திருக்கின்றன. ஆகவே, கூடிய விரைவிலே அதை நகராட்சியாக அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், அது பரிசீலனையில் இருக்கிறது. குழித்துறைப் பேரூராட்சியை நகராட்சியாக ஆக்க வேண்டுமென்றால் கணிச

மான அளவுக்கு பல காரணங்களுக்காக அதனைச் சார்ந்த பகுதிகள் சிலவற்றைச் சேர்த்தால்தான் நகராட்சியாக மாற்ற முடியும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. இதைத் துறையினர் ஆராய்ந்து வருகிறார்கள். ஆராய்ந்த பிறகு, அவைகளைச் சேர்த்தப் பிறகு, ஒப்புதல் தரப்படும். இதையெல்லாம் ஆராய்ந்த பிறகுதான் திட்டவட்டமான முடிவு எடுக்கப்படும்.

திரு சொ. காவேரிமணியம்: இவ்வாறு பேரூராட்சிகளை நகராட்சி மன்றங்களாக ஆக்குவதற்கான வழிமுறைகள் பல பேரூராட்சிகளுக்குப் பொருந்தியிருக்கின்றன. உள்ளபடியாக ஏரியாவைப் பொறுத்தவரையிலேயும், வரக்கூடிய வருமானத்தைப் பொறுத்தவரையிலேயும், வாழ்கின்ற மக்கள் தொகையை பொறுத்தவரையிலேயும் எல்லாவிதமான விதிமுறைகள் பொருந்தியிருந்தும் பல பேரூராட்சிகள் நகராட்சிகளாக ஆகாமல் இருக்கின்றன. இதற்குக் காரணம் ஆண்டுதோறும் இவ்வளவுதான் நகராட்சிகளாக வரவேண்டுமென்று அரசு ஏதாவது செயற்குறிப்பு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மக்கள் தொகையும் குறிப்பிட்ட அளவு இருக்கவேண்டும். வருமானமும் குறிபிட்ட அளவு இருக்கவேண்டும். சில பல இடங்களிலே பேரூராட்சிகளை உடனடியாக நகராட்சிகளாக ஆக்கவேண்டாமென்று ஏகோபித்து கருத்து தெரிவிக்கிறார்கள். பேரூராட்சிகளை நகராட்சிகளாக ஆக்க வேண்டாமென்று ஏகோபித்து தெரிவிக்கிற அவர்களுடைய விருப்பம் கணிகிற அளவுக்கு அந்தத் திட்டங்கள் சில காலம் விடப்பட்டிருக்கிறது. சில இடங்களிலே பேரூராட்சிகளை நகராட்சிகளாக்க முயற்சிகள் செய்கிறார்கள். சில இடங்களிலே சில பகுதிகளைச் சேர்த்தால்தான் முடியும். அதைச் சேர்க்கும்போது சில பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அந்த வகையிலே தான், எல்லோருடைய ஒப்புதல் அடிப்படையிலே முடிவுகள் எடுக்க வேண்டியிருக்கிறது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, பேரூராட்சிகளை நகராட்சிகளாக ஆக்குவதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய மானியம் வழங்குகின்ற காரணத்தால், அதனுடைய சம்மதம் பெறப்பட்டிருக்கிறதா? அந்த அடிப்படையிலே முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை. மாநில அரசு அளவிலேயே இதுபற்றித் திட்டவட்டமான முடிவு எடுக்கலாம்.

பஞ்சாயத்துப் பகுதிகளிலுள்ள புறம்போக்கு நிலங்கள்

*465 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்துப் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமித்துள்ளவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரித் தொகையை அந்தந்த ஊராட்சிகளுக்கே ஒப்படைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசு இந்த விஷயத்தைப் பற்றி பரிசீலித்து, தற்சமயம் அமலில் உள்ள விதிமுறைகளுக்கு எந்தவிதமான மாற்றமும் தேவையில்லை என்று முடிவெடுத்திருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து புறம்போக்குகளில் பழத் தோட்டங்கள் போன்றவற்றை அமைக்கிற திட்டத்தை நாம் கைவிட்டிருக்கிறோம். ஆகவே, அப்படிப்பட்ட புறம்போக்குகளில் தனியார் ஆக்கிரமிப்பு செய்கிறார்கள். ஆகவே, அந்த புறம்போக்கு நிலங்களில் வருகிற வருவாயைக் கொடுத்தால், ஊராட்சிகள் விளக்கேற்றுவது போன்ற செலவுகளை கவனிக்க முடியும். ஆகவே, அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சில இடங்களில் அரசாங்கத்திற்கு சொந்தமான புறம்போக்குகள் இருக்கின்றன. சில இடங்களில் அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்குகள் பேரூராட்சிகள், ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஒப்படைக்கப்பட்டதிலிருந்து வருகிற வருவாயை, அந்தந்த ஊராட்சிகள், நகராட்சிகள் பெறுவதிலே ஆட்சேபனை இல்லை.

ஆனால் அரசாங்கத்தின் சார்பாகவே, அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கிலே இருந்து வருகிற வருமானம் அரசாங்கத்திற்குத்தான் வரவேண்டுமென்று இருக்கிறது. ஊரைச் சேர்ந்த புறம்போக்கிலிருந்து பெறுகின்ற வருவாயை அல்லது ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து பெறுகின்ற தொகையை, நகராட்சிக்கு, ஊராட்சிக்கு அளிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்திருக்கிறார்கள். துறையினர் ஆராய்ந்து பார்த்து அந்த மாற்றங்கள் தேவையில்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவர் அவர்களே, பஞ்சாயத்து சட்டப்படி ஒதுக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களை ஏலம் விட்டு பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்த அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பொது உத்தரவாக இடமுடியாது. எங்காவதிருந்து, தேவைப்படுகிறது என்று அரசாங்கத்தைக் கோரினால், அதிலே காரண காரியங்கள் இருக்குமானால், அரசாங்கம் தேவையைக் கவனித்து, அனுமதி அளித்து வருகிறது.

திரு. கு. காமாட்சி: ஊராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கிற புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து வெளியேற்ற ரெவினியூ டிபார்ட்மெண்டுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது. அதை மாற்றி, ஊராட்சி ஒன்றியத்திற்கே அந்த அதிகாரத்தைக் கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றி விவரம் இல்லை. குறிப்பு எழுதி அனுப்பினால், என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதுபற்றி ஆராயலாம்.

திரு. மா. வே. நாராயணசாமி: துணைத் தலைவர் அவர்களே, இப்படி பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள் எல்லைக்கு உட்பட்ட பகுதிகள் அடங்கியுள்ள அரசாங்க புறம்போக்கு நிலங்களை அந்தந்த பஞ்சாயத்துகள் அல்லது நகராட்சிகளிடத்தில் ஒப்படைத்தால் ஆக்கிரமிப்பை தடுக்க முடியுமே. அதைப்போன்ற ஏற்பாட்டினை அரசு உடனடியாக செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பஞ்சாயத்து எல்லைக்குள்ளும் நகராட்சி எல்லைக்குள்ளும் உள்ள புறம்போக்கு நிலங்களை நகராட்சியோ, ஊராட்சி மன்றமோ, தங்களுக்கு ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக தேவைப்படுகிறது என்று அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. எல்லா புறம்போக்கு நிலங்களையும் ஊராட்சி மன்றங்களுக்கும் அல்லது நகராட்சி மன்றங்களுக்கும் ஒப்படை செய்கிற நிலைமையில்லை. அரசாங்கமே அதற்கான முயற்சிகளில் ஈடுபடும்போது, பல்வேறு துறைகளுக்கான கட்டடங்கள் கட்ட, மற்றும் அரசாங்க நலன்களுக்குத் தேவைப்படுகின்ற காரணத்தால், ஊராட்சி மன்றங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் தேவைப்படுகின்ற பலவற்றிற்கு கொடுக்கும் முயற்சியில் ஈடுபடுகிறது. தங்களது தேவைக்குப் போக எஞ்சியதை, அங்கங்கே பிரச்சினையின் தரத்தைப் பார்த்து அரசாங்கம் முடிவு செய்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, நிலம் இல்லாத ஏழைகளுக்கு நிலம் வழங்குகின்ற கொள்கையை ஏற்றுக்கொள்கின்ற நாம் பஞ்சாயத்து எல்லைக்குள்ளும் நிலமற்றவர்கள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அந்த நிலங்களை நிலமில்லாத ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பஞ்சாயத்தின் எல்லைக்குள்ளோ, அல்லது நகராட்சியின் எல்லைக்குள்ளோ அப்படி நிலத்தை ஒப்படைக்கின்ற சூழ்நிலை ஏற்படுமானால், பல்வேறு சங்கடங்கள் ஏற்படும். அதைத்தான் குறிப்பிட்ட எல்லைக்கு உட்படாத வகையிலே—பெரும்பாலும் நகராட்சியைப் பொறுத்துச் சொல்கிறேன்—பஞ்சாயத்து எல்லைக்கு வெளியிலே, ஊருக்கு அப்பால் இருக்குமானால், வெளியே இருப்பவர்களுக்கு பல வழிகளிலே பட்டா செய்து கொடுக்கப்படுகின்றன. நகராட்சியைப் பொறுத்தவரையில் அந்த முறையை நாம் மேற்கொள்வதற்கில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: பஞ்சாயத்துக்கு உட்பட்ட புறம்போக்கு நிலங்களை ரெவின்யூ போர்டு பட்டா வழங்கும்போது பஞ்சாயத்தின் அனுமதியைப் பெறுமலேயே கூட ஒரு சில இடங்களில் கொடுத்துவிடுகிறார்கள். அது பஞ்சாயத்துக்குப் பாதகமாக இருக்கிறது. ஆகவே, பஞ்சாயத்து அனுமதி பெற்றுத்தான் கொடுக்க வழி வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது இருக்கிற விதிமுறைகள் எப்படி இருக்கின்றன என்று தெரியவில்லை. உறுப்பினர் கூறுகிற கருத்து ஆலோசனை செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

திரு. ஏ. பாலையா : கன்னியாகுமரி மாவட்டத்தில், கன்னக்குறிச்சி கிராமப் பஞ்சாயத்தில் 80 சென்ட் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அந்த 80 சென்ட் புறம்போக்கு நிலத்தில் பஞ்சாயத்துக் கட்டடம் கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் அனுமதி கேட்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் பஞ்சாயத்துக்கு அந்த நிலத்தை வழங்க மறுத்து தனியார் ஒருவருக்கு பட்டா செய்துகொடுக்க முயற்சி நடந்துகொண்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா ? அதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பு இப்போது என்னிடம் இல்லை. தனியாக விண்ணப்பித்தால் அதிலுள்ள குறைகள் என்ன என்பதைப் பார்த்து அதன்பேரில் முடிவு எடுக்கலாம்.

திரு. கே. கந்தசாமி : இன்றையதினம் அரசு நிலம் இல்லாதவர்களுக்கு அல்லது வீடு இல்லாதவர்களுக்கு பட்டா வழங்கும் நிலையை உத்தேசித்து கிராமப் புறங்களில் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட இடங்களை, பொது இடங்களை, மாடுகள் அடைவது, சுடுகாடு போன்ற இடங்களை ஆக்கிரமிப்பு செய்து கொள்கிறார்கள். அவர்களை கிராமப் பஞ்சாயத்துக்கள் வெளியேற்ற சக்தி இழந்த நிலையில் இருக்கின்றன. ஆகவே தக்க அதிகாரிகளை நியமித்து பொதுஜன பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது கூட பட்டா செய்கிற வகைகளில் சில பல விதிமுறைகள் உள்ளன. இன்ன இன்ன இடத்தைத் தரலாம், இன்னின்ன வகைகளில் தரலாம், இன்னினாருக்குத் தரலாம் என்று இருக்கிறது. சுடுகாட்டுக்குப் பயன்படும் இடங்கள், மந்தை வெளிகளுக்குப் பயன்படும் இடங்கள், மார்க்கெட்டுகளுக்குப் பயன்படும் இடங்கள், பள்ளிக்கூடங்கள் அல்லது மருத்துவ மனைகள் கட்டுவதற்கான இடங்கள் இவைகளை எல்லாம் எக்காரணம் கொண்டும் கொடுக்கக்கூடாது என்று இருக்கிறது. அதையும் மீறி ஆக்கிரமிப்பு செய்தால் முறைப்படி நடவடிக்கைகள் எடுக்க வழிவகைகள் இருக்கின்றன.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : பேரூராட்சி, ஊராட்சி எல்லைகளுக்கு உட்பட்ட புறம்போக்கு நிலங்கள் பெரும்பாலும் வருவாய்த் துறைக்குச் சொந்தமாக உள்ளன. ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதற்கு அதனால் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. பல ஆண்டுகள்கூட ஆகின்றன. வருவாய்த் துறையில் பல சடங்குகளை நிறைவேற்றித்தான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது. ஏறக்குறைய அவர்களை வெளியேற்ற முடியாமல் ஆகிவிடுகிறது. எனவே, அவர்களை உடனடியாக வெளியேற்றுவதற்கு உண்டான வழிவகைகள் செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சில சமயங்களில் எங்களுக்குக் கூட சங்கடமாக இருக்கிறது. ஒரு பள்ளிக்கூடம் அல்லது ஒரு மருத்துவமனைக்கு இடம் பெறுவது என்றால் நான்கு கட்டங்களைத் தாண்டவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு தடவையும் ரிட்டுக்குப் போனால்

ரிட் முடியும் வரை காத்து நிற்கவேண்டியிருக்கிறது. விரைவுபடுத்த என்ன செய்யலாம் என்பதுபற்றி சட்டத்துறைதான் ஆலோசனை கூறவேண்டும். இப்போதுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு எந்த அளவிற்கு விரைவுபடுத்த முடியுமோ அவ்வளவு விரைவாக நடவடிக்கை எடுக்கவும் ஆக்கிரமிப்பாளர்களை அகற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டத் துறை ஆலோசனையின் பேரில் தக்க முடிவு எடுக்கலாம்.

திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி : இப்போது ஊராட்சி மன்றங்களிலுள்ள நத்தம் புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்து தனியாருக்கு பட்டா வழங்கிவிட்ட பிறகு அவை பொதுமக்களுக்குப் பயன்படும் பொது இடங்களாக இருக்கின்றன என்று சொல்லி ரெவின்யூ துறைக்கு முறையீடு செய்தால் அதைப் பரிசீலனை செய்து முறைகேடாக வழங்கப்பட்டுள்ள பட்டாக்கள் ரத்து செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்போதே ஊராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட புறம்போக்குகளை பட்டா செய்வதாக இருந்தால் ஊராட்சி மன்றத்தைக் கேட்கிறோம். ஆனால் அவர்கள் சொல்கிற யோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றில்லை. யாருக்காவது தவறாக பட்டா கொடுக்கப்பட்டிருந்தால் அதை ரத்து செய்யும் அதிகாரம் அரசுக்கு இருக்கிறது.

திரு. கு. அ. பொம்மன்: கிராமப் பஞ்சாயத்து நிலங்களில் மேய்ச்சல் காடுகள் இல்லாமல் மரங்களை நட்டு விடுகிறார்கள். ஆகவே மாடுகளின் மேய்ச்சலுக்கு தொந்தரவு ஏற்படுகிறது. எனவே அப்படி மரங்கள் நடப்படுவது தடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த அந்த ஊரின் நிலைமையைப் பொறுத்து தடுக்க முடிவுகள் எடுக்கலாம். அப்படி இடைஞ்சலாக இருப்பதைத் தடுக்க இப்போதே விதிமுறைகள் இருக்கின்றன. அந்தவகையில் அங்குள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அப்படி ஏதாவது இருக்குமானால் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கலாம்.

Consumer Price Index.

* 466 Q.—THIRU N. DENNIS: Will the Hon'ble the Minister for Labour be pleased to state :—

(*a*) the details of the Consumer Price Index for Industrial workers in Madras City for the year 1971 monthwise ; and

(*b*) the basis on which' they have been prepared ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) விவர அறிக்கை* யொன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

*108-109-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(இ) சென்னை மாநகரில் உள்ள தொழிற்சாலைத் தொழிலாள களுக்கான நுகர் பொருள் விலைக் குறியீட்டு எண் சிம்லாவில் உள்ள தொழிலாளர் நலக்கழகம், 1958-59 இல் தொழிற்சாலைத் தொழிலாளர் களிடையே நடத்திய குடும்ப வாழ்க்கை ஆய்வை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு திங்களும் தொகுக்கப்படுகிறது. பொருள்கள் பட்டியலும் பணிகளும் ஐந்து தொகுதிகளாக வகைப் படுத்தப்படுகின்றன. அவை யாவன : உணவு, எரிபொருள்—ஒளிபொருள், வீட்டுவசதி, உடை, பல்வகை.

திரு. என். டென்னிஸ்: இந்தப் ப்ரைஸ் இன்டெக்ஸ் யாரால், எந்த ஸ்தாபனத்தால் தயாரிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நம்முடைய அரசாங்கச் சார்பில் புள்ளிவிவரத் துறையினர் இதைக் கண்காணிக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்களைத் தயாரிக்கிறார்கள். தயாரித்து அதை அறிவிக்க இவர்களுக்கு அதிகாரம் இல்லை. சிம்லாவில் உள்ள கழகத்திற்கு அனுப்பி மத்திய அரசு மூலம் வெளியிடப்படுகிறது. நமக்கு நேரடியாக அறிவிக்க அதிகாரம் இல்லை.

திரு. மா. வே. நாராயணசாமி : இந்த வாழ்க்கைச் செலவு புள்ளி விவர விவகாரத்தில் சில கணக்குகள் சரியான முறையில் போடப்பட வில்லை. சரியான அடிப்படையில் தயாரிக்கப்படவில்லை என்ற ஒரு குறை சொல்லப்பட்டு, அதை மாநில தொழிலாளர் நல ஆலோசனை வாரியத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தொழிற்சங்கத் தலைவர்கள், திரு. அந்தோணிபபிள்ளை போன்றவர்களை உள்ளடக்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, அது பரிசீலனை செய்யும் என்று அறிவிக்கப்பட்டது. அக்குழு வாழ்க்கைச் செலவு புள்ளிவிவர விவகாரத்தை பரிசீலனை செய்து அறிக்கை தந்திருக்கிறதா ? அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ? அரசின் கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : லேபர் அட்வைசரி போர்ட் கூட்டத்தில் இந்தப் புள்ளிவிவர அறிக்கைக்கு ஆட்சேபணை எழுப்பப்பட்டது. குறிப்பாக அந்தோணிப்பிள்ளை அவர்கள் அதிக ஆட்சேபனை தெரிவித் தார்கள். எனவே தொழிலாளர்கள் சார்பில் அவர்களையும், தொழில் அதிபர்கள் சார்பில் திரு. சம்பத் அவர்களையும் இரண்டுபேர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. ஆனால் ஆறு மாதம் ஆகியும் அந்தக் குழு கூடவில்லை. கூடி விரைவில் அந்த அறிக்கையை தருமாறு வலியுறுத்தி யிருக்கிறோம்.

திரு என். கே. பழனிசாமி : நவம்பர், டிசம்பரில் 1,400 புள்ளி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு பல மடங்கு விலைகள் ஏறியும்கூட அந்தப் புள்ளி மட்டும் ஏறவில்லை. அதற்குக் காரணம் என்ன ? சர்க்கார் அதுபற்றி பரிசீலனை செய்வார்களா ? அதுபற்றி மத்திய அரசுக்கு எழுதுவார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதற்காகத்தான் இரண்டு பேர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அது தன் அறிக்கையை அனுப்பவில்லை என்று தெரிவித்தேன்.

திரு. நா. வீராசாமி : இந்த வாழ்க்கைச் செலவு புள்ளிகள் நம் இந்தியத் துணைக் கண்டத்தில் " ஏ " கிளாஸ் ஸிட்டீஸ் என்று சொல்கிற டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களை விட சென்னை நகரில் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : அந்த விவரம் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். சுரேந்திரன் : 1935-க்கும் 1960-க்கும் இடையே உள்ள வாழ்க்கைச் செலவு புள்ளி பற்றி, அதன் வித்தியாசத்தை சரி செய்யாததால் தொழிலாளர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்ற புகார் இருக்கிறதே, அது பரிசீலனை செய்யப்பட்டதா ? அவர்களுக்கு கொடுக்கவேண்டிய பணம் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டனவா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : 35-ம் ஆண்டுக்கும் 60-ம் ஆண் டுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை சரிக்கட்டி 4.76 பாயின்ட்ஸ் சேர்த்தால் 35-36க்கு உள்ள விகிதாசாரம் வரமுடியும். தனிப்பட்ட குறை இருந்தால் எழுதியனுப்பினால் விசாரிக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : 72-ல் இந்த 38 புள்ளி பற்றி பரிசீலிக்க ஒரு குழு போட்டார்களே, அக்குழு கூடியதா, அதன் அறிக்கையை சர்க்காருக்கு தந்தார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதைத்தான் சொன்னேன் அக்குழு தனது பணியினை இதுவரை முடிக்கவில்லையென்று. எனினும் விரைவில் அக்குழு தன் அறிக்கையை அனுப்பும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Is there any instance of the Simla Committee not accepting the recommendations of Madras or is there any instance of Simla Committee suggesting an alternative or increasing or decreasing the Madras recommendations regarding cost of living index ?

மாண்புமிகு திரு என்.வி. நடராசன்: நம் மாநில புள்ளிவிவரத்துறை இலவிவரங்களைச் சேகரித்து சிம்லாவிற்கு அனுப்புகிறது. அதைக் குறைப் பதும், கூட்டுவதும், எல்லாம் சிம்லா குழுவைப் பொறுத்திருக்கிறது. நம் மாநில அரசுக்கு நேரடியான அதிகாரம் கிடையாது.

அரிசனங்களுக்கு வீட்டுமனைகள்.

***467** வினா— திரு கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கும்முடிப்பூண்டி துணை வட்டம், பெத்திக்குப்பம் அரிசன காலனியில் உள்ள வீடற்ற அரிசனங்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து வீட்டுமனை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கும்முடிப்பூண்டி துணை வட்டத்திலிருக்கும் பெத்திக்குப்பம் அரிசன காலனியில் வசிக்கும் அரிசனங்களுக்கு போதுமான வீட்டு வசதி இருப்பதால், வேறு நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

திரு கா வேழவேந்தன்: தலைவரவர்களே, இது முன்னர் இருந்த நிலை. இப்போது மனு ஒன்று தரப்பட்டிருக்கிறது. அதன் மேல் மறு பரிசீலனை செய்து அவர்களுக்கு வீட்டு மனை தர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இது எப்போதுள்ள நிலை என்று குறிப்பு இல்லை. ஆனால் மறுபரிசீலனை செய்யலாம்.

திரு இ. எஸ். தியாகராசன்:—தலைவரவர்களே, பொதுவாகவே அரிசனங்களுக்கு மனைகள் வாங்கித் தருவதில் அதிக தாமதம் ஆகிறது. அதைத் தவிர்ப்பதற்கு அரசு அதிகமான அதிகாரிகளையும் அலுவலர்களையும், நியமித்து உடனுக்குடன் அரிசனங்களுக்கு மனை வாங்கித் தர முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: காலதாமதத்திற்கு பல காரணங்கள் உண்டு. ஒன்று நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். அதற்குப் பல்வேறு முறையான காரியங்களில் ஈடுபட வேண்டியிருக்கிறது. நோட்டிபிகேஷன் செய்யவேண்டும். 5(எ) என்கொயரி வைக்கவேண்டும். 6 (1) என்கொயரி வைக்க வேண்டும். அவ்வப்போது நிலச்சொந்தக்காரர்கள் நிலத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். அதற்காக கடைசி கட்டத்தில் போய் வழக்கு மன்றத்திற்குச் சென்று வழக்குப் போட்டு விடுகிறார்கள். அந்த வழக்கு போட்டு விட்டால் அது பல ஆண்டுகளுக்கு நடத்த வேண்டியிருக்கிறது. இதனால் தான் காலதாமதம் ஆகிறதே தவிர அதிகாரிகளும் அலுவலர்களும் இல்லாத காரணத்தால் தாமதம் எதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு குறிப்பிட்ட ஊரில் இருப்பதைப் பற்றிய கேள்வியில் பாலிசி மேட்டரைப் பற்றிக் கேட்கக் கூடாது. பாலிசியைப் பற்றி அமைச்சர் சொல்ல முடியும். ஆனால் ஒவ்வொரு கேள்விக்கும் இப்படி ஆரம்பித்தால் மிகவும் நேரமாகும்.

***468** வினா.—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பென்னலூர்ப்பேட்டைத் துணை வட்டம், ஆமிதாநல்லூர் அரிசன காலனி மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதில் மேலும் ஏற்படும் காலதாமதங்களுக்குக் காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : செங்கை மாவட்டம், பென்னலூர்ப்பேட்டை துணை வட்டம், ஆமிதாநல்லூர் கிராம அரிஜனங்களுக்கு வீட்டு மனைகளுக்கான பட்டாக்கள் 19—12—72 அன்று வழங்கப் பட்டு விட்டன.

திரு கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, நன்றி.

குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டம்.

***469** வினா.—திரு சு. துரைசாமி :
திருமதி : த.ந. அனந்தநாயகி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை குடியிருப்பு மனைச் சட்டத்தை தமிழ்நாடு முழுவதற்கும் நீட்டிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : அ & இ : ஆம். தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமைஉறுதி செய்தல்) சட்டத்தை செங்கற்பட்டு, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, சேலம் (ஏர்காடு துணை வட்டம் நீங்கலாக) இராமநாதபுரம் (இராஜபாளையம் துணை வட்டம் நீங்கலாக எழு மாவட்டங்களுக்கு 20—12—1972 முதல் நீட்டிக்கப் பட்டுள்ளது. நகராட்சி மன்றங்கள், நகர பஞ்சாயத்துக்கள், நகரியங்கள் மேற்படி சட்டத்தில் இருந்து விலக்களிக்கப்பட்டிருக்கின்றன. 26-2-73 அன்று நிதி நிலை அறிக்கையின்போது முதல் அமைச்சர் அறிவித்தபடி மேற்கண்ட சட்டத்தை மலைத்தோட்டங்கள், நகரியங்கள், நகராட்சி மன்றங்கள், நகர் பஞ்சாயத்துக்கள் நீங்கலாக இதர மாவட்டங்களுக்கும் நீடிப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் உத்திரவு பிறப்பிக்கபடும்.

(திரு நா. வீராசாமி—தலைமை)

திரு சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை நீட்டிக்கிற காலத்தில் பஞ்சாயத்துக்களுக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதால், சின்ன கிராமங்களும் நகரப்பஞ்சாயத்தாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடங்களில் குடி இருக்கும் குடியிருப்புதாரர்களுக்கு அந்த சலுகை கிடைக்காமல் போய் விடுகிறது. நகரப்பஞ்சாயத்துக்கும் அந்த சலுகை தரும் வகையில் சட்டத்தைத் திருத்த வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : சட்டத்தைத் திருத்தவேண்டியது இல்லை. சட்டத்தை நீடிக்க வேண்டியிருக்கிறது. நான் முதலில் சொன்ன அந்த மாவட்டங்களுக்கு நீட்டித்து இருக்கிறோம். பிறகு நகரப் பஞ்சாயத்துக்களுக்கு நீட்டிப்பதைப்பற்றிப் பேசலாம்.

திரு வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இதுவரையில் இந்தச் சட்டத்தால் பலன் அடைந்தவர்கள் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அமைச்சர் அறிவிப்பார்களா ? மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிப்பதில் உள்ள சந்தேகம் என்ன ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் முழுமையாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை 1,57,265 பேர்களாகும். மற்ற மாவட்டங்களில் எவ்வளவு பேர் பயன் அடைந்திருக்கிறார்கள் என்ற புள்ளி விபரம் இல்லை. மற்ற பகுதிகளில் மலைப்பிரதேசங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. பிளான்டேஷன் தொழிலாளர்களுக்காக கட்டப்பட்டிருக்கும் வீடுகள், மத்திய அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு கட்டியிருக்கும் வீடுகள் இருக்கின்றன.இதிலே சட்டச் சிக்கல் இருப்பதால் மலைப் பகுதிகளில் விஸ்தரிப்பதற்கு கொஞ்சம் யோசிக்கவேண்டியிருக்கிறது.

திரு எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்தக் குடியிருப்பு மனைப் பட்டா கொடுப்பது அரிசன மக்களுக்கு மட்டும்தானா அல்லது எல்லா வகுப்பினருக்கும் பட்டா செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்த விவசாயத் தொழிலாளர்கள் எங்கே இருந்தாலும் அவர்கள் யாராக இருந்தாலும் ஜாதி, மத, பேதமின்றி பட்டா செய்து கொடுக்கப்படும்.

திரு எம். சுரேந்திரன் : சார், இந்தக் குடியிருப்பு மனைச்சட்டம் குடியிருந்து கொண்டிருப்பவர்களுக்கு மட்டும்தானா, குடியில்லாதவர்களுக்கும் வீட்டு மனை இல்லாதவர்களுக்கும் வழங்கி, பட்டா செய்து கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இந்தச் சட்டத்தை இந்த மன்றம் விரிவாக விவாதித்து இருக்கிறது. குடியிருப்பவர்களுக்கு மனை சொந்தம் இல்லாது இருந்தது. அந்த மனையைச் சொந்தமாக்கும் சட்டம் இந்தச் சட்டம்.

திரு ஆ. பரந்தாமன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் கூறுகிற நேரத்தில் செங்கற்பட்டு மாவட்ட எல்லை என்று சொன்னார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் பல கிராமங்களில் தாழ்த்தப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு உரிமை இல்லாமல் இருக்கிறது. ஆகவே அந்த உரிமை பாதிக்காத வகையில் அவர்களுக்கு உமை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, விரைவில் செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் அது நீட்டிக்கப்படும்.

சென்னை தொலைக்காட்சி நிலையத்திற்கான இடம்.

*470 வினு.—திரு சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் எந்த இடத்தில் டெலிவிஷன் அமைக்கப்படவுள்ளது?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னையில் தொலைக் காட்சி நிலையம் பழைய ஆடம்ஸ் சாலையில் தெற்கு புறத்தில் லாக் நகருக்கு சமீபத்தில் உள்ள இடத்தில் அமைக்கப்பட இருக்கிறது. இவ்விடம் சட்டமன்ற உறுப்பினர்களின் புதிய விடுதிக்கு ஒரு பர்லாங்கு கிழக்குப் புறமாக உள்ளது.

திரு மே. சி. தூயமணி : பேரவைத் தலைவரவர்களே, அயல் நாடுகளில் உள்ளதுபோல், தனியார் துறையில் (டெலிவிஷன்) தொலைக்காட்சி நிலையம் அமைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : தனியார் துறையை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வில்லை.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, அமைக்கப்படவிருக்கின்ற டெலிவிஷன் 25 மைல், 30 மைல் அளவுக்குத்தான் பயன்படும். அதைகடலோரத்தில் அமைத்தால் அதன் உபயோகம் சென்னைக்கே ஆகி விடும். ஆகவே அதை சென்னைக்கு மேற்குப் பக்கத்தில் காஞ்சிபுரத்தில் அமைத்தால் அது மிகவும் உபயோகமாக இருக்கும். மேற்குப்பகுதியில் வைக்க மாநில அரசு மத்திய அரசுக்கு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மத்திய அரசாங்கம் இடத்தை முடிவு செய்து கட்டடம் கட்ட ஆரம்பித்து, 1973-ம் ஆண்டிற்குள் கட்டடம் முடிந்துவிடும் தருவாயில் இருக்கிறது. மறு பரிசீலனை செய்வதற்கு இடமில்லை.

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அமைக்க இருக்கிற டெலிவிஷன் நிலையத்திற்கு ஆகும் செலவு விவரம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : கட்டட வேலைக்காக ரூ. 37 லட்சம் மதிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற இயந்திர சாதனங்களைப் பற்றித் தனியாக மத்திய அரசைத்தான் கேட்க வேண்டும்.

திரு எம். சுரேந்திரன் : சார், இந்த டெலிவிஷன் அமைப்பது ஒரு குறிப்பிட்ட ஊர் வரையிலும் தான் அது பிரயோசனப்படும் என்று சொ

னார்கள். அது மாநிலம் முழுவதற்கும் பயன் அளிக்கும் வகையில் இன்னும் எங்கெங்கே டெலிவிஷன் அமைக்க வேண்டுமோ அங்கெல்லாம் அதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது இந்த டெலிவிஷன் நிலையம் கட்டி முடிக்கட்டும். பிறகு அதைப்பற்றி பார்த்துக் கொள்ளலாம். இப்போது இருக்கும் திட்டம் நிறைவேறினால் நம்முடைய மாநிலத்தில் கூடுமான வரை மிகுந்த அளவுக்கு டெலிவிஷன் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் நல்ல காட்சிகளைக் காணலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

திரு கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்த டெலிவிஷன் நிலையம் சென்னைக்கு மட்டும்தானா திருச்சி, மதுரை போன்ற நகரங்களிலும் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (நா. வீராசாமி) : இது ஏற்கெனவே அவர் கேட்ட கேள்வி.

திரு எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, நல்ல காட்சிகளைக் காணலாம் என்று சொன்னார்கள். அது என்ன காட்சி என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு ஆறுமுகம் விரும்புகிற நல்ல காட்சிகளை எல்லாம் காணலாம்.

திரு கே. கந்தசாமி : தலைவரவர்களே, இந்தத் தொலைக்காட்சி நிலையத்தின் பயன் அரசுக்கு மட்டும்தானா அல்லது தனிப்பட்டவர்களுக்கும் உண்டா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் அந்தப்பயன் உண்டு.

திரு எம். சுரேந்திரன் : அந்த நல்ல காட்சிகளையெல்லாம் சட்டசபை உறுப்பினர்களும் பார்ப்பதற்கான வசதி செய்து தரப்படுமா ? ஹாஸ்டலில் அதற்கான ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : அது ஒரு நல்ல கருத்து.

திரு எம். தேவராசன் : தலைவரவர்களே, கிண்டி குதிரைப்பந்தய மைதானத்தில் டெலிவிஷன் காட்சி காட்டப்படுகிறது. அதற்கும் இப்போது புதிதாக அமைக்க இருக்கும் டெலிவிஷனுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? ஏற்கெனவே அங்கே அவர்கள் எப்படி அமைத்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கிண்டியிலே காட்டப்படுகிற டெலிவிஷன் காட்சியைப் பார்த்துவிட்டு பணம் கட்டியவர்கள் சிலபேர் பதைபதைப்பார்கள். இந்தக் காட்சியை பார்த்துவிட்டு பதைபதைக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, அமைக்கப்படவிருக்கிற டெலிவிஷன் நிலையம் எத்தனை மாடிக்கட்டிடத்தில் இருக்கும்? அந்த நிலையத்திற்குப் போக மீதியுள்ள மாடிகளில்—அயல் நாடுகளில் அரசாங்க அலுவலகங்களை வைத்திருக்கிறார்கள்—அரசாங்க அலுவலகங்களைவைக்க அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் நாம் 5 ஏக்கர் நிலம் கொடுத்து இருக்கிறோம். மத்திய அரசாங்கத்தின் திட்டத்தின் மூலமாக இது கட்டப்படுகிறது. முழு பொறுப்பும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தது.

திரு ஆ. பரந்தாமன் : வெளிநாடுகளிலே கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களை எல்லாம் டெலிவிஷனில் பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட வசதிகள் சென்னையிலும் செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படிப்பட்ட வசதிகள் வரும் என்றுதான் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

திரு ரா. ரா. முனுசாமி : டில்லியில் டெலிவிஷன் காட்சியை தமிழ் நாடு ஹவுசிலும், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பார்க்கக்கூடிய அளவுக்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் சென்னை சட்டமன்ற விடுதியில் சட்டமன்ற உறுப்பினர்கள் பார்க்கக்கூடிய அளவுக்கு வசதி செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் டில்லியில் தமிழ்நாடு ஹவுசில் ஏற்பாடு இருக்கிறது. நாம் ஏற்கனவே நல்ல யோசனை என்று சொன்னேன். பேரவை முன்னவருடைய முயற்சியில் நிறைவேற்றப்பட வேண்டும்,

கும்முடிப்பூண்டியில் எடுக்கப்பட்டுள்ள திட்ட வேலைகள்.

"471—வினா—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 1972-ஆம் ஆண்டு ப்பிரவரித் திங்கள் 29-ஆம் நாள் அன்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கும்முடிப்பூண்டித் தொகுதியில் நேரில் பார்வையிட்ட திட்டங்கள் என்னென்ன ?

(ஆ) இவற்றில் எந்தெந்த திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன?

மாண்புமிகு திரு எஸ். ஜே சாதிக் பாட்சா :—(அ) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வேலைகளை 29—2—72-ல் பார்வையிட்டார்கள் :—

I. பொன்னேரி தாலுக்கா :

1. அன்னப்ப நாயக்கன் அணைக்கட்டிலிருந்து கும்முடிப்பூண்டி ஏரிக்கு நீர் வழங்கும் திட்டம்.

2. கீழ் கோடி குளத்திற்கு தண்ணீர் கொடுக்கும் திட்டம்.

II. திருவள்ளூர் தாலுக்கா—

(1) சோழவரம் வரவு கால்வாயின் குறுக்கே மாகரல் கண்டிகை எனும் கிராமத்தில் பாலம் கட்ட உத்தேசித்திருக்கும் இடம்.

(2) பிச்சாத்தூர் தாராச்சி கிராமத்திலிருக்கும் வரவு கால்வாயின் குறுக்கே பாலம் கட்ட உத்தேசித்திருக்கும் இடம்.

(3) பெரிய பாளையம் கிராமத்தில் ஆரணி ஆற்றின் குறுக்கே அணைக் கட்டு அமைக்க உத்தேசித்திருக்கும் இடம்.

III. சாலைகள்—

(1) குசஸ்தலியார் மைல் 11/4-6 அருகே வெங்கல் பாகல் மேடு அணைக்கட்டு திட்டம்.

(2) பெரியபாளையம் அருகே ஆரணியாற்றிற்கு குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

(3) ஈகுவார்ப்பாளையம் பாலம் கட்டும் திட்டம்.

(4) காரணி அருகே பாலம் அமைக்கும் திட்டம்.

(இ) ஈக்வார்பாளையம் பாலம் கட்டும் திட்டம் தவிர மற்ற திட்டங்களின் மேல் அரசு ஆணை வழங்கப்படவில்லை.

(பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. கா. வேழவேந்தன் : 29-2-72 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெயிலில் இந்தப் பகுதிகளை எல்லாம் பார்த்ததற்காக நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஈகுவார் பாளையம் திட்டத்திற்கு 9 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பெரிய பாளையம் மேம்பாலம் திட்டம் போன்ற திட்டங்களை படிப்படியாக நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியில் இருக்கும் எல்லாத் திட்டங்களுக்கும் புள்ளி விவரத்தைக் கேட்டிருக்கிறார்கள். ஈகுவார் பாளையம் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. மற்றத் திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலிக்கப்பட்ட பிறகு படிப்படியாக நிறைவேற்ற திட்டங்கள் வகுக்கப்படும்.

மதுராந்தகத்தினருகே புறவழிச்சாலை

* 472 வினா. திரு. சி. ஆறுமுகம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் நகர் வழியாக செல்லும் தேசிய நெடுஞ்சாலை போக்குவரத்துக்கு நெருக்கடியாக இருப்பதால் அங்கு மாற்றுச்சாலை ஒன்று போடும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) தேசிய நெடுஞ்சாலை எண். 45-ல் மதுராந்தகம் நகர் எல்லையில் புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு மத்திய அரசின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்த வேலையின் உத்தேச மதிப்பீடு சுமார் ரூபாய் 35 லட்சம்.

திரு. கே. எ. வகாப் : இப்படி அமைக்கப்படுகிற பை-பாஸ் ரோடுகள் சில இடங்களில் விரைவாக அமைக்கப்படாமல் இருக்கின்றன. மேல் விஷாரத்திற்கு அருகே இரண்டு ஆண்டுகளாகப் போடப்படாமல் இருக்கிறது. இதிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார். அனுமதிப்பதிலேயே காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்த்து விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று பொறியாளர்கள் ஏற்கெனவே பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

Sea erosion in coastal areas of Killiyoor.

* 473 Q.—Thiru N. DENNIS : Will the Hon'ble the Minister for Public Works be pleased to state whether it is a fact that the sea erosion along the coastal area in Killiyoor Constituency is causing damages to living quarters ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். டென்னிஸ் : ஆண்டு தோறும் கடலரிப்பில் பல கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. வீடுகள் நாசமடைகின்றன. அதற்குத் தீவிர நடவடிக்கை எடுத்து அடுத்த ஆண்டிலாவது இந்த மாதிரி நாசம் ஏற்படாதவாறு தடுக்க நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 351 லட்சம் ரூபாய் செலவில் அரபிக் கடலோரமாக நிரந்தரமாக தடுப்புச் சுவர் கட்டும் வேலைக்குத் தலைமைப் பொறியாளரால் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மத்திய அரசின் ஒப்புதலுக்கும், மானிய உதவிக்கும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைத் தீவிரமாக அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : மத்திய அரசாங்கத்தின் அனுமதிக்காக அனுப்பப் பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அனுமதி வருவதற்குள் கடலரிப்பினால் பெரிய சேதங்கள் ஏற்பட இருக்கின்றன. ஆகவே, அனுமதியை எதிர் பார்த்து அந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல் படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதுபோன்ற கடலரிப்பினால் ஏற்படக்கூடிய தீமைகளை மனதில் கொண்டுதான் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறது. உடனடியாக ஏற்படக்கூடிய சேதங்களைத் தவிர்க்க தமிழக அரசு அப்போதைக்கப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதுபோன்றத் திட்டத்தைக் கேரள அரசு தயாரித்து அனுப்பியதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. ஆகவே, நம்முடைய இந்தத் திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

Tapioca cultivation in Killiyoor.

* 474 Q.—THIRU N. DENNIS.—Will the Hon'ble the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the package scheme for Tapioca has been given up in Killiyoor block in Kanyakumari district ; and

(*b*) the steps taken to revive this scheme ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தை மறுபடியும் செயல் படுத்துவதற்கு எந்தவித நடவடிக்கையும் தற்போது எடுக்கவில்லை.

திரு. என். டென்னிஸ் : மரவள்ளிக் கிழங்கு அதிமகாகப் பயிரிடக் கூடிய இடம் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் ஏரியா. திரும்பவும் அந்தத் திட்டத்தை அமுல்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்போது இல்லை என்று சொன்னேன். அங்கு துவக்கப்பட்டவற்றில் சில சரியாக செயல்படாத காரணத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள் மீது இப்போது வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் முடிக்க ஏற்பாடு செய்து அதற்கேற்றவாறு மறு பரிசீலனை செய்யப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தத் திட்டம் நல்ல திட்டம். அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்ட காரணத்தால் இதைக் கைவிடுவதற்குத் தேவையில்லை. ஆகவே, நடவடிக்கைகள் ஒரு பக்கம் நடந்தாலும் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதிகாரிகள் மீது எடுக்கப் பட்ட நடவடிக்கை காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதல்ல. மீண்டும் துவக்க என்னென்ன திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென் பதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

சிங்கோனா தோட்டத் தொழிலாளர்கள்.

*475 வினா.—திரு. கா. வேழவேந்தன் & திரு. இ. ராமசாமி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

சிங்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்கும் மற்ற மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தரப்படும் வீதத்தில் ஊதியம் அளிக்கும் செயற் குறிப்பு ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஒ. பி. ராமன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : அந்த சிங்கோனா துறை இயக்குநருடன் கூட்டாகப் பேசி ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதை அமல்படுத்த படிப் படியாக அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : அதை அமல்படுத்துகின்ற வகை யில்தான் இந்த ஆண்டுகூட சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. இ. இராமசாமி : இந்த ஆண்டு சம்பளம் உயர்த்திக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு உயர்த்தப்பட்டிருக்கிறது ? தனியார் துறையில் வேலை செய்கிற தொழிலாளர் களுக்குக் கிடைக்கின்ற அளவுக்கு சிங்கோனா தோட்டத் தொழிலாளர்களுக் கும் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ரூ. 2.60-ல் இருந்து ரூ. 2.75 ஆகவும், ரூ. 2.80-ல் இருந்து ரூ. 2.95 ஆகவும் மாற்றப்பட்டிருக்கிறது. தனியார் தோட்டத்தில் கொடுக்கும் அளவுக்குக் கொடுக்கும் சூழ்நிலை இப்போது இல்லை. தோட்டத் தொழிலில் கூட ஒவ்வொரு தொழிலைப் பொறுத்து சம்பள வேறுபாடு இருக்கிறது. அப்போதைக்கப்போது பரிசீலித்து மேற்கொண்டு உயர்த்தப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : சிங்கோனா தோட்டத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் மிகக் குறைந்த கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை, சம்பளம் கிடையாது. ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய்க்கு மேல் கிடைக்காத நிலைதான் இருக்கிறது. அவர்களுக்குக் குடியிருப்பு வசதியும் சரியாக இல்லை. ஆகவே, விசேஷ கவனம் செலுத்தி குடியிருப்பு வசதியாவது செய்து கொடுக்கப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்</u> : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இப்போது இருக்கும் நிலை தெரியாது என்று நினைக்கிறேன். எல்லோருக்கும் இப்போது குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

<u>திரு. எம். சுரேந்திரன்</u> : தனியார் துறையில் மலைத் தோட்டத்தில் வேலை செய்கின்றவர்களுக்கும் அரசாங்கத் துறையில் வேலை செய்கின்றவர்களுக்கும் வேலையில் மாறுபாடு கிடையாது, வாழ்க்கைத் தரத்தில் மாறுபாடு கிடையாது. வாழ்க்கை முறையில் மாறுபாடு கிடையாது. ஆகவே, தனியார் துறையில் கொடுக்கப்படுகின்ற கூலி அளவுக்கு இவர்களுக்கும் உயர்த்திக் கொடுக்க நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்</u> : நான் தெளிவாகச் சொன்னேன். ஒவ்வொரு தொழிலுக்கும் தனித் தனியாக சம்பளம் இருக்கிறது. காப்பித் தோட்டம், தேயிலைத் தோட்டத்தில் இப்போது கூட சீரான கூலி விகிதம் இல்லை. சிங்கோனா பெருத்த வருவாய் தரக்கூடிய ஒன்றல்ல. மருந்துக்காக வளர்க்கின்ற கொள்கையை வைத்திருக்கிறோம். ஆகவே, தொழிலுக்கு ஏற்ப கூலி கொடுக்கப்படுகிறது.

<u>திரு. சோ. அழகர்சாமி</u> : வருவாய்க்குத் தகுந்தபடி கொடுக்கப்படுகிறது என்கிறார்கள். வருவாயே இல்லையென்றால் வேலை பார்க்கக் கூடியவர்கள் சம்பளம் இல்லாமலே வேலை பார்க்க முடியுமா ? அரசாங்கத் துறையில் இருக்கும் சிங்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் என்ற முறையில் நிர்ணயிக்க அரசு முன்வருமா ?

<u>மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்</u> : நிரந்தக் கூலிகளுக்குத்தான் அந்த மாதிரி கொடுக்க முடியும். இப்போது மினிமம் வேஜஸ் ஆக்ட் படி அதற்குக் குறையாமல் கொடுத்து வருகிறோம்.

<u>திரு. எம். சுரேந்திரன்</u> : சிங்கோனா மருந்து தயாரிப்பதற்காக உள்ளது, வருமானம் இல்லாத தொழில் என்று சொன்னார்கள். தொழில் எப்படிப்பட்டது என்பது பிரதானம் அல்ல, அதிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் வாழ வேண்டுமென்பதுதான் பிரதானம். ஆகவே, அவர்களுடைய வாழ்க்கைக்கேற்ற குறைந்தபட்சக் கூலி கொடுப்பது அவசியமல்லவா ?

<u>மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்</u> : வாழ்க்கைக்கேற்ற குறைந்தபட்சக் கூலி எவ்வளவு என்று சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அதன்படி மினிமம் வேஜஸ் கொடுக்கப்படுகிறது.

முற்பகல் 10-00 <u>திரு. கு. அ. பொம்மன்</u> : துணைத் தலைவரவர்களே, இந்த சிங்கோனா பொடியைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் பெரும் லாபம் அடைந்துவரும்போது கொள்கை அளவில் மரங்களை வளர்க்கின்றோம் என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கமுடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்</u> : சிங்கோனா மருந்து இந்தியாவில் இரண்டு இடங்களில்தான்—வெஸ்ட் பெங்கால், தமிழ்நாடு—தயாரிக்கப்படுகிறது. வெளிநாட்டில் இதற்கான சந்தை கிராக்கி குறைவாக இருக்கிறது. இப்போது வெஸ்ட் ஜெர்மனியிலும், ரஷியாவிலும் மதுபானத்தில் இந்த சிங்கோனா மருந்தை கலப்பதால் அதற்கு கிராக்கி ஏற்படுகிறது. ஆகவே, இன்னும் அதிகமாக ஏற்றுமதி செய்ய முடியும் ; அதனால் அதிக லாபமும் கிடைக்கும்.

<u>திரு. இ. இராமசாமி</u> : தலைவரவர்களே, சிங்கோனா இலாகாவில் வருவாய் குறைவாக இருக்கிறது : ஆகையால் தனியார்கள் தோட்டங்களில் கொடுப்பதுபோல கூலி கொடுக்க முடியவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது சிங்கோனா இலாகாவில் நிறைய காடு இருந்தும் சில பகுதிகளில் மட்டும் சிங்கோனா மாசூல் செய்யப்படுகிறது. மீதியுள்ள நிலமெல்லாம் சும்மா கிடக்கிறது. அந்த இடங்களிலும் மாசூல் செய்தால் உற்பத்தி பெருகி, அதனால் வருவாய் அதிகமாகும். வருவாய் அதிகமானால் தொழிலாளர்களுக்கு அதிகக் கூலி கொடுக்க முடியும். ஆகவே, எல்லா இடங்களிலும் மாசூல் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்</u> : காப்பி, தேயிலைத் தோட்டங்களில் நிறைய வருமானம் வருகிறது. சிங்கோனா துறையில் அப்படி அல்ல. 10 ஆண்டுகளுக்கு ஒரு கட்டிங் தான் செய்ய முடிகிறது. 10-வது ஆண்டு 20-வது ஆண்டு, 30-வது ஆண்டு இப்படி மொத்தத்தில் 3 கட்டிங்தான் செய்யமுடியும். ஆகவேதான் இதில் குறைந்த வருவாய் வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : தலைவரவர்களே, தனியார் துறைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களை விட பொதுத்துறையிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு அரசு குறைவான ஊதியம் கொடுத்தால் தனியார் துறையினரும் தொழிலாளர்களுக்கு குறைவாகவே ஊதியம் கொடுக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். தொழிலாளர்களுக்கு அதனால் தீமை ஏற்படுகிறது. ஆகவே, தனியார் துறையினர் கொடுப்பதுபோல பொதுத் துறையிலும் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

Mr. DEPUTY SPEAKER : Very, very remote speculation!

<u>மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்</u> : நான் ஏற்கெனவே எல்லாத் தனியார் துறைகளிலும் ஒரேமாதிரி ஊதியம் அளிக்கப்படவில்லை என்று சொன்னேன். சிங்கோனா துறை ஒரு அரசாங்கத் துறை. வருவாய் குறைவாக இருந்தாலும் "மினிமம் வேஜஸ் ஆக்ட்" டுக்குக் குறையாமல் ஊதியம் வழங்கி வருகிறோம். இருந்தாலும் ஒவ்வொரு ஆண்டும் இப்போது கிட்டத்தட்ட நான்கு முறை சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. காப்பி, தேயிலைத் தோட்டங்களில் அதிக ஊதியம் கொடுக்கிறார்கள் என்றால் அங்கே அதிக வருமானம் கிடைக்கிறது. வருவாயின் அடிப்படையில் சம்பளம் கொடுக்கப்படுகிறது. சிங்கோனா துறையில் வருவாய் குறைவாக இருப்பதால் குறைந்த ஊதியம்—ஆனால் "மினிமம் வேஜஸ் ஆக்ட்" டுக்குக் குறையாமல் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

2. அறிவிப்பு

பேரவை உறுப்பினர் திரு எஸ். எம். துரைராஜ் விடுதலை செய்யப்பட்டது குறித்து

Mr. DEPUTY SPEAKER : I have to announce to the House the following telegram dated 21st March 1973 that I have received from the Superintendent of Police, Madurai South—

"Thiru S. M. Durairaj, M.L.A., Tiruvellore, arrested to-day at 11·50 a.m at Madurai was released to-day at 6-30 p.m. as per Government Orders dropping charges against him".

3. அவையுரிமைப் பிரச்சினை

பேரவையில் முதலமைச்சர் அவர்கள் டில்லி தமிழ் நாடு இல்லம் பற்றிய வினாவுக்கு கூறிய விடையை தென்னகம் நாளிதழில் திரித்து வெளியிட்டிருப்பது குறித்து

Mr. DEPUTY SPEAKER: Honb'le Members are aware that yesterday Thiru N. Veerasamy, M.L.A. raised a matter of privilege against the Tamil daily "Thennagam" and I had said that I will give my ruling to-day.

Thiru Veerasamy in his notice has contended that the paper had no only distorted certain proceedings of the House, but also has attributed motives to the Hon'ble Chief Minister and has also published certain matters as having taken place in the House even though actually it had not happend, and hence the paper had committed breach of privilege.

All the Hon'ble Members who spoke after Thiru Veerasami were of the opinion that the Press should have freedom of criticism, but it should be a fair criticism. There was difference of opinion as to the fairness of the criticism, but all agreed that the paper could have avoided using the words that were objected to by Thiru Veerasami. What is fair criticism is a matter of opinion, but I am sure Hon'ble Members will agree when I say that when a criticism is in dignified language, does not presume things and attribute motives, it could be taken to be fair.

The Hon'ble Chief Minister yesterday explained how the paper had published things in an undignified way, had presumed things and had attributed motive to him.

The paper had given a caption as follows :—

சட்டசபைக்கு முன்னால் அப்பட்டமான உண்மைகளை மறைக்கும் சத்புத்திரர்கள்

It has gone on to criticise on the basis of the above presumption that truth is being suppressed in the House.

By saying *சட்டமன்ற உறுப்பினர்கள் சாதாரணமானவர்கள், ஒன்றும் தெரியாதவர்கள் என்று நினைத்துக் கொண்டு the paper had attributed motive to the Hon'ble Chief Minister who is also a member of the House. By publishing the words தனக்கே உரித்தான திமிரினால் சட்டசபைக்கு தவறான தகவலைத்தந்ததுடன் the paper had given incorrect version and has criticised the Hon'ble Chief Minister by using undignified words.

Sir Erskine May says "to print or publish any books or libels reflecting on the proceedings of the House is a high violation of the rights and privileges of the House, and indignities offered to the House by words spoken or writings published reflecting on its character or proceedings have been constantly punished by both the Lords and Commons upon the principle that such acts tend to obstruct the Houses in the performance of their functions by diminishing the respect due to them.

Reflections upon Members, the particular individuals not being named or otherwise indicated, are equivalent to reflections on the House".

Hence I conclude that the comments of the paper were not fair, the paper had attributed motive to the Hon. Chief Minister, it had also published incorrect and distorted version of the proceedings of the House and has also used undignified language in offering its comments.

I, therefore, hold that a *prima facie* case of breach of privilege has been made out.

However, the House should best consult its own dignity and allow the matter to rest with a warning to the paper to be more careful in future.

I would like to take this opportunity to inform the Press that the best criticism is one which is given in a dignified way as is being done now by most of the leading papers. I hope other papers will emulate their example, and offer thier co-operation in maintaining the dignity and decorum of Parliamentary democracy.

4. தகவல் கோரல்.

பேரவை உறுப்பினர் திரு. எஸ். எம். துரைராஜ் அவர்கள் கைது செய்யப்பட்டு உடனடியாக விடுதலை செய்யப்பட்டதன் காரணம் குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு அங்கத்தினர் எஸ். எம். துரைராஜ் அவர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டதாக அறிவித்தீர்கள். அதற்கான காரண காரியங்களையும் கூறினீர்கள். அவர் காலையில் கைதுசெய்யப்பட்டு, மாலையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார் என்றால், அதற்கு என்ன காரணம்? காலையில் கைது செய்தது தவறு என்று விடுதலை செய்தார்களா ? அது சம்பந்தமாகத் தங்களுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னுடைய கடமை, எனக்குத் தெரிவிக்கப்படுகின்ற தகவல்களை உடனுக்குடன் இந்த மன்றத்திற்கு அறிவிக்கவேண்டியது. சட்டமன்ற உறுப்பினர்களைக் கைது செய்வதற்கு பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெறவேண்டியதில்லை. ஆனால் எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக கைது செய்யப்பட்ட விபரத்தை அவைக்குத் தந்தாகவேண்டுமென்று நம்முடைய நடைமுறை விதிகள் இருக்கின்றன. அந்த முறையை ஒட்டி, திரு.எஸ்.எம். துரைராஜ் அவர்கள் கைதுசெய்யப்பட்ட உடன் தந்தியும் வந்தது ; டெலிபோன் செய்தியும் வந்தது. அவரை ரிமாண்டில் வைத்தபோதும் தந்தி வந்தது. இன்றைக்கு அவர் விடுதலை செய்யப்பட்டார் என்ற செய்தியும் வந்திருக்கிறது. எந்த அரசாங்கம் அவரைக் கைது செய்ததோ, அந்த அரசாங்கமே அவரை விடுதலை செய்திருக்கிறது. அதற்கான காரண காரியங்களுக்குள் போக வேண்டிய கடமை எனக்கு இல்லை.

5. 1973–74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 3. மோட்டார் வண்டிகள், சட்டங்கள், நிர்வாகம்.

கோரிக்கை எண். 35. சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்.

கோரிக்கை எண். 48 சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண். 3. மோட்டர் வண்டிகள் சட்டங்கள்–நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 57.56,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU K. S. KOTHANDARAMIAH.—Sir, I move the following cut motion to discuss police—

"That the allotment of Rs. 57,56,400 under Demand No. 3— Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100".

THIRU B. VENKATASAMY.—Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 57,56,400 under Demand No.3 — Motor Vehicles Acts—Adminsitration be reduced by Rs. 100.

திரு. கே. எ. வகாப் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சாலை விபத்துக்களைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் எடுப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண். 3. மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 57,56,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES.—Sir, I move the following cut-motion to discuss the necessity to treat the buses as heavy vehicles and pay the workers of the Transport Department and the Corporations accordingly—

"That the allotment of Rs. 57,56,400 for Demand No. 3—Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100.

திரு எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, போக்குவரத்துப் பேருந்துகளைப் பராமரிப்பதில் இருக்கும் குறைபாடுகள் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 3, மோட்டார் வண்டிகள், சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 57,56,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 35.—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,96,39,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU K.M. SUBRAMANIAM.—Sir, I move the following cut motion To discuss policy

" That the allotment of Rs. 13,96,39,400 under Demand No.35—Road Transport Schemes be reduced by Rs. 100 ".

[1973 மார்ச் 22

திரு எ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, லாரி டிரான்ஸ்போர்ட்டு களைத் தேசிய மயமாக்க வேண்டும் என்பதைப்பற்றி விவாதிக்க—"நிதிக் கோரிக்கை எண் 35, சாலைப் போக்குவரத்து திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,96,39,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்," என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு கே. எ. வகாப் : தலைவரவர்களே, மோட்டார் வாகனங்களைப் பழுது பார்க்கும் தனியாருக்குச் சொந்தமான பெரிய ஒர்க் ஷாப்புகளையும் அரசுடைமையாக்க வேண்டுதல் பற்றி விவாதிக்க—

"நிதி கோரிக்கை எண் 35, சாலைப் போக்குவரத்து திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,96,39,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU N. K. PALANISAMI.—Sir, I move the following cut motion—

To discuss the administration of road transport schemes in the State—

" That the allotment of Rs. 13,96,39,400 under Demand No. 35—Road Transport Schemes be reduced by Rs. 100".

THIRU K. H. BOMMAN.—Sir, I move the following cut motion—

To discuss the necessity to follow the railway reservation procedure for express bus reservation also—

" That the allotment of Rs. 13,96,39,400 under Demand No. 35. Road Transport Schemes be reduced by Rs. 100".

THIRU J. JAMES :—Sir I move the following cut motion—

To discuss the necessity to allow to function the trade unions in the Transport Department free from political interference—

" That the allotment of Rs. 13,96,39,400 under Demand No. 35. Road Transport Schemes be reduced by Rs. 100 ".

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 48, சாலைப் போக்குவரத்து திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,37,24,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

1973 மார்ச் 22]

THIRU J. JAMES.—Sir, I move the following cut motion—To discuss policy—

" That the allotment of Rs. 3,37,24,100 under Demand No. 48—Capital Outlay on Road Transport Schemes be reduced by Rs. 100 ".

DR. H. V. HANDE—Sir, I move the following cut motion—

To discuss the necessity to introduce more buses according to the percentage in growth of population—

" That the allotment of Rs. 3,37,24,100 under Demand No. 48—Capital Outlay on Road Transport Schemes be reduced by Rs. 100.'

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மானியக் கோரிக்கைகளின் மீது நான் ஆற்ற வேண்டிய உரையினை நூல் @ வடிவில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அளித்துள்ளேன். அந்த உரையினை நான் ஆற்றியதாக மன்றம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால் ஒரேயொரு குறிப்பினை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். விடுதலை நாள் வெள்ளி விழாவின் போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இரு மன்றங்களின் தொடர் கூட்டத்தில் அறிவித்த அறிவிப்பிலே தெளிவாகச் சொன்னார்கள். "இல்லார் இல்லை, இந் நாட்டில் கல்லார் இல்லை. நல்லாரை வீழ்த்திடும் வல்லார் இல்லை. எங்கும்புதுமை, எதிலும்புதுமை, அனைத்தும் பொதுவுடமை'' என்றார்கள். அத்தகைய அறிவியல் சமநிலை வாழ்வில்,—செயிண்டிஃபிக் சோஷலிஸ்டு லைஃப்பில்—இந்த சமுதாயம் நடைபோட வேண்டும். அதற்குத் தக்க திட்டங்களை நிறைவேற்றுகிற வகையில் அரசாங்கத்தின் சார்பில் இந்த இரண்டு திட்டங்களை அறிவித்தார்கள். முழுமையாவதாக 5 ஆண்டுகளில், இந்த நாட்டிலுள்ள எல்லா பேருந்துகளும் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்ற திட்டத்தை அறிவித்தார்கள்.

இரண்டாவது திட்டமாக அரசாங்கம் நடத்துகிற பொதுத் துறைகளில் அதிலே பணியாற்றுகிற பல ஆயிரக்கணக்கான உழைப்பாளர்களும் பங்கு பெறுகிற வகையில் 24 சதவீதப் பங்கினை, அந்த முதலீட்டுப் பங்கினை தொழிலாளர்களுக்கு வழங்குவது என்று தீர்மானித்திருக்கிறோம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். ஏற்கனவே 5 ஆண்டுகளுக்குள் பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்ற சட்டம் இந்த அவையின் முன்னாலே கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டு விட்டது. இன்றைய

@... 109, 118ஆம் பக்கங்களில் இணைப்புகள் III அண்டு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தினம் போக்குவரத்துக் கழகங்களில் சோதனைக் கட்டமாக படிப்படியாக 24 சதவீதப் பங்கினை தொழிலாளர்களுக்கே அளித்துவிட தீர்மானித்து அந்த கொள்கை விளக்கம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. நாங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றியது மட்டுமல்ல, அந்த வாக்குறுதிகளை நல்ல வகையில் செயல்படுத்துகிற வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிய ஆலோசனை தந்துதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்தக் கோரிக்கை எண் 35, சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் பற்றியும் இந்த மாநில அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு தருவது பற்றியும் கூறிய விவரங்களை இப்போது வைத்திருக்கிறார்கள். இதன்மேல் விவாதிப்பது என்றால் இதைப் படிப்பதற்குக் கூட சந்தர்ப்பம் இல்லாத நிலைமை, மேலும் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கின்ற நேரம் 5 நிமிஷம்தான். எப்படிப் பேச முடியும்? இதைப் பல முறை எடுத்துக் கூறியும் கூட இப்படி வைப்பது சரியல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதை முன் கூட்டியே தந்திருப்போமானால் இது பத்திரிகைகளில் வெளி வந்திருக்கும். பத்திரிகைகளில் வெளி வந்து விடுமானால் உறுப்பினர்கள் தங்களுக்கு முதலில் தரவில்லையென்று உரிமைப் பிரச்னை வந்து விடும். முதலில் உறுப்பினர்களுக்குத் தரவேண்டும். மன்றத்திற்கு மரியாதை அளிக்கிற வகையில் முதலில் மன்றத்தில் வைக்க வேண்டுமென்ற அடிப்படையின் காரணமாகத்தான் இன்று காலையில் வழங்கப்பட்டது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சாதாரணமாக எல்லா மானியத்தின் மீதும் அமைச்சர்கள் ஆற்றுகிற உரை உறுப்பினர்களுக்கு முதல் நாள் விநியோகம் செய்யப்படுகிறது. அதனால் அடுத்த நாள் விவாதத்தில் கலந்துகொள்ள வசதியாக இருக்கும். இன்னும் பல புத்தகங்கள், பர்ஃபார்மன்ஸ் பட்ஜெட், இன்னும் பல குறிப்புகள் இன்றைய தினம் தான் இங்கே மேஜையில் வைக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் இந்தப் புத்தகங்களைப் படித்து விவாதத்தில் கலந்து கொள்ளவேண்டுமென்றால் அங்கத்தினர்கள் தங்கள் கடமையைச் சரிவர ஆற்ற முடியாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இதை மேஜையில் வைத்தால் பத்திரிகையில் வந்து விடும் என்று சொல்கிறார்கள். எங்கள் மேஜையில் வைத்ததற்குப் பிறகுதானே பத்திரிகையில் வரும். முன்னால் வராது அல்லவா, அதனால் நேற்று இரவு கொடுத்திருக்கலாம் இல்லையா. இப்போது கொடுத்தால் என்ன நஷ்டம், என்ன லாபம் என்பதைப் படிக்க முடியுமா? இப்படி ஒரு நாள் கூட அவகாசம் கொடுக்காமல் இத்தனை கோடி ரூபாய் வாங்கிக் கொண்டு போவதற்கு அமைச்சர் அவசரப்படுவதைப் பார்க்கும்போது உள்ளபடியே வருத்தப்பட வேண்டியிருக்கிறது. பர்ஃபார்மென்ஸ் பட்ஜெட், கமர்ஷியல் பட்ஜெட் இப்போது வைத்தால் எப்படி நடவடிக்கைகளை நடத்துவது என்று தெரியவில்லை,

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாநில அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு பங்கு மூலதன முதலீடு செய்தல் அறிவிப்பு தவிர, மற்ற அறிவிப்புகள் முன் கூட்டி தரப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. மற்ற உறுப்பினர்களும் எல்லா விஷயங்களும் தரப்பட்டு விட்டதாகச் சொல்கிறார்கள். திரு ஹாண்டே அவர்களும் இதைத்தான் சொன்னார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவர்களுடைய 35-வது கோரிக்கைக்கான பேச்சின் உரை இப்போதுதான் தரப்பட்டது. சாதாரணமாக முன்கூட்டி ஒரு நாளைக்கு முன்னால் வரும். நேற்று கூட பி.டபிள்யூ.டி. மினிஸ்டர் பேச்சு இரண்டு நாட்களுக்கு முன்னே வந்திருக்கிறது. மற்றதெல்லாம் இப்படி வந்திருக்கிறது. ஆனால் இந்த பர்ஃபார்மென்ஸ் பட்ஜெட், இந்த உரை, ஒரு நாளைக்கு முன்னால் வந்திருந்தால் சௌகரியமாக இருந்திருக்கும். பர்ஃபார்மென்ஸ் பட்ஜெட், கமர்ஷியல் பட்ஜெட் இன்றுதான் வைத்திருக்கிறார்கள். இந்த ஸ்பீச் காப்பி இன்றுதான் வைத்திருக்கிறார்கள். மற்ற இலாகாவிலே முன் கூட்டி வருகிறது. இந்த இலாகாவில் ஒரு நாள் தாமதமாக வந்திருக்கிறது. இதுதான் பாயிண்டு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, போக்குவரத்துத் துறை பற்றிய விரிவான ஆய்வுரை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டு விட்டது. ஆனால் போக்குவரத்துத் துறையிலே அமைச்சர் என்ற முறையிலே நான் ஆற்ற வேண்டிய உரைப் பகுதி மட்டும் இன்றைய தினம் தரப்பட்டது. பொதுவாக இந்த மானியத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்கிறபோது, முன் கூட்டியே இதைத் தந்து விட்டால் இது எங்கேயாவது வெளியே வந்து விடுமானால் மன்ற உறுப்பினர்களுக்குத் தருவதற்கு முன்னாலே எப்படி இது வெளியே வந்தது என்ற அளவிற்கு உரிமைப் பிரச்னை எழுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இந்த உரையைப் பொறுத்த மட்டிலே காலையிலே தரலாம் என்ற நியதியை வைத்துக் கொண்டோம். போக்குவரத்துக் கழகங்கள் பற்றிய முக்கிய விளக்கங்கள் ஆய்வுரை நூலிலே ஏற்கனவே உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். பாயிண்ட் ஆப் ஆர்டரில்லை. மன்றத்தில் சொல்லுகின்ற தகவல் வெளியே தவறாகப் போகக்கூடாது என்பதற்காக ஒரு கிளாரிபிகேஷன் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு அமைச்சரவர்கள் காலையில் உறுப்பினர்களுக்குக் குறிப்புகளைக் கொடுத்துவிட்டு, அவசர அவசரமாகப் பணத்தை எடுத்துக் கொண்டுபோக பார்க்கிறார்களா என்று கேட்டார்கள். அமைச்சர்கள் சொந்த வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போவதுபோல் எண்ணம்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் என்று சொல்லும்போது அமைச்சர் இலாக்காவைத் தான் குறிக்கிறது. இதையெல்லாம் ஸ்போர்டிங் ஸ்பிரிட்டில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பேரவை

யில் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் பேவரிட்டான அயிட்டமாக இருக்கிறது. இன்றைக்காவது நேரத்தோடு மானியக் கோரிக்கை மீதான விவாதத்தை ஆரம்பித்து முடிப்போம். மாண்புமிகு உறுப்பினர்கள் 10, 15 பேர் பேசுவதற்கு பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் எவ்வளவு பேரின் பெயர்கள் வருமோ தெரியவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கூடிய விரைவில் அளிக்கப்படும் நேரத்தில் பேச்சை முடித்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முதலில் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களை இந்த விவாதத்தைத் தொடங்கி வைக்குமாறு அழைக்கிறேன்.

*THIRU K. M. SUBRAMANIAM: Sir, let me at the outset congratulate this Government for having adopted the policy of nationalisation of public Transport although it is belated, and although it takes five years to complete the process of nationalisation of bus transport in the State. This is to be pointed out when other States, like Gujarat have nationalised the entire bus transport. I shall repeat the same sentence which I said last year. That the nationalisation of a utility service is very essential and that it should have been done long, long ago. The policy was adopted in 1944, but the execution is going to be only in 1979, that is, after five years, it is going to take effect.

I am not able to understand why five years' time is necessary to complete nationalisation. I hope and trust that the Hon. Minister will be able to explain why he wants this time of five years to nationalise; secondly, more than the bus operators, the people involved in this nationalisation are the financiers and I think financiers who have been taking a Shylockian rate of interest for financing bus services. By nationalisation we will be drawing a lot of money for mopping up deposits to the nationalised banks.

Sir, I want to know whether there is any proposal to have a Debt Relief Act so far as the nationalised bus services are concerned, I think it is very necessary; because some of the operators must have borrowed huge sums for their business and for the moneys they have borrowed, they should be paying high rates of interest. In any case, we are thankful to the Government for recognising the policy of nationalisation, although its execution, I think is half-hearted and the process is very gradual only.

I agree with the Hon'ble Minister that the Metropolitan Transport is not always profitable. But I would like to know, because I am ignorant, what is the state of B.E.S.T., Bombay. Are they making profit or loss or to what extent they are making profit or loss as the case may be I would like to be informed.

Then, Sir, the main consideration in nationalising a utility service is not profit at all. I do not say that it should be a losing concern. But what I say is the services given by a nationalised utility service should be good. Otherwise, there is no meaning in nationalisation. In this particular case, I know the intentions are very good, but the execution is very bad. There are so many troubles.

So far as Madras City is concerned, during peak hours, for instance to get into a bus, to get to the office, it takes nearly 2 or 4 hours. Especially from places like T. Nagar it is very difficult to get into buses and come to office in time. In the evenings also, after leaving office, bus passengers have to wait in queues for hours together. They are not able to get into buses and reach their destination quickly after more than six hours of work in offices. After work in offices, they have to stand in queues for 2 hours and 3 hours and after getting into the bus, they have to stand only. Naturally this tells upon the mental attitude of these persons.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) தலைமை]

The other day during question hour, there was discussion about the mental trouble of people. Is there a greater source of mental trouble than waiting for hours for buses for going back to house at about 7 O'clock ? These are persons who have to do many things, as they are all family people and they have to attend to various things for the family. They have to go for milk every morning, stand in a queue and go for sugar and stand in a queue, to be told after a long wait, 'come tomorrow'; in addition to all this if they are to stand in queues for getting into bus transport, it is something horrible. What is the remedy ? The remedy is not excusable. For, excuses do not satisfy anybody. You can give any number of excuses, you can say, it is costly, we cannot afford more buses. But if that be so, do not nationalise. Having nationalised, means of transport should be provided. That is your responsibility. I think if necessary more buses should be purchased and commissioned to cope up with the peak hour traffic. I know various excuses will be given—the road is not sufficient, transport vehicles cannot go there, etc. But at the same time we have to see how Bombay manages. I have seen Bombay. People there also stand in queues to half a mile length; but within 15 minutes—15 minutes mind you—the entire queue vanishes. But here what is the........

THE HON. THIRU S. RAMACHANDRAN: The hon. Member is under the impression that the B.E.S.T., Bombay, is making a profit. First of all, I would like to correct him. In 1972–73, they have budgeted for a loss of Rs. 2·3 crores.

THIRU K. M. SUBRAMANIAM: I said that I may be told whether they are making a profit or loss. I am extremely thankful to the Hon. Minister for having given me this information. The sum of Rs. 2·3 crores is not a loss; it is only a payment made for services. The services are excellent. You cannot call in bus services, monetary loss as loss in this services the loss is actually what is the service you are not giving to the people. How can you call that loss as loss ?

Today, the cost of living is going up and all the essential commodities are rising in prices and the most essential commodity, the essential service, for any man to ask is the bus transport. Under some good excuses or bad excuses, I mean under the excuse of rationalisation of stages, under the excuse of rationalisation to the nearest paise, you are going on increasing the fare. You have increased the fares to a horrible extent so that it is your responsibility, it is the responsibility of the Government for the higher cost of living in Madras City. Because, transport forms an important part in the cost of living of the people. Now apart from this, there are various other things. Take for instance the number of accidents in the transport. I am very happy that the Hon. Minister has admitted that there are accidents and accidents are increasing every day.

The Hon. Minister and the Government are always planning, planning, but never get into execution. Planning for what to reduce the accidents? In the process of planning, many accidents happen and it goes on and on, as though accidents happen with rapidity with a vengence anticipating planning to stop accidents. I think it is very essential that this Government should take immediate steps, effective steps, intelligent steps to reduce the accidents.

They are having Driving School. But all we know is that in spite of the best driving institutions, people are put to difficulties. What about drivers and conductors and the public ? You see there is a lot of misunderstanding between the driver and the public, between the conductor and the public. It is all because of our having to work under a nervous tension, and breakdown during peak hours, especially. Passengers were upset they have been waiting for hours and hours and after getting into buses they have only standing accommodation. They become a morally complete wreck. Secondly, the conductor is worried by the crowd standing inside the bus, he is not able to issue tickets and get

changes. He loses his temper, human nature being what it is. Then the driver finds that he has to go fast to catch up the time and he also loses his temper. What is the use of blaming the driver ? All have to work under a great stress and strain....

(The Speaker's Bell was sounded).

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I am the only speaker; you may give me some more time.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI): You are not the only speaker; there are about 16 members who have given their names. In your Party, you are the only speaker. Please take five more minutes and finish.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, it is stated that as soon as that Metropolitan Development Scheme is completed the bus transport will be good. How long are we to wait for this Metropolitan Development Scheme ? What we want is not Metrop litan Development Scheme. What we want is decentralisation of business in the city. What we want is development of villages in such a way that people are attracted back to the villages. That is Gandhian philosophy. I think that is Anna philosophy also. We should develop the village industries, so that people can go back to villages. Instead of that, they are thinking of Metropolitan Development Scheme. Then, they are going to have tube railways also. If the monies earmarked for tube railways are spent on village development, 50 per cent of the people will go back to the villages. Living will be happy if they get jobs and they can also live in their own villages.

Sir, I do not know about the compensation that is being offered for nationalised services. If you give five years' time—I know instances (I have been a member—I am still a member somewhere else)—where engines are changed from lorries, new engines are taken away and replaced by bad engines. If you give five years time for this sort of thing, I do not know what rate of compensation is to be worked out. It is for the Government to work out the compensation. But it should be on some basis. Whether it is on a goodwill basis, whether it is on the route basis, whether it is on the cost of operation basis, whether it is going to be on the basis of cost of vehicle, whether it is going to be on the basis of cost of mechanical workshop, I think it is for the Government to decide. What we want is that it should be impartial and there should not be any political motive in settling the compensation.

Summing up—I do not want to take much time of the House—firstly, I want that nationalisation should proceed immediately and the entire routes should be nationalised. Secondly, the number of buses

running during peak hours should be increased in the City of Madras atleast for very popular routes. Thirdly I want the fares to be reduced, whatever may happen. There is no use of saying that revenue has increased to Rs. 465 crores. But why has it increased, why is it increasing ? Because you are increasing the rates. So, the fares have to come down. I would like this Government to compare the tram fare in Calcutta to know how people are travelling in trams in Calcutta at very cheap cost. Why not we adopt that fare ? Because profit should not be there. Fourthly, courteous treatment to all. Lastly I want that the Government should view this as a utility concern. Transport has been the most essential utility concern and it should do absolutely good service at the cheapest possible cost. That is all I have to say.

திரு. ஏ. எம். ராஜா : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்தப் போக்குவரத்து மான்யத்தின்மீது இரண்டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

போக்குவரத்து தேசியமயமாக்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இந்த 25 ஆண்டுகளில் மொத்தம் உள்ள 12 ஆயிரம் பேருந்துகளில் மூவாயிரம் பேருந்துகள்தான் நாட்டுடமையாக்கப்பட்டு உள்ளன. இப்போது இந்த ஆண்டில் நமது அரசு கொண்டுவந்துள்ள சட்டத்தின்படி இன்னும் ஐந்து ஆண்டுக்காலத்தில் தமிழகத்திலுள்ள அனைத்துப் பேருந்துகளும் தேசியமயமாக்கப்பட்டுவிடும். இப்போது இந்தச் சட்டத்தை ஆட்சேபித்து ஒருசில உரிமையாளர்கள் நீதி மன்றங்களுக்குச் சென்றிருப்பதால் சிறிது காலதாமதம் ஏற்படுகிறது. நாட்டுக்குப் பெரும் நன்மை பயக்கும் தேசியமயமாக்கும் திட்டத்தை அரசு கொண்டு வரும்போது அவற்றுக்கு எதிராக உள்ளவர்கள் இருக்கத்தான் இருக்கின்றார்கள். அவர்களுக்காக வாதாடுகின்றவர்களும் இந்த மன்றத்தில் இருக்கிறார்கள். இது பரிதாபத்திற்குரியதாகும். இன்னும் நமது நாட்டில் 8,794 பேருந்துகள் தேசிய உடைமையாக்கப்பட இருக்கின்றன. இவற்றையெல்லாம் மேற்கொள்ள தக்கவிதத்தில், நல்ல முறையில் சட்டங்களைக் கொண்டு வந்து நமது அரசு இவற்றை சீக்கிரம் மேற்கொள்ள வேண்டும்.

நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் சென்னையில்தான் விரயத்தில் நடைபெறுகின்றன. பொதுவாக உலகிலுள்ள எந்தப் பெரு நகரங்களிலும் நடத்தப்படும் போக்குவரத்து விரயத்தில் நடப்பதைத்தவிர வேறு வழியில்லை. எந்தப் பெருநகரில் நடத்தப்படும் பேருந்துகளின் நிலையும் இதுதான். ஆனால் சென்னையைப் பொறுத்தவரையில் விரயம் மிகக் குறைவாக இருக்கின்றது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். அதற்காக நமது அமைச்சரவர்களைப் பாராட்ட வேண்டியது அவசியம். சென்ற ஆண்டு 132 இலட்சம் விரயம் ஏற்படக் கூடிய அளவிற்கு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு ரூ. 80-லிருந்து ரூ. 90 லட்சம் வரையில்தான் விரயம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி விரயத்தைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டதற்காக அரசைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, பெருநகரிலுள்ள போக்குவரத்துக்கு மத்திய அரசு ஓரளவிற்குப் பணத்தை மானியமாகவும், கடனாகவும் கொடுத்து உதவுகிறது. டெல்லி நகரப் போக்குவரத்திற்கு கடந்த ஆண்டு ரூபாய் நான்கு கோடி அப்படிக் கடனாகவும், மானியமாகவும் கொடுத்ததாக அறிகிறேன். அதே முறையில் நமது சென்னை நகரப் போக்குவரத்திற்கும் நாலு கோடி இல்லாவிட்டாலும் இரண்டு கோடியாவது பெற வேண்டும் என்று நமது அரசு எழுத வேண்டும். அப்படி அவர்கள் கொடுக்கவில்லையென்றால் போக்குவரத்துக் கழகங்கள் வருமானவரி செலுத்தவேண்டியதை நாம் கடனாகவோ அல்லது மானியமாகவோ மாற்றிக்கொள்ளுவதற்கு நாம் மத்திய அரசின் அனுமதியைக்கோர வேண்டும். ஏன் என்றால் மத்திய அரசு அறிவித்த நிதிநிலை அறிக்கையில் புதிதாகத் தொழில் துவங்கியவர்களுக்கு 15 சதவிகிதம் மானியம் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். எனவே, அந்தச் சலுகையை நாம் பயன்படுத்திக் கொள்ள முடியாதா என்று அரசு ஆலோசிக்க வேண்டும்.

அடுத்து, விரைவுப் பேருந்துகளின் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது. சென்ற ஆண்டு 251 ஆக இருந்தது, இந்த ஆண்டு 261 ஆக உயர்ந்திருக்கின்றது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இவற்றின் மூலம் நாட்டின் தலைநகரும் மாவட்டத் தலை நகரங்கள் அனைத்தும் இணைக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட இணைப்பினால் மக்களிடையே ஒரு ஐக்கிய உணர்வு ஏற்பட வழியிருக்கின்றது. நான் விரும்புவது இந்த 'எக்ஸ்ப்ரஸ்' பஸ்களுக்காக ஒரு தனி அமைப்பு, தனி நிர்வாகம் ஏற்பட வேண்டும். அதில் பணியாற்றுகின்றவர்களுக்குத் தனி பணி மனைகளும், விடுதிகளும் அளிக்கப்பட வேண்டும்.

அடுத்து, போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகின்றவர்களுக்கு வீட்டு வசதி செய்து தரப்பட வேண்டும். இந்த நாட்டில் இந்தத் துறையில் சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். குறிப்பாக நாட்டின் தலை நகரில், மாவட்டத் தலை நகரங்களிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இதைச் செய்து தரவேண்டும். இப்போது போக்குவரத்துத் துறை இதற்காக ரூ. 10 லட்சம் ஒதுக்கியிருக்கின்றார்கள். இந்தத் தொகை போதாது. இது குறைந்தது ஒரு கோடி அல்லது இரண்டு கோடியாகவாவது உயர்த்தப்பட வேண்டும். அது மட்டுமின்றி வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் மூலமாக சென்னையிலும், மாவட்டங்களிலும் உள்ளவர்களுக்கு தவணை முறையில் வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் மூலமாக குறைந்தது 2,000 வீடுகளை கட்டிக்கொடுக்க இந்தத் துறை ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து, இந்தப் போக்குவரத்துக் கழகங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக ஐந்து கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் நான்கு லாபத்தில் இயங்கிவருகின்றன. இப்படிப்பட்ட இலாபங்கள் நமது சமுதாயத்தின் நலனுக்குப் பயன்பட்டு வருகின்றன.

இந்தப் போக்குவாத்துத் துறையை அரசே மேற்கொண்டால், அது மக்களுக்குப் பாதகமாக முடியும், செவ்வனே நடைபெறாது என்றெல்லாம் கூறப்பட்டு வந்தது. இன்னும்கூட சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இது மக்களையும், பத்திரிகைகளையும் திசை திருப்புகின்ற ஒன்று.

போக்குவரத்துக் கழகத்திற்குப் பத்திரிகையின் ஆதரவு கிடையாது எதிர்க் கட்சிகள் நேரடியாகவே இவற்றைக் குறைத்துப் பேசுவதை வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தாராபுரத்தில் சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கும், தனியார் கம்பெனியைச் சார்ந்தவர்களுக்கும் இடையே ஒரு தகராறு நடந்தது. தனிப்பட்ட பேருந்துக்குச் சொந்தமாக இருப்பவர்கள் தங்களுடைய தொழிலாளர்களை ஏவி விட்டு, சேரன் போக்குவரத்துத் தொழிலாளர்களை அடித்தார்கள். அதைக் கேட்கப்போன சேரன் போக்குவரத்துக் கழகத்தின் ஜெனரல் மேனேஜரை, கைது செய்கின்ற மாதிரி, அவரைச் சூழ்ந்துகொண்டனர். அவரை வெளியே கொண்டு வரும் பாடு பெரும் பாடாகிவிட்டது. இதைப் பற்றி, பத்திரிக்கைக்காரர்கள் உண்மையான செய்தியைப் போடவில்லை. மாறாக, சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒரு தவறு செய்ததாக குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்னொரு உதாரணமும் கூற விரும்புகிறேன். சத்தியமங்கலத்தில் சமீபத்தில் பண்ணாரி திருவிழா நடைபெற்றபோது "அஜந்தா" என்ற ஒரு தனியார் பஸ் கம்பெனியார், ஸ்பெஷல் பர்மிஷன் எதும் பெறாமலே, சேரன் போக்குவரத்துக் கழக பஸ்ஸின் நேரத்தில், ஆக்கிரமிக்கின்ற முறையிலே, பயணிகளை ஏற்றிச்செல்லவிருந்த நேரத்தில், சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளி "ஏன் இப்படி எங்கள் நேரத்தை ஆக்கிரமிக்கிறீர்கள்" என்று கேட்டபோது, அந்தத் தனியார் பஸ்ஸின் சொந்தக்காரர்கள் தொழிலாளர்களைத் தூண்டி விட்டு சேரன் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களை அடிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டார்கள். இதைப் பற்றி பத்திரிகையில் வெளிவந்த செய்தி என்னவென்றால், சேரன் போக்குவரத்தைச் சேர்ந்த தொழிலாளி தவறு செய்ததாகவும், தனிப்பட்ட முதலாளியின் பஸ் தொழிலாளி தாக்கப்பட்டது போலவும் பத்திரிகையில் விளம்பரம் கொடுக்கப்பட்டதே தவிர உண்மையாக நடந்ததை படம் பிடித்துக் காட்டவில்லை. உண்மையில், அந்தத் திருவிழாவின்போது, சேரன் போக்குவரத்துக் கழகம் பயணிகளுக்கு வசதியாக, தண்ணீர்ப் பந்தல் அமைத்து, பயணிகளுக்கு நீர்மோர், எலுமிச்சம்பழச் சாறு போன்ற பானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி பயணிகளுக்கு நல்ல முறையில் உதவி செய்திருந்தும்கூட, பத்திரிகைகள், தனிப்பட்ட பஸ் முதலாளியின் லாபம் பாதிக்கப்படுகிறது என்ற காரணமாக, போக்குவரத்துக் கழகத்தைக் குறை கூறியிருக்கிறார்கள். மக்களிடையே, போக்குவரத்துக் கழகங்களைப் பற்றித் தவறான அபிப்பிராயம் ஏற்படச் செய்கிறார்கள்.

இன்றைக்கு பஸ்களை நாட்டுடைமை ஆக்குகின்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதை, முழுக்க முழுக்க நாட்டுடைமை திட்டம் என்று என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. காரணம், பஸ்களை மட்டும் தேசிய மயமாக்கினால் போதாது. பஸ்களுக்குத் தேவையான உபகரணங்களைத் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளையும் நாட்டுடைமை ஆக்க வேண்டும். பஸ்கள் தேசியமயமாக்கப்பட்ட பின்னர், டி. வி. எஸ்., ஏ. பி. டி. போன்ற கம்பெனிகளின் பேருந்துகள் அரசுமயமாக்கப்பட்ட பின்னரும், அந்தக் கம்பெனிகளின் பணிமனைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அவற்றையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு 1,200 சேஸிஸ்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. வருங்காலத்தில் இன்னும் அதிகமாகத் தேவைப்படும். நமது நாட்டில், அசோக் லேலண்டு ஆண்டொன்றிற்கு 5 ஆயிரம் சேஸிஸ்களைத் தயாரிக்கின்றன. ஏன் இதை நாட்டுடைமை ஆக்கக் கூடாது? அது போலவே, பேருந்துப் போக்குவரத்திற்கு 40 ஆயிரம் டயர்கள் தேவைப்படுகின்றன. ஆகவே, துறையைச் சேர்ந்த மற்றத் துறைகளின் தேவையையும் எடுத்துக்கொண்டால் 50 ஆயிரம் டயருக்கும் மேலாகத் தேவைப்படும். எனவே, இந்த டயர் உற்பத்தித் தொழிற்சாலைகளையும் நாட்டுடைமை ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேருந்துகளுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் ரூ. 4 கோடிக்கு வாங்குகிறோம். இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும். ஓரகாஸ் டி.வி.எஸ்., வீல்ஸ் இண்டியா போன்ற நிறுவனங்கள் ஸ்பேர் பார்ட்ஸ் உற்பத்தி செய்கின்றவைகள். இந்தத் தொழிற்சாலைகளையும் நாட்டுடைமை ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவற்றில், தனியார் செய்த முதலீடு சுமார் 10 அல்லது 15 சதவிகிதத்திற்கு மேல் இல்லை. உண்மையான கணக்கைப் பார்க்கிற போது 5 சதவிகிதம் கூட இருக்காது என்று சொல்கிறார்கள். ஆகவே, இவற்றையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*<u>திரு. என். கே. பழனிசாமி</u>: பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, இந்த மானியத்தின் மீது, வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தி ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டிருப்பதும், இன்னும் 5 வருஷத்தில் எல்லா பஸ்களும் தேசியமயமாக்கப்படும் என்பதும் மகிழ்ச்சிகரமான விஷயம். பஸ்களை தேசியமயமாக்கியதால், ஜனங்கள் தனியாரின் சுரண்டலிலிருந்து விடுபட்டு, சர்க்கார் போக்குவரத்துக்களை சௌகரியமாகப் பயன்படுத்தி, அதனால் சர்க்கார் தனக்கு வரக்கூடிய மிச்சம் உள்ள பணத்தை நாட்டு அபிவிருத்திக்காக செலவு செய்யக்கூடிய சந்தோஷகரமான நிலைமை இருக்கிறதா என்றால் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், பஸ் போக்குவரத்தை அரசு எடுத்துக் கொண்ட பிறகு தனியார் பஸ்களில் கிடைத்த சௌகரியத்தைவிட இப்போது குறைவான சௌகரியம்தான் கிடைக்கிறது. அது மாத்திரமல்ல. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேருவது என்பது அரிதான ஒன்று. காரணம், பஸ் ரிப்பேர் ஆகிவிடுகிறது அல்லது டயர் வெடித்து விடுகிறது, அல்லது இப்படி ஏதாவது ஒன்று நேரிட்டு விடுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், சென்னையிலிருந்து மதுரைக்குச் செல்லவேண்டுமென்றால்,முதலில் பஸ் புறப்படுவதற்கு முன் சென்னையில் ஒரு மணி நேரம் ரிப்பேர் செய்கிறார்கள். மீண்டும் திருச்சியில் இரண்டு மணி நேரம் ரிப்பேர் செய்கிறார்கள். இப்படி எல்லாம் செய்யப்பட்டு, பஸ் மதுரைக்குப் போய்ச் சேருவதற்குள் நான்கு மணி தாமதம் ஏற்பட்டுவிடுகிறது.

அது மட்டுமல்ல. சுத்தமான வெள்ளை உடையுடன் பஸ்ஸில் ஏறி, அப்படியே இறங்குவது என்பது முடியாத ஒன்று. பஸ்கள் அந்த அளவுக்கு தூய்மையற்ற நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. பஸ்ஸில் தண்ணீர் வேண்டுமென்றால், அங்கே டப்பாதான் இருக்கிறது. தண்ணீர் கிடையாது—அல்லது தண்ணீர் இருந்தாலும் அதை மொண்டு குடிப்பதற்கு டம்ளர் கிடையாது. பஸ்ஸில் இருக்கின்ற கண்டக்டருடைய நடவடிக்கை ஒரு போலீஸ் ஆபீசருடையது போன்று இருக்கிறது. பயணம் செய்கின்ற பிரயாணிகள் ஒருவித பயத்துடன்தான் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படி மரியாதை குறைவாக அவர்கள் நடந்து கொள்கிறார்கள். ஆகவே, பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டதால் பொது ஜனங்களுக்கு சௌகரியம் ஏதுமில்லை என்ற நிலைதான் இன்றைக்குக் காணப்படுகிறது.

பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டதால், அதில் பணியாற்றுகிறவர்களுக்கு அதிக ஊதியம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அப்படிக் கிடைக்கவில்லை. அதிலும், இருக்கின்ற ஐந்து வாரியங்களிலும் ஒவ்வொரு சம்பள விகிதம் இருக்கிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால், சேரன் போக்குவரத்துக் கழகத்தில், எஸ்.ஆர்.வி.எஸ். பஸ்களை எடுத்திருக்கிறார்கள். அதிலே பணியாற்றிக்கொண்டிருந்த டிரைவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும், ஏற்கனவே கொடுக்கப்பட்ட சம்பளம்தான் கொடுக்கப்படுகிறது. அதனால் ஒரே சேரன் போக்குவரத்துக் கழகத்தில், எஸ்.ஆர்.வி.எஸ். நிறுவனத்திலிருந்து வந்த பணியாளர்களுக்கு ஒரு சம்பள விகிதமும், ராமன் அண்டு ராமன் நிறுவனத்திலிருந்து வந்த பணியாளர்களுக்கு வேறொரு சம்பள விகிதமும் அளிக்கப்படுகின்றது. ஒரே வேலையைச் செய்கிறவர்களுக்கு இரண்டுவிதமான சம்பளம், இரண்டு விதமான பேட்டா. இந்த நிலைமை மாற்றப்பட்டு எல்லோருக்கும் ஒரே விதமான சம்பளம் கொடுக்கப்படவேண்டும்.

பஸ் நிறுவனங்களில் பதிலி என்ற முறையில், 200-க்கும் மேற்பட்டவர்கள் பதிலிகளாக இருக்கிறார்கள். இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட் ஆக்டின் படி, 240 நாட்கள் ஒருவர் வேலை செய்தால், அவர் கட்டாயமாக வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற விதி இருக்கிறது. அப்படிச் சேர்த்துக் கொண்டால், லீவ் போன்ற வசதிகள் கிடைக்கும். சர்க்கார் துறையில் இந்த மாதிரி இல்லை. இந்த மாதிரி நிலைகளினால், தொழிலாளர்களுக்கிடையே பிளவு ஏற்படுகிறது. ஒரு சிறு தகராறு ஏற்பட்டாலும் அது பெரிதாக்கப்பட்டு, வேலை நிறுத்தத்தில் முடிகிறது. போலீஸ் அதிகாரி கோபமாக இருந்தார் என்பன போன்ற காரணங்களை எல்லாம் வைத்துக் கொண்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது போன்றனவற்றிற்கு இந்த அதிருப்தி தான் காரணம். ஆகவே, தேசியமயமாக்கப்பட்ட பிறகு பஸ்களில், பயணிகளுக்கு சௌகரியத்தை அதிகரிக்க முடியவில்லை. ஆகவே, 3,000 பஸ்களை வைத்துக் கொண்டு, 30, 40 லட்சம் தான் லாபம் பெற முடிகிறது. இதை ஏன் சொல்கிறேன் என்றால் தனிப்பட்ட முதலாளிக்கு ஒரு பஸ்ஸில் ஒரு நாளைக்கு150 ரூபாயிலிருந்து, 300 ரூபாய் வரை லாபம் வந்திருக்கிறபோது நமது அரசாங்கப் போக்குவரத்துக்கழகங்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு பஸ் 8 அணா லாபத்தைக் கூடச் சம்பாதித்துக் கொடுக்கவில்லை. இது பரிசீலிக்கப்படவேண்டிய விஷயம்.

அடுத்து, நம்முடைய பஸ்களுக்கு டயர் மிகவும் தேவை. அடிக்கடி ரிட்ரீட் செய்கிறோம். ஆர்டர் கொடுத்தும் வராமல் இருக்கின்றன. நமக்கு எவ்வளவு டயர்கள் தேவை என்பதை முன் கூட்டியே அறிந்து சென்னையிலேயே அவற்றை ப்ரொக்யூர்மெண்டு செய்யலாம். இன்னும் சேரன், சோழன் போன்ற போக்குவரத்துக் கழகங்களை எடுத்துக் கொண்டால் நாம் எடுத்துக் கொண்ட பஸ்களே மோசமானவை. வேறு பஸ்கள் மாற்றப்படவில்லை. இன்னும் டி.வி.எஸ்., எஸ்.ஆர்.வி.எஸ், வொர்க்ஷாப் மிகத் திறமையானது. அதை எல்லாம் விட்டு விட்டு இப்போது திருச்சியில் ஒன்றைக் கட்டுகிறார்கள். தனிப்பட்டவர்களிடம் பஸ் ரிப்பேர் காண்ட்டிராக்ட் கொடுக்கக்கூடாது. நமக்குத் தேவையான ஸ்பேர் பார்ட்ஸ் அனைத்தையும் உற்பத்தி செய்து கொள்வதற்கு நாமே பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தியாக வேண்டும்.

இன்னும் நாட்டுடைமை ஆக்கப்பட்டதற்கு என்ன நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது என்பதைப்பற்றி இந்த அறிக்கையில் ஒன்றும் இல்லை. அந்த விவரங்களும் கொடுக்கப்பட்டிருந்தால் நன்றாக இருக்கும். இன்னும் பீரியாடிகல் செக் இருக்கவேண்டும். டிரைவர்கள் பஸ்களைக் கொண்டு வந்துவிட்டுப் போய்விடுகிறார்கள். என்ன ரிப்பேர் என்று பார்ப்பதில்லை. அப்படி அவர்கள் பஸ்களைக் கொண்டு வந்து விட்டவுடன் உடனே அதை ரிப்பேர் பார்ப்பதற்கு வசதி இருக்க வேண்டும். இன்னும் நிர்வாகத்தில் ஒவ்வொரு மட்டத்திலும் தொழிலாளர்களுக்குப் பங்கு இருக்க வேண்டும். டிரான்ஸ்போர்டில்தான் பில்பரேஜ் ஜாஸ்தி. யார் யார் திருடுகிறார்கள், எப்படித் திருடுகிறார்கள் என்பதை தொழிலாளர்களின் உதவி இருந்தால் தான் நல்ல முறையில் கண்காணிக்க முடியும்.

நகர போக்குவரத்தை எடுத்துக் கொண்டால் பெரும்பாலான வண்டிகள் ஸ்டார்டிங் டிரபிள். ஓடிக்கொண்டே இருக்கின்றன. டீசல் வேஸ்டேஜ் ஜாஸ்தி. 26,56 ரூட்டுகளையெல்லாம் எடுத்துக் கொண்டால் ½ மணிக்கு ஒரு பஸ் என்று பேர். ஒரு மணிக்கு ஒன்று கூட வருவதில்லை. ஒரு வண்டி ரிப்பேர் என்றால் 2 மணிக்கு ஒன்றுதான் வருகிறது. கிள்ளியூரிலிருந்து பாரிசுக்கு 6 வண்டிகள் — நான்கு வண்டிகள்தான் ஓடுகின்றன. இன்னும் 29எ சட்டசபைக்கு முன்னால் கூட நிற்பதில்லை. ஒரு மணி கழித்து 3 வண்டிகள் வருகின்றன. 2 வண்டியில் பிரயாணிகள் இருக்கிறார்கள். ஒரு வண்டி காலியாக வருகிறது. இன்னும் வண்டி நிற்க வேண்டிய இடத்திற்கு 100 கஜம் தள்ளியே நிறுத்துகிறார்கள். வண்டியில் ஏறுவதற்கு பயணிகள் ஓடவேண்டியிருக்கிறது. எல்லோரும் ஏறுவதற்குள் வண்டியை எடுத்துவிடுகிறார்கள்.

உதாரணமாக, ஒரு வண்டிக்கு முன்னால் 27-பி போடப்பட்டிருக்கிறது. பின்னால் 27-இ போடப்பட்டிருக்கிறது.—அது 27-எ ரூட்டில் போகிறது. பணிமனை போட்டு வருகிற பஸ்ஸில் பயணிகள் இருக்கிறார்கள். அது எந்த ரூட்டில் போகிறது என்றே தெரியவில்லை. இப்படி பல குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றைக் களைய தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இது பற்றி எல்லாம் ஆராய்வதற்கு ஐயாசாமி கமிட்டியைப் போட்டார்கள். அவர்களது அறிக்கையைக் கொடுக்கவில்லை. இன்றைக்கு எல்லா வண்டிகளும் மவுண்டுரோடு வழியாகத் தான்

பாரிசுக்கு வர வேண்டுமா என்பதை யோசிக்கவேண்டும். வேறுவழியில் திருப்பி விடுவது டிராபிக் சௌகர்யமாக இருக்கும். வேலை நேரங்களை மாற்றுவதற்கு தனியார்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்றார்கள். அரசாங்க அலுவலகங்கள், பள்ளி ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் நேரத்தை மாற்றியமைத்துக்கொள்ள நாம் யோசிக்கலாம். இன்னும் நைட் பஸ்கள் வருகின்றன. ஆம்னி பஸ்ஸும் ஓடுகிறது. ஆம்னிபஸ் ஓடிக்கொண்டிருக்கும் வரை நமக்கு நைட் பஸ் லாபகரமானதாக இருக்காது (மணி அடிக்கப்பட்டது).

திரு. மா. வே. நாராயணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கக்கூடிய இந்த போக்கு வரத்து மானியக் கோரிக்கைகளை ஆதரித்தும், வரவேற்றும் ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அரசு போக்குவரத்துத் துறையில் மகத்தான முன்னேற்றகரமான மாறுதல்களைக் கொண்டு வந்திருப்பதை நாம் எல்லோரும் மிக நன்றாக உணர்ந்திருக்கிறோம். மக்களுடைய நேரிடைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவில் இந்தப் போக்கு வரத்துத் துறை நாட்டுடைமை ஆக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் நமது அரசு தீவிரமாகச் செயல்பட்டு வந்தாலும் நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல நமது டாக்டர் கலைஞர் முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கொப்ப ஐந்து ஆண்டுகளுக்குள் நாட்டில் இருக்கக்கூடிய பேருந்துகள் அனைத்தையும் நாட்டுடைமை ஆக்க வேண்டுமென்ற அடிப்படையில் அதற்கான ஒரு சட்டத்தையே கொண்டு வந்து நிறைவேற்றியிருப்பதற்கு அனைவருடைய பாராட்டுதல்களையும் தெரிவிக்க வேண்டியது அவசியமாகிறது.

இந்தத் துறை சம்பந்தப்பட்ட விவரங்களைப் புத்தகங்களில் அச்சிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அதில் நமது கொள்கைப் பற்றி தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இதை எந்த வகையில் லாபகரமாகவும் நடைபெறச் செய்ய வேண்டும் என்பதையும் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையை மிக வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வருவதற்கு அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அரசாங்கம் நேரடியாக நடத்துகின்ற இலாக்கா ஒன்றினை வைத்துக் கொண்டு மற்றப் பகுதிகளைப் பல்லவன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம் என்பதாக ஐந்து கழகங்களாக சிறப்பான முறையில் பிரித்து வைத்து மக்களுக்குச் சிறந்த சேவை ஆற்றும் படியாகச் செய்திருக்கிறார்கள். இது மிகச் சிறந்த சமதர்ம அடிப்படைக் கொள்கையில் அமையப் பெற்று படிப்படியாக வெற்றி அளித்து வரக்கூடிய ஒன்றாக இருக்கிறது.

முற்பகல் 11-00. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையிலே சென்னை, செங்கை மாவட்டங்களிலே ஓடக்கூடிய பேருந்துகள் எல்லாம் பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தின் கீழே வருகிறது. அதிலே

எவ்வளவோ மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதன் அவசியத்தை உணர்ந்து நம்முடைய அமைச்சர் அவர்கள் பல்வேறு வகையான சிறப்புத் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது நல்ல ஒரு முன்னேற்றத்தை அடைய வேண்டும், அடையும் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையிலே நம்முடைய அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்கள், அந்தச் சொத்துக்கள் என்ற காரணத்தினாலே கிளர்ச்சிகள் நடைபெறும் பொழுது அவை பாழடிக்கப்படுகின்றன. மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய அளவிற்கு பஸ்கள் கொளுத்தப்படுகின்றன. கல்லெறியப்படுகின்றன. முற்போக்குவாதிகள், சமதர்மவாதிகள், சொத்துக்கள் எல்லாம் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்பதில் தங்களுக்குத்தான் தீவிரக் கருத்து இருக்கிறது என்று சொல்லக்கூடியவர்கள் மறைமுகமாக அதை யெல்லாம் ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் மிகுந்த வருத்தத்தைத் தரக்கூடியதாக இருக்கிறது. முதலாளிகளுக்கு அத்தகைய எண்ணம் இருந்தால் நான் கவலைப்பட மாட்டேன். ஆனால் நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் பொதுச் சொத்துக்களுக்கு நாசம் ஏற்படுத்த வேண்டுமென்று முனைவது கண்டிக்கத் தக்க செயல் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக என்னுடைய தொகுதியைப்பற்றிய சில பிரச்சினைகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் திருவொற்றியூர், எண்ணூர், மணலி, மாதவரம், செங்குன்றம், அம்பத்தூர், ஆவடி போன்ற பகுதிகள் இருப்பதால் தொழிலாளர்கள் நிறைந்த பகுதிகள் என்பது எல்லோருக்கும் தெரியும். அங்கேயுள்ளவர்கள் எல்லாம் பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடியவர்கள். சென்னையையொட்டிய வட சென்னை பகுதியைப் பொறுத்தவரையில் இப்பொழுது வள்ளலார் நகர் என்று அழைக்கப்படுகிற பகுதியிலிருந்து வடசென்னையை ஒட்டியுள்ள பகுதிகள் அத்தனையும் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த அத்தனைப் பகுதிகளும் நீண்ட நெடுநாட்களாக புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் புள்ளிவிரத்தோடுகூட கூறமுடியும். அந்தக் குறைபாடுகளை நம்முடைய கழக அரசுதான் போக்கமுடியும். நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கக்கூடியவர்கள் திரு. ராமச்சந்திரன் அவர்கள் தொழிற்சங்கத்திலே பணியாற்றியவர்கள், அவர்களுக்கு இந்தச் சங்கடங்களைப்பற்றி நேரடியாகத் தெரியும். அவற்றை நிறைவு செய்யுங்கள், நீண்ட நெடுநாட்களாக இருக்கக்கூடிய குறைபாடுகளை நீங்கள் தான் போக்கிட வேண்டுமென்று சொன்ன நேரத்திலே அவர்களும் ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். மெட்ரோபாலிட்டன் ஸ்கீம் என்ற முறையிலே பூமிக்கு அடியிலே ரயில் விடுகிற திட்டத்திற்காக சர்வே நடைபெற்றதைப் பார்த்தால் எண்ணூரிலிருந்து திருவான்மியூர் வரையிலே உள்ள பகுதிகள் போக்குவரத்து நெரிசலான பகுதிகள் என்று சொல்லப்படுகிறது, அது நூற்றுக்கு நூறு உண்மையாகும். திருவொற்றியூர் சாலை—தொழிற் சாலைகள் நிறைந்துள்ள பகுதியாக இருப்பதால்—நெரிசல் உள்ள சாலையாக இருக்கிறது. அந்தப் பாதையை

40, 50 அடி அகலத்திற்கு அகலப்படுத்தி, பிளாக் டாப் செய்து ரைடிங் சர்வீஸுக்கு ஏற்றதாக செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தல் ஒரே நேரத்திலே 4, 5 வண்டிகள் செல்வதற்கு அந்தப் பாதையைப் பயன்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படும். கடைசியாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

சென்னை மாநகரிலே ஓடக்கூடிய டாக்சிகள் எல்லாம் யாரோ ஒரு சிலருக்குச் சொந்தமாக இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றை ஓட்டக் கூடியவர்கள் தான் கடுமையாக உழைக்கிறார்கள். ஆனால், போதுமான ஊதியம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. நம்முடைய கழக அரசு முற்போக்காகச் செயல்படுகிற அரசு டாக்சி ஓட்டக் கூடியவர்களையே அதன் சொந்தக்காரர்களாக ஆக்குவதற்கு தனியாக கார்ப்பரேஷன் அல்லது கழகம் அமைத்தாவது அந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

* <u>திரு ஏ. சுவாமிதாஸ்</u>: தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துத் துறை மானியத்தின்கீழ் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

எங்களுக்குப் பேசுவதற்குக் கொடுக்கிற காலம் மிகக் குறுகியதாக இருப்பதால் எல்லாக் கருத்துக்களையும் சொல்லாமல், ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். போக்குவரத்துறையின் நிர்வாகம் வரவரச் சீர்மையடைகிறது என்று அறிக்கையிலே காணப்பட்டாலும், விபத்துக்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும்பொழுது சாலைகளிலே அதிகமான அளவிற்கு விபத்துக்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. அதிலும் குறிப்பாக சில குறிப்பிட்ட சாலைகளிலேதான் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அப்படி விபத்துக்கள் ஏன் ஏற்படுகின்றன என்பதை ஆராய்வதற்கு அவற்றைத் தடுப்பதற்கும் இந்தத் துறையினர் முற்படவேண்டும்.

விபத்துக்கள் ஏற்பட்டுவிட்டால் ஓடோடிச் சென்று நிர்வாகத்திலே உள்ள துறையினர் கண்காணிப்பதில்லை. ஒரு வண்டியும் இன்னொரு வண்டியும் மோதிக்கொண்டால் நாள் கணக்கிலே அப்படியே கிடப்பதைப் பார்க்கிறோம். ஒரு வண்டி அடிப்பட்டுக் கிடந்தால் அது பல நாட்களுக்கு அப்படியே கிடப்பதைப் பார்க்கிறோம்.

பஸ்கள் எல்லாம் நாட்டுடைமையாக்கப்படுகிறதை கொள்கையளவிலே ஒப்புக்கொள்கிறோம். நாட்டுடைமையாக்கப்பட்டது எல்லாம் நாட்டுக்குச் சொந்தம் என்றால் இந்த நாட்டு மக்கள் அத்தனை பேரும் அதன் சொந்தம்தான். எனவே மக்கள்தான் அவற்றின் உரிமையாளர்கள், எஜமானர்கள், அந்த எஜமானர்களுக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளால் எந்த எந்த வாய்ப்புகள், வசதிகள் பெருகியிருக்கின்றன என்று கணக்குப்போட்டுப் பார்க்க நாம் எல்லாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு — நாட்டுடைமையாக்கப்படாத நிலையில் தனியாரிடம் இருந்தபொழுது என்ன வசதிகள் கிடைத்ததோ — அதைவிட அதிகமாக வாய்ப்புகள் வசதிகள் பெருகியிருக்கிறதா இல்லையா என்று அதோடு தாரதம்மியப்படுத்திப் பார்ப்பதற்கு அரசு கடமைப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு கேள்விப் பட்டியல் (questionnaire) குவெஸ்ட்னியர் போட்டு. மக்கள் கருத்தையறிய வேண்டும். முன்னாலே என்ன என்ன வசதிகள் இருந்தன, இப்பொழுது அவை எப்படி பெருகியிருக்கிறது என்று ஆராய்ந்து அதைக் கவனித்துச் செயல்படவேண்டும்.

நாட்டுடைமையாக்கப்பட்டவுடனே பஸ்களிலே பிரேக் டவுன்கள்தான் பெருகியிருக்கிறது. தனியார் துறையிலே இருந்தபொழுது பிரேக் டவுன் குறைவாக இருந்தது.

கன்னியாகுமரி மாவட்டத்திலே 25 ஆண்டுகளுக்கு முன்னாலேயே நாட்டுடைமையாக்கப்பட்டுவிட்டது. இருப்பினும் நிர்வாகம் எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது ? பேருந்துகள் எப்படிப் போய்க்கொண்டிருக்கின்றன, லாபம் எப்படி இருக்கிறது. முன்னாலே இருந்த லாபம் படிப்படியாக எப்படி குறைந்து நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது—லாபம் இல்லையென்றால் பொது மக்களுக்கு வசதியாவது கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை—என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். வசதிகளும் பெருகவில்லை, நஷ்டத்திலேயும் ஓடிக்கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, பஸ்கள் நிற்கவேண்டிய இடத்திலே நிறுத்தப்படுவதில்லை. ஓவர்லோட் போடுகிறோம், டிக்கட் கொடுக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள், காலாகாலத்தில் போகாவிட்டால் எங்கள் மேல் நடவடிக்கை எடுக்கிறார்கள், அதனால் நிற்காமல் போகவேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். நான்கு வண்டிகள் ஓடுகின்றன என்றால் அதிலே இரண்டு வண்டிகள் பிரேக் டவுன் என்றால் உடனே ஸ்பேர் வண்டிகள் வைத்திருந்தால் ஓட்டிவிடலாம். ஸ்பேர் வண்டிகளும் கிடையாது.

எனவே நாட்டுடைமையாக்கிவிட்டோம் என்று பெருமைப்படுவதற்கு ஒன்றும் இல்லை, மக்களுக்கு வசதி இல்லாத நிலைமை இருப்பதைப் பார்த்தால் பெருமைப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

விரைவு வண்டிகளை விடுகிறோம். அவற்றிலே இருக்கைகளை மாற்றியமைத்துக்கொண்டு இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையிலே பார்த்தால் வண்டியிலே மாற்றம் இல்லை.

வண்டியிலே தண்ணீர் வைத்திருக்கிறார்கள். ஆனால், குடிப்பதற்கு குவளை கிடையாது. கண்டக்டர்களைக் கேட்டால் எவர்சில்வர் பாத்திரம் வைத்துவிட்டு நாங்கள் வெளியே போனால் திருடிக்கொண்டு போய்விடுகிறார்கள், அதனால் அந்தத் தொல்லை எதற்கு என்று நாங்களே எடுக்காமல் வந்துவிடுகிறோம், பயணிகள் சொந்த பாத்திரத்திலே குடிக்கட்டும் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எ. இராமச்சந்திரன் : மற்ற பயணிகளைப்பற்றித் தவறான கருத்தைத் தெரிவிக்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ் : யார் எடுத்துக் கொண்டு போனார்களோ தெரியாது. யாரோ திருடிக் கொண்டு போய் விடுகிறார்கள். இன்னொரு முக்கியமான கருத்தைச் சொல்கிறேன். பேருந்துகள் நிற்கிற இடத்தில் பொருள்களை வைத்து விட்டு காப்பி சாப்பிட்டு விட்டு வந்து பார்த்தால் பெட்டி, படுக்கைகள் காணாமல் போய்விடுகின்றன. பொருள்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. நாங்கள் என்ன செய்ய முடியுமென்று அதிகாரிகள் கையை விரிக்கிறார்கள். இது மதுரை திருச்சியில் நடக்கிறது, மதுரையில் நடக்கிறது. அரசு கண் காணிக்க வேண்டும். இன்னும் பல சீர்திருத்தமான கருத்துக்களைச் சொல்வதற்கு முடியாமல் இருக்கிறது. இருப்பினும் சுருக்கமாகச் சில கருத்துக்களைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

இப்போது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இலவச பாஸ் கொடுத்திருக்கிறோம். அதைப் போல பத்திரிகை துறையிலே உள்ள நிருபர்களுக்கும் வழங்கவேண்டும். மற்ற மாநிலங்களில் வழங்கியிருக்கிறார்கள். மதுரையில் இருந்து கொண்டிருக்கிறது. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் இருக்கிறது. அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பாடி பில்டிங் யூனிட் ராணித் தோட்டத்தில் இருக்கிறது. இதைப் பற்றி பல முறை பேசியிருக்கிறேன். அங்கே வேலை செய்ய பல தொழிலாளிகள் இருக்கிறார்கள், மெஷின் இருக்கிறது. ஆனால், சேஸிஸ் என் கிடைக்கவில்லையென்றால் காலாகாலத்தில் ஆர்டர் கொடுக்கவில்லை. அவர்கள் வருவதற்கு வேண்டிய ஆர்டர் கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, போதிய தொழிலாளர்கள் இருந்தும் அங்கே வேலை நடைபெறாமல் இருக்கிறது. அது மட்டுமல்ல, ராணித் தோட்டத்தில் ஒரு சேஸிஸ் கொடுத்து கட்டச் சொன்னால் குரோம்பேட்டையில் சட்டுவதைக்காட்டிலும் 5 ஆயிரம் ரூபாய் லாபமாக இருக்கிறது. அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இன்னொன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் டி.எம்.கே. யூனியனுக்கு, அரசு கட்சி சார்புடைய யூனியனுக்கு மட்டும்தான் உரிமம் (Recognition) கொடுக்கப் பட்டிருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, சுரண்டு கட்டாவது சட்டசபைக்கு இருக்கிறதா என்று தெரியவில்லை. சட்டசபையில் இப்படி யானால் நம்முடைய நிலைமை என்னாவது. திடீரென்று மைக்,— உங்களால் அல்ல — சுரண்டு போனாறு காரணத்தினால் ஆஃப் ஆனால் அதற்குத் தக்க பாதுகாப்பு தேவை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மருத்துவ மனைகளில் ஆபரேஷன் செய்யும்போது கூட இப்படி ஆவதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். அட்ஜஸ்டு செய்து கொள்ள வேண்டியதுதான்.

திரு. எ. சுவாமிதாஸ் : டி. எம். கே. யூனியனுக்கு மட்டும் தான் ரெகக்னிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் டி.எம்.கே. யூனியனில் அதிகமான தொழிலாளர்கள் இருக்கிறார்களா வென்றால் இல்லை. ஜனநாயகமான வாக்கெடுப்பு எடுத்தால் உண்மை நிலை புரியும். ஆனால் டி.எம்.கே. யூனியனுக்கு செயல்பட அரசாங்கக் கட்டிடத்தையே கொடுத்திருக்கிறார்கள். அந்த யூனியன் பொறுப்பாளர்கள், செக்ரடரி போன்றவர்கள் வேலையே செய்வதில்லை. அவர்கள் வேலை செய்யாமல் சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். டிபார்ட்மெண்டு அந்த சங்கத்திற்காக சந்தா பிடித்துக் கொடுக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைமைகளை மாற்றியமைத்து ஜனநாயக அடிப்படையில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் நகர அமைப்பாக இருக்கிறது. இரண்டு ஃபர்லாங்குக்கு ஒரு பஸ் ஸ்டாப் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்த இடத்திற்குப் போனாலும் இரண்டு ஃபர்லாங்கு தூரத்திற்கு ஒரு பஸ் ஸ்டாப் இருக்கிறது. ஆகவே சிட்டியிலே இருக்கிற குறைந்த கட்டணம் அடிப்படையிலே அந்த மாவட்டம் முழுவதும் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டும். இதைப் பற்றி பல தடவை கூறியிருக்கிறேன். அமைச்சரவர்கள் முன்னர் இம்மன்றத்தில் பதில் அளிக்கும்போது மினிமம் ரேட் 20 பைசா ஆக்கலாமா என்று உறுதியளித்தார்கள். அதை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். இப்போது 30 பைசா கொடுத்துக் கொண்டிருக்கிறோம். குறைந்த கட்டணம் 20 பைசா என்று கொண்டு வந்து மாவட்டம் முழுவதற்கும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, கடைசியாக, மாணவர்கள், பஸ் தொழிலாளர்கள், உறவைப் பற்றி அதிகம் சிந்திக்கவேண்டும். அரசு போக்குவரத்துத் துறையின் எஜமானர்கள் பொது மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள். இப்படிப்பட்ட நாட்டினுடைய சொத்துக்கு உரிமை உள்ள எஜமானர்களுக்கும் பணி செய்கிற தொழிலாளர்களுக்கும் இருக்கிற தொடர்பு; அதைப் பற்றி சிந்திக்கவேண்டும். அவர்களிடம் நல்ல உறவை ஏற்படுத்துவதற்கு என்ன முறையைக் கையாளலாம் என்று பார்க்க வேண்டும். நல்ல உறவை ஏற்படுத்த முற்பட்டால் வண்டிகளில் ஏற்படுகிற நஷ்டத்தை ஏற்படாமல் தடுக்க முடியும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ந. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்த இந்த மானியங்களை ஆதரித்து, பாராட்டி ஒரு சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன். இன்று தமிழ் நாட்டில் ஓடுகிற அனைத்துப் பேருந்துகளையும் நாட்டுடைமையாக்குவது என்பது மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பெரிய சாதனையாகும். இந்த பெருமை முழுவதும் நமது டாக்டர் கலைஞர் தலைமையில் அமைந்திருக்கிற கழக அரசைச் சாரும். இன்று நாட்டுடைமை ஆக்கப்பட்ட பேருந்துகள் அனைத்தும் 5 பிரிவுகளாக அமைக்கப்பட்டிருக்கின்றன. நமது அரசாங்கத்தின் கொள்கை மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி என்பதைப் போல இந்த 5

பிரிவுகளும் நமது தமிழக சர்க்காரின் போக்குவரத்துத் துறையின்கீழ் செயல்படுகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி 5 பேருந்துகளின் பிரிவுகளுக்கு இன்றைய தமிழகத்திற்கு சிறப்பு கொடுக்கிற சேரன், சோழன், பாண்டியன், பல்லவன் என்ற பெயர்களை வைத்து இன்றைய தமிழகம் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்று நமது கழக ஆட்சியில் போக்குவரத்துத் துறையில் முன்னேற்ற மடைந்துள்ளது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 70-ம் ஆண்டு வரை அரசுடைமையாக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை 2,063 ஆகும். இன்று 3,085 ஆக உயர்ந்துள்ளது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக நமது போக்குவரத்தில் குறைந்த பட்சம் தொழிலாளத் தோழர்களுக்கு 20 ரூபாய் ஊதியம் உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்த படியாக தொழிலாளத் தோழர்களுக்கு வீடு கட்டுவதற்காக 10 லட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளது என்பதை, பாராட்டி இன்று 200 குடிசைவாழ் தொழிலாளர்களுக்கு ஸ்லம் போர்டு மூலமாக வீடு கட்டிக் கொடுக்க முன் வந்ததை பாராட்டுகிறேன்.

எனது தொகுதியில் தனியார் பஸ்கள் அனுமதி பெற்றிருந்த இடங்களுக்கு பொம்பூர், தைலாபுரம், தாழங்காடு பகுதிகளுக்கு பஸ்கள் செல்வதில்லை. என்னவென்றே தெரியவில்லை. அந்த இடங்களுக்கு அரசாங்கப் பேருந்துகளை விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக பாண்டிச்சேரியிலிருந்து மரக்காணம் வழியாக சென்னைக்கு வரவேண்டிய பஸ்கள் நேராக வந்து விடுகின்றன. சென்னையிலிருந்து மரக்காணம் 75 மைல் தூரத்தில் இருக்கிறது. மரக்காணத்திலிருந்து சென்னைக்கு தனியாக பேருந்துகளை விட வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, சென்னையிலிருந்து நாகபட்டிணம் செல்லும் விரைவு வண்டிகள் என்னுடைய தொகுதி வழியாகச் செல்லவேண்டியிருப்பதால் முக்கியமான இடமாகிய திருச்சிற்றம்பலத்தில் நிறுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திண்டிவனம் டிப்போ சென்னையிலிருந்து 75 மைல் தூரத்தில் இருப்பதால் அதை சென்னைக்கு இணைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் 75 மைல் தூரத்தில் அமைந்துள்ளது இந்த டிப்போ. அங்கே இருக்கிற தொழிலாளர்கள் இதைப் பெரிய குறையாக கூறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அமைச்சரவர்களிடத்திலே பலமுறை சுட்டிக்காட்டி கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அடுத்தபடியாக எனது தொகுதியில் காட்ராம்பட்டுக்கும் கீழ்ப்புத்தூருக்கும் இடையே போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. அதில் பேருந்து விடவேண்டுமென்று அமைச்சரவர்களிடத்தில் பல முறை கூறியுள்ளேன். அவரை அழைத்துக் கொண்டு போய் காண்பித்திருக்கிறேன். வெகு சீக்கிரத்தில் பேருந்து விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தனிப்பட்டவர்களுடைய பேருந்துகள் எல்லாம்

5 ஆண்டுக் காலத்தில் தேசியமயமாக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டதற்குப் பிறகு முதன் முறையாக நான் இந்த மானியத்திலே பேசுகிறேன். தனிப்பட்டவர்களுடைய பேருந்துகளைத் தேசிய மயமாக்குவதால் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பங்களில் என்னுடைய குடும்பமும் ஒன்று என்ற நிலைமையிலே எனக்குக்கூட அதனால் பாதிப்பு இருந்தாலும் தனிப்பட்டவர்களுக்கு ஏற்படுகிற பாதிப்பினால் சமுதாயத்திற்கு நன்மைகள் ஏற்படக்கூடுமானால் அந்தப் பாதிப்பை பெரிதாகக் கருதாமல் சமுதாயத்தின் நன்மையைத்தான் முன்னதாகக் கருதி அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதுதான் இன்றைய நிலைமை.

இந்த நிலைமையிலே இந்தத் திட்டத்தை தேசிய மயமாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை நான் முழுமனதோடு ஆதரிக்கிறேன். ஆனால் அதனால் சமுதாயத்திற்குக் கிடைக்கக்கூடிய 'பலன்கள் போதுமான அளவிற்குக் கிடைக்கவேண்டுமென்பதுதான் நமது அக்கறை. தனிப்பட்டவர்களுடைய பேருந்துகளைபற்றி நாம் முன்னாலே பேசும் பொழுது சாதாரணமாக ஒரு பஸ்ஸை வைத்து இருக்கக்கூடியவர் வருடத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் வருமானத்தைச் சம்பாதித்துக் காட்டுகிறார்கள், கொள்ளை அடிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுச் சொல்லப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதாக வைத்துக்கொண்டால் ஒரு பஸ்ஸை வைத்துக் கொண்டு 20 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கக்கூடிய அளவிற்கு இருக்கிறார்கள் என்றால் அதே லாபத்தை நாம் பொதுத் துறையிலேயும் ஏன் காணக்கூடாது. எப்படி நஷ்டம் ஏற்படுகிறது என்பதுதான் பஸ்களை நடத்திக்கொண்டிருந்த எங்களைப் போன்றவர்களுக்குப் புரியாத புதிராக இருக்கிறது.

எங்கே பார்த்தாலும் நஷ்டம் என்ற ஒரு உண்மை இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறியாளராக இருக்கிறார்கள், அதுவும் ஹானர்ஸ் பட்டத்தை பெற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு—எனக்குத் தெரியும்—மிக மிக முனைப்போடு 24 மணி நேரத்தையும் செலவழித்து என்ன என்ன இந்தத் துறையிலே செய்யலாம் என்று அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து அவர்களுடைய கருத்துக்களைப் பெற்று நல்ல முறையிலே பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். தனிப்பட்டவர்களுக்குக் கிடைத்த லாபத்தை அரசுத்துறையிலே நடத்தும்பொழுதும் நாம் பெற்றாக வேண்டும். ஏதோ தனிப்பட்டவர்களுக்கு பிராபிட் மோடிவ் இருக்கலாம். ஆனால் அரசுக்கு, ஸ்டேட்டுக்கு பிராபிட் மோடிவ் இருக்கக்கூடாது, வெல்பேர் மோடிவ்தான் இருக்கவேண்டும்., அதை நான் ஒத்துக்கொள்கிறேன். வெல்பேர்மோடிவ் என்றால் சமுதாயத்திற்கு நன்மைகள் கிடைக்கக்கூடிய வகையிலே நாம் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்திடவேண்டும். அதற்கு இந்தத் துறையிலே இருக்கக்கூடியவர்கள் பொறுப்புணர்ச்சியோடு கடமையுணர்ச்சியோடு இருக்கவேண்டும். அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் எவ்வளவு முனைப்புடன் இருக்கிறார்களோ, அதே கடமையுணர்ச்சியுடன் இந்தத் 'துறையிலே ஈடுபடுகின்ற தொழிலாளர்களும் கடைப்பிடித்தால் மாபெரும் லாபங்களை இந்தத் துறையிலே நாம் சமுதாயத்திற்கு ஈட்டித் தரமுடியும். அந்த கடமையுணர்ச்சியுடன் அவர்கள் கடமையாற்றவேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே என்னுடைய வேண்டுகோளாக விடுக்கிறேன்.

இப்பொழுது எங்கே பார்த்தாலும் பிரேக் டவுன் என்று சொல்கிறார்கள். ஒரு பெரிய துறையிலே பிரேக் டவுன் ஏற்படுவது சகஜம்தான். ஆனால் அதையே ஒரு வாடிக்கையாக, சகஜமாக வைத்துக் கொண்டால் நல்லதல்ல. தொழிலாளர்களுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் வைத்துக் கொள்ளக் கூடிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அதோடு மட்டுமல்ல, அந்த ஸ்பேர் பார்ட்ஸை உடனுக்குடன் எப்படிப் பயன்படுத்தமுடியும் என்ற அறிவை, பயிற்சியைப் பெற்றவர்களாக அவர்களை மாற்றவேண்டும். ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமை இல்லை. சென்னையிலே இருந்து ஒரு பஸ் புறப்பட்டால் அது நடுவழியிலே—அவலூரில் நின்றுவிட்டால்—என்னுடைய பாட்டியை சென்னையிலிருந்து டிக்கட் வாங்கிக்கொடுத்து நான் ஊருக்குப் போய்ச் சேரு என்று அனுப்பி வைத்தால் நடுவழியிலே அந்த நிலைமை ஏற்பட்டுவிட்டால் பணம் அவளிடம் இருக்காது, இடையிலே அவள் இறக்கப்பட்டால் யாரிடம் அவள் போய்க் கேட்பாள்? இதற்கு ஏதாவது ஒரு திட்டத்தை கொண்டுவரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

புக்கிங் ஆபீஸ்களைப்பற்றி நான் பலமுறைகள் வற்புறுத்திச் சொல்லி இருக்கிறேன். பயணிகள் டிபன் தர வேண்டுமென்று கேட்கவில்லை, வேறு பல சௌகரியங்கள் வேண்டுமென்று கேட்கவில்லை. நெடுந்தூரம் பயணம் செய்கிறவர்களுக்கு பப்ளிக் கன்வீனியன்ஸ் வேண்டும். சேலத்திலே ஆண்களுக்கு ஒரு பப்ளிக் கன்வீனியன்ஸ், பெண்களுக்கு ஒரு பப்ளிக் கன்வீனியன்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். பஸ்ஸிலே செல்கின்றவர்கள் ஒரு இடத்திலே இறங்கியவுடனே கூட்டமாக ஓடிப்போய் நான் முந்தி, நீ முந்தி என்று செல்கிறார்கள். அந்தக் கதவிலே தாழ்ப்பாளும் கிடையாது. ஒருவர் உட்கார்ந்து காரியத்தை நடத்திக்கொண்டிருக்கும்பொழுது இன்னொருவர் கதவைத் தள்ளுகிறார், அதனால் பல ஆபாசங்கள் எல்லாம் ஏற்பட்டு விடுகின்றன. எனவே ஒன்றுக்குப் பதிலாக இரண்டு மூன்று ஒவ்வொரு இடத்திலும் இருக்க வேண்டும்.

ரிடையரிங் ரூம் வைத்திருக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கூட அங்கே மறுக்கப்படுகிறது என்பதை நான் வேதனையோடு சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதற்கு அதிகாரிகள் பொறுப்பு இல்லாவிட்டாலும் அங்கே இருக்கிறவர்கள் அப்படி நடந்துகொள்கிறார்கள். ஒவ்வொரு புக்கிங் ஆபீஸிலும் ரிடையரிங் ரூம் சட்ட மன்ற உறுப்பினர்களுக்காக இருந்தாலும் சரி, பொதுமக்களுக்காக இருந்தாலும் சரி, 'அவைலபிள்' ஆக இருக்கிறதா இல்லையா என்ற போர்டை வைக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கே தொழிலாளர்கள் போய்ப் படுத்துக்கொள்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்குத் தனியாக ரிடையரிங் ரூம் கிடையாது, அவர்களுக்கு குளிக்க வசதி, தங்க வசதி போன்றவை கிடையாது, இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் அவர்கள் எப்படி சுறுசுறுப்போடு வேலை செய்யமுடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இதைத் தவிர்க்க வேண்டும்.

இன்றைக்கு பஸ்களை தேசியமயமாக்கிவிட்டு, பணிமனைகளையும், ஷெட்களையும் விட்டுவிடுவது ஏன்? அவற்றையும் தேசியமயமாக்க வேண்டும். **All the shops and workshops are incidental to the buses** என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த ஷெட்கள், ஒர்க்ஷாப்கள் இல்லாமல் எப்படி பஸ்கள் ஓடமுடியும்? டி.வி.எஸ். நிறுவனத்தை எடுத்துக் கொண்டு இருக்கிறோம். பாராட்டவேண்டியதுதான். ஆனால் அதே நேரத்திலே டி.வி.எஸ். ஷெட், ஒர்க்ஷாப் இவற்றையெல்லாம் எடுத்துக் கொள்ளவில்லை. ஏன்? சாதாரணமாக ஒரு ரிப்பேர் என்றால் 5,000 ரூபாய் செலவாகிறது என்றால் இப்பொழுது அதற்கே 20 ஆயிரம் ரூபாய் என்ற அளவில் அதைப்போன்று நான்கு மடங்கு சார்ஜ் செய்கிறார்கள். இப்படி ஒரு இடத்திலே இழந்ததை இன்னொரு இடத்திலே பன்மடங்கு லாபத்தைப் பெறுகிறோம் என்று நினைக்கிறார்கள். ஆகவே அந்த அளவிற்கு விடாமல் பணிமனைகளையும், ஷெட்களையும், ஒர்க்ஷாப்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு இடத்திலேயும் ஒவ்வொரு மாதிரியாக நடக்கிறது. நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. வேலூரிலே ஏற்கனவே உள்ள ஷெட்டிலே குறுக்கே ஒரு சுவர் எழுப்பி இருக்கிறார்கள். நீங்கள் போய்ப் பார்க்கிறபொழுது இதுதான் ஷெட் என்று காட்டுவார்கள். இந்த நிலைமை ஏற்பட விடக்கூடாது.

தேசியமயமாக்கப்பட்டதற்குப் பிறகு தொழிலாளரின் நிலை என்ன என்பதை தெளிவாக்கிவிட வேண்டும். அவர்களையெல்லாம் சர்க்கார் துறையிலே ஏற்றுக்கொண்டாக வேண்டும். டி.வி.எஸ். இன்னும் மற்ற தனியார் துறைகளிலே உள்ள தொழிலாளர்களுக்கு எல்லாம் கல்வி நியதி கிடையாது. அரசுத்துறையிலே கல்வி நியதி எஸ்.எஸ்.எல்.ஸி. என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் தனியார்களிடத்தில் பணியாற்றிய தொழிலாளர்களிடத்தில் அந்த கல்வி தகுதி இல்லாவிட்டாலும் எக்ஸ்பீரியன்ஸ் இருக்கிறது, எனவே அவர்களையெல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டும். தனியார் துறையிலே இருந்து வருகின்றவர்களுக்கு கல்வி நியதியிலே விலக்கு அளித்து சேர்த்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு பிராவிடண்ட் பண்ட், பென்ஷன் போன்ற நன்மைகள் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

தனிப்பட்ட முறையிலே சில கோரிக்கைகள் வருகின்றன. என்னுடைய தொகுதியிலே சில இடங்களிலே பேருந்துகள் விடவேண்டுமென்று அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்து இருக்கிறேன். பரிவாகக் கவனிக்கிறேன் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த நேரத்திலே அதைப்பற்றி வற்புறுத்த விரும்பவில்லை, தனியாகச் சொன்னால் அவர்கள் பரிவாகக் கவனிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரமாகிவிட்டது.

திரு. எம். ஏ. லத்தீப்: எங்களுடைய கட்சியின் சார்பில் நான் ஒருவன்தான் பேசுகிறேன். தலைவர் பேசுவதற்குப் பதில் நான்தான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : ராணிப்பேட்டை, வாலாஜாபாத் வழியாக பெங்களூர், சேலம், கோவை ஆகிய மாவட்டங்களுக்குத் துரித வண்டிகள் போகின்றன. ஆற்காடு வழியாகவும் போகின்றன. திரு. வீராசாமி தொகுதியான ஆற்காட்டிலும், திரு. வகாப் அவர்கள் தொகுதியிலும் நிற்க வேண்டுமென்று கோருகிறார்கள். அருள்கூர்ந்து திரு. வீராசாமி அவர்கள் வேண்டுகோளையும், திரு. வகாப் அவர்கள் வேண்டுகோளையும் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜப்பார் அவர்களும் சென்னையிலிருந்து திருச்சிக்கு கரூர் வழியாக, பழனி வழியாக, பள்ளப்பட்டி வழியாக பஸ் விடவேண்டுமென்று கோருகிறார்கள். அதோடு கோவை, திருப்பூர், வெள்ளக்கோயில், சின்னதாராபுரம், பள்ளப்பட்டி வழியாகவும் சாதாரண பஸ்களை விட வேண்டுமென்று கூறுகிறார்கள். (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது நல்ல முறை இல்லை. அமைச்சர் அவர்களுக்கு இதையெல்லாம் எழுதிக் கொடுத்து விடலாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : எனக்கு இவ்வளவு நேரம் நேரத்தை ஒதுக்கித் தந்ததற்காக நன்றி கூறி இந்த மானியத்தை முழு மனதோடு ஆதரித்து அமர்கிறேன்.

திரு. டி. வி. சம்பத் : துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழக அரசு தமிழகத்திலுள்ள அனைத்து பஸ்களையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற திட்டத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்திய விடுதலை நாள் வெள்ளி விழாவின்போது அறிவித்ததையொட்டி தமிழக அரசு ஒவ்வொரு மாவட்டமாக இந்த நாட்டுடைமையாக்கப்படும் திட்டத்தைக் கொணடு வருகின்ற நேரத்தில் நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு தலைவர் வேறு ஒரு மாநிலத்திலே, மைசூர் மாநிலத்திலே ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது, சினிமா நடிகர் ஒருவருடைய படத்தை அதிலே மாட்டுகின்ற காரணத்தால் இந்த அரசு நாட்டுடைமையாக்கும் திட்டத்தைக் கொண்டு வருகிறது என்ற கருத்தைச் சொன்னதாகப் பார்த்தேன்.

ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்னாலேயே கலைஞர் அவர்கள் சினிமாத் துறையில் கதை வசனம் எழுதியதிலேயே இந்த நாட்டுடைமையாக்கப்படும் திட்டத்தைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். பராசக்தி படத்தில் வசனத்தில் ஆக்கப்பட்ட சொத்து அனைத்தும் அரசாங்கத்திற்குச் சொந்தம் என்ற முறையில் நாட்டுடைமையாக்கும் திட்டத்தைப் பற்றி 20 ஆண்டுகளுக்கு முன்னாலேயே சொல்லியிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்தக் கருத்தைச் செயல்படுத்தும் விதத்தில்தான் நாட்டுடைமையாக்கப்படும் திட்டத்தைத் தீவிரமாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். அதை நான் பாராட்டக்

கடமைப்பட்டிருக்கிறேன். ஐந்து வருட காலத்தில் பேருந்துகளைப் படிப்படியாக நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்காக என்னுடைய இதயபூர்வமான நல்வாழ்த்துக்களையும் பாராட்டையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய மாவட்டமாகிய தஞ்சை மாவட்டத்தில் முதல் கட்டமாக பஸ்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக விடப்படுகின்ற பஸ்கள் தனியார் துறை பஸ்களைவிட நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டிருக்கின்றன. நல்ல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அங்கு சக்தி விலாஸ் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் தலைமை நீதிமன்றத்தில் அரசாங்கத்தின்மீது வழக்குப் போட்ட காரணத்தால் அதை எடுக்க முடியாது போய்விட்டது. அதன் காரணமாக நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இல்லாமல் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சோழன் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கெல்லாம் ஒரே அடிப்படையில் சம்பளம் வழங்க வேண்டும். தொழிலாளர்களிடத்தில் சில கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ராம விலாசில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கும், ராமன் அண்டு ராமனில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு இருக்கும் காரணத்தால் நம்முடைய அரசு அவர்களை ஒரே ரீதியாக அமைத்து அவர்களுக்கு சோழன் போக்குவரத்தில் நிரந்தர ஊதியமாக ஒரே மாதிரி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாமி மோட்டார் தொழிலாளர்களையும் சேர்த்து அவர்களுக்கும் ஒரே மாதிரியான ஊதியம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் வேலை இல்லாமல் இருக்கும் தொழிலாளர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய அரசு போக்குவரத்துத் துறையை தேசியமயமாக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தபோது தனியாருக்கு டி. பி. பர்மிட் கொடுப்பதை நிறுத்திவைத்து அதற்குப் பதிலாக அரசு பஸ்களை அந்த மார்க்கங்களில் விடவேண்டும். தனியார்க்கு பர்மிட் கொடுக்கின்ற காரணத்தால் அரசு போக்குவரத்துக்கும், தனியாருக்கும் கருத்து வேறுபாட்டின் காரணமாகச் சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அரசே அந்த மார்க்கங்களில் பஸ் விடவேண்டும். (மணி அடிக்கப்பட்டது). இந்த அரசு போக்குவரத்துத் துறை சிறப்பாக பணியாற்றி நல்ல வருமானம் நிரம்ப வருகிறது. சோழன் போக்குவரத்துக் கழகம் செய்யும் நல்ல செயல்களைப் பாராட்டி, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* திரு. எம். சுரேந்திரன் : உதவி சபாநாயகர் அவர்களே, போக்குவரத்து அமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய வெட்டுப் பிரேரணையைத் தொடர்ந்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தில் இருக்கின்ற பஸ் போக்குவரத்து அனைத்தையும் அரசாங்கம் எடுத்துக்கொள்வதாக முடிவு செய்து அந்த முடிவை அமல் படுத்துகின்ற வகையில் காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பது

அனைவருக்கும் தெரியும். நாட்டுடைமையாக்குவது என்பது ஏதோ அரசாங்கத்திற்கு வரி இல்லாமல் வருமானம் பெறுவதற்கான ஏற்பாடாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று நான் கூற விரும்புகிறேன். நாட்டுடைமையாக்குவது நாட்டில் இருக்கும் மக்களுக்கு வசதியாக, எளிதான கட்டணத்தில் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்வது என்பதுதான் அதனுடைய முதல் நோக்கமாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, அதிலே நஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது மிகத் தேவையானது. இந்த இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுதான் நாட்டுடைமையை அணுக வேண்டுமே தவிர, வேறு முறையில் அணுகக்கூடாது என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அப்படி அணுகுகின்றபோது நாட்டுடைமையாக்குவதுபற்றி ஒரு சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் நாட்டுடைமையாக்குவதற்கான வழிவகைகள் சரியான இடம் பெறவில்லை. உயர்நீதி மன்றங்களில் வழக்குகள் இருக்கின்றன. இதிலே பஸ் உடைமையாளர்களும் சரி, பணி செய்கின்றவர்களும் சரி, போக்குவரத்து நடத்துகிறவர்களும் சரி, மகிழ்ச்சி கொள்கிறார்களா என்றால் மகிழ்ச்சி கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பஸ் நாட்டுடைமையாக்கப்படுவதற்கு முன்னால் இருந்த வசதிகளை விட இப்போது குறைவாக இருக்கிறது. முன்னால் இருந்த கட்டணத்தைவிட இப்போது கட்டணம் அதிகமாக இருக்கிறது என்ற புகார்கள் இருக்கின்றன. கட்டணங்களைக் குறைக்க முடியுமா என்பதைப்பற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும். பஸ்களில் போகின்றவர்களுக்கு வசதிகள் இருக்கிறதா என்று பார்த்தால் மிகக் குறைவாக இருக்கிறது. வசதிகளை அதிகப்படுத்துவதற்கான முறையில் கவனம் செலுத்த வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். வேகமாக ஓடுகின்ற பஸ்களில் முன்பெல்லாம் குடிக்க குடி தண்ணீர் வைத்திருந்தார்கள். இன்றைக்கு அந்தக் குடிதண்ணீர்கூட இல்லை என்பதுதான் உண்மையான நிலையாகும். இங்கிருந்து புறப்படுகின்ற பஸ் அடுத்த ஸ்டாப்பிங்கில் எந்த ஊரில் எத்தனை மணிக்கு நிற்கும் என்று ஒரு பலகையை போட்டு வந்தார்கள். இப்போது அந்தப் பலகையை எடுத்துவிட்டார்கள். வேகமாகச் செல்லும் பஸ்கள் எங்கு போய்ச் சேரவேண்டுமோ அங்கு நிச்சயமாகப் போய்ச் சேருமா என்பதிலே பிரயாணிகளுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அதனால் பஸ்களில் வருகிறவர்கள் தயங்குகிறார்கள். வேறு பஸ்கள் அந்த நேரத்தில் இருந்தால் அந்தப் பஸ்களில்தான் ஏறிக்கொள்ள அக்கறை கொள்கிறார்களே. தவிர, அரசாங்க பஸ்கள் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் போய்ச் சேரும் என்றோ, குறிப்பிட்ட இடத்தில் புறப்படவேண்டிய நேரத்தில் புறப்படும் என்ற உறுதியான நிலையோ இல்லாதிருப்பதால் இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

நாட்டுடைமையாக்கப்படுவது என்றால் அதில் உழைக்கிறவர்களுக்கும் உரிய மரியாதையும், மதிப்பும் தரவேண்டும் என்பது பிரதான அம்சம். தனியார் துறையில் பஸ்கள் வைத்திருப்பவர்கள் அதிலுள்ள தொழிலாளர்களை எப்படி நடத்திக்கொண்டிருந்தார்கள் என்பது அவ்வளவு பேர்களுக்கும் தெரியும். அவர்கள் முதலாளிகள், இவர்கள் தொழிலாளிகள் என்ற நிலையில் இருந்தார்கள். எஜமானர், வேலையாட்கள் என்ற

முறையில்தான் அவர்கள் உறவு இருந்தது. அந்த உறவை வைத்துக் கொண்டு எவ்வளவு அதிகமாகப் பணம் சம்பாதித்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு சம்பாதித்துக்கொள்ளவும், பணம் சம்பாதிக்கத் தகுதியானவர்களை மட்டும் அவர்கள் வைத்துக்கொள்வது என்ற முறையில் இருந்தார்கள். ஆனால், பஸ்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு அதிலுள்ள தொழிலாளர்களை நாம் அந்த முறையில் வைத்துக் கொள்வது என்பது நாட்டுடைமைக் கொள்கைக்கே விரோதமானது. அங்கு தனியார் துறையில் முதலாளிகளை எஜமானர்கள் என்று கருதி பணிந்து வணங்கி நின்றதுபோல், இன்று தொழிலாளர்கள் அதிகாரிகளின் முன்னால் அந்த முறையில் நிற்கவேண்டும் என்ற உணர்வி லிருந்து மாற்றம் ஏற்படவேண்டும். அதில் பணி செய்கிறவர்கள் பஸ்கள் தங்கள் உடைமை. அதில் பணியாற்றுகிறவர்கள் எல்லோருக்கும் சம அந்தஸ்து, சம உரிமை, சம பொறுப்பு உண்டு என்ற முறையிலும், வருகிற வருமானம் எல்லோருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டிய வருமானம் என்ற உணர்வும் இத்துறையில் வேலை செய்யும் எல்லோருக்கும் ஏற்படவேண்டும்.

ஒரு முதலாளியிடம் இருந்து அரசாங்கத்தின் கைக்கு வருவது என்பதினால் மட்டும் அது நாட்டுடைமையாகி விடாது. நாட்டுடைமையாக்கப்பட்டிருக்கிறது என்றால், அது மக்களின் முன்னேற்றத்திற்காகச் செய்யப்பட்டிருக்கிறது என்ற உணர்வு முன்னால் நிற்க வேண்டும். மற்ற அம்சங்கள் பின்னால்தான் நிற்கவேண்டும். ஆகவே, பொதுவாக தொழிலாளர்களுக்குச் சொல்லித்தர வேண்டும். இந்த பஸ்கள் உங்களுடையது, இதில் வருகிற நன்மை தீமைகள் உங்களைச் சேர்ந்தது என்று அவர்கள் உணரும்படியான முறையில் நாம் ஏதாவது ஒரு நடைமுறையைக் கொண்டுவர வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது விளக்கிக் கூறியதின் அடிப்படையில்தான் அந்தந்த தொழில் நிறுவனத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு, அவர்களை 24 சதவிகிதம் பங்குக்கு உரிமையாளர்களாக ஆக்கி அதேபோல் நிர்வாகத்தின் போர்ட் ஆப் டயாக்டர்ஸ்-ல் இரண்டு இயக்குநர்கள் அவர்களிலிருந்து நியமிக்கப்பட இருக்கிறார்கள். ஏதோ அவர்கள் முதலாளிகளிடத்தில் பணிந்து வணங்கி நின்றதுபோல் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு அதிகாரிகள் அப்படி மாறியதுதான் பயன் என்ற அந்த அடிப்படை கூடாது என்று உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்கள். அதே அடிப்படையில்தான் அந்தத் திட்டம் முதன்முதலாகச் செயல்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கட்சியிலிருந்து திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசவேண்டுமென்று விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எம். சுரேந்திரன்: டயாக்டர் போர்டில் போடுவது, பங்குத் தொகை செலுத்துவது என்பதெல்லாம் வெறும் டெக்னிக்கலாக இருக்கக் கூடாது. ஆக்கபூர்வமாக செயல்படும் விதத்தில் இருக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் உணருகிறேன். செயல்முறையில்

தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு முக்கிய பங்கு அளிக்கப்பட வேண்டும் சும்மா உட்கார்ந்துவிட்டு மற்றவர்கள் சொல்வதைக் கேட்பது அல்லது அவற்றிற்குப் பதில் சொல்வது என்று மட்டும் இல்லாமல், எல்லா அம்சங்களிலும் அவர்களுக்குப் பங்கு இருக்கவேண்டும். அந்த வகையில் உழைப்பாளர்களுக்கு மதிப்பு தருகிறோம், மரியாதை தருகிறோம், சோஷலிஸத்தை நோக்கிச் செல்கிறோம், அந்த முறையில் காரியங்கள் போய்க்கொண்டிருக்கின்றன என்று அங்குள்ள பணியாளர்கள் உணர்ந்துகொள்ளும் வகையில் செயலாற்றினால் நலமாகயிருக்கும். இப்போது 100 மைல்கள் ஓடும் பஸ்ஸை 150 மைல்கள் ஓட்டுவது என்று நீட்டிருக்கிறோம். அப்படி நீட்டும்போது தேய்மானம் அதிகமாகிறது. ஓய்வு கொடுக்கும் நேரத்தையும் அதிகப்படுத்த வேண்டும்.

ஓய்வுநேரம் அதிகப்படுத்தப்பட்டால் தேய்மானம் போன்றவை குறையும். இயந்திரங்களுக்குத் தேய்மானம் இருப்பதைப்போல் மனிதர்களும் தேய்மானத்திற்கு ஆளாகிறார்கள். எனவே தேய்மானம் அதிகம் ஏற்படாதிருப்பதற்கு ஓய்வு நேரம் அதிகமாக்கப்படவேண்டும். மெக்கானிக்கல். நிர்வாகத்தில் இருப்பவர்கள் பலர் நேரடியாக நியமிக்கப்படுகிறார்கள். நன்கு கல்வி கற்றவர்கள்தான் அப்படி நியமனம் செய்யப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி நியமனம் பெறுவது நல்லதுதான்.

ஆனால், பல ஆண்டுகளாக அங்கு உழைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு ப்ரமோஷன் கிடைக்காமல் இருக்கிறது என்ற குறை அங்கு பணியாற்றுபவர்களிடையே இருக்கிறது. ஆகவே ஒரு விகிதாசாரம் வைத்து அந்த குறிப்பிட்ட விகிதாசாரத்திற்குக் குறையாமலாவது கீழே இருப்பவர்களுக்கு ப்ரமோஷன்ஸ் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். அடுத்து, நிர்வாகத்தின் தலைப்பில் இருப்பவர்கள் போக்குவரத்து நுணுக்கங்களைத் தெரிந்தவர்களாக இருக்கவேண்டுமே தவிர நிர்வாகம் செய்யத் தெரிந்தவர்களாக மட்டும் இருப்பது என்பது சரியல்ல. தொழிலாளர்கள் பற்றி, இயந்திரங்கள் பற்றி அவர்கள் தெரிந்திருக்க வேண்டும், ஸ்பேர் பார்ட்ஸ் பற்றி அவர்கள் தெரிந்திருக்க வேண்டும்.

ஒரு அம்சம் மட்டும்தான் தெரிந்திருக்கிறது என்றால் மற்ற அம்சங்கள் பலஹீனமாகப் போய்விடுகின்றன. அதனால், பல முரண்பாடுகள் ஏற்பட வழியிருக்கிறது. அதேபோன்று லாரிகளை எடுத்துக்கொண்டால் லாரி போக்குவரத்தையும் தேசியமயமாக்க வேண்டும் என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். ஏனெனில் பஸ் என்று சொன்னால் அதன் தொடர்பான பிரிவுகளை எல்லாம் நாம் ஒருமுகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மின்சாரம் இல்லை என்றால் கிரஸின் ஆயில், டீசல் ஆயில் விலை ஏறுகிறது. ஆக, அதன் தொடர்பாக உள்ள மற்ற அம்சங்களை எடுத்துக்கொண்டால் ரிப்பேர் செய்வதற்கான வொர்க்ஷாப்ஸ் எல்லாம் நம்மிடத்தில் இருக்க வேண்டுமே தவிர இன்னொருவரிடம் அளித்து ரிப்பேர் செய்வது என்றால் அது நமக்கு பளுவை ஏற்படுத்துகிறது. காலாகாலத்தில் அவை சரிசெய்து கிடைக்காமல் போய்விடுகின்றன. விரும்புகிற சமயத்தில் செய்ய முடியாமல் போய்விடுகிறது. டயர்களை எடுத்துக் கொண்டால் அவற்றைப் புனரமைப்புச் செய்வதை நாமே செய்யும் விதத்தில் இருக்கவேண்டுமே தவிர வெளியாரிடத்தில் கொடுத்துச் செய்வது

சரியான முறையல்ல. இதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும். லாரிகளைப் பற்றிச் சொன்னேன். லாரிகளில் போகிறவர்கள் மிக அதிக தூரம் ஒரே ட்ரைவர்தான் போய்க்கொண்டிருக்கிறார். அதனால் பல கெடுதல்கள் ஏற்படுகின்றன.

எனவே பஸ்களில் இருப்பதைப்போல் குறிப்பிட்ட தூரம் ஒரு ட்ரைவர் ஓட்டினால் அதற்குமேல் மற்றொரு ட்ரைவர் ஓட்டவேண்டும் என்ற கட்டாய நிபந்தனையை ஏற்படுத்தவேண்டும். அப்படிச்செய்வது விபத்துக்களைக் குறைப்பதற்கும், தடுப்பதற்கும் உதவிகரமாயிருக்கும். அடுத்து, டாக்ஸிகள் பற்றி ஒரு வார்த்தை.

சென்னையில் டாக்சிகள் இருக்கின்றன. ஸ்டேஷனுக்கு வந்தவுடன் டாக்சிகள் கிடைப்பது என்பது சாத்தியம் இல்லாமலிருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் போலீஸார் நின்று டாக்சியை வரிசைப்படுத்தி அனுப்புகிறார்கள். சிலசமயங்களில் வரிசைப்படுத்தாமல் ஒரே டாக்ஸியில் மூன்று நான்கு பேர்களை ஏற்றிக்கொண்டு ஒவ்வொருவரிடமிருந்தும் வாடகை வாங்கிக் கொள்கிறார்கள். அப்படி வாடகை வாங்குவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் வந்தவுடனே வண்டியை விடுகிறார்களா? செண்ட்ரல் ஸ்டேஷனை விட எக்மோர் மோசமாகயிருக்கிறது. 1,500 மக்களுக்கு மேல் உள்ள கிராமங்களில் எல்லாம் நாட்டுடமையாக்கும் பஸ்களை விடுவது என்று இதில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்நேரத்தில் என் தொகுதியில் உள்ள ஒரு கிராமத்தை நினைவூட்ட விரும்புகிறேன். வனவாசி-ஜலகண்டபுரம் போகும் பாதையில் பஸ் விடவேண்டுமென்று சொல்லிக்கொண்டேயிருக்கிறேன். அதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். சின்ன தண்டா-பெரிய தண்டா போகும் வழித்தடத்தையும் நீட்டவேண்டும். காவேரிபுரம்-பாலாறு வரை போகும் பாதையையும் நீட்டவேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு பூ. எட்டியப்பன்.—தலைவரவர்களே, 1973-74-ம் ஆண்டுக்கான மோட்டார் வண்டிகள் சட்டம், நிர்வாகம், சாலைப்போக்குவரத்து திட்டங்கள், சாலைப்போக்குவரத்து திட்டங்களுக்கான மூலதனச் செலவு ஆகிய மானியங்கள் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போக்குவரத்துத்துறை, இந்தியாவிலேயே தனியார் துறையில் இருக்கக்கூடிய எல்லா பேருந்துகளையும்—மற்ற மாநிலங்களில் இல்லாத அளவுக்கு—மிகப் புரட்சிகரமாக அரசுத் துறையில் கொண்டு வந்திருக்கிறார்கள் நம்முடைய தமிழகத்தில். அது எல்லோராலும் பாராட்டப்படுகின்றது. வெகு காலமாக இந்த எதிர்க்கட்சிக்காரர்கள்கூட தேசியமயமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொங்கல் பரிசாக நம்முடைய ஆளுநர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதுஇன்று சட்டமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை யாரும் பாராட்டாமல் இல்லை. ஆனால் அதே நேரத்தில் ஒரு சில மாற்றங்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான கருத்துக்கள் இருக்கின்றன.

அரசுப் பேருந்துகளை எடுத்துக்கொண்டால் மட்டும் போதாது. தனியார் துறையில் பஸ்கள் இருந்த போது அவை நல்ல முறையில் பராமரிக்கப் பட்டு வந்தன. வழியில் பிரேக் டவுன் இல்லை. ஆனால் அரசுப் பேருந்துகள் அந்த முறையில் இல்லை. தனியார் துறையில் இருந்த போது அதைச் சுத்தமாக துடைத்து வைத்திருந்தார்கள். ஆனால் இப்போது அரசுப் பேருந்துகளில் சென்றால் அங்கே இருக்கும் அழுக்கு சட்டையில் ஒட்டிக்கொண்டு விடுகிறது. அதோடு வண்டிகளும் நடுவழியில் நின்று விடுகிறது. ஷெட்டுக்கு பஸ் வந்த உடனே அதைத் துடைத்து சுத்தமாக வைத்திருக்கச் செய்யவேண்டும். ஏன் இப்படி வண்டி அடிக்கடி நின்று விடுகிறதே என்று அவர்களிடத்தில் கேட்டால் அவர்கள் ஷெட்டுகளில் இப்படித்தான் வண்டிகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள்.

சென்னைக்கும்—போளூருக்கும் இடையே 5 பஸ்கள் செல்கின்றன. அவைகள் காஞ்சீபுரம், செய்யார், பெரணமல்லூர் வழியாகச் செல்கின்றன. இந்த 5 பேருந்துகளில் 3 பேருந்துகள் அரசுப் பேருந்துகள், 2 தனியார் பேருந்துகள். இந்தத் தனியார் பேருந்துகளில் எந்த வழியில் எந்த இடத்தில் ஏறுவதாக இருந்தாலும், இறங்குவதாக இருந்தாலும், எப்போதுமே கியூவில் நின்றுதான் ஏறவேண்டியிருக்கிறது. அரசு வண்டி வந்தால் அதிலே ஏறலாமா வேண்டாமா என்று பார்த்து விட்டுத்தான் ஏறுகிறார்கள். இதற்குக் காரணம் அந்த பஸ்கள் நல்ல கண்டிஷனில் இல்லை. நான் கூட பல பேர்களை (கண்டக்டர், டிரைவர்களைக்) கேட்டிருக்கிறேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், புறப்படுகிற சமயத்தில் டிப்போ சூப்பரிண்டெண்ட் அந்த வண்டியை எடுத்துக்கொண்டு போங்கள் என்று சொல்கிறார். அது ஓடாதுபோல் இருக்கிறது என்று சொன்னால், உடனே அவர்கள் வேறு வண்டி இருந்தால் எடுத்துக்கொண்டு போ, இல்லாவிட்டால் போ என்று சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். இதுதான் டெப்போவில் உள்ள நிலை. ஆகவே, அந்த வண்டிகளை நல்ல முறையில் பராமரிப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை-போளூருக்கு, காஞ்சீபுரம் வழியாக 5 பஸ்கள் ஓடுகின்றன. நீண்டகாலமாக அதை வேறு பாதைகளில் ஒரு சில பஸ்விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அலுவலகத்தில்கூட அது குறித்து எழுதிக் கொடுத்திருக்கிறேன். சென்னை-போளூருக்கு, மவுண்ட்ரோடு, வந்தவாசி, உத்திரமேரூர், பெரணமல்லூர் வழியாக ஒரு பஸ் விடவேண்டும். இதை உடனடியாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த 5 பஸ்களும் ஒரே பாதையில் சென்று கொண்டிருப்பதால், ஒரு சில பஸ்களை வேறு பாதையில் மாற்றிக்கொடுத்தால் நல்லது. 5 பேருந்துகளில் ஒரு பேருந்தை சேத்துப்பட்டு, சின்னகுழப்பலூர், பெரணமல்லூர், விளாநல்லூர், கோவிலூர், செங்காடு வழியாகவும், ஒரு வண்டியை வந்தவாசி, பெரிய குழப்பலூர், பெரணமல்லூர் வழியாகவும் விடலாம். இந்தப் பகுதிகளில் அந்த பஸ்களை விட்டால் அங்கே ஏராளமாக இருக்கும் தறிக்காரர்களுக்கு உதவியாக இருக்கும். அவர்களுக்கு இப்போது சென்னைக்கு வர-போக நேரடி பஸ் கிடையாது.

மற்றும் வேலூர்-கடப்பாக்கத்திற்கு ராமதிலகம் பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. இப்போது அரசு வண்டியும் போட்டிருக்கிறார்கள். இந்தப் பாதையில் செல்லும் அரசு வண்டி எப்போதும் காலியாகத்தான் போகிறது. அப்படியிருந்தும் நடு வழியில் கையைக் காட்டினால், இடம் இல்லை என்று கையைக் காட்டி விட்டுப் போய்விடுகிறார்கள். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். அரசுப் பேருந்துகளில் இருக்கிற தொழிலாளர்களுக்கு நல்ல ஊக்கமும் உற்சாகமும் அளிக்கக்கூடிய வகையில் அவர்களிடத்தில் நல்ல வண்டிகளைக் கொடுக்க வேண்டும். வண்டிகள் பிரேக் டவுன்கள் இல்லாமல் ஓடினால் மக்களும் அதில் விரும்பி பிரயாணம் செய்ய முன் வருவார்கள்.

ஆகவே அந்த பஸ்கள் நல்ல முறையில் இயங்கிச் செல்வதற்கு வண்டிகளை ஷெட்டை விட்டு அனுப்புவதற்கு முன்பாக நல்லவகையில் செக் செய்து அனுப்ப வேண்டும். மாலையில் வண்டியைக் கொண்டு வந்து விட்டால், அதை அப்படியே காலையில் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதில் என்ன கோளாறு இருக்கிறது, என்பதை கவனிக்காமலேயே கொடுத்து விடுகிறார்கள். இந்த விஷயத்தில் அரசு நல்ல முறையில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

*திரு. கு. அ. பொம்மன்.—தலைவரவர்களே, இந்தப் போக்குவரத்து மானியத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து 2, 3 முக்கியமான விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

நம்முடைய அரசு 5 ஆண்டுக்காலத்தில் படிப்படியாக எல்லாப் பேருந்துகளையும் தன்னடக்கப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் ஒரு அவசரச் சட்டம் ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டது. இப்போது அது சட்டமாகவும் நிறைவேறியிருக்கிறது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் நீலகிரி மாவட்டத்திலுள்ள தனியார்களின் பயணிப் பேருந்துகளை அரசுடைமையாக்குவது என்று ஜனவரித் திங்கள் 1973 அன்று அரசுடைமையாக்கி சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு மாற்றப்பட்டன. அதேபோல் 1973 ஜனவரிக்கு முன்னால் நீலகிரி மாவட்டத்தில் ஓடிக்கொண்டிருந்த குன்னூர் மேட்டுப்பாளையம் சர்வீஸ் சேரன் கழகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதை அந்தக் கழகத்திற்கு எடுத்துக்கொண்டாலும், அங்கே வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் 9 பேர் இன்னும் பணிக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று குறிப்பிட்டு தகவல் வந்திருக்கிறது. அமைச்சருக்கு அதை நான் இந்த விவாதம் முடிந்தவுடன் கொடுக்க பிரியப்படுகிறேன்.

அடுத்தபடியாக, தேசியமயமாக்கப்பட்டவுடன் இந்த அரசுப் பேருந்துகள் சரியானமுறையில் இயங்கி வருகின்றனவா என்று பார்க்கிறபோது இல்லை என்று சொல்வதற்கு வழியிருக்கிறது. ரோடுகளிலே பஸ்கள் பிரேக்டவுன்கள் அடிக்கடி ஆகின்றன என்று மக்கள் மனதில் ஒரு பெரிய பீதி ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் அந்த பஸ்களை பணிமனையில் சரிவர பராமரிப்பது இல்லை என்ற

குறை இருக்கிறது. அந்த மாவட்டத்தில் பணிக்களரி இல்லை, அந்தப் பகுதி மலைப் பிரதேசம். மலைப்பாதைகளில் போகும் பஸ்கள் நல்ல நிலைமையில் இருக்கவேண்டும். அந்த பஸ்கள் சரிவர பராமரிக்கப்படவில்லையென்றால் பெரிய விபத்துக்கள் ஏற்படும், இதனால் சிக்கல்களை ஏற்படுத்தும். ஆகையால் நீலகிரி மாவட்டத்தில் ஒரு பணிக்களரி ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் பிரேக்டவுன்கள் உடனடியாக கவனிக்கப்பட்டு, வண்டிகள் நல்ல முறையில் ஓடுவதற்கு வசதியாக இருக்கும்.

தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி பற்றி இங்கே மிகத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தையும், குடிசை மாற்று வாரியத்தையும் கலந்தாலோசித்து போக்குவரத்து துறைப் பணியாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்காக முயற்சிகளை மேற்க்கொண்டு வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் அரசுப் போக்குவரத்து துறைப் பணியாளர்கள் தவணைக் கொள்முதலில் வாங்கிய வீடுகளுக்குச் செலுத்துவதற்காக ரூ. 10 லட்சம் அரசுப் போக்குவரத்துத் துறை இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் குடிசைகளில் வாழ்ந்துவந்த சுமார் 200 போக்குவரத்துத் துறை பணியாளர்களுக்கு அடுத்த இரண்டு மாதங்களில் குடிசை மாற்று வாரியத்தினால் கட்டப்பட்ட புதிய வீடுகள் வழங்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். நீலகிரி குளிர்ந்த மாவட்டம் என்பதை அரசு மனதில்கொண்டு மாவட்டத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கும் அந்த வசதி இந்த ஆண்டிலிருந்தே செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) ஒரு 5 நிமிடம் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு நா. வீராசாமி):—கொடுத்ததே 5 நிமிடம்தான் உங்களுக்குப் பிறகு உங்கள் தலைவர் பேசவேண்டியிருக்கிறது. ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

*திரு கு. அ. பொம்மன் : நீலகிரி மாவட்டத்தில் பஸ்கள் தேசவுடமை ஆக்கப்பட்ட பிற்பாடு, அரசு பஸ்கள் சரியாக ஓடுவதில்லை. உதகையி
நண்பகல் 12-00 லிருந்து கோர குந்தா கேளிங்டன், அணிக்கொரை ஆகிய இடங்களுக்குச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்கள் அரசுடைமையாக்கப்பட்ட பின்பு அந்த ரோடுகளில் ஓடிக்கொண்டிருந்த பஸ்களை ஓட்டுவதில்லை. இதனால் பிரயாணிகளுக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இந்தக் கஷ்டத்தை நீக்க அமைச்சரவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் "கழகத்தின் சராசரி நாள் வசூல் கிலோமீட்டர் ஒன்றுக்கு 36 காசிலிருந்து 45 காசாக உயர்ந்துள்ளது. கழகத்தின் பணியாளர் எண்ணிக்கையும் 857-லிருந்து 1,689—ஆக உயர்ந்துள்ளது. நீலகிரி மாவட்ட போக்குவரத்தினை மேற்கொண்டதன் விளைவாகவும் பேருந்துப் பணிகளைப் பெருக்கியதன் காரணமாகவும் இவ்வாறு உயர்ந்துள்ளது" என்று இந்த ஆய்வுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி 36 காசிலிருந்து 45 காசாக உயர்ந்திருக்கிறதென்றால், அது பிரயாணிகளுக்கு கஷ்டமாக இருக்கும்.

ஆகவே அதைக் குறைக்க வேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். நீலகிரி மாவட்டத்தில் பஸ் போக்குவரத்து தேசஉடைமை ஆக்கப்பட்ட பிறகு தனியார் பஸ்களில் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளர்களுக்கு பணிக்கொடை, மருத்துவச் செலவு, குழந்தைகளுக்கு கல்லூரி, பள்ளிப் படிப்புக்கான கட்டணங்களையும் புத்தகங்களையும் வழங்குவது, குழந்தைகளுக்குக் திருமணச் செலவிற்காக வட்டியில்லா முன்பணம் கொடுப்பது, கழகத்தின் பேருந்துகளில் பயணம் செய்வதற்காக ஆண்டு ஒன்றுக்கு 20 அனுமதிச் சீட்டுக்கள் வழங்குவது ஆகிய பல சிறப்பு அம்சங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவற்றை நான் வரவேற்கிறேன்.

திரு வீ. கார்த்தீசன் : தலைவரவர்களே, போக்குவரத்துத் துறை மானியத்தை ஆதரித்து எனது ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்று நாட்டில் ஓடும் எல்லா தனியார் பேருந்துகளையும் அரசுடைமை ஆக்கும் திட்டத்தை நமது அரசு மேற்கொண்டுள்ளது. தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் உற்சாகத்தை உண்டுபண்ணியிருக்கிறது. மேலும் தொழிலாளர்களுடைய நலனைக் கருதி நமது அரசு அவர்களுக்கு நல்ல பல குடியிருப்பு வசதிகள், மருத்துவ வசதிகள், படிப்பு வசதிகள் போன்ற காரியங்களையும் செய்து வருகிறது. மேலும் செய்ய இருக்கிறது. இப்படியிருந்தும்கூட சில தொழிலாள நண்பர்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளாததை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் சிலரிடம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உணர்ச்சி ஆகியவை இல்லை. பஸ்ஸில் இடமிருந்தாலும் நாம் கையைக்காட்டி வழியை மறித்தாலும் நிறுத்துவதில்லை. என்ன காரணமோ தெரியவில்லை. இது சம்மந்தமாக நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட பெரிய அதிகாரிகளும் நல்ல நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதி நலனைக் கருதி சில வார்த்தைகளைசொல்ல எண்ணுகிறேன். திருநெல்வேலியிலிருந்து சென்னை வரும் பஸ்கள் எல்லாம் 15,20 மைல் தூரம் என்னுடைய தொகுதி வழியாகத்தான் வருகின்றன. அங்கே பணகுடி என்ற ஊர் இருக்கிறது. அதில் 10,000 மக்கள் வசிக்கிறார்கள். இருந்தாலும் பணகுடியில் எக்ஸ்பிரஸ் பஸ்களை நிறுத்துவதில்லை. பலமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மகஜர் கொடுக்கப்பட்டு கேட்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து பணகுடிக்கு எக்ஸ்பிரஸ் பஸ் ஸ்டாப் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் இப்போது நாகர்கோவிலில்தான் பஸ் டிப்போ இருந்து வருகிறது. அதனால் பல பஸ்களை வேலை செய்வதற்காகவோ அல்லது மற்றும் சில பஸ்களைத் திருப்பி விடுவதற்கோ வசதியாக இல்லை. ஆகவே திருநெல்வேலியில் ஒரு பஸ் டிப்போ திறக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன.

நாகர்கோவிலிலிருந்து ராமேஸ்வரத்துக்கும் கோவைக்கும். தூத்துக்குடிக்கு கடற்கரைப் பகுதி வழியாக அரசு பேருந்துகள் செல்லுகின்றன. அந்தப் பேருந்துகள் பரனூரி என்ற இடத்தில் நிற்பதில்லை. நாகர்கோவிலிலிருந்து ராமேஸ்வரம் கோவை ஆகிய இடங்களுக்குச் செல்லும் பேருந்துகள் பரனூரியில் நிற்கும்படியாக ஸ்டாப் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ராதாபுரம் வள்ளியூருக்கு முன்பு அதிகமாக ஷட்டில் பஸ்கள் போய்க் கொண்டிருந்தன். இப்போது ஷட்டில் டிரிப்புகள் நின்றுவிட்டன. ராதாபுரம் ஒரு துணை தாலூகா. வள்ளியூர் மிகப்பெரிய நகரம், எனவே ராதாபுரம் வள்ளியூருக்கு அதிகப்படி பஸ்கள் விட வேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் நீண்ட நாளாக எனது சொந்த ஊரான ஆனைக்குடியிலிருந்து திருநெல்வேலிக்கு பஸ் விடவேண்டும் என்று பல முறை அமைச்சரவர்களை கேட்டுக்கொண்டு வருகிறேன். அவரும் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆகவே வெகு விரைவில் ஆனைக்குடியிருந்து திருநெல்வேலிக்கு பஸ் விடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதி மாணவர்களுடைய நலனைக் கருதி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரி தொகுதி என்னுடையத் தொகுதியின் அண்டைத் தொகுதி. என்னுடைய தொகுதியிலிருந்து கன்னியாகுமரிக்குச் சென்று ஏராளமான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். முன்பு எல்லாம் அவர்களுக்கு சீசன் டிக்கட் கொடுக்கும் முறை இருந்தது. இப்போது அந்த முறை இல்லை. எனவே, திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரிக்கு கல்வி பயிலச் செல்லுகின்ற மாணவர்களுக்கு சீசன் டிக்கட் கொடுக்கும் முறையை மீண்டும் நடைமுறைக்குக்கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*<u>திரு இ. எஸ். தியாகராசன்</u>: பேரவைத் தலைவரர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ராமச்சந்திரன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச சொல்ல ஆசைப்படுகிறேன்.

தமிழகத்திலே தோன்றியுள்ள பல்லவன், சேரன், சோழன், பாண்டியன் என்ற தமிழ் மூவேந்தர்களுடைய பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள போக்குவரத்து வாரியங்கள் இன்றையதினம் தமிழகத்தை ஆளுகின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழரின் சார்பாக ஆளுகிறார்கள் என்பதைத் தெள்ள தெளிவாக எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது. அதன் நிர்வாகத்தில் எல்லாம் இன்றைய தினம் நம்முடைய பொறியியல் வல்லுநரான அமைச்சரவர்கள் ஒவ்வொரு வாரியத்தின் மானேஜிங் டைரக்டர்களாக வல்லுநர்களை ஏற்படுத்தியிருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரிய ஒன்றாகும். இந்த நிர்வாகத்தின் பயனாக பல இடங்களில் செம்மையுறாதிருந்த நம்முடைய போக்கு வரத்து உண்மையிலேயே விரைவில் நல்ல முறையில் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பினைப் பெறும் என்பதில் எனக்கு சிறிதளவும் சந்

தேகம் இல்லை. ஏற்கெனவே ஏற்பட்டுள்ள காரியங்களில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். பல்லவன் எங்கள் பகுதியில் வருகிறான். அவனை வல்லவனாக்க வேண்டியது நமது அமைச்சரவர்களுடைய கடமை. பல்லவன் நடுவழியில் நின்று விடாமல் செய்யவேண்டியதும் முக்கியமான ஒன்றாகும்.

என்னுடைய தொகுதியில் மஹாபலிபுரத்திலிருந்து டள்ளிப்பட்டு வரையில் 110 மைல்கள் செல்லும் 212-ம் நம்பர் பஸ் நடுவழியில் பல இடங்களில் நின்று விடுகிற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதைத் தடுக்க அரசு முன்வர வேண்டும். மாண்புமிகு அமைச்சரவர்களும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தை செப்பனிட முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய தமிழகத்திலே அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற இந்தத் தொழிலிலே 24 பங்கு தொழிலாளர்களுக்கு அளிக்க முன் வந்திருக்கிறது என்றால் அது பெருமைக்குரியதாகும். தொழிலாளர்களுக்கு பங்கு ஏற்படுத்தி வருகிற லாப நஷ்டங்களில் அவர்களும் பங்கு பெற்று பயனடைகிற முறையில் உண்மையிலேயே சோஷலிச நடைமுறையில் தமிழக அரசு நடவடிக்கைககளை எடுத்திருக்கிறதென்றால் அதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இந்த நடைமுறையை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும். இது ஒரு நல்ல தொழிற் கொள்கை. ஆகவே தொழிலாளர்கள் இதையெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு வாரியங்களால் நடத்தப்படுகிற பஸ் போக்குவரத்து செம்மையாக நடைபெற அவர்களும் முயற்சி எடுத்துக்கொண்டால் அதன் விளைவாக அந்தத் தொழிலாளர்கள் நற் பயன்பெற முடியும் என்பதைச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, நம்முடைய பேருந்துகள் எல்லாம் சுத்தமாக இல்லை என்ற ஒரு புகார் நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே 2 அல்லது 3 பஸ்ஸுக்கு ஒரு கிளீனர் என்று வைத்து பஸ்களை எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, சென்னை—சித்தூருக்கு நகரி வழியாக பஸ் விட வேண்டும். நகரி ஆந்திர மாநிலத்தைத் சேர்ந்த பெரிய ஊராகும். ஆகவே, ஆந்திர மாநிலத்தோடு பேசி, இரண்டு பஸ்களையாவது சென்னை—சித்தூருக்கு நகரி வழியாக விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

திருத்தணியிலிருந்து சென்னைக்கு முன்னால் எக்ஸ்பிரஸ் பஸ் விட்டுக் கொண்டிருந்தார்கள். டிக்கட் ஏற்றத்தின் காரணமாக அந்த பஸ்சுக்கு வருமானம் குறைந்ததால் நிறுத்தி விட்டதாகச் சொன்னார்கள். அதனால் போக்குவரத்திற்குப் போதுமான வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே டிக்கட்டுகளில் சில ஏற்றத்தாழ்வுகளை வைத்து, மீண்டும் அந்த எக்ஸ்பிரஸ் பஸ்ஸை தொடர்ந்து விடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை ஆதரித்து, பாராட்டி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சி. ஆறுமுகம் : பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மூன்று மானியங்களையும் ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். நான் ஆதரித்துப் பேசுகின்ற கருத்துக்கள், பாதிக்கப்பட்டவன் ஆதரிக்கின்ற பிரச்சனை என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பஸ்களை நாட்டுடைமையாக்குகின்ற திட்டத்தில் என்னுடைய கருத்துக்களை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வது இந்த அரசுக்கு நலமாக இருக்குமென்று கருதுகிறேன். பஸ் என்று எடுத்துக் கொண்டால் இது சாதாரணமாகப் படித்தவர்கள் மட்டுமே இந்த தொழிலை நடத்தி விட முடியும் என்பதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. காரணம், இது முழுக்க முழுக்க தொழிலிலே அனுபவம் உள்ளவர்கள் நடத்துவதற்குத் தான் ஏதுவாக இருக்கும். இந்த மானியக் கோரிக்கையில் நம்முடைய அமைச்சரவர்கள் 24 சதவிகிதத்தை தொழிலாளர்களுக்கு அளிப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதனால் நான் இந்த மானியத்தை முழு மனதோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தினால் பஸ் தொழிலாளர்கள் பஸ்களுக்குச் சொந்தக்காரர்கள் ஆகின்றார்கள்.

ஆகவே, பஸ் தொழிலாளர்களுக்கு 24 சதவிகிதம் கொடுத்தாலும் பாராட்டுகிறேன். இன்னும் அதிகமாகக் கொடுத்தாலும் பாராட்ட எனக்கு உரிமை உண்டு. காரணம் நான் மோட்டார் ஆய்வுத் துறையிலே ஏறத்தாழ 1942-ம் ஆண்டிலேயே நுழைந்தவன். அப்போதெல்லாம் இந்தத் தொழிலுக்கு மிகுந்த மரியாதை உண்டு. சாதாரணமாக ஒரு டிரைவரை உரிமையாளர்கள் வீட்டிலே சென்று தான் அழைத்து வர வேண்டும். நான் இவைகளை எல்லாம் கூறுவதற்குக் காரணம், இந்த மானியத்திலே கொஞ்சம் விரிவாகப் பேசுவதற்கு எனக்கு சற்று காலத்தை நீட்டித் தரவேண்டுமென்பதற்காகத்தான். வேண்டுமென்றால் எதிர்க் கட்சிக்காரர்களிடம் கேட்டு, அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிற நேரத்திலிருந்து கொஞ்சம் பெற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந்ா. வீராசாமி) : எதிர்க் கட்சிக்காரர்களுக்கு ஒதுக்கியிருக்கும் நேரத்திலே கொஞ்சம் வாங்கிக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அவர்களுக்கும் இதேப் பிரச்சனை தான் இருந்து கொண்டிருக்கிறது. நீங்கள் ஒரு மோட்டார் மெக்கானிக்காக இருப்பதால் மற்றவர்களை விட உங்களுக்கு இரண்டு நிமிடங்கள் அதிகமாக ஒதுக்கித் தருகிறேன். இந்த இரண்டு நிமிட சலுகையையும் சேர்த்து 7 நிமிடங்களுக்குள் முடித்துவிடுங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : இந்த பஸ்களை நாட்டுடைமையாக்குவதைப் பற்றி கொஞ்சம் விரிவாகப் பேச வேண்டியிருப்பதாலும், இதுதான் என்னுடைய கன்னிப் பேச்சாக இருப்பதாலும் இன்னும் கொஞ்சம் அதிகமாக நேரத்தை ஒதுக்கித் தரும்படி மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன்.

அரசு பஸ்களை நாட்டுடைமையாக்கும் திட்டத்தின் கீழ் பஸ்களை எல்லாம் ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொள்வதாக இருந்தாலும், அதைப் படிப்படியாகச் செய்யாமல் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் பஸ் சொந்தக்காரர்கள் எப்போது எடுப்பார்களோ, எப்போது எடுப்பார்களோ என்று நித்தம் நித்தம் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரே அடியாக பஸ்களை எல்லாம் எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு ஒரு மன நிம்மதி, மன ஆறுதல் கிடைக்கும். அது பிரயாணிகளுக்கும் வசதியாக இருக்கும். இல்லை என்றால் அரசாங்கம் எடுத்துக் கொள்கிற பஸ்தானே என்று சொல்லி, பஸ்களை பழுது பார்க்காமல், ஒழுங்காகப் பராமரிக்காமல் விட்டுவிடுவார்கள். அதனால் பஸ்கள் ஆங்காங்கே நின்று விடுகின்ற தன்மையும் அதனால் பிரயாணிகளுக்கு பெருத்த சங்கடமும் ஏற்படும்.

அடுத்து, ஐ. ஏ. எஸ். போன்ற அதிகாரிகள் பஸ் நிர்வாகத்திற்குத் தேவையில்லை. நான் ஒரு மோட்டார் மெக்கானிக், இந்தத் தொழிலிலே என்னோடு போட்டிப்போட்டு நடத்த முடியாது. ஆகவே, சாதாரணப் படிப்பு உள்ளவர்களாக இருந்தாலும் இந்தத் தொழிலில் நல்ல அனுபவம் உள்ளவர்களாக இருந்தால் போதும். ஆகவே ஐ. ஏ. எஸ். அதிகாரிகளையும், பொதுப்பணித்துறை அதிகாரிகளையும் இந்த நிர்வாகத்தில் போடுவதை விட இந்தத் தொழிலிலே நல்ல அனுபவம் உள்ளவர்களையும் மோட்டார் மெக்கானிக்குகளையும், எம். வி. இன்ஸ்பெக்டர்களையும் போட்டால் நிர்வாகம் சிறப்பாக நடைபெறும். தனியார் துறையிலே இதற்கென்று தனியாகப் பயிற்சிப் பெற்றவர்களை நியமித்து, அவர்களை மிரட்டி நன்றாக வேலை வாங்கி வந்ததால் தான் பஸ் தொழிலை அவர்களால் திறமையாக நடத்த முடிந்தது. அதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் நமது அரசாங்கத் துறையில் அப்படி அல்ல. எந்தத் துறையிலே அதிகாரிகளாக இருந்தாலும் அவர்கள் எல்லாம் இந்தத் துறையில் வர முடிகிறது. ஆனால் இந்தத் துறையில் உள்ளவர்கள் மற்றத் துறைகளுக்குப் போக முடியாது. அப்படிப் போக சட்டத்தில் இடம் இல்லையா அல்லது இடம் கொடுக்க மனமில்லையா என்பது தெரியவில்லை. அதையெல்லாம் அரசாங்கம் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாக, செக்ரெட்டேரியேட்டிலே இருக்கின்ற ஒரு சூப்பரிடெண்ட் ஆர். டி. ஓ. ஆக போய் விட முடிகிறது. ஆனால் அங்கே ஆர். டி. ஓ. ஆக இருப்பவர்களுக்கு வேறு இடங்களுக்குப் போக முடிவதில்லை. நிர்வாகத்தைத் திறமையாக நடத்துவதற்கு, பஸ்களை ஒழுங்காகப் பராமரிப்பதற்கு இந்தத் தொழிலிலே அனுபவம் உள்ளவர்களைப் போட வேண்டும். முழுக்க முழுக்க டெக்னிக்ஸ் தெரிந்தவர்களைப் போட வேண்டும். பஸ்ஸிலே என்ன ரிப்பேர் என்று என்னைக் கேட்டால் தொலை பேசியில் கூட இப்படிச் செய்யுங்கள் என்று நான் சொல்லி விடுவேன். அதற்குச் காரணம் அனுபவம் தான். எனவே, இந்தத் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களை அதிகாரிகளாகப் போட்டால் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னைக் கேட்டால் இது மாதிரி எத்தனையோ யோசனைகளை நான் சொல்வேன். இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றிருக்கிற நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் எஞ்சினீயரிங் துறையில் தேர்ச்சிப் பெற்றவர்கள். ஆகவே, அவர்

களுக்கு நான் விளக்கங்கள் சொல்ல வேண்டிய தேவை இல்லை. ஆனாலும் இந்தத் துறையில் ஐ. ஏ. எஸ். அதிகாரிகளையும் மற்றும் பொதுப் பணித் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளையும் போடுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தனியார் பஸ்களை எல்லாம் நாட்டுடைமையாக்கும் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்கிற போது, அந்த நிர்வாகத்தில் இருக்கின்ற எல்லாத் தொழிலாளர்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும். தனியார் நிர்வாகத்தில் பஸ்களை சிறப்பாகப் பேணுவதற்காக பல்வேறு விதமானத் தொழிலாளர்களை—பெயின்டர்கள், பாடி பில்டர்கள், டிங்கர்கள், கிளீனர்கள் இப்படிப்பட்டவர்களைக்கூட—வைத்திருக்கிறார்கள். நமது அரசுத்துறையிலே அப்படிப்பட்டவர்கள் இல்லாமல் இருக்கலாம். நமக்கு சில சட்டத் திட்டங்களை வைத்திருக்கிறோம். தனியார்களுக்கு அந்த சட்டத் திட்டங்கள் எல்லாம் கிடையாது. சென்னையிலிருப்பவர் "செ" என்று வைத்திருப்பார்; மதுராந்தகத்திலே இருப்பவர் "ம" என்று வைத்திருப்பார். அது அந்தக் காலத்திலே இருந்த முறை. ஆகவே, சட்டத்திட்டங்களை எல்லாம் பார்க்காமல் பஸ்களை எடுத்துக் கொள்ளும்போது அவைகளோடு அங்கே இருக்கின்ற எல்லாத் தொழிலாளர்களையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் துறைக்கு நிரம்ப பப்ளிசிட்டி இல்லை. பப்ளிசிட்டிக்காக வேண்டுமானால் பத்திரிகையாளர்களுக்கு நிரந்தரமாக இலவச பாஸ் கொடுத்து, பஸ்களிலே பிரயாணம் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும். அப்படியாவது அவர்கள் இந்தத் துறையைப்பற்றி பத்திரிகைகளிலே விளம்பரம் செய்கிறார்களா என்று பார்க்கலாம்.

இன்னும் இந்தத் துறை சிறப்பாக நடைபெறுவதற்கு என்னுடைய ஆலோசனைகள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) பஸ் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள், மெக்கானிக்குகள், எம். வி. இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்களை எல்லாம் நிர்வாகப் பிரிவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். முழுக்க முழுக்கத் தொழில் தெரிந்தவர்களைப் பார்த்துப் போட வேண்டும். இதிலே உள்ள டெக்னிக்குகளை நன்றாகத் தெரிந்தவர்களைப் போட்டால் "வண்டி வழியிலே நின்று விட்டது, பாடி பில்டிங் சரியில்லை, சுத்தம் இல்லை" என்பன போன்ற குறைகள் எல்லாம் தீர்ந்து விடும். தனியார் பஸ்களிலே கல்யாண வீட்டிற்குப் போகக்கூடிய பெண்கள் 500 ரூபாய் பட்டுப்புடவைக் கட்டிக் கொண்டு போனாலும் மடியாமல், கலையாமல் அழுக்குப் படியாமல் போய் வருவார்கள். ஆனால் அரசாங்கப் பஸ்களிலே அப்படிப் போய் வர முடியவில்லை. ஆகவே, இந்த மாதிரியான காரியங்களில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஐந்து நிமிடங்கள் கொடுங்கள்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி)</u> : உங்களுக்கு அதிகமாகக் கொடுத்த நேரமும் முடிந்து விட்டது. உங்களுடைய ஆலோசனைகளையெல்லாம் அமைச்சரிடம் தனியாகச் சொல்லுங்கள். அடுத்து திரு. கோபால் அவர்கள் பேசுவார்கள்.

*<u>திரு. எம். கோபால்</u> : தலைவரவர்களே, இன்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்ல விம்புகிறேன்.

நம்முடைய சர்க்கார் நல்ல பல சோஷலிசத் திட்டங்களை மேற் கொண்டு. இந்தியாவிலே யாராலும் செய்யப்படாத அளவுக்கு இந்த நாட்டிலுள்ள தனியார் பஸ்களை எல்லாம் நாட்டுடைமையாக்கும் திட்டத்தை உள்ளபடியே ஒரு புரட்சிகரமான திட்டம் என்று நான் பாராட்டுகிறேன். தனியார்கள் இந்த பஸ்களை வைத்துக் கொண்டுதான் முன்னால் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்த சர்க்காரை ஆட்டிப்படைத்தார்கள். காரணம் அப்போது இங்கே இருந்தவர்கள் நம்மைப் போல சாதாரணமானவர்கள் இல்லை. 100க்கு 80 பேர் பஸ் முதலாளிகளாகத்தான் இருந்தனர். அந்த சர்க்கார் மாற்றப்பட்டு இப்போது நமது சர்க்கார் இருக்கின்றது. இப்போது மக்களுக்கு ஏற்ற பல முன்னேற்றமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில் இந்த பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதும் மிக முக்கியமானது.

எனக்கு முன்பு பேசியவர்கள் இத்துறைபற்றிக் குறை கூறினார்கள், குறைகள் இருக்கத்தான் செய்யும். தேசியவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களில் சில காலத்திற்கு குறைகள் இருக்கலாம். ஆனால் எஞ்சினிரிங் பட்டம் பெற்ற நமது அமைச்சர் அவர்களுடைய காலத்தில் இவையெல்லாம் நிவர்த்திக்கப்பட்டு விடும் என்று நிச்சயம் எதிர்ப்பார்க்கலாம். இவர்கள் ஏற்றுக்கொண்ட பிறகு பேருந்துகள் சீராகவும் சிறப்பாகவும் சென்று கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இன்று மக்கள் இதையெல்லாம் வரவேற்கின்றார்கள். ஆனால் அரசியல் கட்சிக்காரர்கள் குறை கூறுகின்றார்கள். கிளர்ச்சிகள் என்றால் அரசுப் பேருந்துகளைத் தான் முதலில் அடிக்கவும் அடிக்கின்றார்கள். இப்படிப்பட்ட போக்குகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

அடுத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட இந்தப் பேருந்துகளில் தொழிலாளர்களுக்கும் பங்கு கொடுத்திருக்கின்றார்கள். இதன் மூலம் பாட்டாளி மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பளித்து, அவர்கள்பால் அக்கறை கொண்டுள்ள அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பது தெளிவாகிறது.

அடுத்து என் தொகுதியைப் பொருத்தமட்டில், காஞ்சீபுரத்திற்குச் செல்லும் பேருந்து இப்போது ஓரகடம் வழியாகச் செல்லுகின்றது. ஆனால் அருகிலுள்ள வடக்குப்பட்டு கிராமத்திலுள்ள மக்கள் நான்கைந்து மைல்கள் நடந்து வந்துதான் பஸ் ஏறவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். எனவே அந்த பஸ் இந்த வடக்குப்பட்டு கிராமம் வழியாகப் போனால் உதவியாக இருக்கும். அது போல சிங்கப்பெருமாள்கோவில் வழியாகப் போகும் பேருந்துகள் வடக்குப்பட்டு கிராமம் வழியாகப் போனால் அந்த கிராமத்திலுள்ள மக்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

அதுபோல அம்பத்தூர் பஸ் அடைப்பாக்கம் வழியாகப் போனால் அங்கிருந்து வரும் தொழிலாளர்களுக்கு வசதியாக இருக்கும். இதற்காக அமைச்சர் அவர்களிடம் ஒரு மனுக்கூடக் கொடுத்திருக்கின்றேன்.

அதைப்போல போரூருக்கு அருகில் ஒரு கூட்டு ரோட்டு இருக்கின்றது. அங்கே பூவிருந்தவல்லி, குன்றத்தூர், கோடம்பாக்கம் வழியாகச் செல்லும் பாதைகள் சந்திக்கின்றன. இந்த வழித்தடங்களில் செல்லும் பேரூந்துகள் இங்கே சந்திக்கின்றன. ஆனால் அந்த இடத்தில் ஒரு டைம் கீப்பர் இல்லாத காரணத்தினால் டிரைவர்கள் தங்கள் இஷ்டம்போல பஸ்களை ஓட்டிச் சென்றுவிடுகின்றார்கள். எனவே இதை கவனிக்க வேண்டும்.

அடுத்து, தனியாக ஒரு ஜீப்பில் மெக்கானிக்குகளை வைத்துக்கொண்டு ஒரு பத்து மைல் சுற்றளவிற்குச் சுற்றிக்கொண்டு இருந்தால் அந்த எல்லைக்குள் ஏதாவது பேரூந்து பழுதுபட்டுவிட்டது என்றால் உடனடியாக அதைக் கவனிக்க முடியும். இதையும் அரசு கவனிக்க வேண்டும்.

அடுத்து, பட்டு, மாங்காடு கிராமங்களிலே பெருவாரியாக பீடித் தொழிலாளர்களும் மற்றவர்களும் இருக்கின்றார்கள். இவர்கள் தினமும் காலையில் புறப்பட்டு நேரத்திற்குச் சென்னை வரவேண்டும். அங்கிருந்து காய்கறிகளை எடுத்துக்கொண்டு சென்னைக்கு வருகின்றவர்களும் இருக்கின்றார்கள். ஆனால் இங்கிருந்து சென்னை வரும் பஸ்கள் அடிக்கடி நேரம் தவறி வருகின்றன. பழுதடைந்து விடுகின்றன. காய்கறி எடுத்து வருகின்றவர்கள் நேரம் தவறி சென்னைக்கு வந்தால் காய்கறிகள் விலை போவதில்லை. தொழிலாளர்களும் கஷ்டப்படுகின்றார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் தனியாக ஜீப்புகளில் மெக்கானிக்குகளை வைத்துக் கொண்டிருந்தால் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்கலாம்.

இப்படி நல்ல திட்டங்களை அமுல்படுத்தும் நமது கழக அரசு மேலும் மேலும் பொதுமக்களுக்கு நன்மை செய்யத்தக்க அளவிற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த மானியக்கோரிக்கை மீது எங்கள் கட்சியினர் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பஸ் தேசீயமயம் மேலும் விஸ்தரிக்கப்பட்ட நிலையில், இலாகாவும் விஸ்தரிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் பயணிகள் வசதிகள் பெருகியிருக்கின்றனவா, அலுவலர்கள் நிலைமை உயர்ந்திருக்கின்றதா என்றால், பஸ்கள் முறையாகப் பராமரிக்கப்பட்டு, நிர்வாகம் சீராக இருக்கின்றதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. இதே நேரத்தில் பயணிகளின் மேலே கட்டண உயர்வினால் பெருஞ்சுமை ஏற்றப்பட்டிருக்கிறது. மேலும் அதிக பயணிகள் உள்ள இடங்களுக்குப் போதிய பஸ் வசதிகள் இல்லை. வழித் தடங்களில் செல்லும் பஸ்கள் நல்ல கண்டிஷனில் இல்லாத காரணத்தினால் அடிக்கடி பழுதுபட்டு நின்றுவிடும் நிலைமையைப் பொதுவாகப் பல இடங்களில் காண்கிறோம். எனவே பயணம் தொடங்குவதற்கு முன்பு பஸ்கள் நல்ல கண்டிஷனில் இருக்கின்றதா என்று பார்க்க வேண்டியது அவசியமாகிறது.

மேலும் நீண்டதூரப் பஸ்களில் பயணம் செய்கின்றவர்களுக்கு வசதிகள் போதாது. இங்கிருந்து மதுரை, கோவை, திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற நீண்ட தூர பஸ்களில், குறிப்பாக 250 மைல்களுக்கு அப்பாற் போகும் பஸ்களில் இருக்கைகள் எண்ணிக்கை குறைவு செய்வது மிக அவசியம். கேரளத்தில் திருவனந்தபுரத்திலிருந்து கண்ணனூர் செல்லும் பஸ்கள் "லக்ஷரி" பஸ் விடப்பட்டிருப்பது மிக வசதியாக அமைந்திருப்பதால் வசதியாக இருக்கின்றது. அதைப்போல இங்கேயும் ஏற்படுத்தலாம்.

அடுத்து வி.ஐ.பி., எம்.எல்.ஏக்களுக்கு இப்போது எக்ஸ்பிரஸ் பஸ்களில் 5, 6 எண்ணிக்கையுள்ள இருக்கைகள் ஒதுக்கப்படுகின்றன. இவை கதவுக்கு பக்கத்தில் இருப்பதால் வசதியற்று இருக்கின்றது. இதை மாற்றி வலதுபக்கம் ஓரத்தில் உள்ள ஸீட்டுகளில் இரண்டாவது வரிசையில் மாற்றிக் கொடுக்க வேண்டும். அடுத்து சென்னையிலிருந்து புறப்படும் எக்ஸ்பிரஸ் வழித்தட பஸ்கள் சென்னையிலேயே பல இடங்களிலே நிற்கும் நிலைமையிருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் போகும் இடங்களுக்கு குறித்த நேரங்களில் போக முடியாது போய்விடுகிறது. இந்த நேரத்தை மிச்சப்படுத்தலாம். அங்கெல்லாம் நிற்காமலிருந்தால், அடுத்து பஸ் நிலையங்களில் பக்கத்தில் சிற்றுண்டி அருந்துவதற்கு ஏற்ற இடங்கள் இல்லாது இருக்கின்றது. பல இடங்களில், உதாரணமாக விழுப்புரத்தில் அந்தமாதிரி வசதியே இல்லை. இதைக் கவனிக்க வேண்டும். அடுத்து திடீர் என்று இவர்கள் ஸ்ட்ரைக் செய்து விடுகின்ற நிலைமை சமரசம் செய்துவைக்க அதிகாரிகள் உடனே முன்வந்து நிலைமையை சரிக்கட்ட வேண்டும்.

அடுத்து அலுவலர்களுக்கு இன்று சரியாக சம்பளம் கொடுக்கப்படவில்லை. கேரளத்தில் உள்ளவர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது குறைவாக இருக்கின்றது. அங்கே கண்டக்டர் சம்பளம் ரூ. 270. இங்கே ரூ. 175. டிரைவர்களுக்கு அங்கே 250 கொடுக்கப்படுகிறது. இங்கே 185 தான். இன்னும் அங்கே 16 சதவீதம் போனஸ் கொடுக்கின்றார்கள். அப்படிப்பட்ட சலுகைகள் தமிழ் நாட்டிலுள்ள இந்தத் தொழிலாளர்களுக்கும் தரப்படவேண்டும். திருவிதாங்கூர்-கொச்சியில் ஸர்வீஸிலிருந்தவர்கள் இப்போது தமிழகத்தில் சிலர் இருக்கின்றார்கள் ஸர்வீஸில். அவர்களுடைய சம்பளத்திற்கும் கேரளத்தில் கொடுக்கப்படுகின்ற சம்பளத்திற்கும் பெரும் வித்தியாசம். இங்கு குறைவு. அடுத்து கண்டக்டர்-செக்கிங் இன்ஸ்பெக்டருடைய ப்ரபோர்ஷன் பிரமோஷன் வசதி கிடைக்கும் வகையில் மாற்றியமைக்க வேண்டும். இல்லையென்றால் கண்டக்டர்களுக்கு ப்ரமோஷன் வாய்ப்பே இல்லாமல் போய்விடுகிறது. அடுத்து ட்ரைவர்களுக்கு லைட்-வெஹிகிள் ட்ரைவர் சம்பளம்தான் தரப்படுகின்றது. ஆனால் போலீஸ் டிப்பார்ட்மெண்டு போன்ற இலாகாவில் வேலை செய்யும் ட்ரைவர்களுக்கு 200—5—10—300 என்ற அடிப்படையில் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அப்படியே இவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். அதோடு ட்ரைவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் மெக்கானிக்குகள் எண்ணிக்கை இல்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். மெக்கானிக்குகள் போதிய அளவில் இருந்தால்தான் வண்டிகளில் பராமரிப்பு சரியாக இருக்கும். அடுத்து ஐ.டி. படித்தவர்கள் அப்பிரெண்டி

லாக இருக்கின்றார்கள். அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும்கூட அவர்களை "ரெகுலரைஸ்" செய்யாத நிலைமை இருக்கிறது. ஆனால் இதே நேரத்தில் என்.எம்.ஆர்கள் வேலையில் சேர்த்துக்கொண்டே போகின்றார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் மாற்றப்பட வேண்டும்.

பிற்பகல் 12·30 இப்போது டெப்போக்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. டெக்னிகல் ஸ்டாப் அதற்கேற்ப நியமிக்கப்படவில்லை.

அரசு பஸ்களை ஓவரால் செய்கிற வேலையை கோவையில் பாலகிருஷ்ணா பிரதர்ஸ், டி.வி.எஸ். போன்றவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இதை, டிபார்ட்மெண்டில் ஒர்க்ஷாப்பிலேயே செய்தால் வசதியாகவும், லாபகரமாகவும் இருக்கும். அதைப் போலவே, ரி-கண்டிஷன் செய்வதும் தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்படுகிறது. இந்த நிலையும் மாற்றப்பட்டு டிபார்ட்மெண்டில் ஒர்க்ஷாப்பிலேயே இதைச் செய்யலாம். எங்கள் பகுதியில் ராணித்தோட்டத்தில் ஒரு பாடி பில்டிங் ஒர்க்ஷாப் இருக்கிறது. அங்கே உள்ள யந்திரங்கள் நல்ல முறையில் இருக்கிறது. அங்கே வேறு ஒர்க்ஷாப் எதும் இல்லாத நிலையில், நல்ல தொழிலாளர்களும், வசதியான சூழ்நிலையும் இருப்பதால், இந்த வேலையை அதிக அளவில் இந்தத் தொழிற்சாலைக்குக் கொடுத்தால், கிராம்ப்டனில் செய்வதை விட ரூ. 5 ஆயிரம் அளவுக்கு குறைவாகச் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. அரசுக்கு இலாபம், அதே சமயத்தில், அந்த ஒர்க்ஷாப்பை விஸ்தரிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையில் வேலைக்கு எடுக்கப்படும் போது, எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சை கலக்காமலேயே நியமனம் செய்கிறார்கள். இந்த முறை தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு கண்டக்டர் வேலை கொடுப்பதில் தயக்கம் காட்டுவதை கைவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவனந்தபுரத்திலிருந்து நாகர்கோவில் வழியாக சென்னைக்கு விரைவு பஸ் வருவதாக அமைச்சர் சொன்னார்கள். இது எப்போது செயல்படுத்தப்படும் ? இதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u> : துணை சபாநாயகர் அவர்களே, அரசினுடைய போக்குவரத்துத் துறை மானியத்தின் மீது ஒரு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன்.

நாட்டுடமை ஆக்குவதில் அடிப்படை எண்ணம் என்னவாக இருக்க வேண்டுமென்றால், "Efficiency and Profit" திறமையாகவும் நடைபெற வேண்டும். அதே சமயம், லாபகரமாகவும் நடைபெற வேண்டும். அதுதான் நாட்டுடமை ஆக்கப்படுவதற்கு பொருள். நஷ்டத்தைக் காட்டுவதற்கு நாட்டுடமையாக்குவதை யாரும் ஏற்க முடியாது. நாட்டுடமை என்று கூறும்போது, ஒரு சில அரசியல்வாதிகளும் ஒரு சில அதிகார வர்க்கத்தினரும் செயல்படுகிற விதத்தைப் பார்த்தால், நாட்டுடமைக்குப் பதில், வீட்டுடமையாகிவிடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. எங்கே தவறு நடந்தாலும் திருத்திக் கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும்.

தேசீயமயமாக்கப்பட்ட பஸ்கள் எப்படிச் செயல்படுகின்றன என்பதைப் பார்ப்பதற்கு, இப்படி சட்ட சபையில் உட்கார்ந்துகொண்டு விவாதிக்க வேண்டிய தேவையில்லை. எல்லா அமைச்சர்களும் நேரிலாவது, அல்லது மாறு வேஷத்திலாவது, காலை 10 மணி அளவில் பஸ் ஸ்டாண்டிற்குச் சென்று பார்த்தால், பஸ்கள் சரியான முறையில் கிடைக்காததால் சென்னை நகர மக்கள் எப்படி கொந்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை திட்டவட்டமாக நேரிலேயே தெரிந்து கொள்ளலாம்.

பஸ் வரும் என்று நின்று கொண்டிருந்தால், முதலில், "பணிமனை" என்று ஒரு பஸ் வந்து போய் விடும். அடுத்து, "பயிற்சி" என்று ஒரு பஸ் வந்து போய்விடும். அடுத்து, "ஆய்வுக்காக" என்று ஒரு பஸ் வந்து போய்விடும். வர வேண்டிய பஸ் எப்போது வரும், எப்போது வரும் என்று ஏங்கக்கூடிய அளவுக்கு லட்சக்கணக்கான மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்று பார்க்கிறபோது, இப்படிப்பட்ட நிலைமைகள் இது நாட்டுடமையின் உண்மையான பொருள் அல்ல. இவற்றை திறம்பட நடத்த முடியும். அதற்கு போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். சரியான முறையில் நிர்வாகம் நடத்தப்பட வேண்டும். பொது மக்களுக்கு சேவை செய்கிறோம் என்ற உணர்வு அங்கே வேலை செய்கிறவர்களுக்கு உண்டாக வேண்டும். இல்லாவிட்டால் இப்படிப்பட்ட கஷ்டங்கள் தான் ஏற்படும்.

இன்றைக்கு சரியான முறையில் பஸ்கள் கிடைக்காததால் பொது ஜனங்கள் முக்கியமாக வேலைக்குப் போகிற பெண்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்? வேலையை முடித்துவிட்டு வீட்டுக்குப்போய் வீட்டுவேலைகளை கவனிக்க வேண்டும். சமையல் செய்ய வேண்டும். இன்னும் பல காரியங்களை கவனிக்க வேண்டியிருக்கிற பெண்கள், ஐந்து மணியிலிருந்து ஏழு மணி வரை வண்டிக்கு நின்று கொண்டிருந்தால் எங்கே வீட்டுவேலைகளை கவனிப்பது? மற்ற வேலைகளைப் பார்ப்பது ? பிள்ளைகுட்டிகளை கவனித்துக் கொள்வது? சரியான பஸ்களை நிர்வகிக்காததால், இப்படிப்பட்ட அவல நிலைக்கு அரசு அவர்களை ஆக்கியிருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக, 1,900 பஸ்களில் 600 "நாட் ஆன் தி ரோட்"— கால்வாசி ஓடவில்லை என்றால் என்ன அர்த்தம் ? ஏன் அவை ஓடவில்லை ? தனியாரிடம் ஒரு பஸ் இருந்தால், அது ரிபேர் ஆகிவிட்டது என்றால், ராத்திரியோடு ராத்திரியாக ரிபேர் செய்து மறுநாளே அனுப்பிவிடுவார்கள். 1,900 பஸ்சில் 1,600 பஸ்தான் "ஆன் தி ரோட்" என்றால், மிச்சம் உள்ள பஸ்கள் ஏன் ஓடவில்லை என்பதை கவனித்து உடனுக்குடன் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போதெல்லாம் இந்த "மாடி பஸ்"களைக் காணோமே ? என்னவாயிற்று ? "அம்மாடி" என்றுபோய் உட்கார்ந்து கொண்டு விட்டனவா? எங்கே போயின அந்த மாடி பஸ்கள் ? ஸ்பேர் பார்ட்ஸ் இல்லை என்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? திரு. ஆறுமுகம் உங்கள் கட்சிக்காரர்

ரொம்ப நன்றாகச் சொன்னார்கள். அவர் இன்னும் ஐந்து நிமிஷம் பேசியிருந்தால்கூட நன்றாக இருந்திருக்கும். எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதைவிட நன்றாகப் பேசினார். அது ஆளுங்கட்சிக்கே ஒரு எச்சரிக்கை யாக............................

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : ஆளுங்கட்சிக்கு நீங்கள் எச்சரிக்கை பண்ண வேண்டாம். நீங்கள் உங்கள் கருத்துக்களைக் கூறுங்கள்.

திருமதி த.ந. அனந்தநாயகி : பஸ்களை ரிபேருக்கு ஒர்க்ஷாப்புக்கு அனுப்புவதற்கு முன்னால், எவ்வளவு ஸ்பேர் பார்ட்ஸ் இருக்கிறது, எவ்வளவு தேவைப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

பஸ் டிராண்ஸ்போர்ட்டை நடத்தும்போது அதை லாபத்தில் நடத்த வேண்டும். அதற்கு போதிய கண்காணிப்பு இருந்தால்தான் முடியும். இல்லாவிட்டால் முடியாது. 1,900 பஸ்களை வைத்துக்கொண்டு என்ன லாபம் காட்டியிருக்கிறார்கள் என்றால், 1971-72 வரை நஷ்டம் ரூ. 181 லட்சம். இப்போது அமைச்சர் சொல்கிறார், பல்லவா கார்ப்பரேஷனையும் சேர்த்து ரூ. 22 லட்சம் லாபம் என்று. இரண்டாயிரம் பஸ்களை வைத்துக் கொண்டு ரூ. 22 லட்சம் லாபம் என்றால் இது ஒரு லாபமா ?

தனியார்கள், ஒன்று இரண்டு அல்லது மூன்று பஸ்களை வைத்துக் கொண்டு எத்தனை லாபம் காட்டுகிறார்கள்? அது மட்டுமல்ல. ரூ. 26 கோடி வருமானம் வந்து கொண்டிருந்தது, பேசஞ்ஜர்ஸ் டேக்சேஷன் ஆக்டின் மூலமாகவும், மோட்டார் வெஹிகிள்ஸ் டேக்சேஷன் ஆக்டின் மூலமாகவும். அந்த ரூ. 26 கோடியையும் இழந்து, அதையும் இழந்து, இதையும் இழந்து............

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : போக்குவரத்து நாட்டுடைமை ஆக்கப்பட்ட பிறகும், பேருந்துகளுக்கு எல்லா வரிகளையும் கட்டிக்கொண்டு தான் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த.ந. அனந்தநாயகி : டேக்சேஷன்கள் எல்லாம் கட்டுகிறார்கள் என்பதற்கான விவரங்கள் ஒன்றையும் இதிலே (அறிக்கையிலே) காணோம். அப்படியாவது லாபம் வந்ததா ? எவ்வளவு? ரூ. 22 லட்சம். இது வருந்தத் தக்கது அல்லவா ? இரண்டாயிரம் பஸ்சுக்கு எவ்வளவு லாபம் வர வேண்டும் ? அப்படி லாபமும் காட்டாமல், திறமையும் இல்லாமல் நாட்டு டைமை ஆக்கிவிட்டோம் என்று சொல்வதால் என்ன லாபம்? அதுவும், ஐந்து வருஷங்களில் அத்தனை பஸ்களையும் நாட்டுடைமை ஆக்கப் போகி றோம் என்று சொல்கிறார்கள். இது எதற்காக ?

உடனடியாக அத்தனை பஸ்களையும் நாட்டுடைமை ஆக்க வேண்டும். இதனால் தனியார் பஸ்களை நிர்வகிப்பவர்கள் தங்கள் பஸ்களை சரியான அளவுக்கு பராமரிக்காமல் இருக்கக் கூடிய நிலை இருக்கிறது. பஸ்

டிராண்ஸ்போர்ட்டை லாபகரமாக நடத்த வேண்டுமானால் இஸ்ரேலில் செய்வது போல தொழிலாளர்களையே சொந்தக்காரர்களாக ஆக்கவேண்டும்.

"All the drivers, conductors and technicians must become the owners of the Bus Transport"

அப்போதுதான் அவர்களுக்கு அக்கறை இருக்க முடியும். பஸ்சை தன்னு டைய சொந்த உடைமைபோல கருதி லாபகரமாக நடத்துவார்கள். இஸ்ரேல்—ஒரு சின்ன நாடு—நமது மாகாணத்தின் அளவுதான் இருக்கும்—அங்கே அந்தத் தொழிலாளர்களே லாபகரமாக நடத்தக் கூடியநிலை இருக்கிறது என்றால் அதை இங்கே செய்ய முடியாதா ? அத்தனை பொறுப்புகளையும் அவர்களுக்கே கொடுத்து விடுங்கள். ஐந்து வருஷத்தில் தேசியமயமாக்கப் போகிறோம் என்று சொல்வது தவறு. உடனடியாக எடுப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

தேசியமயமாக்கிவிட்டு, சிறு பஸ் கம்பெனிகாரர்களுக்கு ரூ. 10 ஆயிரம் கூட கொடுக்க மாட்டோம் அப்படிக் கொடுத்தாலும் கொஞ்சம் கொஞ்ச மாகத் தான் கொடுப்போம் என்றால், அவர்கள் கஷ்டத்திற்கு ஆளாக்கப் பட்டு, வேறுதொழிலில் ஈடுபட முடியாத ஒருநிலை ஏற்படுகிறது. டி.வி.எஸ். போன்றவர்களுக்கு லட்சம், லட்சமாக அள்ளிக் கொடுத்த வள்ளல்கள் சிறுசிறு பஸ் ஓனர்களுக்கு ரூ. 1,000 கூட உடனடியாக கொடுக்க மாட்டேன் என்று சொல்வது விந்தையாக இருக்கிறது. கடன் வாங்கியாவது அவர் களுக்கு உடனடியாகக் கொடுக்கலாம். வசூல் செய்து பின்னால் லாபத்தை வைத்து கடனை அடைத்துக் கொள்ளலாம். இன்றைக்கு தேசியமயத்தை எதிர்த்து பல ரிட்டுகள் கோர்ட்டுகளில் போடப்பட்டு வாதாடிக்கொண்டிருக்கி றார்கள். இதிலே பல குற்றங்கள் குறைகள் இருக்கின்றன. இவற்றை யெல்லாம் நன்றாக ஆராய்ந்து சட்டத்தை கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் அப்படிச் செய்யவில்லை என்பதை கூற விரும்புகிறேன்.

அரசு டிராண்ஸ்போர்ட்டில் வேலை செய்கிற கண்டக்டர்களும், டிரைவர் களும் மற்ற ஒர்க்கர்களும் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள். இதனால் இவர் களுடைய குடும்பமே அவதிக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. திருச்சியிலிருந்து மதுரைக்கு ஒருவரை மாற்றினால், அவர் இரண்டு குடும்பங்களை வைத்து பராமரிப்பது என்பது மிக மிகக் கஷ்டமாக இருக்கி றது. பஸ் தொழிலாளர்களை இப்படி மாற்றம் செய்வது தேவையற்றது. ஆங்காங்கே உள்ளவர்கள் அங்கேயே நிரந்தரமாக்கப்படுவார்களேயானால், அவர்கள் குடும்பங்கள் நல்லமுறையில் வாழ வழி செய்து கொடுத்த மாதிரி இருக்கும். இவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளத்தில் இரண்டு குடும்பங்களை வைத்து நடத்துவது என்பது முடியாத காரியம்.

இந்தக் குறைகளையெல்லாம் போக்கி திறமையான முறையில் இந்தத் துறையின் நிர்வாகத்தை நடத்தாவிட்டால், மக்களின் அதிக வெறுப்பை குறுகிய காலத்தில் சம்பாதித்துவிட நேரிடும் என்று கூறி, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Mr. Chairman, in support of the cut motion given on behalf of our party I would like to say a few things.

Sir, at the outset I have to say that in spite of the fact that we had on a number of times mentioned in this House that either the Transport should satisfy the norms of profitability or it should satisfy the norms of service; but neither it has given us service, nor has it produced us profit. That is the tragic way in which the transport is functioning. Apart from this, there is an important factor, namely, a very poor administration at the top level is taking place. It is true that we have a Minister who is a distinguished Engineer. There can be no two opinions on it that he has distinguished himself as an Engineer. He is the Minister now. But I do not know that in spite of the fact that a distinguished Engineer is heading the Transport Department as the Minister what happens to the entire administration. The top brass-hats of this department have completely let down this transport and they have made a scientific mess of the whole transport department. They have brought in a way total disgrace also because a number of *Oozhalgal*, lacunae, number of misappropriation of funds, number of wrong things are taking place in this department.

I shall prove it with authority. For instance, let us take the month of February. What is the position of the transport system? The House will be shocked to know and even the Hon. Chief Minister will be shocked to know because he may not know the whole thing—that the total loss of singles in the month of February 1973 is 63,758 out of the total of 5,12,400 scheduled singles. This shows that nearly 16 per cent of the single trips have not taken place. This is not an ordinary thing and the persons who are responsible for it must be punished by fixing responsibility because this is public money that is being wasted. I have got a statement showing the number of trips done by various depots like the Central Depot, Pattulla Road Depot, Tondiarpet Depot, Adyar Depot, Aynavaram Depot, Vadapalani Depot, Ambattur Depot, Madavaram Depot, Vysarpadi Depot and Karunanidhi Nagar Depot. Let not the Hon. Chief Minister get upset because I am mentioning his name. If I have to read the whole statement it will take 20 minutes. I have taken an extract with regard to losses. There is what is called traffic loss and technical loss. So far as traffic loss is concerned, it is as follows :—

	Service.	*Service Trip Loss.*
Late posting	199	436
Late change-over	605	1,428
Late run	2,295	5,064

	Service.	*Service Trip Loss.*
Accident	115	522
Crew sick	207	786
Not run for want of crew	26	213

When we have huge manpower resources and there is a serious unemployment problem, for want of crew buses did not run.

Now I come to technical loss. Due to late despatch, there is loss and the officer concerned should be hauled up and serious action should be taken by the Hon. Minister against that officer and if that is not possible, the Hon.Minister himself should own responsibility. They are all responsible to this House. The following is the break-up of the technical loss :—

	Service.	*Service Trip Loss.*
Late despatch	794	1,780
Not run for want of bus	3,021	24,848

(This is not due to want of buses but some buses may not have carburettor or battery and some times the whole bus will disappear.)

Breakdown	9,370	28,681

Then, Sir, in long distance buses they do not have tools. Recently in reply to a supplementary question, the Hon. Minister had stated that he would provide them but that has not been done. They are keeping quiet and they do not realise that they are paying with public money. This only shows how losses take place. This is something for which serious action should be taken.

I have got so many things to say but for want of time I cannot refer to all of them. It is like a novel. Truth is stranger than fiction. What about the working of the transport service. Are we happy with the service ? I want to refer to non-stopping of buses at the stopping places. People are laughing at that. Somewhere they put a brake like ships and do not stop at the stopping place. In one place the hanger put and the ship stops a few meters away. Also the passengers are packed like sardines and three or four hang outside the foot-board. I pray to God that at least the persons who are hanging at the foot-board will reach home safely. Also the bus will be in shambles.

Then, there is frequent break-down of buses and there is also improper timing. There is also no number board. Is this service ? There is also no light for name-boards. Also, passengers have to waste their precious hours in bus stops. We have heard of man-days lost due to labour strike in Tamil Nadu and in other parts of the country, and this is nothing when compared to the number of previous man-days lost on account of waiting at bus stops. Now a person has to wait for 2 to 2½ hours in every bus stop and if we calculate it, it will run into astronomical figures. Passengers spent half their life-time at bus stops.

Then I come to grave irregularities. In the Madhavaram Depot, while disbursing the salary, the deductions are mentioned in the salary receipts but not carried over to the Office register. I do not know whether Thiru Mathialagan, when he was Finance Minister had hauled up the concerned persons. This means a huge loss to the public. I would like to know how exactly this problem can be solved. In this way a few persons have swallowed thousands of rupees. Though it was found out sometime back, no action has been taken so far.

Also, if a worker is transferred from one depot to another depot, his Provident Fund account is not transferred accordingly. So one worker is having more than one Provident Fund account and the worker is at a loss to know the exact quantum of money deposited in his Provident Fund account.

Also quite a number of buses are taken out even without Fitness Certificates which very often results in accidents.

Though 8 or 10 buses are allotted in a particular route, only 5 or 6 buses are actually plying. This reduction makes over-crowding unavoidable.

Then, Sir, I want to refer to party politics which is playing havoc and I can prove it. 150 D.M.K. men attached to the D.M.K. Union are taking daily wages in the name of office duty. This is the complaint I have received. A sum of Rs. 5 lakhs is spent for these 150 D.M.K. men. I would like to know the exact position.

Then, non-D.M.K. daily wage earners have to wait at the depot from 4 a.m. to 5 p.m. without any guarantee for job. Most of the time they have to return back home without any job after spending the whole day.

I level another serious charge.

For the past three months route No. 551 (Madras to Nagercoil) bus is not being run. I have got facts and figures. Otherwise they would say

"எங்கே ஆதாரம் இருக்கிறது?"

Now I come to Transport workers. The way in which they are treated with contempt is something deplorable. They are treated with scant respect. I shall give one example. In Joint Director's order No. 10483-E3 72, dated 10th November 1972 Mr. D[illegible]n, Mr. Danish Lal and Mr. T[illegible]raj were transferred to Nagercoil from Madhavaram Depot (Memo. No. 3297 MVD 8 1972, dated 20th November 1972) and they were given advance also. According to the order, two of them reported for duty at Nagercoil. But do you know what happened at the other end in Nagercoil. The Nagercoil Officer refused to give them job. Immediately the Madhavaram office wrote to the two persons to report back to Madhavaram and they were informed they have to meet out the travelling expenses. That is what they were told. When they reported for duty at Madhavaram back, they were asked to sign a leave letter for 17 days. This is a glaring example of the slipshod manner in which the departmental officers function.

Now I come back to Kanyakumari district. In Padandalveedu there was a D.M.K. flag hoisting function. This is in Kanyakumari district. The place was opposite to Transport workshop. The Hon. Minister participated in that function. My contention is that all the necessary furnitures for the function were taken from the depot. Even for the flag post (iron) the iron pipes were taken out from the depot, even without a gate pass. Mr. D. S. Lingappan, a member of the D.M.K. was responsible for the entire thing.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : தலைவர் அவர்களே, இது போன்ற ஒரு வதந்தி நான் கன்னியாகுமரிக்குச் சென்றபோதுகூடச் சொன்னார்கள். ஆனால் அந்த இரும்பு பைப்கள் அவர்களே வசூலித்து வாங்கியதே தவிர, அங்கிருந்து எடுத்தவையல்ல.

<u>டாக்டர் எச்.வி. ஹாண்டே</u> : வதந்தி பரவிய பிறகு அதை வசூலித்துச் செய்திருப்பார்கள். அதற்காக நான் நன்றி செலுத்துகின்றேன். இருந்தாலும் அந்தக் குறை ஏற்பட்டது என்று ஒத்துக் கொள்வதற்காகவும் நான் நன்றி செலுத்துகிறேன்.

I am glad the Hon. Minister mentioned that there had been a rumour like that. My object is that he must tone up the administration. There is no use of saying we are here to help the workers but doing a different thing.

I shall give another instance. At the Coimbatore workshop 37 houses have been constructed for the workers and the other jobs including electricity connections were over three months back. But the houses are not yet let out to workers. I am told that the houses wait for the "thirappu vizha" by the Hon. Minister.

The present Depot Superintendent in Salem workshop was working as a general foreman in the same place. At the time of inspecting the spare parts godown, it was found that several thousand worth spare parts were missing. Immediately the store-keeper absconded.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கோயம்புத்தூரிலே கட்டப்பட்ட வீடுகளைப் பொறுத்தவரையிலே அது எனக்குத் தெரியும். வீட்டு வாடகைப் படியை இப்பொழுது அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த வீடுகளுக்கு வந்தால், வாடகைப்படியிலே சில சிக்கல்கள் ஏற்படும் என்பதனால், நாங்கள் பேசித் தீர்த்த பிறகுதான் அந்த வீடுகளுக்குச் செல்வோம் என்று தொழிலாளர்கள் கூறி, அதனால் தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேச்சு நடப்பதாக எனக்கு நினைவு. யாராவது போய், நல்ல நாள் பார்த்து திறக்க வேண்டுமென்பதற்காக அது நிறுத்தி வைக்கப்படவில்லை.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : தொழிற்சங்கத் தலைவரே தொலைபேசி மூலமாகச் சொன்னதற்காகத்தான் சொன்னேன். இன்னும் கொடுக்க வில்லை யென்று இரண்டு நாளைக்கு முன்னால் சொன்னார்கள். தொழிற் சங்கத்திலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் அதைச் சொன்னதனால் சொன் னேன். வாடகை சரியாக இல்லை யென்பதற்காகக் கொடுக்கவில்லையென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அவர்களே, ஞாபகத்திலே இருக்கி றது என்று சொல்கிறார்கள். ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து எதற்காகக் கொடுக்கப்படவில்லை என்று ஆலோசிக்கலாம்.

The store-keeper was working under the present Depot Superintendent when he was the general foreman. No action was taken against the Depot Superintendent but on the other hand he was given the promotion of Depot Superintendent from that of foreman overlooking the seniority of number of other employees. There cannot be a case of more gross-favouritism and rank nepotism than this.

(The gong was sounded).

I shall finish in two or three minutes. Before that let me mention the financial irregularities. We are tired of this. Something has to be done to set things right. I shall give examples of extra expenditure incurred because of financial irregularities. During 1968–70 the Tamil Nadu State Transport Department purchased "Dynamo and Starter Armatures" from the local firms (without calling for open tenders) though these were the Association of State Transport Undertaking, Bombay with two other firms (of Bombay). The prices payable under the rate contracts for each of the items of armatures ranged from Rs. 122·50 to Rs. 146 40 as against Rs. 325 to Rs. 340 paid by the Department. The extra expenditure incurred by the Department on the purchase of 1,167 dynamos and armatures outside the rate contract during September 1968 to January 1970 amounted to Rs. 1·55 lakhs.

There are number of irregularities. For want of time I have to skip through. Two ex-Ministers are there on this side and they know that up to a certain sum only, they can make purchases and if it is above a certain sum, you have to call for open tenders. But an ingenious method was invented and the thing was split up into three or four purchase orders each costing less than Rs. 5,000 and within that permissible limit, the purchases were effected without inviting open tenders. To obviate the necessity for inviting open tenders, purchase orders (total value : Rs. 31,997) were split up on a single day (the whole thing was done in a single day. What a hurry) to bring the value of each order within the limit of Rs. 5,000 prescribed for following the limited tender system! The purchase orders were placed on a single day through personal telephone enquiries over-riding financial rules. These irregularities still continue to exist. My scrutiny is up to July 1970. It starts from 1968 at the time when our present Chief Minister was also Transport Minister then. He bears direct responsibility (Thiru S. Kandappan : For how many years is the scrutiny ?) It is for past, present and future. This is only to expose irregularities so that the thing may not recur again.

Lot of avoidable expenditure is taking place because of poor maintenance. Whose money is this ? It is public money for which the Government is responsible. What is the norm for using lubricating oil? In 1964 Government fixed the following norms for consumption of lubricants by the vehicles in Transport Department :—

	Miles per litre.
Lubricating oil (engine oil)	100
H.S.D. oil —	
(a) City and suburban buses (Comet, Benz and Fargo).	2·4
(b) Express	2·75

In 7 out of 9 depots it was noticed that consumption of engine oil and high-speed diesel oil was in excess of the norms prescribed. The value of oil consumed in excess during 1967–68 to 1969–70 worked out to Rs. 8·13 lakhs.

*THE HON. THIRU S. RAMACHANDRAN : I would like to clarify one point ; in the matter of purchase of parts for bus or truck, the commercial view must be taken into consideration Suppose the part costs Rs. 150 or Rs. 200, if the bus cannot be run for want of the same, the revenue loss would be Rs. 500 or something like that. Similarly if a

spare part has to be purchased it has to be done taking the commercial view into consideration. It does not matter if the cost is something more, since we have to take into consideration the revenue loss if the bus if it did not run without that spare part on that day. Calling for tenders and purchasing is entirely different. The hon. Member wants the bus service to be run efficiently, then there is no point in saying that commercial view should not be taken and we have to invite open tenders and make purchase. If commercial outlook is taken, without loss of time, if the parts needed are procured and the bus run, then the hon. Member should have no grievance.

பிற்பகல் 1-00 DR. H. V. HANDE: I will answer that question. I am glad the Hon. Minister has fallen into my trap. That is why I did not disclose the source of my information. The objection raised is not mine. This is the audit objection and that is why I did not purposely tell from where it comes. I knew he will say like this.

(The Speaker's bell was sounded.)

I will finish in another one minute.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI): The time is already one O'clock.

DR. H. V. HANDE: I will finish. This is audit objection; it has been clearly taken into consideration that this is a commercial department and that the audit objection was raised and proper answers were not given by the department. It was raised in the Public Accounts Committee and it was not satisfied with the answers given and all these are on record. Does the Minister say that because it is a commercial enterprise, no audit is necessary? In private commercial enterprises the audit branch is the most effective.

Only in Government departments, the audit is liberal. But that is not the point. The point here is about loss for which the Minister should take the responsibility. I want to say that there was a 16 per cent loss in the trips for February 1973 and this 16 per cent loss is because of the mis-management of the department, because of the mis-management of the Ministry and indirectly because of the mis-management of the Government. Thank you.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த போக்குவரத்துத்துறை மானியத்தின்மீது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பல நல்ல கருத்துக்களை யெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றைப் பொறுத்தவரையிலும் ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்வது என்பது இயலாத காரியமாக இருந்தாலும் அந்தக் கருத்துக்களை யெல்லாம் நாங்கள் புறக்கணித்துவிட்டோம் என்று

மாண்புமிகு உறுப்பினர்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. எந்த எந்தக் கருத்துக்களுக்கு விடையிறுக்க முடியாத நிலை ஏற்படுகிறதோ அவையெல்லாம் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகவும் போக்குவரத்துத்துறையின் மூலமாகவும் கவனித்து ஆவன செய்யப்படும் என்ற வாக்குறுதியை நான் முதன்முதலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக இங்கே பேசிய உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு நான்கு தலைப்புகளின் கீழ் வருகின்ற வகையில் நான் என்னுடைய பதிலுரையை ஆற்றலாம் என்று நினைக்கிறேன். முதலாவதாக எல்லா வகை வண்டிகளையும் கண்காணிக்கும் அரசுப் போக்குவரத்துத்துறையைப்பற்றி, இரண்டாவதாக அண்மையிலே நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள் பற்றி; மூன்றாவதாக நாட்டுடைமையாக்கப்பட்ட அரசு போக்குவரத்துத்துறை, பல்லவன் போக்குவரத்துக் கழகம், இயங்குவதைப்பற்றி. நான்காவதாகத் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலே கொடுக்கிற நிலையைப்பற்றிச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

அரசுப் போக்குவரத்துத்துறையிலே நிர்வாகிகள் நல்ல முறையிலே செயல்பட வேண்டும். வண்டிகள் நல்லமுறையிலே சோதனை செய்யப்பட்டு விபத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும். விபத்துக்கள் நடந்தாலும் அந்த இடத்திற்கு வாகன ஆய்வாளர்கள் விரைவிலே செல்லவில்லை என்றும், அவர்கள் செல்ல வேண்டுமென்றும் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். கழக அரசைப் பொறுத்தவரையிலும் விபத்துக்களைத் தடுக்க வேண்டும் தவிர்க்க வேண்டும் என்பதிலே மிகுந்த கவனம் செலுத்தி அதற்காகப் பல நடவடிக்கைகளை ஆராய்ந்து படிப்படியாக மேற்கொள்ள இருக்கிறோம்.

முதலாவதாக, பொதுவாக வண்டிகளை ஓட்டுகின்ற ஓட்டுநர்கள் மிகுந்த சிரமங்களுக் கிடையே ஓட்டுகின்ற நிலைமை இருப்பதால் அவர்களை முறையாகப் பயிற்றுவிக்கின்ற நிலையங்கள் இல்லாத நிலைமை இருப்பதாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன, ஏற்படுகின்ற விபத்துக்களில் 50 சதவீதம் விபத்துக்கள் ஓட்டுநர்களால் ஏற்படுகின்றன என்பதை கணக்கெடுத்தபொழுது, கண்டோம். டிரைவர்கள் நல்ல பயிற்சி பெறுவதற்கு ஏற்ற வகையில் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துவதிலும், டிரைவர்கள் தங்களுடைய அனுமதிகளைப் பெறவருகின்றபொழுது அவர்களுக்கு வேண்டிய சோதனைகளை நல்ல முறையிலே செய்ய வேண்டும் என்பதிலும், அவர்கள் தங்களுடைய அனுமதிகளைப் புதுப்பிக்கின்ற நேரத்திலேயும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்ற நேரத்திலேயும் வண்டிகளை ஓட்டக்கூடிய அளவுக்குத் தேவையான உடல் நலத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்களா என்பதை பற்றிய தீவிரமான சோதனை மேற்கொள்ள வேண்டுமென்பதிலும் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வண்டிகள் பராமரிப்பைப் பொறுத்தவரையிலும் கூட தகுதிச் சான்றிதழ்கள், பிட்னஸ் சர்டிபிகேட் வழங்குகின்றபொழுது விதிக்கப்பட்டிருக்கின்ற முறைகளைத் தீவிரப்படுத்தலாம். ஒவ்வொரு ஆர். டி. ஓ. வாலும்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 மார்ச் 22

பிட்னஸ் சர்டிபிகேட் வழங்கப்படுகின்றபொழுது அவர்கள் தீவிரக் கண்காணிப்புடன் இருக்கவேண்டுமென்ற முறையிலேயும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன..........

திருமதி த. ந. அனந்தநாயகி: அரசாங்க பஸ்களைப் பொறுத்த வரையில் தான் எப். சி. பி. சி. இல்லாமல் ஓடுகின்றன, தனியார் நடத்துகின்ற பஸ்களில் அவை பெற்றுத்தான் ஓடுகின்றன. ஆனால் அரசாங்க பஸ்கள்தான் அவை இல்லாமல் ஓடுகின்றன என்று நீதி மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன பதில் சொல்லுகிறார்கள்?

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI): The hon. Member, Thirumathi Anandanayaki, can ask any clarification at the end.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசுப் போக்குவரத்துத் துறைக்கு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் பேருந்துகளை நாட்டுடைமையாக்கிவிடுவதால் அரசாங்கப் போக்குவரத்தில் பணியாற்றுகின்ற ஆர்.டி.ஓ. வாக இருந்தாலும் சரி, வாகன ஆய்வாளர்களாக இருந்தாலும் சரி, அந்தப் பணியிலிருந்து சுமை குறைகின்ற காரணத்தினாலே அவர்கள் போக்குவரத்து வசதிகளைப் பொறுத்த வரையில் தீவிர கவனம் செலுத்தும் வாய்ப்பு ஏற்படுகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலும் பல்வேறு வட்டாரங்களாகப் பிரித்து அந்த நடவடிக்கைகளையெல்லாம் அரசுப் போக்குவரத்துத் துறையிலே கொண்டுவரலாம் என்ற கருத்து பரிசீலனையில் இருக்கிறது. எப்படி மின்சார இலாக்கா பணிகளையும், மின்சார நிறுவனங்களின் காரியங்களையும் எலக்ட்ரிக்கல் இன்ஸ்பெக்டரேட் என்ற நிலையம் கண்காணித்து சான்றிதழ்களை வழங்குகின்றதோ அந்த முறையிலே தனியார் பேருந்துகளாக இருந்தாலும் சரி, அரசுப் பேருந்துகளாக இருந்தாலும் சரி, வேறு வண்டிகளாக இருந்தாலும் சரி, ஒரு சீரமைப்புச் செய்து போக்குவரத்துத் துறைமூலம் மேற்கொள்ள இருக்கிறோம். கூடிய சீக்கிரமாக அதற்கான நடவடிக்கைகளை எடுக்கப் போகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேருந்துகளை நாட்டுடைமையாக்குகின்ற பொழுது லாரிகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கருத்தை திரு. சுரேந்திரன் அவர்கள் சொன்னார்கள். நாட்டுடைமைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல் இந்த அரசு படிப்படியாக ஆனால் அதே நேரத்திலே உறுதியாகக் கொள்கைகளை நிறைவேற்றி வருகிறது என்பதை கடந்தகால காரியங்களைப் பார்த்தாலே புரியும். பேருந்துகளை முழுமையாக எடுத்து செயல்படாத நிலைமையிலே நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளைப் பொறுத்த வரையில் நிர்வாகத்தைச் சீர்படுத்திவிடுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறவரையில் மேலும் மேலும் லாரிகளையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கருத்துக்கு இப்பொழுது அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

1973 மார்ச் 22] [திரு. ச. இராமச்சந்திரன்]

திரு. மா. வே. நாராயணசாமி அவர்கள் பேசுகின்றபொழுது வாடகை வண்டிகளை ஓட்டுநர்களுக்கு அந்த வண்டிகள் உரியதாக ஆக்குகின்ற வகையிலே சட்டம் கொண்டுவர வேண்டுமென்றும் அதற்காக ஒரு தனி வாரியம் ஏற்படுத்த வேண்டுமென்றும் எடுத்துச்சொன்னார்கள். அத்தகைய உத்தேசம் இப்பொழுது அரசாங்கத்திற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பல பேர்கள் பஸ்களையெல்லாம் ஏன் ஒரே வேளையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். எப்பொழுது எடுக்கப்போகிறோம் என்று தெரியாமல் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருப்பதற்குப் பதிலாக ஒரேயடியாக எடுத்துத் தொலைத்துவிடலாமே என்று பஸ் முதலாளிகள் பாதையில் சொன்னார்கள். பஸ்கள் நாட்டுடைமையாக்க படுகின்ற சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டபொழுது தெளிவாக விளக்கங்கள் சொல்லப்பட்டுவிட்ட காரணத்தினால் இப்பொழுது ஒருமுறை மீண்டும் விளக்கங்கள் தரவேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேருந்துகளை நாட்டுடைமையாக்கியதைப் போன்று அந்தத் தொழிலுக்கு தேவையான துணைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், அடிப்படைகளை (சேஸிஸ்) தயாரிக்கும் தொழிற்சாலைகள், அசோக் லேலண்ட் தொழிற்சாலை, பெரிய பணிமனைகள் இவற்றையெல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பஸ் போக்குவரத்துத் துறையை நாட்டுடைமையாக்குவதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையே தவிர யார் யார் தொழில் நடத்துகிறார்கள் என்று பார்த்து அவற்றையெல்லாம் கபளீகரம் செய்யக்கூடிய கொள்கையல்ல. டயர் செய்கின்ற தொழிற்சாலைகள், டி.வி.எஸ். நிறுவனங்கள், இண்டியா பிஸ்டன்ஸ், அசோக் லேலண்ட் போன்ற பெரிய தொழிற்சாலைகளை எடுத்துக் கொள்வதிலே அரசு முனைந்தால் போக்குவரத்துத் துறையிலே முழுக் கவனத்தையும் செலுத்தமுடியாத நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையினாலே இந்த அரசு போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையிலே நான் இந்தக் கருத்தை முதன் முதலில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்தைப் பற்றிப் பேசுகிற போது ஒன்றை மனதில் வைத்துக் கொள்வது மிகுந்த பலனைத் தரும் என்று கருதுகிறேன். பொதுவாக இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டவுடனேயே நாட்டிலே என்ன சூழ்நிலை இருந்தது என்பதை மறந்து விடக் கூடாது. பஸ்களை ஓட்டுவதற்கான துணைப் பொருள்களை சிம்சன் குரூப் கம்பெனியிலிருந்து, அசோக் லேலண்டு கம்பெனியிலிருந்து, மெட்ராஸ் ரப்பர் ஃபேக்டரியிலிருந்து, டன்லப் டயர் கம்பெனியிலிருந்து, அதேபோல பல்வேறு கம்பெனிகளிலிருந்து நாம் பெற்றால் தான் இந்தப் போக்குவரத்துத் துறையை செம்மையாக நடத்த முடியும்.

ஆனால் இங்கே ஏற்பட்ட பல தொழில் தகராறுகளின் காரணமாக அவர்களிடையே ஏற்பட்ட பூசல்களின் காரணமாக பெரும்பாலான தொழிற்சாலைகள் கடந்த ஆண்டு கடுமையான சோதனைக்கு ஆளாகி இருந்தன.

வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. இந்த சூழ்நிலைகளைப் பார்க்கிறபோது இந்தச் சூழ்நிலையிலும் போக்குவரத்துக் கழகங்கள் பொதுமக்களுக்குத் தேவையான இந்த வசதியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்களே என்பதைப்பார்க்கிற போது நாம் பாராட்டக் கடமை பட்டிருக்கிறோம்.

அதோடு மட்டுமல்ல, பணி மனைகளிலிருந்து அப்படியே பஸ்கள் வெளியே போனாலும் வெளியே போகிற பஸ் திரும்பி வந்து சேர்ந்தால் தான் நிச்சயம் என்ற சூழ்நிலையும் நாட்டில் கிளர்ச்சிகளால் ஏற்பட்டது என்பதை மறந்து விடக் கூடாது. கல் எறிவதும், கலவரங்கள் செய்வதும், பஸ்களைத் தீயிட்டுக் கொளுத்துவதும், இதே போலத் தொழிலாளர்களைத் துன்புறுத்துவதும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருந்தன. மன நிறைவோடு பணியாற்றுவதற்குத்துணைப் பொருள்கள் இல்லாத தொழில் நுட்பத் தொழிலாளர்கள்ஒருபுறம், வெளியே பஸ்ஸை எடுத்துச் சென்றால் திரும்ப வந்து சேருகிற வரையிலே அவர்களுக்குப் பல்வேறு இடைஞ்சல் இருக்கக்கூடிய நிலையில் போக்குவரத்துத்தொழிலாளர்கள் மறுபுறம்,இந்த சூழ்நிலைகளுக்கிடையே தொழில் நுட்ப பணியாளர்களும், போக்குவரத்துப் பணியாளர்களும் மிகுந்த சிரமத்திற்கிடையே பணியைத் தொடர்ந்து கடந்த ஒரு ஆண்டாக ஆற்றி ஏற்கெனவே இருந்த நஷ்டத்தையெல்லாம் தவிர்த்து ஒரு நல்ல சுமூகமான நிலைமையை உருவாக்க முடியுமென்று நம்பிக்கைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நாமெல்லாம் மனதார அந்தத் தொழிலாளர்களைப் பாராட்ட வேண்டாமா. அப்படி பாராட்டுவதன் மூலம் தான் உண்மையாகவே உழைப்பிற்கு உயர்வு தந்தவர்களாவோம் என்பதைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். எனக்கே கூட வருத்தம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் மாண்புமிகு தோழர் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது பேருந்திலே செல்கிற கண்டக்டர் ஏதோ போலீஸ் ஆபீசர் போல இருக்கிறார், அங்கே செல்கிற பயணிகள் பயந்து கொண்டு செல்கிறார்கள் என்ற கருத்தினை வெளியிட்டார்கள்.

தொழிலாளர்கள் எத்தகைய சூழ்நிலைகளில் எத்தகைய இன்னல்களுக்கு இடையே, உயிரைப் பணயம் வைத்து பொது மக்களுக்குத் தேவையான இந்த பஸ் சர்வீசானது நின்று விடக் கூடாது என்பதிலே எவ்வளவு கவனமாக இருந்தார்கள் என்பதைப் பார்க்கிற போது தான், அவர்கள் இந்த இடையூறுகளுக்கிடையே நாட்டுடைமையாக்கப்பட்ட கழகங்களை நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு பணியாற்றினார்கள் என்பதைப் பார்க்கிற போது தான் உண்மையில் நாம் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். எல்லாம் நன்றாக நடந்து, நமக்கு வேண்டிய பொருள்கள் கிடைத்து, பணி மனைகளில் வேலை நன்றாக நடந்து, பஸ்கள் வெளியே நல்ல முறையில் சென்று வரக் கூடிய சூழ்நிலை இருந்தால் இன்னும் பல மடங்கு நல்ல பலன்களைப் பெற்றுத் தருவார்கள் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டு என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த சூழ்நிலைகளுக்கிடையே இப்படியெல்லாம் நிலைமைகள் இருந்தும் கூட நாட்டுடைமையாக்கப்பட்ட கம்பெனிகளுடைய போக்குவரத்துக் கழகங்களை எடுத்துப் பார்ப்போமானால் நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகளைத் தர முடியும். ஆனால் இவற்றைப் பற்றி நீண்ட நேரம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அண்மையில் அண்ணா போக்குவரத்துக் கழகம் சேலத்தில் துவங்கப்பட்டு 50 பேருந்துகள் இப்போது இயங்கி வருகின்றன. இயங்க ஆரம்பித்தவுடனேயே ஒரு பஸ்ஸைப் கொளுத்தி விட்டார்கள் என்பதைத் தெரிவிக்கக் கடமைபட்டிருக்கிறேன்.

சேரன் போக்குவரத்துக் கழகம் நீலகிரி மாவட்டத்தையும் சேர்த்து இப்போது கிட்டத்தட்ட 316 பேருந்துகள் வைத்துக் கொண்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. அதே போல பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இயங்கி வருகிறது.

இவைகளையெல்லாம் சொல்கிற போது மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொன்னார்கள். தனியாக ஒரு பஸ் வைத்து நடத்துகிறவருக்கு 20 ஆயிரம் ரூபாய் வருகிறது என்று சொன்னார்களே, இவ்வளவு பஸ்களை வைத்து நடத்துகிறீர்களே, உங்களுக்கு எவ்வளவு ரூபாய் வந்தது என்று அவர்கள் ஒரு நல்ல கேள்வியினைக் கேட்டார்கள். நானும் கூட யோசித்துப் பார்த்தேன். இந்த 20ஆயிரம் ரூபாய் ஒரு பஸ் நடத்தினால் வருகிறது என்று சொன்னது நாங்கள் அல்ல. ஒரு பஸ்ஸின் சொந்தக்காரர் ஒருவர் கோர்ட்டில் தாக்கல் செய்திருந்த விண்ணப்பத்தில் இதைக்குறிப்பிட்டுள்ளார். ஆகையினாலே சொன்னது அவர்கள். ஆனால் அதே நேரத்தில் சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூன்று போக்குவரத்துக் கழகங்களை எடுத்துப் பார்க்கிற போது கடந்த ஆண்டினுடைய நிலவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். நாம் சில வழித் தடங்களில் பேருந்துகளை ஓட்டினால் வருமானம் கிடையாது, நஷ்டம் தான் வரும் என்ற நிலைமையிலும் சமுதாய மக்களுக்கு சேவை செய்யவேண்டும். என்ற உணர்விலே இந்த வழித் தடங்களுக்கு நாம் பஸ்களை அனுப்பியதன் காரணமாக நமக்கு இந்தப் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்டிருக்கிற நஷ்டம் எவ்வளவு என்றால் 57 லட்சம் ரூபாய். இதே போல ஆங்காங்கே கிளர்ச்சிகளுக்கும், மற்றவைகளுக்கும் ஈடுகட்ட வேண்டிய வருவாய் இழப்பினாலும் 86 லட்சம் ரூபாய் நஷ்டம். ஆகையினாலே இவையெல்லாம் போக இதிலே நாம் எடுத்துப் பார்க்கிற போது கிட்டத் தட்ட 1½ கோடி ரூபாய்க்கு வருமானத்திலே செலவு போக நிகர வருவாயாக, கிடைத்துள்ளது. டெப்ரிசியேஷன் போடுவதற்கு முன்னால் கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாய் பெற்றிருக்கிறோம். வேண்டுமென்றே பொது மக்களின் நன்மையை உத்தேசித்து பஸ்களை விடுவதில் ½ கோடி ரூபாய் இழப்பு, இதில் கிளர்ச்சிகளில் ஏற்பட்ட நஷ்டத்தை எடுத்துக் கொள்ளவில்லை. ஏனென்றால் அவைகளை இந்த நாட்டில் அளிக்கப்பட்டிருக்கிற உரிமைகள் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும் கூட இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு நாம் பெற்றிருக்கிறோம்.

இதிலே ஒட்டப்பட்ட மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,025, 1,025 வண்டிகளை 20 ஆயிரம் என்ற கணக்கில் பெருக்கினால் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கிட்டத் தட்ட சரியான கணக்கைத்

தந்திருக்கிறார் என்பதை நாமெல்லாம் உணர்ந்து அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் போக்குவரத்துக் கழகங்கள் நடக்கிற முறையில் நாம் ஏற்படுத்தியிருக்கிற மாற்றத்தின் மூலம் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை போக்குவரத்துக் கழகங்கள் நிரூபித்துக் காட்டுகின்றன என்பதற்காகச் சொல்கிறேன்.

இந்த போக்குவரத்துக் கம்பெனிகள் தனியாரிடமிருந்து எடுத்து, அவர்களுக்கு நஷ்ட ஈடு தருவது என்று பார்க்கும்போது இப்படி எடுத்த பஸ்கள் மூலம் சம்பாதித்த பணத்திலிருந்து 36 லட்ச ரூபாய் நஷ்ட ஈடாகக் கொடுத்திருக்கிறோம். இந்திய வரலாற்றில் இதைப் போன்று பொதுத்துறை செய்தது என்பதற்கு இன்னும் தகவல் இல்லை. யாரேனும் தகவல் இருந்தால் தரலாம். நாட்டுடமையாக்கப்பட்ட தொழிலில், அந்தத் தொழிலில் சம்பாதித்து ஒரு ஆண்டுக்குள்ளே நஷ்ட ஈட்டிடிலேயும் ஒரு பகுதி கிடைக்கிற அளவிற்கு ஒரு தொழில் லாபகரமாக பொதுத் துறையில் நடந்திருக்கிறதென்றால், நான் பெருமைக்குச் சொல்லவில்லை—இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களின் கவனத்திற்காகச் சொல்கிறேன்—தமிழ் நாடு இந்தப் பெருமையைத் தட்டிப் பறித்துக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது.

அதே போல அரசாங்கப் போக்குவரத்தையும், சென்னை மாநகரப் போக்குவரத்தையும், இரண்டையும் எடுத்துக் கொள்வோமானால் கடந்த ஆண்டு நமக்கு கிட்டத் தட்ட 122 லட்ச ரூபாய் நஷ்டம் வரும் என்று கணக்கிட்டோம். ஆனால் பல்லவன் போக்குவரத்துக் கழகம் என்று ஏற்படுத்தி, அதை தனி அமைப்பாக ஏற்படுத்தி விட்டு, மீதிப் பேருந்துகளை அரசுப் போக்குவரத்துத் துறைக்கு ஆக்கியதன் பிறகு இன்றைக்கு அரசுப் போக்குவரத்துத் துறையிலே 90 லட்ச ரூபாய் லாபம் வரும், அதே போல பல்லவன் போக்குவரத்துத் துறையிலே 85 அல்லது 90 லட்ச ரூபாய் நஷ்டம் வரும். ஏற்கெனவே இரண்டும் ஒன்றாக இருந்த போது 1½ கோடி ரூபாய் நஷ்டம் வந்தது. அதில் மேற்கொண்ட நிர்வாக சீர்திருத்த அமைப்புகளின் காரணமாகவும் பல்வேறுமாற்றங்கள் காரணமாகவும் இப்போது 1½ கோடிரூபாய் இழப்பீட்டை சரிக்கட்டி இப்போது நம் கையைக் கடிக்காத அளவிற்கு இரண்டும் ஒன்றை ஒன்று சரிக் கட்டிக் கொள்ளக் கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது.

அரசுப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் விரைவுப் பேருந்துகள் நல்ல முறையில் இயங்கவேண்டும், பிரேக் டௌன் ஆகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும், அப்படி பிரேக் டௌன் ஆனாலும் வேறு பஸ்ஸை அங்கே அனுப்பவேண்டும். அதற்கு கம்பி இல்லா தந்தி வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசாங்கத்தில் முயற்சிகளை மேற்கொள்ளும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களும் அதே போல திருமதி அனந்தநாயகி அவர்களும் இன்னும் மற்றவர்களும் பேசினார்கள்.

மாநகரப் போக்குவரத்தைப் பொறுத்தவரை சில விவரங்களை முதலில் சொல்லுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் போல்தானே பல்லவன் போக்குவரத்துக் கழகமும், அதிலே ஏன் லாபம் வரக்கூடாது என்று நினைக்கத் தோன்றும். உண்மை நிலை என்ன என்று பார்க்க வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்தை எடுத்துக் கொண்டால் நான்கு பெரிய நகரங்கள் இருக்கின்றன. கல்கத்தா, டில்லி, பம்பாய், சென்னை ஆகிய நான்கு நகரங்கள் இருக்கின்றன. கல்கத்தா நகரத்தை எடுத்துக் கொண்டால் பீகார், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களுடைய மக்கள் தொகையின் முன்னேற்றம் கல்கத்தாவிற்கு வரும். உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களுடைய நெருக்கம் டில்லியில் வந்து சேரும்.

மேற்கு இந்தியாவை எடுத்துக் கொண்டால் குஜராத், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களுடைய மக்கள் தொகை நெருக்கம் பம்பாயைச் சாரும். அதே போல் சென்னை நகரம் என்று எடுத்துக் கொள்ளும் போது அது தமிழகத்திற்கு மட்டுமல்ல, தென் மாநிலங்களுக்கு, ஆந்திரம், கேரளம், கர்நாடகம், தமிழகம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கும் அது தலைமை இடமாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல் துறைமுக நகரமாக சென்னை நகரம் இருக்கிறது. அது மட்டுமல்லாமல் தொழில் நகரமாகவும் சென்னை நகரம் இருக்கிறது. அது மட்டுமல்லாமல் வணிக நகரமாகவும் சென்னை நகரம் இருக்கிறது.

சென்னை நகரத்தின் வளர்ச்சியைப் பற்றிச் சொல்லும் போது நான் ஒரு விகிதத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

1961-க்கும் 1971-க்கும் இடையே பொதுவாக மக்கள் தொகைப் பெருக்கத்தை எடுத்துக் கொண்டால் 44 கோடியிலிருந்து 55 கோடி அளவுக்கு 24½ சதவிகிதம் வளர்ந்திருக்கிறது. நகர்வாழ் மக்கள், ஊர்ப்புறங்களிலிருந்து நகரங்களுக்குச் செல்லுகின்ற மக்கள் தொகை எந்த அடிப்படையில் வளர்ந்திருக்கிறது என்றால் 79 லட்சத்தில் இருந்து 1 கோடி 9 லட்சம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட 38 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. பொதுவான மக்கள் தொகை பெருக்கம் 24 சதவிகிதம். நகர்வாழ் மக்கள் தொகைப் பெருக்கம் 38 சதவிகிதம். இதைப் பொறுத்து நம்முடைய தலை நகரமான சென்னை என்ன நிலைமையில் இருக்கிறது என்றால் 1961-ல் 17·3 லட்சமாக இருந்தது, இன்றைய தினம் 25 லட்சமாக உயர்ந்திருக்கிறது. இது 42½ சதவிகிதம் உயர்வு.

அகில இந்திய சராசரியை விட சென்னை மாநகரத்தில் மக்கள் தொகை அதிகரிப்பு சதவிகிதம் அதிகமாக இருக்கிறது. அதிலே, புறநகரப் பகுதிகளையும் சேர்த்துக் கொள்வீர்களானால், திருவொற்றியூர், எண்ணூர், ஆவடி, அம்பத்தூர், கிண்டி என்று இவற்றை எல்லாம் சேர்த்துப் பார்க்கும்போது கிட்டத்தட்ட 31·69 லட்சம் மக்கள் இங்கே வாழ்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் சென்னை நகரம் என்று சொல்லும்போது இங்கிருக்கும் மக்கள் தொகை மட்டுமல்லாது வந்து போகிற மக்களும் இருக்கிறார்கள். அவர்கள்தான் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பயணங்களை அதிகரித்துக் கொண்டிருப்பவர்கள். அந்தக் கணக்கு ஆறு லட்சம் என்று பார்க்கிறபோது மொத்தம் 38 லட்சம் மக்கள் புழங்க வேண்டிய சூழ்நிலை சென்னை நகரத்திற்கு இருக்கிறது.

போக்குவரத்து வண்டிகள் விகிதம் எந்த அளவுக்குப் போயிருக்கிறது என்பதையும் சொல்ல விரும்புகிறேன். 1961-ல் மொத்த வண்டிகள் சைக்கிள் அல்லாமல் பேருந்துகள், லாரிகள், ஸ்கூட்டர்கள், கார்கள், வாடகைக் கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள் எண்ணிக்கை 1961-ல் 21,046. இன்றையதினம் அந்த எண்ணிக்கை 52,212. கிட்டத்தட்ட 250 சதவிகிதம் வளர்ந்திருக்கிறது. இப்படி வண்டிகளின் எண்ணிக்கை 250 சதவிகிதம் வளர்ந்திருப்பதுபோல் வண்டிகள் போகக்கூடிய நெடுஞ்சாலைகள் 250 சதவிகிதம் வளர முடியுமா என்று பார்க்க வேண்டும்.

தனியார் வண்டிகளை எடுத்துக் கொள்வோமானால் ஸ்கூட்டர், கார் இவற்றின் எண்ணிக்கை 1961-ல் 4,000 ; 1971-ல் 18,745. இதை நான் என் சொல்லுகிறேன் என்றால் மக்கள் தொகை பெருக்கம் 50 சதவிகிதம், வண்டிகள் பெருக்கம் 250 சதவிகிதம். விளைவு என்ன நிலைமைக்குக் கொண்டு வருகிறது என்றால் சராசரி வேகம் நெரிசல் நேரங்களில் 9-ல் இருந்து 12½ மைல் வேகந்தான். இந்தச் சூழ்நிலையில் நெரிசல்நேரத்தில் மேலும் பேருந்துகளைவிட்டால்—200 பஸ்களை அதிகமாக விடுவது பெரிய காரியமல்ல. மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் சொல்லி 200 பஸ்களுக்கு நிதி ஆதாரத்தைத் தேடச் சொல்லிவிடலாம்—வேகம் குறைந்து பேருந்திலே செல்லுவதை விட நடந்து சென்று விடலாம் என்று எண்ணக்கூடிய சூழ்நிலையைத்தான் தோற்றுவித்து விடும்.

மாநகங்களில் பேருந்துகளை இயக்குவது என்பது தனிப்பட்ட பிரச்சினை அல்ல. மாநகரத்தின் பிரச்சினை, மாநகர வளர்ச்சியின் பிரச்சினை. சென்னை மாநகரத்தை எடுத்துக் கொள்வோமானால் நீர் வழித்தடங்கள் இருக்கும் குறுகிய பாலங்கள், ரயில்வே கிராசிங்குகள் இருக்கின்ற நிலையில் நாம் மேலும் பேருந்துகளை அதிகப்படுத்துவதன் காரணமாகப் பிரச்சினையைத் தீர்த்துவிடமுடியும் என்று கருதுவோமானால் நிச்சயமாகப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆனால் இந்தப் பிரச்சினைத் தீர்க்க நிரந்தரமான பரிகாரம் என்ன என்று கணக்கிட்டுப் பார்ப்போமானால் அண்டர் கிரவுண்ட் ரயில்வே— Mass Rapid Transport System— வந்தால்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அதைத் தள்ளிப் போடுவதில் பயன் இல்லை. புண்ணுக்குக் புனுகு தடவுவதுபோல் வண்டிகளை அதிகப்படுத்திப் பயன் இல்லை. ஆகவே, நெரிசல் நேரங்களில் அதிக பஸ்களை விடுவது நிச்சயமாகப் பலன் தராது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, மத்திய சர்க்கார் இப்போதே அந்த அண்டர் கிரவுண்ட் ரயில்வேத் திட்டத்தை ஆரம்பிப்பார்களானால்தான். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களானால் தான் சென்னை நகரத்தை வளர்ச்சிபெற்ற நகரமாக மட்டுமல்ல, அழகான நகரமாகவும் வைத்துக்கொள்ள முடியும். இதே நிலை நீடித்தால்

இன்னும் போகப் போக சங்கடமான சூழ்நிலை தான் வரும். நகரங்கள்தான் நாகரிகத்தின் பிறப்பிடம். வெளி நாட்டுக்காரர்கள், வேறு நாட்டுக்காரர்கள் வந்து பார்க்கும்போது நகரம் எப்படி இயங்குகிறது என்பதைப் பார்க்கையில் நகரத்திலுள்ளவண்டிகளின்தனிமையைப்பார்க்கும்போதுதான் நம்முடைய வாழ்க்கை முறையைப் பற்றித் தெரிவிப்பதாக அமையும். Cities are windows of our civilisation என்று சொல்வார்கள். அந்த வகையில் பார்க்கும்போது மத்திய அரசும் சரி, சம்பந்தப்பட்ட மாநில அரசுகளும் சரி சிந்தித்துப் பார்த்து நீண்ட காலத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் வரையில் இதை இப்படியே விட்டு விடுவதா என்றால் நிச்சயமாக நான் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேன். அரசாங்கப் போக்குவரத்துத் துறையின் மூலம் எவ்வளவுக்கெவ்வளவு பேருந்துகளை நல்ல முறையில் இயக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவற்றை எடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

மாநகரப் பேருந்து நிறுவனத்தைப் பொறுத்தவரை உலக வரலாற்றிலேயே மாநகரப் பேருந்துகள் லாபத்தைத் தந்ததாக இல்லை. அதே நேரத்தில் லாபத்தைத் தரவில்லை என்பதற்காகக் கட்டணத்தைக் கூட்ட முடியுமா என்று பார்த்தால் முடியாது. மாநகரங்களில் பயணம் செய்கின்றவர்களுக்கும், மற்ற இடங்களில் பயணம் செய்கின்றவர்களுக்கும் வேறுபாடு உண்டு. மாநகரத்தில் அன்றாடம் பயணம் செய்ய வேண்டுமென்ற நிலையில் உள்ள தொழிலாளர்கள், அலுவலர்கள் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கட்டணத்தை உயர்த்தினால் மாதம் முழுதும் அவர்கள் பயணம் செய்வதன் மூலம் வாழ்க்கைச் செலவில் பெரும் பகுதியை அதற்காகச் செலவழிக்க வேண்டி வரும். ஆனால் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குச் செல்பவர்கள் எப்போதோ பொருள்கள் வாங்கச் செல்பவர்கள். ஆகவே, மாநகரத்தில் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்ற கருத்தை நிச்சயமாக நாம் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

அதே நேரத்தில் ஒரு நிறுவனம் நட்டத்திலேயே தொடர்ந்து நடந்தால் அந்த நிறுவனம் என்ன ஆகும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். புதிய பேருந்துகள் போடவும், பராமரிக்கவும், துணைப் பொருள்களைச் சேகரித்துச் செம்மையாக்கவும் போதிய நிதிவசதி இல்லாவிட்டால் நிச்சயமாக அதிலே கஷ்டங்கள்தான் வரும்.

இதை எல்லாம் உணர்ந்துதான் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மார்ச் மாதம் 1970ம் ஆண்டு "மாநகரங்களுக்குக் கணிசமான நிதி உதவி செய்ய வேண்டும்; அதைப்பற்றி ஒரு அறிக்கையைக் கொடுக்க வேண்டும்" என்று திட்டக் குழுவைக் கேட்டிருந்தார்கள். திட்டக் குழுவும் ஒரு செயற்குழுவை நியமித்து உடனடியாக செப்டம்பர் 1970ல் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"In order to make life of the workers and middle classes in urban areas a little easier, the Prime Minister had indicated that it was necessary to evolve urgently an integrated approach to the problems of public transport and that a time-bound programme should be drawn up to improve public transport services in metropolitan cities".

பிற்பகல் 1-30 இந்த இந்தக் காலத்தில் இன்ன இன்னது செய்யப் போகிறோம் என்று குறிப்பிட்டு அவற்றை நிறைவேற்ற வேண்டுமென்று பிரதமர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குழு அதை நன்கு பரிசீலித்து மத்திய அரசும் மாநில அரசும் சில உதவிகளைச் செய்ய வேண்டுமென்று பரிந்துரை கொடுத்திருக்கிறார்கள்.

மாநில அரசைப் பொறுத்தவரையில் கொடுக்கிற பணத்திற்கு குறைந்த வட்டி வாங்குவதில் அவர்கள் உதவி செய்யலாம். மத்திய அரசைப் பொறுத்த வரையில் டீசல், டயர், ட்யூப் போன்றவற்றிற்கு விதிக்கிகும் வரிகளிலிருந்து விலக்களிக்கலாம் என்று பிரதமர் அவர்களால் நியமிக்கப்பட்ட ப்ளானிங் கமிஷன் வொர்க்கிங் க்ரூப் பரிந்துரை வழங்கியிருக்கிறது. அதற்கேற்றபடி நம் அரசு, சாதாரணமாக கடன் கொடுக்கும் போது எட்டு சதவிகிதம் வட்டி வாங்குகிறோம்.

ஆனால் சென்னை மாநகர கழகப் போக்குவரத்துக்கு 6 சதவிகிதம் என்ற அளவிற்குக் குறைத்திருக்கிறோம். வேறு இனங்களில் எதாவது குறைக்கலாமா என்ற ஒரு நிலையும் இருக்கிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில் செப்டம்பர் 70-ல் அறிக்கைகொடுத்து, டைம் பௌண்ட் ப்ரோகிராம் என்று எடுத்துச் சொல்லியும் கூட இன்னும் ஒவ்வொரு செகரட்டேரியட் ஆபீஸ்க்கும் போய் கொண்டிருக்கிறதே தவிர எந்த விதமான முடிவிற்கும் வரவில்லை. கிட்டத்தட்ட ஒரு பஸ்க்கு ரூ 16,000 வரையில் மத்திய அரசு வரியாகப் போடுகிறது. டீஸல் ஆயிலுக்கு மட்டும் ரூ. 11,000. டயருக்கு போடும் வரி ரூ. 4,000.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

இதுபோன்று மற்ற இனங்கள் எல்லாம் சேர்ந்து ரூ. 16,407க்கு வருகிறது. இது ப்ளானிங் கமிஷன் வொர்க்கிங் க்ரூப் போட்டகணக்கு. இந்தப் பணத்தை மாநகரங்களில் ஓட்டுகிற பேருந்துகளுக்கு திருப்பிக் கொடுத்து விடுவது நல்லது என்று அந்தக் குழு அறிவித்த அறிக்கையின் படி டெல்லி வட்டாரத்திலிருந்து எந்தவிதமான பலனும் பெறவில்லை. இது சம்பந்தமாக நான் டெல்லியில் உள்ள போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் கடிதம் எழுதினேன். The matter is still under the active consideration என்றுதான் பதில் வந்தது.

இதை நான் கூறும் காரணம் என்னவென்றால், பிரதமர் அவர்கள் எவ்வளவு அவசரப்பட்டார்களோ அதே அவசரத்தை இன்னும் மத்திய அரசு இதில் காட்டவில்லை என்பதால் நாம் கஷ்டப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அதோடு மட்டுமல்ல, அந்த வகையில் ஏறக்குறைய ஒன்றரைக் கோடி ரூபாய் அங்கிருந்து நமக்குக் கிடைக்கும். ஹாண்டே அவர்கள் சொன்னதுபோல், திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள், காத்துக் காத்து இருப்பது கஷ்டமாகயிருக்கிறது. மாறுவேடத்தில் வாருங்கள் என்று எனக்கு மாறுவேடமும் தேவையில்லை. மாறுவேடமும் தேவையில்லை. இருக்கிற ஒரே வேடம் போதும். அது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு மிகப் பெரிய பேருதவியாக இருக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது. அந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.

"Public Transport Undertakings have to operate services according to set standards of safety, continuity, regularity and capacity and keep pace with technical progress. They have to operate even on unprofitable routes and at fares fixed by authority, contrary to the commercial interests of the Undertakings. The undertakings are also required to offer concessions in fares to students, etc.

In other words, profitability considerations have to be eschewed in public interest. It is, therefore, not unreasonable for transport undertakings to expect relief from public taxes in view of their public service functions and the considerable general interest in low fares. The tax policy in regard to metropolitan transport services needs to be reviewed, especially because these undertakings have been operating at a considerable loss for many years".

ப்ளானிங் கமிஷன் செயற்குழு நல்ல முறையில் அதை எடுத்துச் சொல்லியிருக்கிறது. மாநகரங்களில் நடக்கிற போக்குவரத்திற்கு நாம் மானியம் கொடுத்துத்தான் நடத்த வேண்டும், மானியம் கொடுத்தால் தான் நடத்த முடியும், அதை ஒரு மர்ஷியல் அண்டர்டேக்கிங்காக கருதுவதை விட மக்களுக்கு நன்மை செய்ய ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்று கருதவேண்டுமென்று அழகாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியோடு நேரத்தை சற்று நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: லண்டன் போக்குவரத்துக் கழகத்தில்கூட நீண்ட காலமாக இதை அமல் படுத்தி வருகிறார்கள். உண்மையில் நம் பிரதமர் ஸ்டாக்ஹோமில் நடந்த பொல்யூஷன் பற்றிய செமினாரில் பேசும்போது, கலந்துகொண்டார்கள் அங்கே தரப்பட்ட

A Report on the human Habitat.

Presented in January 1972 to the Secretary of State for the Environment The Right Honourable Peter Walker, MBE, MP.

என்ற அறிக்கையில் பிரதமர் கலந்து கொண்ட மாநாட்டில், எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

"The Government should accept the principles of public subsidy of public transport. Only if public transport undertakings receive suitable funds for development can they continue to play their part in holding down the social costs of urban congestion."

ஆக, அவர்கள் நியமித்த அந்தக் குழு அளித்துள்ள பரிந்துரைகளை உடனே செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென் மாநில அமைச்சர்கள் மாநாட்டில நடந்த விவாதத்தில் பத்து லட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்களுக்கு எல்லாம் இந்தச் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளோம். பத்து லட்சத்திற்கு மேற்கொண்ட மக்கள் தொகை உள்ள நகரங்கள் அங்கு இல்லை என்றிருந்தாலும் சென்னை நகரத்திற்கு இதைக் கொடுத்தால் போதும் என்ற நல்லெண்ணத்தில் தென் மாநிலங்களில் உள்ள நான்கு அமைச்சர்களும் இதுபற்றி ஏற்கனவே தீர்மானம் செய்து அனுப்பினோம்.

அண்மையில் நடந்த அகில இந்திய போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டில்கூட இதுபற்றித் தெரிவிக்கப்பட்டது. மத்திய அரசின் போக்குவரத்துத்துறையைப் பொறுத்தவரையில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்திய பிரதமர் அவர்கள் கவனம் செலுத்தி இந்த உதவியை சென்னை மாநகரத்திற்கு செய்யவேண்டிய கடமையைப் பெற்றிருக்கிறார்கள். ஏனென்றால் இந்தக்கால தாமதத்திற்கு வேறு ஒரு காரணம் இருக்கமுடியுமோ என்ற ஒரு ஐயம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. மாநகர போக்குவரத்துக்கு உதவி செய்ய வேண்டுமென்று குழு போட்டது டெல்லிக்கு உதவி செய்தால் போதும், மற்ற நகரங்களுக்கு தேவையில்லை என்ற நிலை வந்துவிடுமோ என்று அஞ்சவேண்டியவர்களாக இருக்கிறோம். டெல்லியைப் பொறுத்தவரையில் 425 பேருந்துகள் வாங்க 1972–73-ல் ரூ. 2.58 கோடி மானியமாகவும் ரூ. 2.31 கோடி கடனாகவும் வழங்கப்பட்டிருக்கிறது. 1973–74-ல் ரூ. 1·98 கோடி மானியமாகவும் ரூ. 90 லட்சம் கடனாகவும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான கோடி உள்ள மத்திய அரசு பட்ஜெட்டில் இந்த இரண்டு கோடி என்பது சாதாரண விஷயம். அவர்கள் தலைநகரில், டெல்லியில் பிரச்னை தீர்ந்துவிட்டதால் மற்ற நகரங்கள் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை, ஆகவே இந்தக் குழு அறிக்கையைத் தூக்கி எங்கேயாவது ஒரு இடத்தில் போடுங்கள் என்ற சூழ்நிலையை உருவாக்கிவிடக்கூடாது.

எல்லா நகரங்களும் இந்தியாவில் உள்ள நகரங்கள்தான். யார் வந்தாலும் இந்தியாவின் தன்மையை எடுத்துச்சொல்லும் நான்கு பெரும் நகரங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்தக் குழுவின் பரிந்துரையை அமலாக்குவதன் மூலம் இந்தியாவில் உள்ள அத்தனை பேர்களுடைய நலன்களிலும் அக்கறை கொண்டவர் பிரதமர் என்பதை மேலும் நிரூபித்துக் காட்டுவதற்கு இது ஒரு வாய்ப்பு என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். லாஸ் ஆப் லிங்க்ஸ் பற்றிச் சொன்னார்கள். துணைப் பொருள்கள் எல்லாம் கிடைக்கவில்லையென்று சொன்னார்கள். இப்போது மின்வெட்டு வேறு வந்துவிட்டது. இன்னும் கூட கஷ்டமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம்.

அதே நேரத்தில் டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ட்ரிப் லாஸ்ட், டெய்லி ஆவரேஜ், ஜனவரி 1972-ல் 3,900, 1973-ல் 2,774, பெப்ரவரி 1972-ல் 3,271, பெப்ரவரி 1973-ல் 2,227. டெய்லி ஆவரேஜ் கலெக்ஷன் பெர் டே என்பதில் ரூ. 2,57,128, இப்போது இந்த ஜனவரியில் ரூ. 2,80,925, பெப்ரவரியில் ரூ. 2,93,372 வசூலாகியிருக்கிறது. வசூல் அதிகமாகியிருக்கிறது என்றால் பயணிகள் அதிகமாகப் போயிருக்கிறார்கள் என்பது உண்மை. பயண இழப்புகளும் தற்போது சிறிது குறைந்திருக்கிறது. எந்தச் சூழ்நிலையில் நாம் பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை மறந்துவிடுவதற்கில்லை. டெய்லி ஆவரேஜ் 2,227. இப்போது எல்லாம் நன்றாக நடக்கிறது என்று சொல்வதற்கு வரவில்லை. இன்னும் திறமையை அதிகரிக்க வாய்ப்புகள் இருக்கின்றன. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில் பல தனித்தனி நிறுவனங்களாகப் பிரித்து, அதையே பல ப்ராஞ்சுகளாகப் பிரித்து ஒவ்வொரு ப்ராஞ்சுக்கும் மானேஜர் நியமிக்கப்பட்டு வசூலாக இருந்தாலும் சரி அல்லது பராமரிப்பாக இருந்தாலும் சரி அவர்களே அவற்றிற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியவர்கள் என்ற சூழ்நிலையில் அவற்றை திருத்தியமைக்கலாம் என்று இருக்கிறோம்.

வழித் தடங்களைப் பொறுத்தவரையில், மாற்றியமைக்க வேண்டுமென்பதற்காக பேராசிரியர் அய்யாசாமி அவர்கள் கொடுத்த அறிக்கையை அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அவைகளைப் படிப்படியாக அமல் நடத்துவதன் மூலம் தகுந்த பலன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

பொருள்கள் வாங்குவதிலும், அதைக் காப்பாற்றுவதிலும் ஒரு சிறந்த முறையைக் கையாள வேண்டுமென்பதற்காக, அதற்காகத் தனி அதிகாரி, கன்சல்டன்ட் என்ற வகையில், மெடீரியல்ஸ் மேனேஜ்மெண்ட் தெரிந்த ஒருவரை அசோக் லேலேண்ட் கம்பெனியிடம் அங்கே முழு நேரமாக ஒருவரைத் தர வேண்டுமென்று கேட்டோம். முழு நேரமாகத் தர முடியாது. வாரத்திற்கு ஒரு நாள் தருவோம் என்று ஒப்புக்கொண்டார்கள். அவர்களும் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னால் நியமிக்கப்பட்டு, ஏதோ வாரத்திற்கு ஒரு நாளாவது வரட்டும், என்று அவர்களது திறமையைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

இந்த நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டாலும் கூட, இவைகளெல்லாம் ஷார்ட் டர்ம் மெஷர்ஸ் தான், குறுகிய கால பலன்களைத்தான் தரும். நீண்ட கால நடவடிக்கைகளுக்கு, லாங்டர்ம் மெஷர்ஸ் என்று சொல்வார்கள், அதற்கு அந்தப் பேருந்துகளை நல்ல முறையில் வைத்து நடத்துவதற்கு நமக்கு மத்திய அரசின் உதவி வேண்டும். மாநில அரசைப் பொறுத்தவரையில் அந்த உதவிகளை வழங்கிக்கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இன்றைக்கு நிறைய எதிர்பார்த்தேன். போக்குவரத்துத்துறை நிறுவனங்களில் தொழிலாளர்களுக்குப் பங்கு அளிப்பது என்ற திட்டத்தைப் பற்றி அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஒரு வேளை அதிலே குறை

இல்லை என்ற காரணத்தால், அவ்வளவு பேரும் அமைதியாக இருந்து விட்டனர் என்று கருதுகிறேன். தமிழரசுக் கட்சியின் தலைவர் அதைப் பாராட்டினார்கள். ஆனால் பொதுவாகச் சொல்வார்கள். அமைதியாக இருப்பது சம்மதத்திற்கு அறிகுறி என்று. ஆகையால் அந்தவகையில் நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

நாட்டுடமையாக்கப்பட்ட உடனே அது ஏதோ அதிகாரிகள் கைக்குப் போய் விடுகிறது. தொழிலாளர்களுக்கு எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்ற உணர்வு இருக்கிறது. ஆனால் தொழிலாளர்களும் சேர்ந்து, அரசாங்கமும் சேர்ந்து, முதல் போட்டு நடத்துவது, தொழில் முறையில் ஒரு புதிய முறையை நம்முடைய தமிழ் நாட்டில்தான் உருவாக்கியிருக்கிறோம். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இந்த முதல் ஜாயிண்ட் செக்டார் வைத்து இருக்கிறோம். "கவர்ன்மெண்ட் என்டரிங் வித் தி ஒர்கர்ஸ்" Gov rnment ent ring with th wo ke s இது போன்ற கருத்துக்கள் அந்நிய நாடுகளில் இருந்து கொண்டிருக்கின்றன. டென்மார்க்கில் 1974-ம் ஆண்டிலிருந்து தொழிலாளிக்குப் பங்கு கொடுத்து தொழில் நிறுவனங்கள் உருவாக்கவேண்டுமென்ற சட்டத்தை அண்மையில் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதேபோல் யுகோஸ்லேவியா நாட்டிலும் தொழில் நிறுவனங்களை நடத்துவது என்று கொண்டுவந்துள்ளதாகக் கேள்விப்படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் இஸ்ரேல் நாட்டிலும் இருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தகவலைப் பற்றிய விளக்கம் எனக்குத் தெரியாது. அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் வெஸ்ட் ஜெர்மனியில் இது போன்ற திட்டம் "ப்ராண்ட்" என்ற நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் அவர்களுடைய கம்பெனியில் உள்ள தொழிலாளர்களையும் உரிமையாளராக ஆக்கி இருக்கிறார்கள். இப்படி உலகத்தில் இருக்கும் நாடுகளில் எல்லாம் இப்போது தான் சோதனை அடிப்படையில் செய்கிறபோது இந்தியாவிலேயே முதன்முதலில் தொழிலாளர்களைப் பங்குதாரர்களாக, உரிமையாளர்களாக, அவர்களோடு நிர்வாகமும் சேர்ந்து செயல்படுவது என்பதை செய்ய தமிழகம் தான் முன் வந்திருக்கிறது என்பதில் நாம் மிகுந்த பெருமையடையலாம். (கரவொலி)

இதேபோன்று பங்களா தேசத்திலும் செய்வோம் என்று முஜ்பீர் ரஹ்மான் அவர்கள் 1970-ல் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். 1970-தேர்தல் அறிக்கையை நம்முடைய இந்திய சர்க்காரே அச்சடித்து நமக்கெல்லாம் எளிதில் கிடைக்கவேண்டுமென்று இப்படி புத்தகமாகப் போட்டிருக்கிறார்கள். அதிலே முஜ்பீர் ரஹ்மான் தேர்தல் அறிக்கையில்

"Equity contributed by the Government shall be owned collectively by the workers of the enterprise who shall be entitled to the profits accruing to such shares.

Workers would not only participate in the equity capital but also in the management of the enterprise."

V2̅11,31'N73

31N73-37;)

முஜ்பீர் ரஹ்மான் இதைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அடுத்த ஒரு தேர்தல் வந்திருக்கிற காரணத்தால் அவர்களாலே அதைச் செய்ய முடியவில்லை.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நமக்கு மத்திய சர்க்காரிடமிருந்து சில சலுகைகள் தேவைப்படுகின்றன. அதாவது தொழிலாளர்களிடத்தில் இருக்கும் பங்குக்கு நாம் டிவிடண்ட் கொடுப்பதற்கு, லாபத்தைக் கொடுப்பதற்கு இப்போது இருக்கிற முறை, எப்படியிருக்கிறது என்றால் லாபத்தில் மத்திய சர்க்காருக்கோ, மாநில சர்க்காருக்கோ செலுத்த வேண்டிய வரி போக மீதியில்தான் லாபத்தை கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதற்காக அவர்களுக்கு ஒரு காரண்டீட் டிவிடெண்ட் கொடுக்கவேண்டும். ஒரு பொதுத்துறையை எடுத்துப் பார்க்கிறபோது பொதுத்துறை நஷ்டத்தில் இருக்கிறது, தொழிலாளர்களிடத்தில் உழைப்பைப் பங்காக வைத்துக்கொள்ளுங்கள் என்றால் அவர்களுக்கு டிவிடெண்ட் வராது. சரி, லாபத்தில் நடக்கும் தொழிலைப் பற்றி என்ன நிலைமையென்றால், லாபத்தில் நடக்கும் தொழில்களில் நிதியாகப் பங்கு கொடுத்துவிடலாம். பங்கு கொடுத்து விட்டால் என்ன நிலைமையென்றால், லாபத்தில் அரசுக்குக் கொடுக்கவேண்டிய வரி போக எஞ்சியதில்தான் அவர்களுக்கு பங்கு கொடுக்கின்ற நிலைமை. ஷேர் திரட்டுவதில் [illegible] பல வகையான முறைகள் கம்பெனிகளில் இருக்கின்றன. தொழிலாளர்களும் ஊக்கத்தோடு தொழிலில் பங்கு கொள்ளவேண்டும். தொழிலையும் ஊக்குவிக்கவேண்டும். தொழிலாளர்களையும் ஊக்குவிக்க வேண்டும். அதற்காகத்தான் "எம்பிளாயிஸ் டிவிடெண்ட் காரண்டீட் ஷேர்" உத்தரவாதம் அளிக்கப்பட்ட டிவிடெண்ட், அந்த அடிப்படையில் ஒன்றை உருவாக்குவதற்கு இந்திய கம்பெனிச் சட்டத்தில் ஒரு திருத்தத்தை மத்திய அரசு கொண்டு வரவேண்டும்.

6164

அதே போல், அந்த காரண்டீட் டிவிடெண்ட் கொடுப்பதற்கான செலவை பிசினஸ் எக்ஸ்பெண்டிச்சராக, தொழில் செலவாகக் கழித்து மீதிப்பணத்தை மத்திய அரசு எடுத்துக்கொள்ளலாம். வரி போக [illegible] வருவாய் தே[illegible] கொள்வது சமுதாயத்திற்கு நன்மை செய்வதற்கா[illegible] தொழிலில் ஈடுபட்டு இருக்கும் தொழிலாளி தொடர்ந்து [illegible]தோடு பணியாற்றுகிற வகையில் அவர்களுக்கு உற்சாகம் கொடுக்கவேண்டிய சூழ்நிலையும் இன்றையதினம் இருக்கிறது.

திரு. டி. ஏ. பாய் அண்மையில் பேசுகிறபோது சொன்னார்கள், தொழிலாளர்களை நிர்வாகத்தில் எப்படிச் சொந்தக்காரர்களாக ஆக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம் என்று பேசினார்கள். அதுபோல் சமீபத்தில் இங்கே வந்த மத்திய அமைச்சர் ஒருவர் பேசுகிறபோது தொழிலாளர்களும், தொழிலாளர் நிர்வாகமும் நேருக்கு நேர் பேசுவதை விட, "அலாங் சைட் தி டேபிள்" ஒரே பக்கத்தில் அவர்கள் பணியாற்ற வேண்டுமென்று குறிப்பிட்டார்கள்.

இன்னொரு அமைச்சர் அவர்கள் நேற்று பாராளுமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் நாங்கள் "லேபர் பார்ட்டிசிபேஷனில்" நிர்வாகத்தில் தொழிலாளர்களின் பங்கைப் பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். இப்படி எல்லோரும் ஆராய்ந்து கொண்டு இருக்கிறார்களே தவிர இன்னும் நடைமுறைப்படுத்தும் சூழ்நிலை

வரவில்லை. தண்ணீரில் இறங்கினால்தான் நீந்தக் கற்றுக்கொள்ள முடியும் என்பதை தமிழக முதலமைச்சர் அவர்கள்தான் இந்த நாட்டிற்கு வழிகாட்டியிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. (கரவொலி) நாம்தான் முதலில் செய்தோம். செய்வதில் கஷ்டம் வரலாம். சங்கடங்கள் வரலாம். அப்படி வந்தாலும் திருத்திக்கொள்ளலாம் என்ற முறையில் கொண்டுவந்திருக்கிறோம்.

உழவனுக்கு நிலம் சொந்தம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல, தொழிலாளிக்கு தொழில் சொந்தம் என்ற திட்டம் தீட்டப்பட்டுள்ளது. கலைஞர் அரசு, கழக அரசு உழைப்பவனுக்கு உடைமை சொந்தம் என்ற அடிப்படையில் இந்த போக்குவரத்துக் கழகங்களில் இந்தத் திட்டத்தை அமல்படுத்தியிருக்கிறது.

முதல் கட்டமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள பேருந்துகளை எடுத்துக் கொண்டு இயங்குகிற சேரன் போக்குவரத்துக் கழகத்தில் இந்த ஆண்டு மே திங்களில்—தொழிலாளர் நாள், உலகத்தில் அத்தனைத் தொழிலாளர்களும் உரிமையோடு கொண்டாடுகிற நாள்—அந்த நாளில்—சேரன் போக்குவரத்துக் கழகத்தில் இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதாக இருக்கிறோம். அதற்காகச் சில அனுமதிகளையெல்லாம் மத்திய சர்க்காரிடம் கேட்டிருக்கிறோம். கொடுத்து விடும் என்று நம்பிக்கை இருக்கிறது. இப்படிச் சட்டத்தைத் திருத்தி, தொழிலாளர்களை நேரடியாகப் பங்குதாரர்களாக ஆக்கும் வரையில் "கன்வர்டிபிள் டிபன்சர்ஸ்" மாற்றக் கூடிய பங்கு முதலீடுகள், கடலூரில் வழங்குவதற்கு 8 சதவிகிதம் பங்கு கொடுக்கப்படும். அதற்கு மேல் 10—12 சத விகிதம் டிவிடெண்ட் வந்தால் அதை அவர்கள் ஷேராக மாற்றிக்கொள்ள தொழிலாளிக்கு உரிமை இருக்கிறது.

நான் என்ன சொல்லுகிறேன் என்றால் இது வரையில் கண்ட பொருளாதாரக் கண்ணோட்டத்தில் முதலாளிகள் இருப்பார்கள், தொழிலாளிகள் இருப்பார்கள், தொழிலாளர்கள் முதலாளிகளைக் கட்டளைப்படி—நம்முடைய உறுப்பினர் சுரேந்திரன் அவர்கள் சொல்லியது போல்—பணிந்து, அடங்கி, வணங்கி நடக்க வேண்டும். அதற்குப் பிறகு பொதுவுடமை தத்துவத்தின் அடிப்படையில் என்ன ஏற்பட்டது என்றால் ஒரு அதிகாரி சொல்வதற்குப் பணிந்து, அடங்கி, வணங்கி நடக்க வேண்டும்.

ஆனால், தமிழகத்திலே ஒரு ஜனநாயக உயர்வு, ஒரு சோசலிச உணர்வு பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல், அறிவுக்கு ஏற்ற சமதர்மம், என்னவென்றால், நாம் சில பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகக் கூடாது. கட்டுப்படுத்திக்கொள்ளக்கூடாது. பகுத்தறிவுக்கு ஏற்ற அளவுக்கு உழவனுக்கு எப்படி நிலம் கொடுக்கிறோமோ அதைப் போல் உழைப்பவனுக்கு உரிமை கொடுக்க வேண்டும் என்ற முறையிலே சமதர்ம திட்டத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை தமிழகத்திலே துவக்கியிருக்கிறோம். ஆகையால் இந்த மன்றம் நிச்சயமாகப் பெருமைப்பட வேண்டும். மகிழ வேண்டும். தமிழகத்திற்கு இந்தப் பெருமை உலக நாடுகளிலே கிடைத்து இருக்கிறதே என்று எண்ணுகிறபோது, தமிழக

அரசைப் பாராட்டவும், தமிழக அரசை நடத்திச் செல்கிற சிறந்த சமதர்மவாதியாகிய கலைஞர் அவர்களைப் பாராட்டவும், நான் மட்டுமல்ல, இந்த மன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, இந்த நாடே, இந்த உலகமே கடமைப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். (கரவொலி.)

DR. H. V. HANDE: The Hon. Minister in his reply has stated that the trip loss is only 2,000. Out of 15,000 trips per day, the loss is 2,000 which works out to nearly 15 per cent. According to the international standard it is between 5 and 6 per cent. Instead of trying to find an alibi from the Central Government or foreign countries, I would like to know whether he has evolved a method by which he can reduce the trip loss.

We welcome the participation of labour in the management and in fact we have passed a resolution in regard to this matter. Now the point is whether the Government are prepared to reduce the trip loss so that the department could earn more profit and the workers also get a portion of the profit.

The Hon. THIRU S. RAMACHANDRAN: Sir, all possible steps will be taken to minimise the trip loss.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I want a clarification. Immediate relief should be given to the City of Madras. The number of buses during peak-hours should be increased and the bus fares also should be reduced because of the increased cost of living for the middle-class people. So far as grant from Delhi is concerned, it is only of academic interest..........

MR. DEPUTY SPEAKER: The hon. Member cannot make an oral demand from the Hon. Minister. If every hon. Member goes on asking such clarifications what will happen?

THIRU K. M. SUBRAMANIAM: I want an answer from him.

The Hon. THIRU S. RAMACHANDRAN: As far the fare is concerned, ours is the lowest in the country. As regards allotment from the Government of India, it may be of academic interest to the hon. Member but it is of immediate interest to the millions of people who are suffering daily in the City.

THIRU B. VENKATASAMY: Passengers are suffering a lot because there is no refreshment room in the bus stand. Will the Hon. Minister clarify the position?

The Hon. THIRU S. RAMACHANDRAN: Sir, this is the proper time to refer to it and it will be looked into.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I want one more clarification. What about the suggestion to issue passes to the reporters?

The Hon. THIRU S. RAMACHANDRAN: Sir, the suggestion will be placed before the Board of Directors of the Transport Corporations.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது மான்யக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

கோரிக்கை எண்.3-க்கு திரு. பி. வெங்கடசாமி, திரு. கே.எஸ். கோதண்டராமையா, திரு. சுரேந்திரன், திரு. ஜேம்ஸ் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு. கே. எ. வகாப் அவருடைய இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 57,56,400க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 35-க்கு திரு. கே. எம். சுப்பிரமணியம், திரு. எ. ஆர். மாரிமுத்து, திரு. கு. அ. பொம்மன், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. என். கே. பழனிசாமி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு. கே. எ. வகாப் அவருடைய இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—

"நிதிக் கோரிக்கை எண் 35—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,96,39,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 48-க்கு திரு. ஜேம்ஸ், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் பேரவையின் அனுமதியுடன் அவை திரும்பப் பெறப் பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—

"நிதிக் கோரிக்கை எண் 48—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு—என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,37,24,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை நாளைக் காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-58 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders—Nil.

B. *Reports, Notifications and other Papers.*

115. Notification issued with G.O. Ms. No. 3475, Revenue, dated the 27th December 1972 in regard to exemption from payment of registration fees, in respect of the release deed to be executed by the Director of Agriculture, Madras, in favour of Thiru M. B. Chinnasamy of Murali village, Bhavani taluk, Coimbatore district.

* 116. A review on the working of Tuticorin Harbour Project and Sethusamudram Project in Tamil Nadu 1972-73 (English and Tamil).

* 117. Speech by Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Public Works on Demands for Irrigation and Public Works Department Grants 1973-74 (English and Tamil).

* 118. A Review on Irrigation in Tamil Nadu 1972-73 (English and Tamil).

* 119. A Review on Road Development and Buildings Programme in Tamil Nadu 1972-73 (English and Tamil).

* 120. Supplement to the Review on Road Development and Buildings Programme in Tamil Nadu 1972–73 (English).

* 121. A Review on Road Transport in Tamil Nadu 1972–73 (English and Tamil).

* 122. A Review on Nationalised Transport in Tamil Nadu 1972–73 (English and Tamil).

123. Speech by Hon. Thiru S. Ramachandran, Minister for Transport on Demand No. 3—Motor Vehicles Acts—Administration 1973–74 (English and Tamil).

இணைப்பு—I.

[7-ம் பக்கத்தில் உள்ள வெள்ளிக் குறியிட்ட விஞ எண் 463-க்கு உரிய விடையைக் காண்க.

(*a*) The Tamil Nadu Sangitha Nataka Sangam implements the following schemes for the development of Bharathanatyam :—

(1) Under the Scheme of grant-in-aid to Training Institutions in Music and Dance the Sangam has been giving about Rs. 7,500 annually to Institutions as grant-in-aid.

(2) Under the Scheme of Scholarship for training in "Nattuvangam" the Sangam offered a few scholarships to students to undergo training in Bharathanatyam.

(3) Under the Scheme of grant-in-aid for encouragement of talented artistes the Sangam selects every year three artistes in Bharathanatyam. Each selected artistes is given chances for four performances in four different Sabhas so as to enable them to gain recognition.

(4) Under the Scheme for grant-in-aid to Dance, Drama the Sangam offers financial aid up to Rs. 3,000 for selected Dance-Drama. Further besides arranging lectures and demonstrations by experts in the field, the Sangam has also helped to bring out a very ancient and valuable treatise on Dancers, namely "Koothanool".

(*b*) Under the Scheme of award of distinction to outstanding artistes, the following dance teachers, have been presented awards from 1961–62 onwards :—

(1) 1961–62 Pandanallur Thiru Chockalingam Pillai.
(2) 1962–63 Vazhuvoor Thiru V. B. Ramaiah Pillai.
(3) 1964–65 Thiru K. V. Dandayuthapani Pillai.
(4) 1965–66 Thiru Cheyyar Thiruvenkatam Pillai.
(5) 1966–67 Thiruvalaputhur Thiru T. K. Swaminatha Pillai.
(6) 1967–68 Thiru Pandanallur Muthiah Pillai.

---

* Despatched to Members on 20—3—1973.

(7) 1969–70 Thiru Sikkal Ramaswami Pillai.
(8) 1970–71 Thiruvidaimaruthur Thiru A. T. Govindaraja Pillai.
(9) 1971–72 Thiru Muthuswami Pillai.

In addition, on the recommendation by the Sangam to the Central Sangeetha Nataka Academy, Thiru Pandanallur Chockalingam Pillai, Thiru V. B. Ramaiah Pillai and Thiruvalaputhur Thiru K. Swaminatha Pillai have been presented National Awards by the President of India.

(அ) தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் பரத நாட்டிய வளர்ச்சிக்கென கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றி வருகிறது:—

(1) இசை-நாட்டியம் இவைகளைப் பயிற்றுவிக்கும் பயிற்சிக்கூடங்களுக்கு மானிய உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ஏறத்தாழ ரூபாய் 7,500 வரை பரத நாட்டிய வளர்ச்சிக்கென மானியமாக கொடுக்கப்படுகிறது.

(2) நட்டுவாங்கம் பயிலும் மாணவ-மாணவிகளுக்கு படிப்பு உதவித் தொகை அளிக்கும் திட்டத்தின் கீழ் பரதநாட்டியம் பயில்வதற்காக சங்கம் சிலருக்கு படிப்பு உதவித் தொகை வழங்கியது.

(3) திறமை மிக்க கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் சங்கம் ஆண்டுதோறும் மூன்று பரத நாட்டிய கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து நான்கு கலை நிகழ்ச்சிகளை நடத்த சந்தர்ப்பம் அளிக்கிறது.

(4) நாட்டிய நாடகத்துக்கு மானிய உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுத்த சிறந்த நாட்டிய நாடகத்திற்கு ரூ. 3,000 வரை நிதி உதவி செய்து வருகிறது. மேலும் இத்துறையில் வல்லுநர்களின் சொற்பொழிவு செய்முறை விளக்க உரை இவைகளை ஏற்பாடு செய்கிறது. பழமை மிக்கதும், பெருமை மிக்கதுமான "கூத்தநூல்" என்னும் நூலை வெளியிட சங்கம் உதவி செய்துள்ளது.

(இ) சிறந்த கலைஞர்களுக்கு திறமையைப் பாராட்டி விருது வழங்கும் திட்டத்தின் கீழ் 1961-62ம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட நடன ஆசிரியர்களுக்கு விருது அளித்துள்ளது :—

(1) 1961-62 பந்தநல்லூர் திரு. சொக்கலிங்கம் பிள்ளை.
(2) 1962-63 வழுவூர் திரு. வி. பி. ராமையா பிள்ளை.
(3) 1964-65 திரு. கே. என். தண்டாயுதபாணி பிள்ளை.

(4) 1965-66 செய்யார் திரு. திருவேங்கடம் பிள்ளை.

(5) 1966-67 திருவாளப்புதூர் திரு. டி. கே. சாமிநாத பிள்ளை.

(6) 1967-68 பந்தநல்லூர் திரு. முத்தையா பிள்ளை.

(7) 1969-70 சிக்கல் திரு. ராமசாமி பிள்ளை.

(8) 1970-71 திருவிடைமருதூர் திரு. ஏ. டி. கோவிந்தராஜ பிள்ளை.

(9) 1971-72 திரு. முத்துசுவாமி பிள்ளை.

மேலும் மத்திய சங்கீத நாடக அக்காடமிக்கு தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் பரிந்துறை செய்ததின் பேரில் பந்தநல்லூர் திரு. சொக்கலிங்கம் பிள்ளை, திரு. வி. பி. ராமையா பிள்ளை, திருவாளப்புதூர் சுவாமிநாத பிள்ளை ஆகியோருக்கு குடியரசுத் தலைவரின் தேசீய விருதும் அளிக்கப் பட்டது.

இணைப்பு II

(15....ம் பக்கத்தில் உள்ள வெள்ளிக் குறியிட்ட வினா எண் 466-க்கு உரிய விடையைக்காண்க.

CONSUMER PRICE INDFX FOR INDUSTRIAL WORKERS IN MALRAS CITY, 1971.

Month.	*Index Number. (Base : 1960=100.)*	* *Derived Index. (Base : 1935-36=100.)*
(1)	(2)	(3)
January	173	823
February	172	819
March	172	819
April	172	819
May	171	814
June	174	828
July	180	857
August	182	866
September ..	183	871
October	185	881
November	187	890
December	188	895

4·76

சென்னை மாநகரத்தில் உள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குரிய 1971-ம் ஆண்டு நுகர்பொருள் விலைக் குறியீட்டு எண்.

மாதம்	குறியீட்டு எண். அடிப்படை : 1960=100.	பெறப்பட்டு குறியீட்டு எண்* அடிப்படை : 1935—36=100.
(1)	(2)	(3)
ஜனவரி	173	823
பிபரவரி	172	819
மார்ச்சு	172	819
ஏப்ரல்	172	819
மே	171	814
ஜூன்	174	828
ஜூலை	180	857
ஆகஸ்ட்	182	866
செப்டம்பர்	183	871
அக்டோபர்	185	8 1
நவம்பர்	187	890
டிசம்பர்	188	895

இணைப்பு III.

[35ம் பக்கத்தில் கண்டுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

"மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்" குறித்த மானியக் கோரிக்கைபற்றி போக்கு வரத்து அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் உரை.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்" என்பதன்கீழ் ரூபாய் 57,56,400 மானியம் வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

2. 1972-73-ஆம் ஆண்டின் போக்குவரத்துத் துறை நிர்வாகம் குறித்த ஆய்வுரை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் போக்கு வரத்துத் தொழில் துறையில் பல முக்கியமான மாற்றங்கள் 1972-ல் ஏற்பட்டுள்ளன. போக்கு வரத்துத் துறையில் சீரான மன நிறைவளிக்கும் முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து வசதிகளையும் போக்கு வரத்துக் கட்டுப்பாட்டினையும், போக்குவரத்துக் கல்வியையும் மேம் படுத்த, இம்மன்ற உறுப்பினர்கள் விவாதத்தின்போது தெரிவிக்கக் கூடிய கருத்துக்களை அரசு வரவேற்கும்.

3. போக்குவரத்துத் துறைக்காக ரூபாய் 57,56,400 மானியத்திற்கு ஒப்புதல் வழங்கவேண்டுமென இம்மன்றத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்

* இணைப்புக்காரணி 4·76

இணைப்பு IV.

(35....ம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்டைக் காண்க.)

"சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் பற்றி போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் உரை."

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கோரிக்கை 35—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்" என்பதன்கீழ் ரூ. 13,96,39,400 மானியத்தையும், "கோரிக்கை 48—சாலைப் போக்கு வரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு" என்பதன் கீழ் ரூ. 3,37,24,100 மானியத்தையும் அரசுக்கு வழங்குமாறு நான் வேண்டுகிறேன்.

2. நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து செயல்படுவது பற்றிய ஆய்வுரை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

3. பொதுமக்கள் போக்குவரத்துத் துறையின் வரலாற்றில் தமிழகத்திலும் இந்தியத் துணைக்கண்டத்திலும் இந்த ஆண்டு மிக முக்கியமானதாகும். வரும் ஐந்தாண்டுகளுக்குள் பேருந்து போக்குவரத்துக்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கிட இந்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை இந்தப் பேரவை நன்கறியும். 1973-ம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டப்படி, தனிப்பட்ட உரிமையாளர்களிடமிருந்து அவர்களது வழித்தடங்களை மட்டுமல்லாமல் அவர்களது நிர்வாகத்திலிருந்த பேருந்துகளையும், தொழிலாளர்களையும் தொழில்நுட்ப வினைஞர்களையும், நிர்வாக அலுவலர்களையும் இந்த அரசு ஏற்றுக் கொள்வதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. பயணியர் பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் வகையில் ஒரு முழுமையான சட்டத்தைக் கொண்டுவந்துள்ள முதல் மாநிலம் தமிழ் நாடு என்பது பெருமைக்குரியது ஆகும். இந்தச் சட்டத்தைப் பற்றிய விவாதத்தின்போது, இந்தச் சட்டத்தின் சில பிரிவுகளில் சில விவரங்களைப்பற்றித் தங்களது மாறுபட்ட எண்ணங்களைத் தெரிவித்ததைத் தவிர இந்தப் பேரவையிலுள்ள அனைத்து எதிர்க் கட்சி உறுப்பினர்களும் பொதுவாக இந்தச் சட்டத்தை வரவேற்றுள்ளனர் என்பதற்காக நான் மிகுந்த மகிழ்ச்சியுறுகிறேன்.

4. இந்த மாநிலத்திலுள்ள நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்து நிறுவனங்களை நிர்வகிப்பதற்கென்று கடந்த ஆண்டில் நான்கு போக்குவரத்துக் கழகங்களை இந்த அரசு அமைத்தது என்பதை இந்தப் பேரவை நன்கறியும். இந்த ஆண்டில் சேலத்தைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் வகையில் "அண்ணா போக்குவரத்துக் கழகம்" என்ற பேரால் மேலும் ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு போக்குவரத்துத் துறையும், இந்தப் போக்குவரத்துக் கழகங்களும் எந்தெந்தப் பகுதிகளில் எவ்வாறு செயலாற்றும் என்பதையும் இந்த அரசு வரையறுத்துள்ளது. இதுபற்றிய விளக்கம் ஆய்வுரையில் வழங்கப் பட்டுள்ளது.

5. இந்த மாநிலம் முழுவதிலும் உள்ள எல்லா பயணிப் பேருந்துகளையும் தன்னகத்தே வைத்து நிர்வகிக்கக் கூடிய அளவில் மிகப் பெரிய ஒரே போக்குவரத்துக் கழகமாக இருக்க வேண்டுமா? அல்லது, தன்னிறைவுடைய சிறு அமைப்புகளாக போக்குவரத்துக் கழகங்கள் அமைந்து திறமையான வகையிலும் ஒன்றிற்கொன்று போட்டியாகவும் இயங்கி அந்தந்தப் பகுதிகளின் தேவைகளை நன்கு நிறைவேற்றக்கூடிய அமைப்புக்களாக இருந்திட வேண்டுமா? என்பது குறித்து இரு வேறு எண்ணங்கள் இருப்பது இயல்பு. அதிகாரங்களும் பொறுப்புக்களும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமே தவிர ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாது என்ற இந்த அரசின் கொள்கைக்கேற்ப, தன்னிறைவு படைத்த சிறு அமைப்புக்களே சிறந்தது என்ற முடிவெடுத்து, அவ்வகையில் அந்தந்தப் பகுதியின் வழைவுகளை நிறைவேற்றத்தக்க வகையில் பல்வேறு போக்குவரத்துக் கழகங்களை அமைத்துள்ளோம். இம்முயற்சி இதர மாநிலங்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது ; நம்முடைய முயற்சியின் விளைவுகளை மற்ற மாநிலங்கள் மிகுந்த அக்கரையோடு கவனித்துக்-கொண்டிருக்கின்றன என்பதை அறிந்து இந்தப் பேரவை மகிழும் என எதிர்பார்க்கிறேன்.

6. கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையை முன்மொழிந்தபோது "போக்குவரத்துத் துறையை சூழ்ந்திருந்த காரிருள் அகன்று கதிரொளி கண்ணிற்குத் தென்படும் நிலை ஏற்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டேன். "காரிருள் அகன்றது ; கதிரொளி பரவியுள்ளது" என்பதை இந்த ஆண்டு நான் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன். "போக்குவரத்துத் துறையை" ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், ஒரு தன்னிறைவுடைய இலாபகரமான துறையாகக் காட்சி தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. 1963–64-ம் ஆண்டிலிருந்து "போக்குவரத்துத் துறை" நட்டத்தில் தொடர்ந்து நடந்து வந்தது. 1971–72-ம் ஆண்டில் ரூ. 122 இலட்சம் நட்டம் ஏற்படுமென மதிப்பிடப்பட்டது. இத்துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டு சென்னை பெரு நகரம், செங்கை மாவட்டம் ஆகிய பகுதிகளை நிர்வகிக்க 1972 முதல் பல்லவன் போக்குவரத்துக் கழகம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

நடப்பு ஆண்டில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் சுமார் ரூ. 90 லட்சம் என்கிற அளவில் நட்ட மேற்படும் என்று மதிப்பிடப்பட்டாலும், ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றை இணைத்துப் பார்த்தால் ரூ. 22 லட்சம் இலாபம் என்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஆய்வுரையில் இந்த ஆண்டு சமன்படுத்தும் ஆண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குக் காரணம், போக்குவரத்துத் துறையின் இந்த இலாபம் கிராமப்புறங்களில் போடப்படும் இணைப்புச் சாலைகளுக்கான மிகை வரியாக (சர்சார்ஜ்) அரசுக்கு வழங்கப்பட இருப்பதேயாகும்.

8. மற்ற நான்கு போக்குவரத்துக் கழகங்கள் நல்ல முறையில் இயங்கி வருவதோடு அவைகள் தன்னிறைவு படைத்த அமைப்புக்கள் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளன ; பாண்டியன் போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்குவரத்துக் கழகம் ஆகிய மூன்று போக்குவரததுக் கழகங்களும் நல்ல முறையில் செயல்பட்டு அவற்றின் வருமானத்திலிருந்து சுமார் 36 இலட்சத்தை அரசு கடன் தொகைக்கு

எதிராக திருப்பித் தந்துள்ளன என்பதையும் அதனை அரசு பேருந்து அதிபர்களுக்கு கட்டவேண்டிய நட்ட ஈட்டுத் தொகையாக பயன்படுத்தி யிருக்கிறது என்பதையும், வழங்கப்பட்டுள்ள ஆய்வுரையிலிருந்து மாண்பு மிகு உறுப்பினர்கள் உணர்ந்திடக்கூடும். இதற்கு இணையாக எடுத்துச் சொல்லுவதற்கு இந்தியத் துணைக்கண்டத்தில் பொதுத்துறை வரலாற்றில் வேறொன்றுவும் இல்லை என்பதைப் பணிவோடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

9. இந்தப் போக்குவரத்துக் கழகங்களின் பொருளாதார நடைமுறைகள் தொடர்ந்து நல்ல முறையில் விளங்கும் என நான் எதிர்பார்க்கிறேன். உள்ளுறை நடவடிக்கைகளில் இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் தங்களது எல்லைகளுக்குள் சுயமாகச் செயல்படுவதற்கான சூழ்நிலையை இந்த அரசு தன்னால் இயன்ற அளவு உண்டாக்கித் தந்திருக்கிறது, இனியும் தரும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

10. நாட்டுடைமைத் திட்டத்திற்குத் தேவைப்படுகின்ற நிதியினை இந்தப் போக்குவரத்துக் கழகங்களின் வருமானத்திலிருந்தும், இந்தப் போக்கு வரத்துக் கழகங்கள் தங்களது பொருளாதார வலிமையைப் பொறுத்து வங்கிகளிலிருந்து பெற இருக்கும் வங்கிக் கடன் தொகைகளிலிருந்தும் சரி செய்துகொள்ள முயற்சிப்பேன் என மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம் வாக்களித்திருந்தேன். இன்றியமையாத நிலை ஏற்பட்டா லொழிய இந்த போக்குவரத்துக் கழகங்களுக்காக அரசு மானியம் கேட்க மாட்டேன் என்றும் தெரிவித்திருந்தேன். திறமையான பொருளாதார நிர்வாகமும் நல்ல சூழ்நிலைகளும் இருந்தால் இந்த நிலை நிறை வேறும் என்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை. இந்த வகையிலும் பொதுத்துறை வரலாற்றில் ஒரு புதுமையை நாம் பணிவோடு உணர்த்தி யுள்ளோம் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இந்த மாமன்றத்தின் நல்வாழ்த்துக்கள் எனக்குத் துணை நிற்கும் என உறுதி யாக நம்புகிறேன்.

11. நிதி ஆதாரங்களை நல்ல முறையில் பயன்படுத்தியதும், பேருந்து களை நல்ல முறையில் திட்டமிட்டு ஓட்டியதுமே இந்த ஆண்டில் நல்ல முன்னேற்றத்திற்கு காரணம் எனலாம். ஆய்வுரையில் குறிப்பிட்டுள்ள வகையில் அரசு போக்குவரத்துத் துறையில் மட்டுமே இந்த ஆண்டில் பேருந்துகளின் எண்ணிக்கையில் ஆறு குறைந்திருந்தாலும், மொத்த வழித்தடங்களில் 9,000 கிலோ மீட்டர் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. பேருந்து களின் ஓட்டம் நாளொன்றுக்கு 28,203 கிலோ மீட்டர்கள் அதிகப்படுத்தப் பட்டுள்ளன.

12. போக்குவரத்துத் துறையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சமயங்களில் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டுள்ளது என்றாலும் பொதுவாக இந்த ஆண்டில் தொழிலாளர், நிர்வாக உறவுகள் சுமுகமாகவே இருந்து வந்துள்ளன. நாட்டுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின் தொழிலாளர் களும், போக்குவரத்துத் துறை தொழிலாளர்களும், காட்டிய உற்சாகமும் ஈடுபாடுமே இந்த ஆண்டில் இந்தத் துறையில் குறிப்பிடத்தக்க நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்தமாக போக்குவரத்துத்

துறையில் ஏற்பட்டுள்ள மகிழத்தக்க நிதி நிலைமைகளுக்காக போக்கு வரத்துத் துறையையும், போக்குவரத்துக் கழகங்களையும் என்னுடன் சேர்த்து இம் மாமன்றமும் பாராட்ட முன்வரும் என நம்புகிறேன்.

13. இவைகளையெல்லாம் சொல்வதினால், போக்குவரத்துத் துறையில் அனைத்தும் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்க முயற்சிப்பதாகக் கொள்ள வேண்டியதில்லை. அது எனது எண்ணமும் அல்ல. போக்குவரத்துத் துறையின் குறைபாடுகளை மற்றவர் களைக் காட்டிலும் நான் நல்ல முறையில் உணர்ந்துள்ளேன். பேணுதல் பணிகளின் தன்மையை உயர்த்தியாக வேண்டும். நெரிசல் நேரப் பிரச்சினையை அணுகி சரிவர தீர்த்திட வேண்டும். விபத்துக்களைக் குறைத் திட வேண்டும். சாலையில் பழுதடைதலைத் தவிர்த்திட வேண்டும். இவை களுக்கெல்லாம் மேலாக, போக்குவரத்துத் தொழிலாளர்களது உள்ளத் தில் போக்குவரத்துத் துறை பொதுமக்கள் துறை என்கின்ற வகையில் சேவா உணர்வினையும் ஈடுபாட்டுணர்வினையும் வளர்த்திடல் வேண்டும்.

14. நூதன நிர்வாக முறைகளைப் புகுத்துவதினால் மட்டும் பிரச்சினை களைத் தீர்த்துவிட முடியாது. நிர்வாகம் தனது பணிகளை திறமையாகவும் செம்மையாகவும் செய்திடுவதற்கான கருவிகளையும் பெற்றிருக்க வேண்டும். இதில் முன்னேற்றம் எப்பொழுது கண்ணுக்குப் புலப்படக் கூடியதாக இருக்காது என்பதையும் இந்த அவையினர் அறிந்திருக்கக் கூடும். அரசினர் தொழிற் பயிற்சிப் பள்ளியில் தேர்வு பெறுவோர் யாரும் அரசு போக்குவரத்துத் துறையிலோ அல்லது பல்லவன் போக்குவரத்துக் கழகத் திலோ தொழில் நுட்பப் பிரிவு தொழிலாளராக நியமனம் பெற முடியாது. தொழிற்பயிற்சிப் பள்ளிகளிலும், பொறியியல் கல்லூரி களிலும் தேர்வு பெற்றவர்கள் பலரை நியமனம் செய்து புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்துள்ளோம். பல்லவன் போக்குவரத்து கழகம் துவங்கியதன் பின் 987 தொழிற்பயிற்சிப் பெற்றவர்களை தேர்ந் தெடுத்து அவர்களுக்கு பணிகளில் பயிற்சியளித்து வருகிறோம். அவர் களில் மின்சார, பொறியியல், மோட்டார் பொறியியல் பட்டதாரிகள் 138 பேர். 368 பேர் தொழிற்பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்றோர். அரசு போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் கடந்த மூன்றாண்டு களில் பயிற்சி பெற்று வருவோர் 588 பேர். இவர்களில் பொறியியல் பட்டதாரிகள் 49 பேர்கள். தொழிற்பயிற்சிப் பள்ளியில் பயின்றோர் 384 பேர்கள். பணிகளில் குறிப்பிட்ட காலம் பயிற்சி பெற்றுத் தகுதி யடைவோர் அனைவரும் போக்குவரத்துத் துறையில் நிரந்தர ஊழியர் களாக ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். கடந்த காலங்களில் பொறியியல் பயிற்சியும், கல்வித் தகுதியும் உடையவர்கள் மிக மிகக் குறைந்த அளவி லேயே நியமிக்கப்பட்டிருந்ததால், கடந்த 25 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை இப்பொழுது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களோடு நான் ஒப்பிட்டுப் பார்த்திட விரும்பவில்லை. பொறியியல் பயிற்சியும் கல்வித் தகுதியும் மிக்கோர் பலரை நாம் நுழைத்திருப்பது எந்த அளவிற்கு நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துத் துறையின் நிர்வாகத்தின் திற மைக்கும் முன்னேற்றத்திற்கும் துணை செய்வதாக உள்ளது என்பதை நாம் இனிமேல் கவனமாக பார்த்திட வேண்டியது அவசியமே.

15. கடந்த ஆண்டில் மோட்டார் வாகனங்களின்மேல் விதிக்கப்பட்ட 10 சத விகித மிகை வரி கிராமப்புறச் சாலை வசதிகளை அதிகப்படுத்துவதற்கென சிறப்பாக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றம் அறியும். இந்தப் புதிய சாலைகளினால் இணைக்கப்பட்ட கிராமங்களில் போக்குவரத்துத் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். கடந்த ஆண்டில் இதுவரை பேருந்துகளால் இணைக்கப்படாத 92 புதிய கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகளை போக்குவரத்துக் கழகங்கள் செய்து தந்துள்ளன. ஆரம்ப காலங்களில் இந்த வழித் தடங்களில் பேருந்துகளை செலுத்துவது இலாபகரமானதாக இருக்காது என்றாலும் போக்குவரத்துக் கழகங்கள் இவற்றை சமூக நலத்திற்காக செய்யப்படும் செலவுகள் என்ற முறையில் ஏற்றுக் கொள்ளும். பேருந்து செல்லக் கூடிய எல்லாச் சாலைகளிலும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள போக்குவரத்துத் துறை பேருந்துகளை நிச்சயமாக செலுத்தும் என்ற உறுதியை இந்த மாமன்றத்திற்கு அளிக்க விரும்புகிறேன். 1,500 மக்களுக்கு மேல் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து வசதிகளை மூன்றாண்டுகளுக்குள் செய்து தர வேண்டுமென்ற அடிப்படையில் அதற்கான நடைமுறைத் திட்டத்தை நெடுஞ்சாலை பணித் துறையுடன் கலந்து உருவாக்கிடுமாறு போக்குவரத்துக்கழகங்களை கேட்டுள்ளேன்.

16. போக்குவரத்துத் துறை இம்மாநில மக்களுக்கு என்னென்ன காரியங்களை ஆற்றியிருக்கிறது என்பதையும் இனி என்ன செய்ய இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டேன். எங்களது குறைபாடுகளையும் சுட்டிக் காட்டி ஒப்புக் கொண்டுள்ளேன். இனி, எங்களுக்கு மக்களும் இம் மாமன்றமும் செய்ய வேண்டிய உதவியை குறிப்பிட விரும்புகிறேன். கருத்துக்களில் வேறுபாடும் உரிமையும், ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமையும், சனநாயக சமூக அமைப்பில் வாழ்கின்ற மக்களின் அடிப்படை உரிமைகள் என்பதை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுகிறோம். இந்த உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்பதிலும், இந்த உரிமைகளை நிலைபெறச் செய்ய வேண்டுமென்பதிலும், அரசு எவருக்கும் பின் வாங்காது என்பதையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். ஆனால் இந்த உரிமை பொதுச் சொத்துக்களை நாசப்படுத்தும் உரிமையாகவும், பேருந்துகளின்மேல் கல்லெறியும் உரிமையாகவும் தாழ்ந்திட வேண்டுமா என்பதை பணிவன்புடன் கேட்க விரும்புகிறேன். நல்ல அரசியல் கட்சிகள் இந்தப் போக்கிற்கு ஊக்கம் தரமாட்டார்கள் என்பதை நான் அறிவேன். நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நிலைமைகளுக்கு தாங்கள் பொறுப்பில்லை என எல்லாக் கட்சிகளும் கூறுகின்றன. நாகரீக நல்வாழ்வின் அடிப்படை தகர்க்கப்படுவதையும், சமூக அமைப்பு முறையில் இவ்வாறு துருப்பிடிப்பதையும் கண்டும் காணாதவர்களாக நாம் நடந்து கொள்வது நல்ல செயல்தானா என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டுகிறேன். இத்தகைய நிலைமைகள் நீக்கப்பட, தவிர்க்கப்பட நாம் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிந்தித்து எனக்கு ஆலோசனை நல்கிட வேண்டுமென உங்களை நான் வேண்டுகிறேன்.

17. இந்த மாநிலத்தை ஆளும் பொறுப்பு எந்தக் கட்சியினுடையதாகவும் இருக்கலாம்; ஆனால் கருத்து வேறுபாடுகளைத் தெரிவிப்பதற்கான நல்ல மார்க்கம் பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்துவதும், கல்

லெறிதலுமே என்ற பாரம்பரியம்-பழக்கம்-பண்பாடு பொது வாழ்வில் உருவாக்கப்பட்டு வளர்க்கப்படுமானால் அது மிகவும் துரதிஷ்டமான நிலையையே குறிக்கும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

18. பொதுச் சொத்துக்களை நாசப்படுத்துவதும் பேருந்துகளின் மேல் கல்லெறிவதும் தவறு, ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதைத் தெளிவுபடுத்தும் வகையிலும், எந்தக் கட்சியும் இதற்குத் துணை நிற்காது, பொறுப்பேற்காது என்பதை ஐயந்திரிபற தெளிவிக்கும் வகையிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த மாமன்றத்தில் அமர்ந்திருக்கின்ற நீங்கள் அனைவரும் இந்தச் செயல்களைக் கண்டிக்க வேண்டும் என உங்களனைவரையும் மிகுந்த பணிவன்போடும் இதய சுத்தியோடும் வேண்டுகிறேன். மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக விளங்கும் அனைவரும் தங்களது அரசியல் கோட்பாடுகளை மறந்து கட்சி பேதங்களை மறந்து வன்முறைகளைக் கண்டிக்கின்றனர். கல்லெறிவதையும் பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவிப்பதையும் கண்டிக்கின்றனர் என்பதை இந்தத் தமிழகமும் இந்த நாடும் அறிந்து கொள்ள இதுவே வாய்ப்பு.

19. நான் இன்று மிக முக்கியமான அறிவிப்பு ஒன்றினைச் செய்ய உள்ளேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்திய விடுதலை நாள் வெள்ளி விழா கொண்டாட்டத்தின் போது அளித்த உறுதிமொழியினை அமுலாக்கும் வகையில், அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களில் தொழிலாளர்களும் உரிமையாளர்களாகும் திட்டம் அரசால் அமுலாக்கப்பட உள்ளது என்பதனை பணிவோடு அறிவித்துக் கொள்கிறேன்.

20. கம்யூனிச சித்தாந்தத்தின் தந்தை என கருதப்படும் "கார்ல் மார்க்ஸ்" காலத்திலிருந்து முதலாளித்துவம் கம்யூனிசம் தனி உடைமை, பொது உடைமை என்ற இரு வகையான பொருளாதாரக் கொள்கைகளுக்கிடையே ஏற்பட்டு வரும் போராட்டத்தினை இவ்வுலகம் கண்டு வந்துள்ளது. "எதையும் தனதாக்கிக் கொள்ள வேண்டும்" என்ற அடிப்படை மனித உணர்வு (அல்லது ஆசை) முழுமையாகப் போக்கி விடக்கூடிய ஒன்று அல்ல என்பதனை கடந்த 50 ஆண்டுகளில் பொது உடைமை அரசாக இருந்தாலும் சரி, அல்லது பொது உடைமையைச் சார்ந்துள்ள அரசாக இருந்தாலும் சரி அனுபவ வாயிலாக தெரிந்துகொண்ட உண்மையாகும். ஆகவே இந்த இயற்கையான மனித சுபாவத்திற்கேற்ப தனக்கென ஒரு சொந்த வீடு வைத்துக் கொள்ளவும். சொந்தமாக விவசாயம் செய்ய சிறிதளவு நிலமும், இன்னும் சிற்சில சொத்துக்களை வைத்துக் கொள்ளவும் சலுகையாக அனுமதித்துள்ளனர்.

21. எவ்வளவுக்கெவ்வளவு நாகரீகம் பழமையானதாகவும், ஊர்ப்புறங்களை சார்ந்ததாகவும் இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு தனி உடைமையில் அம்மக்கள் பற்று கொண்டிருப்பார்.

மற்றெல்லா நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில்தான் உழுது பயிரிடும் நிலத்திற்கு பரம்பரை சொந்தக்காரனாக விவசாயி தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளான். நாடு விடுதலை அடைந்ததற்கு பின் கொண்டு வரப்

பட்டுள்ள எல்லா நிலச் சீர்திருத்த சட்டங்களுமே உழும் நிலத்திற்கு அவன் சொந்தக்காரனாகவும், சொந்தமாக்கிக் கொள்ளும் உரிமையும், பாதுகாப்பு படைத்தவனாகவும் ஆகும் நோக்கம் கொண்டவைகளே. இது போன்ற தொடர்பான நடவடிக்கைகள் மூலமே இந்நாட்டில், வேளாண்மையில் பசுமைப் புரட்சி ஏற்படுத்த முடிந்தது.

22. பாரம்பரியத்தாலும், சுற்றுச் சார்புகளாலும், மாறுபட்ட ஓர் சூழ்நிலையில் நகர்ப்புறத்தில் உள்ளவனாக இந்தியத் தொழிலாளி இருந்தாலும் அவன் உண்மையில், அவனது வழி வழி வந்த மரபு பின்னணியின் அடிப்படையில் கிராமப்புறத்தைச் சார்ந்தவனே. அவனும், அவனது மூதாதையர்களும் எப்படி அவர்கள் உழுது பயிரிட்ட நிலத்தின்மீது பற்றும் பாசத்தையும் வளர்த்துக்கொண்டிருந்தனரோ அதே பற்றும் பாசத்தையும், அவனுக்கென சொந்தமாக ஒரு சிறு தொழிலாவது இருக்கிறது என்ற நிலையை உருவாக்கினால் அத் தொழிலின் மீது வளர்த்துக் கொள்ளும் ஒரு நிலையினை நிச்சயம் உருவாக்க முடியும் என்று சில சமூகவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

23. போக்குவரத்துத் துறைத் தொழிலை ஏன் தேர்ந்தெடுத்தோம் எனில் இத் தொழில் மூலதனம் அதிகமாகப் போடப்பட்டுள்ள மற்ற தொழில்களுக்கு மாறுபட்ட ஒன்றாகும். போக்குவரத்துத் தொழில் திறமையாக நடக்கவும், லாபத்தில் நடக்கவும், மக்கள் நன்மதிப்பைப் பெறவும் பணியாற்றுவதில் பெரும் பங்கு வகிப்பவர் பணி புரியும் பாட்டாளியே. பெரும்பான்மையான போக்கு வரத்துத் தொழிலாளர்கள், நிர்வாகத்தின் உடனடி மேற்பார்வையில் தொழிலகங்களில் பணிபுரிபவர் களல்லர்.

போக்குவரத்து வண்டி, தொழிலகத்தை விட்டு வெளியே வந்து விட்டால் அது எப்படி செல்கிறது. அதில் ஏறிச் செல்லும் பிரயாணிகள் எப்படி நடத்தப்படுகின்றனர் என்பதெல்லாம், அந்த போக்குவரத்து தொழிலாளியின் அனுபவம், ஆற்றல், பண்பு, பரந்த நோக்கம்—ஆகிய வற்றை பொறுத்ததே. போக்குவரத்து அமைப்பில் ஏற்படும் மிகப் பெரிய செலவுகளான பராமரிப்பு, எண்ணெய்ச் செலவுகள் ஆகியவையும் நேரடியாக தொழிலாளி காட்டும் அக்கரையைப் பொறுத்ததே.

இந்த அளவு ஒரு தொழிற்சாலையின் வெற்றிக்கோ அன்றி தோல் விக்கோ மிகவும் நேரடித் தொடர்பு கொண்டுள்ள தொழிலாளர்களை கொண்டுள்ள பிற தொழிற்சாலைகள் உள்ளதாகத் தெரியவில்லை. அதனால்தான் தமிழக அரசு இந்தப் போக்குவரத்துத் தொழிற்சாலையை, தொழிலாளர்கள் உடைமையாக்கிக் கொள்வதில் பங்கு பெறும் திட்டத்தினை பரிசீலனை செய்திட தேர்ந்தெடுத்துள்ளது.

24. நாட்டுடைமை முழுமையாக்கப்பட்டபின் இந்தத் துறையில் ஒரு லட்சம் தொழிலாளர்களுக்கு மேல் பணி யாற்றுவார்கள். பெரும்பான்மை யான தொழிலாளர்கள் இத் திட்டத்தில் பங்கு கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

25. பொதுத் துறையில் தொழிலாளர்கள் பங்கு கொள்வதனை அர்த்த முள்ளதாக்கிட வேண்டுமெனில், இன்றுள்ள கம்பெனிச் சட்டத்தில் சில மாறுதல்கள் செய்யப்பட்டாக வேண்டும். “லாப உத்திரவாதமளிக்கப் பட்ட தொழிலாளர் பங்குகள்” என்ற புது வகையான பங்குகள் உருவாக் கப்படவும், தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் வேண்டும். மத்திய அரசிற்கு இது பற்றி தேவையான பரிந்துரைகள் அனுப்பப்படும். இந்த பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் வரை, தொழி லாளர்கள் பங்கு பெறும் இத்திட்டத்தினை போக்குவரத்துத் துறையில் படிப்படியாக நுழைத்து அறிமுகப் படுத்துவதென இந்த அரசு முடிவு செய்துள்ளது. இத் திட்டத்தின் விபரங்கள் மாண்புமிகு உறுப்பினர் களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

26. தற்போதையப் பணியாளர்களைப் பொறுத்த வரையில் இந்தத் திட்டம் விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்குப் பொருந்தும். இந்தத் திட்டம் அமுலுக்கு வந்ததன் பின், நியமிக்கப்படும் புதிய பணியாளர்கள் ஒரு குறைந்த அளவு மாற்றுதற்குரிய கடனீட்டுப் பத்திரங்களை தங்கட்கு ஏற்றுக்கொள்ளவேண்டும். அதாவது நம்மிடத்தில் பணியாளர்களாகச் சேர்வதற்கு நாம் அவர்களுக்கு விதிக்கும் நிபந்தனை, வெறும் ஊழியர் களாக மட்டும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இந்த நிர்வாகத்தின் பங்குதாரராகவும், பாகஸ்தராகவும் தான் ஏற்றுக் கொள்வோம் என்பதே யாகும். சாதாரண பங்கீட்டுக் கூலிகளுக்குப் பதிலாக நாம் அவர்களுக்கு 8 சத வீத வட்டி உத்தரவாதத்துடன் கூடிய கடனீட்டுப் பத்திரங்களை வழங்குகிறோம். இவ்வாறு செய்வதன் மூலம் ஓர் ஊழியர் பங்குதாரராக இருப்பதினால் ஏற்படும் சில இடர்கள் பெருமளவில் குறைக்கப்படுகின்றன. வேலையின்றி இருக்கும் இளைஞன் வேலைக்குச் சேரும்போது இந்தக் கடனீட்டுப்பத்திரங்களை வாங்குகிற துன்பத்தையும் பொருட் செலவையும் ஏற்றுக்கொள்வது கடினம் என்பதைக் கருத்தில் கொண்டு, வேலையில் சேர்ந்ததற்குப் பின்னர் ஊதியத்திலிருந்து சுலபத் தவணைகள் மூலம் கடன் ஈட்டுப் பத்திரங்கள் வழங்கப்படும்.

27. தொழிலாளர்களது உள்ளத்தில் நாம் ஏற்படுத்த இருக்கும் நம்பிக்கையைப் பொறுத்தே இந்தத் திட்டத்தின் வெற்றி அமையும். பொதுத் துறையின் வரலாற்றினை வைத்துக் கொண்டு எந்தத் தொழி லாளியையும் தனது பணத்தை இந்தப் பொதுத் துறை நிறுவனத்தில் நேரடியாகப் போட்டு இடருடன் கூடிய பங்குதாரராக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது கடினம். எனவே, “இலாப உத்திரவாதமளிக்கப் பட்ட தொழிலாளர் பங்குகள்” என்ற ஒரு வகைப் பங்குகள் உருவாக்கப் படும் வரையில் நாம் அவர்களுக்கு மாற்றுதற்குரிய கடனீட்டுப் பத்திரங் களையே வழங்கிட வேண்டும்.

28. மாற்றுதற்குரிய கடனீட்டுப் பத்திரங்களை வைத்திருக்கும் தொழி லாளிக்கு கடன் கொடுத்தவருக்குரிய நிலையும், ஆண்டுதோறும் 8 சத விகித வரவிற்கான உத்திரவாதமும், கிடைப்பதுடன், நிறுவனத்தின் பங்குதாரராக மாறுவதற்குரிய விருப்பத்தைப் பயன்படுத்தும் உரிமையும் கிடைக்கிறது. நிறுவனத்தின் உரிமையாளர் என்கிற நிலை வேறு, இந்தக் கடனீட்டுப் பத்திரத்தினால் கிடைக்கும் நிலை வேறு என்பதை நாங்கள் உணர்கிறோம். எனினும், இந்தப் புதிய நிலைமை தொழிலாளர்கட்கும்

நிறுவனத்துடன் ஒரு புதிய பொருளாதாரப் பிடிப்பினை ஏற்படுத்தும், இந்தப் போக்குவரத்துக் கழகம் நல்ல முறையில் இயங்கி, பொருளாதார வளர்ச்சியுற்று, இலாபம் பெருகுமானால், அந்தத் தொழிலாளர் இந்த நிறுவனத்தின் உரிமையாளராகி தொழிலாளர் என்கிற முறையிலும், உரிமையாளர் என்கிற முறையிலும் லாபத்தில் பெரும் பங்கு பெற முடியும். தொழிலாளர் பிரதிநிதி போக்கு வரத்துக் கழக நிர்வாகக் குழுவிலும் இடம் பெறுவர். மனித சமுதாயத்தின் தன்மைகளையும், மனித இயல்புகளையுகளின் தன்மைகளையும் வரலாறு நமக்கு உணர்த்தியிருப்பது உண்மையானால், இப்பொழுது நாம் தொழிலாளர்களிடையே ஏற்படுத்த இருக்கும் இந்தப் புதிய தலைமுறை, தொழிலோடு தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்ட ஒரு புதிய பொறுப்பு வாய்ந்த தலைமுறையாக உருவாகும் என உறுதியாகக் கூறலாம்.

29. அரசும், தொழிலாளர்களுமாகச் சேர்ந்து தொழில் துறையை நிர்வகிக்க ஒரு புதிய கூட்டுத் துறையை தமிழ் நாட்டில் நாம் இதன் மூலம் புதிதாகத் தோற்றுவித்திருக்கிறோம் என்பதை இந்த மாமன்றம் உணர்ந்திடக் கூடும். இந்த கூட்டுத் துறை அரசு தொழிலதிபர்களோடு சேர்ந்து ஏற்படுத்தியுள்ள கூட்டுத் துறை அல்ல. ஆனால் அரசு தொழிலாளர்களோடு சேர்ந்து ஏற்படுத்தியுள்ள கூட்டுத் துறையாகும். இந்த அரசு தொழிலாளர்கள் மேல் கொண்டிருக்கின்ற அசைக்க முடியாத நம்பிக்கைக்கு இலக்கியமாக இந்தத் திட்டம் திகழ்கிறது.

30. தொழில் உரிமையில் அரசோடு தொழிலாளர்களுக்கும் பங்களிப்பது என்பது நீண்ட நெடு நாட்களாக, செய்யத் தவறிவிட்ட "சமுதாய நீதி" என்றே கருதுகிறேன். உழைக்கும் கரங்களோடு ஒன்று சேர்ந்து தொழில் நடத்தும் இப் புதுமையின் மூலம் ஏற்படவிருக்கும் தொலைதூர நன்மைகள் பற்றிய கற்பனையில் என்னை ஆழ்த்திக்கொள்ள நான் விரும்பவில்லை. எனினும், பொதுத் துறை தொழில்களில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு, பாடுபடத் துடிதுடிக்கும் சக்திகளுக்கு அளிக்கப்படும் இவ்வாய்ப்பின் மூலம், ஒரு புது வகை புரட்சி தோன்றும் என்பது மட்டும் நிச்சயம். இப் புரட்சி உற்பத்திப் பெருக்கமாக, லாபகரமாக, தொழிலாளர் நல்லுறவு கொண்டதாக, பொதுத் துறை இயங்க வழி வகுக்கும். இத் திட்டம் சங்கிலித் தொடர் போல சிந்தனையோட்டத்தை தூண்டி மேலும் பல துறைகளில் பரவி தொழிலாளர்களை பங்குதாரர்களாக மாற்றும் நிலையை உருவாக்கும் என நம்புகிறேன்.

தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1973 மார்ச் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, குறுகிய கால வினா எண் 4 ஒத்திவைக்கப்படுகிறது. 488, 489, 490 ஆகிய மூன்று வெள்ளிக்குறியிட்ட கேள்விகளும் ஒத்திவைக்கப்படுகின்றன.

Applied Nutrition Programme

*** 476 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that the applied Nutrition Programme is to be introduced in Killiyoor Panchayat Union?**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதி பிற்பட்ட பகுதியாக இருப்பதால் அங்கு இந்தச் சத்துணவுத் திட்டம் ஏற்படுத்த வேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டது. 1973–74-ம் ஆண்டுக்கு மத்திய சர்க்காரால் தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட்ட மூன்று இடங்களில் ஒன்றாகக் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதி ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு மூன்று ஒன்றியங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிபார்சு செய்கிறார்கள். இப்பொழுது 22 வட்டாரங்களில் இத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எடுக்கப்படுகிற மூன்று வட்டாரங்களில் எந்த மாவட்டங்களில் குறைவான அளவுக்கு இருக்கிறதோ அந்த மாவட்டங்களில் சில ஒன்றியங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மற்ற இடங்களைப் பொறுத்து அடுத்த ஆண்டுதான் கவனிக்க வேண்டிவரும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த அப்ளைடு நூட்ரிஷன் ப்ரோக்ராம் என்ன கருத்தின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகிறது? இதை விஸ்தரிப்பதற்கு என்ன கஷ்டங்கள் இருக்கும் என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியில் உள்ள மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைக் கருத்திற் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிபார்சு செய்கிறார்கள். அது குறித்து ஊராட்சி இயக்குநர் அவர்கள் பரிசீலனை செய்கிறார். அப்படி 22 வட்டாரங்கள் இதுவரையில் தெரிந்தெடுக்கப்படுகின்றன. இந்த ஆண்டு மூன்று வட்டாரங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன. நாம் ஆறு வட்டாரங்கள் கேட்டோம். மத்திய சர்க்கார் மூன்றுதான் கொடுத்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் எவ்வளவு பணம் ஒதுக்குகிறார்களோ அதைப் பொறுத்துத் தான் வட்டாரங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் இருக்கும் குடிசைப் பகுதிகளில் வாழும் குழந்தைகள் இதனால் பயன் பெறுகின்றனர். கிராமப் பகுதிகளில் அரிசனக் காலனிகளில் இருக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு இந்தச் சத்துணவுத் திட்டம் விஸ்தரிக்கப்படத் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய பிற்பட்ட நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளுக்கு இத் திட்டத்தைப் பரவலாக்க ஒரு சிறப்புத் திட்டம் தயாரிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதி வசதியைப் பொறுத்துத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கிறது. நிதி வசதி பெருகினால்தான் அந்த அளவு செய்ய முடியும். எந்த அளவுக்கு அவர்கள் ஒதுக்கித் தருகிறார்களோ அந்த அளவுக்குத் தான் அதைச் செய்ய முடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education whether the scheme has been implemented in Dharmapuri district or going to be introduced there ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் ஹரூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் கிடைக்கத்தக்கதாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஒன்றியம் என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை ஒதுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த வகையில் சென்ற ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை ஊராட்சி ஒன்றியம் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு சில மாவட்டங்களில் இரண்டு மூன்று ஒன்றியங்கள் வந்திருக்கின்றன. ஆகவே, ஒன்றுமே இல்லாத நீலகிரி மாவட்டம் இந்த ஆண்டு தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாக இருப்பதை மூன்றாக்க முயற்சிக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : அப்ளேடு நூட்ரிஷன் ப்ரோக்ராமை இம்ப்ளிமெண்ட் செய்ய ஆண்டொன்றுக்கு எவ்வளவு செலவாகிறது ? ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு சில ஒன்றியங்கள் என்று வைத்தால், சத்துள்ள உணவை மூன்று அல்லது ஐந்து ஆண்டுக் காலத்திற்குள் அந்தப் பகுதியில் கொடுத்தால் குழந்தைகள் உண்மையிலேயே உடல் வலிவு பெறும் என்று சொல்கிறார்கள். அப்படி மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளில் சத்துள்ள உணவு கொடுக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 18 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டது. ஆகவே, மத்திய சர்க்கார் கொடுக்கும் நிதியின் அடிப்படையில்தான் இதைச் செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்ஸரியில் மருந்துச் செலவுக்காக ஐயாயிரம் ரூபாய்தான் யூனியன் செலவிடலாம் என்று இருப்பதைச் சற்று அதிகப்படுத்த சர்க்கார் உத்தரவிடுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மருந்து பற்றிய கேள்வி மூலக் கேள்வியிலிருந்து எழுவதல்ல. சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவைகளில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

திரு கே. டி. கே. தங்கமணி : இந்த அப்ளேடு நூட்ரிஷன் ப்ரோக்ராம் மொத்தம் எத்தனை பஞ்சாயத்து யூனியன்களில் இப்பொழுது அமுலாகியிருக்கிறது ? இன்னும் அமுலாகாமல் இருக்கும் பஞ்சாயத்து யூனியன்கள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுவரையில் 22 ஊராட்சி ஒன்றியங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மூன்று ஊராட்சி ஒன்றியங்களில் அமுல்படுத்தப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரிடமிருந்து இந்தச் சத்துணவு திட்டத்திற்கு எவ்வளவு உதவி வருகிறது ? மேலும் எவ்வளவு வேண்டும் என்று கேட்கப்படுகிறது ? ஆறு இடங்கள் கேட்டதில் மூன்று கிடைத்திருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நாம் கேட்ட ஆறு இடங்களையாவது தருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய சர்க்காரிடமிருந்து வருகிற உதவித் தொகை விவரம் இப்பொழுது இல்லை. ஆனால், ஆறு நாம் கேட்டோம். மூன்று தந்திருக்கிறார்கள். மறுபடியும் வற்புறுத்தி வருகிறோம். ஆறு இடங்களுக்கும் அனுமதி வந்தால் அதைச் சிறப்பாக நிறைவேற்ற முடியும். அதற்கான அனுமதியை எதிர்பார்க்கிறோம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : சத்துணவுத் திட்டத்தின் மூலம் என்ன என்ன சத்து உணவுகள் வழங்கப்படுகின்றன? எந்த முறையில் வழங்கப்படுகின்றன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊட்டச் சத்தும் விடமினும் கலந்துள்ள ரொட்டி முதலியவை குழந்தைகளுக்குத் தரும் முறையில் இத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. "கேர்" நிறுவனத்தின் ஆதரவோடும் மற்றவற்றின் ஆதரவோடும் இது நடைபெறுகிறது.

திரு ஜே. ஜேம்ஸ் : கன்யாகுமரி மாவட்டத்தில் மிகவும் பிற்போக்கான மேல்புறம், திருவட்டாறு ஆகிய இரண்டு பஞ்சாயத்து யூனியன்களேயும் இத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகப் பரிந்துரை செய்யப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் எந்த எந்தப் பகுதி பிற்பட்டது என்று கணக்கெடுத்து அறிவிக்கின்றாரோ அந்த அடிப்படையில் சேர்க்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்காக மாநில சர்க்கார் ஏதாவது செலவிடுகிறதா? பஞ்சாயத்து யூனியன்களும் இது சம்பந்தமாக ஏதாவது செலவழிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

கிராமத்தில் அரிசனக் குழந்தைகள் சத்துணவுத திட்டத்தின் மூலமாகத்தான் பள்ளிகளுக்கு வர வாய்ப்பு அதிகமாக இருக்கிற காரணத்தால் அரிசனப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் இதற்காகச் செலவு செய்கிற நிலையில் இல்லை. மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் செலவு செய்கிறது. மொத்தத்தில் 12 இலட்ச ரூபாய் என்று குறிப்பிட்டேன். எந்த எந்த அளவுக்கு என்ற விவரத்திற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம். ஆனால், ஓரளவுக்கு மிகப் பிற்பட்ட பகுதிக்கு வசதி அளிக்க வேண்டும் என்ற முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நிதிவசதி அதிகப்படுத்தப்பட்டால் அதை விரிவுபடுத்தலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : சத்துணவுத் திட்டத்திற்கு கேர் நிறுவனம் தவிர வேறு எந்த எந்த நிறுவனங்கள் உதவி புரிகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கேர் நிறுவனம்தான் உதவி புரிந்து வருகிறது.

Thiru B. VENKATASWAMY : **Sir, the scheme was said to have been extended to Harur in Dharmapuri district. May I know from the Hon. Minister whether any other block will come under this programme in Dharmapuri District.**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு ஊராட்சி ஒன்றியமும், ஹரூர் ஊராட்சி ஒன்றியமும் சத்துணவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

புதிய பள்ளிகள்

* 477 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் அப்பாவரம் கிராமத்தில் பள்ளிக் கட்டடம் ஆயத்தமாக இருந்தும், பள்ளி தொடங்குவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அப்பாவரம் கிராமத்தில் 1972–73-ல் புதிய பள்ளி துவக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்படிப் பள்ளிக்கூடங்களைத் துவக்குவதற்கு வேண்டிய வசதிகளை மக்கள் செய்து கொடுத்தால், அவைகளைத் துவக்குவதற்கு அரசு உடனடியாகப் பரிசீலித்து அனுமதி வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊர் மக்கள் பள்ளிகளைத் திறப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்தாலும், அங்கே பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கு வேண்டிய கட்டட வசதி, மாணவர்கள் வருகை, மற்ற பிற வசதிகளை எல்லாம் பார்த்துத்தான் அனுமதி அளிக்கப்படும். மக்களிடம் இருந்து புதிய பள்ளிகளைத் திறப்பதற்கு விண்ணப்பம் வந்தால் இந்த வசதிகள் எல்லாம் இருக்கின்றனவா என்பதை மாவட்டக் கல்வி அதிகாரிகள் மூலம் பரிசீலனை செய்து, அதன் பின்னால் தான் முடிவு செய்யப்படும்.

* 478 வினா.—திரு. என். கிட்டப்பா, மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதி 22-வில்லியநல்லூரில் ஒரு உயர்நிலைப் பள்ளி அமைத்திட செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. நா வீராசாமி : தலைவரவர்களே, 1973–74 ஆம் ஆண்டில் நம்முடைய தமிழ்நாட்டில் புதிதாக எத்தனை உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : புதிதாக 40 உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்குவதற்கான திட்டம் இருக்கிறது. அந்தக் கணக்கைப் பார்த்தால் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒரு பள்ளி என்ற அளவில்தான் வரும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய மாவட்டத்திற்கு அதிகமாகக் கேட்கமாட்டார் என்று நினைக்கிறேன்.

திரு. ந. தருமலிங்கம் : தலைவரவர்களே, இந்த ஆண்டு எந்தெந்த மாவட்டங்களில் உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்க அரசு உத்தேசித்துள்ளது ? தென்னாற்காடு மாவட்டத்தில் எத்தனைப் பள்ளிகள் திறக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாவிட்டாலும் பதில் சொல்கிறேன். ஏப்ரல், மே மாதங்களில், எங்கெங்கே பள்ளிகள் திறக்கப்படலாம் என்று மாவட்டக் கல்வி அதிகாரிகள் அறிக்கை அனுப்புவார்கள். அந்த அறிக்கைகளைப் பரிசீலித்து, எந்தெந்த இடங்களில் வசதிப்படுமோ அங்கெல்லாம் திறக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் மூலக் கேள்வியோடு தொடர்புடைய கேள்விகளைக் கேட்க வேண்டும். மூலக் கேள்வியோடு கொஞ்சம் தொடர்பு இல்லாமல் இருந்தாலும் பொதுவாகக் கேட்டால் பரவாயில்லை ; குறிப்பிட்ட ஒரு இடத்தைப் பற்றிக் கேட்டால் பதில் சொல்ல முடியாது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது 40 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்படும் என்று சொன்னார்கள். அதில் எத்தனை பெண்கள் பள்ளிகள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 40 பள்ளிகள் என்று பொதுவாக இருக்கிறது. ஆண்களுக்கு எத்தனை, பெண்களுக்கு எத்தனை என்ற குறிப்பு இல்லை. இருக்கின்ற தேவைகளின் அடிப்படையில் அதுபற்றி முடிவு செய்யப்படும்.

திரு. கே. ஏ. வகாப் : தேவைகளின் அடிப்படையில் பள்ளிகள் திறக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படியானால் பள்ளிகள் திறப்பதற்கு எத்தனை மாணவர்கள் இருக்க வேண்டுமென்று ஏதாவது நியதி வைத்திருக்கிறார்களா ? அல்லது வேறு ஏதாவது விதிமுறைகளை வைத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உயர்நிலைப்பள்ளி திறக்கப்பட வேண்டுமானால் ஒரு வகுப்பிற்கு குறைந்தது 25 மாணவர்கள் இருக்க வேண்டும். பொது மக்கள் ஆதரவு இருக்க வேண்டும் ; கட்டட வசதி இருக்க வேண்டும் ; கட்டடம் கட்ட 12,500 ரூபாய் பொது மக்கள் நிதி திரட்டிக் கொடுக்க வேண்டும். 5 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். அந்தப் பள்ளிக்கூடம் திறக்கப்படுவதால் பக்கத்திலே இருக்கின்ற வேறு பள்ளிகள் மூடப்படக்கூடிய நிலை ஏற்பட்டு, ஆசிரியர்களுக்கும் அந்த ஊர் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படக் கூடாது. இப்படிப்பட்ட விவரங்களை எல்லாம் மாவட்ட கல்வி அதிகாரிகள் மூலம் பரிசீலனை செய்து முடிவு செய்யப்படும்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : தலைவரவர்களே, சில இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்க பொதுமக்கள் ஆதரவு இருந்து, கட்டடத்திற்கு வேண்டிய நிதியும் கொடுத்து, மாணவர்கள் எண்ணிக்கையும் இருந்து, பள்ளிக்கூடம் கட்டுவதற்குப் பக்கத்திலே வசதியாக புறம்போக்கு நிலம் இருந்தால் அந்தப் புறம்போக்கு நிலத்தை பள்ளிக்கூடத்திற்காக பதித்துக் கொடுக்க அரசாங்கம் முன்வந்து, பள்ளிக்கூடம் திறக்க அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மற்ற வசதிகள் எல்லாம் இருந்தால், பக்கத்திலே புறம்போக்கு நிலம் இருந்தால் அதைப் பதித்துக் கொடுக்க—வேறு இடையூறுகள் இல்லாமல் இருந்தால்—அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, புதியப் பள்ளிக்கூடம் திறக்க வேண்டிய தேவையும், அவசியமும் இருந்து, கட்டடம் கட்டுவதற்கான 12,500 ரூபாய் கொடுக்க வசதி இல்லாமல் வறட்சி நிலையிலே இருக்கக்கூடிய பல இடங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் கோவில் வருமானங்களிலிருந்து இந்த நிதி உதவியைச் செய்ய விசேஷ சலுகை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கோவில் வருமானத்திலிருந்து உதவி செய்ய முன்வந்தால், பக்கத்திலே இருக்கிற கோவில் நிர்வாகத்தினர் முன் வந்தால், அரசாங்கம் ஆட்சேபிக்காது.

திரு. ஏ. ஆர். சுப்பையா : இப்போது இருக்கக்கூடிய நிலையில் பெண்கள்தான் நிறையபேர் நல்ல முறையில் படிப்பதாகத் தெரிகிறது. ஆகவே, புதிதாகத் திறக்கப்படும் 40 பள்ளிகளில், பெண்கள் பள்ளிகளை அதிகமான அளவில் திறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பள்ளிக்கூடம் திறக்க வேண்டுமென்று சொல்லி வருகின்ற விண்ணப்பங்களின் அடிப்படையில், தேவையை ஒட்டி பரிசீலனை செய்து, அதன் பிறகு ஆண்கள் பள்ளிகள் எத்தனை, பெண்கள் பள்ளிகள் எத்தனை என்று முடிவு செய்யப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, சில கிராமப் பஞ்சாயத்துக்களில் நிறையப் பணம் இருக்கிறது. அந்த வட்டாரத்தில் உயர்நிலைப் பள்ளி கட்ட வேண்டுமென்றால் அந்தப் பணத்தை இந்தக் காரியங்களுக்கு மாற்றிக்கொள்ள அனுமதி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து அப்படி விண்ணப்பங்கள் வருமானால் அதைப்பற்றி தனியாகப் பரிசீலனை செய்யலாம்.

திரு. கே. ஏ. வகாப் : இப்போது 8-வது ஸ்டாண்டர்டு வரையுள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக—சில இடங்களில்—மாற்ற வேண்டுமென்று விண்ணப்பங்கள் வருகின்றன. அப்படிப்பட்ட இடங்களில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்ற அனுமதி வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்படிப்பட்ட நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டுமென்றால், நான் ஏற்கெனவே கூறியபடி பக்கத்திலே இருக்கின்ற வேறு பள்ளிகள் பாதிக்

காத அளவுக்கு இருந்து, மற்ற பல வசதிகளும் இருக்குமானால், மாற்ற வேண்டுமென்று சொல்லி ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால் அதுபற்றி கவனிக்கப்படும்.

Panchayat Union Dispensaries

*** 479 Q.**—THIRU S. SANGUMUTHU THEVAR & THIRU S. DORAISAMY: Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(a) whether there are proposals under the consideration of the Government to take over the dispensaries run by the Panchayats ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) மாவட்ட ஆட்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வந்து பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்ட மருந்தகங்களை 5 வருடங்களில் படிப்படியாக ஏற்க அரசு திட்டமிட்டுள்ளது. முதற்படியாக, 45 பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்களை நடப்பாண்டில் (1972—73) அரசு ஏற்றுள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இப்படி முழுமையாக ஏற்றுக்கொள்வதால் அரசாங்கத்திற்கு இதனால் எவ்வளவு செலவாகும்? இந்த மருந்தகங்கள் எத்தனை வருடங்களில் எடுத்துக் கொள்ளப்படும் என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : துணைத் தலைவரவர்களே, இந்த ஆண்டில் 16 டிஸ்பென்சரிகளை எடுத்துக் கொள்வதாக முடிவு செய்யப் பட்டிருக்கிறது. அதற்கு 7 லட்சம் ரூபாய் நடப்பாண்டு முறையில் செலவாகும். கடந்த ஆண்டு 45 டிஸ்பென்சரிகளை எடுத்துக் கொள்வதற்குப் பணம் ஒதுக்கப் பட்டது. இந்த ஆண்டு வேறு பல செலவுகளை மேற்கொள்ள வேண்டி வந்ததால் 16 டிஸ்பென்சரிகளை மட்டுமே எடுத்துக் கொள்ள முடியும். மேலும் நெருக்கடிகள் ஏற்பட்டு, இந்த முறையில் சென்றால், மொத்தத்தையும் எடுத்துக் கொள்ள 7, 8 ஆண்டுகள் கூட ஆகலாம். மருந்தகங்களை எல்லாம் அரசாங்கம் எடுத்துக் கொள்வதால் மட்டும் மக்களுக்குப் பயன் ஏற்பட்டுவிடாது ; எடுக்கின்ற மருந்தகங்களில் போதுமான வசதிகளையும் செய்து கொடுத்தால்தான் மக்கள் பயனடைய முடியும்.

திரு. என். டென்னிஸ் : சில பஞ்சாயத்து யூனியன்களில் நிதி நிலைமை மிகவும் மோசமாக இருக்கிற காரணத்தினால் மருந்தகங்களைச் சரியாக நடத்த முடியாமல் இருக்கிறது. அப்படி மிகவும் மோசமாக இருக்கக் கூடிய மருந்தகங்களை அரசாங்கமே எடுத்து நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மோசமாக இருக்கிறது என்ற அடிப் படையில் எடுப்பது அவ்வளவு சரியாக அமையாது. முன்பு ஜில்லா போர்டு மருந்தகங்களாக இருந்தவை ஒன்றியங்களுக்கு மாற்றப்பட் டிருக்கிறது. இவற்றுக்குச் செலவும் அதிகமாக இருப்பதனால் ஒன்றி யங்களினால் அவற்றை நிர்வகிக்க முடியாமல் இருக்கிறது. இது போல 200, 220 மருந்தகங்கள் இருக்கின்றன. இவற்றை முறையாக எடுத்துக் கொள்வது, ஆரம்பச் சுகாதார நிலையங்களோடு இணைக்கப்பட்டிருக்கும். மருந்தகங்களை எடுத்துக் கொள்வது என்கிற ஒரு முறையில் தான் இவை மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : கிராமப் பகுதிகளில் உள்ள மருந்தகங்களை எடுத்துக் கொள்வதில் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு எண்ணிக்கை குறைந்திருப்பது வருந்தக்கூடியதாக இருக்கிறது. மருத்துவ இயக்குநர் அவர்களே எதை எதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு பட்டியல் கொடுத்திருக்கிறார். அந்த அடிப்படையில் எங்கள் வட்டாரத்தில் இருப்பதை எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கனம் அங்கத்தினர் தமிழ்நாடு பூராவும் சுற்றுப்பயணம் செய்தாலும் கும்மிடிப்பூண்டியில் வந்துதான் தங்கிக்கொள்வார். இந்த வட்டார மக்களுடைய குறைபாடுகளை எடுத்துத் தான் கூறுவார். அமைச்சராக இருக்கிற காரணத்தினால் நாங்கள் பரவலாகப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. மருந்தகங்களை எடுத்துக் கொள்வதில் ஆகிற செலவோடு பார்க்கிறபோது அதனால் மக்களுக்குக் கிடைக்கிற பயன் குறைவாகத்தான் இருக்கிறது. டாக்டருக்கு எண்ணூறு ரூபாய் அளவு சம்பளம், உதவியாளர்கள் 3,4 பேர்களுக்குச் சம்பளம் ஆக அரசாங்கம் ஒரு டிஸ்பென்சரியை நடத்த ஆண்டுக்கு 25 ஆயிரத்திற்குமேல் ஆகிறது. தரம் கொஞ்சம் குறைவாக இருந்தாலும் ஒன்றியங்கள் பத்தாயிரத் திற்குள் நடத்துகின்றன. ஓரிடத்தில் இவ்வளவு அதிகமான ரூபாய்களை நாம் செலவழித்துக் கொண்டிருக்க வேண்டுமோ என்பதைத் தான் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவேதான் 2 டிஸ்பென் சரிக்கு ஒரு டாக்டர் என்ற முறையில் போட முடியுமா என்பதும் ஆலோசிக்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப் : எல்லா மருந்தகங்களையும் அரசாங்கம் உடனடியாக எடுத்துக் கொள்ளாவிட்டாலும் அங்கே வேலை செய்கின்ற டாக்டர்களை எல்லாமாவது அரசாங்கம் டாக்டர்களாக எடுத்துக்கொள்ள, ஏதாவது குறிப்பு அரசாங்கத்தினிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நோயாளிகளைப்பற்றி அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொள்கிற அளவுக்கு டாக்டர்களைப் பற்றி எடுத்துக் கொள்ள இயல்வதில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அரசாங்கம் எடுத்துக்கொள்கிற டிஸ்பென்சரிகளிலாவது சித்த மருத்துவப் பிரிவு ஒன்றையும் அமைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்போது இருக்கிற நடைமுறை ஏற்கெனவே அது எந்த மருந்தகமாக—சித்த மருந்தகமாகவோ, ஆயுர் வேத மருந்தகமாகவோ, அலபதி மருந்தகமாகவோ—இயங்கிக்கொண்டிருந்ததோ அந்த மருந்தகமாகவே அது இயங்கும் வகையில் தான் எடுத்துக் கொள்கிறோம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: சிலசில இடங்களில் குறிப்பிட்ட நோய்கள் தான்–குறிப்பாக மலேரியா, பைலேரியா, எலிபன்டெயாசிஸ் போன்ற வியாதிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பிரதேசங்களிலாவது அரசாங்க மருந்தகங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த மருந்தகங்கள் நோய்க்குச் சிகிச்சை செய்கிற க்யூரேடிவ் டிஸ்பென்சரிகள். ஆனால் உறுப்பினர் குறிப்பிட்ட வியாதிகளைப் பரவவிடாமல் தடுக்க அந்தப் பகுதியில் நலத் துறையைச் சேர்ந்தவர்கள் ப்ரிவென்டிவ் பணி செய்யும் முறையில் இயங்குகின்றனர். இந்தப் பகுதி விஸ்தரிக்கப்பட வேண்டுமென்றால் அது பற்றி எழுதினால் அவர்கள் அதைப் பரவலாக்க ஏற்பாடு செய்யலாம்.

திரு. கு. காமாட்சி : ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படும் மருந்தகங்களை நிதிநிலைக்கேற்ப படுக்கை வசதிகளுடன் கூட ஆஸ்பத்திரிகளாக விஸ்தரித்துக் கொள்ள அவர்கள் முன்வந்தால் அரசு அனுமதிவழங்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உள்ளாட்சித்துறை மூலமாக நலத்துறையினிடம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன் : ஊராட்சி மருந்தகங்களில் இருக்கக்கூடிய ஒரு முக்கியமான குறைபாடு அங்கே மருந்துகள் இல்லை என்று சொல்கிறார்கள். அதைப் போக்க அரசு உடனடியாக ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது ஒரு முக்கியமான குறைபாக இல்லை. முதலாவது முக்கியமான குறைபாடு நோய்கள் அதிகமாக இருக்கிறது என்பது. இரண்டாவது முக்கியமான குறைபாடு ஒன்றியத்தில் நிதி இல்லை என்பது. மூன்றாவது முக்கியமான குறைபாடு ஒன்றியம் இந்த நிர்வாகத்தில் அக்கறை செலுத்த இல்லை என்பது. நான்காவது முக்கியமான குறைபாடு பொதுமக்கள் ஒன்றியத்துக்கு வரிப்பணமாக இதற்கு அதிகப் பணம் கொடுக்க முன்வருகிற மனப்பான்மை இல்லாமல் இருப்பது. ஐந்தாவது முக்கியமான குறைபாடு மருந்து இல்லை என்பது. ஆறாவது முக்கியமான குறைபாடு இருக்கிற மருந்துகளும் சில இடங்களில் காணாமல் போவது.

திரு. மா.வெ. கரிவேங்கடம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆறு குறைகள் இருப்பதாகச் சொன்னார்கள். அவைகளைக் களைய என்ன நடவடிக்கை எடுப்பார் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்தக் குறைகளைக் களைய சட்டமன்ற உறுப்பினர்களும், மருந்தகம் செம்மையாக நடைபெற பொது மக்கள் தங்களுடைய கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்கிற உணர்ச்சியை அந்த அந்தப் பகுதி மக்களுக்கு ஊட்ட வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தக்கூடிய சித்த மருந்தகங்களையும் அரசாங்கமே எடுத்துக் கொள்ள இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நாம் ஊராட்சி ஒன்றியங்கள் நடத்துகிற மருந்தகங்களை எடுத்துக் கொள்கிறபோது அவை எந்த மருந்தகமாக இயங்கி வருகிறதோ, அந்த மருந்தகமாகவே இயங்கி வரும் நிலையில்தான் எடுத்துக்கொள்ள இருக்கிறோம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Panchayat Unions are expected to do a lot of work. Their major problem is irrigation and roads. These problems are too heavy and they find it very difficult to pay attention properly to dispensaries. May I know from the Hon. Minister for Health whether without prolonging the period he will see that all the dispensaries are taken over by the Government.

THE HON. THIRU K. ANBAZHAGAN : I have already explained the position of the Government and the priorities that are to be given for certain dispensaries. The priority will always be looked into and it cannot be said that all dispensaries can be taken over by the Government immediately.

திரு. எஸ். நல்லசாமி : தலைவர் அவர்களே, ஒன்றியத்தினுடைய மருந்தகங்களை எடுத்துக் கொள்வதில் அரசாங்கம் ஏதாவது ஒரு முறையை வைத்துக் கொண்டு—இவ்வளவு ஜனத்தொகை கொண்ட பகுதியில் உள்ள மருந்தகங்களை எடுத்துக் கொள்வது—என்பதாக செயல் படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினர் அவர்கள் நலத் துறை நடவடிக்கையைக் கூர்ந்து கவனித்தால் ஒருமுறை வைத்துக்கொண்டு தான் செயல்படுகிறது என்பதை உணர்வார்கள். என்ன முறை என்பது, அது அமைந்திருக்கிற இடம், அருகாமையில் வேறு மருந்தகங்கள் இல்லாத சூழ்நிலை, மக்கள் எண்ணிக்கை, வருமானம் இது போன்றவற்றைக் கருதித்தான் எடுக்கப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து முற்பகல் 9-30 மணி
கூட்டு மன்றத்திற்கு ஒரு பிரதம சுகாதார நிலையம் இருக்கிறது. அதோடு மேலும் ஒரு சுகாதரா நிலையம் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கடந்த காலமாகவே 60,000 மக்கள் கொண்ட ஒன்றியங்களுக்கு ஒரு ஆரம்பச்சுகாதார நிலையம் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், இன்றையதினம் ஒரு ஒன்றியத்திலே ஒரு லட்சம் மக்களுக்கு மேல், சில ஒன்றியங்களில், ஒரு லட்சத்து 40 ஆயிரம், ஒரு லட்சத்து 50 ஆயிரம்

மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, 60,000 பேருக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற நிலையில் இரண்டாவது ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக் கொண்டு, அதற்குத் தேவையான நிதியை ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். ஆனால், மத்திய அரசு மற்றொரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பதை ஏற்றுக் கொண்டாலும் குடும்ப நல மருத்துவ மனையையும் இரண்டாவது ஆரம்பச் சுகாதார நிலையத்துடன் அமைக்கப்படுவதற்கு இப்பொழுது உறுதி சொல்ல முடியாது என்று தெரிவிக்கிறது. ஆகவே, அடிப்படை செலவுகள், மூலதனச் செலவுகள் இவைகளை ஏற்றுக் கொள்வதிலே இடர்பாடுகள் இருக்கின்றன. ஆனால், அரசாங்கம் ஏதாவது ஒரு முறையில் ஒன்றியங்களில் பரவலான முறையில், நன்மையளிக்கக்கூடிய வகையில் நடவடிக்கை மேற்கொள்ள ஆலோசனை செய்து வருகிறது.

திரு. ந. தருமலிங்கம் : ஊராட்சி மன்றங்களால் நடத்தப்படும் மருந்தகங்களில் ஒரு சில இடங்களிலே டாக்டர்கள் இருப்பதில்லை. பிரதம சுகாதார நிலையங்களில் இருக்கிற டாக்டர்கள்தான் அங்கு சென்று கவனிக்க வேண்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை அகற்றுவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த நிலையையும் அகற்றிவிட்டால் பிறகு, உள்ள மருத்துவ நிலையத்தை யார் கவனிப்பார்கள் என்று தெரியவில்லை (சிரிப்பு). ஆனால், உள்ளபடியே, சப்-செண்டர்களிலே, அரசுத் துணை மருந்தகங்களிலே ஆரம்பச் சுகாதார நிலைய டாக்டர்களைக் கொண்டு கவனிக்க முடியுமே தவிர, ஒன்றிய டிஸ்பென்சரியிலே, தனியாக உள்ள டிஸ்பென்சரியிலே ஆரம்பச் சுகாதார நிலைய டாக்டர் பணியாற்ற வாய்ப்பு இல்லை. அந்தப் பிரச்சினை ஆய்வில் இல்லை.

Thiru B. VENKATASWAMY : Sir, the Hon. Minister has stated that panchayat union dispensaries will be taken by the Government on a pased programme. If any pnchayat unions want to open dispensary, may I know from the Hon. Minister whether it will be opened by the panchayat unions or by the Government ?

The Hon. Thiru K. ANBAZHAGAN : Whenever a panchayat union passed a resolution to the effect that they want to open a dispensary, the R.D. & L.A. Department will permit it to do so on the understanding that their resources are enough for the functioning of the dispensary? On the examination of the resources position of the panchayat union, the R.D. & L.A. Department approves it and the Health Department also agrees to it.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத்தாலே ஆரம்பிக்கப்பட்டு நடத்தபபட்டு வருகிற ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஒரு சித்தப் பிரிவு ஏற்படுத்தினால், அப் பகுதியிலுள்ள மக்களுக்கு வாத சம்பந்தப்பட்ட நோய்கள், இளம்பிள்ளை வாதம் போன்ற நோய்களைப்

போக்க ஏதுவாக இருக்குமே, அதை அரசு பரிசீலனை செய்து, ஊராட்சி ஒன்றிய சுகாதார நிலையத்தில் ஒரு சித்த வைத்திய பிரிவு ஏற்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சித்த மருத்துவ மருந்தகங்களை ஏற்படுத்துவதில் ஒன்றியங்கள் ஆர்வத்தோடு முன்வரவேண்டுமென்றுதான் அரசாங்கம் கேட்டுக்கொள்ள முடியும். அரசாங்க ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூன்று வகையான பணிகளைச் செய்கின்றன. ஒன்று நோய்த் தடுப்பு முறைகள், இரண்டாவது சிகிச்சை முறைகள், மூன்றாவது குடும்ப நலத் திட்டம், ஆக, இந்த மூன்றோடு சேர்த்து மற்றவைகளை நிர்வகிப்பதைவிட, தனியாகச் சித்த மருந்தகங்களை அங்கு அமைக்க அவர்கள் முன்வருவார்களானால், அரசாங்கமும் அவைகளுக்கு எந்த அளவுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு ஒத்துழைப்பு தரும்.

பள்ளப்பட்டி மருத்துவமனையில் பரிசோதனை நிலையம்

*480 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளப்பட்டி (அரவாக்குறிச்சி தொகுதி) அரசினர் மருத்துவ மனையில் பரிசோதனை நிலையம் (Clinical Laboratory) ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ): பள்ளப்பட்டி அரசினர் மருத்துவ மனையில் ஒரு பரிசோதனை நிலையம் அமைக்க சமீபத்தில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் அங்கே தரப்பட இருக்கிறது என்று சொன்னது மகிழ்ச்சி தருகிறது. அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு எக்ஸ்-ரே கருவிகள் பொருத்தப்படுமா என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் தருவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எக்ஸ்-ரே ஆராய்ச்சிப் பிரிவுகளும் வருமா என்று கேட்கிறார்கள். லேபரட்டரிகள் ஏற்படுத்தப்படுவதற்கான கட்டிடத்தை ஒட்டிய கேள்வி இது. அந்தக் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்படுமானால், தொடர்ந்து மற்றவைகளும் நிறைவேற்றப்படும் என்று நான் நம்புகிறேன்.

திரு. ந. தருமலிங்கம் : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, அரசினர் மருத்துவ மனைகளில் பரிசோதனைப் பிரிவு அமைக்க நமது அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறதா ? இந்த முறையில் ஒவ்வொரு மருத்துவ மனையிலும் அரசு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்குள்ளவர்களே, ரூ. 35,000 வசூல் செய்து அரசுக்குத் தந்திருக்கிறார்கள். இதே முயற்சியை அவர்களும் செய்யலாம்.

மதுரையில் பார்மஸிஸ்ட் பயிற்சி

* 481 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் D. பார்மஸி பயிற்சிக்கு ஆண்டுதோறும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனரா ?

(இ) ஆம் எனில், எம்முறையில் தேர்வு நடத்தப்படுகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகமொன்றின் பொது விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கொண்டுள்ள, பள்ளி இறுதித்தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் முழுமையாக தகுதியைக் கொண்டு, முறையாக அமைக்கப்பட்ட குழுவினால் பார்மஸி பயிற்சிக்கு நபர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். மேலும் இந்திய மருத்துவக் கழகத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்ட, மேற்படி தேர்வுகளுக்குச் சமமான வேறு தேர்வில் வெற்றி பெற்றவர்களும் கூட மேற்படி பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுவர். பள்ளி இறுதித் தேர்வில் தவறியவர்கள் அல்லது பள்ளி இறுதிப் படிப்பினை முடித்தவர்கள் மேற்படி பயிற்சிக்குத் தேர்வு பெற தகுதியுடையவரல்லர்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இங்கு கேட்டிருக்கக்கூடிய கேள்வி D. பார்மஸியைப் பற்றி. டி. பார்மஸி சம்பந்தப்பட்ட தேர்வுக்கான இந்தத் தகுதிகளா ? அல்லது பி. பார்மஸி ரெசர்ச் பிரிவில் சேரக் கூடியவர்களுக்குத் தகுதி இதுவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கேள்வி தமிழிலே அமைந்திருக்கிறது. திரு. காவேரிமணியம் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். இது மதுரையில் அரசினர் மருத்துவக் கல்லூரியில் டி. பார்மஸி பயிற்சிக்கு என்று கேட்கப்பட்டிருப்பதால், பி. பார்மஸிக்கு என்று சொல்லப்படாத காரணத்தினால், டிப்ளமா இன் பார்மஸி என்று எடுத்துக் கொண்டு டிப்ளமோ பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஓராண்டு பயிற்சியாக இருக்கிற டி. பார்மஸியில் சேருகிறவர்கள் பிறகு பி. பார்மஸியில் சேருவதற்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள் என்று, நான் நினைவிலிருந்து சொல்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த வகுப்பானது மதுரையிலும், சென்னையிலும் மட்டும்தான் இப்பொழுது இருக்கிறது. மதுரையில் ஆண்டுதோறும் எத்தனை மாணவர்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள், சென்னையில் எத்தனை மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்? அப்படி தேர்விலே வெற்றி பெற்ற மாணவர்களில் இன்னும் எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: டிப்ளமா இன் பார்மஸி என்ற அந்தப் படிப்புக்கு 100 மாணவர்கள் ஆண்டுதோறும் சேர்க்கப்பட்டதாக இதிலே ஒரு குறிப்பு இருக்கிறது. இவர்கள், வேலை கிடைப்பதில்லை என்று அதிகமாக புகார் சொல்வதில்லை. காரணம், சாதாரண மருத்துவமனைகளிலே உள்ள கம்பவுண்டர் என்ற வேலை இவர்களுக்கு எளிதாக கிடைக்கிறது என்று கருதுகிறேன். ஆனால், பி. பார்மஸி தகுதி உள்ளவர்களுக்கு அதிக வேலை கிடைக்கவில்லை என்பதால், அப்படி ஒரு குறை இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சிலோனிலிருந்து பர்மாவிலிருந்து வந்தவர்களுக்கு ஏதாவது சலுகை இந்த கோர்சுக்கு கொடுக்கப்படிருக்கிறதா ? அப்படியிருந்தால் அந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படி ஒரு குறிப்பு இல்லை.

Ten seats are reserved for service candidates. என்று ஏற்கெனவே வேலை பார்ப்பவர்களுக்கும் இதிலே விண்ணப்பித்துக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. Sixteen seats are reserved for scheduled castes and scheduled tribes, 28 seats for backward classes and the remaining 46 seats for the general pool.

திருமதி த. ந. அனந்தநாயகி: சென்னையிலே இந்த பார்மஸிஸ்டு கோர்சஸ்-ஐ மூடிவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்னையிலிருந்து எல்லாவற்றையும் மதுரைக்கு எடுத்துச் சென்று விட்டார்கள் என்பது உண்மையா ? ஏன் சென்னையிலே மூடப்பட்டது ? மீண்டும் சென்னையில் திறக்க உத்தேசிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்தக் கோர்சுகள் சில நேரங்களில் மூடி இருப்பது நல்லதாக இருக்கிறது. ஏனென்றால், மாணவர்கள் வேலை கிடைக்கவில்லை, படித்துத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை கொடுத்துவிட்டு, பிறகு வகுப்பு நடத்துங்கள் என்று சொல்கிறார்கள். மாணவர்கள் வகுப்புக்குச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்கிற அளவுக்கு இடர்ப்பாடு ஏற்படக் கூடாது என்பது அரசாங்கத்தினுடைய கொள்கை. அப்படி, சில ஆண்டுகளுக்குமுன் எம். எஸ்ஸி. வகுப்புகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், உள்ளபடியாக அந்த வகுப்பை நிறுத்தவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. சென்னை மருத்துவக் கல்லூரியை உயர்நிலை ஆராய்ச்சிக் கல்வி நிலையமாக உயர்த்த வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில் பட்டப் படிப்புக்கு முற்பட்ட வகுப்புகளில் அதிக மாணவர்கள் இருப்பது நல்லதல்ல என்று நிபுணர்கள் தெரிவித்தார்கள். அப்படிச் சொன்னதன் காரணமாக, கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் இந்தப் பயிற்சியளிக்கும் வகையில்

திட்டத்தை மாற்றியிருக்கிறோம். அதே நேரத்தில் வேலை நிறுத்தம் செய்வோம், தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை கொடுக்காவிட்டால், என்று மாணவர்கள் சொன்னதனால் சென்ற ஆண்டு சென்னையிலே சேர்ப்பதை நிறுத்திவிட்டு மதுரையிலே சேர்த்தோம். இந்த ஆண்டு மாணவர்கள் அரசாங்கத்தை வற்புத்தி சில காரியங்கள் நடைபெற விரும்புவதால் இந்த ஆண்டு கூட சென்னையில் அந்த வகுப்பில் மாணவர்களைச் சேர்க்காமல் அடுத்த ஆண்டு சேர்ப்பது நல்லது என்பது அரசாங்கத்தினுடைய எண்ணம்.

திரு. கே. ஏ. வகாப்: பி. பார்மஸி, டி. பார்மஸி மாணவர்கள் சில தனிப்பட்ட மருந்தகங்களுக்குத் தேவைப்படுகிறார்கள். அவர்கள் அழைப்பிற்குப் போக இவர்கள் தயங்குகிறார்கள். அரசாங்க வேலையே வேண்டுமென்று கேட்கிறார்கள். தனிப்பட்டவர்களிடத்தில் வேலை பெற இவர்களுக்கு வசதிகளை செய்து அவர்களிடமே சேர்க்க அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மருந்துக் கூடங்களிலே சேரக்கூடியவர்கள் டிப்ளமோ இன் பார்மஸி உள்ளவர்கள், மருந்து தயாரிப்பவர்கள் என்ற தகுதி பெற்றவர்கள், டிகிரி பெற்றவர்கள். அந்த மருந்து உற்பத்தி நிலையங்களில் ஏற்கெனவே உள்ள அகில இந்திய சட்டப்படி பி. எஸ்ஸி. கெமிஸ்ட்ரி உள்ளவர்களோ அல்லது வேறு விதமாக பட்டப் படிப்பு உள்ளவர்களோ நியமிக்கப்படலாம் என்ற நிலைமை இருக்கிறது. பி. எஸ்ஸி. பட்டம் பெற்றவர்களுக்கு ரூ. 300 சம்பளம் என்றால், பி. எஸ்ஸி. பார்மஸி பட்டம் பெற்றவர்களுக்கு ரூ. 400 தர வேண்டியிருக்கிறது. நான் சொல்வதிலே சற்று தொகை வேறுபாடு இருக்கலாம். ஆகவே, பி. எஸ்ஸி.யையே எடுக்கிறார்கள். பி. எஸ்ஸி. பார்மஸி பட்டம் பெற்றவர்களை எல்லோரும் எடுத்துக்கொள்ளச் செய்ய வேண்டுமானால் மத்திய அரசு அந்தச் சட்டத்தை திருத்தி பி. பார்மஸி படித்த எல்லோருக்கும் வேலை வாய்ப்பு என்ற நிலையை உருவாக்கினால் இன்னும் கொஞ்சம் அதிகமாக மருந்து உற்பத்தி நிலையங்களில் அவர்களுக்கு வேலை கிடைக்கும். அப்பொழுது அந்தக் குறை நீங்கும். ஆனால், அரசாங்கம் அவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கக்கூடிய வாய்ப்புகளை அண்மையிலே செய்திருக்கிறது.

Psychological Research Institute

*482 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up any para-psychological research Institute in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இவ்விதமான ஆராய்ச்சி நிலையங்கள் வேறு மாநிலங்களிலே அமைக்கப்பட்டு அவையெல்லாம் திருப்திகரமாக செயல்படுகின்றன. ஆதலால் இங்கேயும் அப்படிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்கள் அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கண்ணுக்குத் தெரிந்த குறைகளைச் சீர்திருத்துவதற்குப் பல்வேறு முயற்சிகள் தேவைப்படுகின்றன. இது கொஞ்சம் தொலைவானது. telepathy, clairvoyance and precognisance என்று சொல்லப்படுகிற ஏறத்தாழ குறிசொல்வது போன்ற காரியங்கள், தொலைவிற்கு அப்பாலே நடைபெறுகின்ற காரியங்களை உணர்ந்து சொல்லுதல் பிறர் மனத்தினை உணர்ந்து சொல்லுகின்ற ஆற்றல் பற்றியது ஆகும். இது உடனடியாகத் தேவைப்படுகிறதா என்பதை அரசு ஆராய்ந்து பார்த்தபொழுது இதைவிட உடனடியாகத் தேவைப்படுகின்ற பலகாரியங்கள் இருப்பதால் அரசாங்கம் இதைப்பற்றி இப்பொழுது ஆலோசிக்கவில்லை.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, சிலர் அரசாங்க மருத்துவ மனைகளிலே எந்தவிதமான நோயும் இல்லாமல் படுத்து விடுகிறார்கள். எந்தவிதமான நோயும் இல்லை என்பதால் டாக்டர்களால் குணப்படுத்த முடியவில்லை. இதனால் அவர்கள் அங்கே படுத்துவிடுவதால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே மன இயல்புகளைக் கண்டறிந்து அதற்குத் தேவையான மருந்துகளைக் கொடுக்கக்கூடிய முறையிலே இப்படிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, உண்மையிலேயே சைக்காலஜி பற்றிய பாடங்கள் இப்பொழுது உள்ளன. இது பாரா-சைக்காலஜி. முழுவதும் சைக்காலஜி அல்ல. உண்மையாக மனக் குறையைக் கண்டறிந்து மருந்து கொடுப்பதற்கான அறிவு வாதத்திற்கு இது உட்பட்டதல்ல. ஆனால், உணர்ச்சி நிலையில் செய்யப்படவேண்டிய ஒன்றைப் பற்றியதாக இருக்கின்ற காரணத்தினாலே இதைப்பற்றி அதிக அளவிலே ஆராய்ச்சி செய்வதற்குப் போதுமான நிதியைச் செலவழிக்கக்கூடிய நிலை இப்பொழுது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: சமுதாயத்திலே புதிதாகத் தோன்றியிருக்கும் ஹிப்பியிஸம், ஹரே கிருஷ்ணா, நக்ஸலைட் போன்ற இயக்கங்கள் எல்லாம் உளவியல் கோளாறுகளினால் உண்டாகின்றன என்பதை அரசாங்கம் உணருகிறதா இல்லையா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பக்தி மார்கத்தில் ஏற்படுகிற தவறான இயக்கங்களாலோ அல்லது அறிவு மார்க்கம் என்று சொல்லிக் கொண்டு பலாத்கார இயக்கங்களிலோ ஈடுபடுகின்றனவர்களுக்கு ஓரளவிற்கு மனக்கோளாறு ஏற்படுகிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன். அது சைக்காலஜி. இது பாராசைக்காலஜி என்று சொல்லப்படுகிறது. இதிலே ஆராயப்படுகிற காரியங்கள் என்ன என்ன என்று கேட்டால் telepathy, clairvoyance and precognisance இந்த மூன்றும் சொல்லப்படுகிறது. இது

சைக்காலஜி என்ற முறையிலே காணப்படவேண்டிய ஆராய்ச்சிக்குச் சற்று அப்பாற்பட்டது. மேல்நாடுகளிலே இது அதிகமாக இடம் பெற்றிருக்கிறது. இங்கே உடனடியாக இடம்பெறவேண்டுமோ என்பதுபற்றி இன்னும் முடிவுகட்டவில்லை.

திரு. நா. வீராசாமி : நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு பெரிய பெரிய பதவிகளில் உள்ள அதிகாரிகள் கிராம மக்களிடத்திலே பழகுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அந்தப் பெரிய பதவிகளிலே உள்ளவர்கள் கிராம மக்களின் மனப் பான்மையைப் புரிந்துகொள்ளவில்லை. அப்படிப்பட்ட ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், மற்ற பெரிய அதிகாரிகளுக்கு சைக்கலாஜிக்கல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட்டில் டிரெயினிங் கொடுத்து பயிற்சி அளிக்க நம்முடைய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும், கிராம மக்களிடத்திலே பழகமுடியாத அதிகாரிகள் யாரும் இல்லை. அதிகாரிகளைப் பொறுத்த வரையில், அமைச்சர்கள் எவ்வழியோ அவ்வழிதான் அதிகாரிகள். ஆகவே அதிகாரிகள் குறைபாடு உடையவர்கள் அல்ல. கிராமத்தில் உள்ள சிலரிடத்தில் அதை உணர்ந்துக்கொள்வதற்கான நிலை இல்லை. இந்தக் கேள்வி அது சம்பந்தமானது அல்ல.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, உளவியல் ஆராய்ச்சி நம் நாட்டிற்கு அவசியமில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அண்மையிலே மறுபிறவி என்ற திரைப்படம் வந்திருக்கிறது. உளவியல் கோளாறினால் நல்ல குடும்பம் எப்படி பாதிக்கப்படுகிறது என்பதை நல்ல முறையிலே அது எடுத்துக் காட்டுகிறது. எனவே உளவியல் ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, உளவியல் பற்றி இப்பொழுதும் சென்னைப் பல்கலைக் கழகத்திலே பாடத் திட்டங்கள் இருக்கின்றன. மருத்துவக் கல்லூரியிலும் பாடத் திட்டம் இருக்கிறது. இதைத் தவிர மன நோய் சிகிச்சை வல்லுநர்களாவதற்கும் பாடத் திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இது அதுபற்றியல்ல. இதுதொலைவில் உள்ளதைப் பற்றி உணர்தல் அல்லது அறிதல், பிறர் மனத்தைக் காணுதல், குறி சொல்லுதல் போன்றவை பற்றி. அந்த அளவிற்கு இந்த அரசாங்கத்தால் முடியாது.

திரு. எஸ். ஆறுமுகம் : நடிகர்களைப் பார்த்து விசில் அடித்து வருகிறார்களே, அதற்கு மன மருத்துவம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நம்முடைய சக்தியைக் கொண்டு தான் அறிவை வளர்க்க வேண்டும். அறிவு வளர்ச்சி ஒன்று தான் இப்படிப்பட்ட நோய்களுக்கு மருந்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : சைக்காலஜி முறையில் டிரீட்மெண்ட் சென்னை நகரிலே தனியார்கள் பலராலும், அரசாங்கத்தாலும் கொடுக்கப்படுகிறது.

அதை மாவட்ட ரீதியிலே ஒவ்வொரு மாவட்டத்திலே உள்ள மருத்துவமனைக்கும் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மனநிலை கோளாறை மாற்றுவதற்கான மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. சென்னையிலே அப்படிப்பட்ட சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன என்றாலும் மாவட்டங்களுக்கும் அதைப் பரவலாக்க வேண்டுமென்ற கொள்கையை அரசு ஒப்புக் கொள்கிறது. அந்த முறையிலே மதுரையிலே அப்படிப்பட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. படிப்படியாக அது பரவலாக்கப்படும்.

Co-operative Societies for Beedi Workers.

***483 Q.—Thiru N.K. PALANISAMY :** Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Labour Ministers' Conference held at Mysore during 1972 has recommended to develop the beedi industry on co-operative basis ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) மாநில அரசுகள், அனைத்தும் பீடித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுவதை ஊக்குவிக்கலாம் என்று இம்மாநாடு ஒரு மனதாக ஒப்புக் கொண்டது. பீடித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை எங்கெல்லாம் அமைக்க வாய்ப்புகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் அமைப்பது பற்றி ஆராயப்படுகிறது.

திரு. என்.கே. பழனிசாமி : அந்த சிபாரிசின் அடிப்படையிலே நம்முடைய மாநிலத்திலே அதுபரிசீலிக்கப்பட்டதா? அப்படிப் பரிசீலிக்கப்பட்டதின் அடிப்படையிலே உடனடியாக என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்? அவர்களுக்கு கோவாப்பரேடிவ் முறையிலே சொஸைடி ஏற்பட்டால் பீடித் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சச் சம்பளம், பிராவிடெண்ட் பண்ட் வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தைப் போல் அரசு அதை ஆராய்ந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : பீடித் தொழிலாளர்களுக்குக் கூட்டுறவு முறையிலே ஏற்படுத்தப்பட்டு கேரளாவிலே நல்ல முறையிலே நடப்பதாகச் சொல்கிறார்கள். இந்த அரசாங்கம் கொள்கை ரீதியிலே ஒப்புக் கொண்டாலும் இந்த ஆண்டு ஏதாவது கூட்டுறவு சொஸைடி அமைக்க செயற் குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய மாநிலத்திலே இரண்டு இடங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவை சரியாக வேலை செய்யவில்லை. சரியாக வேலை செய்யாததால் ஒன்று மூடப்பட்டது, மற்றொன்றும் அதே நிலையிலேதான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனினும் கூட்டுறவு முறையில் இத்தொழில் வளரும் என்று அரசு நம்புகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படிப் புதிதாகக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று வட சென்னைப் பகுதியிலிருந்து பீடித் தொழிலாளர்களிடமிருந்து மனு ஏதாவது வந்ததா? ஆரம்பிக்கப்பட்ட சங்கங்கள் சரியாக நடக்க வில்லை என்று சொன்னார்கள். அப்படிச் சரியாக நடக்கவில்லை என்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதைப் பற்றி அதிகாரிகள் கவனித்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் வண்ணைப் பகுதியிலிருந்து எந்த மனுவும் வரவில்லை குறைபாடுகளை நீக்கி கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு அரசு ஆவனச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, இந்த ஏழை பீடித் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு அமைத்துக் கொள்ளும் பொழுது அவர்களுக்குத் தேவைப்படுகின்ற பீடி இலை போன்றவற்றை அரசாங்கமே வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்து அவர்களுக்குக் கடனாகக் கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதற்கு அரசு முன் வருமா? அப்படிச் செய்வதன் மூலமாக அந்தத் தொழிலாளர்களுக்கு நலன் ஏற்படும் என்பதை அரசு உணருகிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க முன்வரும் தொழிலாளர்களுக்கு அரசு துணை புரியும். அத்துடன் மாண்புமிகு உறுப்பினர் கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. துரை முருகன் : இப்படிப்பட்ட தொழிலில் முக்கியமான இடத்தை வகிப்பது வட ஆற்காடு மாவட்டம். அங்கு கூட்டுறவு முறையில் இப்படிப் பட்ட தொழிற்சாலைகள் அமைக்கும் உத்தேசம் உண்டா? அரசு தந்திருக்கின்ற முதலீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கூட்டுறவு முறையில் நடத்த முன் வரும் தொழிலாளருக்கு அரசு உதவி புரியும்.

திரு. சே. என். குமாரசாமி : கூட்டுறவு முறையில் இப்படிப்பட்ட தொழிலாளர்களை ஊக்குவிக்கின்ற முறையைப் பற்றி அரசு ஆலோசனை செய்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க இந்தத் தொழிலாளர்கள் மனுப் போட்டும், கடன் கிடைக்காமல் காலதாமதம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யாதற்தகு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் அவ்விதக் கருத்துக்கள் கொண்ட கடிதங்கள் எதுவும் வரவில்லை. வந்தால் பரிசீலிக்கப்படும்.

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, the Labour Ministers have recommended the development of beedi industry through Co-operative societies. But in actual practice, a number of schemes introduced through co-operative societies have failed in this country. May I know if separate arrangements would be made to help beedi workers individually by extending financial assistance in the shape of loans and subsidy.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்போதைக்கு மைசூரில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறையப் பணியாற்றி வருகிறது என்று அந்த மாநாட்டில் எடுத்துக் கூறப்பட்டது. இங்கும் அதுபோல் நிறுவ திட்டமிருக்கிறது.

Women's Welfare Department Work Centres.

*484 Q—Dr. H .V. HANDE : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state —

(a) whether it is a fact that a Fruit Preservation Unit in Coimbatore. a Chalk Crayons Unit in Ramanathapuram and Ready Made Garment Unit at Tambaram by the Women's Welfare Department have been sanctioned during the month of September 1971 : and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) மகளிர் நலத் துறையால், "பணி நிலையங்களும் உற்பத்திப் பிரிவுகளும்" என்ற திட்ட வாரியான தலைப்பின் கீழ்ச் செயற்படுத்தப்படவிருக்கும் பின்வரும் மூன்று தொழிற் பிரிவுகளுக்கு, 1971 ஆகஸ்டு திங்களில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(i) கோயம்புத்தூர் மாவட்டம் சூலூரில் பழங்கள் பாதுகாப்புப் பிரிவு.

(ii) தாம்பரம் பணி இல்லத்தில் ஆயத்த உடைகள் தயாரிக்கும் பிரிவு.

(iii) இராமநாதபுரம் மாவட்டத்தில் சாக்கட்டிகள் தயாரிக்கும் பிரிவு.

பழங்கள் பாதுகாப்புப் பிரிவு, பழச்சாறுகள், பானங்கள், பழப்பாகு முதலியவற்றை தயாரிப்பதற்காக 1–11–1971ல் தொடங்கப்பட்டது. தகுந்த கட்டிட வசதி இல்லாமையினாலும், தண்ணீர்ப் பற்றுக்குறையினாலும், இப்பிரிவு சூலூரில் அமைக்கப்படுவதற்குப் பதிலாகக் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளது. தொடங்கப்பட்டதிலிருந்து மொத்த உற்பத்தியின் மதிப்பு விற்பனை செய்ததின் மதிப்பு முறையே ரூ. 1,503·85, ரூ. 792·93 ஆகும்.

ஆயத்த உடைகள் தயாரிக்கும் பிரிவு 11–10–1971இல் தாம்பரம் பணி இல்லத்தில் தொடங்கப்பட்டது. உற்பத்தியான உடைகளின் மொத்த மதிப்பு, விற்பனை செய்யப்பட்ட உடைகளின் மதிப்பு, வெளியாருக்குத் தைத்துக் கொடுத்த உடைகளின் மதிப்பு, அரிசன நலத்துறையினருக்குத் தைத்துக் கொடுத்த உடைகளின் மதிப்பு ஆகியவை முறையே ரூ. 2,432·39, ரூ. 1,936·22, ரூ. 310·08, ரூ. 7,536·50 ஆகும்.

31–3–1972-ல் இராமநாதபுரத்தில் சாக்கட்டி தயாரிக்கும் பிரிவு 10 பேர்களுடன் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்டதிலிருந்து உற்பத்தியான சாக்கட்டிகள் மொத்தம் மதிப்பு விற்பனை செய்யப்பட்ட சாக்கட்டிகளின் மதிப்பு ஆகியவை முறையே ரூ. 559.31, ரூ. 217·98 ஆகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பெண்களின் நலனுக்காக ஆரம்பிக்கப் படும் இத்தகைய யூனிட்டுகள் லாபகரமாக நடக்காத காரணத்தால் வெகு சீக்கிரம் மூடி விடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. சாக்கட்டி உற்பத்தியைப் பார்த்தால் கூட உற்பத்தியில் பாதிதான் விற்பனையாகியிருக்கிறது. ஆகவே இதை எல்லாம் அரசாங்க இலாகாக்களிலே வாங்கிக் கொண்டு அதன் மூலம் லாபகரமாகத் தொழில் நடக்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இராமநாதபுரத்தில் சாக் கட்டி உற்பத்தி செய்யப்படவில்லை, பயிற்சிதான் கொடுக்கப்படுகிறது. பயிற்சியின் போது உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. இந்த நிலையங்கள் லாப நோக்கத்தோடு நடை பெறவில்லை. சிலருக்குப் பயிற்சி தர வேண்டும், வேலை வாய்ப்புத் தர வேண்டுமென்ற முறையில் நடத்தப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அரசாங்க இலாகாக்களும் வாங்கிக் கொள்ளுகின்றன. தாம் பரத்தில் தைக்கப்படும் ஆடைகளை அரிசன நலத் துறையினர் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

அருந்ததியர்களுக்குச் சலுகைகள்

*485 வினா—புலவர் சி. பழனிச்சாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்களில் மிகவும் பின்தங்கியோர்களாக உள்ள அருந்ததி யர்களுக்கு தற்போது தனிச் சலுகைகள் ஏதேனும் வழங்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) அருந்ததியர்களுக்கு வழங்கப்படும் தனிச்சலுகைகளும் அதற் கான நிதி ஒதுக்கீடும் அடங்கிய அறிக்கை † ஒன்று சட்டப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

† 196-ம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

புலவர் சி. பழனிச்சாமி : அருந்ததியார்கள் பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கிய நிலையில் **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்ன சொன்னீர்கள் ?

புலவர் சி. பழனிச்சாமி : அருந்ததியர்கள் பொருளாதாரத்திலும் **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த மாதிரி சொல்லக் கூடாது........**........ என்ற வார்த்தையை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

புலவர் சி. பழனிச்சாமி : அருந்ததியர்கள் தங்களுக்கு அரசின் மூலம் என்னென்ன உதவிகள் தரப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கும் கள்ளர் ரெக்ளமேஷன் என்று வைத்திருப்பதுபோல் அருந்ததியர் ரெக்ளமேஷன் என்று வைத்து அவர்களுடைய முன்னேற்றத்தில் தனிக் கவனம் செலுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரிசன மக்களுடன் இணைக் கப்பட்டு அவர்களுக்கு எல்லாவிதமான சலுகைகள் தரப்படுகின்றன. அது தவிர பிரத்யேகமான சலுகைகளும் இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக் கும் பல சலுகைகளும் தரப்படுகின்றன. இவை பற்றி அந்த மக்களுக்குச் சரிவரத் தெரியவில்லை என்றால், அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப் பினர்களும் மற்றவர்களும் துணை செய்யவேண்டும். அரசின் சார்பில் விளம்பர சாதனங்கள் மூலம் இவைபற்றியெல்லாம் விளக்கமாக விளம் பரம் செய்யப்படுகின்றன.

திரு. எஸ். ஆறுமுகம் : தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புக்காக 18 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அருந்ததியர், தேவேந்திர வகுப் பைச் சேர்ந்தவர்கள் பணி இடம் பெறுவது குறைந்த அளவில் இருக்கிறது. தமிழ்நாட்டு பொதுப் தேர்வுக் கழகத்திற்கும், மற்ற அலுவலகங்களுக்கும் அருந்ததியர்களும், தேவேந்திர வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் தாழ்த்தப் பட்டவர்கள் என்ற பிரிவில் வரும்போது அவர்களுக்கு முதற்சலுகை தரப்பட வேண்டுமென்று அரசு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரிசனங்கள், ஆதிவாசி கள் என்பதிலே ஏறத்தாழ 70, 80-க்கு மேற்பட்ட பிரிவுகள் இருக்கின்றன. எல்லாப் பிரிவுகளும் சேர்ந்துதான் 18 சதவிகிதத்தில் இடம் பெறுவார்கள். குறிப்பாக இப்படிப்பட்ட பிரிவுகளுக்கு முதலிடம் தரப்படுகிறது. தேர்வுகள் நடக்கும்போது பிரத்தியேகமாகக் கவனிக்க வேண்டுமென்ற அடிப்படையில் தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். மொத்தத்தில் இன்னும் 18 சத விகிதமே பூர்த்தியாகவில்லை. 18 சதவிகிதம் பூர்த்தியாக்கப்பட்டால் நிச்சய மாக இவர்கள் தனியாகக் கவனிக்கப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பட்டது.

திரு. எம். தேவராசன் : இந்த அருந்ததியர்களில் பெரும்பாலோர் செருப்புத் தைக்கும் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நலத்துறை மூலமாக செருப்புத் தைக்கும் கருவிகள் இலவசமாகக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதைப் பற்றியெல்லாந் தான் விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காலணிகள் தைக்க தோல் வாங்குவதற்கும் இதர பொருள்கள் வாங்குவதற்கும் 500 ரூபாய் அருந்ததியர்களுக்கு வட்டி இல்லாத கடனாகத் தரப்படுகிறது. அவர்களுக்கென்று தனியாக தோல் பதனிடும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் வர்த்தகத் துறை மூலமாக ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திரு. மு. இரத்தினசபாபதி : அருந்ததியர்களுக்குத் தலைமுறை தலைமுறையாகச் செய்து வந்த தொழில்களுக்குத்தான் சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் சமூகத்தில் முன்னேற மாற்றமான தொழில்கள் செய்வதற்கு அவர்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : யாரும் எந்தவித மாற்றங்களுக்கும் ஆளாகக் கூடாது, இடம் பெறக்கூடாது என்ற தடை இல்லை. அருந்ததியர்களும் அரசாங்கம் தரும் எல்லாவிதமான முன்னேற்றங்கள் அனைத்திலும் பங்கு பெற உரிமை இருக்கிறது. குறிப்பிட்ட சில குடும்பங்கள் சில பகுதிகளில் பழைய தொழிலேயே செய்ய வேண்டுமென்று இருப்பவர்களுக்குத்தான் இந்தச் சலுகைகள் தரப்படுகின்றன. அருந்ததியர்களில் எவ்வளவோ பேர் பட்டதாரிகளாக இருக்கிறார்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருக்கிறார்கள், பெரிய பதவிகளில் எல்லாம் இருக்கிறார்கள் என்று நான் அந்த அவையில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

Distribution of Essential Commodities.

*486 *Q.*—THIRU N.K. PALANISAMY : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to distribute essential articles like pulses, sugar etc., to the people through fair price shops ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : "லெவி" சர்க்கரை 1972-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலிருந்து குடும்ப அட்டைகள் மூலம், பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது சர்க்கரை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 2·15 ஆகும். கோதுமை, கோதுமைப் பொருட்கள், மைதா, ரவை ஆகியவையும் தேவையுள்ள இடங்களில் இந்த அட்டைகளுக்கு வழங்கப்படுகின்றன. சென்னை மாநகரில் பருப்பு வகைகள் போன்ற ஏனைய சில பொருட்கள் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகத்தின் சில்லறைக் கடைகள், பயன் துய்ப்போர் (மகளிர்) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இன்றியமையாப் பொருட்களை வழங்க, முதற்கண் கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, கன்னியாகுமரி, செங்கற்பட்டு மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் இத்தகைய கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : இந்த அத்தியாவசியப் பொருள்களான பருப்பு, அரிசி, எண்ணெய் போன்ற பொருள்கள் சென்னையில்தான் விநியோகிக்கப்படுகிறது. மாவட்டங்களில் இவற்றின் விலைகள் குறைவாகவா இருக்கிறது. அதிகமாகத்தானே இருக்கிறது. எனவே கிராமப்புறங்களில் இம்மாதிரி நிவாரணக் கடைகள் வைத்து—சீமெண்ணெயை எடுத்துக்கொண்டால் கண்ட்ரோல் விலை ஒரு லிட்டருக்கு 60 பைசா என்றால் அங்கு அது லிட்டருக்கு 2·50 ரூபாய் வரை விற்கப்படுகிறது. எனவே மக்களுக்கு அவற்றை அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருப்பதால் எல்லா இடங்களிலுமே நியாயவிலைக் கடைகள் வைத்து இப்படிப்பட்ட அத்தியாயமான பொருள்களை கண்ட்ரோல் விலைக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்வதற்கு அரசுக்கு என்ன தடங்கல் இருக்கிறது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் எல்லாக் கிராமங்களிலும் அப்படிச் செய்வதற்கு திட்டம் போட்டாகிவிட்டது. அதற்கான பொருள்களை வாங்க ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம். அரிசியைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு முழுவதும் கொடுக்கமுடியும். மற்றபடி துவரம்பருப்பு போன்றவைகளை வேறு மாநிலங்களில் இருந்து வாங்கி வரவேண்டியிருக்கிறது. அதற்கு இரண்டொரு மாதங்களாகும் என்று தெரிகிறது. உளுந்து, துவரம்பருப்பு போன்றவைகள் வாங்க ஏற்பாடு கூட்டுறவு சங்கம் மூலம் ஒப்பந்தம் செய்திருக்கிறோம். இரண்டொரு திங்களில் அதைப் பெற்று மற்ற இடங்களில் துவக்க ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறோம். மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில் விலை உயர்வு என்றார்கள். எங்கு எந்த இடத்தில் அப்படி இருக்கிறது என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மண்ணெண்ணெய், தமிழ்நாடு பூராவும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் கொடுப்பதற்கு அட்டை அடையாளம் வைத்து ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒருசில இடங்களில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் தயவுசெய்து உறுப்பினர்கள் எனக்கு துரிதமாக ஆங்காங்குள்ள குறைபாடுகளைப் பற்றித் தெரிவித்தால் நான் இரண்டு நாட்களுக்குள் அல்லது ஒரு நாளில் நடவடிக்கை எடுக்கிறேன்.

2. அரை மணி நேர விவாதம் கோரல்

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் இது விவாதிக்கப்படவேண்டிய ஒரு காரியம் என்ற முறையில் 40-வது விதியின் அடிப்படையில் இதில் ஒரு அரை மணி நேர விவாதத்திற்கு தாங்கள் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விதி 40—

"No discussion shall be permitted at question time in respect of a question or of any answer given to a question:

Provided that on request made to the Speaker at question-time, the Speaker may, in his discretion allow half an hour after the conclusion of the business of the day or any other day as may be fixed by the Speaker to enable a member to raise a debate on any matter of urgent importance which has been the subject of a question. No vote shall be taken on such debate and such time shall not be available for the transaction of any other business ".

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 மார்ச் 23

இந்த மானியம் மறுபடியும் இந்த மன்றத்தில் விவாதத்திற்கு வருவதற்குள்ள சந்தர்ப்பம் இல்லை. இது மக்களிடையே உள்ள மிக முக்கியமான பிரச்னையாக இருப்பதால் இதன் பேரில் ஒரு அரைமணி நேர விவாதம் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் தங்கமணி அவர்களின் வேண்டுகோளை நான் ஆமோதிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த டிமாண்ட்மீது பேசியபோது சர்க்கரைபற்றிப் பேசினார்கள். ஏழு எட்டு தடவைகள் அதுபற்றிக் கேள்விகள் கேட்கப்பட்டு விட்டன. நிறைய இன்பர்மேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: எண்ணெய் போன்ற மற்ற விஷயங்கள் எல்லாம் இருக்கின்றன. மத்திய சர்க்கார் சட்டப்படி மாநில சர்க்காருக்கு என்னென்ன சரக்குகள்மீது விலை நிர்ணயம் செய்ய அதிகாரம் இருக்கிறது என்று இருக்கிறது. அவற்றையெல்லாம் அவர்கள் செய்யமுடியும். ஒரு விவாதம் வைத்துக் கிட்டத்தட்ட இருபது நிமிடங்கள் நாங்கள் விவரங்கள் பூராவையும் எடுத்துச் சொல்லி அமைச்சர் அவர்களுக்கும் பதில் சொல்ல உரிமை இருக்கிறது. கேள்விகள் கேட்பது என்றால் இரண்டு மூன்று கேள்விகள்தான் கேட்க முடியும். ஏற்கெனவே இதுபற்றிய மானியத்தின் மீதான விவாதம் முடிந்து விட்டதால் இந்தச் சட்டமன்ற கூட்டத் தொடர் முடிகிறபோது, இந்த விலைவாசி சம்பந்தமான தேவையான பொருள்களுக்கு ஒரு நியாயமான விலை இருக்க வேண்டும், அதற்கு ஒரு உத்திரவாதம் இருக்க வேண்டும் என்பதற்காக அரை மணி நேர விவாதம் வேண்டுமென்று நான் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த டிமாண்ட் மீதான விவாதம் முடிந்து போனது உண்மைதான். பின்னர் வேண்டுமானால் அட்டன்ஷன் கொடுக்கலாம். 'அப்ரோப்ரியேஷன் பில்'லில் கூட பேசலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: 1967-லிருந்து 1971-ம் ஆண்டு வரையில் அரை மணி நேர விவாதம் என்பது ஒன்றுமே இல்லை. இந்த மன்றக் கூட்டத் தொடரிலாவது ஒரு அரை மணி நேரம் விவாதம் என்பது ரிகார்டில் இருக்கட்டுமே?

THIRU R. PONNAPPA NADAR: May I make one submission? This is an important matter and a discussion can be had on it. Such precedent is obtaining in Parliament as well. So, it would be proper that an half-an hour discussion is started either today or on some other day.

DR. H. V. HANDE: I am also of the same opinion.

(THIRU K. M. SUBRAMANIAM rose.)

1973 மார்ச் 23]

MR. DEPUTY SPEAKER: You also endorse the view. I am very much afraid..........

THIRU V. KRISHNAMOORTHY (Nellikuppam): The same Members may put short-notice questions. They can give notice or the Hon'ble Minister can also waive notice. The short notice questions may be taken up in one or two days.

(THIRU K. M. SUBRAMANIAM rose).

MR. DEPUTY SPEAKER: I think you are raising the same point.

THIRU K. M. SUBRAMANIAM: I have also a right to say something on this matter. Will you please allow me? Sir, because the Demand is finished and this is a very urgent and important subject today affecting the living of the people, I think this request is very fair. The Government will come to understand the various difficulties people experience if this is allowed. So, it must be allowed.

திரு. எ. ஆர். மாரிமுத்து: மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் இதற்கு ஒரு அரை மணி நேரம் ஒதுக்குவது சரியானது என்று நான் கருதுகிறேன்.

MR. DEPUTY SPEAKER: So, I will consult all the leaders.

DR. H. V. HANDE: On any day it may be to-day or tomorrow or day after, any day that suits the Hon. Deputy Speaker. But it is better we have an half-an-nour discussion on this subject.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு கட்சியிலிருந்தும் "எஸ்" என்பதும், "நோ" என்பதும் எல்லோரும் எழுந்திருந்து தெரிவிக்க வேண்டிய தேவை இல்லை. கட்சித் தலைவர்களைக் கலந்து சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அலுவல் ஆய்வுக் குழு கூடி அதற்கான ஒரு நேரத்தை வகுத்துக் கொள்வது நலமாக இருக்கும். அதைத் தலைவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு என் அன்பு கலந்த நன்றி. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் அலுவல் ஆய்வுக் குழு கூடும்போது அல்லது இதற்காகக் கூட்டியேகூட இதுபற்றி முடிவு செய்து கொள்ளலாம். கேள்வி 486 என்று கருதுகிறேன்.

திரு. நா. வீராசாமி: அரை மணி நேர விவாதம் வேண்டுமென்று சொல்பவர்களுக்கு இன்னொரு நாளில் வைத்துக் கொள்ளலாம். எனவே எங்களைப் போன்றவர்கள் கேள்வி கேட்க வாய்ப்பளிக்க வேண்டும்.

[1973 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி கேளுங்கள்.

திரு. நா. வீராசாமி : நம் அரசாங்கம் ஃபேர் ப்ரைஸ் ஷாப்களை....

THIRU K. SUPPU : On a point of order, Sir.

THE HON. THIRU K. ANBAZHAGAN : During question hour there cannot be any point of order.

(THIRU K. SUPPU rose.)

MR. DEPUTY SPEAKER : I have already allowed the Hon Member to put the question. Why should you raise a point of order ? Let him finish.

1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

திரு. நா. வீராசாமி : நம் அரசாங்க ஃபேர் ப்ரைஸ் ஷாப்களில் விற்கப்படுகிற பருப்பு வகைகள் உள்ளபடியே பொது மார்க்கெட்டில் விற்கக் கூடிய பருப்பு வகைகளைவிட ஒரு லிட்டருக்கு ஐம்பது, அறுபது காசு விலை குறைவாகத்தான் இருக்கிறது. அது பல பேர்களுக்குத் தெரிவதில்லை. நம் ஃபேர் ப்ரைஸ் ஷாப்களில் குறைந்த விலையில் பருப்பு வகைகள் எல்லாம் விற்கப்படுகின்றன. அதுபற்றி நல்ல விளம்பரம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அப்படி விளம்பரப் படுத்துவதால் அதில் வருகிற லாபம் பற்றாது. நான் இந்த மன்றத்திலும் வெளியே பத்திரிகைகளிலும் அறிக்கை கொடுத்திருக்கிறேன். என்ன என்ன விலைக்கு விற்கப்படுகின்றன, உளுந்து, பருப்பு வகைகளில் ஐம்பது பைசா குறைவாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். அதை மக்கள் கவனிக்கக் கூடிய நிலை இல்லையென்று கருதுகிறேன். செய்திருக்கிற விளம்பரத்திற்கு தக்க வியாபாரம்கூட இல்லை.

Procurement from dealers

* 487 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Food be pleased to state :

(a) whether the procurement levy on dealers has been raised in this State ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான்கு உபரி மாவட்டங்களாகிய தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் 1971-ல் 15 சதவீதமாக இருந்த "லெவி" கொள்முதல் 16—8—1971-லிருந்து தஞ்சாவூர் மாவட்டத்தில்மட்டும் 25 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

இந்த நான்கு மாவட்டங்கள் அனைத்திலும் 1972-ல் " லெவி " கொள் முதல் தொடக்கத்தில் 25 சதவீதமாக விதிக்கப்பட்டது. ஆனால், பின்னர்

1973 மார்ச் 23]

12—4—1972-லிருந்து செங்கற்பட்டு வட ஆர்க்காடு, மாவட்டங்களில் 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. கன்னியாகுமாரி மாவட்டத்தில் (கேரளாவை ஒட்டியுள்ள) எல்லைப் பகுதிகள் சிலவற்றிலும், மதுரை மாவட்டத்திலும் 15 சதவீதம் என்று தொடக்கத்தில் விதிக்கப்பட்ட "லெவி" கொள்முதல் 14-9-1972-லிருந்து 25 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, வடார்க்காடு, செங்கற் பட்டு ஆகிய மாவட்டங்களில் 25 சதவீதம் லெவி இருந்ததை 15 சதவீதம் என்று குறைத்தது போல், தென்னார்க்காடு மாவட்டத்திலும்—அங்கேயிருக்கின்ற வர்த்தகர்கள் அவதிப்படுகிறார்கள்—25 சதவீதம் லெவி 15 சதவீதம் என்று குறைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, நான் படித்தது கேள்வி கேட்ட அந்த நாளில் இருந்த நிலை. அதன் பிறகு, திருச்சி, வடார்க்காடு, செங்கல்பட்டு (சைதை பகுதி நீங்கலாக), கோவை, கன்னியாகுமரி, நெல்லை, மதுரையில் இரண்டு வட்டங்கள் இவைகளெல்லாம் சேர்த்து ஒரே விதமாக 20 சதவீதம் என்று லெவி போட்டு இருக்கிறோம்.

திரு. வ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இம்மாதிரியாகக் கொள்முதல்மூலம் அரசாங்கத்திற்கு எவ்வளவு டன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எந்த அளவுக்குக் கொள்முதல் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்வது என்று திட்டத்தை வைத்திருக்கிறோம். பொதுவாக, கோவை சென்னைக்கு 85,000 டன் வேண்டியிருக்கிறது. அந்த ஆண்டில் மற்ற மாவட்டங் களில் தட்டுப்பாடு இருந்த காரணத்தால் 30,000 டன் தேவைப்பட்டது. அதனால் 1,15,000 டன் கொள்முதல் செய்தோம். இப்போது மத்திய சர்க்காரும் கேட்கிற காரணத்தால் அதிகமாகக் கொள்முதல் செய்வதாகத் திட்டம் வகுத்திருக்கிறோம். எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக செய்து மத்திய சர்க்காருக்குக் கொடுக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சார், உபரி மாவட்டங்களில் அதிக மாக இந்த மாதிரியான கொள்முதல் செய்வதில் ஆட்சேபணை இருக்காது. அப்படியானால் சாதாரண மாவட்டங்களுக்கும், உபரி மாவட்டங்களுக்கும் ஒரே மாதிரியாக 20 சதவீதம் என்று வைத்திருக்கிறார்கள். அதைக் குறைக்க வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதிகமான மாவட்டம், குறைவான மாவட்டம் என்று இல்லை. உபரி மாவட்டம் என்று கணக்குக் கொடுத்து இருக்கிறோம். உபரி மாவட்டங்கள் என்று நான் குறிப்பிட்டது சில மாவட்டங்களைத்தான். அதிலேகூட மதுரை மாவட்டத்தில் 2 வட்டங்களில்தான் அப்படியிருக்கின்றது. மற்ற இடங்களில் இல்லை. ஆகவே, அதற்குமட்டும்தான் அந்த லெவி போட்டு இருக்கிறோம். அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்று எனக்கு

புரிகிறது. என் தஞ்சை மாவட்டத்திற்கு அதிகமாகப் போடவில்லை என்று கேட்கிறார்கள். அங்கே இந்த ஆண்டு அதிகமாக விளைச்சல் இல்லாததால் ஒரே ரீதியாக அரசாங்கம் போட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

விம்கோ நிறுவனத்தாருக்கும்—தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்ட தகராறு தீர்க்கப்படாமைகுறித்து

MR. DEPUTY SPEAKER : Under rule 42 of the Legislative Assembly Rules, the Hon. Members, Thiruvalargal K. T. K. Thangamani, K. M. Subramaniam and J. James have given notices to adjourn the House to discuss a definite matter of urgent public importance namely the failure to settle the dispute between the workers and the management of Wimco resulting in non-employment of about 2,000 workers since 4th October 1972 and the consequent sufferings of the workers.

I suggest that the Hon. Members may explain very briefly how this will come under rule 42.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த விம்கோ பிரச்னையானது 4—10—1972 முதல் இருக்கக்கூடிய பிரச்னையாக இருக்கிறது. அதை என்னுடைய தீர்மானத்திலேயே தெளிவுபடுத்தியிருக்கிறேன். அன்று அவர்கள் வேலை நிறுத்தம் ஆரம்பித்ததற்குப் பின்னால் பல முறைகள் பேச்சு வார்த்தைகள் நடந்தன. சென்ற கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. என். கே. பழனிசாமி எழுப்பிய வினாவிற்கு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இது சம்பந்தமாக நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்று அங்கே 1,700 நிரந்தரத் தொழிலாளர்களும், 300 டெம்பரரி தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை நிர்வாகத்திற்கும், தொழிற் சங்கத் தலைவருக்கும்—அங்கே தொழிற்சங்கத்தில் போட்டியில்லை—பேச்சு வார்த்தை நடந்தது. அந்தப் பேச்சு வார்த்தையில் நிர்வாகம் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை முதலில் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அதாவது ரூ. 30 சம்பள உயர்வு கொடுப்பது என்று ஏற்றுக்கொண்டுவிட்டு, 2 தினங்களுக்குப் பிறகு பேச்சுவார்த்தை ஆரம்பித்தபோது நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லக்கூடிய நிலை. ஆகவே தான், இந்த அவையை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அரசாங்கம் 2,000 தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 6 மாதமாகப் பாதிக்கப்பட்டிருக்கிற

நிலையில், அந்தப் பிரச்னையை முதலாளிகளிடத்தில் வற்புறுத்தமுடியாமல் இருக்கிறது, உடனடியாக அந்த முதலாளியைக் கூப்பிட்டு அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு, அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கு, அமைச்சர் அந்த நிர்வாகத்தை நிர்ப்பந்திக்கவில்லை. அந்த அளவிற்கு இந்த அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது 2, 3 தினங்களுக்கு முன்னால்கூட பேச்சுவார்த்தை நடந்து இருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தை இன்னும் முடியாமல் இருக்கிறது. அந்த நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இதில் காலம் கழிக்கும் போக்கில் இருக்கிறார்கள். இன்னும் அது நீடித்தால் அந்த 2,000 தொழிலாளர்களின் குடும்பங்களும் கஷ்டப்படுவது மாத்திரமல்லாமல், முதலாளிகளின் பிடிவாதத்தின் காரணமாக சென்னைக்கு அருகாமையிலேயே இருக்கும் ஒரு தொழிற்சாலையில் 2,000 பேர் வேலையில்லாமல் இருப்பது சரியான நிலையை உருவாக்காது. ஒரு பதட்ட நிலையைத்தான் ஏற்படுத்தும் என்று கருதுகிறேன். ஆகவே, இது நீடிக்காமல் இருப்பதற்கு அது குறித்து விவாதிக்க, சந்தர்ப்பம் இருக்குமானால் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும் எடுத்துச்சொல்லி, சீக்கிரமாக இந்தப் பிரச்னைக்கு முடிவு காண முடியும். ஆகவே, இந்தச் சபையின் மற்ற அலுவல்களை ஒதுக்கி வைத்து இதுகுறித்துப் பேச வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM : Sir, apart from the reasons advanced by my Hon. Friend, Thiru K. T. K. Thangamani, I have the following reasons. I expected from the statement of the Hon. Chief Minister that the dispute would be settled very soon because the management had promised to go to Bombay, consult the authorities there and come back and settle it. But nothing has taken place after that.

Secondly, I am afraid that because of the present electricity cut, the management would like to have the strike or continue the lock-out. This state of affairs should not allowed to continue as already for the last six months the workers have been suffering for want of work and salary. I think this is so important a matter especially in view of the present electricity cut that the House should be adjourned to discuss this matter.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, ஏறத்தாழ 2,000 தொழிலாளர்கள் கழிந்த ஆறு மாத காலமாக வேலையின்றி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதை ஒரு பெரிய பிரச்னையாக இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை. இன்று இருக்கிற பிரச்னையில் இந்த நிர்வாகத்திற்கு ஒரு வேளை அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மனம் இல்லை என்றாலும் இந்த அரசாங்கத்திற்கு அந்த நிர்வாகத்தைக் கட்டாயப்படுத்துவதற்கான சக்தி இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள்கூட கழிந்த சில நாட்களுக்கு முன்பு இந்தச் சட்டமன்றத்தில் கூறியதாக நினைக்கிறேன். இந்தப் பிரச்னையானது தீர்க்கக்கூடிய நிலையில் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் அந்தப் பிரச்னை தீர்க்கப்படவில்லை.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 மார்ச் 23

தீர்க்கப்படாமல் இருந்தது மட்டுமல்ல. இதுபோன்ற பிரச்னைகள் கழிந்த ஆண்டுகளில் தீர்க்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. சிம்சன் தொழிலாளர் பிரச்னை தீர்க்கப்பட்டு இருக்கிறது. அரசாங்க சார்பில்கூட தொழிலாளர் நல அமைச்சர் கையெழுத்துப்போட்டார்கள். அந்தத் தொழிலாளர்களில் 400 தொழிலாளர்கள் இன்னும் தொழிலில் அமர்த்தப்படவில்லை. 126 தொழிலாளர்களை உடனடியாக ஒரு கம்பெனியில் வேலைக்கு அமர்த்திவிடுகிறோம் என்று சொன்னார்கள். இன்னும் அவர்கள் கூட வேலைக்கு எடுக்கப்படவில்லை. ஆகவேதான் இப்பிரச்னைகுறித்து விவாதிக்கவும், இந்த அக்ரிமெண்ட்டை நடைமுறையில் எந்த அளவுக்கு நடத்த முடியும், அதற்காக என்ன செய்யவேண்டும் என்பதைக்குறித்து ஆலோசனை கூறவும், இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, திருவொற்றியூர் விம்கோ தொழிற்சாலையில் சுமார் 1,700 நிரந்தரத் தொழிலாளர்களும், 300 நிரந்தரமற்றத் தொழிலாளர்களும் பணியாற்றுகின்றனர். அவர்கள் 19-10-1972 அன்று சில கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அந்தக் கோரிக்கைகளில் ஏறத்தாழ 3/4 பகுதி அதில் வெற்றி காணுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு, அநேகமாக அது ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கிறது. ஆனால் கடைசியாக இப்போதுள்ள நிலை மூன்று கோரிக்கைகளில்தான் தொழிற்சங்கத்திற்கும், தொழில் நிர்வாகிகளுக்கும் உடன்பாடு ஏற்படாமல் இருந்து வருகிறது. அதற்குக்கூட நான் அந்தத் தொழில் நிர்வாகிகளையும் தொழிலாளர்களையும் அழைத்து விரைவில் நல்ல முடிவு காணவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறேன்.

இந்த மூன்று கோரிக்கைகளில் (1) ஊதிய உயர்வு அளிப்பதில் சிறிய வேறுபாடு, (2) ஊதிய உயர்வு எந்தத் தேதியிலிருந்து செயல்படுத்துவது, (3) ஆண்டில் 240 நாட்கள் வேலை செய்திருக்க வேண்டுமென்ற நிபந்தனை இல்லாமல் தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிப்பது இவைகள்தான் தீர்வு காணாத கோரிக்கைகள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசினார்கள். இந்த அரசாங்கம் ஒன்றும் முயற்சி எடுக்கவில்லையென்று சொன்னார்கள். நான் சொல்கிறேன், 4, 5 முறை அதிகாரிகள் கலந்து பேசி, கடைசியாக என்னுடைய முன்னிலையிலே நடந்த பேச்சுவார்த்தையின் காரணமாகப் பெருவாரியான கோரிக்கைகள் ஏற்கப்பட்டிருக்கின்றன.

இந்த மூன்று கோரிக்கைகள் அநேகமாக விரைவிலே தீர்க்கப்படும் என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முதலாளிகளை வலியுறுத்தவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் தெரிவித்தார்கள். முதலாளிகள் முதலிலே ரூ. 4·75, ரூ. 7·50 தான் ஊதிய உயர்வு தருவோம் என்று சொன்னவர்கள் ரூ. 25 தருவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் 4, 5 ரூபாய் சேர்த்துக் கொடுத்தால் பிரச்னை தீரும் என்ற நிலை இருக்கிறது. அரசு வலியுறுத்தவில்லையென்று சொல்வது உண்மைக்கு மாறாக இருக்கிறது. அதுவும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. அரசாங்கம் தன்னால் இயன்ற கடமையைச் செய்து வருகிறது.

1973 மார்ச் 23]

திரு. கே. டி. கே. தங்கமணி: ஒரு குறிப்பிட்ட அளவு சம்பள உயர்வு கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அதை முதலாளி ஒத்துக்கொண்டு இரண்டு தினங்களுக்குப் பிறகு அந்த முதலாளி அதை ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று சொன்னார் என்று எனக்குத் தகவல் வந்தது. உண்மைதானாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, நாங்கள் சொன்ன கருத்தை முதலாளிகள் ஏற்றுக் கொண்டிருந்தால் பிரச்னை அப்போதே தீர்ந்து போயிருக்கும். அவர்கள் முதலில் சொன்னது, பம்பாயில் தலைமை நிலையத்தில் அனுமதி பெற்று வருகிறோம் என்று சொன்னார்கள். அநேகமாக விரைவிலே தீர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்பதை இங்கே தெரிவித்து, இதைப்பற்றித் தனியாக விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற என் கருத்தை தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த இந்த விளக்கத்திற்குப் பின்னர் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை மேலும் விவாதிக்க வேண்டிய அவசியமில்லையென்று கருதி அதற்கான அனுமதியை மறுக்கிறேன்.

4. 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 15—காவல் துறை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று மானியக் கோரிக்கை 15 என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். ஏராளமான பேர் பேசவேண்டுமென்று ஒவ்வொரு கட்சியிலிருந்தும், 2, 3 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். 155 நிமிடங்கள் இருக்கின்றன. சட்டசபையை 2 மணி வரை நடத்துவது என்று வைத்துக்கொண்டால் 200 நிமிடங்கள் இருக்கின்றன. முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு மணி நேரம் ஒதுக்கினால் போதும் என்று நினைக்கிறேன். கட்சிகளின் அடிப்படையில் நேரம் ஒதுக்கினால் அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Let us meet in the afternoon.

MR. DEPUTY SPEAKER: I think we have the Joint Select Committee meeting today.

THIRU K. M. SUBRAMANIAM: This is also an important demand and we can have afternoon session.

THIRU R. POONNAPPA NADAR: Let us adjourn correctly at 1-30 p.m. so that we can have lunch in time. Let us meet again at 4-00 p.m.

THE HON. DR. M. KARUNANIDHI: All right.

MR. DEPUTY SPEAKER : We will adjourn at 1-30 p.m. and meet again at 4-00 p.m.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" நிதிக் கோரிக்கை எண் 15—காவல்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 22,22,87,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

THIRU K. M. SUBRAMAIAM: Sir, I move the following cut motion to discuss policy

" That the allotment of Rs. 22,22,87,500 under Demand No. 15—Police be reduced by Rs. 100."

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following cut motion to discuss the reasons for deaths in the lock-ups in the Police Stations in Tamil Nadu—

"That the allotment of Rs. 22,22,87,500 under Demand No. 15—Police be reduced by Rs. 100."

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss the need for the issue of instructions to all the Police stations to take impartial action irrespective of political consideration whenever complaints are brought to police stations—

"That the allotment of Rs. 22,22,87,500 under Demand No. 15—Police be reduced by Rs. 100. "

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, போலீஸ் துறையில் முஸ்லீம்களுக்குப் போதிய வாய்ப்பளிப்பது சம்பந்தமாக விவாதிக்க—

" கோரிக்கைஎண்—15—காவல்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 22,22,87,500-இல் ரூ. 100 குறைக்கப்படவேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. SUPPU : Sir, I move the following cut motion: to discuss about the necessity of appointing I.P.S. officers alone as District Superintendents of Police.

" That the allotment of Rs. 22,22,87,500 under Demand No. 15—Police be reduced by Rs. 100 ".

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, I move the following cut motion to discuss the policy and the need to pay more to Police force and to give more facilities—

" That the allotment of Rs. 22,22,87,500 under Demand No. 15—Police be reduced by Rs. 100 ."

THIRU J. JAMES : Sir, I move the following cut motion to discuss the necessity to provide quarters for all policemen near the stations—

" That the allotment of Rs. 22,22,87,500 under Demand No. 15 Police be reduced by Rs. 100".

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 1973–74-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு காவல்துறை ஆய்வுரை மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுரையை நான் நிகழ்த்தியதாக எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கருத்துக்களை வழங்குவார்கள் என்று எதிர்பார்த்து இந்த ஆய்வுரையை* நடவடிக்கைக் குறிப்பில் இணைத்துவிட வேண்டுகிறேன்.

*திரு. ஒ.என். சுந்தரம் : துணைத் தலைவரவர்களே, இந்தக் காவல் துறை மானியக் கோரிக்கைமீது, எங்கள் கட்சி சார்பாகக் கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்கிற போது, தமிழ்நாடு காவல் துறையானது இன்றைய நூதனமான கொலைகளானாலும், வழிப்பறியானாலும், கள்ளநோட்டுஅச்சடிப்பு ஆனாலும், நோட்டுக்கள் இரட்டிப்பு மோசடி ஆனாலும், அல்லது கருப்புப் பணம் சோதனையானாலும், கடத்தல் பொருள் வேட்டையானாலும், நாடே வியக்கத்தக்க அளவிலே நம்முடைய காவல் துறை தங்களுக்கே உரித்தான திறமையில் குறுகிய காலத்தில் கண்டு பிடிப்பார்கள். அப்படிப்பட்ட திறமை வாய்ந்த ஒருதுறை என்பதும், அது சர்வதேச அரங்கிலே ஒரு நல்ல நன்மதிப்பை பெற்றிருக்கிறது என்பதிலே இருவித கருத்துக்கள் இல்லை என்பது உண்மை என்றாலும்கூட, சாதாரண வழக்குகளிலே நம்முடைய தமிழ்நாடு காவல் துறையானது போதிய அக்கறையும், சுறுசுறுப்பும் காட்டாத முறையிலே அங்கே பல வழக்குகள் தீர்க்கப்படாமல் இருப்பதைப் பார்க்கிறபோது இதற்குண்டான காரண காரியங்கள் என்ன என்பதைப்பற்றிச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றுசொன்னால் சென்ற ஒரு ஆண்டு காலத்திலே அது தனிப்பட்டவர்கள் சொத்துக்கள் ஆனாலும், அல்லது பத்திரிகைகள் ஆனாலும், ஒரு கட்சிக்காரர்கள் தாக்குகிறார்கள் என்கிற போது அவற்றிலே போதிய அக்கறை எடுத்து சீக்கிரமாக பைசல் செய்து சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைத் தண்டிக்கவில்லை என்பதை நாம் கண்

*197–228-ம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கூடாகப் பார்க்கிறோம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் 16—6—1972 அன்று அலையோசை பத்திரிகை அலுவலகம் 3 முறை தாக்கப்பட்டிருக்கிறது. அதிலே 9 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற தகவல் வந்தது. ஆனால் புலனாய்வு செய்து அப்படிப்பட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்களா என்றால் இதுவரை இதுபற்றி விவரம் தெரியவில்லை. அடுத்தபடியாக என்னுடைய திண்டுக்கல்லிலே 27—6—1972 அன்று பாண்டிய நகரிலே நண்பர் குடந்தை ராமலிங்கம் என்னுடைய இல்லத்திலே தங்கியிருந்தபோது இரவு நேரத்தில் 4, 5 டாக்ஸிகளில் குண்டர்கள், தமிழர் படை என்ற பெயரால் அங்கே வந்து தாக்கினார்கள். அப்படிப்பட்ட விவரத்தையெல்லாம் டி.எஸ்.பி., எஸ்.பி., ஐ.ஜி. போன்றவர்களுக்குத் தந்தி மூலமாகத் தெரிவித்தும்கூட, இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. சொத்துக்கள் சேதம் அடைந்தது மட்டும்தானா என்று பார்த்தால் அவருக்குப் பக்கத்துணையாக இருந்த காங்கிரஸ் ஊழியர் பிச்சாண்டி,நகரமன்ற உறுப்பினர் மாரியப்பன், மற்றும் 4, 5 பேர்களும் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார்கள். சைகிள் செயின், மற்றும் பயங்கர ஆயுதங்களால் தாக்கப்பட்டு, நகரமன்ற உறுப்பினர் மாரியப்பன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 7, 8 தினங்கள் சிகிச்சையளிக்கப்பட்டும், அதற்குப் பின்னால், அந்த நோய்கள் தீராமலே இறந்து விட்டார்.

முற்பகல் 10-30

அதோடு இன்று பிச்சாண்டி என்ற காங்கிரஸ் ஊழியர் இப்படித் தலையில் அடிக்கப்பட்டதன் காரணமாக சித்தசுவாதீனமற்றுத் தெருவில் அலைந்து கொண்டு இருக்கின்றார். இப்படித் தாக்கப்பட்டு ஊனமடைந்தவர்களுடைய குடும்பம் அன்றாட ஜீவனத்திற்கும் வழியின்றி பிடி அரிசிக்கும் தெருவில் அலைந்துகொண்டு இருக்கின்றார்கள். இப்படித் தாக்கும் குண்டர்களைக் கைது செய்யாததன் காரணமாக—அவர்கள் எந்தக் கட்சியினைச் சார்ந்தவர்களாக இருந்தாலும்—அவர்கள் பாப விமோசனத்திற்கு எதைத் தேடப் போகின்றார்கள் என்பதைப் பொறுப்பிலுள்ளவர்கள் ஆராய வேண்டும்.

இது மட்டுமில்லை. இன்று காவல் துறையின் போக்கு அரசியல் தலையீடு காரணமாக அதிகாரிகள் குறிப்பாக திண்டுக்கல் பாராளுமன்றத் தேர்தலையொட்டி அந்தத் தொகுதியிலுள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் காவல் துறை அதிகாரிகள் திடீர் திடீர் என்று மாற்றப்பட்டுகின்றார்கள். காவல் துறை விசாரணைக்குழுவின் அறிக்கைப்படி மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் அவர்கள் மாற்றப்பட வேண்டும், அதிலும் பிள்ளைகளுடைய கல்வி சௌகரியங்களையொட்டி கல்வியாண்டின் இறுதியில் மாற்றப்பட வேண்டும் என்று சிபாரிசு இருந்தாலும்கூட அங்கே பல அதிகாரிகள் திடீர் திடீர் என்று மாற்றப்படுகின்றார்கள்.

மாவட்ட அதிகாரி வாசுதேவபட், டி.எஸ்.பி.,பால்ராஜ், நிலகோட்டையில் சந்திரன், சோழவந்தானில் ஸர்கிள் இன்ஸ்பெக்டர், மேலும் திண்டுக்கல் நிலக்கோட்டை, வத்தலக்குண்டு போன்ற இடங்களிலே உள்ள ஸப்-இன்ஸ்

பெக்டர்கள் எல்லாரும் மாற்றப்பட்டிருக்கின்றார்கள். இவர்களையெல்லாம் மாற்றியதற்குக் காரணம் அரசியல்தான் என்று சொல்ல இடமிருக்கின்றது. 30—1—1973 அன்று திண்டுக்கல்லில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் செயல்வீரர் கூட்டம் நடைபெற்று இருக்கின்றது. அதில் பேசும் நகரச் செயலாளர் சொல்லுகின்றார், "நாங்கள் கட்சியினை வளர்க்க வேண்டுமானால், தேர்தலில் நாம் வெற்றி பெற வேண்டுமானால், இப்படிப்பட்ட அதிகாரிகளுடைய மாற்றங்களை உடனடியாகச் செய்து கொடுக்க முன்வரவேண்டும்" என்று. அந்தக் கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்த இரண்டு அமைச்சர்கள், ஒருவர் மதுரைமாவட்டத்தைச் சேர்ந்தவர், மற்றவர் இராமநாதபுரத்தைச் சேர்ந்தவர், அதில் ஒரு அமைச்சர் சொல்லுகின்றார், இப்படிப்பட்ட காரியங்களை நீங்கள் பகிரங்கமாகச் சொல்லக்கூடாது, அமைச்சரிடத்தில் தனியாகச் சொல்ல வேண்டும் என்று சொல்லுகின்றார். இப்படிப்பட்ட விவரங்கள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அந்த ஊழியர் கூட்டத்தில் நானும் இருந்தேன். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் அங்கே பேசப்படவில்லை. இப்படியெல்லாம் தவறான கருத்துக்களை மன்றத்தில் எடுத்துச் சொல்லுவது தவறு என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. ஓ. என். சுந்தரம்: மாண்புமிகு அமைச்சர் ஒருவேளை சாட்சிகளை வைத்துச் சொல்லலாம். நான் மனச்சாட்சியைப்பற்றிச் சொல்லுகிறேன். மனச்சாட்சி இருந்தால் போதுமானது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர்களைப்பற்றிக் குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது, "வேக்" ஆகச் சொல்லக்கூடாது,

திரு. செ. கந்தப்பன்: மனச்சாட்சி இந்தக் கட்சிக்கு உரித்தானது எப்போது அந்தக் கட்சிக்கு மாறி வந்தது என்று தெரியவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மனச்சாட்சி அனைவருக்கும் உரித்தானதுதான். அன்று 'உறவிற்குக் கை கொடுத்து உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்று சொன்னதையெல்லாம் நினைவு படுத்த விரும்புகிறேன். எனவே இதையெல்லாம் சொல்லாமல் விவாதங்களை இந்த நேரத்தில் நடத்துவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உறவிற்குக் கைகொடுப்பது உரிமைக்குக் குரல் கொடுப்பது என்பது கடந்த காலத்தில் மட்டுமில்லை, இப்போது உள்ள நிலைதான்.

திரு. ஓ. என். சுந்தரம்: துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட தேர்தல் நேரங்களிலே குறுக்கீடுகளினால் ஏற்படும் நிலைமைகளை எடுத்துச் சொல்லவே இதைச் சொல்லுகிறேன். பொதுவாகத் தேர்தல் நேரங்களிலே காவல் துறையிலுள்ள அதிகாரிகள் இப்படி மாற்றப்படுவது ஏன் என்றால் காவல் துறையைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டு திராவிட முன்னேற்றக்கழகம் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

மதுரையில் ரெஜிஸ்ட்ரேஷன் நெம்பர் பிளேட்டுகள் இல்லாத டாக்ஸிகளை வைத்துக்கொண்டு அதில் குண்டர்களை ஏற்றிக்கொண்டு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கின்றதைப் பார்க்கும்போது மீண்டும் இந்தத் தமிழர் படை சுறுசுறுப்பு அடைந்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அது மட்டுமில்லை. 23—2—1973 அன்று இரவு திண்டுகல்லில் நகர மன்ற உறுப்பினர் ஒருவர் டாக்ஸியில் கடத்திக்கொண்டு போகப்பட்டார். பன்னிரண்டு மைலுக்கு அப்பாலுள்ள புல்வெட்டிகுளம் என்ற இடத்திற்குக் கடத்திக்கொண்டு விடப்பட்டார். அது காட்டுப்பிரதேசம். அந்த நேரத்தில் என்ன பிடிக்க போகவா அழைத்துச் செல்லப்படுவார்? ஏன் என்று தெரியவில்லை. இவற்றையெல்லாம் பார்க்கும்போது மீண்டும் நிச்சயமாக தமிழர் படை தேர்தலைச் சந்திப்பதற்காக முனைப்பாக இருக்கின்றது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற 15-ம் தேதியன்று எங்கள் கட்சியின் சார்பாக தமிழகம் முழுவதும் மக்கள் உரிமை பாதுகாப்பு தினம் என்று நடத்தப்பட்டது. அனைவருக்கும் தெரியும். பல லட்சம் மக்கள் அன்று அதில் கலந்துகொண்டு பத்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து அன்று காந்திய முறையில் போராட்டம் நடத்தினார்கள். இதற்கு இரண்டு நாட்கள் கழித்து, 17-ம் தேதியன்று எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், 'உடனே நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து, இந்தத் தேர்தல் வேலைகளை நீங்கள் கவனிக்கவேண்டும். அப்படிக் கவனிப்பீர்களானால் உங்களுக்கு எந்தவிதமான பரிசுகள் வேண்டுமானாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருந்தலைவர்கள் தருவார்கள்' என்றும் இன்னும் இதைவிட மோசமான, கேவலமான முறையில் எங்கள் தலைவர்களைப் பற்றியெல்லாம் எழுதப்பட்டிருந்தன. அது பிரச்சனையில்லை. முக்கியமானது அதில் என்னவென்றால், அதில் கையெழுத்துப் போட்டிருந்தது, 'முத்து அண்ணாச்சியுடைய தமிழர்படைத் தொண்டன்' என்பதுதான். நகர காங்கிரஸ் அலுவலகத்தில் இக்கடிதம் இருக்கின்றது.

தேவையானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைக் காவல் துறையினருக்கு அனுப்பி இதைப் பரிசீலிக்கச் செய்யலாம். ஆனால் நான் அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கவில்லை. தேர்தல் நேரத்தில் இப்படிப்பட்ட கடிதங்கள் வருகின்றன என்றால் உண்மையிலேயே தமிழர் படைதான் இந்தத் தேர்தலைச் சந்திக்க இருக்கின்றதா அல்லது இந்தத் தேர்தலைக் காவல் துறை கண்காணிக்க இருக்கின்றதா என்றுதான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து, மாணவர்கள் பிரச்சனை என்று வரும்போது எங்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பத்து கோரிக்கைகளை வைத்து, அதில் மக்கள், அரசுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக நடத்தப்பட்ட அந்த ஊர்வலத்தில், "மாணவர்கள் குருதியைக் குடிக்காதே, தமிழக அரசே வெளியேறு" என்று சொல்லி வந்தோம்! மாணவர்களைப் பொறுத்த மட்டில் சென்ற ஆண்டில் நம்முடைய காவல் துறையினர்—முன்பெல்லாம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்கள் சொல்லுவார்கள், "எங்கள் ஆட்சியில் துப்பாக்கியால் சுட்டால், பூமாரி பொழியும், குண்டுகள் வெடிக்காது" என்று.

திரு. நா. வீராசாமி: "தமிழக அரசே வெளியேறு", என்று சொன்னால், உள்ள இந்த அரசினை வெளியேறச் செய்து பின்னர் எந்த அரசைக் கொண்டு வர இருக்கின்றார்கள் என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஓ. என். சுந்தரம்: ஏனோ நமது மதிப்பிற்குரிய வீராசாமி அவர்களுக்கு இப்படிப்பட்ட சந்தேகம் வந்துவிட்டது. இதற்குப் பதிலாகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களே ஒரு பொதுக் கூட்டத்தில் இதைக் குறிப்பிட்டுவிட்டு, "என்னைக் கேட்டிருந்தால்கூட நான் நல்ல வாசகங்களை எழுதிக் கொடுத்திருப்பேன்" என்று சொன்னார்கள். ஒருக்கால் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் பக்கத்தில் வரும்போது வேண்டுமானால் அதற்குத் தேவையிருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது பதின்மூன்று நிமிஷங்கள் பேசிவிட்டீர்கள்.

திரு. ஓ. என். சுந்தரம்: குறுக்கீடுகள் வந்தால் என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குறுக்கீடுகள் இல்லாமல் பேசுங்கள். குறுக்கீடுகள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்தான் பொறுப்பு. பேரவை பொறுப்பல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ்: சார், ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் பேச்சின் நேரமும் அதில்தான் சேரும். குறுக்கீடுகள் வந்தால் பேசும் மாண்புமிகு உறுப்பினர்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் அந்த நேரத்தை.

திரு ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, குறுக்கீடுகள் வந்தாலும் அதற்கு நாங்கள் தான் பொறுப்பு என்று சொன்னார்கள். இதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆளுங்கட்சி அங்கத்தினர்களும், அமைச்சர்களும் குறுக்கிட்டுப் பேசும்போது அதற்கும் பேசுகின்ற அங்கத்தினர்தான் பொறுப்பு என்று சொன்னால், இது, எதிர்க்கட்சிக்காரர்களை, அரசாங்கத்தை எதிர்த்துப் பேசவேண்டாம் என்றும், இந்த அரசைப் பாராட்டித்தான் பேச வேண்டும் என்ற நிலை ஏற்படும். அப்போது தான் குறுக்கீடு இருக்காது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அவைத் தலைவர் அவர்கள் அப்படிக் கூறியிருந்தாலும் கூட, அதில் கண்டிப்பும் முனைப்பும் காட்டமாட்டார். கவலைப்படவேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குறுக்கீடு இருந்தாலும் கூட, தாங்கள் ஈல்ட் பண்ணாமல் இருக்கலாம்.

திரு. ஒ. என். சுந்தரம் : மாணவர்கள் மீது அடக்கு முறையைப் பொறுத்தவரையில், கடந்த ஒரு ஆண்டில் நடந்த துப்பாக்கிச் சூடுகளைப் பற்றிச் சொல்லும்போது, சிதம்பரத்தில் நடைபெற்ற உதயகுமார் விவகாரத்திலிருந்து, பாளையங்கோட்டையில் லூர்துநாதன், கண்ணமங்கலத்தில் சிவசங்கரன், பெத்தநாயகன் பாளையத்தில் முத்துக் குமாரசாமி, திருச்சியில் கிளைவ் ஹாஸ்டலில் நடைபெற்ற சம்பவங்கள்வரை பார்க்கிறபோது, காவல் துறை எவ்வளவு கடுமையாக மாணவர்களை நசுக்கி இருக்கிறது, துன்பப்படுத்தி இருக்கிறது என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். "இளம் தலைமுறையினர் ஆதரவை, அன்பை என்று இழக்கிறார்களோ, அன்றே இந்த உலகில் அவர்களுக்கு வேலை இல்லை" என்று ஜார்ஜ் மெக்டோனுல்ட் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார். இவற்றையெல்லாம் கவனத்தில் வைத்து ஆட்சியில் உள்ளவர்களும், ஆட்சிப் பொறுப்பிலுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சரியான முறையில் தலையிட்டு துறையை சரியான முறையில் நடத்திச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் தேர்தல் வருகின்றபோது அப்படிப்பட்ட தாக்குதல்களையெல்லாம் நடத்தி வருகிற தமிழர் படை ஆகியவற்றை எல்லாம் அப்புறப்படுத்திவிட்டு நல்ல, நடுநிலையான முறையில் தேர்தலை நடத்துகின்ற வாய்ப்பினை உண்டாக்க வேண்டும். இங்கே இருக்கிற போலீஸ் படை போதவில்லை என்றால், மத்திய அரசிலிருந்து போதிய "சி.ஆர்.பி." போன்றவற்றை வரவழைத்து, தேர்தலை நல்ல முறையில் நடத்தி, ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையினரைப் பொறுத்தவரையில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் ஆகியவர்களின் வேலைப் பளு மிகமிக அதிகமாக இருக்கிறது. அவர்கள் புலனாய்வு போன்ற வேலைகளை துரிதமாகச் செய்ய வேண்டுமென்றால், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களைக் கொடுக்க வேண்டும். மோட்டார் சைக்கிள் கொடுக்கும்போது, பாதித் தொகையை மானியமாகவும் பாதித் தொகையைக் கடனாகவும் கொடுக்க வேண்டும். மேலும், புலனாய்வு போன்றவற்றில் இவர்களுக்கு நவீனமான சாதனங்களை சப்ளை செய்ய வேண்டும்.

கடைசியாக, காவல் துறையைப் பொறுத்தவரையில், ஒரு அமைச்சர் ஒரு இடத்திற்கு 10 மணிக்கு உலா வருகிறார் என்றால், 6 மணிக்கே அமைச்சர் அவர்கள் வருகின்ற வழியில் காவலர்களை நிறுத்திவிடுகிறார்கள். அவர்கள் வெய்யிலிலும் மழையிலும் நிற்கவேண்டியிருப்பதால் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்ட அவதிக்கு இவர்களை ஆளாக்காமல் இருப்பதற்காக, அமைச்சர் வருவதற்கு முன்னால் ஒரு மணிக்கு முன்னால் மட்டும் அவர்கள் இருந்தால் போதும் என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று கூறி பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ஜி. ராஜாராம் :** மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற காவல்துறை மானியத்தின் மீது எனது கருத்துக்களைத் தெரிவிப்பதை மகிழ்ச்சிக்குரிய

கடமையாக நான் கருதுகிறேன். வாய்பிளந்து நிற்கின்ற வரிப்புலி என மக்களை வாட்டுகின்ற வரிகளோடு ஒரு பட்ஜெட் உருவான நேரத்திலே, வரிகளை இல்லாமலே வளங்கொழிக்கின்ற திட்டங்களோடு இந்த நாட்டு மக்களை வாழ வைக்கின்ற திட்டங்களோடு உபரி பட்ஜெட் ஒன்றினை கொஞ்சுகின்ற தமிழ் நடையோடு இந்த மன்றத்தின் மூலம் இந்த மாநிலத்திற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். ஆனால், அந்த அறிக்கையைக் கூட பாராட்டுவதற்கு மனமில்லாத எதிர்கட்சிக்காரர்கள், எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பாணியிலே இந்த அறிக்கையை விமரிசனம் செய்து அவர்களுடைய இதய வளத்தை காட்டிக்கொண்டார்கள். அவர்களுடைய மன அரிப்பை தீர்த்துக்கொள்வதற்கு ஏற்ற வகையில் இன்றையதினம் காவல் துறை மானியம் இங்கே வந்திருக்கிறது. காவல் துறை மானியத்தின் மீது எதிர்க்கட்சி வரிசையிலிருந்து கடுமையான கண்டனங்களும் விமரிசனங்களும் விவகாரங்களும் புறப்பட்டு வரும் என்பதை நாங்கள் உணர்ந்தே இருக்கிறோம். காவல் துறையைப் பற்றி கடுமையான விமரிசனங்களைச் செய்வதும், விவகாரங்களைப் பெரிது படுத்துவதும், கண்டிப்பதும் எதிர்க்கட்சிகளுக்கு வாடிக்கையான விஷயமாகும். குறிப்பாக, பொருள் இருக்கிறதோ இல்லையோ போலீஸ் துறையைப் பற்றிக் குற்றஞ்சொல்வதும் குறை கூறுவதும் எதிர்க்கட்சிக்காரர்களைப் பொறுத்தவரையில் ஒரு ஃபேஷனாகவே மாறிவிட்டது. ஆனால் நான் அவர்களுக்கு கூறிக் கொள்வேன், அந்த ஃபேஷனே அவுட் ஆப் டேட்டாகப் போய்விட்டது. சில மாதங்களுக்கு முன்னால் ஒரு மாநில மாநாட்டில் ஒரு பெரியவர் போலீஸ் துறையைப் பற்றி நீண்ட நேரம் பாராட்டிப் பேசினார். விவசாயப் போராட்டத்திலே போலீஸ் துறை நடந்துகொண்ட முறையை அணுவணுவாக ஆராய்ந்து சிலாகித்துக் கொண்டார்கள். "போராட்ட நேரத்தில் கலவரம் விளைந்தால்—வன்முறை நிகழ்ந்தால் துப்பாக்கிச் சத்தம் கேட்காமல் கொஞ்சமாவது செய்யும்" என்றெல்லாம் கேட்டு கூடியிருந்த கூட்டத்தினர் கரவொலி செய்கின்றார்களா எனப் பார்த்து மகிழ்ந்து கொண்டார். அதே பெரியவர், தனிக்கட்சிக் காண்கிற நேரத்தில், போலீஸ் ராஜ்யம் இங்கே வந்துவிட்டது என்றுதான் சொன்னார். போலீஸ் அராஜகம் மிகுந்து விட்டது என்றுதான் சொன்னார். நாட்டினரிடம் முறையிட்டுக்கொண்டார். கவர்னரிடம் போனார். அதற்கும் மேலே, போலீஸ்காரர்கள் வீட்டுக்குப் போய் அவர்கள் வீட்டு தாய்மார்களிடத்திலே மனுக் கொடுக்கின்ற முறையிலே, கிடு கிடுப் போராட்டம் ஒன்று கொண்டுவரப் போகிறேன் என்றும் சொன்னார். ஆனால் என்ன கால்ஷீட் தகராறோ அந்தப் படம் ஏனோ, ரிலீஸ் ஆகவில்லை. இதில் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவதெல்லாம், எதிர்க்கட்சிக்காரர்கள் என்ற நிலையைப் பெற்று விட்டால் போலீஸ் துறையை குறை கூறவேண்டுமென்ற துர்பாக்கியமான நிலை இருப்பது ஒரு சாபக்கேடு. அரசு சட்ட ரீதியாக போலீஸ் துணையோடு மேற்கொள்கிற நடவடிக்கைகளுக்கு எல்லாம் எதிர்க்கட்சிக்காரர்கள் அவசரம் அவசரமாக அரசியல் வர்ணம்பூசி மகிழ்ச்சி கண்டுகொண்டிருக்கிறார்கள். சில தினங்களுக்கு முன்னால் மதிப்பிற்குரிய திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள், ஒரு கிரிமினல் வழக்கு தொடர்பாக சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரி வேண்டுகோளுக்கிணங்க இங்கே கைது செய்யப்பட்டார். அதற்கு எத்தனை சலசலப்புகளை ஏற்படுத்தினார்கள்?

"சதி" என்றார்கள். "சூழ்ச்சி" என்றார்கள். "அவர் இந்த சட்ட மன்றத்திற்கு வந்தால், * அமைச்சர்கள் பயந்து கொண்டு ஓடிவிடுவார்கள்" என்றெல்லாம் கூடச் சொன்னார்கள். பத்து நாட்களுக்குப் பிறகு ஜாமீன் நிபந்தனை தளர்த்தப்பட்டு இங்கே வந்திருக்கிறார். இங்கே அவர் என்ன * * * என்பது திரு. ஹாண்டேவுக்குத்தான் வெளிச்சம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of order, Sir. This is not the way one member should express about another member of the House.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, நான் கைது செய்யப்பட்டது சம்பந்தமாக உறுப்பினர் விவாதத்திற்கு வருவதாக இருந்தால்; அது சம்பந்தமாகப் முழுமையாக பேச எனக்கு உரிமை இருக்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, ஒரு உறுப்பினரைப் பற்றி பேசும்போது, இப்படி * * * என்றெல்லாம் பேசுவது சரியல்ல. It is not good taste. It should be expunged

திரு. ஜி. ராஜாராம் : தங்கமணி * * * என்று சொன்னால் ..அவரைக் கொஞ்சம் உள்ளே தள்ளி அழகு பார்த்திருக்கலாம்......

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : Sir. it means a reflection.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : மாண்புமிகு உறுப்பினர் ராஜாராம் பேசும் போது * * * என்று சொன்ன அந்த வார்த்தைகளை சட்டமன்றக் குறிப்புகளிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசாமல், இந்த மன்றத்திற்கு கவுரவத்தை சேர்க்கக்கூடிய முறையில் பேசவேண்டும் என்று உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. ராஜாராம் : என்னுடைய பேச்சில் எடுக்கப்பட வேண்டியவை இருந்தால் எடுத்து விடலாம். நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால் உண்மையில் இந்த அவையில் கலந்துகொள்ளாமல் செய்ய, யாரையாவது எதிர்க்கட்சி உறுப்பினர்களை உள்ளே தள்ளி அழகு பார்க்க வேண்டுமென்று இந்த அரசுக்கு ஒரு வேடிக்கையான ஆசை இருந்திருக்குமானால் இந்தச் சட்டமன்றத்திலே, சட்ட மன்ற விதிகளையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு, "உட்கார்ந்திருந்தால் 'ஹாண்டே எழுந்து நின்றால் சண்டே" என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்ட காரணத்தால், எப்போது பார்த்தாலும் எழுந்து நின்று கொண்டு சண்டை போடும் பாணியிலே செயல்படுகிற ஹாண்டேயை நாங்கள் விரும்பியிருந்தால் உள்ளே தள்ளி இருப்போம். ஆனால் இன்றுவரை அப்படிச் செய்யவில்லை. பழி வாங்குகிற உணர்ச்சியோடு நடந்துகொள்வதில்லை. சொல்லப்போனால் "எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரை மோடக்குறிச்சி சின்னசாமி அவர்களைகூட கிரிமினல் வழக்கில்தொடர்புபடுத்தி கைது செய்யப்பட்டார்கள். எதிர்க்கட்சியினர்கள் ஒப்புதலுக்கு மூச்சு விட்டார்களா? நான் கூறவிரும்புவதென்னவென்றால், சட்ட மன்ற உறுப்பினர் என்ற உரிமையை வைத்துக்கொண்டு கிரிமினல் வழக்குகளிலிருந்து பாதுகாப்புப் பெற முடியாது என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். இவர்கள் வீணாக சலசலப்பு காட்டுகிறார்கள் என்பதுதான்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பட்டது.
** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பட்டது.

இந்த மானியத்தைப் பற்றிப் பேசும்போது, எதிர்க் கட்சி உறுப்பினர்கள், "பொய் வழக்குப் போடுகிறார்கள், சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது" என்று முணுமுணுப்பதே வழக்கமாகப் போய் விட்டது. இது திருவனந்தபுரத்து வீதியிலே இடையிலே காவி வேட்டி கறுப்பு வேட்டி தரித்தவர்கள் சாமியே சரணம் ஐயப்பா என்று கூறுவதுபோலிருக்கிறது.

அந்த பக்தர்களுக்காவது பக்தி உணர்வு இருப்பதாக நம்புகிறேன். ஆனால் நமது எதிர்கட்சித் தோழர்கள் சுலோகங்களை உச்சரிக்கும்போது,பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய வேலைக்காரி சினிமாவில் வருகின்ற வேதாசல முதலியார்தான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. அந்த வேதாசல முதலியார் பட்டை பட்டையாக விபூதி பூசிக்கொண்டு முருகா, கந்தா, சண்முகா என்று அடிக்கொரு தடவை சொல்லிக்கொண்டிருப்பார். ஆனால் அவருடைய குணாதிசயங்கள் என்ன என்பது படம் பார்த்தவர்களுக்குத் தெரியும்.

அதைப்போலத்தான் இன்றைய தினம் வன்முறை வெறியாட்டங்களுக்கு துணை போகின்றவர்கள், வன்முறை வெறியாட்டங்களுக்கு வித்திட்டவர்கள், வன்முறை வெறியாட்டங்களுக்கு காரணமாக இருப்பவர்கள், வழக்குகள் பிறப்பதற்கு காரணமாக உள்ளவர்கள், வழக்கில் சம்பந்தம் பெறுகின்றவர்கள், வழக்குகளை உருவாக்கி நடத்துகின்றவர்கள், நம்மைப் பார்த்து " வழக்குப் போடாதே, வழக்குப் போடாதே " என்று கூக்குரலிட்டு கொண்டிருக்கிறார்கள். அப்படித்தான் சொல்லுகிறார்களே வழக்குப் போடாதே என்று, போட நினைத்தால் போட வேண்டாம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு எதிர்க்கட்சிக்காரர்கள் அப்படியே குற்றமில்லாத குணசீலர்களா, உத்தமர்களா ?

ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒழுக்கம் குறைந்தவர்களா ? சொல்ல முடியுமா? ராமாயணத்தில் சீதையைத் தொட்டால் ராவணன் எரிந்துவிடுவான் என்ற சாபம் இருந்ததால், அப்படியே சீதையை குடிசையோடு தூக்கிக் கொண்டு வந்தான் என்று கம்பர் எழுதினார். வால்மீகி வேறு மாதிரி எழுதியிருக்கிறார். இவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் கம்பர் எழுதிய சீதைகளா, நாங்கள் திரிசடையின் சாபம் பெற்ற இராவணன்களா ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் ஒழுக்கமற்றவர்கள், ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் உத்தமர்களாக இருக்கிறார்கள், ஒழுக்க சீலர்களாக இருக்கிறார்கள் என்று உறுப்பினர் வாதாடுவது வேடிக்கையாக இருக்கிறது, விந்தையாக இருக்கிறது. ஆளுங் கட்சியில் இருப்பவர்கள் பலரும் பல இடங்களில் முறைகேடாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே ஆதார பூர்வமாகப் பேசுவதற்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். ஆதலால் குற்றம் சாட்டுகிற முறை, நியாயத்தோடு சாட்டுகின்ற முறையிலிருக்க வேண்டும். ஒரு வேளை உங்களிடத்திலிருக்கின்றவர்கள் வேறு விதமான அபிப்பிராயம் உள்ளவர்களாக இருக்கலாம். அதையெல்லாம் இங்கே புகுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி குறுக்கிடு)

திரு. ஜி. ராஜாராம்: தலைவரவர்களே, நான் இங்கே சொல்ல வந்தது பொய் வழக்குப் போடுகின்றார்கள் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லு வதால் . . . .

திரு. செ. கந்தப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜாராம் பேச்சில் ஒழுங்குப் பிரச்சினையை வெளிப் படுத்தும் கருத்தோ, சபையின் உரிமையை மீறுகின்ற கருத்தோ இருப் பதாகத் தெரியவில்லை. ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் எதிர்கட்சியிலிருந்து பேசுகின்ற தலைவர்கள் "அன்பார்லிமெண்டரி" என்ற முறையில் இல்லாவிட்டாலும் கடுமையான பதப்பிரயோகங்களை நிரம்பப் பயன்படுத்தி, அதைத் தாங்கிக்கொள்ள வேண்டிய நெருக்கடி எங்களுக்கு அடிக்கடி ஏற்படுகிறது. இன்றைக்குக் காவல் துறையின் மானியத்தின் மீது பேசுகின்ற எங்கள் கட்சி உறுப்பினர் கூர்மையான வார்த்தைகளை பயன்படுத்துகிறார் என்பது உண்மை. ஆனால் "அன்பார்லிமெண்டரியாக"ப் பேசவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் அதை நீக்குவது என்றால் எங்கள் தரப்புக்கு ஒத்துவராது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): அன்பார்லி மெண்டரி என்பதற்காக நீக்கவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, அப்படியே இருக் கட்டும். எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. நா. வீராசாமி): அன்பார்லி மெண்டரி என்பதற்காக அந்த வார்த்தைகள் நீக்கப்படவில்லை. மன்றத் தின் மரபுக்கு ஏற்ற மாதிரி அமைவது நல்லது என்ற எண்ணத்தில் நீக்கப்பட்டது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த மாதிரி பேசினால் எதிர்க்கட்சியிலிருப்பவர்களும் அப்படிப் பேச வேண்டி வரும்.

(அவையில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் எழுந்து நிற்கின்றனர்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கவில்லை. கருத்தைச் சொன்னார்கள் என்று கருதுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் மதிப்பிற்குரிய தலைவரவர்களே, ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்பு கிறேன். மதிப்பிற்குரிய தலைவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இரண்டு தரப்பிலிருந்தும் பேசுகின்ற நேரத்தில் பல நேரங்களில் கடுமையான சொற்களைப் உபயோகப்படுத்தலாம். ஏனென்றால் இந்த மானியம் அப்படிப்பட்ட மானியம். சூடான மானியமாக இருப்பதால், நான் கேட்டுக் கொள்வது, மிகவும் "அன்பார்லிமெண்டரி" வார்த்தையாக இருந்தால் எக்ஸ்பஞ்சு செய்துவிட்டு மற்றதைச் சொல்லுவதற்கு இரண்டு தரப்புக்கும் உரிமை கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): இதைச் சொல்லி டாக்டர் ஹாண்டே அவர்கள் கடுமையான வார்த்தைகளைச் சொல் வதற்கு முன்னாலேயே அனுமதி கேட்பது போல் உள்ளது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, அனுவசியமாக எதையும் நீக்க வேண்டியதில்லை. பார்லிமெண்டில் அப்படி நீக்குகின்ற முறை கிடையாது. அதைத்தான் நாம் கடைபிடிக்கவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): நீக்குவது என்பது அவையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவரின் பொறுப்பு. மன்றத்தில் ஏற்படுகின்ற சில நிகழ்ச்சிகள் மன்றத்தின் நன்மைக்காக நீக்கப்படுகிறதே தவிர, வேறு எந்தக் காரணத்தாலும் அல்ல. இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நீங்கள் சில வார்த்தைகளை நீக்கி தீர்ப்புக் கொடுத்துவிட்டீர்கள். அதன் பிறகு உறுப்பினர் திரு கந்தப்பன் அவர்கள் பேசும்போது "நாள் தோறும் இப்படி பேசிக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு ஒத்து வராது" என்றார். அவ்வாறு அவர் சொன்னது மிரட்டுவது போல் இருக்கிறது. . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): எந்தப் பிரச்சினையை எடுத்தாலும், எல்லோரும் பேசுவது இந்த மன்றத்தின் மரபாகி விட்டது. தயவு செய்து உறுப்பினர் அவர்கள் அவருடைய இருக்கையில் உட்கார வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் தலைமை.)

திரு. ஜி. ராஜாராம்: தலைவரவர்களே, நான் சொன்னதெல்லாம், எதிர்கட்சிக் காரர்கள் அவ்வளவு பெரும் குற்றமே புரியாத குணசீலர்களா, நாங்கள் எல்லாம் ஒழுக்கம் கெட்டவர்களா என்று கேட்டேன். இதில்

என்ன தவறு என்று புரியவில்லை. மன்றத்தில் இருக்கிறவர்களை மட்டும் கேட்கவில்லை. நாட்டில் இருக்கின்ற எதிர்க் கட்சிக்காரர்கள் அவ்வளவு பேரும் குற்றமில்லாத குணசீலர்களா, நாங்கள் ஒழுக்கங் கெட்டவர்களா என்று புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பிரச்னையை விட்டுவிட்டுப் பேசுங்கள்.

திரு. ஜி. ராஜாராம்: தலைவரவர்களே, நான் சொல்ல வந்த காரணம், பொய் வழக்குப் போடாதே, என்று சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். ஆனால், இருக்கிற உண்மையான வழக்கைக்கூட நாங்கள் போடவில்லை என்று சொல்லி வருகிறேன். எதிர் கட்சிக்காரர்கள் வன்முறையைத் தூண்ட உத்தேசித்ததின் விளைவாக, நகரங்களிலும் கிராமங்களிலும் ஏற்படுகிற விளைவுகளுக்கு உண்மையான வழக்குக் கூட போட முடியாமல் காவல் துறையினர் சோர்ந்து போயிருக்கிறார்கள். நான் காவல் துறையினரைக் குறை கூறவில்லை. எதிர் கட்சிக்காரர்கள் இப்படிப்பட்ட மன்றங்களில் பொருளில்லாத, பொருத்தமில்லாத, நியாய பூர்வமில்லாத முறையில் போலீஸ் துறையைப் பற்றி செய்யும் விமர்சனங் களால் அவர்கள் சோர்ந்து போயிருக்கிறார்கள் உண்மையான வழக்கைக் கூட போட முடியாமல் இருக்கிறார்கள். இரண்டொரு உதாரணங்களை, முக்கியமான நிகழ்ச்சிகளைச் சொல்லிவிட்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

என்னுடைய நகரத்தில் செஞ்சிப் பகுதியிலிருந்து ஒரு கழக நண்பர் கன்னலம் என்ற ஊரிலிருந்து கோர்ட்டில் சாட்சி சொல்ல வந்தார், அவரை முரசிப் பொட்டு காம்பவுண்டுக்குள் மடக்கிக் கொண்டு பலமாக தாக்கியிருக்கிறார்கள். எதிர் கட்சித் தலைவர் ஒரு வழக்கறிஞர் என்பதால், அவரைக் கேட்கிறேன். தாக்கியவர் அந்த நகரத்தில் சிண்டிகேட் காங்கிரசின் தலைவர் வழக்கறிஞர் சாட்சி சொல்லவந்த கழக நண்பரை நகரத்தின் சிண்டிகேட் காங்கிரஸ் தலைவர் தாக்கியடித்திருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, சிண்டிகேட் காங்கிரஸ் என்று குறிப்பிடுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர், 'ஸ்தாபன காங்கிரஸ்' என்று குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. ராஜாராம்: தலைவரவர்களே, இந்த வழக்கைக்கூட நாங்கள் போடச் சொல்லவில்லை. அதற்காக வெட்கப்படுகிறேன். பொய் வழக்குப் போடாதே என்கிறார்களே, இப்படி நடைபெறும் குற்றங்களுக்குக் கூட வழக்குப் போட நாங்கள் துணைபோக முடியாமல் இருக்கிறது. எதிர்கட்சித் தலைவரவர்கள் வழக்கறிஞர் என்ற காரணத்தினாலே கேட்கிறேன். இந்த சம்பவத்திற்கு வழக்குப் போடலாமா வேண்டாமா? இது பொய் வழக்கா?

அடுத்து, எங்கள் நகரத்தில் திரு. ராமதாஸ் என்பவர் பிரபலமான டாக்டர். வளர்ந்து வருகிற டாக்டர். இந்த டாக்டர் ஒரு ஆசிரியருக்கு வேண்டியவர். இன்றைய தினம் புதிதாக அமைத்திருக்கின்ற கட்சியின்

மாவட்ட அமைப்பாளரில் ஒருவர், அந்த ஆசிரியர், அந்த ஆசிரியரின் பேச்சைக் கேட்டுக் கொண்டு—இவர் தேர்தல் காலத்தில் எனக்கு நேரடியாக எதிர்த்து வேலை செய்தவர் ; இப்போது கொஞ்ச நாட்களாக டாக்டருக்கும் இவருக்கும் பிணக்கு ஏற்பட்டுவிட்டது. மருந்து விற்பனையில், மருந்தின் விலையை சரியான விலைக்கு விற்க வேண்டும் என்று டாக்டர் சொல்ல, நீ என்ன சொல்ல என்று தகராறு ஏற்பட்டு, அந்தக் கடையில்—அண்ணு மெடிகல்ஸ் கடையில்—வாங்காதே என்று டாக்டர் சொல்ல, அதன் விளைவாக ஆசிரியருக்கு வேண்டிய * தயாரிக்கப்பட்டு மருந்தகத்தில் நுழைந்து டாக்டரை தாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அங்கேயிருந்த அட்டெண்டர் அடிக்கப்பட்டிருக்கிறார். நர்ஸ்-ஐ அவமானப்படுத்த முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. பெஞ்சுகள் உடைக்கப்பட்டிருக்கின்றன. இதில் கூட இன்னும் நாங்கள் வழக்குப்போட துணை நிற்கவில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் இப்படிப்பட்ட வழக்குகளைப் போடவேண்டாம் என்று சொல்லுகிறார்களா ? இப்படி நியாயமாக வழக்குகளைக்கூட நாங் கள் போட துணையாக இல்லை. செஞ்சியில் எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கின்ற திரு சகாதேவன் அவர்கள் இன்றைக்குச் சட்ட மன்றத்திற்கு வந்திருக்கிறார் என்றால், அது பெரும் புண்ணியம் என்று சொல்லுகிறார்கள். அவர் தப்பி வந்தது பெரிய காரியம் அந்த அளவுக்கு நிகழ்ச்சி நடந்திருக்கிறது.

இறுதியாக ஒன்று. திண்டிவனத்தில் சில தினங்களுக்கு முன்னால் ஒரு நிகழ்ச்சிக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. எங்கள் கூட்டமல்ல. ஸ்தாபன காங்கிரஸ்காரர்கள் கூட்டம் போட்டார்கள். அந்தக் கூட்டத்தில் புதிதாக கட்சி ஆரம்பித்திருக்கின்ற தோழர்கள் புகுந்து கலாட்டா செய்தார்கள். சைக்கிள் செயினை வைத்துக்கொண்டு விளையாடினார் கள். நாங்கள் சொல்லவில்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்களின் கட்சியைச் சார்ந்தவர்களே கூட்டத்தில் சொன்னார்கள். அதுமட்டுமல்ல. எங்களுக்கு சர்ட்டிபிகேட் கொடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்கள் பரிசுத்தமானவர்கள். கலைஞர் அவர்கள் சொன்னது போல, அங்கேயிருந்து * வெளியேறி விட்டார்கள். இங்கேயிருப்பவர்கள் சுத்தமானவர்கள் என்று சர்ட்டி பிகேட் கொடுத்தார்கள்.

எங்கள் ஊரைப் பொறுத்தவரையில் புதிய கட்சியில் உள்ள வன் முறைக் கூட்டம், அந்தக் * $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு முன்பே திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து போய்விட்டார்கள். அதற்கு முன்னால், ஸ்தாபன காங்கிரஸ் கூட்டம் ஒன்றில் அதைக் கண்டிக்க புதிய கட்சிக்காரர்கள், இந்திரா காங்கிரஸ்காரர்கள், கம்யூனிஸ்டுக்காரர்கள் இணைந்த கூட்டத்தைப் போட்டார்கள். கூட்டத்திலே ஸ்தாபன காங்கிர சார் கலாட்டா செய்தார்கள். இப்படி பரஸ்பரம் ஒருவருக்கொருவர் கலாட்டா செய்து கொண்டு அதன் விளைவாக ஒருவர் மீது ஒருவர் வழக்குப் போட்டுக்கொண்டு இவர்களைப் பார்த்து அவர்களும் அவர்களைப் பார்த்து

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பட்டது.

[திரு. ஜி. ராஜாராம்] [1973 மார்ச் 23

இவர்களும் பொய் வழக்குப் போடுகிறார்கள். பொய் வழக்குப் போட்டதாக ஆக்கிக்கொண்டு நகரத்தை கலக்கியிரு என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்களை சார்ந்துள்ள கட்சிக்காரர்களும், புதுக் கட்சிக்காரர்களும் இணைந்து இங்கே வந்து சொல்லுகிறார்கள். வெளியிலேயும் அப்படிப் பிரச்சாரம் செய்கிறார்கள். என்ன கூடி இருந் (மணி அடிக்கப்பட்டது. காவல் துறை பொறுப்பை ஏற்று இருந்தோம். காவலராய் இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் நாட்டின் காவலராக இருந்து வழி நடத்திச் செல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த காவல் துறை மானியத்தை வரவேற்று, ஆதரித்து, பாராட்டி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

* * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து நீங்கள் உட்காருங்கள். இதில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது ?

திரு. முனு ஆதி : பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். நான் உட்காரச் சொன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் உட்காரவேண்டும். திரு. ஜேம்ஸ் அவர்கள் எழுப்பிய பாயின்ட் ஆப் ஆர்டரை பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். *

திரு. ஜேம்ஸ் அவர்கள் உட்கார்ந்துகொண்டே

* * * *

என்று சொல்லுகிறார்கள். அது பேரவைத் தலைவரை குறை கூறுவதாக இருக்கிறது. அப்படிச் சொல்வது முறையல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ் :

* * * *

பேரவைத் தலைவர் மீது குறை சொல்லவேண்டுமென்ற நோக்கத்தோடு நான் சொன்னதல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

* * நீங்கள் சொல்கிறீர்கள். அது சரியா ? அப்படிச் சொல்வது சரியல்ல. ஆகவே, இதையும் எக்ஸ்பஞ்ச் செய்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1973 மார்ச் 23]

திரு ஆர். பொன்னப்ப நாடார் : இப்படி எல்லாவற்றையும் எக்ஸ்பஞ்ச் செய்துகொண்டே போவதாக இருந்தால், நாங்கள் எல்லாம் இந்த சபைக்கு வரவேண்டுமா வரவேண்டாமா என்பதை முதலிலே தெரிவித்து விடவேண்டும். எதை வேண்டுமானாலும் எக்ஸ்பஞ்ச் செய்வதற்கு தங்களுக்குப் பூரண அதிகாரம் இருக்கிறது. ஆனால் இந்த மாதிரி உறுப்பினர்கள் கருத்துகளைச் சொல்கின்றபோது ஏதோ விரோதத்துடன் சொல்கிறார்கள் என்றோ அல்லது வேண்டுமென்றே குறை சொல்கிறார்கள் என்றோ நினைத்து உடனுக்குடன் எக்ஸ்பஞ்ச் செய்வது சரியல்ல. இப்படி உத்தரவிடுவது விரும்பத்தக்கதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு கே.டி..கே. தங்கமணி : சபாநாயகர் ஆளும் கட்சியோடு ஒன்றியிருப்பவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் அவ்வப்போது கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருந்தால் இந்த விவாதத்திற்கு ஒரு முடிவே இல்லாமல் போய்விடும். ஒரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தன்னுடைய உரையிலே ஒரு கருத்தைச் சொல்லும்போது, அவர் எந்தக் கட்சியைச் குறிப்பிட்டு சொல்கிறாரோ அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. அல்லது அந்தக் கட்சியின் தலைவர் அதற்கு விளக்கம் அளிக்கலாம். ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது மற்றவர்கள் மாறுபட்ட கருத்துக்களையோ அல்லது வேறுபட்ட கருத்துக்களையோ அவ்வப்போது சொல்லிக் கொண்டிருந்தால் அவையின் நடவடிக்கை ஒழுங்காக நடைபெற முடியாமல் போய்விடும். காலம் வீணாகும். இதிலேயே சிறு சிறு விவாதங்கள் ஏற்பட்டுவிடும். அதனால் அவையின் கருத்தே கூட திசை திரும்பிவிடக்கூடும். ஒரு குறிப்பிட்ட உறுப்பினரைப்பற்றி யாராவது தாக்கியோ, தரக்குறைவாகப் பேசுவதாகவோ இருந்தால் அவர் அதற்கு தன்னிலை விளக்கம் கொடுக்கலாம். ஆனால் அவ்வப்போது குறுக்கிடுவது சரியான முறையல்ல. ஆகவே, அவையின் நடவடிக்கைகள் ஒழுங்காக, நல்ல முறையில் நடைபெற மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு அமைச்சரவர்கள் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். இதுவரையிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாங்கள் தகுந்த விளக்கங்களைக் கொடுத்திருக்கிறோம். எங்களைத் தாக்கிப் பேசும்போது அதுபற்றி தக்க விளக்கங்களைக் கொடுத்திருக்கிறோம். அப்போதெல்லாம் இந்த மாதிரி எக்ஸ்பஞ்ச் செய்வது கிடையாது. ஆனால் இப்போது எக்ஸ்பஞ்ச் செய்வதால், அரசாங்கத்திற்கு ஆதரவான நிகழ்ச்சி அது என்று கூறினேன்.

(டாக்டர் எச்.வி. ஹாண்டே அவர்களும் திரு. முனு ஆதி அவர்களும் எழுந்தார்கள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் தயவு செய்து உட்காருங்கள். திரு. தங்கமணி அவர்கள், சபாநாயகர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்று கூறினார்கள். பேரவைத் தலைவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவராக பேரவைத் தலைவராவதற்கு முன்னால் இருப்பவர் தான். பேரவைத் தலைவரான பிறகு அப்படி இருக்க முடியாது. பேரவைத் தலைவர் எவ்வளவு நெருக்கடியான பொறுப்பை வகிப்பவர் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும்.

இப்போது அவை முன்னவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். யார் பேசினாலும், இடை இடையேக் குறுக்கிட்டால் அவையின் காலம் வீணாகும். அதனால் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிற எல்லா உறுப்பினர்களும் பேசமுடியாத சூழ்நிலை ஏற்படும். அது மட்டுமல்ல ; சபை நிகழ்ச்சிகள் கூட தடைபடும். அதை குறுக்கிடும் உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே, ஒரு உறுப்பினர் பேசும்போது மாற்றுக் கட்சியினரைக் குறைகூறுவதாகத் தெரிந்தால், அந்தக் கட்சியின் தலைவர் தேவைப்பட்டால் குறுக்கிட்டு விளக்கம் கொடுக்கலாம். இல்லை என்றால் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறபோது விளக்கம் அளிக்கலாம். இந்த முறையை எல்லோரும் கடைப்பிடித்தால் நல்லது. சபையை நல்ல முறையில் நடத்திச் செல்லவேண்டும் என்பதற்காகத்தான் பேரவைத் துணைத் தலைவர் என்ற முறையில் நான் சில கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் நான் அரசாங்கத்திற்குச் சாதகமாக இருக்கிறேன் என்று சொல்லுவது சரியல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ் : எக்ஸ்பஞ்ச் செய்தது அரசாங்கத்திற்கு ஆதரவாக இருக்கிறது. அதனால் அப்படிச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எக்ஸ்பஞ்ச் செய்ததால் அரசாங்கத்திற்கு ஆதரவாக இருக்கிறேன் என்று எப்படிச் சொல்லமுடியும் ?

THIRU J. JAMES : The consequence of expunction—that has affected in that manner. That is what I said.

MR. DEPUTY SPEAKER : But it should not be an accusation.

THIRU J. JAMES : I did not accuse.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : பேரவைத் துணைத் தலைவரவர்களே. ஒரே ஒரு விண்ணப்பம். எப்போதும் மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெறும்போது அமைதியாக நடைபெறும். பேரவைத் துணைத் தலைவரும் அமைதியாக இருப்பார்கள். இன்று கொஞ்சம் கோபமாகத்தான் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, கோபம் இல்லாமல் வழக்கம் போலவே இருந்து அவையை நடத்திச் செல்லவேண்டும். இந்த மானியம் கொஞ்சம் சூடான மானியம். பேரவைத் துணைத் தலைவரும் சூடாக இருந்தால் இன்னும் சூடு அதிகமாகிவிடும். அது கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

• மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன ஒரு கருத்தை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன். ஏனென்றால் இன்று வந்திருப்பது சூடான மானியம். இந்தச் சூடான மானியத்தைச் சூடாக விவாதித்து, அவையின் மரபைக் கெடுத்துவிடக் கூடாது என்பதிலே நான் ஆழ்ந்த கவலைகொண்டிருக்கிறேன். ஒருவர் பேசும்போது, அவ்வப்போது குறுக்கிட்டுப் பேசுவதால் ஏற்படுகின்ற சங்கடங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஒரு குறிப்பிட்ட நபரைப்பற்றிக் குறை சொல்வதாகத் தெரிந்தால் அவர் அதற்குப் பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் கேட்டு, தன்நிலை விளக்கம் அளிப்பது இந்த அவையின் மரபாக இருக்கிறது. அது அனுமதிக்கப்படுகிறது. நண்பர் இராசாராம் அவர்கள் பேசும்போது திரு. ஜேம்ஸ் அவர்களைப் பற்றியோ அல்லது மற்ற மாற்றுக் கட்சியினரைப் பற்றியோ பேசினார் என்றால் அதற்கு அவர்கள் விளக்கம் கொடுக்கலாம். அல்லது அவர்கள் கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள். அது அல்லாமல் ஒவ்வொருவரும் பதில் சொல்லுவது என்றால் அதற்கெல்லாம் நேரம் போதுமானதாக இருக்காது.

ஒரு குறிப்பிட்ட உறுப்பினரைத் தாக்கிப் பேசுவதாக இருந்தால் உடனே அவர் அதற்குப் பதில் சொல்லலாம். அதை அனுமதிக்கலாம். திரு. தங்கமணி அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு அவர்கள் தன் நிலை விளக்கம் கொடுத்தார்கள். ஒரு கருத்துக்கு மற்றொரு கருத்து கொடுக்கப்போனால் நேரம் போதாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த மானியக் கோரிக்கையின் மீது நல்ல முறையிலே விவாதங்களை நடத்த ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : துணைச் சபாநாயகர் அவர்கள் ஒரு தீர்ப்பைக் கொடுத்துள்ளார்கள். அந்த இடத்தில் இருந்து தீர்ப்பு வழங்கினால் அதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். நான் சபாநாயகர் ஆளுங் கட்சியோடு ஒன்றியிருப்பவர் என்று சொன்னதை—சர்க்காரும் தலைவரும் ஒன்று என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்னார்கள் ஆளுங்கட்சியின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவர்தான் தலைவராக வரமுடியும். சர்க்காரின் நம்பிக்கையைப் பெறாதவர்கள் சபாநாயகராக வர முடியாது. அப்படி வரக்கூடியவர் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில்தான் நடந்து கொள்வார். இன்றைக்கு சபாநாயகர் சொன்ன விஷயங்களைப் பார்த்தால் அவர்கள் அதை ஊர்ஜிதம் செய்வதாக இருக்கிறது. தலைவர் என்ற முறையில் பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் பாதுகாப்பாக இருந்தால் நலமாக இருக்கும். அதைப்பற்றி கருத்தறிவித்தால் எங்களுக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தங்கமணி அவர்களின் சந்தேகம் எனக்கு வேதனையளிப்பதாக இருக்கிறது. ஒரு மெஜாரிட்டிக் கட்சியின் ஆதரவைப் பெற்றவர்தான் பேரவைத் தலைவராக வர முடியும். அதில் சந்தேகம் இல்லை. அதற்காக மெஜாரிட்டி கட்சிக்கு சாதக

மாக இருக்கிறார் என்று சொல்வது ஏற்புடையதல்ல. பேரவைத் தலைவர் கட்சிக்கு அப்பாற்பட்ட நிலையில் இருப்பதுதான் ஜனநாயக மரபு. அந்த மரபைத்தான் நான் கடைபிடிக்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் இன்றைக்கு நான் கொஞ்சம் கோபமாக —சூடாக இருப்பதாகச் சொன்னார்கள். ஒருவேளை எனக்குத் தெரியாமலே கூட நான் அப்படி இருக்கலாம். அந்த மாதிரியான நேரங்களில் டாக்டர் ஹாண்டேயைப் போனறவர்கள் அதற்குக் கொஞ்சம் மருந்து கொடுத்தாலும் பரவாயில்லை. (சிரிப்பு). அதை நான் வரவேற்கிறேன்.

என்னுடைய எண்ண மெல்லாம் ஜனநாயக மரபுப்படி இந்த அவையை ஒழுங்காக நடத்திச் செல்ல வேண்டும் என்பதுதான். ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது "பாயிண்ட் ஆஃப் ஆர்டர்", அல்லது "பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன்" என்று இடையிடையே மற்ற உறுப்பினர்கள் குறுக்கிடுவதாக இருந்தால் அந்த உறுப்பினரும் ஒழுங்காகப் பேச முடியாது. சபையின் நேரமும் வீணாகும். அதனால் சபை நடவடிக்கைகளும் ஒழுங்காக நடைபெற முடியாமல் போகும். இப்படியே பேசிக் கொண்டு போனால் இன்று மாலையில் கூட இந்த மானியத்தின் மீதான விவாதம் முடிவுறாது. உறுப்பினர்கள் குறுக்கிடுவதால், காலம் வீணாவதால் பேசுவதற்குப் பெயர் கொடுத்த எல்லா உறுப்பினர்களுக்கும் பேச வாய்ப்புக் கிடைக்காமல் போய்விடுகிறது.

சில வேளைகளில் கட்சிக் கொறடாவின் அனுமதியின் பேரில் பேசப் பெயர் கொடுத்தவர்களுக்குப் பேசுவதற்கு நேரம் இல்லாததால் கடைசியிலுள்ள சில உறுப்பினர்கள் பெயரைப் பட்டியலிலிருந்து எடுத்து விடுகிறேன். அவர்கள் எல்லாம் பிறகு என்னிடம் வந்து குறைபட்டுக் கொள்கிறார்கள். அவர்கள் தொகுதியிலும் குறைகள் இருக்கும். தேவைகள் இருக்கும். அவைகளைச் சொல்வதற்கு அவர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசும்போது எங்கள் கட்சியைப் பற்றிக் குறை சொன்னால், கட்சித் தலைவர்கள் விளக்கம் அளிக்கலாம் என்று சொன்னார்கள். நான் கட்சித் தலைவர் என்ற முறையிலே ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். எங்கள் கட்சியில் காரியதரிசியாக இருப்பவர் திரு. ராஜாராம் அவர்களுடைய உறவினராக இருக்கலாம். அவர் ஏதாவது தவறுகள் செய்திருக்கலாம். அவர்கள் மீது சுமத்தப்பட்ட வழக்கைப்பற்றி நான் முன்பு ஒருமுறை கூறியிருக்கிறேன். இப்படி வழக்குகள் போடுதல், இந்த மாதிரி பொய் வழக்குகள் போடுவதைத் தவிர்த்தல் பற்றி யெல்லாம் நாம் விரிவாகப் பேசுவதற்கு இருக்கிறோம். ஆனால் அவருடைய பெயரைக் குறிப்பிடும் போது, அவர் இங்கே இந்த மன்றத்தில் இல்லை. அவர் ஒரு பொறுப்பான கட்சியின் காரியதரிசியாக இருந்தவர். எனவே அவர்மீது களங்கம் ஏற்படும் முறையில் பேச்சு அமையாதிருந்தால் நன்றாக இருக்கும். ஆனால் நேர்மாறாக அவர்கள் வேறுவிதமான கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நண்பர் இராசாராம் அவர்கள் சொன்னது, நீங்கள் குறிப்பிடும் திண்டிவனத்தைச் சேர்ந்த, காங்கிரஸ் கட்சியின் செயலாளர் அவர்களைப் பற்றிச் சொல்லும்போது எந்தவிதமான இழிச் சொற்களையும் அவர் சொல்லவில்லை. அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பாராட்டிப் பேசினார் என்றுதான் சொன்னார்.

திரு. மு. முனு ஆதி: துணைத் தலைவரவர்களே, ஆன் எ பாயின்ப் ஆஃப் ஆர்டர், நண்பர் இராசாராம் அவர்கள் பேசும்போது, * எல்லாம் வெளியேறி விட்டார்கள் என்று குறிப்பிட்டார். இப்படிப்பட்ட வார்த்தைகளை உபயோகிப்பதற்குத் தாங்கள் அனுமதித்தால், அதே கடுமையான வார்த்தைகளை நாங்களும் பயன்படுத்த முடியும். * எல்லாம் வெளியேறி விட்டார்கள் என்ற கருத்து சட்டமன்றத்திற்கு உகந்ததுதானா, அப்படி வெளியேறியவர்கள் காலிகள் என்றால் இருப்பவர்களைப் பற்றி நாங்கள் என்ன நினைப்பது என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையில் நீங்கள் உபயோகித்த வார்த்தைக்கு மாற்று வார்த்தைகள் தமிழில் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. * என்ற வார்த்தையைப் பொது மேடையில் உபயோகிப்பது வேண்டுமானால் கவர்ச்சிகரமாக இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட வார்த்தையை இந்தப் பேரவையில் பயன்படுத்துகிறதை நான் வரவேற்கவில்லை. எனவே * என்ற அந்த வார்த்தையை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகின்றேன்.

திரு கே. எ. வகாப்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தியத் துணை கண்டத்திலேயே மிகச் சிறப்பாக இயங்கி வரும் நமது காவல் துறையின் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ள நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தப் போலீஸ் மானியத்தை மனப்பூர்வமாக வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நாட்டில் ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற இந்த மூன்று பணிகளை எடுத்துப் பார்க்கும்போது, ஆக்கத்திற்கு ஈடாக உற்பத்தியினைப் பெருக்குவதில் தமிழக அரசும் இந்த நாட்டில் மக்களின் பாதுகாப்பிற்காக நம் கலைஞர் அவர்களும், அழிப்பதற்காக என்று இப்போது சில கட்சிகளும் நாட்டில் உற்பத்தியாகி யிருக்கின்றன என்று இந்த நேரத்தில் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக அமையும் என்று நினைக்கிறேன்.

நாட்டில் அமைதி காத்திட நம் நாட்டின் காவல் துறையினர் ஆற்றி வரும் பணியினைப் பற்றி, குறிப்பாகக் கடந்த ஆறேழுமாத காலமாக காவல் துறையினர் ஆற்றிவரும் பணி பாராட்டுக்குரியதாகும். காவல் துறையில் உள்ளவர்களும் மனிதர்கள்தான். குடும்பப் பாசம் கொண்டவர்கள்தாம். ஆனால் அவர்கள் மக்கள் சமுதாயத்தை அடிக்கின்றார்கள். துப்பாக்கியால் சுடுகின்றார்கள் என்ற பழியை எதிர்க் கட்சியினர் சொல்லும்போது, அதே நேரத்தில் இத் துறையினரின் இன்னல்களையும் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொறுப்புடன் கடமையாற்றிக் கொண்டு இருக்கும்போது பலர்

* மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

தாக்குதல்களுக்கு உள்ளாகின்ருர்கள் காவல் துறையினர். கொல்லப்படுகின்ருர்கள். அந்த நிலையில் அவர்கள் எத்தகைய தியாக உணர்வோடு, கடமை உணர்வோடு பணி ஆற்றுகின்ருர்கள் என்று எண்ணும்போது அவர்களைப் பாராட்டுவது நமது கடமையாகும்.

அதுமட்டுமில்லை. உலகிலேயே சிறந்து விளங்குகின்றது என்று சொல்லப்படும் எஃப்ஃபி.ஐ.—அமெரிக்காவிலுள்ள அந்த மத்திய போலீஸாலும், அல்லது ஸ்காட்லாண்ட் யார்டு என அழைக்கப்படும் இங்கிலாந்து நாட்டின் போலீஸாருலும், அவர்களுக்குச் சமமாக ஒப்பிடத்தக்க அளவிற்கு இந்தியத் துணைக் கண்டத்திலே சிறப்பாகப் பணியாற்றிவரும் நமது போலீசைப் பெருமையுடன் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிருேம். அதுமட்டுமின்றி இங்கே புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டுள்ளது. 1970-ம் ஆண்டிலே தமிழகத்தில் இழைக்கப்பட்ட குற்றங்கள் 25,830 என்றும் 1971-ல் அது 26,080 என்றும், இதைப் பார்க்கும்போது மிகக் குறைந்த அளவில் தான் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது. இது நமது போலீஸின் திறமை காரணமாகத்தான் என்று சொன்ஞல் மிகையாகாது.

அடுத்து வகுப்புக் கலவரங்கள் என்று சொல்லும்போது இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழகத்தில் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. இதற்குக் காரணம், பெருமையுடன் சொல்லுவேன், நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களும் நமது திராவிட முன்னேற்றக் கழக அரசும்தான் என்று. அந்த அளவிற்கு இந்த நாட்டிலுள்ள மைஞரிட்டி மக்களுக்கு அவர்கள் பாதுகாப்பு அளித்து வருகின்ருர்கள். ஆனலும் அண்மையில் குளச்சலுக்குப் போயிருந்தபோது அங்கே நாடார் சமூகத்தினருக்கும் மீனவர் சமூகத்தினருக்கும் இடையே நேர்ந்துவிட்ட ஒரு சம்பவத்தில் இடையிலிருந்த முஸ்லீம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ருர்கள் என்பதை வேதனையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதையறிந்த தமிழக அரசு உடனே நடவடிக்கை எடுத்து ஆவன செய்திருக்கின்ருர்கள் என்ருலும்கூட இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கலவரம் செய்தவர்கள் அங்குள்ள பள்ளிவாசலுக்குள் போய்விட்டார்கள் என்பதற்காக அங்கிருந்த தொழுகையிலிருந்த முஸ்லீம்களை இன்னல்களுக் குள்ளாக்கி யிருக்கின்ருர்கள். இது வருந்தத் தக்கது.

அடுத்து, நாட்டிலே போலீஸ் தடியடியும் கண்ணீர்ப் புகையும் துப்பாக்கிச் சூடும் மிகக் குறைவான அளவில்தான் நிகழ்ந்திருக்கின்றன என்ருலும் இவற்றையும் நாம் தவிர்த்திருக்கக் கூடாதா என்று எண்ணத் தோன்றுகிறது. இதற்கு முன்பு முதுகுளத்தூரிலே கண்ணைக் கட்டிச் சுட்ட சம்பவங்களையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது இந்த நாட்டில் இப்போது உள்ள சூழ்நிலை யாரும் மெச்சத்தக்க அளவில்தான் இருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

எதிர்க் கட்சியினர் அடிக்கடி போலீசைக் கண்டித்துப் பேசி அக்கிரமங்களைச் செய்து விட்டார்கள் என்று சொல்லும்போது, போலீஸார் ஆற்றிடும் நல்ல பல பணிகளையும் நாம் குறிப்பிட வேண்டும். பதிலாக அன்றாட

நிகழ்ச்சிகளைப் பெரிதுபடுத்திக் கொண்டு பேசிஞல் யாருக்கும் பலனில்லை. குறிப்பாக, நாம் அவ்வாறு பேசுவது காவல் துறைக்குப் பெருமை தேடித் தருபவர்களாக மாட்டோம்.

சென்னையில் ஹக்கீம் கைதானதை ஒரு பெரிய நிகழ்ச்சியாகச் சித்தரித்துக் காண்பிக்க வேண்டுமென்ற முயற்சியில் அதற்காகத் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டதைப் பார்த்தோம். இது அவசியம்தாஞ என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படியிருந்தும், ஹக்கீம் அவர்கள் உடனே மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்களிடம் போகாமல் எங்கள் கட்சியிடம் தான் வந்தார்கள். அவருடைய துன்பம் துடைக்கப்பட்டு அவருக்கு நியாயம் கிடைக்க நிச்சயம் முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்று திட்டவட்டமான உறுதி அவருக்கு இருக்கின்றது.

ஆனல் இப்படிப்பட்ட அடிப்படைகளை வைத்துக் கொண்டு எப்படியாவது இன்றைக்கு முஸ்லிம் லீகை இந்த ஆட்சிக்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக, திராவிட எதிர்ப்புச் சக்தியாக மாற்றிட வேண்டும் என்ற அடிப்படையில் முஸ்லீம் லீகுக்கு ஒரு வெறி உணர்ச்சியைத் தூண்டிவிடும் அளவிற்கு முயற்சிகள் இன்றைக்கு மேற்கொள்ளப்படுகின்றன. ஆனல் முஸ்லீம்கள் ஏமாளிகள் இல்லை. இதனல் அவர்கள் நிச்சயம் ஏமாறப்பட்டார்கள். யாரோ ஒரு சிலர் கோமாளித்தனமாகச் சொல்லிக் கொண்டு இருந்தால் சமுதாயம் அதை ஏற்றுக்கொள்ளத்தயாராகவில்லை.

அடுத்து, என்னுடைய சில கோரிக்கைகளைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மேல்விஷாரத்தில் 20,000 மக்களுக்கு மேலே இருக்கிருர்கள். ஆனல் அங்கே ஒரு போலீஸ் நிலையம் இல்லை. இதற்கு முன்பு அங்கே ஜமாத்தான் இயங்கிக் கொண்டு இருந்தது. ஆனல் சில குறைபாடுகள் காரணமாக அங்கே இப்போது போலீஸ் நிலையம் தேவைப்படுகிறது. இதை அரசு பரிசீலனை செய்து இதை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதுபோல குளச்சல் கரையோரப் பகுதியில் போலீஸ் நிலையம் இருந்தால் அங்குள்ள மக்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என்று அங்குள்ள மக்கள் கருதுகின்ருர்கள். இதையும் இந்த நேரத்தில் பரிவோடு கவனிக்க வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, வேலூரில் போலீஸ் பயிற்சிக் கல்லூரி இருக்கிறது. அது நல்ல முறையில் செயல்படுகிறது. அந்தப் பயிற்சிக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றப் போவதாக ஒரு அறிவிப்பு வந்தது. தயவு செய்து, அந்த நிலையத்தை அங்கே இருந்து மாற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, அந்தப் பயிற்சிக் கல்லூரியை மேலும் நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையிலுள்ள ஒருசில குறைபாடுகளையும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறையில் வேலை செய்கின்றவர்கள், மனுவிலக்கு, ரத்து செய்யப்பட்டதன் காரணத்தால், கிராமங்களில், காட்டன்

பெட்டிங், கிளப்களில் சூதாட்டம் போன்றவற்றிற்கு ஊக்கம் அளிக்கின்ற முறையில் செயல்படுகிறார்கள் என்ற நிலை இருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுத்து, அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும், போலீஸ்காரர்களில் சிலர் மதுப் பழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தெளிவாக இருந்தால் தான், சரியான முறையில் பணியாற்ற முடியும். மதுப் பழக்கத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள், அதை விட்டுவிட வேண்டுமென்று உத்தரவிட்டால் கூட நன்றாக இருக்கும்.

கிராமங்களில் மாலை நேரத்தில் குடித்து விட்டு ஊர் மக்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். எனவே, 6 மணிக்கு மேல் யாரும் மது அருந்தக் கூடாது என்றும் உத்தரவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, மானியத்தை ஆதரித்து, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற காவல் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது வார்த்தைகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் காவல் துறை மானியத்தைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் வைத்துள்ள அறிக்கையிலே தமிழ்நாட்டில் காவல் துறை எவ்வளவு சிறப்பாக இயங்கி வருகிறது என்பதைப் பற்றியும், கடந்த ஆண்டு காவல் துறையினர் கண்டு பிடித்த வழக்குகளைப்பற்றி யெல்லாம் கூறியிருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசிய உறுப்பினர்களும், எதிர்த்துப் பேசிய உறுப்பினர்களும் தமிழ்நாடு காவல் துறை, இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை மறுக்கவில்லை. எதிர்த்துப் பேசிய அங்கத்தினர்கள் எல்லாம், காவல் துறையில் குறுக்கீடுகள் அதிகமாக இருக்கின்றன என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைத் தெளிவாக இந்த மன்றத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். திரு. வகாப் அவர்கள் பேசும்போது, வன்முறைகள் கடந்த ஓராண்டு காலமாக நடந்து வருகின்றன என்று குறிப்பிட்டார்கள். ஏற்பட்டிருக்கின்ற குற்றங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், அவற்றிற்குக் காரணங்கள் என்ன என்பதைக் கூர்ந்து கவனித்தாக வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள்.

கடந்த ஆண்டில் என் வன்முறைகள் அதிகமாக இருக்கின்றன என்று பார்க்கும்போது யார் இந்த வன்முறைகளைத் தூண்டி விடுகிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் மாணவர்களைப் பற்றி தாங்கள் தான் அதிகம் அக்கறை கொண்டிருக்கிறோம் என்பதாகக் காண்பித்திருக்கிறார்கள். இது வியப்பூட்டுவதாக இருக்கிறது. இளைய தலைமுறையினரை முறையாக வழி நடத்திச் செல்ல வேண்டுமென்ற பொறுப்புணர்ச்சியோடு எதிர்க் கட்சி வரிசையில் உள்ள உறுப்பினர்கள் தங்கள் தங்கள் இயக்கத்தை நடத்திச் செல்வார்களேயானால் இப்படிப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் நடக்க இடமே இல்லை என்பதை இந்த நேரத்தில் நினைவு படுத்த விரும்புகிறேன்.

காவல் துறை ஆணைக் குழுவின் பரிந்துரையின் மேல் எவ்வளவோ நன்மைகள் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒன்றிரண்டு கோரிக்கைகளை முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் பொறுப்பிற்கு வந்திருக்கிறார்கள். அதற்கு முன்பு தி.மு.க. எதிர்க் கட்சி வரிசையில் இருந்த போது, தி.மு.க. பிரசாரகர்கள் பொதுக் கூட்டத்தில் பேசினால், அவர்கள் என்ன பேசுகிறார்கள், எத்தகைய தன்மை வாய்ந்த சொற்களைக் கூறுகிறார்கள் என்று குறிப்பெடுத்து அரசுக்குத் தெரிவிப்பதற்காக சுருக்கெழுத்தாளர்கள் நிறைய பேர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தார்கள்.

நமது திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு அப்படிப்பட்ட சுருக்கெழுத்தாளர்களின் பதவிகளை வெகுவாகக் குறைத்து விட்டிருக்கிறார்கள் என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு விட்டதன் காரணத்தால், எதிர்க் கட்சி உறுப்பினர்களும், மிகப் பெரிய தலைவர்களும், பொதுக் கூட்டங்களில் என்னென்ன வார்த்தைகளை—வன்முறையைத் தூண்டி விடக்கூடிய வார்த்தைகளைச் சொல்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும். "பொய் வழக்குப் போடாதே", பதவியை "விட்டு விடு" என்றெல்லாம் சொல்கின்ற எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசுகின்ற கூட்டங்களில் எப்படிப்பட்ட வார்த்தைகளை உபயோகப்படுத்துகிறார்கள் ? அமைச்சர் பெருமக்களைக் குறிப்பிட்டுத் தாக்க முற்படுகிற நேரத்தில் எப்படிப்பட்ட அநாகரீக வார்த்தைகளை உபயோகப்படுத்துகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பொய் வழக்குப் போடாதே என்று இப்போது எதிர்க் கட்சி வரிசையில் இருக்கிற நேரத்தில் குரலெழுப்புகிற காங்கிரஸ் தலைவர்கள், தங்கள் ஆட்சிக் காலத்தில், எத்தனை பொய் வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள் ! நாடகம் நடத்தினால் வழக்கு. ஏதாவது ஒரு கடுமையான வார்த்தையை உபயோகித்தால், வழக்கு. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞரின் நாடகத்தை தடை செய்திருக்கிறார்கள். எதிர்க் கட்சிப் பிரசாரகர்கள்மீது பல வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள் என்பதை நினைவு படுத்தக்கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய பார்வையின் கீழ் இயங்குகிற காவல் துறை திறம்பட நடந்து கொண்டிருக்கிறது என்று கூறினால் அது ஒன்றும் மிகைப்படுத்திச் சொல்வதல்ல. ஆரோக்கியமான அரசியலை வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் எந்தக் கட்சியையும் அரசையும் பார்க்க வேண்டுமே தவிர, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கூறிக் கொண்டு போவதில் பயனில்லை. இன்றைக்கு எத்தகைய தலைப்புகள் தாங்கிய கலாநிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள், "எமலோகத்தில் கருணாநிதி" என்று அறிவிக்கின்ற நாடகத்தையும், "கோட்டையிலே திருடன்" என்ற சொற்களைத் தாங்கிய கலாநிகழ்ச்சிகளையும் நடத்துகிறார்கள். இப்படிப்பட்ட தரக்குறைவான வாசகங்களை—எமலோகத்தில் கருணாநிதி என்பன போன்ற வாசகங்களை—தலைப்பாக வைக்கிறார்கள் என்றால், அவர்களுடைய உணர்வுகளை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. இப்படிப்பட்ட தலைப்புகளுக்கு காவல் துறையினர் எப்படி

அனுமதி தருகிறார்கள் என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட நிலையில் அரசியல் வளர்ந்தால், ஆரோக்கியமான அரசியலை வளர்த்தவர்களாக ஆவோமா என்று உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்றைக்குக் காவல் துறை ஆணைக்குழுவின் பரிந்துரைக்குப் பிறகும் அவை சிறப்பான முறையில் அமல் படுத்தப்பட்ட போதிலும், அவர்களுக்கு இன்னும் பல ஆக்கப் பணிகளை செய்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் பல் வேறு பிரச்சினைகள் தீர்க்கப் பட்டிருந்தாலும் கிராமப்புறங்களில் காவல் துறையினருக்குப் போதிய குடியிருப்பு வசதிகள் இல்லை என்பதால், அனைவருக்கும் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கும் பல இடங்கள் உடனடியாகப் பேருந்துகளில் சென்று காவல் நிலைய அதிகாரிகளிடம் தொடர்பு கொள்ள முடியாத நிலை இருப்பதால், அப்படிப்பட்ட கிராமக் காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி வசதி செய்து தரப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பேருந்துகளில் காவல் துறையினர் செல்ல வாரண்ட் வசதி செய்து தரப்பட்டிருந்தது. அந்த வசதி அண்மைக் காலத்தில் ரத்து செய்யப்பட்டிருப்பதால் வழக்குகள் சம்பந்தமாகவும், புலனாய்வு சம்பந்தமாகவும் நாட்டுடைமையாக்கப்பட்ட அரசுப் பேருந்துகளில் சென்னை போன்ற நகரங்களுக்குச் செல்ல முடியாத நிலை இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தக் குறையைப் போக்கி, காவல் துறையினர் தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளில் செல்ல, வாரண்ட் உபயோகிக்கின்ற வசதியை மீண்டும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, இப்படிப்பட்ட சிறப்பான பணிகளை ஆற்றுகின்ற காவல் துறையை, மேலும் வலுவுள்ளதாகப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*THIRUMATHI ALDA M. FOWLER : Mr. Deputy Speaker, Sir, I rise to pay tribute to the police force.

When an emergency arises we call out the armed forces and we stand by them, we pamper them and give them knit, socks, mufflers and sweaters. We even give them transistors and more. We feel that we are doing a patriotic duty when we perform these acts of kindness. But the police force is there from morning to night keeping peace and we take all these duties for granted. If any blame is to be given we are very quick to do so but when it comes to praise, it is difficult to find many people giving them the praise that is worthy.

I feel, Sir, that the members of the police force are equally worthy of our support, our thanks and our generosity, and we owe it to them. It is a fact that we take so much for granted that we have not given this matter any thought. They need comfort in their homes. Their widows

need care, jobs and training perhaps. Their children need education. Sir, if we criticise the members of the police force, then I think that we are partially to blame. What sort of recruits are we getting and what do we give to attract people to join the police force? Surely like all other professions, we want to improve the personnel and therefore we have to make their conditions attractive so that we can get a better type of person wishing to join the police force.

So, I ask this House to give this small matter due consideration. In order to improve their conditions, more education and more amenities must be made available to the men in the police force.

Then, Sir, we train them to use lathis and guns and things like that. But when there is stress or an emergency or a strike for that matter and when they go out to perform their duties, we wish them to behave in an unnatural way and not perform their duties. That is rather contradictory. I feel we have to change our attitude towards the men in the police force. Why do we regard them as our enemies? They are there as our friends. They are there to protect us in all circumstances. So, a change of attitude must be there. We give them a difficult job and we do not expect them to do it and we criticise them. We have to render to them our thanks and praise, that is due to them. With these words, I thank you for the opportunity given to me to speak.

(திரு. கே. எ. வகாப் தலைமை.)

*திரு. சி. வே. வேலப்பன் தலைவர் அவர்களே, போலீஸ் துறை மானியத்தை ஆதரிக்கும்படியான நிலைமையில் இல்லாமல் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களைப் பேச விரும்புகிறேன்.

தமிழகத்தில் இன்று போலீஸ் துறையினர் ஒழுங்காக, நியாயமாக, தருமமாக, செயல்பட்டுக்கொண்டு வருகிறார்கள் என்ற நிலைக்குத் திரும்பாமல், கடந்த காலங்களில் எப்படி நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டு வந்தார்கள் என்ற சரித்திரம் இருந்து வருகிறதோ அப்படிச் செயல் பட்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் நன்றாகச் சுழல்கிற பம்பரமாக அமைத்திருக்கிறார்கள் என்று ஏற்றுக்கொள்கிறோமே தவிர பம்பரத்தைச் சுற்றுகிற சாட்டை இடது பக்கமாகச் சுற்றினால் இடது பக்கம் சுழல்கிறது வலது பக்கம் சுழற்றினால் வலது பக்கமாகச் சுழல்கிறது என்கிற நிலைக்குத்தான் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறவர்கள் சுற்றுகிற சுற்றுக்கு துஷ்பிரயோகமாகச் செயல்படுவதைப் பார்க்கிறோம்.

எங்கே பார்த்தாலும் துப்பாக்கிச் சூடு, தடியடி, கண்ணீர் பிரயோகம் என்ற அளவுக்குப் போய்க்கொண்டிருப்பதைத்தான் க்ளைவ் ஆஸ்டலிலும் கண்ணமங்கலத்திலும், பாளையங்கோட்டையிலும் இன்னும் சேலம் மாவட்டத்திலும் நாம் பார்த்து வருகிறோம். ஆவடியில் கறுப்புக்கொடி காட்டுகின்ற நிலையில் நாங்கள் செல்கிறபோது வரிசையாகக் கறுப்புக் கொடி காட்ட நிற்கிறார்கள், எங்களை அடிப்பதற்கு ஆட்களை அனுமதிக்கிற

அளவுக்கு அங்கே போலீஸார் நடந்துக்கொண்ட நிகழ்ச்சியை நான் பார்த்துத்தான் வருகிறேன். இன்று திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள் நடக்கவேண்டுமென்றால் அங்கு போலீஸார் முன்னெச்சரிக்கையாக வந்திருந்து ஊரில் இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களை எல்லாம் கைது செய்து உள்ளே அடைத்துவிடுகிற அவலநிலைதான் காணப்படுகிறது. மேட்டூரில் கட்சி உறுப்பினர்களைக் கைது செய்ததும், வீரகனூரில் கைது செய்ததும், இடைப் பாடியில் கைது செய்ததும் போலீஸார் தவறான முறையில் செயல்பட்டு வருகிறார்கள் என்பதனைத்தான் காட்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஆட்டயாம்பட்டியில் கிளைக்கழகம் துவக்கப்பட்டுக் கொடியேற்றினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் அந்தக் கிளைக் கழகத்தை தீயிட்டு கொளுத்திக் கொடியை இறக்கி, கொளுத்தியிருக்கிறார்கள். போலீஸில் புகார் செய்யப்பட்டது. இதை அவர்கள் பதிவு செய்துகொண்டார்களே தவிர திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கொடுத்த புகார்கள் மீது வைத்து நடவடிக்கை எடுக்கிறார்கள். இன்னும் போலீஸாரை மாவட்ட வட்டச் செயலாளர்களாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆக்குகின்ற நிலையில் தான் செயல்பட்டு வருகிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் பாண்டமங்கலத்தில் அங்கிருந்த 400 திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதாகத் தங்கள் கட்சியை மாற்றிக்கொண்டு ஏகமனதாகத் தீர்மானித்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப்பாசறையில் போர்டு எழுதி வைத்துக் கொடியேற்றுகிறார்கள். ஆனால், இங்கே இருந்து வேறு ஒருவரைத் தொடர்பு கொண்டு போலீசார் உதவியுடன் அந்த போர்டை மாற்றி, கொடிக்கம்பத்தில் இருந்த கொடியை மாற்றி அங்கிருந்த மக்களை எல்லாம் அடித்தது மட்டுமல்ல.......

__திரு கா. பழனிவேலன் :__ பாண்டமங்கலத்தில் ஏகமனதாக, கழகத்தினர்கள் முடிவு செய்ததாகச் சொல்கிறார்கள். முன்பு அங்கே யார் செயலாளராக இருந்தாரோ அவரே தான் இன்றைக்கும் அங்கே திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளராக இருக்கிறார். தவறான தகவலைத் தருவது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

__திரு சி. வே. வேலப்பன் :__ அதே செயலாளர் ஒத்துக்கொள்ளவில்லை. நீங்கள் வந்து முயற்சி செய்துதான் அந்த நிலை, மதிப்பிற்குரிய உறுப்பினருக்குச் சரியான தகவல் இருக்காது என்று கருதுகிறேன்.

இன்னும் வேலூரில் போலீசாரின் அட்டூழியம் நடந்திருக்கிறது. அங்கு முதலமைச்சர் வருவதாக இருந்தது. சேலத்தில் வேறு ஒரு நிகழ்ச்சி சம்பந்தமாக நான் முதலமைச்சருடன் பேசிவிட்டுச் செல்கிறேன். அங்கிருந்த டி.ஐ.ஜி. மாணவர்கள் கொந்தளிப்புடன் இருக்கிறார்கள் என்று சொல்கிறார். காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் கூட்டத்தை ஒரு தனியார் பள்ளி காம்பவுண்டுக்குள் போடுகிறார்கள். அதை மாணவர்கள் எதிர்க்கிறார்கள் என்றார். நான் கூட மாணவர்களுக்குச் சொல்லட்டுமா என்று கேட்டேன். அவர் சொன்னதன் பேரில்

அவர்களுக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தேன். பின்னர் அங்கே பொதுக் கூட்டம் போட வேண்டாம் என்பதாக முடிவு செய்யப்பட்டு அங்கே போட்டிருந்த மேடைகள் எல்லாம் அகற்றப்பட்டு விட்டன. பின்னர் அங்கேயே மேடை அமைக்கப்பட்டு, கொடியேற்றப்பட்டு கூட்டம் நடக்கிறது. அதை ஆட்சேபித்தவர்களை அடித்து, கண்ணீர் புகை செலுத்திச் சில அநியாயங்களைப் போலீஸார் செய்திருக்கிறார்கள். இப்படி எப்போதும் ஆளுகிற கட்சி அனுசரணையாக இருப்பதும், கட்சிமாறும்போது அவர்களும் மாறுவது அதன் காரணமாக இன்றைக்கு அங்கே கூட்டத்திற்கு காம்பவுண்டில் மேடை போடும்படியாகத் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். இப்படி தனியார் பள்ளியில் மாணவர்கள் விரும்பாத நிலையில், அவர்கள் விரும்பாத நிலையில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் நடைபெறுகிறது.

*__மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி__ : நண்பர் வேலப்பன் அவர்கள் தனியார் பள்ளிகளிலே அரசியல் கட்சிக் கூட்டங்கள் நடத்துவது முறையல்ல என்று சொன்னார்கள். இன்று, நேற்றல்ல, நீண்ட நெடு நாட்களாகவே, தனியார் பள்ளிகளில் அரசியல் கட்சிக் கூட்டங்கள், தனியார் பள்ளிகளில், அந்த நிர்வாகிகள் இடம் தருவார்களேயானால், நடைபெறுகிறது. நாகர்கோவிலில் கூட, பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வந்தபோது அவர்களுடைய கட்சியின் கூட்டம் ஒரு தனியார் பள்ளியின் காம்பவுண்டில்தான் நடந்தது.

__திரு சி. வே. வேலப்பன் :__ அது எந்த தரப்பிலே நடந்தாலும் கண்டிக்கத்தக்கது என்றுதான் சொல்கிறேன். அப்படி வேலூரில் ஒரு நிகழ்ச்சி. மக்கள் தூங்குகிறார்கள், இரண்டாவது சினிமா நடக்கிறது. தூங்கிய மாணவர்களை மராட்டிய மாநிலத்திலிருந்து வந்திருந்தவர்களை வியாபாரத்திற்காக வந்திருந்தவர்களை எல்லாம் கைது செய்து, அப்பொழுது 300-க்கு மேற்பட்டவர்கள் மீது வழக்குப் போட்டு, மறுபடியும் கள்ளுக் கடைகளிலே 1,200 போலீஸார் குடித்துவிட்டு, பக்கத்துக் கிராமத்தில், அருகிலே இருக்கிற ஆண்களையும் பெண்களையும் துன்புறுத்தி லட்சக் கணக்கான ரூபாய்க்களுக்கான பொருள்களைக் கொள்ளை அடித்திருக்கிறார்கள், எல்லோரையும் அடித்துத் துன்புறுத்தினார்கள்.

* * * * * *

__மாண்புமிகு மாற்றுத் தலைவர் கே. எ. வகாப் :__ உங்களுக்கு அளித்த நேரம் முடிந்து விட்டது. ஆகவே, இத்தோடு முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து திரு தேவராசன்

__திரு க. உரொ. எட்மண்ட் :__ ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், இந்த மன்றத்தினுடைய கூட்டத்திற்குத் தலைமை வகிக்கின்ற பொறுப்பு தலைவருக்கு இருக்கிறது. தலைவர் இல்லாத நேரத்தில், துணைத் தலைவர். துணைத் தலைவர் இல்லாத நேரத்தில் மாற்றுத் தலைவர்கள் வரிசையில் யார் இருக்கிறார்களோ அவர்கள்தான் தலைமை வகிக்கவேண்டும். அதிலே முதல் வரிசையில் இருக்கிற உறுப்பினர் திரு வீராசாமி அவர்கள் இவ்வளவு

* மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

நேரம் இந்த மன்றத்திலே உட்கார்ந்து கொண்டிருந்தார். இப்பொழுது இல்லை. அவர் இருக்கும்போது நீங்கள் இங்கே உட்காரலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் எட்மண்ட் இங்கே இங்கே உட்கார்ந்தால்தான் குற்றம். துணைத் தலைவர் அவர்கள் மாற்றுத் தலைவர்களை அழைத்த நேரத்தில் திரு. வீராசாமி இங்கே இல்லை. இவரை அழைத்த பிறகு, வீராசாமி அவர்கள் வந்தார்கள். பிறகு வெளியே போயிருக்கிறார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, யார் வேண்டுமானாலும், இந்த 6 நபரிலே யார் வேண்டுமானாலும் மாற்றுத் தலைவராக இருக்கலாம். விதிமுறைகள் அப்படித்தான் இருக்கின்றன. (ஆரவாரம்) ஆகவே, இதிலே எந்தவிதமான சங்கடமும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : திரு வீராசாமி உட்கார வேண்டுமென்றால், திரு. வீராசாமியைத் தவிர வேறு யாருமே தலைமை வகிக்க முடியாமல் போகிறது என்று அப்படிக் கூட வந்து விடும். யார் வேண்டுமானாலும் தலைமை வகிக்கலாம். அதனால் நீங்கள் தலைமை வகிப்பது, ரொம்ப தாராளமாக உங்களுடைய உரிமையாகும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. ஏ. வகாப்) : மாண்புமிகு உறுப்பினர் வேலப்பன் அவர்கள் பேசுகின்றபோது திரு. பழனிவேலன் அவர்கள், "உறுப்பினர் சில பொய்யான தகவல்கள் கொடுக்கிறார்" என்று சொன்னார். அந்த பொய்யான தகவல் என்பதை தவறான தகவல் என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

திரு எம். தேவராசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த காவல் துறை மானியத்தை வரவேற்று கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

எல்லோருமே ஒரே எண்ணமாக காவல் துறையைப் புகழ்ந்தார்கள். முதலிலே ஆரம்பித்த காங்கிரஸ் கட்சியை சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் உட்பட எல்லா தரப்பிலேயும் இந்த காவல் துறை மனமார வரவேற்றிருக்கிறார்கள். இந்த நேரத்திலே நமது காவல் துறையின் திறமையையும் நேர்மையையும் எண்ணிப் பார்க்கின்ற நேரத்திலேடெல்லியிலே இன்றையதினம் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளையும் நாம் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். டெல்லி மாநகரத்திலே, இந்திரா காந்தி அம்மையாரும், மற்ற அமைச்சர்களும் இருக்கிற அந்த நகரத்திலே மக்களுக்குப் பாதுகாப்பு கிடையாது.

பட்டப் பகலிலே கொலைகள் நடக்கின்றன. பஸ்ஸிலே ஒரு பெண் அங்கே பயணம் செய்ய முடியவில்லை. தங்களைக் கற்பழிக்க டிரைவரும் கண்டக்டரும் முயன்ற நேரத்தில், ஒரு நர்ஸ் பஸ்ஸிலிருந்து குதித்து

உயிரை விட்டதாகச் கூட சமீபத்திலே பத்திரிகைகளிலே பார்த்திருக்கிறோம். அந்தச் சூழ்நிலையையும் பார்க்கும் போது, தமிழகத்திலே எவ்வளவு நிம்மதியாக, இங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இரவிலே பெண்கள் கூட நல்ல முறையிலே, தைரியமாக நடமாட முடிகிறது என்பதையெல்லாம் பார்த்து நாம் பெருமைப்படுகிறோம்.

இந்த காவல்துறையை ஸ்காட்லாண்ட் யார்டுக்குக் காவல் துறைக்குச் சமமாகக் கூடச்சொன்னார்கள். அத்தனை பெருமைகளும் இந்த காவல்துறைக்குச் சேரும் என்பதை நானும் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். அந்த காவல் துறையின் பணி மிக மிக சிக்கலானது. அவர்களால் யாரையும் திருப்திபடுத்த முடியாது. இது ஒரு "ஹசார்டுவஸ் ஜாப்". சிலருக்குத்தான் அவர்கள் நன்மை செய்ய முடியும். எல்லோருக்குமே அவர்கள் நன்மை செய்ய முடியும் என்பது இயலாத காரியம். இங்கே, அவர்கள் சில நேரங்களிலே மக்களுக்கு பகைவர்களாகத் தோன்றுகிறார்கள். நாம் அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் எண்ணிப்பார்த்து, அவர்களுக்கு எவ்வாறு ஒத்துழைக்க வேண்டுமென்று பார்த்து, நல்ல பிரஜைகளாக நம்மை நாமே மாற்றிக்கொள்ள வேண்டும். எதற்கெடுத்தாலும் காவல்துறையை சாடுவதைவிட, நம்மை நாமே சிறப்பித்துக் கொண்டால், அவர்களுடைய பணி ஓரளவு சுலபமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே அவர்களுக்குப் பல நன்மைகள் செய்யவேண்டுமென்று உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். கேரளத்திலே உள்ளதைப் போல அங்கே காவல்துறையினருக்கு நல்ல சம்பளம் மாத்திரமல்ல, சர்க்குள் இன்ஸ்பெக்டர்கள், ஆய்வாளர்கள், கெஸட்டட் ஆக இருக்கிறார்கள். இங்கே, அல்லும் பகலும் அயராது பாடுபடும் இன்ஸ்பெக்டர்களை, நமது சர்க்கார் கெஸட்டட் ஆக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அவர்களையெல்லாம் பாராட்டுகின்ற நேரத்திலே சில குறைகளையும் என்றால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. குறிப்பாக, காவல் துறையிலே சிலர் இந்த 54 சி.ஆர்.பி.சி. செக்ஷனைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள்.

நானே நேரில் பாதிக்கப்பட்டிருக்கிறேன். அவற்றையெல்லாம் கண்டிருக்கிறேன். எனது நண்பர் ஒருவர் உதகையிலே வக்கீலாக இருக்கிறார், அவர் கேரளாவைச் சேர்ந்தவர். திருவனந்தபுரத்திலிருந்து ஒரு வேலையாக ஒருவர் ஊட்டிக்கு வந்திருக்கிறார். அவர் விலாசத்தைக்காட்டி இடத்தைக் கேட்டிருக்கிறார். நாங்கள் காட்டித் தருகிறோம் என்று சொல்லி காவலர்கள் அவரை அழைத்துச் சென்று 54 சி. ஆர். பி.சி. வழக்குப் பதிவு செய்து அவரை ரிமாண்ட் செய்து விட்டார்கள். அவரைப்பற்றி 15 நாட்கள் வரையில் தகவலே கிடையாது. அவருக்கு பெயிலும் மறுக்கப்பட்டுவிட்டது. அவர் உள்ளே 15 நாட்கள் வரையில் வாடிய பிறகு வெளியே வந்தார். அந்த வழக்கறிஞர் நண்பர் போலீஸ் மீது வழக்குப் போடுகிறேன் என்று சொன்னார், பிறகு நாங்கள் சொல்லி சமாதானப் படுத்தி வைத்தோம். இப்படி 54 சி.ஆர்.பி.சி. என்று போடுவது நல்லதுதான். சந்தேகமானவர்களைப் பிடிப்பதன் மூலம் சில பெரிய குற்றங்களிலே ஈடுபட்டவர்களைப்பற்றிய துப்புக் கிடைக்கிறது. நான் மேலே உள்ளவர்களைப்பற்றிச் சொல்லவில்லை. கீழ்மட்டத்திலே இருக்கிற

[திரு. எம். தேவராசன்] [1973 மார்ச் 23

காவலர்கள்தான் இப்படிச் செய்கிறார்கள். மேல் அதிகாரிகளிடத்திலே நல்ல பெயர் வாங்கவேண்டுமென்ற முறையிலே அவர்கள் இப்படித் தவருக இந்த செக்ஷனைப் பயன்படுத்துகிறார்கள். இந்த மாதிரித் தவருக. பயன்படுத்தாமல் இருக்க காவல் துறையினர் முயற்சிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, செக்ஷன் 75 மெட்ரூஸ் சிடி போலீஸ் ஆக்ட். இருவர் தகராறு செய்தால் ஏதாவது ஒரு சாரார்தான் தவறு செய் திருக்க வேண்டும், எனவே அந்த சாரார்மீது வழக்குப் போடுவதற்குப் பதிலாக, இரண்டு சாரார்கள் மேலேயும் வழக்குப் பதிவு செய்திருக்கிறார் கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படக்கூடாது.

நீலகிரி மாவட்டத்திலே கூடலூர் தாலுகா முழுவதும் தொழிலாளர் கள் நிறைந்த தாலுகா. அங்கே சமீபத்திலே பெரிய அராஜகங்கள், புரட்சிகள் நடந்தன. சர்க்காருக்குச் சொந்தமான லட்சக்கணக்கான மரங்கள் பாழடிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே 6 காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. அந்தப் பகுதி முழுவதும் காடுகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. அங்கே ஒரு டி. எஸ். பி.-யும் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் அந்த போலீஸ் ஸ்டேஷன்களில் தொலை பேசி வசதி கிடையாது. எனவே ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் டெலிபோன் வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை வரவேற்று முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. எ. வகாப்) : திரு. சி. வி. வேலப்பன் அவர்கள் பேசும்பொழுது * * * *

என்று குறிப்பிட்டதிலிருந்து அதை யொட்டிவந்த எல்லாவிதமான குறுக் கீடுகளையும் பேச்சுக்களையும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். பத்திரிகைகளும் அவற்றை வெளி யிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru B. VENKATASWAMY : Sir, I rise to speak a few words on the Police Demand in support of the cut motion given on behalf of my party.

I want to stress a few points about our Police in Madras. Madras Police has got very good reputation and efficiency regarding tackling crimes in so many other activities. Coming to the other points I would like to stress that they are becoming the puppets of this Government; because the are getting salary from Government they are acting according to the whims and fancies of the Government with the result so many people are harassed and so many persons had been arrested in the State.

I request the Hon. Chief Minister not to have many interference in the police administration. If there is no interference by Government, we can have a clean administration in the State. Innocent people had

* மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பட்டது.

1973 மார்ச் 23] [Thiru B. Venkataswamy]

been arrested. It has been mentioned in the cut motion. They take innocent people to the police station and book cases on them. This kind of thing should be eliminated. Innocent people should not be victimised.

Police had been created at the time of British rule. But its strength has not been enhanced commensurate with increase in work. In Dharmapuri district, the strength has not increased ever since British days. If you want to step up departmental activities, you must have more staff.

I want to stress one more point. When we were coming in procession recently to Fort St. George some people were throwing stones and soda bottles from 'Ezhilagam' but the police who were standing by kept quite. How can soda bottles and stones come from government office? The Police Commissioner had not taken action against those who threw soda bottles and stones at us from Ezhilagam. Perhaps they belonged to ruling party, I request Government to see to it that whoever indulges in violent activities, be they those belonging to ruling party or not, they should be dealt with according to law.

I now come to my constituency's problems. Regarding allotment of jeeps, I am glad the Hon. Chief Minister was kind enough to allot a jeep because Dharmapuri is a hilly area. I come to understand that it is used by the district office. I request the Hon. Minister and officials to see that it is allotted to Police-Station since they have to do a lot of work.

Regarding fire station, Hosur has not got a fire station. I request one fire station may be opened at Hosur.

The necessity for a police station at Anjatti has been stressed by me since long. Dhankanikota is 30 to 40 miles away and police cannot do justice to the people at Anjatti unless a police station is opened there to protect innocent people from anarchy and to preserve law and order.

In Madhukondapalli there are miscreants and they have to be controlled. So a police output should be opened there.

The Police Commission had made 143 recommendations and so far 122 had been accepted and 15 implemented. I request all the recommendations be implemented so that we could have a contended police force and so that we can have clean adminstration.

I would once again request the Hon. the Chief Minsiter to instruct the police not to act according to wishes of ruling party members but do justice to one and all without party affiliations. Then we could have a very clean police adminsitration.

With these words I conclude my speech.

நண்பகல் 12-00

திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவை முன் வைத்திருக்கிற காவல் துறை மானியக் கோரிக்கையில் என் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

முகத்திற்கு முன்னாலே புகழுவதும், முதுகுக்குப் பின்னாலே குறை கூறுவதும் தவறு என்று கூறுவார்கள். முதுகுக்குப் பின்னாலே புகழ்ந்துகொண்டிருந்தவர்கள், இப்போது முகத்திற்கு முன்னாலே தவறுகளைச் சுட்டிக் காட்டவேண்டிய ஜனநாயகக் கடமையை ஏற்றுக் கொண்டு இருக்கிறேன் என்பதை நினைவு கூறுகிறேன். காலமெல்லாம் எந்தத் தலைவனை இதயத்தில் ஏற்றிப் போற்றினேனோ அதே தலைவருக்கு எதிரில் நின்று பேசுகிறேன் என்றாலும் அவர் பயிற்றுவித்த லட்சியத்திலிருந்து தடம் புரளவில்லையென்ற வகையில் அவருடைய ஆசியோடு முதன் முதலாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இந்த மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

தமிழகத்தினுடைய காவல் துறையைப் பொறுத்தமட்டிலும், அது பாரம்பரிய பெருமை மிக்கதும், இந்தியத் துணைகண்டத்திலேயே மட்டுமல்ல, உலக நாடுகளிலே இருக்கிற காவல் துறைகளோடு ஒப்புவமை கூறத் தக்க அளவிற்கு சிறப்பு மிக்கதும், பெரிய கொள்ளை, கொலை எதுவானாலும் புருவத்தை உயர்த்தி வியக்கக்கூடிய அளவிற்கு துப்பு கண்டுபிடிப்பதும் குறிப்பிடப்பட்டிருக்கிற பல்வேறு குற்றங்களையெல்லாம் கண்டு பிடித்திருக்கிற பெருமை அதற்கு உண்டு என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும். காவலர்களுக்காக நிதி ஒதுக்குவதற்காகவும், அவர்கள் குடியிருப்புக்கான வசதிகளைச் செய்வதற்காகவும் இந்த அரசு எடுத்திருக்கிற முயற்சிகளை எங்கள் கட்சியின் சார்பாக ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் காவலர்களுக்கு விடுமுறை காலங்களில் ஊருக்குச் செல்கிற நேரங்களில், இலவச பாஸ்கள் வழங்கப்படவேண்டுமென்பதையும், அவர்கள் பணியில் வெளியூர்களுக்குப் போகிற நேரங்களில் கொடுக்கப்படுகின்ற படிகளை உயர்த்தவேண்டுமென்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் துறைக்கு ஏற்படக் கூடிய பயங்கரமெல்லாம் அது அரசியல் உள் நோக்கத்தோடு பயன்படுகிறது, பயன்படுத்தப்படுகிறது என்ற முறையிலேதான் ஏற்படுகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். எத்தகைய கட்சி பொறுப்பில் இருந்தாலும் தங்களுடைய கட்சியைப் பலவீனப்படுத்தாமல் காக்கிற கவசமாக எதிர்க் கட்சிகளுடைய இயக்கங்களைத் தடை செய்கிற தடைக் கல்லாகக் காவல் துறை ஆக்கப்படுவது, ஜனநாயகத்தைக் கடுமையாக அவமானப்படுத்துவதாகும். இதில் மாற்றுக் கருத்து இருக்க முடியும் என்று நான் கருதவில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்ற நேரத்தில் அவர்கள் இந்த அரசாங்கம் எந்த ஒரு கட்சிக்கும் எதிராக இருக்காது, இந்த நாட்டில் இருக்கிற அறியாமையையும், வறுமையையும், எதிர்த்துப் போராடும் என்று குறிப்பிட்டுக் காட்டினார்கள். தங்களுக்கே நினைவிருக்கும் என்று கருதுகிறேன். தேனியிலே தாங்கள் பேசிய கூட்டத்தில் கல் வீச்சு நடந்தபோது காங்கிரஸ் நண்பர் ஒருவர் விலங்கு போட்டு அழைத்துச் செல்லப்பட்டதாக இந்தப் பேரவையில் எடுத்துக் கூறப்பட்டபோது அறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் காவல் துறையினர் மேலே நடவடிக்கை எடுத்தார்கள் என்பதையும் நினைவுப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். செவி கைப்பச் சொற்பொறுக்கும் என்ற உணர்வோடு நடந்துகொண்டார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கி நெற்றிக் கண்ணைத் திறந்திருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இணைந்திருக்கிற காரணத்திற்காக ஒரு பாவமும் அறியாத தொண்டர்கள் பல்வேறு வழக்குகளில் மாட்டி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஊரில் வன்முறை நடக்கிறதென்றால், எந்த வித விசாரணையுமில்லாமல் அங்கேயிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள், உறுப்பினர்கள் பட்டியலை அப்படியே குற்றவாளிகள் பட்டியலாக மாற்றிக் காட்டுகின்ற விந்தையைச் செய்து கொண்டிருக்கிறது. சமூகக் குற்றவாளிகளைப் பிடித்துப் போடவேண்டிய, ஊர்ப்பணத்தை ஏப்பம் விட்டு மேனி மினுமினுப்புடன் இருப்பவர்கள் கைகளிலே விலங்கு பூட்ட வேண்டிய காவல் துறை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வேட்டையாடுகிற முயற்சியில் ஈடுபட்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இங்கே குறிப்பிட்டுச் சொல்ல முடியும். நானும் சகோதரர் எட்மண்ட் அவர்களும் திருநெல்வேலிக்குப் பக்கத்தில் உள்ள கிராமத்தில் பேசித் திரும்பும்போது வழி மறித்த கும்பல் எங்களுடைய ஊர்திகளை உடைத்தார்கள். எங்களை அரிவாள், வேல், கொம்புகள் கொண்டு கொலை செய்ய முயற்சித்தார்கள். பக்கத்தில் உள்ள காவல் நிலையத்தில் புகார் செய்தோம். இரண்டு, மூன்று மாதங்கள் ஆகின்றன. இன்று வரைக்கும் யார் உடைத்தார்கள் என்பதைத் தேடுகிறார்களாம். தேடிக் கொண்டே இருக்கிறார்களாம். ஏதோ, பரம் பொருளைத் தேடுகிற பக்தரைப் போல தேடிவிட்டு, கடைசியில் இந்தப் புகாரில் யார் என்று குறிப்பிடாததன் காரணமாக யாரையும் கண்டு பிடிக்க முடியவில்லையென்று தகவல் தந்திருக்கிறார்கள்.

அதே நேரத்தில் கோயில்பட்டி பக்கத்தில் ஒரு அரசுப் போக்குவரத்து வண்டி கொளுத்தப்பட்டது, யார் கொளுத்தினார்கள் என்று தெரியாது, புகார் கொடுக்கப்பட்டது, ஆனால் அடுத்த 12 மணி நேரத்திற்குள் சுற்று வட்டாரத்தில் எங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொடி இருக்கிறது என்று பார்த்து, 14 தொண்டர்கள் மேல் பஸ் எரித்ததாக வழக்குப் போடப்பட்டிருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட வன்முறை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

வன்முறையை எந்தக் கட்சி செய்தாலும் சரி, அந்தக் கட்சி வளர முடியாது என்பதில் எனக்கு மாற்றுக் கருத்தில்லை. கொள்ளிக்கட்டையை வைத்து தலையைச் சொறிந்து கொள்வது போன்றது வன்முறையைப் பயன்படுத்துவது என்பதை ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வன்முறையில் ஈடுபடுகிறவர்கள் யார் என்று பார்க்காமல் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற கண்ணோட்டமில்லாமல் கடுமையான நடவடிக்கை எடுத்துத் தீரவேண்டும். என்னுடைய சிவகாசி பகுதியில், லிங்கபுரம் காலனியிலிருந்த திராவிட முன்னேற்றக் , கழகத் தோழர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாறி கொடியினை ஏற்றினார்கள். அதிலே எஞ்சியிருந்த கழகத் தோழர் ஒருவர் தி. மு. க. கொடி பறக்க வேண்டுமென்று சொன்னார். தகராறு ஏற்பட்டு காவல் துறை அதிகாரிகள் என்னிடத்திலே குறிப்பிட்டார்கள். பேசி முடிவு செய்து கொள்ளலாம் என்று சொல்லி வந்தேன். ஆனால் சென்னைக்கு நான் வந்திருந்தபோது, மார்ச் 3-ம் தேதி அண்ணா நினைவு நாள் அன்று அங்கே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களை அழைத்து வந்து, நீங்கள் கொடியேற்றுங்கள், பாதுகாப்பு தருகிறேன் என்று அழைத்துக்கொண்டு வந்தார். அந்தக் காலனியிலே இருக்கிற மக்கள் அத்தனை பேரும் கொடியேற்றுவதைத் தடுக்க முயற்சி செய்தார்கள். விபரீதம் ஏற்படும் என்ற நிலைமையில் ஆர். டி. ஓ., டி. எஸ். பி. அங்கே போக, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் தன்னுடைய பனியனுக்குள் வைத்திருந்த அரிவாளை எடுத்து டி.எஸ்.பி. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முன்னிலையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழரை வெட்டினார்.

மார்ச் 3–ம் தேதி அண்ணா நினைவு நாளன்று திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் அன்றைக்குப் புதிய முறையில் அஞ்சலி செய்தார். ஆனால் இதுவரைக்கும் அவர் மேலே எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை.

ஹக்கீம் என்ற தோழர் வழக்கில் சம்பந்தப்பட்டார் என்று அவரைச் சேர்த்து, ஏதோ மிகப் பெரிய கொலைக்காரர்கள் ஜம்புலிங்கம், சங்கிலித் தேவர் இவர்களைப் பிடித்தது போல சுவர் ஏறிக் குதித்து, அவர் சொத்துக்கள், பொருள்களை சின்னாபின்னமாக்கி, பெண்களை துன்புறுத்தி கைது செய்த காவல் துறை, சட்ட மன்ற உறுப்பினர்கள் தாக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டது, அதிலே நடவடிக்கை எடுக்கவில்லை. இதே போல அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் வெட்டப்படுகிறார்கள் அதிலே நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். கடந்த 12-ம் தேதி எங்களுடைய தோழர் ஒருவர் ஒரு கிராமத்தில் மொளகனூரில் பேசி விட்டுத் திரும்பும்போது அவர் காரை வழி மறித்து அரிவாள், வேல் கொம்போடு தாக்கி இருக்கிறார்கள். ராஜேந்திரன் என்ற தோழர் வேல் கொம்பால் குத்தப்பட்டு மருத்துவமனையில் இருக்கிறார். அவருடைய கால் தேறுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. நான் கேள்விப்பட்டேன். சட்ட அமைச்சரவர்கள் அவரை நன்றாகக் கவனிக்கவேண்டுமென்று மருத்துவமனைக்குத் தகவல் கொடுத்ததாகக் கேள்விப்பட்டேன். அந்தத் தோழர் சட்ட அமைச்சர் அவர்களோடு சிறைச்சாலையில் இருந்தவர். இன்னும் பாசத்தோடு இருப்பவர், அந்த வகையில் கேட்டுக் கொண்டதற்காக எங்களுடைய முகவை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சட்ட அமைச்சர்வர்களுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இந்த வன்முறைகளை வைத்து எந்தக் கட்சியையும் வளர்க்க முடியாது. அந்த நிலைமையை உருவாக்கித் தீரவேண்டும். அடுத்து, அண்ணா உருவாக்கிய புனிதமான பாரம்பரியத்திற்கு எந்த வகையிலும் கேடு புகாத அளவிற்கு உள்ள நிலைமையை ஏற்றுத் தீர வேண்டும். இங்கே பேசிய திரு. ராஜாராம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து** வெளியே போய்விட்டார்கள் என்று சொன்னார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : அந்த வார்த்தை நடவடிக்கை குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டாகிவிட்டது.

<u>திரு. கா. காளிமுத்து</u> : அவர் சொன்னதாகக் கூட குறிப்பிடவில்லை. முதலமைச்சரவர்கள் சொன்னது போலச் சொல்லிக் குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்த வரையில் முதலமைச்சரவர்கள் இதையே இலக்கிய நயத்தோடு சொல்லப் பழக்கப்பட்டவர்கள். அப்படியே சொல்லியிருந்தால் கூட பாசத்தோடு சொல்லியிருப்பதாகத் தான் நான் கருதுகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, நண்பர் ராஜாராம் சரியாகத்தான்பேசினார்.அதை உறுப்பினர் அவர்கள் கவனிக்காமல் இருந்திருப்பார். திண்டிவனம் பழைய காங்கிரஸ் கட்சி நண்பர் ராமமூர்த்தி அவர்கள் அங்கே ஒரு மேடையில் பேசும்போது, நான் அப்படிச் சொன்னதாகச் சொல்லி, அவர்களெல்லாம் வெளியேறிவிட்டார்கள் என்று சொன்னதாக ராசாராம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்போது அந்த ** என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். நான் ** என்ற வார்த்தையை என்றைக்குமே பயன்படுத்தியது கிடையாது. அப்படிப் *படவர்களைப்பற்றிச் சொல்கிற போது வன்முறையாளர்கள் என்று சொல்லியிருப்பேனே தவிர** என்ற வார்த்தையைப் பயன்படுத்தியது கிடையாது. அவர் சொன்னதாகத்தான் சொன்னார். சபாநாயகர் அவர்கள்** என்ற பதமே நடவடிக்கைக் குறிப்பில் வரவேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். நான் கூட இதைச் சுட்டிக் காட்டுவதற்காகச் சொன்னேன். நடவடிக்கைக் குறிப்பில் வரத் தேவையில்லை.

<u>திரு. கா. காளிமுத்து</u> : நான் குறிப்பிடுவது, ராஜாராம் அவர்கள் பேசுகிற நேரத்தில் முதலமைச்சரவர்கள் சொன்னது போல அந்தப் பதத்தைச் சேர்த்துக் குறிப்பிட்டார்கள்.

<u>திரு. ஜி. ராஜாராம்</u> : தலைவரவர்களே, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர் குறிப்பிட்டார் என்று தான் சொன்னேன்.

<u>திரு. கா. காளிமுத்து</u> : அப்படியே முதலமைச்சரவர்கள் சொல்லியிருந்தாலும் கூட கலைஞர் எங்களைக் காலிப் பைகள் என்று சொன்னதாக எடுத்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, ** என்ற வார்த்தையை வைத்துக் கொண்டு விளையாடட்டும், நான் சொன்னதாக வைத்துக்கொண்டு விளையாட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. கா. காளிமுத்து : தாங்கள் கற்றுக்கொடுத்தது தான் அவ்வளவும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் வார்த்தை விளையாட்டைக் கற்றுக் கொடுத்தேனே தவிர, இல்லாததைச் சொல்வதற்குக் கற்றுக் கொடுக்க வில்லை.

திரு. கா. காளிமுத்து : தாங்கள் கற்றுக் கொடுத்ததில் தேவையானவற்றைக் கடைப்பிடிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து வந்த பிறகு பந்த பாசத்தை நினைத்துப் பெரு மூச்சுவிட நேரமில்லாமல் அவரவர்கள் கட்சியை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். அண்ணா அவர்கள் தத்துவத்தை இரண்டு கட்சிகளும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஒரு உறையில் இரண்டு வாட்கள் இருக்க முடியாது. இதிலே யார் நிலைத்து நிற்பார்கள் என்பதை நாம் முடிவு செய்ய முடியாது, பொதுமக்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அதற்கு அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை நசுக்கிட இன்றைக்கு இருக்கும் ஆட்சி முழுக்க முழுக்க வன்முறையைப் பயன்படுத்தி அடக்குமுறையை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் அரசியல் வாழ்க்கையில் வன்முறைகளையும், அடக்குமுறைகளையும் சந்தித்துப் பழக்கப்படாதவர்கள் அல்ல. அடக்குமுறையை ஒரு கட்சியை நோக்கி வீசினால் அது எந்தக் கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சியை வளர்க்கின்ற இரசாயன உரமாகத் தான் அது இருந்திருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்கள்அறியாதவர்கள் அல்ல. அந்த முறையில் அடக்குமுறையைப் பயன்படுத்தினால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதைச் சந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது என்று கூறி இந்த அரசு அத்தகைய நிலைமைகளில் ஆராய்ந்து முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, இன்று முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற போலீஸ் மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நாட்டை நோக்கி ஓடிவருகின்ற பகையைத் தாக்குவது இராணுவம். அதே போன்று உள்நாட்டிலே பல்வேறு கிளர்ச்சிகள் ஏற்பட்டாலும் அவற்றை எல்லாம் அடக்கி அங்கு ஒரு அமைதியை நிலை நாட்டுவது காவல் துறை. அவர்கள் நாட்டைக் காக்க எல்லையிலே இருந்து காவல் புரிகிறார்கள் இவர்கள் வீட்டைக் காக்க, மக்களைக் காக்க தெருக்களிலே இருந்து காவல் புரிகிறார்கள். அதிலும் தமிழ்நாட்டுக் காவல் துறை இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு மாநிலங்களில் இல்லாத அளவுக்குச் சிறப்பு வாய்ந்தது. திறமை வாய்ந்தது என்று எல்லோரும் பாராட்டினார்கள்.

தாக்குவதற்கு முன்னால், எடுத்த எடுப்பிலேயே தாக்கினால் எங்கே நம்மைச் சாடுவார்களோ என்று எண்ணி இந்தச் சபையிலே காவல் துறையைப் புகழ்ந்து பேச ஆரம்பித்து பிறகு தாக்க ஆரம்பிக்கிறார்கள்.

நம்முடைய காவல் துறை எவ்வளவு சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாநிலத்திலே நக்சல்பாரிகள் முளைவிட்ட நேரத்திலேயே அதை நசுக்கி புல் முளைக்கச் செய்துவிட்டனர் நம்முடைய காவல் துறையினர். இந்தியத் துணைக் கண்டத்திலே எவ்வளவோ காவல் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். அனைத்துலகக் குற்றத் தடுப்பு நிர்வாகச் சங்கத்தில் செயற்குழு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர் ஒரு இந்தியன்—கொஞ்சம் தெளிவாகச் சொன்னால் ஒரு தமிழன், நம்முடைய காவல் துறையைச் சேர்ந்த ஐ.ஜி. அவர்கள் என்பதை மெத்தப் பெருமையோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவ்வளவு திறமை வாய்ந்தவர்கள் நம்முடைய காவல் துறையில் இருக்கும் காரணத்தால்தான் இந்த நாட்டில் கிளப்பப்படும் பல்வேறு போராட்டங்கள், மாணவர்கள் போராட்டங்கள், திடீர் திடீரென்று அறிவிப்புச் செய்து நடக்கும் போராட்டங்கள், திடீர்த் தலைவர்கள், திடீர் சாம்பார் போன்று திடீர் புரட்சிகள் அவ்வளவையும் சமாளித்து இந்த நாட்டில் அமைதியையும், மக்களுடைய உடைமைக்கும், சொத்துக்கும் பாதுகாப்பையும் நம்முடைய காவல் துறையினரால் தர முடிகிறது, அதற்காக அவர்களை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆண்டவன் நம்பிக்கை உள்ளவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். ஆண்டவன் கூட இன்றைக்குக் காவல் துறையைப் பாராட்டுகிறான். எங்களைத் திருடிக் கொண்டு போய் அமெரிக்க நாட்டிலே அல்லது வெளி நாடுகளிலே விற்று விடுகின்றார்கள். அப்படிச் செய்வதைத் தடுத்து நிறுத்தி எங்களை மீட்டு வந்து மீண்டும் மூன்று வேளை பூஜை, அர்ச்சனை எல்லாம் நடக்கும் அளவுக்கு எங்கள் சிலைகளைத் திருப்பிக் கொண்டு வந்த காவல்துறையினர் நெடுநாட்கள் வாழட்டும் என்று வாழ்த்திக் கொண்டிருப்பார்கள். வைதிகப் பெருமக்களே என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவு பெருமை வாய்ந்த காவல் துறையைப் பற்றி இவர்கள் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

உரலுக்கு ஒரு பக்கம் இடி என்றால் மத்தளத்திற்கு இரண்டு பக்கம் இடி என்பார்கள். அந்த முறையில் காவல் துறையினர் நிலைமை இருக்கிறது. காவல் துறையினர் அடிக்கிறார்கள், கொலை செய்கிறார்கள் என்று எதிர்க்கட்சியினர் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லாவிட்டால் எதிர்க் கட்சியினருக்குத் தூக்கமே வராது. ஆளும் கட்சியில் இன்னும் தீவிரமாக இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆக, இரண்டு பக்கத்தையும் தாங்கிக் கொள்ளக்கூடிய பொறுமை காவல் துறைக்குத் தேவையாக இருக்கிறது.

நேரம் குறைவாக இருப்பதால் முதலிலே காவல் துறை அமைப்பைப் பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய காவல் துறை நான்கு ரேஞ்சுகளாக இருக்கின்றன. சதர்ன் ரேஞ்சு, சென்ட்ரல் ரேஞ்சு

நார்தர்ன் ரேஞ்சு, வெஸ்டர்ன் ரேஞ்சு என்று இருக்கின்றன. சதர்ன் ரேஞ்சில் இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை ஆகிய பகுதிகள் சேர்ந்து மதுரையில் உள்ள டி.ஐ.ஜி. கையில் இருக்கிறது. இராமநாதபுரத்தில் எஸ். பி. இருக்கிறார். மதுரை அர்பன், மதுரை வடக்குக்கு ஒரு எஸ்.பி. இருக்கிறார். மதுரை மாவட்டத்திலேயே டி.ஐ.ஜி. இருக்கிறார். அந்தத் தலைநகரில் போலீஸ் குவிக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்லுவதெல்லாம்—சென்னை மாநகரத்திலே கமிஷனர் இருக்கிறார். சென்னையைப் போன்று மதுரையும் கார்ப்பரேஷனாக இருக்கின்ற காரணத்தால் அதிலும் ஒரு கமிஷனரை வேண்டுமானால் திருமங்கலத்தையும் மேலூரையும் இணைத்துக் கொண்டு போட வேண்டும்.

அடுத்து திருநெல்வேலி, இராமநாதபுரத்தில் எஸ்.பி. இருக்கிறார். இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கையையோ, விருதுநகரையோ ஹெட்குவார்ட்டர்ஸாக ஆக்க வேண்டும்.

அடுத்து மதுரை நார்த் எஸ்.பி.யை திண்டுக்கல்லில் போடவேண்டும்—கமிஷனரை மதுரைக்குக் கொடுத்து விடுவதால், திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து டி.ஐ.ஜி. ஒருவரைத் திருநெல்வேலியில் வைத்தால் அவர்களுடைய வேலைப் பளு குறைவாக இருக்கும். புதுக்கோட்டை தனி மாவட்டமாகி விட்டது. திருச்சி ஹெட்குவார்ட்டர்ஸ் இருக்கிறது. தஞ்சை கிழக்கு, மேற்கு, புதுக்கோட்டை, தென்னாற்காடு என்று இருக்கும் பிரிவில் புதுக்கோட்டையை திருச்சி ஹெட்குவார்ட்டர்சில் சேர்த்து விடலாம். தென்னாற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு ஒரு பிரிவாக டி.ஐ.ஜி. கண்ட்ரோலில் இருக்கலாம். இப்படிச் செய்தால் வேலைப் பளு குறையும்.

நாட்டில் நிலைமை முன்போல் இல்லை. நான் முதலில் சொன்னது போல் திடீர்ப்பிள்ளையார்கள் தோன்றுவது போல் திடீர்த் தலைவர்கள் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். எடுத்ததற்கெல்லாம் ஸ்ட்ரைக், எடுத்ததற்கெல்லாம் போராட்டம், எடுத்ததற்கெல்லாம் ஆர்ப்பாட்டம் என்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய நண்பர் காளிமுத்து அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நெற்றிக் கண்ணைக் காட்டியது என்று சொன்னார்கள். நான் உங்கள் மூலமாக சொல்லிக் கொள்வேன்—நீங்கள் எங்களைப் பார்த்துக் காட்டியிருப்பது ஊனக் கண், பொட்டைக் கண். அந்தக் கண்ணுக்கு ஒளி வழங்கத்தான் கலைஞர் அவர்கள் கண்ணொளி வழங்கும் திட்டத்தைத் துவக்கியிருக்கிறார்கள். அறுவை சிகிச்சையின் மூலம் ஒளி வழங்குகிறார்கள். அரசியல் ரீதியில் அறுவை சிகிச்சை செய்து........

<u>திரு. கா. காளிமுத்து</u> : தலைவர் அவர்களே, நெற்றிக் கண் அரசாங்கத்தின் தரப்பிலிருந்து காட்டப்படுகிறது என்றுதான் சொன்னேனே தவிர, நாங்கள் காட்டுவதாகச் சொல்லவில்லை. நண்பர் துரைமுருகன் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு பேசுகிறார்கள் என்று கருதுகிறேன்.

<u>திரு. துரைமுருகன்</u> : கலைஞர் அவர்கள் எதிரிலே புகழ்ந்து பேசுகிறார்கள். ஆனால், முதுகிலே குத்துகிறவர்கள்தான் இங்கே இருக்கிறார்கள் என்று கூறினார்கள். இதே காளிமுத்து 'கலைஞர் என் கண் கண்ட தெய்வம், என்னுடைய மணி பர்சில் கலைஞருடைய போட்டோ வைத்திருக்கிறேன்'' என்று சொன்னவர்தான் பின்னாலிருந்து தாக்கியதோடு மட்டுமல்லாமல், கழக அமைச்சர்களுடைய தலைகளைத் தோரணங்களாகக் கட்டுவோம் என்றும் பல மேடைகளிலே பேசி வருகின்ற நிலைமையையும் நாடு சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறது. முன்னாலே பேசுவது, பின்னாலே ப்ளூடஸாக மாறுவதெல்லாம் நீங்கள்தான்.

<u>திரு. கா. காளிமுத்து</u> : அமைச்சர்களுடைய தலைகள் தோரணமாகக் கட்டப்படும் என்று நான் பேசியதாகத் திரு. துரைமுருகன் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். நான் அப்படிப் பேசவில்லை. போலீசாரைப் போகச் சொல்லிவிட்டு நீங்களும் நாங்களும் கோதாவில் இறங்குவோம் என்று உங்களுடைய குருநாதர் சீடர்களுக்குச் சொன்னார். அப்படிப்பட்ட முறையில் நாங்கள் சொல்லவில்லை.

<u>திரு. துரைமுருகன்</u>: அவர்களுடைய அதிகாரபூர்வமான "தென்னகம்" பத்திரிகையில் கொட்டை எழுத்தில் போட்டிருக்கிறார்கள்.

<u>திரு. கா. காளிமுத்து</u> : அப்படி வெளியிடப்படவில்லை என்று உறுதியாகச் சொல்லுகிறேன். நிரூபிக்க முடிந்தால் நிரூபித்துக் காட்டட்டும்.

<u>திரு. துரைமுருகன்</u> : நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : காளிமுத்து அவர்கள் அப்படிச் சொல்லியிருக்க மாட்டார்கள். தலைகளை வெட்டிதோரணமாகக் கட்டுவோம் என்பது தோரணக் கொடிகளில் அமைச்சர்களின் படங்கள் ஒட்டப்படும் என்று பழைய பாசத்தின் காரணமாகச் சொல்லியிருப்பார்களே தவிர, தவறாகச் சொல்லியிருக்க மாட்டார்கள்.

<u>திரு. துரைமுருகன்</u> : சோப்புக் கடைக்காரன் கருணை வள்ளல் வள்ளலாரைப் பற்றி உரையாற்றுவது போல் கிளர்ச்சிகளையும் வன்முறைகளையும் தூண்டி விட்டுக் கொண்டிருப்பவர்கள் இப்படிப் பேசுகிறார்கள்.

பொள்ளாச்சித் தாலுகாவில் ராமப்பட்டிணம் லத்தீப் கொலை செய்யப்பட்டார். யாரால்? வழக்கு இருக்கிற காரணத்தால் கேள்விக் குறியாகப் போட்டுக் காட்டுகிறேன்.

பல மாவட்டங்களில் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் கலகங்கள் யாரால் விளைவிக்கப்படுகின்றன? தஞ்சைக்கு, பட்டுக்கோட்டைக்கு முதல் அமைச்சர் அவர்கள் போயிருந்தார்கள். அங்கு கலகம் விளைவித்தார்கள். ஆனால் உங்கள் தலைவரும் வந்திருந்தார்கள். சிறிய சலனம் கூட ஏற்படாமல் அவர்கள் பேசிவிட்டுப் போனார்கள். காரணம் எங்கள் பலகீனம் என்று கருதிக் கொள்ளாதீர்கள். எங்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் கற்றுத் தந்த பாடமாகிய அமைதியைக் கட்டிக் காத்தோமே தவிர, இல்லை என்று சொன்னால் எங்களால் கலகம்

விளைவிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டமுடியும். ஆனால், அண்ணனின் வார்த்தை தடுக்கிறது என்ற காரணத்திற்காக நாங்கள் கட்டுப்பட்டு இருக்கிறோம்.

மதிப்பிற்குரிய மன்னை நாராயணசாமி அவர்கள் கூட்டத்தில் யார் கற்களை எறிந்தார்கள்? உங்களால் இன்று நாட்டில் செய்யப்பட்டிருக்கிற, பஸ்களை உடைத்தல், பள்ளிக்கூடங்களில் மாணவர்களைத் தூண்டி விடுதல், ஆடுமாடுகளை விரட்டியடித்தல், போன்ற இழிச் செயல்களை யார் செய்து கொண்டிருக்கிறார்கள்? அப்படிச் செய்கிற கட்சி எந்தக் கட்சி என்பதை இன்று நாட்டுமக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறது. ஆகவே, நாங்கள் எதையும் செய்வோம் என்று நினைத்துக்கொண்டிருக்க வேண்டாம். குட்டக் குட்டக் குனிபவனும் முட்டாள், குனியக் குனியக் குட்டுபவனும் முட்டாள் என்ற தத்துவத்திற்கு ஏற்ப, அநியாயமான நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டே போனால் நிச்சயம் உங்கள் அரசியல் கட்சி சம்பலாகிப் போயே தீரும் என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : துர்வாச மகரிஷி மாதிரி சாபம் போடவேண்டாமென்று அன்னாரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த இளம் வயதிலேயே சாபம் கொடுக்க வேண்டாம்.

திரு. துரைமுருகன் : இன்னொன்றையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏற்பட்டிருக்கிற இவ்வளவு ஆர்பாட்டங்களுக்கும் எதிர்க்கட்சியினர் தான் காரணம். அவர்கள்தான் அதற்கு பொறுப்பேற்க வேண்டும். என்பது என் வாதம். அடுத்து, ஸிட்டி போலீஸ் பற்றி குறிப்பிட்டேயாக வேண்டும். இன்றையதினம் மற்ற மாவட்டங்களை விட சென்னையில் மட்டும் எழுந்திருக்கிற ஆர்ப்பாட்டங்கள் அதிகம், எழுந்திருக்கிற போராட்டங்கள் அதிகம். ஆனால் இதுவரையில் சின்ன தடி அடி கூட இல்லாமல் அவ்வளவையும் சமாளித்திருக்கிற பெருமை நம் கமிஷனரைத்தான் சாரும். அதற்காக அவர்களைப் பாராட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் எங்கள் நெற்றிக் கண் பார்வையில் சாம்பலாக்கி விடுவோம் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னதன் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அப்படி எதிர்கட்சியினரைச் சாம்பலாக்கும் கருத்து இருப்பதாகச் சொன்னார்கள். அது சரியா, அதன் அர்த்தம் அதுதானா, வேறு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்பதை விளக்குவார்களா?

திரு. துரைமுருகன் : அரசியல் கட்சிகளைத்தான், அரசியல் கொள்கைகளைத்தான் அழித்து விடுவதாகச் சொன்னேன். உங்கள் அரசியல் கொள்கை சாம்பலாகும் என்றுதான் சொன்னேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று சொல்வது தமிழர்கள் மரபு. அதை ஞாபக மூட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதற்கு ஒரு சுலபமான பதில் நெற்றிக் கண் யாருக்கும் இல்லை என்பதுதான்.

திரு. துரைமுருகன் : எல்லோருக்கும் ஒரே மாதிரியான ட்ரேயினிங் தான் தரப்படுகிறது. அவற்றையெல்லாம் ஸ்பெஷலைஸ் செய்வதற்கான நிலையை உருவாக்க வேண்டும். அதே போல் மைக்ரோ வேவ் என்ற திட்டத்தையும் செயல்படுத்தி உடனுக்குடனே பல பகுதிகளிலிருந்து செய்திகளை விரைவில் அனுப்புவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும். வேலூரில் உள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரியை ஆவடிக்கு மாற்ற திட்டம் இருப்பதாக கேள்விப்படுகிறேன். வேலூருக்குள்ள ஐந்து பெருமைகளில் அதிகாரம் இல்லாத போலீஸ் என்று ஒன்று சொல்லுவார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்னென்ன பெருமைகள் என்று விளக்குவார்களா?

திரு. துரைமுருகன் : மன்னன் இல்லாத கோட்டை, ஆண்டவன் இல்லாத ஆலயம், அதிகாரம் இல்லாத போலீஸ், நீர் இல்லாத ஆறு, அநியாயத்தை எதிர்க்கிற துணிவு என்று சொல்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையில் உண்மையைத்தான் சொல்ல வேண்டும், உண்மையை மாற்றிச் சொல்லக் கூடாது.

திரு. துரைமுருகன் : அழகில்லாத பெண்கள் என்ற ஒன்றையும் சொல்வார்கள். ஆனால் எங்கள் மாவட்டம் எவ்வளவோ அழகான பெண்களைப் பெற்றிருக்கிறது என்பது நாடு அறிந்த உண்மை. அங்குள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரியை ஆவடிக்கு மாற்ற வேண்டுமென்ற எண்ணம் தவறானது மட்டும் அல்ல, வட ஆர்க்காடு மாவட்ட மக்களின் மனதை அது புண்படுத்துவதுமாகும். உங்களுக்கு எவ்வளவு நிலங்கள் வேண்டும், எவ்வளவு இடங்கள் வேண்டும் அவ்வளவையும் எங்கள் மாவட்ட எம்.எல். ஏ-க்களும் மற்றும் பெரியோர்களும் தருவதற்கு தயாராகயிருக்கிறோம். காட்பாடியிலே நிறைய நிலம் இருக்கிறது. நாங்கள் தரத் தயாராயிருக்கிறோம்.

ஆகவே நான் முதல் அமைச்சரவர்களை வேண்டிக் கொள்கிறேன், தயவுசெய்து அந்தப் போலீஸ்ட்ரேய்னிங் ஸ்கூலை வேலூரிலிருந்து ஆவடிக்கு மாற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு ஐ. ஜி. அவர்கள் தலைமையிலும் கமிஷனர் அவர்கள் தலைமையிலும் இயங்குகின்ற இந்த போலீஸ் இலாகா இந்தியத் துணைக்கண்டத்திற்கே ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிற ஒரு இலாகா என்பதுமட்டுமல்ல, உலகத்திற்கே வழிகாட்டுகிற இலாகாஎன்று கூறி அதை செம்மையாக நடத்திச் செல்கிற டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என் பாராட்டைத் தெரிவித்து என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் துணைத் தலைவர் அவர்களே, இன்று போலீஸ் மானியத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு ஆட்சியினுடைய நேர்மை, திறமை அத்தனையும் எடை போடவேண்டுமென்று சொன்னால் போலீஸ் மானியம் எப்படி இருக்கிறது என்பதைத் பார்த்து எடை போட்டுவிட முடியும். ஆனால், இன்று நம் கையில் கொடுக்கப்பட்டுள்ள இந்த போலீஸ் அறிக்கை கறை படிந்த அறிக்கையாக இருக்கிறது என்பதை இந்த சபையில் மெத்த வருத்தத்துடன் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். 12 துப்பாக்கிச் சூடுகள், 17க்கு மேல் கண்ணீர்புகைகள் என்ற இந்த ஒரு நிலையில் ஒரு அறிக்கை நம் சபை முன் வருகிறது என்றால் இதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்து அதைத் திருத்திக் கொள்வதில் அரசு ஆவல் காட்டவேண்டுமே தவிர எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் சொன்னது மாதிரி நெற்றிக் கண்ணைத் திறப்போம் என்று பயமுறுத்தும் ஒரு சூழ்நிலை இருந்தால் அடுத்த போலீஸ் அறிக்கை இதைவிடப் பயங்கரமாக வருமோ என்று நினைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடும்.

தமிழக போலீஸ் இலாகா மிகத் திறமையான போலீஸ் இலாகா. அகில இந்தியாவிலேயே மிகத் திறமையான போலீஸ் என்பதை யாரும் மறுக்க இயலாது. நல்லவற்றை நல்லவை என்று சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில் சொல்கிறேனே தவிர, பயத்தின் காரணமாகவோ அல்லது புகழ வேண்டுமென்ற அடிப்படையிலோ நான் இதைச் சொல்லவில்லை. உண்மையை ஒத்துக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்டதொரு போலீஸ் துறை, நம் தமிழக போலீஸ் துறை இன்று கட்சி மாச்சரியங்களுக்கெல்லாம் பயன்படுத்தப்பட்டு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த வேண்டிய இந்த இலாகா இன்று கட்சி வேலைகளைத் கவனிக்க வேண்டிய ஒரு இலாகாவாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது இந்தக் குற்றத்தைத் தீர்ப்பதற்கு அரசு உடனடியாக முன்வரவேண்டும். இந்தக் குற்றத்திற்கான முக்கியமான காரணமாக நான் என்ன நினைக்கிறேன் என்றால், தமிழக முதல் அமைச்சர் அவர்கள் நம் கலைஞர் அவர்களாவார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பதவியும் அவர்கள் கையிலேயே இருக்கிறது. ஆட்சித் தலைமைப் பதவியும் கட்சித் தலைமைப் பதவியும் அவர்கள் கையிலேயே இருக்கிறது. ஆட்சித் தலைமைப்பதவியும் கட்சித் தலைமைப் பதவியும் ஒரே நபர் வைத்திருப்பது ஆபத்து. அதிலும் அவருடைய கையிலேயே போலீஸ் இலாகாவும் சேர்ந்திருக்குமானால் என்னதான் பனைமரத்தடியில் நின்று கொண்டு பாலைக் குடித்தாலும் மக்கள் அதை ஒத்துக் கொள்ள மாட்டார்கள்.

ஆகவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க இந்த அரசாங்கம் முன்வர வேண்டும். ஏனெனில் போலீஸை நீங்கள் கையில் வைத்துக்கொண்டிருந்தால் நீங்கள் சொன்னதைச் செய்வதோடு அவர்களுக்கு வேண்டியதையும் செய்வார்கள், செய்யவேண்டும் என்ற நிர்பந்தம் உங்களுக்கு இருக்கிறது. எனவே இத்தகைய சந்தேகங்களுக்கு இடம் கொடுக்காமல் இருக்கக் கூடிய முறையில் யோசித்துப் பார்த்து அரசு நல்லதொரு முடிவிற்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் அடக்குமுறைகளுக்கு, உங்களால் அவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைகளுக்கு, ஆளாகி அவர்களின் கைகளில் சிக்கித்

தவிக்காத சமுதாயம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்கிறேன். விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டால் அவர்கள் அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். தொழிலாளர்களும் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டார்கள், பட்டதாரி ஆசிரியர்களும் அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அரசியல் வாதிகளும் அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

அதேபோன்று பள்ளிக்கூட ஆசிரியர்களும் பிள்ளைகளும் அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் கூட உங்களுடைய அடக்குமுறைக்கு இன்று ஆளாக்கப்படக்கூடிய ஒரு அவல நிலை இந்த போலீஸ் இலாகாவின் மூலம் இருந்து கொண்டிருக்கிறது என்ற நிலையில் இந்த மானியக் கோரிக்கையைக் கோருவது இன்னும் சில அடக்குமுறைகளை அவிழ்த்துவிட்டு நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று இதைக் கேட்கிறீர்களா என்று கேட்பதற்கு எதிர்க் கட்சிக்காரர்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

“கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.”

என்பதற்கிணங்க, மிரட்டல் பெரிதாக இருக்கலாம், ஆனால் தண்டனை சாதாரணமாக இருக்க வேண்டும். ஆனால் இங்கு மிரட்டலைக் காட்டிலும் தண்டனை பல மடங்கு அதிகரித்துக் கொண்டு போகிறது. எனவே இப்படிப்பட்டதொரு ஆட்சியை நடத்துவோமானால் அது நீடித்து நிற்காது என்பதோடு கூட அதற்கு பதில் கொடுக்கவேண்டிய ஒரு கட்டத்தில் தமிழ்நாடு இன்று இருந்துகொண்டிருக்கிறது.

குறிப்பாக, சென்ற அக்டோபர் மாதத்தில் உங்களுடைய கட்சியிலிருந்து சிலர் வெளியேறி விட்டார்கள். கட்சிப் பிளவு ஏற்படுவது என்பது சர்வ சாதாரணமாக இருக்கிறது. இந்த அரசியல் கட்சி பிளவுபட்ட அக்டோபர் மாதத்தில் மட்டும் ஐந்து துப்பாக்கிச் சூடுகள் தமிழகத்தில் நடந்திருக்கின்றன என்றால் இதற்குக் காரணம் என்ன? பிரிந்து வந்த கட்சியின் மேல் ஆளும் கட்சி அதன் அடக்குமுறையை எக்கச்சக்கமாக அவிழ்த்து விட்டிருக்கிறது என்பதற்கு இதைவிட ஒரு எடுத்துக்காட்டு வேறு எதுவும் தேவையில்லை.

பிற்பகல் 12 30

இந்த அக்டோபர் மாதத்தில் 5 முறை சுட்டார்களே, அந்தத் துப்பாக்கிச் சூடுகள் அத்தனையும் அவசியம் தானா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். ஏன் அதைச் சொல்கிறேன் என்றால், கண்ணமங்கலத்தில் சிறிய சிறிய ரவையைப் போட்டு சின்ன பையனைச் சாகடித்து விட்டார்கள். இப்படி அடிக்கடி துப்பாக்கிச் சூடு நடத்திக்கொண்டிருந்தால் மக்கள் மத்தியில் என்ன நம்பிக்கை இந்த அரசு மீது இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேர்தலுக்கு முன்னால் என்ன சொன்னார்கள். துப்பாக்கியைத் தொடமாட்டோம். தொட்டாலும் சுடமாட்டோம். சுட்டாலும் குண்டு வெளியே வராது என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு பார்த்தால், சின்னச் சின்ன ரவைகளைப் போட்டு சிறிய பையன்களையும், பெரிய பெரிய ரவைகளைப் போட்டு பெரிய பெரிய ஆட்களையும் சுடுகிறார்கள் என்று சொல்லக்கூடிய அளவில் 12 முறை துப்பாக்கிச்

திருமதி த. ந. அனந்தநாயகி : அந்த இன்சிடன்டைப் பற்றித்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த இன்சிடன்ட் பற்றிய விவகாரம் தான் விசாரணையில் இருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I am not going into the merits. I am only telling the incident.

THIRU R. PONNAPPA NADAR : I would like to make a submission here and now. So far as the Commission of Enquiry is concerned, it is not a judicial enquiry. It has been ruled by the Supreme Court as well as the Panjab High Court that any enquiry conducted under the Commission of Enquiries Act is not a judicial enquiry. But we are wrongly using that word as a judicial enquiry. It is not a Court. It is only gathering materials and on the basis of the materials that have been gathered, certain decisions are taken by the Government. The Government may accept or may not accept and further proceedings are initiated on that report. I think there is a ruling of the Panjab High Court. I do not have the citation now. Or else, I would be able to show that it is not a judicial enquiry.

திரு. கே. எ. மதியழகன் : அவர்கள் சொன்னதை நான் தொடர்ந்து சொல்கிறேன். நமுடைய விதிகளில் தெளிவாக இருக்கிறது. A Member, while speaking must not give his opinion about or refer to any matter on which a judicial decision is pending. என்றுதான் இருக்கிறது. இங்கே நாம் போட்டு இருப்பது கமிஷன் ஆப் என்கொயரிதான். இந்த ஊழல் விசாரணைக் கமிஷன் வேண்டுமென்று சொல்கிறோமே அதைச் சொல்கிறபோது, அந்தக் குறிப்பிட்ட புகார் வழக்கு மன்றத்திற்குப் போகவேண்டுமென்று சொல்கிறார்கள்.

அதேபோல் கிளைவ் ஹாஸ்டல் சம்பவம், திருநெல்வேலி சம்பவம் போன்றவைகளும்இன்னும் வேறு பல சம்பவங்களைப்பற்றியும் இந்த மன்றத்தில் மீண்டும் மீண்டும் திருப்பித் திருப்பிக் கேட்கப்படுகிறது. சபையிலும் வழக்கறிஞர்கள் பேசுகிறார்கள். ஆகவே, இந்த விவகாரத்தில் நீங்கள் தெளிவான ஒரு தீர்ப்பைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மன்றத்தில் அந்த விஷயங்களைப்பற்றி விவாதிப்பதால் அது கமிஷன் ஆப் என்கொயரிக்கு உபயோகமாக இருக்கும். ஆகவே அதைக் கட்டுப்படுத்த வேண்டியது இல்லை. அது இந்த விதிமுறையின்கீழ் வரவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : இந்த மன்றத்தில் பலதடவை அந்தப் பிரச்னை வந்தது. மதிப்பிற்குரிய ஆதித்தனார் அவர்கள் சபாநாயகராக இருந்தபோது நான் கிட்டத்தட்ட 15 நிமிடம் நாக்பூர் நீதிமன்றம் அளித்து இருக்கும் தீர்ப்பைச் சொல்லியிருக்கிறேன்.

It is only a fact finding commission. It has no right to punish or no right to commit a person to jail.

தெளிவாகச் சொல்லப்போனால், கமிஷன் ஆப் என்கொயரி ஆக்ட் கீழ் விசாரணை இருந்தாலும் சட்டமன்றத்தில் பேசலாம் என்று தீர்ப்பு கொடுத்து இருந்தார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய மதியழகன் அவர்கள் சபாநாயகராக இருந்தார்கள். அவர்களுக்குக்கூட நன்றாகத் தெரிந்து இருக்கும் என்று நினைக்கிறேன். உதயகுமார் கேசில்கூட நான் இதைக் கிளப்பினேன். (மணியடிக்கப்பட்டது) நான் முடித்து விடுகிறேன்.

பொதுவாக ஒருவர் சபாநாயகராக இன்று இருக்கலாம். நாளை அடுத்து எதிர்க்கட்சியில் வரலாம். ஆகவே, நான் கேட்பது எல்லாம் தயவு செய்து அந்த இடத்தில் உட்கார்ந்து இருக்கக்கூடியவர்கள் ஒரு தீர்ப்பு கொடுக்க வேண்டும். இந்த கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் மிகவும் முக்கியமான பிரச்னை. அது ஆண்டுக்கணக்காகப் போய்க் கொண்டிருக்கும். அப்புறம் அது கோல்ட் ஸ்டோரேஜ்க்குப் போய் விடும். பிறகு எப்படி அந்தப் பிரச்னை பற்றிப் பேசுவது. அந்தப பிரச்னையை இங்கே பேசுவது அன்—பார்லிமென்டரி ஆகாது. இங்கே பேசுவதன் மூலமாக அவர்களுக்கு உதவிகரமாகத்தான் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.
More facts may be brought to light.
நாங்கள் அங்கே போய் சாட்சியம் கொடுக்க முடியாது. திருநெல்வேலியிலே, கிளைவ் ஹாஸ்டலில் என்ன நடந்தது என்று இங்கே நாங்கள் சாட்சியம் கொடுக்கலாம். அது என்குயரி கமிஷனுக்கு உதவியாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதுபோன்ற பிரச்னைகள்—அது கிளைவ் ஹாஸ்டல் சம்பந்தமாக இருந்தாலும் பாளையங்கோட்டை சம்பந்தமாக இருந்தாலும், இதுபோன்ற பிரச்னைகள் பெரும்பாலும் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்படுகின்றன. அப்போது என்னென்ன நடைபெற்றது என்று சொல்லி ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேச உறுப்பினர்கள் வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இப்போது நாம் அந்த விசாரணை நடைபெறுகின்ற நேரத்திலே, இங்கே சாட்சிகளாக இருந்து சபையில் கூறவேண்டும் என்ற வாதத்தை என்னால் எற்றுக் கொள்ள இயலவில்லை. சபையில் நம்முடைய முன்னாள் சபாநாயகர் அவர்கள் இதுபற்றி என்ன தீர்ப்பு அளித்திருக்கிறார் என்று பார்த்துத் தாங்களும் ஆராய்ந்து முடிவு கூறுவது நல்லது. (சிரிப்பு).

திரு. கே. எ. மதியழகன்: தலைவர் அவர்களே, முன்னாள் சபாநாயகர் எப்படி தீர்ப்பளித்திருக்கிறார்கள் என்று பார்த்து தீர்ப்பு அளியுங்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் தீர்ப்பு அளித்திருக்கக்கூடும். ஆனால் ஒரு தவறைச் செய்தால் நான் என்றைக்கும் அந்த தவறை நியாயப்படுத்துவது கிடையாது. தவறை, தவறு என்று தைரியமாக ஒத்துக்கொண்டு திருத்திக் கொள்ளுகின்ற சுபாவம் படைத்தவன். ஆகவே என்னுடைய தீர்ப்பில் அடைக்கலமாக இருந்துவிட வேண்டாம்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே :—குறுக்கிடு.

சூடு நடத்தியிருக்கிறார்கள். அக்டோபர் மாதத்தில் மட்டும் 5 முறை துப்பாக்கிச் சூடுகள் நடந்திருக்கின்றன என்றால் இதைவிட அவமானகர மான சூழ்நிலை தமிழகத்தில் ஏற்பட்டிருக்க முடியுமா என்று கேட்டுக் கொள்கிறேன். போலீஸ்காரர்கள் செய்யும் வேலையே உங்கள் கட்சிக் காரர்கள் சிலயிடங்களில் செய்கிறார்கள்.

உதாரணமாக, தேவக்கோட்டையில் நடந்தது என்ன. சேர்மனும், ஆணையரும் இரண்டு பேரும் சென்று மாணவர்களை அடிக்கிறார் கள். சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க போலீஸ் இருக்கிறது என்றால் கட்சிக்காரர்கள் சட்டத்தை அவர்கள் கையில் எடுத்துக்கொண்டு மாணவர் களை அடிப்பது என்பதை எப்படி அனுமதிக்க முடியும் என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி போடியில் என்ன ஏற்பட்டது. மாணவர்களைக் கண்ணை மூடிக்கொண்டு போலீஸ் அடித்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அதன் பேரில் அவர்கள் ஆர்பாட்டம் நடத்தினார்கள் என்பதற்காக அங்கே துப்பாக்கிச் சூடு நடந்தது. நாற்காலியில் உட்கார்ந்து விட்டோம், போராட்டம் இருக்காது, அஜிடேஷன் இருக்காது என்று யாராவது எதிர் பார்க்க முடியுமா? அப்படி எதிர்பார்த்தால் அது நல்லதல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். விவசாயிகள் போராட்டத்தில் என்ன செய் தார்கள். 10,000 விவசாயிகளை உள்ளே அடைத்து வைத்துவிட்டார்கள். பிரவென்டிவ் டிடன்ஷன் என்று சொன்னார்கள். இங்கே சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டுமென்று முன்னாலேயே விவசாயிகளைக்கொண்டுபோய் அடைத்து விட்டோம் என்று சொன்னார்கள். "ஆர் தே ஆண்டி சோசியல் எலமெண்ட்ஸ்". அவர்கள் சமுதாயத்தின் முதுகெலும்பு போன்றவர்கள். அந்த போராட்டத்திற்கு என்ன காரணம். மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களைச் சிறையில் அடைத்து விட்டு, மறுநாள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி அவர்களில் பலர் உயி ரிழந்து இருக்கிறார்கள். அவர்களுடைய நிலை இப்படி அவல நிலைக்கு வந்து விட்டது என்றால் அதற்குச் சொல்கிறார்கள், போலீஸ் ஸ்டேஷனைத் தாக்கினார்கள், துப்பாக்கியைத் தூக்கினார்கள், அதனால் வேறு வழியில்லாது துப்பாக்கிச் சூடு நடந்தது என்று சொல்கிறார்கள். ஒரு அரசு என்று இருந்தால் பிரச்னைகள் பல வரும். அந்தப் பிரச்னையைச் சமாளிப்ப தற்குத் தான் சாமர்த்தியம் வேண்டுமே தவிர போலீஸ்காரர்களின் சாமர்த்தியத்தால் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: சகோதரி அவர்கள் நல்ல சில திட்டங் களைச் சொல்கிறார்கள். ஆந்திராவில் ஆளும் காங்கிரஸ் தான் ஆண்டு கொண்டிருக்கிறது. அங்கே எப்படி சமாளிக்கிறார்கள் என்பதைச் சொல்ல முடியுமா?

திருமதி த. ந. அனந்தநாயகி: நீங்கள் தமிழகத்தைப் பற்றி நினை யுங்கள். தமிழகத்தைத் தாண்டித்தான் உங்கள் எண்ணம் போகாதே! அவர்கள் ஆந்திரத்தையும், குஜராத்தையும் எதற்குப் பார்க்கிறீர்கள். அவர்கள் தவறு செய்வார்கள். அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அவர்கள் தவறு செய்கிறார்களே என்று சொல்லி எதிர்க்கேள்வி போடுவது நியாயம் இல்லை. நான் சொல்வதற்குக் காரணம் உங்களுடைய ஆட்சியில் இப்படி நடக்கிறது. அதைத் திருத்திக் கொள்ளுங்கள் என்பதற்காகத்தான்.

ஆந்திராவிலும், உ.பி.-யிலும் இப்படி நடக்கிறது என்று நீங்கள் நினைத் தால் அதை மக்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். நான் ஒப்புக் கொண்டாலும் அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

அதேபோல் போலீஸ் இலாகா எவ்வளவு கொரேமான முறையில் மக்களைத் தாக்கி அவர்கள் இறக்கக்கூடிய நிலை இருக்கிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் சென்ற ஆண்டே சொன்னேன். பர்மா அகதியாக இருந்த கருப்பையா என்பவர் போலீஸ் தாக்குதலுக்கு ஆளாகி இறக்க நேரிட்டது என்று சொன்னபோது, நீதி விசாரணை போடுகிறேன் என்று சொன்னார்கள். டிபார்ட்மெண்டல் என்கொயரி போட்டு, எப்படியோ அதிகாரிகளை காப்பாற்றிவிட்டார்கள். இப்படிச் செய்த தன் காரணமாக இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அதிகமாக நடப்பதற்கு வழியேற்படுகிறது. நேற்று முன்தினம் ஆறுமுகம் என்பவர் ரிமாண்டில் இருக்கிறபோது இறந்து இருக்கிறார். அதற்குப் பிறகு மிக சாமர்த்தியமாக இருதய நோயால் செத்தார், டையபிடீஸ்லால் செத்தார் என்று அறிக்கை கொடுத்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைகள் காவலில் இருக்கும் போது நீடிக்க வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாகரீகமான முறைகளை கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாளையங்கோட்டையில் பேராசிரியரைத் தாக்கியிருக்கிறார்கள். என்ன கொடுமையான முறையில் நடத்தியிருக்கிறார்கள். இது எல்லாம் சமு தாயத்தில் இருக்கும் மக்களிடத்தில் இந்த இலாகா எப்படி நடந்து கொள்கிறது என்பதை மக்களுக்கு நிரூபித்துக்காட்டிக் கொண்டிருக்கிறது என்பதை அரசு உணர வேண்டும். அதுபோன்றே ஊர்துநாதன் ஆற்றில் விழுந்து செத்தான் என்று சொல்கிறார்கள். அதற்கு நீதி விசாரணை வைத்து இருக்கிறார்கள். உதயகுமார் மாதிரி வருமோ என்னவோ (மணியடிக்கப்பட்டது).

I am only referring to the incident. I will not go in to the merits. உள்ளே போகமாட்டேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பொதுவாக நம்முடைய விதிகளிலே கோர்ட்டில் நடக்கும் விஷயங்களைப் பற்றித்தான் குறிப்பிடக்கூடாது என்று இருக்கிறதே தவிர இந்த கோர்ட் ஆப் என்கொயரி கமிஷன், அது விவரங்கள் சேகரிக்கும் கமிஷன், இங்கும் விவரங்கள் கொடுக்கலாம். அது கோர்ட்டில் நடக்கும் விசாரணை இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஜுடிஷியல் என்கொயரி என்று விதியில் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இதுபோன்று கிளைவ் ஹாஸ்டல் சம்பவம். நான் நேரில் சென்று பார்த்தேன். 10-15 மாணவர்கள் இருக்கும் இடத்தில் பல பேர் தப, தப, திபு, திபு என்று போய் அடித்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விசாரணைக் கமிஷனில் இருப்பதைப் பற்றிப் பேசவேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் டாக்டர் ஹாண்டே அவர்களைப் பாராட்டுகிறேன்.

திரு. கே.எ. மதியழகன் : தலைவரவர்களே, அவசரத்தில் ஒரு தவறான முடிவுக்கு வரலாம். நான்கு நாட்களுக்கு முன்பு அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டைப்பற்றி படித்துக் கொண்டிருந்தேன். அவர் சொல்லியிருக்கிறார், நான் அவசரமாக முடிவு செய்வதென்றால் தவறாகப் போகிறது 10,20 நாட்களுக்குப் பின்பு யோசனை செய்தால் நியாயமாகச் செய்ய முடிகிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, உறுப்பினர் அதைச் செய்யவில்லையே என்றுதான் எனக்கு வருத்தம். (சிரிப்பு).

திரு. கே.எ. மதியழகன் : தலைவரவர்களே, தவறு செய்கிறவர்கள் திருத்திக் கொள்ள தைரியம் வேண்டும். வீரம் வேண்டும். ஆகவே தான் சொல்லுகிறேன், முன்னால் நான் தீர்ப்புச் சொல்லியிருக்கிறேன் என்பதில் அடைக்கலம் புகவேண்டியதில்லை.

Judicial dicison is nst pending. It is an enquiry under the commission of Enquiry Act
இப்போது வழக்கு மன்றத்தில் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே இந்த மன்றம் விவாதிக்க எல்லா உரிமையும் இருக்கிறது. அதற்கு விலங்கு போடவேண்டியதில்லை என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : தலைவரவர்களே, நமது பேச்சுக்களில் எதை நாம் பேசக்கூடாது என்றால் That which is subjudice என்று நமது விதிகளில்போட்டிருக்கிறது. you are not to refer to anything pending என்கிற மாதிரியாக. far—reaching ஆக போட்டு வைத்திருக்கிறார்கள். அப்படி போட்டு வைத்திருந்தாலும் அதன் இன்டர்பிரடேஷன் Interpretation) இருக்கிறதே இது சப்ஜூடிஸ் (Sub-judice) என்பதாகத்தான் இருக்க முடியும். நாம் இப்போது குறிப்பிடுகிற விசாரணை, கிளைவ் ஹாஸ்டல், பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றிய விசாரணை. It is under section 3 of the commission of enquiry Act. ஊழல் குற்றச்சாட்டு என்று சொல்லி அரசின் பேரில் விசாரணை வேண்டும் என்று கேட்டோமே, அதுவும் இதே ஆக்டின் பேரில் கேட்கிறோம். இந்தமாதிரி கமிஷன்கள்பாக்டஸ் (facts) பூராவும் சேகரித்துமுடிவு செய்வார்கள். அதன் முடிவை அரசாங்கம் ஏற்றுக் கொண்டாலும் கொள்ளலாம் அல்லது நிராகரித்து விடலாம். குறிப்பிட்ட சம்பவம் வருகிறது என்றால் We are not preclud d from refering to it. We can adduce arguments ஏனென்றால் சிலசமயத்தில் முதலமைச்சரே தாக்கிச் சொல்லலாம். அவர் வரமுடியாது போனால், பேசிய விஷயத்தை எடுத்துக் கொண்டு குறிப்பிட்ட சம்பவத்தில் அவர் சொன்ன விஷயம் இது என்று கமிஷன் ஆப் என்கொயரி எடுத்துக் கொள்ளவும் அதிகாரம் இருக்கிறது.

(திரு. நா. வீராசாமி எழுந்து நின்றார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் சொல்லுகின்ற பதிலில் திருப்தியில்லை என்றால், மாண்புமிகு உறுப்பினர் கருத்தை அப்புறம் சொல்லலாம். நமது பேரவையின் 68-வது விதியின் 5-வது உட்பிரிவில்

இருக்கிறது இந்த விஷயம். கமிஷன் ஆப் என்குயரி அந்த கேடகிரியில் (category) வருமா என்பது திரு. தங்கமணி அவர்களின் பிரச்னை. ஒன்றை முதலில் சொல்லி விடுகிறேன். இங்கேயிருக்கின்ற விதிமுறைகளை வைத்துக் கொண்டுதான் நாம் செயல்பட முடியும். இதைத்தாண்டி நாம் போகமுடியாது. குறிப்பிட்ட சில லிமிடேஷன்கள் இருக்கின்றன. முன்னாள் தலைவர் சொன்ன தீர்ப்பைப் பார்த்துச் சொல்லி தப்பித்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். தர்மசங்கடமான நிலை......................

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவைத் தலைவராக இருந்தபோது சொன்னால் பொருந்தும், உறுப்பினராக இருந்தபோது சொன்னால் பொருந்தாது.

திரு. நா. வீராசாமி :

* * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : This is not a point of order.

திரு. வீராசாமி சொன்னதை எக்ஸ்பஞ்ச் செய்கிறேன். உறுப்பினரைப் பற்றி காமெண்ட் செய்யக்கூடாது. பேரவையில் அவர், அவருடைய கருத்தைக் கூறுகிறார். நான் தவறு செய்தேன். திருத்திக் கொள்ளுகிறேன் என்று சொல்லலாம். அதன்பேரில் மற்றொரு உறுப்பினர் காமெண்ட் செய்யக்கூடாது. விதிமுறைகளில் கமிஷன் ஆப் என்கொயரி சேர்க்கப்பட்டிருக்கிறது. சப் ஜூடிஸ் என்ற விஷயம் தெளிவாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் விதிமுறைகளில் 68-வது விதியின் உட்பிரிவு 5-ஐ பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

Rule 68 (5)—

"No motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal or statutory authority performing any judicial or quasi-judicial functions or any commission or court of enquiy appointed to enquire into, or investigate, any matter shall ordinarily be permittted to be moved." என்று இருக்கிறது.

THIRU K. T. K. THANGAMANI : Rule 67 says that A member, while speaking must not (i) give his opinion about or refer to any matter on which a judicial decision is pending.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : திரு. தங்கமணி அவர்களின் கருத்தை ஏற்றுக் கொண்டு சொல்லுகிறேன். 68-வது விதியில் என்ன இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

திரு. கே.எ. மதியழகன் : தலைவர் அவர்களே, அதற்குக் கீழே இருக்கிற விதிகளைப் படித்துப் பாருங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு எல்லோருடைய உரிமையையும் பாதுகாப்பது கடமை. வெளியில் இருப்பவர்களின் உரிமையையும் நான் பாதுகாக்க வேண்டும். கமிஷன் ஆப் என்குயரி ஒரு ஜூடிஷியல் கமிஷன் இல்லை என்ற கருத்தை எழுப்பினாலும், அதை ஏற்றுக்கொண்டு விசாரணைக் குழு விசாரிக்கின்ற விஷயத்தை நாம் இங்கே விவாதித்தால், இங்கே போலீஸ் அதிகாரிகள் நுழைந்து அடித்தார்கள் என்று சொல்லுவார்கள். அந்த போலீஸ் அதிகாரிகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு முதலமைச்சரைச் சார்ந்ததாகும். முதலமைச்சர், அவர்களை டிஃபெண்டு செய்கிறபோது, கிளாரிபிகேஷன் கேட்க ஆரம்பித்தால் அது விசாரணைக் கமிஷனைப் பாதிக்குமா இல்லையா என்று பார்க்க வேண்டும். கூடியவரை மேலெழுந்தவாரியாக கோடிட்டு காட்டலாம். திரு. தங்கமணி கருத்தை வரவேற்கின்ற அதே நேரத்தில், ரூல்ஸ் கமிட்டி கூடும்போது, கிளாரிபைட் ரூல்ஸ் அமைப்பது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். இன்றைக்கு இருக்கின்ற விதிமுறைகளை மாற்றுகின்ற வரையில், அதன்படிதான் செயல்பட வேண்டும். என்னுடைய கருத்தை ஓரளவுக்கு தெளிவுபடுத்திச் சொல்ல விரும்புகிறேன். கமிஷன் ஆப் என்குயரிக்கு தண்டனை கொடுக்கிற ஜூடிஷியல் அதிகாரம் இல்லாமல் இருந்தாலும் பேரவையின் சிறப்பிற்காக, அதன் மதிப்பைக் கருதிப் பார்க்கின்றபோது இந்த விஷயங்களை சபையில் விவாதிப்பது கமிஷனின் விசாரணையைப் பாதிக்கும் என்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, I never went into the merits of the case. நான் இன்சிடென்டைத்தான் சொல்லுகிறேன். கிளைவ் ஹாஸ்டலில் வார்டன் வெளியே இருந்தார். "என்ன வேண்டும். நான் செய்து தருகிறேன்" என்று சொல்லியும், போலீஸ் அதிகாரிகள் உள்ளே புகுந்து 10, 15 மாணவர்களை அடித்து அவர்களுடைய சட்டைகளில் ரத்தக் கறை உண்டாகும்படி செய்த அவலக் காட்சியைப் பார்க்கின்றபோது, தமிழகத்திலே தாய்மார்கள் இந்த அரசாங்கத்தை ஏற்க முடியுமா என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். பிள்ளைகளைப் படிப்பதற்கு அனுப்பி பள்ளி விடுதிகளில் தங்க வைத்திருந்தால், போலீஸ் தடியடி பிரயோகம் செய்து, குழந்தைகளைத் தூக்கியெறிந்து இருக்கிறார்கள் என்றால், இப்படிப்பட்ட நிலைமை விடுதியில் ஏற்படுகிறது என்றால், விடுதிகளுக்கு பிள்ளைகளை அனுப்ப மனம் இருக்குமா பெற்றோர்களுக்கு. மாணவர்களைக் கண்டிக்க வேண்டிய இடத்தில்கூட காட்டு மிராண்டித்தனமாக அடிக்கின்ற அவல நிலைமை இருக்குமேயானால் இதைவிட சட்டம், ஒழுங்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு சாட்சி என்ன வேண்டும்?

சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டிருப்பதற்கு இன்னும் சாட்சி வேண்டுமென்றால் சொல்ல ஆசைப்படுகிறேன். அமைச்சர்கள் போகின்ற கூட்டங்களைப் பார்த்தால் சட்டம், ஒழுங்கு இருக்கிறதா இல்லையா என்று பார்க்கலாம். நமது உணவு அமைச்சர் மாண்புமிகு திரு மன்னை நாராயணசாமி அவர்கள் இராமநாதபுரத்தில் கூட்டத்தில் பேசினார். மறுநாள் என்ன செய்தி என்று பார்க்கின்ற நேரத்தில், அவர் மண்டையில் பிளாஸ்திரி என்ற செய்தி வருகின்றது. நமது தொழிலாளர் நல அமைச்சர், மிகச் சாமான்யமானவர், அவர் பேசுகின்ற கூட்டத்தில் கண்ணீர்ப்புகை. சட்ட மந்திரி தம்முடைய தொகுதிக்கு போய் வந்தவுடன், அங்கே கைது, இங்கே அடி, தடி என்ற நிலைமை.

நமது கல்வி அமைச்சர் ஆலங்குடியில் பேசிய பிறகு ஆலங்குடியே அலங்கோலமாக மாறியிருக்கிறது. வீடு வீடாக போலீஸ் புகுந்து தாக்கியிருக்கிறார்கள். பட்டுக்கோட்டைக்குப் போனார் அமைச்சர். அங்கே போலீஸ் இலாக்காவின் பேரில் நம்பிக்கை இல்லாமல், ஆட்களை கம்பு, கத்தியோடு இறக்குமதி செய்கிறார்கள்.

இப்படி போலீஸ் இலாகா என்று பெயரை வைத்துக்கொண்டு, சட்டத்தை உங்கள் கையிலே எடுத்துக்கொண்டு, நீங்கள் சொல்கிறபடிதான் அவர்கள் ஆடவேண்டும் என்று சொன்னால் அவர்களால் எப்படி ஒழுங்காக வேலை செய்ய முடியும்? என்னதான் நீங்கள் காரணங்களைச் சொன்னாலும் அதற்கும் போலீஸ் இலாக்கா வேலை செய்வதற்கும் சம்பந்தமே இருக்காது என்றுதான் நாங்கள் நினைக்கிறோம். போலீசாரால் மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு ஏற்படுகின்ற தொல்லைகளைப் பற்றி விவாதிக்க ரூல் 42-லே அட்ஜர்மென்ட் மோஷன் கொண்டுவந்தாலும் விவாதிப்பதற்கு அனுமதி கிடைப்பதில்லை. ரூல் 42 கொடுக்க வேண்டாம்; பொது விவாதத்தில் உங்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது; அதிலே பேசுங்கள் என்று சொல்லிவிடுகிறீர்கள். இன்றைக்கு நாட்டிலே சட்டம், ஒழுங்கு, அமைதி கெட்டிருக்கிறது என்றால் அதற்கு யார் காரணம்? போலீஸ் துறையினரை உங்கள் கட்சி ஆளாக நீங்கள் பயன்படுத்தியிருக்கிறீர்கள். அதனால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்குப் பல வழக்குகளைப் போலீஸ்காரகள் போடுகிறார்கள். திருப்பத்தூரிலேகூட பல வழக்குகளைப் போட்டார்கள். பின்னால் அந்த வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்பட்டன. முதலில் வழக்குகளைப் போடுவது அப்பாவி மக்களைக் கோர்ட்டுக்கு இழுப்பது; கோர்ட்டுக்குப் போய் அவர்கள் அசந்து இருக்கும்போது வழக்கை வாபஸ் பெற்று விடுவது. இதுதான் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. ஒரு ஜனநாயக நாட்டிலே நடக்கக்கூடிய காரியங்களா இவைகள்? ஜனநாயக பண்போடு இந்த அரசாங்கம் நடந்துகொண்டால் இதையெல்லாம் யோசித்து செய்யமாட்டார்களா? சாதாரண மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும்தான் அந்த நிலைமை என்றில்லை. இன்று எம்.எல்.ஏ.க்களாக இருப்பவர்களுக்கும் அந்த நிலைதான். திடீர் திடீர் என்று எம்.எல்.ஏக்கள் கைது செய்யப்படுகிறார்கள். திரு கே.டி.கே. தங்கமணி அவர்களைக் கைது செய்தார்கள். கூட்டத்தில் ஏதோ பேசிவிட்டார் என்பதற்காக கைது செய்தார்கள். ஒரு வாரம் கழிந்த பின்னால் விடுதலைச் செய்தார்கள். ஆனால் ஆளும்கட்சியைச்சேர்ந்த சின்னச்சாமி என்பவர் காலையில் கைது செய்யப்பட்டு மாலையிலே விடுதலைச் செய்யப்பட்டார். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றால் ஒரே நாளில் விடுதலை செய்துவிடுகிறார்கள். அதேமாதிரி ஏன தங்கமணி அவர்களையும் விடுதலை செய்திருக்கக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. தங்கமணி அவர்களுக்கு நிபந்தனையின்பேரில் ஜாமீன் கொடுத்தார்கள். சென்னையிலே தங்கியிருக்க வேண்டுமென்பது நிபந்தனை. அவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளாததால் அங்கே இருந்தார்கள். ஈரோடு சின்னசாமி அவர்களுக்கும் சென்னையிலே தங்கியிருக்க வேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் ஜாமீன் கொடுத்தார்கள். அவர்கள் அதை ஏற்றுக்கொண்டதால் வெளியே வந்து விட்டார்கள்

திரு கே. டி. கே. தங்கமணி : எனக்கு நிபந்தனையின் பேரில் ஜாமீன் கொடுப்பதற்கு ஒரு வாரம் ஆகிவிட்டது. சென்னையில் என்றால் ஜாமீன் நோட்டீஸ் கொடுக்கிறார்கள். பப்ளிக் பிராசிகியூட்டருக்குப் போகிறது. அன்றே மூவ் பண்ணி, வெளியே வந்துவிடுகிறார்கள்.

திருமதி த.ந. அனந்தநாயகி : நிபந்தனையின்பேரில் ஜாமீனில் விடுவதிலும்கூட இந்தமாதிரி வேறுபாடு காட்டப்படுகிறது. ஆளும் கட்சிக்கு என்றால் ஒரு நீதி; அடுத்த கட்சிக்கு என்றால் இன்னொரு நீதி.

திரு. வேலப்பன் அவர்கள் நெசவாளர் போராட்டத்தில் கலந்துகொண்டார். நெசவாளர் போராட்டத்தில் அவர் தலைமை தாங்க வேண்டி வந்தது. எம்.எல்.ஏ-க்களாக இருந்தால் இந்த மாதிரியான காரியங்களில் தலைமை தாங்கவேண்டியது அவர்கள் தலையெழுத்தாக இருக்கிறது. அவர் பெரிய தப்பு ஒன்றும் செய்துவிடவில்லை. அவரைக் கைது செய்தார்கள். மாலையிலே விட்டிருக்கலாம். ஆனால் விடவில்லை. 15 நாள் ரிமாண்டில் வைத்துவிட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாங்கள் விலைவாசிப் போராட்டத்தில் ஈடுபட்டோம். அதுவும் ஒரு நாள் அடையாள மறியல்தான் செய்தோம். எங்களைப் பிடித்து மூன்று மாதம் ஜெயிலில் போட்டு விட்டார்கள்.

திருமதி த.ந. அனந்தநாயகி : அவர்கள் அப்படிச் செய்ததனால்தான் அவர்கள் போய் இன்றைக்கு நீங்கள் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதனால்தான் நாங்கள் அப்படிச் செய்யவில்லை. வந்த அன்றைக்கேகூட விடுதலை செய்துவிடுகிறோம்.

திருமதி த.ந. அனந்தநாயகி : எதிர்க்கட்சிக்காரர்கள் என்றால் எந்தெந்த வகையிலே அவர்களைச் சிறையில் போடலாம் என்று பார்க்கிறீர்கள். எப்படிக் குற்றம் சாட்டலாம் என்று பார்க்கிறீர்கள். எதிர்க்கட்சிகாரர்களைப் பிடிப்பதற்கு ஐ.பி.சி. சட்டங்களை எல்லாம் பயன்படுத்துகிறீர்கள். எதிர்த்துப் பேசினால் உள்ளே தள்ளு என்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது நீங்கள் எங்களை ஆதரித்தா பேசிக்கொண்டிருக்கிறீர்கள்! எதிர்த்துத்தானே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்! அப்படியும் இங்கே தான் இருக்கிறீர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : என்னையும் ஒரு நாள் உள்ளே தள்ளலாம் என்றுதான் நினைத்துகொண்டிருப்பீர்கள். நேற்று எஸ். எம். துரைராஜ் அவர்கள் கைது செய்யப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டதாக துணை சபாநாயகர் அறிவித்தார்கள்; கைது செய்யும்போது எதற்காகச் செய்கிறோம் என்று யோசனை செய்து பார்க்க வேண்டும். உண்மையிலே குற்றம் செய்திருந்தால் கைது செய்ய வேண்டும்; நடவடிக்கை எடுக்க வேண்டும். அது இல்லாமல் காலையிலே கைது செய்வது, மாலையிலே விடுதலை செய்வது என்றால் இது என்ன விளையாட்டா? வேண்டுமென்றே அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களை மிரட்டுவதற்காகத் தான் இப்படிச் செய்கிறீர்கள்.

உங்கள் விளையாட்டுக்குப் போலீஸ் இலாகாவை பயன்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, மக்களுக்கு உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : துணை சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியத்தின்மீது, போலீஸ் துறையினரை பாராட்டுகின்றவர்கள் பாராட்டியும், போலீஸ் துறையினரைக் குறை சொல்பவர்கள் குறை சொல்லியும் பேசுகின்ற இந்த சந்தர்ப்பத்திலே இந்த மானியத்தை ஆதரித்து, என்னுடைய பாராட்டுதல்களோடு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் போராட்டங்கள், விலைவாசிப் போராட்டங்கள், அரசியலிலே ஏற்பட்டுள்ள சில பூகம்பங்கள்—இவைகள் எல்லாவற்றிலும் நியாயமான முறையிலே, நேர்மையான முறையிலே கடந்த காலத்திலே போலீஸ் அதிகாரிகள் தங்களுக்கு பல இன்னல்கள் வந்தாலும், பலர் சாக நேர்ந்தாலும், பலர் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துவதிலே தங்களைத் தாங்களே தியாகம் செய்துகொண்டு தமிழகத்திலே பணியாற்றியதற்காக முதலிலே அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய போலீஸ் துறையினரைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் "சிறந்த போலீஸ் துறையினர்" என்று சொன்னார்கள். அந்த அளவிலே அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய போலீசார்தான் லண்டனிலே இருக்கின்ற "ஸ்காட்லாண்ட் யார்டு போலீசார்" போல் சிறப்பானவர்கள் என்று பாராட்டப்படுகிறார்கள். அவர்கள் தமிழகத்திலே நல்ல பணியாற்றுகிறார்கள் என்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட ஒப்புக்கொள்கிறார்கள். அதைக்கண்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அகில இந்தியாவிலேயே நம்முடைய போலீசார் தான் "ஆல் இந்தியா டியூட்டி மீட்"டில் தொடர்ந்து நான்கு வருடங்களாக முதல் ராங்கில் இருந்து வருகிறார்கள். அது தமிழகத்திற்கு ஏற்பட்ட பெருமையாகும்.

நமது தமிழகத்திலே சில நாட்களாக பலர் படுகொலை—மிஸ்டரி மர்டர் — செய்யப்பட்டார்கள். ஏழுபேர்கள் என்று தெரிகிறது. அவர்கள் பெரிய வியாபாரிகள், பணக்காரர்கள். அவர்களை சமுதாயத்திலே இருக்கக்கூடிய சிலர் கடத்திக்கொண்டுபோய், பணங்களை எல்லாம் பறித்துவிட்டு, அவர்களைக் கொலை செய்து வீசி எறிந்துவிட்டு போய்விட்டார்கள். அப்படிப்பட்ட கொலைகாரர்களைப் பற்றி புலன் விசாரணை செய்து, 8 குற்றவாளிகளை நமது போலீஸ் துறையினர் பிடித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்மையிலே நமது தமிழகத்தில் கிரிக்கெட் மாட்ச் நடைபெற்றது. லட்சக்கணக்கான மக்கள் அதைப் பார்ப்பதற்காக வந்திருந்தார்கள். அந்த நேரத்திலே நம்முடைய போலீஸ் துறையினர் ஆற்றிய சிறந்த சேவையை எதிர்க்கட்சிக்காரர்களும், கிரிக்கெட் மாட்ச் ஆட்டக்காரர்களும் புகழ்ந்தார்கள். அந்த அளவுக்கு அவர்கள் சிறப்பான சேவை செய்து வருகிறார்கள்.

கடந்த டிசம்பர் மாதத்தில் தமிழகத்திலே ஏற்பட்ட வெள்ளச்சேதம் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். தென்னாற்காடு மாவட்டத்திலே ஏற்பட்ட சேதங்களைப் பற்றி நான் ஏற்கெனவே இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். பல போலீஸ் அதிகாரிகள் "வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டுவிடுவோம்" என்று பார்க்காமல், தங்கள் உயிரையும் மதிக்காமல் வெள்ளத்தில் சிக்கிய மக்களுக்கு சிறந்த சேவை செய்திருக்கிறார்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

போலீஸ் துறை மற்ற நீதித்துறை அல்லது வேறு பல துறைகளைப் போல அல்ல. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் திருப்தியாக நடந்துகொள்ள வேண்டியவர்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் என்றால், நாட்டிலே ஒரு ஆளும் கட்சி, ஒரு எதிர்க்கட்சி என்று இருந்தால் பரவாயில்லை. ஆளும் கட்சி ஒன்று என்றால் எதிர்க்கட்சிகள் நான்கு — அதற்கு மேலும் இருக்கின்றன. அவர்கள் நால்வருக்குள் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்வதோடு, நால்வரும் சேர்ந்து ஆளும் கட்சியையும் தாக்குகிறார்கள். அப்படிப்பட்டவர்களையும் அவர்கள் திருப்திப்படுத்த வேண்டும் ஸ்தாபன காங்கிரஸ் கட்சி இருக்கிறது, எம்.ஜி.ஆர். தலைமையிலே தொடங்கப்பட்ட புதிய கட்சி ஒன்று இருக்கிறது, வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறது, இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறது, இந்திரா காந்தி காங்கிரஸ் கட்சி இருக்கிறது,— அவர்கள் எல்லோரையும் திருப்திபடுத்த வேண்டும் காவல்துறையினர். அவர்கள் எல்லோரையும் திருப்திபடுத்தும் முறையிலே நடந்துகொள்வது மட்டுமல்ல; பல்வேறுவிதமான பணிகளிலே அவர்கள் ஈடுபடவேண்டியிருக்கிறது. They have to serve various masters, not one master. பொதுமக்களிலே பல பிரிவினர் இருப்பதால் எல்லோரையும் திருப்திபடுத்துவது என்பது இயலாத காரியம். ஆகையால்தான் ஒவ்வொருவரும் அவர்களுக்குள்ள குறைபாடுகளைச் சொல்லி, போலீசார்தான் குற்றம் செய்தார்கள்; குற்றம் நடப்பதற்கு அவர்கள்தான் காரணம் என்று சொல்லி தப்பித்துக்கொள்ள முயலுகிறார்கள்.

ஏரியில் கல்லிருக்கும். துணி தோய்க்க வருகின்றவர்கள் அவ்வளவு பேரும் அடித்துக்கொண்டு போவார்கள். அதுபோன்றே போலீஸ்துறையும் எல்லோருக்கும் ஆதரவாக அல்லது எல்லா எதிர்க்கட்சிகளுக்கும் ஒரு எதிரியாகத்தான் தோன்றுகின்றார்களே தவிர அவர்களுடைய சேவைகள் மற்றவர்களுக்குத் தெரிவதில்லை. குறை சொல்பவர்கள் எப்போது அதிகமாகத்தான் இருப்பார்கள். பாராட்டுகின்றவர்கள் மிகமிகக் குறைவு. ஆனாலும் அவர்கள் தங்களுடைய பணிகளை மிகக் திறம்படச் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

பிற்பகல் 1-00

விலைவாசி போராட்டத்தைப் பற்றி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். விலைவாசிப் போராட்டம் நடைபெற்றது. விவசாயிகள் போராட்டம் நடந்தது. விவசாயிகள் போராட்டத்தின்போது அநேகமாக எல்லா இடங்களிலும் போலீஸார் மிகவும் சாமர்த்தியமாகவும் பொறுமையுடனும் பணியாற்றினார்கள்.

ஆனால், சேலம் மாவட்டத்தில் ஒரு இடத்தில் மட்டும் அங்குள்ள அரசியல் எதிரிகள் காரணமாக, அரசுக்கு வேண்டுமென்றே ஒரு கெட்ட பெயரைக் கொண்டு வர வேண்டும், லா அண்டு ஆர்டர் நிலையை ஊன முற்றதாக ஆக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டார்கள். எனவே, அங்கேதான் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது.

அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் மத்திய அரசில் உள்ளவர்கள் என்ன செய்தார்கள்? இந்த மாநிலத்தில் சட்டம்—அமைதி—ஒழுங்கு எப்படியாவது ஒழிய வேண்டும், அவை தொலைந்தால்தான் இந்த மாநில அரசினை, திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பொறுப்பிலிருந்து நீக்குவதற்குக் காரணமாக அமையும் என்ற எண்ணத்தில் போலீசார் மீது பல குறைகளைச் சொல்ல ஆரம்பித்தார்கள். அதையொட்டி, மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும், திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களும் வந்தார்கள். அவர்கள் வந்தவுடன் அரசாங்கத்தின் பொறுப்பிலிருப்பவர்களைக் கண்டு பேசி நிலைமைகளைத் தெரிந்துகொள்ள முயற்சித்தார்களா என்றால் இல்லை. மாறாக, துப்பாக்கி சூடு நடந்த இடத்திற்குச் செல்லுகின்றார்கள். மேடைகளின் மேலே பேசுகின்றார்கள், அதிலும் "ப்ரவோகேடிவ்" ஸ்பீச் என்று சொல்லத்தக்க அளவிற்கு தூண்டிவிடத்தக்க அளவிற்கு அவர்கள் பேச்சுக்கள் அமைந்தன. காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானம் போடுகின்றார்கள். தமிழகத்தில் சட்டம்—அமைதி கெட்டுவிட்டது என்று சொல்லுகின்றார்கள். உடனே, இந்திய தலைமைப்பீடத்திலுள்ள காங்கிரஸ் கமிட்டிக்கு எடுத்துச் சொல்லுகின்றார்கள்.

இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடம் வற்புறுத்துகின்றார்கள், "தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு அனைத்தும் கெட்டுவிட்டது, உடனடியாக குடியரசுத் தலைவரது ஆட்சியைப் பிரகடனப்படுத்த வேண்டும்" என்று. இந்தக் கட்சி ஆட்சியில் இருப்பதைப் பிடிக்காமல் இவ்வளவும் செய்கின்றார்களே, இவர்கள் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும், 1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழகத்தில் நடந்தது. போலீசார் பல இடங்களிலே துப்பாக்கிப் பிரயோகம் செத்தார்கள். எவ்வளவு பேர் அதில் செத்திருப்பார்கள் என்று கேட்டதற்கு, சுமார் 50, 60 பேர் இறந்திருக்கலாம் என்றுதான் அன்று அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் சொன்னார்கள். அன்றைக்கு 350 பேரைச் சுட்டுக் கொன்ற—துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற பாவியே என்று பக்தவத்சலம் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u>: அவரைவிட தாங்கள்தான் இன்னும் வேகமாகப் பேசி, வெளிநடப்புச் செய்தீர்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி</u>: அன்று பக்தவத்சலம் அவர்கள் பொறுப்பிலிருந்த போது இவை நடந்தது என்று சொன்னேனே தவிர அன்றுள்ள ஐ.ஜி. அவர்களோ அல்லது போலீஸோ அவற்றுக்கு உடந்தையாக இருந்ததாக அன்றைக்கும் சொல்லவில்லை. ஆனால், அன்றைக்கு உள்துறை அமைச்சராக இருந்த நந்தா அவர்கள் சொன்னார்கள், ஒரு [illegible]யைப் போல நின்று இந்தப் போராட்டத்தைச் சமாளித்தார்கள்

என்று பக்தவத்சலம் அவர்களுக்கு அன்றைக்கு சர்ட்டிபிகேட் கொடுத்தார்கள். எங்களுடைய முதலமைச்சர் அவர்களுக்கு அப்படி ஒரு சாட்டிர்ஃபிகேட் கொடுக்க வேண்டும் என்று கேட்கவில்லை நாங்கள். பதிலாக என்ன நடந்தது என்று மத்திய அரசு மாநில அரசைக் கேட்டிருக்கலாம். பதிலாகத் தீர்மானம் போட்டார்கள் காங்கிரஸ் கமிட்டியில். மத்திய அரசிடம் வற்புறுத்தினார்கள், தமிழ் நாட்டில் சட்டம் — அமைதி கெட்டுவிட்டது, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று.

இதுதான் நியாயமா? காங்கிரஸ்காரர்கள் ஆண்டால் ஒரு நீதி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டால் ஒரு நீதி, ஒரு முறை என்று இருக்க வேண்டாமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஆட்சிக்கு எதிராக "ப்ரவோகேட்டிவ்"-ஆக பேசுகின்றார்கள் கூட்டங்களில். மதிப்பு மிக்க கல்யாணசுந்தரம், காமராஜர், எம்.ஜி.ஆர். போன்றவர்கள் எல்லாம் நாட்டிலே சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றத்தக்க விதத்திலா பேசினார்கள்?

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u>: திரு. காமராஜர் அவர்கள் அந்த மாதிரி பேசவில்லை. 15-ம் தேதி ஊர்வலம் நடத்தியிருக்கிறோம். முறையாக, அமைதியாக நடத்தியிருக்கிறோம். . . .

<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி</u>: நான் காமராஜர் அவர்கள் ஆறு மாதத்திற்கு முன்பு பேசிய பேச்சைத்தான் குறிப்பிட்டேன். அண்மையில், மிகச் சிறந்த முறையில் பேசியிருக்கின்றார்கள். ஒப்புக்கொள்கிறேன். பாராட்டுகிறேன்.

ஆனால், நான் குறிப்பிடுவது அதற்கு முன்னால், திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுகின்றார்கள், "என்னைக் கைது செய்ய முயற்சிக்கின்றார்கள். கைது செய்தால் என்ன ஆகும் தெரியுமா.........." என்றெல்லாம் பேசுகிறார். ஒரு தலைவர் பேசும் பேச்சா? அவருக்குப் பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள், விசிறிகள் இருக்கின்றார்கள். அவர் இப்படிப் பேசினால் அவருடைய விசிறிகள் என்ன செய்கின்றார்கள்? கல்லையெடுத்து வீசுகின்றார்கள், பஸ்ஸைக் கொளுத்துகின்றார்கள். இப்படிப் பட்ட முறையில் பேசி சட்டத்தையும் ஒழுங்கையும் பாழ்படுத்தும் அளவிற்கு பேசுகிறதை வன்மையாகக் கண்டிக்கிறேன். எனக்கு முன்பு பேசியவர்கள் போலீசாரைக் குறைகூறியும் பேசினார்கள், ஒரு சிலர் பாராட்டியும் பேசினார்கள்.

எனக்கு முன்பு பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் போலீஸ் நிர்வாகத்தைப் பாராட்டவில்லை. கடலூரில் என்ன நடந்தது? அங்கே எம்.ஜி.ஆர். அவர்கள் பேசிய கூட்டத்தில் போலீசாரின் திறமையைப் பாராட்டினார்கள். அங்கே திராவிட முன்னேற்றக் கழக நண்பர் பாபு அவர்களும் ராசாங்கமும் கறுப்புக்கொடி காட்டுவது என்ற நிலையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நான்கைந்தாயிரம் பேர் எங்களைத் தாக்கித் துரத்தினார்கள். ஆளும் கட்சியிலுள்ள நாங்கள் ஓடினோம். கலெக்டர் ஓடினார். போலீசார் எங்களுக்குத்தான் பாதுகாப்புக்கொடுக்க வேண்டும் என்று சொல்லி, அவர்களைச் சுடு என்று சொல்லவில்லை.

நாங்கள் காண்பிக்கும் இந்த அமைதியான போக்கை எதிர்க்கட்சியினர் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லையா? முதலமைச்சருக்கு உள்ள சிரமமெல்லாம், ஆளும் கட்சியிலே உள்ளவர்களே போலீசார் பேரிலே குற்றம் குறை சொல்லுகின்றார்கள் என்பதுதான். அந்த அளவிற்குத்தான் நிலைமை இருக்கின்றது. நாங்கள் ஏதாவது சொன்னால், "நீங்கள் சும்மா இருங்கள், ஏதாவது இருந்தால் எழுதிக்கொடுங்கள்" என்று அவர்கள் கண்டிக்கின்றார்களே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தவர், எம்.எல்.ஏ.-க்கள் எல்லாம் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று ஸ்டேஷனையே நிர்வகிக்கின்றார்கள் என்று சொல்லுவது—அந்தக் குற்றச்சாட்டு ஆதார பூர்வமானது இல்லை, வேண்டுமென்றே சொல்லப்படுவதாகும்.

பாராளுமன்ற உறுப்பினர் விஸ்வநாதன், தோப்பூர் திருவேங்கடம்—மாவட்டச் செயலாளர் இவர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் நடைபெறுகிறது. கூட்டத்தில் அண்ணா தி.மு.க.வினர் என்ற பெயரால் ஒரு ஆயிரம் பேர் அவர்களைத் துரத்துகின்றார்கள். அவர்கள் உயிருக்குப் பயந்து போலீஸ் ஸ்டேஷனிலேயே தஞ்சம் புகுகின்றார்கள். அப்போதும் விட மாட்டோம் என்று ஸ்டேஷனையே அவர்கள் தாக்குகின்றார்கள். அவர்களைக் கலைப்பதற்குக் கண்ணீர் புகைக் குண்டுகளை வெடிக்கின்றார்கள். உடனே போலீஸார் 'அக்கிரமம் பண்ணுகிறார்கள், அக்கிரமம் பண்ணுகின்றார்கள்' என்று சொன்னால் என்ன அர்த்தம்?

பண்ணுருட்டி இராமச்சந்திரன் அவர்கள் தொகுதியில் என்ன நடந்தது? திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியே அங்கு இருக்கக்கூடாது என்று கொடிகளை எரித்தார்கள், கொடிக் கம்பங்களை வெட்டினார்கள். மூன்று நாட்கள் அங்கே கழகத்தின் கொடி பறக்கவில்லை. ஆளும் கட்சியினராக இருக்கும் காரணத்தால் நாங்கள் கொடிகளை ஏற்றக்கூடாதா? மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்களைக் கைது செய்ததுபற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்களை மட்டும்தானா கைது செய்தார்கள்? சின்னசாமியைக் கைது செய்யவில்லையா? குற்றம் யார் செய்தாலும் கைது செய்வது முறைதான். ஆனால், ஒன்றை மட்டும் ஆலோசனையாக இந்த அவையின் முன்பு வைக்க விரும்புகிறேன்.

அரெஸ்டு பண்ணுவது என்பது லண்டன் போலீசைப் பொறுத்த மட்டில் அது கடைசி கட்டம். குற்றம் செய்திருந்தால் சம்பந்தப்பட்ட நபரைத் தொடர்ந்து கவனித்திருந்து குற்றம் செய்திருக்கின்றார் என்று இருந்தால்தான் கைது செய்வார்கள். ஆனால், நமது நாட்டு வெள்ளையர்கள் சட்டத்திலுள்ளபடி, ஐ.பி.ஸி.-படி "மே அரெஸ்ட்" என்று இருப்பதால் எஃப்.ஐ.ஆர். போட்டவுடன் அரெஸ்ட்டு செய்துவிடுகின்றார்கள். அரெஸ்டு செய்வது மேண்டேட்டரி என்று நினைத்து விடுகிறார்கள். அது தவறு. யார் குற்றம் செய்திருந்தாலும் புலனாய்வு செய்து நிச்சயமாகத் தெரிவதற்கு முன்பு அரெஸ்டு செய்யக்கூடாது. வேண்டுமானால் கோர்ட்டு குற்றவாளி என்று செய்யலாம்.

அடுத்து, பெண்கள் போலீசைப்பற்றி ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதில் மிகமிகக் "காஷஸ்" "அப்ரோச்" வேண்டும். பெண் போலீஸ் என்று நிறுவினால் பின்னர் முறையே பெண் எஸ்.ஐ., இன்ஸ்பெக்டர், டெபுடி என்று டி.ஐ.ஜி. வரையில

இருக்க வேண்டும். இவர்களுக்கு ஆண் போலீஸ் அதிகாரிகளோடு தொடர்பற்ற முறையில் அவர்கள் தனியாக இயங்கவேண்டும். இதை சற்று ஜாக்கிரதையாகவே அணுக வேண்டும். அடுத்து, இப்போது அடிஷனல் சூப்பெரிண்டெண்டெண்டுகள் நான்கு பேர்கள்தான் இருக்கிறார்கள். நெய்வேலி, அண்ணாமலை யூனிவெர்சிடி போன்ற இடங்களிலே டெபுடிதான் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட இடங்களில் அடிஷனல் மாவட்ட கண்காணிப்பாளர்கள் இருக்கலாம். ஆக, மேலும் 10, 20 அடிஷனல் சூப்பெரிண்டெண்டெண்டுகளை நியமிப்பதன் மூலம் இதைச் செம்மைப்படுத்தலாம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

இந்தக் காவல் துறை நல்ல முறையில் இயங்கவேண்டுமானால், ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் ஆகியோரின் வேலைகளை மேலெழுந்தவாறு கண்காணிப்பதற்காக ஒரு எல்லாக் கட்சியைச் சேர்ந்த பிரிதிநிதிகளையும் கொண்ட கமிட்டி ஒன்றை ஏற்படுத்தினால் அனாவசியமான குறைபாடுகளைத் தவிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் பொதுவாக, போலீசாரைப் பற்றி குறைபாடுகளைச் சொன்னதும் இடையாது, புகழ்வதும் இடையாது. என்றாலும், அவர்கள் செய்கின்ற சிரமமான காரியத்திற்காக அவர்களைப் பாராட்டி, எதிர்க் கட்சியிலே உள்ளவர்களானாலும், ஆளுங்கட்சியிலே உள்ளவர்களானாலும் அவர்கள் கூறியவற்றில் எவை நியாயமோ, எவை நேர்மையானவையோ, அந்தக் காரியங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இன்று மாலையிலும் அவை கூடும் என்று சொன்னார்கள். இன்று மாலையிலேயே மூன்று கமிட்டிகள் வைத்திருக்கிறார்கள். எனவே, அவற்றை நாளைக்கு ஒத்தி வைத்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவற்றை நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் காவல் துறை மானியத்தின் மீது. என்னுடைய கட்சி சார்பாக கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

காவல் துறையின் திறமையைப் பற்றி நான் குறைத்து மதிப்பிடவில்லை. காவல் துறை இன்றைய தினம் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. சென்னை மாநகரில் நடைபெற்ற மாணவர் ஊர்வலத்தின்போது போலீசார் நடந்துகொண்ட முறைகளை எல்லாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இருந்தாலும், இந்தக் காவல் துறை எப்படிப் பயன்படுத்தப்படுகிறது—ஆளுங்கட்சியால் என்பதை பார்க்கும் போது, அது தவறான முறையில் பயன்படுத்தப்படுகிறது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அரசியல் கட்சிகளின் தூண்டுதலுக்கு அப்பாற்பட்டு காவல் துறை இயங்கினால்தான் நல்ல முறையில் இயங்க முடியும் என்பதை யாவரும் அறிவர்.

ஆளும் கட்சிக்கு அனுசரணையாகக் காவல் துறை இயங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் காவல் துறை எத்தனை சிறப்புகள் வாய்ந்திருப்பினும், அது சரிவர இயங்க முடியவில்லை என்பதைப் பார்க்க முடிகிறது. காவல் துறையைக் கண்டிக்கும்போதும், பிரச்சினைகளை விமரிசிக்கின்ற போதும், அரசின் கொள்கைகளைத் தான் விமரிசிக்கிறோமே தவிர, காவல் துறையின் திறமையைக் குறைத்துப் பேசவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் காவல் துறையின் உதவியினால் எதிர்க் கட்சிக்காரர்களின் மீது வழக்குத் தொடருவது பரவலாகக் காணப்படுகிறது. அதை நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி, இப்படி எதிர்க் கட்சிகள் மீது வழக்கத் தொடருவது என்பது ஜனநாயக முறைக்கு உகந்ததுதானா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திரு. இராசாராம் அவர்கள் பேசும்போது ஆளுங் கட்சியைப் பாராட்டியும், காவல் துறையைப் புகழ்ந்தும், எதிர்க்கட்சிகளைத் தாக்கியும் பேசியிருக்கிறார். இது ஆளும் கட்சிக்காரர்கள் பேசக்கூடிய, வழக்கமாகப் பேசக் கூடிய ஒன்று. திரு. இராசாராம் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது அவர் என்ன பேசினார் என்பதை இந்த மன்றம் அறியும். அவருடைய பேச்சு அடங்கிய புத்தகம் நான் வைத்திருக்கிறேன். அவர் அப்படிப் பேசியிருக்கிறார் என்றால், இப்பொழுது நான் அதைச் சொல்ல. . .

திரு. ஜி. ராஜாராம் : தலைவர் அவர்களே, நான் பேசிய பேச்சு அவரிடம் இருக்கிறது என்று சொன்னார்கள். நான் என்ன பேசினேன் என்பதைச் சொன்னால், நன்றாக இருக்கம்.

திரு. க. சுப்பு : அதை இப்பொழுது சொல்வதற்கு நேரம் இல்லை. காவல் துறை எப்படிச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று பார்த்தால்... இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டக் காவல்துறை அதிகாரியாக இருப்பவர் நண்பர் ராஜாராமின் சகோதரர்தான்.

திரு. ஜி. ராஜாராம் : தலைவர் அவர்களே, அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு என்று தெரியவில்லை. விளக்க வேண்டும். நான் எதிர்க்.கட்சியிலிருந்தபோது பேசிய பேச்சை வைத்திருக்கிறேன் என்று சொன்னார்கள். அதை தயவு செய்து படித்தால் நன்றாக இருக்கும்.

திரு. க. சுப்பு : எனக்குப் பேசுவதற்கு ஐந்து நிமிஷம் அதிகமாக வாய்ப்புக் கொடுத்தால் அதைப் படிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்குப் பேசுவதற்கே இன்னும் ஐந்து நிமிடம்தான் இருக்கிறது.

திரு. க. சுப்பு : நான் இதிலே சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் எதிர்க்கட்சிகளுக்கு தங்கள் குறைகளைச் சொல்வதற்கு, மக்களின் குறைகளை எடுத்துக் காட்டுவதற்குப் போராட்டம் நடத்துவது, கூட்டங்களைக் கூட்டுவது, கோஷங்களை எழுப்புவது என்பன எல்லாம் ஜனநாயகத்தில் நாம் ஏற்றுக்கொண்ட ஒன்று.

ஜனநாயகத்தில் ஒரு கொள்கையை வற்புறுத்துவதற்காக கூட்டத்தைக் கூட்டுவது என்பது அனுமதிக்கப்பட்ட ஒன்று. இந்த முறையில் எதிர்க்கட்சிக்காரர்கள் போராட்டம் நடத்துகிறார்கள் என்றால் அதை ஆளும் கட்சிக்காரர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களை பதவியிலிருந்து கீழே இறக்க வேண்டும் என்ற காரணத்தால் அல்ல. இன்றைக்கு எதிர்க் கட்சிகள் மீது வழக்கு போடவேண்டும் என்ற எண்ணம் ஏன் வருகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, உறுப்பினர் ராஜபாளையத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் இதைக் கூற விரும்புகிறேன். நான் அந்தப் பகுதியில் மாணவர்கள் உடல் நல ஆய்வு சிகிச்சை முகாம் ஒன்றைத் தொடக்கி வைப்பதற்காகச் சென்றிருந்தேன். வழியில் 1,000-க்கு மேற்பட்டவர்கள், கறுப்புக்கொடி காட்டு கிறோம் என்று கூறி நான் சென்ற காருக்கு முன்னால் நின்று கொண்டு, காரைப் போகவிடாமல் தடுக்கும் முறையில் கம்புகளைக் கொண்டு காரையும் தாக்கிக் கொண்டிருந்தார்கள். காவல் துறை அதிகாரி அந்த இடத்தில் இருக்க முடியவில்லை. அப்படிப்பட்ட போராட்டத்தைத் தான் எதிர்க் கட்சிக்காரர்கள் விரும்புகிறார்களா என்று கேட்கவிரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : அந்தச் சம்பவத்தைப் பற்றி இங்கே கூற வேண்டாம் என்றிருந்தேன். அதை நான் சொல்லவும் விரும்பவில்லை. எதிர்க் கட்சிக் காரர்கள் கறுப்புக் கொடி காட்ட உரிமையிருக்கிறது. கலவரம் செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. அமைதியான முறையில் நடத்தலாம். ஆனால் ஆளும் கட்சிக்காரர்கள் காவல் துறையினரின் உதவியோடு அப்படி கறுப்புக்கொடி காட்டுபவர்கள் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்தால்..........

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சம்பவம் நடந்த அந்த இடத்தில் ஐம்பது போலீஸ்காரர்கள் இருந்தார்கள். கறுப்புக்கொடி காட்டியவர்கள் 1,000-க்கு மேற்பட்டவர்கள் இருந்தார்கள். அவர்கள் நான்கு பர்லாங் தூரத்திற்குக் காரைப் போகவிடாமல் மறித்தார்கள். டிரைவரின் திறமையினால் அந்த இடத்தைக் கடந்து சென்றேன். இந்த பலாத்கார முறையைத்தான் அங்கத்தினர் போராட்ட முறை என்று கருதுகிறாரா ?

திரு. க. சுப்பு : நான் முன்பே குறிப்பிட்டேன். அந்தச் சம்பவத்தைப் பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை. வன்முறையில் இறங்குவதை நான் விரும்பவில்லை. ஜனநாயக முறையில் அமைதியாகப் போராட்டம் நடத்துபவர்கள் எப்படியெல்லாம் வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆளும் கட்சியை எதிர்த்து எம்.ஜி.ஆர். கட்சியினர் ஆர்ப்பாட்டங்களைச் செய்தபோது அவர்களை ஆளை வைத்து ஆளுங்கட்சியினர் தாக்க முற்பட்டிருக்கிறார்கள். இது ஜனநாயக முறைக்கு உகந்தது அல்ல. "ஆர்கனைஸ்டு அஜிடேஷன்ஸ்" அங்கீகரிக்கப் பட வேண்டும். ஜனநாயக முறையில் நடத்தப்படுகிற போராட்டங்களை இப்படி நசுக்குவதும் எதிர்க் கட்சிக்காரர்கள் மீது வழக்குகள் தொடருவதும் சரிதானா ? இப்படிப் பட்ட முறைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று மக்கள் கோருகிறார்கள். இந்தப் போராட்டங்களின் அணுகு

முறையிலே மாற்றம் இருக்க வேண்டும். நேற்று ராஜாராம் ஆளுங்கட்சியில் இருந்தார். எனவே, அப்படிப் பேசினார். பேசியதற்கு ரெஃபரன்ஸ் இருக்கிறது சொல்ல முடியும். கட்சி மாறுகிறவர்கள். .....

திரு. ஜி. ராஜாராம் : தலைவர் அவர்களே, கட்சி மாறுவதைப் பற்றி உறுப்பினர் குறிப்பிடுகிறார். எனவே, தன்னிலை விளக்கம் அளிக்க விழைகிறேன். சுப்புவுக்குத் தெரியாது. நான் 1944-ஆம் ஆண்டிலிருந்து 1961 ஆம் ஆண்டு வரை திராவிடர் இயக்கத்தில் இருந்தவன். இந்தக் கட்சிக்கு வருகிறபோது பொதுத் தேர்தல் நடக்கிற நேரத்தில் "மீண்டும் இந்தக் கட்சி ஆட்சிக்கு வருமா ? பொதுத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெறாது. அழிந்துவிடப் போகிறது." இப்படியெல்லாம் ஆருடம் சொல்லிக்கொண்டிருக்கிற நேரத்தில்தான், நான் காங்கிரஸில் வகித்த அத்தனைப் பொறுப்புகளையும் துச்சமெனத் தூக்கி எறிந்து விட்டு கொள்கை ரீதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இணைத்துக் கொண்டேன். இது திரு. சுப்புவுக்குத் தெரியாது. சொல்லியிருக்க மாட்டார்கள். இப்பொழுதாவது அதைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே படித்துக் கொண்டிருந்த நேரத்தில் மாணவர் முன்னேற்றக் கழகத்தைக் கண்டவன், என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : அவரது விளக்கத்திற்கு ரொம்ப மகிழ்ச்சி அடைகிறேன். அவர் மாறிவிட்டார் என்று சொல்லவில்லை. இப்படிப்பட்ட போராட்டங்களை மக்கள் பிரச்சினையாகக் கருதி, கட்சிக் கண்ணோட்டத்துடன் அணுகாமல் அதை அடக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளாமல் இருப்பது நன்றாக இருக்கும். அதை அடக்க முற்படுகிற போதுதான் வன்முறைகள் கிளைத்துவிடுகிறது என்று சுட்டிக்காட்டத்தான் குறிப்பிட்டேன்.

மாவட்ட போலீஸ் அதிகாரிகளை நியமிக்கிறார்கள். இது பற்றிக் கூட நான் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். தாங்கள் ஐ.பி.எஸ். அதிகாரிகளாக ஆகவேண்டும் என்பதற்காக, ஆளும் கட்சிக்கு நல்லபிள்ளையாக இருக்க வேண்டுமென்றே சில இடங்களில் சிலர் தவறான முறைகளில் ஈடுபடுகிறார்கள். அதற்காகத்தான் ஐ.சி.எஸ். அதிகாரிகளாக நியமிக்கப்பட வேண்டும் என்று கொடுத்திருக்கிறோம். இன்றைக்கு இராமநாதபுரம் போலீஸ் அதிகாரியை அந்த இடத்தைவிட்டு மாற்ற வேண்டும் என்று எல்லாக் கட்சிக்காரர்களும் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் ஆளும் கட்சிக்கு நல்ல பிள்ளையாக இருக்க அவர் மேற்கொண்டு வருகிற பல தவறான காரியங்கள்தான். இதனால் பல மோசமான விளைவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இன்னொன்று, இன்ஸ்பெக்டர் ஆப் போலீசுக்கு 1971-ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட பானல் இருக்கிறது. அதில் 60 பேர்கள் இருக்கிறார்கள் என்றால் புதியதாக யாரைச் சேர்த்தாலும் 61, 62 என்று சேர்த்துக் கொண்டு போவதுதான் முறை. ஆனால் இன்றைக்கு 50 ஏ, 51 ஏ என்பதாக நடுநடுவே சேர்க்கிறார்கள். பலூனை ஊதிக்கொண்டு போவது போலவே நடுநடுவே நுழைப்பது அதிகமாக இருப்பதனால் 60 ஆக

பானலில் இருக்கிறவர்கள் இருந்து கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. முறையாக அவருக்கு சான்ஸ் வருவதற்குள் பலபேர்கள் இடையே புகுந்து விடுகிறார்கள். இதுபற்றியும் பல புகார்கள் சொல்லப்படுவதன் காரணமாகத்தான் முதலமைச்சர் அவர்களுக்கு இந்த அநீதியைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மூன்று மாதங்களுக்கு முன்னால் கோவில்பட்டியில் அரசாங்க பஸ் டிரைவர் ஒருவர் மிட் நைட்டில் ஒரு புகார் கொடுக்கிறார். அதில் சிலபேர்கள் பஸ்ஸை வழிமறித்துத் தீ வைத்தார்கள் என்கிறார். ஆனால் இரவானதால் யாரையும் அடையாளம் தெரியாது என்று புகார் கொடுத்திருக்கிறார். ஆனால் 1 பி.எம்.-க்கு 14 பேர்களை கைது செய்து 147, 148, 336, 427, 435 ஆகிய செக்‌ஷன்களின்கீழ் வழக்குப் பதிவு செய்கிறார்கள். டிரைவர் கொடுத்த புகார் யாரையும் அடையாளம் தெரியாது என்பது. ஆனால் இவர்கள் 307 செக்‌ஷனையும் சேர்த்து கொலை செய்ய முயற்சித்தார்கள் எம்பதாக 14 பேர்கள் மீது—அவர்கள் அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது—வழக்குப் பதிவு செய்து ஜாமீனில் கூட வெளிவரக் கூடாத நிலையில் கைது செய்கிறார்கள்.

அதேபோல ராதாபுரத்திலும்—கூடாங்குளம் அருகிலே நடந்த சம்பவம், 3 மாதத்திற்கு முன்னால் நடந்த சம்பவம்தான் சொல்லுகிறேன். ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிரைவர் கொடுத்த புகார், அங்கே உடனே காங்கிரஸ்காரர்களை 147, 148, 336, 427 அண்டு 436இன் கீழ் கைது செய்திருக்கிறார்கள். பில்டிங்குக்குத் தீ வைப்பதுதான் 436 கீழ் நான்பெய்லபுள் அரஸ்டின்கீழ் வரும். அதையும் சேர்த்து கைது செய்திருக்கிறார்கள். இப்படிச் சில இடங்களில் சில அதிகாரிகள் வேண்டுமென்றே செய்துவருவதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படி கட்சிக் கண்ணோட்டத்தில் போலீஸ் அதிகாரிகள் நடந்து கொண்டுவருவதை வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

இன்னும் இங்கே ஃபையர் சர்வீசில் பணியாற்றுகிற போலீஸ்காரர்களுக்கும் மற்றவர்களைப்போல வீட்டு வாடகைப்படி கொடுக்க இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்காக மகிழ்ச்சி அடைகிறோம் என்றாலும் அவர்கள் மற்ற போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம்போல தங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். அதற்கு இவர்கள் மற்றவர்கள் பொதுமக்களோடு தொடர்புடைய நிலையில் இருப்பதால் கொடுக்க வேண்டியிருக்கிறது. இவர்களுக்குப் பொதுமக்களோடு தொடர்பு இல்லாத காரணத்தினால் குறைத்துத் தருவதாகச் சொல்லப்படுவது சரியல்ல. காவல் துறையினர்களுக்காவது பொதுமக்களோடு தொடர்பு இருக்கிறது. குறைத்துக் கொடுத்தாலும் பரவாயில்லை. ஆனால் இவர்களுக்குப் பொதுமக்களோடு தொடர்பு இல்லை. இவர்கள் யாரிடத்தில் போய் நிற்பார்கள்? தீ பிடித்தால்தான் வருகிறார்கள். வந்தாலும் சாம்பலைப் பார்த்துப் போகிறார்கள். ஆகவே, இவர்கள் சம்பளத்தையும் அவர்களுக்குச் சமமாகவாவது உயர்த்த வேண்டும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாற்றம் செய்யப்படுவது பற்றி ஒன்றே ஒன்று; ஸ்ரீ வில்லிப்புத்தூரில் ஒரு இன்ஸ்பெக்டர் இருந்தார். அவர் மாற்றப்பட்டார்

அந்த இடத்தைவிட்டு மாற்றப்பட்டவர் திரும்ப அதே இடத்திற்கு வருகிறார். இப்படி இவர் திரும்பவும் இங்கே மாற்றப்பட்டதற்கு விரும்பத் தகாத ஒரு நபர்தான் காரணம் என்று சொல்கிறார். இவர் சொல்கிற நேரத்தில் இன்ஸ்பெக்டர் எந்தநேரமாக இருந்தாலும் இவரை வீட்டில் போய்ப் பார்க்க வேண்டும். அந்த நபர் இன்றைக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொள்கிறார். நாளைக்கு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்வாரோ தெரியாது. இப்படி ஒருவர் சொல்வதற்காக மேலே உள்ளவர்கள் போட்ட மாறுதல் உத்தரவைககூட திரும்ப மாற்ற வேண்டிய நிலை இருக்கிறது என்றால் அது இந்த இலாக்காவை எங்கே கொண்டுபோய்விடும் என்று சொல்ல முடியாது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : இப்படி குறிப்பிட்டு—ராஜாபாளையம் இன்ஸ்பெக்டர் என்று—சொல்வது சரியல்ல.

<u>திரு. க. சுப்பு</u> : ராஜாபாளையத்தில் இருப்பவர் மிகவும் நல்லவர். பல சிரமங்களுக்கு மத்தியில் மிகத் திறமையாகப் பணியாற்றி வருகிறார். நான் ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருப்பவரைப்பற்றிச் சொன்னேன். ஒரு இடத்தைவிட்டு மாற்றப்பட்டவர் திரும்ப அங்கேயே போடப்பட வேண்டிய அவசியம் என்ன ? எந்தச் சூழ்நிலையில் இந்த மாற்றம் செய்யப்படுகிறது ? இப்படி அரசின் கவனத்திற்குப் பலவற்றைக் கொண்டுவர விரும்புகிறேன் என்றாலும் மற்றவற்றை திரு கே.டி.கே. அவர்கள் சொல்வார்கள் என்று விட்டு நேரம் இல்லாத காரணத்தினால் இத்துடன் முடிக்கிறேன்.

* <u>திரு. எம். சுரேந்திரன்</u> : தலைவர் அவர்களே, இந்தப் போலீஸ் மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயத்திலே மக்கள் அரசாங்கத்தின் மீது வேகமாக அதிருப்தி கொள்வதற்கோ, ஆத்திரம் கொள்வதற்கோ போலீஸ் துறை மிகப் பிரதானமான துறையாக இருந்து கொண்டிருக்கிறது என்று முதலிலேயே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். போலீஸ் துறையின் நடவடிக்கை அரசாங்கத்தை எந்த நேரத்திலும் தாக்கக் கூடிய, அரசாங்கத்தைப் பலவீனப் படுத்தக்கூடிய, எடுத்து எறியக் கூடிய விதத்தில் இருக்கிறது என்பது பழைய கால சரித்திரத்தைத் தொடர்ந்து பார்க்கிறபோது தெரிகிற உண்மை.

இன்றைய தினம் போலீஸ் இலாக்கா சிறந்த இலாக்கா, நல்ல விதத்தில் வேலை செய்கிறது என்று சொன்னாலும்கூட சமீப கால நடவடிக்கைகள் அரசாங்கத்திற்கு மிகுந்த கெட்ட பெயரை உண்டாக்கித் தருகின்ற அளவில்தான் இருக்கிறது. இலாக்காவில் முன்பு இருந்தவர்கள் தான் இப்போதும் தொடர்ந்து இருக்கிறார்கள். இப்போது மட்டும் இவர்களால் ஏன் கெட்ட பெயர் வருகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

1971-இல் இருந்த நிலைமை வேறு, பின்னால் இருக்கின்ற நிலைமை வேறாக இருந்து கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 1971-க்குப் பின்னால் அரசியலுக்குப் பக்க பலமாக அரசியலுக்குக் கருவியாகப் பயன்படுகின்ற ஒரு அமைப்பாக போலீஸ் இலாக்கா மாறியிருக்கிறது

என்பது உண்மை நிலையாகும். மாதாமாதம் எவ்வளவு வழக்குகள் போடப்படுகின்றன என்பதைக் கொண்டு போலீஸ் இலாக்காவின் திறமையை கணிக்க முடியாது. சமுதாயத்தில் 4½ கோடி மக்கள் இருக்கிறார்கள். 4½ லட்சம் மக்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன என்பது பெருமைதரக்கூடிய ஒன்றல்ல. மேலும் நாகரீகமான முறைகள் வளர்ந்து விட்ட இந்தக் காலத்தில் பல இடங்களில் மிக அநாகரீகமான முறையில் அடித்து, உதைத்து, துன்புறுத்தி இப்போதும் வழக்குப் புலன் விசாரணை நடைபெறுகிறது என்பதை வருத்தத்துடன்தான் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

அது மாத்திரமல்ல, இன்றைக்கு தி. மு. க. அதிகாரத்திலே
பிற்பகல் 1-30 இருக்கிறது. நாளைக்கு வேறு ஒரு அரசும் அதிகாரத்திற்கு வரும். திரு. துரைமுருகன் அவர்கள் பேசும்போது, போலீசை எதிர்த்து பேசினால்தான் கூட்டம் வரும் என்ற முறையில் எதிர்க் கட்சியினர், பேசுகிறார்கள் என்று குறிப்பிட்டார். திரு. துரைமுருகன் அவர்களும் எதிர்க் கட்சியிலேயிருந்துதான் ஆளும் கட்சிக்கு வந்தார்கள் என்பதை மறந்து விட்டார்கள். இன்றைய சமுதாயத்திலே இருக்கின்ற நிலைமைகளை நாம் கண்டாக வேண்டும். இன்றையத்தினம் மின்சார வெட்டு இருக்கிறது, விலைவாசிகள் ஏறி இருக்கின்றன, தொழிற்சாலைகளையெல்லாம் மூடி இருக்கிறார்கள். இம்மாதிரியான சந்தர்ப்பத்திலே கிளர்ச்சிகளும், மற்ற போராட்டங்களும் தவிர்க்க முடியாதவையாக இருக்கும். அதற்காக வேறு மாதிரியாக நடந்து கொண்டால் நின்று விடப் போவதில்லை.

பொருளாதார நெருக்கடி ஒவ்வொரு நாளும் வளர்ந்து கொண்டே வருகிறதே தவிர, குறைந்து கொண்டு வரவில்லை. ஆகவே, கிளர்ச்சிகள் எல்லா இடங்களிலும் முன்பிருந்ததைவிட அதிகமாகத்தான் இருக்கும். அதை அடக்குவதற்காக, ஒடுக்குவதற்காகப் போலீசைப் பயன்படுத்தினால் ஜனநாயகம் வெற்றி பெறுவதற்கான பாதையிலே நாம் செல்லவில்லை, அதற்குப் பதிலாக சர்வாதிகாரத்தைக் காணுகிறோம் என்றுதான் பொருள். ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் எப்படியிருந்தாலும், எதிர்க் கட்சியிலே உள்ளவர்களைப் பகைமையுடன் காணாமல், இவர்கள் சொல்லுகின்ற குற்றச் சாட்டுகளை மாற்றுவதற்கோ, திருத்துவதற்கோ முயற்சி மேற்கொள்ள வேண்டுமே தவிர, பகைமை உணர்ச்சிக்கு ஆட்பட்டு, அவர்களைப் பகைவர்களாகக் கருதி, தங்களுடைய கையாளாகக் கருதுவது போலீஸ் இலாக்காவினுடைய வளர்ச்சிக்கு, இந்தத் துறையினுடைய வளர்ச்சிக்கு, அல்லது அரசாங்கத்தினுடைய நற்பெயருக்கு உகந்ததாக இருக்க முடியாது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தொழிலாளர் பிரச்சினையை எடுத்துக் கொள்ளுங்கள். மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையிலே வேலை நிறுத்தம் நடைபெற முயற்சி நடந்தது. முயற்சி நடக்கும்போதே, போலீசார் உள்ளே நுழைந்து, அங்கே இருக்கின்றவர்களைக் கைது செய்து லாரியிலே ஏற்றி, வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். இப்பொழுது 21 பேர் மீது வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. விசாரணை நடக்காமல், 30 தடவையாக வாய்தா போட்டு, அவர்களை அலைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். இது போலீசாருடைய வழி என்று இங்கே கூற விரும்புகிறேன்.

ஏற்கெனவே பேசியவர்கள் எவ்வளவோ விவரங்களைச் சொன்னார்கள். ஆளும் கட்சியிலே இருக்கிற மதிப்புமிக்க கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சில ஆலோசனைகளைச் சொன்னார்கள். வழக்குத் தொடர்வது என்பது வழக்கை விசாரித்து அவர்கள் மீது வழக்குத் தொடரலாமா என்பதை ஆராய்ந்துதான், கைது செய்ய வேண்டுமே தவிர, கைது செய்ததற்குப் பின்னால் அவர்கள் மீது வழக்கு ஜோடனை செய்வது, வழக்கு இருக்கிறதா இல்லையா என்ற நிலையே தெரியாத நேரத்தில் அவர்களைத் துன்புறுத்துகின்ற நிலைகள் எல்லாம் மிகவும் அருவருக்கத்தக்க நிலைகளாகும்.

அது போல், சந்தேகக் கேஸ் என்று அப்படிப்பட்ட வழியிலே போகின்றவர்களையும் வருகின்றவர்களையும், கைது செய்வது இந்தக் காலத்திற்கும் பொருந்துமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். காலம் வளர்ந்து கொண்டே இருக்கிறது. விஞ்ஞானம் வளர்ந்து கொண்டே இருக்கிறது. நாகரீகத்தைப் பற்றி நாம் அதிகமாகப் பேசுகிறோம். வழியிலே இருக்கிறவனை, நிரபராதியாக இருக்கிறவனை, ஒரு வழக்குப் போடப்பட்டால், எப்படி விடுதலை பெறுவது என்று கூடத் தெரியாத ஒருவனைக் கைது செய்து வழக்குப் போடுவது நாகரீகம் அல்ல. அவைகளை எல்லாம் மாற்றிவிட வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

107 என்று ஒரு செக்ஷன் இருக்கிறது. எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும், இங்கே ஒரு 10 பேர், அங்கே ஒரு 10 பேர் என்று பிடித்துக் கொண்டு அலைக்கழிக்கிறார்கள். அது எதற்காக என்று சொன்னால், குற்றங்கள் நடக்காமல் இருப்பதற்கு என்று சொல்வார்கள். யார் குற்றங்கள் செய்கிறார்களோ அவர்களைப் பார்த்து தண்டிப்பதற்குப் பதிலாக, குற்றங்கள் நடக்கக் கூடாது என்பதற்காகக் குற்றங்கள் செய்யாதவர்கள் மீது வழக்குப் போட்டு, கோர்ட்டுகளுக்கு இழுத்துக் கொண்டிருப்பது நல்ல முறையல்ல. இம்மாதிரியான முறைகளை மாற்ற வேண்டிய காலகட்டம் வந்து விட்டது என்று சொல்ல விரும்புகின்றேன்.

காலையிலே ஒரு கேள்வியின்போது, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அமைச்சர்கள் எந்த வழியோ அந்த வழிதான் அதிகாரிகள் என்ற கொள்கை இருக்கின்றது என்று கூறினார்கள். அமைச்சர்கள் எந்த வழியாகவும் போகலாம். அவர்கள் இன்றிருப்பார்கள், நாளைக்கு மாறுகின்றவர்கள். ஆனால் அதிகாரிகள் மாறுவதில்லை. அவர்கள் நிரந்தரமாக..............

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u>: கிராமத்திலே இருக்கிற மக்களை அதிகாரிகள் கவனிக்கிறார்களா என்பது கேள்வி. அதற்கு அதிகாரிகள் கிராமத்து மக்களைக் கவனிப்பதில்லை என்று உறுப்பினர் ஒருவர் சொன்னார். கிராமங்களுக்கு அமைச்சர்கள் செல்கிறார்கள். அதிகாரிகளும் கூடவே வருகிறார்கள். ஆகவே அமைச்சர்கள் கவனிக்கும்போது, அதிகாரிகளும் கவனிக்கிறார்கள் என்பதற்காகத்தான் நான் அதை பதிலாகச் சொன்னேன். அது அதற்காகச் சொன்ன பதில்.

<u>திரு. எம். சுரேந்திரன்</u>: அமைச்சர்கள் வழி அதிகாரிகள் என்று காலையில் சொல்லப்பட்டது. அந்த வார்த்தைகளைத்தான் நான் சொன்னேன். அது வேறு காரியத்திற்காகச் சொல்லப்பட்டது என்றாலும், பொதுவாக எல்லாவற்றிற்கும் பொருந்தும் என்றுதான் அமைச்சர்கள்

எவ்வழி அவ்வழி அதிகாரிகள் என்று சொன்னார்கள் என்றேன். அமைச்சர்கள் வருவார்கள், போவார்கள். அதிகாரிகள் என்றைக்குமே இருக்கிறவர்கள். அவர்கள் அமைச்சர்களுக்கு அனுசரணையாக இருக்க வேண்டுமென்று சொல்வது ஜனநாயகத்திற்கு விரோதமானது. அமைச்சர்களுக்கு அனுசரணையாக அதிகாரிகள் இருக்க வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்படும்படியாக அதிகாரிகளை அமைச்சர்கள் செய்துவிட்டால் அதனுடைய விளைவுகள் நியமானதாக இருக்க முடியாது. ஜனநாயகத்திற்குப் பொருந்தும் வகையிலே அரசு நடக்க முடியாது என்பதையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு வருங்காலத்திலாவது இம்மாதிரி குறைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால் இன்றைக்குப் பல்வேறு நபர்கள் பேரிலே கேஸ்கள் போட்டிருக்கிறார்கள். பல வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன. பல வழக்குகள் உண்மையில்லாத வழக்குகள், நான் உறுதியாகச் சொல்ல முடியும். இவைகளையெல்லாம் ஆராய்வதற்கு இப்பொழுது ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரியாகச் செய்வதன் மூலம் எதிர்க் கட்சிகளை அடக்கிவிட முடியுமா அல்லது அவர்களைத் தங்கள் பக்கம் திருப்பிவிட முடியுமா என்பதை எண்ணிப் பார்த்து, அதைச் சீராக்க ஜனநாயகப் பண்புடன் காரியங்களை ஜனநாயகத்திலே செய்ய வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் மாலை 4-00 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-36 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

இடைவேளைக்குப் பின் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. டெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை மாலை 4-00 மணி அளவில் மீண்டும் கூடியது.

திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுவாக போலீஸ் துறை மானியமானாலும் அதிலே சூடு இருக்கும் என்பதை நாம் எப்பொழுதும் அறிந்திருக்கிறோம். எதிர்க் கட்சிகளாக இருக்கக்கூடியவர்கள் எப்பொழுதுமே போலீஸ் துறையிலே பேசும்பொழுது வேகமாகவும், குற்றச்சாட்டுக்களை அடுக்குகின்ற வகையிலும் பேசுவது முறையாக இருந்து வந்திருக்கிறது என்பதை யாரும் மறந்து விடவில்லை. சென்ற காலத்திலேகூட ஆளுங் கட்சி வேறு கட்சியாக இருந்தபொழுது இப்படி நடந்து வந்திருக்கிறது. அதே முறையிலே இன்றைக்கு இருக்கின்ற எதிர்க் கட்சிகளும் போலீஸ்காரர்களுடைய நடவடிக்கைகளைப்பற்றிக் குற்றம் காணுகின்ற வகையிலே சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேனே தவிர போலீஸ்காரர்கள் உண்மையிலே பாரபட்சமாக நடக்கிறார்கள் என்று நம்பி அவர்கள் பேசி இருக்கிறார்கள் என்று என்னைப் போன்றவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

சாதாரணமாகப் போலீஸ் துறை சமுதாயத்தில் உள்ள மக்கள் உரிமைகளைப் பாதுகாக்கின்ற சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற கடமையைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். உரிமைகளைக் கோருகின்ற மக்கள் மற்ற

வர்களின் கடமைகளையும் எண்ணிப் பார்த்திட வேண்டும். அதுதான் ஜனநாயகத்தினுடைய அடிப்படை என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. இன்றைக்கு எல்லோரும் அதிகமான உரிமைகளைக் கோருகின்றார்களே தவிர, அதிலும் குறிப்பாக உரிமை, உரிமை, உரிமைகளிலே அரசை வைக்கிறது என்று பேசுகின்றார்களே தவிர சமுதாயத்திலே மக்கள் அமைதியாக வாழ்வதற்கும் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அன்றாடம் அவர்கள் விரும்புகின்ற காரியங்களைச் சட்டப்படி நிறைவேற்றுவதற்கும் அவர்கள் உரிமை பெற்றிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. பிறருடைய உரிமை பாதிக்கப்படுகின்ற வகையிலே ஒரு உரிமை பயன்படுத்தப்படுகிறபோதுதான் போலீஸாருடைய பணி தேவைப்படுகிறது. அந்த வகையிலே அவர்கள் சில நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். அப்படி எடுக்கும்பொழுது போலீஸார் பாரபட்சமாக நடந்து கொள்கிறார்கள் என்று சொல்வது விந்தையான வாதம் ஆக இருக்கிறது. இது ஒரு வியாதியைப்போல் இருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும். குற்றங்குறைகள் நடந்திருந்தால் அவற்றை அகற்றுவதற்கு முயற்சி செய்யலாம். அப்படியில்லாது போலீஸார் அவர்களுடைய கடமைகளை ஆற்றுவதற்குத் தடங்கலாக அல்லது அவர்கள் தங்களுடைய காரியங்களில் சுணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பேச்சுக்களைப் பேசுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாலே பேசிய திரு. ஓ. என். சுந்தரம் அவர்கள் பேசும்பொழுது வத்தலக்குண்டு போன்ற பகுதிகளிலே இன்றைக்குத் தேர்தல் நடக்கிறது. திண்டுக்கல் தேர்தல் நடக்கிறது என்பதிலே எண்ணத்தை வைத்து அரசு பல இட மாற்றங்களை போலீஸ் ஆபீஸர்கள் டிரான்ஸ்பர் செய்து கொண்டிருக்கிறது என்று பல ஊர்களைச் சுட்டிக் காட்டினார்கள். நான் அவர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன். இது என்ன வாதம் என்று புரியவில்லை. அப்படியென்றால் போலீஸ்காரர்கள் அங்கே தி.மு.க. ஆட்சிக்கு விரோதமாக இருக்கிறார்களா அப்படியிருக்கிற காரணத்தினாலேதான் அரசு அதைத் தெரிந்து மாற்றுகிறதா அல்லது போலீஸ்காரர்கள் தி.மு.க.வுக்கு எதிராகவும், மாண்புமிகு உறுப்பினர் திரு ஓ. என். சுந்தரம் அவர்களுடைய கட்சிக்காரர்களுக்கு ஆதரவாகவும் நடந்து கொண்டிருக்கிறார்களா அந்த அடிப்படையிலே இந்த ஆட்சி மாற்றுகிறதா என்பதை அவர்கள் விளக்கிச் சொல்ல வேண்டும். ஏதோ அட்மினிஸ்ட்ரேட்டிவ் மெஷர்ஸ் என்று சொல்வார்கள், டியூரிங் தி கோர்ஸ் ஆப் அட்மினிஸ்ட்ரேஷன், நிர்வாகத்திலே சில மாற்றங்களைச் செய்யும்பொழுது, திண்டுக்கல் தேர்தலை மனதில் வைத்து அவர்கள் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களைச் சொல்வது நியாயமாகாது.

யாரோ ஒருவர் தங்கவேலு என்பவர் நகரமன்ற உறுப்பினர், அவரை ஜீப்பிலே வைத்துக் கொண்டு எங்கேயோ கொண்டுபோய் அடைத்து வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அப்படி தங்கவேலு என்பவர் எடுத்துச் செல்லப்பட்டிருந்திருப்பாரேயானால், அவரே என்மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டது என்ற புகாரைத் தந்திருக்கிறாரா என்பதை அவர்கள் சொல்லவில்லை. அப்படி நடந்திருந்தால் அந்த நகர மன்ற உறுப்பினர் ஏன் போலீஸிலே அதைப்பற்றி கம்ப்ளெய்ண்ட் சொல்லவில்லை என்பதை அவர்கள் விளக்கிச் சொல்ல வேண்டும். குற்றச்சாட்டுச் சொல்ல வேண்டுமென்பதற்காக உண்மைகளைத் திரித்துச் சொல்வதாக இருக்கக் கூடாது.

போலீஸ் துறை முக்கியமான துறை. அது நெருப்போடு விளையாடுவது போல் இருக்கிறது என்று நினைத்துக் கொள்ள வேண்டும். நெருப்பு அது ஏன் ஏன் சொல்கிறேன் என்றால் நெருப்பு மனித வாழ்க்கைக்கு முக்கியமாகத் தேவைப்படுகிறது. பல காரியங்களுக்கு அது தேவைப்படுகிறது. அதைப் பயன்படுத்துகிற நேரத்திலே கவனமாகப் பயன்படுத்த வேண்டும். அதே நேரத்திலே நெருப்போடு மிக நெருக்கமாக இருக்கக் கூடாது. அந்த முறையிலே எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் போலீஸாரை நெருப்புப்போல பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதைத் தவறான முறையிலே, நாம் தவறான எண்ணத்தை மக்களுக்கு ஏற்படுத்துகிற வகையில் ஒரு எண்ணத்தைக் கற்பித்துப் பேசுவோமானால் அந்தத் துறையினுடைய இன்றியமையாமையை, முக்கியத்துவத்தைக் குறைத்துச் சொல்வதாக மாறி விடக்கூடும். மேலும் அது நாட்டிற்கும் நல்லதல்ல என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாட்டில் என்ன நடக்கிறது எனச் சிந்திக்க வேண்டும், கிளர்ச்சி செய்வது, கருப்புக் கொடி காட்டுவது ஜீவாதார உரிமைகள் என்று பேசுகிறார்கள். அதை யாரும் மறுக்கவில்லை. ஜனநாயகத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற சில உரிமைகளை இங்கே இருக்கிற எதிர்க் கட்சிகள் பயன்படுத்துவதிலே யாருக்கும் தடையில்லை. ஆட்சேபணையில்லை. நான் அவர்களை மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பஸ்களை எரிப்பதும், மாணவர்கள் பள்ளிக் கூடங்களிலே இருந்தால் பலாத்காரமாக அவர்களை வெளியே வரவேண்டுமென்று கேட்பதும் கடைகளை வைத்துக் கொண்டிருந்தால் கடைகளிலே சூறையாடுவதும் தான் இன்று நம் ஜனநாயகத்தில் நம் எதிர்ப்பின் முறையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி பஸ்களை எரிக்கும்போது தனிப்பட்டவர்கள் உரிமைகளெல்லாம் பாதிக்கப்படுகிறது. அப்படி எதிர்க்கட்சிக்காரர்கள் நடந்தால் அதைத் தடுக்கிற கடமை போலீஸ்காரர்களுக்கு இருக்கிறது. அந்த வகையில் தான் அவர்கள் சில நடவடிக்கைகள் மேற்கொள்கிறார்கள். அவர்கள் பாரபட்சமாக நடந்து கொள்கிறார்கள் என்று சொல்வது மிக வேடிக்கையாக இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் காளிமுத்து அவர்கள் இங்கே பேசினார்கள். அவர் சொன்னார், மிகவும் வேதனையோடு பேசுகிறேன் என்று. அவருக்கு மட்டும் இந்த வேதனை ஏற்படவில்லை. எனக்கு அவருடைய பேச்சைக் கேட்கும்போது வேடிக்கையாக இருந்தது, வேதனையாக இருந்தது. சென்ற ஆகஸ்டு மாதத்திலே 11-ம் தேதி இந்த இடத்தில் உட்கார்ந்திருந்து காளிமுத்து அவர்கள் பேசினார்கள். அப்போது அவர்கள் என்னென்ன பேசினார்கள். அவர்கள் ராஜபாளையம் சாகி அவர்களைப் பற்றி, மானாமதுரை வாலிபர்களைப் பற்றி, மன்னார்குடி கலைமணியைப் பற்றிப் பேசினார்கள்.

அடுத்து, வஹாப் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைப் பற்றிப் பேசினார்கள். நடத்தப்பட்ட வன்முறையைப் பற்றிப் பேசினார்கள். மேலும் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி நடைபெறுகிற இந்தக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைக்கூட அங்கே உட்கார்ந்து கொண்டிருந்து காளிமுத்து அன்றைக்குச் சொன்னார்கள்.

திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராகிய பிறகு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பற்றித்தான் காலையில் பேசினேன். அங்கே உட்கார்ந்து பேசிய கருத்துக்களுக்கு முரண்பட்டு இன்றைக்குப் பேசவில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: அதைத்தான் நான் சொல்கிறேன். நாக்கு இருக்கிறதே இதனால் எப்படியும் பேசலாம். கொள்கையை எப்படியும் திருத்திக் கொள்ளலாம். கொள்கை படுகிற பாடு இருக்கிறதே. அதை ஆண்டவன்தான் தீர்க்க வேண்டும். கொள்கையா, கொள் கையா என்று தெரியவில்லை. இந்தக் கொள்கை இருக்கிறதே, இதை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும். மனம் ஒரு குரங்கு என்று யாரோ சொன்னார். நாட்டில் இருக்கிற ஒரு சிலருடைய மனச் சாட்சியைப் பார்க்கும்போது குரங்கு இருக்கிறதே, அது மரத்திற்கு மரம் தாவுகிறது என்று சொல்வது சரியாக இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது.

நண்பர் காளிமுத்து அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். அவர் என் நண்பர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே, 1965-இல் நானும், நம்முடைய கணேசன், துணைத் தலைவர் மாண்புமிகு திரு. சீனிவாசன் போன்றவர்கள் சென்னையில் இருந்து போராட்டம் செய்து கைதான நேரத்தில், தென் மாவட்டத்திலிருந்து நா. காமராஜ், காளிமுத்து போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவரை நான் என் அருமைத் தம்பியாகக் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் காளிமுத்து போன்றவர்களெல்லாம் இப்படி மாறிப் பேசுகிறார்களே என்று நினைக்கும்போது ஏன் இந்த நிலை அரசியலில் ஏற்பட்டிருக்கிறது என்று என்னைப் போன்றவர்களெல்லாம் வருந்துகிறோம். இந்த வருத்தத்திற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஆகையினாலே பேச்சிலே ஒரு உண்மையான தத்துவம் இருக்க வேண்டும்.

அறிஞர் அண்ணா அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த ஆட்சியின் மாட்சி உயர வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்ச் சமுதாயத்திற்காக, இந்தத் தமிழ்ச் சமுதாயத்தின் மானத்தை, மரியாதையை உயர்த்துவதற்காகப் பாடுபட்ட தமிழ்த்தாயின் மூத்த குடிமகன் ஆவார்கள். தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா என்று அன்றைக்கு நாமக்கல்லார் பாடினார். அந்தப் பாட்டிற்கு ஏற்ற உருவத்தைக் கொடுத்து, தமிழனுடைய மானத்தை, உயர்வை, உணர்ச்சிகளைத் தூண்டி, தமிழனின் வாழ்வில் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மறைந்தும், மறையாத மாபெரும் தலைவரால் ஏற்பட்ட அந்தக் கழகத்தினுடைய ஆட்சியை இன்றைக்கு முடித்துவிட வேண்டுமென்பதற்காக தவறான குற்றச்சாட்டுகளைச் சொல்ல முயன்று கொண்டிருக்கிறார்கள். அவர் என்னுடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய நண்பர், அவரைப் போன்றவர்கள் போக வேண்டுமா என்பது என்னுடைய உண்மையான வேதனை. அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் எனக்கும் பங்கிருக்கிறது என்ற காரணத்திற்காக, இந்த ஆட்சியின் நோக்கம் நிறைவேறுகிற வகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி, தமிழனுடைய ஆட்சி இந்த நாட்டில் மலர வேண்டுமென்பதற்காக தியாகங்கள் செய்து, போராட்டங்கள் நடத்தி ஒரு சிலரில் நானும் ஒருவனாக இருந்தேன். அதில் என்னுடைய தம்பி காளிமுத்து ஒருவராக இருந்தார் என்ற காரணத்திற்காக அவர்

களுக்கெல்லாம் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் அண்ணா அவர்களின் உண்மையான தம்பிகளாக இருந்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்த ஆட்சியிலே மாட்சியை உயர்த்த வேண்டும்.

இன்றைக்கு 4½ கோடி மக்களின் நாயகராகிய அண்ணா அவர்களுடைய அருமைத் தம்பியாக இருக்கிற நம்முடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமே தவிர, ஏதோ சொந்த ஆசாபாசங்களின் அடிப்படையில் தமிழனின் ஒரே ஆட்சியான இந்த ஆட்சிக்கு முடிவு கட்டிவிட வேண்டுமென்று யாரோ ஒருவர் வந்து சொல்லிக் கொண்டிருக்கிறார் என்றால் அருமைத் தம்பிகளே, நான் அருமைத் தம்பி நண்பர் காளிமுத்து அவர்களைப் பற்றி சொல்கிறேன். —மற்றவர்களைப் பற்றிப் பேசவில்லை. காளிமுத்து அவர்களைப் பற்றி பேசுவதற்கு உரிமை இருக்கிறது. அதனால் பேசுகிறேன், காளிமுத்து போன்றவர்கள் எல்லாம்—

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, நாங்கள் எல்லாம் அவருடைய தம்பிகள் அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அண்ணனாகத்தான் இருக்க முடியும்.

திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, சொந்த ஆசாபாசங்கள் என்று சகோதரர் என்னைப் பற்றி பேசும்போது குறிப்பிட்டார்கள். நான் சொந்த ஆசாபாசங்களைக் கருதியிருந்தால் என் மேலே மிகுந்த பாசம் கொண்டு, எனக்கு எப்போதும் நன்மை செய்ய வேண்டுமென்று கருதுகிற முதலமைச்சர் அவர்களை எதிர்த்து நின்றிருக்க மாட்டேன். நாங்கள் கொள்கை அடிப்படையில் பிரிந்திருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, காலையிலிருந்து கொள்கை கொள்கை என்று உறுப்பினர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் மாநிலச் சுயாட்சிக் கொள்கை கைவிடப்பட்டது. எந்தக் கொள்கையை நம்பி அங்கே இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கா. காளிமுத்து: அந்தக் கொள்கையை விடவில்லை. மக்கள் சுயாட்சி என்பதைச் சேர்த்துக் சொல்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தயவு செய்து, நேரம் போனாலும் பரவாயில்லை, மக்கள் சுயாட்சிக்குப் பொருள் கூறும்படி அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கா. காளிமுத்து: மக்கள் சுயாட்சி என்பது, ஆளுகிறவர்கள் தவறு செய்தால் கூட திரும்ப அழைத்துக் கொள்ளக் கூடிய உரிமை ஐந்து ஆண்டுகளுக்குள்ளே கொடுக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரு கட்சியின் சார்பில் ஒரு சின்னத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அவர்கள் அந்த மக்கள் அவர்களைத் திருப்பி அழைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு அவர்கள் சொல்கிற சுயாட்சியில் இடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கா. காளிமுத்து: கட்சியின் சார்பில், சின்னத்தின் சார்பில் வாக்களித்த மக்களும், ஒத்துழைத்த தொண்டர்களும், பிரிந்த காரணத்தினால் அந்த அடிப்படையில் பிரிந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மக்கள் ஆதரிக்கிறார்களா இல்லையா என்பதை அவர்கள் பதவி விலகி மறுபடியும் தேர்தலுக்கு நின்று தான் தெரிந்து கொள்ளலாமே தவிர இப்படிச் சொல்வதில் பயன் இல்லை.

திரு. கா. காளிமுத்து: அடையாளத்திற்குத் திண்டுக்கல் தேர்தலை ஆக்கிக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாநில சுயாட்சியைக் கைவிடவில்லை என்கிறார்கள், ஆனால் மத்திய சர்க்கார் எல்லா வகையிலும் மாநில அதிகாரங்களில் தலையிடலாம் என்பது இன்றையத் தலைவருடைய வாதம். அண்ணா அவர்கள் மாநில சுயாட்சியைக் கெடுக்கிற வகையில் லோக் பால் இருக்கக் கூடாது என்று திரு சவான் அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். மாநில முதலமைச்சர், மற்ற அமைச்சர்களை விசாரிக்கிற உரிமை மத்திய அரசுக்குக் கிடையாது என்று கடிதம் எழுதினார்கள். அண்ணா பேரால் கேட்டுக் கொள்கிறேன். அதை ஏற்றுக் கொள்கிறீர்களா?

திரு. கா. காளிமுத்து: இன்றைக்கிருக்கிற அரசியல் சட்டப்படி அத்தகைய நிலையை நாங்கள் எதிர்பார்க்கிறோமே தவிர, சட்டமே மாற்றப்பட்டு நம்முடைய மாநிலத்திற்குத் தனியான சுயாட்சி வருவதற்குத் தடைக்கல்லாக இருந்து நாங்கள் எதிர்க்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1968-ம் ஆண்டு இங்கேயிருந்து மத்திய சர்க்காருக்கு எழுதிய கடிதத்தில் இப்போதிருக்கிற அரசியல் சட்டப்படியே இங்கிருக்கிற அமைச்சர்களை விசாரிக்கிற உரிமை கிடையாது என்று அண்ணா அவர்கள் திட்டவட்டமாக திரு. சவான் அவர்களுக்கு எழுதியிருந்தாகள். இதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்.

திரு. கா காளிமுத்து: தவறுகள் எல்லை மீறியிருக்கின்றன என்ற காரணத்தினால் தான் மத்திய அரசாங்கத்தின் தயவை நாட வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, மாநில சுயாட்சி கொள்கைக்கு மத்திய அரசாங்கம் அனுமதி தரவேண்டும். அப்படியிருக்க மாநில அரசோடு போராடி என்ன பயன் என்று கேட்கிறேன்?

THIRU R. PONNAPPA NADAR: The member may be allowed to speak. Let us not cross-examine each other; We are not in the witness box now.

MR. DEPUTY SPEAKER: This is just to save boredom.

திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு உறுப்பினர் காளிமுத்து அவர்கள் திண்டுக்கலில் சந்திக்கலாம் என்று சொன்னார்கள். சந்திக்கலாம், நிச்சயமாக அங்கே சந்திக்கலாம். மக்கள் அங்கே தீர்ப்புச் சொல்வார்கள், சந்தேகம் இல்லை. அங்கே சந்திக்கலாம். இன்றைக்குக் கூட அவர்கள் கட்சிக்குப் பெயர் வைத்திருக்கிறார்களே, அதை யோசனை செய்து பார்த்தேன். அவர்கள் அ. தி. மு. க. என்று பெயர் வைத்திருப்பது அறிவிப்பு தான். அதில் தொக்கி இருக்கிற பொருளை அறிந்துகொள்ள வேண்டும்.

சாதாரணமாகச் சொல்வார்கள்—'லூ யி தி கிரேட்' என்று. அதே போன்று 'அ 'தி' மு. .க.' என்று தான் ஆகும். ரஷ்யாவின் தத்துவம் என்ன என்று கேட்டால் 'மார்க்ஸைப் பாருங்கள்' என்று சொல்லப்பட்டதாம். அதே போன்று அண்ணா தி.மு..க. என்றால் அண்ணா 'தி' மு. கருணாநிதி என்றுதான் ஆகும். தெரிந்தோ, தெரியாமலோ அப்படிப் பெயரை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காலையில் ஹக்கீமைப் பற்றிச் சொன்னார்கள். அந்தக் கட்சியின் தலைவராக இருக்கிற மதிப்பிற்குரிய எம். ஜி. ஆர். அவர்கள் அண்மையில் அந்தப் பகுதியில் பேசி இருக்கிறார். அந்தக் கூட்டத்தில் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூடக் கலந்து கொண்டார்கள் என்று கேள்விப் பட்டேன். 'ஹக்கீம் என்பவர் ஒரு முஸ்லீம், ஒரு முஸ்லீம் தாக்கப்பட்டிருக்கிறார், ஆண்டவன் ஒருவனுக்குத்தான் பயப்படுவது என்பது இஸ்லாம் தத்துவம். ஆனால் பயந்து கொண்டு முஸ்லீம் தோழர் தாக்கப்பட்டதற்கு ஒரு அனுதாப வார்த்தை முஸ்லீம் லீக் தெரிவிக்கவில்லை' என்று மணியான கருத்துக்களை எம். ஜி. ஆர். அவர்கள் சூளைப் பகுதியில் சொல்லி இருக்கிறார்கள். முஸ்லீம் ஹக்கீம் தாக்கப்பட்டால்தான் லத்தீப்பும், ஜப்பாரும் கவலைப்பட வேண்டுமா? ஏன் அவர் அப்படிக் கேட்கிறார்? முஸ்லீம் லீகைப் பொறுத்தவரை ஹக்கீம் மீதோ, ஹாண்டே மீதோ, ஹரிகரன் மீதோ அநியாயம் நடந்ததென்றால் நிச்சயமாகக் கேட்போம். அப்படிக் கேட்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஏதோ ஒரு வகுப்புவாத முறையில் தனியாகப் பத்திரிகையில் செய்தியைப் போட்டு 'முஸ்லீம் லீக்கினர் கேட்கப் பயப்படுகின்றார்கள், இன்னாருடைய தயவு தேவை இருக்கிறது' என்று பேசுவது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் எம். ஜி. ஆர். பேசியதைப் பார்த்துக் கவலைப்படவில்லை. கோபப்படவில்லை. அவர்களுக்குத் தெரிந்த அரசியல் அதுதான். அவர்களுடைய அரசியல் என்ன என்பதே தெரியாமல் இருக்கும்போது முஸ்லீம் லீக்கின் அரசியல் கொள்கை என்ன என்பதை அவர்கள் தெரிந்திருக்க நியாயம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: எம். ஜி. ஆர். இங்கு ஒரு கட்சியின் தலைவராக இருக்கிறார். ஒரு கட்சியின் தலைவரைப் பார்த்து கொள்கை இல்லாதவர் என்று ஒரு உறுப்பினர் பேசலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள் கூடப் பாண்டிச்சேரியில் பேசும்போது அண்ணா தி.மு.க.வுக்குக் கொள்கை இல்லாவிட்டாலும் மக்கள் ஆதரவு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

திரு. கே. டி. கே. தங்கமணி: வெளியே பேசியதைப் பற்றிக் கவலை இல்லை. இந்த இடத்தில் குறிப்பிட்ட கட்சி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் கட்சியின் தலைவரைப் பற்றி அப்படிப் பேசலாமா?

திரு. எம். ஏ. லத்தீப்: காலையில் இந்தப் பிரச்சினை வந்தது. அது வரும்போது மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் அப்போதே எழுப்பியிருப்பார்களானால் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். அவர்களுக்குப் பதில் சொல்லக்கூடிய வகையிலேதான் எம். ஜி. ஆர். அவர்களுக்கு இந்தப் பதிலைச் சொன்னேனே அல்லாமல் வேறல்ல. ஹக்கீம் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். ஏன் தாக்கப்பட்டார்? அங்கு நடந்தது என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அங்கு கோஷாப் பெண்கள் இருந்தார்கள். முதியவர் ஒருவர் இருந்தார். கோஷா பெண்கள் இருந்த வீட்டில் போலீஸ்காரர்கள் நுழைந்து பலாத்காரம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. அவர்கள் ஒரு துண்டு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். தங்களுடைய அனுமதியோடு படிக்கிறேன். அதில் சொல்லப்பட்டிருக்கின்ற ஒரு வாசகத்தை மட்டும் படிக்கிறேன். மற்ற விவகாரங்கள் தேவையில்லை. அதில் இருக்கும் வாசகங்கள் இந்த அவையின் கவுரவத்தைக் குறைக்கும் வகையில் இருப்பதால் முழுவதையும் படிக்க விரும்பவில்லை.

திரு. க. சுப்பு: அனுமதி வாங்கிவிட்டாரா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காலையில் கனம் உறுப்பினர் என்னிடம் காட்டினார். நான் அதைப் படித்துப் பார்த்துவிட்டு, முழுவதையும் படிக்க வேண்டாம், குறிப்பிட்ட சில வரிகளை மாத்திரம் படிக்கலாம் என்று அனுமதி கொடுத்தேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: அதை வேண்டுமானாலும் நண்பர் சுப்பு அவர்களுக்குக் கொடுத்து விடுகிறேன்.

"கருணாநிதியின் கைப்பொம்மைகளின் கால்களில் விழுந்து கெஞ்சிய பெண்களையும் பூட்ஸ் கால்களால் உதைத்திருக்கிற காட்சி இந்தக் கருணாநிதி காலத்தில்தான் நடந்திருக்கிறது. அது மட்டுமில்லை. அக்கீம் அவர்களும் அவரது நண்பர்களான இயக்கத் தோழர்கள் ஜெயராமன், பட்டாபி, சின்னி கிருஷ்ணன், வேலைக்காரர் கேசவன் ஆகியோர் தூங்கிக் கொண்டிருந்த கதவை இடித்து உடைத்து . . . . ." என்று அந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது.

கோஷாப் பெண்கள் இருந்தார்கள் என்று இந்த அறிக்கையில் சொல்லுகிறார்கள். கேசவன் அந்த வீட்டில் இருந்தார். சின்னி கிருஷ்ணன் இருந்தார். பட்டாபி இருந்தார். ஜெயராமன் இருந்தார். கோஷாப்

பெண்கள் இருக்கும் இடத்தில் கேசவனுக்கும், சின்னி கிருஷ்ணனுக்கும், பட்டாபிக்கும், ஜெயராமனுக்கும் என்ன வேலை? அதுவும் இரவு நேரத்தில் என்ன வேலை என்று கேட்க ஆசைப்படுகிறேன். எங்களுடைய கோஷாப் பெண்களுக்கு இந்தக் கட்சிக்காரர்கள் அபகீர்த்தி ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டு செய்த செயல் என்றே கருதுகிறேன். ஆகவே, நீங்கள் ஏன் கேட்கவில்லை என்று கேட்கிற பிரகஸ்பதிகளுக்குச் சொல்லிக் கொள்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கு நான்தான் பிரகஸ்பதி.

திரு. க. சுப்பு: இது யாருடைய ஸ்டேட்மெண்ட்? இது சம்பந்தமாக கோர்ட்டில் வழக்கு இருக்கிறதா? வழக்கு இருந்தால் இதைப் பற்றிப் பேசுவது வழக்கைப் பாதிக்காதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சப்ஜுடிஸ் என்று கூறுகிறீர்களா? நண்பர் லத்தீப்புடைய ஆர்க்யூமெண்ட் கோஷாப் பெண்கள் இருக்கும் இடத்தில் இவர்களுக்கு இரவில் என்ன வேலை என்பது. இது சப் ஜுடிஸ் ஆகாது.

THIRU R. PONNAPPA NADAR: It is better if members just rise up and try to speak. Otherwise, it will not be in good taste.

திரு. எம். எ. லத்தீப்: இந்தப் பிரச்சினை சப்ஜுடிஸா என்ற பிரச்சினையை மாண்புமிகு சுப்பு அவர்கள் எழுப்புகிறார்கள். . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சப்ஜுடிஸ் என்றால் எடுத்துச் சொல்ல வேண்டும். என்னிடம் கேட்டால் எப்படித் தெரியும்?

திரு. க. சுப்பு: இதிலே வழக்கு இருக்கிறது என்றால் இதைப் பற்றிப் பேசக் கூடாது. இதிலே வழக்கு இருக்கிறதா இல்லையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வழக்கு இருக்கிறதா என்பதற்கு யார் பதில் சொல்லுவது?

திரு. க. சுப்பு: ஹக்கீம் தாக்கப்பட்டிருக்கிறார். வழக்கு போடப்பட்டிருந்தால் இங்கே பேசுவது வழக்கைப் பாதிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வழக்கு போடப்பட்டிருக்கிறதா என்று உறுப்பினர்தான் கூற வேண்டும். அதைக் கூறாமல் பிரச்சினையை எழுப்பினால் எப்படி?

டாக்டர் எச். வி. ஹாண்டே: இது என்னுடைய தொகுதியில் நடந்தது வழக்குப் போட்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, வழக்கைப் பாதிக்கும் அளவுக்கு....................

திரு. துரைமுருகன்: தகவலை வைத்துச் சொல்லக் கூடாது. எனக்குத் தகவல், செய்தி என்ற வகையில் பேசுவதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சப்-ஜுடிஸ் என்றால் இந்த விஷயம் வழக்கில் இருக்க வேண்டும். இதுச் சம்பந்தப்பட்ட வழக்கு இருக்க வேண்டும். வழக்கு இருக்கிறதா இல்லையா என்று யாரும் சொல்லமாட்டேன் என்கிறார்கள். என்னைக் கேட்கக் கூடாது. நான் இல்லை என்று தான் சொல்லுவேன்.

டாக்டர் எச் வி. ஹாண்டே: வழக்கு இருக்கிறது என்பது முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறார்.

THIRU K. SUPPU: On a point of order, Sir, I have raised a point of order. On that the Chair has not given a ruling. I think a case would have been registered and that has been raised in this House.

வழக்கு இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் கூடச் சொல்லுகிறார்கள். முதலமைச்சர் சொல்லமாட்டேன் என்கிறார். வழக்கு இருக்கிறது என்று அந்த உறுப்பினருக்கே தெரியும். சட்டசபையைப் பாதிக்கும் அளவுக்கு அவர் பேசுவதற்கு நீங்கள் அனுமதி கொடுக்கக் கூடாது. நிச்சயமாக இதிலே வழக்குப் போட்டிருப்பார்கள் என்பது என்னுடைய நம்பிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஸப் ஜுடிஸ் என்றால் கேஸ் கோர்ட்டில் இருக்க வேண்டும். கோர்டில் வழக்கு இருக்கிறதா இல்லையா என்பது எனக்கு எப்படித் தெரியும்? திடீரென்று அமைச்சர்களைப் பார்த்து கேஸ் இருக்கிறதா இல்லையா என்று கேட்டால் எப்படிச் சொல்ல முடியும்.? பிற்பகல் 4·30

திரு. க. சுப்பு: லத்தீப் அவர்களுக்குத் தெரியும். அப்படித் தெரிந்திருந்தும் அவர் சபையை மிஸ்லீட் செய்யக்கூடாது. அதற்கு நீங்கள் பெர்மிஷன் கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுத்தால் அது தப்பு.

டாக்டர் எச். வி. ஹாண்டே: வழக்கு போட்டிருப்பது எனக்கு நன்றாகத் தெரியும். அஷ்டபுஜம் ரோடில் இருக்கிறது அந்த வீடு. எனக்கு நன்கு தெரியும் என்று நான் கூறுகிறேன். வழக்கு போடப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் அதைப் பற்றி பேசுவதற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் எங்களுக்கும் அதைப் பற்றிப் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

திரு. நா. வீராசாமி: வழக்கு போட்டிருப்பதாக டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறினார்கள். ஆனால் அந்த வழக்குக்கும் உறுப்பினர் அவர்கள் படிக்கிற துண்டு அறிக்கைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அங்குள்ளவர்கள் ஒரு துண்டு அறிக்கை போட்டிருக்கிறார்கள். இதில் சில செய்திகள் என்னென்ன நடந்திருக்கின்றன என்பதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக இந்தத் துண்டு அறிக்கைக்கும் இந்த வழக்குக்கும் என்ன சம்பந்தம் என்பதைப் பற்றி தாங்கள் ரூலிங் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: அந்தத் துண்டு அறிக்கையில் உள்ள செய்திகளுக்கும் வழக்குக்கும் சம்பந்தம் இருக்கிறது. வழக்கு இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றிக் கூறுவதற்கு அமைச்சர்கள் இருக்கிறார்கள். சபாநாயகர் அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அவர்களைக். கேட்கலாம் அது பற்றி அந்த அதிகாரத்தை தாங்கள் பயன்படுத்தலாம். வழக்கு போடப்பட்டிருக்கிறதா இல்லையா என்று அவர்கள் சொல்லாமல் இருப்பதில் என்ன அர்த்தம் என்று கேட்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: He is just provoking me, Sir

திரு. துரைமுருகன்: முதல் அமைச்சர் அவர்களுக்கு போடப் பட்டிருக்கிற வழக்குகளை பற்றி, எல்லா வழக்குகளையும் பற்றி எப்படி......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி நீங்கள் இரண்டு மூன்று பேர்கள் ஒரே சமயத்தில் எழுந்து நின்று பேசினால் அவை குறிப்பேட்டில் ஏறாது.

நீங்கள் மூன்று பேர்களும், திரு துரைமுருகன், திரு லத்தீப், திரு சுப்பு மூன்று பேர்களும் வழக்கறிஞர்கள். நல்ல வேளை வீராசாமி அவர்கள் வழக்கறிஞராக இல்லை. இப்போதுள்ள பிரச்சினை என்ன வென்றால், வழக்கு கோர்ட்டில் இருக்கிறதா என்பதாகும். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்கிறார்கள். வழக்கு கோர்ட்டில் இருப்பதாக. திரு லத்தீப் அவர்கள் இந்தப் பிரச்னையை எழுப்பும்போது ஹக்கீம் என்ற ஒருவர் வீட்டில் போலீஸார் நுழைந்து தாக்கினார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். போலீஸார் நுழைந்து தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டு எப்படி வழக்காக முடியும்? ப்ரைவேட் கம்ப்ளெயின்ட் கொடுத்திருந்தால் அது வழக்காக......

திரு. க. சுப்பு: அது ராங்க் ரூலிங்காகப் போகக் கூடாது......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது ராங்க் ரூலிங் அல்ல. வழக்கு கோர்ட்டில் இருக்கிறதா இல்லையா? என்ன வழக்கு இருக்கிறது? என்ன செக்ஷனின்கீழ் போடப்பட்டிருக்கிறது? இதைப் பற்றித் தெளிவாக..

திரு. க. சுப்பு: I know,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படியானால் ஒரு பிரதி கொண்டு வாருங்கள். யார் அக்யூஸ்ட் என்று சொல்லுங்கள்.

Thiru K. Suppu: I am a responsible member. I am saying Dr. Hande knows it.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் அந்தத் தொகுதி உறுப்பினர். வழக்குப் போட்டிருப்பதாக ஹாண்டே அவர்கள் சொல்கிறார்கள். யார் யார் மீது—பிராஸிக்யூஷன் வழக்கு போட்டிருக்கிறதா? அல்லது போலீஸார் மீது ப்ரைவேட் பார்ட்டி வழக்குப் போட்டிருக்கிறார்களா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்த மன்றத்தில் இதை ஒரு முக்கியமான ஒழுங்குப் பிரச்சினையாக நான் கிளப்புகிறேன். . நாம் சில விஷயங்கள் பற்றிப் பேசுகிறோம். சில வழக்குகள் பற்றிப் பேசுகிறோம். சில குறிப்பிட்ட நபர்கள் தாக்கப்பட்டதுபற்றி இங்கு பேசுகிறோம். அமைச்சர்களுக்கு நல்ல வகையில் ஒரு அட்வான்டேஜ் இருக்கிறது. உடனடியாக அவர்கள் எழுந்து இந்த கேஸ் வழக்கு மன்றத்தில் இருக்கிறது, ஆகவே இது சப் ஜூடிஸ் என்று சொல்கிறார்கள். இந்த விஷயம் பற்றி எந்த செக்ஷன் கீழ் கேஸ் போட்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியும். போலீஸ் இலாக்கா சார்பாக அந்த—இலாக்காவின் பொறுப்பு முதல் அமைச்சர் அவர்களிடம் இருக்கிறது—எனது தகவல்படி ஹக்கீம் மீது வழக்குப் போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதே பிரச்னை பற்றி நீங்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்ததாக எனக்கு ஞாபகம்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே: கவர்னர் உரை மீதுள்ள விவாதத்தின்போது கூறினேன். ஹக்கீம் மீது வழக்குப் போட்டிருக்கிறார்கள் என்பது எனக்குள்ள தகவல். ஹக்கீமை அவர்கள் இல்லத்திற்கு வந்து போலீஸார் தாக்கினார்கள் என்பது எங்கள் குற்றச்சாட்டு. அதற்கு முதலமைச்சர் அவர்கள் கவர்னர் அவர்கள் உரையின் மேல் நடந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கும் போது ஒரு வார்த்தை கூட அந்தப் பதிலில் இதைப் பற்றிச் சொல்லவில்லை. நாங்களும் வற்புறுத்திக் கேட்கவில்லை. மட மட என்று சொல்லி முடித்து விட்டார்கள். இப்போது ஹக்கீம் மீது வழக்குப் போட்டிருப்பதால் அவர்கள் டிபெண்ட் செய்து கொள்கிறார்கள். தவறான வழக்கு என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனது குற்றச்சாட்டு, போலீஸார் அத்துமீறிப் போயிருக்கிறார்கள் என்பதாகும். நான் சொல்வது இப்போது அவர்களுக்கு முழுக்க முழுக்க இதைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தால் அவர்கள் பேசலாம். என்னைப் பொறுத்த வரையில் அப்படி அவர்கள் பேசுவதற்கு அனுமதி கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை. எனக்கும் அதைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்றுதான் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். முழுக்க முழுக்க எல்லோருக்கும் பேசுவதற்கு வாய்ப்பு கொடுங்கள்.

திரு. எம். சுரேந்திரன்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர், இப்படி எல்லோரும் பேச ஆரம்பித்தால் என்னவாகிறது?

திரு. எம். சுரேந்திரன்: பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், தலைவர் அவர்களே, இங்கு விவாதம் நடந்து கொண்டிருப்பது போலீஸ் மானியத்தின் மீது இங்கு போலீஸ் ஆபீஸர்கள் எல்லாம் இருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். இங்கு ஒரு கேஸ் இருக்கிறதா

இல்லையா என்ற ஒரு ஆராய்ச்சி எழுகிற நேரத்தில் ட்ரஷரிபெஞ்சில் இருப்பவர்கள் பேசாமல் அமர்ந்து கொண்டு இருப்பது உறுப்பினர் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுப்பதற்கான ஒரு வாய்ப்பாக இதைப் பயன்படுத்துவது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

(பல குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி ஒரு வழக்கு இருப்பதாக அந்தத் தொகுதி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்கிறார்கள். அதை இங்கு உண்மை என்று ஏற்றுக் கொள்வதில் தவறு இல்லை. அதனால் அந்தப் பிரச்னையை அப்படியே விட்டுவிட்டு வேறு பிரச்னையைப்பற்றிப் பேசுங்கள்.

THIRU K. Suppu: Dr. Hande says there is a case. If so, it is sub-judice.

அப்படியிருந்தால் அது "சப் ஜுடிஸ்" ஆகும். அப்படி சப்-ஜுடிஸாக இருக்குமானால் அவர்கள் சொன்னதை, அதைப் பற்றிச் சொன்னதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு சுப்பு அவர்கள் ஒரு பாயின்ட் ஆர்ப் ஆர்டரை எழுப்பித் தீர்ப்புக் கேட்கிறார்கள். அவர் ஓர் வழக்கறிஞர். வழக்குக்கு ஆதாரம் இல்லாமல் ஹாண்டே அவர்களை உதவிக்குக் கூப்பிடுகிறார்கள். ஹாண்டே அவர்கள் சொன்னதை வைத்து உறுப்பினர் அவர்களின் உரிமையில் தலையிடும் அளவிற்கு என்னை இழுத்து விட்டு தீர்ப்புக் கூறுங்கள் என்று சொல்வது என்றால் அவர்கள் சரியாக வாதாடவில்லை. முதல் அமைச்சர் அல்லது வேறு அமைச்சர்களைக் கேட்கச் சொல்கிறார்கள். நான் எப்படி அவர்களைக் கட்டாயப்படுத்துவது? நீங்கள் போய் ஐந்து மணிக்குள் வழக்கின் விவரங்களைக் கொண்டு வாருங்கள் என்று நான் கட்டளை இட முடியாது. நான் அப்படி யாருக்காவது கட்டளை இட முடியுமா?

(உறுப்பினர்கள் பலர் இருக்கைகளில் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு மன்னை திரு ப. நாராயணசாமி: தயவு செய்து சபாநாயகர் அவர்கள் எழுந்து நிற்கும்போது மற்றவர்கள் உட்கார வேண்டிய நாகரீகத்தைக் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அவர்களும் எழுந்து பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம். சபாநாயகர் அவர்கள் எழுந்து நிற்கும்போது மற்றவர்கள் உடனே உட்கார வேண்டும். மூன்றுபேர்கள் பேசிக்கொண்டிருப்பது நல்லதல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த ஒழுங்குப் பிரச்னையில் வழக்கு இருக்கிறதா இல்லையா என்ற கேள்வி இருக்கிறது. திரு பொன்னப்ப நாடார் அவர்கள் அது சப்-ஜுடிஸ் ஆகிவிடுமோ என்று பயப்படுகிறார். திரு லத்தீப் அந்த விஷயத்தை விட்டு விட்டு மேற்கொண்டு பேசுங்கள்.

திரு. க. சுப்பு: வேறு விஷயத்திற்கு எப்படிப் போக முடியும்?

திரு. துரைமுருகன்: வழக்கு இருக்கிறதா என்று முதலமைச்சரைக் கேட்கிறார். அதற்குச் சப்போர்ட்டுக்கு ஹாண்டே அவர்கள் வருகிறார். வழக்கு இருக்கலாம் என்று சொல்கிறார்கள். வழக்கு இருக்கிறதா, இல்லையா என்று அவர்களால் தெளிவாகச் சொல்ல முடியவில்லை. வழக்கு இருந்தால் இன்ன கோர்ட்டில் இன்ன கேஸ் நம்பரில் இருக்கிறது என்று சொல்ல வேண்டும். அது சரியாகத் தெரியவில்லை. அப்படி இருக்கும்போது அது எப்படி சப்-ஜுடிஸ் ஆகும்? நான் அதை ஒப்புக் கொள்ளவில்லை. நான் கூடப் பல விஷயங்களைக் கேட்டுவிட்டு, முதலமைச்சர் அவர்களிடத்தில் அப்படியிருக்கிறதா சொல்லுங்கள் என்று கேட்கலாம். முதலில் வழக்கு இல்லை என்று சொன்னார். பின்னர் தெரியும் வழக்கு இருக்கிறது என்று சொன்னார். அவைக்கு உறுப்பினர் அவர்கள் பொய்யான தகவலை—மன்னிக்கவும்—தவறான தகவலைத் தந்து இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(திரு. எம். சுரேந்திரன், திரு. க. சுப்பு நின்று கொண்டே பேசிக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

திரு. க. சுப்பு: பாயின்ட் ஆப் ஆர்டர். பாக்ட் பைண்டிங் கமிட்டியில் இருப்பதைப் பற்றியே பேசக் கூடாது என்று சொல்லிவிட்டீர்கள். இப்போது பேசலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் பெரிதாக இருக்கக் கூடாது.

திரு. க. சுப்பு: நான் சொல்வது கட்சிப் பிரச்சினை அல்ல. நான் சொல்வதெல்லாம் அவர்கள் ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். அதைக் காட்டி அனுமதி வாங்கிக் கொண்டு தான் பேசினேன். அனுமதி கொடுக்கப்பட்டது என்றால் அதைப் பரிசீலித்து பிறகுதான் கொடுக்கப்படுகிறது என்று எடுத்துக் கொள்ளலாம். திரு. லத்தீப் அவர்களின் வாதம் சரியான வாதம் அல்ல. விரிவான வாதமாகப் போகிறது. அது கோர்ட்டில் இருக்கும் வழக்கைப் பாதிக்கும் என்பதால், அது சப்-ஜுடீஸ் ஆகிவிடும் என்பதால் அதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே முதலமைச்சர் இருக்கிறார். ஒரு விஷயத்தைப் பற்றித் தவறாகச் சொல்வது என்பது வேறு. தெரிந்து கொண்டே அந்த விஷயத்தைப் பற்றி சொல்லாமல், அதை வித்ஹோல்ட் செய்வது—முதலமைச்சர் அவர்களுக்கு வழக்கு போடப்பட்டிருக்கிறதா இல்லையா என்பது தெரியும். தெரிந்து கொண்டே சும்மா இருப்பது—கண்டம்ப்ட் ஆப் தி ஹவுஸ் என்று ஆகும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: May I say one thing, Sir? Dr. Hande has been saying that there is a case pending and he says that it may be that the defence of Mr. Hakkim may be prejudiced in case a discussion is allowed at length. I think it is better to drop this at this

stage without any further arguments. As a lawyer my with experience, once again, I appeal to the good sense of Hon. Members not to speak about the merits of the case which might prejudice Mr. Hakkim's case in which he is the accused.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, சப்-ஜுடிஸ் மேட்டர் பேசக் கூடாது என்பதிலே எல்லோருக்கும் இருக்கும் அக்கறை எனக்கும் உண்டு. பல தடவை நானே ஒப்புக் கொண்டு பேசியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கேஸ் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லி, இருந்தால் அவர்களுடைய வாதத்தை ஏற்றுக்கொண்டு இருப்பேன். (குறுக்கீடு) அது எல்லாம் நல்ல முறையல்ல. ஏற்கெனவே கேஸ் போடப் பட்டிருக்கும் என்று அனுமானிக்கலாம். அந்த அடிப்படையில் அது பாதிக்கக்கூடியதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். கேஸ் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் எந்தக் கோர்ட்டில் இருக்கிறது என்று சொல்ல வேண்டும். எனக்குக்கூடத் தெரியும் என்று சொல்கிறார்கள். நான் உண்மையைச் சொல்கிறேன். நிச்சயமாக எனக்குத் தெரியாது. அ. தி. மு. க. உறுப்பினர்கள் காலையில் இந்தப் பிரச்சினையைப் பேசியதால் நான் இப்போது பேசினேன். ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்று சொல்வது நல்ல முறையில் இருக்காது என்று சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். 19-வது வட்டத்தில், அந்த நோட்டீஸை எடுத்து வந்து நான் பேசுகிறேன். ஊர் உலக மெல்லாம் பேசுகிறது, நான் பேசக்கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. லத்தீப் அவர்கள் வழக்கறிஞர். துண்டுப் பிரசுரம் போடுகிறவர்களை அழைத்து வந்து இங்கே கேள்வி கேட்க முடியாது. சட்டமன்றத்தில் பேசுவதற்குச் சில விதிமுறைகள் உண்டு. வெளியே பேச உரிமை இருக்கலாம். வெளியே துண்டுப் பிரசுரம் போட்டு இருக்கிறார்கள், அதனால் இங்கே பேசக் கூடாதா என்று கேட்கக் கூடாது.

திரு. எம். ஏ. லத்தீப் : காலையில் அந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. அதைப்பற்றி நான் பேசுகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவர் தீர்ப்புக் கொடுத்த பிறகு பேசலாம்.

THIRU R. PONNAPPA NADAR : Why should the hon. Member take on his head the responsibility for it ? Let us leave it at this.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தப் பிரச்சினையை விட்டு விட்டு நேரடியாக வேறு விஷயத்திற்குச் செல்லுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : அந்த விஷயத்தை அத்தோடு விட்டுவிடுகிறேன். இப்படி நடப்புக்கு விரோதமாக, அரசின்மீது கள்ளமும், உள்ளங்களில், எண்ணங்களில் களங்கமும் வைத்துக் கொண்டு இருக்கும்சிலர் இத்தகைய கருத்துக்களைச் சொல்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். அது மட்டு மல்ல. இந்த விவகாரத்தில், அவர்கள் சொல்கிறார்கள் முஸ்லீம் லீக் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. அது மிக மிக முரண்பட்ட கருத்தாகும்.

முஸ்லீம்கள் எப்போதும் நியாயமாக வாதாடுகின்ற கட்சி, அவர்கள் ஆளுகின்ற கட்சியிலே இருப்பவர்களை நாடிச் சென்ற வரலாறு கிடையாது. அப்படி ஆட்சியிலே இருக்கிறவர்களுக்கு அவர்கள் ஆதரவு கொடுக்க வேண்டியது, இந்தியாவைப் பூராவும் ஆண்டு கொண்டிருக்கிற இந்திரா காங்கிரஸ் கட்சிக்குத்தான் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஆதரவு கொடுத்திருக்க வேண்டும். வேறு யாருக்கும் ஆதரவு கொடுத்திருக்க மாட்டார்கள்.

அப்படிப் பேசுவது பொறுப்பற்றத் தன்மை என்ற கருத்தைச் சொல்லி, ராமபட்டணத்தில் என்னுடைய பெயர் கொண்ட ஒருவர் லத்தீப் என்று பெயர் அவர் கொல்லப்பட்டார் என்று கேள்விப்பட்டதும், ஐயோ லத்தீப் என்று அதைப் படித்து விட்டு, நம்முடைய லத்தீப்புக்கு என்ன ஆகிவிட்டது என்று என்னிடத்தில் வந்து கேட்டார்கள். மூன்று தினங்களுக்கு முன்பு தான் அந்த மனிதனை நான் பார்த்தேன். மிக அமைதியான மனிதன். மிகப் பதவிசாக கல்லாப் பெட்டியில் உட்கார்ந்து கொண்டு வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது, அவனைக் கல்லாப் பெட்டியிலிருந்து மீண்டும் எழுந்து வராதபடி அவனுடைய குடலை எடுத்து காட்டுமிராண்டித்தனமாக இத்தகைய கொடுமைகளைச் செய்து இருக்கிறார்கள். இங்கேயிருக்கும் எதிர்க் கட்சிகள் ஏன் அதைக் கண்டிக்கக் கூடாது என்று கேட்கிறேன். போலீஸ்காரர்கள்—இந்தச் சமுதாயத்தில் ஒரு துறை. அந்தப் போலீஸ்காரர்கள் நாட்டில் இருக்கும் சிலபேர்களைப் பாதிக்கும் நடவடிக்கைகளை எடுக்கிறபோது அவர்கள் நடவடிக்கை ஜனநாயக முறையில் இருக்கும் என்று கூறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியத்தை நான் முழுமையாக ஆதரித்து, இந்தியா பூராவிற்கும் வழிகாட்டியாகக் கொண்டிருக்கும் தமிழ் நாடு போலீஸ் துறை, இந்தியாவிற்கு மட்டுமல்ல, வளர்ந்து வரும் பல நாடுகளுக்குச் சிறந்த போலீஸ் துறையாக பெற்று சிறந்த போலீஸ் நிர்வாகமாக பெற்று, சிறந்த போலீஸ் அமைப்பாக பெற்று, சிறந்த மாட்சிமையோடு செல்லும் நாடு தமிழ்நாடு, என்று உலகம் போற்றும் இந்தப் போலீஸ் துறையை நானும் பாராட்டி, அந்த மானியத்தை வரவேற்று அமைகிறேன்.

DR. H.V. HANDE : Mr. Deputy Speaker, Sir, the Tamil Nadu police has had a very distinguished record for the past several decades. In fact, if we have to compare them with the police of the rest of the country, I think, they stand almost the first. In a number of instances and in a number of contexts, they have shown that they have acquitted themselves with a remarkable degree of efficiency. For instance, in the All-India Duty Meet, the Tamil Nadu Police has come out the First. For the past four or five years, they have won about seven gold medals. With regard to traffic, I think our police are almost the best in India, second to none. In fact, if I am allowed to make out a point, I will have to say that the Hon. Chief Minister or the Government is not giving adequate importance to the traffic department. It has to be given more importance and more care has to be shown to see that the amenities that the traffic department seeks from the Government are fully met.

Then, with regard to bandobust during visits of dignitaries, they have [d]one it with remarkable efficiency. Recently, during the Cricket Match, [t]hey have unearthed quite a number of cases of black-marketing in tickets [a]nd they have exposed many. What action has been taken further [w]ith regard to them is not known.

The police Sub-Inspectors have sought for increase in pay and the Hon. Chief Minister had promised in his last speech to grant their request. But nothing seems to have been done about it.

And then with regard to the Fire Service, a number of recommendations have been made, bifurcation of Madras into North and South and bifurcation of Tiruchirappalli and Thanjavur as separate district and gearing up of the whole Fire Service. We are building in Madras City Multistoried buildings, under the Slum Improvement Board and other departments. My information is that proper equipment which they require for reaching the top-most storey are not there. All these things should be gone through.

I am prefacing my speech saying that such an excellent police force has been evolved during the last few decades by several other Governments and that police force has been handed over to our distinguished Chief Minister. My question is what has he done with such a police. That is the fundamental point.

Unfortunately I have to say that this excellent police force that has been put into the hands of our distinguished Chief Minister has been in several ways completely destroyed and my only point is before total destruction of the morale of police takes place, we have all to come together and take correct decisions, forgetting party affiliations.

All sections of the House have to look at the problem in an objective way and not in a partisan way. When our present Chief Minister was Deputy Leader of DMK in this House and was sitting in the opposition, he had levelled charges against the Hon. Chief Minister then. He had also mentioned in one of his speeches (I have got the records) that the Government of the day cannot compliment itself because due to the police firing number of people had died. He cited the number of cases of police firing as 117 in 1965.

Our present Chief Minister, as member of the Opposition, then, took the Government of the day to task and said:

"விவசாயத் துறையில் ஜாஸ்தியாக இருக்கலாம். மற்றதில் இருக்கலாம். இதில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல"

That is what he said. The same argument I am placing before the Hon. Chief Minister now. I am paying him in his own coin. I have to give him this information. The number of cases in 1970 is 24,898. In 1971, it increased to 25,830, an increase of 932. In 1972, it increased to 26,080, an increase of 250. What is the cause? Will the Hon. Chief Minister defend himself. I put him in the dock. He is responsible for the increase in this number.

Regarding communal clashes it was 4 in 1971 and it is 39 in 1972.

In regard to agricultural clashes, it was 'nil' in 1971 and 17 in 1972. The number of persons who sustained injuries is 235 in 1972.

Our Hon. Chief Minister is extremely fond of using tear gas. The number injuries due to tear gas is 17 in 1972. Remarkable performance of our distinguished Chief Minister. It is an irony. With great anguish and sorrow I have to say this. This is not matter to be laughed at.

Number of deaths due to police firings is 12. Is it not a disgrace on the Government, on the Chief Minister that 12 people had died due to police firing.

I have great affection for our Chief Minister. But that is different matter. When 12 people had died to police firing, I charge the Chief Minister as wholly responsible for the death of 12 persons. I cannot charge anybody else. He has created conditions whereby police firing had tobe resorted to. The way in which his partymen instructed the policemen to fire at Peddanaickenpalayam, after getting into police lorry, is kown to us. It was because it was engineered by your partymen, the police firing had to be resorted to. I charge the Chief Minister for this.

In Manamadurai one person, in Virudhunagar one person, in Sattur one person, in Koilpatti two persons and in Vettahalagundu eight persons died. In Vridhachalam one person was killed. Number of deaths had taken place like this.

This is the way in which the Hon. Chief Minister had handled the administration of the State. This is a very sorry tale for which no other person can be blamed. I am surprised at the compliments paid. I challenge any member whether he can complement any one for having caused the deaths of these 12 persons.

Thiru V. KRISHNAMOORTHI (Nellikuppam): When opposition leaders started agitations setting fire to police jeeps and lorries and trying to kill police people, are not the police entitled to open fire as self-defence. How is the Chief Minister responsible for it?

Dr. H. V. HANDE: In other words my distinguished friend Thiru Krishnamoorthi is defending indirectly the fact that the 12 people had died. The same argument of Mr. Krishnamoorthi was advanced from that point in 1965 when Mr. Bakthavatsalam was Chief Minister. But it was then stoutly refuted. The records show the position. I have got the records. The present Chief Minister, had challenged at that time that the Government of the day was responsible for this. Paying them in their own coin, I now say the Chief Minister is responsible for this. Even Mr Krishnameorthi is responsible for this.

THIRU V. KRISHNAMOORTHI: I really endorse and accept. We charged that the Hon. Mr. Bhakthavatsalam instructed to open fire on Hindi agitators. But that is not the case here. The agitators attack police lorries and trying to kill police personnel and and in self-defence the police had to open fire. What is wrong in that ? How is the Chief Minister responsible?

DR. H. V. HANDE: It is rather curious that the Chief Minister disowns responsibility. This is not an ordinary matter.

Mr. DEPUTY SPEAKER: The hon. Members threw a challenge to each Member. That is how all this had started. We have got only limited time.

I request the Hon. Member not to parsue that point

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே சொன்னார்கள், இவ்வளவு பேர் செத்து விட்டார்கள் என்று அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள் என்று. அப்படி சுட்டதெல்லாம் தற்காப்புக்காக சுடவேண்டிய நிலை ஏற்பட்டதால் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு இடத்தில் போலீஸ் போகிறது. சுற்றி ஐயாயிரம், பத்தாயிரம் பேர் சேர்ந்து வண்டிக்கு நெருப்பு வைத்து, 10, 15 அதிகாரிகளை கொல்லப் பார்க்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். தற்காப்புக்காக சுட வேண்டியிருக்கிறது. அப்படியே விட்டுவிட்டிருந்தால், அதற்கும் முதலமைச்சர் தான் காரணம் என்று தானே சொல்லுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதை முதலமைச்சராவது, வேறு அமைச்சராவது சொல்ல வேண்டும். உறுப்பினர் அந்தப் பணியை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, தற்காப்புக்காக துப்பாக்கிச் சூடு செய்தார்கள் என்று உறுப்பினர் சொன்னார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போதும் இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்களை பெட்ரோல் ஊற்றி கொன்றதற்குப் பிறகுதான் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது.

THIRU R. PONNAPPA NADAR: May I make one clarification? It has been stated by the hon.Member Mr. Krishnamoorthi that the then hon.Chief Minister Mr. Bhaktavatsalam gave orders to open fire. It is not true. It is against facts. That has been the subject-matter of discussion before this House. Mr. Krishnamoorthi at that time even went to the extent of saying "கொலைகார அரசாங்கம்". He then withdrew. Even now it reverberates in my ears what he said at the time he withdrew.

திரு. வி கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, 1955-ல் 50, 60-க்கு மேற்பட்ட இடங்களில் துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்யப்பட்டன. ஒரு இடத்தில் ஒரு சப்-இன்ஸ்பெக்டரை கொன்று விட்டார்கள் என்பதற்காக, 50 இடங்களில் 300 பேர்களைச் சுட்டார்கள். அன்றைக்கிருந்த போலீஸ் மந்திரி திரு. பக்தவத்சலம் கொலைகாரராக இருந்தார். இன்றைக்கும் சொல்லுகிறேன் அவர் கொலைகாரர்தான்.

(அவையில் பல அங்கத்தினர்கள் எழுந்துநின்று பேசுகிறார்கள்.)

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அப்போது நாங்களும் இந்த அரசாங்கத்தை ஏன் கொலைகார அரசாங்கம் என்று சொல்லக்கூடாது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதத்தில் பேசும்போது, பல வார்த்தைகளை வேறு முறையில் சொல்லிக்கொள்ளலாம். டாக்டர் ஹாண்டே 'சாலெஞ்சு' என்று சொன்னவுடனே, அந்த சாலெஞ்சை எடுத்துக்கொண்டு மற்றவர்கள் வருகிறார்கள். நீண்ட நேரமாகிறது. சீக்கிரமாக முடிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: That is only English. There is nothing wrong or objectionable.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசியவர்கள் 45 நிமிடங்கள், 50 நிமிடங்கள் கூட எடுத்திருக்கிறார்கள். ஆனால், எனக்கு அவ்வளவு நேரம் வேண்டியதில்லை. என்னுடைய பேச்சிலே யாரும் குறுக்கிடாமல் இருந்தால் விரைவிலே முடித்துவிடுகிறேன். மாலை 5-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் குறுக்கிட்டால் நீங்கள் 'ஈல்டு' ஆகாதீர்கள். தொடர்ந்து பேசிக்கொண்டே இருங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: துணை சபாநாயகர் அவர்களின் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அன்றைய முதலமைச்சரை 'கொலைகார முதலமைச்சர்' என்று சொன்னதாகச் சொன்னார்கள். அவர் அப்படி கூறியிருந்தாலும் நான் அதேமாதிரி நம்முடைய முதலமைச்சரைப் பார்த்து 'கொலைகார முதலமைச்சர்' என்று சொல்ல மாட்டேன். அது நம்முடைய பண்பாடு அல்ல. அது நம்முடைய அரசியல் நாகரிகம் அல்ல. இந்தமாதிரியான குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்பாளி முதலமைச்

சரவர்கள் என்ற அளவோடு நான் நிறுத்திக்கொள்கிறேன். அது தான் நான் கடைப்பிடிக்கின்ற அரசியல் நாகரிகம்.

Now, with regard to the other point. That is about something which I repeat. The House is entitled to ask from the Hon. Chief Minister before he starts his reply to apologise and express regret for the 12 persons who have died. Unless, it is done, it will not be fair.

With regard to prohibition, on account of scrapping of prohibition have you any idea to the amount of violence and the number of deaths which have not been recorded at all, and which are taking place in our State? Have we any idea? It is let loose and unleashed as a chain reaction in every streets, like street brawls,; there is no peace in any constituency and it has become almost impossible for the police to maintain law and order. I really sympathise with them, for the amount of energy spent in adhering to prohibition is much less than the amounr of energy they have to spend in seeing to it that all people do not box with each other. It is a pathetic sight. I once again charge this Government that they have unleashed in the State a serious of violence, street brawls, absence of peace and ill-health also indirectly.

All these things they have done. The whole State is in a bad state. It is not a matter for laughing. In your own village, in Thiruvannamalai such things have happened. It is a tragic thing, Members do realise the serious degree of unrest and violence in which the whole State is steeped under the distinguished leadership of our Hon. Chief Minister. That is a pathetic thing.

Then again, I was wondering about the counterfeit cases. In 1971–72, in the note circulated to Members, he says—it was last year—about one case. There was another counterfeit case also. That is also given here. In all 15 persons were arrested. Another case is said to be under investigation. In other words all cases are said to be under investigation. under investigation, under investigation! In this book now nothing has been mentioned and not a single case has been reported for the last one year. We would like to know whether offenders were booked? In other words, I wonder whether for political reasons persons on whom cases were foiled have been let off or whether such cases have been pursued. If so, what is the action taken. This House is entitled to know the action taken and what is the ultimate result of these cases. If no answer is forthcoming, then we have to come to our own conclusions.

Then again, I would like to mention the degree to which every police station is directly or indirectly subjected to the orders and threats of the D.M.K. party members. That is the charge I will make against the Government in this House. In my own constituency where we have got the G-1 Police station and the C-2 Police station—Flower Bazaar Police

station–though not to that extent -in several police stations the position is they are subject to the whims and fancies, to the wraths and threats and counter-threats of the D.M.K. party men. Something I am very anxious the Hon. Chief Minister should do. I want a blanket order by the Hon. Chief Minister to the Police department that whoever it is–whether it is Vatta Seyalalar or Mavatta Seyalalar or any other body–he should be dealt with according to law. In my own constituency a case happened and practically I have mentioned it a hundred times in this House and I have given cut motions also about it. But nothing seems to be done. In this House, I mentioned that a particular Assistant Commissioner's jeep is always in front of the house of the Mavatta Seyalalar. What has been done? Nothing. What is the good of my shouting in this House? Nothing. No action seems to be taken.

"நான் அப்படித்தான் செய்வேன்; நான் அப்படித்தான் போவேன், ஹாண்டே எத்தனை தடவை வேண்டுமானாலும் சொல்லட்டும்" என்று நினைத்திருக்கிறார்கள்.

When are we going to put a stop to this ? The Chief Minister may not be directly involved. But a number of his people are spoiling his name. Why should he allow ? He may not have anything to do directly. Why not he issue a strong and strict order to the police department that they need not be bamboozled by the Vatta Seyalalar, Thunai Seyalalar, etc. ? I have proof to show that a Sub-Inspector was guilty. Against the Sub-Inspector of B-2 Police station, I have levelled charges. I have the letter also here which I addressed to the Commissioner of Police. I do not know whether I marked a copy to the I. G. also. I have addressed the letter only to the Commissioner. But nothing seems to be done I have therein mentioned the name and address of the persons complaint against All these things happened in my own constituency in the Fruit Market area. In spite of that, the Chief Minister could not take action in this case. What can they do ? Let Hande shout in Assembly ? What can he do ? This seems to be the attitude of that persons. 'What can the Sub-Inspector do ? He is on my pay roll'. After I mentioned this in this House, a case has been foisted on him and he has been arrested, the person who was the victim has been treated like this. His name is Veerappan. The D. M. K. party man is Senguttuvan. This is only a small example to show the fantastic quantum of control of the ruling party members on the police officials. That is why I have given the cut motion. I am not going to leave that cut motion easily. I have to persist and press the cut motion. I have said things specifically. Unless something is done about it, it cannot be set right. I would like the Hon Chief Minister to understand that something must be done to see that the control on the police by the party men is completely removed.

Then again, third degree methods are adopted by the police. Have we any idea as to the number of persons beaten in the police stations? I have a number of proofs. I have the names and addresses of those persons. I have the name of the police stations and everything I have, I can give them to the Chief Minister. When Anna was the Chief Minister, one person died in the police lock-up in Elephant Gate Police Station. An investigation was made and the same matter was raised by me in this House. Anna was satisfied; 'ENNAVO POKATTUM' That is what he said.

No life should be touched in police stations. They are distinguished citizens of the country and we have no right to touch the life of anybody. Even when I give an injection to a patient, I take the permission of the patient 'may I prick your body', unless he is unconscious; if he is unconscious I take the permission of his parents or relatives. We have no right to touch anybody much less to hurt another person. It is absolutely wrong. I feel that there should be a strong investigation Cell headed by a group of highest authorities to see whether third degree methods are applied and to see that people are not beaten in the police stations; people should not be kept in police custody; it is a thing of the past. Hereafterwards that should not take place. I have here photographs, a huge file I have of a number of cases I have sent to the Inspector-General and the Commissioner of Police. I want that aspect to be looked into.

There is the other thing. Polytechnic students. Two students were called for discussion to the Commissioner's office by the Commissioner of Police, I am told; if the Hon. Chief Minister refutes it on behalf of the Commissioner, I am prepared to accept it. But two students were invited to discuss with the Commissioner and then they were put under police lock-up and they were arrested. That is the complaint I have received from the students. It is a matter for verification. I leave it at that.

Then again, about this cadre. I would like the Hon. Chief Minister to straighten the whole thing. Why not set right the cadre and see to it that all the District Police Officials are from the I. P. S. cadre? What is the difficulty? What is the secret about it?

Are we allergic to I. P. S.? Are we so antoganistic to Delhi that we think that I. A. S. or I.P.S. officers would be anti-Government and that they would act more fearlessly than non-I. P. S. people. I would like to know what is the secret about it? What is the difficulty is seeing that all district officers are I. P. S. men? Why should number of persons be suddenly posted in certain areas where there is lot of political confusion. Why this sort of thing is taking place? Why should suspicion be aroused?

MR. DEPUTY SPEAKER: How long would you like to take?

DR. H. V. HANDE: Another four minutes. In 1971 a panel was prepared by the Inspector-General of Police with regard to Inspectors. Step by step they started including one by one, in between 1 and 2, 1-A, between 2 and 3, 2-A; like this the whole thing was revised. Just like it is done during admission. With the result the whole thing was inflated. What is the secret behind it? The original list prepared by the Inspector-General of Police was flouted by the Chief Minister for political reasons. That is the point I would like to establish.

Recently, there has been an incident on 2nd March 1973 when in one evening, one Assistant Commissioner and another Assistant Commissioner with the driver and somebody else, 'we are told that the somebody else is a lady', was going in a police jeep. That is our information. The jeep in fact hit against a tree. The driver died. It has been reported in the papers. If it is wrong information it is the duty of Government to deny it. If it is right, it is a serious matter. The post-martem report, I am told, says that the driver's life could have been saved if only timely first-aid had been given. I know the family of the driver and I have got even his photo with me. His relations are known to me. If only timely aid had been given, he could have been saved. After the accident one of the front tyres burst and then the vehicle hit against a tree. I would not like to go now into minor details. But what has happened afterwards? Here politics comes in. There is a certain political party, who are very closely trying to influence the Chief Minister. If the Hon. Chief Minister says that he is not bothered by all these, I accept it. I am telling what I was told.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. ஹாண்டே அவர்கள் சொல்லும் அந்த அதிகாரிமீது எல்லா நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கின்றது.

DR. H. V. HANDE: The police force in the entire State must be completely free from political pressure. That is what I want. But is it what is happening.

In the Alangudi incident, the hon. Thiru V. R. Nedunchezhian gave a partial reply. That is a typical example of political pressure being brought on police. We sent our party member Sri G. Swaminathan to investigate the whole thing. Other parties have also sent some members. The Congress (O) President is Thiru P. Ramachandran. His house, the D.M.K. men wanted to enter to beat him. His wife opened the door and at the side of door a police officer was standing. When she saw a deadly weapon in the hands of a man so closely standing behind the police officer, she closed the room. But do you know what happened? The men got on top of the room, removed the tiles and made entry

(Dr. H. V. Hande) [1973 மார்ச் 23

into the room and then beat Thiru P.Ramachandran. Is this an ordinary matter ? Why should a political party member be permitted to beat another political party member in the opposition, with the protection of Police ? Is it socialism ? I would like to know the full facts. If this kind of thing is going to happen to political party members in the Opposition, it will have to lift the eye-brows of one and all. As I had said I do not want to malign the police force which is second to none in efficiency. It is one of our best. I do not want such a good police force to be demolished and destroyed by our Chief Minister. Thank you.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றைச் சொல்லி, அதை தான் முழுதும் நம்பவில்லை என்று குறிப்பிட்டு, இதைப்பற்றிய விவரம் தேவை என்றார். ' சென்னை நகர போலீஸ் கமிஷனர் அவர்கள் பாலிடெக்னிக் மாணவர்களைப் பேசுவதற்காக அழைத்து, அங்கே கைது செய்துவிட்டார் ' என்று தகவல் வந்ததாகச் சொன்னார் அவர். இது முழுக்க முழுக்கத் தவறு. அந்த மாணவர்கள் அடையாறில்தான் கைது செய்யப்பட்டார்கள். கமிஷனர் அலுவலகத்தில் இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அங்கே அவர்கள் பேசியதற்காக கைது செய்யப்பட்டார்களா ? அல்லது வேறு எதற்காக ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. ஏ. மதியழகன்.

திரு. கே. ஏ. மதியழகன் : என்னைப் பேசச் சொன்னால் ? ' கன்வென்ஷன் ' என்று ஒன்று இருக்கிறது. ஏ. ஆர். பெருமாள் அவர்கள் பேசிவிட்டல்லவா என்னைக் கூப்பிட வேண்டும் ? ஒரு நாளைக்கு ஒன்று செய்கின்றீர்கள். நாங்கள் எல்லாம் சட்டசபைக்கு வரவேண்டும் என்று நினைக்கிறீர்களா, அல்லது வரவேண்டாம் என்று நினைக்கின்றீர்களா ? ஏ. ஆர். பெருமாள் அவர்கள் பேசிவிட்டுத்தானே என்னைக்கூப்பிடவேண்டும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உரிமை என்று சொன்னால் உங்கள் கட்சித் தலைவருக்குத்தான் அந்த உரிமையைக் கொடுக்க முடியும். துணைத் தலைவருக்கும் கொடுக்க வேண்டுமா ?

திரு. கே. ஏ. மதியழகன் : இரண்டு நாட்களுக்கு முன்பு அந்த உரிமையை அம்மையார் அவர்களுக்கு அளித்தீர்கள். உங்களுக்கு என்ன? வெளியே போகச் சொன்னால் போய்விடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, எவ்வளவோ நாட்கள் காங்கிரஸ் கட்சித் தலைவர் மாரிமுத்து அவர்கள்கூட முன்கூட்டியே பேசியிருக்கின்றார்கள். சில நேரங்களிலே டாக்டர் ஹாண்டே அவர்கள்கூடப் பேசியிருக்கின்றார்கள். இதில் ஒன்றும் முறை தவறி இல்லை.

1973 மார்ச் 23]

திரு. கே. ஏ. மதியழகன் : உங்கள் இஷ்டப்படி ஆட்டி வைப்பது என்று இருந்தால் கவலையில்லை. ஆனால் சம்பிரதாயம் என்று ஒன்று இருக்கின்றது. பிரதான எதிர்க்கட்சிகளில் இரண்டாவது எதிர்க்கட்சியாக இருக்கிறது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். இந்தக் கட்சியின் தலைவர் இங்கு இல்லாத நேரத்தில் டெபுடி லீடர் அதன் பிரதிநிதியாக இருக்கின்றார். அம்மையார் அவர்கள்கூட ஹெல்த் மானியத்தில் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதில் பெரிய பிரச்சினை ஒன்றும் இல்லை. பேச விரும்புகின்றீர்களா என்றுதான் கேட்டேன். திரு. ஏ. ஆர். பெருமாள்.

*திரு. ஏ. ஆர். பெருமாள் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள காவல் துறையின் மானியத்தை ஆதரித்து என் சிறிய உரையினை நிகழ்த்த விரும்புகிறேன்.

இன்று இந்த மாமன்றத்தில் பேசப்பட்ட பேச்சுக்கள் அனைத்தும் காவல்துறையினர் ஆள்கின்ற ஆட்சிக்கு, கட்சிக்கு ஆதரவாக, எதிர்க்கட்சிக்காரர்களை அடித்து ஒடுக்குகின்றார்கள், அவர்கள் மீது பொய் வழக்குப் போடுகின்றார்கள், போலீசைப் பயன்படுத்தி மக்கள் நம்பிக்கையை இழந்த இந்த அரசு பதவியில் ஒட்டிக்கொண்டு இருக்கின்றது என்றுதான் பெரும்பாலும் பேசப்பட்டது. இப்படி பேசுகின்றவர்களுக்கு இப்போது நான் பேசவருகிறது ஏதோ ஃபார்வர்டு ப்ளாக் கட்சியிலிருந்து பெருமாள் பேசுகிறார், அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமைக் கட்சிக்காரர் , திராவிட முன்னேற்றக் கழக அரசு எதைச் செய்தாலும் ஆதரித்துப் பேசக்கூடியவர் என்ற எண்ணத்தினைச் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு உணர்ச்சி வசப்படாமல், கட்சி சார்பற்ற முறையில், நல்ல சிந்தனையோடு என்னுடைய பேச்சினைக் கேட்டால் நான் சொல்லுவதில் நியாயம் உள்ளது என்று அவர்களுக்குப் புரியும்.

கலவரம் நடந்த இடங்களிலே போலீஸ் அத்து மீறியது என்று சொன்னார்கள். இப்படி எந்தெந்த இடங்களிலே கலவரங்கள் நடந்தனவோ அங்கே கலவரங்கள் எப்படி எப்படி ஏற்பட்டன, அங்கே வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டதற்குப் பின் போலீஸ் தலையிட்டதா அல்லது வன்முறைச் சம்பவங்கள் ஏற்படுவதற்கு முன்பே எந்தத் தவறும் செய்யாத மக்கள் மீது, சட்டம் ஒழுங்கைக் குலைக்கின்ற முயற்சிகளில் அவர்கள் ஈடுபடாத நேரத்திலே போலீசார் வேண்டுமென்றே தலையிட்டார்களா, அப்படிப்பட்ட சம்பவங்கள் என்னென்ன என்று போலீசைக் குறைகூறிப் பேசுகின்றவர்கள் சற்று விளக்கிப் பேச வேண்டும். போலீசாரைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினரைத் தாக்குகின்றார்கள், கொடிகளை ஏற்ற முடியவில்லை, குழப்பம் விளைவிக்கின்றார்கள என்றெல்லாம் சொன்னார்கள். நான் ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்லுகின்றேன். முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பிறந்த புண்ணிய பூமி பசும்பொன் என்ற சின்னஞ்சிறிய கிராமம். சுமார் 40 அல்லது 50 வீடுகள் உள்ள சிறிய கிராமம். அந்தக் கிராமம் தோன்றிய காலம் முதல், தேவர் அவர்கள் அரசியலை நடத்த ஆரம்பித்த காலத்திலிருந்து வெள்ளைக்காரன் காலத்திலும் சரி, அதற்குப் பின்னர் காங்கிரஸ்காரர்கள் காலத்திலும் சரி, அதற்குப் பின்

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த காலத்திலும் சரி, அந்தக் கட்சித் தலைவர்கள் எல்லாம் அந்தக் கிராமத்தில் ஃபார்வர்டு ப்ளாக் கட்சிக் கொடியைத் தவிர வேறு எந்தக் கொடியையும் ஏற்றியதில்லை—ஏற்றுவதில்லை என்ற மரபை வைத்திருந்தார்கள்.

பெருந் தலைவர் காமராஜர் ஆட்சி நடத்துகிறபோது கூட அந்தக் கொடியை இறக்க வேண்டும் என்று விரும்பவில்லை. இன்றைக்கு தி. மு. க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகும் கூட, அவர்கள் கொடியை அங்கே ஏற்றவில்லை. காரணம் அந்தக் கட்சிக்காரர்கள், பெருந்தன்மையோடு, தேவர் பிறந்த ஊரில் அந்தக் கொடியே இருக்கட்டும் என்ற முறையில் அவர்களுடைய கொடியை அங்கே ஏற்றவில்லை. இன்றைக்கு ஏதோ ஒரு பத்திரிகையில் "தேவர் பிறந்த பூமியிலே நமது அண்ணா தி. மு. க. கொடியை ஏற்றிவிட்டோம் " என்று அந்தக் கொடி ஏற்றப்படாமலிருக்கும்போதே அறிவிப்பைக் கொடுத்தார்கள். பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள்.

வன்முறை எப்படி தலைதூக்குகிறது ? அமைச்சர் வருகிறார். காவல் துறையினர் அமைச்சர் வருகிறபோது அண்ணா தி. மு. க. வினர் அல்லது ஆளும் காங்கிரசார் அல்லது வேறு எதிர்க் கட்சிக்காரர்கள் யாரும் கறுப்புக் கொடி காட்டக் கூடாது. காட்டினால் உள்ளே தள்ளிவிடுவோம் என்று எங்காவது சொன்னார்களா ? அமைச்சர் வருகின்ற நேரத்தில் ஒரு இடத்தைக் குறிப்பிட்டு இந்த இடத்தில் நின்று நீங்கள் கறுப்புக் கொடியைக் காட்டலாம் என்று போலீசார் அனுமதித்து இருக்கிறார்கள். தி. மு. க. அரசு ஒழிக, கருணாநிதி ஒழிக என்று நீங்கள் கோஷம் போடலாம். அனுமதியுண்டு. ஆனால் ஒரு இடத்தைக் குறிப்பிடுகிறோம். அப்படி இவ்வளவு செய்யப்பட்டபோதும் அமைச்சர் கார் வரும்போது அந்தக் காரைத் தாக்குவது, வன்முறையில் ஈடுபடுவது என்றால், நான் கேட்கிறேன், போலீசார் அதைப் பார்த்துக் கொண்டு கை கட்டி நின்று கொண்டிருக்க வேண்டுமா ? தமிழகப் போலீசார் இந்தியாவிலேயே மிகச் சிறப்பான போலீசார். அவர்களுக்கு என்று வரலாற்றிலே ஒரு தனிப் பாரம்பரியம் உண்டு. அந்த பாரம்பரியம் மிக்க போலீசார் மீது குற்றச் சாட்டுகளைக் கூறுகிறபோது, எந்த இடத்தில், எப்போது அவர்கள் தவறு செய்தார்கள்; சட்டத்திற்குப் புறம்பாக ஆளுங்கட்சிக்கு ஆதரவாக இப்படியிப்படிச் செய்தார்கள் என்று எடுத்துச் சொல்ல வேண்டும். தவறு செய்கிற போலீசாரைக் கண்டிக்கவும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும், இந்த அரசு தவறியதல்ல என்பதற்கு பாளையங்கோட்டை ஒரு உதாரணம். சட்டத்திற்குப் புறம்பாக வன்முறையில் ஈடுபடுகிற போலீசார் மீது நடவடிக்கை எடுக்கத் தவறியதில்லை என்பதற்கு பாளையங்கோட்டை ஒரு ஆதாரம். உதாரணங்கள் இன்னும் பல சொல்ல முடியும். அமைச்சர்கள் பேசுகின்ற கூட்டங்களில் கலகம் விளைவிப்பது, அவர்கள் செல்கின்ற காரைத் தாக்குவது—இவைகள் எல்லாம் அனுமதிக்கப்பட வேண்டிய ஒன்று என்று வாதிடுகிறார்களா ?

மாண்புமிகு மன்னை நாராயணசாமி அவர்கள் இராமநாதபுரத்தில் பேசுகின்றபோது கல் எறிந்து தாக்கியது, அவர்கள் போகின்ற காரில் கல் எறிவது, தாக்குதல் நடத்துவது—இவையெல்லாம் அனுமதிக்கப்பட வேண்டியனவா ? இதையெல்லாம் யார் செய்து கொண்டிருக்கிறார்கள்

என்றால், அண்ணா தி. மு. க. காரர்கள் தான். அவர்கள்தான் இன்னும் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் வன்முறையில் ஈடுபடுகின்றபோது போலீசார் கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்களா ?

அதே நேரத்தில், எந்தத் தவறையும் செய்யாதவர்களை, நிரபராதிகளை, எந்தக் குற்றத்திலும் ஈடுபடாமல் இருந்தவர்களை எவ்வளவு கொடுமைகளுக்கு ஆளாக்கினார்கள் ? எத்தனை பொய் வழக்குகள் போடப்பட்டன? திருமதி அனந்தநாயகி அம்மையார் சொன்னார்கள். யு.பி-யைப் பாருங்கள், அங்கே பாருங்கள், இங்கே பாருங்கள் என்று பேசவேண்டாம்; இங்கே சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன், அங்கேயெல்லாம் போகவேண்டாம். இங்கே வாருங்கள். முதுகளத்தூருக்கு அழைத்துப் போகிறேன், தமிழ்நாட்டுக்குள்ளேயேதான் இருக்கிறது. அம்மையார் ஆளுங்கட்சியில் இருந்தபோது 1957-ல் நடந்தது. அம்மா இருந்த மக்களை கட்டி இழுத்துவந்து, கையைக் கட்டி, காலைக் கட்டி, சுட்டுக் கொன்றார்களே! நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டோம். நாங்கள் மாத்திரம் கேட்கவில்லை. ஆளுங்கட்சிக்கு அடுத்தபடி இருந்த எல்லா எதிர்க் கட்சிகளும் கேட்டன. ஒரு நீதி விசாரணை உண்டா? நீதி விசாரணை அமைக்கிறோம் என்ற உறுதிமொழியாவது கொடுக்கப்பட்டதா? இல்லையே !

ஆனால் இன்றைக்கு, எந்த இடத்தில் துப்பாக்கிச் சூடு நடந்தாலும், துப்பாக்கிச் சூடு தவறான முறையில் நடத்தப்பட்டது என்ற சிறு ஐயப்பாடு இருந்தாலும் அந்த இடத்திலே நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்தது மாத்திரமல்ல, துப்பாக்கிப் பிரயோகத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு பண உதவியும் செய்தது இந்த அரசுதான். 17 பேர்கள் முதுகளத்தூர் துப்பாக்கிப் பிரயோகத்தில் செத்தார்கள். எந்தக் குடும்பத்திற்காவது ஒரு நயா பைசா ஆறுதல் நிதி உண்டா?

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> பல தடவைகள் சட்டசபையில் கனம் அங்கத்தினர் இதைப்பற்றி பேசியிருக்கிறார். ஏதாவது புதிதாகப் பேசினால் உபயோகமாக இருக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> வரலாற்றை திருப்பித் திருப்பிச் சொல்வதில் என்ன தவறு?

<u>திரு. ஏ. ஆர். பெருமாள் :</u> "பொய் வழக்கு, போலீஸ் அடக்குமுறை" என்று திரும்பத் திரும்ப பழைய கருத்தைத் தானே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். புதிதாக சொல்லக்கூடாதா? ஆளும் கட்சிக்காரர்கள் மீது பொய் வழக்குப் போடுகிறார்கள், ஆளுங்கட்சிக்காரர்களை அடக்குகிறார்கள் என்கிற விஷயத்தைத் தானே திரும்பத் திரும்பச் சொல்கிறீர்கள்? புதிதாக ஏதாவது சொல்லக் கூடாதா?

ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், போலீசார் எப்போதும், தங்கள் கடமையிலிருந்து தவற மாட்டார்கள். மற்ற அரசாங்க நிர்வாகத்தின் மற்ற அதிகாரிகளை விட போலீசாருக்கு பெரிய சங்கடங்கள் எல்லாம் இருக்கின்றன. சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க நடவடிக்கை

எடுத்தால் எதிர்க்கட்சி வரிசையிலிருந்து மிகப் பெரிய எதிர்ப்புக் குரல்கள் வரும். அப்படி சரியான நேரத்தில் போதிய நடவடிக்கை எடுக்காவிட்டால், பயங்கரமான விளைவுகள் ஏற்பட்டு, ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் வரும். ஆகவே, இப்படிப்பட்டச் சங்கடங்கள் போலீஸ் அதிகாரிகளுக்கு இருக்கின்றன.

தமிழகத்தில், ஒருசில நேரங்களில் சட்டம், ஒழுங்கு கெட்டுப்போயிருந்தால், அந்தக் கெட்டுப்போன இடங்களைக் கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்கவும் தயங்கவில்லை. நம்முடைய தமிழக போலீசாரைபற்றி இந்தியாவிலுள்ள எந்த மாநிலப் போலீசாருடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும் எந்த அளவுக்குத் தமிழகப் போலீசார் சிறந்தவர்கள் என்பது தெரியும்.

ஒரு உறுப்பினர் பேசினார்—இராமநாதபுரம் மாவட்ட போலீஸ் அதிகாரி ஆளுங்கட்சிக்கு மிகவும் சாதகமாக நடந்துகொள்கிறார் என்று. அவர் மீது குற்றம் சொல்வது, மனசாட்சியை அடகுவைத்துவிட்டுப் பேசுகின்ற பேச்சாகும். அவர் மிக நேர்மையான, கடமை தவறாத போலீஸ் அதிகாரி. நான் அவரிடம் அடிக்கடி செல்வதில்லை. எப்போதாவது ஒரு தடவை போவேன். "அந்த அதிகாரியை மாற்றுங்கள், இந்த அதிகாரியை மாற்றாதீர்கள்" என்று சொல்லக்கூடிய அரசியல்வாதி அல்ல நான். அப்படி, ஒருசில நேரங்களில் அந்த அதிகாரியுடன் பேசிக் கொண்டிருந்த போது, அவருடைய கடமை தவறாத நேர்மையான உணர்வுகளைக் கண்டிருக்கிறேன். எனவே, அவர் மீது குற்றம் சாட்டுவது அபாண்டமானது. நியாயத்திற்குப் புறம்பானது. யாரோ ஆளுங்கட்சிக் காரருக்குச் சொந்தக்காரர் என்ற காரணத்திற்காக அவர் ஆளுங்கட்சிக்கு சாதகமாக செயல்படுகிறார் என்று சொல்வது உண்மைக்குப்புறம்பானது.

திரு. க. சுப்பு: பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். ஒரு உறுப்பினரைப்பற்றி..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சம்பந்தப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் "ஈல்ட்" ஆகிறபோது தடுக்க முடியாது.

(குறுக்கீடு)

மாலை 5-30 திரு. க. சுப்பு: நான் சொல்ல வந்ததெல்லாம் திரு. பெருமாள் அவர்களைக் குற்றம் சொல்ல வேண்டுமென்று இல்லை. இவர் உறவினர், இவர் சிபார்சின் பேரில் வந்த தாகத்தான் அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். இருக்கக்கூடிய நிலைமையை அரசாங்கத்திற்குத்தான் நான் எடுத்துச் சொன்னேன். அவர் பரம யோக்கியராகவே இருக்கட்டும். விரோதம் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று காலையிலேயே திரு. சுப்பு அவர்கள் பேசும்போது பொதுவாகச் சொன்ன கருத்தை நான் ஏற்கவில்லை. மேலும் போலீசார் பொதுமக்களோடு பழகுகிறார்கள். இவர்களுக்குச் சம்பளம் குறைவாக இருந்தாலும் பரவாயில்லை என்பதாக ஃபயர் சர்வீசில் இருக்கிறவர்களுக்கு சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள வந்தபோது கூடச் சொன்னார். இதுபோன்று எல்லாம் பொதுப்படையாகச் சொல்வது நல்லது அல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி: போலீஸ் அதிகாரிகளைப்பற்றி நல்லதையோ, கெட்டதையோ நாங்கள் எடுத்துச் சொன்னால் அதற்கு பதில் சொல்ல அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். போலீஸ்காரர்களைப்பற்றி குற்றங்களே சொல்லக்கூடாது என்பது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குறிப்பிட்டுச் சொன்னால் அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள். அதுபற்றி விசாரிக்கவும் செய்வார்கள். பொதுவாக இலாகாவின் தரத்தைக் குறைக்கின்ற வகையில் பொதுப்படையாகப் பேசுவது நல்லது அல்ல.

திரு. எ. ஆர். பெருமாள்: அந்த மாவட்ட போலீஸ் அதிகாரி என் உறவினர், என் சிபார்சின்பேரில்தான் வந்தார் என்றெல்லாம் திரு. சுப்பு சொன்னார்கள். அவர் என் உறவினரும் இல்லை. என் சிபார்சின் பேரிலும் வரவில்லை. பொறுப்புள்ள இந்த மன்றத்தில் இப்படிப் பேச வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அம்மையார் அவர்கள் கூடச் சொன்னார்கள். "தங்கமணி பேசினார் என்பதற்காகக் கைது செய்யப்பட்டாரே, அவர் மீது வழக்குப் போட்டார்களே" என்றார்.

1957-ம் ஆண்டு முத்துராமலிங்கத் தேவரைக் கைது செய்து சிறையில் போட்டால் சிறையின் சுவற்றில் உள்ள கற்களை ஒவ்வொன்றாக எடுத்து அவரை விடுதலை செய்வோம் என்று பேசியதற்காக வழக்குப் போட்டு பத்து மாதம் தண்டனை கொடுத்திருக்கிறார்கள்.

எதற்காகச் சொல்கிறேன், சட்டத்திற்குப் புறம்பாக யார் பேசினாலும், அவர்கள் மீது வழக்குப் போடுவது போலீசாரின் கடமை. சட்டத்திற்கு உட்பட்டு பேசப்படுகிற பேச்சுகள் அனுமதிக்கப்படுகின்றன. இன்றைக்குப் பொதுமேடையில் எப்படிப்பட்ட பேச்சுகளைப் பேசுகிறார்கள், கேட்கவேண்டும். எப்படிப் பேசுவது என்றே தெரியாமல் பலர் பேசுகிறார்கள். பேசுவதற்கு விஷயம் இல்லாத காரணத்தினால், கொள்கை இருந்தால், திட்டம் இருந்தால், குறை சொல்லக்கூடிய ஆற்றல் இருந்தால் லட்சிய ரீதியாக, கொள்கை ரீதியாகப் பேசலாம். ஆனால் கோபத்தால், ஆத்திரத்தால், ஆவேசத்தால் எதைப் பேசுவது என்று தெரியாமல் பேசுகிறார்கள். கூட்டத்தில் இருப்பவர்கள் அத்தனை பேர்களுமே பொறுமைசாலிகளாக இருப்பார்களா? சாதாரணமாக என் தொகுதியில் என்னைப்பற்றி இப்படி எல்லாம் பேசினால் கொஞ்சநேரம் பொறுத்துக்கொண்டிருப்பார்கள்....

திருமதி த. ந. அனந்தநாயகி: பாயிண்ட் ஆப் ஆர்டர். கொள்கை இல்லை, லட்சியம், இல்லை என்றெல்லாம் பேசுகிறார்கள். இவருக்கு இருக்கா கொள்கை லட்சியம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டரா?

யாரிடம் கொள்கை இருக்கிறது, லட்சியம் இருக்கிறது என்று சொல்ல எனக்கு உரிமை கிடையாது. இது ஒரு பெரிய இன்சினுவேஷன் இல்லை.

திரு. க. சுப்பு : அவர் பேசும்போது இராமநாதபுரம் போலீஸ் சூப்பிரண்டை நினைத்துச் சொல்லியிருக்கிறார். நான் குறிப்பிட்டது ஸ்ரீவில்லிப்புத்தூர் சப்-இன்ஸ்பெக்டரைப்பற்றியதுதான். தவறாகிவிட்டது.

திரு. ஏ. ஆர். பெருமாள் : அம்மையார் அவர்கள் ஆத்திரப்பட வேண்டாம். நான் அரசு தீட்டுகிற திட்டங்கள், வகுக்கிற கொள்கைகள், அவற்றினால் பாதிக்கப்படுகிற பகுதி எது, மக்கள் யார் என்கிற அளவில் எடுத்துப் பேசுவதற்கு அவர்களிடத்தில் கொள்கைபலம் இல்லாத காரணத்தினால் வேறு முறையில் பேசுகிறார்கள் என்றுதான் சொன்னேன். தவறான பிரச்சாரத்தில் இறங்குகிறார்கள். எல்லோருமே பொறுமைசாலிகளாக இருக்க முடியுமா? கூட்டத்தில் இருக்கிறவர்களுக்கு ஆத்திரம் ஏற்படுகிறபோதுதான் அசம்பாவிதம் நடக்கிறது. அங்கே சட்டத்தை, ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் இருப்பவர்கள் போலீசார்கள்தான். இப்படி மேடையில் ஏறி கண்டபடி தாக்கிப் பேசாதே என்று பேசுபவர்களுக்கு அவர்களால் உத்தரவு போட முடியாது.

திருவிழாக்களானாலும், பொதுக்கூட்டங்களானாலும், சினிமாக் கொட்டகையாக இருந்தாலும் எந்த இடத்தில் சட்டம் ஒழுங்கு குலைகிறதோ, அங்கே சட்டம் ஒழுங்கை நிலைநாட்டக் கடமைப்பட்டவர்கள் போலீஸ்காரர்கள். யார் குற்றம் செய்தாலும் அவர்களைத் தண்டிப்பது அவர்கள் கடமை. இந்தக் கடமையில் தமிழ்நாட்டுப் போலீசார் இன்றைக்குச் சிறிதும் தவறவில்லை. 1967-க்குப் பின்னால் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், பின்னர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்திருக்கிற நிலையிலும் போலீஸ் துறையில் மிகப்பெரிய சீர்திருத்தங்கள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. தேவையான வசதிகள் ஒவ்வொரு துறையிலும் செய்யப்பட்டு, குற்றங்கள் குறுகிய காலத்திலேயே கண்டு பிடிக்கப்பட்டு, வழக்கு தொடரப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

வேண்டுமானால் 1947-ம் ஆண்டு தொடங்கி 1967 வரைக்கும் 20 ஆண்டுகளில் தொடுக்கப்பட்ட வழக்குகள் எத்தனை, பொய் வழக்குகள் என்று தள்ளுபடி செய்யப்பட்டவை எத்தனை என்கிற புள்ளிவிவரத்தையும், 1967-க்குப் பிறகு 1972 வரை தொடுக்கப்பட்ட வழக்குகள் எத்தனை, பொய் வழக்குகள் என்று தள்ளுபடி செய்யப்பட்டவை எத்தனை என்ற புள்ளிவிவரத்தையும் எடுத்துப் பார்த்தால் பொய் வழக்குகள் எந்தக் காலத்தில் அதிகமாகப் போடப்பட்டிருக்கின்றன என்பதைக் காணலாம்.

அதேபோல 1947 முதல் 1967 வரை—30 ஆண்டுகளில் நடந்துள்ள துப்பாக்கிச் சூடுகள் எத்தனை, இறந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை, 1967-க்குப் பிறகு 1972 வரை நடந்துள்ள துப்பாக்கிச்சூடு எத்தனை, இறந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும் எடுத்துப் பார்த்து சதவிகிதம் போட்டால் யார் காலத்தில் துப்பாக்கிச்சூடுகள் அதிகம் என்பதை காணலாம்.

இன்றைக்கு டாக்டர் கலைஞர் ஆட்சியில் போலீசார்கள்—துப்பாக்கியைத் தொடுவதற்கு முன்னால், உயிர்கள் பலியாகிவிடுமே என்கிற அச்ச உணர்ச்சியோடு, வேறு எந்தவகையிலும் வன்முறைச் செயலைத் தடுக்க முடியவில்லை என்கிற நிலை வருகிறபோதுதான் நடந்திருக்கிறது.

அப்போதும் கூட இறந்தவர்களின் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நஷ்ட ஈடு தொகை வழங்கப்பட்டு வருகிறது. கடந்த காலத்தில் ஒரு சல்லிக்காசு கொடுத்தது உண்டா ?

போலீசார் என்றால் சுடவே கூடாதா என்று நான் முன்னே பேசிய ஒன்றை வைத்து பல மேடைகளில் பேசினார்கள். போலீசார் கையில் துப்பாக்கி இருக்கிறது—லத்தி கம்பால் அடக்க முடியாதபோது, எச்சரிக்கையால் கலைக்க முடியாதபோது, கண்ணீர்புகையால் அடக்க முடியாதபோது—வன்முறை தலைதூக்கிவிட்டது என்கிற நிலையில்கூட அவர்கள் கையில் துப்பாக்கி இருக்கும்போது பஜனையா பாடுவது ? சுடுகிறார்கள். சுட்டால் காயம் ஏற்படுவதும் உண்டு. மரணம் ஏற்படுவதும் உண்டு. வன்முறை அதிக அளவில் தலைதூக்கிவிட்ட நிலையில் அமைதியை ஏற்படுத்த வேறு வழி உண்டா ?

டாக்டர் கலைஞர் பேசுகிற கூட்டத்தில் நான் பார்த்திருக்கிறேன், எங்கேயிருந்தோ கல் வந்து விழுகிறது. போலீசார் ஓடுகிறார்கள், தேடுகிறார்கள். யார் கல்லை எறிந்தது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. இங்கே பேசுகிறார்கள், அமைச்சர்கள் வெளியே தலைகாட்ட முடியவில்லை என்பதாக. கல்லால் எறிவது, ஆர்பாட்டங்கள், காரைத் துரத்துவது என்கிற நிலையினால்தான் அமைச்சர்கள் வெளியே போக முடியவில்லை. இதுதான் ஜனநாயகமா ? ஜனநாயகத் தத்துவத்தின் அரசியல் சிந்தனையோடு சொல்வேன். யார் வன்முறையில் இறங்குகிறார்கள் தெரியுமா ? மக்கள் எங்கள் பக்கத்தில்தான் இருக்கிறார்கள் என்கிறார்களே—அவர்கள் செய்யக் கூடிய காரியம் அல்ல. இது யாருக்கு மக்களிடத்தில் நம்பிக்கை இல்லையோ, மக்களது ஆதரவு நமக்கு இல்லை என்கிற உணர்வு வந்துவிடுகிறதோ அவர்கள்தான் வன்முறையில் இறங்குகிறார்கள். உண்மையிலே மக்கள் பூராவும் எங்கள் பக்கம் தான், எங்கள் பக்கம்தான் என்று பேசக் கூடியது உண்மையாக இருக்குமானால், நிச்சயமாக அவர்கள் வன்முறைப் பக்கம் தலையே வைக்கமாட்டார்கள். மக்கள் பூராவும் நம் பக்கம் 'என்றால், எதற்காக கல்லெறிய வேண்டும் ? மக்கள் பூராவும் நம் பக்கம் என்றால், எதற்காக கறுப்புக் கொடி காட்ட வேண்டும் ? மக்கள் பூராவும் நம் பக்கம் என்றால், எதற்காக அமைச்சர்கள் காரில் போகும்போது தாக்குதல் நடத்த வேண்டும் ? மக்கள் பூராவும் நம் பக்கம் என்றால், தேர்தலில் பார்க்கவேண்டும். இப்பொழுதுகூடச் சொன்னார்கள், திண்டுக்கலிலே பார்ப்போம் என்று. பார்போமே, நன்றாகப் பார்ப்போமே. திண்டுக்கலைப் பார்த்து விட்டபிறகு, சிந்தித்து, போன பாதை தவறு என்று திரும்பி வருவாரா அவர் ? ஆகவே, திண்டுக்கல், திண்டுக்கல் என்று சொல்ல வேண்டாம். மக்கள் யார் பக்கம் இருக்கிறார்கள் என்று.......................

திரு. கா. காளிமுத்து: பார்வார்டு பிளாக் கட்சியினுடைய தலைவர் அவர்கள் திண்டுக்கல் முடிவுக்குப் பிறகு, போன பாதை சரி என்று திரும்பி விடுகிறாரா அவர் என்று கேட்டார். திண்டுக்கல் முடிவு தெரிந்த பிறகு போன பாதை தவறு என்று அவர்கள் திருத்திக்கொள்வார்களா என்று கேட்கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள் : நான் எங்கேயும் போகவில்லை. பார்வார்ட் பிளாக் கட்சியின் சிங்கச் சின்னத்தில் நின்று, அந்த முத்திரையில் வந்து பேசுகிறேன். பார்வார்டு பிளாக் கட்சியின் முத்திரையில் வந்து பேசுகிறேன். நீங்கள் அப்படி அல்ல. உதயசூரியன் சின்னத்தில் வெற்றி பெற்று இங்கு வந்து வேறு கட்சிக்கு சென்றிருக்கிறீர்கள். என்னைத் திரும்பி எங்கே போகச் சொல்கிறீர்கள் ?

திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்பொழுது அவர்கள் எடுத்திருக்கிற நிலையிலே மாற்றி முடிவினை எடுப்பார்களா என்றுதான் கேட்டேன். அவர்களை எங்கேயும் போகச் சொல்லவில்லை. இங்கேயே இருந்து அரசியல் பணி புரியவேண்டுமென்றுதான் விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள் : முதலிலே அப்படித்தான் சொன்னார், திரும்ப வருவாரா பெருமாள் என்று கேட்டார். அதற்காகத்தான் பதில் சொன்னேன். நான் எங்கேயும் பிரிந்து போகமுடியாது. நான் பிறந்த இடம் முத்துராமலிங்கத் தேவர் மடியிலே. வளர்ந்த இடம் பார்வார்ட் பிளாக். இருக்கிற இடம் பார்வார்ட் பிளாக். மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள், மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள் என்று சொல்கிறார்கள். ஏதோ மக்கள் செல்வாக்கு அவர்களுக்கு இருக்கிறது என்ற நம்பிக்கை இருக்கிறது. காரணம், இளமையான உள்ளங்களிலே தவறான கருத்துக்கள் பதிந்துவிடுவது மிகச் சுலபம். நல்ல கருத்துக்கள் பதிந்துவிடுவதும் உண்டு. தான் நினைத்தது சரி என்று இளம் உள்ளங்களுக்கு தோன்றலாம். தேர்தல் முடிவுக்குப் பின்னாலே நாங்கள் திரும்ப முடியாது. நாங்கள் இங்கேயே தான் இருப்போம். தீர்ப்பு வேறு விதமாக இருக்குமானால், கருத்து மாறுபட்டிருக்கிறது என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளலாம். திண்டுக்கல் தேர்தலிலே வெளிவருகிற கருத்து, தமிழ் நாடு முழுவதும் கருத்து மாறிவிட்டது என்ற கருத்தையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. காரணம் நான் தெளிவாகச் சொல்கிறேன். மக்கள் யார் யார் பக்கம் இருக்கிறார்கள் என்று பேசுவதெல்லாம் வெறும் வாய்ப் பேச்சாலே மட்டும் முடிவு கட்டுவதல்ல.

தேர்தல் களத்திலே சந்தித்து மக்கள் யார் பக்கம் என்று பார்க்க வேண்டும். அதைப்பற்றி விரைவாக பார்க்கப்போகிறோம். 'மே'யில் தேர்தல் நடைபெறப் போகிறது. இன்னும் $1\frac{1}{2}$ மாதம் மட்டும் இருக்கிறது. அதுவரையிலே பேசலாம், மக்கள் என் பக்கம், எங்கள் கொள்கையை ஆதரிக்கிறார்கள் என்று பேசலாம். ஆகவே, அவர்களுக்குச் சொல்வதெல்லாம், பொதுக் கூட்டங்களிலே பேசும்பொழுது நேர்மையாக, கண்ணியமாக பேசவேண்டும். இங்கே அத்தனை கட்சித் தலைவர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். நான் அவர்களைப்பார்த்து கேட்டுக்கொள்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்களைக் கூட்டினால், அங்கு பேச்சாளர்கள் பேசும்பொழுது, கலவரம் செய்யப்படுகின்றதா, அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்துப் பேசுகிற இடத்திலே கலவரம் ஏற்படுகிறதா என்று பாருங்கள்.

தமிழ் நாடு முழுவதும் புள்ளி விவரங்களைப் பாருங்கள். திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள், தோழமைக் கட்சிகள் கூட்டி இருக்கிற கூட்டங்களிலேதான் கல்லெறி நடைபெறுகிறது. அங்கு, தமிழரசு கழகம், பார்வார்டு பிளாக், முஸ்லீம் லீக், அல்லது திராவிட முன்னேற்றக் கழகக் கட்சிக்காரர்களாக கல்லெறிவார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கக் கூடிய இடங்களிலே கல்லெறி விழுந்தது எத்தனை இடங்களில் ?

ஆகவே, கூட்டங்களிலே நாம் பேசுகின்ற கருத்துக்கள், நாட்டு மக்கள் முன்னால் எடுத்து வைக்கக்கூடிய கருத்துக்கள், அவை தரமானவை, நியாயமானவை, உண்மையானவை. அது இந்த நாட்டு மக்களுடைய உள்ளத்திலே பதியச் செய்யப்படுமானால், தவறானவற்றை, மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று நான் பேசவிடாமல் தடுக்கவேண்டுமென்று அப்படி செய்கிறார்கள். அப்படிப்பட்ட கலவரம் ஏற்படும்பொழுது தான் போலீசார் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கிறார்கள். ஆகவே, சொல்லிக் கொள்கிறேன், சட்டம், ஒழுங்கை, பாதுகாக்கிற மிகச்சிறந்த தமிழ் நாடு போலீசாரை பாராட்டி, முதல்வர் அளித்த இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தில் அரசு ரூ. $22\frac{1}{4}$ கோடி வரையிலும் செலவழிக்க இருக்கின்றோம். அதற்கு அனுமதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு இதே மானியத்தில் ரூ. 20 கோடி வரையிலும் மானியக் கோரிக்கையாக ஒதுக்கப்பட்டு, முறையாகவும் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். அன்றாட மானியக் கோரிக்கைகளிலே எப்படி ஒரு பெர்பாமன்ஸ் பேப்பர் வைக்கப்படுகின்றதோ அதே மாதிரியாக இந்த மானியக் கோரிக்கையிலும் குறிப்பிட்ட சில தலைப்புகளின்கீழ் எவ்வளவு செலவழிக்கப்பட்டது. எப்படி நாம் திட்டமிட்டிருந்தோம் என்பதை இதற்கும் கொடுத்திருந்தால் பிளானிங் கமிஷன் குறிப்பிட்டது மாதிரி, ஒட்டுமொத்தமாக ஒவ்வொரு இலாகாவிலும் ஒதுக்கக்கூடிய பணம் முறையாக செலவழிக்கப்படுகிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியும். அதிலிருந்து சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 20 கோடி முறையாக செலவழிக்கப்படவில்லை என்று நான் சொல்லவில்லை.

இன்னும் இந்த ஆண்டு ரூ. 22 கோடி ஒதுக்கப்படுவதும் தவறான அடிப்படையிலே என்று நான் சொல்ல வரவில்லை. பொதுவாக, நமது போலீஸ் இலாகாவிற்கு கூடுமான அளவுக்கு நான் பின்னால் சொல்லக் கூடிய விவரங்களை வைத்துப் பார்த்தால், அதிகமாகக்கூட பணம் ஒதுக்கினால் தவறில்லை என்பதுதான். இந்த மானியக் கோரிக்கையின் பேரில் பல வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்களுடைய கட்சியின் சார்பிலும் இன்னும் மற்ற எதிர்க்கட்சிகளின் சார்பிலும் சில வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக,

'the need for the issue of instructions to all the police stations to take impartial action irrespective of political consideration whenever complaints are brought to police stations'

என்பதை ஒரு முக்கியமான விஷயமாக நான் கருதுகிறேன்.

அதற்கு நான் சில விவரங்களையும் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

அதேமாதிரி, 'the necessity of appointing I.P.S. officers alone as District Superintendents of police'
என்ற விஷயத்தைப் பற்றியும் சில விவரங்களை நான் சொல்லவிருக்கிறேன்.

அதேமாதிரி, 'the need to transfer officers who have put in a continuous service of more than three years in one place'

என்ற ஒரு விஷயத்தைப் பற்றியும் நான் சென்ற ஆண்டே குறிப்பிட்டு பேசி இருக்கிறேன். இந்த ஆண்டும் நான் அதைப்பற்றி சொல்லவிருக்கிறேன். சென்ற ஆண்டு நான் பேசுகின்ற பொழுது, அதுவும் எங்கள் சார்பாக தோழர் மணலி கந்தசாமி அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். இன்றும்கூட பல எதிர்க் கட்சித் தலைவர்களும் குறிப்பிட்ட விஷயம் என்னவென்றால், நேரடியாக நாங்கள் போலீஸ் இலாகா நிர்வாகம் சரியல்ல என்று சொல்லவில்லை. ஆனால், அரசு என்ன கொள்கையை வைத்திருக்கின்றதோ அந்தக் கொள்கையை அவர்கள் அமுல் நடத்துகிறார்கள். அதிலே கூட அபிப்பிராய பேதம் இல்லை. அவர்கள் அமுல் நடத்தும்போது, அமுல் நடத்துவதில், பாகுபாட்டோடும், பட்சபாதத்தோடும் நடத்த வேண்டும் என்ற அளவுக்கு நிர்ப்பந்தம் இருக்கிறது. அந்த நிர்ப்பந்தத்தின் காரணத்தினால் அவர்கள் சில இடங்களில் செயலற்றுப் போகிறார்கள். சில இடங்களில் அதிதீவிரமாக செயல்படுகிறார்கள் என்று சொன்னார். அதை நான் திருப்பிச் சொல்ல விரும்பவில்லை. பொதுவாகச் சொல்கிறாயே, நீ உதாரணம் சொல்ல முடியுமா என்று கேட்கலாம். எண்ணற்ற காரியங்கள் இருக்கின்றன. ஏதாவது தப்பு இருக்கிறது என்று சொன்னால், அந்த ஆபீசர் பேரிலே வெறுப்பு இருக்கிறதாக நினைக்கக்கூடாது. உதாரணம் வேண்டுமென்ற முறையில்தான் சில விவரங்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

முதலிலே, சென்ற ஆண்டு மானியத்திற்குப் பிறகு ஏற்பட்ட ஒரு முக்கியமான விஷயம் விவசாயிகளுடைய போராட்டம். அந்த விவசாயப் போராட்ட இயக்கத்திலே அரசினுடைய கொள்கைதான் பிரதிபலித்தது. அந்த அரசினுடைய கொள்கையை அமுல் நடத்தக்கூடிய காலத்தில் எந்த அளவுக்குப் போலீசார் சில இடங்களில் அத்துமீறி நடந்தார்கள்? எப்படி அந்த போராட்ட காலத்தில், பந்த் நடக்கின்றபொழுது, அதற்கு விரோதமாக இரண்டாம் தேதி அன்றே நாங்கள் எதிர்ப் பிரச்சாரம் செய்வோம் என்று தலைமையிலிருந்து கீழேவரையிலும் பிரச்சாரம் செய்ததும் இம்மாதிரியாக செய்தவர்கள் பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென்பதையும் நான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது சுட்டிக் காண்பித்தேன்.

ஆனால் அதே நேரத்திலே முதலமைச்சர் அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் என்றால் எல்லா கேஸ்களையும் நாங்கள் வாபஸ் வாங்கி விட்டோம், ஆகவே பிரச்சினை எழவில்லை என்று சொன்னார்கள். ஆரம்ப

காலத்திலே போலீசார் நடவடிக்கைகள் இருந்ததை வைத்துப் பார்த்தால் போலீசார் தன் பக்கம் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது ஆளும் கட்சியின் அதிகாரத்தைப் பெற்றவர்கள் தன்னிச்சையாகச் செயல்பட்டார்கள். அப்பொழுது நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் 17 பேர்கள் இறந்திருக்கிறார்கள். அந்த இடங்களை நான் படிக்க விரும்புகிறேன். பெத்தநாயக்கன்பாளையம், ஐயம்பாளையம், விருதுநகர், சாத்தூர், கோயில்பட்டி, மானாமதுரை ஆகிய இடங்களாகும். அந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நியாயமா இல்லையா என்பதை விசாரணை செய்வதற்கு இல்லாமல் போய்விட்டது. எங்கள் கட்சியின் சார்பாக விசாரணை வேண்டுமென்று கேட்டேன். அவர்கள் கொடுக்கவில்லை.

ஆளுங்கட்சியை ஆதரிக்கக்கூடிய கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள், எந்த இடத்திலே துப்பாக்கிப் பிரயோகம் நடந்தாலும் உடனடியாக இந்த அரசு விசாரணை நடத்துகிறது. ஆனால் சென்ற காலத்திலே இல்லை என்று சொன்னார்கள். இவர்களும் அமைக்கவில்லை என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் நெல்லை மாவட்டத்திலே கரிவலம்வந்த நல்லூர் என்ற ஊரிலே ஒரு அரிசன விவசாயி ஏதோ கேஸ் போடப்பட்டு கைது செய்யப்பட்டு போலீஸ் ஸ்டேஷனிலே வைக்கப்பட்டார். பிறகு அவர் இறந்துவிட்டார். போலீஸ் அடித்த காரணத்தினால்தான் இறந்துவிட்டார் என்று மக்கள் எல்லாம் நினைத்தார்கள். அந்தப் பிரேதத்தை எடுத்துப் போக வேண்டுமென்று அவர்கள் அனுமதி கேட்டார்கள், ஆனால் ஆர்.டி.ஓ. அதற்கு இணங்கவில்லையோ என்னவோ தெரியவில்லை. அதிலே போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதிலே 3 பேர்கள் இறந்துவிட்டார்கள். எனவே இன்றைக்கும் இப்படிப்பட்ட அத்துமீறிய காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இன்றைக்கு வரைக்கும் தெரியாது அதைப்பற்றி. எந்த விதமான விசாரணை நடந்தது என்பது தெரியாத மர்மமாக இருக்கிறது.

அதேபோன்று போலீஸ் துப்பாக்கிப் பிரயோகங்கள்; விருத்தாசலத்திலே சம்பவம் நடைபெற்றது. கண்ணமங்கலம் சம்பவம், இன்னும் பாளையங்கோட்டை சம்பவம் இவற்றைப்பற்றியெல்லாம் ஏற்கெனவே எடுத்துக்கூறி விட்டார்கள். இருந்தாலும் கண்ணமங்கலம் சம்பவம்பற்றி நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டுமென்று நினைக்கிறேன். அதற்குப் பதில் தேவை. கண்ணமங்கலத்திலே ஒரு பொதுக்கூட்டம் நடந்து முடிந்துவிட்டது. அங்கே நடந்தது சரியா இல்லையா என்பதற்குள் நான் போகவில்லை. அந்தப் பொதுக்கூட்டத்திலேயிருந்து சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகிறார்கள். அதைப் பற்றி டி.ஐ.ஜி. மறுநாள் அறிக்கை விட்டார்கள். அவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவேண்டுமென்று யாராவது கேட்டார்களா? நேரடியாக ஊருக்குப் போய் இருக்கலாம், அப்படி யில்லாமல் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்த காரணத்தினால்..............

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கூட்டம் முடிந்து ஏதோ அவர்கள் எல்லாம் கலகலப்பாக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று ஓய்வுபெறுகிறார்கள் என்று சொல்வது சரியல்ல. கூட்டம் நடைபெற்றபோது ஏற்பட்ட

கலவரத்தால் அவர்கள் தப்பியோடுவதற்காக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: டி.ஐ.ஜி. அவர்கள் அறிக்கை விட்டார்கள், அவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்திருக்கக்கூடாது என்று ......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டி.ஐ.ஜி. அந்த அறிக்கையை விடவில்லை. ஏதோ ஒரு பத்திரிகை போட்டு, மறுநாளே மறுப்பு அறிக்கை விடப்பட்டிருக்கிறது.

திரு. கே.டி.கே. தங்கமணி: அந்த டி.ஐ.ஜி. மறுப்பு அறிக்கை விடவில்லை. ஐ.ஜி. தான் மறுப்பு அறிக்கை விட்டார். அது அவருடைய அறிக்கைதானா அல்லது அரசின் அறிக்கைதானா என்று எனக்குத் தெரியாது. டி.ஐ.ஜி. அறிக்கை விட்டார், அதற்கு மறுப்பு அறிக்கை டி.ஐ.ஜி. விடவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் அறிக்கைதானா அல்லது அரசாங்க அறிக்கையா என்று என் சொல்லுகிறீர்கள், நீங்கள் விவரங்களைச் சொல்லுங்கள்.

திரு. நா. வீராசாமி: ஐ.ஜி. தான் டி.ஐ.ஜி.-க்கு மேலே இருக்கிறார். எனவே ஐ.ஜி. அவர்கள் மறுப்பு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதிலே என்ன தவறு என்று தெரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதையெல்லாம் முதலமைச்சர் இருக்கிறார்கள் அவர்கள் பதில் சொல்லும்பொழுது சொல்லட்டும்.

திரு. நா. வீராசாமி: நடக்காத தகவல்கள் எல்லாம் கொடுக்கிறார்கள் ....

Thiru R. PONNAPPA NADAR: The leader of the party may be allowed to speak. Otherwise what is the use of our continuing here and wasting our lungs.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஆகவே துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி இதோடு விட்டுவிடுகிறேன். ஆகவே கண்ணமங்கலம் விஷயமாக ஒரு தெளிவு ஏற்படுத்த வேண்டும். போலீஸ் இலாகா சார்பாக டி.ஐ.ஜி. விட்ட அறிக்கை தவறு, அவர் விடவில்லை என்றால்..........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டி.ஐ.ஜி. அறிக்கை விட்டார்கள் என்று சொன்னார்கள். அறிக்கை எழுதி யாருக்குக் கொடுத்தார்கள்? அந்த அறிக்கை எப்படி வந்தது என்று அவர்கள் தயவுசெய்து சொல்ல வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: எந்தமாதிரி ஐ.ஜி. அறிக்கை வந்ததோ அதேமாதிரிதான் டி.ஐ.ஜி. அறிக்கை வந்தது.............

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அறிக்கை என்றால் ஒரு நாலைந்து வரிகளாவது எழுதி, இப்படி இப்படி நடந்தது தவறு என்று டி.ஐ.ஜி. தெரிவிக்கிறார் என்று தெரிவித்தால் அது அறிக்கை. அப்படிப்பட்ட அறிக்கையை நாளைபதினம் திரு கே.டி.கே.தங்கமணி அவர்கள் காட்டுவாரா ?

திரு. கே.டி.கே. தங்கமணி: அப்படிப்பட்ட அறிக்கையை நான் வைத்திருக்கவில்லை. அறிக்கையை நான் பார்க்கவில்லை. டி.ஐ.ஜி. அறிக்கையை ஒரிஜினலை அனுப்புங்கள் என்று கேட்கவில்லை. ஐ.ஜி. அறிக்கையை ஒரிஜினலை அனுப்புங்கள் என்று கேட்கவில்லை.

I relied upon the newspapers. If the statement of the DIG is wrong, then the statement of I.G. is equally wrong.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அறிக்கை என்பதற்குப் பொருள் முதலிலேயே புரிந்துகொள்ள வேண்டும். திரு தங்கமணி அவர்களுக்கு அறிக்கை என்பதற்கு நிச்சயமாகப் பொருள் புரியாமல் இருக்கமுடியாது. ஒரு விஷயத்தை அவர்களே முன்வந்து கண்ணமங்கலத்திலே நடைபெற்றது, இப்படி இப்படி தவறு, எம். எல். ஏ., எம். பி. எல்லாம் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனார்கள் என்று டி.ஐ.ஜி. தெரிவிக்கிறார் என்று சொன்னால் அது தவறாகும். யாரோ ஒரு நபர் இப்படி டி.ஐ.ஜி. சொல்கிறார் என்று போட்டார், மறுநாள் டி.ஐ.ஜியை கூப்பிட்டுக் கேட்டபொழுது அப்படி ஒன்றும் தகவல் இல்லை என்று ஐ.ஜி அறிக்கை விட்டார்கள்.

திரு. கே.டி.கே. தங்கமணி: டி.ஐ.ஜி. அறிக்கை விட்டார். இப்பொழுது அந்த டி.ஐ.ஜியும் அங்கேயே இல்லை. அது வேறு விஷயம்.

திரு. நா. வீராசாமி: அந்த டி.ஐ.ஜி.தான் இப்பொழுதும் இருக்கிறார்.

Thiru K. T. K. THANGAMANI: I stand corrected.

திரு நா. வீராசாமி: தவறான தகவல்களைத் தருகிறார்கள்.. ....

Thiru K.T.K. THANGAMANI: Am I to get infotmation from this super Chief Minister? Is there another Chief minister here?

திரு. நா. வீராசாமி: எங்களுக்குத் தெரிந்த தகவல்களை நாங்கள் கொடுக்கக்கூடாதா ?

திரு. கே.டி.கே. தங்கமணி: போலீஸ் நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் சில விஷயங்களை நாங்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. இங்கிலாந்து தேசத்திலிருந்து ஸ்காட்லண்ட் யார்டு துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறவர் இரகசியமாக இங்கு வந்து போய்க்கொண்டிருந்தபொழுது சொன்னார். தமிழ்நாடு ஸ்டேட் போலீஸ் போல சிறப்பாக 'எஃபிஷியண்ட்' ஆக இருக்கிற போலீஸ் உலகத்திலேயே கிடையாது என்று சொன்னார்கள். அதிகாரிகள் ஊழல் ஆகட்டும், மற்ற ஊழல்கள் ஆகட்டும், எந்த ஊழலாக இருந்தாலும் சரி

We can safely entrust to special branch in Tamil Nadu என்ற அளவிற்குத் திறமையாகப் பணியாற்றுகிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மிக முக்கியமான கேஸ் நடந்தது. நாங்கள் மாணவர்களாக இருந்தபொழுது அதைப் படித்திருக்கிறோம். ஒருவர் கல்யாணம் செய்து ஒரு வருடத்திற்குப் பிறகு அவர் சம்சாரம் இறந்துவிடுவாராம். அதற்குப் பிறகு ஒரு கல்யாணம் அவர் செய்து ஆறு மாதங்களுக்குப் பிறகு அந்த சம்சாரமும் இறந்து விடுவாராம். விவாகம் முடிந்ததற்குப் பிறகு பணத்தையெல்லாம் அவர் எடுத்துக் கொண்டு அவரைக் கொலை செய்து டப்பில் மூழ்கடிக்கச் செய்துவிடுவாராம். நான் அந்தக் கொலை கேஸ் முழுவதையும் படித்திருக்கிறேன். 1967-ஆம் ஆண்டு முதல் 1972-ஆம் ஆண்டுவரை மிஸ்டரி மர்டர்ஸ் டிரக் மர்டர்ஸ் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட மர்டர்ஸ் நடந்திருக்கின்றன. பெத்தடின் இன்ஜக்ஷன் கொடுப்பது, ஓவர் டோஸ் ஆப் ஸ்லீப்பிங் பில்ஸ் கொடுப்பது இப்படி பீஸ்புல் மர்டர்ஸ், நான்-வயலன்ஸ் மர்டர்ஸ் செய்வது நடந்திருக்கிறது. இதிலே திறமையாக அயூப்கான் என்பவர் இருந்திருக்கிறார். சங்கரன் என்ற பெயரில் இருந்திருக்கிறார். போலீஸ் பிடித்தும் அவர் தப்பித்துப் போய்விட்டார். நம்முடைய போலீசார் அவரை திறமையாகப் பிடித்தார்கள். அயூப்கானை வேறு எந்த போலீசும் அப்படிப் பிடித்திருக்க முடியாது. அப்படிப்பட்ட திறமை மிக்கவர்கள் இந்தத் துறையில் இருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் ஹைதராபாத் போயிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்.

மாலை 6-00 இப்போது நூதனமான ஒரு கொலை கேஸ். அந்த கொலை எப்படியென்றால் சாதாரணமாக ஸ்மக்லர்களைப் பிடிக்கிற அதிகாரிகள் மாதிரி போய் அவன் பலஹீனமானவன் என்று தெரிந்தால் ஓவர் டோஸ் ஆஃப் ஸ்லீப்பிங் பில்ஸ் கொடுத்து பிணத்தை எறியக் கூடிய நிலைமை இந்த ஸ்டேட்டிலேயும் நடந்திருக்கிறது, வெளியே கொண்டு போய் கொலை செய்தார்கள் என்று பத்திரிகையில் பார்த்துச் சொல்கிறேன். என்ன விஷயமென்றால், இந்த இன்வெஸ்டிகேஷன் நடக்கிற போது அவர்கள் நேரடியாக வந்து இந்த குறிப்பிட்டவர்களைக் கைது செய்தவர்களை, திறமையாக இன்வெஸ்டிகேஷன் செய்தவர்களை பாராட்டும் வகையில் விருது கொடுக்கப்படவேண்டும். அவர்களுக்கு ஒரு ரெகக்னிஷன் இருக்கவேண்டும். பல சமயங்களில் என்ன ஏற்படுகிறதென்றால் பாடுபட்டு காரியம் செய்தவர்களுக்கு ரெகக்னிஷன் இல்லாமல் அதற்கு மேலே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு பலன் கிடைக்கிறது. எந்த அதிகாரியைத் தெரிந்தும் நான் இதைச் சொல்லவில்லை.

இப்படி பல சிறப்பான காரியங்கள் நடைபெறுகிறபோது இந்த அயூப்கான், மற்றவர்கள் எல்லோரையும் கைது செய்து ரெஜிஸ்டர் செய்ய உதவி செய்தவர்களுக்கு சன்மானம் தர வேண்டும், ரெகக்னிஷன் இருக்க வேண்டும். முன்பு கிங்ஸ் மெடல் தருவார்கள். அந்த மெடல் பெற்றவர்களுக்கு இருக்கக் கூடிய மதிப்பு வேறு மாதிரி இருந்தது. நான் இந்த போலீஸ் நிர்வாகத்தை குறைப்படுத்த வேண்டும் என்பது என் எண்ணம் இல்லை. அதற்காக இந்த ரைடரைப் போட்டுக் கொண்டேன். மதுரையைப் பொறுத்த வரையில் எனக்குத் தெரிந்த சில விவரங்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை ரேஞ்சு, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் சேர்ந்தது. அதற்கு ஒரு டி.ஐ.ஜி. இருக்கிறார். மதுரையில் ஏற்பட்ட சில சம்பவங்களை வைத்துக்கொண்டு, ஆளும் காங்கிரசினுடைய அந்தக் கட்சியின் தலைவர் ரத்தினம், ஸ்தாபன காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் நெடுமாறன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் சங்கரபாண்டியன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பாக நான் எல்லோரும் சென்றோம். அவரிடம் மகஜரைக் கொடுத்தோம். நாங்கள் பொறுப்பானவர்கள்தான். எந்தெந்த சம்பவங்கள் எந்தெந்த இடங்களில் நடந்தன, எங்கெங்கு ஆட்கள் வெட்டப்பட்டிருக்கிறார்கள், இப்படி. வெட்டப்பட்டதற்குக் காரணம் என்ன, அந்த இடத்தில் யார் தூண்டி விட்டார்கள் என்று எங்களிடம் விவரம் இருக்கிறது, நீங்கள் போலீஸ் இன்வெஸ்டிகேஷனிலே பாருங்கள், இப்படி தூண்டி விட்டவர்கள் நேரடியாக இருந்து கொண்டு அறிக்கைவிட்டு சொல்லக்கூடிய அளவிற்கு மதுரை நகரத்தில் இருக்குமானால் அந்த ஆசாமிகளை கைது செய்யாமல், அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்காமல் நீங்கள் எதை எதையோ செய்து கொண்டிருந்தால் எப்படி மக்களுக்கு போலீஸ் பேரில் நம்பிக்கை ஏற்படும் என்று எழுத்து மூலமாக கொடுத்தோம். கொடுத்த பிறகு டி.ஐ.ஜி. சொன்னார். இந்த விஷயமாக நீங்கள் ஐ.ஜியைப் பாருங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் ஐ.ஜியைப் பார்த்தோம். இதே விஷயத்தைச் சொன்னோம். மாணவர்கள் பிரச்னை ரொம்ப சிக்கலான பிரச்னை. சிறு விஷயத்திலே கூட அவர்கள் ஆவேசமாகக் கிளம்புகிறார்கள். போடிநாயக்கனூர் விவகாரம் மதுரை நகரத்தையே குலுக்கிக் கொண்டிருக்கிறது. அந்த மாவட்ட கலெக்டர் போய் சமாதானம் பண்ண முடியவில்லை. ஆனால் டி.ஐ.ஜி. சென்று சமாதானம் பண்ண முடிந்தது. நான் இதைப் பெரிய அதிகாரிகளிடத்திலே சொல்லி இருக்கிறேன். இந்த சமாதானம் பண்ணி வைத்த டி.ஐ.ஜி.யை மாற்றி விட்டார்கள். ஏன், அவர் 5 வருஷ காலமாக இருந்தாரா, 3 வருஷ காலமாக இருந்தாரா ? இரண்டு வருஷம் கூட ஆகவில்லையே. மாற்றுக் கட்சிக்காரர்கள் சொல்வதற்கு செவி சாய்க்கிறார்கள் என்பதற்காக டி.ஐ.ஜி. போன்றவர்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டது என்றால் I charge this Government of demoralising the honest officers at the top என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறேன். அவர் 3 ஆண்டுகள் இருந்தார் என்று சொல்லவேண்டும், 5 ஆண்டுகள் இருந்தார் என்று சொல்ல வேண்டும். அப்பேர்ப்பட்ட சிறந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் அதிகாரிகள்பேரில் எங்களுக்கு எந்தக் கோபமும் கிடையாது. மதுரை நகரத்தில் எவ்வளவோ கம்ப்ளெயிண்டு கொடுக்கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி கொடுக்கிறது. அந்த கேஸ்களை எடுக்காமல் இருக்கிறார்கள். அங்கேயிருக்கிற டி.எஸ்.பி. அழகாகப் பேசுகிறார், அன்பாகப் பேசுகிறார். ஆனால் நடவடிக்கை எடுப்பது கிடையாது. 3 தினங்களுக்கு முன்பு என் தொகுதியில் இருக்கிற பழங்கானத்தத்தில், அது மதுரையை ஒட்டியிருக்கிற பகுதி, மதுரை கார்ப்பரேஷன் ஒழுங்காக அமைக்கப்பட்டால் அது மதுரையில் வரக்கூடிய பகுதி. அந்த பழங்கானத்தத்தில் ஒரு தி.மு.க. பொதுக்கூட்டம் நடக்கிறது. அதில் மதுரை மேயர் பேசமுடியவில்லை. பிறகு அவர்கள் ஆட்களை வைத்துக் கொண்டு அந்த மேடையில் பேசுகிறார். அவர் அந்த மேடையில் பேசிய பேச்சை வைத்திருக்கிறேன். அவர் பேச ஆரம்பிக்கிற போது அவர் பேசினது, தங்கமணி

செத்துப்போயிட்டா நான் தான் தூக்கிப் போடணும், அவர் செத்துப் போனவுடனே தூக்கிப் போடறதுக்கு ஆள் கிடையாது. நான்தான் தூக்கிப் போடணும் என்று அவர் ஏன் சொல்கிருர். தங்கமணியைக் கொலே செய்து விடு, கொலே செய்ததற்குப் பிறகு தூக்கிப் போடறதற்கு நாங்கள் வருகிறோம் என்று மறைமுகமாக இப்போதுதான் பேசி யிருக்கிருர். அவர் மேல் என்ன நடவடிக்கை எடுக்கிறீர்கள்? இதே முதலமைச்சரவர்களே சென்னேயில் வைத்துக் கொண்டு இந்த கண்ணப்பர் திடலில் இவர் பேசவில்லேயா, எங்கள் கட்சித் தலேவர் கல்யாண சுந்தரம் அவர்கள் காலே வெட்டி சூப் போடுவேன் என்று பேசவில்லேயா, மறுக்க முடியுமா ? அக்டோபர் 8 ம் தேதி மதுரையில் வடக்கு மாசி வீதியில் முதலமைச்சரவர்களேப் பக்கத்தில் வைத்துக் கொண்டு பேச வில்லேயா ? நெடுமாறனே மேல மாசி வீதியில் சமாதி வைத்து விடுவேன் என்று பேசவில்லேயா ? இப்படியெல்லாம் உங்களுடைய கட்சியின் முக்கிய மான தலேவர் எங்கள் ரீஜனில் பேசுகிருர். அவர் மேலே எந்த விதமான நடவடிக்கையும் கிடையாது. Will it not demoralise the police?

போலீஸ் எங்கேயிருக்கிறது? மக்கள் போலீஸ் மேல் நம்பிக்கை இழந்து விடுவார்களாளுல் நம் கை தான் நமக்கு பலம் என்று எண்ணு வார்கள் என்பதை வேதனேயோடு சொல்கிறேன். முத்து அவர்கள் மேல் எனக்கு வெறுப்பு கிடையாது. நாங்கள் தனிப்பட்ட முறையில் நண்பர் கள் தான். அது அல்ல பிரச்னே. அவரை உங்களுக்குத் தெரியும், முத்து என்றுலே முரட்டுப்பிள்ளே என்று அண்ணு சொன்னுர்கள். பிரியமாக பேசக் கூடிய சமயத்தில் அண்ணு இப்படி சொன்னுர்கள். கவிஞர் * என்று எழுதினுர்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலேவரவர்களே, அந்த வார்த்தை களே சபை நடவடிக்கைகளிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

திரு. கே. டி. கே. தங்கமணி : விஷயம் என்னவென்றுல் உங்கள் கட்சியில் இருக்கிற முக்கியமான தலேவரோடு எங்களுக்கு கன்பிரான் டேஷன் இருக்கிறது. அவர் முரட்டுத் தனமாக பேசுவது மட்டுமல்ல, ஆட்களேத் தூண்டி விடுகிருர். நாங்கள் கவர்னர் இடத்தில் மகஜர் கொடுத்தோம். சிறையிலிருந்து பரோலில் வெளியே வந்திருக்கிருர் கள். அவர்கள் மேல் கேஸ் ரெஜிஸ்டர் பண்ணியிருக்கிறது.

பரோலில் இருக்கிறவர் உள்ளே போய் வெளியே வருகிருர். பரோல் வாங்கவேண்டுமென்றுல் ஹோம் செகரட்டரியைப் பார்க்க வேண் டும். பல பேர்களேப் பார்க்க வேண்டும். ஆளுல் அங்கு டெலிஃ போனிலேயே பரோல் நடக்கிறது. என்ன ஏற்பாடு இது. அதிகாரிகளே நடுங்க வைத்திருக்கிருர்கள். ஜில்லாவில் இருக்கக் கூடிய பெரிய அதிகாரி களெல்லாம் இன்றைக்கு அவர்கள் சொன்னபடி செய்யவேண்டும். இல்லாவிட்டால் என்ன ஏற்படுமோ என்ற நிலேமை ஏற்பட வைத்தால் போலீஸ் நிர்வாகத்திற்கு இது எந்த அளவிற்கு உற்சாகம் ஊட்டும் என்ற அளவிற்குத் தான் இதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலேவர் : மேயர் முத்து அவர்களேப் பற்றி சொன்ன வார்த்தைகளே வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலேவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி :

* * *

திரு. இராம. அரங்கண்ணல் : குறுக்கீடு.

திரு. கே. டி. கே. தங்கமணி :

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலேவர் : யாரோ முத்து அவர்களேப் பற்றிச் சொன்னுர்கள் என்றுல், எந்த நேரத்தில் எப்படி சொன்னுர் என்று தெரியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : அவரே முத்துவை நண்பர் என்று சொன்னுர் * * அவ்வளவு தான்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அண்ணு அவர்கள் *முரட்டுப் பிள்ளே என்று சொன்னுர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலேவர் : இந்தப் பேரவையில் இல்லாத அவரை விமரிசனத்திற்கு ஆளாக்குவது நல்லதல்ல.

* * * *

திரு. கே. டி. கே. தங்கமணி :

* * * *

என்னே கொலேகாரன் என்று சொல்லியிருக்கிருர்கள். நம் நிலேமை என்ன என்று தெரியும். நான் கொலேகாரன், அப்போதுதான் முதல் தடவையாக பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே அந்த பிரிட்டிஷ் ஆட்சியை கவிழ்ப்பதற்காக தொழிற்சங்கத்தையும், அரசியல் கட்சியை யெல்லாம் ஏற்பாடு செய்தார்கள் என்று என் பேரில் சதி வழக்கு போடப்பட்டது. 1946-இல் போடப்பட்டது. இது நம் அமைச்சர்களுக்குத் தெரிவது நல்லது. சட்ட அமைச்சருக்குத் தெரிவது நல்லது. ஒரு வருஷ காலம் மதுரை சிறையில் இருந்தேன். சதி வழக்கு போடப் பட்டிருந்தது, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில். அன்றைக்கே அந்த கோர்ட் கொலேயும் பண்ணவில்லே, சதியும் பண்ணவில்லே என்று தீர்ப்பு கொடுத் தது. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நான் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினேன், அந்த பொதுக் கூட்டத்திலே முத லமைச்சரை கொலே செய்ய வேண்டுமென்று பேசினேன் என்று என் பேரில் கேஸ் போட்டிருக்கிருர்கள்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலேவர் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

அந்தக் கேஸை போட்டது பற்றிக் கவலை இல்லை. 117-வது பிரிவின்படி 3 வருஷம் போய் ஜெயிலில் இருந்துவிட்டு வருகிறேன். நான்கு வருஷம் நான் பாதுகாப்புக் கைதியாக இருந்தவன். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஒரு வருஷம் ஜெயிலில் இருந்தேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பாதுகாப்புக் கைதியாக 4 வருஷங்கள் இருந்தேன். பிறகும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஓராண்டு காலம் இருந்தேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மூன்றாண்டுக் காலம் சிறை செல்வதைப் பற்றி ஒன்றும் கவலைகிடையாது.

ஏற்பட்டிருக்கும் நிலை என்ன? அக்டோபர் மாதத்திற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வந்ததற்குப் பிறகு ஏற்பட்ட சில நிகழ்ச்சிகளைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரிவு ஏற்பட்டவுடனேயே 13—10—1972-ல் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் ஒரு தலையங்கம் எழுதினார்கள்.

For many years the D.M.K. enjoyed the reputation of a party that was immune from schisms. Practically every prominent party in the country has suffered divisions. There can, however, be no doubt that the D.M.K. after schisms will not be the party it was.

20-10-1972-ல் மெயில் பத்திரிகையில்,

The inevitable has happened. Like many other political parties in the country the D.M.K. also stands divided. Opposition parties will exploit it to weaken Ruling Party. Fair name of Tamil Nadu is not to be tarnished.
என்று எழுதியிருக்கிறார்கள்.

இதை எல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அப்படிப் பிரிந்த பிறகு நாட்டில் பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. காங்கிரஸ் கட்சி கூடத்தான் இரண்டாகப் பிரிந்தது. இப்போது ஆளும் காங்கிரஸ் என்றும் ஸ்தாபன காங்கிரஸ் என்றும் இரண்டாக இருக்கிறது. ஆளும் காங்கிரஸ் பல மாநிலங்களிலும், மத்தியிலும் ஆட்சியில் இருக்கிறது. ஸ்தாபன காங்கிரஸ்காரர்கள் என்பதற்காக கேஸ்களைப் போட்டு தொந்தரவா செய்கிறார்கள்? நீங்கள் என்ன செய்கிறீர்கள்? கேஸ்களைப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நெல்லை மாவட்டத்தில் 4,000 பேர் மீது 300 கேஸ்கள் போட்டிருக்கின்றீர்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் மீது 10,000 பேர் மீது கேஸ்கள் போட்டிருக்கிறார்கள். இப்படி கேஸ்களைப் போட்டு அரசியல் நடவடிக்கையை முடக்க வேண்டுமென்று யார் யோசனை சொல்லிக் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. சொல்லிக் கொடுத்தவர்கள் புத்திசாலிகளாக இருக்க மாட்டார்கள். இந்த ஆட்சிக்கு நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சியை முடக்க வேண்டுமென்பதற்காக கேஸ்களைப் போட்டால் தாவாவுக்காக அலையட்டும், ஜாமீனுக்குப் போகட்டும், பலபேர் மேல் கேஸ்கள் போடுவதன் மூலம் அவர்கள் டிமாரலைஸ் ஆவார்கள் என்ற முறையில் குறுக்கு வழியில் அரசியலை அரசியலில் சந்திக்காமல் கேஸ்களைப் போட்டுச் சந்திப்பதானது, அயூப்கானைப் பிடிக்க

போலீசாரை "தங்கமணியைப் பிடி" என்று சொல்லும் நிலைக்கு வந்துவிட்டது. அயூப்கானைப் பிடித்த போலீசாரை உலகம் பூராவும் இவ்வளவு திறமையாகச் செய்தார்களே என்று பாராட்ட வேண்டும் என்று சொல்வேன்—என் கையில் அதிகாரம் இருந்தால், அதே போலீசாரை விட்டு தங்கமணியைப் பிடி என்று சொன்னால் என்ன சொல்லுவார்கள்? ஐயா உனக்கு வேறு வேலை இல்லையா? தங்கமணி ஓடியா போய்விடப் போகிறார்? சட்டசபைக்குத்தான் செல்லப் போகிறார் என்றுதான் சொல்லுவார்கள். இந்த அரசு திறமையான போலீசாரைக் கொண்டு வந்து அரசியல் வஞ்சம் தீர்க்கும் முறையில் எதிர்க்கட்சிகளின் பேரில் இந்த நடவடிக்கைகளை எடுக்கிறது என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

இன்னொன்று 4-9-1972-ல் a letter to the Inspector-General of Police from one Mani of Kaveripatti Agraharam against the Circle Inspector. The I.G. was pleased to order enquiry by D.S.P. instead of transferring Ganapathy Gounder (that is the Sub-Inspector, I think) the D.S.P. was transferred. He was replaced by one Perumal. I do not know who he is. People wanted Ganapathy Gounder to be transferred. There was an order. But Ganapathy Gounder is still there. There is another Subramanya Gounder, Circle or Sub-Inspector in Kumarapalayam. These two people are irremovable. Any order passed by the I. G. will have no effect on them.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஃபிளவர் பஸார் போலீஸ் ஸ்டேஷனில் நிரந்தரமாக ஒரே சப் இன்ஸ்பெக்டர் சப் இன்ஸ்பெக்டராகவே இருந்து நிடையராணர் என்று சொல்வார்கள். அதேமாதிரி நிரந்தர நிலைபெற்ற கணபதி கவுண்டர், சுப்பிரமணிய கவுண்டர் "ஆர் சம் அதர் கவுண்டர்."

சில சம்பவங்கள் நடந்திருப்பது அதிர்ச்சியைக் கொடுக்கிறது. சமீபத்தில் போலீஸ் கான்ஸ்டபிள் படுகொலை செய்யப்பட்டார். ஜீப் டிரைவராகப் போய் மர்மமாக இறந்து கிடந்தார். அதிலே முழுமையாக விசாரணை நடந்ததா? அதிலே முழுமையான விசாரணை நடந்தால்தான் கான்ஸ்டபிள்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும்.

ராயபுரத்தில் எஞ்சினியருடைய ஒய்பு, மதர்-இன்-லா பிராட் டேலேட்டில்—

Four people attacked her, wife died on the spot—Mother-in-law had skull injury

இந்து பத்திரிகையில் வந்ததைத்தான் சொல்லுகிறேன்.

But now it is said that mother-in-law has arranged for the murder of daughter-in-law
சிரிப்பதா? அழுவதா? தெரியவில்லை. டாட்டர்-இன்-லா செத்துவிட்டார்.

திரு. துரைமுருகன் : வழக்கு இருக்கிறதா ? வழக்கு இருந்தால் இதைப் பாதிக்காதா ?

திரு. கே. டி. கே. தங்கமணி : I only said that it is now said that mother-in-law has arranged for murder of daughter-in-law. you can draw your own conclusions.

இன்னொன்று, ஆர். வி. கிருஷ்ணய்யர் "சன்" ஆர். கே. பாலசுப்பிரமணியம் 14—3—1973 அன்று

Crowd of hooligans attacked me. I am demanding police protection both for myself and father என்று கூறியிருக்கிறார்.

இன்னொன்று, (மணி அடிக்கப்பட்டது) ஐந்தாறு பாயின்ட்தான்.

I am not going to develop. This is what he had written, I do not know whether the report is correct. It must be checked.

இன்னொன்று, க்ளைவ் ஹாஸ்டல் சம்பந்தப்பட்டது. பாளையங்கோட்டை சம்பவம் நடந்திருக்கிறது. பாளையங்கோட்டையும், ஸ்ரீரங்கமும் நடக்கிறது என்று சொன்னால் என்ன நிலைமை ? ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர், ஒரு எஸ். பி.யை டிஃபை பண்ணி அன்றைக்கு நடந்து கொண்ட சம்பவங்கள் இருக்கின்றன. அன்றைக்கு நடந்தது வேறு, இன்றைக்குச் சொல்வது வேறு. இதிலே ஏதாவது இன்ஃபுளுவன்ஸ் நடக்கிறதா என்ற ஐப்பாடு இருக்கிறது. போலீஸ் அதிகாரி கோயிலுக்குள் போய்ப் பட்டரை அடிக்கிறார். எந்த தைரியத்தில் அடிக்கிறார்? இவர்கள் கொஞ்சம் பேர்தான். எல்லோரும் மோசம் என்று சொல்லவில்லை. இப்பேர்ப்பட்ட ஆட்கள் என்ன செய்தார்கள் ? இவர்களுக்கு இருக்கக்கூடிய உறவுகள் என்ன? மேலதிகாரியை மதிக்க மாட்டேன் என்கிறார்களே.

இன்னொரு சிறு விஷயம், திரு. அன்பழகன் அவர்கள் வருத்தப்பட்டுச் சொன்னார்கள். எங்கள் கட்சியைப் பொறுத்தமட்டில் தனிப்பட்ட பயங்கர வாதத்தில் நம்பிக்கை இல்லாத கட்சி. லட்சக் கணக்கான பேர் போய் கலகம் பண்ணலாம். ஒருவரை வீட்டில் கொலை செய்ய வேண்டுமென்ற கொள்கையை நிராகரித்தவர்கள் நாங்கள். அதை "மாவோயிஸம்" என்று சொல்வதுண்டு. அதைத்தான் புரட்சி வாதம் என்று சொல்வார்கள். நாக்சலைட்டிசம் என்றும் சொல்வார்கள். அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சீஃப் மினிஸ்டரைக் கொலை செய்ய வேண்டுமென்று சொல்பவன் கம்யூனிஸ்டாக இருக்க மாட்டான். (குறுக்கீடு) குரூப்பாகச் செய்தால் அது மோதல், வேறு விஷயம்.

When there is clash and some people are killed it is a different matter. There may be a big class struggle. If a class organisation asks two or three people to go and murder some persons, it is a crime even in the annals of communist history.

அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்.

திரு. அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். ராஜபாளையத்திற்குப் போயிருக்கும்போது தாக்கப்பட்டதாகச் சொன்னார்கள். வருத்தப்படுகிறேன்.

25—2—1973-ல் ஆவடிக்கு திரு. கல்யாணசுந்தரமும், திரு. எம் ஜி. ஆரும் போனார்கள். நாங்கள் எல்லோரும் கார் வைத்திருக்கக்கூடிய அளவில் இல்லை. கட்சியிலிருந்து கல்யாணசுந்தரத்திற்கு ஒரு கார் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஒரு காரை வைத்துக்கொண்டு பல கார் இருப்பது போல் பெரிய வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இந்த ஒரு கார் பல காராக வேலை செய்கிறது. இந்த ஒரு காரைத் தவிர வேறு கார் கிடையாது.

அகில இந்திய ரீதியில் கட்சிக் கொள்கைகளை நிர்ணயிப்பதில் எனக்கும் பங்கு உண்டு. ஒரு கார்தான் இருக்கிறது. அதில் போகிறார் ஆவடிக்கு. எம்.ஜி.ஆரும் கல்யாணசுந்தரம் அவர்களும் போகிறார்கள். முன்னால் ஒரு லாரி போகிறது. இது ஒரு பதிய மோடஸ் ஆப்பரான்டி. ஸ்லோ செய்து கடப்பாறையால் குத்தியிருக்கிறார்கள். எவ்வளவு பேர்கள் மேல் நீங்கள் கேஸ் போட்டிருக்கிறீர்கள் ? அவர் எவ்வளவு பெரியவராகத்தான் இருக்கட்டும். அந்த இடத்தில் இருந்துகொண்டு இதைச் செய் என்று சொன்னவரை கைது செய்தீர்களா ? என்னைக் கைது செய்யவில்லையா ? எம்.ஜி.ஆர்., கல்யாணசுந்தரம் என்றால் பரவாயில்லை என்று சொன்னால் எங்கே போய்ச் சேருமோ.

காளிமுத்து அவர்கள் சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் அ.தி.மு.க. செயலாளரை கூட்டம் முடிந்து வந்தவுடன் ரகசியமாகச் சென்று வழிமறித்து முள் செடியில் தள்ளி மிதிக்கிறது என்றால் யார் அதிகாரம் கொடுத்தார்கள் ?

இராஜேந்திரன் இன்று ஆஸ்பத்திரியில் கிடக்கிறான். ஒரு கால் போய் விடும், அதற்காக யாரையாவது கைது செய்தீர்களா ?

ஸிம்ஸனில் ஒரு கொலை நடந்தது. இரண்டு பேர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அந்தச் சமயத்தில் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள், எந்தத் தொழிலாளியும் கொலை செய்யப்படுவதை நான் விரும்பவில்லை என்று.

பிரதாப்சந்திரன் கொலை செய்யப்பட்டார். கண்ணன் ஐயங்கார் கொலை செய்யப்பட்டார். பிரதாப்சந்திரன் கொலைக்கு பிறகு எடுத்த அளவிற்கு கண்ணன் ஐயங்கார் கொலை செய்யப்பட்டதன் பேரில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா? நியாய உள்ளம் படைத்த போலீஸ் அதிகாரிகள்......

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கண்ணன் ஐயங்கார் கொலைபேரில் வழக்கு போட்டு, ஒரு கோர்ட் முடிந்து, அடுத்த கோர்ட்டுக்குப் போயிருக்கிறது. ஆனால் அந்த வழக்கு தொடரவே இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : உடனே குசேலரை ரவுண்டப் செய்தார்கள். பிரதாப் சந்திரன் விஷயத்தை பெரிதுபடுத்தினார்கள். கண்ணன் ஐயங்கார் விஷயத்தை அரசியல் ஆக்கினார்கள். இரண்டு கொலைகள்

நடந்தன. அந்தக் கொலைகளின் பேரில் போலீஸ் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக அரசாங்கத்தில் உள்ளவர்கள், அமைச்சர்கள், ஆகியோர் அதை பெரியதொரு பிரசினையாக ஆக்கி தமிழ்நாடு பூராவிலும் பிரதாப்சந்திரன் கொலை செய்யப்பட்டது பற்றி பெரிதாக்கப் பட்டது. அதற்குத்தான் முத்தண்ணன் பேசினார். மதுரைக்கு வந்தால் என் காலை வெட்டிவிடுவேன் என்று. உங்கள் விராப்புள்ள பிரசங்கிகள் எல்லாம் அதுபற்றிப் பேசினார்கள். கண்ணன் ஐயங்கார் கொலை பற்றியும் பிரதாப் சந்திரன் கொலை பற்றியும் போலீஸ் எடுத்த முறை சரிதானா என்று கேட்கிறேன்.

<u>திரு. துரைமுருகன் :</u> எங்கள் கட்சியைச் சார்ந்தவர் பிரதாப் சந்திரன். ஆகவே அதைப்பற்றிக் கூறுகிறோம். கண்ணன் ஐயங்கார் அல்லது ராமாநுஜ ஐயங்கார் கொலை செய்யப்பட்டால் அதைப் பற்றி நாங்கள் என்ன பேசுவது ?

<u>திரு. கே. டி. கே. தங்கமணி :</u> அது "பைகன் லாஜிக்". பத்து, இருபது ஆண்டுகள் என்று ஹெட் கான்ஸ்டபிள்கள், சப்-இன்ஸ்பெக்டர்களாக இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் கன்பேர்ம் செய்யவேண்டும். மதுரையில் உள்ள ரிசர்வ் போலீசுக்கு டீ.ஏ. போன நவம்பர் மாதத்திலிருந்து கிடைக்கவில்லை.

மதுரையிலும், இராமநாதபுரத்திலும் ரிசர்வ் போலீஸ் இருந்து வருகிறார்கள். இரண்டு ஆண்டுகளாகச் சொல்லிவருகிறேன். அவரவர்களுக்கு இன்னும் வாட்டர் சப்ளை கிடைக்கவில்லை. எங்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று துரைமுருகன் போன்றவர்களும் சொல்கிறார்கள். சில பேர்கள் எங்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு கட்சியின் சார்பிலும்—கிருஷ்ணமூர்த்தி அவர்கள்கூடச் சொன்னார்கள்—வக்கீல்களைப் போட்டு, நாங்களும் ஒரு வக்கீல் போடுகிறோம், ஜில்லாவிற்கு நூறு போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கும், அதிலுள்ள கேஸ்கள், இப்படி வரக்கூடிய அரசியல் கேஸ்கள் எப்படி நடத்திருக்கின்றன என்பதுபற்றி, ஐந்து வக்கீல்கள் சேர்ந்து, ஆராய்ந்து ஃபாக்சுவல் ரிப்போர்ட் கொடுக்கவேண்டும். எல்லா ஜில்லாக்களிலும் உள்ள ரிப்போர்ட்களை வைத்துக்கொண்டு அதிகாரிகள் என்ன செய்யலாம் என்பது பற்றி எல்லா கட்சிகளும் சேர்ந்து ஆலோசித்து செய்யலாம். அப்படிச் செய்தால் மக்களுக்கு ஓரளவிற்கு நம்பிக்கை ஏற்பட முடியும்.

அடுத்தபடியாக, ட்ருன்ஸ்பர்ஸ். சாதாரண போலீஸ் கான்ஸ்டபிள்களை அந்த ரேஞ்சைவிட்டு அதற்கப்பால் டிருன்ஸ்பர் செய்யவேண்டாம். ஆப் ட்யூட்டிக்கு ரூ. 1 என்றும் ப்ரீ பீடிங்-க்கு ரூ. 2 என்றும், ஆபீசர்களுக்கு ரூ. 4 என்றும் இருக்கிறது. பின்னர் பென்ஷன் பேமெண்ட்டுக்காக கமிஷனர் ஆபீஸ்க்கு ஒரு ஆண்டு, ஒன்றரை ஆண்டுக்கு மேல் அலையும் போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். இதெல்லாம் சீக்கிரம் கிடைக்கும் படிச் செய்யவேண்டும். பூங்காவனம் என்ற தோழரது விறகுக் கடையை நெருப்புவைத்து விட்டார்கள். யார் செய்தார்கள், என்ன சங்கதி ? போலீஸ் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

<u>திரு. கே.வ. மதியழகன் :</u> துணைத் தலைவர் அவர்களே,

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> தயவு செய்து இருபது நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

<u>திரு. கே. வ. மதியழகன் :</u> எனக்கு ஒரு மணி நேரம் கொடுத்தால் நிதானமாக பேச முடியும். எவ்வளவு நேரம் என்று சொல்லுங்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> என்னைக் கேட்க வேண்டாம். எனக்கு பேசக் கூடாது என்று மறுப்பில்லை. காலையிலிருந்தே உட் கார்ந்து கொண்டிருக்கிறோம். காலையிலேயே முடிந்து விட வேண்டியது. நிறைய பேர்கள் பேச வேண்டுமென்று பிற்பகலுக்கு இதை நீட்டித்தி ருக்கிறோம். ஆகவே 7 அல்லது 7–30 மணி அளவிலாவது நான் பேசுவதற்கு வழி செய்தால் பரவாயில்லை.

<u>Thiru R. Ponnapa Nadar :</u> I should also get sufficient time, Sir.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> ஸ்தாபன காங்கிரஸ் 2 பேர்கள். கம்யூனிஸ்ட் கட்சியில் 2 பேர்கள், லீகில் இருந்து 2 பேர்கள், உங்கள் கட்சியில் இருந்து மூன்றுபேர்களுக்கு சான்ஸ் கொடுத்திருக்கிறோம்.

<u>திரு. கே. வ. மதியழகன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின் கீழ் இன்று காலை முதல் இவ்வளவு நெடிய நேரம் விவாதம் நடைபெற்றிருக்கிறது. இவ்வளவு நேரம் அமர்ந்திருக்க முடியவில்லை. இன்னும் ஒரு மணி அல்லது ஒன்றரை மணி நேரத்திற்குள் என்னைப் பேச அனுமதித் தீர்களானால் நன்றாயிருக்கும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த விவாதமே நடைபெறக்கூடாது என்ற நிலை ஏற்படவேண்டும் என்பதைதான் யாரும் பொதுவாக விரும்புவார்கள்.

காவல் துறை மானியம் என்பது, பொதுவாக சுயராஜ்யத்திற்கு முன்னர் போலீஸ்காரர்கள் என்றால் சட்டத்தைப் பாதுகாப்பதற்காக இருப்பவர்கள், தடியடி செய்பவர்கள், வெள்ளைக்காரனுக்கு கைக் கூலிகளாக இருப்பவர்கள் என்ற அபகீர்த்தி இருந்தது. அன்றைய நிலைமை அப்படித்தான். சட்ட, ஒழுங்கைப் பாதுகாப்பதற்காகவும், வெளி நாட்டு வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்திற்கு பணி செய்வது என்பதற் காகவும்தான் போலீஸ் என்ற நிலைமை மாறி, பிரம்மாண்டமான ஒரு இயக்கத்தின் மூலம் பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்கள் இன்னுயிரை நீத்து, பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் போன்றவர்கள் தூக்கில் இடப்பட்டு, மாண்ட்லே சிறையிலே சுபாஷ் போஸ் போன்றவர்கள் சிறையில் வாடிய பிறகு, பலர் தங்கள் இன்னுயிரை மாய்த்ததன் விளைவாகத்தான் இந்திய உப கண்டம் விடுதலை அடைந்தது.

விடுதலை பெற்ற பிறகு போலீஸ் ராஜ் ஆக இருந்ததை க்ஷேமநல சர்க்காராக ஆக்குவதற்கு இருபத்தைந்து ஆண்டுகளாக முயன்று ஏற்படுத்தியிருக்கிறோம். போலீஸ் ராஜ்-ல் இருந்த அமைப்பு மாறவேண்டும் என்று போலீஸ்காரர்களும் மாறிக்கொண்டு வருகிறார்கள். இன்று மக்களின் வாக்குகளை வாங்கி வந்தவர்கள் அவர்களுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கிறார்கள். கட்டளை பிறப்பிப்பவர்களின் போக்கில் சில தாறுமாறான நிலைகள் ஏற்படுவதால் அடிக்கடி சில காரியங்கள் நடைபெறுகின்றன. அந்தப் போக்கு மாற வேண்டும்.

ஒரு சந்தோஷமான காரியம். நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்தால் இங்கு போலீஸ் அதிகாரிகள், ஐ.ஜி., டி.ஐ.ஜி., போலீஸ் கமிஷனர் போன்ற அதிகாரிகள் காக்கி உடையில்தான் இங்கு வந்து உட்கார்ந்திருப்பார்கள். நமக்கு கூட பயமாக இருக்கும். இன்று அந்த நிலைமாறி, ஐ.ஜி. அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். சென்னை நகர போலீஸ் கமிஷனர் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள், இவர்கள் எல்லாம் சாதாரண உடையில் வந்திருக்கிறார்கள். இதைப் பாராட்டுகிறேன். காரணம் அவுட்லுக், மனோபாவம் மாறியிருப்பதால்தான், காலையில் நடந்த விவாதத்தைப் பற்றிச் சொல்லவில்லை. சூடாகவும் இருந்தது, வெம்மையாகவும் இருந்தது, ஆனால் ஒளி பெறவேண்டும் என்பதுதான். விவாதம் பெரிய காரியம் அல்ல. நாட்டில் இன்று ஒரு அசாதாரண நிலை இருக்கிறது.

நான் மிகுந்த வேதனையோடு பேசுகிறேன். எனக்கு ஒன்றும் ஆத்திரம் இல்லை. நான் 20—25 ஆண்டுகாலமாகத் தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளில் பார்த்து இருக்கிறேன். இன்று ஒரு பெரிய நிலை இருக்கிறது. இது விரும்பத்தக்க நிலையல்ல. அந்த நிலையை மாற்றுவதற்கு எந்த அளவுக்கு தவறிவிட்டது, எந்த அளவுக்கு திருத்திக்கொள்ளலாம் என்பதற்கு, நாங்கள் கேள்வி கேட்பதும், நீங்கள் சமாதானம் சொல்லும் சமயமும் இது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மிகுந்த பணிவன்போடு, மிகுந்த அடக்கத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று இருக்கும் நிலவரங்களை நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தங்கமணி அவர்கள் நன்றாக எடுத்துச் சொன்னார்கள். 1972-ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால் அதை 2 பகுதியாகப் பிரிக்கலாம். எல்லா விவரங்களையும் முதல் 6 மாதங்கள், 8 மாதங்கள் என்ற வகையில் சொல்லிக்கொள்ளலாம். அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய பிளவின் காரணமாக, திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஏற்பட்ட தவிர்க்க முடியாத அரசியல் காரணமாக ஏற்பட்டு இருக்கும் கொந்தளிப்பின் காரணமாக இன்று நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலை பாதித்து இருக்கிறது, இந்த அரசின் போலீஸ் பாலிசியால் தான் இந்தத் தவறு ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பொறுப்புள்ள முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் ஆர்வத்துடன், ஆத்திரப்படாமல், நிதானத்துடன் கவனிப்பதற்குக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய திறமையை நான் குறை கூறவில்லை. அவர்கள் திறமை இல்லாவிட்டால் முதலமைச்சராக

இந்த 4 ஆண்டுகாலமாக இந்த மாநிலத்தை ஆண்டு இருப்பார்களா? அவர்கள் திறமை இல்லாவிட்டால் இவ்வளவு தூரம் கட்டிக் காத்துக்கொண்டிருக்கும் நிலை இருக்குமா? ஆனால் அவர்கள் எந்தக் காரியத்திற்காக இந்தக் காரியங்களில் ஈடுபட்டார்களோ அதிலே பெரிய தவறுகள், பெரிய ஊனங்கள் நிரம்ப இருக்கின்றன.

(திரு. நா. வீராசாமி தலைமை.)

நான் முதல் பகுதியை எடுத்துக்கொள்கிறேன். 12 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்து இருக்கின்றன. அது ஒரு சாதனை. மாதத்திற்கு ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று இருக்கிறது. 17 தடியடிப் பிரயோகம் (குறுக்கீடு) இருக்கலாம். கணக்கிலே எனக்கு ஒன்றும் இல்லை. இத்தனை துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்று இருக்கின்றன. இவ்வளவு பேர் துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிற நேரத்தில் எல்லாம், ஆந்திராவில் நடைபெறவில்லையா, இந்திரா காந்தி அவர்களுடைய ஆசிர்வாதம் பெற்ற ஆட்சியில் இல்லையா என்று நீங்கள் சொல்வது, அண்ணா அவர்களின் வழியில் வந்த முதலமைச்சருக்கு உகந்தது அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1967–68-ல் துப்பாக்கிப் பிரயோகத்தில் 12 பேர் இறந்து இருககிறாகள்.

திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் சொல்கிறேன். அண்ணா அவர்கள் காலத்தில் கூட நடந்து இருக்கிறது. தம்பி காலத்தில் நடந்தால் என்ன, அண்ணாவிற்கு மீறிய தம்பியாகி விட்டீர்கள். அதை நான் சொல்ல விரும்பவில்லை. ஒவ்வொரு உயிரும் புனிதமானது. அரங்கண்ணல் கூட காலையில் கேட்டார்கள். ஆந்திராவில் 100 பேர் இறந்தார்கள் என்றால் இங்கேயும் 2 பேர் இறக்கவேண்டுமென்பதல்ல. "எவ்வரி லைப் ஈஸ் சேக்ரட்" ஒவ்வொரு உயிரும் புனிதமானது. ஒவ்வொருவர் வாழ்க்கையும் புனிதமானது.

every life is sacred-inherent and inalienable right to live. 4 கோடி மக்கள் 400 கோடி கஜானாவை மட்டும் கொடுக்கவில்லை. இந்த நாட்டில் இருக்கும் 4½ கோடி மக்களின் உயிரையும், உடலையும் அவர்களுடைய சொத்துக்களையும் பாதுகாக்கும் பொறுப்பையும் கொடுத்து இருக்கிறார்கள். ஒரு உயிர் போய்விட்டால், வசனத்தில் சொல்வீர்களே, அந்தத் தாயாருக்கு மகனைக் கொடுக்க முடியுமா, அந்தத் தாலி இழந்த மனைவிக்கு கணவனைத் திருப்பிக்கொடுக்க முடியுமா, 400 கோடி ரூபாயை உங்கள் எதிரில் கொட்டலாம், போன உயிரை கொடுக்க முடியுமா, அப்படி ஒரு பொறுப்பிலே, அந்த அளவு கோலிலே இந்தப் பிரச்னையை ஆராய வேண்டுமே தவிர எத்தனை துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்று இருக்கின்றன இங்கே, மற்ற மாநிலங்களில் எவ்வளவு என்ற விவகாரங்களில் முதலமைச்சர் அவர்கள் சென்றால், அது அவர்களுக்கு இருக்கும் பொறுப்பை தட்டிக் கழிக்கிற முறையில் இருக்கிறது என்று நிச்சயமாக கருத்து சொல்வேன்.

அண்ணா பெயரைச் சொன்னதற்குக் காரணம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பெரம்பூருக்குப் பக்கத்தில் மாணவர்கள் ரயிலை கொளுத்து

கிறார்கள் என்று சொன்ன நேரத்தில் அவர்களைத் தான் அங்கே போய் சமாதானம் செய்யச் சொன்னார்கள். ஏன் சொன்னார்கள் என்றால், மாணவர்கள் கொளுத்திவிடுவார்கள், அதற்குப் பிறகு துப்பாக்கிப் பிரயோகம் நடந்து விடும், அதைத் தடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ரயில் பெட்டிகளைக் கொளுத்தினால் கொளுத்தட்டும். நாளைக்கு வேண்டுமானால் ஆயிரம் ரயில் பெட்டிகளை செய்து கொள்ளலாம். ஆனால் ஒரு உயிர் போனால் அந்த உயிரைத் திருப்பிக் கொடுக்க முடியுமா என்று சொன்ன அந்தத் தலைவரின் சித்தாந்தத்தில் வந்த நீங்கள், அவர் பெயரைச் சொல்லி, அவர் திருநாமத்தைச் சொல்லி, அவர்களுடைய உயர்வான அடிப்படைகளைக் கொண்டு இந்த ஆட்சி பீடத்தில் இருக்கும் நீங்கள் இவ்வளவு பேரைச் சுட்டுத்தள்ளி ஒரு அவல நிலையை ஏற்படுத்தியிருக்கிறீர்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

போராட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. விவசாயிகள் போராட்டம் நடைபெற்றிருக்கிறது. நான் விவரங்களுக்குள் போக நேரம் இல்லை. அனுமதிக்க மாட்டார்கள். நான் இந்த மன்றத்திற்குச் சொல்லிக் கொள்வேன். இன்று நடைபெற்று இருக்கும் துப்பாக்கிப் பிரயோகமானாலும் சரி, சட்டம் ஒழுங்கு பிரச்னையானாலும் சரி, வேறு பிரச்னையானாலும் சரி, மக்களுடைய பிரச்சினையை, அவர்களுடைய சென்ஸ் ஒரு புதிய வகையில் திரும்பி இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளவில்லை. உங்களுக்கு அதற்கு வேண்டிய டேக்ட் இல்லை. டிஸ்கிரிஷன் இல்லை. இவைகளெல்லாம் உங்களுக்கு இல்லாத காரணத்தால் தான், இவைகளில் ஒரு ரெஸ்டிரெயின்ட், ஒரு நிதானம் காட்டத் தவறிய காரணத்தால் தான், இந்த மாதிரியான பயங்கரமான நிலைமைகளுக்கு அழைத்துச் செல்வதற்கு காரணமாய் இருந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். பலபகுதிகளில், பல இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று இருக்கிறது. சிம்சன் தகராறு, அதில் போலீஸ் தலையிட்டது. கோயம்புத்தூர் பஞ்சாலை தொழிலாளர்கள் மீது நடைபெற்று இருக்கிறது.

இவைகளெல்லாம் நீங்கள் உங்கள் அறையில் தீர்க்க வேண்டிய பிரச்னைகள். போலீஸ்காரர்கள் வரைக்கும் போய்விட்டது. உங்களுடைய சாமர்த்தியம் எங்களுக்குத் தெரியாதது அல்ல. கவிதை எழுதுவீர்கள், அறிவுட்டமுள்ள கதை எழுதுவீர்கள். நாட்டு மக்களை மயக்க வைக்கும் சக்தி படைத்த தலைவர். அப்படிப்பட்ட தலைவர், இன்று 144 தடை உத்தரவுகள் போடுகிறீர்கள். துப்பாக்கிச் சூட்டிற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். மக்களை இப்படி அழைத்துச் செல்வதன்மூலம் நீங்கள் எங்கோ தொலை தூரத்திற்குப் போய்விட்டீர்கள் என்பதைத் தவிர வேறு என்ன இருக்கிறது? விவசாயப் போராட்ட காலத்தில் துப்பாக்கிச் சூடு நடத்த எந்த விதமான முகாந்தரமும் இல்லை. நியாயமும் இல்லை. மானாமதுரையில் ஒரு ஓட்டலில் கலாட்டா செய்தார்கள் என்பதற்காகத் துப்பாக்கிப் பிரயோகம். கோவில்பட்டியில் போலீஸ்காரர்கள் மீது கல்லைப் போட்டார்கள். அதற்கு வழக்கு. ஐயம்பாளையத்தில் இரண்டு பேர் இறந்து இருக்கிறார்கள்.

திரு. ஜி. ராஜாராம் : விவசாயப் போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றதை ஆதரித்து மதுரை மாநாட்டில் பேசி இன்றையதினம் புதுக்கட்சி கண்டிருக்கும் தலைவர் இப்போது இப்படி போலீஸ்காரர்களை விமர்சித்துக் கொண்டிருக்கிறார்களே, அது ஏன் என்று கேட்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஐ ஷல் ப்ரொசீட். ஐய்யம்பாளையத்தில் இரண்டு பேர் சுடப்பட்டார்கள். அதற்குக் காரணம் அங்கே பொய் கௌரவம். பெத்துநாய்க்கன்பாளையத்தில்—ஆத்தூருக்கு அருகே இருக்கிறது. 4,000 பேர் நடத்து இருக்கிறார்கள். ஆகவே, 8 பேரைச் சுட்டு இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் சமாதானம் சொல்லியிருக்கிறார்கள். கேட்டால் 5 வருஷத்திற்கு அசைக்க முடியாது என்று சொல்கிறார்கள். இதற்கு வரம்பு முறை இருக்கிறது. நீங்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, நாட்டில் இருக்கும் சூழ்நிலைகளை இவைகளின் மூலம் இப்போது சமாளித்து இருக்கலாம். நான் ஒரு வாதத்திற்காகக் கேட்கிறேன். இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்கள் எந்த நேரத்தில் நடந்தன. துப்பாக்கிப் பிரயோகம் தவிர்க்க முடியாததா? அதை மறுத்துச் சொல்ல முடியாது. திருடர்களைப் பிடித்து சுட்டுச் தள்ளுங்கள், வரி கட்டாதவர்களைப் பிடித்துச் சுட்டுத் தள்ளுங்கள், சோதனை போடுங்கள், கள்ள மார்க்கெட்காரர்களை, கள்ளச் சந்தைக்காரர்களைப் பிடியுங்கள், குடிகாரர்களைப் பிடியுங்கள், அது வளர்ந்து வரும் நல்ல சமுதாயத்திற்கு பேருதவியாக இருக்கும். வரி கட்டாதவர்கள் என்றால் சிரிக்கிறார்கள். . . .

திரு. துரைமுருகன் : நீங்களே சொல்லுங்கள், குடிகாரர்களைப் பிடியுங்கள் என்றால் எப்படி?

திரு. கே. ஏ. மதியழகன் : நீங்கள் குடித்து விட்டுப் பேசுகிறீர்கள் போல் இருக்கிறது.

திரு. துரைமுருகன் : யார் குடிக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

திரு. கே. ஏ. மதியழகன் : குடிகாரர்களைப் பிடிக்கக்கூடாது என்று தான் மதுவிலக்கை ரத்து செய்து விட்டீர்கள். அதிலே இப்போது என்ன மாறுபாடு இருக்கிறது? குடிகாரர்கள் தவறு செய்தால் பிடிக்க வேண்டியதுதான். அவர்கள் பிடிக்கப்பட வேண்டியவர்கள் (குறுக்கீடு) இருக்கட்டும், இருக்கட்டும். எத்தனை பேர் குடிக்கிறார்கள்? குடிக்காமல் இருக்கிற அமைச்சர்கள் இருந்தால் எழுந்து சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, காலையிலிருந்து எத்தனையோ கட்சித் தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். கடுமையான வார்த்தைகளையும் பேசியிருக்கிறார்கள். அந்தக் கடுமையை எல்லாம் எடுத்துக்கொண்ட விஷயங்களில் காட்டினார்கள். நான் காலையிலிருந்து இந்த விஷயத்தில் ஒரு நிமிஷம்கூட எழுந்து போகாமல் உட்கார்ந்து எல்லோருடைய பேச்சையும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவையில் சூடான நிலைமைகள் ஏற்படும் போதெல்லாம் என்னால் முடிந்த அளவுக்கு இந்த மானியத்தைப் பொறுத்த வரையில் அதிகச் சூடில்லாமல் செய்ய

முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் பேசும்போது, திரு. துரைமுருகன் "குடிகாரர்களைப் பிடியுங்கள் என்று சொல்லுகிறார்களே, மதுவிலக்கு நீக்கப்பட்ட பிறகு பிடிப்பது எப்படி" என்று கேட்க, "குடித்துவிட்டு பேசுகிறாய்" என்று திரு. மதியழகன் சொல்லுகிறார். மந்திரிகளில் யார் குடிக்காதவர் என்று கேட்கிறார். என்ன பதில் சொல்வது ? குடிப்பவர் ஒருவர் இருந்தார். அவர் போய்விட்டார் அவ்வளவுதான்.

திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, யார் குடிக்கிறார்கள் குடிக்கவில்லை என்பது அவரவர்கள் மனச்சாட்சி விவகாரம். நான் இந்த நாட்டை ரத்தக் களறி ஆக்கியவர்களைப் பற்றி, நாட்டை வெறும் விளையாட்டு மைதானமாக, தங்களுடைய சுயநல கருவிகளாக மாற்றிக் கொண்டிருப்பவர்களைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறேன். எப்படி துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது என்று பேசிக்கொண்டிருக்கிறேன். எரிமலையின் மீது நின்றுகொண்டு நீரோ மன்னன் வீணையை வாசித்தது போல, இன்றைக்கு இங்கே எதோ அதைத் தவிர்ப்பதன் மூலமாகக் காரியங்களை நிறைவேற்றலாம் என்று கருதுகிறார்கள். தங்களுடைய துப்பாக்கிப் பிரயோகங்களுக்கான காரணங்களை ஆராய கேரள அரசாங்கம் ஒரு கமிட்டிபோட்டது. அந்தக் கமிட்டி மிகத் தெளிவாக இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் தான் துப்பாக்கிப் பிரயோகம் செய்யலாம், மற்ற தவிர்க்கக் கூடிய சந்தர்ப்பங்களில் தவிர்க்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அந்த வரைமுறையின்படி பார்த்தால், விவசாயிகள் போராட்டங்களின் போது நடந்த துப்பாக்கிப் பிரயோகங்கள் ஆகட்டும், அதற்குப் பிறகு நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்கள் ஆகட்டும், எந்த விதமான முகாந்திரமும் இல்லை. உயிர்களோடு விளையாடி இருக்கிறார்கள்.

சில வேளைகளில் நல்ல முறைகளை அனுசரித்ததன் விளைவாக, நல்ல வகையிலே சமாளித்திருக்கிறார்கள். கோயம்புத்தூரில் விவசாயிகள் போராட்டத்தின் போது இரண்டு நாட்களாக உங்களுடைய ஆட்சி இல்லை. 3,000 கட்டை வண்டிகள் அங்கே ரோடுகளில் நின்றன. கலெக்டர் அவர்கள் கைதியைப் போல் ஆபீசில் இருக்க வேண்டிய நிலை இருந்தது. கோவையிலே நிர்வாகமே நடைபெறவில்லை என்ற நிலைமையில் கூட மிகச் சாமர்த்தியமாக சமாளித்திருக்கிறார்கள். அவ்வளவு பெரிய நகரத்தில் சமாளித்தவர்கள், பெத்துநாய்க்கன்பேட்டையில் 9 பேரைச் சுடுவானேன். கோவில்பட்டியில் சுடுவானேன். மானாமதுரையில் ஒரு ஓட்டலை திறந்து வைத்திருக்கிறார்கள் என்பதற்காக பொது வேலை நிறுத்தம் செய்கிற நேரத்திலே, எல்லோரும் திறந்து வையுங்கள் என்று கலெக்டர் அறிக்கை விட்டார்கள்.

இப்போது அண்மையில் ஒரு பொது வேலை நிறுத்தம் நடைபெற்றதே, திரு. எம். ஜி. இராமச்சந்திரன் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகிய பிறகு ஏற்பட்ட சண்டமாருதத்தில் பொது வேலை நிறுத்தம் செய்யச் சொல்லுகிறார். The hartal was total and complete என்று பத்திரிகையில் செய்தி வருகிறது. விவசாயிகள் போராட்ட நேரத்தில் ஏன் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது? ஒவ்வொரு ஊரிலும் ஓட்டலைத் திறந்து வையுங்கள், கடையைத் திறந்து வையுங்கள்,

இந்தக் காரியத்தைச் செய்யுங்கள், அந்தக் காரியத்தைச் செய்யுங்கள் என்று உங்களுடைய முறை நேரத்திற்கு நேரம், வேளைக்கு வேளை மாறுகிறது. அதிகாரிகள் என்ன செய்வார்கள். கத்தரிக்காயை நறுக்கலாம் கத்தியால்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : கையையும் நறுக்கிக் கொள்ளலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கையை நறுக்கிக் கொள்ளலாம் என்கிறார்கள். கத்தியில் ஒன்றுமில்லை. அதை உபயோகிக்கிறவன், அவனுடைய நிலைமைகள், அவனுடைய போக்குகள், அதன் அடிப்படையில் தான் அமைந்திருக்கிறது. அதே போல், இந்த அரசு நாட்டுக்குச் செய்ய வேண்டிய பொறுப்புகளை சரியான வகையில் செய்யவில்லை. அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு

2, 3 மாதங்களில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு என்ன காரணம் சொன்னார்கள்? விருத்தாசலத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததற்கு என்ன காரணம் ? சின்ன ஊர். 20 ஆயிரம் பேர் கூட இருக்காது. அதைச் சமாளித்து இருக்க முடியாதா ? அந்த ஊர் எம்.எல்.ஏ. வீட்டுக்குப் போகிறார்கள். 4 ஆயிரம் பேர் போனார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எம்.எல்.ஏ. அவர்களிடம் பேசியிருக்கக்கூடாதா? நடந்திருக்கின்ற துப்பாக்கிப் பிரயோகங்களை எடுத்துக் கொண்டால், திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர் எங்கே இருக்கிறார்களோ, அங்கே தான் நடைபெற்றிருக்கிறது.

விருத்தாசலத்தில் மாவட்டச் செயலாளர் இருந்திருக்கிறார். 4,000 பேர் ரௌடிகள் சேர்ந்து கொண்டார்களாம். உடனே துப்பாக்கிப் பிரயோகம். கண்ணமங்கலத்தில், திரு. துரைமுருகன் மாவட்டத்தில், ஒரு எம்.பி. திரு. விஸ்வநாதன், இன்னொருவர் திரு. தோப்பூர் திருவேங்கடம்—அவரும் மாவட்டச் செயலாளர்—கூட்டத்தில் பேசுகிறார்கள். சின்ன ஊர். ஒரு பெரிய மாவட்டச் செயலாளர், ஒரு எம்.பி. ஆகியோர் கூட்டத்தில் கல்லை எடுத்து எறிகிறார்கள் என்று சொல்லி போலீஸ் ஸ்டேஷனில் போய் அடைக்கலம் புகுந்தார்கள். டி.ஐ.ஜி. அறிக்கை வந்தது. இப்போது இல்லை என்பார்கள். என்ன செய்வார்கள். மறுநாள் வேறொரு அறிக்கை வருகிறது. போடு என்று சொன்னால் போட வேண்டிய இக்கட்டான நிலைமையில் இருப்பவர்கள். நான் அழுத்தம் திருத்தமாக சொல்லுகிற விவகாரம் அதுவல்ல. மாவட்டச் செயலாளர்கள், இன்னும் மற்றவர்கள் அவர்களை ஆட்டி வைக்கிறார்கள். ஒரு சிறிய நலனுக்காக மக்களுடைய உணர்வுகளை தூக்கியெறிகிறார்கள்.

கண்ணமங்கலம் என்ற அந்த சிறிய ஊரிலே பொதுக் கூட்டத்திலே பேச முடியாமல் போலீஸ் ஸ்டேஷனில் சரணடைய வேண்டிய நிலை இருந்தது என்றால், அந்த ஊர் அப்படியிருக்கிறது என்றால், பதட்ட நிலை இருக்கிறது என்றால், கூட்டத்தை ஏன் அனுமதிக்க வேண்டும் ? ஏன் போலீஸ் ஸ்டேஷனில் சரண் புகவேண்டும் ? எதற்கு முதலில் டி.ஐ.ஜி.யின் அறிக்கை, அதற்குப் பின்னால் இன்னொருவர் அறிக்கை விடவேண்டும்?

அதே போல் மாண்புமிகு அமைச்சர் திரு. மண்ணை நாராயணசாமி இராமநாதபுரம் போனார்கள். மண்டையில் காயம்பட்டு வந்தார்கள். ஒரு திருமணத்தில் அவரைச் சந்தித்தேன். அங்கும் மாவட்டச் செயலாளர் இருந்திருக்கிறார்கள். ஒரு கூட்டத்தில் கலவரம் நடைபெறுகிறது, கல்லை எறிந்தார்கள். ஆகவே துப்பாக்கிப் பிரயோகம் என்றால், இவைகள் எல்லாம் நல்ல சமாதானங்கள் அல்ல. அதேமாதிரி போடிநாயக்கனூர்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, மாவட்டச் செயலாளர் திரு. தோப்பூர் திருவேங்கடம், திரு. விஸ்வநாதன், எம்.பி., ஆகியோர் பொதுக் கூட்டத்தில் பேசுவதற்கு வந்தபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தாக்க வந்ததிலிருந்து தப்பிக்க, பாதுகாப்புக்காகத் தெரியாத்தனமாக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை தாக்கினார்களே, அந்தக் கட்சியில் போய் நீங்கள் சேர்ந்திருக்கிறீர்களே, அது நியாயமா ?

திரு. கே. அ. மதியழகன் : தலைவரவர்களே, அந்தக் கட்சியில் சேருவது நியாயமா இல்லையா என்பதல்ல இப்போதிருக்கிற பிரச்னை. இந்த துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு யார் தூபமிடுகிறார்கள், அதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் ? போலீஸ் இலாகாவை யார் இயக்குகிறார்கள் என்பது தான் பிரச்னை. நிராயுதபாணிகளான மக்களைச் சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள் என்பதுதான் விவகாரம்.

போடிநாய்க்கனூரில் குழந்தைகள், மாணவர்கள் எம்.எல்.ஏ. வீட்டுக்கு வருகிறார்கள் ஊர்வலமாக. எம்.எல்.ஏ.யின் பேச்சை அவர்கள் முரசொலியில் படிக்கிறார்கள், ஊர்வலமாக எம்.எல்.ஏ. வீட்டுக்குப் போகிறார்கள். அவர்களை கலையச் சொல்லியிருக்கிறார்கள். கலைய மறுத்திருக்கிறார்கள்.

(சில மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

திரு. கே. அ. மதியழகன் : மந்திரிகள் பதில் சொல்ல இருக்கிறார்கள். அப்படியிருக்க, நான் பேசும்போது அங்கத்தினர்கள் அடிக்கடி குறுக்கிடுவது என்றால் எந்த விதிமுறையில் வருகிறது என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேசிக்கொண்டிருக்கிற உறுப்பினர் அனுமதிக்கவில்லை என்றால் நீங்கள் பேசமுடியாது. உங்களுடைய கருத்தை அமைச்சரிடம் சொல்லுங்கள்.

திரு. கே.அ. மதியழகன் : தலைவரவர்களே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதி மாணவர்களுடைய உணர்வுகளை தூண்டுகின்ற முறையில், அவர்கள் உணர்வுகளை மதிக்காத முறையில் நடக்கிறார் என்ற காரணத்தால் பலாத்காரங்கள் நடைபெற்றன. பாளையங்கோட்டையில் ஏற்பட்ட விவகாரம் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். துப்பாக்கிப் பிரயோகமாகட்டும், கூட்டங்களாகட்டும், வேறு எந்தக் காரியமாகட்டும் எதையெடுத்தாலும் இந்தமாதிரியான விவகாரம் தான்.

கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். எங்களுடைய கட்சித் தலைவர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் பேசும் கூட்டம் கடலூரில் நடைபெறுகிறது. அதற்கு ஒரு பர்லாங் தூரத்தில் கறுப்புக் கொடி காட்டட்டும். கறுப்புக்கொடிகாட்டுவ துஜனநாயக உரிமைதான். ஒரு லட்சம் மக்கள் அங்கே கூட்டத்தில் கூடியிருக்கிறார்கள். கலெக்டர் பாதுகாப்போடு, போலீஸ் அதிகாரிகள் பாதுகாப்போடு இருக்கிறார்கள். வன்முறையாளர்கள் அங்கே கறுப்புக்கொடி காட்டப்போகிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் கறுப்புக்கொடி காட்டுவதோடு நிற்காமல் வன்முறைகளிலே ஈடுபட்டார்கள். அந்த நேரத்திலே அங்கே கலெக்டர் என்ன செய்தார் ? போலீஸ் அதிகாரி பாதுகாப்புக் கொடுக்க வேண்டாமா ? ஒரு லட்சம், 2 லட்சம் மக்கள் கூடியிருக்கிறார்கள் என்பது தெரியும். பிளாக் ஃபளாக் டெமான்ஸ்டிரேஷன் செய்யப் போகிறார்கள் என்பதும் தெரியும். அப்படிப்பட்ட நிலைமை இருக்கும்போது அதற்கு வேண்டிய பாதுகாப்பு வேலைகளைச் செய்ய வேண்டாமா ? அப்படிச் செய்தால் அவர்கள் கோபித்துக் கொள்வார்களே என்றிருந்தால் எப்படி அமைதி ஏற்படமுடியும் ?

எங்களுடைய கட்சி உறுப்பினர் காளிமுத்து அவர்கள் சொன்னதுபோல தங்களுக்கு மாறுபட்ட கருத்துக்களை யார் சொன்னாலும்—குறிப்பாக அண்ணா தி.மு.க.வினரை அடக்குமுறைகள் மூலம் ஒழித்துவிடலாம் என்று கருதுகிறீர்களா. ஆனால் என்ன நடக்கும் என்பது உங்களுக்கே தெரியும்.

நாவலர் அவர்கள் சொல்வார்கள், "பந்தை கீழே அழுத்தினால் மேலே எகிறிக்கொண்டுதான் இருக்கும்" என்று. அடக்குமுறைகளைக் கையாள்வதினாலோ, 144 தடை உத்தரவுகளைப் போடுவதினாலோ எங்களை ஒடுக்கிவிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் கட்சித் தோழர் ஹக்கீம் என்பவர்மீது வழக்குப் போட்டார்கள்.

இராஜாஜி அவர்கள் காலத்திலே சட்டமன்றத்திலே செயலாளராகப் பணியாற்றிய திரு. ஆர்.வி. கிருஷ்ண ஐயர் அவர்கள் வீட்டிலே இரவு 11 மணிக்கு 10 பேர் புகுந்து கலாட்டா செய்தார்கள் என்று எனக்கு கடுதாசி வந்திருக்கிறது. இன்றைக்கு நாட்டிலே இந்தமாதிரியான காரியங்கள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. மக்களுக்கு ஒரு நிம்மதி இல்லை ; பாதுகாப்பு இல்லை ; பந்தோபஸ்து இல்லை ; மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்ற பண்பாடு இன்றைக்கு தமிழ்நாட்டிலே இல்லை.

எங்கள் கட்சியைச்சேர்ந்த தோழர் மணி என்பவரை—நாவலர் தொகுதி—பிடித்து லாக்கப்பில் போட்டுவிட்டார்கள். நாவலருக்கு நான் குறைந்தவரா என்று சொல்லி, முதலமைச்சரவர்கள் தொகுதியைச் சேர்ந்த கோடம்பாக்கத்திலே கோபால் என்பவரைப் பிடித்து லாக்கப்பில் அடைத்துவிட்டார்கள். லாக்கப் என்றால், "டவர் ஆஃப் லண்டனை" போல இருக்கிறது.

இங்கே சிறைச்சாலையில் மாதவன் அவர்கள் ஒன்றிரண்டு ஜன்னல்களை வைத்திருக்கிறார்கள். நானும் லாக்கப்பில் இருந்திருக்கிறேன். அதனால் எனக்கும் லாக்கப்பை பற்றித் தெரியும். 4,000 பேர் போலீஸ்

ஸ்டேஷனுக்குப் போகிறார்கள் என்றால் நாட்டிலே அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். அது எந்தக் காலத்திலே எப்படி மாறும் என்று சொல்ல முடியாது.

இன்று பல வழக்குகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தங்கமணி அவர்கள்மீது கொலைக் குற்றம் சாட்டி, கைது செய்தார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் எஸ்.எம். துரைராஜ் அவர்களை மதுரைக்குச் சென்ற வழியில் கொலை குற்றம் சாட்டி, கைது செய்தார்கள். காலையிலே கொலை குற்றம் சாட்டி கைது செய்தார்கள். மாலையிலே விட்டு விட்டார்கள். இப்படி எந்த முகாந்திரமும் இல்லாமல் கைது செய்வதும், விடுதலை செய்வதுமாக இருக்கிறார்கள். இன்றைக்கு கொலை வழக்குப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் என்னென்ன வழக்குகளைப் போடப்போகிறார்களோ தெரியவில்லை.

இங்கே, முன்னால் ஒரு ஐ.ஜி. இருந்தார்கள். திரு.மகாதேவன் ஐ.ஜி. ஆக இருந்தார்கள். இவர்கள் செய்த அநியாயத்தினால் அவர் செத்து விட்டார் என்று நம்முடைய பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். இப்போது புதிதாக வந்திருக்கின்ற ஐ.ஜி. அவர்களை, இவர்கள் அழைத்து வந்தார்களோ அல்லது அவராக வந்தாரோ தெரிய வில்லை. ஒரு ஐ.ஜி.யை மாற்ற வேண்டுமென்றால் என்ன காரணம்? அவர் என்ன குற்றம் செய்தார்? எந்தக் காரணமும் இல்லாமல் மாற்றிவிட்டார்கள் என்றுதான் காமராஜ் அவர்கள் அடிக்கடி கூட்டங்களில் சொல்கிறார்கள். ஐ.ஜி. அவர்களுக்கே இப்படிப்பட்ட நிலைமை என்றால் இந்த நாட்டு மக்களுக்கு என்ன நிலைமை ஏற்படப் போகிறதோ தெரியாது.

எங்கள் கட்சித் தலைவர்—பாராளுமன்ற உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள் டில்லிக்குப் போகும்போது மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தாக்கப்பட்டார். ஏற்கெனவே அவர் ஹார்ட் அட்டாக் ஆனவர். அவரைச் சூழ்ந்துக்கொண்டு வன்முறையில் ஈடுபட்டார்கள். தாக்கியவர் பஞ்சாட்சரம் என்று பெயரைக்கூட குறிப்பிட்டுக் கொடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள். நேர மாகிக் கொண்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : இன்னும் பத்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன். அதேமாதிரி எங்கள் கட்சித் தோழர் அன்பழகன் என்பவரை இராமநாதபுரத்தில் தாக்கியிருக்கிறார்கள். இப்படியே போய்க்கொண்டி ருந்தால் எங்கே போய் முடியுமோ தெரியவில்லை. இவைகளை எல்லாம் எடுத்துச் சொன்னால் ஏதோ சமாதானமாகப் பதில் சொல்லிவிட்டால் போயிற்று என்று கருதுகிறார்கள். இந்தமாதிரி செய்கைகள் எல்லாம் இந்த நாட்டிலே மிகப்பெரிய உருவெடுத்துக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே மிகத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் நாட்டு மக்கள் எல்லாம் நிம்மதியற்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தமாதிரியான காரியங்களை எல்லாம் இங்கே இருக்கின்ற கவர்னர் அவர்களும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். கவர்னரிடத்தில் சட்டம் இருக்கிறது. அவர் வெறும் அலங்கார பொம்மை அல்ல. இவர்கள்

எதைச் சொன்னாலும் "ஆமாம்" என்று கவர்னர் சொல்ல வேண்டிய தேவை இல்லை. கவர்னர் இவர்களுக்கு அட்வைஸ் பண்ண வேண்டும். இவர்களை வார்னிங் செய்ய வேண்டும் என்றெல்லாம் சட்டத்தில் இருக்கி றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கவர்னர் அவர்களை இந்த விவாதத்தில் இழுக்காதீர்கள். அது நல்லதல்ல.

THIRU M. A. LATHEEF: His Excellency cannot be the subject-matter for discussion. There are clear rules.

THIRUMATHI. T. N. ANANDANAYAKI: Rule 67 says that a Member should not reflect upon the conduct of the President or Governor or any Court of Justice. The hon.Member's speech does not reflect anything upon the conduct of the Governor. He is only mentioning the name of Governor.

MR. DEPUTY SPEAKER: Why has the hon. Member stopped only with one portion of Rule 67. It also says that a Member, while speaking must not use the Governor's or President's name for the purpose of influencing a debate.

THIRU K. A. MATHIALAGAN: I had not used his name for influencing the debate.

THIRU R. PONNAPPA NADAR: The Member should not reflect the conduct of the Governor.

THIRU K. A. MATHIALAGAN: According to the Constitution the Governor has to act on the advice of Ministers. ஆனால் கவர்னர் அவர்கள் "பிரிசர்வ்" பண்ண வேண்டியிருக்கிறது. இந்த நாட்டில் இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்லி, சட்டம் அமைதி சீர்குலைந்து விட்டது என்று சொன்னால் அவர்கள் கேட்டுக்கொண்டு சும்மா இருக்கிறார் கள். இந்த நாட்டிலே சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்ற முடியாத கவர்னர் இங்கே இருக்க வேண்டியதில்லை; உடனே அவரை மத்திய அரசாங்கம் "ரீ—கால்" பண்ண வேண்டும்.

THIRU N. GANAPATHY: The Governor's name should not be dragged.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்முடைய விதிமுறைகள் மிகத் தெளிவாக இருக்கின்றன. அதன்படி எந்த உறுப்பினரும் கவர்ன ரைப்பற்றி இந்த மன்றத்தில் விவாதிக்கக்கூடாது.

திரு. கே. ஏ. மதியழகன் : சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த வேண்டியது கவர்னருடைய பொறுப்பு; கடமை. இவர்களுக்கு அட்வைஸ் கொடுக்க வேண்டிய வேலை மட்டுமல்ல. இவர்கள் தவறாகச்செல்லும்போது இவர்களை

வழிக்குக் கொண்டுவர வேண்டியதும் அவருடைய கடமை. இன்றைய தினம் லட்சக்கணக்கான மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியாத இந்த கவர்னரை மத்திய அரசு "ரீ—கால்" செய்ய வேண்டுமென்று அழுத்தந் திருத்தமாக இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம்முடைய ஜனாதிபதி அவர்களைப்பற்றிக்கூட பாராளுமன்றத்திலே விவாதித்திருக்கிறார்கள். ஜனாதிபதியை "இம்பீச்மெண்ட்" பண்ண வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆந்திரத்திலே ஜனாதிபதி ஆட்சியினால் ஏற்பட்ட விளைவுகளைப்பற்றிச் சொல்லும்போது, இந்த நிலைமைக்கு காரணமான ஜனாதிபதியை "இம்பீச்மெண்ட்" பண்ணவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நாட்டில் "லா அண்டு ஆர்டருக்கு" கஸ்டோடியனாக இருப்பவர் கவர்னர். அவர் அதை ஒழுங்காக நிர்வகிக்காததால் அவரை "ரீ—கால்" செய்யாத மத்திய அரசையும் இந்த நேரத்திலே நான் வன்மையாகக் குற்றஞ்சாட்டுகிறேன். இந்த நாட்டிலே சட்டம், ஒழுங்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே மக்கள் ஒரு பதட்ட நிலையில் இருக்கிறார்கள். இவைகளை எல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிற மத்திய அரசுமீது நான் வன்மையாகக் குற்றஞ்சாட்டுகிறேன்.

4—00 இப்படிப்பட்ட நிலைகளில் கவர்னர் அவர்களும் தலையிடவில்லை. நான்கு கோடி மக்கள் பாதுகாப்பிற்கு அவர்கள் ஆட்சியை, கவர்னரை நம்பிக் கொண்டு இருக்கின்றார்கள். பிறகு அந்தப் பாதுகாப்பினை அளிக்கவில்லை என்றால், மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்களே, உங்கள் முன்பு தெளிவாகக் கேட்கிறேன், இந்த மாநில மக்களுடைய உயிர், உடைமைகளுக்குப் பாதுகாப்பு இல்லை, இந்த நிலையை கவர்னரும் கவனிக்கவில்லை, மத்திய அரசும் கவனிக்கவில்லை, இங்கே இருப்பவர்களும் கவனிக்கவில்லையென்றால், இப்படியே செத்து மடிவது, லாக்கப்பிலே அடிபடுவது, சாவது, கைகால் வெட்டுப்படுவது, கண்கள் குருடாக்கப்படுவது என்றால், பிறகு அவர்கள் இப்படியே சாவதா அல்லது இதற்கு எதிராகக் கிளர்ந்து எழுவதுதானா—அவர்களுக்கு வேறு என்ன அமைதியான "ஆல்டர்னேடிவ்" இருக்கின்றது என்று உங்களைக் கேட்கின்றேன். கொடுங்கோலர் ஆட்சியில் அவர்கள் அவதிப்படுகின்றார்கள், ஒன்றுமே செய்ய முடியவில்லையென்றால் மனிதனுக்கு உள்ள ஒரே உரிமை இன்னேலினியபிள் ரைட் கிளர்ந்து எழுவதைத் தவிர வேறு என்ன இருக்கின்றது ?

வங்க நாட்டின் முஜிபுர்-ரெஹ்மான் போல தமிழ்நாட்டின் முஜிபுர் ரெஹ்மான் என்று மாண்புமிகு நமது முதலமைச்சர் அவர்கள் பெருமையோடு தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுகின்றார்கள். வங்க நாட்டின் போராட்டத்தின்போது, அயூப்கான் சொன்னான், வங்கநாடு பாகிஸ்தானின் ஒரு பகுதி என்று. ஆனால் அந்த நாட்டு மக்களுடைய மிகச் சாதாரணமான உரிமைகளும் நசுக்கப்பட்டபோது அவர்கள் கிளர்ந்து எழுந்து அதை மாற்றி அமைத்தார்கள். இப்படி தலையிடாதவரையில், இவர்கள் திருந்தாத வரையில், மத்திய அரசு தெளிவான முடிவெடுக்காத வரையில், மிகுந்த வருத்தத்தோடு சொல்லுகிறேன், தமிழ்நாட்டு மக்கள் தங்களுடைய "இன்ஹெரண்ட் அண்டு இன்னேனிலியபிள்" ரைட்டை—அதாவது தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கு தங்கள் இன்னுயிரையும் கொடுப்பதற்குச் சித்தமான ஒரு நிலை வந்தால் அப்படிப்பட்ட நிலைக்கு இன்று ஆட்சியிலுள்ள இவர்கள்தான் பொறுப்பு என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மக்கள் தங்களைப்பற்றிக் கவலைப்படாமல் கிளர்ந்

தெழுந்து, இந்த ஆட்சி தூக்கி எறியப்படும். இருக்கும் உயிர் ஒரே உயிர் தான் அந்த உயிர் எப்படி வேண்டுமானாலும் போகட்டும் என்று லட்சக் கணக்கான மக்கள் இப்படி ஆர்த்தெழுந்தக்க அளவிற்கு தமிழ்நாட்டில் அவ்வளவு கோபாவேசமாக இருக்கின்றார்கள். அவர்களுடைய வேதனைகளை சமாதானப் பேச்சுக்களால், விவாதங்களால் நிறுத்திவிட முடியாது என்று எச்சரிக்கையாகச் சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழ்நாட்டில் மக்கள் இவ்வளவு கோபாவேசமாக இருப்பதாக மாண்புமிகு மதியழகன் சொல்லுகின்றார்கள். இந்தக் கோபாவேசத்தை பொள்ளாச்சி வட்டாரத்தில் இராமபட்டணத்தில் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளரிடத்தில் காட்டினார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவாத நேரத்தில் "நீ குடித்துவிட்டு வந்திருக்கிறாயா?" என்று ஒரு அங்கத்தினரான என்னை திரு. மதியழகன் அவர்கள் கேட்டார்கள். இது ரெக்கார்டு ஆகப்போகிறது. வெளியிலும் வரப்போகிறது. அதனால் என்னைப் பற்றி தவறான எண்ணத்தினை இது உண்டாக்கும். எனவே சபாநாயகர் அவர்கள் இந்தப் பேச்சை சபை நடவடிக்கையிலிருந்து நீக்க வேண்டும் அல்லது இதற்கு ஒரு தீர்ப்பைச் சொல்ல வேண்டும், அல்லது திரு. மதியழகன் அவர்கள் தான் கூறியதைத் திரும்பப் பெற வேண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்தால் இதை குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று சொல்லும் மாண்புமிகு உறுப்பினர் பதிலுக்கு என்ன சொன்னார் என்ற உண்மை தெரியும். அவர் சொன்னார், "யார் குடித்திருக்கிறார் என்று தெரியும்." என்று.

திரு. துரைமுருகன் : இது என்னைப் பொறுத்த விஷயம். அவர் என்னைப் பார்த்துக் குடித்துவிட்டு வந்திருக்கிறாயா என்று கேட்டார். அவர் அதை வாபஸ் வாங்கவேண்டும். அது என் கோரிக்கை. மன்றத் துணைத் தலைவர் அவர்களே இதில் நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும்..

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, தனிப்பட்ட குற்றச் சாட்டுக்களைச் சொல்வது அவ்வளவு நல்லதல்ல. எனவே தங்களுடைய மேலான தீர்ப்பினை ஏற்றுக்கொள்ளுகிறேன். இதைப்பற்றி என் கருத்து என்னவென்றால் உறுப்பினர்கள் யார் யாரை வேண்டுமானாலும் ஏசிக் கொள்ளுவதற்கு இந்த மன்றத்தினை உபயோகித்துக்கொள்ளக் கூடாது என்றுதான் சொல்ல விரும்புகிறேன். It may be expunged that—portion alone.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிந்து நீண்ட நேரமாகிவிட்டது. என்ன பேசினார் என்றும் தெரியவில்லை. விவாதத்தின்போதே உறுப்பினர் இதைக் கிளப்பவில்லை.

Dr. H. V. Hande : I Certify that he is not drunk. He is perfectly rober.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு டாக்டர் அவர்களே ஸெர்டிபிகேட் கொடுத்துவிட்ட பிறகு அதைத் குறிப்புகளிலிருந்து எடுக்க தேவையில்லை. இரண்டும் சேர்ந்துதான் வரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : "எக்ஸ்பஞ்ச்" பண்ணுவது என்றால் எந்த அளவிற்கு நீக்குவது என்ற சிக்கல்தான் வருகிறது. "ஹோல் ப்ரொஸீடிங்ஸை" எக்ஸ்பஞ்ச் பண்ணவேண்டுமா என்று யோசிக்க வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன்: இதெல்லாம் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. அப்பொழுதுதான் உலகத்திற்குத் தெரியும். என்ன விவாதம் செய்கின்றார்கள் என்று ஊருக்கும் உலகத்திற்கும் தெரியும்.

Thiru R. Ponnappa Nadar : Sir, the Deputy Speaker may peruse the proceedings and if he is convinced,in his discretion he may expunge. He has not to announce it just now. He may decide in the interests of the dignity, decency and decorum of the House. Once again I request hon. Members not to fling abuses on the Opposition Members.

திரு. கே. டி. கே. தங்கமணி: "பவர்ஸ் ஆஃப் எக்ஸ்பங்ஷனை"ப் பொறுத்தவரையில் ஒரு விஷயம். இப்பொழுது என்ன சொல்லுகிறேன் என்றால்,

"If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent or unparliamentary or undignified, or grossly irregular, he may in his discretion, order that such word or words be expunged........."

"அந்த வார்த்தை அல்லது வார்த்தைகள்" என்றுதான் இருக்கிறதே தவிர சமீபத்தில் என்ன நடைபெற்று வருகின்றது என்றால் அரை மணி நேரப் பேச்சை அப்படியே எக்ஸ்பஞ்ச் பண்ணுவது, "ஹாக்-அவுட்டை அப்படியே எக்ஸ்பஞ்ச் பண்ணுவது" என்றெல்லாம் புதிய முறையாக ரூலிங்ஸ் வருகிறது. ஆகவே எக்ஸ்பஞ்ச் பண்ணுவது குறிப்பிட்ட வார்த்தைகள்தான். மொத்த "ப்ரொஸீடிங்ஸ்" இல்லை.

"Word or words may be expunged."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதில் ஒரு சிக்கல் இருக்கின்றது. அவர் குறிப்பிடும் வார்த்தைகளைத் தொடர்ந்து ஏழெட்டு வாசகங்கள் இருக்கின்றன. இந்த வார்த்தைகளை மட்டும் "எக்ஸ்பஞ்ச்" பண்ணுவது என்றால் மிச்சமுள்ளதைப் பத்திரிகைகளில் எப்படி வெளியிடுவார்கள் என்று யோசிக்க வேண்டும்.

Dr. H. V. HANDE: There is no necessity to expunge; in the Lok Sabha also, much stronger words are used. I do not say that we should do the same thing here. I am against it. But in this case, we need not be touchy about it and we can pass on to the next item.

THIRU K. T. K. THANGAMANI: Rule 236 provides, 'That the portion of the proceedings of the House so expunged shall be marked by asterisks and an explanatory foot-note shall be inserted in the proceedings as follows:

'Expunged as ordered by the Chair':

இந்த முறையில் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. துரைமுருகன் அவர்கள் ரொம்பவும் ஆத்திரத்தோடு சொன்னார்கள். இது ஒன்றும் பெரிய பாவமான காரியம் இல்லை. நமது நாட்டில் மதுவிலக்கை எடுத்துவிட்டதாலேயே இதைச் சொல்லவில்லை. இது பெரியதொரு அவமானம் இல்லை. ஆனால் "எக்ஸ்பஞ்ச்" பண்ணுவது என்றால் சம்பந்தப்பட்ட வாக்கியங்கள் அனைத்தையும் நீக்கிவிட வேண்டும். எனவே அந்த ப்ரோஸீடிங்ஸ் வரட்டும். நாளைக் காலை இதைப் பற்றி சொல்லுகிறேன்.

இது சம்பந்தமான வார்த்தைகளை நாளைக் காலை தீர்ப்பு தரும்வரையில் பத்திரிகைகளும் வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான விவாதத்தில் கலந்துகொண்டு என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

காவல் துறையைப் பற்றிய இந்த காரசாரமான விவாதத்தில் பங்கு கொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் ஆரம்பத்தில் அனைவரும் பாராட்டிப் பேசி, இறுதியில் இந்த இலாகா செயலற்று இருக்கிறது என்ற குற்றச் சாட்டை பலரும் எடுத்துக் கூறினார்கள். எதிர்கட்சியின் தரப்பில், இந்த இலாகாவானது சிறப்போடு நடக்கிறது என்று சொல்லுவதற்கில்லை. என்று வேதனையோடு வருத்தத்தோடு நாங்கள் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். அரசியல் தலையீடு இன்று தலைவிரித்து ஆடுகிறது என்று ஏறத்தாழ தமிழகம் முழுவதும் இன்று மக்கள் சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள். இந்தமாதிரியான தலையீடுகள் இருக்கலாமா கூடாதா என்பதைப் பற்றி நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு எதிர்கட்சியிலிருந்தபோது இந்த மாமன்றத்தில் 1962-ல் கூறியிருக்கின்றார்கள். அன்று அவர் பேசிய பேச்சின் ஒரு பகுதியை இங்கே படிப்பது என் கடமை என்று கருதுகின்றேன். அன்றைய தினம் அமைச்சரவையிலே அங்கம் வகித்த திரு பூவராகன் அவர்களுடைய சகோதரன் ஒரு தர்மகர்த்தாவாக நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள். அவரை நீக்கி இன்னொரு நபரை நியமனம் செய்தார்கள். ஆனால் அவர் சார்ஜ் வழங்கவில்லை என்ற காரணத்தினால் அரசியல் தலையீடு இருக்கின்றது என்று அமைச்சரவை மீது குற்றம் சாட்டியிருக்கின்றார்கள். அன்னாருடைய சொற்பொழிவில் ஒரு பகுதியைத்தான் சபையின் அனுமதியோடு படித்துக் காண்பிக்க விரும்புகிறேன். "அமைச்சர் பூவராகனின் அண்ணன் என்றும் தெரிய வந்தது. இவ்விதம் அமைச்சர்களால் அரசியல் ஆட்டிப் படைக்கப்படுவது நியாயம் தானா? தர்மம் தானா, நீதி தானா? நீதி தழைக்குமா? என்பதை இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்" என்று கூறியிருக்கிறார் 12-7-1962 அன்று,

இந்தமாதிரியான தலையீடு இப்போது இல்லை என்று இந்த அமைச்சரவையில் இருக்கின்றவர்கள் கூற முன்வருவார்களா? நீதிமன்றத் தீர்ப்புகளில் என்னென்ன கூறப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் நான் ஆதாரத்துடன் எடுத்துக்கூற தேவையில்லை என்று கருதுகிறேன். இப்பொழுது எங்கே கேஸ் ஏற்பட்டாலும் ஆளுங்கட்சியிலே இருக்கின்றவர்கள் தலையீட்டினால் பாதிக்கப்பட்டு வருகின்ற தன்மையில் இருக்கிறது என்ற குற்றச்சாட்டினைக் கூறுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். போலீஸ்காரர்கள் எல்லாம் அஞ்சுகிறார்கள்.

எதிர்க் கட்சிகள் மீது பழி வாங்கும் நோக்கத்துடன் பல கேஸ்களை ஜோடனை செய்திருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். 15-ம் தேதி நடந்த நிகழ்ச்சியைப் பற்றியும் எழுப்பப்பட்ட கோஷங்களைப் பற்றியும் அவை ஆட்சேபகரமானதாக இருக்கின்றன என்றும் ஆளுங் கட்சியிலே பல உறுப்பினர்களும் வேகமாகக் கூறினார்கள். இது உண்மைக்குப் புறம்பானது, தவறானது என்று ஆணித்தரமாக மறுப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். மாணவர்கள் மீது பொய் வழக்குகள் ஜோடித்திருக்கிறார்கள் என்று பல முறை எடுத்துக் கூறியிருக்கிறேன். விருதுநகர் பகுதியில் 2 மாணவர்கள் மீது போடப்பட்டிருக்கிறது. எப்.ஐ.ஆர். போட்டதற்குப்பின்னால், செக்ஷன் 307 சேர்க்கப்பட்டிருக்கிறது. 307 என்பது அட்டம்ப்ட் டு மர்டர். யாரை வேண்டுமானாலும் சர்வ சாதாரணமாக இந்த செக்ஷனில் நுழைக்கிற நியதி தமிழகத்தில் வேகமாக ஏற்பட்டிருக்கிறது என்றால் மக்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்க முடியும்? குறிப்பாக மாணவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்க முடியும்? அதுபோலவே செக்ஷன் 54, செக்ஷன் 75 சி.போ.ஆ. உபயோகிக்கப்படுகிறது. இவையெல்லாம் நீக்கப்படவேண்டுமென்று கூறினார்கள். ஆனால் இங்கு நாட்டில் நடப்பது என்னவென்றால், இந்தமாதிரியான ஜாமீன் வழக்குகள் அதிகமாகிக்கொண்டிருக்கின்றன என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு அரசியல் காரணங்களுக்காக பல எதிர்க்கட்சிகளை நசுக்க நடவடிக்கைகள் எடுக்கின்ற தன்மையைப் பார்க்கிறோம். மதுரை நிகழ்ச்சியைப் பற்றியும், துரைராஜ் எப்படி கைது செய்யப்பட்டார் என்பதைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறினார்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். செக்ஷன் 120-பி போடக்கூடிய அளவுக்கு என்ன சதி செய்தார்கள் என்பதையெல்லாம் நிதானமாக சிந்திக்க வேண்டும். நாங்கள் எல்லாம் 120-பி, 121 போன்ற வகுப்புகளிலே எதிரிகளாக வழக்குமன்றத்திலே நிறுத்தப்பட்டவர்கள். இது அரசியல் நாகரீகமற்ற செயலாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நான் சென்ற ஞாயிற்றுக் கிழமை மதுரைக்குச் சென்றிருந்தேன். அங்கே அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் எப்படி இருந்தன என்று ஒரு சில சம்பவங்களைப்பற்றி இந்த மன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்ணா தி.மு.க. வினருக்கும். தி.மு.க.வினருக்கும் பெரும் மோதல் ஏற்பட்டிருக்கின்றது. அதன் விளைவாக அங்கே என்னென்ன அராஜகங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை இந்த மன்றத்தில் சுட்டிக் காட்டக்

கடமைப்பட்டிருக்கின்றேன். மதுரையில் விளக்குக் கம்பம் என்ற பகுதி இருக்கிறது. அங்கே தி.மு.க. கொடி இருந்தது. அதேமாதிரி அண்ணா தி.மு.க. கொடியும் இருந்தது. ஆனால், காவலிலே இருந்த ஒரு ஆயுள் தண்டனைக் கைதியை பரோலில் விட்டு விட்டு, 16-ஆம் தேதி அன்று மாலை நகரத்திற்கு ஒரு நம்பர் பிளேட் இல்லாத ஜீப்பில் வந்து அந்த அ.தி.மு.க. கொடியை அப்புறப்படுத்தினார்கள் என்று எல்லோரும் என்னிடம் சொன்னார்கள். இது நியாயமா? நீதிதானா என்று சிந்தித்து பார்க்கவேண்டும். முதலில் இந்தக் கொடியை அப்புறப்படுத்தியவுடனே அங்கே இருந்த அண்ணா தி.மு.க. வினர் தி.மு.க. கொடியை அறுத்தார்கள், இதுதான் அங்கே நடந்திருப்பது. இது அரசியல் நாகரீகமான செயலாக நான் கருதவில்லை. இப்படிப்பட்ட அரசியல் மாச்சரியத்தை வளர்த்தால் அது தி.மு.க.விற்கு பெரும் களங்கமாக இருக்கும் என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்தக் கட்சியானாலும், வன்முறையை தூண்டி விடக் கூடாது. வன்முறையை வன்முறையால் வெல்லுவது என்பது நடக்காத காரியம். அன்பினாலும் அற வழியினாலும் தான் வன்முறையை வெல்ல முடியும். தூண்டிவிட்டு வெல்ல முடியாது என்று இந்த அரசாங்கத்திற்கு எச்சரிக்கையாக கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவரவர்களே, அந்த ஆயுள் கைதியாக இருந்து பெரோலில் வெளியே வந்த அந்த நபரின் பெயர் எனக்குத் தெரியும். ஆனால் அதை நான் இங்கே கூற விரும்பவில்லை. ஆயுள் கைதியான அவர், பெரோலில் வெளியே வந்து இந்தக் காரியங்களைச் செய்ததாக அந்தப் பகுதி மக்கள் என்னிடம் கூறினார்கள். என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜீப்பில் வந்து, கொடியை அறுத்து, இவ்வளவு காரியங்களைச் செய்திருக்கிறார்களே, கைது செய்திருக்கிறார்களா என்றால் இல்லை என்று ஆணித்தரமாகக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், அங்கே ரிக்ஷாத் தொழிலாளர்கள் இருந்தார்கள். அவர்களையெல்லாம் துன்புறுத்தியதை வருணிக்க முடியாது. அந்த ஏழை எளிய ரிக்ஷாத் தொழிலாளிகள், அவர்கள் வண்டியை ஓட்டி சிறு வருவாய் பெற்று அதன் மூலம் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறவர்கள்—அவர்களுடைய வண்டிகளின் டயர்களையெல்லாம் வெட்டி, அவர்களை அடித்துத் துன்புறுத்திய நிகழ்ச்சி தமிழ்நாட்டின் தலைநகருக்கு அடுத்தபடியாக விளங்குகிற மதுரை மாநகரில் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சிகளை தமிழக மக்கள் உற்றுக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அடக்குமுறைகள் நடப்பதற்கு நாம் உடந்தையாக இருக்கக் கூடாது.

அது மட்டுமல்ல, ஆளுங்கட்சித் தலைவர்கள் வன்முறையைத் தூண்டிவிடுகின்ற முறையில் மேடைகளில் சொற்பொழிவுகளை நிகழ்த்துகிறார்கள். இது எங்கே கொண்டுபோய் விடும் என்று நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வன்முறையைத் தூண்டுவது யாராக இருந்தாலும், ஆளுங்கட்சியின் மிகப் பெரிய மனிதராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயக்கம் காட்டககூடாது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. பயங்கரமான ஆயுதங்களோடு வந்து மிரட்டுகின்ற தன்மை இருந்ததாகச் சொல்லப்படுகிறது. விளக்குக் கம்பம் என்ற அந்த இடம் மதுரை பி-1 காவல் நிலையத்திலிருந்து 100 அடிக்குள் இருக்கிற ஒரு பகுதி. அங்கே இந்தமாதிரி நடந்திருக்கிறது என்று சொன்னால், காவலர்கள் அத்தனை பேரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்களா? செயலற்று இருந்தார்களா என்பதை நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அந்த நகரத்திலேயே இன்னும் பல பயங்கரமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. தலையில்லாத முண்டமான பிரேதங்கள் ஆங்காங்கே கிடக்கின்றன என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதிலே குறிப்பாக ஒரு பிரேதம் மெடிகல் காலேஜ் காம்பவுண்டுக்குள்ளே கிணறுக்குள்ளே இருந்தது என்ற தகவலும் வந்திருக்கிறது. மர்மக் கொலையாக இருக்குமோ என்று அந்தப் பகுதி மக்கள் எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றிய முழு விவரங்களும் இல்லாத காரணத்தால் அரசியல் ரீதியாக நிரூபணம் செய்ய விரும்பவில்லை. இந்தமாதிரியான வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்றால் அது மிக துர்பாக்கியமான ஒன்றாகும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கலெக்டர் ஆபீசுக்குப் பக்கத்திலே ஷெனாய் நகர், தெப்பக்குளம், முனிச்சாலை போன்ற இடங்களில் இந்தமாதிரியான பிரேதங்கள் இருந்தன என நம்பகமான நபர்கள் கூறியிருக்கிறார்கள்.

இது எல்லாம் விரும்பத்தக்கதா என்பதை மறுமுறையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த மாதிரியான பயங்கரச் சம்பவம் கொஞ்சகாலமாக நடந்துகொண்டிருக்கிறது. இங்கே ஒரு பயங்கரமான அமைப்பு இருக்கிறது. அதுதான் தமிழர் படை, இந்த மன்றத்திலேயே தமிழர் படை இல்லை என்று பலமுறையும் முதல் அமைச்சர் அவர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதுபோன்ற அமைப்பு இருக்கிறதா இல்லையா என்பதை பொது மக்கள் நன்றாக அறிவார்கள். அந்த அமைப்பு இல்லை என்று எவ்வளவுதான் மறுத்துச் சொன்னாலும் ஏற்க முடியாது. அது ஒரு பயங்கர இயக்கமாக இருந்துகொண்டிருக்கிறது. அதைக் கண்டு காவலர்கள் செயலற்று இருக்கிறார்கள் என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

இந்த இயக்கம் இருக்கிறதா இல்லையா என்பதற்கு ஒரு தீர்ப்பே ஏற்பட்டிருக்கிறது. அப்பர் கோதையார் என்ற பகுதி இருக்கிறது. அங்கே சப்-இன்ஸ்பெக்டர் ட்யூடியில் சென்றார். டி. எஸ். பி.யும் இருந்தார்கள். அவர்களைத் தாக்கி கொலை செய்ய முயற்சி செய்தவர்கள் இந்தப் படையைச் சார்ந்தவர்கள். வழக்குமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு நீதிபதி அவர்களே இதுபற்றி தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். நீதி மன்றமே தமிழர் படை இருப்பது பற்றி தனது தீர்ப்பை வழங்கியிருக்கிற நிலையில் அதுபோன்று இல்லை என்று மறுப்பதை விட இதுபோன்ற பயங்கர அமைப்பு இருப்பது நியாயமா, அழகா, தர்மம்தானா என்பதை முதல் அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டுகிறேன்.

தமிழகத்தில் போலீஸார் சிறப்பான நல்ல காரியங்கள் பலவற்றைச் செய்து வருகிறார்கள். அதற்கு மனப்பூர்வமான பாராட்டுதல். ஆனால் பாராட்டுதல் இருக்கிற காரணத்தினால் நாட்டில் நடக்கிற அராஜகங்களை

அக்கிரமங்களை பார்த்துக்கொண்டே இருக்கவேண்டுமென்று சொல்ல முடியாது. **Polite in word, strong in action** என்ற முறையில் அவர்கள் இருக்கிறார்களா என்பதை நிதானமாகச் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்று நாட்டிலே பலவிதமான காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. உதாரணமாக ஒன்று கூற விரும்புகிறேன். என்னைப் பொறுத்த வரை நடந்த சம்பவம். அந்தச் சம்பவத்தைப்பற்றி முன்பு ஒரு தடவை கூறினேன். நான் போலீஸ் அதிகாரிகளோடு—சர்க்கிள் இன்ஸ்பெக்டர், டி. எஸ். பி. ஆகியவர்களோடு நிற்கிறபோது—எங்கள் ஊரிலுள்ள—உங்கள் கட்சியில் மிகப் பெரிய தலைவர், ராஜ்ய சபா உறுப்பினர் என்னை ஒடுக்கிவிடுவதாகக் கூறியிருக்கிறார். அதன்பேரில் போலீஸ் அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? அவர்கள் இப்படி மிரட்டுகிறவர்கள் மீது, பயமுறுத்துகிறவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருந்தால் என்னைப் போன்றவர்களுக்கு எந்தவிதமான மனவருத்தமும் ஏற்பட்டிருக்காது. அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு மற்ற கட்சிகளை மிரட்டிப் பறைசாற்றுகிற அந்தத் தலைவர்களைக் கண்டு போலீஸ்காரர்கள் அஞ்சுகிறார்கள். இந்த மாதிரியான நிகழ்ச்சி இன்னொரு நபருக்கு ஏற்படக்கூடாது.

பொதுவாக, தமிழ்நாட்டில் நாங்கள் எல்லாம் எப்படி இருக்கிறோம், நான் எப்படி வாழ்க்கை நடத்துகிறேன் என்பதை அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த எத்தனையோ தோழர்கள் மீது, தொண்டர்கள் மீது வழக்குகள் போட்டார்கள். அண்மையில் நடந்த இடைத் தேர்தலில் கூட 200 வழக்குகள் போட்டார்கள். ஒரு வழக்கில் கூட யாரும் சிட்சை பெறவில்லை. மிகப் பெரிய வழக்கு என்று சொல்கிற கிட்டு கொலை வழக்கில் கூட— அது ஆதாரமற்றது, அந்தக் கொலைக்கு அரசியல்காரர்கள் காரணமல்ல என்று அவர்களை விடுதலை செய்ததோடு பி. டபுள்யூ. 1 ஐ ப்ராசிக்யூட் செய்ய வேண்டும் என்பதாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி எங்கள் மீது நூற்றுக் கணக்கான பொய் வழக்குகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடரப்பட்டு ஒன்று கூட நிரூபிக்கப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன.

ஆனால் இப்போது எங்களைப் பார்த்து நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாக இருக்கிறோம், எங்கள் தலைவர் இரகசியமாக உடன்பாடு வைத்துக்கொண்டிருக்கிறார் என்பதாக ஒருசில அரசியல் கட்சிகள் ஒப்பாரி வைத்துக்கொண்டிருக்கின்றன. இதை நம்பவேண்டாம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. காமராஜ் அவர்கள் நாணயமாக அரசியல் நடத்துகிறவர்கள். அது 4½ கோடி தமிழர்கள் உணர்ந்த விஷயம். அதில் எந்தவிதமான களங்கமும், மாசும் கற்பிக்க வேண்டாம் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, திண்டுக்கல்லில் நடந்த நிகழ்ச்சிபற்றி திரு. ஓ.என். எஸ். பேசினார்கள். அவர்களுக்குச் சமாதானம் கூறுவதாக நினைத்து திரு. லத்தீப் அவர்கள்—அவரும் ஒரு வழக்கறிஞர்தான்—வேடிக்கையாக அறிவு நுணுக்கமாகச் சொல்வதுபோல, 'அட்மினிஸ்ட்ரேடிவ்

ரீசனில் போலீஸ் அதிகாரிகளை மாற்றக் கூடாதா ?' என்று கேட்டார்கள். மாற்றக் கூடாது என்று சொல்லவில்லை. இடைத்தேர்தல் காலத்தில் அதிகாரிகளை மாற்றக்கூடாது என்பதாக அரசாங்கமே ஆர்டர் போட்டுவிட்டு, இந்த அதிகாரியை எனக்குப் பிடிக்கவில்லை, அங்கிருக்கிற கட்சிக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை என்பதாக இரகசியம் இரகசியமாக மாற்றி வேறு வேறு பகுதியில் இருந்து தங்களுக்கு வேண்டியவர்கள் என்பவர்களை கொண்டுவந்து போடுகிறார்கள் என்றால் திண்டுக்கல் மக்கள் அதை நன்கு தெரிந்துகொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை மட்டும் கூற விரும்புகிறேன். அரசியல் நோக்கத்தோடுதான் இந்த மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதையும் இந்த மன்றத்தில் விளக்கமாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னையிலே பல் ஊர்வலங்கள் நடக்கின்றன. அவை நல்ல முறையில் நடக்க போலீஸார் கடமையுணர்ச்சியோடு பணி புரிகிறார்களா என்றால் இல்லையென்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அன்புத் தலைவர் காமராஜ் ஒரு ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கிச் சென்றார்கள். மிகப் பெரிய ஊர்வலம்—நாங்கள் எல்லாம் ஊர்வலத்தின் முன்னால் சென்றோம், ப்ளாசா தியேடர் அருகில் எத்தனை கற்கள், சோடா பாட்டில்கள் எல்லாம் ஊர்வலத்தினரை நோக்கி வீசப்பட்டன, எத்தனைபேர் காயம் அடைந்தார்கள், ரத்தம் சொட்டச் சொட்ட அடிப்பட்டவர்கள் நின்ற காட்சியை மேடையிலேயே அவர்களை நிற்கவைத்துக்காட்டியிருக்கிறார்கள். இந்தமாதிரியான நிகழ்ச்சிகள் சென்னையில் நடக்கின்றன என்று சொன்னால் இதை எல்லாம் தடுக்க வேண்டாமா ? சீரும் சிறப்புமாக டாக்டர் கலைஞர் நடத்துகிற ஆட்சிக்கு இவைகள் களங்கம் ஏற்படுத்தக்கூடியவை இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டியவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள் என்று கூற விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு தமிழகத்தில் சட்டமும், ஒழுங்கும் சரியான முறையில் பாதுக்காக்கப்படவில்லை. பல இடங்களிலும் வன்முறை நடந்துகொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் கறுப்புக்கொடி காட்டுவதைப் பற்றிச் சொன்னார்கள். தங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவிப்பதற்கு கறுப்புக்கொடி காட்டுவது ஜனநாயக மரபுதான். முடிசூடா மாணிக்கமாக இருந்த பண்டித நேரு அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் கறுப்புக்கொடி காட்டவில்லையா ? செருப்புகளை வீசவில்லையா ? வரலாற்றில் அவை எல்லாம் கறைபடிந்துதானே இருக்கின்றன. இன்றைக்கு கறுப்புக்கொடி காட்டட்டும். செருப்பை வீசி எறிவதை நிறுத்தவேண்டாமா ?

எனக்கு இன்றைக்கு பல இடங்களில் இருந்து கடிதங்கள் வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. அங்கு அமைச்சர் அன்பழகன் அவர்கள் விஜயம் செய்தபோது கறுப்புக்கொடி காட்டினார்கள். அன்றைக்கு எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை. ஆனால் அடுத்த நாளே பல கட்சியைச் சேர்ந்த பலரையும் கைது செய்திருக்கிறார்கள். 147, 341, 427, 511, 506 ஆகிய குற்ற இயல் பிரிவுகளின்படி பலரையும் கைது செய்திருக்கிறார்கள். கம்யூனிஸ்டு கட்சி, சுதந்திரா கட்சி, ஸ்தாபன காங்கிரஸ் கட்சி—ஆளும்

கட்சியினர்களைத் தவிர—மற்ற அனைத்துக் கட்சிக்காரர்களையும் கைது செய்திருக்கிறார்கள். இராமநாதபுரம் தேசீய சிந்தனையாளர் மன்றத்தில் இருந்து எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இந்தமாதிரியான காரியங்கள் பல இடங்களிலும் நடந்துகொண்டிருக்கின்றன.

அடுத்தபடியாக, பட்டுக்கோட்டையிலே நடந்த நிகழ்ச்சியைப் பற்றி நான் முன்பு ஒரு முறை எடுத்துக் கூறியிருக்கிறேன். அதை திரும்பவும் விரிவாக எடுத்துக் கூறத் தேவையில்லையென்றும் கருதுகிறேன். முதலமைச்சர் அவர்கள் அங்கு பேசுவதாக ஒரு நிகழ்ச்சி கொடுக்கப்பட்டிருந்தது. 17—2—1973-ம் தேதியன்று அவர் பேசுவதாக இருந்தது. அன்று, அப்பொழுது, அவர்களுக்கு கறுப்புக் கொடி காட்டவேண்டுமென்று அண்ணா தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் திட்டமிட்டு, அதற்கு இலாகாவினர் அனுமதியும் கொடுத்திருந்தார்கள். ஆனால்,அன்று நடந்த நிகழ்ச்சி என்னவென்றால், கறுப்புக்கொடி காட்டுவதற்கு அவர்களுக்கு அனுமதியும் வழங்கிவிட்டு, 50, 60 லாரிகளில் சமூக விரோதிகளைக் கொண்டு வந்தார்கள். நான் ரௌடிகளோ, குண்டர்களோ என்று சொல்லவில்லை. சமூக விரோதிகள் என்று சொன்னேன். அவர்களெல்லாம் பயங்கரமான ஆயுதங்களோடும் கற்களோடும் லாரி லாரியாக வந்து சந்தைப் பகுதியிலே முகாமிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் போலீசார் பாதுகாப்பு கொடுத்தார்கள்.

இரவு 7-30

அண்ணா தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்களைத் தாக்கினார்கள். அதன் காரணமாக, ஒரு சில மாறுதல்களும் ஏற்பட்டன. அதற்குப் பிறகும் அடித்துவந்தார்கள். அதற்குப் பிறகு அந்தப் பகுதியானது விரிசோவென்று, ஒரு சுடுகாட்டு வெறியுடன் இருந்தது. கடைசியாக, முதலமைச்சர் அந்தப் பகுதிக்குச் சென்றார்கள். போலீசார் பாதுகாவலோடு வந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் அங்கு வருவதற்கு எங்களைப்போன்றவர்கள் எந்தவிதமான ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை.

அண்ணா தி. மு. கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஏற்பட்ட மோதல்களின் காரணமாக எங்கள் ஊழியர்கள் வீட்டிலும், எங்கள் தாய்மார்கள் வீட்டிலும் சென்று போலீசார் அத்து மீறி நடந்திருக்கிறார்கள். அந்த விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அங்கு வைத்திருந்த சைக்கிள்களை எல்லாம், ரிக்ஷாக்களையெல்லாம் தாக்கினார்கள். ரிக்ஷா வண்டி என்ன செய்தது ? சைக்கிள் என்ன குற்றம் செய்தது ? எனக்குத் தெரியவில்லை. என்னவோ, அவை பிடிக்கவில்லையென்று தெரிந்து போலீசார் அப்படி நடந்தார்களா என்று எனக்குத் தெரியவில்லை. இந்தமாதிரியான வெறியாட்டங்களை அனுமதிக்கக் கூடாது. இதற்கு உதவிகரமாக ஒரு போலீஸ் அதிகாரி இருந்தார் என்று எங்கள் கட்சி மக்கள் கூறுகிறார்கள். அந்த ஊர் டி. ஐ. ஜி. நேரடிப் பார்வையிலே, அவரேயிருந்து டைரக்ஷன் எல்லாம் செய்தார்கள் என்று சொன்னார்கள். இரண்டு கட்சிகளுக்கும் இடையே நடந்த விஷயத்திலே, எந்தவிதமான சம்பந்தமும் இல்லாத எங்கள் கட்சிக்காரர்களை எல்லாம் தாறுமாறாக சுக்குநூறாக அடித்துத் துன்புறுத்துவது நியாயமா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

எங்களுடைய கட்சிக்காரர்களுடைய ரைஸ் மில்கள் இருக்கின்றன. ஏனைய உடைமைகள் இருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் பாதுகாப்பு இல்லை. இந்தமாதிரியான நிலைமை நாட்டிலே உருவாகுமானால், நாட்டிலே ஜனநாயகம் செத்து விடும் என்று பலர் கூறிய மாதிரி நிலை உருவாகும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தை நான் கூற விரும்புகிறேன். நாட்டிலே நடக்கிற பெரிய பெரிய குற்றங்களையெல்லாம் கண்டு பிடிக்கின்ற போலீஸ் இலாகாவானது, எங்களுடைய பகுதியிலே ஒரு இரட்டை கொலை நடந்தது. ஒரு புருஷனும் மனைவியும் இரண்டு பேரும் இரவோடு இரவாக வெட்டுப்பட்டு கொல்லப்பட்டார்கள், அது சம்பந்தகமாக ஒரு நபரை சந்தேகத்தின் பேரிலே கைது செய்தது. அந்த நபர் இறந்து விட்டார். அது சம்பந்தமான விஷயங்களைச் சொல்ல விரும்பவில்லை. அது ஒரு கேஸிலே இருக்கிற விஷயம் என்பதாலும், போலீஸ்காரர்கள் விரோதிகளாக இருக்கிற காரணத்தினாலும் அதைச் சொல்ல விரும்ப வில்லை. அந்தக் கேஸ்களில் இன்னும் எந்தவிதமான விளைவும் ஏற்பட வில்லையென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குற்றத்திலே சம்பந்தப்பட்டவர்களை, புலனாய்விலே வல்லவர்கள், மிகவும் நவீன விதத்தில் கண்டுபிடிக்கக் கூடியவர்கள், தமிழக போலீசார் இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்று குற்றம் சாட்ட கடமைப்பட்டிருக் கிறேன்.

எப்படி ஆந்திரப் பகுதியிலேயிருந்து, சிட்டியிலேயிருந்த, சென்னை யிலேயிருந்த குற்றம்புரிந்தவர்களை இந்த இலாகா பிடித்ததோ அதே மாதிரியான முயற்சிகளையெல்லாம் இந்த இரட்டைக் கொலை நடத்திய வர்களைக் கண்டு பிடிக்கவும் கையாண்டு, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, அவர்களுக்குத் தண்டனை வழங்குவது நியாயம் அல்லவா என்றும் கேட்க விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். இன்று தமிழகத்திலே குதிரைப் பந்தயம் சென்னையிலே நடக்கிறது. ஆனால், குதிரைப் பந்தயத்தில் வேண்டிய டிக்கட்டுகள் ஏனைய பகுதிகளிலே போலியாக விற்கப்படுகின்றன. அதற்கு ஆதாரம் இருக்கின்றதா என்று கேட்டால் என்னுடைய கையிலே ஆதாரம் இருக்கிறது. அப்படி விற்ற டிக்கட்டில், இரண்டைக் கையிலே வைத்திருக்கிறேன். இதிலே, என்ன போடப்பட்டிருக் கிறது என்று சொன்னால், புதுக்கோட்டைப் பகுதியிலே அதை விற்றிருக் கிறார்கள், இதிலே சில...... பொறுப்பாளர், அரசு ஏஜென்ஸி, பஸ் ஸ்டாண்ட் டிரான்ஸ்போர்ட் டிப்போ...... போன் நெம்பர் 460........ அதிலே கையெழுத்து போட்டதாக ஒரு நபர் பெயர் இருக்கிறது. என். ஆர். இராமச்சந்திரன். 10-3-1973-லே அவர்கள் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். அதேமாதிரி, 21-3-1973-லே கையெழுத்துப் போட்டு ரூபாய்கள் வசூல் செய்ததாக எனக்குத் தெரிகிறது. டிக்கட்டுகள் என்னுடைய கையிலே இருக்கின்றன. குதிரைப் பந்தயத்திற்கான டிக்கட்டுகள் இவை. கிண்டி ரேஸ் என்று போட்டிருக்கிறது. இந்த மாதிரி போலி டிக்கட்டுகள் எல்லாம் நடமாடிக்கொண்டிருக்கிறன. இதையெல்லாம் போலீஸ் இலாகா மூலமாக ஆய்வு செய்து, குற்ற வாளிகளைக் கண்டுபிடித்து, நிச்சயமாக அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, பொய் வழக்கு எங்கே எங்கே என்று கேட்டதற்கு நான் விருதுநகரிலே நடந்த கேஸைப் பற்றி எல்லாம் கூறினேன். இப் பொழுது, இதிலே 307 செக்ஷன் போடப்பட்டிருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். இந்தமாதிரியான வழக்குகள் என் வாபஸ் ஆகக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இந்த மாதிரி மாணவர்கள் மீது ஏதோ ஆத்திரம் இருக்கக் கூடும். அவர்கள் உண்மையிலே குற்றவாளிகளா இல்லையா என்ற அந்த நிலையையெல்லாம் ஆய்ந்து, இந்தமாதிரி வழக்குகளை உடனடியாக தீர்மானித்து, விருதுநகர் பகுதியிலே நடந்த அந்த கேஸ்களை வாபஸ் வாங்கவேண்டுமென்று நான் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய போலீஸ் இலாகாவிலே இன்று பல சீர்திருத்தங்கள் பற்றியெல்லாம் எடுத்துக்கூறினார்கள். போலீஸ் இலாகாவிலேயிருந்து எனக்கு வந்த ஒரு புகாரினை மாண்புமிகு முத லமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர முற்படுகிறேன்.... டி. கேசவன், இளம்பிள்ளை வாதம் போஸ்ட், சேலம் என்ற ஒரு நபர் அன்னாருடைய துணைவியாரை ஒரு போலீசார் பிடித்துச் சென்று விட்டார் என்றும் அது சம்பந்தமாக முதலமைச்சருக்கும், ஐ. ஜி. அவர்களுக்கும் பல முறையும் பெட்டிஷன் கொடுத்தேன். அதற்காக எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை, இதை சட்டமன்றத்திலே எடுத்துக் கூற வேண்டுமென்ற புகாரினையும் அவர்கள் அனுப்பியிருக் கிறார்கள். இது உண்மையாக இருக்குமானால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு) இதுமாதிரி அனுப்பு கிறார்கள், உண்மையா இல்லையா என்பதை இலாகா மூலமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். அவர் பலமுறை எனக்கு எழுதிக் கொண்டிருக்கிற காரணத்தினால், அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த இலாகாவிலே இருக்கிற பல சீர் திருத்தங்களைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் இந்த சப்-இன்ஸ்பெக்டர் ரெக்ரூட்மெண்ட் பொறுத்த அளவிலே என்னுடைய கருத்தைக் கூறுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இப்பொழுது கிராஜுவேட்ஸ்-ஆக இருக்கவேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. ஆனால், பாக்வார்ட் கிளாஸஸ், ஷெடியூல்ட் காஸ்ட்ஸ்-ஆக இருந்தால், பி.யூ.சி. போதும் என்ற விதியும் இருந்துக்கொண்டிருக்கிறது. அதைக் கண்டிப்பாக எல்லோரும் கிராஜுவேட்ஸ்-ஆக இருக்கவேண்டுமென்று, பாக்வார்ட் கிளாஸ்-ஆக இருந்தாலும் கிராஜுவாட்ஸ்-ஆக இருக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தால் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ராங்கிலே பிரமோஷன் வாங்கிச் செல்கின்றவர்கள், இன்று, எஸ். ஐ., இன்ஸ்பெக்டர்கள் ஆக வருகிறார்கள். அவர்களுடைய திறமையைக் குறைத்துச் சொல்வதாக நீங்கள் யாரும் கருதவேண்டாம். அவர்கள் எல்லாம் கிராஜுவேட்சைப் போல் ஒழுங்காகச் செயலாற்றவில்லை என்ற கருத்தினையும் இந்தச் சந்தர்ப்பத்திலே கூற விரும்புகிறேன்.

128-12—22

இன்றைய ஐ.பி.எஸ். 75 சதவிகிதமும், மெட்ராஸ் போலீசுக்கு பிரமோஷன் ராங்க் 25 சதவிகிதமும் என்றும் விதிமுறை இருந்து கொண்டிருக்கிறது. இந்த சர்விசிலேயிருந்து பெறுகின்ற நல்ல திறமை படைத்தவர்களுக்கு அதிகமாக ஊக்கம் அளிக்கவேண்டுமென்ற கருத்தினை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். இப்பொழுது ஐ. பி. எஸ்.-ஸிலே போதிய அளவுக்கு மாநிலத்திலே அதிகமான அளவுக்கு தேர்வு பெறவில்லையென்ற புகாரைப் பல வாலிபர்களும் நிச்சயம் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் பிற மாநிலத்திலிருந்து யாரும் இங்கு வரக்கூடாது என்று நான் கூற முற்படவில்லை. ஆனால், இங்கு சிறப்பாகப் பணியாற்றுகின்றவர்களுக்கு நிச்சயமாக ஊக்கம் அளிப்பதிலே எந்தவிதமான கஷ்டமும் இருக்காது என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொரு விஷயம். கள்ள நோட்டைப்பற்றி தனியாக ஒரு செல் வைத்து அதிலே சம்பந்தப்பட்டவர்கள் அத்தனைபேர்களையும் அடிக்கடி விசாரித்து அந்தக் கேஸ்களை விசாரணைக்குக் கொண்டுவருவது பொருத்தமாக இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே இருக்கின்ற போலீஸ்காரர்களுக்கு பல சீர் திருத்தங்கள் செய்யவேண்டுமென்று ஒரு போலீஸ் கமிஷன் நிறுவி அதன்மூலம் பல பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்த கிளரிக்கல் கேடரில் இருக்கிற அஸிஸ்டெண்ட், ஜூனியர் அஸிஸ்டெண்ட் இவர்களைப் பொறுத்தவரையில் புரமோஷனுக்காக ஒரு உறுப்பு ஆக ஒரு யூனிட் ஸிஸ்டமாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல் மட்டத்திலே இருக்கிறவர்களுக்கு அதிகமாக புரமோஷன் ஆப்பர்சூனிட்டீஸ் இருக்கின்றன. ஆனால் டிஸ்ட்ரிக்ட் லெவலிலே இருக்கக்கூடியவர்களுக்கு அதிகமாக புரமோஷன் இல்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு அதிகமான வேலைப் பளு இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே 7 அல்லது 8 பேப்பர்கள் அட்டெண்ட் செய்தால் போதும் என்ற விதி இருக்கிறது. ஆனால் இந்த போலீஸ் இலாகாவிலே உள்ளவர்களுக்கு ஒர்க்லோட் அதிகமாக இருக்கிறது என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஒர்க்லோடைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

போலீஸ்காரர்களுக்கு டிரான்ஸ்போர்ட் பஸ்களிலே பஸ் வாரண்ட் கொடுத்துக்கொண்டிருந்தார்கள், இப்பொழுது அந்த முறையை எடுத்துவிட்டார்கள். டிரான்ஸ்போர்ட் இலாகாவிற்கு காலாகாலத்தில் பணத்தைச் செலுத்தவில்லை என்பதால் எடுத்துவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அதை மறுபடியும் அவர்களுக்குக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும்.

தீயணைப்புப் படையினருக்கும் மற்ற போலீஸ்காரர்களுக்கு என்ன என்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ அவற்றையெல்லாம் கொடுக்கவேண்டும்.

கடைசியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியிலிருந்த பொழுது அவர்கள் எழுதிய நாடகத்திலே வருகின்ற ஒருபாட்டினை அவர்கள் கூறியதை எடுத்துக்கூறி அந்த நிலைமை இன்று மாறியிருக்கிறதா என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

> " ஆராரோ........ஆரிரரோ......ஆணழகா ! கண்வளராய் !
> அஞ்சுபத்து சம்பளத்தில் மிஞ்சுவதில் வளரவந்த
> அஞ்சுகமே ! கண்வளராய் !
> போலீசு வேலைக்கென்று போகின்ற நொப்பனுக்கு
> புத்திரனாய் வந்துதித்த தரித்தரமே கண்வளராய்.
> துப்பாக்கி எடுத்துகிட்டு போகின்ற நொப்பனிடம்
> பழம் பாக்கி கேட்டுகிட்டு வழிமறிக்கும் கடன்காரன்
> வருகின்ற காட்சிகளைக் காணாமல் கண்வளராய்.
> நாடாளும் மந்திரிகள் நலியாமல் வாழ்வதற்கு
> ஓடாகத் தேய்கின்ற அப்பாவின் புத்திரனே
> குருவிக் கூடான வீட்டுக்குள்ளே தவழுகிற குலவிளக்கே !
> கொசுக்கடிக்கு அஞ்சாமல் குவளை மலர்க் கண்வளராய் !
> காக்கி உடை போட்டுகிட்டு சேப்பு தொப்பி மாட்டிக்கிட்டு
> நாட்டைக் காக்கும் வீரனுக்கு உன்னைப் போல
> நாலுவந்து பிறந்து விட்டால்
> காவி உடை வேணுமடா ; கமண்டலமும் தேவையடா !

1962 ஆம் ஆண்டிலே ஜூலை மாதம் 12ஆம் தேதியன்று இப்படி அவர்கள், அவர்கள் எழுதிய நாடகத்திலிருந்து தாலாட்டினை இந்த மன்றத்திலே பாடி இருக்கிறார்கள். அந்தத் தாலாட்டினை நான் இங்கு பாடுவதற்கு வரவில்லை. போலீஸாருடைய நிலைமைகள் சீராகியிருக்கின்றனவா என்று கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். " கழனியில் களை இருப்பதுபோல, நிலவில் களங்கம் இருப்பது போல சில பல போலீஸாருடைய கடமைகளில்—போலீஸாரிடத்தில்—களைகள் இருக்கின்றன, களங்கம் இருக்கின்றது, மாசு இருக்கின்றது, அத்தனை பேரும் மாசு அற்றவர்கள் என்று கூறமாட்டேன். அப்படி இருக்கும் காரணத்தினால்தான் சென்னையில் பல இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய படிப்பகங்கள் காலி செய்யப்படவேண்டுமென்று போலீஸாரால் மிரட்டப்படுகிறது " என்று போலீஸார் மிரட்டுகிறார்கள் என்றெல்லாம் அன்றைக்குக் கூறியிருக்கிறார்கள். இப்பொழுது நேர் மாறாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு எதிர்க்கட்சிகள் ஒழுங்காக நியாயமாகப் பொதுக் கூட்டங்கள் நடத்த முடியவில்லை, வீட்டிலே தூங்க முடியவில்லை என்ற நிலைமை இருக்கிறது.

சில போலீஸார்கள் அத்துமீறி நடக்கிறார்கள், அவர்களையும் கண்காணிக்க வேண்டும், கயவர்கள் போலீஸ் துறையிலே இருக்கிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் முன்பு கூறியிருக்கிறார்கள். அத்தகைய கயவர்களை எல்லாம் கண்டுபிடித்து களையெடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு இந்த போலீஸ் மானியத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்புத் தந்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நம்முடைய உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள். நான் இப்பொழுதுதான் நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்தேன். அதிலே ஒருவருக்கொருவர் கேள்வி பதிலாகச் சொல்லியிருக்கிறார்கள். மற்றபடி ஒன்றும் இல்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப்போல அதை எக்ஸ்பஞ்ச் செய்யாமல் விட்டு விடலாம் என்று நினைக்கிறேன். காரணம் எக்ஸ்பஞ்ச் செய்தால் இதிலே இரண்டு பக்கங்களை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டியிருக்கிறது. ஒருவருக்கொருவர் பதில் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டியதில்லை என்று சொல்லி விட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களும், அதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டியதில்லை என்று தெரிவித்தார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டாம் என்பதை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரொம்ப நல்லது. அது அப்படியே இருக்க வேண்டுமென்று உத்திரவிடுகிறேன். பத்திரிகைகளுக்கு குறிப்பிடப்பட்டிருந்த தடையை நீக்குகிறேன். பத்திரிகைகள் தாராளமாகப் பிரசுரிக்கலாம்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ் நாடு காவல் துறை மானியம் குறித்து காலையிலிருந்து அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களும் இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களும் பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இன்று ஒருவரைவிட ஒருவர் வேகமாகப் பேச வேண்டும் என்பதிலே நல்ல போட்டி இருந்தது என்பதை நான் காலையிலிருந்து கூர்ந்து கவனித்து வருகின்றேன். அந்தப் போட்டியிலே யார் வென்றார்கள் என்பதை என்னால் சொல்ல முடியாவிட்டாலும் அவர்கள் போட்டுக் கொண்ட போட்டியிலே யாருடைய போர்க் கருவி கூர்மையானது என்பதைச் சோதித்துப் பார்க்க என்னைத்தான் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதை மாத்திரம் நான் மறந்து விடவில்லை. இறுதியிலே எனக்குப் பெரு மகிழ்ச்சி என்னவென்றால் நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நான் எழுதி காங்கிரஸ் அமைச்சர்களால் தடைசெய்யப்பட்ட உதய சூரியன் என்ற நாடகத்திலே வருகின்ற தாலாட்டுப் பாட்டை அவரே பாடவேண்டிய ஒரு நிலைமைக்குக் கொண்டு வந்து வைத்துவிட்டேனே என்பதிலே எனக்கு ஒரு பெரிய மகிழ்ச்சி. நான் அந்த நாடகத்தை ஏன் தடை செய்தீர்கள் என்று முன்னாள் முதலமைச்சர் பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்களை இந்த மன்றத்திலே கேட்டு, இந்தப் பாடல் தடை செய்யப்பட வேண்டுமா என்று கேட்டு அதை இந்த மன்றத்திலே நான் படித்துக் காட்டினேன். பாடிக்காட்டவில்லை. பாடியிருந்தால் இந்த மன்றம் உடனடியாகக் கலைந்துவிடும், எனவே நான் பாடிக் காட்டவில்லை. படித்துக் காட்டினேன். ஆனால் அவர்கள் என்னுடைய பேச்சுக்கு ஒரு நல்ல தொடக்கத்தை எடுத்துக் கொடுத்தார்கள் என்பதிலே நான் பெருமையடைகிறேன். ஏனெனில் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நேரத்திலேயும் போலீஸாருடைய துன்ப துயரங்களில்

எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நிறைந்த அக்கறை இருந்தது என்பதை எடுத்துக்காட்டுகிற வகையிலே அவர்கள் இங்கு படித்துக் காட்டிய பாடல் இருப்பதை அனைவரும் அறிவீர்கள்.

இன்று இங்கு பேசிய பலருடைய பேச்சில் ஒருவர் இருவர் தவிர, பரிதாபத்திற்குரிய காவல் துறையிலே இருக்கின்ற காவலர்களைப்பற்றி அவர்களுடைய கஷ்டங்களைப்பற்றி அவர்களுக்கு இன்னும் மேலும் என்ன என்ன வசதிகளைச் செய்து தரவேண்டும் என்பதுபற்றி அதிகமாகப் பேசவில்லை என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. ஓரிருவர் பேசிய பேச்சிலேயும் மிகப் பெரிய இடத்தை அதற்காக அவர்கள் யாரும் தரவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபோது நான் என்ன சொன்னேன்? நிலவிலே களங்கம் இருப்பதைப்போல இந்தத் துறையிலேயும் சில பேர்கள் இருக்கிறார்கள் என்று நான் அன்றைக்குச் சொன்னதையும் இன்று சுட்டிக்காட்டினார்கள். முதலமைச்சர் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்ட பிறகும் அதே விதமான கருத்தைச் சொல்லியிருக்கிறேன். இந்தத் துறையிலே இருக்கின்ற அத்தனை பேர்களும் தூய்மையானவர்கள், இந்தத் துறையை சுற்றிக் காக்கின்றவர்கள், இந்தத் துறையிலே பரந்து கிடக்கின்ற பல்லாயிரக்கணக்கான காவலர்கள், அவர்களுடைய துணை அதிகாரிகள் அனைவருமே தூய்மையானவர்கள் என்று நான் எடுத்துக் கொண்டு இங்கு எழுப்பப்பட்ட விவாதங்களுக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சிலரிடத்தில் நாம் வெறுப்பு அடைகிற அளவிற்குச் சில தவறான எண்ணங்கள், தவறான செயல்கள் நிச்சயமாக இருந்திடக் கூடும். அவைகளையெல்லாம் இது போன்ற மாமன்றங்களில் விவாதிக்கப்படுகிற நேரத்திலே, எடுத்து விளக்கப்படுகிற கருத்துக்களின் மூலமாக அவர்களே திருத்திக் கொள்வதற்கும் வழி ஏற்படும் என்ற வகையில்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் சூடாகத் தங்களுடைய உரைகளை ஆற்றியிருந்தாலும் கூட சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களை அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உரியவர்கள் நிச்சயமாக சிந்தித்துப் பார்ப்பார்கள் என்ற நம்பிக்கையும் இங்கு நான் தெரிவித்துக் கொள்வேன்.

தாலாட்டுப் பாடலிலே போலீஸாருடைய வீட்டிலேயிருக்கின்ற கஷ்டங்களை ஆராரோ பாடுகின்ற அம்மையின் வாயிலாக நான் விளக்கி இருந்தேன். அந்தப் பாட்டோடு நின்று விடாமல் ஆட்சிப் பொறுப்பையேற்ற பிறகு, அதிலும் குறிப்பாக 1969-ஆம் ஆண்டு நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகு, அந்தப் பாட்டை நினைவில் வைத்துக் கொண்டு போலீஸாருக்கு உடனடியாக சில வசதிகளை, வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டுமென்பதற்காக போலீஸ் குழு ஒன்றை, காவல் துறை ஆணைக் குழு ஒன்றை அமைத்தேன். திரு. ஆர். ஏ. கோபாலசுவாமி, ஐ.சி.எஸ். அவர்களுடைய தலைமையில் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி. அவர்களும், திரு. கோவிந்தசுவாமிநாதன் அவர்களும், திரு. சந்திரசேகரன் அவர்களும், திரு. என். கிருஷ்ணசாமி அவர்களும் உறுப்பினர்களாகக் கொண்டு, குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினுடைய அறிக்கை 2—1—1971-இல் அரசுக்கு அளிக்கப்பட்டது. அந்த அறிக்கையிலே 133 பரிந்துரைகள் சொல்லப்பட்டன. அந்தப் பரிந்துரையிலே 122 பரிந்துரைகளை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி

ஏற்றுக் கொண்ட 122 பரிந்துரைகளில் மிக முக்கியமான 15 பரிந்துரைகள் அமுல் நடத்தப்பட்டுவிட்டன என்பதையும், 27 பரிந்துரைகள் இப்போது அமுல் நடத்தப்படுகிற கட்டத்திலே ஒன்றன்பின் ஒன்றாக செய்யப் பட்டு வருகின்றன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன்.

அமுல் நடத்தப்பட்ட அந்த 15 பரிந்துரைகள் ஊதிய விகிதம், பஞ்சப்படியை மாற்றியமைத்தல் ஆகியன. அவர்கள் பாடிக் காட்டினார்கள் 'துப்பாக்கி எடுத்துக்கிட்டுப் போகின்ற உங்க அப்பனிடம் பழம் பாக்கி கேட்டு வருகிறார் கடன்காரர்' என்று சொன்னார்கள். ஏன் அப்படிக் கேட்டு வந்தார்கள் தெரியுமா ? அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 1970-ஆம் ஆண்டு வரையிலே 70 ரூபாயாக இருந்தது. ஆகவே துப்பாக் கிக்கு முன் பழம்பாக்கிக்காரன் வந்து நின்று கொண்டிருந்தான். இந்த 70 ரூபாய், போலீஸ் கமிஷன் பரிந்துரைகளுக்குப் பிறகு 150 ரூபாயாக அவர்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. (பலத்த கைதட்டல்) முதல் நிலைக் காவலர்களுக்கு 200 ரூபாயாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, 70 ரூபாய் சம்பளத்திலிருந்த காவல் துறை நண்பனுக்கு இன்றைக்கு 150 ரூபாய் சம்பளம் பெறுகின்ற அளவிற்கு உயர்த்தி அளித்திருப்பது, பாட்டு எழுதியதோடு மாத்திரமல்ல, அந்தப் பாட்டின் கருத்தைச் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் உள்ளத்தில் இருந்த காரணத் தினால்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்வேன்.

தலைமைக் காவலர்கள் 90 ரூபாய் ஊதியம் பெற்று வந்தார்கள். இப்போது 210 ரூபாய் ஊதியம் பெறுகிறார்கள். காவலர்களும், தலைமைக் காவலர்களும் குறைந்தபட்சம் 25 ரூபாய் இப்போது ஊதிய உயர்வு பெற்று வருகின்றார்கள்.

அடுத்தபடியாக, காவல் துறையிலே உள்ள பதவிகளை மற்ற இலாகா விலே உள்ள இது போன்ற பதவிகளோடு ஒப்பிட்டு ஊதிய நிர்ணயம் செய்ய வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் காவல் துறை ஆணைக்குழு வின் சிபாரிசின்படி சிறப்பு ஊதியங்கள் அதிகமாக்கப்பட்டுள்ளன. வீட்டு வாடகைப்படி அதிகரிக்கப்பட்டு இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் பெரு நகர்ப்பகுதிகளில் பணியாற்றுகின்ற இரண்டாந்தர காவலர்களுக்கு 1—10—1970-க்கு முன் னால் 7 ரூபாய் வாடகைப்படியாகத் தரப்பட்டது. 1972-73-இல் இந்த வாடகைப்படி 25 ரூபாயாகவும் 1973-74-இல் 30 ரூபாயாகவும் உயர்த்தப் பட்டிருக்கிறது. மற்ற அதிகாரிகளுக்கும் இதுபோன்று வாடகைப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது. பெரு நகர் அல்லாத மற்ற ஊர்களில் உள்ள காவலர்களுக்கு வாடகைப்படி 7 ரூபாயிலிருந்து 1972-73இல் 20 ரூபாயாக வும் 1973-74-இல் 25 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

அடுத்து, வண்டி வாகனப் படி சீரமைப்பு செய்யப்பட்டு இருக்கிறது. உதாரணத்திற்கு 1—10—70-க்கு முன் 4 ரூபாய் பெற்று வந்த காவலர்கள் இப்போது இந்த வண்டி வாகனச் சீரமைப்புப் படி 5 ரூபாய் பெறுகிறார்கள். 31 ரூபாய் பெற்று வந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் வண்டி வாகனப்படியாக இப்போது 40 ரூபாய் பெறுகின்ற நிலைமையைப் பெற்று உள்ளார்கள். 1—6—66-ல் குறைந்த பட்ச ஊதியம் 70 ரூபாயாக இருந்தபோது

நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் பயிற்சிக்குச் சேரும்போது அவ ருக்குத் தரப்பட்ட ஊதியம் 60 ரூபாயாக இருந்தது. 1—6—1966-ல் நேரடியாகப் பயிற்சிக்கு ஒருவர் வந்து இணைவாரானால் அவருக்கு 60 ரூபாய் ஊதியம் தரப்பட்டது. இப்போது காவலர்களுடைய சம்பளம் குறைந்தபட்சம் 150 ரூபாயாக ஆக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் பயிற்சிக் காலத்தில் அவர்களுக்குத் தரப்படுகிற ஊதியம் 146 ரூபாயாக ஆக்கப் பட்டிருக்கிறது.

காவல் படை சேம நல நிதி என்பது ஈட்டுத் தொகையாக அரசு சார்பில் வழங்கப்பட்டதை மாற்றி 1971-ல் சேம நல நிதிக்கு அரசின் சார்பில் 1 இலட்ச ரூபாயும் 1972-ம் ஆண்டு 1½ இலட்ச ரூபாயும் வழங்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்வேன். இதனால் 1967-ம் ஆண்டு இந்த சேம நல நிதியின் சார்பாக நிதியுதவி பெற்ற மாணவர்களுடைய எண்ணிக்கை 182 ஆக இருந்ததற்கு மாறாக 1972-ல் 512 ஆக உயர்ந்திருக்கிறது என்பதையும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள முடியும்.

காவலர்களுக்கும், படைகலன் தாங்கிய காவலர்களுக்கும் (எஸ்.ஏ.பி.) இடையே இருந்த ஈட்டு விடுப்பு ஊதியத்திலிருந்த மாறுபாடுகள் களையப் பட்டு விட்டன. இந்தப் பரிந்துரையின் அடிப்படையில் (D. I. G. services and Co-ordination) டி.ஐ.ஜி. பணிகள் என்ற பதவி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

குற்றங்கள், குற்றவாளிகள் பற்றிய விவரங்கள், இவைகளை இயந்திரங் களின் மூலம், கம்ப்யூட்டர் மூலம், கணக்கு எடுக்கும் முறை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது, இந்தப் பரிந்துரை அடிப்படையில். இதன் மூலம் பழைய குற்றவாளிகள் கைரேகை, அங்க அடையாளங்கள், குற்ற விவரங் கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு பிரிதோர் குற்றம் நடக்கிற நேரத்தில் பழைய விவரங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இந்த இயந்திரம் பெரிதும் பயன்படுகிறது. இதன்படி 1963 முதல் 1973-ஆம் ஆண்டுவரை நடைபெற்றுள்ள 5 இலட்சம் குற்றங்களையும், 3 இலட்சம் குற்றவாளிகள் பற்றிய விவரங்களையும் 73 ஜூலைக்குள் கணக்கீடு செய்து வைக்கப்படும். இந்தியாவிலேயே தமிழ்நாடு காவல் துறையில்தான் இந்த முறையை முதன் முதலாக மேற்கொண்டிருக்கிறோம் என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ள முடியும். இந்தப் பரிந்துரைகளும், இதன் தொடர் பான ஏனைய பரிந்துரைகளும் நிறைவேற்றப்பட ஒரு கோடியே அறுபத் தெட்டு இலட்சம் ரூபாய் செலவாகிறது. மேலும் இப்போது அமல் நடத்தப்படுகிற 27 பரிந்துரைகளுக்கான விவரங்களை நான் சொல்லியாக வேண்டும்.

அவர்கள் தாலாட்டுப் பாட்டுப் பாடியதற்காக இவைகளை நான் விவர மாகச் சொல்லவேண்டியிருக்கிறது. சப்-இன்ஸ்பெக்டர்கள், காவலர், முதல் நிலை, இரண்டாம் நிலை, ஆகியோருக்குப் பயிற்சிக் காலத்தை மாற்றி புதிய திட்டப்படி பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காவல் துறையினரில் 80 சதவீதம் பேருக்கு வீட்டு வசதி அளிக்க முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தஞ்சை, கோவை காவல் மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. காவல் வட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன. புலனாய்வு, நீதிமன்றப் பணி, ரோந்து வருதல் போன்ற முக்கியப் பணிகளுக்கு முதல் நிலைக் காவலர்கள் என்ற (First Grade Constables) புதிய பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளதில் 3 ஆயிரம் பேர் முதல் நிலைக் காவலர்களாகப் பயன் பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் கண்ட்ரோல் ரூம் ஏற்படுத்துவதற்கான முயற்சி, ஒவ்வொரு மாவட்டத்திலும் கைவிரல் ரேகைப் பிரிவு, நிழல் படப் பிரிவு ஏற்படுத்துதல், காவல் வானொலிப் பிரிவில் உள்ள அதிகப்படியான பணியாளர்களை நியமித்தல், கணக்கீடு நிலையத்தில் அதிகப்படியான பணியாளர்களை நியமித்தல், சம்பளப் பட்டியல் தயாரிக்க பிராட்மா (Bradma) முறையைக் கொண்டு வருதல், வாகன வண்டிகளை ஏழாண்டுகளில் அதிகரித்தல், காவல் நிலையங்களை மாவட்டத் தலைமை நகரங்களோடும் மாநிலத் தலைமையிடத்தோடும் இணைப்பதற்கு ரேடியோ சாதனங்கள், டெலிபிரிண்டர்கள், உருவ நிழல் அனுப்பி ஆகியவைகளை அமைத்தல்—இவையும் இவைபோன்ற மொத்தம் 27 பரிந்துரைகளும் நிறைவேற்ற 3 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இரவு 8.00 அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ள 122 பரிந்துரைகளை அமல் நடத்தினால் தொடராச் செலவு 6 கோடியே 10 இலட்சமும், ஆண்டுதோறும் ஆகிற செலவு 2 கோடியே 81 இலட்சமும் அதிகமாகும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன்.

1967-ல் 34,964 காவல் துறை ஆட்படையின் எண்ணிக்கையாக இருந்தது. 1972–73-ல் 43,364 ஆக அது உயர்ந்துள்ளது. இன்னும் ஐந்தாண்டுகளில் இந்த விகிதாசாரத்தில் அது 46,000 ஆக அதிகரிக்கக் கூடும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்வேன்.

குற்றப் புலனாய்வுகளைக் கவனிக்க சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் இன்ஸ்பெக்டர்களுக்கும் இடையே துணை இன்ஸ்பெக்டர் (டெபுடி இன்ஸ்பெக்டர்) என்ற புதிய பதவியும் விரைவில் ஏற்படுத்தப்பட இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன்.

இன்று காலையில் பேசிய உறுப்பினர்களில் சிலர் இவர்களுக்கு சைக்கிள், மோட்டார் சைக்கிள்கள் இவை எல்லாம் வழங்க வேண்டுமென்பதை வலியுறுத்திப் பேசினார்கள். 1970-ல் சட்டப் பேரவையிலே கிராமப்புறக் காவல் நிலையங்களுக்குப் படிப்படியாக மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும் என்று நான் அறிவித்ததற்கு ஏற்ப 1971-ல் 100 மோட்டார் சைக்கிள்களும், 1972-73-ல் 43 மோட்டார் சைக்கிள்களும், 1973–74-ல் 100 மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்படும் என்ற நிலைமையும் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வேன். 143 மோட்டார் சைக்கிள்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டாகிவிட்டன.

அதே போல் கிராமப்புறக் காவல் நிலையங்களுக்கு சைக்கிள்கள் வாங்கக் கடன் தொகை—உதவித் தொகை (Loan-cum-subsidy scheme) என்ற அடிப்படையில் 5,000 சைக்கிள்கள் வாங்க அனுமதிக்கப்பட்டு இது வரை 2,390 சைக்கிள்கள் வாங்கிக் காவலர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்வேன்.

மாநிலத்திலுள்ள 251 காவல் வட்டங்களில் 200 வட்டங்களுக்கு வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, 1970-ல் 88 வாகனங்கள் இருந்தன. 1971-ல் 44 வாகனங்களும், 1972-ல் 68 வாகனங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

மாநிலத்திலுள்ள 820 காவல் நிலையங்களில் இதுவரை 450 காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. 1972–73-ல் 166 காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி வைக்க 10—1—73 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 120 காவல் நிலையங்களுக்குக் கம்பியில்லாத் தந்தி இணைப்புக் கொடுக்க 24—12—71-ல் உத்தரவு தரப்பட்டு இணைப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன. 1972–73-ல் 270 காவல் நிலையங்கள் கம்பியில்லாத் தந்தி மூலம் இணைக்கப்பட்டுச் செயல்பட விரைவில் உத்தரவு வழங்கப்படும்.

காவல்துறை அதிகாரிகளை எல்லாம், திறமையாகப் பணியாற்றியவர்களை எல்லாம் நாம் பாராட்ட வேண்டும்—கவுரவிக்க வேண்டும் என்ற கருத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்காகத்தான் வீரச் செயல் புரிந்தவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் பல ஆண்டுக் காலமாக நற்பணியாற்றியவர்களுக்குத் தமிழக அரசின் புதிய திட்டமாக முதலமைச்சர் பதக்கம் என்ற பெயரால் பொற்கிழி அளித்தல், பொற் பதக்கம் வழங்குதல் என்ற புதிய ஏற்பாட்டைச் செய்து ஒவ்வொரு ஆண்டும் அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர்த் திங்கள் 15 ஆம் நாள் முதலமைச்சர் பதக்கம், அந்த விருது பெறுகிறவர்களுக்கு விழா நடத்தி வழங்கப்படும் என்று அறிவித்ததற்கு ஏற்ப வழங்கப்பட்டு வருகிறது.

வீரச் செயலுக்கான தங்கப் பதக்கமும் ரூபாய் மூவாயிரமும் தரப்பட்டிருக்கிறது.

கடமையுணர்வோடு பணியாற்றியமைக்காக காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் ரூபாய் ஆயிரமும், பதக்கமும் தரப்படுகிறது. சப்-இன்ஸ்பெக்டர் நிலையில் உள்ளவர்களுக்குப் பதக்கமும் ரூபாய் இரண்டாயிரமும் வழங்கப்பட்டிருக்கிறது. டி.எஸ்.பி. நிலையில் உள்ளவர்களுக்குப் பதக்கமும் ரூபாய் மூவாயிரமும் வழங்கப்படுகிறது. இவர்களில் தீயணைப்புப் படையினரும் சேருகிறார்கள்.

1969-ல் வீரச் செயலுக்கான பதக்கம் இரண்டும், தலைசிறந்த பணிக்கான பதக்கம் இருபதும் வழங்கப்பட்டிருக்கின்றன.

1970-ல் வீரச் செயலுக்கான பதக்கம் நான்கும், தலைசிறந்த பணிக்கான பதக்கம் இருபதும் வழங்கப்பட்டிருக்கின்றன. 1971-ல் வீரச் செயலுக்கான

பதக்கம் ஐந்தும், தலைசிறந்த பணிக்கான பதக்கம் இருபத்து மூன்றும், வழங்கப்பட்டிருக்கின்றன. 1972-ல் வீரச் செயலுக்கான பதக்கம் மூன்றும் தலைசிறந்த பணிக்கான பதக்கம் இருபத்திரண்டும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பதக்கம் அளிக்கும் விழா சென்னையிலேயே தொடர்ந்து நடைபெறுவது என்று இல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலை நகரிலும் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது என்பதையும் மாண்பு மிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இங்கு அவர்களுடைய கட்டாய விடுப்பு ஊதியம் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று சிலர் பேசினார்கள். ஏற்கெனவே காவல் துறையினருக்கும் தலைமைக் காவலருக்கும் வாரத்தில் ஒரு நாள் கட்டாய விடுப்பு—அளிக்க வேண்டுமென்றும், ஆனால் அந்த நாளில் ஏதோ பொதுப்பணியின் காரணமாக அவசரத் தேவையின் காரணமாக அவர்கள் அந்த விடுப்பினை எடுத்துக்கொள்ள முடியாமல்—அவர்களுக்கு விடுப்பு வழங்கப்படாமல்—பணியாற்ற அழைக்கப்படுவார்களானால், அந்த ஒரு நாளைக்கு அவர்களுக்கு ஒரு ரூபாய் ஊதியம் தரப்பட்டது. இப்போது அந்த ஊதியம் இரண்டு ரூபாயாக உயர்த்தப்பட்டு இரண்டு நாட்களுக்குமுன் அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஆகும் அதிகச் செலவு சுமார் ரூ. 2½ இலட்சமாகும். இதனால் ஏறத்தாழ 10,000 காவலர்கள் பயனடைவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பணி புரிகிற நேரத்தில்—நண்பர் வகாப் அவர்கள் காலையிலே பேசும் போது எடுத்துக் காட்டியதுபோல், பல காவலர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள், அங்கஹீனர்களாக ஆகிறார்கள், உயிரிழப்புக்கு ஆளாகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய குடும்பங்களை நிர்க்கதியாக விட்டு விடாமல் அந்தக் காவலர்களுடைய குடும்பங்களை ஓரளவுக்கு மனிதாபிமான உணர்ச்சியோடு நோக்குகின்ற பொறுப்பினையும் இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் 1969-ம் ஆண்டு சனவரி 21-ம் நாள் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பரமத்தி என்ற ஊரின் காவலர் மாரிமுத்து என்பவர் ஒரு முரடனைப் பிடிக்கப் போகும்போது குத்திக் கொல்லப்பட்டார். அவருடைய மனைவிக்கு முதலமைச்சர் பதக்கமும், 3,000 ரூபாயும் அண்ணா பிறந்த நாள் அன்று வழங்கப்பட்டது. அது தவிர சேம நல நிதியிலிருந்து 2,000 ரூபாயும் வழங்கப்பட்டது.

4—1—69 அன்று ஒரு குற்றவாளியைப் பிடிக்கும்போது ஏற்பட்ட மோதலில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த காவலர் ராமசாமி கத்தியால் குத்தப்பட்டு இறந்தார். அவருடைய மனைவிக்கு 1970-ல் குடியரசுத் தலைவருடைய வீரப் பதக்கம் வழங்கப்பட்டது. நம்முடைய சேம நல நிதியிலிருந்து 2,000 ரூபாய் வழங்கப்பட்டது.

5—10—70-ல் குற்றவாளியைக் பிடிக்கச் சென்றபோது குத்துண்டு இறந்த வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பழனிசாமி என்பவரின் மனைவிக்குக் குடியரசுத் தலைவருடைய வீரப் பதக்கம் வழங்கப்பட்டது நமது சேம நல நிதியிலிருந்து 2,000 ரூபாய் தரப்பட்டது.

சிறப்பு ஆயுதப் படையைச் சேர்ந்த துளசிமணி என்பவர் அஸ்ஸாம் மாநிலத்தில் எல்லை காக்கச் சென்று அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கும் போது மாரடைப்பால் இறந்தார். அவருடைய குடும்பத்திற்கு நமது சேம நல நிதியிலிருந்து 2,000 ரூபாய் வழங்கப்பட்டது.

5—2—1972-ல் விவசாயப் போராட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் காவலர் ராமசாமி எதிர்பாராத விதமாக மரணம் அடைந்ததால் அவருடைய குடும்பத்திற்கு சேமநல நிதியிலிருந்து 4,000 ரூபாய் வழங்கப்பட்டது. முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்தும் 5,000 ரூபாய் வழங்கப்பட்டது.

22—11—1972-ல் திருநெல்வேலியில் தலைமைக் காவலர் சங்கர பாண்டியன் என்பவர் வன்முறைக் கூட்டத்தால் தாக்கப்பட்டு எதிர் பாராத விதமாகத் துப்பாக்கிக் குண்டிற்குப் பலியாகி மரணமடைந்தார். அவருடைய குடும்பத்திற்கு சேம நல நிதியிலிருந்து 4,000 ரூபாய் வழங்கப் பட்டது.

ஒரு சோகச் சம்பவம் : 26—1—1970 அன்று குடியரசு தின அணிவகுப்பில் கலந்துகொண்ட ஹவில்தார், சங்கரபாண்டியன் கொஞ்சதூரம் நடந்து சென்றபோது நெஞ்சுவலி ஏற்பட்டது. ஆனாலும் கடமையிலிருந்து தவறக் கூடாது என்பதற்காக அவருடைய நெஞ்சுவலியைத் தாங்கிக்கொண்டு அணி வகுப்பு முழுவதையும் முடித்துக்கொண்டுதான் நோயைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்று மிகுந்த சிரமத்திற்கிடையே நடந்து சென்று அணி வகுப்பு முடிந்த இடத்திலேயே சுருண்டு வீழ்ந்து மாரடைப்பால் இறந்து போனார். அவருடைய குடும்பத்திற்கு சேம நல நிதியிலிருந்து 1,500 ரூபாயும், முதலமைச்சர் நிதியிலிருந்து 3,000 ரூபாயும் வழங்கப்பட்டது.

நான் இவற்றை எல்லாம் சொல்லக் காரணம் காவலர்களும், காவல் துறை அதிகாரிகளும் நம்மவர்கள்தான். வேறு ஒரு மாற்று உடையை, ஒரு காக்கி உடையை, நம்மிலே இருந்து வேறுபட்ட உடையை அணிந்து கொண்டிருக்கும் காரணத்தாலேயே நம்முடைய வெறுப்புக்கு ஆளாகின்ற சில உருவங்கள் என்ற அளவில் அவர்களை எண்ணிடக் கூடாது ; அவர்களும் இந்தச் சமுதாயத்தில் ஓர் அங்கம். இந்தச் சமுதாயம் வளர, இந்தச் சமுதாயம் நல்ல ஒளி பெற, இந்தச் சமுதாயத்தில் குற்றங்கள் குறைந்து நல்ல தூய்மை ஏற்பட அனைவரும் சேர்ந்து ஆற்றுகின்ற பணியில் காவலர்களுடைய பணியும் இணைந்திருக்கிறது என்ற காரணத்தால்தான் மனிதாபிமான உணர்ச்சியோடு இந்த அரசு அவர்களுடைய நல்வாழ்வில் நிறைந்த அக்கறை காட்டி வருகிறது என்பதற்கு இவைகளையெல்லாம் நான் எடுத்துச் சொன்னேன்.

ஆராரோ பாடியதோடு நிற்கவில்லை ; யார் யாரோ செய்யாததை எல்லாம் இன்றைக்கு நாங்கள் செய்துகாட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இந்தக் குறிப்புகளை எல்லாம் நான் தந்தேன்.

அவர்கள் எவ்வளவு அளப்பரிய பணிகளை எல்லாம், தீரச் செயல்களை எல்லாம் ஆற்றி வருகிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர்களேகூட, உறுப்பினர்களேகூடச் சொன்னார்கள். எந்த எதிர்க்கட்சியின் தலைவராவது இந்தத் துறை அல்லது இந்தத் துறையினுடைய நிர்வாகம் மோசமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்களா என்று உற்றுக்கவனித்தேன். யாரும் சொல்லவில்லை. டாக்டர் ஹாண்டே பேசினாலும் சரி, அம்மையார் அனந்தநாயகி பேசினாலும் சரி, நண்பர் மதி பேசினாலும், திரு. பொன்னப்ப நாடார் பேசினாலும் சரி, திரு. கே. டி. கே. தங்கமணி பேசினாலும்சரி, கட்சியில் உள்ளவர்கள் யார் பேசினாலும்சரி, இந்தத் துறையைச் சிலாகித்தே பேசினார்கள். காரணம் அவரவர்களுக்குள்ள ஆசை.

நாம் விரைவிலே ஆட்சிப்பீடத்திற்கு வந்துவிடக் கூடும், ஆகவே இப்போதே அவர்களைப் பாராட்டி வைத்துக்கொள்ளவேண்டுமென்று அந்த ஆசை அவர்கள் உள்ளத்தில் இழையோடுவதை அது காட்டியது. இதையெல்லாம் நீங்கள் சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டாம். (ஆரவாரம்) சீரியஸாக என்றால் ஆட்சிக்கு வந்துவிடுவோமோ என்று சீரியஸாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்பதற்காகச் சொன்னேன்.

நான் இந்த ஆய்வுரையில் சிலவற்றைக் குறிப்பிட்டிருக்கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் ஒருவர் அரசாங்க அதிகாரிபோல் நடித்துப் பயங்கரமான மோசடியில் ஈடுபட்டதைக் காவல்துறையினர் கண்டுபிடித்து இருப்பது சாதாரண விவகாரம் அல்ல.

அதைப்போல் மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் என்பவர் இரவு நேரங்களில் சென்னை நகரத்தில் ஜன்னல் வழியாக கைகளை நுழைத்தும், யாருமில்லாத நேரங்களில் உள்ளே நுழைந்தும் அவர் இட்டத்தட்ட 203 குற்றங்களில் ஈடுபட்டவர், அவர் பிடிப்பட்டார். அவரிடமிருந்து ரூ. 85,000 மதிப்புமிக்க விலை உயர்ந்த தங்க நகைகள், வைர நகைகள், கடிகாரங்கள், டிரான்ஸிஸ்டர்ஸ், சைக்கிள்கள் முதலியன கைப்பற்றப்பட்டு அவருக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

ராகவேந்திர. ராவ் என்பவர் திருமணக் கூட்டத்தில் தானும் ஒருவர் போல், ஒரு விருந்தினர்போல் வருவார். இப்போதுகூட நாம் ஒருவருக்கு கல்யாண அழைப்பிதழ் அனுப்பினால் அது அவருக்குப் போய் சேருவதில்லை. வேறு யாரோ வாங்கிக்கொள்கிறார்கள். அப்படி வாங்கிக்கொண்டு அவர் விருந்துக்கு வருவார். நாம் அவருக்கு அழைப்பிதழ் அனுப்பியிருப்போம் என்று எண்ணிக்கொண்டு நாம் அவரை வரவேற்போம். மணமகன் வீட்டில் உள்ளவர்கள் அவர் மணப்பெண் வீட்டைச் சேர்ந்தவர் என்று கருதிக் கொள்வார்கள். மணப்பெண் வீட்டைச் சேர்ந்தவர்கள் அவர் மணமகன் வீட்டைச் சேர்ந்தவர் என்று கருதிக்கொண்டு வரவேற்பார்கள். அப்படி விருந்தாளிபோல் இந்த ராகவேந்திர ராவ் திருமண வீடுகளில் விருந்தினர்போல் நுழைந்து நடத்திய திருட்டுகளில் ரூ. 20,000 மதிப்புள்ள நகைகள் அவரிடமிருந்து மீட்கப்பட்டிருக்கிறன்றன. அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

1971 டிசம்பரில் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் 8 பேர்கள் வில்லிவாக்கத்தில் வந்து தங்கினார்கள். அவர்கள் ஆனந்த ராவ் என்பவர் தலைமையில் புகைவண்டிகளில் கொள்ளை நடத்தினார்கள், வழிப்பறிக் கொள்ளைகள் நடத்தினார்கள். இவர்களும் காவல் துறையினருடைய திறமையினால் பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

செங்கற்பட்டிலும், சென்னையிலும் கன்னக்களவுகளில் ஈடுபட்ட டெல்லிப் பட்டணத்தைச் சேர்ந்த பவேரியா, ஜான்ஸி ஆகிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டதும் ஓர் சாதாரண விவகாரம் அல்ல.

ஆந்திராவைச் சேர்ந்த கள்ள நோட்டு அச்சடிக்கும் கூட்டம் ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. 1970-ம் ஆண்டு நவம்பர் முதல் 1972 நவம்பர் வரையில்—எதிர்க் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினார்களே அந்தப் பயங்கரப் படுகொலைகள், 7 படுகொலைகள், 4 திருட்டுக்கள் நடத்திய எட்டுக் கொடியவர்களை நம் போலீஸ் இலாகா கைது செய்தது பாராட்டுக்குரிய அம்சமாகும். அவர்களை நான் தனிப்பட்ட முறையில் பாராட்டியிருக்கிறேன் என்றாலும் இந்த மாமன்றத்தின் சார்பில் அந்தக் காவல் துறை அதிகாரிகள் அனைவரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் (ஆரவாரம்). அந்தக் கூட்டத்தினர் நடத்தியது கொலை மாத்திரமல்ல, களவும், ரூ. 5½ இலட்சம் வரையில் கொள்ளையடித்திருக்கிறார்கள். இதுவரையில் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளும் ரொக்கப்பணம் கொஞ்சமும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. புலனாய்வுத் துறை தொடர்ந்து தீவிரமாக தன்னுடைய விசாரணையை மேற்கொண்டிருக்கிறது.

குற்றங்கள், கடந்த காலத்தில் முதல் அமைச்சர் அவர்கள் முன்பெல்லாம் எடுத்துக் காட்டியதைப்போல் குறைந்து விடவில்லை என்றும் இது முதலமைச்சர் அவர்களுடைய திறமைக்கு ஒரு சான்று என்றும் நம் நண்பர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் 1971, 1972 இந்தஇரண்டு ஆண்டுகளுக்கும் இந்த ஆய்வுத்துறையில் இருப்பதைப் பார்த்து 71-ல் 25,830 குற்றங்கள், 72-ல் 26,080 குற்றங்கள் என்பதைச் சொல்லி உயர்ந்திருக்கிறது என்றும் சொன்னார்கள். நான் இந்த ஆயிரம் உயர்வு அல்ல என்று சொல்லமாட்டேன். ஆனால் 1966-ல் 28,477-ல் இருந்து 1967-ல் 28,787 ஆக இருந்து இப்போது 26,080 ஆகக் குறைந்திருக்கிறது. அது மேலும் குறைய வேண்டும்.

அதே நேரத்தில் இதிலே இருசார்புடைய கருத்துக்கள் இருக்கின்றன. குற்றங்கள் குறைந்திருப்பதுபற்றி ஆய்வுரையில் சொல்லும்போது நிறைய குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. நீங்கள் கண்டுபிடிக்காமல் விட்டுவிட்டீர்களா என்ற கேள்வியும் எழலாம். அல்லது நிறையக் குற்றங்கள் நடக்கும் அளவிற்குக் காவல் துறை சரியாகப் பணியாற்றவில்லையா என்கிற கேள்வியும் எழலாம்.

ஆனால் இன்னும் குற்றங்கள் குறைவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்காகத்தான் இன்னும் நவீன வசதிகளையெல்லாம் காவல் துறைக்குச் செய்துகொடுக்க இந்த அரசு தக்க முயற்சிகளையெல்லாம் எடுத்து வருகிறது என்பதை நான் இங்கு குறிப்பிட விருன். ம்புகிறே

கள்ள நோட்டு வழக்குச் சம்பந்தமாகக்கூட மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். நாம் 1971-72-ம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த அந்த வழக்குகள் எதுவும் அப்படியே நின்றுவிடவில்லை. மேலும் முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திருப்பூரில் நடந்த ஒன்றைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். திருப்பூரில் கள்ள நோட்டு வழக்கு விசாரிப்பதற்காகத் தனிக் கோர்ட் நியமிக்கும்படி உயர்நீதிமன்றத்தைப் போலீஸ் துறையினர் கேட்டார்கள். தனிக் கோர்ட் ஒரு மாதத்திற்கு முன்பு அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே தான் இதுவரையில் அந்த விசாரணை எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிறது.

சேலம் 1970-ம் ஆண்டு கள்ள நோட்டு வழக்கு கோர்ட்டில் விசாரணையில் உள்ளது. திருப்பூர் வழக்கோடு இந்த வழக்குத் தொடர்புடையது. அதுவும் விசாரணை நடைபெற்று வருகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட கள்ள நோட்டு வழக்குப்பற்றி நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விட்டது, 26—3—1973-ல் இந்த வழக்கு விசாரணைக்கு வர இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராயப்பேட்டை கள்ள நோட்டு வழக்கு. இதில் நாற்பது குற்றவாளிகள் மொத்தம் ஈடுபட்டிருக்கிறார்கள். இதில் கேரளாவைச் சேர்ந்தவர்கள் 19 பேர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 21 பேர்கள் இருக்கிறார்கள். இதில் முக்கிய குற்றமாகிய அச்சடிக்கும் குற்றம் கேரளாவில் நடந்தது. ஆகவே நமது போலீஸார் இங்கேயே வழக்கு நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டார்கள், ஆனால் கேரளாவைச் சேர்ந்தவர்கள் இங்கு நடத்தக் கூடாது, கேரளாவில் வழக்கை நடத்தவேண்டுமென்று கேரளா கோர்ட்டில் ஸ்டே ஆர்டர் வாங்கி விட்டார்கள். இப்போதெல்லாம் ஒரு பழக்கம், நம் மாநிலத்தில் வழக்கு நடத்தக் கூடாது, வேறு மாநிலத்தில் நடத்த வேண்டும் அல்லது வேறு எங்கேயாவது நடத்த வேண்டும் என்பது. இதை இந்தக் கள்ளநோட்டுக்காரர்கள் எல்லாம் பின்பற்றி கேரளா கோர்ட்டில் ஸ்டே ஆர்டர் வாங்கியிருக்கிறார்கள். பின்னர் நம் போலீஸ் வாதாடி அந்தத்தடையை ரத்து செய்தார்கள். கோர்ட்டிலிருந்து அதிகாரப்பூர்வமான நடவடிக்கைக் குறிப்புகள் வந்ததும் வழக்கை இங்கு தொடர்ந்து நடத்துவதற்கு இருக்கிறது என்று டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன்.

கோவை ' பி ' ஸீரீஸ் டாலர் வழக்கு. இது கோவை கீழ்க் கோர்ட்டில் விசாரணை முடிந்தபின், செஷன்ஸ் கோர்ட்டுக்கு அனுப்பி இரண்டு வாரங்கள் ஆகின்றன. கோவை ' எல் ' ஸீரீஸ் டாலர் வழக்கு கோவை நீதிமன்றத்தின் கீழ்க் கோர்ட்டில் விசாரணையில் இருக்கிறது.

திருவண்ணாமலை வழக்கு. இதில் நோட்டு அச்சடித்தவர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள், எல்லாம் அங்கிருந்துதான்! மொத்தம் 11 குற்றவாளிகள். இதில் மூன்று பேர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள்.

இராயப்பேட்டை வழக்கைப்போலவே இதிலும் கேரளாவைச் சேர்ந்தவர்கள் வழக்கைத் தமிழ்நாட்டில் நடத்தக்கூடாது என்று ஸ்டே வாங்கினார்கள். தடையை விலக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இவை எல்லாம் கிடப்பில் போட்டு விடப்படவில்லை. அதற்கான முயற்சிகளை எல்லாம் அந்த அந்த நீதிமன்றங்களில் எடுக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றன என்பதை நண்பர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன்.

அதுமாத்திரமல்ல. இந்த வழக்குகளைப் புலனாய்வு செய்து வழக்குத் தொடர நாம் மிக்க சிரத்தை எடுத்துக்கொண்டு ஒரு டி.எஸ்.பி. தலைமையில் மூன்று இன்ஸ்பெக்டர்கள், ஆறு சப்-இன்ஸ்பெக்டர்கள், நான்கு தலைமைக் காவலர்கள், ஆறுகாவலர்கள் அடங்கிய தனிப் பிரிவு ஒன்றைக் குற்றப் புலனாய்வுத் துறையில் இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அதிலுள்ள பெரிய அதிகாரிகள் எல்லாம் இந்த நோட்டுக்களை எப்படி அச்சடிக்கிறார்கள், எப்படி எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அங்கு நாசிக்குக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள அரசாங்க நாணய அச்சகத்திற்குச் சென்று இதுபற்றிய நுணுக்கங்களை எல்லாம் தெரிந்து அந்த பயிற்சிகளைப் பெற்று வந்திருக்கிறார்கள்.

அதாவது கண்டுபிடிக்கிற பயிற்சிக[illegible] வந்[illegible]கிறார்கள். இந்தப் பிரிவு நல்ல முறையில் பணிய[illegible]துனால் கள்ள[illegible] அச்சிடுபவர்கள் தொகை வர வர நிச்சயமா[illegible] குறையும் என்ற [illegible]கையை நாமெல்லாம் பெறலாம்.

அதேபோல் சில திருட்டுக்கூட[illegible]ண்புமிகு உறுப்பினர்கள் [illegible] பேர் சொன்னார்கள்—பெரிய சில திரு[illegible] ஒன்று 1967-ஆம் ஆண்டு[illegible]ாக்கில் என்று கருதுகிறேன், சிவபுரம், [illegible] மாவட்டத்தில் [illegible]பெற்று கிட்டத்தட்ட 75 லட்சம் ரூபாய் பெரும[illegible]ள்ள சிலையை, [illegible]ன்பவர், அவர் உறவினர்கள், அவர் தகப்பனா[illegible] ஸ்தபதி[illegible]லோரும் சேர்ந்து 75 லட்சம் பெருமானமுள்ள[illegible]க்காவுக்கு அனுப்பப்பட்டு நம் ஐ.ஜி. அவர்கள் [illegible] இண்டர்போலில் அதைப்பற்றி விவாதித்து அமெரிக்காவில் உள்ள [illegible] சிலையைக்கொண்டு வருவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவர்களும் அதற்கான உதவிகளைச் செய்வதாகச் சொல்லி டி.ஐ.ஜி. அவர்கள் அமெரிக்காவுக்குச் சென்று எந்தவகையில் வழக்குகள் போடலாம் என்பதைப்பற்றி அதற்கான முயற்சிகளையெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். சிவில் வழக்காக இருந்தால் உடனடியாக கேஸ் போட்டுவிட முடியும். கிரிமினல் வழக்குப் போடுவதற்கு அங்கு குற்றஞ்சாட்டி நிரூபிக்கும் அளவிற்கு அமெரிக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்பு நமக்குத் தேவையாக இருக்கிறது.

மிக முக்கியமாக இந்த மானியத்திலே பேசிய எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்கள், தலைவர்கள் பலர் துப்பாக்கிப் பிரயோகங்களைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். துப்பாக்கிப் பிரயோகங்களில் உள்ளபடியே நான், அப்போது எவ்வளவு நடந்தது, இப்போது எவ்வளவு நடக்கிறது, நேற்று எவ்வளவு, இன்றைக்கு எவ்வளவு என்ற கணக்குகளைக்காட்டி, அன்று

நடக்க வில்லையா என்று கேட்டு நான் பிரச்சினையைத் திசை திருப்ப விரும்ப வில்லை. ஆனாலும் அந்தக் கணக்கு விவரங்களையெல்லாம் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. ஏனென்றால், இதுவரையில் தமிழ்நாடு ஆட்சிப்பீடத்தில் உட்காராத டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்பதில் நியாயம் இருக்கலாம். திரு. தங்கமணி கேட்பதில் நியாயம் இருக்கலாம். ஆளும் காங்கிரசில் இருக்கும் சிலபேர் கேட்பதில்கூட ஒரு நியாயம் இருக்கலாம்—(சிரிப்பு)-ஆனால் காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள்—இவ்வளவு துப்பாக்கிப் பிரயோகங்கள் நடக்கலாமா. என்று கேட்கிற நேரத்தில் நாம் சிலவற்றை ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. 1962-லிருந்து 66 வரை 5 ஆண்டுகளில் 60 துப்பாக்கிப்பிரயோகங்கள் நடை பெற்றன. இறந்தவர்கள் 64 பேர். 1967-லிருந்து 72 வரை ஆறாண்டுகளில் 46 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்று இருக்கின்றன. இறந்தவர்கள் 45 பேர். நான் அதைவிட இது குறைவு என்று வாதிட விரும்பவில்லை. ஆனால் இந்த அரசின் மனோ நிலை இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடை பெற்றிருக்கிற நேரத்திலெல்லாம் வேதனைக் கண்ணீர் வடித்து இருக்கிறது. ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எதற்கெடுத்தாலும் துப்பாக்கி தானா என்று நண்பர் மதி அவர்கள் வேகமாகக் கேட்டார்கள். அவர்கள் மிக வேகமாகப் பேசினார்கள். எரிமலையின்மீது நின்றுகொண்டு நீரோ மன்னன் வீணை வாசிப்பதுபோல நான் வாசிக்கிறேன் என்று எல்லாம் சொன்னார்கள். நான் சரித்திரத்தை மறந்துவிட்டேன். நீரோ மன்னன் எரிமலைமீது நின்று பிடில் வாசித்தானா அல்லது ஏழடுக்கு மாளிகையின்மீது நின்று கொண்டு பிடில் வாசித்தானா அந்த விவரமெல்லாம் எனக்குத் தெரியாது. (சிரிப்பு).

ஆனால் போராட்டங்கள் எந்த அடிப்படையில் தொடங்கப்படுகின்றன. டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னார்கள். துப்பாக்கிப் பிரயோகத்தில் 10 பேர் செத்து இருக்கிறார்கள். 12 பேர் செத்திருக்கிறார்கள். என்றால் சுட்ட வர்கள் போலீஸ்காரர்களாக இருந்தாலும் அதற்கு மறைமுகமாக இந்த கருணாநிதிதான், முதலமைச்சர் கருணாநிதிதான் காரணம் என்று குற்றம் சாட்டுவேன். என்று டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னார்கள். அவ்வளவு அழுத்தந்திருத்தமான வார்த்தைகள் போடாவிட்டால், இன்றைக்கு அவர் பேச்சுக்கு ஒரு நல்ல கிளைமாக்ஸ் கிடைத்திருக்காது. ஆகவே, அவ்வளவு அழுத்தந்திருத்தமாக வார்த்தைகள் போட்டுச் சொன்னார். (சிரிப்பு). நான் கேட்கிறேன் அதை அப்படியே மாற்றலாம். இந்தப் போராட்டத்திற்கு எல்லாம் காரணமாக இருந்தவர்கள் தூண்டிவிட்டவர் கள்தான். அந்த 10 பேர் செத்ததற்கும் இவர்கள் தான் மறைமுகமாகக் காரணமாக இருந்தார்கள் என்று நான் கூற முடியாதா? (கரவொலி). ஏனென்றால் போராட்டத்திற்கான கோரிக்கைகளை நாம் ஆராய வேண்டும்.

விவசாயப் போராட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள். 1968-ல் நடை பெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் வைக்கப்பட்ட கோரிக்கை என்ன? எங்க ளுடைய நாட்டிற்கு இந்தி ஆதிக்கம் கூடாது. எங்கள் மொழிக்கு ஆபத்து வரக்கூடாது. தமிழைத் தாழ்த்திட இன்னொரு மொழிக்கு நாங் கள் இடந்தரமாட்டோம் என்று சூளுரைத்து இந்த நாட்டு இளைஞர் சமுதா யம், மாணவ சமுதாயம், கிளர்ந்தெழுந்தது. அவர்களுக்கு அனுசரணை யாகத் தமிழ் சமுதாயமே கிளர்ந்து எழுந்து நின்றது. 1965-ம் ஆண்டிலே

இந்தி எதிர்ப்புப் புரட்சியே நடைபெற்றது. அப்போது ஒரு வார்த்தை மத்திய அரசு "இந்தியை நாங்கள் கட்டாயமாகப் புகுத்த மாட்டோம், உங்களுடைய எண்ணத்தை மதிக்கிறோம்" என்று சொல்லியிருந்தால் 53 பேர் அந்தப் போராட்டத்திலே பிணமாகத் தேவையில்லை. ஆனால் விவசாயப் போராட் டத்தின் நிலைமை என்ன? நாம் நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளைச் சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால் விவசாய வருமான வரியை அதிகப்படுத்தியதற்கு ஆதரவு தெரிவித்து, அதை எங்களுடைய கட்சி ஆத ரிக்கிறது என்றுகூறி, இங்கே அதற்கு வாக்களித்து நிறைவேற்றுவதற்குக் காரணமாக இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் விவசாயப்போராட்டத் தின் பின்னால் நின்றது. ஆளும் காங்கிரஸ் கட்சியிலிருந்து, பிரதமராக இருக்கின்ற மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்கள், என்ன சொன்னார் கள், இந்தப் போராட்டத்திற்கு வைக்கப்பட்ட கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றுதான் அவர்கள்சொன்னார்கள். ஏனென்றால், இந்தியாவில் இருக்கும் எல்லா மாநிலங்களிலும் இருக்கும் மின்சார டாரிப் ரேட் (Tariff rate) என்ன? நம்முடைய மாநிலத்திலுள்ள மின்சார டாரிப் ரேட்என்ன? அதையும் நாம்குறைப்பதாக ஒப்புக்கொண்ட பிறகும், கோரிக்கை களை நிறைவேற்றுவதாக ஏற்றுக்கொண்ட பிறகும் இங்கே போராட்டம் நடத்தினார்கள். பேச்சுவார்த்தைகளில் தீர்த்துக்கொள்ளலாம். 12 கோரிக் கைகளா, அதில் 10 கோரிக்கைகளைப்பற்றி இப்போது பேசலாம் என்கிற அளவுக்கு இறங்கிவந்த பிறகும் இங்கே போராட்டம் நடைபெற்றது. ஆனால் ஒரு வரியில் மொழிப்போராட்டத்தை நிறுத்தியிருக்க முடியும். ஒரு வார்த்தையில் அந்த மொழிப்போராட்டத்தை நிறுத்தியிருக்க முடியும். இது அப்படி அல்ல.

இந்தப் போராட்டம் நடைபெற்ற நேரத்தில் விவசாயிகள் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளான நேரத்தில் மதுரை மாநாட்டில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். பேசினார். அதைத்தான் திண்டிவனம் உறுப்பினர் ராஜாராம்கூட ஞாபகப்படுத்தினார். எம்.ஜி.ஆர். சொன்னார் "சில இடங் களில் அராஜகம் நடைபெறுகிறது என்றால் அதை அடக்கும் பொறுப்பு போலீசாருடையது. போலீஸ் ஏன் சுட்டது? சுட்டது சரியா? என்று கேட்கி றார்கள். போலீசார் மக்களை வன்முறையாளர்களிடமிருந்து காப்பாற்றவும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளவும் சுடவேண்டிய கட்டாய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்" என்று ஆகஸ்ட் 6-ம் தேதிதான் நம்முடைய நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் மதுரை மாநாட்டில் பேசினார்கள்.

அது மாத்திரமல்ல. இன்று நம்முடைய திரு. கே.டி.கே. தங்கமணி அவர் கள்பேச்சிலே கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி இரண்டுமுறை சொன்னால் அ.தி.மு.க.வைப்பற்றி 20 முறை சொல்கிறார். அந்த அளவுக்கு அவர்கள் அந்தக் கட்சியின்மீது பற்றும், பாசமும் கொண்டிருக்கிறார்கள். நான் அதிலே குறுக்கிடுவதற்கு எந்த உரிமையும் பெற்றவன் அல்ல. ஆனால் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த மாநாட்டிலேயே மேலும் பேசினார். நான் இந்தப் பேச்சைப்பார்க்கும்போது அந்தப் பேச்சையும் பார்க்க வேண்டிய வன். மதுரை மாநாட்டில் எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னார்கள். "கம்யூனிஸ்ட்கள் இருக்கிறார்களே அவர்கள் நாட்டில் கலவரம் நடந்தால் முன்னுக்கு வருவது இல்லை. ஏனென்றால், பின்னால் இருந்து கலவரங் களைத் தூண்டிவிட்டு விஷமங்களைச் செய்வார்கள். அவர்கள் விஷமத் தனங்களுக்கு அப்பாவிகள் இரையாவார்கள்". ஆகஸ்ட் 6-ம் தேதி என்று

டைய அருமை நண்பர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதே மதுரை மாநாட்டில் எடுத்துக்கூறினார்கள். இந்த ப்பேச்சில்தான் விவசாய ப்போராட்டத்தைப்பற்றியும் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். குறிப்பிடும்பொழுது இவைகளை அங்கே எடுத்துச் சொன்னார்.

கொலைகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. அரசியல் கொலைகள் கிட்டத்திட்ட 1970-லிருந்து 1972 வரையில் ஒரு கணக்கு எடுத்தால் நாங்கள் ஆட்சிப்பொறுப்புக்கு வந்தபிறகும்கூட 1970-ல் நடந்த அரசியல் கொலைகள் மொத்தம் 7. அதிலே கொல்லப்பட்டவர்கள் தி.மு.க. 2, காங்கிரஸ் 2, மற்றவர்கள் 3. அரசியல் காரணங்களுக்காகக் கொல்லப்பட்டவர்கள்—1971-ல், அரசியல் கொலைகள் 9. கொல்லப்பட்டவர்களில் தி.மு.கவைச் சார்ந்தவர்கள் ›, காங்கிரஸ் 4. 1972-ல் அரசியல் கொலைகள் 5, கொல்லப்பட்டவர்களில் தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் 3, பி.எஸ்.பி. 1, காங்கிரஸ் 1. வேறு ஏதோ மணி மற்றவர்களைப் பற்றிச் சொன்னார்கள்.

காலையில் அம்மையார் அவர்கள் கருப்பையா, ஆறுமுகம் பற்றிச்சொன்னார்கள். அவர்கள் போலீஸ் கஸ்டடியில் (custody) இறந்துவிடவில்லை. 14-ம் தேதி கைது செய்யப்பட்ட கருப்பையா உடல் நோய் காரணமாக ஸ்டான்லி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, 17-ம் தேதி மரணம் அடைந்தார். அதேபோல், ஆறுமுகம் கைது செய்யப்பட்டு, மார்வலியின் காரணமாக பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, அந்த நோயின் காரணமாக இறந்தார் என்றுதான் எனக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது.

நான் தமிழகத்தில் இந்த 3 ஆண்டுகளில் 1970–72 வரை நடைபெற்றுள்ள அரசியல் கொலைகளைப் பற்றிச்சொன்னேன். அதே நேரத்தில் கேரள போலீஸ் அமைச்சர் அங்கே சட்டசபையில் கொடுத்த தகவல்படி, 1970 முதல் 1972 வரை கேரளாவில் 53 அரசியல் கொலைகள் நடைபெற்று இருக்கின்றன. அதிலே கொல்லப்பட்டவர்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 17 பேர், காங்கிரஸ் 12 பேர், கேரள காங்கிரஸ் 5, சி.பி.ஐ. 4, முஸ்லீம் லீக் 3, ஆர்.எஸ்.பி. 2, ஆர்.எஸ்.எஸ். 1, இதரர்கள் 7. இது "இந்து" பத்திரிகையில் 21—10—1972 அன்று வந்திருக்கிறது. கேரள போலீஸ் அமைச்சர் சட்டசபையில் கொடுத்த தகவல் என்று செய்தியும் வந்திருக்கிறது. ஏதோ பொய் வழக்குப் போடுகிறோம். முன்னேற்றக் கழகத்துக்காரர்களுக்கு ஏதாவது இடஞ்சல் என்றால்......

டாக்டர் எச்.வி.ஹாண்டே: அந்த அளவுக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் முன் கூட்டியே எச்சரிக்கை கொடுக்கிறோம். அந்த மாதிரி வரக்கூடாது, வன்முறைக்குச் செல்லக்கூடாது என்றும் சொல்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைத்தான் நாம் அனைவரும் சேர்ந்து கோரஸாகப் பாடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவர் சொன்னால் பிரயோசனம் இல்லை. எல்லோரும் சேர்ந்து வன்முறை தலை தூக்காது பார்த்துக்கொள்ளும் பெரும் பொறுப்பை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் தாக்கப்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கொடுக்கப்படுகிற புகார் மீது எல்லாம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றெல்லாம் குற்றம் சாட்டுகிறார்கள். ஒரு உதாரணம் சொல்லுவேன்.

11—1—1973 அன்று மதுரையில் சின்னாளப்பட்டியில் தி.மு.க. உறுப்பினர் ரமணி என்பவர் கொலை செய்யப்பட்டிருப்பதாக ஒரு புகார் கொடுக்கப்பட்டது. அந்தப் புகாரில் என்ன குறிப்பிடப்பட்டு இருந்தது என்றால் அ.தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் ஏதோ விஷம் கொடுத்து அவர்களைக் கொன்று விட்டார்கள் என்பது போல் புகார் கொடுக்கப்பட்டு இருந்தது. ஆனால் அதை விசாரித்த போலீசார் அந்த புகார் சரியானது அல்லது என்று சொல்லி இருக்கிறார்கள். ரமணி செத்தது உண்மை. கொல்லப்பட்டது உண்மை. கொலையுண்டது உண்மை. ஆனால் அ.தி.மு.க.வினரால் கொல்லப்பட்டார் என்று புகார் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் புகார் உண்மை அல்ல . . .

திரு. கே. ஏ. மதியழகன்: தலைவரவர்களே, அ.தி.மு.க. என்கிறார்களே, க.தி.மு.க. தலைவர் பேசுகிறார்களா? சட்டமன்றத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றிருக்கிறதே தவிர. அ.தி.மு.க. என்றில்லை. இவர் என்ன க.தி.மு.க. தலைவரா என்று கேட்கிறேன். வெளியில் வேண்டுமானால் பேசட்டும். இரவு 8-30

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் எங்களுடைய கட்சியை தி.மு.க. என்று சொல்லுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் என்பதற்கு தி.மு.க. என்று சொல்லுகிறேன். அவர்களைச் சொல்லும்போது அ.தி.மு.க. என்கிறேன். எங்களுடைய கட்சியின் முழுப்பெயரை திராவிட முன்னேற்றக் கழகம் என்று குறிப்பிடும்போது, அவர்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று முழுப்பெயரைச் சொல்லுகிறேன். அண்ணா என்ற பெயரைச் சொல்ல எனக்கு என்ன வெட்கம்? அண்ணா அவர்களின் கொள்கையை அப்படியே ஏற்றுக் கொண்டு செயல்படுகின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

திரு. கே. ஏ. மதியழகன்: அண்ணாவின் பெயரைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அண்ணாவின் பெயரைச் சாப்பிட்டால் பரவாயில்லை. அண்ணா பெயரால் சாப்பிடக் கூடாது.

திரு. கே. ஏ. மதியழகன்: நிரம்ப சாப்பிட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னது போல் இதுபோன்ற வன்முறை செயல்கள் மூன்று ஆண்டு காலத்தில் இங்கே 21 அரசியல் கொலைகள்தான். கேரளத்தில் 53 அரசியல் கொலைகள் என்று நான் எடுத்துக்காட்டியதற்குக் காரணம், இந்த வன்முறைகள் எல்லா இடத்திலும்......

டாக்டர் எச். வி. ஹாண்டே: நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி குறிப்பிட்டுக்கொண்டிருந்த நிகழ்ச்சியின் விவரத்தை சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விஷம் கொடுத்து கொன்று விட்டார்கள் என்று செய்தி வந்தது. புகார் கொடுக்கப்பட்டது. ஆனால் போலீசார் புலன் விசாரித்து, புகார் சரியானதல்ல என்று கூறி, யார் யார் மீது புகார் கொடுக்கப்பட்டதோ, அ.தி.மு.க. கட்சியினர் மீது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டார்கள். ரமணி செத்தது செத்தது தான். அவர் தி.மு.க. உறுப்பினர். ஆனாலும், தி.மு.க. உறுப்பினர் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதாகப் புகார் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்காக, அந்தப் புகாரை அப்படியே எடுத்துக் கொண்டு யாரையும் கைது செய்யவும் இல்லை, வழக்குப் போடவும் இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக கூற முற்பட்டேனே அல்லாமல் வேறு எதுவுமல்ல.

பொதுவாக, இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்ற பல்வேறு கருத்துக்களை, நமது திரு பொன்னப்ப நாடார் சொன்னாலும் சரி, மற்றவர்கள் சொன்னாலும் சரி, அனைத்தும் இன்றைக்கு இந்த அரசால் போலீசார் ஆட்டி வைக்கப்படுகிறார்கள், போலீசார் இந்த அரசால் தூண்டிவிடப் படுகிறார்கள் என்கின்ற இந்தக் கருத்தையே அவர்கள் எதிரொலித்தார்கள்.

காலையில் பேசிய என்னுடைய நண்பர் திரு. காளிமுத்து அவர்கள் கூட, எனக்கு, குருவிற்கு செலுத்த வேண்டிய வணக்கத்தை மரியாதையை எல்லாம் செலுத்திவிட்டு, நான் குருவை எதிர்க்க வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டேனே என்றெல்லாம் இங்கே பேசி, எதிர்ப்பதற்கான காரணம் ஜனநாயகத்திற்குப் புறம்பாக இந்த அரசு போய்க் கொண்டிருக்கிறது, ஆகவே தான் என்றெல்லாம் சொன்னார். 10 நாளைக்குள் அந்த மாற்றம் அவருக்கு ஏற்பட்டது. 10 நாளைக்கு முன்னால் கூட ஒரு கடிதம் எனக்கு எழுதியிருந்தார். அதிலே கூட அவர் குறிப்பிட்டிருந்தார். அவர் சொன்னார்............

"இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காத என் தலைவர் கலைஞர் அவர்களுக்கு,

வணக்கம். என் வழிபாட்டுக்குரிய தங்களைப் பற்றி ஒலிக்கின்ற — எழுதி வைக்கப்படுகின்ற தகாத வார்த்தைகளை எல்லாம் கேட்டு மனம் தாளாமல் தான் நேற்றைய தினம் என் உள்ளம் உணர்ந்ததைத் தங்களிடம் கூறினேன். என் தலைவர் இடுகின்ற ஆணையை, ஐயத்துக்கோ, கேள்விக்கோ இடமின்றி ஏற்று வழி நடக்கக்கூடிய நான்— இருக்கின்ற நிலையைக் கூற வேண்டும் என்பதனாலேயே கூறினேன். அன்றாடம் ஆயிரம் வேதனைகளைத் தாங்கிக் கொண்டிருக்கும் தங்களுக்கு நானும் துயரத்தைத் தந்துவிட்டேனே என்று வருந்துகிறேன். இந்த உலகில் எந்த அரசியல் கட்சியின் தொண்டனும் தனது தலைவரை இதுவரை நேசித்திருக்க முடியாத அளவுக்கு உயிரினும் மேலாகத் தங்களை நான் நேசிப்பவன் என்பதையும், எதிரியின் தலையில் கிரீடமாக ஜொலிப்பதைவிட தங்கள் கால்டியின்கீழ் புல்லாக மிதி படுவதையே நான் விரும்புகிறேன்.

தங்கள் திருவுள்ளம் இதை அறியுமாதலால் என்னைத் தவறாக நினைக்க மாட்டீர்கள் என்று ஆறுதல் அடைகிறேன். எதிர்ப்புகளுக்கு இடையிலேயே அரசியல் நடத்தி வெற்றி கண்ட தாங்கள் எடுத்த முடிவை ஏற்று, எதிர்ப்புக்கு இடையே இயக்கத்திற்கு வெற்றி உருவாக்க வேண்டும் என்ற உள்ள உறுதியோடு தங்கள் தாள் பணிந்து வணங்கி ஊருக்குத் திரும்புகிறேன். வருகிறேன். என்றும் தங்கள், க. காளிமுத்து".

என்று கடிதம் எழுதினார்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: உங்களுக்கு கடிதம் எழுதுவதே தவறுபோல் தோன்றுகிறது.

Thiru R. Ponnppa Nadar: Is it not confidential?

திரு கா. காளிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்த கடிதம், அ.தி.மு.க. உருவாக்கப்பட்டதற்கு முன்பு நான் எழுதிய கடிதம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தி.மு.க. விலிருந்து விலக்கப்பட்ட எம்.ஜி.ஆர். அவர்கள், வேறு எந்த இயக்கத்திற்காவது சென்று விடுவாரோ, அண்ணாவின் கொள்கைக்குப் புறம்பாகப் போய்விடுவாரோ என்று நான் கருதிய காரணத்தால் தான் அப்படிப்பட்ட கடிதம் எழுத நேரிட்டது. ஆனால், அண்ணாவின் கொள்கையினை ஏற்று அவ்வழி நடக்க புதிதாக ஒரு இயக்கம் உருவாக்கப்பட்ட பிறகு அந்தப் புனிதமான இயக்கத்தில் என்னுடைய குரு எனக்குக் கற்றுத்தந்த அரசியல் பயிற்சிப்படி நான் அதில் இணைந்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதோடு மாத்திரமல்ல, பிறகு 10 நாட்கள் கழித்து பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை; அதன் நகல் கைப்படவே எனக்கு வந்தது.

"என் உயிரினும் மேலாக நான் ஏற்றுக்கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நான் விலகி புதிய கட்சியில் இணையப் போவதாக வதந்திகள் உலவுவதை அறிகிறேன். தி.மு.கழகம் என் இதயத்துடிப்போடும், இரத்தச் சுழற்சியோடும் இணைந்துவிட்ட ஒன்றாகும். கலைஞர் கருணாநிதி அவர்கள் என் வழிபாட்டிற்குரிய தானைத் தலைவராவார். இதனை விட்டுப் பிரிவது என்பது என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாததாகும். முன்னேற்றக் கழகத்தை காட்டிலும் இளைஞர் உலகம் ஏற்றுக்கொள்ளத்தக்க முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட ஒரு இயக்கம் தமிழகத்தில் கிடையாது. டாக்டர் கலைஞரைக் காட்டிலும் தமிழகத்தின் வழிகாட்டி வேறு எவரும் கிடையாது. எனவே, தவறான வதந்திகளை நம்ப வேண்டாம் என்று இயக்கத் தோழர்களை வேண்டுகிறேன்.
இவண், கா. காளிமுத்து".

இது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த பிறகு அவர் எழுதிய கடிதம்.

திரு கா. காளிமுத்து: துணைத் தலைவரவர்களே, எந்தச் சூழ்நிலையில் கடிதம் எழுதப்பட்டது என்பது தங்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எந்தெந்தச் சூழ்நிலையில் என்னென்ன நடந்தது என்று எனக்கும் தெரியும். நாட்டுக்கும் தெரியும். ஏனென்றால் காலையில் போலீஸ் மான்யத்தின்மீது பேசும்போது அதைப் பேசினார் என்பதற்காகச் சொல்லுகிறேனே அல்லாமல் வேறல்ல. இந்த மான்யத்தைப் பொறுத்த வரையில் நான் எடுத்துச் சொன்னேன். காவல் துறையில் உள்ளவர்களை எந்தெந்த அளவுக்கு.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. காளிமுத்து எந்த சூழ்நிலையில் அவர் எழுதினர் என்பது எனக்குத் தெரியும் என்று என்னைச் சுட்டிக்காட்டினார். எனக்கு எதுவும் தெரியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, காவல் துறையிலே இருக்கிற நண்பர்களுக்கும் அதிகாரிகளுக்கும் உதவியினைச் செய்வதன் மூலமும், மேலும் அந்தத் துறை நல்ல முறையிலே இந்த நாட்டுக்கும், சமுதாயத்துக்கும் பணியாற்ற வேண்டும் என்பதற்காகவும் பல வசதிகளை இந்த அரசின் சார்பில் செய்து கொடுத்திருக்கிறோம். அவைகள் போதுமானவைகளல்ல. ஏனென்றால் அரசு அலுவலாளர்களில் மற்றவர்களைக் காட்டிலும் காவல் துறையில் இருக்கின்ற அதிகாரிகளானாலும், காவலர்களானாலும், அவர்கள் தங்களுடைய உயிரைப் பணயம் வைத்து, இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்களிலே தவறானவர்கள் இருக்கலாம். அவர்கள் இந்த மாமன்றத்தால் அல்லது மற்றவர்களால் அரசுக்கு சுட்டிக்காட்டப்பட்டால், அரசால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர்கள் என்பதை நான் நிச்சயமாக மறுக்க மாட்டேன். அதே நேரத்திலே இந்தத் துறையை நல்ல அளவுக்கு விரிவுபடுத்தி, வலிவுள்ளதாக ஆக்க வண்டும் என்பதும் நம்முடைய பொறுப்பாகும். இன்றைக்கு நாட்டில் போராட்டங்கள், கிளர்ச்சிகள் அமைதியாக நடைபெற்றால் அதை ஆட்சேபிப்பதற்கு யாருமில்லை.

நமது திரு. பொன்னப்ப நாடார் கூடச் சொன்னார். எங்களுடைய 15-ம் தேதிப் போராட்டம் அமைதியான முறையில் நடைபெற்றது, என்று சொன்னார். எந்த ஊரிலும் அமைதிக்குப் பங்கம் ஏற்படவில்லை. அதைப் போலவே, அப்படி அமைதியாக நடைபெற்ற ஊர்வலங்களைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பையும், அவைகளை ஒழுங்காக வழி நடத்திச் சென்றவர்களுக்குத் துணையிருக்கக்கூடிய பொறுப்பையும் காவல் துறையினர் ஏற்றுக்கொண்டனர் என்பதை அவர்களும் மறுக்க மாட்டார்கள். அந்த அளவுக்கு காவல்துறை நல்ல பணியை ஆற்றியிருக்கிறது. சென்னையிலாகட்டும், மற்ற நகரங்களிலாகட்டும், அமைதியான ஊர்வலங்கள் பலவற்றை நாம் கண்டிருக்கிறோம். ஏதோ 1, 2 ஊர்வலங்களில் சச்சரவுகள், கலவரங்கள் இந்தச் சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படாமல் அந்தந்தக் கட்சியின் தலைவர்கள் அதைப் பாதுகாத்திட வேண்டும். அந்தந்த கட்சியின் தலைவர்கள், கட்சியின் தொண்டர்களுக்கு அறிவுரை கூறிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வேன்.

நமது திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய கட்சி, மதிப்பிற்குரிய காமராசர் கட்சி நடத்திய ஊர்வலம் அமைதியாக நடந்தது என்று

சொன்னால், அதுகூட பயமாக இருக்கிறது. ஒரு வேளை காமராசர் அவர்களுடைய கட்சியும், கழகமும் இன்றைக்கு ஒன்றாகச் சேர்ந்துகொண்டிருக்கிறதோ என்றெல்லாம் பிரசாரம் செய்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் இங்கே வேகமாகப் பேசியதற்கே கூட ஒரு காரணம் எங்கே இப்படி சந்தேகப்பட்டுவிடுவார்களோ என்பதுதான்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, அந்த மாதிரி ஒன்றுமில்லை. நான் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி வன்மையாக கண்டித்தேனே ஒழிய அந்த மாதிரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஊர்வலம் அமைதியாகச் சென்றால் எந்த விதமான தொல்லையும் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். ஆனால் 9-ம் தேதி நடந்த விவசாயிகள் ஊர்வலத்தில் மதிப்பிற்குரிய காமராசர் தலைமையில் நடத்திய ஊர்வலத்தில் நாங்கள் கூட இருந்தோம். ஊர்வலம் போகிற நேரத்தில் வழியில் பல இடங்களில் வழிமறித்து, பிளாசா தியேட்டருக்கு அப்புறம் சைக்கிள் டயரில் பெட்ரோல் ஊற்றி நெருப்பு வைத்துக் கொளுத்தி மெத்தை மேலிருந்து ஊர்வலத்தின் மேல் போட்டு சிதற வைத்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆகஸ்ட் 15 சுதந்திரத் தினத்தன்று ஓர் ஊர்வலம் நடத்தினார்கள். அப்போது அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அண்ணா அவர்களும், நானும், நாவலரும், மதி உட்பட மற்ற அமைச்சர்களும் கவர்னர் வீட்டில் இருந்தோம். கவர்னர் ஒரு விருந்திற்கு ஏற்பாடு செய்தார்; அதில் கலந்து கொள்வதற்காக அங்கே சென்றிருந்தோம். அன்றையதினம் இங்கே ஊர்வலம் நடைபெற்றது. அந்த ஊர்வலம் "தென்னகம்", 'முரசொலி', அலுவலகங்களிலே புகுந்து இரண்டு அலுவலகங்களையும் சூறையாடியது. அதற்கு யார் பொறுப்பு ? ஊர்வலத்திலே போகிற யாரோ சிலபேர் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார்கள். ஆகவே நாம் இப்பொழுது எந்த அளவுக்கு இருக்கவேண்டுமென்று சொல்கிறோமோ, அதே அளவுக்குத் தொண்டர்களைத் தனித்தனியாக நாம் பயிற்றுவிக்க வேண்டிய கடமைப்பட்டிருக்கிறோம்.

எல்லாக் கட்சியிலும் சிலர் இருப்பார்கள். தி. மு. கழகத்தில் உள்ள அத்தனை பேருமே அமைதியானவர்கள், யாரிடத்திலும் முரட்டுத்தனம் இடையாது என்று நான் சொல்ல மாட்டேன். ஆத்திரத்துதிற்கு சில நேரங்களிலே அவசரமாக ஆட்பட்டுவிடுகிறவர்கள் கொஞ்சநஞ்சம் எல்லாக் கட்சியிலும் இருப்பார்கள்.

பொதுக்கூட்டங்களிலே பேசப்படுகின்ற பேச்சைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். காலையிலே என்னைப்பற்றி அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர் இங்கே என்ன பேசினார் ? திருப்பி நான் அந்த வார்த்தையை சொல்லக் கூடாது. இங்கேயே ஒரு சட்டமன்ற உறுப்பினர் இவ்வளவு பேருக்கு நேராக இப்படிப் பேசுகிறார் என்றால் மேடையிலே என்ன பேசுவார்கள் ? எந்தெந்த அளவுக்கு அமைச்சர்கள் அல்லது கட்சித் தலைவர்கள் தாக்கப்பட்டாலும் அந்தந்தக் கட்சித் தலைவர்கள் தரம் குறையாத அளவுக்கு மேடை அரசியலை நடத்த நாம் பழகிக் கொண்டால் ஆத்திரம் நிச்சயம் தணியும்.

கறுப்புக்கொடி பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக, பட்டுக்கோட்டை நிகழ்ச்சி பற்றி சொன்னார்கள். பட்டுக்கோட்டை நிகழ்ச்சிக்காக 2 மணிக்கெல்லாம் ஒரத்தநாடு நிகழ்ச்சியை முடித்துவிட்டு, உடனே பட்டுக்கோட்டைக்கு போய்விடலாம் என்று நான் சொன்னேன். மாவட்ட ஆட்சித் தலைவர் என்னிடம் வந்து கறுப்புக்கொடி காட்டுபவர்களைச் சந்தித்துப் பேசினேன் ; 3 மணியிலிருந்து 4 மணி வரை அங்கே காத்திருப்போம் ; நீங்கள் அந்த இடைநேரத்தில் வரவேண்டும்'' என்று சொன்னார்கள். அதற்காகவே நான் ஒரு மணி நேரம் ஒரத்தநாட்டிலே உட்கார்ந்து அவர்களுக்காக நான் நேரம் கொடுத்து 3 மணியிலிருந்து 4 மணிக்குள் செல்வதற்காகத் தயார் படுத்திக்கொண்டு 3 மணிக்குக் காரில் ஏறி உட்காருகிறேன்.

"கறுப்புக்கொடி பிடித்தவர்கள் அங்கிருந்து வந்து குறுக்கே நிற்கிறார்கள். ஆகவே அசம்பாவிதம் ஏற்படும்" என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் தடுக்கப்பட வேண்டும். கறுப்புக்கொடி காட்டட்டும். அது ஜனநாயக ரீதியில் அனுமதிக்கப்பட்ட ஒன்று. ஆனால் அதிலே பலாத்காரம், கல் எறிதல், கலகம் விளைவித்தல் என்றிருக்கக் கூடாது. மதி அவர்கள் கூடச் சொன்னார்கள் ; மனைவியின் நெற்றியில் காயம் ஏற்பட்டிருக்கிறது என்று வருத்தத்தோடு சொன்னார்கள். இதெல்லாம் விளையாட்டுச் செய்திகளா ?

அமைச்சர்கள் கலந்துகொண்ட பல கூட்டங்கள் கல்லெறிக்கு ஆளாகின்றன. நண்பர் வேழவேந்தன் அவர்களின் கார் தீ வைத்து அடியோடு கொளுத்தப்பட்டது. அந்தக் கார் எதற்கும் பயனில்லை என்ற அளவுக்கு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எந்தத் தரப்பிலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்கப் பாடுபடுவது ஒவ்வொரு அரசியல்வாதிகளின் கடமை. ஆகவே, போலீசார் கடுமையாக நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றால் நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்வேன் வன்முறையிலே யார் ஈடுபட்டாலும் அவர்கள் மீது போலீசார் தயவுதாட்சணியமின்றி நடவடிக்கை எடுப்பார்கள், எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தான் இந்த மாமன்றத்தின் மூலம் பிரதிபலிக்கிறேன்.

இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டது. இரவெல்லாம் கூட்டங்கள் நடைபெறுகின்றன என்று திரு. நாடார் அவர்கள் சொன்னார்கள். அதுபற்றி ஏற்கனவே ஐ.ஜி. அவர்கள் மூலம் அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. சென்னை நகரில் இரவு 10 மணியோடு கூட்டம் முடிவுற வேண்டும் என்றும், திருச்சி, கோவை, மதுரை, சேலம் போன்ற பெரிய நகரங்களில் 10 மணியோடு கூட்டம் முடிவுற வேண்டுமென்றும், மற்ற வெளியூர்களில் இரவு 11 மணியோடு கூட்டம் முடிவுற வேண்டும் என்று ஆணைபிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆணையை யார் மீறினாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இதை ஒழுங்குபடுத்த நம்முடைய அமைச்சர் பெருமக்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன் ; சட்ட மன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன் ; அதைப்போன்றே கூட்டங்களை நடத்துகின்ற எல்லாக் கட்சித் தொண்டர்களும், ஒலி பெருக்கி அமைப்பாளர்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். 11 மணி முதல் 12 மணி வரை கூட்டங்கள் நடந்தால், முடியும் வரை எந்தக் கூட்டமானாலும் காவலர் நின்று தங்கள் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்போது லைசென்ஸ் கொடுப்பதிலே ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா ? யார் லைசென்ஸ் வழங்க வேண்டுமென்று புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : எல்லாத் தரப்பிலும் இருக்கக்கூடியவர்கள் இந்த விதிமுறைகளைக் கடைபிடித்தால், எல்லா அரசியல்வாதிகளின் உடம்புக்கும் நல்லது ; எல்லாவற்றுக்கும் நல்லது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டாக்டர் என்ற முறையில் திரு. ஹாண்டே அவர்களின் அறிவுரைக்கு நன்றி.

சேலம், வேலூரில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றிச் சொன்னார்கள். அதில் வலது கம்யூனிஸ்டுகள் அதிகம் கலந்திருக்கிறார்கள் என்று நான் சொன்னேன். அப்பொழுது கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள் பத்திரிகையிலே அறிக்கை விட்டார்கள். அந்த அறிக்கையில் சேலம் வேலூரில் கம்யூனிஸ்டு கட்சியே கிடையாது என்று குறிப்பிட்டிருக்கிறார். "சேலம், வேலூரில் நேற்று நடந்த சம்பவங்களுக்கு வலது கம்யூனிஸ்டுகள் காரணமென்று முதலமைச்சர் கூறியிருப்பது கற்பனையே என்றும், வேலூரில் கடந்த 15 ஆண்டுகளாக தங்கள் கட்சிக் கிளை இல்லை என்றும் தமிழ்நாடு வலது கம்யூனிஸ்டுக் கட்சிக் காரியதரிசி தலைவர் கல்யாணசுந்தரம் இன்று இங்கு கூறினார்" என்ற செய்தி 1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாள் "தினமலர்" பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. உண்மையிலேயே அங்கு அப்படி இருக்குமோ என்று நான் விசாரித்தேன்.

அவர் சொல்கிறார், 15 ஆண்டுகளாக கம்யூனிஸ்டு கட்சியின் கிளையே அங்கு கிடையாது என்று. உண்மையில் அப்படி இருக்குமா என்று விசாரித்தோம். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் கிளை 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் நாளில் ஒரு துண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில் "வேலூர் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் கிளை" என்று தலைப்பிட்டு, "வேலூர் பெரியோர்களே! தாய்மார்களே! என்று அழைத்து வெளியிடப்பட்ட துண்டறிக்கை.

அது மாத்திரமல்ல. சுதந்திர தின வெள்ளிவிழாவையொட்டி ஒரு சர்வகட்சிக் கூட்டமும் விவசாயப் போராட்டத்தில் கலந்துகொண்டு, சிறை சென்று மீண்ட வீரர்களுக்குப் பாராட்டு விழாவும், இதிலே எல்லாக் கட்சிக்காரர்களும் கலந்துகொள்கிறார்கள்....இப்படிக்கு ஸ்தாபன காங்கிரஸ் இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சி-வேலூர் என்று நோட்டீஸ் அச்சடித்திருக்குகிறார்கள்.

ஆனால் கல்யாணசுந்தரம் சொல்கிறார், 15 ஆண்டுகளாக அந்தப்பகுதியில் கம்யூனிஸ்டு கட்சியே கிடையாது, கருணாநிதி தவறாகச் சொல்கிறார் என்று. இப்படித்தான் பல விஷயங்கள் அறிக்கை விடுகின்ற காரணத்தால் அவைகளை பத்திரிகைகளில் பெரிதுபடுத்திப் போட்டு, தி.மு.க. கழக அரசுக்கு ஏதாவது குந்தகம் வாராதா என்று எதிர் பார்க்கின்ற காரணத்தால்தான் உண்மைக்கு மாறான செய்திகள் நாட்டில் நடமாடுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதியழகன் அவர்கள் தன் பேச்சை முடிக்கிறநேரத்திலே சொன்னார், "மக்கள் கிளர்ந்தெழுவார்கள், கவர்னரை வாபஸ் பெறவேண்டும், மத்திய அரசு உடனடியாகக் தலையிட வேண்டும்" என்று சொன்னார்கள். மதி அவர்களின் வாயிலிருந்து எக்காள முழக்கங்களையெல்லாம் கேட்டிருக் கிறேன். எங்களை விட அதிகமாக மத்திய அரசை எதிர்த்து எக்காள மிடுபவர் மதி அவர்கள். இன்றைக்கும் மத்திய சர்க்காரை எதிர்க்கின்ற பாவனையிலேயே மாநில அரசை அழித்துவிடு, மாநில அரசுக்கு புத்தி சொல் என்கின்ற எக்காள முழக்கத்தைக் கேட்டேன். அவர் எங்களைவிட மத்திய அரசை வேகமாக எதிர்த்துப் பழக்கப்பட்டவர். இன்றைக்கு "மத்திய அரசே உடனடியாகவா, கவர்னரை வாபஸ் வாங்கு, இல்லாவிட் டால் மக்கள் இந்த அரசைத்தூக்கி எறிந்துவிடுவார்கள்" என்றெல்லாம் சொன்னார்கள். தூக்கி எறிந்திட திராவிட முன்னேற்றக் கழக அரசு பூப்பந்து அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்வேன். (பலத்த கைத்தட்டல்). திராவிட முன்னேற்றக் கழக அரசு இமாலயம். இதை யாரும் அசைத்திட முடியாது என்று கூறி இந்த அளவிலே விடைபெறுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, இந்த அளவிலே அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிதிக் கோரிக்கையின்மீது விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வெட்டுத் தீர்மானங்கள் வாக்கெடுப் பிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

Dr. H. V. HANDE: Sir, I am pressing my cut motion, namely, 'to discuss the need for the issue of instuctions to all the police stations to take impartial action irrespective of political consideration whenever complaints are brought to the police stations'.

The cut motion was put and lost.

திரு. கே. எ. வகாப்: திரு. க. சுப்பு திருமதி த. ந. அனந்த நாயகி ஆகியோர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லை யாதலால் அவை, பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: திரு. கே. எம். சுப்ரமணியம் ஆகி யோர் தங்களுடைய இருக்கைகளில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெறப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தமிழ்நாடு எங்கும் மாணவர் கள் மீது சொல்லப்பட்டிருக்கிற வழக்கை வாபஸ் பெறப்படுவதுபற்றி முதலமைச்சரவர்கள் கருத்து ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே, நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை பிரஸ் பண்ணுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாணவர்கள் மீது வழக்குகள் இருந்தால் நிலைமைக்கேற்ப ஆராய்ந்து, திரும்பப்பெறப்படுவது பற்றி யோசிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: முதலமைச்சரவர்கள் நல்ல நோக்கத்தோடு நல்ல உள்ளத்தோடு சொல்லியிருக்கிறார்கள். ஆகவே என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை நான் வாபஸ் பெறுகிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் தமது வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்த வில்லையாதலால் அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—

> "கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 22,22,87,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்ப வேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இந்த அளவில் முடிவுற்று, மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை இரவு 8-50 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules anb Orders.

'Nil'

B. Reports, Notifications and Other Papers

+124. Review on Tamil Nadu Police 1972–73 (English and Tamil)

@125. Commercial Budget on 'State Transport' 1973–74

@126. Performance Budget on 'Transport', 1973–74

@127. Speech by Hon. Thiru S. Ramachandaran, Minister for Transport on Demands No. 35—Road Trantsport Schemes and No. 48—Captial Outlay on Road Transport Schemes 1973–74 (English and Tamil).

@128. Employee Participation in the Equity Capital of State Owned Trantsport Corporations (English and Tamil).

@129. Erata to the Review on Road Transport in Tamil Nadu 1972–73.

+ Despatched to Members on 21—3—73.

@ Laid on the Table of the House on 22—3—1973.

இணைப்பு—I.

]22-ம் பக்கத்தில் வெள்ளிக்குறியிட்ட 485-ம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.]

அருந்ததியர்களுக்கு வழங்கப்படும் தனிச்சலுகைகளும் அதற்கான நிதி ஒதுக்கீடும் அடங்கிய அறிக்கை.

காலணிகள் தைப்பதற்கும், தோலினால் இதர பொருட்கள் தயாரிக்கவும் அருந்ததியர்களுக்கு ரூ. 500 வட்டியில்லாக்கடன் வழங்கப்படுகின்றது.

2. தோல் தையல் இயந்திரமும் தரப்படுகிறது.

3. அருந்ததியர்களுக்கென்று ஒரு தனி தோல் பதனீடும் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தொழில் வர்த்தகத்துறை மூலம் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இந்தக்கூட்டுறவு சங்கத்திற்கு 1961 முதல் இதுவரை அரசு 2,34,073 ரூபாய் பல்வேறு காரணங்களுக்கான நிதி உதவி அளித்திருக்கின்றது. இந்தத்தொகையில் இன்னும் ரூ. 84,078 திருப்பி செலுத்த வேண்டியிருக்கிறது. தவிர சேமநிதி மானியமாக ரூ. 5,500-ம், வாடகை மானியமாக ரூ. 3,000-ம் அளிக்கப்பட்டிருக்கின்றது. பங்கு மூலதனமாக ரூ. 10,000 வரை மாநில அரசு உதவித் தொகையாக அளித்திருக்கின்றது.

4. ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி, ஆகியவைகளில் நகரசுத்தி தொழில் செய்து வரும் அருந்ததியர்களுக்கு ரூபாய் 1,500 முதல் 2,500 வரை செலவில் வீடுகட்டி கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்தத் தொகையில் 60 சதவிகிதம் அரசு மான்யமாக வழங்குகின்றது. இதற்காக 1971–72-ம் நிதியாண்டில் 9 லட்சம் ரூபாய் அரசு ஒதுக்கியுள்ளது. 1972–73-ம் நிதியாண்டில் 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

5. மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலிருந்து நகரசுத்தி தொழிலில் ஈடுபட்டிருக்கும் அருந்ததியர்களின் முன்னேற்றத்திற்காக ஊராட்சிகளுக்கோ, நகராட்சிகளுக்கோ அல்லது மாநகராட்சிகளுக்கோ, நகரசுத்தி தொழிலாளர்களுக்கு கையுறை வாங்கி வழங்குவதற்காகவும், காலுறைகள் வழங்குவதற்கும் மலத்தை அப்புறப்படுத்துவதற்குத் தேவையான சட்டி (Pan) தள்ளுவண்டி (Wheel Barrows) இதுபோன்ற பொருட்கள் வாங்குவதற்கு அரசு மானியம் வழங்கி வருகின்றது. இதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு ரூ. 1 இலட்சமும், ஊர்வளர்ச்சி இயக்குநருக்கு ரூ. 50,000-யும் 1971–72 நிதியாண்டில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 1972–73 நிதியாண்டில் ரூபாய் 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இணைப்பு—II

[35ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ் நாடு காவல் துறை

1972–73ஆம் ஆண்டின் ஆய்வுரை

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வலிமையும் திறமையும் படைத்த காவற்படை இன்றியமையாததாகும். நாட்டின் மிகச் சிறந்த திறமைசால் காவற்படை தமிழ் நாட்டின் காவற்படையே என்கிற பெயரையும், புகழையும் தமிழ் நாட்டு காவற்படை போற்றிப் பாதுகாத்து வந்துள்ளது.

தற்போதுள்ள காவற்படையின் எண்ணிக்கை பற்றி விவரங்கள் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

படைக்கலம் தாங்கிய காவற்படை அணிகள்

தமிழ் நாட்டில் படைக்கலம் தாங்கிய காவற்படை அணிகள் ஐந்து உள்ளன. இவற்றில் ஓர் அணி இந்திய அரசுக்கு முகமையில் அனுப்பப்பட்டு அது, உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ள பரேலியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஐந்து அணிகள் கீழ்க்காணும் இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன :—

தமிழ் நாடு சிறப்புக் காவற்படை

முதல் அணி ..	..	..	திருச்சிராப்பள்ளி.
இரண்டாம் அணி	..	..	ஆவடி.
மூன்றும் அணி	..	..	மணிமுத்தாறு.
நான்காம் அணி	..	..	ஆவடி.
ஐந்தாம் அணி	..	..	பரேலி (உத்தரப் பிரதேசம்).

கோயம்புத்தூர் மாவட்டத்தை இருகூறுக்குதல்

தமிழ் நாட்டில் பணிச்சுமை மிகுந்த காவலர் மாவட்டங்களில் கோயம்புத்தூர் மாவட்டமும் ஒன்றாக இருந்தது. நிர்வகிக்க முடியாத அளவுக்கு இதன் அதிகார வரம்பு பரந்து விரிந்து விட்டது. இந்த மாவட்டத்தில் குற்றம், சட்டம் ஒழுங்குப் பிரச்னை, ஏனைய பிரச்னைகளைச் சிறந்த முறையில் நிர்வகித்துக் கட்டுப்படுத்துவதற்காக, 1972-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாள் முதல் கோயம்புத்தூர் (நகர்ப்

புறம்) கோயம்புத்தூர் (கிராமப் புறம்) என்கிற இரு காவலர் மாவட்டங்களாக இம் மாவட்டம் பிரிக்கப்பட்டது. இவ்விரு மாவட்டங்களின் தலைமையிடங்களும் கோயம்புத்தூரில் உள்ளன.

பயிற்சியும் பணிக்கேற்ற ஆள் திரட்டலும்

ஐ.பி.எஸ். இளநிலை அதிகாரிகள் மூவர், மாவட்டங்களில் நடைமுறைப் பயிற்சியை முடித்த பின்னர், துணைக்கோட்டங்களில் காவல்துறை உதவி சூப்பிரண்டுகளாக அமர்த்தப்பட்டனர். காவல்துறையில் நேரடியாக நியமிக்கப்பெற்ற (முதல் நிலை) துணை சூப்பிரண்டுகள் நால்வர் இப்போது மாவட்டங்களிலும், வெலிங்டனிலுள்ள சென்னை இராணுவப் படை நிலையத்திலும் செயல்முறைப் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்கள் செயல்முறை பயிற்சியையும், இராணுவப் பயிற்சியையும் முடித்த பின்னர், துணைக் கோட்டங்களில் நியமிக்கப்படுவர். தமிழ் நாடு காவலர் பணிக்கு நேரடி நியமனம் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட (முதல் நிலை) துணை சூப்பிரண்டுகள் இருவர் இப்போது வேலூர் காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களோடு, நேரடி நியமனம் பெற்ற ஐ.பி.எஸ். இளநிலை அதிகாரிகள் மூவரும் வேலூர் காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வருகின்றனர். காவல்துறை (முதல் நிலை) துணை சூப்பிரண்டுகள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட கால அளவு ஓராண்டாகும். இம் மாநிலத்திற்குள்ளேயே இருக்கும் ஐ.பி.எஸ். இளநிலை அதிகாரிகள் (காவல்துறை உதவி சூப்பிரண்டுகள்) பயிற்சி பெறும் கால அளவு நான்கு மாதங்களாகும். காவல்துறை துணை சூப்பிரண்டுகளும், உதவி சூப்பிரண்டுகளும் இவ்வாண்டிற்குள் காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை முடிப்பர். பின்னர், இவர்கள் நடைமுறைப் பயிற்சிக்காக மாவட்டங்களுக்கு அனுப்பப்படுவர்.

1972 மார்ச் மாதத்தில், நேரடி நியமனம் மூலம் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 112 சப்-இன்ஸ்பெக்டர்கள், வேலூர், காவலர் பயிற்சிக் கல்லூரியில் ஓராண்டுப் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்கள் 1973 மார்ச் மாத நடுவில் பயிற்சியை முடிப்பர். பயிற்சியை முடித்த பின்னர், நடைமுறைப் பயிற்சிக்காக மாவட்டங்களில் அமர்த்தப்படுவர்.

இவ்வாண்டு நேரடி நியமனம் மூலம் பணிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட 964 (முதல் நிலை) காவலர்கள், வேலூரிலும், கோயம்புத்தூரிலும் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளிகளில்

ஒன்பது மாத பயிற்சி பெற்றனர். 1973 ஜனவரியில் இவர்கள் பயிற்சியை முடித்த பின்னர், மூன்று மாதம் நடைமுறைப் பயிற்சிக்காக மாவட்டங்களிலும், சென்னைமாநகரிலும் அமர்த்தப்பட்டனர்.

இளநிலைக் காவலர்களுக்குப் பதவி உயர்வு அளித்ததன் வாயிலாகத் தெரிந்தெடுக்கப்பட்ட முதல் நிலைக் காவலர் 807 பேர் வேலூரிலும், கோயம்புத்தூரிலும் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளிகளில் 1973ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 17-ம் நாள் முதல் மூன்று மாத காலத்திற்கு பணியிருப்புப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

கல்கத்தா, ஹைதராபாத் ஆகிய இடங்களில் உள்ள மத்திய புலனாய்வுப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுதல்

ஆய்வாண்டில், கல்கத்தாவில் உள்ள மத்தியப் புலனாய்வுப் பயிற்சிப் பள்ளியில் புலனாய்வுக்குத் தொடர்பான அறிவியல் நுட்பக் கருவிகளிலும், மேம்பாடான புலனாய்வு முறைகளிலும் பதினான்கு வாரங்கள் பயிற்சி பெறுவதற்காக எட்டு சப்-இன்ஸ்பெக்டர்கள் முகமையில் அனுப்பப்பட்டனர். ஹைதராபாத், மத்தியத் துப்புத் துலக்கும் பயிற்சிப் பள்ளியில் இதுபோன்ற பயிற்சி பெறுவதற்காக எட்டு சப்-இன்ஸ்பெக்டர்கள் கொண்ட மற்றொரு தொகுதி அனுப்பப்பட்டது.

தமிழ் நாடு சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடம்

தமிழ் நாடு சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடம்: (1) படைக்கலன் பிரிவு, (2) உயிரியல் பிரிவு, (3) இரசாயனப் பிரிவு, (4) ஆவணங்கள் பிரிவு, (5) பௌதீகப் பிரிவு ஆகிய ஐந்து பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. குற்ற நிகழ்வுகள் குறித்து பல்வேறு நிலைகளில் புலனாய்வு செய்யும்போது காவல்துறை அதிகாரிகளுக்கு அறிவியல் முறையில் தேவையான எல்லா உதவியையும் இந்த ஆய்வுக்கூடம் அளித்து வருகிறது. காவல்துறை அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள், நீதிமன்றத்தினர் இந்த ஆய்வுக்கூடத்திற்குக் கொடுக்கின்ற சாட்சியப் பொருள்களை (தடயங்களை) ஆய்வு செய்து அவைபற்றித் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதில் இந்த ஆய்வுக்கூடத்தின் ஐந்து பிரிவுகளும் முக்கியமாக ஈடுபட்டுள்ளன.

சட்டம் சார்ந்த நவீன அறிவியல் முறைகளில், காவல்துறை அதிகாரிகளுக்கும், மருத்துவ அதிகாரிகளுக்கும், நீதித்துறை அதிகாரிகளுக்கும் இந்த ஆய்வுக்கூடம் பயிற்சியளிக்

கிறது. குற்றவியலும், சட்டம் சார்ந்த அறிவியலும் பட்டயப் படிப்பு, எம். ஏ. வகுப்புக்களை நடத்துவதில் சென்னை மருத்துவக் கல்லூரியுடனும், சென்னைப் பல்கலைக் கழகத்துடனும் இந்த ஆய்வுக்கூடம் ஒத்துழைக்கிறது.

1971ஆம் ஆண்டில், மாவட்டங்களில் 16 இயங்கும் ஆய்வுக்கூட ஊர்திகளை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இயங்கும் இந்த ஆய்வுக்கூட ஊர்திகளுக்குத் தேவையான வண்டிகளும், சாதனங்களும் ஆய்வாண்டில் வழங்கப்பட்டன. குற்றம் நிகழும் இடங்களை இந்த ஆய்வுக்கூடப் பணியாளர்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். மாவட்டங்களிலுள்ள காவல்துறை அதிகாரிகள் இவற்றைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தி வருகின்றனர். இயங்கும் ஆய்வுக்கூட ஊர்தி ஒவ்வொன்றையும், இப்பணிக்காக சிறப்புப் பயிற்சி பெற்றுள்ள சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் நிர்வகித்து வருகிறார். ஆயினும், இயங்கும் இந்த ஊர்திகளிலுள்ள சப்-இன்ஸ்பெக்டர்களை மாற்றிவிட்டு அவர்களுக்குப் பதிலாக முறையான அறிவியல் உதவியாளர்கள் படிப்படியாக அமர்த்தப்பட்டு வருகின்றனர். வட ஆர்க்காடு, மதுரை (வடக்கு), செங்கற்பட்டு (மேற்கு), கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள இயங்கும் ஊர்திப்பிரிவுகளை நிர்வகிக்க இவ்வாண்டில் அறிவியல் உதவியாளர் பதவிகள் நான்கிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இந்த ஆய்வுக்கூடம் இவ்வாண்டில் எக்ஸ்-கதிர் கருவி ஒன்றையும் ரீசெர்ட் டையாபான் மைக்ராஸ்கோப்பையும் (REICHERT DIAPAN MICROSCOPE) வாங்கியுள்ளது. சுடு படைக்கலன்களிலிருந்து குண்டு செல்லும் வேகத்தைக் கணக்கிட மின்சாரத்திலான நேரம் காட்டியுடன் கூடிய சாதனம் ஒன்றையும் இந்த ஆய்வுக்கூடம் வாங்கியுள்ளது.

சட்டம் சார்ந்த அறிவியல் குறித்து எடின்பரோவிலும், பாரிசிலும் நடந்த அனைத்து நாடுகள் ஆறுவது மாநாட்டில் கலந்து கொள்ள இந்த ஆய்வுக்கூட இயக்குநரை அரசு அனுப்பி வைத்தது. அந்த மாநாட்டில் அவருக்குக் கிடைத்த அனுபவ அறிவை, இந்த ஆய்வுக் கூடத்தை அறிவியல் முறையிலும் நவீன கருவிகளைப் பெற்றும் சீரமைப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் இந்த ஆய்வுக்கூடத்தில் ஆய்வு செய்யப்படுவதற்காக அனுப்பப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை, இந்த ஆய்வுக்கூடத்தினால் பகுப்பாய்வு செய்யப்

பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் காட்டும் புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

ஆண்டு.			ஆய்வுக்கூடத்தால் ஆய்வு செய்வதற்கு அனுப்பப்பட்ட நேர்வுகள்.	பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை.
1969–70	..	..	397	20,242
1970–71	..	..	623	19,843
1971–72	..	..	551	20,556

1973 மார்ச் 1ஆம் நாள் முதல் தமிழ் நாடு சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடத்தையும், இரசாயன ஆய்வாளர்கள் ஆய்வுக்கூடத்தையும் இணைத்து ஒருங்கிணைந்த ஒரே ஆய்வுக்கூடமாக மாற்றி அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. ஒருங்கிணைந்த இந்த ஆய்வுக்கூடம், ''தமிழ் நாடு சட்டம் சார்ந்த அறிவியல்-இரசாயன ஆய்வுக்கூடம்'' எனப் பெயர் பெறும்.

குற்றமும், துப்புத் துலக்கலும்

1971–72ஆம் ஆண்டுகளில் நடந்த சொத்து குறித்த குற்றங்கள் பற்றிய ஒப்பீட்டு அறிக்கை பின்வருமாறு:—

குற்றங்களைக் குறிக்கும் தலைப்பு.			பதிவான புகார்களின் மொத்த எண்ணிக்கை. 1971.	1972.
கொலை	..	..	15	20
வழிப்பறி	..	..	11	28
கொள்ளை	..	..	107	93
கன்னக்களவு	..	..	6,863	6,956
பெரிய திருட்டுகள்		..	17,124	17,371
சிறிய திருட்டுகள்	..	..	434	413
கால்நடைத் திருட்டுகள்		..	1,276	1,199
மொத்தம்		..	25,830	26,080

கொலை உட்பட சொத்து குறித்து 1971ஆம் ஆண்டில் பதிவான குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 25,830. அதற்கு மாறாக, அவ்வகையில் 1972-ல் புகார் பதிவு செய்யப்பட்ட

குற்றங்களின் எண்ணிக்கை 26,080. முந்திய ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டில் குற்றங்களின் எண்ணிக்கை 250 ஆக அதாவது ஒரு சத வீதமாக உயர்ந்துள்ளது. குற்ற எண்ணிக்கையில் கண்டுள்ள உயர்வு மிகச் சொற்பமானதே என்றாலும், உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வளர்ச்சி பெற்றுவரும் நாடுகளிலும் காணும் குற்ற உயர்வுப் போக்கிற்கிணங்கவுள்ளது. இந்தக் குற்றங்களைத் துப்புத் துலக்கப் போதுமான நாட்டம் செலுத்தப்பட்டது. குறிப்பாக, அறிவியற் கருவிகள் துப்புத் துலக்குவதற்கு சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டன. வேலூரிலுள்ள விரல்ரேகைப் பதிவுக் கழகம், ஒற்றை விரல் ரேகைப் பதிவு நிலையங்கள், துப்பறியும் நாய்ப் படை, காவல்துறை, கம்பியில்லாத் தந்தி அனுப்புகை நிலையம், தமிழ் நாடு குற்றம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடம், மாவட்டங்களிலுள்ள சட்டம் சார்ந்த இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூட ஊர்திகள் ஆகிய அறிவியல் சார்ந்த உதவி துப்புத் துலக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

காவல்துறையினர் புலனாய்வு செய்து கண்டுபிடித்த முக்கியமான வழக்குகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன

சுவையான ஏமாற்று வழக்கு ஒன்று காவலரின் கவனத்திற்கு வந்தது. இந்த வழக்கில் பல புனைப் பெயர்களைக் கொண்ட பரதமுத்துராஜா என்பவர், 1972 ஜனவரித் திங்களில், தருமபுரியில், வட்டார ஆராய்ச்சி அதிகாரி, புன்செய் நிலமேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் அலுவலகம் ஒன்றைத் தொடங்கினார். கட்டிடம் ஒன்றை வாடகைக்கு பிடித்து அதில் எழுத்தர்களையும், தட்டச்சர்களையும் நியமித்தார். இவ்வாறு நியமனம் செய்யப்படுவதற்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு செய்திப் பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிட்டிருந்ததோடு, விண்ணப்பம் செய்து கொண்டவர்களிடமிருந்து பிணையத்தொகையும் வசூலித்தார். போலியான ஓர் அரசாணையைக் கொண்டு, உள்ளூரிலுள்ள கூட்டுறவு வங்கியில் கணக்கு ஒன்றைத் தொடங்கினார். மரச்சாமான்களுக்கான தேவைக்குறிப்புப் பட்டியல்களை சிறைச்சாலைத் துறையினரிடம் கொர்டுத்தார். விசையேற்றங்கள், மின்சாரப் பொருள்கள் வழங்குவதற்காக ஒப்பந்தப் புள்ளிகளைக் கேட்டிருந்தார். இவ்வாறாக, இவர் சுமார் ரூ. 5,800-ஐ வசூலித்துக் கொண்டு மறைந்து விட்டார். 1972 மே திங்களில், இதைப் போலவே, "தமிழ் நாடு இண்டஸ்ட்ரீஸ் மானுபேக்சரர்ஸ் ஆப் எலக்டிரிகல் ஆக்சசரீஸ், மெட்டல் பேரிங்ஸ் எக்ஸ்ட்டரா அண்ட் டிஸ்டிரிபியூட்டர்ஸ்" என்ற பெயரில் போலி நிறுவனம் ஒன்றை சிதம்பரத்திலும் இதன்

தொழிற்சாலையை வடலூரிலும் தொடங்கினார். செய்தித்தாள்களில் விளம்பரம் வெளியிட்டு, இயந்திரக் கம்மியர் நியமனத்திற்கு விண்ணப்பங்கள் அனுப்புமாறு கேட்டிருந்தார். எழுத்தர்கள், தட்டச்சர்கள் முதலியோரை இவர் நியமித்ததோடு பிணையத்தொகையாக சுமார் ரூ. 6,800 வசூலித்தார். இந்த மோசடிக்காரரர் ஏற்கனவே மதுரை மாவட்டத்திலும், தஞ்சாவூர் மாவட்டத்திலும் இத்தகைய மோசடிகள் செய்துள்ளார். சென்னையில், டாக்சி ஓட்டுநர் ஒருவர் கொடுத்த தகவலின் பேரில், இவர் கைது செய்யப்பட்டார். இவர் செய்த ஏமாற்றுக் குற்றத்திற்காக, இவர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு இரண்டாண்டுகள் கடும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

1970, 1971 ஆகிய ஆண்டுகளில் சென்னை மாநகரின் பல்வேறு இடங்களில் நடைபெற்ற குற்ற நிகழ்ச்சிகள், அதாவது இரவு நேரங்களில் சன்னல் வழியே கை விட்டு தூங்கிக் கொண்டிருந்த பெண்களிடமிருந்து தங்கச் சங்கிலிகளைப் பறித்தல், இரவு நேரங்களில் கழிப்பிடங்களுக்குச் செல்ல வெளியே வரும் பெண்களிடமிருந்து நகைகளைப் பறித்தல் அல்லது சன்னல்கள் வழியாகக் கழிகளை விட்டுப் பொருள்களை களவாடுதல் போன்ற தொடர்ச்சியான குற்றங்கள், மாநகரக் காவலர் துறையைச் சேர்ந்த புலனாய்வுப் பணியாளர்களுக்கு ஒரு கடும் பிரச்சினையாக அமைந்தன. இக்குற்றங்கள் பற்றி நன்கு பரிசீலித்த பின்னர் அடிக்கடி குற்றங்கள் நடைபெறக் கூடிய இடங்களில் இரவு நேர ரோந்து அதிகமாக்கப்பட்டது. 1972ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21ஆம் நாள் அன்று இரவு, மாம்பலத்தில், மைசூர் மாநிலத்தில் குடகைச் சேர்ந்த சேகர் என்ற சந்திரசேகரன் என்பவர் கைது செய்யப்பட்டார். இவரைத் திறமையுடனும், சாமர்த்தியமாகவும் விசாரணை செய்ததன் மூலமும், இடைவிடாப் புலனாய்விலிருந்தும், இவர் சுமார் 203 குற்றங்களில் சம்பந்தப்பட்டிருப்பது தெரிய வந்தது. சென்னை மாநகர், மைசூர், பெங்களூர் மற்றும் பிற இடங்களில், இவரிடமிருந்து பொருள்களை வாங்கியவர்களிடமிருந்தும் அடகுக் கடைகளிலிருந்தும் சுமார் ரூ. 85,000 மதிப்புள்ள, விலையுயர்ந்த தங்க, வைர நகைகள், கடிகாரங்கள், டிரான்சிஸ்டர்கள், ரேடியோக்கள், சைக்கிள் முதலியன போன்ற பொருள்கள் மீட்கப்பட்டன. சைதாப்பேட்டை, VI-வது மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் இவர்மீது வழக்குத் தொடரப்பட்டு நான்கு ஆண்டுக் கடுங்காவல் தண்டனையும், மொத்தத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பிட்ட இடத்தில் வசிக்க வேண்டும் என்றும் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

1971ஆம் ஆண்டு டிசம்பரில், ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஸ்டூவர்ட்புரத்தைச் சேர்ந்த எட்டுக் குற்றவாளிகள், வில்லிவாக்கத்தில் உள்ள அவர்களது கூட்டாளியாகிய சுதாகர் அழைப்பின் பேரில் ஆனந்தராவ் என்பவரின் தலைமையில் அவரவர் குடும்பங்களுடன் சென்னை மாநகருக்கு வந்து இங்கு வாடகை வீடுகளில் தற்காலிகமாகத் தங்கினர். சுமார் ஒரு வாரகால நோட்டத்திற்கு பிறகு இக்கூட்டத்தினர் ஓடும் ரயில்களில், மூன்று கடுங்குற்றங்கள் அதாவது, வண்டலூருக்கும் பெருங்களத்தூருக்கும் இடையில் 1972ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 4ஆம் நாள் அன்று ஒரு திருட்டு, கடம்பத்தூருக்கும் மாணூருக்கும் இடையில் 1972ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 5ஆம் நாள் அன்று ஒரு வழிப்பறிக் கொள்ளை, ஒத்திவாக்கத்திற்கும் படாலத்திற்கும் இடையில் 1972ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21ஆம் நாள் அன்று மற்றுமொரு திருட்டு ஆகியவற்றையும் சேர்ந்து தொடர்ச்சியாகப் பல குற்றங்கள் செய்தனர். இவற்றைத்தவிர, 1972ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21ஆம் நாள் அன்று (செங்கற்பட்டு வட்டம்) திருமலை கிராமத்தில் ஒன்றும், 1972ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23ஆம் நாள் அன்று திருவான்மியூரில் மற்றொன்றும், 1972ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 24ஆம் நாள் அன்று அம்பத்தூரில் பிரிதொன்றுமாக மூன்று கொள்ளைகளையும் இவர்கள் நடத்தினர். பின்னர், ஸ்டூவர்ட்புரத்தைச் சேர்ந்த ஆனந்தராவும் மற்றும் மூவரும் இராமேஸ்வரத்திற்குச் சென்றனர். வில்லிவாக்கத்தைச் சேர்ந்த கூட்டாளிகளை அவ்வூர் காவலர்கள் 1972ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ஆம் நாளில் கைது செய்தனர். ஸ்டூவர்ட்புரத்தைச் சேர்ந்த எஞ்சிய நால்வர் பயணச்சீட்டு இல்லாமல் ரயில் மூலம் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் வழியில் உள்ள ரயில் நிலையத்தில் ரயிலிலிருந்து இறக்கி விடப்பட்டனர். அக் கூட்டத்தினர் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் நுழைந்து இரண்டு கொள்ளைகளும், ஒரு திருட்டும் நடத்தினர். இக் கிராமத்தினர்கள் அவர்களை விடாமல் துரத்திச் சென்று பிடித்து, மண்டபம் காவலர்களிடம் ஒப்படைத்தனர். அந்த நால்வர் ஒவ்வொருவருக்கும் 7 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26ஆம் நாளில் மதுராந்தகம் காவலர்கள், திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த ராகவேந்திரராவ் என்பவரை ஐயச் சூழ்நிலையில் கைது செய்தனர். அவரைத் திறமையுடனும், சாமர்த்தியமாகவும் விசாரணை செய்தபோது, பல்வேறு இடங்களில், பெரும்பாலும், திருமண வீடுகளில் நடைபெற்ற பல குற்றங்களில் இவர் சம்பந்தப்பட்டிருப்பது தெரிய வந்தது. குற்றவாளி ஓர் இளைஞர். இவர் எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படித்துள்ளார். இவர் திருமணக் கூட்டத்தினருடன் கலந்து தானும் ஒரு விருந்தினர் போல நடிப்பார். தக்க சமயம் வந்தவுடன் சிறுவர்களிடமிருந்து அல்லது விருந்தினர் அறைகளில் உள்ள விலை மதிப்புள்ள நகைகளைத் திருடிச் செல்வார். சென்னை மாநகர், செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை, புதுச்சேரி, மற்றும் பிற இடங்களில் நடைபெற்ற 24 திருட்டுக்களில் இவர் திருடிய ரூ. 20,000 மதிப்புள்ள நகைகள் இதுவரையில் மீட்கப்பட்டுள்ளன. மேற்கொண்டும், புலனாய்வு நடைபெற்று வருகிறது.

மருந்திட்டு கொலை செய்யும் வழக்குகள்

1970 டிசம்பர் முதல் 1972 நவம்பர் வரையில், சென்னை மாநகரைச் சேர்ந்த ஒரு கூட்டத்தினர் புதுமாதிரியான கொலைகள், திருட்டுகள் செய்து வந்தது தெரிய வந்தது. இவர்கள் தங்களை அரசு அதிகாரிகள் என்று கூறிக் கொண்டனர். வியாபாரம் நிமித்தம் பெருந்தொகையுடன் சென்னைக்கு வருகின்ற வெளியூர்காரர்களிடம் சென்று அவர்கள் சட்ட விரோதமான காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டி விசாரணை செய்யப்படுவதற்காக அவர்கள் தங்களது அலுவலகத்திற்கு வரவேண்டும் என்று சாக்கு காட்டி அவர்களை அழைத்துச் சென்று அவர்களிடமுள்ள ரொக்கத்தைப் பறித்துக்கொண்டனர். இந்த வெளியூர் ஆட்களை ஒவ்வொருவராகத் தங்களது காரில் அழைத்துச் சென்று வழியில் அவர்களுக்கு தூக்க மாத்திரைகள் அல்லது அவர்களிடமிருந்து உண்மையை வரவழைப்பதற்கான "உண்மை மருந்து" என்று கூறி போதை ஊசி (Pethedine Injection) மருந்தினைச் செலுத்தினர். அவர்கள் சுயநினைவிழந்தவுடன் அல்லது இறந்தவுடன் உடலைத் தூரத் தொலைவிற்கு எடுத்துச் சென்று வழியில் போட்டுவிட்டனர். அவ்வாறு செய்வதற்கு முன், அவர்கள் இன்னார் என்று அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக அவர்களது துணிமணிகளை அகற்றி விட்டனர். இக்கூட்டத்தினர் ஏழு கொலைகளையும், நான்கு திருட்டுக்களையும் செய்துள்ளனர். ஆறு நேர்வுகளில், உடல்களை சித்தூர் மாவட்டத்தில் (ஆந்திரப் பிரதேசம்) பாதை ஓரங்களில் போட்டிருந்தனர். மற்றொரு உடலை செங்கற்பட்டு மாவட்டத்தில் செந்நீர்குப்பத்திற்கு அருகில் போட்டு விட்டனர். சித்தூர் மாவட்டத்தில் இரண்டு உடல்களில் பெட்ரோலை ஊற்றி எரிக்க முயற்சி செய்யப்பட்டது. காணாமற்போனவர்களில் ஒருவரைப் பற்றி கிடைத்த ஒரு சிறு துப்பை வைத்துக் கொண்டு தமிழ் நாடு

புலனாய்வுத் துறை மூளைப்பாகச் செயல்பட்டு, 15 நாட்களுக்குள், எட்டுப் பேரைக் கொண்ட கூட்டத்தினரைக் கைது செய்து இந்த மர்மத்தை அம்பலமாக்கியது. நீதிமன்றத்தில் சரணடைந்த ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் கைது செய்யப்பட்டனர். இக் கூட்டத்தினர் சுமார் ரூ. 5½ லட்சம் கொள்ளையடித்து இந்தக் கொள்ளைத் தொகையை தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர் என்று சொல்லப்படுகிறது. இவர்கள் பணத்தை மிகவும் தாராளமாகச் செலவு செய்துகொண்டிருந்தனர். அவர்களில் மூவர் சொந்தமாகக் கார்கள் கூட வாங்கினர். இவர்கள் கொள்ளையடித்த தொகையைக் கொண்டு வாங்கிய ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளையும், ரொக்கப் பணத்தையும் குற்றப் புலனாய்வுத் துறை கைப்பற்றியது.

துப்பறியும் நாய்ப்படை

இம்மாநிலத்தில் இப்பொழுது சென்னை மாநகரில் ஒன்றும், மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக துப்பறியும் நாய்ப்படைப் பிரிவுகள் மூன்று உள்ளன. இவை சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றன. திருச்சிராப்பள்ளியிலும், துப்பறியும் நாய்ப்படைப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. நாய்ப்பட்டி ஒன்று கட்டப்பட்டு வருகிறது. நாய்ப்பட்டி கட்டி முடிக்கப்பட்ட பின்னரும் நாய்கள் தருவிக்கப்பட்ட பின்னரும் இப்பிரிவு செயற்படும். இத்துப்பறியும் நாய்ப்படையின் பணி 1971-ல் 315 வழக்குகளில் பயன்படுத்தப்பட்டிருக்க, 1972-ல் 359 வழக்குகளில் அதன் பணி பயன்படுத்தப்பட்டது.

வகுப்புக் கலவர நிலை

இவ்வாண்டில் இங்குமங்கும் சில வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டன. இக் கலவரங்களின்போது சட்ட ஒழுங்குப் பிரச்சினை எதுவும் எழவில்லை. பல்வேறு வகுப்பினரிடையே எவ்வித ஆழ்ந்த பகைமை உணர்ச்சியோ அல்லது வெறுப்புணர்ச்சியோ இல்லையென்று பெரும்பாலான நிகழ்ச்சிகளின் மூலம் தெரியவந்ததாக வகுப்புக் கலவரங்கள் குறித்து நடத்தப்பட்ட ஆய்வின்போது தெரிந்தது.

1972ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் 39 வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டன. 39 கலவரங்களில் 32 கலவரங்கள் சிறு தகராறு குறித்து ஏற்பட்டவையாகும். மூன்று தகராறுகள் நிலத்தகராறினாலும், ஒரு தகராறு அரசியல் காழ்ப்புணர்ச்சிக்

காரணமாகவும், மகளிர் காரணமாக ஏற்பட்ட பகைமையினால் மூன்று கலவரங்களும் ஏற்பட்டன. 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் நகரில் நாடார் ஒருவருக்கும், மீனவர் ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட சிறு தகராறு இரு வகுப்பினரிடையே பெரும் மோதலாக உருவெடுத்தது. இக்கலவரத்தினால் ஒருவார காலத்திற்கும் மேலாக சாதாரண வாழ்க்கை ஸ்தம்பித்துவிட்டது. 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16ஆம் நாள் இரவு குளச்சல் நகரில் சங்குத்துரை நாடார் என்னும் ஒருவர் சைகிளில் சென்று கொண்டிருக்கையில் ஜான் பாஸ்க் என்னும் மீனவர் மீது தற்செயலாக மோதி விட்டார். இதனால் இருவருக்குமிடையே கடும் வாய்ச்சண்டை ஏற்பட்டது. உடனே இரு வகுப்பினரும் இரு கட்சிகளாகப் பிரிந்து நின்று கலவர சூழ்நிலை ஏற்படுத்தி கற்களையும், சோடா புட்டிகளையும் வீசிக் கொண்டனர். கலவரத்தின் போது மெய்யாள் பிள்ளை என்னும் மீனவர் வாசன் நாடார் என்பவரால் உடைந்த சோடா புட்டித் துண்டு ஒன்றால் குத்தப்பட்டார். காயம் காரணமாக மெய்யாள் பிள்ளை பின்னர் இறந்து விட்டார். இதனால் இரு வகுப்பினரிடையே வெறுப்புணர்ச்சி ஏற்பட்டு பரப்பரப்பான சூழ்நிலை நிலவியது. நிலைமையைச் சமாளிக்க காவல் துறை உடனடியான நடவடிக்கை எடுத்தது. நகரில் அமைதி நிலவச் செய்ய 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22ஆம் நாள் அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு அமைதிக் குழுவை ஏற்படுத்தினார்.

ஏர் முனை நிலை

கூலி உயர்வு கேட்டும், நில உரிமையாளர்கள் வெளி ஆட்களை வேலைக்கு வைத்துக்கொள்வதை எதிர்த்தும் உழவர்கள் போராட்டங்கள் நடத்தினர். மார்க்சிஸ்ட் உழவர்கள் 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 12ஆம் நாள் அன்று மாவட்டங்களிலுள்ள வருவாய் அலுவலகங்களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பண்ணையாட்களுக்கு நாளொன்றுக்கு குறைந்த அளவு கூலி ரூ. 5 கொடுக்க வேண்டும்; ஐந்து ஏக்கருக்குக் குறைவாக சொந்தமாக நிலம் வைத்திருக்கும் உழவர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு 9 காசு மின் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்பன போன்ற குறிப்பான கோரிக்கைகள் அடங்கிய மனுக்களைக் கொடுத்துவிட்டு, ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்று விட்டனர். மறுபடியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தொண்டர்கள் 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17ஆம் நாள் அன்று தமிழ் நாடு முழுவதும் வருவாய்த் துறை அலுவலகங்களுக்கு முன்னால் ஒரு நாள் அடையாள உண்ணா நோன்பு இருந்தனர். 1972ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள்

21ஆம் நாள் முதல் 1972ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 23ஆம் நாள் வரை அவர்கள் பல்வேறு இடங்களில் வருவாய்த் துறை அலுவலகங்களுக்கு முன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உழவர்கள் கோரிக்கைகளுக்கு ஆதரவாக மறியல் செய்து கைது செய்யப்பட்டனர்.

கோயம்புத்தூர் விவசாயிகள் சங்கம் விவசாயக் காரியங்களுக்கான மின் கட்டண உயர்வை எதிர்த்து 12 அம்ச கோரிக்கைகள் அடங்கிய பட்டியலைத் தயாரித்து அரசுக்கு அனுப்பியது. இக் கோரிக்கைகளை அரசு செயல்படுத்துமாறு செய்ய விவசாயிகள் சங்கம் செயற்குழுவை ஏற்படுத்திப் போராட்டம் ஒன்றைத் தொடங்கியது. இப்போராட்டங்களின்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், வட்ட அலுவலகங்கள் ஆகியவற்றின் முன் மறியல் செய்தல், அனைத்துக் கட்சி பொதுக்கூட்டங்கள் கூட்டுதல், மாட்டு வண்டி ஊர்வலங்கள் நடத்துதல் முதலியவற்றில் ஈடுபட்டனர். இப்போராட்டம் தொடக்கத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டுமே நடைபெற்றது. பிறகு மாநிலமெங்கும் இப்போராட்டம் பரவியது. 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5ஆம் நாளன்று மாநிலம் முழுவதும் கடையடைப்பு செய்ய விவசாயிகள் சங்கம் அறைகூவல் விடுத்தது. கடையடைப்பின்போது மாநிலம் முழுவதிலுமுள்ள பல முக்கிய சாலைகளில் மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டும், வெட்டு மரங்கள், கற்கள் ஆகியவற்றைக் கொண்டும், மாட்டு வண்டிகளை நிறுத்தியும் சாலைப் போக்குவரத்துத் தடுக்கப்பட்டது. சில இடங்களில் இருப்புப் பாதைகளிலும் இது போன்ற தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இயல்பான நிலையை மீண்டும் உருவாக்க காவல்துறையினர் மிகவும் சிரமப்பட்டு இத்தடைகளை அகற்றினர். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மானாமதுரை, சாத்தூர், விருதுநகருக்கு அருகில் சூளக்கரைமேடு ஆகிய இடங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டியிலும், சேலம் மாவட்டத்தில் பெத்தநாயக்கன்பாளையத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஐயம்பாளையத்திலும் காவல்துறையினர் தற்காப்புக்காகச் சுட நேர்ந்தது. இவ்விடங்களில் காவல் துறையினர் சுட்டதில் 14 பேர் மாண்டனர், 51 பேருக்குக் காயம் ஏற்பட்டது. இவை தவிர காவல் துறையினர் தடியடி நடத்திய போது அருப்புக்கோட்டையில் (இராமநாதபுரம் மாவட்டம்) நெரிசலில் சிக்கி ஒருவர் மாண்டார். ராஜபாளையத்தில் எதிர்பாராத விதமாக துப்பாக்கி குண்டினால் தாக்கப்பட்டு ராமநாதபுரம் மாவட்ட சிறப்புப் பிரிவு தலைமைக் காவலர் ஒருவர் மாண்டார், தடியடியின் போது நெரிசலில் சிக்கி ஆத்தூ

ரில் (சேலம்) மற்றொருவர் மாண்டார். இப்போராட்டத்தின் போது ஏற்பட்ட வன்முறை நிகழ்ச்சிகளில் காவல் துறை அதிகாரிகள் 12 பேருக்கும், காவல் துறை படையினர் 65 பேருக்கும் காயம் ஏற்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் பரபரப்பான சூழ்நிலை நிலவியது. கடைகளும், வண்டிகளும் தாக்கப்பட்டன. இணக்கமான தீர்வு ஏற்பட்டதைத் தொடர்ந்து 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18ஆம் நாள் அன்று இப்போராட்டம் நிறுத்தப்பட்டது.

தொழிலாளர் நிலவரம்

அந்தந்தத் தொழிற்சாலைகளுக்கு மட்டும் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்காக உள்ளிருப்பு வேலை நிறுத்தம், தொடர் உண்ணா நோன்பு போன்ற பல போராட்டங்களில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர். 1972ஆம் ஆண்டு தொடக்கத்தில் கோயம்புத்தூர் பஞ்சாலைத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டம், 1972 ஜூன் மாதத்தில் தொடங்கப்பட்ட சிம்ஸன் தொகுதி நிறுவனத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள் ஆகியவை காவலர்கள் சமாளிக்க வேண்டியிருந்த முக்கியப் போராட்டங்களாகும். காவலர்கள் கடினமான தங்கள் கடமைகளை செவ்வனே நிறைவேற்றி சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்தினர்.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகள்

இந்த ஆண்டின்போது தமிழ் நாட்டில் குறிப்பிடும்படியான பெரிய நடவடிக்கை எதிலும் தீவிரவாதிகள் ஈடுபடவில்லை. சாரு மஜூம்தார் மரணத்தின் எதிரொலியாக எவ்வித எதிர்ப்பு நடவடிக்கையும் நிகழவில்லை.

காரைக்குடியிலுள்ள (இராமநாதபுரம்) சில இடங்களில் 1972ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16ஆம் நாளன்று நாடாளுமன்ற ஜனநாயக முறை போன்றவற்றைத் தாக்கி எழுதப்பட்ட சுவரொட்டிகள் தீவிரவாதிகளால் ஒட்டப்பட்டிருந்தன. இந்நிகழ்ச்சி ஒன்றுதான் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். இது தொடர்பாக காரைக்குடி (தெற்கு) காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. P. V. சீனிவாசன் என்பவர் தனது கூட்டாளிகளுடன் 1972ஆம் ஆண்டு மே திங்கள் 8ஆம் நாள் அன்று சத்திரப்பட்டி காவல் நிலைய எல்லைக்குள் உள்ள (மதுரை வடக்கு) அமரபூண்டி கிராம

திலுள்ள வட்டிக்கடைக்காரர் ஒருவரது வீட்டில் நுழைந்து, அவரிடமுள்ள புரோ நோட்டுகளை அழிக்கும் நோக்கத்துடன் அவற்றைக் கொடுத்துவிடுமாறு அவர்கள் அச்சுறுத்தினர். அவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள்மீது சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் வழக்கு தொடரப்பட்டது. 1970 முதல் தலைமறைவாக இருந்த சீனிவாசன் 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டார்.

தீவிரவாதிகளில் ஒருவரான கலியபெருமாள் என்பவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு உயர்நீதி மன்றத்தாலும் அந்தத் தண்டனை உறுதிப்படுத்தப்பட்டது.

பொதுவாக காவல் துறையினரின் சிறப்பாகக் கடும் நடவடிக்கை எடுத்ததும் தீவிர வாதிகளின் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டதும், இவ்வாண்டில் தீவிர வாதிகளின் செயல்களை ஒடுக்குவதில் பெருமளவில் உதவி செய்தது.

காவலர் துப்பாக்கிச்சுடல்

1972-ல் 12 நேர்வுகளில் காவலர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டி இருந்தது. இவற்றின் விவரங்கள் வருமாறு :—

1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5ஆம் நாள் அன்று மானாமதுரையில் அனைத்துக் கட்சி விவசாயிகள் சங்கத்தால் நடத்தப்பட்ட கடையடைப்பு வன்முறைக் கலவரமாக மாறியது. திறந்து வைக்கப்பட்டிருந்த ஓட்டல் ஒன்று 400 பேர்கள் அடங்கிய கூட்டத்தால் தாக்கப்பட்டது. கிளர்ச்சி செய்தவர்கள் வன்முறையில் ஈடுபட்டதால், தற்காப்புக்காக காவலர்கள் துப்பாக்கிச் சுடல் நடத்த நேர்ந்தது. இதனால் ஒருவர் மாண்டார். மற்றொருவருக்குக் காயம் ஏற்பட்டது. காவலர் தரப்பில், இன்ஸ்பெக்டர் ஒருவர், சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர் ஒருவர், காவலர் ஐவர் காயமடைந்தனர். இந்நிகழ்ச்சி தொடர்பாக மாஜிஸ்ட்ரேட் விசாரணை நடைபெற்றது.

2. 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5ஆம் நாள் அன்று விருதுநகரில் மக்கட் கூட்டம் ஏற்படுத்தியிருந்த தடைகளை நீக்குவதில் காவற்படையினர் ஈடுபட்டிருந்தபோது சுமார் 500 பேர் அடங்கிய கட்டுக்கடங்காத கூட்டம் ஒன்று காவற் படையினரைத் தாக்கியது. மாஜிஸ்ட்ரேட் ஆணையின்படி தற்காப்புக்காகக் காவற்படையினர் துப்பாக்கியால் சுட்டனர். இச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொரு-

வருக்குக் காயம் ஏற்பட்டது. காவலர் தரப்பில் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், காவலர் ஐவர் காயமடைந்தனர். இச்சம்பவம் குறித்து மாஜிஸ்ட்ரேட் விசாரணை நடைபெற்றது.

3. 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5ஆம் நாள் அன்று சாத்தூரில் இந்திய ஸ்டேட் வங்கியைக் காவல் புரிந்து வந்த காவலர் படை ஒன்றை 4,000 பேர் அடங்கிய கட்டுக்கடங்காத கூட்டம் ஒன்று தாக்கியது. தற்காப்புக்காகக் காவலர் துப்பாக்கியால் சுட்டனர். இச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். மூன்று பேருக்குக் காயம் ஏற்பட்டது. காவலர் தரப்பில் இன்ஸ்பெக்டர் ஒருவர், சப்-இன்ஸ்பெக்டர் இருவர், சேமக்காவல்படை உதவி சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர் மூவர், காவலர் அறுவர் ஆகியோர் காயம் அடைந்தனர். இச்சம்பவம் குறித்து மாஜிஸ்ட்ரேட் விசாரணை நடைபெற்றது.

4. 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5ஆம் நாள் அன்று கோவில்பட்டியில் சுமார் 2,000 பேர்களடங்கிய கட்டுக்கடங்காத கூட்டம் ஒன்று காவலர் படைமீது கற்களை வீசியது. தற்காப்புக்காக காவலர் சுட நேர்ந்தது. இதனால் ஒருவர் கொல்லப்பட்டார்; 15 பேருக்குக் காயமேற்பட்டது. காவலர் தரப்பில் 6 காவலருக்குக் காயமேற்பட்டது. இச்சம்பவம் குறித்து மாஜிஸ்ட்ரேட் விசாரணை நடைபெற்றது.

5. 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5ஆம் நாள் அன்று கோயம்புத்தூர் பெரிய நாயக்கன் பாளையத்தில் பெரிய கூட்டம் ஒன்றுக்கும் மற்றொரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே மோதல் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. உள்ளூர் திரைப்பட அரங்கின்மீதும் கூட்டத்தினர் கற்களை வீசினார்கள். காவலர் வான் நோக்கி 6 சுழல்கள் சுட்டனர். கூட்டம் கலைந்துவிட்டது. எவருக்கும் காயமேற்படவில்லை. விசாரணை எதுவும் நடைபெறவில்லை.

6. 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5ஆம் நாள் அன்று கோயம்புத்தூர் மாவட்டம் ஐயம்பாளையத்தில் சுமார் 2,000 பேர்களடங்கிய கட்டுக்கடங்காத கூட்டம் ஒன்று சாலையில் தடைகளை ஏற்படுத்தி காவலரைத் தாக்கியது. காவலர்கள் சுட்டனர். இதனால் கலகக்காரர்கள் இருவர் கொல்லப்பட்டனர்; 8 பேருக்குக் காயம் ஏற்பட்டது. காவலர் தரப்பில் 22 காவலர்களுக்கு காயம் ஏற்பட்டது. இந்நேர்வு குறித்த மாஜிஸ்ட்ரேட் விசாரணையில் காவலர்கள் துப்பாக்கியால் சுட்டது நியாயமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

7. 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5ஆம் நாள் அன்று சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் சுமார் 4,000 பேர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று போக்குவரத்தைத் தடை செய்து, தனது கடமையையாற்றி வந்த காவலர் படையைத் தாக்கியது. தற்காப்புக்காக காவலர் சுட நேர்ந்தது. கூட்டத்தினர் 8 பேர் கொல்லப்பட்டனர், 21 பேருக்குக் காயம் ஏற்பட்டது. காவலர் தரப்பில், காவல் துறை டெபுடி சூப்பிரண்டு ஒருவர் உட்பட 21 அதிகாரிகள் காயமடைந்தனர். இச்சம்பவம் குறித்து மாஜிஸ்ட்ரேட் விசாரணை நடைபெற்றது.

8. 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18ஆம் நாள் அன்று விருத்தாசலம் கலைக்கல்லூரி மாணவர்கள் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். சில சமூக விரோத சக்திகள் ஊர்வலத்தில் சேர்ந்து கொண்டு காவலரைத் தாக்கினர். தற்காப்புக்காகக் காவலர் சுட நேர்ந்தது. இதனால் ஒருவர் கொல்லப்பட்டார் ; 38 பேர் காயமடைந்தனர். காவலர் தரப்பில் 15 காவலர் காயமடைந்தனர். அவர்களில் இருவர் கடுமையான காயம் அடைந்தனர். இச்சம்பவம் குறித்து மாஜிஸ்ட்ரேட் விசாரணை நடைபெற்றது.

9. 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22ஆம் நாள் அன்று இராமநாதபுரத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் ஒரு பகுதியினர் எதிரான முழக்கமிட்டனர். மேடையை நோக்கிக் கற்களை வீசத் தொடங்கினர். கூட்டம் சட்ட விரோதமானதென அறிவிக்கப்பட்டது. தற்காப்புக்காக காவலர் துப்பாக்கியால் சுட்டனர். எவரும் கொல்லப்படவில்லை. 29 பேர் காயமுற்றனர். காவலர் தரப்பில், 8 காவலர்கள் (தலைமைக் காவலர் ஒருவர், காவலர் 7 பேர்கள்) காயமுற்றனர். சிவகங்கை வருவாய்க் கோட்ட அதிகாரியால் நீதி விசாரணை நடத்தப்பட்டது.

10. 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26ஆம் நாளில் மதுரை வடக்கு மாவட்டம், போடிநாயக்கனூரில் காவலர் சட்டத்தின் 30 (2) பிரிவை மீறி மாணவர்கள் ஊர்வலம் சென்றனர். காவலர் குழு ஊர்வலத்தினரைக் கலைக்க முற்பட்டனர். ஊர்வலத்தினர் காவல் நிலையத்தைத் தாக்கி உடைமைக்குச் சேதம் விளைவித்தனர். தற்காப்புக்காக காவலர் சுட வேண்டியதாயிற்று. ஊர்வலத்தினரில் எவரும் இறக்கவில்லை. காவலர் தரப்பில் 21 பேர் காயமுற்றனர். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் பெரியகுளம் வருவாய்க் கோட்ட அதிகாரியை விசாரணை செய்ய ஆணையிட்டுள்ளார்.

11. வட ஆற்காடு மாவட்டம், கண்ணமங்கலம் என்னும் இடத்தில் 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24ஆம் நாளில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. பொதுக் கூட்டத்தில் சிலர் கலவரம் விளைவித்து காவலர் மீதும், பேச்சாளர்கள் மீதும் கற்களை வீசினர். இதன் விளைவாக, எம்.எல்.ஏ. ஒருவரும், எம். பி. ஒருவரும் பாதுகாப்பிற்காக கண்ணமங்கலம் காவல் நிலையத்தை அடைந்தனர். கலகக் கும்பல் காவல் நிலையத்தை சுற்றி வளைத்துக் கொண்டு அதைத் தாக்கியது. உயிர்க்கும், உடைமைக்கும் ஆபத்து இருந்ததால், தற்காப்புக்காக காவலர் சுட நேரிட்டது. துப்பாக்கிச் சுடலில் ஒரு மாணவர் இறந்தார். ஏனைய இருவர் காயமுற்றனர். இன்ஸ்பெக்டர் ஒருவரும், 5 காவலர்களும் காயமடைந்தனர். வருவாய்க் கோட்ட அதிகாரி விசாரணை நடத்தி வருகிறார்.

12. 1972ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22ஆம் நாளில் ரிசர்வ் இன்ஸ்பெக்டர் தலைமையில் காவலர் குழு ஒன்று பாளையங்கோட்டையில் திருச்செந்தூர்-கோட்டூர் சாலைச் சந்திப்பில் வைக்கப்பட்டிருந்த தடைகளை நீக்குவதில் ஈடுபட்டிருந்தனர். இந்தக் காவலர் குழுவின் மீது சுமார் 1,500 பேர் கொண்ட கும்பல் ஒன்று கற்களை வீசத் தொடங்கியது. இந்தக் கும்பல் காவலர் வண்டியை சூழ்ந்து கொண்டு தொடர்ந்து கற்களை வீசியது. தற்காப்புக்காக காவலர் சுட நேரிட்டது. ரிசர்வ் இன்ஸ்பெக்டரது குழுவில் இருந்த படைக்கலம் தாங்கிய தலைமைக் காவலர் குண்டடிப்பட்டு அதன் காரணமாக மருத்துவ மனையில் இறந்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் மாஜிஸ்ட்ரேட் விசாரணைக்கு ஆணையிட்டுள்ளார்.

தேர்தல்கள்

1972ஆம் ஆண்டில் சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்காயினும், மக்கள் சபைத் தேர்தல் தொகுதிக்காயினும் துணைத் தேர்தல் எதுவும் நடைபெறவில்லை. நகராட்சித் தேர்தல்கள் பரமக்குடி, தேவக்கோட்டை, காரைக்குடி, ராமநாதபுரம், கிருஷ்ணகிரி, குடியாத்தம், நாகர்கோயில், புளியங்குடி, நெல்லிக்குப்பம், ஆரணி, புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10ஆம் நாள் நடைபெற்றது.

வாக்குப் பதிவு மெத்தனமாகவும், அமைதியாகவும் நடைபெற உறுதி செய்யும் பொருட்டு காவலரால் விரிவான பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தேர்தல்கள் அமைதியாக நடைபெற்றன.

கண்ணீர்ப்புகை

அறிக்கை ஆண்டில் 17 நேர்வுகளில் காவலர் கண்ணீர்ப் புகையைப் பயன்படுத்தப்படவேண்டியதாயிற்று. அதைப் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) கட்டுக்கடங்காத கும்பல் ஒன்றைக் கலைப்பதற்காக கோயம்புத்தூர் (கிராமப்புற) மாவட்டம் வால்பாறை எஸ்டேட்டில் 1972ஆம் ஆண்டு மே திங்கள் 23ஆம் நாளில் காவலர் கண்ணீர்ப்புகை பயன்படுத்தினர்.

(2) கோயம்புத்தூர் நகரத்தில் காவல் நிலையம் ஒன்றின் முன்பு வன்முறைச் செயலில் ஈடுபட்ட கும்பல் ஒன்று ஓட்டல் ஊழியர் ஒருவர் இறந்து விட்டதன் காரணமாக காவல் நிலையத்தைத் தாக்க முற்பட்ட போது அந்தக் கும்பலைக் கலைக்க காவலர் 1972ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1ஆம் நாள் கண்ணீர்ப்புகை பயன்படுத்தினர்.

(3) மின்சாரத் துறையைச் சேர்ந்த மின்சாரக் கம்பி யாட்கள், மின்சார கட்டணங்கள் செலுத்தப்படாததற்காக மின் இணைப்பைத் துண்டிக்கச் சென்ற போது, ஆண்களும், பெண்களும் கொண்ட வன்முறைக் கும்பல் ஒன்று அவர்களைத் தடுத்து நிறுத்திய போது, பேரூர் காவல் நிலைய கோயம்புத்தூர் (நகர்ப்புற) மாவட்டம் எல்லைக்குள் உள்ள சொக்கத் தோட்டம் என்னும் இடத்தில் அந்த கும்பலைக் கலைக்க 1972ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3ஆம் நாள் கண்ணீர்ப்புகைப் பயன்படுத்தப்பட்டது.

(4) 1972ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15ஆம் நாள் சென்னை சிம்சன் எஸ்டேட்டுக்குள் சட்ட விரோதமாகக் கூடிய கும்பலை கலைக்க காவலர் கண்ணீர்ப்புகையை இருமுறை பயன் படுத்தினர்.

(5) 1972ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5ஆம் நாள் ராமநாதபுரம் மாவட்டத்தில் ராஜபாளையம், சாத்தூர் ஆகிய இடங்களிலும், சேலம் மாவட்டத்தில் பெத்தநாயக்கன் பாளையத்திலும் நடைபெற்ற உழவர்கள் போராட்டம் சம்பந்தமாகக் கூடிய கட்டுமீறிய கும்பல் ஒன்றைக் கலைக்க காவலர் கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்தினர்.

(6) 1972ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 3ஆம் நாள், சென்னை, ஹாரிங்டன் சாலை-ரயில் கடவுப் பாதையிலும், பச்சையப்பன் கல்லூரி முதன்மை வாசலிலும் கூடிய கட்டு மீறிய கும்பல் மீது காவலர் கண்ணீர்ப்புகையைப் பயன் படுத்தினர்.

(7) 1972ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13ஆம் நாள் சென்னை மாதவரம் புரசைவாக்கத்தில் பொதுமக்கள் மீதும், காவலர் மீதும் கற்களை வீசத் தலைப்பட்ட மாணவர்கள் மீது காவலர் கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்தினர்.

(8) 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14ஆம் நாள் சென்னை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் கட்டுக்கடங்காத கும்பல்மீது கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டது.

(9) 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாளில், சென்னை மாநகரம், ஓட்டேரி எனும் இடத்தில் கற்களையும், சோடா புட்டிகளையும் வீசுவதில் ஈடுபட்ட கட்டுமீறிய கும்பல் மீது காவலர் கண்ணீர்ப்புகை பயன்படுத்தினர்.

(10) கட்டுமீறிய கும்பல்களைக் கலைப்பதற்காக 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22ஆம் நாளில் ராமநாதபுரத்தி லும் 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23ஆம் நாளில் தேவக்கோட்டையிலும் காவலர் கண்ணீர்ப்புகை பயன் படுத்தினர்.

(11) 1972ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21, 22 ஆகிய நாட்களில் பாளையங்கோட்டை, திருநெல்வேலி ஆகிய நகர்ப் பகுதிகளில் நடைபெற்ற மாணவர்கள் கிளர்ச்சியின்போது கலகக்கும்பல் மீது காவலர் கண்ணீர்ப்புகை பயன் படுத்தினர்.

(12) 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16ஆம் நாளில் சென்னை ஓட்டேரியில் வன்முறைக் கும்பல்கள் இரண்டின்மீது காவலர் கண்ணீர்ப்புகை பயன்படுத்தினர்.

(13) 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18ஆம் நாளில் தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலத்தில் சுமார் 4,000 பேர் கொண்ட கட்டுமீறிய கும்பல்மீது காவலர் கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்தினர்.

காவல்துறை வானொலிப் பிரிவு

தமிழ் நாடு காவல் துறை வானொலித் தொகுதியில் மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் சென்னையுடன் இணைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் மத்தியச் சரகம், தெற்குச் சரகம், மேற்குச் சரகம், வடக்குச் சரகம் எனப்படும் நான்கு செய்தித் தொடர்பு நிலையங்கள் உள்ளன.

மேலே சொல்லியவை தவிர சென்னை மாநகர காவற்படை வானொலித் தொடர் அமைப்பு, தமிழ் நாடு சிறப்பு காவற்படை வானொலித் தொடர் அமைப்பு ஆகியவை உள்ளன. சென்னை மாநகரம், கீழ் அணை, கல்லணை, தஞ்சாவூர், பவானிசாகர், தேக்கடி, மேட்டூர் மேல் அணை, ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வெள்ளக்கால நெருக்கடி அறிவிப்பு நிலையங்கள் உள்ளன. இவை பருவ மழையின் போதும் நீர்த்தேக்கம் முதலியவற்றிலிருந்து நீரை விடுவதைக் குறித்த செய்தித் தொடர்பிலும் பயன்படுத்தப்படுகின்றன. முக்கியமான எல்லாப் பண்டிகைகள், வேலை நிறுத்தங்கள், பெருமக்களின் வருகை மற்ற நெருக்கடிக் காலங்கள் எல்லாவற்றிலும் 43 உட்கோட்ட நிலையங்கள் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாண்டில் ஆவடி, செய்யாறு, நிலக்கோட்டை, விருதுநகர் உட்கோட்டங்களில் செய்தித் தொடர்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. தற்போது காவலர் செய்தித் தொடர்பு அறைகள் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், பரங்கிமலை (செங்கற்பட்டு கிழக்கு), சென்னை மாநகரம், திருநெல்வேலி, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

சென்னை, காஞ்சிபுரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள காவல் நிலைய காலநிலை எச்சரிக்கை அறிவிப்பு நிலையங்கள் நான்கும் மனநிறைவு அளிக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

நுண்ணலை ஆய்வுக் குழுவொன்று 1973 ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஆய்வுப் பணியைத் தொடங்கியது. சென்னை மாநகரிலிருந்து நாகர்கோயிலுக்கு நுண்ணலை வழித்தடத்தை அமைப்பதற்கான தொடக்க நிலை ஆய்வு வேலை நடத்தப்பட்டது. விரிவான ஆய்வு பின்னர் எடுத்துக்கொள்ளப்பட்டது. பெரிய மலைப் பிராந்தியங்கள் ஆய்வு செய்யப்பட்டன. நுண்ணலை நிலையங்கள் அமைக்கப்படுவதற்கான இடங்கள் தற்காலிகமாகத் தெரிந்தெடுக்கப்பட்டன. நுண்ணலை அமைப்புச் செயல்திட்டம் பற்றிய தொழில் நுட்ப புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டுள்ளது. செயல்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு புது டில்லியில் உள்ள காவலர் தொலைபேசி-செய்தித்தொடர்பக இயக்குநருக்கு ஒப்பந்தப் புள்ளிகள் வேண்டி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இச் செயல் திட்டத்துக்கான அனுமதி அணுவியல் ஆணைக் கழகம், தொழில் வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், கம்பியில்லாத் தந்தி-திட்டம்-ஒருங்கிணைப்பு இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

மீ-உயர் மின் அலை செய்தித் தொடர்பு கூட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கான பெரிய திட்டம் ஒன்று இப்போது எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. 1971–72-ஆம் ஆண்டில் நவீனமுறை திட்டங்களின்கீழ் அனுமதி வழங்கப்பட்ட 120 காவல் நிலையங்களில் மீ-உயர் மின் அலைக் கருவித் தொகுதிகளை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. 1972–73-லும் இதே திட்டத்தின்கீழ், மேலும் 270 காவல் நிலையங்களில் மீ-உயர் மின்னலைக் கருவிகள் நிறுவப்பட இருக்கின்றன. 1975–76-ஆம் ஆண்டுக்குள் காவல் நிலையங்கள் அனைத்தும் அந்தந்த மாவட்டத் தலைமை இடங்களோடு மீ-உயர் மின் அலை நிலையங்கள் மூலமாக இணைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குரல் தொலைபேசிச் செய்தி அச்சடிப்பு, உருவநேர்படித் தொடர்பு ஆகியவற்றிற்கு இடமளிக்கிற மீ-உயர் மின் அலைத் தொடர்பு அமைப்பு, அதிக உயரத்தில் அமைக்கப்பட்ட ஐந்து நிலையங்கள் மூலமாக மாவட்டத் தலைமையிட நகரங்கள் அனைத்தையும், செய்தித் தொடர்பு அறைகளைக் கொண்ட எட்டு நகரங்களில் உள்ள கம்பியில்லாத் தந்தி சாதனம் பொருத்தப்பட்ட வண்டிகளையும் மாநிலத் தலைமையிடத்துடன் இணைக்கிறது. மொத்தத்தில் 44 நிலையான மீ-உயர் மின் அலை அமைப்புகளும் 112 வலம் வரும் மீ-உயர் மின் அலை அமைப்புகளும் செயலில் உள்ளன.

காவல்துறை ஆணைக்குழு

தமிழ் நாட்டில் உள்ள காவலர் படையில் ஊழிய நிடந்தனைகள், கடமைகள், பொறுப்புகள் ஆகியவை பற்றியும் அதனை நவீனப்படுத்துவது முதலியவை குறித்தும் ஆராய்வதற்கு தமிழ் நாடு அரசு காவல்துறை ஆணைக்குழு ஒன்றை அமைத்தது. இந்த ஆணைக்குழு தனது பணியை முடித்து, 1971-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 2-ஆம் நாள் மாநில அரசுக்குத் தனது அறிக்கையை அனுப்பிவைத்தது.

தமிழ் நாடு காவல்துறை ஆணைக் குழுவின் அறிக்கை மொத்தம் 133 பரிவுரைகளைக் கொண்டது. இந்தப் பரிவுரைகள், துறைகளுக்கிடையிலான உயர் அதிகாரக் குழு ஒன்றால் பரிசீலிக்கப்பட்டன. ஆணைக் குழுவின் பரிவுரைகளும் உயர் அதிகாரக் குழுவின் அறிக்கையும் அரசால் கருதிப் பார்க்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 122 பரிவுரைகளை முழுவதுமாக அல்லது திருத்தங்களுடன் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. 15 பரிவுரைகள் குறித்த நடவடிக்கை முடிந்துள்ளது. 27 பரிவுரைகள் சம்பந்தமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,24,87,370 மொத்தச் செலவிலும், (தொடரா இனச் செலவாக) ரூ. 3,19,94,900 செலவிலும் நடவடிக்கை படிப்படியான முறையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இன்னும் நடவடிக்கை எடுக்கப்படாமலிருக்கிற ஏற்புடைத்த பரிவுரைகள் குறித்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,02,66,012, (தொடரா இனச் செலவாக) ரூ. 4,64,60,550 செலவாகும். இந்தப் பரிவுரைகளைப் படிப்படியான முறையில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிவுரைகள் ஐந்து முக்கியத் தொகுதிகளின்கீழ் வருகின்றன. அவற்றின் முக்கியக் கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தொகுதி 1—பணம் தொடர்பான ஊழிய நிபந்தனைகள்

பந்தோபஸ்து பணிக் காலங்களில் அரசிதழ் பதிவு பெறாத காவல்துறை அதிகாரிகள் அனைவர்க்கும் நிகராடை இலவசமாக கொடுக்கும் சலுகையையும் உணவுக் கட்டணங்கள் கொடுப்பதையும் நீட்டித்தல்; ஒவ்வொரு காவலருக்கும், தலைமைக் காவலருக்கும் திங்கள்தோறும் கொடுக்கப்படும் நிகராடைப் படியை ரூ. 5-லிருந்து ரூ. 7-ஆக உயர்த்துவது.

தொகுதி 2—காவலர் பணிகளை மாற்றி அமைத்தல்

முதல்நிலைக் காவலர்கள், காவல்துறை துணை இன்ஸ்பெக்டர்கள் என்னும் புதிய இரு பணித்தரங்கள் காவற்படையில் சேர்க்கப்பட்டுள்ளன. பதவி உயர்வு வாய்ப்புகளை மேம்படுத்தும் அதே நேரத்தில், நடைமுறை சார்ந்தவையும் பணிச் சுமை சம்பந்தப்பட்டவையுமான தேவைகளைச் சரிக்கட்டும் பொருட்டு பல்வேறு தரங்களில் காவலர் எண்ணிக்கையில் கீழ்க்காணும் மாறுதல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன;—

பணியின் பெயர்.	வகை.	காவற் படையின் சதவிதம் தற்போதுள்ளது.	கருதப்பட்டது.
1 தமிழ் நாடு காவல்துறைப் பணி.	கா. உ. டெ. கு. (A.D.S.P.) ..	0·02	0·02
	கா. டெ. கு. (D.S P.) ..	0·32	0·40
2 தமிழ் நாடு காவல் துறை சார்நிலைப் பணி.	இன்ஸ்பெக்டர்	1·16	1·58
தமிழ் நாடு சிறப்பு காவற் துறை சார்நிலைப் பணி.	கா. டெ. இ. (Deputy Inspector)..	..	0·86
	கா. ச. இ. (S.I.)	4·84	4·90
	கா. அ. ச. இ. (A.S.I.)	0·82	2·65
	தா. கா. (H.C.)	11·63	9·82
	கா. I (P.C. I)	..	13·20
	கா. II (P.C. II)	81·21	66·57
	மொத்தம் ..	100·00	100·00

தொகுதி III—காவற் படையில் சீரமைப்பு.

(அ) காவல் துறையினரில் பல்வேறு நிலைகளில் எண்ணிக்கைகளில் செய்யக் கருதப்பட்டிருக்கும் மாற்றங்கள் :—

	கா. க. டெ. கு. A.D.S.P	டெ. கு. D.S.P.	இன்ஸ். I.	டெ. இன்ஸ். Dy. I.	ச. இன்ஸ். S.I.	அ. ச. இன்ஸ். A. S. I.	ஹவில். Hav.	த. கா. H. C.	கா. 1. P.C.I.	கா 2. P.C.II.	மொத்தம்.
தற்போதுள்ளது (1—12—31ல் உள்ளவாறு).	6	152	577	..	2,080	348	414	4,896	3,100	31,686	43,259
கருதப்பட்டுள்ளது.	9	180	737	384	2,281	1,234	414	4,156	5,670	31,415	46,480
[illegible] கூடுதல்பணியாளர்.	3	28	160	384	201	886	..	(—)740	2,570	(—) 271	3,221

(b) மேற்கண்ட மாற்றங்கள் பின்வருவனவற்றிற்கு வகை செய்கின்றன :—

(i) ஒவ்வொரு காவல்துறை மாவட்டத்திலும் கூடுதலாகத் துணைக் கோட்டம் ஒன்று.

(ii) வட்டங்கள் கீழ்க்கண்ட அடிப்படையில் அமைகின்றன :—

கிராமப் பகுதிகள்—வட்டம் ஒன்றிற்கு நான்கு நிலையங்கள்.

III நிலை நகராட்சிகள் அவற்றை ஒட்டியுள்ள பகுதிகளில்—வட்டம் ஒன்றிற்கு மூன்று நிலையங்கள்.

II நிலை நகராட்சிகள் அவற்றை ஒட்டியுள்ள பகுதிகளில்—வட்டம் ஒன்றிற்கு இரண்டு நிலையங்கள்.

மாநகராட்சி I நிலை—வட்டம் ஒன்றிற்கு ஒரு நிலையம் நகராட்சிப் பகுதிகளில்.

(iii) துணை சிறைச்சாலை, துணைக் கருவூலம் ஆகியவற்றைக் காவல் காக்கின்ற 150 தலைமைக் காவலர்கள், 900 காவலர்கள் ஆகியோரைக் காவல் துறையிலிருந்து சிறைச்சாலைத் துறைக்கு மாற்றுதல்.

(iv) மாவட்ட, மாநகர படைக்கலம் தாங்கிய சேமக் காவற் படையை இரண்டு கட்டங்களில் 16 அணிகளாக அதிகரித்தல்.

(v) சென்னை மாநகரத்தில் 24-க்கும், மாவட்டங்களில் 98-க்குமாகப் போக்குவரத்துக் காவல் நிலையங்களைத் தொடங்குதல்.

(vi) சென்னை மாநகர், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய நகரங்களில் போக்குவரத்துப் புலனாய்வு அணிகளை விரிவு படுத்தலும் ஏற்படுத்தலும்.

(vii) பலவகையாகப் பரந்துள்ள குற்றங்களைப் புலனாய்வு செய்வதற்கு மாநில மாவட்டக் குற்றப் பிரிவுகளையும், மாவட்டப் பலனைய்வுக் கழகத்தையும் விரிவு படுத்கல். குற்றம் செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ள உள்ளூர்க் குற்றவாளிகளைக் கவனிக்க வட்டம் ஒவ்வொன்றிற்கும் டெபுடி இன்ஸ்பெக்டர் ஒருவரை நியமித்தல்.

(viii) மாநிலச் சிறப்புப் படைப் பிரிவை விரிவுபடுத்தல்.

(ix) போலீஸ் அகாடமி ஒன்றை ஏற்படுத்தல்.

(c) நிர்வாகப் பிரிவினை வலுப்படுத்தியதனாலும், காவல் துறையைக் காலத்திற்கு ஏற்றவாறு தொழில் நுட்ப முறையில் சீரமைக்கும் திட்டத்தினாலும், தொழில் நுட்ப நிர்வாகப் பணியாளர்களுக்காக ஒப்பளிப்பு வழங்குவதற்கான செயற் குறிப்புகள் வகுக்கப்பட்டுள்ளன.

தொகுதி IV—தொழில் நுட்ப முறையில் சீரமைத்தல்

(a) காவல் துறையில் போக்குவரத்து வண்டிகளை 823 ஊர்திகளிலிருந்து (1970-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாளில் உள்ளவாறு) எல்லா வகைகளிலும் 3,160 ஆகப் பெருக்குவது பரிவுரைகளின் முக்கிய நோக்கமாகும். அனைத்து துணைக் கோட்டம்/வட்டத் தலைமையிடங்கள் ஆகியவற்றிற்கு ஒவ்வொன்றிற்கும் பிக்அப் வண்டி/ஜீப் வண்டிக்கும் காவல் நிலையம் ஒவ்வொன்றிற்கும் ஒரு மோட்டார் சைக்கிளுக்கும் வகை செய்கிறது. இதில் போக்குவரத்துப் பணியாளர்கள், ஏனைய சிறப்புப் பிரிவினர் ஆகியோரின் தேவைகள் அடங்கும்.

(b) காவல் துறைக்காகப் போக்குவரத்துப் பட்டறை பயிற்சிப் பள்ளி ஒன்று தனியாக ஆவடியில் அமைப்பது.

(c) காவல் நிலையங்கள், காவல் துறை ரோந்து வண்டிகள் யாவற்றிலும் மீ-உயர் அலை ஒலிபரப்புத் தொகுதிச் சாதனம் அமையும் வண்ணம் காவல் துறை வானொலி செய்தித் தொடர்பு விரிவாக்கப்படும். மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தையும் இணைக்கின்றவாறு தொலைவரித் தட்டச்சு, உருவ நேர்படி அமைப்பு ஒன்றை ஏற்படுத்தல்.

(d) மாநிலத் தலைமையிடத்திற்குக் கணக்கு கணிப்புப் பொறி வசதியும், மாவட்ட தலைமையிட நகரங்கள் ஒவ்வொன்றிற்கும் கைவிரல் ரேகைப் பிரிவு, இயலூர்தி சட்டஞ்சார்ந்த ஆய்வுக்கூடப் பிரிவு, புகைப்படப் பிரிவு ஆகியவையும் ஏற்படுத்தல்.

தொகுதி V—பல்வகைப் பரிவுரைகள்

இத் தொகுதியில் கீழ்வரும் முக்கியமான பரிவுரைகள் பின்வருமாறு:—

(a) அரசு உதவிக் குற்றவியல் வழக்கறிஞர் நிலை I II ஆகிய பதவிகளை அதிகப்படுத்தல்.

(b) கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள், பெஞ்சு நீதி மன்றங்கள் முறையை வெளியூர் பகுதிகளுக்கும் நீட்டித்தல்.

(c) சுருக்கமாக விசாரித்துத் தீர்ப்பு வழங்கத்தக்க வழக்குகளின் பட்டியலைப் பெருக்குதல்.

(d) அழைப்பாணைகளின் பேரில் தண்டத்தொகை வசூலிக்கும் முறையைப் பெரும்பான்மையான வழக்குகளுக்கு நீட்டித்தல்.

(e) ஆட்கள் மூலம் அழைப்பாணைகள் அனுப்புவதற்கு பதிலாக, அஞ்சல் வழியில் அனுப்புதல்.

நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்

பெருகிவரும் பணியினைச் செய்து முடிப்பதற்கு மாவட்டக் காவல் துறை அலுவலகங்களுக்குக் கூடுதல் பணியாளர் நியமிக்க ஒப்பளிப்பு வழங்கும்படி வேண்டி தமிழ்நாடு காவல் துறை, அலுவலகப் பணியாளர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. அதனுடைய வேண்டுகோள் ஒரு பகுதி நிறைவேற்றப் பட்டது. அதன்படி உதவியாளர்கள் 18 பேர், இளநிலை உதவியாளர்கள் 12 பேர், தட்டச்சர்கள் 8 பேர் என்கிற அளவில் கூடுதல் பணியாளர்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டது. மேலும், 8 முதன்மை மாவட்டக் காவல் துறை அலுவலகங்களில் உள்ள உதவியாளர்கள் 8 பேர், அவ்வலுவலகங்களில் மேற்பார்வைப் பணியை மேம்படுத்தும் பொருட்டு கண்காணிப்பாளர்களாகப் பதவி உயர்த்தப் பட்டுள்ளார்கள். மேலும், 1973–74-ல் கூடுதலாக கண்காணிப்பாளர்கள் 5 பேர், உதவியாளர்கள் 10, இளநிலை உதவியாளர்கள் 18, தட்டச்சர்கள் 3, சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஒருவர் ஆகிய பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதனுல், நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு காவலர் நல நிதி

காவல் துறையில் பணி புரியும் அரசிதழ் பதிவு பெருத பணியாளர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு காவலர் நல நிதி, நிதியுதவி, படிப்புதவி, நல உதவி, பொழுதுபோக்கு வசதி ஆகியவற்றை அளிக்கிறது. காவல் துறையில் பணி புரியும் அரசிதழ் பதிவு பெருத அதிகாரிகள் மனமுவந்து கொடுக்கும் தொகைகள் மூலமும், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து பெறும் நன்கொடை மூலமும் இந்நிதிக்குத் தொகை சேர்க்கப்படுகிறது. ஒவ்வொரு நிதியாண்டும் அரசு ரூ. 1½ லட்சம் மொத்த மானியம் வழங்குகிறது.

மேற்கூறிய நிதியைத் தவிர, தமிழ்நாட்டுக் காவல் துறை நூற்றாண்டு விழா படிப்பு உதவித் தொகை நிதி ஒன்றும் உள்ளது. அந்நிதியிலிருந்து, காவல்துறை அரசிதழ் பதிவு பெருத நிர்வாக அதிகாரிகளின் தகுதியுள்ள மகன்கள், மகள்களுக்குக் கல்லூரிகளில் உயர் படிப்புக்கும், தொழில் நுட்பப் படிப்புக்கும் படிப்புதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப் படுகிறது. தனி நபர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள் மூலம் இந்நிதி நிர்வகிக்கப்படுகிறது. 1972–73-ம் ஆண்டில் படிப்புதவித் தொகை வழங்கப்படுவதற்காக இந்நிதியிலிருந்து ரூ. 20,000 செலவிடப்பட்டது.

தமிழ்நாடு காவலர் குடும்ப நல அமைப்பு

1956-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு காவலர் குடும்ப நல அமைப்பு நன்முறையில் பணியாற்றி வந்துள்ளது. இந்த அமைப்பின்கீழ் பின்னுதல் வேலை, தையல் வேலை, பாய் முடைதல், தறி நெசவு, தீக்குச்சி பட்டாசு மேலுறைகள் செய்தல், பீடி சுற்றுதல், காகித உறை செய்தல், புத்தகம் கட்டுதல், பாற்பண்ணை அமைத்தல், கோழிப் பண்ணை அமைத்தல், கைவினைகள் போன்ற பல்வேறு தொழில்கள், காவலர் குடும்பங்களின் வருமானத்தைத் தொடர்ந்து உயர்த்தி வருகிறது.

ஊர்க்காவல் படை

இந்தத் தொண்டர் படை அமைப்பு 1963-ம் ஆண்டில் ஏற்பட்டது. இப்படை, தமிழ்நாடு முழுவதிலும் பாதுகாப்புப் பணிகள், இரவு காவல் பணிகள், போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பணிகள் முதலியவற்றில் காவலர்களுக்குத் தொடர்ந்து உதவி புரிந்து வருகிறது. ஊர்க்காவல் படையில் தற்போது 113 அணிகள் உள்ளன. அவற்றுள் 38 அணிகள் சென்னை மாநகரிலும், 75 அணிகள் மாவட்டங்களிலும் செயல் புரிந்து வருகின்றன. இதில் மகளிர் ஊர்க்காவல் படை அணிகள் 6 அடங்கும். இவற்றுள் 4 அணிகள் சென்னை மாநகரிலும், 2 அணிகள் மாவட்டங்களிலும் உள்ளன. ஊர்க்காவல் படை, தொண்டுப் பணி அமைப்பாகவும் காவல் படைக்கு உதவியாகவும் இருந்து மிகப் பயனுள்ள பணியை செய்து வருகிறது. நடப்பாண்டில், சட்டம்-ஒழுங்கு பேணி வருதல், போக்குவரத்தை

முறைப்படுத்தல் போன்ற பணிகளில் காவல் படையினருக்குக் கூடுதலாக ஊர்க்காவல் படையினரது பணிகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. அவர்களுக்கு, குறிப்பாக முதலுதவி, தீ அணைப்புப் பணி, சிவில் பாதுகாப்பு ஆகிய பணிகளில் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டது. பல்வேறு மாவட்டங் களிலுள்ள ஊர்க்காவல் படையைச் சேர்ந்த 400 பேருக்கு இலேசான மோட்டார் வண்டிகளை ஓட்டுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

காவற்படையினருக்கு குடியிருப்பு வசதி

காவலர் குடியிருப்பு வசதித் திட்டம் 1955–56-ம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. காவல் துறை சார்நிலைப் பணியாளர்களில் 80 சத வீதத்தினருக்கு குடியிருப்பு வசதி கள் செய்து தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதுவரை 63 சத வீதத்தினருக்குக் குடியிருப்புகள் கட்டப் பட்டுள்ளன. எனவே, இத்திட்டம் தொடர்ந்து செயற் படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரை மாவட்டங்களில் 126 இன்ஸ்பெக்டர்கள், 6 ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள், 438 சப்-இன்ஸ்பெக்டர்கள், 51 ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள், 1 உதவி சப்-இன்ஸ்பெக் டர், 43 ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், 935 தலைமைக் காவலர்கள், 5,764 காவலர்கள் ஆகியோருக்கும், ஆவடியில் தரம் III டெபுடி சூப்பிரண்டுகள் இருவர், ஒரு இன்ஸ்பெக்டர் (உதவி) (Adjutant) 8 இன்ஸ்பெக்டர்கள், 20 சப்-இன்ஸ்பெக் டர்கள், 608 பணிப் பட்டயம் பெறுத அதிகாரிகள், தமிழ்நாடு சிறப்புக் காவல் பிரிவு 2-ல் உள்ள ஏனைய பதவித் தரத்தில் உள்ளவர்கள் ஆகியோருக்கும், திருச்சிராப்பள்ளியில் 1 இன்ஸ் பெக்டர் (உதவி) (Adjutant), 1 சப்-இன்ஸ்பெக்டர், 81 பணிப் பட்டயம் பெறுத அதிகாரிகள். தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பிரிவு முதல் அணியில் உள்ள ஏனைய பதவித் தரத்தில் உள்ளவர்கள் ஆகியோருக்கும் குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பட்டு, அவர்கள் குடியேறி உள்ளனர். 815 குடியிருப்புகள் கட்டப்படும் பணி பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகிறது. எஞ்சியுள்ள 152 குடியிருப்புகள் கட்டப்படும் பணி மேற் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

1972–73-ம் ஆண்டில் காவலர் குடியிருப்பு வசதி திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ரூ. 84·85 லட்சம் நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

காவலர் பதக்கங்கள்

1972-ம் ஆண்டில் காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் காவலர்கள் 25 பேருக்கு குடியரசுத் தலைவர் காவல்-தீயணைப்புப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. 1972-ம் ஆண்டில் 25 பேருக்கு தமிழ் நாடு முதலமைச்சர் காவல் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

விளையாட்டுப் போட்டிகள்

தமிழ்நாடு காவலர் அணி 23—10—72 முதல் 28–10–72 வரையில் சென்னையில் நடைபெற்ற தென் மண்டல விளை யாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டது. தமிழ்நாடு காவல் படை "வாலி பால்", "ஹாக்கி" விளையாட்டுகளில் வெற்றி பெற்றுள்ளது.

2–10–1972 முதல் 17–12–1972 வரையில் திருவனந்த புரத்தில் நடந்த அனைத்திந்தியர் காவலர் பணிப் போட்டியில் தமிழ்நாடு காவலர் அணி கலந்துகொண்டு, நான்காவது ஆண்டும் "புலனாய்வில் நவீன சாதனங்களைப் பயன்படுத்து தலில்" முதலாவதாக வெற்றி பெற்றது. இந்த அணி கீழ்க் கண்ட நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றுக்கும் எதிராக குறிப் பிட்டுள்ள பதக்கங்களையும் பெற்றது :—

(அ)	துப்பாக்கி, சுழல் துப்பாக்கி சுடுதல்.	மூன்று தங்கப் பதக்கங் களும் ஒரு வெள்ளிப் பதக் கமும்.
(ஆ)	முதலுதவி, வாய் மொழித் தேர்வு.	தங்கப் பதக்கம் ஒன்றும், வெள்ளிப் பதக்கம் ஒன் றும்.
(இ)	கம்பியில்லாத் தந்திச் செய்தி அனுப்புதல்.	முதல் முறையாக வெள்ளிப் பதக்கம் ஒன்று.

தீயணைப்புப் படை

தீயணைப்புப் படை, 1967 அக்டோபரிலிருந்து தீயணைப்பு துறை இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ் ஒரு தனித் துறையாக செயல்பட்டு வருகிறது. அரசு ஏற்பளித்த முன்னுரிமைப் பட்டியலுக்கிணங்க இம்மாநிலத்தில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் 61

தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில், ஸ்ரீரங்கம், பரமக்குடி, ராயபுரம் ஆகிய இடங்களில் மூன்று தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. உத்தமபாளையம், கோவில்பட்டி, மேட்டூர் ஆகிய மூன்று நகரங்களில் தீயணைப்பு நிலையங்களை அமைப்பதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

1972 டிசம்பர் திங்கள் இறுதிவரை, தீயணைப்பு நிலையங்கள் 4,640 அழைப்புகளைப் பெற்று செயல்பட்டன. இவற்றில் 49 தீ விபத்துகள், உயிர் இழப்பு அல்லது ரூ. 50,000-க்கு மேற்பட்ட சொத்துக்களுக்குச் சேதம் சம்பந்தப்பட்ட, கடுந்தீ விபத்துக்களாகும். தீயினால் அழிக்கப்பட்ட உடைமைகளின் மதிப்பு ரூ. 123.1 லட்சமாகும். அழிவினின்று மீட்கப்பட்ட உடைமையின் மதிப்பு ரு. 852.7 லட்சமாகும்.

தீயணைப்புப் படை 1972 டிசம்பர் இறுதி வரையில் 14,020 ஆம்புலன்ஸ் வண்டிக்கான அழைப்புகளைப் பெற்றது.

1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6-ம் நாளில் ஏற்பட்ட புயல் காரணமாக வரலாறு காணாத அளவு வெள்ளம் ஏற்பட்டதால் பாதிக்கப்பட்ட தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8-ம் நாள் முதல் 12-ம் நாள் வரையில் மிகக் கடுமையான சூழ்நிலைகளில் தீயணைப்புப் படையினர் அயராது உழைத்து, வெள்ளத்தால் சூழப்பட்ட கிராமங்களிலிருந்து 3,065 பேர்களையும், 105 விலங்குகளையும் காப்பாற்றினர். 1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8-ம் நாளில் சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணத்தில் வெள்ளத்திலிருந்து 23 பேர்களை தீயணைப்புப் படையினர் காப்பாற்றினர். 1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9-ம் நாளன்றும், சேலம் மாவட்டத்தில், விக்டோரியா தியேட்டர், ராயல் டாக்கீஸ், குகை பாலம் ஆகியவற்றுக்கு பின்புறத்தில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளிலிருந்தும், மணிமுத்தாற்றின் தெற்குக் கரையில் அமைந்துள்ள பல பகுதிகளிலிருந்தும் வெள்ளத்திலிருந்து 64 பேர்களைக் காப்பாற்றினர். அது போன்று, 1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9-ம் நாளில் பவானி வட்டத்தில் எலவமலை கிராமத்தில் வெள்ளத்திலிருந்து 200 பேர்களை தீயணைப்புப் படையினர் காப்பாற்றினர்.

இந்த ஆண்டில், சிறப்பாகப் பணியாற்றிய தலைமைத் தீயணைப்புப் பணியாளர் ஒருவருக்கு அவரது வீரச் செயலுக்காக குடியரசுத் தலைவர் காவல்-தீயணைப்புப் பதக்கமும், தீயணைப்புப் பணியாளர் மூவருக்கு அவர்களது வீரச் செய

லுக்காக காவலர் பதக்கமும் வழங்கப்பட்டன. தீயணைப்புக் கோட்ட அதிகாரி ஒருவருக்கும், தீயணைப்பு நிலைய அதிகாரி ஒருவருக்கும், அவர்களது தன்னிகரற்ற பணிக்காக தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கம் வழங்கப்பட்டது.

காவற்படையின் கடப்பாடு ஒழுங்கு

காவல் துறையினரின் உயரிய ஒழுக்க முறையும், கட்டுப்பாடும் முன் போலவே போற்றத்தக்க வகையில் உள்ளன. ஆண்டு முழுவதும் காவலர்களுக்குப் பணிச் சுமை அதிகமிருப்பினும், சட்டம் அமைதியை நிலை நாட்டும் பல்வேறு பிரச்சினைகளில் தமிழ் நாட்டுக் காவல் துறையினர் தங்கள் கடமைகளை சாதுர்யமாகவும் திறம்படவும் செய்தனர். காவல் துறையில் எல்லாப் பதவியினரும் ஆர்வத்துடனும், பற்றுடனும் தொடர்ந்து பணி புரிந்து வந்தனர்.

முடிவுரை

இவ் விவாதத்தில் கலந்துகொள்ளும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் காவலர்களுக்கும், பொதுமக்களுக்குமிடையே நல்லுறவுகளை மேலும் நன்முறையில் வளர்ப்பதற்கும், காவலர்கள் தங்கள் கடமைகளை மேலும் செம்மையாக நிறைவேற்றுவதற்கும் வழிவகைகளைக் கோடிட்டுக் காட்டும் வகையில் தேவையான கருத்துரைகளை நல்குவாராயின் அவற்றை அரசு மகிழ்ச்சியுடன் வரவேற்கும்.

[1973 மார்ச் 23

1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாளன்றுள்ளவாறு காவற்படையில் உள்ளவர்களின் எண்ணிக்கை.

I. அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் :

(1)	காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல்.	1
(2)	சென்னை காவல் துறைக் கமிஷனர் உட்பட காவல் துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல்.	10
(3)	காவல்துறை சூப்பிரண்டுகள்/தளவாய்கள்.	54
(4)	காவல் துறை கூடுதல் சூப்பிரண்டுகள்.	4
(5)	காவல்துறை டெபுடி சூப்பிரண்டுகள்/காவல்துறை உதவி சூப்பிரண்டுகள்.	148
(6)	காவல் துறை டெபுடி சூப்பிரண்டுகள் தரம் III/தமிழ் நாடு சிறப்புக் காவல் படையின் துணைத் தளவாய்கள்.	27

II. அரசிதழ் பதிவு பெருதவர்கள் :

(1)	இன்ஸ்பெக்டர்கள், ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள் (தமிழ் நாடு சிறப்புக் காவல் படையிலுள்ளவர்கள் உட்பட).	616
(2)	ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் (தமிழ் நாடு சிறப்புக் காவல் படை உட்பட).	2,063
(3)	ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் (தமிழ் நாடு சிறப்புக் காவற்படைப் பிரிவுகள் உட்பட).	357
(4)	தமிழ் நாடு சிறப்புக் காவற்படையிலுள்ள அவில்தார்கள்.	420
(5)	தமிழ் நாடு சிறப்புக் காவற்படையின் தலைமைக் காவலர்கள், நாயக்குகள்.	4,922
(6)	காவலர்கள், லான்ஸ்-நாயக்குகள் (தமிழ் நாடு சிறப்புக் காவற்படைப் பிரிவுகள் உட்பட).	34,618
(7)	படையினர் (Followers) ..	124
	மொத்தம் ..	43,364

தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1973 மார்ச் 24

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதல் இரண்டு கேள்விகளும் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

Central Kitchens in Tirunelveli District

*493 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the total number of Central Kitchens functioning in Tirunelveli district at present ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திருநெல்வேலி மாவட்டத்தில் மத்திய சமையற்கூடம் அமைக்கப்படவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த மைய சமையற்கூடம் சென்னை மாநகரத்தில் பல பகுதிகளில் இருக்கின்றன. இதுமாதிரி மாவட்டந்தோறும் இல்லாவிட்டாலும் திருநெல்வேலி மாவட்டத்தில் இதைத் துவங்க ஆக துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மைய சமையற்கூடம் "கேர்" நிறுவனத்தின் ஆதரவோடு நிறுவப்படுகிறது. கேர் நிறுவனத்தார் ஒரு மைய சமையற்கூடம் அமைக்க இரண்டு இலட்ச ரூபாய் நிதிஉதவி அளிக்கிறார்கள். அவர்கள் செங்கற்பட்டு, தென்னார்க்காடு என்று மாவட்ட வரிசையாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரினார்கள். நான், எல்லா மாவட்டங்களிலும் சில இடங்களை பகிர்ந்து எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னபோது, தங்களுடைய மெஷினரியை எல்லா இடங்களுக்கும் நகர்த்த முடியாது என்றும் படிப்படியாகப் போகவேண்டும் என்றும் சொன்னதன் காரணமாக, 1969–70-ம் ஆண்டில் 30 மைய சமையற்கூடங்களும், 1970–71-ம் ஆண்டில் 30 மைய சமையற்கூடங்களும் 1971–72-ம் ஆண்டில் 30 மைய சமையற்கூடங்களும் அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. கட்டி முடிக்கப்பட்டவை தென்னார்க்காட்டில் 27, வடார்க்காட்டில் 3, தென்னார்க்காட்டில் 1, இப்பொழுது கட்டப்படுபவை வடார்க்காட்டில் 20,

தென்னார்க்காட்டில் 10, ஆக, மற்றவை இனிமேல் கட்டப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. மாவட்டங்கள் வரிசையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறுவதன் காரணமாக அவர்களை மேலும் வற்புறுத்த இயலவில்லை. ஆகவே, படிப்படியாக வரும்போது 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுப்படுத்த வேண்டும் என்பது நோக்கம்

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய முறையைப் பார்க்கும்போது, இந்தத் திட்டம் தென் மாவட்டங்களை வந்து சேர்வதற்கு பல ஆண்டுகள் ஆகும் என்று தோன்றுகிறது. ஆகவே, ஒரு வேளை மாவட்டவாரியாக அதை அமைப்பதற்கு கேர் நிறுவனம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலுங்கூட, சென்னையைப்போல் பெரிய மாநகரமாக இருக்கும் மதுரையை அடுத்த இடங்களில் நிறுவுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலிலேயே குறிப்பிட்டேன், கேர் நிறுவனத்தோடு மைய சமையற்கூடம் அமைக்கப்படுகிறது என்று. கேர் நிறுவனத்தார் எப்படி விரும்புகிறார்களோ அந்த விருப்பப்படிதான் நிறைவேற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. முதலில் யோசனை சொல்லிப் பார்த்தேன். ஆனால் வரிசையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று படிப்படியாக எடுத்துக்கொள்ளுகிற முயற்சியில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டமாக எடுத்துக் கொள்ளப்படுவதாகச் சொன்னார்கள். செங்கற்பட்டைப் பொறுத்த வரையில் மொத்தம் எடுத்துக்கொள்வது 27 என்று அறிவித்தார்கள். வடார்க்காடு மாவட்டத்தில் 36 ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றில் 3 ஒன்றியங்களில் ஏற்கெனவே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது 20 எடுத்துக்கொள்ளப்போவதாகச் சொல்கிறார்கள். ஆக, 23 தான் ஆகிறது. இன்னும் 13 எடுத்துக்கொண்டதற்குப் பிறகு அடுத்த மாவட்டத்திற்குப் போக நம்முடைய அரசு ஆலோசிக்குமா? உடனடியாக வடார்க்காடு மாவட்டத்தை முடித்து விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் எல்லையை ஒட்டி தென்னார்க்காடு மாவட்ட எல்லையும் வருகிறது ; வடார்க்காடு மாவட்ட எல்லையும் வருகிறது. ஆக நகரும்போது வடார்க்காடு மாவட்ட எல்லையில்தான் நகர வேண்டும் என்று அவசியம் இல்லை. இரண்டு மாவட்டங்களிலும் சேர்த்து நகரலாம். அந்த வகையில் வடார்க்காடு மாவட்டத்தில் 20 ஒன்றியங்களும் தென்னார்க்காடு மாவட்டத்தில் 10 ஒன்றியங்களும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ப. முத்துசாமி : இப்படிப்பட்ட அமைப்புக்கள் இல்லாத காரணத்தால் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் தாழ்வாரத்தில் வைத்து சமையல் நடத்துகிறார்கள். அதனால் பல பள்ளிகளில் இடைஞ்சல் ஏற்படுகிறது

ஆகவே, சமையலுக்கென்று தனியாக கட்டிடம் கட்ட யூனியனில் நிதி இருந்தால் இரண்டாயிரம் ரூபாய் வரையில் எடுத்துச் செலவிடலாம் என்று அரசு அனுமதி அளிக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கான ஏற்பாடுகளும் ஆங்காங்கு இருக்கின்றன. ஊராட்சி மன்றமும், ஊராட்சி ஒன்றியமும், ஊர்ப்பொது மக்களும் நல்ல ஒத்துழைப்போடு இந்த பணியினை ஆற்ற முன்வரலாம். இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு இடங்கொடுத்து உதவ ஊர்ப்பொதுமக்களும் முன்வர வேண்டும். படிப்படியாக கேர் நிறுவனத்தார் மைய சமையற்கூடம் அமைக்க முன்வரும்போது நிறைவுபெறும். அதுவரையில் இருக்கும் வாய்ப்பு வசதிகளை வைத்துத் தான் நாம் சமாளிக்க வேண்டும்.

திரு கா. காளிமுத்து : நடைபெற்று வருகிற சமையற்கூடம் அமைக்கும் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுகிறதா? அவ்வாறு செயல்பட்டால் தமிழகம் முழுவதும் இந்தத் திட்டத்தை குறிப்பிட்ட காலவரைக்குள் செயல்படுத்த அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கும் முறை பன்மடங்கு நன்மை பயக்கக் கூடியதாக இருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு மைய சமையற்கூடம் அமைத்து அங்கே, சமையல் செய்து, இரண்டு வான்கள் மூலம் குறிப்பிட்ட நேரத்தில் இந்தச் சாப்பாடு கொண்டுபோய்ச் சேர்க்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல், தூய்மையாக ஆக்குவதற்கும் பயன்படுகிறது. மேற்கொண்டு, இடையே திருட்டுப் போகாமல் பாதுகாப்பதற்கும் இந்த முறை மிக மிகப் பயன் படுகிறது. அதுமாத்திரமல்ல, கேர் நிறுவனத்தார் தருகிற சத்து உணவுப் பொருள்களையெல்லாம் கூட, முறைப்படி பயன்படுத்தவும் இது பயனுள்ளதாக இருக்கிறது. மேலும், நல்ல பாத்திரங்களும் வழங்கியிருக்கிறார்கள். நவீன சமையற்பாத்திரங்களும் மற்றவைகளும் எந்தக் கேடும் ஏற்படாத வகையில் அமைந்திருக்கிறது. பத்து, பதினொன்று மணிக்குச் சமையல் முடியுமானால் ஒரு மணி, ஒன்றரை மணி மணிக்குள் எல்லா இடங்களுக்கும் கொண்டுபோய்ச் சேர்க்க வாய்ப்பு வசதி ஏற்படுகிறது. அந்த வகையில் இந்தத் திட்டம் நிறைவேற்றத் தக்க அளவுக்கு நல்ல பயனையும் அளித்துக்கொண்டு வருகிறது.

அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவு பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் கேர் நிறுவனம் போன்றவர்களிடமிருந்து உதவி பெறக்கூடாது என்ற முடிவை மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், கேர் நிறுவனம் உதவி செய்ய ஆயத்தமாக இருக்கிறது. இது வாலண்டரி ஆர்கனைசேஷன் என்ற காரணத்தால் அதனிடமிருந்து உதவி பெறுவதில் எந்தக் கஷ்டமும் இருக்காது என்ற யோசனையை நாம் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறோம். இது பற்றித் திட்டவட்டமான முடிவு எடுக்கப்படவில்லை. அவர்கள் உதவி அளிக்கும் உணவை இப்பொழுது பயன்படுத்திக் கொண்டு வருகிறோம்.

Thiru K. S. KOTHANDARAMIAH : The Hon. Minister for Education and Local Administration stated that the central kitchen system will be introduced in serial order, since it is introduced to North Arcot from Chingleput, the only next reasonable adjoining district is Dharmapuri. If they go to other districts, it will be left over and it will take some years to introduce there. May I know from the Hon. Minister whether he will recommend Dharmapuri as a special case?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வட ஆற்காடு மாவட்ட எல்லையையொட்டியிருப்பதால் தருமபுரி மாவட்டமும் சேலம் மாவட்டமும் எடுத்துக் கொள்ளப்படும். அந்த முறையில் தர்மபுரி மாவட்டம் இடம் பெறலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்வி திருநெல்வேலி மாவட்டத்தையொட்டியதாக இருந்தும் அது குறித்து ஒரு துணைக் கேள்வி கேட்கப்படவில்லை. அப்படியிருந்தும் கிட்டத்தட்ட பத்து நிமிடங்கள் இந்த கேள்விக்கே எடுத்துக்கொள்ளப்பட்டது.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, மாநிலம் பூராவிலும் உள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் மதிய உணவு அளிக்கும் திட்டத்திற்கு உதவிகரமாக மைய சமையற்கூடங்கள் அமைக்கும் திட்டம் நிறைவுற இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும் ? இதற்கு மத்திய சர்க்காரிலிருந்து ஏதாவது உதவி பெற இயலுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொரு துணைக் கேள்வியாகக் கேட்கலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திட்டவட்டமாக இவ்வளவு காலம் என்று சொல்வதற்கில்லை. ஆனால், இப்பொழுது 91 மைய சமையற்கூடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுக்காண்டு அவர்கள் அனுமதி அளித்து ஒதுக்குகிற பணத்தைப் பொறுத்திருக்கிறது அதை விரிவுபடுத்துவது. மத்திய அரசிலிருந்து எந்த உதவியும் இந்த திட்டத்திற்காக வரவில்லை. மாநில அரசிலிருந்து கிட்டத்தட்ட ரூ. 2¼ கோடி இந்த மதிய உணவிற்காகச் செலவிடுகிறோம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் 27 மைய சமையற்கூடங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், எல்லாப் பள்ளிகளுக்கும் அந்த உணவு போய் சேருவதில்லை என்கின்ற குறைபாடு இருக்கிறது. அதைப் போக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திலும் இந்த வேன்கள் போவதற்கு எந்த அளவுக்கு சாலை வசதிகள் இருக்கின்றதோ அந்த அளவுக்கு வான்கள் போகும்.

கிராமத்திற்கு இடையிலே, பெரும் ஆறுகள், வாய்க்கால்களோ இருந்து, கிராமத்திற்குச் செல்ல முடியாத நிலையிருந்தால், அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சைக்கிள் கொண்டு வந்து குறிப்பிட்ட இடத்திலிருந்து இந்தச் சோற்றுப் பாத்திரங்களையெல்லாம் வாங்கிப் போகிற ஏற்பாடு இருக்கிறது. எந்தப் பள்ளிக்கூடமும் இந்தப் பலனைப் பெறாமல் இல்லை.

திரு. எம். தேவராசன் : இந்தத் திட்டம் சமவெளிப் பகுதிகளை முடித்துக்கொண்டு, மலை ஏறி, நீலகிரி மலைக்கு வர எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது ஜோசியம் சொல்வதற்கில்லை. தானமாகக் கிடைக்கிற மாட்டைப் பல்லைப் பிடித்து பார்க்கக் கூடாது என்பது பழமொழி. கேர் நிறுவனத்தின் உதவியைப் பொறுத்து நடைபெறுகிறது. கேர் நிறுவனத்தின் உதவி 30 சமையற்கூடங்கள் என்பதற்குப் பதிலாக 60 சமையற்கூடங்கள், 100 சமையற்கூடங்கள் என்ற அளவுக்கு கிடைக்குமானால், அவர்கள் எடுத்துக்கொள்கிற சூழ்நிலை உருவானால், விரைவாகக் கூட இந்தத் திட்டம் வரும்.

Pensionary benefits for employees of Local Bodies

* 494 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is any proposal to introduce pension and gratuity scheme to the employees of the Panchayats and Panchayat Unions; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், ஊராட்சி நகரியங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த பணியாளர்கள் அனைவருக்கும் ஓய்வூதியப் பயன்களை அளிப்பதற்கான திட்டத்தை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. இத்திட்டம் பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்த பஞ்சாயத்து ஊழியர்களுக்கு சம்பள விகிதங்களை கூட்டியதன் காரணமாக, பஞ்சாயத்து நிதி நிலை இடம் கொடுக்காத காரணத்தால், மிகவும் சிரமப்படுகிறதே, இந்நிலையில் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்க வேண்டுமென்ற விதிமுறையை அரசாங்கம் ஏற்படுத்துமானால், எந்த ஒரு நகராட்சி மன்றமும் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து செலுத்த முடியாது. ஆகவே, ஓய்வூதியத்தை அரசே பொறுப்பேற்றுக் கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவர் அவர்களே, இந்த நிலைமை பற்றியெல்லாம் ஆராய்ந்துதான் கொள்கை அளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த ஊராட்சி மன்றங்கள் 8¼ சதவிகிதம் அவர்கள் பங்காகத் தரவேண்டும். ஒவ்வொரு பணியாளரும் 6¼ சத விகிதம் தரவேண்டுமென்ற அளவிலே, இதன் மூலம் 12 ஆயிரத்து சில்லறை ஊராட்சி ஒன்றியங்களுக்கு மேலும் ரூ. 11 லட்சம் செலவாகும் என்ற முறையில் மேற்படி திட்டத்தை ஆராய்ந்து அதை செயல்படுத்துவதற்கான ஏஜென்சி குறித்து, உள்ளாட்சி நிதிக் கணக்காயர் ஆராய்ந்து ஆலோசித்து, வரைவுத் திட்டங்களைத் தயாரித்து அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கவேண்டுமாய், கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். இந்த நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை அனுப்பி வைத்த பிறகு, அதனைப் பெற்ற பிறகு, திட்டவட்டமாக முடிவு எடுக்கப்படும். ஆனால் கொள்கை அளவிலே அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

<u>திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன்</u> : முன்னாள் மாவட்ட மன்றத்தில் பணியாற்றி, தற்பொழுது ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகிற ஆணையர்கள், நிர்வாகிகள் போன்றவர்களுக்கு ஓய்வூதியங்கள் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் அவர்களுடைய பணி வரன்முறை செய்யப்படாமலும், அவர்களுடைய பணிக்காலத்திற்கான விதிமுறைகளும் திருத்தப்படாமலும் உள்ளன என்று கூறுகிறார்கள். அவற்றைத் திருத்த விரைவில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவர் அவர்களே, இதற்கான சில விதிமுறைகள் எல்லாம் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படி வரன்முறைப்படுத்துகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<u>திரு. எம். சுரேந்திரன்</u> : தலைவர் அவர்களே, இந்த விஷயம் கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அது எவ்வளவு நாளைக்குள் செயலுக்கு வரும்? அது செயலுக்கு வருகின்ற பொழுது எந்த நாளிலிருந்து ஓய்வூதியம் அளிக்கப்படும் என்ற விவரத்தை கூற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : இப்பொழுதுதான் நகராட்சி மன்றத்தைப் பொறுத்த ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தை அளிக்கின்ற முயற்சியை மேற்கொண்டோம். மாண்புமிகு உறுப்பினர் கூறிய மாதிரி, சம்பளத்தையே தாங்கிக் கொள்ள முடியவில்லையென்று கூறும்போது, ஓய்வூதியம் அளிப்பதையும் தாங்கிக்கொள்ளுமா என்பதைப் பார்க்கவேண்டும். இப்பொழுது கொடுப்பதற்கே தாங்க முடியாதென்று சொல்லும்போது, 4 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து தர வேண்டுமென்று சொன்னால், எந்த அளவுக்குத் தாங்குவார்கள் என்று காண வேண்டும். ஆகவே, எந்த ஏஜென்ஸி போன்ற வரைவுத் திட்டங்களை அனுப்பி வைக்கவேண்டுமென்று கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்கப்பட்டிருக்கிறார். அவர் அறிக்கை தந்ததற்குப் பிறகு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊராட்சி மன்ற பகுதிநேர எழுத்தர்கள்

<u>* 495 வினா—திரு. டி. பி. ஆ. சிவப்பிரகாசம்</u> : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி மன்றங்களில் உள்ள பகுதிநேர எழுத்தர்களுக்கு மாதச் சம்பளம் எவ்வளவு கொடுக்கப்பட்டு வருகிறது?

(இ) அவர்களது மொத்த ஊதியம் எவ்வளவு?

(உ) அவர்களை முழுநேர எழுத்தர்களாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : (அ) & (இ) மக்கள் தொகையின் அடிப்படையில் ஊராட்சி மன்றங்கள் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இப்பிரிவுகளின் அடிப்படையில் ஊராட்சி மன்றங்களில் பணிபுரியும் எழுத்தர்களுக்கு அதிக பட்ச சம்பளமாக ரூ. 50-ம் குறைந்த பட்ச மாதச் சம்பளமாக ரூ. 15-ம் அரசினரால் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.

(உ) இல்லை.

<u>திரு. என். டென்னிஸ்</u> : தலைவர் அவர்களே, நிதிநிலை சரியாக இருக்கிற ஊராட்சிகளுக்கு முழுநேர எழுத்தர்களை நியமிப்பதற்கான உத்தரவு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவர் அவர்களே, கொள்கை அளவிலே ஒரு முடிவு எடுப்போமானால், அது எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பொருந்தக்கூடிய அளவிலேதான் வர வேண்டும். ஒரு சில ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒருமாதிரி, ஒரு சில ஊராட்சி ஒன்றியங்களுக்கு வரி வசூலிப்பதில் வேறுபாடு இருந்தால் அது நடைமுறைக்கு ஒத்து வராது. ஆகவே, ஒரே முறையைக் காண வேண்டியவர்களாக இருக்கிறோம்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u> : தலைவர் அவர்களே, ரூ. 15 என்பது மிகக் குறைவாக இருக்கிறது. அதை ரூ. 30 அளவிலாவது நிர்ணயிக்க அரசாங்கம் வேண்டிய உதவியினை நல்குமா?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவர் அவர்களே, இது பகுதிநேர ஊதியமாகத்தான் அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அதை உயர்த்துகின்ற செயற்குறிப்பு தற்பொழுது இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களில் பார்ட் டைம் கிளார்க்குகளாக வேலை செய்கிறவர்கள், ஊராட்சி ஒன்றியங்களிலே வேலை செய்கின்ற ஆசிரியர்கள்தான் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆசிரியர்களைப்பற்றிச் சொல்லக் கூடாது.

திரு. நா. வீராசாமி : ஆசிரியர்கள்தான் பார்ட் டைம் கிளார்க்குளாக, போஸ்ட் மேனாகப் பணியாற்றுகிறார்கள். இதனால் பள்ளிகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, பள்ளி ஆசிரியர்கள் ஆசிரியர் தொழிலைத் தவிர, இப்படிப்பட்ட பார்ட் டைம் வேலைகளை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; இதிலே எத்தனை பேர் வேலை பார்க்கிறார்கள் என்பதையும் அதனால் எத்தனை பேர் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதையும் ஆராய்ந்து பார்த்ததற்குப் பிறகுதான் இதைப் பொறுத்து தக்க முடிவு எடுக்கவேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, ஒன்றியத்திலே பகுதி நேர எழுத்தர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர்களே, இதற்கான சம்பளத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் வெகுவாக நடந்து கொண்டிருக்கிறது. .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். நான்கூட ஒரு ஊராட்சி மன்றத் தலைவர். நீங்கள் பொதுவாக ஊராட்சிமன்றத் தலைவர்கள் மேல் குற்றம் சாட்டுவது சரியல்ல.

திரு ஆ. பரந்தாமன். ஆகவே, கட்டாயமாக ஒரு எழுத்தர் இருக்க வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் வகுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.—எதாவது ஒரு தனிப் பட்ட ஊராட்சி மன்றத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு கோ. இளங்கோவன். பகுதி நேர எழுத்தருக்கு கல்வித் தகுதி ஏதாவது குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். தலைவரவர்களே, அப்படிப் பட்ட தகுதி குறிப்பிடப்பட்டதாகத் தெரியவில்லை.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவர் அவர்களே, ஊராட்சிமன்றத்தை பேரூராட்சி மன்றமாக மாற்றத் தேவையான வருமானமும், மக்கள் தொகையும் இருந்தும், அவைகளை அவ்வாறு மாற்றினால், வருமானம் முழுவதும் அதிகாரிகளுக்கே போகும் என்ற நிலையில், மாற்றாமலிருக்கிற ஊராட்சி மன்றங்களிலாவது, முழுநேர எழுத்தர்களைப் போட அரசு அதிகாரம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பேரூராட்சியாக்க வேண்டுமென்று சில ஊராட்சி மன்றங்கள் வற்புறுத்துகின்றன. சில ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்களாக ஆக்க வேண்டாமென் தெரிவிக்கின்றன. ஆகவே, அந்தந்த இடத்தினுடைய நிலைமையைப் பொறுத்துத்தான் நாம் முடிவு செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். எல்லா இடங்களுக்கும் கொள்கை அளவிலே ஒரு வழியைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த முறையில் மாற்றம் ஏற்படுகிற வகையில்தான் இந்த முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி மன்றங்களுக்கு எழுத்தர் அவசியம் என்பதை எல்லோரும் உணர்கிறார்கள். அதே நேரத்தில், ஒன்றியங்களில் இந்த எழுத்தர்களை வேலைக்கு அமர்த்துகின்றபொழுது, தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் செலக்ஷன் செய்தவர்களை அமர்த்தினால், அவர்கள் பிறகு அரசு ஊழியர்களாக வர எதுவாக இருக்கும். அப்படி செய்ய அரசாங்கம் எதாவது யோசனை வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுதே ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்களுக்கு இருக்கின்ற அதி காரத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது என்று கூறப்படுகிறது. இவர்களை நியமிக்கின்ற அந்தப் பொறுப்பையும் எடுத்துக்கொண்டால்— கொஞ்ச நஞ்சம் நியமிக்கின்ற பொறுப்பு தங்களிடத்திலே இருக்கிறது, அதையும் எடுத்துகொண்டால்—எதற்காக ஊராட்சி ஒன்றியத் தலைவர் களாக இருப்பது என்று கேட்பார்கள்.

திரு. எஸ். கணேசன் : ஒரு ஊராட்சியில் அதிக பட்ச சம்பளமாக ரூபாய் 50 பகுதி நேர ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஒரு ஊழியர் 3, 4 ஊராட்சிகளில் பணி யாற்றக்கூடிய முறையில் ஏற்பாடு செய்து அவர்களை முழு நேர ஊழியர் களாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதிலேயும் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அவர் எந்த ஊராட்சியில் இருப்பார், யார் வேலைகள் பகிர்ந்தளிப்பார், அவர் வேலைகளைப் பார்ப்பதிலே அந்த ஊருக்கு முன்னுரிமை கொடுத்தார், இந்த ஊருக்கு முன்னுரிமை

கொடுத்தார் என்று சொல்லக்கூடிய சூழ்நிலையெல்லாம் கூட வரும். இரண்டு, மூன்று கிராமங்களுக்கும் சேர்த்து அப்படி நியமிப்பதன் மூலம் பல சங்கடங்கள் ஏற்படும் என்பதையும் ஆராய்ந்துதான் இப்பொழுது இருக்கின்ற முறையே நீடிக்கலாம் என்ற அளவிற்குத்தான் யோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு உறுப்பினர் எனக்கு முன்னால் கேட்ட கேள்வியின் தொடர்ச்சியாகக் கேட்கிறேன், வாரத்துக்கு 6 நாட்களுக்கு வேலை செய்ய வேண்டுமென்றால் இரண்டு நாட்களுக்கு ஒரு ஊராட்சி என்ற வகையிலே 3 ஊர்களுக்கு அவர் 6 நாட்களுக்கு வேலைசெய்யக்கூடிய முறையில் நிரந்தரமாக ஊழியம் செய்யக்கூடிய ஏற்பாட்டைச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதையெல்லாம் கூட ஆராய்ந்து பார்த்து நடைமுறையிலே சாத்தியப்படாது என்ற அளவிற்கு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. வேண்டுமானால் அதை மறுபடியும் பரிசீலிக்கலாம். பரீட்சார்த்தமாக சில இடங்களில் அப்படி வைத்து வெற்றி தருமானால் மற்ற இடங்களிலே வைக்க வேண்டும். அதைப் பரி சீலித்துப் பார்க்கலாம்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே பகுதி நேர ஊழியர்கள் வைத்திருப்பதற்குக் காரணம் அங்கே சம்பளம் தருவதற்கு சக்தியில்லாமல் இருக்கலாம், அல்லது முழு நேரம் வேலைசெய்வதற்கு வேலை இல்லாமல் இருக்கலாம். இந்த இரண்டிலே எது சரி என்று அரசாங்கம் கருதுகிறது? எதைச் சரிசெய்யலாம் என் அரசாங்கம் கருதுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஊராட்சிகளைப் பொறுத்த வரையிலும் பெரும்பாலும் நிதிவசதியில்லை என்று சொல்லப்படுகிறது. சில ஊராட்சி மன்றங்களிலே 600,700, 900 என்ற அளவுக்குத்தான் வருகிறது. அவை வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வகையில்லாமல் இருக்கிற காரணத்தினால் அவர்கள் பகுதி நேர ஊழியர்களைப் போட்டுக்கொள்கிறார்கள். முழுநேர ஊழியர்களாக அவர்களைப் போட்டால் அதிகமாக வேலைவாங்க முடியும். ஆனால் நிதி வசதி இல்லை. அதையும் ஆராய்ந்து தான் இப்படிச் செய்யப்படுகிறது.

திரு. கு. காமாட்சி: ஊராட்சிகளில் பகுதி நேர ஊழியர்கள் நியமிப்பதற்குப் பதில் ஊராட்சித் தலைவர்களும் சட்ட மன்ற உறுப்பினர்களை போல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மிக கண்ணியமான முறையிலே வந்து இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு சிறப்புப்படியாகத் தருவதன் மூலம் அதை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவர்களுக்கு சிறப்பு ஊதியம், தருவதானால் இந்த எழுத்தாளர்களுக்கே முழு ஊதியம் தந்து வேலைவாங்குவது பொருத்தமுடையதாகிவிடும்.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்ற எழுத்தர்களை வேறு ஒன்றியங்களுக்கு மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவர்கள் இருப்பதன் காரணமாக ஊர் மக்களுக்கு அமைதிக்குக்கேடு ஏற்பட்டால் அல்லது அவர்கள் தவறுகள் செய்கிற நிலைமைகள் ஏற்பட்டால் அவர்களை அந்த ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மற்ற இடங்களுக்கு மாற்றுவதற்கு ஆன அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பெற்றிருக்கிறார்கள். சில பல இடங்களில் அப்படிப்பட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு ப. முத்துசாமி: இப்பொழுதே கூட இரண்டு மூன்று ஊராட்சி மன்றங்களுக்கு ஒரு ஊழியர் என்ற முறையிலே வேலை பார்த்துக்கொண்டு சிக்கல் இல்லாமல் இருந்துக்கொண்டிருக்கிறது. குறைந்த பட்சம் எஸ். எஸ். எல். சி. படித்தவர்கள் அந்த வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படக் கூடிய நிலைமையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய முறையிலே இரண்டு மூன்று கிராமங்களுக்குச் சேர்த்து ஒரு நிரந்தர ஊழியர் நியமித்து அவருக்கு 150 ரூபாய் சம்பளம் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதையும் பரிசீலித்து பார்த்த பிறகுதான் சில சங்கடங்கள் வருகின்றன என்று விட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் அவர் ஒரு ஊராட்சி மன்றத்திலே பகுதி நேர ஊழியராக இருக்கலாம், இன்னொரு ஊராட்சி மன்றத்திலேயும் பகுதி நேர ஊழியராக இருக்கலாம், இரண்டு மூன்று ஊராட்சிகளுக்கும் சேர்த்து நியமிக்கப்பட்டதாக இருக்காது, வேண்டுமானால் அவற்றையெல்லாம் பரிசீலித்து முடிவு எடுக்கலாம்.

Nagapattinam Panchayat Union.

* 496 *Q.*—THIRU A. RAJAMANICKAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal to divide the Nagapattinam Panchayat Union into two unions having headquarters one at Nagapattinam and another at Tirupundi ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, பொதுவாக எவ்வளவு ஜனத்தொகையின் அடிப்படையிலே வளர்ச்சி வட்டாரங்கள் பிரிக்கப்படுகின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட ஒரு லட்சம் மக்கள் என்ற அளவிற்குக் கணக்கு வைத்திருக்கிறார்கள். சில இடங்களிலே ஒரு லட்சத்திற்கு மேற்கொண்டும் வருகிறது,

சில இடங்களிலே ஒரு லட்சத்திற்குக் குறைந்தும் வருகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் 375 என்றும் பிரிக்கப்பட்டது மத்திய அரசாங்கத்திஞல் தான் பிரிக்கவேண்டிய நிலைமை வந்தது. காரணம் அவர்கள் உதவி செய்தது. நிர்வாக சீர்திருத்தக் குழுவிடம் இந்தப் பிரச்சனைப்பற்றி ஆராயச் சொல்லியிருக்கிறோம். அதை ஆராய்ந்து எந்த முறைகளில் ஊராட்சி ஒன்றியங்கள், பிரித்து அமைக்கப்பட வேண்டுமென்று அறிக்கை தருகிறார்களோ அப்படி அவர்கள் அறிக்கை தந்ததிற்குப் பிறகு அந்த அறிக்கையைப் பார்த்து தக்க முடிவுகள் எடுக்கலாம்.

மாநகராட்சி அரங்கம்

* 497 வினா—திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு கல்வி- உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விலங்குக்காட்சிசாலைக்கு அருகில், அரங்கம் ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கக்கோரி, சென்னை மாநகராட்சி, அரசுக்கு எழுதிக் கேட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்; (அ) ஆம் (இ) 1970 ஆம் ஆண்டு சூன் திங்களில் மாநகராட்சி மன்றம், நாடகம் இசைமுதலிய பண்பாடு பற்றிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக ஏறக்குறைய ரூபாய் பதினைந்து இலட்சம் செலவில் புதுமையானதொரு திரையரங்கம் கட்டுவதற்கான கருத்தை முன் மொழிந்தது. மாநகராட்சி மன்றம் அத்திட்டத்திற்கு நிதியளிக்கக் கூடிய நிலையில் இல்லாதிருக்கவே மன்றம் சிறப்பான நிதிநிலைமையினை யடையும்வரையில் அச்செயற்குறிப்பு தள்ளி வைக்கப்பட்டது.

பஞ்சாலைகளை நடத்த உதவித்தொகை

*498 வினா.—திரு. கே. எ. வகாப்.—மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா .—

(அ) 1971 ஜூலை மாதத்தில், தமிழ்நாட்டில் மூடியுள்ள மில்களை எடுத்து நடத்த தேசீய கார்ப்பரேஷன் உதவியைக் கோரி தமிழ்நாடு அரசு, மத்திய அரசை நாடியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் மத்திய அரசின் பதில் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தேசீய பஞ்சாலை கார்ப்பரேஷன் அதன் கணக்கின்படி ஏழு மில் களுக்குக் கொடுக்கவேண்டிய உதவித் தொகையான ரூ.86·20 லட்சத்தைத் தற்சமயம் கொடுத்துவிட்டது. எடுத்த மில்களை யந்திர நவீனமாக்குதலுக்கு தேசீய கார்ப்பரேஷன் இதுவரை ரூ. 4·76 லட்சம் தான் கொடுத்துள்ளது,

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே அதிகமான மில்கள் இப்படி சிக் மில்களாக இருப்பதை உணர்ந்தும் அவர்கள் குறைந்த தொகை கொடுத்திருப்பதாகச் சொன்ஞர்கள். தேசீய பஞ்சாலைக் கார்ப்பரேஷனிடம் மட்டுமல்லாமல், மத்திய அரசிடமிருந்தும் அதிகமான தொகையைக் கோரிப்பெற நம்முடைய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய நிறுவனம், எடுக்கின்ற ஆலைகளுக்குத் தேவையான பணத்திலே 51 சதவிகிதம் கொடுக்க வேண்டும். அதைக் கொள்கையளவிலே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கால தாமதம் ஆனாலும் நிச்சயம் தந்து விடுவார்கள் என்று நம்புகிறோம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட மில்களை அரசே எடுத்துக்கொள்கிற நேரத்திலே அதற்கு அனுமதி தர மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது, மறுக்கிறது என்ற நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். நம்முடைய வருத்தத்தை மத்திய அரசுக்கு இந்த அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்களே அதைத் தெரிவித்து விட்டார்கள்.

திரு. நா. வீராசாமி : இந்த சிக் மில்களை ஊக்குவிக்கின்ற முறையில் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் இதையெல்லாம் நம்முடைய அரசு டேக் ஓவர் செய்வதற்காக பணத்தை யெல்லாம் செலவு செய்து இருக்கிறது. இப்படிப்பட்ட மில்கள மின்சார வெட்டு இல்லாமல் 24 மணி நேரமும் வேலை செய்யக்கூடிய முறையில் வழிவகை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மின்சாரம் அதிகமாகக் கிடைக்குமாஞல் அதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சிக் மில்களுக்கு 1971-லே மத்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வளவு உதவி வந்திருக்கிறது. நம்முடைய மாநில அரசு எவ்வளவு உதவி செய்திருக்கிறது என்பதை தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த எந்த ஆண்டு எவ்வளவு என்ற விவரம் இல்லை. மொத்தமாக நமக்கு 51 சதவீதம் வரவேண்டும். 7 ஆலைகளுக்கு மொத்தத்தேவை 188·12 லட்சம், அதிலே 51 சதவீதம் என்பது 95·95 லட்சம் அளவிற்கு அவர்கள் தர வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : இந்தப் பஞ்சாலைகளிலே இயந்திரங்களை நவீனமாக்குவதற்கு ஆன திட்டத்திற்கு எவ்வளவு காலக்கெடு நிச்சயிக்கப்பட்டு இருக்கிறது ? எவ்வளவு தொழிற்சாலைகளை நவீனமாக்க வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ? அதற்கு ஒவ்வொரு வருஷமும் ஆகும் செலவு என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லா ஆலைகளும் நவீனப்படுத்தப்பட வேண்டுமென்பதுதான் நம்முடைய திட்டம். எல்லாவற்றிற்கும் எவ்வளவு வேண்டும் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

Sale of Controlled Cloth.

* 499 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) whether the Tamil Nadu Textile Corporation has proposed to open fair price shops for the sale of controlled cloth in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சில ஆலைகள் கூட்டாக 31—10—72-ல் பீளமேட்டில் ஒன்றும், 1973 ஜனவரியில் சிங்காநல்லூரில் ஒன்றும் ஆக இரண்டு நியாய விலைக் கடைகள் திறந்திருக்கின்றன.

திரு. என். டென்னிஸ் : மாநிலத்திலுள்ள வேறு இடங்களிலும் இது மாதிரி நியாய விலைக் கடைகள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

முற்பகல் 9-30

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆலைகள் கோவையில் இருக்கின்றன. அங்கே உற்பத்தி செய்யப்படுவதை விற்கின்ற நிலையங்கள் அங்கு திறக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய விற்பனை எப்படி நடைபெறுகிறது என்பதையொட்டி மேற்கொண்டு பரிசீலிக்கலாம்.

திரு ந. தருமலிங்கம் : நியாய விலைக் கடைகள் என்று போர்டு போட்டுக்கொண்டு தனியார் கடைகளில் அநியாய விலைக்கு விற்கப்படுவதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தனியார் கடைகளைப் பற்றி என்ன நிலை என்று தெரியாது. நாம் இப்போது ஆரம்பித்திருப்பது நம்முடைய தொழிற்சாலைகளில் உற்பத்தியானவற்றை அதிக லாப நோக்கு இல்லாமல் குறைந்த விலைத் துணிகள் ஏழைகளுக்கு வேண்டிய அளவுக்குக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டுமென்பதுதான் திட்டம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இங்கு இருக்கக்கூடிய சிறப்பு அங்காடி மூலமாக இந்த மாதிரி கட்டுப்படுத்தப்பட்ட துணிகளை விநியோகம் செய்ய அரசு ஏதேனும் ஆலோசனை கூறுமா ? நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லா ஆலைகளைப் பொறுத்தவரை மத்திய அரசு செய்ய வேண்டும். நம்முடைய ஆலைகளைப் பொறுத்தவரை நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். மத்திய அரசாங்கம் இது பற்றி ஒரு திட்டம் கொண்டு வந்தது. ஆனால் திட்டத்தின் அடிப்படையில் எந்தத் துணியைத் தருவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்களோ அந்தத் துணி நம்முடைய தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையில்லாமல் இருப்பதைப் பார்த்தோம். அதை விடக் குறைவாக நம்முடைய கைத்தறித் துணி இருக்கிறது. எந்தெந்தத் துணி குறைந்த விலையில் தேவையோ அதை எல்லாம் கொடுக்கத் தமிழக அரசு ஒப்புதல் கொடுத்திருக்கிறது.

திரு. கே. எம். சுப்பிரமணியம் : இந்த இரண்டு நியாய விலைக் கடைகளிலும் கண்ட்ரோல் கிளாத் சரியாக விற்பனையாகிறதா அல்லது தேங்கிப் போகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் புதிய முயற்சி. இதிலே ஒரு கடையிலே 11,229 மீட்டர் துணி 34,430 ரூபாய் மதிப்புக்கு விற்கப்பட்டிருக்கிறது. அதைப்போல் இன்னொரு கடையில் 7,165 மீட்டர் துணி 20,068 ரூபாய் மதிப்புற்கு விற்கப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : இந்த நியாய விலைக் கடைகளை ஊக்குவிக்கக் கூடிய வகையில் ரெடிமேட் துணிகளும் விற்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ.மாதவன் : ரெடிமேட் துணிகள் விற்க ஏராளமான கடைகள் இருக்கின்றன. இந்தக் கடைகளைப் பொறுத்த வரை நம்முடைய ஆலைகளில் உற்பத்தி ஆகக்கூடிய துணிகளை வெளியார் அதிக லாபத்தைப்பயன் படுத்தாமல் இருக்க நாமே கடைகளைத்திறந்து விற்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : இந்தத் துணிகள் இரண்டு இடங்களில் விற்கப்படுகின்றன. இங்கே குறைந்த விலைத் துணி ஒரு மீட்டர் என்ன விலை ? இந்தத் துணியை யார் கேட்டாலும் விநியோகிக்கப்படுகிறதா ? அல்லது சீனி கார்டு மாதிரிக் கொடுத்து விற்பனை செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு துணிக்கும் என்ன விலை என்ற விபரம் இல்லை. எல்லோருக்கும் குறைந்த விலையில் துணி கிடைக்க வேண்டுமென்றுதான் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். அவர்கள் சொன்னதுபோல் அதிகக் கிராக்கி ஏற்படுமானால் அப்படிப்பட்ட முறைகளைப் பரிசீலிக்கலாம்.

திரு கே.எ. வகாப் : நம்முடைய ஆலைகளில் உற்பத்தியாகும் துணி ரகங்கள் என்னென்ன ? மக்கள் விரும்பி வாங்கக்கூடிய அளவுக்கு இருக்கின்றனவா ? இல்லையென்றால், அதைப்பற்றி விளம்பரங்கள் செய்து விற்பனையை ஊக்குவிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இங்கு நடக்கின்ற நிகழ்ச்சியே ஒரு விளம்பரமாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்தத் துணியைப் பொறுத்த வரை இப்போதே வாங்குகின்ற வாய்ப்பு இருக்கிறது. அதிக டிமாண்ட் வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். அப்படி ஏற்படும் நேரத்தில் மேற்கொண்டு விரிவாக விற்பனை செய்யும் முயற்சிகள் பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. என். டென்னிஸ் : இதில் மார்ஜின் ஆப் பிராபிட் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வியாபார ரகசியங்களை எல்லாம் இங்கே கேட்கிறார்கள். நான் சொல்லுவதெல்லாம் அதிக லாபம் இல்லாத அளவுக்கு இரண்டு மூன்று கை மாறி வியாபாரிகளுடைய எக்ஸ்ப்ளாய்டேஷன் இல்லாத அளவுக்கு விற்க வேண்டுமென்பதுதான் கொள்கை. நம்முடைய மில்களில் உற்பத்தியாகும் துணிகளுக்கு அதிக லாபம் வைக்காது விற்கப்படும் என்பதற்கு உறுதி அளிக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : என்ன வகையான துணிகள் தயாரிக்கப்படுகின்றன. எந்த அளவுக்குத் தயாரிக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : துணிகள் பற்றிய விவரம் என்னிடம் இல்லை என்று ஏற்கெனவே சொன்னேன்.

டாக்ஸி டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

*500 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) டாக்சி டிரைவர்கள் தொழிலியல் கூட்டுறவுசங்கங்கள் எங்கெங்கு அமைக்கப்பட்டுள்ளன ?

(இ) அவைகளின் மூலம் டிரைவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட கார்கள் எத்தனை.

மாண்புமிகு திரு. செ.மாதவன் : (அ—இ) விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ (104–105-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.)

திரு . கா. காளிமுத்து : இந்த விவர அறிக்கையில் இருந்து சிவகாசி கூட்டுறவு சங்கத்திலிருந்து விண்ணப்பம் வந்திருப்பதாகத் தெரிகிறது. அதிலே கார்கள் வழங்கப்படவில்லை என்ற குறிப்பு இருக்கிறது. விரைவில் வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு டாக்சி டிரைவர்கள் சங்கங்களைப் பொறுத்து தனியாக அலாட்மெண்ட் வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது ஏராளமாக இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்க வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. அதிக அளவில் மத்திய அரசு கொடுக்குமானால் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உடனடியாகக் கொடுக்க வாய்ப்பு ஏற்படும்.

திரு ஜே. ஜேம்ஸ் : கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக டாக்சிகள் டிரைவர்களுக்கு வழங்கப்படுவதுபோல் ஆட்டோ ரிக்ஷாக்களும் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : இப்போதே அப்படிச் செயல்படுகிறது.

திரு. எஸ். நல்லசாமி : டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்டத்திற்கு ஒரு சங்கமாக சில மாவட்டங்களில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. தாலூகா வாரியாக சங்கம் அமைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வயபிள் யூனிட்டாக இருக்க வேண்டுமென் மாவட்ட அளவில் பல்வேறு இடங்களில் சங்கங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட அளவில் ஒரு சங்கமாக செயல்பட்டால்தான் பொருத்தமாக இருக்கும். இப்போது இருக்கும் கஷ்டம் போதுமான கார் இல்லாததுதான்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிப்பதால் நல்ல பலன் கிடைக்கிறது. விவர அறிக்கையில் மற்ற மாவட்டங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டிருகிறது. வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றி ஒன்றும் இல்லை. வட ஆற்காடு மாவட்டத்தில் இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. வட ஆற்காடு மாவட்டத்தின் தலைநகராகிய வேலூரில் இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்க அரசு உதவி செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்தச் சிறப்பான முயற்சியை எடுத்து அந்த மாவட்டம் முழுவதும் எங்கெங்கு இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்கலாம் எங்கெங்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்று ஆராய்ந்து சொன்னால் பரிசீலிக்கலாம்.

திரு. நா. வீராசாமி : இந்தியாவிலேயே டிரைவர்களுக்காக இப்படி கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து கார்கள் கொடுப்பது நம்முடைய தமிழ் நாட்டிலேதான் இருக்கிறது. ஆகவே, கார்கள் உற்பத்தியில் கூட்டுறவுத் துறைக்காக ஒரு பர்சன்டேஜை ஒதுக்க வேண்டுமென்று நம்முடைய அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசாங்கந்தான் இதைப் பற்றி முடிவு செய்கிறது. ஏற்கெனவே சொன்னபடி இப்படி ஒரு கொள்கையை அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகமாக வழங்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

திரு. கே. எ. வகாப் : இந்த டிரைவர்கள் அந்தக் கார்களின் விலையில் ஒரு பகுதியாக 3,000 ரூபாய்க்கு அதிகமான தொகை முதலில் கட்ட வேண்டியிருக்கிறது. அவர்கள் அதற்கு ரொம்ப சிரமப்படுகிறார்கள். டிரைவர்கள் அதைக் கட்டும் நிலைமையில் இல்லாததால் கைவிடும் நிலை ஏற்படுகிறது. ஆகவே, அரசாங்கமே முழுவதையும் கடனாகக் கொடுத்து வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படி கூட்டுறவுத் துறை மூலம் அளிப்பதற்காக தனி வங்கி தமிழ் நாட்டில் தான் இருக்கிறது. அந்த வங்கியின் மூலம் பணத்தைக் கொடுக்கிறார்கள். அவ்வளவு பணத்தையும் கடனாகக் கொடுப்பதால் திரும்பிச் செலுத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஓரளவு பணம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். கூட்டுறவுச் சட்டப்படி அதை வசூலித்துத்தான் ஆகவேண்டும். ஒரு காருக்கு ஆயிரம் ரூபாய் வரை அரசாங்கமே பங்குத் தொகையில் பங்கு எடுக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதிலே பொறுப்புக்கள் சில இடங்களில் குறைந்து விடுகின்றன. பொறுப்புகள் அதிகரிக்கும் வகையில் நேரடியாகவே அரசு பாக்கிகளைக் கொடுத்து உதவ முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி என்ன என்றே புரியவில்லை. இப்போது கொடுக்கும் திட்டமே ஒவ்வொரு தொழிலாளிக்கும் வேறு ஒருவர் எஜமானராக இருந்து உழைக்கின்ற பணம் அவருக்குப் போய் விடாது. அந்தத் தொழிலாளியே 3 அல்லது 5 ஆண்டுகளில் அந்த டாக்சிக்குச் சொந்தக்காரர் ஆக வேண்டுமென்பது தான் கொள்கை. அரசாங்கமே எல்லாவற்றையும் எடுத்து நடத்த வேண்டுமென்பது நம்முடைய கொள்கை அல்ல.

திரு. எம். தேவராசன் : இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரேஸ்ட் டாக்சிகள் விட அனுமதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அனுமதிப்பதற்குத் தடை இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. எம். சுரேந்திரன் : இந்த டாக்ஸி டிரைவர்கள் சங்கத்திற்கு எத்தனை பேர்கள் இருந்தால் அமைக்க முடியும் என்கிற விவரத்தை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எவ்வளவு பேர்கள் என்ற கணக்குக் கிடையாது. அந்த சொசைடி வயபிள் யூனிட்டாக இருக்க வேண்டும் என்பது தான் நமது நோக்கம். ஆகவே, மாவட்டத்திற்கு ஒரு சங்கம் என்று அமைத்து அந்த மாவட்டத்தில் உள்ளவர்களை எல்லாம் அதன் கீழ் கொண்டு வந்தால் வயபிள் சொசைடியாக அமையக்கூடும் என்பது அரசாங்கத்தின் கொள்கை.

திரு. கு. காமாட்சி : டிரைவர் கட்ட வேண்டிய தொகையை ரொக்கமாகக் கட்டச் சொல்கிறார்களே, அதற்கு சொத்து ஜாமீன் கொடுத்தால் ஏற்றுக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நூற்றுக்கு நூறு அவர்களுக்குக் கடன் கொடுத்து விட்டால் திருப்பிக் கட்டுவதில் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே முன் தொகையை அரசாங்கமே தன் பங்குத் தொகையாகக் கொடுக்கலாம் என்று யோசிக்கப்படுகிறது.

திரு. கோ. இளங்கோவன் : ஆட்டோ ரிக்ஷாக்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வழங்கப்படுகிறது என்றார்கள். சென்னையில் தான் வழங்கப்படுவதாக அறிகிறேன். மற்ற இடங்களிலும் வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்பு மிகு திரு. செ. மாதவன் : சென்னையில் மட்டுமல்ல, திருச்சியிலும் தொடங்கப்பட்டிருக்கிறது. இன்னும் எங்கெங்கே தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ அங்கங்கே தொடங்கலாம்.

திரு. கே. எ. வகாப் : தொழில் கூட்டுறவு வங்கிகள் மூலம் டேக்ஸி கார்கள் வாங்க கடன் கொடுப்பதை ரிசர்வ் வங்கி ஆட்சேபிப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இதற்கும் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஒரு ஆட்சேபணை இருக்குமானால் அது தவறுதான். நிச்சயம் இதற்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஈரோட்டில் நீதிமன்றக் கட்டடங்கள்.

* 501 திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஈரோடு நகரில் மாவட்ட நீதி மன்றம், மற்ற நீதி மன்றங்களுக்காக புதிதாகக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ—ஆ)ம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : ஈரோடு நகரில் சிவில் நீதி மன்றங்களும், கிரிமினல் நீதி மன்றங்களும் தற்போது வெவ்வேறு இடங்களில் உள்ளன. இவையனைத்தும் ஒரே இடத்தில் இருக்க வேண்டும் என்ற காரணத்தால் ஒரு கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டுவதற்கான இடத்தை அரசின் செலவில் பெற வேண்டியுள்ளது. இதற்கான நில ஆர்ஜித குறிப்புரை அனுப்பும்படி கோயம்பத்தூர் மாவட்ட ஆட்சியாளர் கோரப்பட்டுள்ளார்.

முசிறியில் முன்சீப் கோர்ட்டு.

* 502 வினா.-திரு. பெ. சௌந்தர பாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

திருச்சி மாவட்டம் முசிறியில் முன்சீப் கோர்ட்டு ஒன்று துவக்கும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குழுவின் அறிக்கையைப் பரிசீலித்த பிறகே ஒரு முடிவு எடுக்க முடியும்.

திரு. பு. செ. முத்துச்செல்வன் : முசிறியில் நீண்ட நெடுங்காலமாக இந்த சிவில் வழக்குகளை நடத்த மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குளித்தலை போன்ற இடத்திற்குச் சென்று தான் தொடங்க வேண்டியிருக்கிறது. எனவே ஒரு மாத காலத்திற்குள் முசிறியில் ஒரு முன்சீப் கோர்ட்டைத் தொடங்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் குழு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையும் ஒரு சிபார்சாகச் செய்திருக்கிறது. அதைப் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

பள்ளப்பட்டிக்கு குடி நீர் வழங்கல்.

* 491 வினா.—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பள்ளப்பட்டி பேரூராட்சி மன்ற குடிநீர் திட்டம் தற்பொழுது எந்த அளவில் உள்ளது?

(இ) இத்திட்டம் பூர்த்தியடைய இன்னும் எவ்வளவு காலம் ஆகும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) பள்ளப்பட்டி குடிநீர்த் திட்டத்திற்கு அரசு ஆணை 44 நாள் 6–1–71-ல் அரசு ஒப்பளிப்பு ரூ 22.75 இலட்சத்திற்கு அளிக்கப்பட்டு தலைப்பிடத்தில் சேகரிப்புக் கிணறு வேலைகள்,

மற்றும் நீர் உந்து குழாய் பதிக்கும் வேலைகளும் முடிவடைந்துள்ளன. பகிர்மான குழாய்கள் பதிக்கும் வேலையும் சிப்பந்திகள் குடியிருப்பு இல்லங்களும் முடிவடையும் தருவாயிலுள்ளன. நீர்த் தேக்கத் தொட்டி வேலை துவக்கப்பட்டுத் துரிதமாக நடந்து கொண்டு வருகின்றது.

(இ) இவ்வருட இறுதிக்குள் இத்திட்டத்தின் எல்லா வேலைகளும் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, தண்ணீர் தொட்டி வேலை நிச்சயமாக ஆரம்பிக்கப்படவில்லை. வேனிற்காலம் தொடங்குகிறது. வேனிற் காலத்தில் தான் அங்கே தண்ணீர் பிரச்சினை மிகக் கடுமையாக இருக்கும். ஆகவே, இந்த மாதத்திற்குள்ளாகவாவது அங்கே தண்ணீர் தொட்டியைக் கட்டி முடிக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எப்படியும் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தத் திட்டம் முடிவு அடைவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும்.

திரு. ந. தருமலிங்கம் : தமிழக அரசு செய்யும் நல்ல திட்டங்களுக்கு எல்லாம் மாற்றுந்தாய் மனப்பான்மை காட்டி வரும் மத்திய அரசு, குடிநீர் தொட்டி கட்டும் திட்டத்திலும் ஓரவஞ்சனை காட்டுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

துப்பறியும் பணிக்கு நாய்களைப் பயன்படுத்தல்

* 492 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார்களுக்குச் சொந்தமான சில நாய்களை போலீஸ் துப்பறியும் வேலைக்குப் பயன்படுத்திக்கொள்ள அவற்றிற்கு பயிற்சியளிக்க அரசு ஆலோசித்து வருகின்றதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : இங்கே போலீஸ் துறையில் பயன்படுத்தப்படுகிற நாய்கள் பொதுவாக எந்த நாட்டைச் சார்ந்தவை ? அப்படிப் பயன்படுத்தப்படுகிற நாய்கள் எத்தனை உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே ஜெர்மனியில் இருந்து 6 நாய்கள் தருவிக்கப்பட்டிருந்தன. அவற்றில் இங்கே உள்ள சீதோஷ்ண நிலைக்கு ஒத்துக்கொள்ளாமல் சென்னையில் 3 நாய்களும்,

கோவையில் ஒரு நாயும் இறந்துவிட்டன. இப்போது பயன்படுத்தப்படுகிற நாய்களில் பெரும்பாலானவை நம் நாட்டைச் சார்ந்தவையே. இவை துப்புத் துலக்கிய வழக்குகள் உண்டா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். 1969-ம் ஆண்டில் துப்புத் துலக்குவதற்காக இந்த நாய்கள் அழைக்கப்பட்ட வழக்குகள் 41. இவை கண்டுபிடித்தது 21. 1970-இல் 71 வழக்குகளுக்கு அழைக்கப்பட்டன. துப்புத் துலக்கியிருப்பத 27. 1971-இல் 172 பிரச்சினைகளுக்கு அழைக்கப்பட்டு 44 இவற்றால் துப்புத் துலக்கப்பட்டிருக்கிறது. 1972-இல் 169க்கு 54.

திரு கு. காமாட்சி : நாய் மிகவும் நன்றியுள்ள பிராணி. தெருவில் நல்ல நாய்கள் கூட திரிகின்றன. அவற்றைப் பிடித்துக் கொன்றுவிடுகிறார்கள். அவற்றைப் பிடித்து சிலவற்றை இந்தப் பணிக்குப் பயிற்றுவிக்கலாம். மற்றவற்றை ஓரிடத்தில் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாய்களைப் போல தெருவில் திரிகின்ற மனிதர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க விடுதிகள் கட்டுவதே அரசாங்கத்திற்குக் கஷ்டமாக இருக்கிறது. போதுமான நிதி கிடைக்கவில்லை. இதில் இந்தப் பிரச்சினையையும் இழுத்துப் போட்டுக்கொள்ள முடியாது.

திரு கே. எ. வகாப் : நாய்கள் துப்பு அறிவதுபோலவே மேல்நாடுகளில் பூனைகளும் துப்புத்துலக்க பயிற்றுவிக்கப்படுகிறது என்று அறிகிறேன். இங்கும் அப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது அதற்கான உத்தேசம் எதுவும் இல்லை.

திரு ந. தர்மலிங்கம் : துப்பு அறியும் நாய்கள் வழக்குகளில் சம்பந்தப்படாத அப்பாவிகளைக் கூட கவ்விப் பிடித்துவிடுவதாகச் சொல்லப்படுகிறதே. அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சில நேரங்களில் அந்தத் தவறுகள் ஏற்படக் கூடும்.

திரு. எம். சுரேந்திரன் : மனிதர்களைவிட நாய் துப்பு அறிவதில் மிகவும் கெட்டிக்காரத்தனமானது. ஆகவே நாயின் வளர்ச்சி மிகவும் முக்கியமானதாகிறது. ஆகவே இந்தமாதிரியான நாய்கள் நம் நாட்டில் எந்த எந்தப் பகுதிகளில் இருக்கின்றன. அவற்றைப் பராமரிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதுபோன்ற பணிக்கு அல்சேஷன் நாய்கள் தான் பயன்படுகின்றன. அவை எங்கெங்கே கிடைக்கின்றனவோ அங்கங்கே பயன்படுத்திக்கொண்டு வருகிறோம். வெளிநாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்ட 2 நாய்கள் இருக்கின்றன.

திரு. எம். தேவராசன் : வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நாய்களுக்கு இங்குள்ள சீதோஷ்ண நிலை ஏற்கவில்லை என்று சொல்லுகிறார்கள். உதகமண்டலம் அதற்கு ஏற்றதாக இருக்குமாதலால் அங்கே ஒரு பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே சென்னையிலும், கோவையிலும் இதுபோன்ற நாய்கள் இருக்கின்றன. கோவையில் அந்த நாய்கள் உயிரோடு இருக்கின்றன. உதகமண்டலத்திற்குச் சென்று விடுவதால் மாத்திரம் இந்த நாய்கள் உயிரோடு இருக்கும் என்று சொல்ல முடியாது. வேறு காரணங்களினாலும் இறந்துவிடுகின்றன.

திரு. ப. முத்துசாமி : தற்போது இப்படி துப்பு துலக்குகிற நாய்கள் தரையில்தான் நல்லமுறையில் மோப்பம் பிடிக்க முடிகிறது என்றும் தண்ணீரில் கொண்டு செல்லும்போது தண்ணீரில் மோப்பம் சரியாகப் பிடிக்க முடியவில்லை என்றும் கூறப்படுவது உண்மையா ? அப்படியானால் தண்ணீரிலும் சிறந்த முறையில் அந்த நாய்கள் மோப்பம் பிடிக்க தகுந்த பயிற்சி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தப் பிரச்சினை பற்றி, எது எதில் மோப்பம் பிடிக்கிறது என்பதை நாம் இங்கே விளக்கிச் சொல்லிவிட்டால் இவைகளில் எல்லாம் குற்றவாளிகள் குற்றம் செய்ய விரும்புகிறவர்கள் மிகக் கவனிப்பாக இருந்து அந்தக் காரியங்களை ஆரம்பித்து விடுவார்கள்.

Sethusamudram Project

*503 *Q.*—**Thiru N. K. PALANISWAMY** and **Thiru N. V. GURUSWAMY**: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether this Government have requested the Centre during 1971 to expedite the working of the Sethusamudram Project ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆம். 1965-ல் தலைமைப் பொறியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவரும் விரிவாக ஆராய்ந்து சேது சமுத்திரக் கால்வாய் பற்றிய முடிவான அறிக்கை 1968-ல் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பலமுறை நினைவுபடுத்தியதும் அல்லாமல் மத்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க கடிதம் ஒன்று 1971 நவம்பரில் எழுதப்பட்டது. 23—10—1972 அன்று மத்திய திட்ட அமைச்சர் தார் அவர்கள் சென்னைக்கு வந்தபோது சேதுசமுத்திரத் திட்டத்தை ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : தூத்துக்குடியையும் ராமேஸ்வரத்தையும் இணைத்துக் கட்டக்கூடிய அந்த சேதுசமுத்திரத்திட்டம் கட்டி முடிக்கப்பட்டால் ரூ. 1,62,00,000 லாபம் வரும் என்று அந்தக் கமிட்டி சிபார்சு செய்திருந்தும் இதை மத்திய அரசு நடைமுறைக்கு கொண்டுவராததற்கு காரணம் என்ன ? கனம் முதல் அமைச்சர் அவர்களும் கனம் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் வற்புறுத்தியும், அதற்குப் பின்னால் நடந்த இரண்டு கூட்டங்களிலும், முதல் அமைச்சர்கள் மாநாட்டிலும் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி விவாதிக்கக் கூடியிருந்த கூட்டத்திலும் அது வலியுறுத்தப்பட்டதா ? அப்படியானால் அதன் நிலைமை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : முதல் அமைச்சர்கள் மாநாட்டில் இது வலியுறுத்தப்பட்டதா என்பதற்கு குறிப்பு இல்லை. பிரதமர் அவர்கள் தூத்துக்குடிக்கு வந்தபோது நம் முதல் அமைச்சர் அவர்கள் நேரிலேயே சொல்லி வலியுறுத்தினார்கள் என்பது நான் பக்கத்திலிருந்த காரணத்தால் எனக்குத் தெரியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இதை இரண்டு பிரிவுகளாக எடுக்க வேண்டும். அதில் பணம் மிகவும் குறைவாக இருக்கிற திட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டிருக்கிறதா ? அப்படியிருந்தால் அவர்கள் இந்தத் திட்டக் காலத்திலாவது இதை நடைமுறைப்படுத்துவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மண்டபம் வழி இந்தக் கால்வாயை வெட்டுவதை விட ராமேஸ்வரம் வழியாக வெட்டுவது ஏறத்தாழ 18 மைல் நீளம் குறைவு மட்டுமல்லாது, 18 கோடி ரூபாய் அளவிற்கு செலவும் குறைகிறது. நல்ல வருமானமும் வருகிறது என்று எடுத்துச் சொல்லி வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : தமிழக முதல் அமைச்சர் அவர்களும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் வற்புறுத்தியும், திராவிட முன்னேற்றக் கழக அரசு நீண்ட காலமாக வற்புறுத்தி வருகிற இந்த பிரச்னை பற்றி தமிழ் நாட்டில் உள்ள மற்றக் கட்சிகள் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்களா ? குமரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளு மன்றத்தில் இதை வற்புறுத்தியிருக்கிறார்களா ? என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சேதுசமுத்திரத் திட்டம் பற்றி இங்கு கட்சி வேறுபாடுகள் இல்லை. தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளும் இந்த சேதுசமுத்திரக் கால்வாய் விரைவாக வெட்டப்பட வேண்டும் என்றுதான் சொல்லி வருகிறார்கள்.

திரு. வ. ஆர். சுப்பையா : இந்தத் திட்டம் லாபகரமானது மட்டுமல்ல. இதனால் தொழில்களும் வளருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. பெர்மிஷனுக்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா ?

கடன் கொடுக்க World பாங்க் தயாராயிருப்பார்கள், பெர்மிஷன் மட்டும் எதிர்பார்த்து அந்த வேலைகளை ஆரம்பிப்பீர்களா ? World பாங்கியிடம் கடன் கேட்டால், இது லாபகரமான திட்டமாகயிருப்பதால் அவர்கள் கடன் கொடுக்கத் தயாராயிருப்பார்கள். அந்த முறையில் செயல்பட இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உலக வங்கி மட்டுமல்ல, சர்வதேச வங்கிகள் பல இருக்கின்றன. அவர்களிடம் கேட்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். இது நல்ல லாபகரமான திட்டம் என்பதையும் நன்கு சுட்டிக்காட்டியிருக்கிறோம். இதில் போடுகிற முதலுக்கு முதலில் 7 சதவீதம் முதலடியாக எடுத்த எடுப்பிலேயே கிடைக்கும். 28 ஆண்டுகளில் போட்ட முதல் அத்தனையையும் பெற வாய்ப்புகள் இருக்கின்றன. இப்போது இலங்கையைச் சுற்றி கப்பல் போக வேண்டியிருப்பதால், பம்பாயிலிருந்து கல்கத்தா போகவேண்டுமென்றால் அல்லது பம்பாயிலிருந்து சென்னை வரவேண்டுமென்றால் அல்லது தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு செல்ல வேண்டுமென்றால் ஏறத்தாழ 650 கிலோ மீட்டர்ஸ் அதிகமாக சுற்ற வேண்டியிருக்கிறது. அதையும் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

திரு. செ. கந்தப்பன் : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே ஆரம்பிக்க வேண்டுமென்று முதலியார் கமிட்டி என்கிற ஒரு கமிட்டி இந்தத் திட்டத்தையும் தூத்துக்குடி ஆழ் கடல் திட்டத்தையும் ஒன்றாக இணைத்துச் செய்ய பரிந்துரை செய்தது. இரண்டில் ஒன்றை விட்டுவிட்டு இன்னொன்றை ஆரம்பித்தால் அது லாபகரமாகயிருக்காது என்று இந்தக் குழு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. அப்படியிருந்தும் இந்த ஆழ்கடல் துறைமுகத்தை மட்டும் செயல்படுத்துகிற நிலையில் சேதுக் கடலை ஆழப்படுத்தும் திட்டத்திற்கு மத்திய அரசு ஏன் அங்கீகாரம் அளிக்கவில்லை என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தபோது அவர்களைச் சந்தித்து நான் இதை பாராளுமன்றத்தில் வலியுறுத்தும்படி நேரிலேயே சொன்னேன். அவர்களுக்கு நன்கு தெரியும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏதோ கால்வாய் வெட்டவேண்டுமென்று இருந்ததே தவிர 68-ல்தான் முடிவாக எவ்விதத்தில் எடுத்துச் செய்வது, வெட்டுவது என்பதைப்பற்றி தலைமைப் பொறியாளர் தெரிவித்து அந்தத் திட்டம் அனுப்பப்பட்டது.

திரு. எஸ். ஆறுமுகம் : இந்த சேது சமுத்திரத் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ? இதிலே மத்திய அரசின் பங்கு என்ன ? மாநில அரசின் பங்கு என்ன ? எந்த அடிப்படையில் மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் : இதில் மண்டபம் வழியாகப் போனால் ஏறத்தாழ 55 கோடி ரூபாய், அல்லது இராமேஸ்வரம் வழியாக,

குறுக்கு வழியாக வெட்டினால் ஏறத்தாழ ரூ. 37 கோடி ஆகும். இராமேஸ்வரம் வழி வெட்டுவதில் செலவு குறைச்சலாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது எல்லாத் தொகையையும் மத்திய அரசே போட வேண்டும் என்றுதான் கேட்டிருக்கிறோம். அவர்கள் அல்லவா சொல்ல வேண்டும். மாநில அரசும் கொஞ்சம் கொடுங்கள் என்று சொல்ல வேண்டுமென்றால் அவர்கள் அல்லவா சொல்ல வேண்டும்? ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்த பிறகு அதில் இன்னிது, யார் யாரால் போடப்படும், எந்த வங்கியிலிருந்து பெற வேண்டும் என்றெல்லாம் முடிவு செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இது பாதுகாப்பிற்கு இன்றியமையாத ஒரு திட்டம் என்ற காரணத்தால் அந்த அடிப்படையில் இதற்கு முதன்மையிடம் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன ஒரு முக்கியத்தன்மையை அரசு உணர்ந்திருக்கிறது. பாதுகாப்பிற்கு இது மிகுந்த அவசியம்.

Visit of Italian Agricultural Experts

* 504 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether the Italian Government's Agricultural experts have visited this State during January 1972 ;

(*b*) the details of the places they visited ; and

(*c*) the purpose of their visit ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) & (உ) : இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: நம் மாநிலத்திலுள்ள வேளாண்மை வல்லுநர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அவர்கள் அனுபவத்தை நம் விவசாயத் துறையில் புகுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கனவே அனுப்பப்பட்டு அவர்கள் பயிற்சி பெற்றதற்குப் பின் அது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. கே. எ. வகாப் : வேளாண்மைத் துறையில் ஜப்பான் நல்ல முறையில் முன்னேறியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே ஜப்பானிலிருந்து வேளாண்மைத்துறை நிபுணர்களை வரவழைத்து நம் வேளாண்மைத்துறையில் முன்னேற்றங்களைச் செய்வதற்கு அரசு முனையுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்த நாட்டுப் பொருளாதாரம், அந்த நாட்டில் இருக்கிற வசதி வாய்ப்புகள் இவற்றினை தமிழ் நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அவை சரியாக வருமா என்பது வேறு பிரச்னை. ஆனால் அங்கு கண்டுபிடிக்கப்படுகிற பல ஆராய்ச்சிகள் தமிழ்நாட்டிலும் இங்கு இருப்பவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு பயன் படுத்தப்பட்டு வருகிறது.

திரு. கோவை செழியன் : வேளாண்மைத்துறையில் விஞ்ஞான மேல் படிப்பிற்கு மேல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டு பின்பு அவர்கள் திரும்பி வருகிறபோது அரசாங்கமோ, பல்கலைக் கழகமோ சில நேரங்களில் அவர்களுக்கு தகுதியான வேலை தராமல் போய்விட்டது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது வேளாண்மைத் துறையில் மாத்திரமல்ல. பல்வேறு துறைகளில்கூட அப்படி அனுப்பப்பட்டவர்களுடைய பயிற்சி இங்கு பயன்படாத காரணத்தால் இப்போது அனுப்பப்படுகிற நேரத்தில் பரிசீலனை செய்து அனுப்பப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Thiru B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether any ryots have been deputed to other nations, so as to study the conditions of agriculture there ?

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம்: அப்படி இல்லை.

திரு. கு.அ. பொம்மன் : மைசூர் மாநிலத்தில் ஜப்பான் நிபுணர்கள் வந்து வேளாண்மைத் துறையில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதில் நல்ல வருவாயும் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, நம் மாநிலத்திலும் இதுபோல் ஜப்பானிய முறைகளை மேற்கொண்டு நமது வேளாண்மைத் துறையை முன்னுக்குக் கொண்டுவர அவர்களின் உதவியைப் பெறுவார்களா ?

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம் : தற்சமயம் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தமிழ்நாட்டிற்கு வந்து இங்குள்ளவற்றைப் பார்வையிட்டு தமிழ் நாட்டில் வேளாண்மைத்துறையில் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளை எல்லாம் பாராட்டி இதை தங்களுடைய பகுதிகளுக்கும் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லிவிட்டு சென்றிருப்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளியில் கலவை உரக்கிடங்கு

* 505 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி நகரசபையில் இயந்திரச் சாதன அமைப்புள்ள கம்போஸ்ட் உர டெப்போ ஒன்றை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 10.00 திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, திருச்சி நகராட்சி இப்போது கம்போஸ்ட் உரம் தயாரிக்கும் இடம் அரியமங்கலம், பொன்மலை போன்ற குடியிருப்புப் பகுதிகளில் இருக்கிறது. அதனால் சுகாதாரம் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அதை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி திருச்சிராப்பள்ளி நகரசபையின் இயந்திரச்சாதன அமைப்புள்ள கம்போஸ்ட் உர டெப்போ பற்றியதாகும். எனவே அது தனியாகக் கேட்கப்பட வேண்டிய கேள்வி. அப்படிக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல வேண்டியவர்கள் உள்ளாட்சித்துறை அமைச்சர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2· ஒற்றிவைப்புத் தீர்மானம்.

மதராஸ் அலுமினியம் கம்பெனியை நாட்டுடைமை ஆக்க வேண்டுமென்ற மாநில அரசின் கருத்துக்கு மத்திய அரசு இணங்காதது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. என். கே. பழனிச்சாமி அவர்கள் 42-வது விதியின்கீழ் இப்பேரவையை ஒத்திவைக்கக்கோரி கீழ்க் கண்ட பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள்:—

" Grave situation arising due to the non-agreeing to the proposal of the Tamil Nadu Government by the Central Government to nationalise the Madras Aluminium Company. "

இது எப்படி 42-வது விதியின்கீழ்வரும் என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என்.கே. பழனிசாமி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1956-ஆம் ஆண்டு இண்டஸ்டிரியல் ரெசல்யூஷன் பிரகாரம் அடிப்படைத் தொழில்கள் பூராவும் சர்க்கார் எடுத்துக் கொள்வது என்றும், மற்ற தொழில்களைத் தனிப்பட்டவர்களுக்கு விடவேண்டுமென்றும் அந்தத் தீர்மானத்தில் இருக்கிறது. ஆனால் இன்றைய தினம் விலைவாசி ஏற்றம், ஜனங்களின் தேவை இதை அனுசரித்து சாதாரண லைட் இண்டஸ்டிரீஸ்கூட, அதாவது சர்க்கரை, டெக்ஸ்டைல்ஸ் போன்றவற்றையும் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டுமென்று இந்தியா பூராவும் ஏகோபித்து கோரிக்கையாக இருக்கும்போது 1956—இண்டஸ்டிரியல் ரெசல்யூஷன் ம்ப பிரிவின்கீழ் இந்த அலுமினியம் தொழிற்சாலையை எடுத்துக் கொள்வதற்கு உரிமை இருந்தும்கூட, இதே மாதிரி உ.பி.யில் இண்டால்கோ எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்று அந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு வற்புறுத்தியுங் கூட, இந்த மாதிரி தேசியமயமாக்கும் கொள்கைக்கு முட்டுக் கட்டை போடும் நிலைமை இருப்பதால் இந்தச் சபையை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, மால்கோ தொழிற்சாலை இறுதியில் தேசிய மயமாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் இடைக்காலமாக அதனுடைய நிர்வாகத்தை மாநில அரசு எடுத்துக் கொள்ள அனுமதி கொடுக்க வேண்டுமென்ற ஒரு கொள்கை முடிவு இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் மத்திய அரசாங்கத்திற்கும் டேக் ஓவர் ஆப் மேனேஜ்மெண்ட், அதற்கான மசோதா தயாரிக்கப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது செய்திகள் வேறுவிதமாக வருகிற காரணத்தால்தான் இப்படிப்பட்ட அவசரப் பிரேரணை கொண்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன்.

.செய்திகள்கூட, இந்த மாநில அரசிலிருந்து அந்த மால்கோ சம்பந்தப்பட்டு எதுவுமே வரவில்லை என்று ஒரு செய்தியும், ஆனால் அதே சமயத்தில் சில தினங்களுக்கு முன்னால் இந்த மாநில அமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என்ற செய்தியும் ஒன்றுக்கு ஒன்று முரணாக வந்து இருக்கின்றன. நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே இந்த மன்றத்தில் என்ன கொள்கையை அறிவித்தோமோ அந்தக் கொள்கையின் அடிப்படையில் மசோதா அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மத்திய அமைச்சர் அண்மையில் அதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று அழைத்து இருந்தார்கள். நானும் சென்றிருந்தேன். அவர்களுடன் பல கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன. ஆனால் அந்தக் கருத்துக்கள் எல்லாம் வெளியே சொல்லக்கூடாது என்றும் ஒரு கருத்து கூறப்பட்டது. ஆனால் இப்போது பத்திரிகைகளில் வந்து இருக்கும் செய்திகளைப் பார்த்தால் அது எந்த அளவுக்குக் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது என்பது சந்தேகமாக இருக்கிறது.

இருந்தாலும், ஒரு தொழிற்சாலை நிர்வாகத்தை எடுப்பதோ, அல்லது தேசியமயமாக்குவதோ சட்டத்தின் சில அடிப்படைகளின் பேரில்தான் செய்ய முடியும். இங்கே விபரங்களை நான் ஒவ்வொன்றாகச் சொல்லி, பதில் சொல்வேன் என்றால் இறுதியில் நம்முடைய குறிக்கோள் நீதி மன்றத்திற்குச் செல்லும்போது சட்டப்படி செல்லாமல் இருப்பதற்கும் காரணமாகும். ஆகவேதான் நாட்டுடைமையாக்கும் தொழிற்சாலையைப் பற்றியோ மற்ற விபரங்களையோ நான் சொல்லவேண்டாம் என்று கருதுகிறேன்.

இதிலே முக்கியமாக எழுப்பப்பட்டிருக்கும் பிரச்னை பத்திரிகையில் விவாதத்திற்குரிய பிரச்னையாக வருவது, அயல் நாட்டு நிறுவனம் ஒன்று கூட்டாக கொலாபரேடர் என்ற முறையில் அந்தத் தொழிற்சாலையில் இருக்கிறது என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தைப் பொறுத்த அளவில் இப்போது எந்தப் பிரச்னையும் எழவில்லை. நாம் அந்த நிர்வாகத்தை எடுக்கச் சட்டம் அமைக்கப் போகிறோம். இறுதியில் நாட்டுடைமையாக்கவேண்டும். அப்போது அந்தப் பிரச்னை எழுமானால் மத்திய அரசாங்கம் அந்நியக் கூட்டு அதிலே தேவை என்று கருதுமானால் நம்முடைய மாநில அரசைப் பொறுத்த அளவில், அதிலே ஆட்சேபிக்க ஒன்றும் இல்லை என்றும் தெளிவாக்கியிருக்கிறோம். ஆனால் இப்போது வருகிற தகவல் எல்லாம் நாட்டுடைமையாக்குவதில் ஒரு பிரச்னை வரும் என்பதாகும். அந்தக் கருத்து வந்திருப்பதால் நாம் மீண்டும் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நாம் இப்போது கேட்டு இருப்பது டேக் ஓவர் ஆப் மேனேஜ்மெண்ட். **Take over of management with ulterior object of nationalising the industry** என்று அதிலே போட்டிருக்கிறோம்.

இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டு வருகிறபோது என்ன காரணம் சொல்ல முடியும். அரசியல் அமைப்புச் சட்டப்படி, 'பப்ளிக் பர்ப்பஸ்'. பொதுமக்களின் நன்மை என்ற அடிப்படையில் இந்த முயற்சி எடுக்கிறோம். இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்த அளவிற்கு, தமிழ் நாட்டைப் பொறுத்த அளவிற்கு ஒரேயொரு தொழிற்சாலை. ஆகவே, **discrimination will not arise.**

இந்த அலுமினியம் ஒரு மூலப்பொருள். அதிலே ஒன்றும் சந்தேகம் கிடையாது. இந்த மூலப்பொருள்களின் அடிப்படையில் பல்லாயிரக்கணக்கான தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதிலே சந்தேகம் கிடையாது. அந்த மூலப்பொருள்களை எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் வழங்குவதற்கு ஒரு அரசாங்கம் பொறுப்பேற்பது, தேசியமயமாக்கும் கொள்கைகளில் ஒன்றாகும். அதிலே ஆட்சேபனை யாரும் சொல்லி விட முடியாது.

இதிலே இன்னொரு கருத்து, நம்முடைய மாநில அரசே வினியோகிக்கும் பொறுப்பை எடுத்துக்கொண்டால் இந்திய நாடு முழுவதற்கும் வினியோகிக்கும் கொள்கை பாதிக்காதா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. எங்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு, பிற மாநிலங்கள் என்ற கருத்து வேறுபாடு கிடையாது. தமிழகத்தில் இருக்கும் மூலப்பொருள்களாக இருந்தாலும் அதை அகில இந்தியாவிற்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசு கொள்கை உருவாக்கினால் அந்தக் கொள்கைக்குக் கட்டுப்பட்டுத்தான், இந்திய நாடு முழுமைக்கும் பயன்படும் முறையில் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. நம்முடைய மாநிலத்திற்கு ஒரு தனி உரிமை கொடுக்க வேண்டுமென்று கொண்டுவரப்பட்டது என்ற கருத்து இருக்கிறதே அது தவறு என்றும் நான் சொல்லிக் கொள்கிறேன்.

விலைவாசியைக் கட்டுப்படுத்த அந்தத் தொழிற்சாலையை இன்னும் விரிவாக்க வேண்டும். அதிலே வேலை வாய்ப்புகள் அதிகமாக ஏற்படுத்தப்பட்டு, அந்த மூலப்பொருள்கள் அரசுக்கும் நல்ல முறையில் கிடைத்திட ஒரு பெரிய தொழிற்சாலையை எடுப்பது என்பது, அரசாங்கத் தீர்மானமாக, இண்டஸ்டிரியல் பாலிசியாக இருக்கிறது. ஆகவே, அந்தத் தொழிற்சாலையை அரசே சொந்தமாக நடத்த வேண்டுமென்பதுதான் நியாயம் என்று இந்த அரசாங்கம் கருதுகிறது. மத்திய அரசாங்கம் அந்தக் கருத்தைக் கொண்டு இருந்தால் இதுபற்றிப் பரிசீலனை செய்து நல்ல முடிவை எடுப்பார்கள் நாட்டுக்கு ஏற்ற முடிவை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இது சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்தில் விவாதித்ததற்குப் பின்னால் பிரதமர் அவர்களிடமும் சென்று அவர்களுடைய நம்முடைய அரசாங்கத்தின் கொள்கைகளை, கோரிக்கைகளை, அந்தத் தொழிற்சாலையைப்பற்றிய பல்வேறு விவகாரங்களைத் தந்து இருக்கிறோம். அவர்களும் நாங்கள் கொடுத்த விவரங்களை அமைதியாகக் கேட்டார்கள். அவற்றையெல்லாம் கொஞ்சம் பரிசீலித்து நம்முடைய முதலமைச்சர் அவர்களையும் கலந்துகொண்டு இறுதி முடிவு எடுப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இந்த முடிவு எடுப்பதற்கு முன்னாலே டெல்லியிலிருந்து தனியாருக்குச் சாதகமாக, இந்தத் தொழிலை நடத்தும் தனியாருக்குச் சாதகமாக, கருத்துக்கள் வெளியாவது துர்ப்பாக்கியமாகும். அதற்கு மத்திய அரசு வழிவகுக்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு மேல் இது குறித்து விவாதிக்க ஒன்றும் இல்லை என்றும் கூறிக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: On a Point of Order, Sir. I do not think the Hon. Minister for Industries has given the correct information to the House while replying to the discussion on the Industries Demand. We have already mentioned about this during the discussion on the

[Dr. H. V. Hande]

Industries Demand. The Hon. Minister's reply has given some misgivings. We have said that it will chase away the foreign collaborators. But the Hon. Minister in his reply flatly refused and said that such and such a thing will not happen. The whole thing could have been discussed thoroughly in the House and the Hon. the Minister for Industries could have taken the House into confidence. I want to know whether it is right on the part of the Hon. Minister not to take the House into confidence and place all the facts while replying to the discussion on the Industries Demand. Now we cannot discuss all these things when the Adjournment Motion is taken up.The facts and figures relevant to this issue may please be placed before the House. Otherwise, we will not be able to know how the interest of the foreign collaborators is affected and how they are really chased away, etc.

MR. DEPUTY SPEAKER: The Hon. Member, Dr. Hande, is going away from Rule 42.

DR. H. V. HANDE: I am not going away from Rule 42 at all. I am leaving the matter to them. The Hon. Minsiter has not placed all the facts and figures before the House. If all the facts and figures were placed before the House, the entire thing could be viewed in a proper perspective. Now we are not able to view them in a proper perspective. That is why, I am complaining against the Hon. Minister for Industries.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒழுங்குப்பிரச்சினை மூலமாக டாக்டர் ஹாண்டே அவர்கள் எதைச் சொல்ல நினைத்தார்களோ அதைச் சொன்னதற்காக நன்றி, மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எடுத்துக்கொண்ட பொருள், பொருள் இல்லாமல் இருக்கிறது. இந்த மால்கோ தொழிற்சாலையில் பாரின் கொலாபரேஷன் இருப்பது எல்லோருக்கும் தெரியும். அதிலே ஒன்றும் ரகசியம் கிடையாது. அதை மறைக்க வேண்டுமென்ற எண்ணமும் இல்லை. அந்த நிர்வாகத்தை எடுத்துக்கொள்வது என்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். அதற்கான மசோதா தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அது எல்லோருக்கும் தெரிந்த கருத்தாகும். ஃபாரின் கொலாபரேடர்ஸ் இருக்கிறார்கள். அதுவும் எல்லோருக்கும் தெரிந்து இருக்கும். எவ்வளவு சதவிகிதம் போட்டு இருக்கிறது, அது பாதிக்கப்படுமா? மத்திய அரசாங்கம் தலையிட்டு ஆட்சேபிப்பார்கள் என்று கூறியது நியாமல்ல. அந்தக் கருத்து வேண்டாத ஒன்று என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்தில் தெரிவித்த கருத்துக்கு எந்த விதமான கருத்து மாறுபாடும் கிடையாது. அந்தத் தொழிற்சாலையைத் தேசியமயமாக்க வேண்டுமென்று கொள்கை சொல்லியிருக்கிறோம்.

[திரு. செ. மாதவன்]

தொழிற்சாலையின் நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கின்றோம். இதுதான் மன்றத்திற்குத் தரப்பட்ட தகவல். இதில் எதும் மறைக்கப்படவில்லை. ஆட்சேபித்தால் மத்திய அரசு எடுத்துக்கொள்ளுவதா என்பது மத்திய அரசின் பிரச்னை. நாம் இதை நாட்டுடமையாக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

திரு ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, சமதர்மக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற மத்திய அரசுக்கு இந்த மாதிரி மால்கோ அலுமினியத் தொழிற்சாலையை எடுப்பதில் என்ன சங்கடம் இருக்கிறது? அடிப்படையில், இந்த மாதிரியான தொழிற்சாலையை நிச்சயமாக தேசிய உடமையாக்குவதில் தத்துவ ரீதியாவும் ஆட்சேபனை இருக்க முடியாது.

மேனேஜ்மெண்ட்டை மட்டும்தான் எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக மசோதா கொடுத்திருக்கிறேன் என்று அவர்கள் தெரிவித்தார்கள். இந்த விஷயத்திற்கு என்ன ஆட்சேபம் இருக்க முடியும்? மசோதா வரும் என்று எதிர்பார்க்கிறேன். சில பலனற்றுப் போயிருந்தால் அதைப்பற்றி வருத்தப்படத் தேவையில்லை. என்ன கொள்கை அடிப்படையில் எதிர்க்கிறார்கள்? 'இந்து' பத்திரிகையில் சில விவரங்கள் எல்லாம் தந்திருக்கிறார்கள். முக்கியமான தொழிலாக இருக்கிற காரணத்தால், எந்த விதமான கட்சிப் பாகுபாடும் அற்ற நிலையில் நமது மாநில அரசு அந்தக் கம்பெனிக்கு எலெக்ட்ரிசிடியில் கன்செஷன் கொடுக்கிற காரணத்தால் இதை எடுப்பதில் எந்த விதமான ஆட்சேபமும் இருக்க முடியாது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எதிர்க்கட்சித் தலைவர் இன்னொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமைக்கு மகிழ்ச்சி. பிரதம அமைச்சரிடம் பேசும்போதும் இதைப்பற்றியும் குறிப்பிட்டேன். இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் ஆளுங் காங்கிரஸ் உட்பட எல்லா எதிர்க் கட்சிகளும் ஒத்த கருத்துக் கொண்டிருக்கிறார்கள். யாரும் வேண்டாமென்று வற்புறுத்த மாட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில் தனிப்பட்ட அமைச்சர் ஒருவர் டெல்லியிலே மாற்றுக் கருத்துதைக் கொடுப்பது சரியல்ல என்றுதான் கருத வேண்டியிருக்கிறது.

இதற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டன. ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் ஒரு காரணம். இந்தச் சட்டம் கொண்டுவருவதற்கு முன்னால் என்னென்ன காரணங்களால் எதிர்க்க முடியும் என்று வாதிட ஆரம்பித்து, நாங்கள் பதில் சொல்ல, அதன் விளைவாக, நீதிமன்றத்தில் சட்டம் செல்லாது என்று கொண்டுசெல்வார்களேயானால் ஆபத்து இருக்கிறது. எனவே, நான் அந்த விவாதத்திற்குப் போக விரும்பவில்லை. ஃபாரின் கொலாபரேடர் என்ற முறையிலே ஃபாரின் கொலாபரேடர் தான் இந்தத் தொழிற்சாலையை நடத்துவது தேவை என்று மத்திய அரசு கருதுமேயானால், இந்த மாநில அரசைப் பொறுத்தவரையில் அந்த ஃபாரின் கொலாபரேஷனையும் ஏற்றுக்கொள்வது — இதில்

[திரு. செ. மாதவன்]

ஆட்சேபணை இல்லை என்ற கொள்கையைப் பிரதம அமைச்சரிடம் தெளிவாக்கி இருக்கிறோம். இதில் கொஞ்சம்கூட வேறுபாடு கிடையாது.

சுதந்திராக் கட்சி எந்தக் கொள்கையை வைத்திருந்தாலும் டாக்டர் ஹாண்டே எப்போதும் எங்கள் பக்கம் தான் இருக்கிறார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் ஒரு துர்ப்பாக்கியமான நிலை ஏற்படும் என்று நான் நம்பவில்லை. இதில் அவர்களுடைய நிலை எப்படியிருந்தாலும், திரு சுரேந்திரன் கொஞ்சங்கூட விட்டுக்கொடுக்க மாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனவே, நாட்டுடைமைக் கொள்கையிலே அவர்களும் ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, சுதந்திராக் கட்சித் தலைவர் தங்களுடைய கொள்கையை மத்தியில் இருக்கிற அரசு ஏற்றுக் கொள்கிறது என்று சொல்கிறார்கள். அதை நான் ஏற்றுக்கொள்ள வில்லை. மிகமிகத் தவறானது என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதி 42-இன்கீழ் எல்லோரையும் பேச அனுமதிப்பதில்லை. இப்பொழுது வாதம் ரொம்பதூரம் போய்க்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாநில அரசினுடைய "மால்கோ" தொழிற்சாலையைத் தேசீய மயமாக ஆக்க வேண்டுமென்ற திட்டத்தின் முன்னோடியாக அதனுடைய நிர்வாகத்தை மாநில அரசு ஏற்கவேண்டுமென்ற கருத்தினைத் தொழிலமைச்சர் அவர்கள் இங்கே விளக்கமாக அளித்தார்கள். நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் சுதந்திராக் கட்சியினுடைய கொள்கையைத்தான் மத்திய அரசு கடைப் பிடிக்கிறது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தார்கள். அதை ஆளும் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மாரிமுத்து அவர்கள் மறுத்திருக்கிறார்கள். எனக்கு இருக்கின்ற கவலையெல்லாம் நல்ல சோஷலிச மாதா என்று பெயரெடுத்த திருமதி இந்திரா காந்தி அம்மையாருக்கு இப்படிப்பட்ட சுதந்திராக் கட்சி உள்ளத்தோடு இருக்கிறார்கள் என்கின்ற ஒரு பட்டத்தை மத்திய அரசிலே இருக்கின்ற எந்த அமைச்சரும் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதை நான் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால், சோஷலிசத் திட்டங்களை இந்தியாவிலே நிறைவேற்றக் கூடிய முன்னோடியாக பிரதமர் அவர்கள் இருக்கிறார்கள் என்ற அந்த நல்ல திருப் பெயருக்கு யாரும் களங்கம் கற்பித்துவிடக் கூடாது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமன்றத்திலிருக்கின்ற சுதந்திரா, மற்றும் எல்லாக் கட்சிகளும் இந்த தேசீய மயமாக ஆக்க வேண்டுமென்ற கொள்கையை ஒத்துக்கொண்டிருக்கிற நேரத்தில் இந்த மாமன்றத்தினுடைய கருத்துக்களுக்கு மத்திய அரசு நல்ல முறையிலே செவி சாய்க்க வண்டுமென்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே, ஏற்கெனவே இந்த விவரங்கள் எல்லாம் இந்தமன்றத்திலே விவாதிக்கபட்டிருக்கின்றன......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் உங்கள் பெயரைச் சொன்னார்கள் என்பதற்காக உங்களைப் பேச அனுமதித்தேன். சுருக்கமாகச் சொல்வீர்கள் என்று நினைக்கிறேன். ரொம்ப ரொம்ப தூரம் போகாமல் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எம் சுரேந்திரன் : சுருக்கமாகவே சொல்கிறேன். இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களில் ஏற்கெனவே சொன்னபோது நான் சொன்னேன், ஆனால், தேசீய மயமாக்குவதை நான் ஆதரிக்காதது மாதிரி நான் சொன்னதாக ஒரு கருத்து இங்கே உலாவிக்கொண்டு இருந்தது. அது சரியானதல்ல என்று நேரிலேயே சொல்ல இருக்கின்றேன். இப்போது இந்த நிலையை எடுத்துக்கொள்ள மாட்டோம், ஒரு பில் கொண்டு வருவதாகச் சொல்லப்பட்டிருந்தது. தேசீய மயமாக்குவதற்கும் நிர்வாகத்தை எடுத்துக்கொள்வதற்கும் இருக்கின்ற மாறுபாடு வேறு இருக்கிறது. இதெல்லாம் எப்படி இருந்தாலும்கூட, "மால்கோ" வை தேசிய மயமாக்க வேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது என்பதில் சந்தேகமில்லை. நான் ஏற்கனவே சொன்னதைப்போல இந்தச் சர்ச்சை இங்கே வரக்கூடாது என்பதற்காகவும் முறையாகச் செய்ய வேண்டுமென்பதற்காகவும் மத்திய அரசுடன் ஆலோசனை செய்து இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கலாம் என்று சொன்னேன். இப்போது இந்த அரசை எடுத்துக்கொண்டால் மத்திய சர்க்கார் எப்படி இருந்தாலும் "மால்கோ" தொழிற்சாலையைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று உறுதியாக நிற்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு கருத்தினை வெளியிடுகின்ற உரிமையைக்கூட மாநில அரசுக்கு விட்டுவிடக் கூடாது என்கின்ற மத்திய அரசின் நிலையை மாண்புமிகு உறுப்பினர் மறந்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறியதிலிருந்து, இந்த மன்றத்திற்கு, தேசீய மயமாக்காமலிருப்பதன் ஆபத்து தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டிய அவசியம் இல்லாத காரணத்தால், ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதியை மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.—

செங்கல்பட்டு மாவட்டம், திருத்தணி வட்டத்தில் இரசாயன உர விநியோகம் குறைந்த அளவு இருப்பதனுல் விவசாயிகள் படும் கஷ்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையை திரு. ஈ. எஸ். தியாகராசன் அவர்கள் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, "செங்கல்பட்டு மாவட்டத்தில் குறிப்பாக திருத்தணி வட்டத்தில் குறைந்த அளவு இரசாயன உர விநியோகத்தினுல் விவசாயிகள்படும் கஷ்டம்" என்பது குறித்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, 1-4-72 முதல் 28-2-1973 முடிய திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவும் திருத்தணி கூட்டுறவு விற்பனை நிலையத்தின் மூலமாகவும் திருத்தணி வட்டத்தில் விநியோகிக்கப்பட்ட பலவகை இராசயன உரங்களின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	மெட்ரிக் டன்கள்.
யூரியா	630
அம்மோனியம் சல்பேட்	480
டை-அம்மோனியம் பாஸ்பேட்	225
என். பி. கே.	70
முரியேட் ஆப் பொட்டாஸ்	2

2. 1-4-1972 முதல் 1973 முடிய செங்கற்பட்டு மாவட்டத்தில் விநியோகிக்கப்பட்ட இரசாயன உரங்களின் மொத்த அளவு வருமாறு :—

விநியோகம் செய்யப்பட்ட மொத்த உரம்.	உர வாரியாக அளவு விவரம். மெ.ட.
14,360 மெட்ரிக் டன்கள்—	
யூரியா	8,407
அம்மோனியம் சல்பேட்	3,502
என். பி. கே.	1,410

விநியோகம் செய்யப்பட்ட மொத்த உரம்.	உர வாரியாக அளவு விவரம். (மெட்ரிக் டன்கள்.)
டை-அம்மோனியம் பாஸ்பேட்	1,007
முரியேட் ஆப் பொட்டாஸ்	27
கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்	7
ஆக மொத்தம்	14,360

ஆகவே மொத்தமாக 14,360 மெட்ரிக் டன் மாவட்டம் பூராவுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாவற்றிலிருந்து 1972-73-ஆம் ஆண்டில் திருத்தணி வட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு இரசாயன உர நெருக்கடி ஏற்படவில்லையென்பதும் அதனுல் அவர்களுக்கு யாதொரு துன்பமும் விளைவிக்கப்பட வில்லை என்பதும் தெரியவரும். 1972-73-ஆம் ஆண்டு நவரைப் பருவத்தில் அதிக விளைச்சல் தரும் பயிர் வகைகள் திட்டம் செயலாக்கபட்டபொழுது, மொத்த ஒதுக்கீடான 28,500 எக்கர் நிலத்தில், திருத்தணி வட்டத்தில் மட்டும் மத்திய உரத் தொகுப்பி லிருந்தும் தனியார் உர நிறுவனங்களிலிருந்தும் இரசாயன உரங்களைப் பெற்று 17,100 எக்கர் நிலம் (75 சதவிகிதம்) விவசாயம் செய்யப்பட்டது. 7-2-1973, 8-2-1973 தேதிகளில் நடைபெற்ற மாவட்ட விவசாய அதிகாரிகள், வட்டார அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் இதர விவ சாய அலுவலர்கள் மாநாட்டில் நவரைப் பருவத்தில் மீதி 40 சதவிகிதம் நிலங்களில் பயிர் செய்ய அம்மோனியம் சல்பேட்டு மற்றும் டை-அம் மோனியம் பாஸ்பேட் போன்ற உரங்கள் எல்லா ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும் மேல் உரங்களுக் காகவும் கீழ் உரங்களுக்காகவும் வழங்கப்படும் என்று முடிவு செய்யப் பட்டது.

4. தற்போது அரசின் கணக்கிலுள்ள இரசாயன உரங்களின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

		(மெட்ரிக் டன்கள்.)
1.	யூரியா	1,855
2.	அம்மோனியம் சல்பேட்	2,660
3.	டை-அம்மோனியம் பாஸ்பேட்	1,900
4.	என். பி. கே.	15
5.	முரியேட் ஆப் பொட்டாஸ்	15
	மொத்தம்	6,445

[திரு. மன்னை ப. நாராயணசாமி]

1972–73-ஆம் ஆண்டு துவக்கத்தில் தமிழ் நாடு முழுவதும் அதிலும் குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தில் இராசயன உர நெருக்கடி இருந்தது. எனவே, அரசினிடமுள்ள இரசாயன உர அளவைக் கணக்கிட்டு எல்லா வட்டத்தையும் போல் திருத்தணி வட்டத்திற்கும் இரசாயன உரம் விநியோகிக்கப்பட்டது.

தற்போது செங்கல்பட்டு மாவட்டத்தில் இரசாயன உர இருப்பு விவரம் போதுமான அளவு முன்னேறியுள்ளது. அரசும் உரத்தின் தேவை நிலை பற்றிய விவரங்களைக் கணித்து, நிரந்தரமான தேவையுடைய இடங்களுக்கு இரசாயன உரத்தை உடனுக்குடன் வழங்கி வருகிறது. இந்தியா முழுவதிலுமே இரசாயன உர நெருக்கடி பரவலாக இருந்து வருகிறது. தமிழ் நாடு அரசு மத்திய உரத் தொகுப்பிலிருந்து எவ்வளவு உரம் பெற முடியுமோ அவ்வளவு உரத்தைப் பெறுவதற்குத் தன்னாலான எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1973–74-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மானியக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு.

திரு. கா. காளிமுத்து: பாயின்ட்-ஆப் ஆர்டர், சார், தலைவர் அவர்களே, கடந்த 12-ம் தேதி மானாமதுரைக்கு அருகில் எங்கள் கட்சித் தோழர்கள் அன்பழகன், ராஜேந்திரன் தாக்கப்பட்டதைக்குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது சம்பந்தமாக அறையில் வந்து கேளுங்கள்.

4. 1973–74-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு.—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 24—சின்கோனா.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 40—காட்டு வளத்துறை.

(இ) நிதிக் கோரிக்கை எண் 49—காட்டு வள மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் "நிதிக் கோரிக்கை எண் 24—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 75,74,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கு. அ. பொம்மன்: தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண். 24.—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 75,74,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, சின்கோனாத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்துப் பணி நிலையைச் சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதி கோரிக்கை எண். 24—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 75,74,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பரிவுரையினமேல்—

"நிதிக் கோரிக்கை எண். 40—காட்டுவளத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,78,25,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 2,78,25,800 under Demand No. 40—Forest Department—Be reduced by Rs. 100."

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 2,78,25,800 under Demand No. 40—Forest Department—be reduced by Rs. 100."

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, காட்டுவளத்தைப் பெருக்க மரம்நடும் விழாக்கள் நடத்தலாம் என்பது பற்றிப் பேச—

"நிதி கோரிக்கை எண். 40—காட்டுவளத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 2,78,25,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, முதுமலைக் காட்டில் பணிபுரியும் யானையைப் பழக்கும் பணி போன்றவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வும் குடியிருப்பு வசதியும் செய்து கொடுக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதி கோரிக்கை எண் 40—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 2,78,25,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல்

"நிதிக் கோரிக்கை எண் 49—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,46,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் படவேண்டும்" என்ற தீர்மானத்தை முன் மொழிகின்றேன்.

Dr. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 2,46,64,000 under Demand No. 49—Capital Outlay on Forests—be reduced by Rs. 100."

Thiru J. JAMES : Sir, I move the following cut motion to discuss about the necessity to pay bonus for the labourers working in Government Rubber Plantation in Kanyakumari District—

"That the allotment of Rs. 2,46,64,000 under Demand No. 49—Capital Outlay on Forests—be reduced by Rs. 100."

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை மீது முதலிலேயே ஒரு திருத்தத்தைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மானியக் கொள்கைக் குறிப்பில் இரண்டாவது பக்கத்தில் 1972–73-ம் ஆண்டில் 355 லட்சம் ரூபாய்க்குப் பதிலாக 405 லட்சம் என்று மாற்றிக் கொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதங்களுக்குப் பிறகு பதில் அளிக்கிறேன் என்று சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் 12 மணிக்கு ஒரு கமிட்டிக் கூட்டத்திற்குச் செல்லவேண்டும் என்று கூறினார்கள். ஆகவே விவாதத்தை 12 மணி வரை வைத்துக் கொள்ளலாம்........

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்களுக்கு இரண்டு துறைகளிலும் கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி இருக்கும் காரணத்தால் இன்னொரு அமைச்சர்கூட எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உணவுத் துறை, விவசாயத் துறை என்றிருந்தாலும் பேசுகின்ற உறுப்பினர்களுக்குக் கூட சங்கடம் இருக்கிறது. ஆகவே தனித்தனியாகப் பேசினாலாவது உரிய பதில் கொடுக்க இயலும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மத்திய அரசிலிருந்து ஒரு குழுவினர் அமைச்சரைச் சந்திக்க வருகிறார்கள் என்று சொல்லியிருந் தார்.

திரு. து. ப. அழகமுத்து : பாயின்ட்ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே இங்கே ஆளும் கட்சியினர் நாங்கள் 175 பேர் இருந்தாலும், எதிர்க்கட்சிக் காரர்களுக்கு அதிகச் சலுகை காட்டப்பட்டு வந்திருக்கிறது, அவர்களுக்குப் பாதி நேரம், எங்களுக்குப் பாதி நேரம் ஒதுக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் நடைமுறையில் எப்படியிருக்கிறதென்றால், நேற்றைய தினம் காலையிலே 3 மணி 10 நிமிடம், மத்தியானம் 4 மணி 50 நிமிடம் ஆக 8 மணி நேரம் விவாதம் நடந்தது. அதில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் 5 பேர்கள், 84 நிமிடங்கள், முதல்வர் அவர்கள் ஒரு மணி 2 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள். ஆக, மொத்த நேரத்தில் $\frac{1}{4}$ பங்குதான் எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்களுக்கு அரைப் பங்கு கிடைக்கவில்லை. இது எங்களுக்குக் சங்கடமாக இருக்கிறது (ஆரவாரம்). நான் பேரைக் குறிப்பிடும்போது நீங்கள் ஒவ்வொருவராக அடித்துவிடு கிறீர்கள். ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள் உங்களிடத்திலே கேட்டுவிட்டால் அவர்களுக்கு அனுமதி கொடுத்துவிடுகிறீர்கள். ஆக அவர்கள் எங்களுடைய உரிமையிலே தலையிடாதவாறு நேரத்தை எடுத் துக் கொள்ளாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அரசாங்கக் கொறடா அவர்கள் ஆளுங் கட்சி உறுப்பினர்களிடத்தில் நேரடியாகப் பதில் சொல்ல முடியாமல், அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள, தங்க ளுக்கும் அவர்களுக்கும் என்ன நடந்தது என்பதைப் பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவருடைய கோரிக்கையைக் கொஞ்சம் ஏற்று ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முற்பகல் 10-30 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு வகையில் எனக்கு மகிழ்ச்சி. இதுவரையில் பிரதம கொறடா அவையில் வாய் திறந்ததில்லை. இன்றைக்குச் சொல்லியிருக்கிறார். உண்மையிலேயே நியாயமான கோரிக்கைதான். எதிர்கட்சிக்காரர்கள் மைனாரிட்டிகள். மைனாரிட்டிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு நேரத்தை அதிகமாகக் கொடுக்கிறோம். அதனால் எதிர்க்கட்சிகள் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்கிறார்கள். ஒரு கட்சிக்கு இவ்வளவு நேரம் என்று ஒதுக்கி வைத்துப் பார்த்தோம். அதுவும் சரியாக வரவில்லை. இந்தப் பிரச்னையைப் பற்றி பின்னர் கமிட்டி கூடும்போது பேசிக் கொள்ளலாம். தலைவர்களையெல்லாம் கலந்து முடிவு எடுத்துக் கொள்ளலாம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மக்களுடைய நல்வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கக்கூடிய காட்டுவன மானியத்தை வரவேற்று ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்துள்ள அறிக்கையிலே குறைந்த பட்சம் 33 சத விகிதம் காட்டு வளம், காடுகள் இருக்க வேண்டும் என்றிருக்கிறது. தற்போது தமிழ்நாட்டில் 16 சதவிகிதம்தான் காடுகள் உள்ளன. இது போதாது. ஆகவே, காடுகளை உற்பத்தி செய்ய அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், நாடு செழிப்படையக் காடுகள் இருந்தால்தான் மழை பெய்யும். அதன் மூலம் தான் நீர்த்தேக்கங்களில் நீர்பிடிப்பு ஏற்படும் என்று அறிந்துள்ளனர் விஞ்ஞானத்தின் மூலம். ஆகவே, தற்போது போதுமான அளவுக்கு நீர்பிடிப்பு நீர்த்தேக்கங்களில் தங்காத காரணம் காடு வளம் குறைந்திருப்பது ஒரு காரணமாக இருக்குமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. ஆகவே அரசாங்கம் இதில் தீவிரக்கவனம் செலுத்தி, இன்னும் காடுகளை விஸ்தரிக்க எங்கெங்கு சாத்தியம் இருக்கிறதோ, அங்கெல்லாம் காடுகளை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அந்த வகையில் சொல்லும்போது உள்ள காடுகள் சரியாகப் பாதுகாக்கப்படவில்லை என்ற குறை இருந்துகொண்டிருக்கிறது. காடுகளின் அருகாமையில் உள்ள கிராம வாசிகள் அதையே தொழிலாகக்கொண்டு காடுகளைக்கண்டபடி, "இண்டிஸ்கிரிமினேட்" என்ற முறையில் அழித்து வருகிறார்கள். திருட்டுத் தனமாக காடுகளை அழித்து, மரங்களை வெட்டி, விற்பனை செய்து வருவாய் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இதன்மூலமாகக் காடுகள் வெகு சீக்கிரமாக அழிந்து வருகின்றன. இது ஏழைகள் செய்யக்கூடிய விஷயம். இதைக்கூட மன்னிக்கலாம்.

இரண்டாவது வகைத் திருட்டு, வியாபாரத் திருட்டு. இந்தப் பெரும் திருட்டு மிகப் பெரிய அளவில் நடந்துகொண்டிருக்கிறது. "கூப்" என்ற முறையிலே காடுகளில் மரங்களை வெட்ட ஏலம் விடுகிறார்கள். 100 டன் வெட்ட வேண்டும் என்றால், 500 டன் வெட்டிக் கொள்வது மிகச் சர்வ சாதாரணமாக நடைபெற்று வருகிறது. இதைக் கண்

காணிக்கத் தக்க நடவடிக்கைகள் இல்லை. இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சில சந்தர்ப்பங்களில் அவர்களுடன் கைகோர்த்துக் கொண்டு விடுகிறார்களோ என்று சந்தேகிக்கக் கூடிய அளவிற்குக் காரியங்கள் நடைபெறுகின்றன.

உதாரணமாகச் சொல்லுவார்கள் நண்பர்கள். ஜவ்வாது மலையில் வளமான காடுகள் உண்டு. அங்கே சந்தன மரங்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன. சந்தன மரங்களுக்குப் புகழ்பெற்றது ஜவ்வாது மலைதான். அந்தக் காடுகளில் சந்தன மரங்களை வெட்டுவதற்கு ஏலம் எடுக்கிறவர்கள், அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் அதிகமான அளவுக்கு சந்தன மரங்களை வெட்டிக் கொள்கிறார்கள். அரசாங்கம் அனுமதித்த அளவுக்கு மேல், அனுமதி இல்லாமலேயே ஒன்றுக்கு மூன்று மடங்கு சந்தன மரங்களை ரகசியமாக, திருட்டுத் தனமாக வெட்டப்பட்டு, நமது மாநிலத்திற்கு மாத்திரமல்லாமல், வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இது அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும்.

கல்கத்தா போன்ற நகரங்களில் மார்கெட்டுகளிலும், கடை வீதிகளிலும் ஜவ்வாது மலையில் வெட்டப்பட்ட சந்தன மரங்கள் விற்கப்படுகின்றன. இதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. மாநிலத்திற்கு மாநிலம் நமது போலீசை அனுப்பி இம்மாதிரித் திருட்டு வியாபாரம் செய்கிறவர்களை கைது செய்திருக்கிறார்கள். இருப்பினும் இது போதாது என்று தெரிவித்துக் கொள்வேன். அறவே, இந்தத் திருட்டுத் தொழில் ஒழிக்கப்பட வேண்டும். இந்த விஷயத்தில் அரசாங்கம் தக்க கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் சந்தன மரங்களைப் பயன் படுத்தி பல உப தொழில்கள் ஆரம்பிக்க வேண்டும். சந்தன எண்ணெய் செய்தல், சந்தன சோப்பு செய்தல், சந்தனப் பவுடர் செய்தல், இவற்றிற்கான தொழிற்சாலைகளை ஆலங்காயம், வாணியம்பாடியில் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நான் விடுகின்றேன். 1971—72-ல் 4,56,000 ரூபாய் வருமானம் என்றும், 1972—73-ல் ரூபாய் 3,57,000 வருமானம் என்றும் அரசாங்கம் கொடுத்திருக்கின்ற கணக்கிலிருந்து தெரிய வருகிறது. வருவாய் நாளுக்கு நாள் கூடிக்கொண்டு போகவேண்டியதிருக்க, குறைந்து கொண்டு போவதேன் என்று தெரியவில்லை.

ரப்பர் தோட்டங்கள் கன்னியாகுமரியில் வளர்ப்பது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இலங்கையிலிருந்து ஏராளமான அகதிகள் நம் நாட்டுக்கு வந்து சேரவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களை ரப்பர் தோட்டங்களில் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில், அதன் மூலம் அவர்களுக்கு வாழ்க்கை வசதி ஏற்படுத்த அரசு கடமைப்பட்டிருக்கிறது.

[திரு. நா. வீராசாமி—தலைமை]

அடுத்ததாக, நீலகிரி மலைப் பகுதிகளில் சுற்றிப் பார்த்தபோது அரசாங்கத் துறையில் தேயிலைத் தோட்டங்கள் மிகக் குறைவு என்று தெரிய வந்தது. 500 என்ற அளவுக்குத்தான் தேயிலைத் தோட்டங்கள்

இருப்பதாகத் தெரிகிறது. தேயிலை வருவாய் உள்ள தொழில். பிளாண்டேஷன் எஸ்டேட்கள் வைத்திருப்பவர்கள் பெருங் கோடீஸ்வரர்களாக, லாபம் உள்ளவர்களாக, நிலச்சுவான்தார்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். தேசவுடமைக் கொள்கையை அனுசரித்து வரும் நமது அரசு தேயிலைத் தோட்டங்களிலும் ஈடுபட்டு பயிற்சி பெறத் தக்க வகையில் எங்கெல்லாம் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்கள் மலைச் சரிவில் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் தேயிலை பயிரிட்டால், சிறுகச் சிறுக பெரும் முதலாளிகளின் தோட்டங்களை மட்டுமல்ல, எல்லாத் தனியார் தோட்டங்களையும் பெற்றுக் கொள்ள வசதியாக இருக்கும். ஆகவே, இந்தத் தேயிலை விஷயத்தில் அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதிக வருமானமும், அந்நியச் செலாவணியும் பெற்றுத் தரக்கூடிய தொழில், தேயிலைத் தோட்டத் தொழில். ஆகவே இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

மிளாறுப்பட்டை இப்போது நமக்குத் தென்னாப்பிரிக்காவிலிருந்து கிடைத்துக் கொண்டிருக்கிறது. தோல் பதனிடும் தொழில் தமிழ்நாட்டில் மிக முக்கியமான தொழில். அதுவும் கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு ஏற்றுமதிப் பொருட்களை கொடுத்து அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் தொழில். அந்தத் தொழிலுக்கு வேண்டிய மிளாறுப்பட்டையை எலகிரி மலையில் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு வழிவகைகளைச் செய்து தர வேண்டும்.

தனியார் துறையில் வளர்க்கின்ற காடுகளை ஊக்குவிக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. தனியார் காடுகளை வளர்த்து பயன்பெற முடியாது. அவர்களுக்கு அதிகமான தொகையை மான்யமாகக் கொடுத்து வீணடிப்பதைவிட, அரசாங்கமே ஆங்காங்கே காடுகளை புறம்போக்கு இருக்கிற இடங்களில் எல்லாம் வளர்ப்பதற்கு முன்வர வேண்டும். தனியாருக்குப் பணத்தைக் கொடுத்து வீணடிக்க வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்துக் கொள்ளுகிறேன்.

ஏரிக் கரைகளில், வாய்க்கால் கரைகளில் தேக்கு வளர்த்தால், கனரக மரங்களை வளர்த்தால் நல்லது. தஞ்சை மாவட்டத்தில் சில வாய்க்கால் கரைகளில் மரங்கள் வளர்க்கப்படுவதைப் பார்க்கின்றேன். அவை செழிப்பாக இருக்கின்றன. அந்த மாதிரியான நல்ல திட்டங்களை ஊக்குவித்து, தேக்கு மரங்களை வளர்க்க உதவி செய்தால் அந்த மரங்கள் அரசாங்கத்திற்கு வருவாய் தேடித் தருவதோடு, கரைகளுக்கும் பாதுகாப்பாக இருக்கும். கரைகளுக்குச் சுவர் எல்லா இடங்களிலும் கட்ட முடியாது.

ஆகவே ஏரிக் கரைகளில் வாய்க்கால் கரைகளில் தேக்கு போன்ற மரங்களை வளர்க்க, பொதுப்பணித் துறையின் மூலம் உதவி அளித்து, பொதுப்பணித் துறை ஊழியர்களே அந்தக் கடமையைச் செய்ய வேண்டுமென்று சொன்னால் அது நல்ல பயனைத் தரும். இதிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது விறகின் விலையை நினைத்தால் உண்மையிலேயே பயங்கரமாக இருக்கிறது. குடும்பத்தை நடத்துகின்ற பெண்களுக்குத்தான் விறகின் விலையைப் பற்றித் தெரியும். 5, 6 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த விலையைவிட மூன்று நான்கு பங்கு விலை கூடியிருக்கிறது. ஆகவே, விறகிற்கான மரங்களை வளர்ப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். உதாரணமாக சவுக்கு மரங்களைத் தஞ்சை கடற்கரைப் பகுதியில், திருச்சி போன்ற பகுதிகளில், மணல் பாங்கான பகுதிகளில் நன்றாக வருவதால், ஏக்கருக்கு 10,000 ரூபாய் வரையில் சம்பாதிக்கிறார்கள். ஏராளமான புறம்போக்கு நிலங்கள் அரசாங்கத்திற்கு சொந்தமாக இருக்கின்றன. அவற்றில் சவுக்கு மரங்களை வளர்க்க அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, இந்தக் காட்டு பொருள்களை—காட்டு மரங்களை நல்ல சைசாக வெட்டி, பல உபயோகங்களுக்குப் பயன்படுத்த வகை செய்ய வேண்டும். அதற்கு எங்கெல்லாம் அதிகமாக மரங்கள் கிடைக்கின்றனவோ அந்தப் பகுதிகளிலே அறுவை இயந்திரங்களை வைத்து—சா மில்ஸ் மரங்களை சைஸ் வாரியாக அறுத்து விற்பனை செய்யலாம். அதனால் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்; இந்தத் துறைக்கும் வருமானம் கிடைக்கும். குறிப்பாக நீலகிரியில் "சா மில்ஸ்" வைக்கலாம். அதைப் போன்று மரம் அதிகமாகக் கிடைக்கின்ற இடங்களிலே 'சா மில்ஸ்' வைக்கலாம். (மணியடிக்கப்பட்டது.) இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி விடுகிறேன்; ஒரு நிமிடம் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): இந்த மானியத்திலே நமக்கு இருக்கிற நேரம் இன்னும் 1½ மணிதான். அதற்குள் பேச இருக்கின்ற உறுப்பினர்கள் 10 பேர். அதற்குப் பின்னர் அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டும். ஆகவே, ஒவ்வொருவருக்கும் 5 நிமிட நேரம் தான் வரும், நீங்கள் 10 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். ஆகவே, இதற்கு மேல் நேரம் ஒதுக்க முடியாது. உறுப்பினர்களை 5 நிமிடத்திற்குள் பேசி முடித்து விடும்படி கேட்டுக்கொள்கிறேன். அடுத்து திரு. முருகையன் பேசுவார்.

திரு. எஸ். முருகையன்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற வனத்துறை, சின்கோனா மானியங்களின்மீது—இவைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

நாட்டிலே காடுகள் இருக்க வேண்டிய இடத்தை விட சற்றுக் குறைவாக இருக்கிறது என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் காடுகளை வளர்ப்பதற்காக இந்தத் துறையிலே ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. இன்னும் அதிகமாகப் பணம் ஒதுக்கினால்தான் ஏராளமான இடங்களில் காடுகளை வளர்த்து, அதிகமாக வளம் பெறமுடியும். ஆகவே, அரசாங்கம் அதற்கு உடனடியாக முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குக் காடுகள் என்ற பெயரால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஜவ்வாது மலைப் பகுதியிலும் மற்ற பல இடங்களிலும் மரமே இல்லாமல் இருக்கின்றன. என் தொகுதியிலே திருவண்ணாமலைப் பகுதியில் மல்லவாடி கிராமத்தில் 20,000 ஏக்கர் தரைக் காடாக, மரமே இல்லாமல் இருக்கிறது. அந்த இடம் நல்ல இடம்; காடு வளர்ப்பதற்கு ஏற்ற இடம். அதைப் பற்றி பலமுறை இந்த மன்றத்திலே நான் சொல்லியிருக்கிறேன். அதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இது வரை எதுவும் செய்யவில்லை.

பொதுவாக அந்த இடங்களை எல்லாம் விவசாயத்திற்குப் பயன்படுத்தினால் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் நல்ல வருவாய் கிடைக்கும். 20,000 ஏக்கரும், ஏக்கர் ஒன்றுக்கு 2,000 ரூபாய் மதிப்புள்ளது. அப்படிப் பார்த்தால் ஏறத்தாழ 4 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் கிடைக்கும். இதைப் போன்றே வடாற்காடு மாவட்டத்தில் பல இடங்கள் இருக்கின்றன. அவைகளில் எல்லாம் காடுகளை வளர்க்க வசதி இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய அப்துல் ஜப்பார் அவர்கள் ஜவ்வாது மலையிலே சந்தன மரம் வளர்ப்பதைப் பற்றிச் சொன்னார்கள். இப்போது வருடம் ஒன்றுக்கு ஒன்றேகால் கோடி ரூபாய் சந்தன மரத்தின் மூலம் வருவாய் கிடைக்கின்றது. அதிலே பாதி வருவாய் என்னுடைய தொகுதியிலிருந்து கிடைக்கிறது. ஜவ்வாது மலையிலே ஏராளமான சந்தன மரங்கள் இருக்கின்றன. அவைகளை நல்ல முறையில் பாதுகாக்கக் கூடிய அளவுக்கு வனத்துறையில் காவலர்கள் இல்லை. வருவாய் அதிகமாகக் கிடைக்கக் கூடிய இத்தகைய மதிப்புள்ள மரங்களைப் பாதுகாப்பதற்காகவாவது அதிகமான காவலர்களைப் போடவேண்டும். அதன் மூலம் இன்னும் அதிகமாக சந்தன மரங்களிலிருந்து வருவாய் பெற முடியும்.

அது மட்டுமல்ல. சந்தன மரங்கள் ஏராளமாக வளர்வதற்கு அங்கு வாய்ப்பு இருக்கிறது. அதை எல்லாம் இன்னும் பயன்படுத்தாமல் இருக்கிறார்கள். ஏனென்றால் இந்த இலாகாவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. சந்தன மரங்கள் அங்கே வளர்வதற்கு நல்ல வசதி இருந்தாலும், நாம் செயற்கையாக சந்தன மரக் கன்றுகளை நட்டு வளர்ப்பதில் அதிக லாபம் கிடைப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் அந்தக் கன்றுகள் சரியாக வளரவில்லை. ஆனால் சந்தன மரப்பழங்களை பறவைகள் சாப்பிட்டு விட்டு, அவைகளின் எச்சத்தின் மூலம் விழுகின்ற சந்தன மர விதைகள் நன்றாக முளைத்து வளருகின்றன. பக்கத்திலே இருக்கின்ற நிலங்களில் பறவைகள் எச்சமிடுகின்றன. அங்கே விதை முளைத்து கன்று வளரத் தொடங்குகிறது. ஆனால் அந்த நிலங்கள் எல்லாம் தனிப்பட்டவர்களுக்கு இருப்பதால், அவர்கள் நாம் ஏன் இதை வளர்த்து அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, முளைத்து வந்தவுடனேயே அழித்து விடுகிறார்கள். அப்படி வளருகின்ற சந்தன மர கன்றுகளை பேணி, அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு ஏதாவது மானியம் கொடுத்தால் அவர்கள்

அதை அழிக்கமாட்டார்கள். அந்த கன்றுகளை இந்தத் துறையிடம் கொடுப்பார்கள். அதனால் வேகமாக சந்தன மரக்காடுகளைப் பெருக்கி, இப்போது வருடம் ஒன்றுக்கு $1\frac{1}{4}$ கோடி ரூபாய் வரக்கூடிய வருமானத்தை 5 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்தக் கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். எனவே, அரசாங்கம் இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. வடாற்காடு மாவட்டத்தில் மூங்கில் காடுகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் வெயில் காலங்களில் தானாகவே தீப்பற்றி எரிகிறது. அதைத் தடுப்பதற்கு, முன்பு பக்கத்திலே உள்ள கிராமவாசிகளுக்கு ஒரு தொகை கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது அது சரியாகக் கொடுக்கப்படவில்லை. கிராமவாசிகள் தொகை பெற்றுக் கொண்டிருந்த போது எப்போதாவது தீப் பற்றிக் கொண்டால் அவர்கள் சென்று அணைத்து வந்தார்கள். இப்போது உதவித் தொகை கிடைக்காததால் அவர்கள் அதில் அக்கரை செலுத்தவில்லை. அதனால் மூங்கில் மரங்கள் தீப்பற்றி எரிந்து வீணாகிப் போகக் கூடிய சூழ்நிலை பெருகியிருக்கிறது. அது நல்ல வருவாய் கிடைக்கக்கூடிய மரம்; காகிதம் செய்வதற்கு மிகவும் தேவைப்படுகிறது. எனவே, அந்த மரங்கள் அழிந்து போகாமல் இருக்க இந்தத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது நீலகிரி தைலம் மரங்களை ஏராளமாக வளர்த்து வருகிறார்கள். அதனால் என்ன பயன் இருக்கிறது என்றே தெரியவில்லை. மதிப்பீட்டுக் குழு கூட இதனால் அதிகப் பயன் இல்லை; இந்தத் திட்டம் தேவையில்லை என்று சிபாரிசு செய்திருக்கிறது. இந்த மரங்களை வளர்ப்பதனால் நிலத்திலே இருக்கின்ற நீர் வற்றிப் போய்விடுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே இதற்குப் பதிலாக நல்ல பலன் தரக்கூடிய புளி, வேம்பு போன்ற மரங்களை வளர்க்கலாம். வேலை சுலபமாக இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காகத்தான் நீலகிரி தைல மரங்களை வளர்க்கிறார்கள் என்று கருதுகிறேன் அது தேவையில்லை. அரசாங்கம் இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் மூங்கில் மரங்களைப் பேணி வருவதற்கும் சந்தனமரங்களை அதிகமாக வளர்ப்பதற்கும் ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த மானியங்களை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, this is a department standing for prosperity by growth of forests. During second world war most of the forests were destroyed without any plan. In nearby Travancore-Cochin when Dr. C. P. Ramaswamy Iyer was dewan there was control over felling forest material especially timber. No teak wood can be cut without arrangements being made for replanting them. But here crowd of trees in forest is cut down. The meagre allotment that is

[Thiru K. M. Subramaniam] [1973 மார்ச் 24

given to the Forest Department and the attention that is given to the development of forests is very small. But unfortunately, the personnel of the Forest Department is not able to spend even that meagre allotment. During 1969–70 out of the allotment in the budget of the Forest Department, they could spend only 44 per cent. When that is the attention given, what is the use of allotting money to this department. This department is important from the point of view of large scale production of trees.

Unless trees are grown in sufficient numbers, unless we have good number of trees, unless we have good forests, we will not have good rainfall and increased water resources. I think sufficient attention has not been paid to this aspect of development of forests.

Coming to sale of forest produce, I am very sorry to find that certain paper mills are being subsidised and supplied with bamboos at very cheap cost. If the market price is Rs. 25 per ton, they are supplied at a cost of Rs. 15 per ton.

There is a difference of about Rs. 14 per tonne in the supply of bamboo to the paper mill. It may be that the Government are very anxious to develop paper mills in this State. But under that excuse, we cannot go on supplying bamboos at a difference of Rs. 8 lakhs for one paper mill alone.

Now, coming to the sale of sandal wood, I think my friend here said that there was a gradual reduction in it. It is a fact. There has been a gradual reduction when all over the country the price of everything else is going up. I cannot understand why sandal wood alone should be going down. There is something wrong and I am sorry not only there is quantity stealing, but there is quality stealing and also price stealing. When all these stealings are taking place, where is the chance of profit? Where is the end to all these things.

The best remedy, I would suggest to the Hon. Minister is instead of selling this as sandal wood as raw material, Government could think of establishing a sandal wood oil extraction factory so that in Tamil Nadu itself we can extract this oil and sell to others. All this wood is sold in auction and when there is an auction, there is a conspiracy or combine to get the material at cheap rates and that cheap rate should be shared between themselves. I think the forests department which is in the forests, conceals everything because it is in the forests; if it is in the open, it will be possible to find out these things, I think several lakhs of rupees are lost in this department. I know there is a lot of stealing going on.

1973 மார்ச் 24] [Thiru K.M. Subramaniam]

For example, in the new district of Dharmapuri I have often gone there in the last 40 years and I have found that the forests is nothing, without any growth at all, except 3 feet plants, here and there. If this is the way we preserve and grow forests, woe unto this country. If there is not any forest, there will be no rains; if there is no rain there is no water for the reservoirs and if there is no water, there is no electricity.

Therefore the best attention should be paid to the development of forests. Whatever the cost, it should be done so that there will be good rains and there will be electricity also and which will all lead to food production increase and prosperity of the country.

திரு. எம். தேவராசன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு வனத்துறை அமைச்சரவர்களால் இம்மன்றத்தின் முன் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புறேன். அங்கத்தினர்கள் பலர் எடுத்துக் காட்டியதைப் போல தமிழ் நாட்டில் வனவளம் மிகமிகக் குறைவாக இருக்கிறது நாட்டில் 33 சதவிகிதம் வனவளம் இருக்க வேண்டிய இடத்தில் 16 சதவிதம் தான் இருக்கின்றது. இது வருந்தத்தக்க ஒன்றாகும். எனவே. மாண்புமிகு அமைச்சரவர்களும் அவரது சகாக்களும் தமிழகத்தில் வன வளத்தை அதிகப்படுத்த தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். "அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்" என்று பாரதிதாசன் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

ஆனால், நீலகிரி மாவட்டத்திலுள்ள இந்த அகிலும் தேக்கும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வெட்டப்பட்டு வருகின்றன. கேரளத்தில் பெரிய பெரிய தொழிற்சாலைகளை வைத்துக் கொண்டு நீலகிரி மாவட்டத்திலிருந்து இந்த மரங்களை வெட்டிக்கொண்டு போகின்றார்கள். நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியிலிருந்து தலைச் சுமையாகவே பல லட்சக்கணக்கான ரூபாய் சந்தனமரங்களைக் எடுத்துக்கொண்டு போகின்றார்கள். இதையெல்லாம் அதிகாரிகள் கவனிக்கிறார்களா இல்லையா என்று தெரியவில்லை.

அதுமட்டுமில்லை. அங்கே உள்ள பெரும்பான்மையான நிலங்களிலே "விஸ்கோஸ்" நிறுவனத்திற்குத் தேவையான கற்பூர மரங்களைப்பயிரிட்டு வெட்டிக் கொண்டு இருக்கின்றார்கள். நாட்டில் மழை குறைந்துகொண்டிருக்கும் நிலையில், "கேச்மெண்ட்" ஏரியாவில் இப்படிக் கற்பூர மரங்களைப் பயிரிட்டால் மேலும் மழை குறைந்துகொண்டே வருகின்றது. எனவே அங்கே யெல்லாம் கற்பூர மரங்களுக்குப் பதிலாக வேறு மரங்களைப் பயிரிட வேண்டும்.

அடுத்து, இன்று முதுமலை வனவிலங்குச் சரணாலயம் மிக மிக மோசமான நிலையில் இருப்பதைச் சுட்டிக்காண்பிக்க வேண்டியபொறுப்பிலிருக்கிறேன். அங்கே புலிகள் குறைந்துகொண்டே வருகின்றன.

[1973 மார்ச் 24

[திரு. எம். தேவராசன்]

அடிக்கடி அந்தப் பிரதேசத்தைச் சுற்றி உள்ளவர்கள் விஷத்தை வைத்து புலிகளைக் கொன்று வருகின்றார்கள். நான் சொல்ல விரும்புவது இப்படி வேகமாக அழிக்கப்பட்டு வரும் புலிகள் காப்பாற்றப்பட வேண்டு மானால் அந்தச் சரணாலயத்தைச் சுற்றி ஐந்து மைல் சுற்றளவிற்கு கிராமங்களே இருக்கக்கூடாது என்று ஏற்படுத்த வேண்டும். இப்படி ஒரு சட்டமியற்றினால்தான் இவைகளைக் காப்பாற்ற முடியும்.

இதையொட்டி இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முது மலைப் பகுதியையொட்டி உள்ள மாயாறு திட்டம் தீட்டுவது அநேகமாகப் பூர்த்தியடைந்துவிட்டது என்று சொல்லலாம். சீக்கிரத்திலேயே இதைக்கட்ட ஆரம்பித்து விடுவார்கள். இந்தத் திட்டத்தினால் நமக்கு முப்பது மெகாவாட்ஸ் மின்சாரம்தான் கிடைக்கும் என்று தெரிகிறது. ஆனால் இந்தத்திட்டத்தினால் இந்த வனவிலங்கு சரணாலயம் முழுவதும் பாழ்ப்பட்டுவிடக்கூடிய நிலை இருக்கிறது.

மேலும், வயநாடு பகுதி, முதுமலைப்பகுதி, மைசூரிலுள்ள பந்திபூர் பிரதேசம் ஆகிய இந்தப் பகுதிகளைச் சேர்த்து ஒரு தேசிய வனவிலங்குச் சரணாலயம் ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு யோசித்துக் கொண்டு இருக்கும் இந்த நேரத்தில் இந்த அணைக்கட்டைக் கட்டுவது நல்லதுதானா என்று யோசிக்க வேண்டும் என்று கேட்டுகொண்டு, இந்தத் திட்டத்தினைக் கைவிட வேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

நேற்று ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியினைக் கேட்டேன். மத்திய அமைச்சர் டாக்டர் கரன்சிங் அவர்கள் கிர் காடுகளிலிருந்து இரண்டு சிங்கங்களை முதுமலை வனவிலங்கு சரணாலயத்திற்கு அனுப்பி வைப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். இப்படி இந்தச் சரணாலயம் மேன்மேலும் பேரும் புகழும் அடையக் கூடிய நேரத்தில் இந்த மோயாறு ப்ராஜெக்டைக் கொண்டு வந்து இந்தச் சரணாலயத்தைக் கெடுக்க வேண்டாம், அழிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் முதுமலையில் வரும் பயணிகளுக்கு வேண்டிய விடுதிகளைக் கட்ட வேண்டும். மேலும் முதுமலைக்கான ரிஸர்வேஷனை உதகையில்தான் செய்யவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். இது பயணிகளுக்குத் தொல்லை தரு கின்றது. ஆகவே, ரிஸர்வேஷனை முதுமலையிலேயே செய்யும்படியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை அரசு மேற்கொண்டு செயல்படுத்தி இந்தச் சரணாலயத்தை மேன்மேலும் வளர்க்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டு என் உரையினை முடித்துக் கொள்ளு கிறேன். வணக்கம்.

*திரு. ஈ. எம். நடராஜன் : பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, இந்த வனத்துறை மானியத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1973 மார்ச் 24]

[திரு. ஈ. எம். நடராஜன்]

நமது நாட்டின் வளர்ச்சியில் வனங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. இயற்கை வளத்தினைக் காப்பாற்றுவதற்கும், நில வளத்தைக் காப்பதற்கும் பருவ மழை பெய்வதற்கும் தொழில்களுக்குத் தேவைப்படும் மூலப் பொருள்களைப் பெறுவதற்கும் விவசாய மேம்பாட்டிற்கும் காடுகள் மிக மிக அவசியமாகின்றன. நாட்டிலே ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார அடிப்படைக் கொள்கைபடி 33 சதவீதம் காடுகள் வேண்டும். ஆனால் நமது நாட்டிற்குத் தேவையான 33 சதவிகிதம் காடுகள் இருக்க வேண்டிய இடத்தில் 16 சதவிகிதம் காடுகள் தான் இருப்பதாக அறிகிறோம். எனவே இதை மேலும் அபிவிருத்தி செய்ய அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தத் திட்டத்தில் கிராமக்காடுகள், பண்ணைக் காடுகள் இவற்றை அபிவிருத்தி செய்யக்கூடிய திட்டங்கள் இருப்பதானது வரவேற்கத்தக்க தாகும். இவற்றின் மூலம் கிராம மக்களுக்குத் தேவைப்படும் விறகு உரம், தீவனம் இவை கிடைக்க வழி ஏற்படுகிறது. நகர மக்களுக்கும் போதிய அளவில் விறகும் கிடைக்கும். மேலும் அரசானது வணிகத் தொழில் முக்கியத்துவம் வாய்ந்த மரங்களை அதிக அளவில் வளர்க்க அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தேக்கு மரங்களை அதிக அளவில் வளர்க்க வேண்டும்.

அது போல தீப்பெட்டி செய்யும் தொழிலுக்குத் தேவையான மென்மையான மரங்களை அதிக அளவில் வளர்க்க வேண்டும்.

நமது மாநிலத்தில் பல இடங்களிலே பார்க்கிறோம், காடுகளை வரம் பின்றி பொது மக்கள் அழித்து வருகின்றார்கள். இதைத் தடுத்திட வேண்டும்.

அடுத்து மிக விரைவில் வளரும் மூங்கில், கற்பூர மரம், கருவேல மரம் இவற்றைக் காடுகளில் வளர்ப்பதில் மேலும் கவனம் செலுத்த வேண்டும். அந்தியூர், பருகூர் பகுதிகளில் மூங்கில் வளர்ச்சிக்குத் தனிக் கவனம் செலுத்த வேண்டும். சந்தன மரம் அரசுக்கு அதிக வருவாயைத் தேடித்தருகிறது. இதை மிக அதிக அளவில் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும்.

கோவை மாவட்டத்தின் வட பகுதியில் நிறைய சந்தன மரம் உற்பத்தியாகின்றது. எனவே அந்தியூர் வட்டாரத்தில் சந்தன எண்ணெய் சோப்பு தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும்.

அடுத்து, நம் மாநிலத்திலுள்ள அணைக்கட்டுகளையொட்டிய பகுதிகள், ஆறுகள், ஏரிகளிலே மண்வளப்பாதுகாப்புத் திட்டத்தினை தீவிரமாக அமுல் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. ஈ. எம். நடராஜன்]

முற்பகல் 11-00 நமது நாட்டில் வன விலங்குகள் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. எங்கள் பகுதியில் சிறுத்தைகளுக்கு விஷம் வைத்துக் கொன்று விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் ஹண்டர்ஸ் லைசென்ஸ் கொடுப்பதை அறவே நிறுத்த வேண்டும். யானைகளை எல்லாம் சுட்டுக் கொல்லுகிறார்கள். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து எங்கள் பகுதியில் அடர்ந்த காடுகள் உள்ள மலைப்பகுதிகள் இருக்கின்றன. அங்கே காப்பிச் செடிகள் வளருகின்றன. அந்தப் பகுதியில் நிறைய காப்பித் தோட்டங்களை உண்டாக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். செங்குளம், கோயில் நத்தம், கொர்காடை ஒந்தனை ஆகிய இடங்களில் தேயிலைத் தோட்டங்கள் அமைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

பர்கூர் பகுதி சுற்றுலாப் பயணிகளைக்கவரக்கூடியதாக இருக்கிறது. அங்கே ஒரு சில பயண விடுதிகளையாவது உடனடியாக ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தட்டகரை, தாமரைக்கரை, கோவில் நத்தம், கர்காகண்டி ஆகிய இடங்களில் பயணிகள் விடுதிகள் கட்ட வேண்டுகிறேன்.

பர்கூர் மலைப்பகுதி சாலை வசதி இல்லாத பகுதியாக இருக்கிறது. தாமரக்களாக்கும் கோயில் நத்தத்திற்கும் சாலை அமைய வேண்டும். தாமரக் களாக்கும்—பெக்ஜலட்கும், வறட்டுப்பள்ளம், வழுக்குப்பாறை அணைத் திட்டப் பகுதிகளில் காட்டு எருமைகள், கரடிகள், யானைகள், மான்கள் நிறைய உள்ளன. அப்பகுதியில் சின்னக்கோம்பை எருமைமடுவுப்பட்டி ஆகிய இடங்களில் இவைகள் உள்ளன. இத்திட்டம் நிறைவேறினால் தேக்கடியை விடச் சிறந்த பகுதியாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே (பர்கூர் பகுதி) வன சரணாலயம் ஏற்படுத்தித்தர வேண்டும். அங்கே உள்ள மலைவாசிகளுக்கு வனத்துறையினர் பலவிதமான வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

ஆர்கியூர் பகுதியில் காடுகளில் வசிக்கின்ற ஆகிலா மலை ஜாதி மக்கள் வாழ்கின்ற, பயிர் செய்கின்ற "செட்டில்மெண்ட்" நிலத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கு. அ. பொம்மன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன்னுள்ள இரு மானியக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொண்டுவந்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன்.

[திரு. கு. அ. பொம்மன்]

நமது மாநிலபரப்புக்கு ஏற்ப நமக்குக் காடுகள் இல்லை. 33 சதவிகிதம் இருக்க வேண்டிய இடத்தில் 16 சதவிகிதம் தான் இருக்கிறது. மீதி விழுக்காட்டைப் பூர்த்தி செய்ய நமது அரசு பல துறைகளில் மரங்களை வளர்க்கத் திட்டமிட்டு வருவதாக ஆய்வுரையில் கூறப்பட்டிருக்கிறது. இதை வரவேற்கிறேன். ஆயினும் காட்டு இலாக்கா இன்றைக்கு இயற்கை வனங்களை அழித்து, செயற்கை வனங்களை உண்டாக்க கற்பூர மரங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இயற்கை வன மரங்களுக்கு பூமியின் ஈரத்தைக் காப்பாற்றி வைத்துக்கொள்கிற சக்தி உண்டு. தானும் வாழ்ந்து பிற மரங்களை வாழ வைக்கிற ஆற்றல் உண்டு. ஆனால் கற்பூர மரங்களின் வேர் 60 அடிகள் வரை கீழே செல்வதால் பூமியில் உள்ள தண்ணீரை எல்லாம் உறிஞ்சிவிடுகின்றன. அணைக்கட்டுப் பகுதியில் இவற்றைக் கொண்டு போய் ஏராளமாக வைப்பதனால் அணைக்கட்டு நீர் குறைந்து இன்னும் சில ஆண்டுகளிலேயே அணைக்கட்டிலுள்ள நீர் வறண்டுபோகும். இதனால் நமது மின்சாரத் திட்டங்கள் வெகுவாகப் பாதிக்கக்கூடிய நிலை வரும். இதை இப்பொழுதே நான் எச்சரிக்க விரும்புகிறேன். வேண்டுமென்றால் நான் சொல்வதில் உண்மை இருக்கிறதா என்பதை ஒரு வல்லுநர் குழுவைப்போட்டு அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சின்கோனா விஷயத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அது மருந்துப் பொருள். வெளி நாட்டுக்கும் நம் நாட்டுக்கும் தேவையானது, இன்றைக்கு ஆர்டருக்குப் போதுமான அளவு சப்ளை செய்யாமல் இருக்கிறோம். காரணம் போதுமான பரப்பளவில் அவற்றைப் பயிர் செய்ய நிலம் கிடைக்கவில்லை. சின்கோனா. பயிராகக்கூடிய காட்டு நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை இதற்கு மாற்றி, அதற்குப் பதிலாக சின்கோனா விளையாத நிலங்களை காட்டிலாக்கா எடுத்துக்கொள்ளலாம். இது பற்றி பலநாளாக கோரிக்கை இருக்கிறது அதை அரசு பார்த்து உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மின்சார வெட்டினால் சின்கோனா தொழிற்சாலைக்கும் மின்சார வெட்டை அமல்படுத்தியிருக்கிறார்கள். அதனால் சின்கோனா வில்லை தயாரிப்பு வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இது மருந்துப் பொருள், அத்தியாவசியத் தேவையானது என்பதை உணர்ந்து இந்தத் தொழிற்சாலைக்கு மின்சார வெட்டை அமல்படுத்தாமல் முழு அளவில் மின்சார சப்ளை அளிக்க தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சந்தன மரத்தைப் பற்றி திரு. ஜப்பார் அவர்கள் விரிவாகச் சொன்னார்கள். கூப்பு மரங்கள் வெட்டப்படுவதைப்பற்றிச் சொன்னார்கள். அவற்றை எல்லாம் நானும் ஏற்றுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் ஒரு பக்கம் மைசூர் இன்னொரு பக்கம் மலபார் இருப்பதன் காரணமாக சந்தன மரங்கள் நிறையத் திருட்டுப்போகின்றன. அவற்றை நல்ல முறையில் பாதுகாத்து நடுவட்டத்தில் நறுமண தைலங்கள் தயாரிக்கப்படுகின்றன. அங்கேயே நறுமணத் தைலம் சோப்பு ஆகியவற்றைத் தயாரிக்க சந்தன மரத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கு. அ. பொம்மன்]

இலங்கை அகதிகளுக்காக 1,500 ஏக்கரா தேயிலைத் தோட்டம் ஏற்படுத்தப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். 355 ஹெக்டேர்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரு குடும்பத்தில் 20 பேர்கள் இருந்தால் 2 பேர்களுக்குத்தான் தேயிலைத் தோட்டத்தில் வேலை கொடுக்கிறார்கள். குடும்பத்தில் இவர்கள் இருவரின் வருவாயைக்கொண்டு ஜீவனம் செய்வதே கஷ்டமாக இருக்கிறது என்கிறார்கள். ஆகவே தேயிலைத் தோட்டத்தில் இப்படிப்பட்ட பெரிய குடும்பங்களுக்கு விவசாயம் செய்வதற்கு காட்டு நிலங்களை கொடுத்தால் அவர்களின் குறையை ஒருவாறு நிவர்த்திக்க முடியும். அரசு அதனைப் பரிசீலனை செய்து அவர்களுடைய குறைகளைப் போக்க முன் வரவேண்டும். திரு. தேவராஜன் அவர்கள் முதுமலைக்காடு காப்பாற்றப்படவேண்டும் என்று சொன்னதை நானும் ஆதரிக்கிறேன். ஆனால், 5 மைலுக்குள் கிராமங்களே இருக்கக்கூடாது என்று சொன்னதை ஏற்க முடியாது. . . . (மணி அடிக்கப்பட்டது).

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு காடுகள் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். . . . .

திரு. முனு ஆதி : துணைத்தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நமது அவை விதிகளின்படி மொத்த எண்ணிக்கையில் 10-இல் ஒரு பங்கினர் அவையில் இருக்கவேண்டும். ஆனால் அவையில் கோரம் இல்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. வீராசாமி) : அவையில் 27 பேர்கள் இருக்கிறார்கள். கோரம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சற்று நேரத்திற்கு முன்பாக அவையில் உட்கார்ந்திருந்தவர்களை எழுந்திருந்து அவைக்குப் பின்னால் போகச் சொல்லிவிட்டு இங்கே அவையில் கோரம் இல்லையே என்பதாக பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு நான் வருந்துகிறேன். திரு. பலராமன் அவர்கள் வந்து சொன்னார்கள். இந்த மன்றம் சிறப்பாகப் பணியாற்ற சீனியர் மெம்பராக இருக்கக்கூடிய திரு. முனு ஆதி போன்றவர்கள் பேரவைத் தலைவருடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. முனு ஆதி: தாங்கள் சொல்கிறபோது கோரம் இல்லை. இப்போதுதான் இருக்கிறது.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: காகித ஆலை, ரயான் தொழிற்சாலைக்கு காடுகள் மிக மிக முக்கியமானவையாக இருக்கின்றன. நீலகிரி தைலமரங்களையும் கற்பூர மரங்களையும், மூங்கில் மரங்களையும் அதிகமாக உற்பத்தி செய்து காகித ஆலையை அதிகமாக அமைக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் இத்துறையில் பணிபுரிகிற பலதரப்பட்ட பணியாளர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கின்ற முறையில் புது முயற்சிகள் உருவாக்கப்பட வேண்டும். பாரஸ்

[திரு. தோப்பூர் திருவேங்கடம்]

ரேஞ்சு ஆபீசர் பதவிகளை இன்னமும் கெஜடெட் ஆக்காமல் இருக்கிறார்கள். தாசில்தார், இன்ஸ்பெக்டர் தகுதி உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களை கெஜடெட் ஆக்கக்கூடிய நிலைமையை உருவாக்கவேண்டும். ரப்பர், தேயிலைத் தோட்டங்கள் நல்லமுறையில் வளர்க்கப்படவேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சந்தன மரங்கள் திருட்டுப்போவதுபற்றிச் சொன்னார்கள். சந்தன மரங்கள் வடாற்காடு மாவட்டத்தில் அதிகமாக இருப்பதையும் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்தில் சந்தன மரங்களை அடிப்படையாக வைத்து ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று நானும் கேட்டுக்கொள்கிறேன்.

சந்தன மரங்கள் திருட்டுப்போவதைக் கண்டுபிடித்துக் கொடுத்தால், அவர்களுக்கு அளிக்கின்ற பரிசு மிகக் குறைந்ததாக இருக்கிறது. ரூ. 10, ரூ. 20 என்ற அளவிலே அந்தப் பரிசுத் தொகை இருக்கிறது. அதை மாற்றி, ஊழியர்கள் உற்சாகமாக திருட்டுக்களைக் கண்டுபிடிப்பதற்கு, அவர்கள் கண்டுபிடித்த பொருள்களின் மதிப்பில் 10 சதவீதம் அல்லது 5 சதவீதம் அவர்களுக்குப் பரிசாகக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைக்கு அடுத்தபடி முக்கிய இடம் பெறுவது இந்த வனத்துறையாகும். வனத்தில் காப்பி, டீ போன்றவைகளைப் பயிரிடுவதைப் போல் நெல், கேழ்வரகுப் போன்றவைகளைப் பயிரிட வன இலாகா தன்னை விரிவு படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஊருக்கு அடுத்தாற்போல், உடுகத்தூருக்குப் பக்கத்திலே 5, 6 தரைக் காடுகள் இருக்கின்றன. அவைகளை உழுது சாகுபடி செய்ய வேண்டுமென்று ஒரு கருத்து இருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்களை வன இலாகா பயன்படுத்துவதற்கு இலகுவான நிலங்களாக மாற்றவேண்டும். அல்லது, கேட்பவர்களுக்கு லாங் லீசுக்கு அளிக்கவேண்டும். அல்லது நிலமற்ற ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காடு வளர்ச்சி பயிற்சி, வன இலாகாவைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் அளிப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதை விவசாயக் குடும்பங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் அளிக்கக்கூடியதாக விரிவு படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"பாரஸ்டு வாட்சர்ஸ்" என்று சொல்லக்கூடியவர்களுக்கு வேலைகள் நிரந்தரமாக்கப்படவேண்டும். அதோடு அவர்களுக்குப் பென்ஷன் போன்றவைகளையும் கொடுக்க வேண்டும். கார்டுகளுக்குக் கொடுப்பதுபோல் அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று இந்நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கங்கு, வன இலாகாவிலே இருக்கிறவர்கள் தங்குவதற்கு மேலும் குவார்ட்டர்ஸ் கட்டி, அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிர்வாக அதிகாரிகள் போன்றவர்கள் முக்கியமான

[திரு. தோப்பூர் திருவேங்கடம்]

பொறுப்பேற்றிருக்கிறவர்கள் அவர்களுக்கு இந்த வசதியை உடனடியாக அளிக்கவேண்டும்.

ஒரிசா மாநிலத்தில் மைனா பறவையைப் பிடித்து, அமெரிக்க நாட்டிற்கு ஏற்றுமதி செய்து, ஒரு மைனாவிற்கு ரூ. 40 வீதம் அந்நியச் செலாவணி பெறுகிறார்கள். இங்கு மைனாக்கள் நிறைய இருக்கின்றன. இவற்றையும் பிடித்து, அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய முடியுமா என்பதைப் பற்றி ஆராயவேண்டும். அதன்மூலம் அந்நியச் செலாவணி கிடைக்கும்.

இந்த வன இலாகா மேலும் பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய விதத்தில் அதை மாற்றி அமைக்கவேண்டும். இந்தியாவில், குறிப்பாக இந்த இலாக்காவில் வேலைக்கு குறைவான வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். மேல் நாடுகளை எண்ணிப் பார்க்கும் போது, இது மிகக் குறைவு என்று சொல்கிறார்கள். அதைக் கவனிக்க வேண்டுமென்று............(மணியடிக்கப்பட்டது).

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, காட்டு இலாகா சம்பந்தமாக, காட்டு இலாகா அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்திருக்கின்ற மானியக் கோரிக்கைகள் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தை ஒட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்களின் உரையில், கழிந்த ஆண்டைவிட இந்த ஆண்டு காட்டு இலாகாவில் வருவாய் குறைவு என்று எடுத்துக்கூறியிருக்கிறார். இந்த வருவாய் குறைவதற்கான காரியக்காரணங்களையும் கூட எடுத்துக் கூறியிருப்பார்களானால் அந்தக் குறைவு சரியா இல்லையா என்பதை ஆராய்வதற்கு வழி இருந்திருக்கும். ஆனால், இன்றிருக்கிற நிலைமையில் ஆண்டுதோறும் காட்டு இலாகாவில் வருவாய் கூடுவதற்குப் பதிலாக, குறைகிறது என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம்.

திரு. எஸ். ஆறுமுகம்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் எதிர்க்கட்சியினர் தங்களுடைய ஜனநாயகக் கடமையை ஆற்ற இங்கே வந்திருக்கிறார்கள். இங்கே அ. தி. மு. க-வைச் சேர்ந்த ஒருவரும் இல்லை. அவர்கள் வெளி நடப்பு செய்து விட்டார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): இந்த அவையிலே விவாதத்திலே கலந்துகொள்வது அவர்களுடைய உரிமை. ஆகவே, இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆண்டுதோறும் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. குறிப்பாக, காட்டிலிருந்து கிடைக்கின்ற பொருள், தொழிலுக்கான மரங்கள், விறகு, உரம் போன்ற சாதனங்களின் விலை அதிகமாக

[திரு. ஜே. ஜேம்ஸ்]

ஏறிக்கொண்டே போகின்ற சூழ்நிலையில் ஏன் இந்த வன இலாகாவில் இந்த அளவில் வருவாய் குறைந்து காண்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது எடுத்துக் கூறுவார்கள் என்று எண்ணுகிறேன். என்னைப் பொறுத்தமட்டில் இந்த வருவாய் குறைவதற்கான காரணம் நமது நிர்வாகத்தில் சில கோளாறுகள் இருக்கின்றன என்று இத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திருநெல்வேலியில் கார்டமம் பயிர் செய்ய நிலத்தைக் குத்தகைக்குக் கொடுத்திருக்கிறோம். அந்தக் குத்தகை ஏற்பாட்டில் கூட அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய குத்தகைப் பணம் ஒழுங்கான முறையில் கொடுக்கப்படவில்லையென்பதுதான் என்னுடைய எண்ணம். நாம் ஆக்ஷனில் கொடுத்திருக்கின்ற நிலம் ஒன்று. ஆனால் அவர்கள் பயிரிடுகின்ற நிலம் வேறொன்றாக இருக்கிறது. பயிரிடுகின்ற நிலத்தைப் பார்க்கும்போது நாம் எந்த நிலத்தை ஆக்ஷனில் விட்டோமோ அதற்கு மேலாக 10 மடங்கு தொகை கொடுக்கக்கூடிய நிலம் என்று தெரிகிறது. ஆகவே, அதற்கான தொகையை அவர்களிடத்திலே வாங்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பேப்பர் மில்லுக்குத் தேவைப்படுகின்ற ஈட்டா, பூரி போன்ற சாதனங்களுக்குக்கூட நாம் வசூலிக்கின்ற ரேட் மிகவும் குறைவு என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த ரேட்டுகள் பல ஆண்டுகளுக்கு முன்னதாக நிர்ணயிக்கப்பட்டன. ஆக, அவற்றையும் மாற்றியமைத்தால் நம் வருவாய் கூடும் என்பதனையும் இங்கே கூற விரும்புகிறேன்.

இந்த மெட்ராஸ் ஷிப்போர்ட் சரட்டுகளின் விலையும் கூடக் குறைவாகத்தான் இருக்கிறது. அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர்கள் பலர் இங்கு கூறினார்கள், அதிகமாக சந்தன மரங்கள் திருட்டுப் போகின்றன என்று. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இந்த மன்றத்தில் அன்று வன இலாகா அமைச்சராக இருந்த காலஞ்சென்ற அமைச்சரவர்கள், பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள சந்தன மரங்கள் திருட்டுப் போயிருக்கின்றன. திருட்டுப் போனது குறித்து அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்று கூறினார்கள். எத்தனையோ வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சந்தன மரங்கள் திருட்டுப் போயிருக்கின்றன. அந்த விவரங்களையும் அமைச்சர் அவர்கள் தந்தால் நலமாக இருக்கும்.

எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளக்குளம் விவகாரத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அங்கு 900 ஏக்கர் நிலத்தை தனியார் அனுபவிக்கிறார்கள் என்று சொன்னால், அதை ஒத்துக்கொள்ள முடியாது. அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலம், அரசாங்கச் சார்பில் பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள மரங்கள் அங்கு இருந்தன. ஆனால், இன்றைய தினம் அந்த மரங்கள் ஒன்றுமே அங்கு காணப்படவில்லை, அரசாங்கம்

[திரு. ஜே. ஜேம்ஸ்]

ஸ்டாக்கில் வைத்திருக்கும் மரங்கள் கூட அங்கு இல்லை. இன்னும் அரசாங்கத்தின் பொசஷனில் தான் அந்த நிலம் இருக்கிறது. ஆதலால், வழக்கு இருந்தாலும் கூட, கோர்ட்டு "ஸ்டேட்டஸ் குவோ மெயின்டெய்ன்" பண்ணுங்கள் என்று சொல்லியிருக்கிறது. அப்படி இருக்கும்போது அந்த பொருள்கள்கூட அரசாங்கத்தின் பொசஷனில்தான் இருக்க வேண்டும். அந்தப் பெரிய மரங்கள் அத்தனையும் அங்கே இருக்க வேண்டும். நாம் ஸ்டாக்கில் வைத்திருந்த மரங்கள், 900 ஏக்கரில் ரூ. 4 கோடி மரங்கள் அங்கே இல்லை. ஆகவே, அரசாங்கம் உடனடியாக அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கான நடவடிக்கையும் அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டத்தில் இருக்கிற ரப்பர் தோட்டத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கழிந்த முறை இந்த மன்றத்தில் அந்த மானியம் விவாதத்திற்கு வந்தபொழுது, அமைச்சர் அவர்கள் நாங்கள் எடுத்துக்கூறிய காரியங்களை ஞாபகத்தில் வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்பொழுதிருந்த கன்சர்வேட்டரை மாற்ற வேண்டுமென்று கூறினேன். அவரை மாற்றியதன் காரணமாக, இன்று மிகவும் நிம்மதியாக, தொழிலாளிகளுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இன்றையதினம் செயலாற்றுகின்ற கன்சர்வேட்டர் நல்ல முறையில் செயல்படுகிறார்கள். ஆக, தொழிலாளிகளுக்கும் நல்ல நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இத்தருணத்தில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சில குறைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ரப்பர் தோட்டமானது, அதில் பயிற்சி பெற்ற நிர்வாகிகளால் மேற்பார்வையிடவேண்டிய ஒன்று. இன்றிருக்கிற கன்சர்வேட்டர் மலேசியாவுக்குச் சென்று இதற்கான பயிற்சி பெற்று வந்திருக்கிறார்கள். அவர் கீழே ஏறத்தாழ 100 ரேஞ்சு ஆபீசர்கள் அங்கே பணியாற்றுகிறார்கள். அவர்களில் பலர் இந்தத் துறையிலே தேர்ச்சி இல்லாதவர்களாக இருக்கிற காரணத்தினாலே பல இடையூறுகள் இருக்கின்றன. இந்தத் துறையிலே ரேஞ்ச் ஆபீசர்கள் அவசியமில்லை என்று நினைக்கிறேன். 100 ஏக்கருக்கு ஒரு ரேஞ்ச் ஆபீசர் என்று சொன்னால் இன்றைக்குப் பதினாயிரம் ஏக்கருக்குமேல் பயிர் செய்கிறோம். அவற்றிற்கெல்லாம் 100 ரேஞ்ச் ஆபீசர்கள் தேவையில்லை. ரேஞ்ச் ஆபீசர்களுக்குப் பதில் அனுபவம் வாய்ந்த பீல்டு ஆபீசர்களை நியமித்தால் அல்லது வேறு ஒருவரை நியமித்தால் அதிக லாபம் வரும் என்று நினைக்கிறேன். ரேஞ்ச் ஆபீசர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு என்று மாதாமாதம் 400 ரூபாய், 500 ரூபாய் என்று செலவழித்து அவர்களுக்கு ஆயிரக்கணக்காக சம்பளம் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. நான் கூறியபடி, 100 ஏக்கருக்கு ஒருவர் என்று நியமித்தால் செலவு குறைந்துவிடும். அதன்மூலம் லாபம் அதிகமாக வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்]

ரப்பர் தோட்டங்களை இப்பொழுது விஸ்தரித்துக்கொண்டு வருகிறோம். ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் வரையில் விஸ்தரிப்பதாக இருக்கிறோம். எனவே, இதற்காக ஒரு தனிக் கார்ப்பரேஷனை அமைத்து அதன் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவந்தால் இன்னும் நல்ல முறையிலே செயல்படும். இப்பொழுது அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டிருப்பதால் பல இடையூறுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சின்கோனா இலாகாவைப் பொறுத்தவரையிலும் ஒரு அறிக்கை இங்கே சமர்ப்பித்திருப்பதைப்போல ரப்பர் பிளான்டேஷன்ஸ் பொறுத்தவரையிலே ஒரு அறிக்கை வைத்திருந்தால் தோட்டங்கள் எவ்வாறு செயல்படுகின்றன, முடக்கப்பட்ட முதலீடு எவ்வளவு, அன்றாடம் எவ்வளவு செலவு ஆகிறது, தொழிலாளர்களின் நிலை எப்படி இருக்கிறது, வருவாய் எவ்வளவு லாபம் என்ன என்பதையெல்லாம் அறிந்து மேலும் நல்ல முறையிலே செயலாற்றுவதற்கு வசதியாக இருக்கும். எனவே, இந்த நிலைமையிலே அடுத்த ஆண்டாவது அப்படிப்பட்ட அறிக்கையை இங்கே வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு அரசாங்கம் ஓரளவிற்கு ஊதியத்தைக் கூட்டிக்கொடுத்திருந்தாலும்கூட அந்தப் பகுதியிலே உள்ள தனியார் தோட்டங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஊதியம் இவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். சட்டதிட்டங்களுக்குட்பட்டு, அரசாங்கத்தால் நடத்தப்படுகிற நிலைமை இங்கே இருப்பதால் அதன் காரணமாக மற்றத தொழிலாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள். அரசாங்கத் தோட்டங்களிலே ஊதியம் தொழிலாளர்களுக்குக் குறைவாகக் கொடுக்கப்படுகிற காரணத்தினாலே தனியார் தோட்டங்களிலேயும் உள்ள தொழிலாளர்களுக்கு ஊதியத்தை தனியார் முதலாளிகள் குறைப்பதற்கு வழி ஏற்பட்டுவிடுகிறது. தனியார் தோட்டத்திலே எந்த அளவுக்கு ஊதியம் வாங்குகிறார்களோ அந்த அளவுக்கு ஊதியத்தை அரசாங்கத் தோட்டத்திலே பணியாற்றுகின்றவர்களுக்கும் கிடைக்கச் செய்யவேண்டும்.

போனஸ் பிரச்னை நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது. ஆறு ஆண்டுகளுக்குமேல் ஆனால்தான் போனஸ் உரிமை உண்டு என்று சொன்னாலும் கூட தோட்டம் தொடங்கப்பட்டு அனுபவத்தில் வந்த 6 ஆண்டுக் காலத்திற்கு மேல் ஆகிறது என்று நினைக்கிறேன். எனவே அவர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டும்.

அந்தப் பிரதேசத்திலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே ஒரு ஆஸ்பத்திரி மிக அவசியமாகத் தேவைப்படுகிறது. எனவே, ஒரு ஆஸ்பத்திரியை ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் உடன் எடுக்க வேண்டும்.

பிளாண்டேஷன்களில் வேலை செய்கிற தொழிலாளர்கள் தங்களுக்குள் ஒரு கூட்டுறவு சங்கத்தை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று அனுமதி கேட்டு அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகளை, அனுமதியை அரசாங்கம் உடனடியாகக் கொடுக்கவேண்டும்.

மண்வளப் பாதுகாப்பு முறையிலே—நீர்த்தேக்கங்களில் மண் சேர்ந்துவிடுவதால் தண்ணீர் தேங்கவில்லை—கோதையாறு பெருஞ்சாணியிலே மண் தூர்ந்து போய்விட்ட காரணத்தினாலே அதிக அளவிற்கு நீர்ப்பிடிப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். லோயர் கோதையாற்றிலிருந்து அப்பர் கோதையாறு வழியாக மாஞ்சோலைக்கு சாலையமைப்பதற்குத் திட்டம் இருந்தது. அதையும் உடனே கவனிக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

<u>திரு. மணலி சி. கந்தசாமி</u> : தலைவர் அவர்களே, இந்தத் துறையானது லாபம் தரக்கூடிய துறை என்பது இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. வட்டி கொடுத்தது போக 4 லட்சம் ரூபாய் லாபம் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் அயல்நாட்டுச் செலாவணி இந்த வருடத்திற்கும் வருகிற வருடத்திற்கும் சேர்ந்து 84 லட்சம் ரூபாய் வரும் என்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இலாகா இன்னும் நல்ல முறையிலே நடத்திச் செல்லப்பட சில ஆலோசனைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். மொத்தக் காடுகள் 16 சதவீதம் நம்முடைய மொத்த பரப்பளவிலே இருந்தாலும்கூட அந்த 16 சதவீதத்திலேகூட தனியார் காடுகள் விட்டு வைக்கப்படவேண்டிய நிலைமை இன்னும் ஏன் இருக்கிறது என்ற கேள்வியை நான் எழுப்புகிறேன்.

தனியார் காடுகள் ஆங்காங்கு இருப்பதன் காரணமாக சர்க்கார் காடுகளுக்குத்தான் ஆபத்து வரக்கூடிய அளவுக்கு தனியார் காடுகள் ஒரு தளமாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, நான் முதன் முதலாக வலியுறுத்திச் சொல்வது தனியார் காடுகளையும் தேசியமயமாக்க வேண்டும்; அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொள்வதன்மூலம் அது காட்டு வளத்திற்கும் பயன் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி உடனடியாகச் செய்ய முடியாவிட்டாலும்கூட பாரஸ்ட் சட்டப்படி அவற்றை எல்லாம் சர்க்கார் கட்டாய குத்தகைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். எப்படியாவது இந்தக் காடுகள் பூராவும் தனியார் கையில் இல்லாமல் சர்க்காரிடத்திலே இருந்தால்தான் திட்டமிட்ட முறையிலே காட்டு வளத்தை பெருக்கமுடியும்; காட்டு விளைபொருட்களை பெரிய அளவுக்கு ஈட்டிக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையைப் பூர்த்திசெய்ய முடியும். சமீபத்திலே கேரளாவிலே தனியார் காடுகளையெல்லாம் தேசியமயமாக்கியிருக்கிறார்கள். தேசியமயமாக்குவதில் முனைந்திருக்கிற நாம்—இந்தச் சிறு விஷயத்திற்கு அதிகப் பணம் செலவு கிடையாது—சீக்கிரமாக நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு நம்முடைய காடுகளைக் காப்பாற்ற வேண்டும். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அதிகமான அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கிட்டத்தட்ட 17 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் காடுகளிலே வகைவகையான விருட்சங்கள், தேக்கு விருட்சங்கள், இன்னும் பல்வேறு வகையான பொருள்கள், இன்னும் பல விளைபொருட்களை வைத்துக்கொண்டு பார்க்கிற நேரத்திலே திட்டமிட்ட விதத்திலே அவற்றையெல்லாம் எக்ஸ்ப்ளாய்ட் பண்ணுவதற்கு தீவிரமான திட்டம்போடவேண்டும். உதாரணமாக எடுத்துக்கொண்டால் தேக்கு மரங்களை எடுத்துக்கொள்ளுங்கள். இவ்வளவு அதிகமாக இருக்கக்கூடிய ராஜ்யத்திலே தனியாருக்கு காண்ட்ராக்ட் விடாமல் சர்க்காரிலே வன இலாகாவிலே ஒரு பிரிவை ஏற்படுத்தி இயந்திரங்களை வாங்கி அபிவிருத்தி செய்து சர்க்காருக்குக் கட்டடங்கள் கட்டக்கூடியதற்குத் தேவையான மரங்களை அறுத்து சப்ளை செய்வதன்மூலம் தனியார் கொள்ளையடிப்பதைத் தடுக்க முடியும்.

மலிவான விலையிலே கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்ற முறையிலே தேக்கு மரங்களை வெட்டி நல்ல முறையிலே சைஸ் செய்து அறுத்து அவற்றை சப்ளை செய்யலாம். இதன்மூலம் குறைந்த மூலதனத்திலே அதிகமான லாபம் பெறக்கூடிய நிலைமை உருவாகும். இப்பொழுது கார்ப்பெண்ட்ரி நடத்துகிறோம். பிள்ளைகளுக்கு தச்சு வேலை சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். அதற்காக மரம் அறுக்கிற இயந்திரங்களை நிறுவியிருக்கிறோம். அவற்றின் மூலம் சர்க்காருக்குத் தேவையான ஆயிரக்கணக்கான மரங்களை நல்ல முறையிலே அறுத்து சைஸ் செய்து ஏன் சப்ளை செய்யக்கூடாது. சம்பிரதாயமான முறையிலே அந்தக் காலத்திலிருந்த போக்கையே இந்தக் காலத்திலேயும் கடைப்பிடிப்பது நல்லதல்ல. புதிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

முற்பகல் 11-30

இன்றைக்கு அயல்நாட்டு செலாவணி சம்பாதித்துக் கொடுக்கக் கூடிய சந்தனத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். இன்றைக்கு அயல்நாட்டுச் செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய நிலையிலே. சந்தனம் இருக்கிறது. இதைப்பற்றி ஆளும் கட்சியானாலும் சரி, எதிர்க்கட்சிகளும் சரி, திருடு போகிறது என்று சொன்னால் தக்க நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. இது தொடர்ந்து வரக்கூடிய விஷயமாக இருக்கிறது. இதைப்பற்றி விசேஷ கவனம் செலுத்த வேண்டும். இது ஊழல் காரணமாகத்தான் போகிறதே தவிர, யாரோ வந்து தெரியாமல் வெட்டிக்கொண்டு போகிறார்கள் என்று சொல்லாமல், இதற்கு மேலும் இடம் கொடுக்காத வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்த சந்தனக்கட்டை, சந்தனத் தைலம் எல்லாவற்றிற்கும் உலகத்தின் எல்லா நாடுகளிலும் கிராக்கி இருக்கிறது. இருக்கும் சந்தனம் பூராவும் பயன்தரத்தக்க வகையில் மிகவும் கூர்மையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள சர்க்கார் முன்வரவேண்டும் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும், விளக்கிக்கொண்டுபோக நான் விரும்பவில்லை. இது நடக்கிறது. நடந்துகொண்டே வருகிறது.

நான் ஊட்டிக்குச் சென்றிருந்த நேரத்தில், இந்த வன இலாகா சாமான்களைப் பார்த்தேன். ரொம்ப அருமையான பொருள்கள். ஆனால், அவை மிகக் குறைந்த அளவுக்குத்தான் வைத்திருக்கிறார்கள். ஸ்டாக் ரொம்பக் குறைவாக இருக்கிறது. இயந்திரங்களை வரவழைத்து இவைகளையெல்லாம் அதிக அளவில் உற்பத்தி செய்ய ஏற்பாடுகளை மேற்கொண்டு நல்ல முறையிலே செய்தால் நல்லது. இந்த ரெசின் ஆப் ஜிஞ்சர் இப்படிப்பட்ட விஷயங்களை எடுத்துக் கொண்டு பார்க்கும்போது மிக உயர்ந்த ரகமான மருந்துகள் விளைவிக்கப் படுகின்றன. இவைகளை இன்னும் அதிக மூலதனம் போட்டு வன இலாகாவின் மூலமாகவே தொழிற்சாலைகளை ஏற்படுத்தி உற்பத்தி செய்ய ஆவன செய்ய வேண்டும். வெளிநாட்டுச் செலாவணிக்குச் சந்தனம் அதிக அளவில் தேவை என்ற நிலையில் ஏதோ ஒரு சாம்பிள் மாதிரியாகத்தான் இங்கே வைத்திருக்கிறார்கள். ஸ்டாக் இல்லை என்று சொல்லுகிறார்கள். இயற்கைச் செல்வம் ஏராளமாக இருக்கிறது. அதைப் பயன்படுத்தக்கூடிய அளவில் ஒரு சிறிய மூலதனம் போட்டால் பெரிய அளவுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கும். மேலும், அதிக லாபம் வருகிறது. 88 லட்சம் ரூபாய் அந்நியச் செலாவணி வருகிறது. இவற்றையெல்லாம் பெரிய அளவில் அபிவிருத்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அதிக அதிகாரமும் பணமும் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேனை எடுத்துக்கொண்டால், அது மிக விலை மதிப்புள்ள மருந்தாகவும் உணவாகவும் கருதப்படுகிறது. 16 ஆயிரம் கிலோ மீட்டர் பரப்பில் இருக்கக் கூடிய நிலங்களிலும், பல்வேறு பகுதிகளிலே இருக்கக்கூடிய தேன்கூடுகளிலிருந்து சேகரிக்கக்கூடிய தேன் அவ்வளவு சுத்தமாக இருப்பதில்லை. ஏனென்றால், சாதாரணமாக தேன்கூட்டை அவர்கள் கையாலேயே எடுத்துப் பிழிந்துகொண்டு வருகிறார்கள். அது அவ்வளவு ஆரோக்கியமானது அல்ல. நவீன முறையிலே கொண்டுவந்தால், இதைத் திட்டமிட்ட வகையிலே இந்தத் தேன் எடுப்பதை ஒழுங்குபடுத்துவது, நல்ல முறையிலே செய்வது என்று இருக்கக்கூடிய அடிப்படையிலேகூட பெரிய அளவுக்கு அபிவிருத்தி செய்ய முடியும். இதில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது.

அடுத்தபடியாக, மிளகு—நீலகிரி மலையிலேயும், குற்றாலத்திலேயும் சரி நல்ல மிளகு கிடைக்கிறது. கேரளாவிலிருந்து இன்றைக்கு வெளிநாட்டு செலாவணி இந்த மிளகுக்கு இருக்கும்போது இந்தப் பிரதேசத்திலே மட்டும் அந்நியச் செலாவணி ஏற்படக்கூடிய வகையிலே ஏன் அதை அதிக அபிவிருத்தி செய்யமுடியவில்லை. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும். இன்றைக்கு இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். நீலகிரியிலே விற்கப்படும் மிளகு உயர்ந்த முறையிலே இருக்கிறது. ஆனால், கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட செல்வத்தை அபிவிருத்தி செய்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தால் நாம் முன்னேற முடியும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அது மாத்திரம் அல்ல. இந்தக் காட்டு மிருகங்களைப் பாதுகாக்கக் கூடிய விஷயத்திலே நான் சொல்வது என்னவென்றால் இன்றைக்கு நம்மிடையே இருக்கக்கூடிய மிக உயர்ந்த மிருகங்கள் எல்லாம் கொன்று குவிக்கப்படுகின்றன; சுட்டுக் கொல்லப்படுகின்றன. அவ்வாறு செய்வதை எல்லா இடத்திலும் ஏன் சட்ட விரோதம் ஆக்கக் கூடாது என்று கேட்கிறேன். நான் கூறக்கூடியது என்னவென்றால் இவற்றுக்கெல்லாம் ஒரு புரொஹிபிஷன் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுத்தால்தான் மிச்சம் இருக்கக் கூடிய மிருகங்களைப் பாதுகாக்க முடியும்.

இது சம்பந்தமாக, முதுமலைக்காடு என்று ஒருசில குறிப்பிட்ட இடங்களில் மாத்திரம் பாதுகாத்தால் போதாது. சில இடங்களில் திருட்டுத்தனமாக மிருகங்களை வேட்டையாடுகிறார்கள். போய் மிருகங்களைக் கொண்டு வந்து விடுகிறார்கள். கேட்டால் ஏலம் போட்டு, அதில் எடுத்துக் கொண்டு வந்தோம் என்று சொல்கிறார்கள். இந்த இனங்களைப் பாதுகாக்க, இவையெல்லாம் திட்டவட்டமாகத் தடுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, இந்தக் காட்டு நிலங்களை நிலமற்றவர்களுக்கு பட்டா போட்டுக் கொடுத்தால் உணவு உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. இதிலே ரொம்பக் கஞ்சத்தனம் காட்டுகிறார்கள். ஒரு பக்கத்திலே காடு கொள்ளை போகிறது. இன்னொரு பக்கத்திலே நிலங்களில் புகுந்தவர்களை ஜெயிலிலே போடுகிறார்கள். இது சம்பந்தமாக தக்க நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நடந்திருக்கும் விஷயங்களைப் பாராட்டுகிறேன். நான் சொல்லியுள்ள விஷயங்களைப் பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வளவு நேரம் பொறுமையாகக் கேட்டதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் காட்டிலாகா மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்குப் பார்க்கும்போது காட்டிலாகா நமக்கு அதிக வருமானத்தைத் தரக் கூடிய இலாகா என்று கருதுகிறேன். இன்றைக்கு 21 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் காட்டு நிலம் நமக்கு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதை முழுமையாக நாம் பயன்படுத்திக் கொண்டோமேயானால் பல கோடிக் கணக்கான ரூபாய் நிச்சயமாக வருவாய் தரும் என்பதிலே யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. மொத்த நிலப் பரப்பிலே 30 சதவிகிதம் காடு இருக்க வேண்டும் என்ற கொள்கையிருந்த போதிலும் கூட, நமக்கு மிகக் குறைவான, 16 சதவிகிதம் தானே இருக்கிறது என்பது பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. இந்த 16 சதவிகிதம் பரப்பையும் எந்த அளவுக்கு முழுமையாக உபயோகப் படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று பார்க்கும்போது இதிலே இன்னும் சரியான முறையிலே பயன் கிடைக்கவில்லை என்றுதான் நான் கூற முடியும்.

நமக்கு இருக்கக் கூடிய காட்டினுடைய விஸ்தீரணம், நாம் அதற்காக முதலீடு செய்யக் கூடிய அளவு இவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் நம்முடைய முதலீடு மிக மிகக் குறைவானது என்று நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இந்தக் காட்டிலாகாவிலே எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான முதலீடு செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு வருவாய் கிடைக்கிறது. ஆகையினாலே, வருவாய் தரக்கூடிய முதலீடு செய்ய வேண்டும். இரண்டு கோடி ரூபாய் செலவில் நாம் இப்பொழுது மூலதனச் செலவுக்காக ஒதுக்கியிருக்கிறோம். இந்த மூலதனம் போதாது. அடுத்த ஆண்டு இதைவிட அதிகமான தொகை ஒதுக்கப்பட வேண்டும். இதற்கு அரசு முன் வர வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

இப்பொழுது பயன் தரத்தக்க வகையிலே மரங்களை வளர்க்க வேண்டும். ரப்பர் வளர்ப்பது போன்ற திட்டங்கள் ரொம்ப முக்கியமானவை. இன்றைக்குப் பயன் தரக்கூடியவை. ரப்பர் எந்த அளவுக்கு வெளி நாட்டை எதிர்பாராமல் நாமே உற்பத்தி செய்து கொள்வது, இதெல்லாம் முதன்மையான திட்டங்கள். இன்னும், தேவையான நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. உறுப்பினர் மிக அதிகமான மூலதனம் வேண்டுமென்று கேட்டார்கள். இது சம்பந்தமாகவெல்லாம் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சென்ற ஆண்டு தென்னை வளர்ப்புப் பற்றிக் கூறி இருந்தேன். இந்த ஆண்டு அதைப் பற்றி எந்தவிதமான குறிப்பும் இல்லை. நாமும் அந்நிய நாட்டிலிருந்து நிறைய கொப்பரையை இறக்குமதி செய்கிறோம். தென்னையை அதிகமாக உற்பத்தி செய்வது அந்நியச் செலாவணியை மீத்துக் கொடுக்கும். ரப்பர், முந்திரி இவைகளைவிட தென்னை அதிக வருவாய் தரத்தக்கது.

முந்திரியிலும் இன்னும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். கடலூரில் தனியார் ஒருவர் முந்திரித் தோட்டத்தில் ஆராய்ச்சி செய்து எவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்று கவனம் செலுத்தினார். ஒரு ஏக்கருக்கு முக்கால் டன்னுக்கு மேலாக உற்பத்தி செய்ய முடியும் என்பது அவருடைய ஆராய்ச்சியின் பலனாகக் கண்ட முடிவு. இருக்கும் முந்திரித் தோட்டத்தில் அந்த அளவுக்குப் பெரிதாகச் செய்ய முடியா விட்டாலும் ஆயிரம் ஏக்கரை எடுத்துக் கொண்டு அதிகப்படியான 'ஈல்டு' கிடைக்க அதற்கான முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்க முயற்சிக்க வேண்டும்.

காடு என்று ஒதுக்கப்பட்ட இடங்களில் மரமே வளர்க்க லாயக்கில்லாத நிலை இருக்கிறது. எந்தக் காலத்திலும் அதிலே மரங்களை வளர்க்க முடியாது. அந்த மாதிரி இடங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். காட்டின் விஸ்தீரணம் குறைகிறது என்று பார்க்கக்

கூடாது. அந்த நிலங்களை எல்லாம் ஒதுக்கி நிலப்பசியைத் தீர்க்க வேண்டும். அப்படி 50,000 ஏக்கர் நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். எந்த அளவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, முடிந்துவிட்டதா, முடியவில்லையா என்பது தெரியவில்லை.

நீலகிரியின் கூடலூர் பகுதியில் விவசாயிகளுக்கு அச்சம் ஏற்படும் சம்பவம் நடந்துகொண்டிருக்கிறது. அதைப்பற்றி அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. அரசு அங்குள்ள விவசாயிகளிடத்தில் பரிவுணர்ச்சி காட்டி, 1971ஆம் ஆண்டு அரசு உத்தரவுக் கிணங்க நிலங்களை வழங்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். சிறு நிலம் வைத்திருப்பவர்களுக்குப் பக்கத்தில் யூகலிப்டஸ் மரத்தை வைத்துவிடுவதாகச் சொல்லுகிறார்கள். அதனால் சாகுபடி செய்யக் கஷ்டமாக இருக்கிறது. யூகலிப்டஸை ஒரு பக்கமாக விவசாயத்திற்குத் தொந்தரவு இல்லாத வகையில் வளர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன்: தலைவர் அவர்களே, சின்கோனா துறை, காட்டுவளத் துறை ஆகியவற்றின் மீது கொண்டு வரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கை விவாதத்தில் மாண்புமிகு தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் கலந்துகொண்டு நல்ல கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள். ஆண்டுதோறும் பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் காட்டு வளத்தை நன்றாகக் கண்காணித்து பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற ஒரு நல்ல அறிவுரையை எடுத்துச் சொன்ன அதே சமயத்தில் காட்டு இலாகா நிலங்களை, வேளாண்மைக்கு உகந்த நிலங்களை விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டுமென்றும் சொல்லி வருகிறார்கள்.

அதை உத்தேசித்துத்தான் சென்ற ஆண்டு தமிழ் நாட்டில் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் உகந்த நிலங்களை நிலம் இல்லாத ஏழைகளுக்கு விவசாயத்திற்குத் தர வேண்டுமென்று எண்ணி 50,000 ஏக்கர் நிலங்களை ஏழைகளுக்கு வழங்கும் நிலையை ஏற்படுத்தி அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இதே நிலையில் இப்படி தமிழ் நாட்டு அரசு ஏழைகளுக்கு உகந்த நிலங்களை காட்டு இலாகாவில் இருந்து எடுத்துக் கொடுக்கிற செய்தியைப் பல பேரும் பார்த்துக் கொண்டு தான் வருகிறார்கள். இது மத்திய அரசின் கவனத்திற்கும் வந்திருப்பதாகத் தெரிய வருகிறது. அதையொட்டி மத்திய சர்க்கார் ஒரு தாக்கீதை தமிழ் நாடு அரசுக்கு எழுதியுள்ளது. மத்திய சர்க்காரில் திட்ட அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தில் முழுவதும் வாசிக்காவிட்டாலும் இரண்டொரு வாக்கியங்களை வாசிக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

"While the forests area in the country is already less than that laid down in the National Forests Policy, further deforestation for agriculture can be viewed with alarm", என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, காட்டு இலாகா நிலங்களை வேறு வேறு பணிகளுக்குப் பிரித்துக் கொடுப்பதிலே சற்றுக் கவனம் செலுத்தவேண்டுமென்று நாம் மனத்தில் எண்ணி இருக்கும் கருத்துக்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பொதுவாக, பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இன்றைக்கு மழை வளம் குறைந்திருப்பதற்குக் காரணம் மலைப் பகுதிகள் அழிக்கப்பட்டுவிடுவதுதான் என்று சொல்லியிருக்கிறார்கள். மலைப் பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மலைப் பகுதிகளில் பல்வேறு நீர் நிலையங்களைக் கட்டி விட்டதன் காரணமாக சரணாலயங்களில் மிருகங்கள் இருக்கமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஓரளவு அது உண்மையும் கூட.

மேற்குத் தொடர்ச்சி மலையில் குந்தாவில் ஆறு, ஏழு மின்சாரத் திட்டங்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு மின்சாரத் திட்டம் இப்படி பல்வேறு திட்டங்களை மலைப் பகுதியில் கட்டியதன் விளைவாகத்தான் இந்த நிலை. ஓரளவுக்கு இந்த மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றியதன் காரணமாகத்தான் தொழில் அபிவிருத்திக்கு முக்கியமான மின்சாரத் தேவையை நம்மால் பூர்த்தி செய்ய முடிகிறது.

மலைப் பகுதியில் இந்த மாதிரித் திட்டங்களை ஏற்படுத்த, ஏற்படுத்த, புதிய ஊர்கள் ஏற்பட்டு மனித சஞ்சாரம் அதிகமாக இருக்கும் காரணத்தால் நமது மலைப் பகுதியில் உள்ள மிருகங்கள் எல்லாம் அண்டை மாநிலங்களுக்குச் சென்றுவிடுகின்றன என்பது ஓரளவு உண்மைதான்.

அதை மனத்தில் கொண்டுதான் இன்றைக்கு மத்திய சர்க்கார் ஆலோசனைப்படி மூன்று மாநிலங்களை இணைத்து வன விலங்கு சரணாலயம் ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு திட்டம் இருக்கிறது. திட்டம் 11 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அது கேரளா பகுதியிலுள்ள வயநாடு சரணாலயம், மைசூரிலுள்ள பந்திப்பூர் சரணாலயம், தமிழ்நாட்டிலுள்ள முதுமலை சரணாலயம் ஆகிய மூன்றையும் இணைத்து தேசிய சரணாலயமாக அமைக்கவேண்டுமென்று மத்திய சர்க்கார் ஆலோசனை செய்து அதன் மூலம் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிதி பெறவேண்டுமென்ற தமிழ்நாடு அரசின் ஆலோசனையை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டு இப்போது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழ் நாட்டிலே இருக்கும் காட்டிலாகா மூலமாக, அதிலே கிடைக்கின்ற உப பொருள்கள், ரா-மெட்டீரியல்ஸ்—கொண்டு பல்வேறு தொழில்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல் காகிதத் தொழிற்சாலை, ரயான் தொழிற்சாலை, தோல் பதனிடும் தொழிற்சாலை, தீக்குச்சித் தொழிற்சாலை ஆகியவை எல்லாம் நடைபெற்றுவருகின்றன. அதற்காக வன இலாகா மூலமாக அவர்களுக்கு வேண்டிய மரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்லாமல் விறகுத் தேவையைப் பூர்த்தி செய்யத் தேவையான அளவுக்கு மலைப் பகுதியில் எந்தெந்த இடங்களில் எவ்வளவு ஆண்டுக்கு ஒரு முறை மரங்களைக் களைய வேண்டுமென்று முடிவு செய்து கூப்புகளுக்கு விடுவதன் மூலம் விறகை எரிபொருளாக மக்கள் ஓரளவு பயன்படுத்தி வருகிறார்கள். ஓரளவு மலைவனப் பகுதியைக் குறைக்காமல் இருக்க நாட்டுப் பகுதியில், தரை மட்டத்தில் ஆற்றுப் பகுதியில், குறிப்பாக தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், தென்னாற்காடு மாவட்டத்தில் சதுப்பு நிலங்களில் எல்லாம் சவுக்கு மரம் பயிரிடுவதன் மூலமாக விறகுத் தேவையைப் பூர்த்தி செய்யமுடிகிறது.

சவுக்கு மரத்தைக்கூட புதிய முறையில் மூங்கிலுக்குப் பதிலாக காகிதத் தொழிலுக்குப் பயன்படுத்தலாம் என்று சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்களுடைய தொழிற்சாலைக்கு மிகவும் குறைந்த விலையில் கொடுப்பது நியாயமா? அப்படிக் கொடுக்கத் தேவையில்லை. தொகையை உயர்த்தவேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். பொதுவாக, இதை மனத்தில் கொண்டுதான் இந்த ஆண்டு நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் யோசனைப்படி சின்கோனா இலாகாவையும், காட்டு இலாகாவையும் பற்றி மறு பரிசீலனை செய்து நாமே தொழில் மயமாக்க திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக சின்கோனா கார்ப்பரேஷன் ஏற்படுத்தவேண்டுமென்று சமீபத்தில் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

அடுத்தாற்போல், இன்று பாரஸ்ட் கார்ப்பரேஷன் என்ற ஒரு கார்ப்பரேஷனை ஏற்பாடு செய்வதற்கு ஆராய்ச்சி செய்யவேண்டும் அல்லது யோசித்து ஒரு திட்டம் தரவேண்டும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள். அது வெற்றி பெறுமானால் பாரஸ்ட்டுக்கும் சின்கோனா போன்று ஒரு தனி கார்ப்பரேஷன் அமைக்கப்படுமானால் அதன் மூலம் பல்வேறு நிதி நிறுவனங்களில் இருந்து பணம் பெற்று நல்ல தொழிற்சாலைகளை உருவாக்கக் கூடிய ஒரு நிலை ஏற்படும். இன்று தரை மட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் முந்திரி சாகுபடி செய்கிறோம். சவுக்கு சாகுபடி செய்து கொண்டிருக்கிறோம். இவற்றை தொழிற்சாலைகளுக்கு உகந்த அளவிற்கு மரங்களாக வளர்க்கும் முறையில் மாற்றவேண்டிய ஒரு கட்டம் வந்துதான் பாரஸ்ட் கார்ப்பரேஷன் ஏற்படுத்தவேண்டுமென்ற நிலைபற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். காட்டு இலாகா மூலம் தொழில்கள் வளரும் அளவிற்கு ஒரு நல்ல சூழ்நிலை அதனால் ஏற்படும் என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காட்டு இலாகா தொழிற்சாலைகளை அதிசத் தீவிரமாக ஏற்படுத்தமுடியும் என்று தீவிரக் கருத்து பேசுவதில் முழுமையிலும் உண்மை இல்லை என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். காட்டு இலாகா மூலம் இருக்கிற நிலங்களைப் பாதுகாப்பது. இருக்கக் கூடிய நிலங்களில் அதிக மரங்களை வளர்ப்பது என்பது நம் நாட்டில் மட்டுமல்ல உலக நாடுகள் எல்லாம் அந்த ஒரு தத்துவத்தை ஏற்றுக்கொண்டு எல்லா நாடுகளிலும் அதைச் செய்துக்கொண்டிருக்கிறார்கள். முன்னேறியிருக்கிற தொழில்

மயமான நாடுகளில் கூட காடுகளை எந்த அளவிற்குப் பராமரிக்கிறார்கள் என்று பார்த்தால் இது நன்கு விளங்கும். யூ.எஸ்.ஏ.யில் 33 சதவீதம் காடுகளை நல்ல முறையில் பராமரித்து வருகிறார்கள். கனடாவில் 44 சத வீதம் காடுகளை நல்ல முறையில் பராமரித்து வருகிறார்கள். பின்லந்தில் 64 சதவீதம் காடுகளை நல்ல முறையில் பராமரித்து வருகிறார்கள். யூ. எஸ். எஸ். ஆர்.-ல் 40 சதவீதம், மலேஷியாவில் 75 சதவீதம் என்றிருக்கிறது. ஜப்பானில் கூட அதிக மக்கள் தொகை கொண்ட நாட்டில் கூட 68 சதவீதம் என்றிருக்கிறது. அந்தந்த நாடுகளில் காடுகளை அழிக்காமல் மலைப்பகுதிகளை வளர்க்கும் ஒரு சூழ்நிலை உள்ளது. இந்திய நாட்டில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கு காட்டு நிலங்களை பாதுகாக்க வேண்டுமென்று சொல்கிற தத்துவத்தின் அடிப்படையில் பார்க்கும்போது நம் தமிழகத்தில் மட்டும் 16 சதவீதம்தான் இருக்கிறது என்பதை நாம் உணர்வோம்.

ஆகவே, காட்டு நிலங்களை வளப்படுத்துவதில் நாம் எல்லோரும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதில் எந்தவிதமான பின்தங்கிய கருத்தும் இல்லை.

இன்று காடுகள் பல இடங்களில் அழிக்கப்படுகின்றன என்று பல இடங்களில் பல குறைகள் சொல்லப்படுகின்றன. அப்படிச் செய்பவர்களைப் பிடித்துத் தருபவர்களுக்கு அல்லது துப்பு தருகிறவர்களுக் கெல்லாம் இன்று பரிசுகள் கொடுத்திருக்கிறோம். அது போதாது என்று இங்கு பேசிய வேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

காடுகளில், வனங்களில் நடைபெறுகிற திருட்டுக்களுக்கு அதுபற்றி துப்பு தந்தால் அதற்குத் தகுந்த சன்மானம் அளிக்கும் அளவில் ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களும், சென்ற ஆண்டுகூட நம் எதிர்க்கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஒரு பிரச்னையைச் சுட்டிக் காட்டினார்கள். பள்ளகுளம் எஸ்டேட்டில் உள்ள பல்லாயிரக் கணக்கான மரங்களை வெட்டிச் செல்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எடுக்கப் பட்டிருக்கிற நடவடிக்கைகள் பற்றி நான் ஓரளவிற்கு, நேரம் இல்லாத காரணத்தால், இரண்டொரு வார்த்தைகளில் கூற விரும்புகிறேன். அதை வெட்டக்கூடாது என்பதற்காக தடை விதிக்கும்படி சப் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கு அவர்களுக்குச் சாதகமாக முடிவாயிற்று. அதைத் தொடர்ந்து வழக்கு உயர்நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கும் வழக்கு அவர்களுக்குச் சாதகமாக முடிவுற்றது.

அதைத் தொடர்ந்து சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சுப்ரீம் கோர்ட்டிலும் கூட அவர்களுக்குச் சாதகமாக முடிவாயிற்று. ஆனால் சுப்ரீம் கோர்ட்தீர்ப்பில் வேறு ஏதாவது முறைகள் இருக்கிறதா என்று ஆராயலாம் என்று ஒரு க்ளாஸ் மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் இருக்கிற மரங்களை வெட்டி விடக்கூடாது என்பதற்காக ஒரு ரிவியூவரையாவது போட வேண்டுமென்று நம் அரசின் அட்வகேட்-ஜெனரல் அவர்கள் டெல்லியில் வாதாடினார்கள். ரிவியூவரைப் போடுவதற்கு சுப்ரீம் கோர்ட் இன்று மறுத்துவிட்டிருக்கிறது. ஆக இப்படி சட்டச் சிக்கல்கள் இருப்பதால் என்ன செய்வது என்பதை யோசித்து அதை ஒரு மாற்று சட்டத்தால் பெறமுடியும் என்று இப்போது அரசு கருதிக் கொண்டிருப்பதால் அந்த மாற்று என்ன என்பதை சபையில் இப்போது சொல்வது நன்றாக இருக்காது என்பதால் இந்த அளவில் அதை விட்டுவிடுகிறேன்.

சின்கோனா பொறுத்தவரையில் சமீப காலத்தில் வெளிநாடுகளில் அதற்கு மார்க்கெட் கிடைத்துள்ளது. ரஷ்யாவில் இருந்தும் வெஸ்ட் ஜெர்மனியில் இருந்தும் வாங்க முன்வந்திருக்கிறார்கள். இந்தியாவில், இரண்டு மாநிலங்களில், மேற்கு வங்காளத்திலும் தமிழ்நாட்டிலும்தான் அவை பயிராகின்றன. மருந்துப் பொருள்களுக்குப் பயன்படக்கூடிய பொருள்கள்.

அது மட்டும் அல்ல. ஜெரேனியம், பச்சோலி, வெட்டிவேர் என்ற நம் நாட்டு மருந்துகளுக்குப் பயன்படுபவற்றைப் பயிர் செய்து வருகிறார் கள். வெளிநாடுகளில் இவற்றிற்கு கிராக்கி ஏற்படுமானால் இதில் நமக்கு நல்ல கணிசமான லாபம் கிடைக்கும். இந்த ஆண்டு கூட லாபம்தான் கிடைத்திருக்கிறது.

மூவாயிரம் பேர்களுக்கு மேல் இப்போது நாம் வேலை கொடுத்திருக் கிறோம். ஆக இந்தக் கார்ப்பரேஷன் அமைப்பதன் மூலம் தனி நிறு வனங்களிடமிருந்து தனி உதவி பெற்று அந்தக் கார்ப்பரேஷனை விஸ்தரிக் கிற ஒரு சூழ்நிலை ஏற்படும். அதனால் தொழிலாளர்களுக்கும் பல நன்மைகள் ஏற்படும்.

இப்போது கூட நம் தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் வீட்டு வசதி எல்லாம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரியில் உள்ள ரப்பர் தோட்டம் பற்றி திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒவ்வொரு தடவையும் வாதாடுவார்கள். அங்கு பெரியதொரு ரப்பர் தோட்டம் அமைக்க வேண்டுமென்று சற்று ஆவேசமாகச் சொல்வார்கள். போன தடவை சொன்ன ஒரு காரியத்தை செய்திருக்கிறீர்கள். ஆகவே சற்று குறைத்துக் கொள்கிறேன் என்று என்னிடத்திலேயே சொன்னார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது, தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடையும் விதத்தில். ஓரளவு அவர்களும் திருப்தியோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட பத்தாயிரம்

ஏக்கரில் ரப்பர் தோட்டத்தை வளர்க்க வேண்டுமென்று மத்திய அரசும் உதவி தரும் வகையில் இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பத்தாயிரம் ஏக்கரில் ஒரு ரப்பர் தோட்டம் உருவாகுமானுல் அந்த மூலதனத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய மூலதனமாகும் அது. ஊட்டியில் கூட ஒரு டீ தோட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை அகதிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட அந்தத் தோட்டத்தில் இன்று கிட்டத்தட்ட ஆயிரம் பேர்களை வேலைக்கு அமர்த்தும் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அவர்கள் சம்பளத்தைப் பற்றித்தான் சொல்கிருர்கள். தனியார் தோட்டங்களில் கொடுக்கிற சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிருர்கள். அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். தனியார் தோட்டங்களில் நிலையான சம்பளவிகிதம் என்று கிடையாது. அரசாங்க நிறுவனங்களில் எந்த அளவிற்கு லாபகரமாக நடத்த முடியுமோ, லாபம் வர வர தொழிலாளர்களுக்கு நல்லமுறையில் சம்பள விகிதங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் கூட உயர்த்தப்பட்டிருக்கிறது. சின்கோனு தோட்டத்தை எடுத்தாலும் அப்படித்தான். ரப்பர் தோட்டத்தை எடுத்தாலும் அப்படித்தான்.

காட்டு இலாகா மரங்களைப் பாதுகாப்பதில் அத்தனை பேர்களும் காவலர்களாக இருந்து ஒத்துழைப்பு தரவேண்டும். திருட்டுப் போகின்றன என்றுல் போன பிறகுதான் சொல்கிருர்கள். அப்படி போன பிறகு சொன்னுலும் பல்வேறு இடங்களில் பெரிய பெரிய வழக்குகளை எல்லாம் கண்டுபிடித்திருக்கிருர்கள்.

கேரளாவிலிருந்து சந்தன மரம் திருடப்பட்டு ரெயில்வே வாகன்களில் ஏற்றப்பட்ட போது செண்ட்ரல் ஸ்டேஷனில்தான், தமிழக போலீஸார்தான் வாகனிலுள்ள சந்தனக் கட்டைகளை எல்லாம் பிடித்தார்கள். அந்த அளவிற்கு தமிழ்நாடு போலீஸ் நல்ல கண்காணிப்போடு இருந்து வருகிறது. பிரதான வழக்குகளை எல்லாம் கண்டு பிடித்த போலீஸ் அதிகாரிகளுக்கு காட்டு இலாகா மூலமாகக் கூட சன்மானம் கொடுக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். பொது மக்களுக்கும் துப்பு தருகிறவர்களுக்கும் சன்மானம் கொடுக்கலாமா என்பதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த அளவிற்கு தக்க நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசியவர்களுக்கு நன்றி கூறி, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருப்பவர்கள் காலப்போக்கில் எல்லாம் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து அவற்றைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I raised two points. The first point related to the subsidised rate of Rs. 11 charged for the paper mills while the market rate is 25. The other point is, whether there is any proposal to start a Sandalwood Oil Factory in our State because sandal- wood is being sold at a very low rate price. நண் பகல் 12·0

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: குறைந்த விலைக்கு காகிதத் தொழிற்சாலைக்குக் கொடுக்கக்கூடாது என்று சொல்கிருர்கள். தொழிலை உற்சாகப்படுத்த வேண்டும், ஊக்குவிக்க வேண்டுமென்பது அரசின் கொள்கை. தொழிற்சாலை வளரவேண்டுமென்பதற்காக அரசு சலுகை கொடுப்பது நியாயம் என்று சொல்லி சேஷசாயி மில்ஸ்க்கு கொடுத்திருக்கிறோம். முந்திய ஆண்டு $6\frac{1}{2}$ ரூபாய் கொடுத்திருக்கிருர்கள். இப்போது 11 ரூபாய் டன்னுக்கு என்று முடிவு செய்திருக்கிறோம்.

சந்தனத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கிருர்கள். இன்று ஏற்கனவே மைசூரில் இருக்கும் சந்தனத் தொழிற்சாலைக்கு 2–3 காடுகளில் கிடைக்கும் சந்தனங்கள் போதவில்லை என்று சொல்கிருர்கள். தனியாகச் சந்தனத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு போதிய அளவு சந்தனக் கட்டைகள் இல்லை. பொதுவான முறையில் இந்தியா முழுமைக்கும் ஏலம் போட்டுத்தான் கொடுக்கிறோம். அதிலே நல்ல முறையில் 3-ல் ஒரு பங்கு லாபம் வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Is that concession given to one paper mill only or to other paper mills also.?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, சேஷசாயி பேப்பர் மில்ஸ்க்கு கொடுத்து இருப்பது மூங்கில் மரங்களுக்குத்தான். மூங்கில் மரங்களை அங்கே பிளாண்டேஷன் முதல் போட்டு வளர்க்கிறோம். சன் பேப்பர் மில்ஸ்க்குக் கொடுத்து இருப்பது ஒரு வித புல். அது தானுகவே வளர்ந்து விடும். யாருக்கும் கொடுக்காவிட்டால் காய்ந்து போய் விடும். அதுவும் சும்மா கொடுப்பது இல்லை. $6\frac{1}{2}$ ரூபாய்க்கு கொடுக்கப்படுகிறது. கேரளாவில் ரூ. 1-க்கு கொடுக்கிருர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

நிதிக் கோரிக்கை எண் 24-க்கு திரு. கு. அ. பொம்மன், திரு. அழகர்சாமி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை அவர்கள் வற்புறுத்தவில்லையாதலால் அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" நிதிக் கோரிக்கை எண் 24—சிங்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 75,74,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 40-க்கு டாக்டர் ஹாண்டே, திரு. வகாப் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள், அவர்கள் இருக்கையில் இல்லாததால், திரும்பப் பெறப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. அழகர்சாமி ஆகியோர் தாங்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவைகள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" நிதிக் கோரிக்கை எண் 40—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,78,25,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 49-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் இருக்கையில் இல்லாததால் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டதாக கருதப்பட்டது.

திரு. ஜேம்ஸ் அவர்கள் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லையாதலால் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" நிதிக் கோரிக்கை எண் 49—காட்டு வள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,46,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும். "

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 26—கதர்

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

" நிதிக் கோரிக்கை எண் 26—கதர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 31,23,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

திரு. எ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, கிராமப்புற வேலை வாய்ப்பைப் பெருக்கக் கிராமங்கள் தோறும் சிறு தொழில்களைப் பெருக்க வேண்டும் என்பதைக் குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 26—கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 31,23,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, அம்பர் சர்க்கா பயிற்சி நிலையங்கள் நடைபெறும் இடத்திற்கு வாடகை கொடுக்கும் பொறுப்பை அரசே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 26—கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 31,23,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU J. JAMES : Sir, I move the following cut motion to discuss about the necessity to increase the wages to the workers employed in Khadi Industry—

" That the allotment of Rs. 31,23,700 under Demand No. 26—Khadi be reduced by Rs. 100."

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, நான் கொடுத்திருக்கும் இந்த கொள்கை அறிக்கையில் ஒரே ஒரு திருத்தத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன் தமிழ் அறிக்கையில் 7-வது பக்கத்தில் இராமத் தொழில்கள் என்ற தலைப்பில் " கிராமத் தொழில்கள் பல வற்றின் வளர்ச்சிக்காக", என்று வரும் வாக்கியத்தில் " வாரியத்தின் கீழ் துறையினைச் சேர்ந்த 226 பிரிவுகளும்" என்று இருப்பதை " 266 பிரிவுகளும் " என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மற்ற கொள்கைகளைச் சொல்லியிருக்கிறேன், ஆகவே உங்களுடைய யோசனைகளைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமை கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, I thank the Hon. Deputy Speaker for having given me an opportunity to speak a few words about the Khadi and Village Industries.

In the Note prepared by the Khadi and Village Industries Board, it has been clearly stated that there are at present 124 Khadi Production Centres and 170 Khadi Sales Depots. If a few more Khadi Sales Depots are opened, we can promote the sale of Khadi.

Regarding Charkhas, I request that the wages for the workers engaged in that industry and other industries should be increased.

As regards silk production, only Rs. 65 lakhs worth of silk is produced I want to point out that there is a largedemand for khadi silk in our State. Especially in Hosur, we are producing cocoons. I suggest to the Hon. Minister that he may start a silk reeling and weaving industry so that we can produce more silk and sell it to other countries. There are silk weavers in Hosur and they are actually weaving and selling it. Besides the twisted yarn from the mills is brought by them for weaving purposes. We can give some subsidy to them and thus help the village industry.

Sir, four or five factories have been closed in our State, one of them is at Hosur. I have written a letter to the Hon. Minister and the Head Office at Bombay to review the position. In the factory at Hosur, 40 ladies were working. Their families are suffering. So I request the Hon. Minister to open that factory so that 40 families will be benefited. I also want him to take action against those responsible for closing that factory which is more useful to the people.

I understand that in the Khadi Department there are temporary hands and I request that they should be confirmed in their posts.

It is stated that a detailed survey has been arranged to ascertain the extent of availability of rural traditional artisans. I am very sorry to note that so far no proper survey has been made to find out the resources which can be tapped for improving the economy of the rural areas. I am very happy that at least now the survey is being conducted so that we can increase the standard of living of the people in the rural areas, especially during the agricultural off-season. For example in the dry areas like the Dharmapuri district, the Government can provide facilities for the weaker sections of the community to get gainful employment during the off-season and also produce goods for the community.

In the Dharmapuri district in every house ladies are doing business in 'Agarbathi'. The raw materials for it are being sent to Bangalore. The people there are selling the same thing produced by us. Instead of that, we ourselves can start an industry in Denkanikota so that the people in our State can get very good income.

Regarding potters, cobblers, weavers and other weaker sections of the community, some subsidy should be given to them so that it would act as an incentive for them to increase their income and improve the industries in the rural areas.

This will help the weaker sections of the people in the area and they can make some materials out of the stones and sell them. That way, those people could be helped and the village industry also can be helped.

Lastly, to stabilise rural economy, this rural resource should be fully surveyed and made available to the people. If this is made full of use, we can improve the economy of our State and our country also. Thank you, Sir.

திரு. கா. மு. கதிரவன்: அவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் இந்த காதி போர்டு சம்பந்தமான மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைப் பேச நான் விழைகிறேன். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இந்த போர்டாரால் பனை மரங்கள் எந்த அளவுக்கு நிர்வாகம் செய்யப்பட்டிருக்கிறது என்று எண்ணு கின்றபோது, இந்த நிர்வாகத்தையும், அமைச்சரவர்களையும் அதற்காக ஒத்துக்கொண்ட முதலமைச்சர் அவர்களையும் பாராட்டி நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏறத்தாழ நம்முடைய தமிழகத்தில் 4 கோடி பனை மரங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. 2½ கோடி தொழிலாளர்கள் அந்த பனை மரத்தை நம்பி வாழ்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் மது விலக்கு ரத்து செய்யப்படுவதற்கு முன்னால் லைசென்ஸ் முறை என்று ஒன்றை வைத்து, அதனால் அந்தத் தொழிலாளர்கள் எந்த அளவுக்கு அல்லல்பட்டார்கள் என்பதை நாம் அறிவோம். இன்றைய தினம் அந்த லைசென்ஸ் முறையை ரத்து செய்ததற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது போக, இந்தத் தொழிலாளர்கள் பனை மரங்களில் ஏறுகிறபோது, அவற்றிலிருந்து கீழே விழுந்தால், அவர்கள் மாண்டு போனால் ஆயிரம் ரூபாய், படுகாயம் அடைந்து இன்னலுற்றால் ரூ. 500, சிறிதளவு காயம் என்றால் ரூ. 100 என்ற அளவுக்கு உதவித் தொகை அளிப்பதாக இந்த அரசு விடுத்த அறிக்கையைக் கண்டு அந்தத் தொழிலாளர்கள் சார்பாக அரசிற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த பனைமரத்தைப் பொறுத்த வரையில் 'கற்பக விருட்சம்' என்று சொல்வார்கள். பனை மரத்தை பயிர் செய்யும்போது நாம் தண்ணீர் விடவேண்டியதில்லை; அந்தப் பயிருக்கு உழைப்பு தேவையில்லை. தன்னால் வளர்ந்து, அதே சமயத்தில் அந்த மரத்தின் எந்த உறுப்பும் வீணாகாமல் அவை நமக்காகப் பயன்படுகின்றன. ஆகவே அதற்கு கற்பக விருட்சம் என்று கூறினார்கள். அந்த மரத்திலிருந்து பதனீர் எடுத்து அது ஏழை மக்களுக்கு உணவாகப் பயன்படுவதைப் பார்க்கிறோம். சென்னையில் கூட ஏறத்தாழ 10,000 பதநீர் புட்டிகள் விற்பனையாவதாகத் தெரிகிறது. இவற்றின் மூலமாக தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கிறது. பதநீர் அருந்துவது உடலுக்கு நல்ல தெம்பை ஊட்டுவதை நாம் பார்க்கிறோம்.

அடுத்து, இந்த பனைமரத்திலிருந்து தும்பு போன்ற பொருட்களை எடுத்து, தூத்துக்குடி துறைமுகத்தின் மூலமாக இன்றைய தினம் 20 லட்சம் ரூபாய்க்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இது அன்னியச் செலாவணியை ஈட்டுகின்ற ஒரு தொழிலாகும். அதே போன்று பனைமரத்திலிருந்து குருத்தோலையை எடுத்து தொப்பியாக்கி அதை கனடா போன்ற நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றின் மூலமாக ஏறத்தாழ 30 லட்சம் ரூபாய் இந்த நாட்டுக்கு வருமானம் வருகிறதென்றால் அது பெருமைப்படத்தக்கதாகும். மேலும் பிரஷ் போன்றதை தயாரிக்கலாம் என்றும், ஜப்பான் நாட்டுக்கு அனுப்ப வேண்டுமென்றும், ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 12 லட்சம் பிரஷ் அனுப்பினால் 36 லட்சம் ரூபாய் கொடுப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அவற்றில் இந்த அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெல்லை மாவட்டத்தில் தென்காசி பகுதியில் மலையடி ஓரமாக தேனீ வளர்க்க ஒரு பெரிய யூனிட் தேவை என்று அரசிற்கு வேண்டுகோளை விடுக்கிறேன். இப்போது தமிழகத்தில் 72 யூனிட்டுகளும், 36 கூட்டுறவுச் சங்கங்களும் இருக்கின்றன. ஏறத்தாழ அவைகள் மூலம் 22 லட்சம் ரூபாய் அளவுக்குத் தேன் உற்பத்தி செய்கிறார்கள். வட நாட்டில், பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற நகரங்களுக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்கிறார்கள். மேலும் வெளிநாடுகளுக்கும் இந்த தேன் போன்ற பொருட்கள் ஏற்றுமதி செய்ய அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் நெல்லை மாவட்டத்தில் தென்காசி பகுதியில் கத்தாழை நார் அதிகமாக உற்பத்தியாகிறது. அவற்றைப் பயன்படுத்தி நார் உரிக்கின்ற தொழிலை ஏற்படுத்த காதி போர்டு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, எங்கள் பகுதியில் மண்பாண்டம் உற்பத்தியைப் பொறுத்த வரையில், தேன்பொத்தையில் ஒருதொழில்கூடத்தை காதிபோர்டு உருவாக்கியிருக்கிறார்கள். அவற்றில் மண்பாண்டம் மட்டுமல்ல, ஜாடிகளும் செய்கிறார்கள். கேரளத்தில் ஒரு பகுதியில் விற்பனை ஆகின்ற மண்பாண்டங்கள் எல்லாம் தேன்பொத்தையில் உற்பத்தியாவது தான். இன்னும் இலஞ்சி, சுந்தரபாண்டியபுரம் போன்ற இடங்களிலும் மண்பண்டங்கள் செய்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் அரசாங்கம் ஆவன செய்திட வேண்டும். காதி போர்டின் விற்பனையைப் பொறுத்த வரையில், ஆண்டுக்காண்டு அதிகமான அளவில் விற்பனை நடந்து வருகிறது. சமீபத்தில் சென்னையில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்குப் பக்கத்தில் ஒரு பொருட்காட்சி நடத்தினார்கள். அதை நான் சென்று பார்த்தேன். நம்முடைய தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டாடைகள் வைக்கப்பட்டிருந்தன. அவை மிக அழகாகவும், திறமையாக நெய்யப்பட்டதாகவும், விலை குறைவாகவும் இருந்ததைக் கண்டு உண்மையிலேயே பூரிப்படைந்தேன். அவற்றை தமிழ்நாட்டில்

மேலும் பல்வேறு மாவட்டங்களிலும் தயாரித்து பல்வேறு பகுதிகளுக்கு விற்பனை செய்கிற அளவுக்கு ஆற்றல் படைத்திடும் அளவுக்கு நிர்வாகத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று கூறி முடிக்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கதர் மான்யத்தின் மீது எங்களுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

கதர் வாரியத்தின் கீழ் நடைபெறக்கூடிய முக்கியமான தொழில்கள் 22 என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதில் முக்கியமானது பனை வெல்லம் தயாரிப்பது. இந்தத் தொழிலை இப்போது மூடிவிடுவது, மாவட்ட பனைவெல்ல உற்பத்தி கூட்டுறவுத் தொழிலை மூடிவிடுவது என்ற முடிவிற்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. இன்று கிராமப் பகுதியில் பெரும்பான்மையான மக்கள் பதனீர் மூலமாக எடுக்கின்ற பனை வெல்லத்தைத்தான் அதிகமாக உபயோகிக்கிறார்கள். அது சர்க்கரையை விட ஆரோக்கியமானது என்று சொல்லப்படுகிறது. ஆகவே அதை அதிகமாக உற்பத்தி செய்ய, கிராமத் தொழில் மூலமாக உற்பத்தி செய்ய, செய்யப்பட்ட ஏற்பாடு நிறுத்தப்பட்டிருக்கிறது என்பது அவ்வளவு சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அடுத்தபடியாக, கிராமப்பகுதிகளிலே விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய மக்களுக்கு எல்லாக் காலங்களிலும் வேலை கிடையாது. ஆகவே, விவசாயத்தில் வேலையில்லாத நாட்களில் சிறு வருமானம் தரக்கூடிய குடிசைத் தொழில்களில் ஈடுபடுகிறார்கள். காதி போர்டின் கீழ் வரக்கூடிய தொழில்களில் ஒரு சில இடங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். முக்கியமாக பனை நார் சம்பந்தப்பட்ட தொழில் எண்ணெயோடு கூடிய தொழில், காகிதம் செய்யக்கூடியத் தொழில், இன்னும் சோப்பு தயாரிப்புத் தொழில் இவை ஒன்றிரண்டு இடங்களில்தான் இருக்கின்றன. இந்த மாதிரியான குடிசைத் தொழில்களில்தான் மக்கள் அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரியான சிறுதொழில் பிரிவுகளை எல்லாக் கிராமப்புறங்களிலும் பரவலாக்க விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டதினால் பனை வெல்ல உற்பத்தித் தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஏதாவது மாற்று ஏற்பாடுகளைச் செய்தாகிலும் அல்லது குறிப்பிட்ட ஓரளவு பனை மரங்களை பனைவெல்ல உற்பத்திக்கு என்று ஒதுக்கி, பனைவெல்ல உற்பத்தி பாதிக்காத அளவுக்கு விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று ஆங்காங்கு ஆரம்பிக்கப்படுகிற பல தொழில் உற்பத்திகள் கூட்டுறவு முறையிலே இருக்கின்ற கதர் வாரியத்தினால் சரியாக விற்பனை செய்ய முடியாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதனால் பல தொழில்கள் நசித்துப் போகக்கூடிய ஆபத்து இருக்கிறது. அதற்குக் காரணம் இந்த குடிசைத் தொழில்களில்—கையினால் செய்யப்படுகின்ற பொருட்கள் ஆலைத் தொழில் உற்பத்திகளோடு போட்டி போட

முடியவில்லை. குடிசைத் தொழில்கள் மூலம் உற்பத்திச் செய்யப்படும் பனை நார் பொருள்கள், எண்ணெய் பொருள்கள், சோப்பு போன்ற பொருட்கள் பெருவாரியாகச் செய்யப்படுகிற ஆலைத் தொழில் உற்பத்திகளோடு போட்டிபோட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, குடிசைத் தொழில்கள் மூலம் உற்பத்திச் செய்யப்படும் இந்தமாதிரியான பொருட்களை மாநில மட்டத்தில் ஏதாவது ஒரு வாரியத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் வாங்கி விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதிலே அரசாங்கத்திற்கு கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டாலும் அதனால் பாதகம் இல்லை. ஏனென்றால் கிராமப்புற மக்களுக்கு அதனால் வேலைவாய்ப்பு ஏற்பட்டு, அவர்கள் வருமானத்தை ஓரளவாவது பெருக்கிக்கொள்ள வழி ஏற்படுகிறது. ஆகவே, அரசாங்கம் அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கதர் நூற்பு அம்பர் சர்க்காவில் நடைபெறுகிறது. அதனாலும் கிராமப்புற மக்களுக்கு ஓரளவு வேலைவாய்ப்புக் கிடைக்கிறது. இந்தத் தொழிலில் எஸ்.எஸ்.எல்.சி. படித்த பெண்கள் கூட ஏராளமானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் 10 மணி நேரம், 12 மணி நேரம் வேலை செய்தாலும் அவர்களுக்குக் கிடைக்கிற கூலி ஒரு நாளைக்கு $1\frac{1}{2}$ ரூபாய்க்குமேல் இல்லை. நூல் நூற்பு என்பது கஷ்டமான வேலை. உடல் வலிவை எல்லாம் செலுத்தி ஒரே நேரத்தில் அம்பர் சர்க்காவிலுள்ள 6 கதிர்களையும் சுழற்றவேண்டும். அப்படி நூற்கப்படுகின்ற நூலுக்கு ஒரு சிட்டத்திற்கு 10 பைசா தான் கூலி கிடைக்கிறது. அதை குறைந்தது 15 பைசா என்ற அளவுக்காவது ஆக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் ஓரளவுக்காவது அவர்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய கூலி கிடைக்கும். அதைப் போலதான் பட்டைப் போடுபவர்களுக்கும் குறைவான கூலி கிடைக்கிறது. குடும்பத்திலே வருமானம் தேடக்கூடிய வேறு நபர்கள் இல்லாததால்தான் பெண்கள் எல்லாம் இந்த வேலைக்கு வருகிறார்கள். ஆகவே, பட்டைப் போடும் தொழிலில் பயிற்சி பெற்றவர்களுக்கு ஒரு நாளுக்கு குறைந்தபட்சம் 3 ரூபாயாவது கூலி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த நூல் நூற்புக்கு தரமான பஞ்சு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். சில இடங்களிலே தரம் குறைந்த பஞ்சைக் கொடுப்பதாக புகார்கள் வருகின்றன. தரம்குறைந்த பஞ்சிலே நூற்பது சற்று சிரமமானது மட்டுமல்ல; சிட்டங்களும் குறைவாகத்தான் கிடைக்கும்.

அடுத்து, இந்தமாதிரி பயிற்சிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் இருக்க ஏற்பாடு செய்யவேண்டும். அங்கே உள்ள மக்கள் நன்கொடையாக கட்டடத்தை கட்டி கொடுக்கலாம். அல்லது பஞ்சாயத்து ஸ்தாபனங்களோ அல்லது மற்ற ஸ்தாபனங்களோ தர்மகாரியங்கள் போல கட்டிக் கொடுக்கலாம். அதற்கெல்லாம் வசதி இல்லை என்றால் ஆங்காங்கே இதற்கான கட்டடங்களை கதர் இலாகா கட்டித் தரவேண்டும் அல்லது வாடகைக் கட்டடங்களில் இயங்குவதற்கு, கட்டட வாடகையை கதர் இலாகா கொடுக்க வேண்டும். இப்போது வேறு வருமானத்திற்கு வழியில்லாமல்

இந்தத் தொழிலில் பயிற்சிபெற வருகின்ற பெண்களிடம் கட்டடத்திற்கான வாடகையை வசூலிப்பதாகத் தெரிகிறது. அவர்களுக்கு வருகின்ற குறைந்த வருமானத்தில் கட்டட வாடகையும் கொடுக்கவேண்டுமென்றால் மிகவும் கஷ்டப்படுவார்கள். எனவே, அரசாங்கம் இதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஒரு பயிற்சி நிலையத்திற்கு ஒரு ஆசிரியர்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் சில வேளைகளில் அதற்கு மேலும் கூட வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அவர் ஒருவர்தான் கணக்கு எழுதவேண்டும்; ரிப்போர் செய்யவேண்டும்; பயிற்சியளிக்கவேண்டும். ஆகவே, ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் குறைந்தது இரண்டு ஆசிரியர்களையாவது நியமிக்கவேண்டும். அல்லது கணக்கு எழுதுவதற்கு என்று தனியாக ஒருவரைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் துறையிலே இருக்கின்ற பணியாளர்களை தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகையின்போது கட்டாயமாக இவ்வளவு ரூபாய்க்கு — ஆயிரம் ரூபாய், 2,000 ரூபாய்க்கு — விற்பனை செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். எப்படியாவது விற்பனை செய்யவேண்டுமே என்று கடனுக்குக்கூட கொடுத்து விடுகிறார்கள். பின்னால் கடன் வசூல் செய்யமுடியாமல் போனால் அவர்களின் சம்பளத்தில் பிடித்துவிடுவோம் என்றுசொல்லி, எப்படியாவது வசூல் செய்யவேண்டுமென்று மேலதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இந்த கட்டாய விற்பனை செய்ய வேண்டுமென்ற நிலையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு காதி போர்டிலே பலர் இருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அதிலே யார் இருந்தாலும் பரவாயில்லை; ஆனால் அவர்கள் இந்தத் துறையின் வளர்ச்சியிலே ஆர்வம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். மத்திய அரசாங்கத்திலே இருந்து வரக்கூடிய மானியத்தை அதிகமாகப் பெறுவது எப்படி, இந்தத் துறையிலே மக்களுக்கு எப்படி வேலைவாய்ப்பு கொடுப்பது, கைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் வருமானத்தை எப்படி அதிகரிப்பது என்பதிலே அக்கறை உள்ளவர்களைப் பார்த்துப் போடவேண்டும். கட்சி மனப்பான்மை இல்லாமல், ஆர்வம் உள்ளவர்களை அக்கறைக் காட்டக்கூடிய வர்களை கதர் போர்டிலே மெம்பர்களாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டதுபோல மூடிவிட்ட பனை வெல்ல உற்பத்திப் பிரிவை மீண்டும் திறப்பதற்கு முயற்சி செய்யவேண்டும் என்றும், பனைவெல்ல உற்பத்தித் தொழில் நசித்துப் போகாமல் இருப்பதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு பனை மரங்களை அதற்கென்றே ஒதுக்கிவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Hon. Deputy Speaker, Sir, I again find that this is one of the most important Demans—the total amount demanded is Rs. 30 or 31 lakhs.

I may repeat here what some of the great parliamentarians in those days have said, namely, the British came to trade in paper, but Gandhiji drove them with salt and khadi. So, khadi is such an important thing in the economy of this country that it deserves a better treatment and better attention and more money.

Sir, if we go on pursuing the present industrial policy of mechanisation on one side and then trying to develop the small village industries on the other side, I think the village industries will die, except for the artificial injections now and then given to these industries. So far as the village industries are concerned, many articles are coming up with materials which replace the village industries. For example, the plastic materials. That is one of the main items that displaces completely the manufacture of many items in villages.

Take for example the baskets. There was a good trade for these baskets previously. Where has it gone now!

Likewise, because of the encouragement that is given to mechanised shoes to manufacturers like Bata and others, the village shoe making industry has gone out. There is greater possibility of manufacturing sandals and selling in the country.

There should be a revision of the industrial policy which will help arrive at a solution to the unemployment problem and other problems. There is no use giving five rupees more here and five rupees more there. There should be full-scale employment provided to the rural people.

Khadi is no doubt one of the best village industries. But unfortunately, from the report we have received the sales have been low even though the value has increased. The quantum of sales has gone down. There is no doubt about it.

So, Sir, there should be an attempt made to solve the unemployment problem amongst the weavers by encouraging the manufacture of cloths, spinning and weaving. I am very glad that this Government is thinking of encouraging six-spindle and twelve-spindle charkas which are excellent in the way of solving the unemployment problem in villages.

Not only that, if it is a mill and if you invest one crore of rupees, you can give employment to 250 people. But if you invest Rs. 65,000 and produce 12 spindle charkas and automatic processing materials you can give employment to more than 6 or 7 people in a family and the cost is only Rs. 65,000.

I am glad that the Textool Company has been taken over by the Government and run by the Government. It will be possible to produce a number of these charkas and supply to the people, for the manufacture of khadi cloths.

Secondly, so far as khadi export is concerned, there is a good demand from people in other parts of the world. They have discovered that khadi is the purest form of cloth and that it is not subjected to chemical reaction, which not only affects cloth but also the human skin. So, this pure, old and conservative method of wear is in good demand in all the foreign countries. I won't say in all foreign countries but in many foreign countries. Many foreign countries are willing to take khadi, provided it is manufactured scientifically. Therefore efforts should be made to manufacture scientifically and supply them. பிற்பகல் 12–30

Unfortunately, it has been stated sometime back that the Khadi and Village Industries Board is incurring loss inspite of subsidies. Naturally, there should be a complete check over this. There is no use in having Khadi Gramodyog Bhavan alone but there should be mass scale sale of khadi. Then only we can solve the unemployment problem.

A lot of old stock of khadi was sold in the Rajaji Hall recently. It is unfortunate that damaged clothes have accumulated for many years. Of course, the percentage may be small when compared to the production. I feel there is no need to accumulate damaged cloths. With the limited knowledge on business, I can say this. Once in six months or one year, the substandard khadi and shop-soiled cloths should be disposed without accumulating them for a number of years. so that the money received could be utilised well.

Coming to other cottage industries like Palmgur, etc., I find there has been very bad management. The amount allotted for acquisition of land for one industry was not used for more than three years and the amount was returned without any interest. There are also many other factors which I do not want to go into details for want of time. Instead of making this Khadi Department a 'show-piece', the Department can increase its potentialities.

[Thiru K. M. Subramaniam] [1973 மார்ச் 24

Once again I want to repeat what I have said some time ago. In a country with a population of 52 crores, the sky is the limit for the consumption of materials. So what is needed is the reversal of the Industrial policy. We say village-oriented, etc. But the agriculturists and the people in the villages are not able to increase their remuneration during their spare time. Many people are idling their time. If the will and decision to spend money are there, they can achieve this. I think there is decision to spend money. But unfortunately expertise is lacking. Unfortunately, people do not believe in the Gandhian method at all. Even some of my old friends even after getting Independence have lost faith both in Khadi and Village Industries. They go to America and England and find some new development. What is the use of developing all these, when the people in the villages are not able to get sufficient employment? I am very seriously saying about this. I am not telling this for argument's sake. I would like to give a sincere suggestion.

We should develop khadi particularly in Tamilnad. This should be done to avoid rush in towns, rush for mechanised industry and capital for industries. If khadi industry is developed, it can give more employment opportunities to the pepole in villages. I hope in the next year the allotment will be for three crores instead of 30 lakhs of rupees. This is the only solution to solve the unemployment problem in a country like India which has vast increasing population. It is important to give employment than to give doles.

I suggest that serious attempt should be made for the revival of new industrial policy. It should be village-oriented. It should provide employment to the villagers with reasonable remuneration.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவரவர்களே, கதர் கிராமக் கைத் தொழில் வாரியக் கோரிக்கை மீது என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கதர் வாரியம் மிகச் சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும் என்று நாங்கள் அனைவரும் விரும்புகிறோம். இதில் சிறந்த முறையில் அபி விருத்தி ஏற்பட்டிருப்பதை புள்ளிவிவரங்களிலிருந்து பார்க்கிறோம். கதர் வாரியத்தின் மூலம் விற்பனை 1966–67ல் ரூ. 146 லட்சமாக இருந்தது 1972–73ல் ரூ. 2,11,52,000 என்ற அளவிற்கு அதிகரித்திருக்கிறது. இதுபோல கதர் பட்டை எடுத்துக்கொண்டால் 1966–67ல் ரூ. 36,89,000 என்று இருந்தது 1972–73ல் ரூ. 70 லட்சம் என்ற அளவிற்கு விற்பனை உயர்ந்திருக்கின்றது என்பதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியடைகிறோம். இந்த விற்பனைக்கு அடிப்படை இயந்திரம் ஊராட்சி ஒன்றியங்கள்தான் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காண்பிக்க விரும்புகிறேன். எனவே இந்த நேரத்தில் இவ்வளவு விற்பனைக்காக ஊராட்சி ஒன்றியப் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களையும் மற்றவர்களையும் பாராட்டினால், அவர்கள்

1973 மார்ச் 24] [திரு. எஸ். ஆறுமுகம்]

எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்தால் நிச்சயமாக அடுத்த ஆண்டில் இன்னும் அதிக ஊக்கத்தோடு விற்பனை செய்வதற்கு ஏதுவாகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். காரணம் நான் ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராக இருப்பதால் இதில் எவ்வளவு அக்கறையும் சிரத்தையும் காண்பிக்க வேண்டியிருக்கிறது என்பதை நான் அறிகிறேன். மேலும் 1973–74 ஆம் ஆண்டிற்கு கதர் உற்பத்தி மதிப்பீடு ரூ. 180 லட்சமாகவும் விற்பனை ரூ. 301 லட்சமாகவும் இருக்கும் என்று சொல்லப்பட்டிருப்பதானது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

(திரு. நா. வீராசாமி தலைமை.)

இது மேலும் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கதர் பட்டு ஆடைகள் அதிக விலையில்தான் விற்கப்படுகின்றன. ஏழைகள் வாங்கி உபயோகிக்கக்கூடிய நிலையில் இல்லை. வசதி படைத்தவர்கள் மட்டுமே வாங்கலாம். எனவே நமது முன்னாள் அமைச்சர் மதிப்பிற்குரிய ஜோதி வெங்கடாசலம் திருமதி அனந்தநாயகி அம்மையார் போன்றவர்கள் கதர் பட்டையே வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏன் என்றால் அவர்கள் வசதி படைத்தவர்கள். எங்களைப் போல சாதாரணமானவர்களுடைய வீட்டிலுள்ள பெண்களுக்கு கதர்ப் பட்டை வாங்க முடியாது. எனவே அவர்கள்....

திருமதி த. ந. அனந்தநாயகி: ஸார், ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், இப்போது கதர்தானே வாங்கிக்கொண்டு இருக்கிறோம். எனவே எங்களுக்குச் சிபார்சு செய்ய வேண்டியதில்லை. மற்றவர்களுக்கு வேண்டுமானால் சொல்லுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு நா. வீராசாமி): அவருக்கு வித்தியாசம் தெரியவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கதரைப் பற்றி அங்கத்தினர் இவ்வளவு பிரச்சாரம் செய்கின்றார்கள். அவராவது கதராடை வாங்கி அணிந்தால் பொருத்தமாக இருக்கும். அவர்களுடைய உறவினர்களுக்கும் கதராடையை வாங்கிக் கொடுத்தால் பொருத்தமாக இருக்கும். அவர்கள் ஏழை என்று சொல்லுகின்றார்கள். அவர்களும் நல்ல வசதி படைத்தவர்கள்தான் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறிய யோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிச்சயம் ஏற்று நடப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இந்தத் தி.மு.க. ஆட்சி ஏற்பட்டதும், இவர்கள் கதரில் நம்பிக்கை இல்லாதவர்கள் என்பதால் இந்த இலாகாவையே ஒழித்துவிடுவார்கள் என்று நினைத்தார்கள். அதற்கு மாறாக இந்தத் திட்டத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு, கதர் வாரியத்தை ஊக்குவித்து அதிக அளவில் கதர் உற்பத்தியை செய்திருக்கிறோம். கதர் ஆடையை அணிந்து கொண்டால் மட்டுமே அப்படி அணிந்திருப்பவர்களை உண்மையான காந்தியவாதிகள் என்று சொல்லிவிடமுடியாது. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் கதர் அணிந்து கொண்டிருப்பவர்கள் கட்சிவிட்டு கட்சி மாறுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

பனை நாரிலிருந்து கைப்பைகள் போன்ற பல லாபகரமான பொருட்களைத் தயாரிக்கிறார்கள். நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்வது என்னவென்றால் பனை நாரில் இருந்து குல்லாய் தைக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் குல்லாய் போடுபவர்கள் அதிகமாகிக் கொண்டிருக்கிறார்கள். வயதாகிவிட்டால், தலை சொட்டையாகிவிட்டால், சொட்டை தெரியக் கூடாது என்பதற்காக குல்லாய் உபயோகப்படுத்துகிறார்கள். ஆகவே, பனை நாரிலிருந்து குல்லாய் தயாரிக்கும் முயற்சியை வாரியம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் கிராமக் கைத்தொழில் பிரிவு ஒன்றை அமைத்திருக்கிறார்கள். இது போன்ற பிரிவுகள் பல மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்றும் அந்த முயற்சியை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அடுத்து, கதர் கிராம வாரியம் நல்ல முறையில் பணியாற்றவேண்டும். அப்பொழுதுதான் கிராமத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புத் தரலாம். அந்த அளவுக்கு இந்த நிர்வாகத்தை சீரமைத்து இதற்கு ஐ.ஏ.எஸ். அதிகாரியைத் தலைவராகப் போட்டிருக்கும் முயற்சியையும் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டதற்கு பாராட்டுகளைத் தெரிவிக்கிறேன். இந்த முயற்சி வெற்றி அடையவேண்டும் என்றும் விரும்புகிறேன்.

இந்த வாரியத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு, நல்ல வசதியை குறிக்கோளாகக் கொண்டு இந்த வாரியம் செயல் பட்டு வருகிறது. இவ்வளவு அக்கறை கொண்டுள்ள இந்த வாரியம் மேன்மேலும் நல்ல முறையில் பணியாற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமருகிறேன்.

*திரு ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தக் கதர் கைத்தொழில் நாட்டிலே இருக்கின்ற மிகச் சாதாரணமான மக்களுக்கு ஓரளவு வருவாயை அளிக்கவேண்டும் என்பதற்காக சுதந்திரப் போராட்டக் காலத்தில் மகாத்மா காந்தியவர்கள் ஊக்குவித்த ஒன்று.

இந்தத் தொழில் முன்பும் இருந்தது. ஆனால் இது மேலும் நல்ல முறையில் ஒழுங்கான முறையில் செயல்பட வேண்டும் என்று மகாத்மா காந்தியவர்கள் இதற்கு ஊக்கம் தந்தார்கள். ஒரு வேலையுமற்றுக் கிடக்கின்ற மக்களுக்கு ஏதாவது ஒரு வேலை செய்ய வாய்ப்புக் கொடுப்பது இந்தக் கதர் கைத்தொழில் ஆகும். வீட்டில் பட்டினி கிடக்காமல் ஒரு சிறிய ஊதியத்தையாவது பெற்று, அவர்கள் வாழ வேண்டும் என்ற எண்ணத்திலே காந்தியடிகள் இந்தத் தொழிலை ஊக்குவித்து அதையே தேசிய சின்னமாக—ராட்டையை இந்த நாட்டுக்குத் தந்தார்கள். ஆனால் வறண்ட பகுதியிலேயும், ஏழ்மை மிக்க பகுதியிலேயும் உள்ள கோடிக்கணக்கான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு, குறைந்த வருவாயாக இருந்தாலும் அதாவது தங்களுக்கு கிடைக்கிறதே என்கின்ற எண்ணத்திலே இந்தத் தொழிலில் ஈடுபட்டு வளர்ந்து வந்தார்கள்.

இன்றைக்கு நாட்டிலே இருக்கும் பொருளாதார நிலைமையை எடுத்துப் பார்க்கும்போது, மிக மோசமான நிலைமை. வறுமையிலே உழன்று கொண்டிருக்கின்ற ஏழை மக்களின் குடும்பங்கள் ஆகியவற்றைப் பார்க்கிறோம். அவர்களைக் கருத்திற் கொண்டுதான், அவர்களுக்கு ஏதாவது வேலை வாய்ப்புக் கொடுத்து, அவர்கள் ஒரு குறைந்த பட்சம் ஊதியம் பெற வேண்டும் என்ற எண்ணத்திலே இந்தக் கிராமத் தொழிலான கதரினை வளர்க்க வேண்டும் என்ற நிலையிலே இருக்கிறோம். இதற்காக எவ்வளவு ரூபாய் செலவழித்தாலும் கூட தகும் என்பது என்னுடைய கருத்து.

லாப நஷ்டம் பார்க்கக்கூடிய தொழில் அல்ல இது. எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கிறோம், எத்தனை குடும்பங்கள் பலன் அடைகின்றன என்பதை வைத்துக் கொண்டுதான் பார்க்கவேண்டுமே தவிர அரசாங்கத்திற்கு எவ்வளவு வருவாய் வந்திருக்கிறது—லாபமா நஷ்டமா என்றெல்லாம் பார்க்கக்கூடாது. ஆகவே அந்த அளவில் கிராம கைத்தொழில் வாரியம் ஓரளவுக்கு நல்ல பணியைச் செய்துகொண்டிருக்கிறது என்று குறிப்பிட முடியும். இதை மேலும் நல்ல முறையில் வளர்ப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

நாட்டு எண்ணெய்த் தொழில்-செக்குத் தொழிலை எடுத்துக் கொண்டால் அந்தத் தொழிலிலே இருக்கின்ற குடும்பங்கள் நல்ல முறையிலே தொழில் செய்து தங்களுடைய குடும்பங்களின் வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடியாத நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். வெளியிலே எக்ஸ்பெல்லர் போன்ற இயந்திரங்களை வைத்து நிர்வாகம் செய்கிறவர்களோடு போட்டியிட முடியாத நிலை இவர்களுக்கு இருக்கிறது. அவர்களுடைய வறுமையின் காரணமாக கூட்டுறவுச் சங்கங்களில் அவர்களுக்கு உதவி செய்வதில் முதலிடம் கொடுத்தால் பல இடங்களில் அவர்கள் பலன் அடைவார்கள். பல எண்ணெய்ச் செக்குகள் மூடப்படவேண்டிய நிலையில் இருக்கின்றன என்பதை நான் இங்கு வருத்தத்துடன் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. அவர்களுக்கு ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது? என்ன இடையூறு இருக்கிறது ஏன் மூடவேண்டிய துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது? என்பதைப்பற்றி யெல்லாம் வேகமாகப்

பரிசீலனை செய்யவேண்டும். இந்தத் தொழிலைப் பயன்படுத்திக் கொண்டு வறுமையற்ற நிலையில் வாழச் செய்வதற்கும், அவர்களுடைய நிலையை மேம்படுத்திக் கொள்ளவும் என்ன ஏற்பாடு செய்யவேண்டும் என்று பரிசீலனை செய்யவேண்டும்.

அடுத்து, இன்றைக்கு ராட்டை மூலம் நூற்கின்ற நூல் ஊக்குவிக்கப் படாமல் "டெக்ஸ்டூல்" ராட்டையை அதிகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் பொதுவாக காதிக் கமிஷனிலே ஏற்பட்டிருக்கிறது. இங்கே நமது தமிழ்நாட்டில் மட்டும் நாம் இதை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. காதிக் கமிஷனே இதைச் செய்கிறார்கள். ராட்டை வைத்து நூற்றால் ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு சிட்டம் தான் போட்டு ஒரு எட்டணாதான் கிடைக்கும். ஆகவே அது போதாது, டெக்ஸ்டூல் ராட்டையைப் பயன்படுத்திக் கொண்டு அதன்மூலம் ஒன்றரை அல்லது இரண்டு ரூபாய் கிடைக்க வழி ஏற்படுமே என்று இதைச் செய்கிறார்கள். நாம் எந்த அளவுக்கு டெக்ஸ்டூல் ராட்டையை பயன்படுத்தி வருவாயை அதிகப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குச் செய்யலாம். அதில் தவறேதும் இல்லை.

ஆனால் அதே சந்தர்ப்பத்தில் ராட்டையில் நூற்றுக் கொண்டிருக்கிறவர்களையும் விட்டு விடமுடியாது. அதற்காக கைராட்டை நூலை அரசு வாங்கவேண்டும். அதிலே ஒன்றைக் கூறலாம். கைநூலை வாங்கி நெய்கிறபோது கதரின் விலை அதிகமாகப் போய்விடுமே என்ற சிக்கல் இருக்கிறது என்று கூறலாம். அம்பர் சர்க்காவில்—டெக்ஸ்டூல் ராட்டையில் நூற்கின்ற நூல் விலை குறைவாகவும், கைநூல் அதிகமாகவும் இருக்கிறது. ஆகவே கை நூலை வாங்கினால் விலை அதிகரித்து விடுமே என்று கூறலாம். அந்தச் சிக்கலை நானும் உணருகிறேன். இருந்தாலும் ஒரு ஆடவன் வெளியில் போய் வேலை செய்து மூன்று ரூபாய் சம்பாதித்துக் கொண்டு வருகிற போது குடும்பப் பெண்மணி எட்டணா சம்பாதித்தால் மாதம் 15 ரூபாய் வருமானம் கிடைக்கும், அவருடைய வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ள கொஞ்சம் பயனாக இருக்கும். அதுவும் இல்லாத நிலையை ஏற்படுத்தாமல் அந்த கைராட்டைத் தொழிலை கைவிட்டு விடாமல் வைத்துக் கொண்டிருக்கிற நிலையினை அரசு மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, இந்தக் கைக்குத்தல் அரிசியைப் பற்றி தீவிரமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் கிராமங்களில் கூட யாரும் இதைச் சாப்பிடுவதாகத் தெரியவில்லை. இதற்குச் சில காரணங்கள் இருக்கலாம். யார் இந்த இயந்திரத்தைச் சுற்றிக் கொண்டிருப்பது என்ற எண்ணம் இருக்கலாம். அதிகச் செலவாகும் என்ற எண்ணமும் இருக்கலாம். முன்னாள் கதர் வாரியத்தின் அமைச்சராக இருந்த நமது மாண்புமிகு இன்றைய கூட்டுறவு அமைச்சர் அவர்கள் அந்த யந்திரத்திலே ஒரு சின்ன மோட்டார் வைத்து அதன்மூலம் சுற்றி மேல் தவிடு போகாமல் உமியைப் போக்கக்கூடிய அரிசி தீட்டக் கூடிய முறையை ஏற்படுத்தினார்கள். இதற்காக பாம்பேயில் ஆர்டர் கொடுத்தார்கள். அது எந்த அளவுக்கு சக்சஸ் ஆயிற்று, அதன் பயன் என்ன என்று தெரியவில்லை. நான் ஒன்று கேட்டுக்கொள்வேன். கிராமங்களில் இருக்கிற யாராவது அதுபோன்ற சின்ன கைக்குத்தல் அரவை இயந்திரம் வைக்க முன்வந்தால் நாம் அவர்களுக்கு உதவி செய்தால்போதும், நாமே நடத்த வேண்டுமென்ற அவசியம் இடையாது. அவர்களே கிராமத்தில் உள்ளவர்களிடம் சென்று "நான் இயந்திரம் வைத்திருக்கிறேன். உங்கள் குடும்பத்திற்குத் தேவையான நெல்லை அரைத்துக்கொடுக்கிறேன், இந்த கைக்குத்தல் அரிசி உடம்புக்கு நல்லது" என்பதாக எல்லாம் பேசி வேலை வாங்கிக்கொள்வார்கள். அதன் மூலம் அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 4 ரூபாய், ஐந்து ரூபாய் வந்தால் அது பலருக்கு உதவியாகக் கூட இருக்கும். இப்போது கைக்குத்தல் அரிசி நாம் தயாரிக்கிறோம் என்றால் ஆஸ்பத்திரிக்கும், ஜெயிலுக்கும் கொடுக்க வில்லை என்றால் அந்தத் தொழிலும் முடங்கிவிடும் என்பதை நாம் சிந்திக்கவேண்டும்.

கிராமப்புறத்தில் அதிகப்படியான வேலைவாய்ப்பை ஏற்படுத்த ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இதுவும் கதர் கமிஷன் மூலம் அமைந்துள்ளது என்று கருதுகிறேன். இது ஒரு பயனுள்ள திட்டமாகவே இருக்கும். இதன்மூலம் இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கிற பலருக்கு வேலை கிடைக்க நல்ல வாய்ப்பு ஏற்படுகிறது. இன்னொன்று உற்பத்தி செய்கிற பொருள்களை மார்க்கெட் பண்ணுவது பெரிய விஷயமாக இருக்கிறது. அதிலும் இந்தத் துறை போதுமான கவனம் செலுத்தியாக வேண்டும்.

அடுத்து—இது கதர்த்துறையின்கீழ் வருமா என்பது தெரியாது. கிராமப்புறங்களில் விறகுப் பஞ்சத்தைப் போக்க மாட்டு சாணத்தில் காஸ் தயாரிக்கிற அமைப்பைப் புகுத்துவது பயனுள்ளதாக இருக்கும். நான்கு மாடுகள் இருந்தால்போதும், அவர்களுக்குத் தேவையான காஸை அவர்களது வீட்டிலேயே தயாரித்துக்கொள்ளலாம். ஆனால் ஆரம்பத்தில் 2 ஆயிரம் ரூபாய் மூலதனம் செய்ய வேண்டியிருக்கிறது என்கிறார்கள். இது கிராமத்தில் உள்ளவர்களுக்கு ஒரு பெரிய தொகைதான். ஆகவே 50 சதவீதம் மானியமாகவாவது கொடுத்து கிராமத்திற்கு ஒருவரது வீட்டிலாவது ஏற்படுத்த நாம் முதலில் ஊக்குவித்து வைத்தால் போதுமானது. ஒருவரைப் பார்த்து ஒருவர் தானாகவே இந்தத் திட்டத்தை மேற்கொள்ள முன்வந்து விடுவார்கள். எத்தனை பேர்கள் முன்வந்தாலும் அவர்களுக்கு இந்தத் துறையின் மூலம் 50 சதவீதம் மானியமாக வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். கதர் கமிஷன் அதனைக் கொடுக்க முன்வரவில்லை என்றாலும் மாநில சர்க்காரேயாவது கொடுக்கலாம். இன்னும் மினி மில் என்பதாக நூற்பையும், நெசவையும் சேர்த்துச் செய்கிற திட்டம்—இதற்கு 2 லட்சம், 3 லட்சம் செலவாகும். என்றாலும் அங்கங்கே இது ஏற்படுத்தப்படுவதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வழியேற்படுகிறது. இதிலும் அதிகமான கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கதர் தொழில் அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டவேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. நா. வீராசாமி)</u> : திரு. வகாப் அவர்கள் 3 நிமிடத்தில் பேசுவதாகச் சொன்னார்கள். 5 நிமிடத்திற்குள்ளாக பேசி முடிக்குமாறு அழைக்கிறேன்.

<u>திரு. கே. ஏ. வகாப்</u> : மாற்றுத் தலைவர் அவர்களே, கதர் என்று சொல்லப்படுகிற இந்த மானியத்தின்மீது பேசுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கதர் என்பதற்கே மரியாதை என்று அர்த்தம். அதற்கு இந்த வார்த்தையைக் கொடுத்ததே ஒரு முகமதிய தாய்தான். மௌலானா முகமது அலியின் தாயார்தான்—கைராட்டையில் தயாரிக்கப்படும் இந்த நூலை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று தலைவர்களிடத்தில் கொண்டு வந்து காட்டிச் சொன்னபோது அதற்கு கதர் என்று பெயர் வையுங்கள் என்றாள். நாட்டினுடைய மானத்தை, மரியாதையை, பண்பாட்டை, தேசியத்தை இதை அணிவதன்மூலம் காப்பாற்றக்கூடிய இது மரியாதைக் குரியதாக கதர் என்ற பெயரிலேயே இருக்கட்டும் என்றார்கள். அந்தத் துறை இன்றைக்கு பலவகையிலும் வளர்ந்து வருவது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீங்கள் கதர் உடுக்கவில்லையே என்றாகிர் காங்கிரஸ் தலைவர். நாங்கள் கதரை உடுக்காவிட்டாலும் கைத்தறியைத்தான் உடுத்துக்கொண்டிருக் கிறோம். கதருக்கு நாங்கள் அந்த மரியாதையைக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிற நேரத்தில் விலை அதிகம் என்ற பிரச்சினை இருக்கிறது. நடுத்தர வருமானம் உள்ளவர்களால் உயர்ந்த விலையைக் கொடுத்து வாங்க முடியாத நிலைமை இருப்பதை உணர்ந்துதான் நமது தமிழக அரசு—காங்கிரஸ்காரர்களுக்குத்தான் கதரில் உரிமை என்று இருந்ததை மாற்றி அதைத் தங்களுக்கே உரியதாக, சொந்தமானதாக மாற்றிக்கொண்டு அந்தத் துறையில் பலவிதமான முன்னேற்றங்களைக் கண்டுவருவதற்கு அரசியலில் மட்டுமல்ல—சமுதாயத்திலே, பொருளாதாரத்திலே நல்ல பல முன்னேற்றங்களைக் கண்டுவருகிற இந்த அரசை நாம் பாராட்ட வேண்டும். காந்தி விழாவையும் சரி, கதர் விழாவையும் சரி நல்லமுறையில் இந்த அரசு கொண்டாடி வருவதற்காகப் பாராட்டுகிறேன்.

நமது தாய்மார்கள் கதர்ப்பட்டை வேண்டி விரும்பி அணிகிறார்கள். கதர்பட்டுக்கு நல்ல கிராக்கியிருக்கிறது. வங்காளம், ஆந்திரம், மைசூரில் இருந்து வருகிற பட்டு விலை குறைவாக இருக்கிறது. கதர்பட்டை இங்கேயே உற்பத்தி செய்வதற்கு நாம் முனையவேண்டும். தாளவாடியில் சொஸைடி இருக்கிறது. மைசூரில் இருந்து கதர் வாங்குவதற்குப் பதிலாக தமிழகத்திலேயே கதர் உற்பத்திக்கு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும். கதர் என்று சொல்லுகிறபோது தனி வாரியம் வைத்து நடத்துகிறார்கள். அந்த வாரியம் சிறந்த முறையில் பணியாற்றினாலும் கூட அது கவனிக்க வேண்டியதாக இருப்பது கைத் தொழில். பாய் முடைதலில் இவர்கள் அதிக அக்கறை காட்டுவதில்லை. வந்தவாசியில் பாய் முடைதல் தொழில் மிகச் சிறப்பாக இருக்கிறது. நாலாயிரம், ஐயாயிரம் பேர்கள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அங்கே உள்ள சங்கத்தில் தயாரிக்கப்பட்ட பாய்கள்தான் ஆசியாவிலேயே மிக உயர்ந்ததாக கண்காட்சிசாலையில் வெளிநாட்டினர்களாலும் பாராட்டப் பெற்றதாக அமைந்திருந்தது.

அதுமட்டுமல்ல, இந்திரா காந்தி அம்மையார் இருக்கிற அறையிலே கூட எங்கள் சங்கத்தினுடைய பாய்தான் அங்கே சீலிங்குக்கு வைத்திருக் கிறார்கள் என்று நாங்கள் பெருமைப்படுகிறோம். கதர் துறை இந்த பாய்களிலும் அதிக அக்கறை செலுத்தவேண்டும், பாய் தயாரிப்பிற்கு ஊக்கம் அளிக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அண்மையிலே, நான் ஹைதராபாத்திற்கு சென்றிருந்தபோது, சபர்மதி ஆசிரமத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு காந்தியடிகள் அமர்ந்திருந்த இடம் என்று ஒரு இடத்தைக் காண்பித்தார்கள். அந்த இடத்தையும் பார்த்து உண்மையிலே மகிழ்ச்சி அடைந்தேன். ஏனென்றால்; எங்கள் ஊர் கோரைப் பாயிலே அவர் அமர்ந்திருந்தார் என்று சொன்னார்கள். அது உண்மையிலே மகிழ்ச்சியாக இருக்கிறது. அப்படிப்பட்ட பாயையும் தயாரிக்க ஊக்கம் அளிக்க, அதற்கு அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொண்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u>: தலைவர் அவர்களே, இந்த மானியத்திற்கு மிகவும் குறைவான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இரண்டு தலைப்பி லும் சேர்த்து ரூபாய் 60,23,700 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது; மிகக் குறைவாக இருக்கிறது என்பதை நான் இந்தச்சந்தர்ப்பத்திலே கூற விரும்புகிறேன்.

கதர், கிராமத் தொழில்களைப் பற்றியெல்லாம், இங்கே பல கருத்துக்களை, நல்ல கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறினார்கள். கதர் இந்த நேரத்திற்கு உகந்ததா, இந்த கிராமப் பொருளாதாரத் திற்கு அது நன்மை பயக்குமா என்று ஐயப்படக் கூடிய முறையிலே பலரும் சந்தேகக் கண்ணோட்டத்தோடு இந்த இலாகாவினையும் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மிக வேதனையோடு கவனித்துக் கொண்டிருந்தேன். கதர் எதற்காக ஆரம்பமாயிற்று, அது என்ன முறையிலே இன்று இருக்கிறது என்பதையெல்லாம் நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தேசப் பிதா மகாத்மா காந்திஜி அவர்கள் இந்தப் புனிதமான திட்டத்தை இந்த தேசத்திற்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், தேசத்திலே இருக்கிற பசியும் பட்டினியும் அவரை வாட்டியது தன் காரணமாக, இந்த அருமையான கதர்த் திட்டத்தை, அதுவும் கிராமப் புறத்திலே பட்டினியோடு போராடுகின்ற மக்களுக்கு வரப்பிரசாத மாக இந்தத் திட்டத்தைத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்பெல்லாம் கதர் ஒரு ஃபாட், அது ஒரு சித்தாந்தம் என்று சொல்லக்கூடியவர்களெல்லாம் இருந்தார்கள். ஆனால், எனக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம் என்னவென்றால், இந்த இலாகாவிற்கு பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் அவர்கள் என்றும் கதர் கட்டிக் கொண்டு வருகிறார்கள் என்பது. அதே போல், அரசாங்கக் கொறடாவும் கதரைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, மிகவும் மகிழ்ச்சி உடையவனாக இருக்கிறேன். அதைப் போல, இங்கு பேசிய உறுப்பினர்களும், ஏனைய உறுப்பினர்களும் கதராடையை அணிய வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இது ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு தரக் கூடிய, பட்டினி யோடு போராடுகின்ற...........

(திரு. சி. வே. வேலப்பன் திரு. து. ப. அழகமுத்து அருகில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்.)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : திரு. வேலப்பன் அவர்கள் முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்திருக்கிறார் என்ற அறிவிப்பு ஏதாவது வந்திருக்கிறதா, விவரம் வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. நா. வீராசாமி) அறிவிப்பு எதுவும் இல்லை. அவர் வேறு விவகாரம் பேசிக் கொண்டிருக்கிறார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, நல்ல பொறுப்பேற்கக்கூடிய அமைச்சர் இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால், நான் ஒரு விஷயத்தை இங்கு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். கதர் உற்பத்தியைப் பற்றி, அதன் விற்பனையைப் பற்றி இந்த ஆய்வுரையிலே 5-வது பக்கத்திலே சில புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறார்கள். 1969-70-ல் மொத்த உற்பத்தி எவ்வளவு என்பதையும், அதன் விற்பனை எவ்வளவு என்பதையும் இங்கு தந்திருக்கிறார்கள். 1969-70-லே விற்பனையானது ரூ.274·19 லட்சம் என்று கணக்கு தந்திருக்கிறார்கள். 1970-71-லே விற்பனையானது ரூ. 294·02 லட்சம் என்று கணக்கு தந்திருக்கிறார்கள். 1971-72-லே ரூ. 244·76 லட்சம் என்று கணக்கு தந்திருக்கிறார்கள். 1971-72-லே விற்பனை மிகக் குறைந்து போயிருக்கிறது. சுமார் ரூபாய் 50 லட்சத்திற்குக் குறைவாகக் குறைந்து போயிருப்பதை நாம் பார்க்கிறோம். அப்படி ஒரு தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு ஊக்கம் அளிக்கின்ற முறையிலே நல்ல காரியங்கள் செய்வதற்கு முனைந்திட வேண்டும். இந்தத் தடவை அதிகமாக விற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும்கூட, 1971-72லே குறைவாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடி இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் 20,000-க்கு மேற்பட்ட கிசான் இராட்டை நூற்பவர்களும், 4,800 அம்பர் இராட்டை நூற்பவர்களும், 3,600 புதுவகை இராட்டை நூற்பவர்களும் இருந்தனர் என்ற கணக்கெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். முன்பு பல இடங்களிலே பயிற்சி முகாம்கள் இருந்தன. இந்த பயிற்சி முகாம்களிலே நல்ல பயிற்சியைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அது ஒரு போல்டு ஸ்கீமாக நடைபெற்ற காரணத்தினால், கிராமத்திலே இருந்த பெண்கள், வயது வந்த பெண்கள், தாய்மார்கள் எல்லாம் அந்தத் தொழிலிலே ஈடுபட்டு வந்தார்கள். அவர்களுடைய சிறிய ஊதியத்திலே குடும்பத்தை நடத்த இது நல்ல திட்டமாக இருந்தது. ஆதலால், இன்னும் அதிகமாக இதிலே கவனம் செலுத்த வேண்டும்.

நமக்கு மானியமாகக் கிடைப்பது இப்பொழுது குறைந்து கொண்டு வருகிறது என்பதை நாம் காண்கிறோம். அதிகமாக மானியம் கிடைக்க வழி செய்ய வேண்டும். அதிலும் குறிப்பாக நமது அரசாங்கமும் அதிகமாக செலவழிக்க வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கிராமத் தொழிலுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றி நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நூற்பு தொழிலாளர்கள் இன்று சற்று அதை ஊக்குவிக்கலாம் என்று கருதுகிறேன்.

கைத்தறி நெசவாளர்களிடையே இன்று தேக்கமான நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கதர் தொழிலையும் சேர்த்து, அதிலே கஷ்டப்படுகிறவர்களுக்கு கதர்த் கொடுத்து அதிலே சேர்க்க முடியுமா, அப்படி சேர்ப்பதினால், துயரினால் வாடுகிறவர்களுக்கு பரிகாரம் தேட முடியுமா என்பதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இன்று மில் துணிகளோடு கதர் துணி போட்டி போடுவதற்கு கஷ்டமாக இருக்கும். ஆகவே, இதற்கு விளம்பரம் அதிகம் தேவை. காந்திஜி ஆசிரமத்தை முஸ்லீம் லீக்கைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் சென்று பார்த்து மிகவும் பாராட்டினார்கள். காந்திஜி அவர்கள் கையினால் நூற்ற நூல் சபர்மதி ஆசிரமத்திலே வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன். முஸ்லிம் பெண்மணிதான் கதர் என்ற பெயரைக் கண்டுபிடித்தார்கள் என்று சொல்கிறார்கள். நான் என்னுடைய நினைவிலிருந்து சொல்கிறேன், இராஜாஜி அவர்கள் அவருடைய குட்டிக் கதையிலே இந்தக் கதருக்கு அவ்வளவு முக்கியத்துவம் எப்படி வந்தது என்பதையெல்லாம் சுட்டிக் காட்டியுள்ளார்கள். ... .

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் வகாப் கதரைக் கண்டு பிடித்ததாகக் கூறவில்லை. அந்தத் துணியைக் கொண்டுபோய், மௌலானா அலியின் தாய் தான் கதர் என்று பெயர் வையுங்கள் என்று சொன்னதாகச் சொன்னார். கதர்த் துணியைக் கண்டு பிடித்ததாகச் சொல்லவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : விளக்கத்திற்கு நன்றி. பண்டைக் காலத்திலே நமது பகுதியிலே எல்லாம் கையிலே நூல் நூற்று, நெசவு நெய்து, ஆடைகள் அணிந்திருக்கிறார்கள். அது பண்டைக் காலத்திலே வைக்கப்பட்டிருந்த முறை. முன்பெல்லாம் பெண்களுக்குச் சீதனம் கொடுக்கிற நேரத்தில் இந்த இராட்டையை வழங்குவார்கள் என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்தப் பழக்கம் எல்லாம் இப்பொழுது மாறிவிட்டது. விஞ்ஞான உலகத்திலே இருக்கிறோம்; நாகரீக உலகத்திலே இருக்கிறோம்; மெல்லிய ஆடையை விரும்புகிறோம். இந்த பெருத்த ஆடையை, நாகரீகத்தின் உச்ச கட்டத்திலே நாம் இருக்கிற நேரத்திலே, ஏதோ ஒரு சிலர் அணிய வேண்டுமென்றும், கதரைப் பற்றியும் பிரசாரம் செய்கிறார்கள் என்று தவறாகக் கொள்ளாமல், நினைக்காமல், கிராம மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை என்ற முறையில் இதை அணுக வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆதலால், இன்றைக்கு இதற்கு அதிக ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டுமென்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

காந்திஜி அவர்கள் மதுரையிலேயிருந்த அந்தப் பகுதியிலே புதிய எம்போரியம் ஒன்றை ஆரம்பிக்கப் போவதாக பரிந்துரைகள் எல்லாம் கூறப்பட்டிருக்கின்றன. அது பாராட்டத்தக்க ஓர் அம்சம் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன். ஏனென்றால், அன்னார் கதரிலே அவ்வளவு பற்றும் பாசமும் வைத்திருந்தார்கள். அவருடைய ஞாபகத்திற்காக இந்த மதுரை மாநகரத்திலே எம்போரியம் தொடங்குவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

கிராமத் தொழில்களிலே பல தொழில்கள் இருக்கின்றன. குறிப்பாக, பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அதிலே பல பொருள்களைச் செய்கிறார்கள்; பாய் செய்கிறார்கள்; பெட்டி செய்கிறார்கள். இந்த மாதிரியான பொருள்களையெல்லாம் செய்து, இன்று விற்பதற்கு அவர்களுக்கு போதிய மார்க்கெட் இல்லாமல் அவர்கள் அவதியுறுகிற நிலையைப் பார்க்கிறோம்.

ஆதலால், ஆங்காங்கே முக்கியமான நகரங்களிலே ஷோ ரூம்கள் வைத்து, வேண்டிய பொருட்களை விலைக்குக் கொடுத்து விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுதும் அப்படி இருக்கிறது; அதை இன்னும் விஸ்தரிக்க வேண்டும். டெல்லி போன்ற நகரங்களிலே தமிழ்நாடு ஹவுஸ் மூலமாக 'மார்க்கெட்டிங்'க்கு ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய சம்மேளனத்தை வேண்டாம் என்று வைக்கப்போகிறார்கள். அதைப்போன்று மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களை வேண்டாம் என்று வைக்கப் போகிறார்கள், கலைக்கப் போகிறார்கள், பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, அவை சரியாக நடக்கவில்லை. ஆகவே, அவற்றைக் கலைக்கப் போவதாக ஒரு செயற்குறிப்பு இருப்பதாக இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். பல இடங்களிலே நல்ல முறையிலே பல சங்கங்கள் நடைபெறுகின்றன. ஆனால், சில பேப்பரிலே இருக்கின்ற சங்கங்களாகத்தான் இருக்கின்றன. அவற்றையெல்லாம் மூடிவிடுவதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால், நல்ல முறையிலே ஒழுங்காக முறையாக நடக்கிற சங்கங்களுக்கு வேண்டிய ஊக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

இதிலே சோப் உற்பத்தி செய்கிறார்கள். இந்தத் தொழில் பல பகுதிகளிலே நடந்துகொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே மிஞ்சுரை என்ற இடத்திலே ஒரு சோப் செய்கின்ற யூனிட், சிறிய யூனிட் ஆக இருக்கிறது. அதை விஸ்தரிக்க வேண்டும். அங்கே உள்ள ஊழியர்களுக்கு ஊக்கம் அளித்து அவர்களுக்கு புரமோஷன் ஆப்பர்சூனிட்டிஸ் கொடுத்தால் பொருத்தமாக இருக்கும். அதையும் அரசாங்கம் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது நீண்ட காலமாக நடக்கிறது. நல்லமுறையிலே நடந்து கொண்டிருக்கிறது. ஆஸ்பத்திரி போன்ற நிறுவனங்களுக்கு அவர்கள் சப்ளை செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே பணிசெய்கின்ற பணியாளர்களைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். பலரும் இந்த இலாகாவிலே சர்வீஸ் ரெகுலரைஸேஷன் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளமும் குறைவாக இருக்கிறது என்று பலரும் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த இலாகாவின் மூலமாகப் பரிசீலனை செய்து இந்தப் பிரச்னையைப் பைசல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். அங்கு டிஸ்ட்ரிக்ட் போர்டுகளை கலைத்துவிட்டு ஸ்பெஷல் ஆபீஸர் போட்டிருக்கிறார்கள். ஸ்பெஷல் ஆபீஸர் முன்பு இருந்ததைவிட அதிகமாகச் செய்கிற நன்மை இருக்கிறது. அப்படிச் செய்யவேண்டுமா என்பதைப் பார்க்கவேண்டும். ஒரு லாரியை சமீபத்திலே விற்றிருக்கிறார்கள், கவர்ன்மெண்ட் சாங்ஷனோ அல்லது இலாகாவின் சாங்ஷனோ அதற்கு இருக்கிறதா என்று தெரியவில்லை. அது மட்டுமல்ல, அதற்குச் சொந்தமான பல நிலங்களைத் தனியாக நெகோஷியேட் செய்து விலைபேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இம்மாதிரியாக நடப்பதை இந்த இலாகாவின் மூலமாக கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பனைமரத்திலிருந்து தவறி விழுந்துவிட்டால் ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. கூட்டுறவிற்குட்படாதவர்களுக்கும் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் பலருக்குக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இதிலே காலதாமதம் முன்பு ஏற்பட்டது. இனிமேல் காலதாமதம் ஏற்படாத வகையிலே ஒரு வருடத்திற்குள்ளாவது அவர்களுக்குப் பணத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக இந்தக் கதர் உற்பத்திக்கு அதிக ஊக்கம் அளிக்கவேண்டும். இங்கு பேசிய ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களாக இருந்தாலும்சரி, இது ஒரு கட்சியின் கொள்கை என்ற முறையிலே அணுகாமல் தேசியப் பிரச்னையாகக் கருதி ஊக்கம் அளிக்கின்ற முறையிலே கதரும் கிராம வளர்ச்சியும் மேம்பட ஊக்கப்படுத்த வேண்டும்.

அப்படியானால்தான் அண்ணல் காந்திஜிக்கு நாம் மரியாதை செலுத்தக் கூடியவர்களாக இருப்போம்; நமக்கு விடுதலை வாங்கித் தந்து நம்மை மனிதராக்கிய அன்னாருக்கு அஞ்சலி செலுத்துகின்ற முறையிலே இந்த இலாகாவிலே இருக்கக்கூடியவர்களுக்கும் ஊக்கமாக இருக்கக்கூடிய முறையிலே அவர்களுடைய குறைகளைக் களையவேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, இந்த கதர் மானியத்திலே எனது நண்பர்கள் எல்லாம் மிக நல்ல ஆலோசனைகளை காந்திய வழியில் நின்று அமைதியாக இந்த வாரியத்தின் முன்னேற்றத்திற்கான யோசனைகளையெல்லாம் சொல்லியதற்காக உள்ளபடியே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே நல்ல விளம்பரம் நடைபெற்றிருக்கிறது. எல்லோரும் கதர் கட்டிக்கொள்ள வேண்டுமென்று கடைசியாகப் பேசிய திரு பொன்னப்ப நாடார் அவர்கள் வேண்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வேண்டுகோளை நான் முதலிலேயே விடுக்க விரும்புகிறேன். நான் கதர் கட்டுகிறேன் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் பாராட்டினார்கள். இப்பொழுது முழுக் கைச்சட்டைப் போடுகிற காரணத்தினால் நான் கட்டிக்கொண்டிருப்பது விளம்பரமாகிக் கொண்டிருக்கிறது என்று கருதுகிறேன். நான் சிறுபிள்ளையாக இருக்கும்பொழுதே ஐந்தாவது வகுப்புப் படித்துக்கொண்டு இருக்கும்பொழுதே கதரை ஆதரிக்கிற போராட்டத்திலே கலந்துகொண்டு சீமைத் துணிகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று என்னுடைய உறவினர் ஒருவர் துணிக்கடையிலேயே போய் மறியல் செய்திருக்கிறேன். இப்பொழுது நான் காங்கிரஸிலே இல்லை. ஆனால் அவர் காங்கிரஸிலே இருக்கிறார். நான் தொடர்ந்து கதர் கட்டிக்கொண்டு வந்தேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறியை ஆதரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் தி.மு.க. காரன் என்பதைக் காட்டிக்கொள்வதற்கு அடையாளமாக நான் இரண்டையும் கட்டுவதற்கு முயற்சிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோரும் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முழுவதும் நிறுத்திவிட்டவர்கள் 25 சதவீதமாவது கட்டவேண்டும், 25 சதவீதம் கட்டுகிறவர்கள் 50 சதவீதமாவது கட்ட வேண்டும், 50 சதவீதம் கட்டக்கூடிய என்னைப்போன்றவர்கள் 100 சதவீதம் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாக் கட்சி சின்னங்களும் பதிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். கதர் கட்டினால் காங்கிரஸ்காரர் என்று தெரிந்துவிடும் முன்பெல்லாம். இப்பொழுது காங்கிரஸ் பல ரூபமாகப் பிரிந்துவிட்டதால் யார் காங்கிரஸ்காரர்கள் என்று தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருவண்ணம் இருக்கிறது. கம்யூனிஸ்டு கட்சிக்கு சிவப்பு வண்ணம் இருக்கிறது. சுதந்திராக் கட்சிக்கு புளூ இருக்கிறது. அந்த முறையிலே தயார் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே ஆதரிக்க வேண்டுமென்று என்னுடைய விற்பனை விளம்பரத்தைச் சொல்லி என்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறேன்.

காந்தியடிகள் நம் கிராம மக்களுக்கு எந்த அளவிற்கு அவர்கள் பொருளாதாரத் துறையிலே முன்னேற வேண்டும் என்பதிலே அவர்கள் அக்கறை காட்டியிருக்கிறார்கள் என்பதை பல முறைகளிலே அவர்கள் எளிய வாழ்க்கையை நடத்திக் காண்பித்திருக்கிறார்கள். பேசுகிறோம்; நாம் செய்கிறோமா என்ற பிரச்னை இருந்தாலும் காந்தியடிகள், கொள்கைகளையெல்லாம் நடைமுறையிலே செய்து காட்டிய பெரிய மகாத்மா. அதன் காரணமாக அவர் சுட்டுக் கொல்லப்பட்டதைப்பற்றி பெர்னாட்ஷா சொன்னார்கள், மனிதன் நல்லவனாக இருந்தால் சுட்டுக்கொல்லப்படுகிறான் என்பதை காந்தியடிகளின் வாழ்க்கையிலிருந்து தெரிந்துகொள்கிறேன் என்று பெர்னாட்ஷா அவர்கள் சொன்னார்கள். சொல்லியது மட்டுமல்ல, செயல்முறையிலேயும் அக்கறை காட்டியவர் அவர். அவர் இதற்காக சரியான திட்டங்களைத் தீட்டி சர்க்காரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்.

1947-லே கதர் இலாக்காவை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே [e]டுத்த அந்த நேரத்திலே அங்கே அம்பர் ராட்டையிலே 1966–67-ல் [illegible]0 லட்சம் சிட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. 1971–72-ல் [illegible]56·4 லட்சம் சிட்டங்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. கதர் பட்டு உற்பத்தி 1967-லே கூடுதல் 36·7 லட்சம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது 1971–72-ல் 65 லட்சம் உற்பத்தி அதிகம் ஆக்கப்பட்டிருக்கிறது. கதர் 1966–67-ல் 202·99 லட்சம் இருந்தது. 1971–72-ல் 262·47 லட்சமாக உயர்ந்திருக்கிறது.

நம்முடைய பொன்னப்ப நாடார்கூடச் சொன்னார்கள். விற்பனையைப் பொறுத்தவரையில் கூடுதலாகி இருக்கிறதே தவிர குறையவில்லை. கதர் தொழிலாளர்களுக்கு ஊதியமாக 1966–67-ல் 7·84 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. 1971–72-லே 88·40 லட்சம் இப்பொழுது ஊதியமாக தரப்படுகிறது. இந்த அளவில் உயர்ந்திருக்கிறது. கதர் துறையிலே மட்டும் 63 ஆயிரம் பேர்கள் இப்போது பயன்பெற்று வருகிறார்கள். கிராமங்களில் இப்பொழுது 83 ஆயிரம் பேர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். ஆறு கதிர் வைத்துள்ள ராட்டையைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இந்த இனங்களைப் பற்றி நம்முடைய அழகர்சாமி கூடச் சொன்னார்கள். இவை 108 இடங்களில் இப்பொழுது பயன் தரும் வகையில் செய்திருக்கிறோம். மகாத்மா காந்தி அவர்கள் இந்த ராட்டை இருக்கும்போது, இன்னும் அதிகமான அளவிலே நூற்க வேண்டும் என்று சொன்னபோது, அம்பர் என்பதை திருநெல்வேலியில் பிறந்த ஒருவர் கண்டுபிடித்தார். அவருக்கு பரிசுகூடக் கொடுத்திருக்கிறார்கள். அவர் 4 தக்ளி வைத்து நூற்பதைக் கண்டுபிடித்தார். இப்பொழுது, 6, 12 என்ற அளவிலே வைத்து நூற்கப்படுகிறது.

அவை 108 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் அவை அவை இயங்கும் கட்டட வாடகையை யார் ஏற்றுக்கொள்வது என்று கேட்டார்கள். 20 இடங்களில் நமக்குச் சொந்தமாக கட்டடங்கள் இருக்கின்றன. மற்ற இடங்களில் கட்டடங்கள் இல்லாவிட்டாலும் வாடகை அளித்து வருகிறோம். கதர் வாரியத்திலே உற்பத்தி செய்கின்ற அம்பர் ராட்டை போன்றவைகள் எல்லாம் நிரந்தரமாகக் கட்டப்படுகின்ற அளவிலும் இல்லை. இந்த 6 கதிர், 12 கதிர் உற்பத்தியும் கை ராட்டையிலே செய்வதற்கு 1-க்கு இரண்டு மடங்காக விலை இருக்கிறது. அதனால் நாம் அகில இந்தியக் காதிக் கமிஷனில் வரும் தொகையை வைத்து கூலிக்கு விடச் செய்தும் கூட, இன்னும் கூட்டப்படுகின்ற அளவுக்கு இல்லை. கூலியும் ஒரு அளவுக்கு இன்றைக்கு 2 ரூபாய் கொடுக்கும் அளவிலே, நிச்சயமாக கொடுக்கும் அளவிலே இருக்கிறது. 108 இடங்களுக்கும் கூட நாம் கட்டடம் கட்டுவதற்காக திட்டங்களை ஏற்பாடு செய்து வழி செய்திருக்கிறோம். அந்த அளவுக்கு இதிலே கிட்டத்தட்ட 12 கதிர் வேலை செய்யும் இடங்களிலும் கூட, 6 இடங்களிலும் 2 ரூபாய் 80 பைசா அளவிலே கூலி கொடுக்கப்படுகிறது.

அதோடு கூட இப்பொழுது மாரிமுத்து சொன்னார்கள்—ஆர். எச். சி. என்கின்ற இந்தத் திட்டத்தின்படி தயாரிக்கப்படுகிறது. " முகில் என்று முதலமைச்சர் அவர்கள் இந்தத் துணிக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள்.

அங்கேயும் துணி நெய்கின்ற இடத்திலேயே நூல் நூற்கப்படுகிறது. இப்பொழுது, அதிலே இரண்டு இடங்களிலே பெருமாநல்லூர், சூளூர் ஆகிய இரண்டு இடங்களில் துவக்கியிருக்கிறோம். இதற்காக முதலீடு 3,92,000 ரூபாய் மூலதனம் செலவிடப்படுகிறது. இதில் நிச்சயமாக 68 பேருக்கு தொழில் கிடைக்கிறது. அதிலே உற்பத்தி செய்கின்ற, கதர் நூல் கை ராட்டையைவிட, அம்பர் சர்க்கா நூலைவிட அதிக அளவுக்கு லாபம் கிடைக்கும் அளவிலே இரண்டிலிருந்து மூன்று ரூபாய் வரையில் கிடைக்கும் அளவிலே பயன் தருகிறது. இந்தத் திட்டத்தை இங்கு இருக்கும் 375 பஞ்சாயத்து யூனியன்களிலும் ஏற்பாடு செய்வதற்கான ஒரு திட்டத்தையும் இந்த வாரியம் எண்ணிக் கொண்டிருக்கிறது. அதை நாம் செயல்படுத்தினால் நிச்சயமாக பல இடங்களுக்கு பரவினால், நல்ல அளவிலே இன்றைக்கு நூல் உற்பத்தியாகாத இந்தக் கஷ்டத்திலேயும், மற்ற மற்ற நிலைமைகளிலேயும், ஏற்படும் சங்கடங்களைத் தவிர்க்கவும், வேலைவாய்ப்புக்கும், அதே நேரத்தில் நமக்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1961–62-ல் 132,000 பேர் வேலையில் இருந்தார்கள். இப்பொழுது 163,000 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள் என்றால் இன்றைக்கு 88,40,000 ரூபாய் கொடுக்கிறோம். ஆகவே இது வளர்ச்சி பெற்றிருக்கிறது. அப்பொழுது வேலை செய்தவர்கள் அநேகமாக டெம்பரரியாக வேலை செய்தார்கள். அவர்களுக்கு ஒரு ஆண்டு 20 ரூபாய் என்ற அளவிலே கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது நாம் இன்றைக்கு கூலி அதிகமான அளவுக்கு உயர்த்தியதின் காரணமாக ஒரு ஆண்டுக்கு 200 ரூபாய் கொடுக்கும் அளவிலே தரம் உயர்ந்திருக்கிறது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அழகர்சாமி அவர்கள் கூலி உயர்வைப் பற்றி பேசும்போது, 10 பைசா அதிகமாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்தத் திட்டத்திற்காக அங்கேயிருந்து வந்த கமிஷனிலே ஆராய்ச்சி செய்து 10 பைசா நிர்ணயித்து இருக்கிறார்கள். நாங்கள் மீண்டும் ஆராய்ச்சி செய்து மேலும் இதை உயர்த்துவதற்கு அவர்கள்தான் கொடுக்கவேண்டும். அதைக் கொடுத்தவுடன் பரிசீலிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். 124 இடங்களிலே உற்பத்தியும், 170 இடங்களில் விற்பனை நிலையங்களும் இருக்கின்றன. அவை போதாது என்று நண்பர் வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள். இது சம்பந்தமாக புதிதாக மாற்றம் செய்திருக்கிறோம். செயலாளர், டைரக்டர் என்றிருந்ததையெல்லாம் மாற்றி, சி.இ.ஓ. அதாவது சீப் எக்சிகியூடிவ் ஆபீசர்—ஐ.ஏ.எஸ். என்ற ஒரு ஆபீசரை நியமித்து 10 லட்சம் ரூபாய்க்கு தலைமை நிர்வாகத்திலே, அவர்கள் எந்த எந்த இடங்களிலே வியாபாரம் நடைபெறுகிறது என்பதைப் பார்த்து ஆராய்ச்சி செய்து, கூட்டுவதா குறைப்பதா என்ற நிலைமையிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இங்கே விற்பனையைப் பற்றியெல்லாம்கூடச் சொன்னார்கள். கம்பல் சரியாக விற்கச் சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். நாம் இராஜாஜி ஹாலில் விற்பனைக்கு வைத்திருந்ததைப் பற்றிக்கூட சுப்பிரமணியம்

அவர்கள் சொன்னார்கள். அழகர்சாமி கம்பல்சரியாக விற்பனை செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். இப்பொழுதே இப்படியிருந்தால் எப்படி விற்பனையாகும். அதற்கான காரணங்கள் இருக்கின்றன. இப்பொழுது மற்ற யந்திரங்களில் தயாராகி வரும் பொருட்களின் மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் மோகம்தான் காரணம். எவ்வளவு வயதாகிவிட்டாலும் கூட நாகரிகத்தை நோக்கி ஓடிவரும் இந்த நேரத்திலே நாம் கைத்தறியையும், கதரையும் மற்ற பொருட்களையெல்லாம் பற்றிச் சொல்லும்போது மற்றவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள். ஆகவே, இந்த நேரத்தில் கண்காட்சியை மிகச் சிறப்பாக நடத்தவேண்டும் என்று, மத்திய சர்க்காரின் 1,10,000 ரூபாயை வைத்து, அனுமதிச் சீட்டுக்கூட இல்லாமல் நடத்தினோம். அதில் ரூபாய் இரண்டு லட்சத்திற்கும் மேலே வியாபாரம் நடந்திருக்கிறது. இப்பொழுதுதான் மக்களுக்கு கதர் வாங்கவேண்டும் என்ற எண்ணம் கூட வந்திருக்கிறது. இந்த எண்ணத்தை வளர்க்கும் அளவிலே விளம்பரம் செய்யவேண்டும். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இப்பொழுது இருக்கும் 31 லட்சம் ரூபாய் போதாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்தத் துறையிலே விளம்பரம் செய்து கணக்கு எழுதுவது என்பது ரொம்பக் கஷ்டம். இந்தியக் காதி மானியத்தில் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் தந்திருக்கிறார்கள். மேலும் சி. இ. ஓ விடமும், செயலாளரிடமும் சொல்லி நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய பாரம்பரியமான பத்திரிகைகளிடம் விளம்பரத்திற்கு ஒரு 50 சத விகிதம் சகாயம் செய்யவேண்டுமென்று கேட்கச் சொன்னேன். ஆயிரம் ரூபாய் என்கின்ற இடத்தில் 500 என்று வாங்கச் சொன்னேன். சும்மா கூட கேட்கவில்லை. இதைக் காந்தியக் கொள்கையை பின்பற்றுகிறவர்கள் செய்திருக்க வேண்டும். ஆனால் ஓரிரண்டு பத்திரிகைகள் ஒத்துக்கொண்டார்கள். மற்றவர்கள் காதிலே கூட வாங்கவில்லை என்ற துக்கச் செய்தியை கேள்விப்பட்டேன். இதைப் பற்றி விவரங்களை அதிகாரிகளிடம் நீங்கள் நேராகத் தெரிந்துகொள்ளலாம். விளம்பரம் செய்தவற்கு பணம் அதிகம் வேண்டும். நான் கூட மன்னார்குடியிலே ஒரு ஊரில் ஃபெர்டிலைசர் கம்பெனி பிற்-
ஒன்று ஆரம்பித்தேன். அதற்கு விளம்பரம் செய்யவேண்டும் என்று பகல்
வெளி நாட்டு மக்கள் விரும்புகின்ற பல பொருள்களைப் பனை வெல்லக் 1-30
கூட்டுறவுச் சங்கத்தில் தயார் செய்கிறோம். அவற்றைப் பற்றி எல்லாம் கூட விளம்பரம் செய்ய முடியாத நிலை.

நாம் மூன்று பேரங்காடி வைத்திருக்கிறோம். இந்தியாவிலேயே மிகப் பெரிய கதர்த் துறைப் பேரங்காடி சென்னையிலேதான் இருக்கிறது. காதி ஆணைக் கமிஷனிலிருந்து ரிபேட்டுக்காக 5 சதவிகிதம் கொடுக்கிறார்கள். மாநில வாரியம் 5 சதவிகிதம் கொடுக்கிறது. திருவிழாக் காலங்களில் 30 நாட்களுக்குத்தான் அந்த ரிபேட் கொடுக்க வேண்டுமென்று கூறி இருக்கிறார்கள். இருந்தாலும் கதர் விலை குறைவில்லை, விலை அதிகமாக ஏறுகிறது என்றால் 56 லட்சம் ரூபாய் அளவுக்கு சப்சிடியாகக் கொடுத்து விலை ஏறுகிறது என்றால், பஞ்சின் விலையேற்றத்தாலோ, நூலின் விலையேற்றத்தாலோ அல்ல. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு ஆள் என்ன வேலை செய்யமுடியுமோ அந்த அளவுக்குத்தான் இன்றைக்கும் செய்ய முடியும். ஆனால் ஒரு மணி நேரத்தில் இயந்திரங்கள்

பல லட்சம் பேர் உழைப்பின் வேலையைச் செய்து விடுகிறது. எனவே தான் அந்தப் போட்டியோடு இது போட்டி போட முடியவில்லை. இந்த நிலையிலும் இந்த இலாகாவைச் சிறப்பாக நடத்தி வருகிறோம் என்றால் அது உள்ளபடியே எங்களுடைய திறமையைத்தான் நிச்சயமாகக் காட்டுகிறது.

பசி நேரம். இன்னும் ஒரு சப்ஜெக்ட் பற்றிப் பேசவேண்டும். கொஞ்ச நேரம் அவகாசம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் பேரவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 266 யூனிட்டுகள் இருக்கின்றன. 2,466 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 1,83,000 பேர் வேலை செய்கிறார்கள். ஊதியம் 206 லட்சம் பனை வெல்ல சொசைடி பற்றி எல்லோரும் சொன்னார்கள். இதிலே மாநில அமைப்பை மட்டும் வைப்பதா, மாவட்ட அமைப்புகளை எடுத்து விடுவதா என்பது பற்றி இந்தத் துறையைப் பற்றி நன்கு தெரிந்த திரு வி.வி.இராமசாமி அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இதிலே பொறுப்பு வகிக்கின்றவர்கள் எல்லாம் கூடி ஆராய்ந்து ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையைக் கூட ஏற்றுக் கொள்ளும் அளவில் இருக்கிறோம். மாவட்ட சொசைட்டிகளை எடுத்துவிட்டு மாநிலத்திற்கு மட்டும் வைத்துக் கொள்ளலாமா என்பது புனராலோசனையில் இருக்கிறது. கோடிக் கணக்கான ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் திரும்பப் பெற்றாக வேண்டும். அதையெல்லாம் திரும்பப் பெறுவதில் கஷ்டம் இருக்கிறது.

கருப்பட்டி பற்றி திரு அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள், ரொம்ப நல்லது என்றார்கள். கருப்பட்டி டீ கொடுத்தால் யாராவது இன்றைக்குக் குடிப்பார்களா ? கருப்பட்டி டீ என்றாலே மூஞ்சி சுண்டி விடுகிறது. கருப்பட்டி தயாரிப்பதற்காக சொசைடி மூலம் பணம் கொடுக்கப்படுகிறது. கருப்பட்டியை உற்பத்தி பண்ணியவுடனேயே சொசைட்டி எங்கே இருக்கிறது என்பதையே மறந்து விடுகிறான். தனிப்பட்ட வியாபாரியிடம் கொடுத்து விட்டு பணத்தை வாங்கி விடுகிறான். இங்கே கடன் தொகை கட்டப்படாமல் அப்படியே இருக்கிறது.

இதற்காக நாம் கட்டடங்கள் எல்லாம் கட்டியிருக்கிறோம். புதிதாக இருக்கும் சீஃப் எக்சிக்யூட்டிங் ஆபீசர் மிகவும் துரிதமாகச் செயல்பட்டு வருகிறார். சொசைடி மூலமாக 40 வெளிநாடுகளுக்கு பனம் தும்பு அனுப்பப்படுகிறது. ரொம்ப உபயோகமானது, ரொம்ப சீப்பாகவும் வாங்கும் பொருள்.

பனை நாரில் செய்யப்படும் பொருள்களை 40 நாடுகளுக்கு அனுப்புகிறோம். . .

தொப்பியைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே கேலியும் கிண்டலும் இருந்தாலும் கூட பனை ஓலைத் தொப்பியை கனடா நாட்டிலிருந்து கேட்டிருக்கிறார்கள். மூன்று லட்சம் ரூபாய் அளவுக்கு வாங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அதற்கான ஏற்பாடுகள் செய்து பேச்சுவார்த்தைகள் நடந்து வருகிறது.

ஜப்பான் நாட்டில் பிரஷ் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் 36 லட்சம் அந்நியச் செலாவணி கிடைக்கும். தீப்பெட்டி பற்றி எல்லாம் சொன்னார்கள். வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள். ஐந்து பிரிவு மூடப்பட்டிருந்தது, எட்டு நடைபெற்றது. தீப்பெட்டியை இராணுவத்தில் கேட்டிருக்கிறார்கள். இராணுவத்திற்கு அனுப்புவதன் மூலம் 3·67 லட்சம் ரூபாய் அளவுக்கு விற்பனை ஆகும் என்று எதிர்பார்க்கிறோம். வெங்கடசாமி அவர்கள் ஊரில் சீதோஷ்ண ஸ்திதியில் கஷ்டங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். ஆராய்ந்து தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

நாட்டுச் செக்கு எண்ணெய் பற்றிச் சொன்னார்கள். நல்லெண்ணெய் எக்ஸிபிஷனில் கூட விற்றோம். நல்ல பொருள்களை வாங்க ஜனங்களுக்குப் பிடிக்காது. கஷ்டம் இல்லாமல் ஒரே இடத்தில் வியாபாரிகளிடத்தில் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் துவரம்பருப்பை 50 பைசா குறைவாக சென்னையில் விற்கிறோம். எவ்வளவு டர்ன் ஓவர் ஆகுமென்று நினைத்தோமோ அந்த அளவுக்கு விற்பனை ஆகவில்லை. மாதா மாதம் பணத்தைக் கொடுத்து ஒரே இடத்தில் வாங்கும் நிலைமையில் மக்கள் இருக்கிறார்கள். இந்தத் துறையின் பொருள்கள் கலப்படம் இல்லாமல் இருக்கும், சுத்தமாக இருக்கும்.

கலப்படத்திலே கை தேர்ந்தவர்கள் உலகத்திலேயே தமிழ்நாட்டில்தான் இருக்கிறார்கள். ஆனந்தவிகடனில் அதைப் பற்றி ஒரு தலையங்கமே எழுதியிருந்தார்கள். நம்முடைய நாட்டிலே எந்த பிசினஸை ஆரம்பித்தாலும் விநாயகர், சுப்பிரமணியத்தை வைத்துத்தான் ஆரம்பிப்பார்கள், விநாயகர் பெயரால் ஆயிரம் ரூபாய், சுப்பிரமணியர் பெயரால் இரண்டாயிரம் ரூபாய் என்றுதான் ஆரம்பிப்பார்கள். அந்தக் கடையில்தான் 70 பர்செண்ட் நல்லெண்ணெய், 30 பர்சண்ட் கடலை எண்ணெய்யாக இருக்கும். எதையெடுத்தாலும் கலப்படம் நம்முடைய நாட்டில்.

திரு. ஜி. இராஜாராம் : அந்த 70—30 சதவிகிதத்திலே விநாயகருக்கு எவ்வளவு பர்சண்ட், சுப்பிரமணியருக்கு எவ்வளவு பர்சண்ட்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதைப் போற்றுகிறவர்களைக் கேட்டால் தான் தெரியும். நம்முடைய நாட்டில்தான் கலப்படத்தைக் கண்டுபிடிக்க ஒரு இலாகா இருக்கிறது. இங்கே நல்ல சுத்தமான நல்லெண்ணெய் கிடைக்கிறது. கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சிறு தொழில்களில் இது ஒன்று. என் அதிகமாக ஆந்திரத்தில்

உற்பத்தியாகிறது. ஆந்திராவில் இருக்கும் சண்டை காரணமாக எல்லா விலையும் அதிகமாக இருக்கிறது. டிரான்ஸ்போர்ட் கஷ்டங்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. எவ்வளவு துரிதமாக இதிலே உற்பத்தியை அதிகப்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் உற்பத்தியை அதிகப்படுத்துகிறோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நல்லெண்ணெய் மிலிடரிக்கு சப்ளை செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களா? அவர்கள் தாராளமாக வாங்கிக் கொள்வார்கள். அவர்களுக்கு இப்போது சப்ளை செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உற்பத்தி செய்ய ஏற்பட்ட இடம் 190, செயல்படுபவை 50—ல்தான். பாக்கி எல்லாம் மூடிக் கிடக்கின்றன. நமக்கு வேண்டியவற்றையே நாம் செயல்படுத்த முடியவில்லை. ரீ ஆர்கனேசேஷன் செய்து பார்த்து, என்னென்ன இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கலாம் என்று பார்க்கலாம். மிலிட்டரிக்கெல்லாம் அனுப்ப வேண்டாம். கூட்டுறவுத் துறையில் நாணயமான முறை இருக்கிறது. தனிப்பட்டவர்கள் சென்று தப்பு செய்வதற்கில்லை. திருட்டுப்போனால் ஐந்தாறு பேர்கள் பிணையாக எழுதி ஏதாவது செய்யலாமே தவிர பொதுமக்களைப் பொறுத்தவரையில் சுகமாக அனுபவிக்க முடியும்.

மண்பாண்டம் செய்யும் தொழில் பற்றி மூடிக் கிடப்பவற்றைப் புனருத்தாரணம் செய்வதற்கு திட்டம் போட்டிருக்கிறோம்.

தேனை பம்பாய், டெல்லி குஜராத்துக்கு, அனுப்புகிறோம். நல்ல தேன் 30 லட்சம் ரூபாய்க்கு வியாபாரம் செய்கிறார்கள். எக்ஸிபிஷனில் கூட வைத்து வியாபாரம் செய்யச் சொன்னோம். எல்லோரும் அந்தத் தேனை விரும்பி வாங்குகிறார்கள். அந்தத் தேன் நல்ல தேன். சர்க்கரை வியாதி உள்ளவர்கள் கூட அந்தத் தேனைச்சாப்பிடலாம். வேப்பம் பூவிலிருந்துகூட தேன் எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு இடத்தில் இருந்தும் தேன் எடுக்கப்படுகிறது. நான் சர்க்கரை வியாதிக்காரன் என்ற முறையில் சொல்கிறேன், நான்கூட அந்தத் தேனைச் சாப்பிடுகிறேன். ரொம்பவும் நன்றாக இருக்கிறது. அகில உலகமும் போற்றக்கூடிய விதத்தில் அந்தத் தேன் நல்ல முறையில் இருக்கிறது. டெல்லி, பம்பாய் போன்ற முக்கிய நகரங்களுக்குக்கூட 30 லட்சம் ரூபாய் அளவிற்குத் தேன் அனுப்பப்படுகிறது.

காகித யூனிட், எதற்கும் உபயோகப்படாத பொருள்களைக் கொண்டு காகிதம் செய்கிறோம். சிறப்பாக, நன்றாக இருக்கிறது. இயந்திரங்கள் மூலம் செய்யப்படுகிற காகிதத்தை விட இதற்கு விலை குறைவாக இருக்குமே தவிர, அது பத்து வருடங்களுக்கு வராது. இது இருநூறு வருடங்களுக்கு நிச்சயமாக இருக்கும். அந்த அளவிற்கு உறுதியாகவும் அழகாகவும் செய்யப்படுகிறது. எக்ஸிபிஷனில்கூட வைக்கிறோம்.

சோப் பற்றி பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். தரமான சோப், விலையும் குறைந்த சோப். கோபுர மார்க் என்று சொல்கிறார். 40 லட்சம் ரூபாய் அளவிற்குசெய்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: விளம்பரம்கூட காசு செலவில்லாமல் இங்கேயே மன்றத்திலேயே விளம்பரம் செய்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நன்றி. எல்லோரும் எவ்வளவு தூரம் ஆதரிக்க முடியுமோ அந்த அளவிற்கு ஆதரிக்கவேண்டும். எக்ஸிபிஷனில் மொத்தம் ரூ. 2.23 லட்சத்திற்கு விற்பனையாகி இருக்கிறது. என்ட்ரன்ஸ் பீஸ் வாங்க வில்லை.

ரூ. 1,10,000 காதி கமிஷன் கொடுத்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டு மாவட்டத் தலை நகரங்களில் இதை ஏற்பாடு செய்வதற்கான யோசனைகள் இருக்கின்றன. இந்தத் திட்டங்களை நீங்கள் எல்லோரும் ஏகோபித்து ஆதரிக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்களை கேட்டுக்கொள்கிறேன்.

வேலைத் திட்டங்கள் பற்றிப் பேசியிருக்கிறார்கள். கிராமங்களுக்குச் சென்று யார் யாருக்கு வேலை இல்லை—விவசாயத்திற்குப் பிறகு ஒரு ஆறு மாத காலம் கஷ்டப்படுகிறார்கள்—என்பது பற்றி எல்லாம் ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. 44 கோடி ரூபாய் அளவிற்கு திட்டம் போட்டிருக்கிறோம். ரூ. 87.50 அவர்கள் தருகிறார்கள். வேலை இல்லாதவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். இவர்கள் ரூ. 12.50 கட்டவேண்டும். மாநில அரசு ரூ. 100 கொடுத்து 200 இன்டு 10 ரூ. 2,000 கடன்பெற்று இதிலிருந்து முன்னுக்கு வரவேண்டுமென்பது திட்டம். கணக்குகள் எல்லாம் எடுக்கப்படுகிறது. கொடுக்கக்கூடியதை வைத்து அதைச் சரியாகப் பயன்படுத்துகிறார்களா என்றால், பத்து மூட்டை உரம் கொடுத்தால் இரண்டைப் போட்டுவிட்டு எட்டு மூட்டையை விற்று விடுகிறார்கள். அந்த அளவிற்கு நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டம் வெற்றிபெற காந்தியடிகளின் சிறப்பான வழியை பின்பற்றி செய்யும் இதில் உறுப்பினர்கள் எல்லோரும் தங்கள் ஒத்துழைப்பைத் தரவேண்டும். இன்னும் எவ்வளவோ இருந்தாலும் பசி நேரத்தில் நீங்கள் தொல்லை கொடுக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன்.

இந்த மானியத்தை பொறுத்தவரையில், காந்தி அடிகளுடைய திட்டம் என்ற அடிப்படையில், எல்லா கட்சி உறுப்பினர்களும், எல்லாக் கட்சித் தலைவர்களும் சிறந்த கருத்துக்களைச் சொல்லியிருக்கிறீர்கள். சட்டமன்றத்தில் சொல்லப்படுகிற யோசனைகள் என்று மட்டுமில்லாமல் தினம் தினம் என்னென்ன யோசனைகள் சொல்கிறீர்களோ அவற்றை செயல்படுத்த முயற்சிப்பேன் என்று கூறி, இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் ஏ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். இந்த காதி இலாகாவில் வேலை செய்கிற ஊழியர்கள் 60, 70 பேர்கள் ஆறு, ஏழு ஆண்டுகள் டெம்பரரியாகவே வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் பசிக்கு இந்த பசி நேரத்தில் ஒரு நல்ல முடிவு எடுப்பது வரவேற்கத்தக்கது. காதி செக்ரடேரியட், டயரக்டர் ஆப் காதி என்று இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ஒன்றாக செய்யும்போது—

இரண்டாக இருந்தால் நல்லது—அதனால் சிப்பந்திகளுக்கு ஏதாவது சிக்கல்கள் வருமா என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். குறளகத்தில் வேலை செய்பவர்களுக்கு சரியான சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பல துறைகளிலிருந்தும் அரசாங்க சிப்பந்திகள் வந்திருக்கிறார்கள். இந்த ஒன் மான் கமிஷன் திட்டம் போன்று எல்லாவற்றையும் நிறைவேற்றியிருக்கிறோம் அவர்களுக்கும். மற்றபடி நீங்கள் சொல்லியுள்ள யோசனைகளைப் பரிசீலனை செய்துதான், இரண்டாக இருக்க வேண்டாம் என்று கருதித்தான், ஒருவர் பார்த்துச் செய்யலாம் என்று செய்யப்பட்டிருக்கிறது. பத்து லட்சம் ரூபாய் மிச்சமாகியிருக்கிறது. சம்பள விகிதத்தில் சர்க்கார் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பதற்கு, நாங்கள் பல கோடி ரூபாய் செலவு செய்து இருக்கிறோம் சம்பள விஷயத்தில். அந்த முறையில் எந்த அளவிற்கு அவர்களுக்கு உண்மையாகக் கிடைக்கவேண்டுமோ அப்படி கிடைக்க வேண்டியதைத் தடுக்காமல் செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. திரு. எ. ஆர். மாரிமுத்து, திரு. சோ. அழகர்சாமி ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவரது வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "நிதிக் கோரிக்கை எண் 26—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,23,700க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்." என்ற நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிகின்றன. பேரவை மீண்டும் 26—3—73, திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–50 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders

85. Notification issued with G. O. Ms. No. 2806, Agriculture, dated the 9th November 1972, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [*Laid on the Table of the House under section* 29(4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959)].

B. Reports, Notifications and Other Papers

*130. Policy Note on Demand No. 24—Cinchona Department (English and Tamil).

*131. Policy Note on Forests 1973-74 (English and Tamil).

*132. Policy note on Tamil Nadu Khadi and Village Industries Board (English and Tamil).

*133. Commercial Budget on Cinchona Department 1973-74.

*134. The Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973 (L. A. Bill No. 4 of 1973).

* 135. The Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1973(L.A. Bill No. 5 of 1973).

---

* Despatched to Members on 22nd March 1973.

இணைப்பு I.

(16-ம் பக்கத்தில் வெள்ளிக்குறியிட்ட வினா எண் 500-க்கான விடையைக் காண்க.)

(அ) டாக்சி டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் கீழ்க் கண்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன :—

சென்னை (இரண்டு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்).
கடலூர்.
தஞ்சாவூர் (பாபநாசம்).
திருச்சி.
மதுரை.
திண்டுக்கல்.
போடிநாயக்கனூர்.
சிவகங்கை.
பரமக்குடி.
சிவகாசி.
நாமக்கல்.
கோயமுத்தூர்.

(இ) விபரம் கீழே தரப்பட்டுள்ளது :—

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் பெயர்.	வழங்கப்பட்ட கார்கள்.
1. சென்னை டாக்சி டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கம்.	89
2. சிட்டி கேப் டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.	8
3. கடலூர் டாக்சி அண்டு ஆட்டோ ரிக்சா டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.	புதியதாகப் பதிவு செய்யப் பட்டது.
4. தஞ்சாவூர் மாவட்ட டாக்சி டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.	20
5. திருச்சி மாவட்ட டாக்சி அண்டு ஆட்டோ ரிக்சா டிரைவர்கள் தொழிற்கூட்டுறவுச் சங்கம்.	21 ஆட்டோ ரிக்சாக்கள் மட்டும். கார்கள் இன்னும் வழங்கப் படவில்லை.

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் பெயர்.	வழங்கப்பட்ட கார்கள்.
6. மதுரை டாக்சி டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.	வட்டார போக்கு வரத்து அதிகாரியிடம் 25 கார்களுக்கு அனுமதி சீட்டு பெறப் பட்டுள்ளது. கார்கள் இன்னும் வழங்கப்படவில்லை.
7. திண்டுக்கல் டாக்சி டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.	10 கார்களுக்கான அனுமதி வட்டார போக்குவரத்து அதிகாரியிடம் கேட்கப்பட்டுள்ளது. அனுமதி விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
8. போடிநாயக்கனூர் டாக்சி டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.	36 கார்களுக்கான அனுமதி சீட்டு கேட்டு விண்ணப்பித்துள்ளது.
9. சிவகங்கை டாக்சி டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.	10
10. அண்ணா டாக்சி டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், பரமக்குடி.	10 கார்களுக்கான அனுமதிச் சீட்டு கேட்டு விண்ணப்பித்துள்ளது. இன்னும் கார்கள் வழங்கப்படவில்லை.
11. சிவகாசி டாக்சி அண்டு ஆட்டோ ரிக்சா டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.	ஷை
12. கோயமுத்தூர் மாவட்ட டாக்சி டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.	புதியதாக பதிவு செய்யப் பட்டுள்ளது.
13. நாமக்கல் டாக்சி டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.	13

சட்டம் வகை செய்கிறது. இப்போது புது ரூட்டுகள் இல்லாத சூழ்நிலையில் இந்தமாதிரித் தவறுகளை துணிந்து செய்கிறார்கள். இருந்தாலும் அரசாங்க அதிகாரிகள் இது சம்பந்தமாகத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன? எத்தனை வழக்குகள் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன என்ற விபரத்தை அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தர்மபுரி மாவட்டத்தில் பிப்ரவரியில் 9 வழக்குகளும், மார்ச் மாதத்தில் 13 வழக்குகளும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 2 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன என்ற விபரங்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் இந்த மாதத்தில் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்ற விபரம் இல்லை. எத்தனை வழக்குகளைப் பதிவு செய்தாலும் "பஸ் ஓனர்கள்" அதைப்பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, முன்பெல்லாம் அரசாங்க பஸ்கள்தான் சாலைகளிலே நிற்கும் என்று சொல்வார்கள். ஆனால் இப்போது தனியார் பஸ்கள் எங்கு பார்த்தாலும் நிறைய சாலைகளில் நிற்கின்றன. இதற்குக் காரணம் தனியார் பஸ்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என்று அறிவித்ததால் அவர்கள் பஸ்களை சரியாக பராமரிக்காததுதான் என்று தெரிகிறது. ஆகவே, தனியார் பஸ்கள் ஒழுங்காக பராமரித்து நடத்திவர நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதோடு தனியார் பஸ்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்றதால் அவர்கள் வைத்திருந்த "ஒர்க் ஷாப்பு"களை ஒடுக்கிக் குறைத்து, இப்போது ஒரே ஒரு பஸ் நிற்கக்கூடிய அளவில் சுவர்களைப் போட்டு மறைத்திருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்போது முதலில் எந்த அளவுக்கு இருந்ததோ அந்த அளவுக்கான மொத்த இடத்தையும் எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பஸ் முதலாளிகள் என்னென்ன முறைகளிலே தவறுகள் செய்வார்கள் என்பதைப் பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதுபற்றி எல்லாம் அரசாங்கம் தகுந்த நேரத்தில் தக்க நடவடிக்கை எடுக்கும். ஓவர்லோடைத் தடுப்பதற்காகத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது என்று முடிவு செய்தாலும், எவ்வளவு கூடுதல் பயணிகளை ஏற்றிச் செல்கிறார்களோ அந்த அளவுக்குக் கூடுதல் வரி விதிக்கலாமா அல்லது சட்டத்தைத் திருத்தி ஓவர்லோடு செய்கின்ற பஸ்களை உடனடியாகக் கையகப்படுத்தலாமா என்று அரசு ஆராய்ந்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Transport whether all the buses from the Dharmapuri district will be taken at the same time or will be taken step by step ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : As per the Act, all the buses belonging to a particular district will be taken simultaneously.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, பயணிகளின் தேவைக்கு ஏற்ற அளவில் பேருந்துகள் இல்லாததால் இந்தமாதிரி ஓவர்லோடு செய்கிறார்கள். ஆகவே, பயணிகளுக்குத் தேவையான அளவுக்கு அதிகப்படியாகப் பஸ்களைவிட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்து சரியானதல்ல. எவ்வளவுக்கெவ்வளவு சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு மற்ற பஸ்களுக்கு விடக்கூடாது என்ற முறையிலே ஏற்றிக்கொள்ளும் சுயநலம் காரணமாகத்தான் இது நடைபெறுகிறது. ஆகவே, இதைத் தடுக்க வேண்டுமென்று அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. எ. சுவாமிநாஸ் : சார், தனியார் பஸ் முதலாளிகள் பஸ்களில் ஓவர்லோடு ஏற்றிச் சென்றால் அவர்களின்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதைப்போல அரசாங்க பஸ்களிலும் ஓவர்லோடு ஏற்றிச் சென்றால் அந்த பஸ்களுக்குச் சொந்தக்காரராக இருக்கும் அமைச்சர்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அமைச்சர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அங்கத்தினர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் பேருந்துகளைப் பொறுத்தவரையில், நகரங்களிலே, நெரிசல் நேரங்களில் நின்று செல்வதற்குப் பயணிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். பொதுவாக கிராமப் புறங்களிலும், மாவட்டங்களிலும் நீண்ட தூர வழித் தடங்களில் பஸ்கள் செல்வதால், நீண்ட நேரம் பயணம் செய்ய வேண்டியிருப்பதால் பயணிகளுக்கு வசதியாக இருப்பதற்காக ஓவர்லோடு ஏற்றிச்செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. அது அரசாங்க பஸ்களானாலும் சரி, அல்லது தனியார் பஸ்களானாலும் சரி, ஓவர்லோடு ஏற்றிச் செல்லக்கூடாது என்று விதிமுறைகளை வைத்திருக்கிறோம்.

திரு. எ. எம். இராஜா : தலைவரவர்களே, தனியார் பேருந்துகளில் ஓவர்லோடு ஏற்றிச் செல்வதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தாலும் இப்போது வந்திருக்கிற சட்டத்தினால் அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படுவதாக இல்லை என்று சொன்னார்கள். அதோடு இனி வருங்காலத்தில் ஓவர்லோடு ஏற்றிச் செல்லும் பஸ்களை உடனடியாகக் கையகப்படுத்தும் ஒரு கருத்து ஆலோசனையில் இருப்பதாகவும் சொன்னார்கள். உடனடியாகக் கையகப்படுத்தி அந்த பஸ்களை நாட்டுடைமையாக்க அரசாங்கம் சட்டம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஓவர்லோடு ஏற்றிச் செல்வார்களேயானால், இப்போது இருக்கின்ற சட்டப்படி நாள் ஒன்றுக்கு 75 ரூபாய் அபராதம் போடலாம். இரண்டுமுறை

சஸ்பெண்ட் செய்யப்பட்டால் மேற்படி பஸ் சொந்தக்காரர்களுக்குப் புதிய வழித்தடங்கள் கொடுக்கப்பட மாட்டாது. ஆனால் நாம் இப்போது முடிவு செய்திருப்பதன்படி இனி யாருக்கும் புதிய வழித்தடங்கள் கிடையாது. ஆகையால் அதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. 75 ரூபாய் மட்டும் தான் அபராதம் வசூலிக்க முடியும். ஆகவே அவர்கள் அதைப்பற்றியும் கவலைப்படுவதாக இல்லை. இதை மாற்றி அமைக்கின்ற வகையிலே எத்தனைப் பயணிகளைக் கூடுதலாக ஏற்றிச் செல்கிறார்களோ அந்த அளவுக்கு 3 மாத காலத்திற்குக் கூடுதல் வாகன வரி விதிக்கலாமா? இல்லையென்றால் உடனடியாக அந்தப் பஸ்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, முன்பெல்லாம் ஓவர்லோடு ஏற்றிச்சென்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க போலிஸாருக்கு அதிகாரம் இருந்தது. இப்போது அவர்களுக்கு அந்த அதிகாரம் இல்லை என்று தெரிகிறது. ஆகவே மீண்டும் அவர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்க அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்தக் கருத்து சரியானதல்ல. காவல் துறைக்கு அந்த அதிகாரம் இப்போதும் இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, இரண்டு முறை சஸ்பெண்ட் செய்யப்பட்டால் புதிய வழித்தடங்கள் கிடையாது என்ற நிலை முன்பு இருந்தது. இப்போது புதிய வழித்தடங்களே யாருக்கும் இல்லை என்ற நிலை இருப்பதால் அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருக்கிறார்கள்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, நம்முடைய நாட்டில் பெரியோர்களுக்குக் கடைசிக் காலத்தில், அவர்கள் நல்லது கெட்டது எதைக் கேட்டாலும் அவர்கள் உயிர் போவதற்கு முன்னால் அவைகளை வாங்கிக் கொடுப்பது நமது பழக்கம். அதைப்போல இந்த பஸ் முதலாளிகளுக்கும் அவர்கள் கடைசி காலத்தில் இருப்பதால் சில சலுகைகளை அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல பெரியோர்களுக்குச் செய்யலாம்; ஆனால் இத்தகையோருக்கு அல்ல.

Marine Diesel Engine Factory.

*** 513 *Q.*—Thiru N. DENNIS, Thiru A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Industries be pleased to state :**

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up Marine Diesel Engine Factory in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆண்டு ஒன்றுக்கு 30–200 குதிரைத்திறன் கொண்ட 1,000 யான்மார் கப்பல் டீசல் இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ இந்திய அரசிடமிருந்து இசைவுக்கடிதம் பெற்றுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். ஏற்கெனவே இந்த கேள்வித் தாளில் நமது கல்வித் துறை அமைச்சரவர்களும், அரிசன நல அமைச்சரவர்களும் வருவதாகவும் அவர்கள் பதிலளிப்பதாகவும் கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இங்கே அவர்கள் இல்லை. அவர்கள் வருவார்களா அல்லது வராததற்கு காரணமென்ன?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம். வருவதாகத்தான் தெரிகிறது. இன்று திங்கட்கிழமை அல்லவா! நேற்று டூர் ஏதாவது போயிருப்பார்கள் என்று நினைக்கின்றேன்.

திரு. என். டென்னிஸ் : சார், அதன் "காப்பிட்டல் இன்வெஸ்ட்மெண்ட்" எவ்வளவு? தனிப்பட்டவர்களுக்கும் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் அது பற்றி முடிவு செய்யப்படவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, குறிப்பு ஒன்று இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த இயந்திரத் தொழிற்சாலை எங்கே ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கெனவே திட்டமிட்டபடி எண்ணூரில் ஆரம்பிக்கலாம் என்று கருத்து இருந்தது. நாம் புதிதாக அனுமதி வாங்கியதற்கு பின்னாலே அது பற்றி முடிவு எடுக்கப்படவில்லை. சுமார் 3.6 கோடிக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், சென்னையில் உள்ள மெரைன் ரிப்பேர் ஒர்க்ஷாப் சில தனியாரிடத்தில் இருக்கிறது. கன்ஸ்டிரக்ஷன் ஷிப்பிங் சம்பந்தமாக அந்த தனியாரிடத்தில் போய்தான் சர்வீஸ் முதலியன செய்து வருகிறார்கள். அம்மாதிரியான ஒர்க்ஷாப் ஒன்றை இதனுடன் இணைத்து தொடங்க அரசுக்கு ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த இயந்திரங்கள் உற்பத்தி செய்வது பற்றிய திட்டம் வந்ததற்குப் பின்னாலே அப்படி ஒரு வாய்ப்பு ஏற்படுத்த முடியுமா என்று பரிசீலிக்கலாம்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கிறபோது தமிழகத்திலேயே பின்தங்கிய மாவட்டமாக இருக்கும் தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்த அரசு முன் வருமா?

[1973 மார்ச் 26

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இருக்கின்ற வசதிகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு முடிவு செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்பநாடார் : தலைவரவர்களே, இது எப்போது துவங்கப்படும், இதற்கு எவ்வளவு மூலதனம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் ஏற்கெனவே சொன்னேன். திட்டவட்டமான முடிவு எடுக்கப்படவில்லை. சுமார் 3.6 கோடி வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதிலே ஜப்பானிய தொழில் நுட்ப உதவி கிடைக்க வேண்டும் என்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நான் ஜப்பானுக்குச்சென்று இருந்தபோது அந்த நிறுவனத்தாருடன் பேச்சு வார்த்தை நடத்தி விட்டு வந்தேன். மத்திய அராங்கம் அந்த ஜப்பானியத் தொழில் உதவி கிடைப்பதில் சில சங்கடங்கள் இருப்பதாகச் சொல்லி வருகிறார்கள். மேற்கொண்டு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இந்த இயந்திரத் தொழிற் சாலையில் 20 எச்.பி., 30 எச்.பி., இயந்திரங்கள் தயாரிக்கப்படுவதாகச் சொன்னார்கள். சிறு சிறு மீனவர்கள் இன்னும் குறைந்த விலையில், மலிவான விலையில் வாங்குவதற்கு வசதி செய்யும் பொருட்டு 10 எச்.பி. 15 எச்.பி. இயந்திரங்கள் நாங்கள் கொஞ்சம் மீன் பிடிக்க வசதியாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள்—தயாரிக்க அந்தத் தொழிற்சாலைக்கு அரசு யோசனை கூறுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இருக்கும் திட்டப்படி 30லிருந்து 200 எச்.பி. வரை செய்யலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இவைகளும் தேவையென்றால் பரிசீலிப்பதில் தவறு இல்லை.

திரு. அ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, நாட்டில் இந்த இயந்திரங்களுக்கு அதிகம் தேவை இருப்பதால் அத்தொழிற்சாலை விரைவில் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழகத்தைப் பொறுத்தவரையில் அது நீண்ட நாளைய கனவு என்று நினைக்கின்றேன். இப்போதுதான் அனுமதி பெற்று இருக்கிறோம். தொழில் நுட்ப அறிவு விரைவில் வந்து விடுமானால் அந்தத் தொழிற்சாலையை விரைவில் ஆரம்பித்து விடலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது ஜப்பான் நாட்டினரின் தொழில் நுட்ப ஆலோசனை தேவைப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் அதில் பாரின் கொலாபரேஷன் ஏதாவது இருக்கிறதா அல்லது அரசே அதை ஏற்று நடத்த இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்,

1973 மார்ச் 26]

மாண்புமிகு திரு செ. மாதவன் : ஜப்பானியத் தொழில் நுட்ப அறிவு தேவை, "டெக்னிகல் நோஹௌ" தேவை என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது. அது பற்றிப் பேச்சு வார்த்தை இப்போது நடைபெற்று வருகிறது.

Advertisement for Arasu Cement.

***514—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state the expenditure incurred for the advertisement of Tamil Nadu Arasu Cement given in the All India Radio for the calendar years 1971 and 1972 ?**

மாண்புமிகு திரு செ. மாதவன் : ரூ. 29,536.25.

திரு என். டென்னிஸ் : தலைவரவர்களே, இதன் மூலம் இதன் செலவு அதிகரித்து இருக்கிறதா? இல்லை உற்பத்தி பெருக வழி வகுத்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : நம்முடைய சரக்குக்காக விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. எதாவது வியாபாரத்தில் விளம்பரம் செய்தால் பயன் இடைக்கும்.

திரு கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இப்போது சிமெண்டுக்கு விளம்பரம் செய்யாவிட்டாலும் வியாபாரம் இருக்கிறது. இப்படி தமிழ்நாடு சிமெண்ட் பற்றி வானொலியில் சொல்லப்படும் விளம் பரம் சுவையாக இருக்கிறது. 3 மாதத்திற்கு ஒரு முறை மாற்றி வேறு வேறு விதமான வகையில் விளம்பரம் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு செ. மாதவன் : சில நாட்கள் இந்த விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. சில மாதங்கள் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு இந்தத் தொகை செலவாகியிருக்கிறது. முன்னாலே நாம் உற்பத்தி தொடங்கிய போது அந்தக் கஷ்டம் இருந்தது. இப்போது மாண்புமிகு அங்கத்தினர் சொன்னது போல் அரசு சிமெண்டுக்கு ஏராளமான கிராக்கி ஏற்பட்டுள்ளது.

திரு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சர் சொன்னது போல், இப்போது நிறைய கிராக்கி ஏற்பட்டு இருக்கிறது. எல்லாப் பக்கங்களிலும் இந்த சிமெண்ட் பற்றி மக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை வாங்க வேண்டுமென்ற ஆவல் எல்லாப் பக்கங்களிலும்—கிராமப் புறங்களிலும் இருக்கிறது. ஆகவே, உற்பத்தியைப் பெருக்கி எல்லா மக்களுக்கும் சிமெண்ட் கிடைக்கும் வகையில் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தமிழகத்தைப் பொறுத்தவரையில் சிமெண்ட் உற்பத்தியில் எந்த விதமான தடையும் கிடையாது. வெளி

தமிழ்நாடு சட்டப்பேரவை.

திங்கட்கிழமை, 1973 மார்ச் 26.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் ஓடும் தனியார் பேருந்துகள்.

* குறுகியகால வினா எண் 4—திரு. க. சுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் உள்ள பேருந்து உரிமையாளர்கள், தங்களது பேருந்துகளில், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்வதன் மூலம் பொதுமக்களுக்கு மிக்க வசதிக் குறைவினை ஏற்படுத்துகின்றனர் என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) அதிகப்படியான பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்து உரிமையாளர்களின்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. கே.டி.கே. தங்கமணி : சார், இந்தக் கேள்வியிலே குறிப்பாக, தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு மாவட்டங்களின் பஸ் தடங்களெல்லாம் அடுத்தடுத்தாற்போல் எடுத்துக்கொள்ளப்படக்கூடிய மாவட்டங்களாக இருக்கின்றன. ஆகவே தான் இந்த இரண்டு மாவட்டங்களிலும் இப்படி ஓவர்லோடு செய்கிறார்கள் என்று தெரிகிறது. எனவே, எப்போது இந்த இரண்டு ஜில்லாக்களிலும் இருக்கக்கூடிய பஸ்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல நீலகிரிக்கு அடுத்து தர்மபுரியும் இராமநாதபுரமும் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. அது மட்டுமல்ல. ஓவர்லோடு ஏற்றிச் செல்பவர்கள்மீது நடவடிக்கை எடுத்து நாம் தண்டனை கொடுத்தால் புது ரூட்டுகள் கிடையாது என்று ஏற்கனவே இருக்கின்ற

மாநிலங்களுக்கும் அனுப்புகிறோம். ஏராளமாக உற்பத்தியாகிறது. இப்போது இடைக்காலத்தில் 3 மாதமாக உள்ள மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாகத்தான் உற்பத்தி குறைந்து இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த சிமெண்ட் சம்பந்தமாக உற்பத்தியைப் பற்றிச் சொன்னார்கள். விநியோகத்தைப் பொறுத்த வரையில் இப்போது சிமெண்ட் விலை சமீப காலத்தில் ரொம்ப அதிகமாக உயர்ந்து இருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா? இதைக்கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு செ. மாதவன் : நான் ஏற்கெனவே சொன்னபடி, மின் தட்டுப்பாடு காரணமாக உற்பத்தி குறைந்து இருக்கிறது. உற்பத்தியாகும் ஒரு பகுதியைக் கேரள மாநிலத்திற்கும் கொடுத்து விடுவதால், மீதி குறைவாகத்தான் இருக்கிறது. அதனால்தான் சிக்கல். இதைத் தீர்ப்பதற்கு அண்மையில் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சில விதிகளைப் பிறப்பித்து இருக்கிறோம். இந்த விதிகளின்படி இனிமேல் அனுமதி வாங்குபவர்களுக்குத்தான் சிமெண்ட் கொடுக்கப்படும். அந்த அனுமதி கூட புதிதாக வேலை தொடங்குவதற்கு இல்லாமல் ஏற்கெனவே தொடர்ந்து நடந்து வருகிற வேலைக்கு மட்டும் அனுமதி கொடுக்கலாம் என்ற முடிவை அரசு எடுத்து இருக்கிறது. அரசின் தேவைகளை முதலில் கவனித்து, உள்ளாட்சித் துறை மன்றங்கள் ஆகியவற்றின் தேவைகளுக்குப் போக மற்றவர்களின் தேவைக்குக் கொடுக்கலாம் என்றும் ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, அரசு சிமெண்ட்டுக்கு வானொலி மூலமாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. கிராம மக்களும் அது குறித்து அறிந்து கொள்ள வாய்ப்பளிக்கும் முறையில் பத்திரிகை மூலமாகவும் அதிகமாக விளம்பரம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு செ. மாதவன் : இப்போது செய்தித் தாள்களிலும் விளம்பரம் போடப்படுகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, அரசு சிமெண்டுக்கு தமிழ் நாட்டிலே நல்ல கிராக்கியிருக்கிறது. ஆனால், தண்ணீரில் கலக்கிற நேரத்தில் சீக்கிரமாகக் காய்ந்து விடுகிறது என்று குறைபாடு இருக்கிறது. ஆகவே, அதன் தரத்தை உயர்த்த அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் குறைபாடு இருந்தால் கிராக்கி இருக்காது என்று நினைக்கிறேன். குவாலிட்டியைப் பொருத்த வரையில் நல்ல முறையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அங்கத்தினர் அவர்களுக்கு ஏதாவது அனுபவம் இருக்குமானால் எழுதி அனுப்பினால் பரிசீலிக்கச் சொல்லலாம்.

Iron deposits in Tiruvannamalai area

* 515.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any team of experts from Japan has undertaken a survey of the iron potential in Tiruvannamalai area in North Arcot district; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1972-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் திருவண்ணாமலை இரும்புத் தாதுக்களைப் பூர்வாங்க ஆய்வு மேற்கொள்ள ஜப்பானைச் சேர்ந்த மாருபேனி நிறுவனத்தார் (Marubeni Corporation) சில வல்லுநர்கள் கொண்ட குழு ஒன்றை அனுப்பிவைத்தது. அக்குழு திருவண்ணாமலைப் பகுதிகளில் கிடைக்கும் இரும்புத் தாது காந்த முறையில் பிரிக்கப்படுவதற்கு ஏற்றதென்று அறிவித்தது. அவர்கள் கோரிக்கைக்கிணங்க மேற்கொண்டு சோதனைகள் நடத்த இரும்புத் தாதுவின் மாதிரிப்படிவங்கள் மாருபேனி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அங்கே கிடைக்கக்கூடிய இரும்பிலிருந்து அந்தப் பகுதியில் ஒரு சிறிய ஸ்டீல் பாக்டரி அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தப் பகுதியில் 140 மில்லியன் டன் 33·35 இரும்புத் தாது எச். வி. கண்டண்ட் உள்ள இரும்புத் தாது கிடைக்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதை உபயோகித்து ஒரு மினி ஸ்டீல் பிளாண்ட் ஆரம்பிக்கலாம் என்ற எண்ணம் அரசுக்கு உள்ளது. இன்வஸ்டிகேஷன் முடிவு தெரிந்ததற்குப் பின்னால்தான் மத்திய அரசுடன் பேச்சு வார்த்தை தொடரவேண்டும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ஜப்பானியக் குழு வந்து திருவண்ணாமலை, போளூர் போன்ற பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போனதற்குப் பின்னாலே அந்தப் பகுதி மக்கள் ஒரு மினி ஸ்டீல் பிளாண்ட் அங்கே வரப்போகிறது என்ற ஆர்வத்தோடு இருக்கிறார்கள். அந்த முடிவு வருவதற்குள்ளாக மத்திய அரசோடு பேச்சு வார்த்தை மேற்கொண்டு விரைவாக அதைக் கொண்டு வர அரசு முயற்சியை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சேலத்திலே கிடைத்ததும் இதே போன்ற இரும்புதான். 140 ஆண்டுகால முயற்சியின் விளைவாக அது வந்திருக்கிறது. இந்தத் திருவண்ணாமலை இரும்பு இப்போது தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது இறுதி வடிவம் காணு

வதற்கு முன்னாலே மாநில அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து இருக்கிறது. நிபுணர்கள் ஆராய்வதற்காக அந்த இடத்தில் டிரில்லிங் ஆபரேஷன் செய்யப்பட்டு, அங்கே எடுக்கப்பட்ட இரும்புத் தாது சேலம் இரும்புத்தாது போல் இருக்கிறது என்று அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். அந்த நிபுணர்களின் அறிக்கையை மாநில அரசு தற்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரத்தில் வந்துவிடும் போல் இருக்கிறது. அந்த ஊர் அமைச்சரே வந்து விட்டார் பதில் சொல்வதற்கு.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Harur taluk in Dharmapuri district is very close to Tiruvannamalai and it forms a geographical unit. May I know from the Hon. Minister whether the experts have investigated that area also ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரூர் வட்டத்தைப்பற்றி என்னிடத்தில் குறிப்பு இல்லை. தமிழ்நாடு பூராவும் யு. என். டி. பி. திட்டத்தில் சர்வே செய்யப்பட்டதில் திருவண்ணாமலையில் உள்ள இரும்புத் தாதுதான் (Economically viable expolitation) என்ற முறையில் வாய்ப்பு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஜப்பான் நிபுணர்கள் இங்கே கண்டுபிடித்துள்ள இரும்புத் தாதுவைப பயன்படுத்த மினி ப்ளாண்ட் ஏற்படுத்துவது முன் பின்னாக இருந்தாலும் உடனடியாக அந்த இரும்புத் தாதுக்களை வெட்டி எடுக்கவாவது நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இங்கே வெட்டி எடுக்கப்படுகிற இரும்புத் தாதுவைப் பயன்படுத்த இங்கேயே தொழிற்சாலை வரவேண்டுமென்பது கொள்கை. அந்த தொழிற்சாலை உருவான பிறகுதான் இரும்பு தாதுவை வெளியில் எடுக்க முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இரும்பு தாதுப் பொருள் பரிசோதனைக்கு நிபுணர்களுக்கு அனுப்பியிருப்பதாகக் கூறினார்கள். எப்போது அனுப்பப்பட்டிருக்கிறது? அவர்களது முடிவு எப்போது கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த எந்தத் தேதி என்கிற விவரம் என்னிடத்தில் இப்போது இல்லை. 1972 இல் தொடர்ந்து நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் மூலம் டிரில்லிங் ஆப்பரேஷன் மூலம் இந்த தாதுப்பொருள் இருப்பது தெளிவாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சில மூலப் பொருள்கள் மற்ற மாநிலங்களில் இருந்து நமக்கு வருகிறது. அதேபோல வேறு இடத்தில் இருக்கக்கூடிய உருக்குத் தொழிற்சாலைக்கு நாம் இங்கே இரும்பு தாதுப் பொருளை வெட்டி எடுக்கத் தொடங்கினால் அனுப்பி வைக்கலாம் அல்லவா? ஆகவே, அவற்றை வெட்டி எடுக்க அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வட மாநிலத்தில் நிறைய ஹாமடைட் ஓர் கிடைப்பதனால், நம் மாநிலத்தில் கிடைக்கிற மாக்னடைட் ஓர் பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள்.

குளுகோஸ் தொழிற்சாலை

*516 வினா—திரு. என். கிட்டப்பா :
திரு. கி. செயராமன் : } மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளுகோஸ் தொழிற்சாலையொன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. நா. வீராசாமி : குளுகோஸ் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்றால்கூட மத்திய அரசின் அனுமதியைப் பெற்றே துவங்க வேண்டும் என்கிற தன்மை இருக்கிறது. இன்றைக்கு மாநிலத்தில் உள்ள ஆஸ்பத்திரிகள், குழந்தைகள் ஆகியவர்களுக்கு மலிவான விலையில் குளுகோஸ் கிடைக்க வசதியாக மத்திய அரசிடம் அனுமதி பெற்று, மாநில அரசே அங்கங்கே இண்டஸ்ட்ரியை ஏற்படுத்த தொழிற்சாலை வைக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது உடுமலைப்பேட்டையில் ஒன்றும், சென்னையில் ஒன்றும் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உடுமலைப்பேட்டையில் ஒன்று நடக்கிறது.

திரு. என். கிட்டப்பா : இனிமேலாவது பொதுத் துறையில் இல்லாவிட்டாலும், தனியார் துறையில், அல்லது தனியார்—அரசு கூட்டுத்துறையில் துவங்க ஊக்கமளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் ஏற்கெனவே நாள் ஒன்றுக்கு 50 டன் தயாரிக்கிற ஒரு தொழிற்சாலையும், ஆண்டு ஒன்றுக்கு 1,500 டன் தயாரிக்கிற ஒரு தொழிற்சாலையும் இரண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன்.

திரு. வி. பழனிவேலு : இது குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் மிகவும் தேவையாக இருப்பதாலும் சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு நிறைய உற்பத்தி செய்யப்படுவதாலும், அதிலிருந்து கிடைக்கும் ஸ்டார்ச்சு தரமுள்ளதென கண்டுபிடிக்கப்பட்டதால் க்ளுகோஸ் பாக்டரியை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

[1973 மார்ச் 26

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இன்னும் அதிகமான அளவில் பாக்டரியை ஏற்படுத்தினால் நம் வேதைக்கு மேலேயே போய்விடும் என்கிற நிலை இருக்கிறது. ஆனால் சேலம் மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் கூட்டுறவுத் துறையில் டாபியோக்கோவை கொண்டு அங்கே தயாரிக்க ஒரு திட்டம் கொடுத்திருக்கிறார். அதைப் பரிசீலித்து வருகிறோம்.

திரு. ஆ. பரந்தாமன்: தமிழ்நாட்டில் அதிகமான மருத்துவ மனைகள் இருப்பதனாலே இங்கே அதிக அளவில் க்ளூகோஸ் தேவைப்படுவதனால் மேலும் பல தொழிற்சாலைகளை நிறுவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதுதான் அதற்கு விளக்கம் தந்தேன்.

Technological University.

* 506 Q.—THIRU N. K. PALANISWAMY, THIRU K. A. WAHAB, THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is any proposal to start a Technological University in this State ; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: மொத்தச் செலவு என்ன ஆகும்? மத்திய அரசின் பங்கு என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதற்கு மத்திய அரசின் ஒப்புதலும், பல்கலைக் கழகத்தின் ஒப்புதலும் தேவை. அது கிடைத்தால் இந்தப் பல்கலைக் கழகத்தின் கட்டிடங்கள், ஆய்வுக்கூடங்கள், நூல் நிலையங்கள் ஆகியவற்றுக்கு பல்கலைக்கழக மானியக் குழு 50 சதவீதம் உதவி அளிக்கும். முதலில் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU N. DENNIS—May I know the time when this University will be started?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மத்திய அரசின் அனுமதி கிடைத்துவிட்டால் வருகிற ஆண்டில் இருந்தே தொடங்கலாம்.

திரு. நா. வீராசாமி: ஒரு நாடு தொழில் வளம் பெருக இதுபோன்ற டெக்னலாஜிகல் யுனிவர்சிடி அமைக்கப்படுவது மிகவும் அவசியமாகும். இது பற்றி நமது அரசு மத்திய அரசாங்கத்திற்கு எப்போது எழுதிற்று ?

1973 மார்ச் 26]

ஏன் காலதாமதம் ஆகிறது? உடனடியாக இந்த ஆண்டிலேயே அமைக்கப்பட நமது அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது பற்றிய செயற்குறிப்பு இரண்டு மூன்று ஆண்டுகளாகவே மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு நிலைக்குழு, துணைக்குழு ஒன்றை இதுபற்றிப் பரிசீலிக்க இங்கே அனுப்பிவைத்தார்கள். துணைக்குழுவினர் இங்கேயுள்ள அதிகாரிகளுடன் கலந்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இதற்காக நாம் ஒரு சட்ட முன்வடிவைக்கூடத் தயாரித்து வைத்திருக்கிறோம். அவர்கள் அனுமதி கிடைத்தவுடன் இது கொண்டுவரப்பட்டு அமைக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி: மத்திய சர்க்காரின் கொள்கை தங்களது அதிகார வரம்பை விரிவுபடுத்துவதாகவே இருக்கிறது. இதை உடனடியாக இங்கே அமைக்கவேண்டும் என்று நமது அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைத்தான் சொன்னேன். 3 ஆண்டு காலமாக வற்புறுத்தி வருகிறோம். மேலும் வற்புறுத்துவோம்.

திரு. எம். தேவராசன்: தொழில் துறையில் மிகவும் முன்னேறியுள்ள கோவை மாவட்டத்தில் இந்தப் பல்கலைக்கழகத்தை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதற்கான கட்டிடத்திற்கு மட்டும் 7 லட்சம் செலவாகும். சென்னையில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகம் பெரிய அளவில் இருக்கிறது. பாலிடெக்னிக் காம்பசும் இருக்கிறது. கிண்டி பொறியியல் கல்லூரியில் 800 ஏக்கர் சொச்சம் நிலம் இருக்கிறது. கட்டிடம், இடம் ஆகியவற்றுக்கு அதிகச் செலவு இல்லாமல் இந்தப் பல்கலைக்கழகம் அமையவேண்டுமென்றால் இன்றைக்குச் சென்னையில் இது அமைவதுதான் பொருத்தமாக இருக்கும்.

திரு. ஆ. பரந்தாமன்: இதுபோன்ற தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தை ஏற்படுத்துவது வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கக் கூடப் பயன்படும். இந்தச் சிறப்புத் திட்டத்திற்கு மத்திய அரசும் மானியம் வழங்க நமது அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைத்துவிடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இன்றைக்கு செனட் அவையில் பன்னிரண்டு, பதிமூன்று பேர்கள் இருக்கிற இடத்தில் தொழில்நுட்பப்பிரிவுக்கு ஒருவர்தான் இருக்கிறார். தொழில் நுட்பப்பிரிவுக்குத் தனியான பல்கலைக் கழகம் என்றே அமைந்தால் அவர்களே முழு அளவில் இருந்து நல்ல முறையில் தொழில் கல்வி வளர்ச்சிபெற உதவியாக இருக்கும். மானியக் குழுவின் உதவி சிலபல

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

Thiru N. DENNIS : May I know whether the Government would set up a Committee to examine the taxable items of local bodies ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி மன்றத்தினுடைய நிதி நிலையைப் பொறுத்த மட்டில் சீராக இல்லாமல் இருக்கிற காரணத்தால், அதற்கென்று ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு ஆராய்ந்து அரசுக்கு ஒரு அறிக்கையை அனுப்பியிருக்கிறது. அந்தக் குழு அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் சொத்து வரியைப் பொறுத்து, சில பரிந்துரைகளைத் தெரிவித்திருக்கிறது. மேற்கூறிய பரிந்துரைகள் எல்லாம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் தற்பொழுது நகராட்சியிலுள்ள வீடுகளுக்கு வரி விதிக்கப்படுகிறது என்பதையும் ஒவ்வொரு நகராட்சியிலேயும் ஒவ்வொரு விதமாக வரி விதிக்கப் படுவதை நீக்கும் பொருட்டு, அதை ஒருமுகப்படுத்தும் பொருட்டு, அரசு மேற்கொள்ள இருக்கிற நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு நகராட்சியும் ஒவ்வொரு தன்மையில், ஒவ்வொரு விதத்தில் வரி விதிக்க முடியாது. ஆனால், விதிப்பதை, ஒவ்வொரு அளவிலே விதிப்பார்கள். 10 சதவிகிதம், 15 சதவிகிதம், 20 சதவிகிதம், 25 சதவிகிதம், 30 சதவிகிதம் என்று வேண்டுமானால் வரி விதிக்க முற்படலாம். சென்னை மாநகராட்சி சட்டம் 1919, தமிழ் நாட்டு நகராட்சிகள் சட்டம் 1920, மதுரை மாநகராட்சி சட்டம் 1971, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958 ஆகியவைகளில் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி வரி வசூலிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம், ஆராய்ந்து கூறுவதற்குத்தான், நான் மானியக் கோரிக்கையின்போது எடுத்துச் சொன்னது போல், அதற்கென்று தனியாக ஒரு குழு அமைக்க அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் குழு நிதி வசதிகளை எப்படிப் பெருக்கலாம், வருவாயைப் பெருக்க என்ன வழிமுறைகளைக் காணலாம், வரி விதிப்பு முறைகளை எப்படிச் சீர்திருத்தலாம் என்பதற்கு எல்லாம் பரிந்துரைகளைச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Thiru K. M. SUBRAMANIAM: Will the recommendations of the High Power Committee be placed on the Table of this House ? Will the Members be permitted to discuss that subject because it is very important,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிற காரணத்தால், அந்தப் பரிசீலனைகள் முடித்தபிறகு, அவர் கூறியது பற்றி பரிசீலனை செய்யலாம்.

புலவர் சி. பழனிச்சாமி : அரசாங்க ஊழியர்களுக்கு ஊதியம் உயர்த்தப்படுகின்ற பொழுதெல்லாம், நகராட்சிகள், ஊராட்சிகள், தங்கள் பணியாளர்களது ஊதியத்தை உயர்த்தி, அந்தச் செலவையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால், ஊராட்சிகளும், நகராட்சிகளும் புது வரிகள் விதிக்கின்றன. ஆகவே, ஊதியம் உயர்த்துகின்ற தொகையை, அரசாங்கமே நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் மானியமாகக் கொடுத்து உதவ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இல்லாவிட்டால், அரசாங்கம் வேறு வகையிலே வரி விதிக்க வேண்டிவரும். அரசாங்கத்திற்கு நிதி வசதி வேண்டுமென்றாலும் வரி விதித்துத்தான் ஆகவேண்டும். பேரூராட்சிகள், ஊராட்சிகள் நிதி வசதியைப் பெறவேண்டுமானாலும் வரி விதித்துத்தான் ஆகவேண்டும். படிகள், அகவிலைப்படிகள் இவற்றை ஏற்றும்போது, அரசாங்கம் ஓரளவிற்கு பளுவை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், வளர்ச்சித் திட்டங்களை ஏற்றுக் கொள்ளும் முறையில், தங்களுடைய நிதி வசதிகளைப் பெருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதை எப்படிச் சீர்திருத்தலாம் என்பதை ஆராய்வதற்காகத்தான் ஒரு குழு அமைக்கின்ற யோசனையை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ் நாட்டில் சென்னை மாநகரத்தில், ரூ. 40-க்குக் குறைவாக வருமானம் இருக்கிற வீடுகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது உண்மையென்றால், அதன் மூலம் பலன் பெற்றவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு யோசனையை மாநகராட்சி மன்றம் அரசுக்கு தெரிவித்திருக்கிறது. அரசு எந்த முடிவுக்கும் வரவில்லை. அரசு பரிசீலித்த பிறகுதான் முடிவு எடுக்கும்.

திரு. முனு ஆதி : துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்குப் பலமுனைகளிலே வரிகள் வந்தாலும், இந்த வீட்டு வரியைப் பொறுத்த அளவில், $7\frac{1}{2}$ சதவிகிதத்திலிருந்து $32\frac{1}{2}$ சதவிகிதம் வரை வரி விதிக்கிறார்கள். அதைக் கட்டுப்படுத்துகிற அளவில், அந்த அந்த நிலைமைகளுக்கேற்ப, நகராட்சிகளுடைய வருவாய்க்கேற்ப வரி விதிக்க, மாநில நகராட்சிகள் இயக்குநரிடம் இந்த அளவுக்குத்தான் வரி விதிக்கலாம் என்று அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது அந்த விதிமுறைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தந்த நகராட்சி மன்றங்கள் ஆங்காங்கு இருக்கிற நிலைமைகளை உத்தேசித்து அந்த சதவிகிதத்தை நிர்ணயித்துக்கொள்ள வழிவகைகள் இருக்கின்றன.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, உதகை போன்ற நகராட்சிகள் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள யாத்திரை வரி விதிக்க அரசாங்கம் அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனித்தனியாக, அந்தந்த நகராட்சிகளுடைய கோரிக்கைகளை கவனித்து முடிவு செய்யவேண்டும்.

திரு. மா.வே. நாராயணசாமி : தலைவர் அவர்களே, நகரமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காலி நிலங்கள் இருக்கின்றன. அவற்றின் மீது, வி.எஸ்.டி., (Vacant site tax) என்பதாக, 1¼ சதவிகிதம் வரையிலேதான் தற்பொழுதுள்ள சட்டவிதிமுறைகளின்படி வசூலிக்க அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதை அதிகரிக்கக் கூடிய அளவிலே அரசு ஏற்பாடு செய்யுமா ? காரணம், நகராட்சிகள் எல்லைக்குட்பட்ட காலி நிலங்கள் விலை, நாளாக நாளாகக் கூடிக்கொண்டே போகிறது. ஆகவே, வரியினுடைய அளவையும் அதிகமாக ஆக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் எந்த அளவுக்கு நிறைவேற்றமுடியும் என்பதைப்பற்றி சொல்லலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, தற்போது புதிய நகராட்சிகளை தோற்றுவிப்பதற்கு பல விதிமுறைகள் வகுக்கப்படுகின்றன. அதே நேரத்திலே போதுமான நிதி வசதி இல்லாத நகராட்சிகளை பேரூராட்சிகளாக மாற்றுவதற்கு விதிமுறைகள் இல்லையென்று சொல்லுகிறார்கள். அதையும் பரிசீலிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களாக அப்படி விரும்பி தீர்மானங்கள் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பினால் இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து மாற்றுவதைப் பற்றிப் பரிசீலிக்கலாம். அதற்கு அவர்களே ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்ப வேண்டும்.

Dr. H.V. HANDE : Is it a fact, Sir, that a portion of the Urban Land Tax is going to be given back to the Corporation, according to the present revision ? If so, whether the Government is aware of the fact that it is not spent for the specific purpose for which it was allotted and the same has been spent for other purposes ? What is the control the

Government has to see that the amount is spent for the purpose for which it was allotted ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

ஊராட்சிகளை பேரூராட்சிகளாக்கல்.

* 509 வினா.—திரு. டி.வி. சம்பத் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஐயாயிரம் மக்கட் தொகையுள்ள திருவெண்காடு, பெருந்தோட்டம், செம்பனார்கோயில் ஆகிய ஊராட்சி மன்றங்களை பேரூராட்சி மன்றங்களாக மாற்றக் கோரி விண்ணப்பம் ஏதேனும் அரசிற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) : திருவெண்காடு ஊராட்சி தனது 26—10—1972-ந்தேதிய 5-வது எண்ணுள்ள தீர்மானத்தில் அதனை பேரூராட்சியாக மாற்ற வேண்டுமெனக் கோரியுள்ளது. இதுபற்றிய பொருள் பரிசீலனையில் உள்ளது. மற்ற இரண்டு ஊராட்சிகளிடமிருந்து பேரூராட்சியாக மாற்ற வேண்டுமென கோரிக்கை ஏதும் அரசிற்கு வரவில்லை.

திரு. எஸ். கணேசன் : தலைவர் அவர்களே, செம்பனார்கோயில், பரசலூர் ஆகிய இரண்டு ஊராட்சிகளையும் ஒன்றாக இணைத்து பேரூராட்சியாக்க வேண்டுமென்று 3 ஆண்டுகளுக்கு முன்பே அரசுக்கு ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. இரண்டு ஊராட்சிகளையும் ஒன்றாக இணைப்பதின் காரணமாக ஒரு பகுதியைச் சேர்ந்த தலைவர் பேரூராட்சித் தலைவராக வரமுடியாது என்ற எண்ணத்தினால் அவரும் அவரிடம் செல்வாக்கு உள்ளவர்களும் அப்படி ஒன்றாக ஆக்கக்கூடாது என்று எண்ணுகிறார்கள். அதைப் பொருட்படுத்தாமல் இரண்டையும் ஒன்றாக இணைத்து ஒரு பேரூராட்சியாக ஆக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லா சூழ்நிலைகளையும் ஆராய்ந்துதான் முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். இரண்டு ஊராட்சிகளை ஒன்றாக இணைத்து பேரூராட்சியாக்குவதற்கு அங்குள்ளவர்கள் ஒப்புதல் அளிக்கிறார்களா என்பதை அறியவேண்டியிருக்கிறது. அதை பேரூராட்சியாக்குவதற்கான சூழ்நிலையைப் பெற்றிருக்கிறதா என்பதையும் ஆராயவேண்டியிருக்கிறது. ஆனால் இந்த ஊராட்சிகளிடமிருந்து அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. திருவெண்காடுபற்றித்தான் வந்திருக்கிறது.

திரு. கு. காமாட்சி : பேரூராட்சியாக்குவதற்கு எல்லாவிதமான தகுதிகள் இருந்தாலுங்கூட சில இடங்களிலே சில ஊராட்சித் தலைவர்கள் தங்களுடைய அதிகாரம் நிர்வாக அதிகாரியிடம் போய்விடுமே என்ற எண்ணத்தால் அதற்குத் தடையாக இருந்து வருகிறார்களே, அதைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சித் தலைவர்கள் தடையாக இருந்தாலும் உறுப்பினர்கள் எல்லாம் ஏகோபித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால் அது அந்த மன்றத்தினுடைய ஏகோபித்த எண்ணமாக அமையும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திருவெண்காடு ஊராட்சியை பேரூராட்சியாக மாற்றுவதற்கு அரசு எப்பொழுது நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே அதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது. திருவெண்காட்டில் 1971-ஆம் ஆண்டு, சென்ஸஸ் கணக்குப்படி 5,562 மக்கள் இருக்கிறார்கள் என்றும், சராசரி வருமானம் 34 ஆயிரம் ரூபாய் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்து கிராம வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கருத்து ஆகியவை கிடைத்த பிறகுதான் முடிவு செய்யவேண்டும். ஆகவேதான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, பேரூராட்சியாக்குவதற்கு 5 ஆயிரம் மக்கள் தொகை தேவை, தீர்மானம் தேவை. இன்னும் என்ன என்ன அடிப்படைகள் இருந்தால் பேரூராட்சியாக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 5 ஆயிரம் மக்களுக்கு மேல் இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் 10 ஆயிரத்துக்குக் குறையாமல் மேலே இருக்கவேண்டும். மேலும் பேரூராட்சியாக அமைப்பதற்கான சூழ்நிலைகள்—மற்றவைகள்—இருக்க வேண்டும். பேரூராட்சி என்றால் குறைந்தது நிர்வாகச் செலவு 21 ஆயிரம் ஆகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. ஆகவே 10 ஆயிரம் ரூபாய் வருமானம் இருக்கவேண்டுமென்று சொன்னால் 21 ஆயிரம் ரூபாய் செலவு செய்யமுடியாது. ஆகவே 50 ஆயிரம் 40 ஆயிரத்துக்கு மேல் வருமானம் வந்தால்தான் நிர்வாகச் செலவு முதலியவற்றை ஈடுகட்டி மற்ற வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்க முடியும். இப்படிப் பல்வேறு சூழ்நிலைகளை ஆராய்ந்ததற்குப் பிறகுதான் முடிவு எடுக்கப்படுகிறது.

Trawler Building Project.

*510 Q—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up a Public Limited Company for manufacturing trawlers at Mandapam in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மண்டபத்திலுள்ள, கப்பல் பழுது பார்க்கும் தளம், பணிக்களரி, சரிவுப்பாதை வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு பொதுத் துறையின் கீழாயினும், கூட்டுத் துறையின் கீழாயினும் இழுவைப்படகு கட்டும் தளம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் இவ்விதப் படகுகள் எத்தனை தயாரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ? இதற்காக ஃபாரின் கொலாப்ரேஷன் ஏதாவது உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வெளிநாட்டிலிருந்து 3 இழுவைப் படகுகள் வாங்குவது, மண்டபத்திலே 3 இழுவைப் படகுகள் கட்டுவது, மீனளத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவது, அதன் மூலமாக கூன் இறால்களைப் பிடித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கு 2 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கும்முடிப்பூண்டியில் குடும்ப-சிறார் நலத் திட்டம்.

*511 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் குடும்ப-சிறார் நலத் திட்டம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த குடும்ப-சிறார் நலத் திட்டம் தமிழ் நாட்டிலே வேறு எந்த எந்த ஒன்றியங்களிலே நடை பெற்றுக்கொண்டிருக்கிறது ? இது மத்திய அரசின் திட்டம் என்றால் பிற்பட்ட பகுதியாகிய கும்முடிப்பூண்டியிலே இதைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இது மத்திய அரசாங்கத்தினால் அவர்கள் சமூக நல வாரியத்தினால் துவங்கப்படுகிறது. 5 ஆண்டுகளுக்குப் பிறகு மாநில அரசிடம் ஒப்படைக்கப்படுகிறது. அவர்கள் ஒப்புதல் பெற்று தென் ஆற்காடு மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடியிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் வில்லிவாக்கத்திலும், மதுரை மாவட்டத்தில் ஆத்தூர் என்ற இடத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெரிய நாயக்கன்பாளையத்திலும் ஆகிய 4 நிலையங்கள் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்திலே அறந்தாங்கியிலும், சேலம் மாவட்டத்திலே ஏர்க்காட்டிலும் அப்படிப்பட்ட நிலையங்கள் ஏற்படுத்த மத்திய சமூக நல வாரியத்திற்கு மாநில சமூகநல வாரியம் எழுதி இருக்கிறது. அதற்கு இன்னும் பதில் தரவில்லை. இதற்கு மேலே கும்முடிப்பூண்டியில் துவக்குவதற்கு செயற்குறிப்பு இல்லை. மத்திய வாரியம் ஒப்புக்கொள்ளுமா என்பதையும் இப்பொழுது சொல்ல முடியாது.

தஞ்சையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி.

* 512 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தஞ்சையில் உள்ள சிறுவர்களை திருத்தும் சிறைச்சாலையில் தற்போது எத்தனை பேர் இருக்கிறார்கள்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: 3—3—1973-தேதி 455 (நானூற்று ஐம்பத்து ஐந்து) பேர் இருந்தனர்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தஞ்சையிலே இப்படிப்பட்ட சிறுவர்களைத் திருத்தும் சிறைச்சாலையிலே சிறுவர்களைத் திருத்துவதற்கு எந்த எந்த முயற்சிகள் எந்த எந்த அடிப்படையிலே மேற்கொள்ளப்படுகின்றன? அவர்கள் சிறைச்சாலையிலிருந்து வெறியேறியதற்குப் பிறகு வாழ்க்கையிலே செம்மையுற நடப்பதற்கு அரசு என்ன என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இப்பொழுது சிறைச்சாலை என்று அது இல்லை. 1944-ஆம் ஆண்டிற்கு முன்னால் ஸ்பெஷல் ஜெயில் என்று இருந்தது. இப்பொழுது அவை சர்டிபைட் ஸ்கூல்ஸ் என்றும் அப்ரூவ்ட் ஸ்கூல்ஸ் என்றும் சொல்லப்படுகிறது. எனவே அது ஜெயில் அல்ல. கல்வி, கைத்தொழில் அவர்களுக்குச் சொல்லித் தரப்படுகிறது. 1-வது முதல் 8-வது வகுப்பு வரையில் பள்ளி இறுதி வகுப்பு வரையில் படிப்பதற்கும், வாத்தியம், கொத்து வேலை, தச்சு வேலை, நெசவு வேலை, தையல் வேலை, தோட்ட வேலை போன்ற வேலைகள், உடற்பயிற்சி, மன போதனை போன்றவைகளும் முறையாகச் சொல்லித் தரப்படுகின்றன. படித்து அவர்கள் வீட்டிற்குச் சென்றதற்குப் பிறகு புரபேஷனரி ஆபீஸர்கள் அவர்களோடு தொடர்புகொண்டு வாழ்வில் அவர்கள் நல்ல விதமாக வாழ்வதற்கான எல்லாவித முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த சீர்திருத்தப் பள்ளியிலே உயர்நிலைப்பள்ளி வகுப்பு வரை சொல்லித் தரப்படுகிறது என்று சொன்னார்கள். இதுவரையில் அங்கே படித்தவர்களில் யாராவது அரசாங்க உத்தியோகத்திற்கு வருவதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறதா? அப்படியில்லையென்றால் அங்கு படித்து வருகிறவர்களுக்கு அப்படிப்பட்ட வேலைகள் கிடைக்கச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தஞ்சையிலே இருக்கிற பள்ளியில் உள்ளதுபற்றி குறிப்பாக இங்கே கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. பொதுவாக எத்தனை பேர்கள் பயிற்சி பெற்றார்கள். அரசு வேலையில் இருக்கிறார்கள் என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. நா. வீராசாமி: இப்படிப்பட்ட அப்ரூவ்டு ஸ்கூலில் படித்தவர்கள் பொது மக்கள் மதிக்கக்கூடிய அளவுக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக, சட்டப் பேரவைத் தலைவர்களாக யாராவது வந்திருக்கிறார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எந்த அடிப்படையில் கேட்கிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலை வைத்துக் கொண்டு கேட்கிறார் என்று கருதுகிறேன். பாளையங்கோட்டையில் நானும் இருந்தது உண்மை. பார்ஸ்டால் ஸ்கூலில் அல்ல.

திரு. நா. வீராசாமி: கேள்வியைப் படித்துப் பாருங்கள். அப்ரூவ்டு ஸ்கூல்களில் இருந்து மக்கள் மதிக்கக்கூடிய அளவுக்கு பெரிய மனிதர்கள் வந்திருக்கிறார்களா? நல்ல பொறுப்பு வகிக்கக்கூடிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக, தங்களைப் போன்ற சட்டப் பேரவைத் தலைவர்களாக வரக்கூடிய அளவுக்கு பயிற்சி அளிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அப்ரூவ்டு ஸ்கூலில் படித்தவர்கள் பிறகு தங்கள் வாழ்வில் அனைவரையும் போல் உயர்ந்த வாழ்வு வாழ வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் ஜெயில் என்று இருப்பதை மாற்றி ஸ்கூல் என்று போட்டு அவர்களை நல்ல முறையில் உயர்த்த முடியும் என்று நடத்தப்படுகின்றது. யார் யார் அந்தப் பள்ளியில் படித்துவிட்டு பிறகு வாழ்க்கையில் உயர்ந்திருக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறியிருப்பது போல் இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு வீராசாமி அவர்கள் கேள்வி தவறான எண்ணத்தை உண்டாக்கிவிடும் என்று கருதுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாளையங்கோட்டை சிறையில் இருந்திருக்கிறார்கள். பார்ஸ்டால் ஸ்கூலில் அல்ல. அவர்கள் இருந்த இடத்தில் என்னையும் வைத்திருந்தார்கள். தனிச் சிறையில் பாதுகாப்புக் கைதிகளாகத்தான் வைக்கப்பட்டிருந்தோம். அமைச்சர் அவர்கள் பதில் இன்னும் சந்தேகத்தை அதிகமாக்குகிறது.

[1973 மார்ச் 26

திரு. எஸ். கணேசன் : இந்த சீர்திருத்தப் பள்ளிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு உயருகிறதா ? எந்த அடிப்படையில் எவ்வளவு நாட்களுக்கு இந்தச் சிறுவர்கள் வைக்கப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 18 வயதுக்குக் கீழ் இருக்கும் சிறுவர்கள் சில குற்றங்களைச் செய்வார்களேயானால் வழக்கு மன்றத்தில் போலீசாரால் அவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டு குற்றங்களுக்கு எற்ற வகையில் தண்டனை கொடுக்கப்படுகிறது. அது மாதக் கணக்கில் இருக்கும், ஆண்டுக் கணக்கிலும் இருக்கும். இந்த மாதிரிப் பிள்ளைகள் குற்றங்கள் செய்யும் எண்ணிக்கைக்குத் தக்கபடி பள்ளியின் எண்ணிக்கை அப்போதைக்கப்போது மாறும்.

THIRUMATHI ALDA M. FOWLER : Sir, will the Hon. Minister be pleased to tell us whether there is any provision made for receiving young men who are not stable mentally or who are not able to go to a mental asylum or who are not well enough to lead a normal life or earn their own living, into the approved school or any other institutions ?

THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU : There are many reception homes for children. Only those children who are punished in the courts are brought to these schools. There is no proposal to take mentally disordered children and to send them to any asylum.

திரு. அ. தேவேந்திரன் : இந்தப் பள்ளியில் பயிலுகின்ற குற்றம் புரிந்த மாணவர்கள் காவலர்களுக்குத் தெரியாமல் ஓடி வந்து விடுகிறார்கள். அதற்குப் பின்னால் பிடிக்கப்பட்டு அவர்கள் திருப்பியும் அனுப்பப்படுகிறார்கள். புதிதாகத் தவறு செய்து அங்கு போய்ச் சேருகிற மாணவர்களை இத்தகைய பழைய மாணவர்கள் கெடுத்து விடுவதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பள்ளிக்கு வந்த பிள்ளைகள் தப்பி ஓடிவிடுவது பற்றி இதுவரை தகவல் இல்லை. அப்படி இருந்தாலும் இருக்கக்கூடும். பழைய மாணவர்கள் புதிய மாணவர்களைக் கெடுத்து விடுகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. பழைய மாணவர்கள் மனம் திருந்தி வருகிறார்கள். அவர்கள் சாதாரணப் பள்ளியில் வைக்கப்படும் பிள்ளைகளைப் போல்தான் வைக்கப்பட்டிருக்கிறார்களே தவிர, குற்றம் செய்தார்கள் என்ற முறையில் வளர்க்கப்படவில்லை. எனவே, அந்தப் பாகுபாடு இருக்க நியாயம் இல்லை.

திரு. என். ராஜாங்கம் : பள்ளி வயதில் 18 வயதுக்குட்பட்ட மாணவர்களை அங்கு வைக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆண்களுக்கு மட்டுந்தான் அப்படிப்பட்ட பள்ளிகள் இருக்கின்றனவா அல்லது பெண்களுக்கும் இருக்கிறதா ? அப்படி இல்லை என்றால் இனியாவது ஏற்படுத்த அரசு முன்வருமா ?

1973 மார்ச் 26]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பெண்களுக்கும் அப்படிப்பட்ட பள்ளி ஒன்று சென்னையில் கீழ்ப்பாக்கத்தில் இருக்கிறது.

பாசனக்குளங்கள் சீரமைப்பு.

* 517 வினா : திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நடப்பாண்டில் தமிழ்நாட்டில் நீர் பாசனத் திட்டங்களின் கீழ் எத்தனை பாசனக் குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : நடப்பாண்டில் தமிழ்நாட்டில் நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் 2,273 பாசனக்குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றன.

திரு, எஸ். கணேசன் : இதற்காகச் செலவிடப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ? இப்படிச் சீரமைப்புச் செய்வதன் காரணமாக புதிதாக எவ்வளவு விளைநிலங்கள் பயன்பெறும் ?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : தூர் வாருதல், பண்படுத்தல் திட்டம் முழுமையாகவும், பகுதியாகவும் தூர் ஏறிவிட்டதன் காரணமாக கொள் அளவு இழந்துவிட்ட ஏரிகளின் படுகைகளில் தூர் எடுக்கவும், முழு ஏரி மட்டத்தை உயர்த்துவதன் மூலம் இழந்த முழு சேமிப்பு அளவில் ஒரு பகுதியை அல்லது முழு அளவையும் மீட்கவும் இத்திட்டத்தின் கீழ் கருதப்பட்டுள்ளது.

மாவட்ட வாரியான எண்ணிக்கை—தஞ்சாவூர் 55, வட ஆற்காடு 82, மதுரை 282, தென் ஆற்காடு 119, இராமநாதபுரம் 889, திருநெல்வேலி 264, கன்னியாகுமரி 68, திருச்சி 311, சேலம் 9, தர்மபுரி 7, செங்கற்பட்டு 187.

செலவான விவரங்கள் இப்போது இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி : பழனி தொகுதியில் வரதாநதி அணைக் கட்டுத் திட்டத்தின் கீழ் ஐயங்குளத்தில் நீர்ப்பாசனத் திட்டம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஐயன்குளம் பற்றிச் சொன்னார்கள். அதற்கான திட்டம் நடைமுறையில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, what is the usual time taken for improving these tanks ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நெடுஞ்சாலைத் துறையால் செய்யப்படுகிற பணிகள ஐந்தாண்டுக்கு ஒரு முறை நிறைவேற்றப் படுகின்றன. சிறு சிறு திட்டங்கள் அவ்வப்போது நடைபெறுகின்றன. 2 மாதம், 3 மாதம், 15 நாட்களில் கூட காரியங்கள் நடக்கின்றன.

Chembarambakkam tank.

*518—**Thiru R.R. MUNUSWAMY** : Will the Hon. the Minister for Public Works be pleased to state :—

(*a*) whether it is a fact that improvements are being made to the Chembarambakkam tank in Chingleput district ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) செம்பரம்பாக்கம் ஏரியில் பின்வரும் சீரமைப்புகள் செய்யக் கருதப்பட்டுள்ளன :

1. ஏரிக்கரை சீரமைத்தல்—ரூ. 7 லட்சம்.
2. உபரிநீர் வழிந்தோடுவதற்கான ஏற்பாடுகளைச் சீரமைத்தல்—ரூ. 22 இலட்சம்.
3. பங்கீட்டுக் கால்வாய் ஏற்பாடுகளைச் சீரமைத்தல்—ரூ. 30 இலட்சம்.
4. இவ்விடத்தைப் பொழுது போக்கு இடமாகவும் சுற்றுலா நிலைய மாகவும் மாற்றுவதற்காக பொதுவான சீரமைப்புகள்—ரூ. 7 லட்சம்.

முதல் நிலைப் பணிகளுக்கான செலவுக்கு அரசு 1972 நவம்பரில் ஒப்பளிப்பு வழங்கியது.

திரு. ரா. ரா. முனுசாமி : தமிழகத்தில் இருக்கும் பெரிய பெரிய ஏரிகளைச் சீரமைக்கின்றபோது ஏராளமான தொகை தேவைப்படுகிறது. இதற்கு மத்திய சர்க்கார் தனியாக மானியம் தருகிறதா ? இல்லா விட்டால் மதுராந்தகம் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி போன்ற ஏரிகளைச் சீரமைக்க தனியாக நிதி மத்திய அரசிடமிருந்து கேட்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : இந்தத் திட்டங்களைப் பொறுத்தவரை சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட வேலைகளின் கீழ் அனுமதி கொடுக்கப்படுகிறது. இந்தத் திட்டத் திற்காக மத்திய அரசாங்கத்தை எந்த உதவியும் கேட்கவில்லை.

திருமதி ந. ந. அனந்தநாயகி : செம்பரம்பாக்கம் ஏரிக்கரை போக்குவரத்துக்கு முக்கியமான ஒன்று. ரொம்ப நாட்களாக டைவர்ஷன் வழியாகத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அதைச் சீக்கிரமாகப் பழுது பார்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : ஏரிக்கரை சீரமைப்புக் காக 7 லட்சம் ரூபாய் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. டெண்டருக்கு விடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்குப் பிறகு நிச்சய மாக அதிகாரிகள் கவனிப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Breaches of tanks near Mukkudal.

*519—**Thiru S. SANGUMUTHU THEVAR** : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that a number of tanks near Mukkudal in Tirunelveli district were breached in November 1972 due to rains ; and

(*b*) the estimated loss due to these breaches ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) ரூபாய் 41,500.

கொத்தனேரி சீரமைப்பு.

*520 வினா.—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மேட்டூர் தாலுக்கா லக்கம்பட்டி கிராமத்தில் கொத்தனேரி சீரமைப்புக்கான திட்டம் ஏதேனும் அரசுக்கு அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :(அ) ஆம்.

(இ) அரசின் ஆய்வில் உள்ளது.

Inter-State Bus Services.

*488—**Thiru N. DENNIS** : Will the Hon. the Minister for Transport be pleased to state —

(*a*) whether there are proposals under the consideration of the Government to run night service buses between Nagercoil in this State and Trivandrum in Kerala State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ), (இ) : நாகர்கோயில், திருவனந்தபுரம் வழித்தடத்தில் 1973 ஜனவரித் திங்கள் முதல் தேதியிலிருந்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையும் : கேரள மாநிலப் போக்குவரத்துக் கழகமும் முறையே மூன்று இரவு நேரப் பேருந்துப் பிரிவுப் பணிகளை இயக்குகின்றன :

திரு. என். டென்னிஸ் : நாகர்கோவில்—திருவனந்தபுரம் ரூட்டில்
முற்பகல் 10·00 இப்போது பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, அவர்களின் தேவைக்கேற்றவாறு பஸ்கள் இருப்பதாக இல்லை. ஆதலால் அதிக பஸ்களை அந்த ரூட்டில் விடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தேவைப்படுமானால் அதிக பஸ்கள் விடலாம்.

* 489 வினா: திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகைக்கும் பெங்களூருக்கும் இடையே கூடலூர், குண்டல்பேட்டை, நஞ்சன்கூடு, மைசூர், மாண்டியா, வழியாகவும் கூடலூர், குண்டல்பேட்டை, மைசூர், டீனவள்ளி, கனகாபுரம் வழியாகவும் அரசுப் பேருந்துகள் விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அ. & இ : உதகைக்கும் பெங்களூருக்கும் இடையே மைசூர் வழியாக, மாநிலங்களுக்கு இடையிலான புதிய பேருந்துத் தடம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஒன்று பரிசீலனையில் உள்ளது.

திரு. கு. அ. பொம்மன் : நீலகிரி மக்களுக்கு அதிகம் தேவை இருப்பதால் உடனடியாக இந்த பஸ்ஸை விடுவதற்கு மைசூர் அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இந்த வழித்தடம் சம்பந்தமாக சம்மதம் கோரி மைசூர் அரசுக்கு நம் அரசு கடிதம் எழுதியுள்ளது. அதை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். தேவராசன் : சீசன் நெருங்குவதால் பயணிகளின் சௌகரியத்தை முன்னிட்டு உடனடியாக இதை நடத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல யோசனையின்படி விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

THIRU K. S. KOTHANDARAMAIAH : Sir, already there are buses plying between Nilgiri and Mysore and if they are extended upto Sivasamudram and also Bangalore, traffic will increase and Government also will get more income. May I know from the Minister whether that will be expedited ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : It is a fact that by extending the route from Mysore to Bangalore we are likely to get more income. Probably that is one of the reasons for the delay on the part of Mysore Government to agree to the proposal. Anyhow we are having direct talks so that there can be parity for both the States in this route.

திரு ரா. ரா. முனுசாமி : இப்படி பல வழித்தடங்களில் ஓடுகிற பேருந்துகளில் அவை மக்கள் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கின்றன. எந்த எந்த இடங்களில் பயணிகளுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறதோ அந்த அந்த இடங்களில் அவற்றை மாற்றியமைக்க அரசு முன்வருமா ?

(விடை இல்லை.)

சென்னை-சேலம் பேருந்து வழித்தடம்.

* 490 வினா திரு ந. தருமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னைக்கும் சேலத்திற்கும் இடையே திருக்கோயிலூர் வழியாக ஓடிக்கொண்டிருந்த அரசு விரைவுப் பேருந்து கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னதாக நிறுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதனை மீண்டும் இயக்கச் செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) திண்டிவனம், விழுப்புரம், மடப்பட்டு, திருக்கோயிலூர், கள்ளக் குறிச்சி, ஆத்தூர் வழியாகச் செல்லும் சென்னை-சேலம் வழித்தடம், திருக்கோயிலூருக்குச் செல்லாமல், திண்டிவனம், விழுப்புரம், மடப்பட்டு, உளுந்தூர்பேட்டை, கள்ளக் குறிச்சி, சேலம், பவானி, பெருந்துறை, அவினாசி வழியாகச் செல்லும் சென்னை-கோயம்புத்தூர் வழித்தடமாக மாற்றப்பட்டுள்ளது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. அ. ஆறுமுகம் : சென்னையில் இருந்து சேலம் செல்கிற பஸ்கள் இப்போது குறைவாக இருக்கின்றன. ஆகவே பிரயாணிகள் சென்று வருவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அதை சிறிது அதிகப்படுத்தவேண்டிய அளவிற்கு பஸ்களை விடுவதற்கு அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : அரசு யோசிக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : வழித்தடங்களை மாற்றும்போது ஒரு இடத்திற்கு ஒரு வசதியைக் கொடுத்துவிட்டு திடீரென்று அங்கிருந்து எடுப்பது நியாயமா ? திருக்கோயிலூர் வழி போய்க்கொண்டிருப்பதை வேறு வழியில் விடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். The interest of the Public will be affected. ஆகவே, அவர்களுக்கு ஏதாவது ஒரு வாய்ப்பு கொடுத்துவிட்டு மாற்றுகிறீர்களா ? அல்லது இஷ்டப்படி மாற்றிக்கொள்கிறீர்களா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : நீண்ட தூரம் பயணம் செய்கிற பயணிகள் வேண்டுகோள்படிதான் இந்த வழித்தடம் நேராக மாற்றியமைக்கப்பட்டது. திருக்கோயிலூர்—சென்னைக்கு வருவதற்கு விரைவுப் பேருந்தைவிட சாதாரணப் பேருந்து ஒன்றை விடுவதற்கு அரசு பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒற்றிவைப்புத் தீர்மானம்.

எண்ணூர் அனல் மின்நிலையத்தில் ஒரு பிரிவு மூடப்பட்டதுகுறித்து

Mr. DEPUTY SPEAKER : Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, the Hon. Member, Thiru N.K. Palanisamy has given notice of motion for adjournment of the business of the House to discuss a matter of urgent public importance, namely—

'to discuss about the serious situation arising out of the closure of a section of Ennore Thermal Plant and the curtailment of the electricity production consequently'.

இது எப்படி 42வது விதியின்கீழ் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்கீழ் வரும் என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, எண்ணூரில் நிலக்கரிப் பற்றாக்குறை காரணமாக ஒரு செக்ஷன் மூடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இன்னும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைக்குள் மேலும் நிலக்கரி வராவிட்டால் மேலும் மூடப்பட்டு விடும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதே மாதிரி நெய்வேலி தர்மல் ஸ்டேஷனிலும்

இப்போது பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. காரணம், ஏற்கெனவே மூடப்பட்டிருந்த உரத் தொழிற்சாலையை மறுபடியும் ஆரம்பித்து வைத்து நடந்ததன் காரணமாக அதற்கு அதிகப்படி நிலக்கரி தேவைப்படுவதால் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இந்த உரத் தொழிற்சாலையை இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கழித்து ஆரம்பித்திருக்கலாம். இரண்டையும் சேர்த்து வைத்து நடத்துவதன் காரணமாகத்தான் அங்கும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இங்கேயும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. கப்பலில் 18,000 டன் நிலக்கரி வருவதாகச் சொன்னார்கள். போதுமான நிலக்கரி எண்ணூரில் இருப்பதாகச் சொன்னார்கள். ஆந்திராவில் ஏற்பட்ட குழப்பம் காரணமாகப் போதுமான நிலக்கரி நமக்குக் கிடைக்கவில்லை. இப்போது அந்தக் குழப்பமான நிலை நீங்கி சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்தில் போதுமான அளவிற்கு நிலக்கரி கிடைக்கக்கூடிய வாய்ப்பிருப்பதால் தகுந்த நடவடிக்கை எடுக்காததன் காரணமாகத்தான் இந்தஅளவிற்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய மின் உற்பத்தி குறைந்து மேலும் பெரிய அளவில் இங்கு நெருக்கடி நிலைமை வரலாம் என்பதற்காக இந்தச் சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(Thiru K.T.K. THANGAMANI rose.)

Mr. DEPUTY SPEAKER : We are not allowing anybody else to speak other than the hon. Member who has given notice under rule 42. Only the hon. Member who has given notice of the motion has got the right to give his views or clarification or raise questions.

Thiru K.T.K. THANGAMANI : Whenever any hon. Member brings an adjournment motion, we can also explain, i.e., the leader of the group also can supplement, if necessary, not always. That has been the practice..................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; யாருக்கும் அப்படி ஒரு வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று நினைக்கிறேன்.

Thiru K.T.K. THANGAMANI : That will only help the House.

Mr. DEPUTY SPEAKER : After the statement by the Hon. Minister the hon. Member can speak.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, எண்ணூருக்குத் தொடர்ந்து நிலக்கரி எவ்வளவு தரப்படுகிறது, அது எவ்வளவு வருகிறது என்ற பிரச்னை எல்லாம் பல நாட்களாக விவாதிக்கப்பட்டு வருகிறது. இந்த ஒற்றிவைப்புப் பிரேரணை கொண்டுவந்ததன் காரணம் அண்மையில் ஆப்பரேஷனல் எபிஷியன்ஸிக்காக நிறுத்தப்பட்டது பற்றி ஒரு செய்தி வந்ததால் அந்தச் செய்தியின் அடிப்படையில் இந்த ஒற்றி வைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் நிரந்தரமான

நிலக்கரிப் பற்றாக்குறை இருப்பதோடுகூட இடையிலே ஒரு ஸ்டீம் லீக்கேஜ் ஏற்பட்டு இடைக்காலத்தில் எபிஷியன்ட் மெயின்ட்டனஸ்க்காக நிறுத்தி வைக்கப்பட்டு மறுபடியும் அது தொடங்கப்பட்டு விட்டது. இப்படி இந்த ஆப்பரேஷனல் எபிஷியன்ஸிக்காக நிறுத்தப்படுவது சாதாரணம் என்பதோடு இந்த நிலக்கரிப்பற்றாக்குறையும் இந்த எண்ணூர் தர்மல் உற்பத்தியும் எந்த அளவிற்குத் தொடர்புள்ளது என்பதை இங்கு விவரிப்பது பொருத்தமென்று கருதுகிறேன்.

இதுபற்றி நம் மாநில அரசுச்சார்பில் பல்முறை இங்கு விளக்கப் பட்டிருக்கிறது. தர்மல் ஸ்டேஷனில் உள்ள அனல் மின்சார உற்பத்தி இன்று ஏற்பட்டிருக்கிற மின்சார பற்றாக்குறைக்குக் காரணம் அல்ல. நீர் மின்சாரம், நீர் குறைந்த காரணத்தால் உற்பத்தி குறைந்ததுதான் முதல் காரணம். இருந்தாலும் இந்தப் பற்றாக்குறை சமயத்தில் அனல் மின்நிலையங்களில் முழுமையான உற்பத்தி இருந்தால்தான் நாம் திட்டமிட்டபடி மின்சாரம் வழங்க முடியும் என்பது நம்முடைய தொடர்ந்த வாதமாக இருந்து வருகிறது. ஆகவே இப்போது ஏற்பட்டிருக்கிற நெருக்கடிக்காலத்தில் எண்ணூர் அனல் மின் நிலையம், பேஸின்பிரிட்ஜ் அனல் மின் நிலையம், இவற்றில் தொடர்ந்து நிலக்கரி இருந்தாலொழிய போதுமான இருப்பு வைக்கப்பட்டாலொழிய என்றைக்காவது ஒரு நாள் இப்படி இடையூறு அல்லது ஆபத்து எதிர்நோக்கப்படுகிறது என்ற கருத்தையும் வலியுறுத்தி வருகிறோம். ஆனால் இடைக்காலத்தில் ஒரு நாள் மத்திய அமைச்சர் ஒருவர் இங்கு தமிழ் நாட்டுக்கு வந்ததும் சென்னையில் உள்ள அனல் மின் நிலையங்களில் நிலக்கரிப்பற்றாக்குறை இருப்பதாக நான் பத்திரிகையில் படித்தேன். அதற்குப் பின்னாலேதான் கப்பலில் அனுப்பி வைக்க முயற்சித்தேன் என்ற ஒரு கருத்தை வெளியிட்டதாக வந்த செய்தி சில தவறான எண்ணங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அதை மறுக்கும் வண்ணம் நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் எந்த எந்தத் தேதிகளில் நிலக்கரி வேண்டும் இன்னும் அதிகமாக அனுப்ப வேண்டும், உடனடியாக அனுப்ப வேண்டும் என்று தொடர்ந்து பல்வேறு கடிதப் போக்குவரத்துக் கள் மத்திய அரசோடு கொண்டிருந்தோம் என்ற விளக்கத்தை இங்கு தந்தார்கள்.

ஆனால் அந்த விளக்கத்திற்குப் பின்னால் அந்த அமைச்சர் ஒரு கடிதம் நம் முதல் அமைச்சர் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். இந்தக் கடிதத்தைப் பார்க்கும்போது யார் மேல் குற்றம் என்ற ஆராய்ச்சியில் இறங்கி உண்மைகளை, புள்ளிவிவரங்களை மறுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

எங்களைப் பொறுத்து இன்று நாட்டு மக்கள் கேட்பது நிலக்கரி, மின் உற்பத்தி, அந்த அமைச்சர் அவர்கள் சொல்கிற புள்ளி விவரங்களிலுள்ள இடர்பாடுகள், குறைபாடுகள் அல்ல என்பது எங்கள் கருத்து. ஆனால் சொல்லப்பட்டிருப்பது வேடிக்கையாக இருக்கிறது. அந்தக் கடிதத்தின் தொடக்கமே முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் பேசும் போது தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிற மின்சாரப் பசுந்திற்கு அனல் மின் நிலையங்களில் உற்பத்தி குறைந்ததுதான், அதுவும் எண்ணூர் அனல்

மின் நிலையத்திலும், பேஸின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திலும் உற்பத்தி குறைந்ததுதான் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது தவறு என்று கடிதம் தொடங்குகிறது.

அது நம்முடைய கருத்து நியாயம் என்பதை ஒப்புக் கொண்டதாகத் தான் நான் கருதுகிறேன். டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு என்னுடைய கருத்தில் நம்பிக்கையில்லை. இருந்தாலும் கையில் கடிதத்தை வைத்திருக்கிறேன்.

" I have seen a news item in the Hindu, dated March 2, 1973 (copy enclosed). reporting your statement in the Tamil Nadu Assembly that the recent crisis in power generation at the Ennore and Basin Bridge Power stations was the result of the failure of the Singareni Coal Company to supply adequate coal, in spite of this matter having been pursued with the Central Government since May 1972.........,"

இதோடு நிறுத்தவில்லை. அதற்குப் பின்னால் விளக்கம் கொடுக்கிறார்கள். இது தவறு. அப்படிச் சொல்லவில்லை சட்டமன்றத்தில். அது வேறு பிரச்னை. ஹிந்து பத்திரிகையின் கட்டிங் வைத்திருக்கிறார்கள். அதிலும் அப்படிச் சொன்னதாகக் காணப்படவில்லை. நானும் அப்படிச் சொன்னதாகக் கேள்விப்படவில்லை. அப்படி வாதத்தை வைத்துக் கொண்டு எங்களுக்குச் சாதகமாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் நீர் மின் சக்திதான் பிரதானம். நாம் சொன்ன கருத்துத்தான். மொத்த உற்பத்தியில் அனல் மின் சக்தி அதிக முக்கியத்துவம் அல்ல. அது மட்டுமல்ல. அனல் மின் சக்தியைப் பொறுத்த அளவுக்கு இந்த அரசாங்கம் ஏதும் செய்யவில்லை என்று சொன்ன குறைக்கு அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். 1970–71–ல் 211.5 மெகாவாட்டிலிருந்து 1972–73–ல் 337.5 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது என்று சொல்லி, அவர்கள் அத்தோடு நிறுத்தவில்லை. இந்த உற்பத்தியில் எண்ணூர் மின் சக்தி உற்பத்தி சிறிதளவு குறைவு. ஆனாலும் அனல் மின்சக்தி உற்பத்திக் குறைவுதான் மின்சாரத் தட்டுப்பாட்டிற்குக்காரணம் என்பது தவறு என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் எதிர்க்கட்சிகள் கிளப்பிய கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். இதைச் சொல்லிவிட்டு, 1972–ஆம் ஆண்டு அதிக நிலக்கரி வேண்டுமென்று தமிழக மின்சார வாரியம் கோரியுள்ளது. அதை ஒப்புக் கொள்ளுகிறார்கள். அதற்கு ஒரு காரணம் சொல்லுகிறார்கள். இந்த நிலக்கரி தேவை 88,000 டன் 1971–72–ல் வேண்டும் என்று சொன்னது போலவும், அதில் திடீரென்று 8 லட்சம் டன் இப்போது வேண்டுமென்று சொல்வது போலவும் ஒரு குறிப்பைத்தந்திருக்கிறார்கள். எவ்வளவு கேட்டோம் என்கிற புள்ளி விவரங்களைப்பின்னால் தருகிறேன்.

அதைப் போல் இன்னொரு கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மின்சார வாரியம் நிலக்கரி தேவை பற்றி ஒரு நீண்ட கால ஒப்பந்தம் செய்ய மறுத்து விட்டது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

திட்டங்களின் அடிப்படையில் கிடைக்கும். அந்த வகையில் உதவிபெற வாய்ப்பிருக்கிறது.

முற்பகல் 9-30 **திரு. எ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, இப்படி பொறி இயல் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தும்போது, நம்முடைய மாநில அரசால் நடத்தப்படுகின்ற, மாநில அரசுக்கு உட்பட்ட பொறியியல் கல்லூரிகளை இதோடு இணைப்பதோடு மட்டுமல்லாமல், மத்திய அரசால் நடத்தப்படுகின்ற பொறியியல் கல்லூரிகளையும் இந்தப் பல்கலைக் கழகத்துடன் இணைத்து, மாநில அரசின்கீழ் கொண்டு வர அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது தனியாக விவாதிக்கப்படவேண்டிய ஒன்று. மாநில அரசு சார்பாக நடைபெறுகின்ற கல்லூரிகளையும் தனியார் துறையின்கீழ் வருகிற கல்லூரிகளையும் இதன்கீழ் கொண்டுவரவேண்டுமென்று குறிப்பு இருக்கிறது. ரீஜினல் இன்ஜினீயரிங் காலேஜ் மத்திய அரசினுடைய உதவியோடு நடைபெற்று வருகிறது. இன்னும் சில ஆண்டுகளில், அதன் முழுத் தன்மையும் மாநில அரசுக்கு வர இருக்கிறது. அந்த நிலைமையிலேயே அது இந்தப் பல்கலைக்கழகத்தின்கீழ் வராது ஐ.ஐ.டி.-யை பொறுத்த அளவுக்குத் தனி முயற்சிதான் எடுக்கவேண்டும். அதைத்தனியாகப் பரிசீலிக்கவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இம்மாதிரி அக்ரிக்கல்ச்சரல் யூனிவர்சிட்டிகள் பல மாநிலங்களில் இருந்தன. தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்தோம். அதேபோல் டெக்னலஜி யூனிவர்சிட்டி எந்த எந்த மாநிலங்களில் இருக்கிறது? மத்திய அரசு அதுமாதிரி பல்கலைக் கழகம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதன் முழு விவரங்கள் என்னிடத்தில் இல்லை. வட மாநிலங்களில் ஓரிரண்டு இருப்பதாக எனக்குத் தகவல். அண்மையிலே, ஆந்திர மாநிலத்திலே இப்படி பல்கலைக் கழகம் வேண்டுமென்ற முயற்சியை எடுத்து, அதற்கான சட்டத்தை நிறைவேற்றி விட்டார்கள். இந்திய அரசு ஒப்புதல் கிடைக்கப் பெறுமல் இருக்கிறது. அங்கே தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

துணைவேந்தர்கள் மாநாடு

***507. வினா—திரு. சு. துரைசாமி:**—மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் மாநிலத்துணை வேந்தர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டு முடிவுகள் பற்றி அரசுக்கு அதிகார பூர்வமான தகவல் வரவில்லை.

திரு. ஆ. பரந்தாமன்:—தலைவர் அவர்களே, டெல்லி பல்கலைக் கழகத்தில், கல்வித் துறையிலே, சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள். அதன் விளைவாக இன்றையதினம், சிறந்த மருத்துவ நிபுணர்கள், பொறி இயல் நிபுணர்கள் இனி வர இருக்கிற ஆண்டுகளிலே வடக்கேதான் அதிகம் வருவார்கள் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்த விவகாரத்தைப்பற்றி இன்றையதினம் தென் மாநிலத் துணைவேந்தர்கள் மாநாட்டிலே பரிசீலிக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—தலைவர் அவர்களே, பல்வேறு பொருள்கள்பற்றி துணை வேந்தர்கள் மாநாட்டிலே பரிசீலனை செய்திருக்கிறார்கள். அவை பத்திரிகைச் செய்திகளாக வெளி வந்திருக்கின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்திலேயும் மதுரைப் பல்கலைக் கழகத்திலேயும் பாடத் திட்டங்களையும் புதிய நிலைகளுக்கேற்றவாறு மாற்றியமைப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டு, தனித்தனியாகக் குழுக்களை எல்லாம் அமைத்திருக்கிறார்கள். அந்த முறையிலே மாறுதலைச் செய்துகொண்டுவருகிறார்கள். காலத்திற்கேற்று, நாட்டிற்குத் தேவையான முறையில், பல்கலைக் கழகப் படிப்பு தர பல்கலைக் கழகங்கள் ஈடுபட்டிருக்கின்றன.

திரு. நா. வீராசாமி:—தலைவர் அவர்களே, யூனிவர்சிட்டி ஒரு அட்டானமஸ் பாடியாக இருந்தாலும் இப்படி துணைவேந்தர்கள் மாநாடுகளிலே எடுக்கின்ற முடிவுகளை அரசாங்கத்திற்கு அனுப்பாவிட்டால், அரசாங்கம் மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் பற்றி ஒன்றும் செய்ய முடியாமல் போய்விடும். ஆக, இம்மாதிரியாக துணை வேந்தர்கள் மாநாடுகளிலே எடுக்கப்படுகின்ற முடிவுகளை உடனுக்குடன் சம்பந்தப்பட்ட அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கும்படி, இனிமேலாவது துணை வேந்தர்களை நம்முடைய அரசாங்கம் கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—தலைவர் அவர்களே, மாநாட்டு விவரங்களை அவர்களாக அனுப்பி வைக்கமாட்டார்கள். வேண்டுமானல், நாம் கேட்டால், அதனுடைய சிபாரிசுகள், தகவல்கள் அனுப்பி வைப்பார்கள். செய்தித்தாள்களில், மற்றவற்றில் படித்து, சிலபல சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்ற முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டோம். அதைக்கூட, கட்டாயமாக ஒவ்வொரு பல்கலைக் கழகமும் செய்ய வேண்டுமென்ற நிலைமை இல்லை. பரிந்துரைகள் என்ற முறையில் முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பல்கலைக் கழகமும் அவற்றை எந்தமுறையில் நடைமுறைப்படுத்தலாம் என்பதைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

Civic Taxes.

***508Q—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state —**

(a) whether there is any proposal under the consideration of the Government to review the Civic Tax Pattern in this State ; and

எப்படி இந்தத் தகவல்கள் எல்லாம் தவறாகத் தரப்பட்டன என்று தெரியவில்லை. நம்முடைய மாநில மின்சார வாரியத்தின் சார்பில் பல கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தக் கடிதங்களில் ஒன்று, இப்படி நீண்ட கால ஒப்பந்தம் வேண்டுமென்று ஒரு ஒப்பந்தத்தைத்தயார் செய்து ஒரு டிராப்ட் அக்ரிமெண்டு இங்கிருந்து அனுப்பப்பட்டிருக்கிறது 1972-ல். அதற்கு முன்னால் 1969-லே ஒரு நீண்ட கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதில் எண்ணூர் அனல் மின்சார நிலையத்தைப் பொறுத்த அளவுக்கு எந்தெந்த ஆண்டு எவ்வளவு நிலக்கரி தேவை என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் ஒவ்வொரு மாதமும் 97,000 டன் நிலக்கரி எண்ணூர் மின்சார நிலையத்தில் உற்பத்திக்குத் தேவை என்பது தெளிவாகப் போட்டிருக்கிறோம். அப்படி எழுதப்பட்ட பின்னால், அந்த அடிப்படையை வைத்து ஒரு டிராப்டு அக்ரிமெண்டு நமது மின்சார வாரியம், மத்திய அரசாங்கத்திற்கும் சிங்கரேணி காலியரிக்கும் அனுப்பிய பின்னால் ஏன் இப்படிப்பட்ட தவறான தகவலை இந்தக் கடிதத்தில் காண்கிறோம் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதைப்போல, நிலக்கரி தரப்பட்ட புள்ளி விவரங்களையும் அவர்களே தந்திருக்கிறார்கள். அதைப் பார்க்கிற நமக்கு அவர்கள் உண்மையை உணர்ந்திருக்கிற வாய்ப்பு இருக்கிறது என்று ஊகிக்கத் தோன்றுகிறது. என்றாலும் எப்படியோ அவர்கள் சொல்லும் போது நிலக்கரி ஏராளமாகக் கொடுத்து விட்டோமே என்று சொல்லுகிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கின்ற புள்ளி விவரப்படி ஜனவரி மாதம் 23,414 டன்—நாம் ஒரு மாதத்துக்கு 97,000 டன் கேட்டோம்——டிசம்பர் மாதம் 22,903 டன், அதற்கு முன்னால் பார்த்தால் 29,350 டன் கொடுத்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அவர்கள் புள்ளி விவரத்தைப் பார்த்தாலும், நமக்குத் தேவை என்பதில் மூன்றில் ஒரு பங்குகூட அவர்களால் கொடுக்க முடியவில்லை என்பது நமக்குத் தெரியும் என்று கருதுகிறேன். இதற்கு முன்னாலேயே மின்சார வாரியம் எண்ணூரில் 110 மெகாவாட் உற்பத்திக்கு நீண்ட கால ஒப்பந்தம் தேவை என்று வற்புறுத்தியது. அதையும் அவர்கள் கடிதத்தில் சொல்லியிருக்கிறார்கள். முன்னால் சொன்னதற்கும் பின்னால் சொன்னதற்கும் புரிந்து கொள்ள வாய்ப்பிருக்கிறது என்பதற்காகச் சொல்லுகிறேன்.

நிலக்கரித் தேவைக்கும் இப்போது மின்சாரத் தட்டுப்பாட்டுக்கும் சம்பந்தமில்லை என்று குறிப்பிடுகிறார்கள். நாங்கள் எண்ணூர் அனல் மின்சார நிலையத்திற்கு இவ்வளவு நிலக்கரி தேவை என்று சொல்லி விட்டோம். அந்த நிலக்கரியைக்கொடுக்கவில்லை என்று எழுதியிருக்கிறோம். அதற்கும் மின் தட்டுப்பாட்டுக்கும் சம்பந்தமில்லை என்கிறார்கள். அவர்களுடைய வாதம், மின்சாரத் தட்டுப்பாடுக்கு நீர் மின்சார உற்பத்திக் குறைவுதான் காரணம் என்று வாதிட முற்பட்டிருக்கிறார்கள். அனல் மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரியைக் கொடுக்க முடிந்தது என்று அவர்கள் சொல்ல முன்வரவில்லை. இது வருந்தத் தக்க செய்தியாகும்.

அதற்குப் பின்னால் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்ன என்பதைக் கூறி விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். மொத்த உற்பத்தியில் நீர் மின்சார உற்பத்தி முக்கால் பங்கு குறைந்திருக்கிறது. இந்தக் குறைவே மின்சாரத் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்று ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். இன்னொன்றையும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

அதோடுகூட சிங்கரேணி நிலக்கரிச்சுரங்கத்திலிருந்து எண்ணூருக்குக் கொடுப்பதாகத் திட்டமிட்டு ஒப்புக்கொண்டபடி அனுப்ப முடியவில்லை என்பதும் ஒரு காரணம். In addition to it என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு பெரு மகிழ்ச்சிக்குரிய காரியமாகும்.

அதற்குப் பின்னால் ஒரு காரணம், இடையில் 3 மாதத்தில் நிலக்கரி குறைந்துவிட்டது. செப்டம்பர் மாதத்தில் 4,591 டன். அக்டோபர் மாதம் 4,529 டன். நவம்பர் மாதம் 8,671 டன். இப்படிக் குறைந்துவிட்டது என்று நாங்கள் எடுத்துச் சொன்ன வாதத்தை ஓரளவுக்கு ஒப்புக்கொண்டு, அதற்குக் காரணம் ஆந்திரப்போராட்டமும், அதைத் தொடர்ந்து ரயில்வே வேலை நிறுத்தமும் வேகன் மூவ்மெண்டுக்குத் தடையாக இருந்தது என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதற்கு அடுத்தாற்போல, இன்னொரு வாக்கியத்தைச் சேர்த்து, இதோடு கூட எண்ணூர் அனல் மின்சார நிலையத்தில் இருக்கக்கூடிய ஆபரேஷனல் டிபிகல்டீஸ் காரணமாக இருக்கலாம் என்று கருதுகிறேன் என்கின்ற ஒரு வாக்கியத்தையும் அவர்கள் இணைத்திருக்கிறார்கள். அவர்கள் இங்கே இன்னொரு வாசகத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். 1973-ஆம் ஆண்டு, 41,268 டன்தான் அனுப்பப்பட்டது. இதில் 38,900 டன் வந்திருக்கிறது. இதுவும் நம்முடைய தேவையில் ஒரு பகுதிதான் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இதைப்போல மார்ச்சு மாதம் 70 ஆயிரம் டன் அனுப்பப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வந்து சேருமா என்பது சந்தேகம். ஆகவே கப்பல்மூலம் 7,000 டன் அனுப்பப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவும் அவர்கள் கடிதத்தில் உள்ள ஒன்றாகும். அதோடுகூட 1973-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில்தான் நிலக்கரிப்பற்றாக்குறையும் ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். முன்னால் உள்ள புள்ளி விவரங்களுக்கும் இதற்கும் எவ்வளவு மாறுபாடாக இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். மாதத்திற்கு 97,000 டன் நிலக்கரி வேண்டும் என்று நாம் சொல்லி, அதில் கால் வாசி அனுப்பவில்லை என்று ஒத்துக் கொள்ளுகிறார்கள். ஆனாலும் இந்தப் பற்றாக்குறை 1973-ல்தான் ஏற்பட்டது என்று சொல்லுகிறார்கள். நிலக்கரிப் பற்றாக்குறையைப்பற்றித் தமிழக மின்சார வாரியம் செண்டிரல் பவர் போர்டு தெரிவித்தது உண்மைதான் என்றும் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒத்துக் கொண்டுவிட்டு, இந்த வாதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்றும் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது ஏன் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை,

மீது குறைசொல்லுவதற்குப் பதில், இந்த மாநிலத்தில் நாலுகோடி மக்களுடைய மின்சாரத் தேவைகளை முழுமையாகக் கொடுப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு, சிங்கரேணி காலியரிலிருந்து எங்கள் கணக்குப்படி இல்லாவிட்டாலும் உங்கள் "லிங்கேஜ் கமிட்டி" ஒப்புக்கொண்டதையாவது கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதில் இன்னும் ஒரு வேடிக்கை என்னவென்றால் அவர்கள் கணக்குப்படியே எண்ணூர் அல்லது பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரியைத் தாராடியாவிட்டாலும் நாம் எப்படியோ மின் உற்பத்தியைக் கூடியவரையில் குறையாது பார்த்துக்கொள்ளுகிறோம். ஆனால் அவர்களுடைய பொறுப்பிலிருக்கும் நெய்வேலி அனல் மின்சார நிலையத்தில் 600 மெகாவாட்டிலிருந்து 150க்குக் குறைந்து இப்போது கொஞ்சம் கொஞ்சமாக 300, 350 என்று எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் நிலையைப் பார்க்கிறோம். ஆனால் இதைப்பற்றி அவர்கள் யாரும் எதுவும் சொல்லவில்லை. இவற்றையும் குறிப்பிட்டார்களேயானால் நமது மாநில அரசின் குறையால்தான் இங்கே மின் உற்பத்தி வெகுவாகக் குறைந்துவிட்டது என்று சொல்லுவது தவறான கருத்தாகும் என்பதைப் புரிந்து கொள்ளலாம், புள்ளி விவரங்களிலிருந்தும் புரிந்து கொள்ளலாம்.

இன்று நிலக்கரி சப்ளை சீராகக் கிடைக்க வேண்டும் என்று நமது மின்சார வாரியத்திலிருந்து தனி அதிகாரியொருவரை, சுரங்கத்தின் அளவிற்கு நியமித்து, அவர் நிலக்கரிச் சுரங்க அதிகாரிகளோடு நேரிடையாகத் தொடர்புகொண்டு தடைபடாமல் நிலக்கரி சப்ளை ஆவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்து வருகிறோம். பற்றாக்குறைக்கு கல்கத்தாவிலிருந்து துறைமுகம்மூலமாகக் கப்பலில் கொண்டுவருவதற்கும் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றது என்று உறுதி கூறி, இந்த விளக்கத்திற்குமேலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : ஸார், எண்ணூர் அனல் மின் உற்பத்தி நிலையத்திலுள்ள விவரங்களைப்பற்றி அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்தினார்கள். அவர்கள் கொடுத்த விவரமானது ஒன்றுக்கொன்று மாறுபட்டதாகவும் எந்த அளவிற்குக் குழப்ப முடியுமோ அந்த அளவிற்குக் குழப்பக் கூடியதாகவும் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : தேவையானால் நீங்கள் க்ளாரிபிகேஷன் என்று கேட்கலாம். ஆனால் இதை விவாதமாக நடத்தக் கூடாது.

திரு. கே.டி.கே. தங்கமணி : ஏற்பட்டுள்ள குழப்பத்தைப்பற்றிதான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் குழப்பவில்லை. அங்கத்தினர் அவர்கள்தான் குழம்பியிருக்கின்றார். கட்சித் தலைவராக உள்ள மாண்புமிகு

அங்கத்தினர் அவர்கள் வார்த்தைகளைச் சற்று ஜாக்கிரதையாக உபயோகிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏதாவது சந்தேகம் ஏற்படுகிறது என்றால்..............

THIRU K.T.K. THANGAMANI : When he gives a hit, he must be prepared to receive a hit also.

MR. DEPUTY SPEAKER : I do not like to come between you and the Minister. You cannot start an argument here. You can ask by way of clarification one or two questions. But no allegation should be put forward.

திரு. கே.டி.கே. தங்கமணி : It is an adjournment motion. நான் பேசக் கூடாது என்று சொன்னால் உட்கார்ந்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் தயவு செய்து உட்காருங்கள். நீங்கள் மட்டுமில்லை. பேரவை முழுவதிற்கும்தான் சொல்லுகிறேன். "க்ளாரிபிகேஷனை" அனுமதிக்கத்தான் வேண்டும். ஆனால் விவாதங்களை அனுமதிக்கக் கூடாது என்றுதான் இருக்கின்றது. ஒரே ஒருமுறை இந்தப் பேரவையில் அதுவும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பார்க்கிறேன். பஸ் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் மோதல் ஏற்பட்ட நேரத்தில் அன்று அண்ணா அவர்கள் 82-வது விதிப்படி ஸ்டேட்டுமெண்டு கொடுத்து விட்டு, அதைத் தொடர்ந்து விவாதத்தை அப்படியே 42-வது விதியின்கீழ் ஆரம்பித்திருக்கின்றார்கள். அன்று அதற்கு இருந்த முக்கியத்துவத்தைக் கருதியே அப்போது அப்படிப் பேரவைத் தலைவர் அனுமதித்தார் எனக்கருதுகிறேன். அப்படிப்பட்ட நிலை எதுவும் இப்போது இல்லை. விளக்கம் கேட்கலாம். இதில் ஆட்சேபணை ஒன்றும் இல்லை.

திரு. கே.டி.கே. தங்கமணி : ஒரு சந்தேகத்திற்கு விளக்கம் தேவை என்ற முறையிலே கேட்கின்றேன். மின்சார வாரியம் எண்ணூருக்கு மட்டும் மாதம் 1,08,000 டன் தேவை என்று சொல்லுவதாகக் குறிப்பிட்டார்கள். அடுத்து நமது மாதாந்திரத் தேவை 97,000 டன் என்று சொன்னார்கள். இதில் எது சரி என்று எனக்குத் தெரிய வேண்டும். இதே நேரத்தில் இந்த நிலக்கரி வராத காரணத்தினால்தான் நம்முடைய உற்பத்தி குறைந்தது என்று சொல்லுகிறார். எண்ணூரில் உற்பத்தி குறைந்ததற்கு, வாட் இஸ் தி ரேடெட் கபாஸிடி அண்டு வாட் இஸ் தி ஆக்சுவல் ப்ரொடக்ஷன்? இதற்குக் காரணம் "கோல்" ஷார்ட்டேஜ்தான் என்று சொல்லுகின்றாரா, இது மட்டும்தானா அல்லது வேறு காரணம் இருக்கின்றதா? கோல் ஷார்ட்டேஜ் மட்டும் தான் என்றால் இன்றைக்கு எங்களைப் பொறுத்தவரையில் "கோல்" கிடைப்பதற்கு என்னென்ன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்வோம். (சிரிப்பு.) உங்களோடு சேர்ந்து நாங்களும் இதற்கு சப்போர்ட் பண்ணுகிறோம். உங்களுக்குத்தான் அதிகாரம் இருக்கிறதா? 'அதிகாரம்' இஸ் நாட் யுவர் மொனாப்பொலி.

அவர்கள் சொல்லுகிற காரணம், ஜனவரியில்தான் நிலக்கரி இவ்வளவு பயங்கரமாகக் குறைந்தது "டேஞ்சரஸ்லி ரெட்யூஸ்டு" என்பது. அதற்கு முன்னால் கால்வாசி கொடுத்தது என்ன அபாயம் என்று புரிந்து கொள்ளமுடியவில்லை. பயங்கர அபாயம் ஜனவரியில் ஏற்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் இன்னொரு கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். நிலக்கரித் தேவை என்னூர் உற்பத்திக் குறைவுக்கு பெரிய தடையாக இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நாமும் அதை ஒத்துக்கொண்டு வருகிறோம். அதற்குக் காரணம் அவர்கள் என்ன நிலக்கரி கொடுக்கிறார்களோ, அவ்வளவுதான் உற்பத்தி செய்கிறோம். நிலக்கரி கொடுக்காவிட்டால் உற்பத்தியைக் குறைக்கிறோம். அவர்கள் என்ன நினைக்கிறார்கள், அனல் மின்சார உற்பத்தி நின்றால்தான் நிலக்கரிப்பற்றாக்குறை என்று ஒப்புக்கொள்ள முடியும் என்று. மேலும் சொல்லுகிறார்கள், "நான் எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகள் நிலக்கரித் தட்டுப்பாட்டை நீக்கிவிடும் என்று நம்புகிறேன்" என்ற நம்பிக்கையை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கை வீண் போகாது என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுமா என்று சந்தேகமாகத்தான் இருக்கிறது.

இதில் 27—4—1972ல் ஒரு அக்ரிமெண்ட் அனுப்பினோம். அதன்படி நம் என்னூர் தெர்மல் நிலையத்திற்கு எவ்வளவு தேவையென்பதையும் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். 1972-லிருந்து 1975-ம் ஆண்டு வரையில் மாதம் ஒன்றுக்கு 1,08,000 டன் நிலக்கரி நமக்குத் தேவை. இதைத் தொடர்ந்து மாதாமாதம் கொடுத்துவிட்டால் இதில் ஒன்றும் சங்கடம் ஏற்படாது என்று இதை நாம் மிகத் தெளிவாக எடுத்துக் காண்பித்திருக்கிறோம். அதை நாம் டெலிவரி எடுக்கலாம் எடுக்காமல் இருக்கலாம் அல்லது வரவழைத்து உபயோகப்படுத்தாமல் விட்டுவிடலாம் என்று இப்படிப்பட்ட சந்தேகங்களை காலியரி அதிகாரிகள் எழுப்பிய காரணத்தினால் நீண்டகால ஒப்பந்தம் தேவை என்ற காரணத்தினால் ஒரு ஒப்பந்தம் எழுதப்பட்டு, பின்னர் நமது தேவையில் எண்பது சதவிகிதம் அதாவது "லோடு எஃபிஷியன்ஸி" என்ற அடிப்படையில் நாம் நிச்சயம் எடுத்துக் கொள்ளுகிறோம் என்று ஒப்பந்தத்தைத் தயார் செய்திருந்தோம்.

அந்த ஒப்பந்தத்தின்படி எண்பது சதவிகித உற்பத்தி லோடுக்குப் பயன்படுத்தும் அளவிற்கு நமக்கு 1,08,000 மாதம் ஒன்றுக்குத் தேவை என்று சொல்லியிருந்தோம். இவ்வளவிற்கும் பிறகு நமது தேவைகள் முழுமையாகக் கவனிக்கப்படாத நிலைதான் இருக்கிறது. நமது தேவைகள் ஒரு பக்கம் இருந்தாலும், ஒவ்வொரு அனல் மின் நிலையத்தின் தேவைகளின் அடிப்படையிலே நிலக்கரியைக் கொடுப்பதற்கு என்று மத்திய அரசில் "லிங்கேஜ் கமிட்டி" என்று ஒன்றை ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். இந்தக் கமிட்டியினுடைய பரிந்துரை பிரகாரம் அவர்கள் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ள நிலக்கரியின் அளவிற்கும் அவர்கள் கொடுத்த அளவிற்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்கள் எந்த அளவிற்குக் குறைத்துக் கொடுத்து இருக்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அந்தக் கமிட்டியின் அளவுகோல் பிரகாரம் மார்ச் 1973-ல் நமது 80 சதவிகித எஃபிஷியன்ஸி லோட் ஃபேக்டார் பிரகாரம் 82,800

டன் கொடுக்க வேண்டும். அதன்கீழ் அவர்கள் ஒப்புக்கொண்டது. ஆனால் 60 சதவிகித லோட் ஃபேக்டரை ஒப்புக்கொண்டு கொடுப்பதாக ஏற்றுக்கொண்டுள்ளது 55,200 டன். ஆனால் இதுவரையில் டெஸ்பேச் செய்திருப்பது 23,429 டன். இது என்னூர் அனல் மின் நிலையத்தைப் பொறுத்தது.

இதைப்போல பேஸின்பிரிட்ஜைப்பற்றியும் புள்ளி விவரங்கள் கொடுக்க முடியும். ஆக நம்முடைய தேவைகளை அவர்கள் ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொண்டுள்ள அளவில் எந்த அளவிற்குக் குறைவாகக் கொடுக்கின்றார்கள் என்று பார்த்தால், கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கைத்தான் அவர்களால் கொடுக்க முடிந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் என்ன காரணமோ, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை இதை. ஆனால் அவர்களால் கொடுக்க முடியவில்லை என்பதை இதிலிருந்து மிகத் தெளிவாகப் பார்க்கின்றேன். நிலக்கரியினை அவர்கள் தொடர்ந்து கொடுக்க முயற்சி செய்வார்களானால், அதில் வெற்றியும் பெறுவார்களேயானால், மின் நிலையத்தில் உற்பத்தி குறையாமல், நாள்தோறும் இந்த ஆபத்து இல்லாமல் பாதுகாத்துக் கொள்ளுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்றுமட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னூர் நிலையத்தைப் பொறுத்த வரையில் நமது தினத் தேவை 2,000 டன்னிலிருந்து 3,000 டன் வரையில் என்று கணக்கிட்டிருக்கும் போது, நாள்தோறும் ரெயிலில் வருவது 1,300 அல்லது 1,200 டன்தான் என்று இருக்கும்போது ஒருநாள் வராவிட்டால் உற்பத்திக்கு எந்த அளவிற்குச் சுந்தகம் ஏற்படும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. ஏன் பல மாதங்களுக்குத் தேவையான நிலக்கரியைச்சேமித்து வைத்திருக்கக் கூடாது என்று ஒரு சிலர் கேட்கக்கூடும். ஆனால் அவர்கள் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ள நிலக்கரியே நமக்கு வந்து சேரவில்லை யென்றால் அடுத்து வரும் மாதங்களிலே எப்படி நிலைமை இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

உதாரணமாக இந்தத் தட்டுப்பாடு வருவதற்கு முன்பு ஏப்ரல் 1972-ல் நம் தேவை 43,200 டன். ஆனால் அவர்கள் கொடுத்தது 28,800 டன். அப்போதும் குறைவாகத்தான் கிடைத்தது. ஆனால் அப்போது நமக்கு நீர் மின்சாரம் அதிகமாக இருந்த காரணத்தினால் அனல் மின்சாரத்தில் ஏற்பட்ட குறைவு நம்மை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. அப்போதெல்லாம் நிச்சயமாக ஸ்டாக் பொஸிஷன் அதிகமாகத்தான் இருந்தது. ஆனால் அதை உண்மையிலேயே அப்படி அதிகமாக இருந்ததாக ஒப்புக் கொள்ள மாட்டேன். ஆனால் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் அவர்கள் குறைவாகக் கொடுத்துவந்ததுதான் இதற்கு முக்கியமான காரணம். இவற்றைப் புரிந்து கொண்டால்நிச்சயமாக மத்திய அரசு அதிகக்கவனம் செலுத்தியிருந்தால் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்காது என்பதை ஏற்றுக்கொள்ளலாம். இப்படி ஒன்றுக்கொன்று முரணான அறிக்கைகளை, தகவல்களை கொடுத்துக்கொண்டு எங்கள்மீது அவர்கள் குறை சொல்லுவதற்குப் பதில், அவற்றுக்கு நாங்கள் பதில்களைச் சொல்லி அவர்கள்

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : "கோல் ஷார்ட்டேஜ்" மட்டும்தான் காரணம் என்றால் அது கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வோம் என்றார். அப்படியானால் இதுவரை குறைவாகக் கிடைத்துவருவதற்கு அங்கத்தினர்தான் காரணமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : I am not here to win any debating point விஷயம்ரொம்ப ஆழமான விஷயம். இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில், இன்னொன்று சொன்னார்கள். நெய்வேலியில் 600 மெகாவாட் உற்பத்தி 150 ஆகக் குறைந்தது என்று சொன்னார்கள். நான் இதில் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், நெய்வேலி கார்ப்பரேஷனுக்கும் நமது மாநில அரசுக்கும் ஏதாவது ஒப்பந்தம் இருந்ததா ? அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் எவ்வளவு மின்சாரம் நாம் பெற்றுக் கொள்வதாக இருந்தோம்? அதை நாம் பெற்றுக்கொண்டோமா ? பெற்றுக் கொள்ளாமையால் உற்பத்தியைக் குறைக்க வேண்டி இருந்தது என்று அன்றைக்கு திரு. மோகன் குமாரமங்கலம் ஒரு அறிக்கையில் கூறி இருந்தாரே, அது உண்மைதானா? அந்த விஷயம்பற்றி அறிய விரும்புகிறேன்.

இப்போது ஜனவரி மாதம் 41,700 டன் கிடைத்தது என்றும், மார்ச் மாதம் 70 ஆயிரம் டன் கிடைத்தது என்றும் சொல்கிறார்கள். இப்போது இருக்கக்கூடிய ஸ்டாக் என்ன ? அந்த ஸ்டாக்கை வைத்துக்கொண்டு உற்பத்தி செய்ய முடியாதா (குறுக்கீடு) கப்பலின்மூலமாக 70 ஆயிரம் டன் வந்தது என்று சொன்னார்கள். அந்தக் குறிப்பை வைத்துக் கொண்டுதான் சொல்கிறேன். இப்போது நவம்பர், டிசம்பர் மாதங்களிலே நமக்கு சப்ளை ஆகியது 22 ஆயிரம் டன் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு பூரா உற்பத்தி செய்தோமா? அதனால் உற்பத்தி குறைந்ததா? இன்றைக்கு நமக்கு எவ்வளவு நிலக்கரி கிடைக்க வேண்டும் ? அப்படிக் கிடைத்தால் நமது ரேடட் கபாசிடி முழுமையாக உற்பத்திக்கு ஈடுகொடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ .மாதவன் : ஏறத்தாழ நீண்ட புள்ளி விவரங்களைக் கொடுத்த காரணத்தால் சந்தேகம் ஏற்பட்டிருக்கலாம் என்றுதான் நாகரீகமாகச் சொல்ல வேண்டுமானால் சொல்ல வேண்டும்.

THIRU K. T. K. THANGAMANI : I would resent that insinuation. We are also as intelligent as the Hon. Minister. He may be in a Minister's position. Let there not be any insinuation.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சாமர்த்தியமாகப் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். நெய்வேலியில் 600 மெகாவாட் 150க்குக் குறைந்தது என்று எடுத்துச் சொன்னேன். ஒத்துக் கொள்ளப்பட்ட உண்மையைத்தான் சொன்னேன். நாம் வேண்டாம் என்ற காரணத்தினால் தான் நிறுத்தி விட்டதாகச் சொல்வது அதிசயமாக இருக்கிறது. மெஷினரி டிஃபெக்ட்ஸ் இருக்கிறது என்பதெல்லாம் அவர்களே ஒப்புக் கொண்ட உண்மை. ஆழமாகத் தோண்டத் தோண்ட நிலக்கரி குறைவாக

இருக்கிறது. தண்ணீர்தான் அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது அதிகம் உற்பத்தி செய்கிறார்கள். அது வேறு பிரச்சினை. நான் கொடுத்த புள்ளி விவரங்களைக் கவனித்திருந்தால் தெரிந்திருக்கும். நீண்டகால ஒப்பந்தம் என்ற அடிப்படையில் 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒப்பந்தத்தின் ஷரத்து—ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவு வேண்டும் என்று ஒரு கணக்கைக் கொடுத்தோம்—அதன் அடிப்படையிலே ஒரு புள்ளி விவரத்தைச் சொன்னேன். அந்த அடிப்படையில் 41,700 டன்—மார்ச்சில் 70 ஆயிரம் டன்—23, 24 ஆயிரம் டன் மன்த்லி டெலிவரியாக என்று சொன்னோம். அதேசமயத்தில் இடைக்கால அடிப்படையில் 97 ஆயிரம் டன் உடனடியாக அனுப்பினால் போதும் என்று சொன்னோம். இவ்வளவு புள்ளி விவரங்களையும் சொன்னேன். அவர்களே ஒப்புக்கொண்ட புள்ளி விவரங்களைச் சொன்னேன். அதைக் கவனித்திருந்தால் கவலைப்பட்டிருக்க மாட்டார் என்று கருதுகிறேன். 70 ஆயிரம் டன் அனுப்புவது என்று சொன்னார்கள். சொல்லிவிட்டு, அதே கடிதத்திலேயே 38 ஆயிரம் டன் தான் அனுப்பி இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தை வாசித்தேன். இதில் குழப்பம் ஏதுமில்லை என்பதைப் புரிந்துகொண்டிருக்க முடியும் என்று கருதுகின்றேன்.

அனல் மின்சார நிலையத்தைப் பொறுத்தவரையில் 230 மெகாவாட் பலவிதமான ஸ்டேஜ்களில் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். முழு உற்பத்தி செய்ய வேண்டுமானால், 630 மெகாவாட் உற்பத்தி செய்ய வேண்டுமானால், எவ்வளவு நிலக்கரி தேவை என்று சொல்லி இருக்கிறோம். லிங்கேஜ் கமிட்டியில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம். அவ்வளவும் தந்தால் முழுமையாக உற்பத்தி செய்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். 200 மெகாவாட் உற்பத்தி செய்யமுடியும் என்று நிரூபித்திருக்கிறோம். நாங்கள் சொல்லிச் சொல்லி, 1969-இல் தொடங்கப்பட்டு, 230 மெகாவாட் உற்பத்தி செய்து, அடுத்த கட்டம் 110 மெகாவாட் மேலும் உற்பத்தி செய்ய முடியும் என்று திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம். அந்த கபேசிடிக்கும், இப்போது கொடுத்து வருகின்ற நிலக்கரிக்கும் சம்பந்தமே இல்லை என்றுதான் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மேற்கொண்டு எந்தவிதமான பாயிண்ட் ஆப் ஆர்டருக்கும் அனுமதி மறுக்கப்படுகிறது.

மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்திற்குப்பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் ஏதும் இல்லை என்று கருதி இதற்கு அனுமதியை மறுக்கிறேன்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

(5) அறிவிப்பு.

துணை மானியக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான கால வரம்பு குறித்து :

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தத் துணை மானியக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் நம்முடைய பேரவையின் 156-வது விதியின்கீழ் நாளை பிற்பகல் 3 மணிக்குள் அவற்றைக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) 1973-74-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

நிதிக் கோரிக்கை எண் 12—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.

நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் பேரில் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" நிதிக் கோரிக்கை எண் 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 86,99,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

Dr. H.V. HANDE : Sir, I move the following cut motion to discuss policy and to stress the need on the part of the H.R. & C.E. Commissioner to reduce the number of days of his tour and try to stay in the office itself so as to avoid delay in the disposal of the departmental work.

"That the allotment of Rs. 86,99,800, under Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, be reduced by Rs. 100."

Thiru SOWDI S. SUNDARA BHARATHY: Sir, I move the following cut motion to discuss the necessity to renovate all old temples.

"That the allotment of Rs. 86,99,800, under Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, be reduced by Rs. 100".

திரு. எ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, கோவில்கள் நிர்வாகத்தை எல்லாம் அந்தந்த நகர, கிராம, பேரூராட்சி மன்றத்திடம் விடவேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 86,99,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru R. PONNAPPA NADAR : Sir, I move the following cut motion to discuss about the abolition of the Kanyakumari Devaswom Board consequent on the abolition of the privilege of the Travancore Maharaja...

"That the allotment of Rs. 86,99,800, under Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, be reduced by Rs. 100."

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, கோவில் தேவஸ்தானப் பணியாளர்களுக்குச் சீரான ஊதியத்தை அரசாங்கமே வழங்க வேண்டும் என்பதைப்பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 12—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 86,99,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் பேரில் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,02,28,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் "

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 2,02,28,900, under Demand No. 10 Milk Supply Schemes be reduced by Rs. 100."

Dr. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss the desirability of reforming the scheme with a view to enable the consumers to get good milk and make the scheme a viable unit—

"That the allotment of Rs. 2,02,28,900, under Demand No. 10—Milk Supply Schemes be reduced by Rs. 100."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, 1973-ம் ஆண்டு பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(4) 1972–73-ம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1972-73ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை 64·38 கோடி ரூபாயாகும். இதில் 57·29 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கைச் சேர்ந்ததாகும்; எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளைச் சேர்ந்ததாகும். மொத்த மானியக் கோரிக்கையில் 64·05 கோடி ரூபாய் அனுமதித்த இனங்களின் கீழும், 33 இலட்சம் ரூபாய் சாட்டிய இனங்களின் கீழும் அமையும். இந்த மானியக் கோரிக்கைகளில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்காகவும் (Centrally Sponsored Schemes), மத்திய அரசுத் திட்டங்களுக்ககாகவும் (Central Sector Schemes) 8·82 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை முழுவதும் மத்திய அரசிடமிருந்து நமக்குத் திரும்பக் கிடைத்து விடும். இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கிய செலவினங்கள் சிலவற்றை இப்போது குறிப்பிட விழைகிறேன்.

வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்படாத முக்கிய செலவினங்களில் ஒன்று, இயற்கையின் கொடுமைகளால் ஏற்பட்ட துயர் தணிப்புப் பணிகளுக்குகென நாம் மேற்கொண்ட செலவாகும். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கென்று 1·25 கோடி ரூபாய் செலவிடுவதற்கு இந்த மன்றத்தின் ஒப்புதலை இரண்டாவது துணை மதிப்பீட்டில் அரசு பெற்றதென்பது மதிப்பிற்குரிய உறுப்பினர் அனைவருக்கும் தெரியும். புயல், வெள்ளத் துயர் தணிப்புப் பணிகளுக்காக இறுதித் துணை மதிப்பீட்டில் 6·09 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் கோரப்பட்டுள்ளது. பேரவையில் முன்னரே அறிவித்துள்ளபடி, நடப்பாண்டிலும் அடுத்துவரும் ஆண்டுகளிலும் துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு 14.25 கோடி ரூபாய்வரை செலவிட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மானியக் கோரிகை எண் “16. வேளாண்மை” என்னும் தலைப்பின் கீழ் 2·33 கோடி ரூபாய் கோரப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கம் கோரப்படுவதற்கான செலவினங்கள், தூளைக் கிணறு திட்டமும் (16 இலட்சம் ரூபாய்), பயிர் பாதுகாப்புத் திட்டமும் (2 கோடி ரூபாய்) ஆகும். பூச்சிக் கொல்லி மருந்துகள், தூவு கருவிகள் கூடுதலாகத் தேவைப்படுவதாலேயே பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கூடுதல் நிதி ஒதுக்கம் கோரப்படுகிறது.

33ஆம் மானியக் கோரிக்கையின்கீழ், “நகர் வளர்ச்சி நிதி” என்னும் சிறப்பு நிதி ஒன்றை ஏற்படுத்துவதற்காக 1·50 கோடி ரூபாய் கோரப்படுகிறது. நகர் நிலவரி, விற்பனை வரி மீதான மேல் வரி ஆகியவை மூலம் சென்னை, மதுரை ஆகிய மாநகரங்களிலிருந்தும், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகரங்களிலிருந்தும் கிடைக்கிற தொகைகளிலிருந்து இந்த நிதிக்கு வரவு வைக்கப்படுகிறது. இந்த நகரங்களிலும் அவற்றின் சுற்றுப்புறங்களிலும் நகர் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படும்.

அந்தந்த உள்ளாட்சி நிறுவனங்கள் வசூலிக்கின்ற உள்ளூர் தீர்வை மேல் வரிக்கு இணையாகக் கொடுக்கப்படும் இணை மானிய உயர்வு, இக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள மற்றோர் இனமாகும். ஊராட்சி ஒன்றியங்கள் வகைப்பாடு அண்மையில் சீரமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அரசு கூடுதலாக இணை மானியம் வழங்க வழி செய்யப்பட்டுள்ளது. இதற்கென இந்தத்துணை மதிப்பீடுகளில் 1·99 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்கள் அந்தந்த மாதத்தின் முதல் தேதியன்றே ஆசிரியர்களின் ஊதியங்களைக் கொடுப்பதற்கு வசதியாக, இந்த அரசு முன்னதாக மானியத் தொகை வழங்கியுள்ளது. இதுவே இந்தத் துணை மதிப்பீடுகளில், மானியக் கோரிக்கை எண். “13. கல்வி” என்பதன் கீழ் முக்கிய செலவினமாகும். இவ்வகையில் துணை மதிப்பீட்டில் 3·60 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

"குடும்ப நலத் திட்டம்" குறித்து செலவு பெருகி வருவதன் காரணமாக, "மக்கள் நல் வாழ்வு" மானியத்தின்கீழ் மொத்தம் 5.27 கோடி ரூபாய் கோரப்படுகிறது. குடும்ப நலத் திட்டத்திற்கு ஆகும் செலவில் ஒரு சில இனங்களைத்தவிர மீதி செலவினைத்தையும் இந்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. குடும்ப நலத் திட்ட தீவிர இயக்கமும், அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் ஆண்களுக்குக் கூடுதல் ஊக்கத் தொகை அளிப்பதும், இந்தத் தலைப்பின்கீழ் கூடுதல் செலவு ஏற்பட்டதற்கு முக்கியக் காரணங்களாகும்.

காவல் துறையின் செலவுக்காக 12-ம் மானியக் கோரிக்கையின்கீழ் 1.38 கோடி ரூபாய் கூடுதல் தொகை கேட்கப்படுகிறது. காவற் படையைச் சீரமைப்பது குறித்து இரண்டாம் துணை மதிப்பீட்டில் சேர்க்கப் பட்ட தொகைக்கு மேற்பட்டு இருக்கும் 19 இலட்சம் ரூபாய்க்குச் சட்ட மன்றத்தின் இசைவு கேட்கப்படுகிறது. கோயம்புத்தூர் காவல் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்ததனால் ஏற்படும் செலவும் இதில் அடங்கும்.

குடிசைப் பகுதி மாற்றி அமைக்கும் திட்டங்களுடன், சென்னை மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளில் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 2.50 கோடி ரூபாய்க்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. குடிசை மாற்று வாரியத்திற்கு இதற்கென முதல் கட்டமாக 21 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது; எஞ்சிய தொகையான 2.29 கோடி ரூபாய்க்கு மானியக் கோரிக்கை 29-ன் கீழ் வகை செய்துள்ளோம்.

42-ம் மானியக் கோரிக்கையின்கீழ் 2.05 கோடி ரூபாய்க்கு கூடுதல் செலவுக்கு இசைவு கோரப்படுகிறது. பொதுப் பணிகள் மீதான மூலதனச் செலவினை இத்தலைப்பு குறிப்பிடுவதாகும். புதிய பணிகளைத் தொடங்கியதனாலும், பழைய இயந்திரங்களை மாற்றிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் புதிய இயந்திரங்களை வாங்கியதனாலும் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. திட்ட நடவடிக்கைகள் வேகம் முழுமுரமாயிருப்பதை இது குறிப்பிடுகிறது.

மானியக் கோரிக்கை "24. தொழிலாளரும் வேலை வாய்ப்பும்" என்பதன்கீழ் 21 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்கப்படுகிறது. தொழில் நுட்பத் தகுதி பெற்றிருப்போரிடையே நிலவி வரும் வேலையின்மையைப் போக்க வகை செய்கின்ற மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகிய தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 16 இலட்சம் ரூபாய் இதில் அடங்கும்.

மானியக் கோரிக்கை "47. மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்" என்பதன்கீழ், இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப் பட்டுள்ள முக்கிய செலவினங்கள் சில பின் வருமாறு :—

(1) பெரிய, நடுத்தரத் தொழில்களுக்கு விற்பனை வரிக் கடன்களைக் கொடுப்பதற்காகத் தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகத்துக்கு (SIPCOT) 23 இலட்சம் ரூபாய்.

(2) படித்து வேலையற்றுள்ளவர்களுக்கு உதவுவதற்காக சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்துக்கு (SIDCO) 35 இலட்சம் ரூபாய்.

(3) அண்ணா போக்குவரத்துக் கழகத்துக்கு 5 இலட்சம் ரூபாய்.

மானியக் கோரிக்கை "26. பாசனம்" என்பதன் கீழ், 2.64 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்கப்படுகிறது. காவிரி கழிமுகப் பகுதியில் செயல்படுத்தப்பட்டுவரும் "விரைவான பழுது பார்க்கும் திட்டம்" (1.05 கோடி ரூபாய்) "பல்வேறு பாசனத் திட்டங்களை விரிவுப்படுத்தல் மேம்படுத்துதல்", "பேணி வருதல் பழுது பார்த்தல்" குறித்த கூடுதல் செலவு (1.06 கோடி ரூபாய்) சிறு பாசன வாயில்களைப் பேணி வருவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு கூடுதல் மானியம் (18 இலட்சம் ரூபாய்) வழங்குதல் ஆகியவை குறிப்பிடத்தக்க செலவினங்களாகும்.

20-ம் மானியக் கோரிக்கையின்கீழ் 28 இலட்சம் ரூபாய் கோரப் படுகிறது. இம் மாநிலத்தில் பின் தங்கியவையெனத் தெரிந்தெடுக்கப் பட்ட பகுதிகளில் நிறுவப்படவிருக்கும் மூன்று தொழிற்சாலைகளுக்கு உதவித் தொகை அளிப்பதற்காகத் தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகத்திற்கு 5 இலட்சம் ரூபாய் மானியம் வழங்குவதும் இதில் அடங்கும்.

மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டுள்ள பற்றுக் குறைக்கு, வேளாண்மை விசையேற்றங்களுக்குக் குறைந்த கட்டண வீதத்தில் மின் சக்தி வழங்கப் படுவதே முக்கியக் காரணமாகும் என்பதை வரவு-செலவுத் திட்ட உரையில் நான் குறிப்பிட்டுள்ளேன். 1971–72, 1972–73 ஆகிய ஆண்டுகளில் இதன் காரணமாக மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பினை ஈடு செய்வதற்காக வழங்கப்படும் உதவித் தொகையாக, இறுதித் துணை மதிப்பீட்டில் 17.83 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. மாநில அரசிட மிருந்து மின்சார வாரியம் வாங்கிய கடனுக்குக் கொடுக்க வேண்டிய வட்டி பாக்கியைப் பெருமளவிற்குக் கொடுப்பதற்கு இந்த உதவித் தொகை பயன்படும்.

இறுதித் துணை மதிப்பீடுகள், நமது திட்ட அளவு பெருகியிருப்பதையும் ஒரு நபர்க் குழு பரிவுரைகளை நிறைவேற்றியது காரணமாக அரசுக்கு ஏற்பட்டுள்ள செலவையும் புலப்படுத்துவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் காணலாம்.

துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான பல்வேறு செலவினங்களை நான் எடுத்துக் கூறியுள்ளேன். உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விரிவான அறிக்கையில் இச் செலவினங்களுக்கும் பிற செலவினங்களுக்கும் உரிய விளக்கத்தைக் காணலாம் என்று கூறி, 1972–73 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU SOWDI S. SUNDARABHARATHY: Sir, I move the following cut motion to discuss policy and the need to get more machines for converting milk into milk powders to avert loss in milk supply schemes—

"That the allotment of Rs. 2,02,28,900, under Demand No. 10, Milk Supply Schemes be reduced by Rs.100."

திரு. எ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, கிராமங்கள்தோறும் பால் உற்பத்திக்கு ஏதுவாக சங்கங்கள் அமைத்துக் கடன் கொடுத்து உதவ வேண்டும் என்பதைக் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,02,28,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ . அழகர்சாமி : தலைவரவர்களே, பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை நிர்ணயிக்கத் தவறியது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,02,28,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு பால் பண்ணை ஏற்படுத்த வேண்டும் என்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ, 2,02,28,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அறநிலையத் துறையின் குறிப்புகளும், பால் வழங்குத் துறையின் குறிப்புகளும், இ மன்றத்தின் முன்னாலே வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நடவடிக்கைகுறிப்பேட்டில் பதிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாக கோவில்களிலே பணியாற்றுகிற உள்துறை அல்லது வெளித்துறையில் பணியாற்றும் ஊழியர்கள் பல்லாயிரக்கணக்கான பேர் இருக்கிருர்கள். அவர்களுக் கெல்லாம் அவர்களுடைய ஊதிய உயர்வு நிர்ணயம் செய்யவேண்டும் என்ற கோரிக்கையும், அதிலே ஆண்டுதோறும் ஊதிய உயர்வு கொடுக்கவேண்டுமென்ற வேண்டுகோளும் நீண்ட நெடுங்காலமாக பரிசீலிக்கப்பட்டு வந்து, இன்றைய தினம் அதை நிறைவேற்றும் வகையில் நம்முடைய தமிழ்நாடு

605, 613-ம் பக்கங்களில் இணைப்பு I, II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

முதலமைச்சர் உத்தரவிட்டு இருக்கிருர்கள். அதன்படி அதிலே பணியாற்றி வருகிற சுமார் 50,000-க்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு வருகின்ற மாதத்திலிருந்து அதிகபட்சமாக ரூ. 10-க்கு மேற்படாத அளவுக்குச் சம்பள உயர்வு கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல், நீண்ட நெடுங்காலமாக ஆண்டு ஊதிய உயர்வு இல்லாமல் அவர்கள் பணியாற்றி வருகிருர்கள். அதை மாற்றி அந்தந்தக் கோவில்களில் வரும் வருமானத்திற்கு ஏற்றவாறு ஆண்டு ஊதிய உயர்வு கொடுப்பது என்று அரசாங்கம் முடிவு எடுத்து, அப்படி ஊதிய உயர்வு கொடுப்பதன் மூலம் நிரந்தர ஊழியர்கள் 13,000 பேரும், மொத்தத்தில் 50,000-க்கும் மேற்பட்ட ஊழியர்களும் பலன் பெறுகிருர்கள். அதனுலே அந்தத் துறைக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 60 லட்சம் கூடுதல் செலவு ஏற்படுகிறது. அதிலே பணியாற்றும் தொழிலாளர்கள் நீண்ட நெடுங்காலமாக விடுத்து வந்த கோரிக்கையை இதன் மூலம் நிறைவேற்றுகிருேம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் கோவில்களில் பணியாற்றும் ஊழியர்கள் இருக்கிருர்கள். நிர்வாக அதிகாரிகள் 10 ஆண்டு காலம் 15 ஆண்டு காலம் பணியாற்றியிருந்தாலும் அவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகள் மிகவும் குறைந்து இருக்கிற காரணத்தால் அவர்கள் உற்சாகம் கெடுகிறது. அந்த வகையில் அவர்கள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அவர்களை உற்சாகப்படுத்தக் கருதி கீழ்க்கண்டவாறு, சமீபத்தில் மாற்றி அமைத்து பதவி உயர்வு கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை ஐந்தாவது நிலையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற (Fifth grade) எக்சிக்யூடிவ் ஆபீசர் என்கின்ற நிலைமையை மாற்றி, அதை ஒழித்துவிட்டு நான்காவது நிலை என்று நாளைய தினத்திலிருந்து கொடுக்கப்படும் என்ற அறிவிப்பை இப்போது தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் நான்காவது நிலை ஊழியர்கள் ரூ, 30,000 வரையில் வருமானம் உள்ள கோவில்களில் உள்ள எக்சிக்யூடிவ் ஆபீசர்கள் என்ற நிலைமையை மாற்றியமைத்து, 25,000 ரூபாய் வரை வருமானம் உள்ள கோவில்களில் உள்ளவர்கள் நான்காவது நிலை என்றும், 50,000 ரூபாய் வரை வருமானம் உள்ள கோவில்களில் உள்ளவர்கள் மூன்ருவது நிலை என்றும், ஒரு லட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ள கோவில்களில் உள்ளவர்கள் இரண்டாவது நிலை என்றும், மூன்று லட்ச ரூபாய் வரை வருமானம் உள்ள கோவில்களில் உள்ளவர்கள் முதல் நிலை என்றும், 5 லட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ள கோவில்களில் உள்ளவர்கள் முதல் நிலையிலேயே தேர்வு நிலை என்றும், 15 லட்ச ரூபாய் வரையில் வருமானம் உள்ள கோவில்களில் உள்ளவர்கள் உதவி ஆணையாளர்கள் என்றும், 15 லட்சத்துக்கு மேல் வருமானம் உள்ள கோவில்களில் உள்ளவர்கள் தேர்வு நிலை உதவி ஆணையாளர்கள் என்கின்ற வகையில் கோவில்கள் நிலை எல்லாம் மாற்றியமைக்கப்படும். பழனி முருகன் கோவில் மட்டும் உதவி ஆணையாளர், துணை ஆணையாளர் என்ற வகையில் செயல்பட்டு வருகிருர்கள். மற்றெல்லா கோவில்களுக்கும் இப்போது அறிவிக்கப்படும்

முறையில் மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுவேன்.

அதேபோன்று கோவில் நிர்வாக அதிகாரிகள் நீண்ட நெடுங் காலமாக 16 கோரிக்கைகளை அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதில் முக்கியமான கோரிக்கையின் பேரில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலிருக்கின்ற—நமது கட்டுப்பாட்டிலிருக்கும் 17,000-க்கு மேற் பட்ட கோவில்களுக்கு அறங்காவலர்களை, நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. அதே போல் பட்டதாரி அல்லாத நிர்வாக அதிகாரிகளில் உதவி ஆணையாளர் களாக உள்ளவர்கள், அவர்களுடைய சர்வீஸ் அடிப்படையில் ஆணையாள ராக நியமனம் செய்யவேண்டும் என்ற கோரிக்கையையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. இப்படி 16 கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். அதில் 12 கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு உத்திர விட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு, இந்த மானியத்தின் மீதும், பால் பண்ணை வளர்ச்சித் துறை மானியத்தின் மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தக் கோரிக்கையின் மீதான விவாதத்தை முடித்துவிட்டு, பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் என்ற தலைப்பின் கீழ் உள்ள கோரிக்கையை 12½ மணிக்குள் எடுத்தாக வேண்டும். ஆகவே, இந்த விவாதத்தை 12 மணிக்குள் முடித்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் களையும், அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் 1¾ மணி நேரம் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மூன்று மானியங்கள் இருக்கின்றன. ஒரேடியாக முடிக்க முடியாது. ஆகவே, ஒரு கோரிக் கையை சாயங்காலம் வைத்துக் கொண்டால் நல்லதாக இருக்கும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Mr. Deputy Speaker, Sir, the Demand No. 4, General Sales Tax and other Taxes and Duties is a very important Demand. The Hon. Minister for Revenue expects a revenue of Rs. 110.82 crores this year under this Demand. It is not an easy Demand. Unless some hours are allotted, I do not think we will be doing justice to that subject.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் முடிவு செய்துதான் போட்டிருக்கிறது. பின்னர் பார்த்துக் கொள்ளலாம்.

திரு. மணலி சி. கந்தசாமி: தலைவரவர்களே, இந்த மானியத்தின் மீது எனனுடைய சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒவ்வோரு வருடமும் கருத்துக்களைச் சொல்லி வருகின்ற நேரத்தில், அந்தக் கருத்துக்கள் எல்லாம் அடுத்த வருடம் வரையில் கவனிக்கப் படாமல் இருக்கின்ற காரணத்தால் மறுபடியும் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டி ஏற்படுகிறது. கோவில் நிலங்களிலிருந்து இந்த வருடம் 6¾ கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆண்டுதோறும் இந்தக் கோவில் நிலங்களை அதில் உழைக்கக்கூடிய குடியானவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும் என்று சொல்லி வருகிறேன். அதைப் பற்றி தெளிவான முடிவை எடுக்க இன்னும் அரசு மறுக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே, நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். குத்தகைக்காரர்களுக்கும் சாகுபடி செய்துகொண்டிருப்பவர்களுக்கும் அந்தக் கோவில் நிலங்களை சாஸ்வதம் ஆக்குவதற்கான வகையைச் செய்தால், இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையில் நல்ல காரியமாக இருக்கும் என்று சொல்ல விரும்பு கிறேன்.

அடுத்தபடியாக, நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், இந்தக் கோவில் நிலங்கள் பல்வேறு ஜில்லாக்களில் பல நூற்றுக்கணக்காக பலரால் சொந்தமாக அனுபவிக்கப்பட்டு வருகிறது. அதைக் கண்டுபிடிக்க விசேஷ இலாக்கா போட்டிருக்கிறோம் என்றார்கள். ஆனால் நடைமுறையில் ஏதாவது ஒரு விஷயத்தை அந்தத் துறையினர் கவனத்திற்குக் கொண்டு வந்தால், கோவில் நிலம் துர்விநியோகப்படுத்தப்படுகிறது என்று சொன்ன லும் கூட துரித நடவடிக்கை எடுக்க மறுக்கிறார்கள். இதன் காரணமாக, இப்படிப்பட்ட விஷயங்களை இந்தத் துறையினரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, நாம் ஏன் பொல்லாப்பு அடைய வேண்டும் என்று ஒதுங்கியிருக் கின்ற நிலைமை ஏற்படும்.

பல்வேறு விஷயங்களை நான் கேள்விப்படுகிறேன். பல கோவில் சொத்துக்கள், நிலங்கள் தனியார்களின் சொந்தவுடமை ஆக்கப்பட்டிருக் கின்ற நூற்றுக்கணக்கான உதாரணங்கள் இருக்கின்றன. இதுபற்றி தீவிர பரிசீலனை செய்யவேண்டும். ஒவ்வொரு சப்ரிஜிஸ்திரார் ஆபீசிலும் 100 வருட ரிகார்டுகளைப் பரிசீலனை செய்து, கோவில் நிலங்கள் சொந்த உடமை ஆக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்கின்ற ஆராய்ச்சி நடத்தினாலும் நல்லது. ஒவ்வொரு சப்ரிஜிஸ்திரார் ஆபீசுக்கும் சுற்றறிக்கை அனுப்பி, விவரங்களைச் சேகரித்து அதைப் பயன்படுத்தி கோவில் நிலங்களை மீட்பது சம்பிரதாயமாக இல்லாமல் நடைமுறையில் வரும் நிலைமையில் நடவடிக்கை துரிதமாக எடுக்க வேண்டும். இத்தகைய புகார்கள் வரும்போது உடனடியாக நடவடிக்கை எடுத்து கவனிக்காவிட்டால், சொத்தை அபகரித்தவர்கள் நம் மேல் காழ்ப்பு அடைகிறார்கள். அரசியல் செல்வாக்குப் படைத்தவர்களின் தலையீடு காரணமாகவும், இந்த இலாக்காவில் ஓரளவுக்கு இருக்கின்ற ஊழல்களும் தான் இப்படிப் பட்ட தவக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன என்று குற்றம்சாட்ட விரும்பு கிறேன். ரிஜிஸ்திரார் ஆபீசில் ஒவ்வொரு ஆண்டும் கோவில் நிலங்கள் ஏதாவது சட்ட பூர்வமாக மாற்றப்பட்டிருக்கின்றனவா, அல்லது வேறு என்ன வகையில் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன என்று விசேஷ ஆராச்சியை நடத்த வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். ஒரு விசேஷ

ஸ்குவார்ட் போட்டு, இப்படிப்பட்ட நிலங்களை மீட்க ஒரு விசேஷ துப்பறியக் கூடிய துறையைப் போட்டு, அந்த இலாகாவின் மூலம் அரசின் கவனத்திற்கு இத்தகைய விஷயங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கோவில்கள் சித்தவைத்திய சாலைகள், 5, 6 இடங்களில் தான் வைக்கப்பட்டிருக்கின்றன. கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரத்தைப் பார்த்தால் லட்ச ரூபாய்க்குமேல் ஆண்டிற்கு வருமானம் வரக்கூடிய கோவில்கள் 100 இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே அத்தகைய கோவில்கள் சித்த மருத்துவசாலைகளை ஏற்படுத்துவது அவர்கள் இஷ்டம் என்று விடுவதில் பிரயோசனமில்லை. கோவில் தர்ம கர்த்தாக்கள் விரும்பினால் செய்யலாம் என்ற நிலைமை இல்லாமல், கட்டாயம் ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். கோவில்களில் பல சித்தர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் சித்த வைத்தியசாலைகளைக் கட்டாயம் ஏற்படுத்தவேண்டும் என்று தாக்கீது அனுப்பப்படவேண்டும். அறங்காவலர்கள் இஷ்டப்பட்டால் வைக்கலாம் என்று சொல்லுகின்ற அளவுக்கு இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு கோவில்களில் எல்லாம் உள்ள கல்வெட்டுக்களிலிருந்து தமிழ்நாட்டு சரித்திரத்தை கல்லியெடுத்து ஆராய்ச்சி செய்து கோவில் வளர்ச்சி சரித்திரம், ஸ்தல புராணங்கள் இவைகளை எல்லாம் முறைபடுத்த, கோவில்கள் மூலமாக என்ன விஷயங்கள் புலனாகிறது என்று ஆராய்ச்சி செய்யும் வகையில் ஆராய்ச்சிக் குழு ஏற்படுத்தி, கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள் இவைகளை ஆதாரம் வைத்துக் கொண்டு தமிழ்நாட்டின் சரித்திரத் தன்மையை எடுத்துக் காட்டுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு இந்தக் கோவில்களின் வருமானம் பிரயோசனமாக இருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முற் அடுத்தபடியாக இன்றைக்கு ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை வைத்திருப்
பகல் பவர்களைப்போல கோவில்களின்மீதும் நம்பிக்கை வைத்திருப்பவர்கள்
4-00 இருக்கிறார்கள். சில குறிப்பிட்ட கோவில்களின்மீது அதிகமாக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் அங்கே சில குறிப்பிட்ட விசேஷங்கள் இருக்கின்றன. அந்த விசேஷங்கள் விஞ்ஞான ரீதியிலேகூட சரியாக இருக்கின்றன. மேல் நாடுகளிலேகூட அப்படிப்பட்ட விசேஷ இடங்கள் இருக்கின்றன. அங்கே எந்தெந்த இடத்தில் என்னென்ன விசேஷங்கள் என்று வகைப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

நமது நாட்டிலேயும் இன்றைக்குப் பல தீர்த்தங்கள் இருக்கின்றன. அந்த தீர்த்தங்களில் உள்ள தண்ணீருக்குச் சில விசேஷங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். சில தீர்த்தங்களில் நீராடினால் சில நோய்கள் கூட போய்விடுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே நமது அறநிலையத் துறையிலிருந்து எந்தெந்தத் தீர்த்தங்களில் என்னென்ன விசேஷங்கள், என்னென்ன பலன்கள் என்பதை வகைப்படுத்தி அறிவிக்க வேண்டும்.

அப்படிச் செய்வது பக்தர்களுக்கு மட்டுமல்ல; மற்றவர்களுக்கும் பயன்படும்.

சமீப காலத்தில்கூட நான் நம்முடைய அமைச்சரவர்களுடைய பகுதியில் வாளத்தோட்டம் என்ற இடத்திற்குப் போயிருந்தேன். அங்கே இருக்கின்ற கோவிலுக்கும் போயிருந்தேன். அந்த மண்ணுக்கு விஷத்தைக் கூட எடுக்கும் சக்தி இருக்கிறது என்று சொன்னார்கள். நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். 2 லட்சம் ரூபாய் உண்டி வருமானம் கிடைக்கிறது. இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து பெரிய அளவிலே மக்களுக்குப் பயன்படும்படி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் இன்னும் வருமானம் பெருகும். அந்த வகையிலே தீர்த்த ஸ்தலங்களையும், விசேஷத் தன்மைவாய்ந்த இடங்களையும் ஒழுங்குபடுத்தி அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கோவில் பஞ்சாயத்தார்களை நியமிப்பதுபற்றிச் சொல்கிறேன். அவர்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும். தேர்தல் என்றால் பொதுமக்கள் நேர்ந்தெடுப்படுப்பது என்று நான் சொல்லவில்லை. 5 பேரை நியமிப்பது என்றால், 2 பேரை நாமினேட் செய்யலாம், 3 பேரை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மெம்பர்கள் தேர்ந்தெடுத்து நியமனம் செய்யலாம். அப்படிச் செய்தால் கோவில் நிர்வாகம் நல்லமுறையில் நடைபெறும். ஜனநாயக முறையில் கோவில் பஞ்சாயத்தார்கள் நியமிக்கப்பட்டதாகக் கருதப்படும். எனவே, அறங்காவலர்களை நியமிக்கும்போது அமைச்சாவர்கள் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு அறங்காவலருக்கு ஒரு கோவிலுக்குமேல் இருக்கக் கூடாது. இப்போது 7, 8 கோவில்களில் ஒருவர் அறங்காவலராக இருக்கிறார். அதனால், சில தவறுகள் நடைபெறுகின்றன. ஆகவே, அந்த முறை கூடாது, அதைத் தடுக்க வேண்டும். மக்கள் மத்தியிலும் அவர்கள் செல்வாக்கு குறைந்துவிடும். அது மட்டுமல்ல; அப்படிப்பட்டவர்களால் உங்கள் கட்சியின் பெயரும் கெட்டுவிடும். பொதுவாக என்னைக் கேட்டால் எம். எல். ஏ. க்கள் அறங்காவலர்களாக இருக்கக்கூடாது. (குறுக்கீடு). எங்கள் கட்சி உறுப்பினர்களை விட்டுவிட்டு நான் சொல்லவில்லை. எல்லோரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். எம்.எல்.ஏ. யாக இருப்பவர்களுக்கு ஏகப்பட்ட வேலைகள் இருக்கின்றன. அதைவிட்டுவிட்டு கோவில்களில் போய் உட்கார்ந்துகொள்வது விரும்பத்தக்கதல்ல. மக்களுக்காகச் செய்யவேண்டிய வேலைகளை விட்டுவிட்டு, கோவில்களில் போய் எம. எல. ஏக்கள் உட்க்கார்ந்து கொண்டால் என்ன அர்த்தம்? ஆகவே, எம். எல். ஏ.க்கள் கோவில் நிர்வாகத்திற்குப் போக வேண்டாம்; போகக் கூடாது என்பது என் கருத்து.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: நீங்கள் பேசுவது என் காதில் விழவில்லை. மைக்கில் பேசுங்கள்.

திரு. மணலி சி. கந்தசாமி: எனக்கு நன்ருகக் கேட்கிறது. அம்மையார் அவர்கள் பேசிஞல் என் காதை பொத்துக் கொண்டு போகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி; உங்கள் காதில் ஏதோ கோளாறு இருக்கிறது என்ருல் அதற்கு நான் என்ன செய்யமுடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். இந்த வயதிலும் அவ்வளவு நன்ருக காது கேட்கிறது என்றுதான் அதற்கு பொருள்.

திரு. மணலி சி. கந்தசாமி; ஆகவே, நான் மீண்டும் கேட்டுக் கொள்வது எம். எல். ஏ.-கள் மக்களுக்காக ஆற்றவேண்டிய பணிகளைச் செய்தால்போதும்; கோவில் நிர்வாகத்திற்குப் போக வேண்டாம்.

அடுத்து இந்த இலாக்காவில் ப்ரமோஷன் கொடுப்பதில் பல பார பட்சம் காட்டப்படுவதாகப் புகார்கள் வருகின்றன. பணியாளர்கள் எல் லோருக்கும் நியாயமான உரிமை இருக்கவேண்டும். முறைப்படி ப்ரமோஷன் கொடுக்கவேண்டும். அதற்கு அமைச்சர்கள் ஆழ்ந்த அக்கறை செலுத்தி நியாயமான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோவில் சிப்பந்திகளாக இருப்பவர்களுக்கு இப்போது சில சலுகைகளை அளித்திருக்கிருர்கள். அதை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். அவர்களும் சர்க்கார் இலாக்காக்களில் இருப்பவர் களைப்போல சலுகைகளை அனுபவிக்கின்ற உரிமை பெற்றவர்கள். எனவே இதை நான் வரவேற்கிறேன் என்று கூறி, இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு கு. காமாட்சி; தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன்; பெரியவர் மணலி அவர்கள் எந்தெந்த கோவில்களுக்குச் சென்ருர்கள் எந்தெந்த நீரூற்றுகளிலே மூழ்கி இருக்கிருர்கள், அதஞல் என்னென்ன பலன்கள் கிடைத்திருக்கின்றன என்ற விபரங்களை அவர்கள் அறிவித்தால் நலமாக இருக்கும்.

திரு மணலி சி. கந்தசாமி: எஸ்டிமேட் கமிட்டியின் மெம்பர் என்ற முறையில் நம்முடைய உறுப்பினர் திரு பழனிவேல் ராஜன் —எஸ்டிமேட் கமிட்டியின் சேர்மன்—அவர்கள் தயவில் எல்லாக் கோவில்களுக்கும் போய்வந்திருக்கிறேன்.

திரு சொ. பெருமாள்; மதிப்பிற்குரிய தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணு அவர்களின் வழியில் அயராது பணியாற்றும் இந்த தமிழக அரசின் 1973-74-ம்ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்கீழ் இன்று இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்து சமய அறநிலையத்துறை மானியத்தையும், பால்பண்ணை வளர்ச்சித் துறை மானியத்தையும் மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களால் இன்று கொண்டு வரப்பட இருக்கின்ற வருவாய்த்துறை மானிய கோரிக்கையையும் ஆதரித்து என்னு டைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு நா. வீராசாமி தலைமை)

இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசு டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு நிலையான ஆட்சியாக, சமதர்ம ஆட்சியாக ஏழை எளிய விவசாயி ஆட்சியாகவும் இந்த நாட்டிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்டவர்களின் நலன்களுக்கும், பிற்பட்டோர் நலன்களுக்கும் பொதுமக்களுக்கும் நல்ல பல காரியங்களைச் செய்திருக்கிறது; செய்துக்கொண்டு வருகிறது. இந்த முறையிலே சீருமனும், சிறப்புடனும், சிறந்தமுறையில் தமிழகத்தில் இன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெறுவதைக் கண்டு பொருமைப்படுபவர் களும், பொச்சரிப்படைகின்றவர்களும் இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட வேண்டுமென்று திட்டமிட்டுக்கொண்டிருக்கிருர்கள். அதற்காக கிடுகிடு போராட்டங்களை எல்லாம் நடத்திப் பார்க்கிருர்கள்; ஆர்பாட்டங்களை நடத்துகிருர்கள். அராஜகங்கள் செய்கிருர்கள். இப்படியெல்லாம் செய்து மக்களை இந்த அந்த அரசுமீது வெறுப்படையச் செய்யலாமா என்று பார்க்கிருர்கள். இவர்களையெல்லாம் யார் யார் என்பதை மக்கள் புரிந்துக்கொண்டு,நான் இருக்கிருர்கள் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக்கொள்வதற்கு முன் ஞல் பல ஆயிரக்கணக்கான கோவில்கள் பாராமரிக்கப்படாமல் பாழடைந்த நிலையிலே கிடந்தன. இன்றைக்குப் பொறுப்பேற்று இருக்கும் இந்த அரசு அப்படிப்பட்டக் கோவில்களை எல்லாம் பாராமரித்து, மக்களின் கலாச்சாரக் கொள்கைகளையொட்டி, திருப்பணிகளைச் செய்து, அதஞல் நாட்டு மக்களின் பாராட்டைப் பெற்றுவருகிறது. அதுமட்டுமல்ல; தாழ்த்தப்பட்டோர்களையும்,பிற்பட்டோர்களையும் கோவில் அறங்காவலர்களாக நியமித்திருக்கிருர்கள். தாழ்த்தப்பட்ட மக்களும் அர்ச்சனை செய்ய வழிவகைச் செய்திருக்கிருர்கள். அதை மத்திய அரசும் ஏற்றுக்கொள்கின்ற வகையில் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிருர்கள். நானும் ஒரு ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே இச்திட்டத்திற்காக தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பிலே இந்த அரசைப் பாராட்க கடமைப்பட்டிருக்கிறேன், அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோவில் வருமானத்தைக் கொண்டு திருமண மண்ட பங்கள், கல்விக் கூடங்கள், கல்லூரிகள், உடல் ஊனமுற்ருேர்களுக்குப் பள்ளிக்கூடங்கள், முதியோர் கல்வி நிலையங்கள், மருத்துவ மனைகள் இவைபோன்ற பல நல்ல காரியங்களை எல்லாம் இந்த அறநிலையத்துறை வருவாயில் இருந்து செய்து வருகிறது. ஆகையால் இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் பல்லாயிரக்கணக்கான கோவில் வருமானத்தைக் கொண்டு, பல லட்சக்கணக்கான மக்களுக்கு நற்பணிகளைச் செய்துவருகிறது நமது தமிழக அரசு என்பதை அறிந்து உண்மையிலே இந்த நாட்டுமக்கள் பெரு மகிழ்ச்சியடைகிருர்கள்.

இருந்தாலும் பல ஆயிரக்கணக்கான கோவில் நிலங்களை பலர் கையகப் படுத்திக்கொண்டு, தங்களுடைய உடைமையாகக் கொண்டாடி வருகிருர்கள் என்று எனக்கு முன்ஞல் பேசியவர்கள் சொன்ஞர்கள். அந்தவகையில் பார்க்கின்றபோது, கோவில்களில் இருக்கின்ற கல்வெட்டுக்களைப் படித்துப்

பார்த்து, ஆராய்ந்து பார்த்து, இந்த சொத்துக்கள் எல்லாம் எப்போது, எந்த முறையிலே வந்தன; யார் யார் இப்போது இந்தச் சொத்துக்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்து, இந்தச் சொத்துக்களை எல்லாம் திரும்பப் பெறவேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சரவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நம்முடைய அரசு அந்தமாதிரியாகத் தனியார் பலர் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த சொத்துக்களையெல்லாம் சிறுக சிறுகச் கையகப்படுத்தி வருவதைப் பார்க்கிறோம். அதைப்போலவே இன்னும் தீவிரமாக ஆராய்ந்து பார்த்து, இன்னும் யார் யாரிடம் கோவில் சொத்துக்கள் இருக்கின்றனவோ அவைகளை எல்லாம் எடுத்து, தமிழக அரசுத் துறையின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அறங்காவலர்களைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்போது இருக்கின்ற அறங்காவலர்களின் பதவிக் காலம் முடிவடைந்து, புதிதாக நியமிக்கப்படும் அறங்காவலர்கள் பொறுப்பேற்கச் செல்கின்றபோது அவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்காமல் தட்டிக் கழிக்கக் கூடிய ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நேரங்களிலே, பரம்பரை பாத்தியம் கூறி கோர்ட்டுக்குச் செல்வதும் அதற்குச் செலவுத் தொகையை கோவில் கணக்கில் பொய் கணக்கு எழுதுவதும் இதுபோன்ற பல தவறுகள் நடைபெறுவதாகவும் தெரிகிறது. ஆகவே, மற்ற மாநிலங்களிலே இருப்பதைப்போல பழைய அறங்காவலர்களாக இருப்பவர்கள், புதிதாக பொறுப்பேற்க வரும் அறங்காவலர்களிடம் உடனடியாகப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். இல்லையென்றால் அதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தைப் பார்க்கின்றபோது, 1973–74-ம் ஆண்டில் 2 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதைப் பார்க்கின்ற நேரத்தில் இந்த நாட்டு மக்களுக்குத் தேவையான சத்துணவு பாலில் அதிகமாக இருக்கின்றது என்ற அந்தத் தத்துவத்தின் பிரகாரம் பால் உற்பத்தியைப் பெருக்க நாம் முயற்சி எடுத்து வருகின்றோம். இதற்காக நமது அரசு பல இடங்களிலே பால் உற்பத்திச் சங்கங்களை அமைத்துத் தந்து, மாடுகளை வாங்குவதற்கும் அவற்றைப் பேணிக் காக்கும் செலவை ஈடுசெய்யவும், மேலும் பால் உற்பத்திச் சங்கங்களுக்குக் கட்டிட வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளுவதற்கும் பணத்தை மானியமாகவும் கடனாகவும் கொடுத்து வருகின்றதை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

சாதாரணமாக, விவசாயிகளுக்கு நமது நாட்டில் ஆண்டு முழுவதிற்கும் வேலைகள் இருப்பதில்லை. அப்படிப்பட்ட நிலையில் அவர்களுடைய வருமானத்தைச் சற்றுக் கூடுதலாக்கிக் கொள்ளும் வகையில் கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட சங்கங்களை அமைத்துக்கொள்ளுவதில் அரசு அக்கறை காண்பித்து வருவதைப் பாராட்டுகிறோம். இப்படிப்பட்ட பால் வழங்கும் சங்கங்கள் காட்டுமன்னார்கோவில்தொகுதியில்செயல்படாமல் இருந்து வருகின்றன.

அவைகளை மீண்டும் செயல்படுத்தித் தரவேண்டும், மேலும் இரண்டொரு பால் வழங்கும் சங்கங்களை அங்கே ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தினை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதன்முதலாக நான் சொல்ல விரும்புவது, இன்று அறக்கட்டளைத் துறையில் உள்ள ஊழியர்களுக்குச் சில சலுகைகளை அறிவித்ததுடன் அவர்களுக்கு ஊதிய உயர்வினை அளித்தமைக்கு நன்றி கூறி, அதற்காக என் மகிழ்ச்சியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மதிப்பிற்குரிய மணலி அவர்கள் குறிப்பிட்டார்கள், கோவில் நிலங்களை யார் யார் உழுது பயிரிடுகின்றார்களோ அப்படிப்பட்ட நிலங்கள் அவர்களுக்கே உடைமையாக்க வேண்டும் என்று. வரவேற்கிறேன், ஒரு சிறு மாற்றத்துடன். நல்ல கொள்கைதான். ஆனாலும் இந்தக் கொள்கையினை இந்துக் கோவில்களுக்கு மட்டுமின்றி பிற சமயத்தினரின் கோவில்களுக்கும் அறக்கட்டளை என்ற பெயரால் நிலம் இருக்கின்றது. அந்த நிலங்கள் விஷயத்திலும் இந்தக் கொள்கை அமுலாக்கப்பட வேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன். ஏன் என்றால் ஒரு கொள்கை என்று வந்துவிட்டால் அந்தக் கொள்கையின் அடிப்படையில் வித்தியாசம் காண்பிக்கக்கூடாது, ஒரு சமயத்திலுள்ள கோவில்களுக்கும் மற்ற சமயங்களின் கீழுள்ள கோவில்களுக்கும் இடையே வித்தியாசம் காண்பிக்கக் கூடாது. அப்படி ஒரு சமயத்தினருடைய கோவில்களை மட்டும் கணக்கிலெடுத்துக் கொள்ளுவதானது இந்த விஷயத்தைப் பொறுத்த மட்டில் சரியான நிலைமையாகாது என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அறங்காவலர் நியமனம் பற்றிக் குறிப்பிட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பொறுப்பில் இருக்கக் கூடாது என்றும் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் அறங்காவலர்களாக இருப்பவர்களில் பெண்களுக்கு உரிமைகள் கொடுக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் ஐந்தில் மூன்று பேர் பெண்களாகவும் தலைமை ட்ரஸ்டியாக உள்ளவர்கள்கூட பெண்களாக இருக்க வேண்டும். ஏன் என்றால் நமது சமுதாயத்தில், நமது பண்பாட்டினைக் காப்பாற்றுகின்றவர்களே பெண்கள்தான். அவர்கள்தான் நமது பண்பாடு, மதம், கலாச்சாரம் எல்லாவற்றையும் காப்பாற்றி வருகின்றார்கள். எனவே நமது கோவில்களுக்காக உள்ள இந்த அறங்காவலர்களில் பெண்களை அதிக அளவிற்குச் சேர்த்துக்கொள்ளுகின்ற இந்த ஆலோசனையை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களை இன்னும் ஒன்று கேட்டுக்கொள்ள விழைகிறேன். தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கோவில்களிலும் உள்ள அறக்கட்டளைகளின் விவரங்கள், கோவில் கொண்டிருக்கும் சிலைகளின் விவரங்கள், அவை வெண்கலத்தினால் ஆனவையா அல்லது பஞ்ச லோகத்தினால் ஆக்கப்பட்டவையா, அந்தக் கோவில்களின்

பண்டைய சரித்திரம் என்ன, யாரால் எப்போது கட்டப்பட்டன, அவர்கள் விட்டுச் சென்ற அறக்கட்டளைகள் யாவை, பின்னர் சேர்க்கப்பட்ட அறக்கட்டளைகள் யாவை, எவ்வெப்பொழுது யாரால் புதுப்பிக்கப்பட்டன என்பது போன்ற இந்த தகவல்களையெல்லாம் சேர்த்துத் தொகுத்து ஒரு புத்தகவடியில் அளிக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்போதுதான் அவற்றையெல்லாம் ஏற்படுத்திய மன்னர்கள் அல்லது பெரியவர்களுடைய அபிலாஷைகளை முறையாகப் பூர்த்தி செய்கிறோமா என்பதை இந்த மன்றம் பரிசீலிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு, அடுத்து பால் துறையினைப் பற்றி ஒரே ஒரு கருத்தினை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கிராமப்புறங்களிலே முன்பு இருந்த நிலைமாறி இன்றைக்கு அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களும் மாடுகளைப் பேணி வளர்ப்பதில்—அவர்கள் எப்படி விவசாயத்தில் விஞ்ஞான முறைகளை ஏற்க முன் வந்திருக்கின்றார்களோ அது போல மாடுகளைப் பேணி வளர்ப்பதில்—விஞ்ஞான முறைகளை ஏற்க முன்வந்திருக்கின்றார்கள். அந்த அளவிற்கு அவர்களிடத்தில் இப்போது மன மாற்றம் ஏற்பட்டிருக்கின்றதை நாம் காணலாம். இந்த மனமாற்றத்தைப் பயன்படுத்திக் கொண்டு பால் உற்பத்தியை பெருக்க நாம் மேலும் அவர்களுக்கு வேண்டிய ஊக்கத்தினைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு தமிழகத்தைப் பொருத்த வரையில் பாலைப் பதனிட்டு பௌடராக்கும் ஒரு தொழிற்சாலை நமக்கு அவசியம் வேண்டும். அப்போதுதான் மேலை நாடுகளைப் போல நாமும் எஞ்சியிருக்கும் பாலைப் பௌடராக்கி வைக்கக்கூடிய நிலை ஏற்படும். இதை அரசு பரிசீலனை செய்யவேண்டும் என்று கூறி எனக்கு வாய்ப்பினை அளித்த தாற்காலிகத் தலைவருக்கு நன்றி கூறி அமருகிறேன்.

திரு. சித. சிதம்பரம்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே, அறநிலையத் துறை, பால் வளர்ச்சித் துறை மீதான இந்த மானியத்தினை வரவேற்றுப் பேசுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

காரணம், ஒரு சமயம் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அறநிலையங்களை நல்ல முறையில் நடத்துமா என்று பலர் சந்தேகம் கொண்டிருந்த நேரத்தில் அப்படிப்பட்ட சந்தேகங்களைப் போக்கும் விதத்தில் அறநிலைய நிர்வாகத்தில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் காண்பித்து, அதில் பணியாற்றுகின்றவர்களுக்கு நல்ல பல சலுகைகளையும் வாய்ப்புகளையும் அளித்து, கோவில்களில் இப்படித் திருப்பணி ஆற்றுகின்றவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு இவற்றையெல்லாம் அளித்திருப்பதை நோக்குமிடத்து இந்தத் துறை எவ்வளவு சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது என்பதற்கு வேறு ஆதாரம் வேண்டியதில்லை.

இந்த அரசு பொறுப்பினை ஏற்றுக்கொண்ட நேரத்தில் கோவில் திருப்பணி நடைபெறுமா, கோவில்கள் புதுப்பிக்கப்படுமா என்ற சந்தேகங்கள் பலருக்கு இருந்த காலத்தில் இந்த அரசு வந்தவுடன் இந்தத் துறையில் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றதை இன்று அனைவரும் வரவேற்கின்றதைப் பார்க்கிறோம். 1967-ம் ஆண்டில் 200 கோவில்களை

ரூ. 119 லட்சத்திற்குப் புதுப்பித்திருக்கும் நிலையிலே 1973-ம் ஆண்டிலே 1,500 கோவில்களை புதுப்பிக்கப்போகிறோம் என்ற நல்ல செய்தியினை இந்த அறிவிப்பிலே பார்க்கும்போது இந்தப் பணிகளில் நாம் எவ்வளவு சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறோம் என்பதற்கு இதைவிட எடுத்துக்காட்டு வேறு இருக்க முடியாது என்று எண்ணுகிறேன்.

அதைப்போல எல்லாக் கோவில்களிலும் உள்ள பணத்தை எடுத்து கல்யாண மண்டபங்கள் கட்டி, இலவசத் திருமணம் அங்கங்கே நடைபெற நல்லதொரு திட்டத்தை இந்த அரசு ஏற்படுத்தியிருப்பதற்கு மகிழ்ச்சியோடு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலும் என்னுடைய ஊரில் $1\frac{1}{2}$ லட்சத்தில் கல்யாண மண்டபம் கட்ட திட்டமிடப்பட்டு, திருப்பணிக் குழுவினரால் 40 ஆயிரம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அரசாங்கமும் நிதி உதவி வழங்கி இதனை நிறைவேற்றித் தருமாறு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அறக்கட்டளைகள் மூலம் நமது அரசு அங்கங்கே உயர்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்தி வருவதற்கும் நான் என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக எங்கள் பகுதியில் பள்ளத்தூரில் தஞ்சாவூர் பகுதியைச் சேர்ந்த அறக்கட்டளை மூலம் 1 லட்சத்திற்கு—வேத பாராயணங்களுக்கும், மடாலயங்களுக்கும் செலவழித்துக்கொண்டு வந்தார்கள். நமது அமைச்சர் அவர்கள் அவர்களிடத்தில் சொல்லி பள்ளத்தூரில் அந்த அறக்கட்டளை மூலம் ஒரு உயர்நிலைப் பள்ளியை இந்த ஆண்டு ஏற்படுத்த முன்வந்திருப்பதற்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக அமைக்கவும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களை அர்ச்சகர்களாக நியமனம் செய்ய நமது அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்த விரைவில் ஏற்பாடு செய்யவேண்டும்என்னும் என்னுடைய வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவில் திருப்பணிகளைச் செய்தவர்கள் செட்டிநாட்டுப் பகுதியில் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கவனித்து அங்கங்கே அறங்காவலர்களாக நியமிப்பது மேலும் பல திருப்பணிகள் நடைபெற உதவியாக இருக்கும். இன்றைக்கு அறங்காவலர்களாக உள்ளவர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் விட்டுவிடக் கூடாது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, அறநிலைய பாதுகாப்புத் துறையின் சார்பாக கொண்டுவந்திருக்கிற மானியத்தின்மீது என் கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். திருக்கோவில்களில் உள்ள உபரி நிதியைக்கொண்டு அங்கங்கே பள்ளிகளும், கல்லூரிகளும் ஏற்படுத்த இருப்பதை நான் மகிழ்ச்சியோடு பாராட்டுவதோடு, பல சித்த மருத்துவ சாலைகளை அமைக்க இருப்பதைக் குறித்து என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உபரி நிதியைக் கொண்டு கோவில் திருப்பணிகள் செய்வதைப் பற்றி அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் பல கோவில்கள் திருப்பணி செய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. குறிப்பாக காஞ்சீபுரத்தில் இருக்கக்கூடிய வரதராஜப் பெருமாள் கோவில் திருப்பணி யுனஸ்கோ நிதியின் மூலம் எடுத்துச் செய்வதாக இருந்தது, அது கைவிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லிப்புத்தூர் கோவிலையும் உடனடியாக எடுத்துத் திருப்பணி செய்ய வேண்டிய அத்தியாவசியம் இருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பூர் பாரெக்ஸ் ரோடில் சுப்பையாசாமி மடம் இருக்கிறது. ஸ்ரீலஸ்ரீ சுப்பையா சுவாமிகள் அங்கே சமாதியாகி இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட இனத்திற்குரிய மொழியாகிய சமஸ்கிருதத்தை தாழ்த்தப்பட்டவர்களும் கற்றுப் பயில வேண்டும் என்பதற்கு சுவாமி சகஜானந்தா அவர்களை சுப்பையா சுவாமி சிஷ்யராக ஏற்று அவருக்கு மந்திரோபதேசம் சொல்லி அவர் சட்டசபை அங்கத்தினராகவும் இருந்து பல தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களை உருவாக்கினார். திரு. சுப்பையாசாமி அவர்களது சரித்திரத்தை திரு. அனந்தசாமியாகிய அவர் சிஷ்யர் எழுதியிருக்கிறார். அதுபோன்ற புத்தகங்களை இந்த அறநிலைய நூலகங்களில் வாங்கி வைக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

கோவில்களில் தாழ்த்தப்பட்டவர்களை டிரஸ்டிகளாக ஏற்படுத்துவது பற்றிக் கூறியிருக்கிறார்கள். எங்கள் ஆட்சிக் காலத்திலேயே அந்த முறை இருந்தது. இன்னும் அதுபோல தாழ்த்தப்பட்டவர்களை அறங்காவலர்களாகப் போடப்பட வேண்டிய கோவில்கள் பல இருக்கின்றன. அங்கெல்லாம் போட வேண்டும். இன்னும் அறங்காவலர்களை கட்சி நோக்கத்தோடு போடாமல் பரந்த மனப்பான்மையுடன் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவில் உத்சவ காலங்களில் பந்தோபஸ்து பணி போன்றவற்றுக்கு போலீஸ்காரர்களைப் போடாமல் அதிக அளவில் ஸ்கவுட்டுகளை உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி சமயத்தில் நடந்த வருந்தத்தக்க சம்பவம் நமக்குத் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக எடுத்துக் கொண்ட முயற்சிக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இனியாகிலும் இது போன்ற விழாக் காலங்களில் ஸ்கவுட்டுகளை அதிமாகப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஐந்நூறு கோவில்களுக்குச் சேர்த்து ஒரு இ.ஓ. அமைக்க இருப்பதாகவும், அந்த இ.ஓ.-வுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட பணம் இல்லாத கோவில்களாக இருந்தால் அவருக்கு அரசாங்கத்தில் இருந்தே பணம் கொடுக்க ஏற்பாடு செய்ய இருப்பதாகவும் சொன்னார்கள். என்னுடைய யோசனை—சில கோவில்கள் சில இனத்தவர்களாலேயே நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. கோவிலுக்கு என்று நிதி இல்லாவிட்டாலும் அந்த இனத்தவர்களே பணம் போட்டு விழா நடத்துகிறார்கள்.

அதில் எல்லாம் சற்று நாம் தலையிடாமல் ஒதுங்கியிருந்தாலே போதும். அவை நல்லமுறையில் தொடர்ந்து நடைபெறுவதற்கு அந்த அந்தக் கோவில்களில் இதுவரை நடத்தி வரப்பட்டு வருவதுபோலவே அவரவர்களாலேயே நடத்திக்கொள்ள நாம் அனுமதிப்பதுதான் சிறந்ததாக இருக்கும் என்கிற என்னுடைய யோசனையைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றியையும், வணக்கத்தையும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பான காரியங்களை எல்லாம் நமது அறத்துறையின் மூலம் மாநிலத்தில் செய்வது பற்றி அறிவித்திருக்கிறார்கள். கோவில்கள் நிறைந்திருக்கிற தஞ்சை மாவட்ட உறுப்பினன் என்ற முறையில் உலகம் தோன்றி....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): "உலகம் தோன்றி" என ஆரம்பிக்காதீர்கள். உங்களுக்கு 5 நிமிடங்கள்தான் இருக்கின்றன. அதற்குள் முடிக்க வேண்டும். நேரம் கிடையாது.

திரு. அ. தேவேந்திரன் : ஆலயங்களில் பணிபுரிகிறவர்களுடைய சங்கத் தலைவன் என்ற முறையில் நான் சொல்ல வந்தேன். அங்கே பணியாற்றுகிறவர்களுக்கு எத்தனையோ குறைகள் இருக்கின்றன. என்றாலும் எந்தவிதப் போராட்டங்களும் நடத்தாது அமைதியாக அவர்கள் இருந்தார்கள். மற்ற மற்ற துறையினர்கள் போராட்டங்கள் நடத்துவதுபோல நடத்தவில்லை. அவர்களுக்கு நமது அரசு 10 ரூபாய் உயர்த்திக் கொடுக்க அறிவித்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தினை மடாலயங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். அண்மையில் நடத்தப்படுகிற விழாக் காலங்களில் கோவில் சிப்பந்திகள் திடீர் திடீர் என்று தாக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீரங்கத்தில் நடந்த சம்பவம் பற்றிக் கூடி உடனடியாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்ததற்கு மாநில கோவிலில் பணியாற்றுவோர் தொழிற் சங்கத் தலைவன் என்ற முறையில் நன்றி செலுத்திக்கொள்கிறேன். விழாக் காலங்களில் வருகிற பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற பணியினை மட்டும் போலீஸ் துறையினருக்குத் தந்தால்போதும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நமது மாநிலத்தில் உள்ள 13 ஆயிரம் கோவில்களில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இன்றைக்கு அரசாங்கம் அளித்துள்ள சலுகையினால் பயன் அடைகிறார்கள்.

இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், அந்தத் தொழிலாளர்கள் என்றைக்கும் இந்த அரசினுடைய பக்கத்திலே இருக்கிறார்கள். எந்தப் போராட்டத்தினையும் நடத்தாமல், தங்களுடைய கோரிக்கைகளைச் சொன்ன நேரத்திலே, இந்த அரசு மிகுந்த கனிவோடு, கவனித்து ஆவன செய்கிறது. ஆகவே நம்முடைய கலைஞர் அவர்களுக்கும், நம்முடைய அந்தத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அதைப்போல்

இருக்கின்றன. பெண்களுக்கென்று கல்லூரி மதுரையிலேதான் இருக்கின்றது—30 ஆயிரம், 40 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட அந்த இடத்திலே அந்தக் கோயிலின் சார்பாக ஒரு கல்லூரி தேவை என்பதை வலியுறுத்திக் கூறிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, பால் பண்ணை வளர்ச்சித் துறை மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது அரசினுடைய கொள்கை எப்படி இருக்கிறது என்று சொன்னால் பால் உற்பத்தியிலே செலுத்தக்கூடிய கவனம் ஈடேறுமா என்ற சந்தேகம் இருக்கிறது. பால் உற்பத்தியிலே ஈடுபடுகின்ற விவசாயிகளுக்குச் சரியான விலை கிடைக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கால் நடை வளர்ச்சியும் பால் உற்பத்தியோடு சம்பந்தப்பட்டு இருப்பதால் இரண்டு துறைகளுக்கும் சேர்த்து ஒரே அமைச்சர் இருந்தால்தான் சரியாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. தொழில் நுட்ப உதவிக்காக மாட்டு மந்தை— ஜெர்ஸி போன்ற மாடுகளை வளர்ப்பதற்காக ஒரு பண்ணை அமைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது—தனியாக இப்பொழுது அமைக்கப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே ஒசூர், அபிஷேகப்பட்டணம், ஒரத்தநாடு, புதுக்கோட்டை ஆகிய இடங்களிலே இப்படிப்பட்ட பண்ணைகள் ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கின்றன, இப்படிப்பட்ட நிலையிலே அதோடு இல்லாமல் இந்தத் துறையிலே தனியாக அப்படிப்பட்ட ஒரு மந்தை அமைப்பது பணத்தை விரயம் செய்வதாகத்தான் முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே சொல்லப்பட்டிருக்கிறது, செயற்கை முறையிலே கருத்தரிக்கச் செய்வதற்கு தனியாக சில பேர்களுக்குப் பயிற்சி அளித்து செய்யப் போவதாகத் தெரிகிறது. ஏற்கனவே கால்நடை உதவியாளர்கள் அந்தப் பணியைச் செய்வதற்கு நல்ல முறையிலே ஒத்துழைத்து வருகிறார்கள். கால்நடை உதவியாளர்கள் எல்லாக் கிராமங்களிலும் இப்பொழுது பரவலாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களையே நல்ல முறையிலே பயன்படுத்திக்கொள்ளலாம். அப்படி இல்லாமல் 6 வாரம், 10 வாரம் என்று பயிற்சி கொடுத்து அந்தப் பணியைச் செய்யச் சொல்வது சரியல்ல. அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டியதுதான், ஆனால் வேறு வேலை கொடுக்கலாம். கால்நடை உதவியாளர்களுக்கு செயற்கைக் கருத்தரிக்கின்ற முறையில் வேலை கொடுப்பதுதான் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு பால் வினியோக சங்கங்கள் அமைப்பதிலே நானே ஈடுபட்டு 10, 12 ஆண்டுகளாக முயற்சி செய்து பார்த்தேன். கூட்டுறவுப் பண்ணையை ஆரம்பித்த காலத்திலே வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமலே பலர் விலகிவிடுகிறார்கள். அதைவிட்டு விட்டு வேறு ஒரு கிராமத்தில் போய்

கூட்டுறவு பால் பண்ணை ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலை தான் ஏற்படுகிறது. உற்பத்தியாகிற பால் 90 பைசா என்றால் இங்கே 1.40-க்கு விற்கப்படுகிறது. உற்பத்தியாகிற இடத்திலிருந்து யூனியனுக்கு வந்து, பிறகு செல்லிங் சென்டருக்கு வந்து பிறகு இங்கே விற்கப்படுகிறது. இதனால் உற்பத்தியாளர்களுக்கு அந்தப் பணம் முழுவதும் கிடைப்பதில்லை.

அது மட்டுமல்ல. மாட்டுத் தீவனமோ—பிண்ணாக்கும், பருத்திக்கொட்டையும், ரூ. 50-க்கு விற்றது 150-க்கு உயர்ந்துவிட்டது. ஆனால் பால் விலை குறைவாகத்தான் இருக்கிறது. பலர் ஏற்கனவே வாங்கிய கடனை திரும்பச் செலுத்த முடியாமல் அவர்கள் சொத்துக்கள் ஜப்தியாகி விற்பனை செய்துதான் கடனை அடைக்க முடிகிறது. இது ஒரு துணைத் தொழிலாக இருக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு இது ஒரு துணைத் தொழிலாக, வருமானம் உள்ள தொழிலாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முப்பது லட்சம் ரூபாய் கடன் கொடுப்பதற்காக என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. 2,122 கூட்டுறவு பால் சங்கங்கள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சங்கத்திற்கு ஒரு மாடு என்று வைத்துக் கொண்டால் 3 ஆயிரம் மாடுகள் வரை தேவைப்படும். நான்கு லிட்டர் பால் ஒரு மாடு தரக்கூடிய நிலையில் வேண்டுமென்றால் ஜெர்ஸி, சிந்தி, மூர்ரா போன்ற மாடுகளை வாங்க வேண்டும். ஒரு மாடு குறைந்தது 2,000 ரூபாய் ஆகும். ஆகவே இந்தத் தொகையைக் கொண்டு 1,500 மாடுகளுக்கு மேல் வாங்க முடியாது. இந்த நிலையில் 2,122 சங்கங்கள் இருக்கின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. எங்கே இந்தத் தொகை போதும்? பால் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வகையிலே, ஊக்கம் கொடுக்கக் கூடிய முறையிலே நியாயமான விலை உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கிறதா என்பதை பார்த்து கால்நடை இலாக்காவும், பால் உற்பத்தி இலாக்காவும் சேர்ந்து ஒரு அமைச்சரால் கவனிக்கப்பட்டால்தான் சரியாக இருக்கும், நோக்கம் நிறைவேறும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* THIRU K. S. KOTHANDARAMIAH: Hon'ble Mr. Chairman, I thank you very much for the opportunity given to me to say a few words on the Demand No. 10 Milk Supply Schemes for which Rs. 2,02,28,900 is expected from this House. I went through the note given here. It contains some useful points. The Hon. Minister in charge of it has taken a lot of care to improve this Department. Just like milk is so sweet, interesting and pleasing, the contents of the note are also very interesting because it has got a number of good points.

Since time is very short, I will confine myself to certain points with regard to milk position in Hosur, and Denganikota in Dharmapuri District. Every day a lot of milk is sent from our State to Bangalore. Our buses are carrying hundreds of milk cans every day to Bangalore and as such, we are not able to get milk in our rural areas.

In rural areas it is very difficult to get milk even for children. I do not know why so much of milk is allowed to go to Bangalore. The price paid there for a litre is more and the price paid here is less. Therefore, they may be sending so much milk to Bangalore. I would request the Hon. Minister to go into this and see that the price quick is increased and the milk which is sent to Bangalore and other areas from our district is stopped and that milk goes to villages where there is no milk.

Secondly, from Hosur cattle farm large quantity milk is sent to Madavaram milk production centre or to Madras. In Hosur town only a small quantity of milk is sold. It is sold only in Hosur, but in Denganikota and other important places milk is not sold and it is difficult to get. Madras City can get milk from Madhavaram milk centre and other places. Hence, instead of sending the milk available at Hosur Farm to Madras City, that milk may be sent to villages, so that villages may have atleast small quantities milk every day.

Next I come to the calf-breeding Scheme. There was a proposal to start a calf-breeding centre at Hosur. It will surely benefit the agriculturists so that they may have good calves. It will enable them to develop good calves and they will also increase good milk production. Unfortunately the scheme has not yet come up. I request the Hon. Minister to take immediate steps to implement the scheme.

In this connection I wish to state that the Hon. Minister is taking a lot of interest in this department. Considering the importance of milk and dairying schemes it is better if this department is linked with Animal Husbandry Department. The Minister of Animal Husbandry has more money to this and he can give more attention. Otherwise, if they are divided into two departments and kept under hon. Minister one small department will be here and the other there, there may be difficulty in co ordination and proper functioning.

Next coming to co-operative scheme, milk should be supplied to all villages and societies should be started in interior villages. Otherwise, it is very difficult to get milk there.

Next I would like to refer to Foodder development Scheme. Foodder is important for improving the milk production. Now it is very difficult to get fodder. Previously, there was a proposal to start a Fodder Farm in Hosur Taluk. We have set apart 1,000 acres of land for this purpose in Hosur Taluk.

There was also a proposal to start a Cattle Farm. If the same is started, we can get plenty of milk. Unfortunately, this has not been

taken into consideration. I understand that it is pending with the Government. Because the Hon. Minister for Religous Endowments is connected with the milk distribution, I would suggest that the Animal Husbandry may also be brought under his portfolio.

Due to non-availability of sufficient quantity of fodder, the ryots are not able to produce more milk. I would request the Hon. Minister for Religious Endowments to recommend the establishment of Fodder Farm in Hosur Taluk. Plenty of land is available there. There was also a proposal to have a 'Jersy' cattle farm. I think that proposal is also pending with the Government. I request the Hon. Minister to give that scheme also to Hosur Taluk.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMY): Mr. Kothandaramiah, please wind up your speech.

THIRU K. S. KOTHANDARAMIAH: I would also suggest that both the Milk Scheme and the Animal Husbandry should come under the portfolio of one Minister.

Then I would like to refer to starting of Milk Co-operative Societies in rural areas. It is said that incentives are given to the villages to by cows and to produce more milk. I would suggest that such incentives should be given to the people in rural areas, especially to the ryots in backward areas. The Government should give them all help and encouragement to produce more milk.

Thank you, Sir.

* திரு. இ. எஸ். தியாகராாசன் :—பேரவைத் தலைவரவர்களே, அறநிலைய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழகத்திலே இருக்கின்ற கோயில்களின் வருமானம் கடந்த ஆண்டு ரூ. 4 கோடியே 87 ஆயிரமாக இருந்தது இன்றைய தினம் ரூ. 6 கோடியே 75 லட்சமாக உயர்ந்திருக்கிறது என்று அறிகிறபோது உண்மையிலேயே நான் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, தமிழகத்திலே இருக்கின்ற பல கோயில்களில் திருப்பணிகள் நல்ல முறையில் செய்யப்பட்டு வருகின்றன என்பதை இந்த மன்றத்திற்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திருப்பணிகள் செய்வதன் மூலம் கோடானுகோடி மக்கள் பலனடைகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன். அதுவும் நமது அறநிலைய அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு அந்தப் பணி நல்ல முறையிலே மக்கள் பாராட்டைப் பெறும்படியான வகையில்

அறநிலைய ஆணையர் அவர்களுக்கும் தங்களுடைய நன்றியை அவர்களுடைய பாதங்களிலே குவிக்கின்றார்கள் என்று சொல்லி, அரசு ஊழியர்கள் என்றென்றும் அரசுக்குச் சாதகமாக இருப்பார்கள், நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள் என்று தெரிவித்து, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அறநிலைய மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில கருத்துக்கள் சொல்வதற்கு முன்வந்திருக்கிறேன்.

என்னுடைய வெட்டுத் தீர்மானத்தில் கோயில் சிப்பந்திகளின் சம்பளத்தை உயர்த்துவது பற்றிய நடவடிக்கையை விவாதிக்க என்று கொடுத்திருந்தேன். ஏதோ ரூ. 10 மேலே தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வந்திருக்கிறார். ஆனால் இந்தக் கோயில்களையெல்லாம் பராமரிக்க, இந்த இலாக்கா பல பிரச்சினைகளை, இந்தக் கோயில்கள் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் பிரச்சினைகளை, சமயப் பிரச்சாரங்களை வளர்ப்பதிலே, சூழ் நிலைகளை ஒழுங்காக வைத்துக் கொள்வதிலே அக்கறை காட்ட வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கிட்டத்தட்ட 13,000 கோயில்களும் மற்ற அறநிலையங்களும் இவர்கள் பாதுகாப்பில் இருக்கின்றன. ஆண்டுக்கு ரூ. 200 வருமானம் வருகிற கோயில்களிடமிருந்துகூட, இலாக்காவுக்கு கான்டரிபியூஷன் வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்தக் கோயிலுக்கே வருமானம் ரூ. 200 என்றால், அதில் இந்த இலாக்காவுக்கு கான்ட்ரிபியூஷன் தரவேண்டுமென்றால், அதை எப்படி பொறுத்துக்கொள்ள முடியும் என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே, ரூ. 1,000-க்குக் குறைவான வருமானமுள்ள கோயில்களிடமிருந்து, இந்த இலாக்காவுக்கு கான்டிட்ரிபியூஷன் வாங்குவதை விட்டு விட்டால் மிகச் சிறந்ததாக இருக்கும். பணக்காரக் கோயில்கள் இருக்கின்றன. அவர்களுடைய வருமானத்தை வைத்து, இந்தக் கோயில்களைப் பராமரிக்க ஏதாவது செய்ய முன் வரவேண்டுமே தவிர, ரூ. 200 வருமானம் வருகிற கோயில்களிடம் போய் எனக்கும் கொஞ்சம் பிச்சை போடு என்று இந்த இலாக்கா கேட்பது வருந்தத் தக்கது என்று தெரிவித்துக் கொள்கிறேன். 7,558 கோயில்கள் ஆண்டொன்றுக்கு ரூ. 1,000-க்கும் குறைவாக வருவாய் பெறுகின்றன.

இன்றைக்கு எண்ணெய் என்ன விலை விற்கின்றது, கற்பூரம் என்ன விலை விற்கிறது ? இப்படிச் சாதாரண வழிப்பாட்டையே செய்ய முடியாத நிலையிலிருக்கிற ஏழைக் கோயில்களிடமிருந்து கான்ட்ரிபியூஷன் கேட்பது வருந்தத்தக்கது. பள்ளிக்கூடம் ஆரம்பிக்கிறார்கள். 'ஓல்ட் ஏஜ் ஹோம்' ஆரம்பிக்கிறார்கள். இவையெல்லாம் அரசாங்கம் தன்னுடைய சொந்தப் பணத்திலிருந்து செய்யவேண்டிய வேலைகள். வேண்டுமானால், பொதுப் பணத்திலிருந்து அவைகளுக்காகச் செலவழிக்கட்டும். இன்றைக்கு இந்த இலாக்கா அமைச்சர் ரொம்ப சாமார்த்தியமாக, நாங்கள் ஓல்ட் ஏஜ் ஹோம், டெப் அண்ட் டம் பள்ளிக்கூடம், இவையெல்லாம் கட்டுகிறோம்

என்று சொல்லலாம். ஏன் என்று கேட்டால், இறித்தவர்களைப் பார்த்தீர்களா என்று சொல்லலாம். அந்தப் பதில் எனக்குத் தெரியும். இறித்தவர்களுக்கு அகில உலகத்திலிருந்து பல நன்கொடைகள் வருகின்றன. அதை வைத்துக் கொண்டு இந்தக் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இங்கே இருக்கிற கோயில்களைப் பராமரிக்க சக்தி இல்லாமல் இருக்கும்போது, கோயில்கள் பாழடைந்து கொண்டிருக்கும் போது, நீங்கள் ஏன் அந்த வேலையில் அவசரம் காட்டுகிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். ரூ. 465 கோடி அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது, ஆண்டொன்றுக்கு. அதிலே கட்டட்டுமே கல்லூரிகளை, பள்ளிக்கூடங்களை. நீங்கள் ஏன் அவைகளில் கவனம் செலுத்த வேண்டும் ?

அடுத்து, தாமலில் இருக்கிற கோவிலின் ராஜ கோபுரம் இடிந்து விழுந்து, தவிடுபொடியாக ஆகியிருந்தது. அமைச்சர் அவர்கள், அதைப் புதுப்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதை அவர்கள், சரியாகப் பழுது பார்த்து விட்டோம் என்று சொன்னார்கள். ஒருசில நாட்களுக்கு முன்னால், அங்கு சென்றிருந்தேன். அதுவரை பழுது பார்க்கவில்லை. ராஜ கோபுரம் கட்டியதாக இதுவரையில் காணோம். அதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

இன்றைக்கு கோயில்களைப் புதுப்பிக்க ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 6 இலட்சம். அது எந்த மூலைக்கு ? இவைகளுக்கு இன்னும் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்க வேண்டுமென்ற நிலை இருக்கும்போது, நாம் போய் மற்றைய வேலைகளிலே ஈடுபடுவது அவ்வளவு சரியல்ல என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

சேலத்து மாரியம்மன் கோயிலிலே ராஜகோபுரம் கட்ட வேண்டுமென்று உண்ணாவிரதம் கூட இருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் கூட கட்டுவோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். இன்றைக்குப் புதிதாக வந்திருக்கிற அறநிலைய அமைச்சர் அவர்கள் இதிலே அக்கறை காட்டி, என்ன என்ன செய்யவேண்டுமோ, அதைச் செய்ய முன்வரவேண்டும். அங்கு உள்ளே, கடைகள் இருப்பதாலே, இதைக் கட்டினால், ஏதாவது இடைஞ்சல் வரும் என்று நிறுத்தி வைத்திருக்கிறார்களோ என்று பொதுமக்களிடத்திலே ஒரு சந்தேகம் இருக்கிறது. நீங்கள் புதுப்பிக்க, புதுப்பிக்க, வருமானம் வரும். ரூ. 40,000 என்று கேட்டால், நீங்கள் ரூ. 10,000, ரூ. 5,000, ரூ. 2,000 என்று கொடுத்துக் கொண்டிருப்பீர்களானால், திருப்பணி செய்து கொண்டிருப்பவர்கள் கூட உலகத்தை விட்டுப் போய் விடவேண்டிய நிலை வரும். ஆகவே, எவ்வளவு செலவு செய்ய வேண்டுமோ, அவ்வளவு செலவு செய்ய வேண்டும்.

பல கோயில்களிலே, அவற்றோடு சேர்ந்திருக்கிற குளங்கள் எல்லாம் பாழடைந்திருக்கின்றன. மாண்புமிகு திரு. மணலி அவர்கள் தீர்த்தம் எல்லாம் முக்கியமானது என்றார்கள். தீர்த்தம், மூர்த்தி தலம் இதெல்லாம் முக்கியமானது. அவையெல்லாம் கொஞ்சம்கூட பழுதுபார்க்கப் படாமல், பாசி பிடித்து, மிகமிகக் கேவலமாக இருக்கிறது. அவைகளைச்

பி.ஏ., பி.காம். போன்ற பட்டப் படிப்புகளுக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அறிக்கையிலே கடைசியாக ஒன்றினை மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் :

> "....என்றைய தினம் தாழ்த்தப்பட்ட குடிமகன் ஒருவன் திருக்கோயில் அர்ச்சகராக வர முடிகிறதோ அன்று தான் உண்மையான சமதர்ம சமவாழ்வை இந்த நாடு பெற்றதாகக் கருதமுடியும் என்பதால், இந்திய அரசு இதற்கு ஆவன செய்ய முன்வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது."

உள்ளபடியே, இந்தியாவில் எங்குமே இல்லாத அளவுக்கு புரட்சிகரமான முறையில், சிறப்பான இந்த முயற்சிக்காக இந்த அரசினை நம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட முயற்சிக்கு இந்திய அரசு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. Hande: In support of the Cut Motions moved on behalf of my Party, I wish to state a few points in regard to Milk Production.

After the Hon. the Minister for Religious Endowments took over the portfolio, he has messed in different fields, not only in Madhavaram Dairy Project, but also in Thanjavur Marketing Federation. I am also sure that the proposal to have a Dairy in Ambattur will create a lot of confusion. I have got a number of points to prove it. In fact.......

Mr. Chairman (Thiru N. Veeraswamy): I have already told the hon. member that only 10 minutes have been allotted for him.

Dr. H. V. Hande : 10 minutes for Milk Supply Schemes alone.

Mr. Chairman (Thiru N. Veeraswamy): Ten minutes for both the Demands.

Dr. H. V. Hande : Coming to the point, I would like to say this. It has been decided by Government as reported in the Press that the II Dairy will be established in Ambattur. Already the Dairy at Madhavaram is incurring heavy expenditure in transport of milk. Ambattur will be still worse. That means the idle transport of milk for a minimum of ten routes allowing each lorry to carry 500 litres. They have to

cover 10 miles for 40 trips. It will work out to 400 miles a day rate of Rs. 1.50 per mile. They had to incur an additional cost of Rs. 2,16,000. I got a number of things to prove that will end in fiasco.

The Government has been in the habit of putting the I. A. S. Officers as Commissioners of the Dairy Projects. These I.A.S. Officers who know nothing about dairying fall at the feet of the National Dairy Development Board at Aarey Milk Colony, Anand in which they are directors. Somebody from Anand suggested a site at Madras and this was accepted by the Government. They have given some fantastic ideas.

Thus the Madhavaram milk colony was selected and as I have pointed out a number of times, this has ended in fiasco. I have been mentioning this for a number of times. In spite of that, no action has been taken. The entire Milk Department needs re-organisation and re-orientation. It should be re-organised and re-oriented and in that it should be production re-oriented. There should be proper distribution of milk. These points should be taken into account. I have a number of points to prove. I shall place them before the Hon. Minister.

Then I want to refer to the Thanjavur District Co-operative Milk நண்பகல்
Production and Marketing Federation where also he has messed up, பகல்
One of our distinguished hon. Members of this House, Thiru L. Ganesan 12-00
M.L.A., is the president of the Federation. What is the position of the Federation? During the last two or three years they have mulcted public money and defrauded public money and I have got documents to prove it.

Ever since 5th November 1971 the date on which the present Secretary took charge, progressive deterioration in the administration can be observed if a probe into the relevant records, is instituted by an impartial audit body. For example, fraudulent coupons have been printed. The milk coupons that form the nucleus for profit, was printed usually in the local Co-operative Press where no fraudulent designs were possible. But the Secretary abruptly shifted the coupon printing job to the local Vetrivel Press, whose proprietor is a relation of the Secretary. Why should they transfer it from the Co-operative Printing Press to a private Press? Also, the Secretary gave the Stock Register of coupons to Auditor, Thiru Durairaj and the actual coupon stock was kept out of his purview. Then the Secretary, with the connivance of certain members of the staff, effected an unauthorised sale of the old coupons and fraudulently suppressed a revenue to the Federation to the tune of Rs. 13,860 which can be seen if accounts are scrutinised by an impartial audit......

THIRU L. GANESAN rose.

MR. CHAIRMAN (THIRU N. VEERASWAMY) : If it is a point of order, the hon. Member can raise it now. If it is a clarification, he can seek it at the end of his speech.

THIRU L. GANESAN : Sir, on a point of order..........

DR. H. V. HANDE : There are some more points relating to it and I will finish in five minutes when the hon. Member can raise it.

The Secretary has dexterously managed to destroy evidence of this fraud of Rs. 13,860 by stealthily bringing the stock book from the Auditor's custody through his trusted staff and had the stock book burnt which showed accounts of coupons up to 15th December 1971. Thus he has destroyed the documentary evidence. Then the Secretary caused to be brought into use a new set of coupons printed on a flimsy paper. This new coupon is one that has purposely omitted the print of the Gopuram emblem.

The cost of printing and paper of the above stock of coupons comes to nearly Rs. 9,600.

Then, since 1939 the coupons were collected on supply of milk to parties. They were accounted for and shown in a separate register known as Redemption Register. This procedure was stopped since 16th December 1971.

Then coupons to the value of Rs. 40,000 were printed and distributed to favourable vendors and the amount was collected allowing the vendors to effect a free sale of coupons. This amount has not been rendered into any account. Then a special report was made by the Auditor, Thiru Dorairaj to the District Co-operative Audit Officer, Thanjavur in this respect. No action has been taken on this. The concerned file in the Audit Office will lay bare the facts of the fraud.

Then an advance was drawn to the tune of Rs. 7,900 as milk advance which has been utilised for the marriage expenses of the Vice-President. This sum was drawn from 31st August to 17th October 1972. The Executive Officer from the Co-operative Central Bank, Thanjavur, during his inspection found out this irregularity and submitted a report on 3rd November 1972. This is a very fantastic thing.

Also in the salary of staff for December 1971, Defence Fund was collected to the tune of about Rs. 1,000 which has not been sent to the credit of the War Fund. That is another fraudulent thing.

The work done by one man is now in charge of four. This increase was done to bring in and give job to relations and friends of the Secretary and the Vice-President.

Then, the milk production is 15,000 litres. But the annual maintenance charge of a jeep (M.D.O. 6332) is Rs. 10,000. After the present D.M.K. President took office, the production has come down to 2,500 litres. The expenditure is Rs. 54,000. The jeep has been used at Federation petrol cost, for personal purposes of the Secretary and the Vice-President.

Then the jeep M.D.O. 6332 and F.C. M.D.O. 5832 were continuously used for 10 days during the marriage of the Vice-President.

In rendering balance sheet accounts for raising loans from Government and from the Co-operative Central Bank, two different amounts have been shown as loss. The Government had been informed of a loss of 8½ lakhs for a loan of Rs. 5 lakhs asked for. The Co-operative Central Bank was informed of Rs. 2 lakhs as loss in the application for loan. It is a wonder that two kinds of balance sheets have been cooked up so deliberately. Can this be challenged? The Hon. Minister for Co-operation is not present and this relates to a co-operative institution. Now I yield and the hon. Member can raise this point.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : திரு எல். கணேசன் அவர்கள் மற்ற உறுப்பினர்கள் சொன்ன ஒவ்வொரு பாயிண்டுக்கும் விடை சொல்ல வேண்டியதில்லை. ஏதாவது கிளாரிபிகேஷன் சொல்ல வேண்டுமானால் சொல்லுங்கள். மற்றவற்றை அமைச்சர் மூலமாகச் சொல்லுங்கள்.

THIRU L. GANESAN : Mr. Chairman, Sir, I humbly submit that the hon. Member, Dr. H. V. Hande, should take up the challenge. In his allegation, he has stated a certain amount has been withdrawn from the Federation for the purpose of using it for the marriage expenses of the Vice-President. He should prove this allegation. Also many other allegations have been made and he should prove them. There may be certain irregularities connected with the administration and that has nothing to do with it and I am not concerned with it. He should prove his allegations.

DR. H. V. HANDE : In whatever manner the hon. Member stipulates, I am prepared to prove it before anybody or in this House. I have got documents and I can also produce a couple of M.L.A.s' and outsiders who will bear witness but the latter cannot be brought in

சீர்ப்படுத்துவது மிகமிக அவசியமாகிறது. கோயில்களைச் சீர்ப்படுத்துவதிலே, தீர்த்தங்களைச் சீர்ப்படுத்துவதிலே, உற்சவங்களை முறையாக காலதாமதம் இல்லாமல் நடத்துவதிலே, 3 மாதங்களுக்கு ஒருமுறை அவைகளையெல்லாம் கவனித்து, பாதிக்கிற நிலைமைகள் ஏற்படாமல், கோயில்களுடைய சொத்துக்களைக் கண்காணித்து, எந்த எந்தக் கோயிலுக்கு என்ன என்ன சொத்து, என்று எல்லா பர்ட்டிக்குலர்ஸ் உள்ள ரெகார்டுகளை ஏற்படுத்தி, கவனிக்க வேண்டும்.

கோயில்களிலே நல்ல நாதசுர இசையே கிடையாது. ஏனென்றால், அவர்களுக்குக் கொடுக்கிற பணம் மிகவும் குறைவு. அவன் வாயிலே வைத்து, ஊ, ஊ, என்று, எதையோ ஊதி விட்டுச் செல்கிறான். குறைவாகப் பணம் என்பதால், நாதசுவரம் ஊதத் தெரியாதவர்களை அழைத்து, நீ ஊது, இந்தா ரூ. 10, ரூ. 20, ரூ. 30, என்று குறைவாகக் கொடுத்து இப்படி வைத்திருப்பது அவ்வளவு நல்லதல்ல. மங்களகரமான வாத்தியத்தை—எல்லாக் கலைகளையும் வளர்க்க வேண்டுமென்று—இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு சொ. காவேரிமணியம் : இந்த மாமன்றத்தில் நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். பொதுவாக, கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் நமக்கு மன மகிழ்ச்சியைத் தருகின்றன என்பதைச் சொல்வதிலே நான் பெருமைப்படுகிறேன். என்னுடைய உரையைத் துவக்குவதற்கு முன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், சுப்பிரமணியசுவாமி கோயிலுக்கு ' ரெப்ரசென்டேஷன் ' தேவை என்று கடந்த கூட்டத்திலே இங்கே நான் வலியுறுத்தினேன். அதன் அடிப்படையில், இந்த ஆண்டு முதல் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் சார்பாக இரண்டு அறங்காவலர்களை நியமிக்கக் கூடிய அளவுக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள். அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்ற இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டுள்ள புள்ளி விவரங்களை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்தால் நேரமாகிவிடும். ஆகவே, ஒன்றிரண்டைப்பற்றி மட்டும் நான் கூறுகிறேன். குறிப்பாக, 13,027 அற நிலையங்கள் நம்முடைய நிர்வாகத்தின்கீழ் வருகின்றன. அவைகளில் மொத்த வருவாய் ரூ. 6,75,00,000 என்று கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு முடிவதற்குள் இன்னும் அதிகமான கோயில்கள் இதன் நிர்வாகத்தின்கீழ் வர இருக்கிறது என்று சுட்டிக் காட்டும் முகத்தான் ஏறக்குறைய 15,000 கோயில்கள் நிர்வாகத்தின் கீழ் வர இருக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதன்மூலம் சுமார் ரூ. 7,50,00,000 வருமானம் வரும் என்று புள்ளி விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த புள்ளி விவரங்களில், செலவழிக்கப்பட்ட விவரங்கள், இனி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றித் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இன்னொன்றையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நிர்வாக அதிகாரிகளுடைய அந்தஸ்துகள், அதிலே பணிபுரியக் கூடிய அலுவலர்களுடைய அந்தஸ்துகள் எல்லாம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்டினார்கள். இவைகளையெல்லாம் நான் மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக நல்லமுறையிலே தெரியும், திருப்பரங்குன்றம், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின்கீழ் வருகின்ற ஒன்று என்பது. நாம் ஏற்கனவே கொள்கை அளவிலே ஒத்துக் கொண்டிருக்கிறோம், ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு நிர்வாகி தேவை என்று. ஏதோ நிர்வாகியை மட்டும் நியமித்துவிட்டால் போதாது. அவருக்கு அந்த அதிகாரமும் இருக்க வேண்டும். குறிப்பாக, திருப்பரங்குன்றத்தில் அந்த அதிகாரி எந்த அளவுக்கு இருக்கிறார் என்று நான் தனிப்பட்ட முறையிலே குறை கூறவில்லை. அதிகாரத்தினுடைய வரம்பு என்று பார்த்தால், மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலிலே இருக்கக் கூடிய எக்ஸிக்யூடிவ் ஆபீசருக்கு உட்பட்டவராகத்தான் இருக்கிறார். எந்தச் செலவாக இருந்தாலும், 5 பைசா செலவழிக்கவும் அவருடைய அனுமதியைப் பெற்றுத்தான் செலவழிக்க வேண்டிய நிலையிலே இருக்கிறார்.

ஏறத்தாழ பத்து லட்சம் ரூபாய் அளவிற்கு வருமானத்தைப் பெறக் கூடிய அந்தக் கோயிலுக்கு ஒரு நிர்வாக அதிகாரி இருக்கிறார் என்றால் அந்த நிர்வாக அதிகாரி சோளக் கொல்லை பொம்மை மாதிரியாக இருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வதற்கு உள்ளபடியே நான் வெட்கப்படுகிறேன் என்பது மட்டுமல்ல. அதற்காக நான் மனம் வருத்தமடைகிறேன் என்பதையும் கூறிக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் நான் அப்படிக் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தியதற்காக மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். கோயில் வருமானத்தை அத்தனையும் அதிலேயே செலவழிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மணி அடிப்பதிலேயும் அறக்கட்டளைகளை நிறைவேற்றுவதிலேயும் மட்டுமல்ல, பழங்காலக் கோயில்களிலே உள்ள தெய்வங்களை வழிபடுகின்றார்கள் என்பது மட்டுமல்ல, பல கலைச் செல்வங்களைப் பார்க்கிறார்கள், கலை வளர்க்கப்பட்டது கல்வி வளர்க்கப்பட்டது, நம்முடைய நாகரிகம் பேணிக் காக்கப்பட்டது. எனவே அந்த முறையிலே கோயில் வருமானத்தை மற்ற துறைகளுக்குச் செலவழிப்பதிலே தவறு கிடையாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதுபோன்று எடுத்துக் கொண்டால் பழனி தண்டாயுதபாணி தேவ ஆலயத்தின் சார்பாக 3 பெரும் கலைக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன, அதைப் போன்றுதான் திருச்செந்தூர் தேவ ஆலயத்தின் சார்பாக ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. திருப்பரங்குன்றத்திலே 10 லட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய ஆலயத்தின் சார்பாக—மதுரையைச் சுற்றிப் பல தனிப்பட்டவர்களின் கல்லூரிகள்தான்

this House. The Hon. Minister for Co-operation can also reply during the discussion on the Appropriation Bill. My point is that all these things should be properly rectified.

Now with regard to temples, I am very sorry to say that it is the same story and it is the same case. It is treated as one intended for D.M.K. only. When I say this, the D.M.K. Members may get angry but that is a fact. A number of methods are used to boost up the D.M.K. For instance in the, Kapaleeswarar Temple at Mylapore, there is only "Vazhipadu of Muthal Amaicher'. This is going on there and for which objections have been raised. The place is meant for worship. But there is only 'Vazhipadu of Muthal Amaicher'.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி சோழனுடைய ஆட்சியாக இருக்கிறது. பல்லவனுடைய ஆட்சியாக இருக்கிறது. அவர்கள் அப்படி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் வழிபாடு நடக்கிறது.

This is done by the Executive Officer of that temple. It is not done by the Hon. Minister and I know he is a good man.

கதா காலட்சேபம் செய்கிறார்கள். பார்த்துக் கதையைச் சொல்லுங்கள் என்கிறார்கள்.

My friend Thirumathi Anandanayaki also says it is true. I have information from my own source. Why should a person who has faith in God not allowed to worship freely. It is because you want an extra for muddling. Co-operatives you have already muddled. I have clearly proved it. In temples also you want to extend your area and entrench your men. Is such a thing possible in Muslim mosques ? Can you preach against God there ? That is why I have the greatest respect for Islam. Will it be possible for you to criticise like that inside churches? Will Christians tolerate it ? How long do you think this sort of thing would continue ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Hinduism also included atheism ?

DR. H. V. HANDE : Hinduism does not include atheism. That is point No. 1. I stoutly and totally refute such a remark. It is an incorrect statement. I was saying that Kapaleeswarar temple, a place wherein religious minded people go and worship the deity there, is not a place to preach atheism. Persons who have faith in Vishnu go to Parthasarathy temple. Catholic members go to Catholic Churches and

Protestants go to Protestant churches. According to their faith, they go and worship the deity in the temples. They are not the places to preach atheism.

THE HON. THIRU K. ANBAZHAGAN : May I explain? Hinduism includes several types of philosophy and one philosophy is Sankhya philosophy which includes atheism. According to that philosophy it is there. Whether in the temples, atheism is preached or not is a different thing. I am not aware of it.

DR. H.V. HANDE : For the Hon. Minister's information I may say I have read Sankhya philosophy. That does not include atheism. Point No. 1 Sankhya Philosphy is different from atheism. I have studied it and I know it. What I say is these are not temples to preach either Sankhya philosophy or atheism. If the Hon. Minister says in temples atheism can be preached, I have to compliment him on the extraordinary fertility of his fantastic imagination. எங்கே ஆதாரம் உண்டா? இது அரசியல் கட்சிக்காக, அரசியலுக்காகப் பயன்படுத்துவதற்கு ஆதாரம் உண்டா என்றால் I have got instances.

It has happened in my own constituency. An agreement was entered into between Smt. Rukmani Ammal residing at 2/21, Alathur Subramania Achari Street, Choolai and the Executive Officer, Sri Sundararaja Perumal and Anjaneyaswamy Devasthanam at 22, Alathur Subramania Achari Street, Choolai on 5th January 1970 and a piece of land measuring about 1,500 sq. ft. was let on lease on a monthly rent of Rs. 9.

[பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

Subsequently the Commissioner, *vide* his notice No. 30345/70/C7-1, dated 17th February 1971, informed the lessee that the agreement does not hold good, since some of the provisions of the rules have not been properly followed. From then onwards Smt. Rukmani Ammal is keeping in correspondence with the department. But surprisingly a few months back, the back portion of the land occupied by the Rukmani Ammal was let out to somebody else at the instance of the local D.M.K. man. This is so irregular. I have got the entire records with me and I shall give them to Hon. Minister whenever he desires it. This is how things are being done at the discretion of political parties.

With regard to Chitrakulam tank, I have given cut motions a number of times. But nothing seems to have been done. It is being used as a lavatory and I want this thing to be stopped. It is also true of Ponneri tank.

(Dr. H. V. Hande) [1973 மார்ச் 26

What I want to say is that temples should be kept out of politics and persons who are really interested in worshipping the deities in temples should be allowed to do so without any inter ference. With this I conclude my speech in support of the cut-motion we have given.

*திரு கே. அ. மதியழகன்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம் மானியத்தின் மீதான விவாதத்தின் மீது நான் ஒரு சில வார்த்தைகள் சொல்வதற்கு அனுமதித்ததற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், இந்த கோவில்களுக்கான மானியத்தின்மீது விவாதம் நடந்ததே கிடையாது, இப்போது தான் நடைபெறுகிறது ஏதோ ரொம்ப தாராளமானது என்று சொல்கிறார்கள். அது ஒருவகையில் உண்மைதான். இது எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு—கோடிக்கணக்கான ரூபாய் முதலீடுகள் உள்ள ஆலயங்கள், அறநிலையங்கள், வழிபாட்டு நிலையங்கள் இவைகள் எல்லாம் ஒரு காலத்தில் இந்த நாட்டில் மகோன்னதமான நிலையில் இருந்த சிற்பங்களுக்கும், ஓவியங்களுக்கும், நாட்டியத்திற்கும், நாதஸ்வர இசைக்கும் இப்படி எல்லாவிதமான கலைகளுக்கும் உறைவிடமாக இருந்தன, நம் வரலாற்றுக்கு ஒரு ஊற்றாக இருந்தன. அவை இன்று கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்படுகிற நிலையில்தான் இருக்கின்றன. இப்போது பெரிய மனது வைத்து இதுபற்றி விவாதிக்கிற அளவிற்குத்தான் வந்திருக்கிறது என்ற நிலையே தவிர எல்லாம் முடிந்து விட்டன, எல்லாம் நடந்து விட்டன என்றால் நாம் உண்மையிலிருந்து ரொம்ப தூரம் போய்க் கொண்டிருக்கிறோம் என்றுதான் பொருளாகி விடும்.

இந்த ஆலயங்கள் நிர்வாகத்தில் அமைச்சர்களுக்குக் கடவுளிடம் பக்தி இருக்கிறதா இல்லையா என்பது இப்போது விவாதம் அல்ல. இப்போது சிலர் திடீர் பக்தர்களாகிவிடுகிறார்கள், திடீர் பிள்ளையார் எல்லாம் வருவது போல்..................

THIRU K. M. SUBRAMANIAM: It is at the expense of the Chief Minister it was planted and it was he who removed it. It has nothing to do with me.

MR. DEPUTY SPEAKER Why do you bring in the Chief Minister?

THIRU K. M. SUBRAMANIAM: He shows his hands to me and so I had to explain.

திரு. கே. அ. மதியழகன்: இன்று நம்முடைய மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் மிகப் பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நேரம் கொஞ்சமாகத்தான் கொடுப்பீர்கள் என்று தோன்றுகிறது. நானும் உங்களைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை.

1973 மார்ச் 26]

இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் கொடுத்ததுபோல் பதினைந்து, இருபது நிமிடங்களுக்குள்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'சேல்ஸ் டாக்ஸ் வேறு இருக்கிறது. ஒரு மணிக்குள்ளாவது முடிக்க வேண்டும்.

திரு கே. அ. மதியழகன்: அமைச்சர் அவர்கள், 12,000 ஆலயங்கள் இந்த அறநிலையக் கட்டளையின்கீழ் வந்திருப்பதாகவும், இன்னும் அடுத்த ஆண்டில் 15.000 ஆலயங்கள் 1973-ல் திருக்கோயில்களின் எண்ணிக்கை 15,000-க்கு மேல் உயரும் என்றும், மொத்த வருமானம் ரூ. 7,50,00,000 ஆகும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். பார்த்தால் அருமையாக இருக்கிறது. 12,000 கோவில்கள் ஏற்கெனவே இருந்தன. இப்போது கண்டுபிடித்ததின் விளைவாக — இல்லை, இல்லை — ஏற்கெனவே 2,000 கோவில்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக இவைகளிலே சேர்க்கப்பட்டு மொத்தம் 12,000 கோவில்கள், மடங்கள், அறக்கட்டளைகள் இவைகளை நாம் நிர்வகிக்கிறோம். அடுத்த ஆண்டு 15,000 கோவில்கள் வரும் என்று சொல்கிறார்கள். இந்த அமைச்சர் அவர்கள் அறிக்கையில் 16-வது பக்கத்திலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே எத்தனையோ கணக்கில் வராத திருக்கோயில்கள் திருட்டுக் கோயில்களாக இருக்கும் அவல நிலையைப் பார்க்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: திருட்டுக் கோயில்கள் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. ஆதலால் தயவு செய்து நமது மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சர், சபாநாயகர் அவர்களைத் திருட்டுகோயில்கள் என்று சொல்லாமல் இருக்க வேண்டுமென்று பணிவன்போடு தலைவரவர்களே, உங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. அ. மதியழகன்: எனக்கு ஒன்றும் இல்லை. நான் அதற்காகச் சொல்லவில்லை. எதையோ சொல்லி திசை திருப்பப் பார்க்கிறார். திருட்டுக் கோவில் இல்லையென்றால் எடுத்து விடுங்கள். அமைச்சர் அவர்களே திருட்டுக் கோவில்கள் என்ற அடிப்படையின் கீழ் விரிவான ஒரு புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். எனக்கு நேரம் அதிகமாகக் கொடுக்கவில்லை. எல்லாவற்றையும் சீக்கிரமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. தமிழ் நாடெங்கும் கண்டுபிடிக்கப்பட்ட, அறநிலையத்துறையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத நிறுவனங்கள் 40,247, அவைகளுக்குச் சொந்தமான நிலங்களின் பரப்பு 1,98,920·53 ஏக்கர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றில் ஆய்வாளர்களின் முதல் அறிக்கை பெறப்பட்ட சமய நிறுவனங்கள், 6,000 அவற்றுள் 2,162 நிறுவனங்கள் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. அடுத்த வருஷம் 15,000 திருக்கோயில்கள் என்ற அளவுக்கு எண்ணிக்கை உயரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான ஒரு கணக்கைக் கொடுக்கிறார்கள். 40,247 சமய நிறுவனங்கள், கோவில்கள் அல்ல. பல்வேறு நிறுவனங்கள் இந்த

வளர்ந்து வருகிறது என்பதையும், அறநிலைய ஆணையர் அவர்களும் நல்ல முறையில் ஒத்துழைப்பை நல்கி வருகிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் தொகுதியான திருத்தணியிலே பல நல்ல வசதிகளைச் செய்து தந்திருக்கிறார்கள். கல்யாண மண்டபம், கலைக் கல்லூரி, காட்டேஜஸ்—தங்குமிடங்கள் கட்டுதல், போன்ற நல்ல காரியங்கள் செய்ததன் விளைவாக அந்தப் பகுதியில் இன்றைக்கு நூற்றுக்கணக்கான கார்களைப் பார்க்கிறோம். திருமலைக்குச் செல்கிறவர்கள் திருத்தணிக்கு வந்து மலையிலே இருக்கின்ற முருகக் கடவுளை தரிசிப்பதற்கு நல்ல வாய்ப்பினை நமது அரசு செய்திருக்கிறது என்பதைப் பார்க்கின்றபோது அதைப் பாராட்டிப் பெருமைப்படுகிறேன்.

எங்கள் பகுதியிலே உள்ள அந்தத் திருமுருகன் கோயில் அத்தனை சிறப்பு பெற்றமைக்கு வசதிகள் செய்து கொடுத்த இந்த அரசை நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைய தினம் கோயில் பணியாளர்களுக்குச் சம்பளம் உயர்த்தியிருப்பதாக நமது அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக அவர்களின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயில் வேலை செய்கிற இன்ஸ்பெக்டர்களையும், எழுத்தாளர்களையும் புரொவின்ஷியலைஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய சர்வீசும் புரெவின்சியலைஸ் செய்யப்படுமேயானால் அதிலே வருஷக்கணக்காக வேலை செய்கிற பணியாளர்கள் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் என்ற என்னுடைய கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திருத்தணிக் கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ள துணை கோயில்களான திருவாலங்காடு, கரிம்பேடு, பெரிய நாகப்பூண்டி போன்ற கோயில்களின் வளர்ச்சிக்காக திருப்பணி செய்வதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின்படி திருப்பணி செய்யப்படவேண்டுமென்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தணிக் கோயிலைப் பொறுத்த வரையில் வளர்ச்சி பெரும் நல்ல நிலையிலேயே இருக்கிறது. அது மேலும் வளர்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் வளர்ச்சியைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். கிராமப்புறங்களில் பால் வளர்ச்சிக்காக கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உதவிதந்து பால் வளர்ச்சிக்கு வழிவகைகள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தணிப் பகுதியில் நிறைய கிராமங்களில் பசுமாடுகளை வைத்து வளர்ப்பதால் பால் வளர்ச்சிக்கு வாய்ப்பு இருக்கிறது. மேலும், திருத்தணி சென்னைக்கு நெருக்கமாக இருப்பதால் பால் விற்பனையை அதிகப்படுத்த வாய்ப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் 10 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்களில் ரூ. 240 கடன் தந்தார்கள். அதில் ரூ. 400-க்கும் மேல் வசூலித்து விட்டார்கள். இன்னும் வட்டி கொடுக்க வேண்டுமென்று தொந்தரவு செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி, முதலுக்கு மேல் வசூலிக்கப்பட்ட தொகைக்கு இனியும் வட்டி வசூலிக்க வேண்டாம், வட்டியை வஜா செய்யப்பட வேண்டுமென்று உத்தரவு இட வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*<u>திரு. எஸ். கணேசன்</u> : தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

நமது திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு அறநிலையத் துறை எல்லா வகைகளிலும் திருத்தி அமைக்கப்பட்டு சமுதாய வளர்ச்சிக்காகவும் இன்னும் பல ஆக்கப் பணிகளுக்காகவும் தன்னை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகைப் படுத்திச் சொல்லப்பட்டதாகாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையைப் பார்த்தால், நமது கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, சமுதாய வளர்ச்சிக்காக திருமண மண்டபங்கள், உயர்நிலை ஆரம்பப் பள்ளிகள், அன்பு இல்லங்கள், சிறுர் காப்பகங்கள், முதியோர் இல்லம், மருத்துவமனைகள், நூலகங்கள் போன்ற பல நல்ல பணிகளுக்கும் இந்தத் துறை கவனத்தைச் செலுத்தி வருகிறது என்பதைப் பார்க்கும்போது, பெருமைப்பட வேண்டும்.

மதிப்பிற்குரிய பெரியவர் மணலியார் அவர்கள் பேசுகின்றபோது அறங்காவலர்கள் பதவிக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் போகவேண்டாம் என்று சொன்னார்கள். அப்படி எதும் இப்போது நடக்கவில்லை என்று நான் சொல்வதை விட, அண்மையில் புதுக்கோட்டையில் நடந்த திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுவில் "சட்ட மன்ற உறுப்பினர்கள், மற்றும் ஒன்றியப் பெரும் தலைவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது என்பதை திரு. மணலியார் இப்போது இந்த அவையில் இல்லை என்றாலும், இந்த அவையின் மூலம் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, எனது பகுதியில், பூம்புகார் பேரவைக் கல்லூரி சிறப்பான முறையில் அறநிலையத் துறையால் நடத்தப்பட்டு வருகிறது. இந்தக் கல்லூரி கலைக் கல்லூரியாக விரிவு படுத்தப்பட்டு, இன்றைக்கு அங்கே பி.யு.சி. வகுப்பு வரை நடக்கிறது. அதை மேலும் விரிவு படுத்தி,

[திரு. கே. ஏ. மதியழகன்]

உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்பது பரிசீலனையில் இருந்தது. அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று வேதனையோடு முதலமைச்சரை நான் கேட்டு இருக்கிறேன். இந்த 4 லட்சம் ஏக்கர் இடைத்தரகர்கள் கையில் இருக்கிறது. இதை உழவர்களுக்குச் சொந்தமாக்குங்கள் என்று கேட்டேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற குத்தகைதாரர்கள் உரிமைச் சட்டத்தில் அவைகளெல்லாம் இடம் பெற இருக்கின்றன.

திரு. கே. ஏ. மதியழகன் : இடம் பெற்றால் நல்லது. அப்போதே இதைச் செய்யவேண்டுமென்று சொன்னேன். 4 ஆண்டுகாலம் காலதாமதமாக வந்திருக்கிறது. இந்த விதிவிலக்கு அப்போதே ரத்துசெய்யப்பட்டிருக்குமானால் 4 லட்சம் ஏக்கர் நிலங்கள் உழுபவர்களுக்கு என்றோ சொந்தமாகியிருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட வேண்டும். கோவில், மடங்கள் இவற்றிற்காக உள்ள விதிவிலக்குகள் ரத்து செய்ய வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சிச் சார்பில் எடுத்துரைத்தபோது தாங்கள் தான் கேரளாவில் ரத்து செய்யப்படவில்லை என்று இந்த மன்றத்தில் இந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு சொல்லி இருக்கிறீர்கள். இதில் ஏதோ நீங்கள் சொல்லி நாங்கள் கேட்கவில்லை என்று கூறுவது முறையற்றது.

*திரு கே.ஏ. மதியழகன் : நான் அப்படிச் சொல்லவில்லை. மடா

பிற்பகல் 12-30 லயங்களின் நிலங்கள் எடுக்கப்படப்போகிறது என்று இந்த மன்றத்திலும் சொல்லியிருக்கிறேன். வெளியிலும் சொல்லியிருக்கிறேன். உங்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். கால தாமதமான பிறகு பிரேத விசாரணைக்குப் போக விரும்பவில்லை. இந்தக் காரியத்தை செய்கின்ற நேரத்தில், உழவர்களுக்கு அந்த நிலம் சொந்தமாகின்ற முறையில் நல்ல வகையில் செய்யவேண்டுமென்று வலியுறுத்தத்தான் சொல்லுகிறேன்.

அடுத்தாற்போல பல ஆலயங்களில் ஏராளமாகப் பணம் இருக்கிறது. ஆலயங்கள் வழிபாட்டிற்குரிய இடம்மட்டுமல்ல, கல்வி, மருத்துவம், சிற்பம், ஓவியம், நாட்டியம், நாதஸ்வரம் இவைகளெல்லாம் வளர்கிற இடம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தக் காரியத்தில் இவ்வளவு கோடிக்கணக்கான வருவாய் வருகின்ற கோவில்கள் என்ன செய்கிறதென்று பார்த்தால், அவற்றின் திருப்பணி என்ன என்று பார்த்தால் திருச்செந்தூர் முருகனுக்கு தங்கத் தேருக்கு 2 லட்ச ரூபாய். திருத்தணி முருகனுக்கு 2½ லட்ச ரூபாய்க்கு தங்கக் கவசம், முகவை மாவட்டம் பாகனேரியில் உள்ள புலவநாயகி அம்மனுக்கு 2 லட்ச ரூபாயில் தேர், மதுராந்தகம் ஆண்டவனுக்கு 2 லட்ச ரூபாயில் தேர், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரருக்கு 16 லட்ச ரூபாயில் தங்க கவசமும், வைர முடியும் என்ற கணக்குத்தான் இருக்கிறது. சாதாரணப் பெண்மணிகளுக்குத்தான்

[திரு. கே. ஏ. மதியழகன்]

நகைகள் மீது ஆசை. ஆண்டவனுக்குத் தங்கத் தேரும், வைர முடியும் இன்னும் இருக்க வேண்டுமா? பக்தர்கள் கோபித்துக் கொண்டாலும் பரவாயில்லை.

திருமதி த.ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, சாதாரண ஆசாமிகளை ஆடம்பரமான தேரில் வைத்து ஊர்வலம் வரும்போது, ஆண்டவன் தங்கத் தேரில் ஊர்வலம் வருவதை ரசிக்க வேண்டும், அப்படிப்பட்ட தங்கத் தேர்கள், ஆபரணங்கள் பொதுவுடமைச் சொத்தாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் அவற்றை கலைச் சின்னங்களாக வைத்திருக்கிறார்கள். ஆகவே ஆண்டவனுக்கு இவைகள் எதற்கு என்று புண்படுத்தும்படி பேசுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*திரு கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களையோ, பக்தர்களையோ புண்படுத்தவேண்டுமென்று நான் சொல்லவில்லை என்னுடைய நோக்கம், இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய்கள் சொத்துடைய கோவில்கள் ஏராளமாக இருக்கின்றன. மீனாட்சி அம்மனுடைய....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரமாகிவிட்டது. சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

*திரு. கே. ஏ. மதியழகன் : திடீரென்று குறுக்கே விடுகிறீர்கள். (சிரிப்பு) என்னுடைய கவலை யெல்லாம், மீனாட்சி அம்மனின் நகைகள், இன்னும் பெரிய பெரிய கோவில் கடவுள்களின் நகைகள், நிலங்கள் இவற்றை இன்வெண்டரி எடுத்தால் பலகோடி ரூபாய் சொத்துக்கள் இருக்கும். ஆனால் அவ்வளவு சொத்துக்கள் இருந்தும், இந்தக் கோவில்கள் நடத்தக்கூடிய கல்லூரிகள் 6, பள்ளிக்கூடங்கள் 13, ஆஸ்பத்திரி ஒன்றுகூட இல்லை. அதுவும் பழனி ஆண்டவர் கோவில் நடத்துகிற கல்லூரிகள் 3. இந்த அளவுக்குத்தான் இருக்கிறது.

இவ்வளவு கோடிக்கணக்கான வருவாய் இருந்தும், இந்தக் கோவில்கள் பணத்திலிருந்து நாதஸ்வரம் பழனியில் 20 பேருக்கும், தவில் 10 பேருக்கும் கற்றுக் கொடுக்கிறார்கள். வலிவலத்தில் ஒரு 15 பேர் படிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் நாதஸ்வர இசைக்கு பெயர் பெற்ற தஞ்சை மாவட்டத்தில் பிறந்த நமது மாண்புமிகு முதலமைச்சர் இருக்கின்றபோது பழனியில் 20 பேர் நாதஸ்வரம் படிக்கிறார்கள், 10 பேர் தவில் கற்றுக்கொள்ளுகிறார்கள். வலிவலத்தில் கொஞ்சம்பேர் படிக்கிறார்கள் என்றால் இவைகள் கலை வளர்ப்பது அல்ல. கலாசாரத்தை வளர்ப்பது அல்ல. பரதநாட்டியம் நம்முடைய நாட்டில் பலபேர் தனியாகக் கற்றுக் கொள்ளுகிறார்கள். (சிரிப்பு). அதைக் கவனிப்பதற்குப் பலபேர் இருக்கிறார்கள். பல ஆஸ்பத்திரிகள் இந்த வருவாயிலிருந்து நடத்துவதின் மூலம் மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களின் துறையிலிருந்து ஆஸ்பத்திரிகளுக்குச் செலவிடப்படும் செலவைக் குறைக்கலாம். கல்லூரிகளுக்கு கல்வித் துறையிலிருந்து செலவழிப்பதைக் குறைக்கலாம்.

[திரு. மு. கண்ணப்பன்]

40,247 சமய நிறுவனங்களின்கீழ் இருக்கின்றன. 15,944 சமய நிறுவனங்கள் தனியாரிடத்தில் இருக்கின்றன. இவைகளைப் புதிதாகக் கண்டுபிடித்து இருக்கிறோம். இவைகளெல்லாம் திருட்டுக் கோயில்கள் என்று சொல்ல முடியாது. தனியாரிடத்தில் அவைகள் இருக்கின்றன. அவர்களின் ஆதிக்கத்தில் இருக்கின்றன. இவைகளை மெள்ள மெள்ளத்தான் அரசு துறையில் கொண்டுவர வேண்டும். அவைகளில் திருட்டுத்தனம் நடக்கிறது என்று கூறுவது தவறான வாதமாகும்.

திரு கே. ஏ. மதியழகன் : அமைச்சர் அவர்களுக்கு வேண்டிய நேரம் இருக்கிறது. அவர்கள் அப்போது இதற்குப் பதில் சொல்லலாம். அற நிலையங்கள், மடங்கள், கோயில்கள் எல்லாவற்றையுமே நான் ஒட்டு மொத்தமாகக் கோவில்கள் என்று சொல்கிறேன். தயவுசெய்து குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் அவர்களைக் குறை சொல்லவில்லை. இந்த டிப்பார்ட்மெண்டில் இருக்கும் நிலைமையைச் சொன்னேன். நீங்கள் இப்போதுதான் புதிதாக வந்த அமைச்சர். ஆயிரக் கணக்கான கோவில் பெருச்சாளிகளை நீங்கள் என்ன செய்துவிட முடியும். இருக்கின்ற நிலைமைகளைச் சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல, நீங்கள் என்ன ராஜராஜ பராந்தக சோழன் மாதிரியாக இந்த கோவில்களைக் கட்டிப் பராமரிப்பதாகக் கருதிக்கொள்ள வேண்டாம்.

திருக்கோயில் நிலங்கள் உண்மையிலேயே திருக்கோயில்களுக்குச் சொந்தமானவைகளாக இல்லை. திருக்கோயில் நிலங்கள் உண்மையிலேயே திருக்கோயில் உடைமையிலும் அனுபவத்திலும் இல்லாமல் தனியாரிடம் இருப்பனவாகக் கண்டுபிடிக்கப்பட்ட நிறுவனங்கள் 15,944. அவைகளுக்குச் சொந்தமான நிலங்கள் 25,065,88. இவை விவசாய நிலங்கள். அது மட்டுமல்ல அர்பன்லேண்ட்ஸ் 656.62. திருக்கோயில் நிலங்களை அவற்றின் உண்மையான உடைமையாக்க நிர்வாகிகள் மேற்கொண்ட நேர்வுகள் 880. அதன் மூலமாகக் கிடைத்து இருக்கும் நிலம் 2,250·41. அவர்கள், பாஷையில் சொல்ல வேண்டுமானால் 40,247 சமய நிறுவனங்கள் அற நிலையத்திற்கு வெளியே இருக்கின்றன. இந்த எண்ணிக்கையெல்லாம் நான் புதிதாகச் சொல்ல வில்லை. அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் இருக்கிறது. இந்தக் கோவில் நிலங்கள் கோவிலுக்கும் சொந்தமாக இல்லை. உழுபவனுக்கும் சொந்தமாக இல்லை. இவைகளெல்லாம் இடைத்தரகர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்படத்தட்ட 2 லட்சம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன.

என்னுடைய முக்கிய வாதம் எல்லாம் இந்தத் துறையில் நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது. இதன் தொடர்பாக ஏராளமான காரியங்கள் நடைபெற வேண்டும். இதை நான் சொல்வதற்குக் காரணம் இந்த அரசாங்கத்தை விமர்சிக்க வேண்டுமென்பதற்காக அல்ல. அரசின்மீது குற்றச்சாட்டைக் கூறுவதற்காக அல்ல. இவ்வளவு பெரிய காரியங்களைக் கோடிக்கணக்கான ரூபாய்களை—இன்று மணலி கந்தசாமி அவர்களகூட பேசியிருப்பார் என்று கருதுகிறேன்—கோவில் நிலங்களைத் தனிப்பட்டவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்குக்கூட தெரியும். நான் இன்றைக்குச் சொல்லவில்லை. நான்

[திரு. கே. ஏ. மதியழகன்]

அமைச்சராக இருந்தபோதே சொல்லியிருக்கிறேன். இதற்குக் கொடுத்திருக்கும் விதிவிலக்கை எடுத்துவிடுங்கள். இப்படி விதிவிலக்கை எடுத்துவிட்டால் இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்காது என்று சொன்னேன். அது எந்த அளவிற்கு இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. அதைத் தெரிந்துகொள்ளப் பிரியப்படுகிறேன்.

THE HON. THIRU P.U. SHANMUGAM : Sir, I shall..........

THIRU K. A. MATHIALAGAN : I do not want any explanation ; I will not yield, Sir.

THE HON. THIRU P.U. SHANMUGAM : Because the hon. Member has dragged my name, I want to explain.

THIRU K. A. MATHIALAGAN : I am not yielding, Sir.

THE HON. THIRU P. U. SHANMUGAM: My name has been dragged ; otherwise I would not have come up to explain.

ரெவின்யூ அமைச்சருக்குத் தெரியும். 4 லட்சம் ஏக்கர் இருந்தது. அதைச் சொல்கிறேன். விதிவிலக்கு ரத்து செய்வது குறித்து என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். என்ன விதி விலக்கு? எப்போது ரத்து செய்யவேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டது. யார் செய்தார்கள்? அவர்கள் அந்தத் துறைக்கு அமைச்சராக இருந்திருக்கிறார்கள். கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். இப்போது உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று சட்டம் கொண்டுவர இருக்கிறோம். அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை அவர்கள் படித்து இருப்பார்கள் என்று கருதுகிறேன். அப்போது என்ன முயற்சி எடுக்கப்பட்டது. இப்போது என்ன முயற்சியைக் கைவிட்டோம் என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*திரு கே.ஏ. மதியழகன் : அதைத்தான் சொல்கிறேன். 4 லட்சம் ஏக்கர் நிலங்கள் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மட்டும் கோவில் நிலங்கள் கோவிலுக்கும் பயன்படாமல், உழுபவனுக்கும் பயன்படாமல், இடைத்தரகர்களின் கையில் இருக்கிறது. இது பல்லாண்டு காலமாக அவர்களாலே அனுபவிக்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய மொத்தச் சொத்தை கணக்கு எடுத்தால் 63 கோடி ரூபாய்க்கு வரும். கோவில்கள் இன்றைய தினம் 20 ஏக்கர்தான் சொந்தமாகச் சாகுபடி செய்யலாம். தனியாக ஒரு உழவனுக்கு 5 ஏக்கர் தான் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குமேல் ஒருவன் வைத்துக்கொள்ளக் கூடாது. அப்படியிருந்தபோதிலும் 4 லட்சம் ஏக்கர் நிலத்தை இந்த இடைத்தரகர்கள் பல்லாண்டு காலமாக அனுபவித்து வருகிறார்கள். அதை மாற்ற ஏன் இவ்வளவு கால தாமதம் ஏற்பட்டது. இந்த விதிவிலக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்குமானால் தமிழ்நாட்டிலேயே உழுபவனுக்குச் சொந்தமாக நிலம் எப்போதோ செய்யப்பட்டிருக்கும்.

[1973 மார்ச் 26

[திரு. கே. ஏ. மதியழகன்]

நினைத்தால் மிகவும் வெட்கமாக இருக்கிறது. கிறிஸ்துவ மடாலயங்கள், லயோலா கல்லூரி, கிருஸ்த்தவக் கல்லூரி, செயின்ட் ஜோசப் கல்லூரி, பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கல்லூரி என்று அமைத்து எவ்வளவு புனிதத் தொண்டாற்றி வருகிறார்கள் என்று பார்த்தால் நமக்கே ரொம்ப வெட்கமாக இருக்கிறது. அந்த முறையிலே நாமும் இன்னும் அதிகமான பணத்தை நல்ல காரியங்களுக்கு, ஆர்பனேஜ்கள், பிச்சைக்காரர் இல்லங்கள் ஆகியவற்றை அமைக்கச் செலவு செய்யவேண்டும்.

அமைச்சர்கள் பரிவட்டம் கட்டிக்கொண்டு புதிய பக்தர்களாக ஆகிவிடுவதற்குப் பதிலாக, அதில் ஆர்வம் செலுத்திக் கோவில் பணத்தை செலவிடச் செய்யவேண்டும். பல்லக்கில் போய்க்கொண்டிருந்த மடாதிபதிகள் 1 லட்ச ரூபாய் கொடுத்து செவர்லெட் கார் வாங்குகிறார்கள். தஞ்சை மாவட்ட மடாதிபதி ஒருவர் சமீபத்தில் வாங்கியிருக்கிறார். அவர்களெல்லாம் இப்படி காலப் போக்கில் பல்லக்கிலிருந்து காருக்கு மாறிவிட்டார்கள். இந்தக் காரியங்களும், மற்ற திருப்பணிகளும் நடக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அதோடு கூட, பல நல்ல காரியங்களைச் செய்யலாம்.

சமதர்மம் என்று சொல்லுகிறோம். சமதர்மம் என்றால் ஆதித் திராவிடர்களை அர்ச்சகர்களாகப் போடவேண்டும். அதற்காக அரசியல் சட்டத்தை திருத்த வேண்டும் என்று டில்லி மாநகருக்கு கடிதம் எழுதியிருக்கிறோம். இதற்குத் தான் மாநில சுயாட்சி என்கிறோம் என்கிறார்கள். ஆதித் திராவிடர்களை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக்கினோம் என்றால் பரவாயில்லை. அர்ச்சகர்கள் ஆக்கவேண்டும் என்பதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்த டில்லிக்கு எழுதியிருக்கிறோம் என்கிறார்கள். அர்ச்சகர்கள் பிள்ளைகள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு).

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, தற்போது அரசியல் சட்டத்தில் எந்தவித திருத்தமும் தேவையில்லாமல் ஆதித் திராவிடர்களை அர்ச்சகர்களாகப் போட இடமிருக்கிறது.

*திரு. கே. ஏ. மதியழகன்: தலைவரவர்களே, நான் அரசியல் சட்ட நிபுணன் இல்லை. அமைச்சர்கள் சொல்லுகிறார்கள். ஆதித் திராவிடர்களை அர்ச்சகர்களாகப் போடுவதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அர்ச்சகர்களாக இருந்தவர்கள் பிள்ளைகள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக ஆகிற காலம் இது.

மாண்புமிகு திரு. க. ராசாராம்: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவர்களுக்கு, பிற்பட்ட சமுதாய மாணவர்களுக்கு தமிழகத்தில் தனித்தனி நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகள் மூலமாக ஐ.ஏ.எஸ். தேர்வுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டு—நான் சென்ற கூட்டத்தில் கூட சொல்லியிருக்கிறேன்.—8 பேர் தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்த மாணவர்கள் ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதி, 3 பேர் தேர்வு பெற்று, வாய்மொழித் தேர்வுக்குப் (Viva Voce) போயிருக்கிறார்கள். இந்த மாதிரியாக தமிழகத்தில் புதிய வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறோம்.

1973 மார்ச் 26]

*திரு. கே. ஏ. மதியழகன்: தலைவரவர்களே, நான் ஏற்கெனவே அவர்களுடைய உரையில் இதைப் படித்திருக்கிறேன். 8 பேர், 12 பேர் ஆதித்திராவிடர்களை ஐ.ஏ.எஸ். ஆக்கியிருக்கிறோம் என்ற அளவுக்கு உங்களுடைய பொருளாதாரப் புரட்சி முடிந்தால் சரிதானா? தமிழகத்திலுள்ள 4 கோடி பேரில் 1 கோடி ஆதித் திராவிடர்கள் இருக்கிறார்கள். உங்களுடைய சமதர்மம் ஆதித் திராவிடர்களை அர்ச்சகர்களாகப் போடுகிற அளவுக்குத்தான் இருக்கிறது.

அதே மாதிரியாக இன்றைக்கு டிரஸ்டிகள் போடுகின்ற விஷயத்தை எடுத்துக் கொண்டால், பழங்காலத்தில் ராமசந்திர செட்டியார் கோவில் பெரிச்சாளிகள் என்று சொல்லுவார்கள். அந்த அளவுக்குப் பெரிச்சாளிகளை உண்டாக்காமல் நன்றாகச் செய்யவேண்டும் என்பதற்காக எடுத்துக் சொல்லுகிறேன். பெரிச்சாளிகளைப் பிடிக்கின்ற காரியங்களை நீங்கள் செய்யவில்லை.

புதிய பெரிச்சாளிகளை உருவாக்குகின்ற இடமாக கோவில்கள் ஆகிவிடக் கூடாது. நான் நிரம்ப வேதனையோடு சொல்லுகிறேன். இப்போது எல்லாம் நிழலுக்குக்கூட கோவிலுக்குப் போகாதவர்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்படுகிறார்கள். கட்சிக் கண்ணோட்டத்தோடு, கட்சிக்காக துஷ்பிரயோகம் செய்கிற முறையில் செய்கிறார்கள்.

பழனி கோவில் 52 லட்ச ரூபாய் வருமானம் வருகின்ற கோவில். அங்கே ஒரு திராவிட முன்னேற்ற கழக பாராளுமன்ற உறுப்பினரை அறங்காவலராகப் போட்டிருக்கிறார்கள். எங்கேயோ பாங்கில் வேலை செய்து கொண்டிருந்த அவரை நான் தான் பாராளுமன்ற உறுப்பினர் தேர்தலுக்கு நிறுத்த வேண்டுமென்று சிபார்சு செய்தேன். அவர் பாராளுமன்றத்தில் பணியாற்றுவதற்குப் பதிலாக பழனியில் அறங்காவலராக ஆகியிருக்கிறார். அங்கேயே இருக்கிறார் அவர் பெயர்கூட திரு. தண்டாயுதபாணி.

மாண்பு மிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அவையில் இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசுவது முறையல்ல. அவைத் தலைவராக இருந்த ஒருவருக்கு இது தெரியவில்லை என்றால் வருந்தத்தக்கது. அவையில் இல்லாத ஒருவரைப் பற்றி விமர்சிப்பது என்பது அவைக்குப் பெருமை தராது. அவையில் இல்லாதவரைப் பற்றி பேசக்கூடாது என்பதை உறுப்பினர் மறந்துவிட்டால் ஞாபகப்படுத்துகிறேன்.

*திரு. கே. ஏ, மதியழகன்: மாண்புமிகு அமைச்சருக்குத் தெரிந்த அளவுக்கு எனக்கும் தெரியும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, அவையில் இல்லாதவரைப் பற்றி பேசக் கூடாது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்தில் பேசிய பேச்சைப் பற்றி இங்கே விமர்சனம் செய்தால் சரியாக இருக்காதே தவிர, அவரைக் கோவில் டிரஸ்டியாகப் போட்டிருக்கிறார்கள். அது தேவையா என்று பேச முழு உரிமையிருக்கிறது.

[1973 மார்ச் 26

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அவர் சொன்னது பாராளுமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதற்குப் பதிலாக பழனி ஆண்டவர் கோவில் டிரஸ்டியாக இருக்கிறார் என்றார் என்பதை டாக்டர் ஹாண்டே மறக்க வேண்டாம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அவர் பாராளு மன்றத்தில் உறுப்பினராகவும் இல்லை. கோவிலில்கூட அறங்காவலராக இல்லை என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

*திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, எவ்வளவு நாளாக இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னால் நன்றாக இருக் கும். ஏனென்றால் இந்த நீக்கத்தை விமர்சனம் செய்த பிறகுதான் எடுத்திருக்கிறார்கள். இப்போது அரசியல் கட்சிக்காரர்களால் அந்த இடங் களுக்கு அபகீர்த்தி வந்து கொண்டிருக்கிறது. அம்மாதிரி இருப்பவர்களை எடுத்துவிடுவது நல்லது என்ற நல்லெண்ணத்தோடு கேட்டுக்கொள்ளு கிறேன். இன்றைன்று ஆதித் திராவிடர்களை அர்ச்சகர்களாகப் போட அரசியல் சட்டத்தைத் திருத்தும் காலம் இது.........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் திரு. மதியழகன் அவர்களிட மிருந்து தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம், தாழ்த்தப்பட்ட மக்கள் அர்ச்சகர்களாக வரக்கூடாதா ?

*திரு. கே. ஏ. மதியழகன் : உங்களைக் காட்டிலும் ஆதித்திராவிட மக்களிடத்தில் எனக்கு அதிக அக்கறை உண்டு, ஆர்வம் உண்டு. ஆதித் திராவிடர்கள் மாண்புமிகு அமைச்சர் சண்முகத்தைக் கேட்டுக்கொண்டு, அவருடைய நற்சான்றிதழை கேட்டுக்கொண்டு என்னை நிர்ணயிக்கப் போவ தில்லை. நீங்கள் எப்படி வேண்டுமானாலும் நினைத்துக்கொள்ளுங்கள். ஆதித் திராவிட மக்கள் எனது கருத்துக்களை நெடுநாட்களாக அறிவார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படியானால் அரசியல் சட்ட டத்தை திருத்துவதில் என்ன தவறு ?

திரு. கே. ஏ. மதியழகன் : உங்கள் துறையைச் சேர்ந்ததல்ல இது. நீங்கள் ஏன் குறுக்கிடுகிறீர்கள். நான் ஈல்டு செய்யவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கூட்டுப் பொறுப்பு என்ற முறை யில், எந்த அமைச்சர் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : கிடையாது. அமைச்சர்கூட உறுப்பினர் கள் பேசும்போது ஈல்டு செய்தால் தான் குறுக்கிட்டு பதில் சொல்லமுடியும். உறுப்பினர் உட்கார்ந்தால் தான் அமைச்சர் பேசலாமே தவிர அமைச்சர் என்பதினாலேயே தனிச் சலுகையோ, உரிமையோ கிடையாது. இல்லாவிட் டால் பேசக்கூடாது இவ்வளவு நாள் அமைச்சராக இருந்தவருக்கு இது தெரியாது இருப்பதற்கு வருந்துகிறேன்.

1973 மார்ச் 26]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : புத்தகத்தைப் படித்துப் பாருங்கள் தெரியும்.

திரு. கே. ஏ. மதியழகன் : படியுங்கள், நீங்களே நன்றாகப் படித் துப் பாருங்கள். அமைச்சர்களுக்கு ஒன்று, உறுப்பினர்களுக்கு ஒன்று என்று எந்த விதியும் கிடையாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். பொதுவாக அமைச்சர்கள் ஒரு கிளாஸ் ஆஃப் எம்.எல்.ஏக்கள் என்றும், அமைச்சர் அல்லாதவர்கள் இன்னொரு கிளாஸ் ஆஃப் எம்.எல்.ஏ-க்கள் என்றும் ரூல்சில் கிடையாது. இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் எல்லோரும் சரிசமம். மாண்புமிகு உறுப் பினர் நமது மதியழகன் அவர்கள் ஸ்பீக்கராக இருந்தபோது இதற்காக வாதாடி வாதாடிப் பார்த்தேன். வெற்றி பெறமுடியவில்லை. இப்போது இதில் வெற்றிபெற்றுவிட்டேன். (சிரிப்பு).

I want to establish in this House like in Lok Sabha that there is no distinction between the Ministers and other members of the House; all have equal rights. But just as I rise on a point of order, Ministers. also get up to explain a point in the middle of the speech of a member. If we yield, they can explain, but if we do not yield, Ministers cannot speak. The same thing when Ministers speak also; we get up and if the Ministers yield we put across a point. At times, as our Chief Minister says, if they want to wait till they complete an idea, we agree to that. This is what I have been claiming all these six years in this House. I am glad the ex-speaker concedes my point now. I hope the Hon. Deputy Speaker will now give a ruling on this.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விதிகள் எப்படி இருந்தாலும் நாம் ஒரு மரபை வைத்திருக்கிறோம். பேசுகின்றவர்கள் அமைச்சர்களாக இருந்தாலும் அல்லது உறுப்பினர்களாக இருந்தாலும் ஒரு மரபை வைத்தி ருக்கிறோம். உறுப்பினர்கள் பேசும்போது அமைச்சர்கள் தகவல் தருவது என்ற மரபை வைத்திருக்கிறோம். அதைப்போலவே அமைச்சர்கள் பேசும் போது எதிர்க்கட்சித் தலைவர்கள், நறுக்கித் தலைவர்கள் அல்லது குறிப்பிட்ட உறுப்பினர்கள் சில நேரங்களில் தகவல் தருவதற்கு அனுமதிக்கிறோம். இந்த முறையை அதிகமாக வளர்த்தக் கூடாது என்பதை உங்களோடு நானும் ஒப்புக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் ; மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கருத்தை நானும் ஒத்துக்கொள்கிறேன். நான் ஸ்பீக்கராக இருந்தபோது அப்படிச் செய்யவில்லை என்று சொன்னார்கள். இதே கருத்தை முதலமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். அவர்களும் அதை இல்லை என்று சொல்லவில்லை. இப்படி அமைச்சர்களும் உறுப்பினர்களும் அடிக்கடி குறுக்கிடுவது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. அடிக்கடி குறுக்கிடும் சில அமைச்சர்களைக் குறுக்கிடாதபடி நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள் என்று

[திரு. கே. ஏ. மதியழகன்]

முதலமைச்சரிடம் பல நேரம் நான் தெரிவித்திருக்கிறேன். எப்போது குறுக்கிடுவது, எப்போது குறுக்கிடக் கூடாது என்று விதி முறைகளில் ஒன்றும் இல்லை. அமைச்சர்களுக்கு இருக்கிற உரிமை உறுப்பினர்களுக்கும் உண்டு என்று சொல்லியிருக்கிறேன்.

தொல்பொருள் துறையைப் பொறுத்தமட்டிலே 100 கோவில்களில் டில்லிக்காரர்களுக்கு பங்கு இருக்கிறது. கோவில்களிலே கூட பங்கு வேண்டுமென்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள். அவைகளிலே நல்ல ஓவியங்கள், சிற்பங்கள், கல்வெட்டுக்கள் இருக்கின்றன என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற நிலைமையை மாற்றி, எல்லாக் கோவில்களை யும் மாநில அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவா வேண்டும். கோடிக் கணக்கான ரூபாய் 500 கோடி ரூபாய் இருக்கும் என்று நினைக்கிறேன்—அரசாங்கத்திற்குக் கிடைக்கும் எல்லாவற்றையும் அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தால். அந்த வருமானத்தைக்கொண்டு இந்த நாட்டு மக்க ளுக்கு இன்னும் நல்ல பல சேவைகளைச் செய்யமுடியும் என்று கூறி, உரையை முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE; I want to know one point. Does the hon. Member suggest nationalisation of the entire property of the temples ? That will be dangerous. Already we have given too much of money in the hands of the powers that be. Ultimately where it will all end up ? I share the enthusiasm of the hon. Member in regard to appointment of Archakas. But if we should advocate nationalisation of the entire property of temples, that will lead us where we do not know.

திரு கே. ஏ. மதியழகன் : நாஷனலைசேஷன் என்ற உடனே அவர் களுக்குப் பயம் வந்துவிட்டது. அவர்கள் கருதுவதைப்போல எல்லா வற்றையும் நாஷனலைசேஷன் செய்யவேண்டுமென்ற ஆர்வம் உள்ளவன் நான் அல்ல. இப்போது பல்வேறு விதங்களில் கோவில் சொத்துக்கள் இருக்கின்றன. அவை பல்வேறு பட்டவர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. சொத்தாகவும், வேறு பொருளாகவும் இருக்கின்றவைகளை எல்லாம் கணக்கெடுத்து, இந்த இலாகாவிலே இருக்கின்ற நிர்வாக அதிகாரிகள் நல்லமுறையிலே கண்காணிக் கவேண்டும். அப்படி ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்தி கண்காணிக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டால் இப்போது இருப்ப தைவிட இன்னும் நல்ல முறையிலே செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : By nationalisation, you will be placing in the hands of the ruling party all the money. That is the danger you have to guard against.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர்களே, இந்த அறநிலைய பாதுகாப்பு இலாகாவைப் பொறுத்தமட்டில் ஒரு சில வார்த்தைகளைக் கூறி முடித்துக் கொள்கிறேன். எங்களுடைய கட்சியின் சார்பாக ஒரு

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். அதை வலியுறுத்த வேண்டு மென்ற முறையில் இரண்டொரு கருத்துக்களை மட்டும் கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு ஆலயங்களைப் பொறுத்த மட்டில் ஆலயங்களை சீராகவும் சிறப்பாகவும் பேணி வரவேண்டுமென்று முதலிலே கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல கோயில்கள் நல்ல முறையில் பேணப்படாமல் இருக்கின்றன. உதாரணத்திற்கு, இப்போது பெரிய பெரிய ஆலயங்கள் பல இடங்களில் இருக்கின்றன. அவைகளைக் காலாகாலங்களில் பழுதுபார்த்து, செயல்படுத்தி னல் இந்த அறநிலைய பாதுகாப்புத் துறை சீராகவும் சிறப்பாகவும் அமை யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆஸ்திகர்களும் நாஸ்திகர்களும் இன்று கோயில் வழிபாட்டிலே அக்கறை கொண்டவர்களாக இருப்பதனல் எல்லோரும் மதிக்கக்கூடிய அளவிலே கோயில்கள் சிறப்பாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் அண்மையிலே காஞ்சீபுரத்திலுள்ள வரதராஜபெருமாள் கோயி லுக்குச் சென்றிருந்தேன். அந்த ஆலயம் சரியான முறையிலே பரா மரிக்கப்படாமல் இருப்பதைக் கண்டேன். அதை நல்ல முறையிலே பரா மரிக்க, யு.என். நிறுவனத்திலிருந்து பல உதவிகள் கிடைப்பதைப்போன்று இதற்கும் உதவிகள் பெற்று, அதைக்கொண்டு அந்த ஆலயத்தை நல்ல முறையில் பராமரிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. அங்கே தொல்பொருள் ஆராய்ச்சிக்கு உகந்ததாக பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அதை அரசாங்கம் பாதுகாக்க தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே நான் இருந்தபோது, அந்தக் கோயிலில் அலுவல்புரியும் ஒருவர் என்னிடம் வந்து ஒரு புகாரைச் சொன்னர். அவருடைய ஊதியம் என்ன என்று கேட்டேன். அவர் மாதம் 3½ ரூபாய் சம்பளம் என்று சொன்னர். கோயில் பணிகளைச் செய்கிற ஒருவருக்கு மாதம் 3½ ரூபாய் சம்பளம் என்றல் அவரால் எப்படி வாழமுடியும் ? அவர் குடும்பத்தை எப்படிக் காப்பாற்ற முடியும் ? அவருடைய வாழ்க்கைக்கு ஏற்ற அளவில் ஒரு குறைந்த பட்ச ஊதியமாவது அவருக்குக் கொடுக்கவேண்டும். அவருக்கு 3 குழந்தைகள் இருப்பதாகவும் சொன்னர். அவரைப் போலவே பல கோயில்களிலும் சிறு சிறு பணியாளர்கள் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் இந்த ஊதியம் போதாமல் இருப்பதால் அவர்கள் வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் ஒரு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்து அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கோயில் கல்யாண மண்டபம் கட்டுவது பற்றிய ஒரு புகாரை மாண்புமிகு அமைச்சரவர்களிடம் கொடுக்க விரும்புகிறேன். மதுரை தாலுக்காவில் கருப்புண்ணசுவாமி கோயில் கல்யாண மண்டபம் கட்ட 32,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கருப்பண்ண சுவாமி கோயில பரம்பரை டிரஸ்டியாக இருப்பவரிடம் அந்த காண்ட்ராக்டரைக்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கொடுத்தார்கள். ஆனால் அந்த 32,000 ரூபாயில் கட்டப்பட வேண்டிய கல்யாண மண்டபத்திற்குப் பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்படவில்லை. தவறுதலாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்; கையாடல் செய்திருப்பார்களோ என்று நினைக்கக்கூடிய அளவில் இருக்கிறது. அதுபற்றி புகார் கொடுத்தார்கள். ஆனால் இந்த இலாகாவில் இருக்கின்றவர்கள் அவருக்கு அதிகமாகச் சலுகைகள் கொடுத்திருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த மாதிரியான தீயச் செயல்கள் எங்கும் நடைபெறாமல் இருக்க, அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மாதிரியாகச் செலவழிப்பதற்காக ஒதுக்கப்படும் பணம் சரியான முறையிலே காலாகாலங்களில் செலவழிக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் வேண்டிய எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு முக்கியமான விஷயம்—எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தேவஸ்வம் போர்டு என்ற அமைப்புத்தான் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. அதில் 3 நபர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் திருவாங்கூர் மன்னரால் நியமனம் செய்யப்படுகிறவர். அந்த தேவஸ்வம் போர்டுக்கு ஆண்டுதோறும் 13 லட்சம் ரூபாய் கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மன்னவர்களுக்குள்ள எல்லாவிதமான சலுகைகளும், மானியங்களும் ஒழிக்கப்பட்டப் பிறகும், இந்த தேவஸ்வம் போர்டில் ஒரு மெம்பரை நியமிக்கும் உரிமை மட்டும் இன்னும் இருக்கிறதா இல்லையா என்பது சிந்திக்கப்பட வேண்டிய விஷயம்.

என்னைப் பொறுத்தவரையிலே எப்போது மன்னர்களின் சலுகைகள் எல்லாம் ஒழிக்கப்பட்டனவோ, அப்போதிலிருந்தே அந்த தேவஸ்வம் போர்டில் அந்த மெம்பரை நியமிப்பதற்கான அதிகாரமும் ஒழிக்கப்பட்டுவிட்டது. இன்னும் அந்த அதிகாரத்தை அவர் பயன்படுத்துவது சட்டத்திற்கு விரோதமானது, சட்டத்திற்குப் புறம்பானது என்பதை நான் தெளிவாக தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால் அவர்கள் எந்த சட்டத்தின் அடிப்படையிலே நாமினேஷன் பெற்று இருந்தார்களோ அந்தச் சட்டங்களும் சலுகைகளும் அடிபட்டுப்போனபிறகு நான் இவற்றை நீடிப்பதற்கு உரிமையில்லை என்ற சட்டபூர்வமான வாதத்தைக் கிளப்புவதற்காக முற்படுகிறேன். இது சம்பந்தமான அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, ஒரு சட்ட முன் வடிவையும் தயார் செய்திருக்கிறோம். இதுவரையில் அதற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்றும் சொன்னார்கள். முன்பெல்லாம் அரசர்கள் ஆலயங்களைப் பராமரித்தார்கள். ஆனால் இன்று மக்களே ஆலயங்களின் பராமரிப்பில் மிகுந்த அக்கறை காண்பித்து வருகின்றார்கள். மன்னர்கள் இந்தத் துறையில் செய்த தொண்டினை நாம் மறுக்கவில்லை. ஆனால் அவர்கள் சட்டரீதியாக தங்கள் அந்தஸ்தை இழந்தபிறகு அவர்களுக்கு மேலும் இந்த அந்தஸ்தை நீடிப்பது நியாயமுமில்லை தர்மமுமில்லை.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அடுத்து, அந்த போர்டில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களைப் பற்றியும் இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அங்கே 142 பேர் பணிபுரிகின்றார்கள். அவர்களுடைய சம்பள விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டாலும் இது வரையில் சம்பள பாக்கிகளைக் கொடுக்கவில்லை. 20—10—1970 முதல் 31—12—1971 வரையில் அவர்களுக்கு மாற்றியமைக்கப்பட்ட சம்பளவிகிதங்களின் அடிப்படையில் அவர்களுக்கு இன்னும் சம்பள பாக்கிகள் கொடுக்கப்படாமல் இருக்கின்றன என்று சொல்லுகின்றார்கள். இன்னும் மெட்ராஸ் லிபரலைஸ்டு பென்ஷன் ரூல்ஸ், டி.ஸி.ஆர்., மெடிக்கல் ஃபெஸிலிட்டீஸ், கிராசுவிடி போன்றவைகள் எல்லாம் அவர்கள் விஷயத்தில் இன்னும் விஸ்தரிக்கப்படாமல் இருக்கின்றது. இந்தப் போர்டை அரசு மேற்கொள்ள இருப்பதாக முடிவெடுத்திருப்பதால், இவர்களை இந்த இலாகாவிலே "இன்டகெரேட்" செய்ய வேண்டும், இணைக்க வேண்டும். அப்போதுதான் பல்லாண்டுகாலமாக இந்தத் தேவாலயங்களுக்கு உழைத்துவரும் அவர்களுக்கு நியாயம் வழங்கியதாக அமையும்.

அடுத்து கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டில் "தேவி குமரி கல்லூரி" என்று பெண்களுக்கான கல்லூரியொன்று குழித்துறையில் இருக்கின்றது. இது ஆறேழு ஆண்டுகாலமாக இயங்கிவருகின்றது. இதற்கு நல்லதொரு கட்டிடம் இல்லை என்ற குறைபாடு இருந்து வருகிறது. அந்தப் பகுதியிலுள்ள பெரியவர்கள் பலர் சேர்ந்து இதற்காக ஒன்பது பத்து ஏக்கர் நிலத்தை வாங்கி இந்த இடத்தில் வேண்டிய கட்டிடங்களைக் கட்டி அந்தக் கல்லூரியை மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு, அந்த நிலத்தையெல்லாம் ரெஜிஸ்டர் கூடச் செய்து கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் இதை இந்த இலாகாவினர் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. போர்டிலுள்ள ஒரு சிலர் அந்தக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றி விடலாமா என்று முயற்சி செய்து கொண்டு இருக்கின்றார்கள். இதையெல்லாம் செய்யாமல், நல்ல கட்டிடத்தைக் கட்டி முடித்து அந்தக் கல்லூரியை அந்த இடத்திலேயே வைத்து மேலும் விஸ்தரிக்க வேண்டும். ஏன் என்றால் அது பெண்களுக்கான கல்லூரி. அனைத்துச் சமூகப் பெண்களும் சேர்ந்து படிக்கும் நல்ல வாய்ப்பு இருக்கின்றது, இது அங்கே இருப்பதால். எனவே இதைச் செய்து அந்தப் பகுதியிலுள்ள பெண்களுடைய மேல்படிப்பிற்கு ஊக்கம் அளித்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தக் கல்லூரியைப் பொருத்த வரையில் இந்த ஆண்டு அங்கே ஒரு பெரும் தவறு நடந்திருக்கின்றது. படிக்கும் மாணவியர்களில் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர் "டிடென்ஷன்" செய்யப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு மாணவர்களை ஏன் மேல் வகுப்பிற்கு அனுப்பாமல் விட்டுவிட்டார்கள் என்று தெரியவில்லை. அந்தப் பகுதியிலுள்ள பெற்றோர்களுக்கு இது ஒரு பெரும் அதிர்ச்சியினை அளித்திருக்கின்றது. ஐம்பது சதவிகிதம் "டிடென்ஷன்" என்பது கேள்விப்படாத ஒன்றாக இருக்கிறது. பத்து அல்லது பதினைந்து சதவிகிதம் என்றால் ஏற்றுக்கொள்ளலாம். எனவே இதற்கு வேண்டிய பரிகாரத்தைத் தேட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. மு. கண்ணப்பன்]

என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரண்டு பால் பண்ணைகளைத் தவிர பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தின் மூலம் துணைப் பால் பண்ணைகளையும் ஆரம்பிக்க இருக்கிறோம். ஈரோடுக்குப் பக்கத்தில் நாள் ஒன்றுக்கு 1 லட்சம் லிட்டர் பாலை பதனப்படுத்தும் கொள்ளளவு உள்ள வகையில் ஒரு துணைப் பால் பண்ணை ஒன்றையும், வடாற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடியில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுக்கு ஒரு துணைப் பால் பண்ணை ஒன்றையும் அமைக்க இருக்கிறோம்.

அடுத்து, தூய்மையான பாலை வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போதே தூய்மையான பாலைத்தான் வழங்குகிறோம். மனித சக்தி பயன்படுத்தப்படாமல் இயந்திரங்களினாலேயே பக்குவப்படுத்தப்பட்டு, புட்டிகளில் அடைக்கப்படுகிற பாலைத்தான் வழங்குகிறோம். ஆனால் பால் புட்டியில் வருகிறபோது நடுவில் சில தவறுகள் நடக்கின்றன என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். வெளிநாடுகளைப் போலவே இங்கேயும் ப்ளாஸ்டிக் பையில் பாலை வழங்குவதுப் பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது. இதற்குத் தேவையான இயந்திரம் வெளிநாட்டில் இருந்து வந்தாக வேண்டும். அதற்காக மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம். அவர்களும் இதற்கு ஒப்பதல் தருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதை ஒரு சோதனைத் திட்டமாக சென்னையில் நடத்திப் பார்த்து வெற்றிகரமாகச் செயல்பட்டால் சென்னை நகரம் முழுவதற்குமே இதனை மேற்கொள்ள பால் பண்ணைக் கழகம் கருதிக் கொண்டிருக்கிறது. இன்றைக்குச் சென்னை நகரமாக இருந்தாலும், மாநிலத்திலுள்ள திருச்சி, மதுரை, கோவை, வேறு பல ஊர்களாக இருந்தாலும் மில்க் சப்ளை யூனியன், கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் மக்களுடைய தேவைகளை அறிந்து பூர்த்தி செய்து வருகிறார்கள்.

இந்தத்துறை மேலும் சிறந்த முறையில் இயங்க வேண்டுமென்று சொல்கிற கருத்து ஒப்புக்கொள்ள வேண்டிய கருத்தாகும். பால் உற்பத்தி செய்கிறவர்களுக்கும் கட்டுபடியாகக்கூடிய விலை கொடுக்க வேண்டும், பாலை வாங்கிப் பருகுவோர்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற கருத்தைக் குறிப்பிட்டார்கள். இந்தக் கோரிக்கையை கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் என்னிடம் பேசுகின்ற நேரத்திலும் தெரிவித்தார்கள். இதுபற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். அந்த முடிவு சீக்கிரமே அறிவிக்கப்படும். பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கக் கூடியதாக இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சௌடி சுந்தரபாரதி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் பால் பவுடர் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்றார்கள். மதுரைப் பண்ணையில் அப்படிப்பட்ட தொழிற்சாலையை சுமார் 60 லட்சம் ரூபாய் செலவில், நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் பாலை பவுடராக மாற்ற, நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த வேலைகள் முடியக் கூடிய நிலையில் இருக்கிறது. 1973-ஆம் ஆண்டு முடிவுக்குள் அந்த வேலை பூர்த்தியாகி, அந்தத் தொழிற்சாலை செயல்படத் தொடங்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. மு. கண்ணப்பன்]

பங்களூருக்கு தர்மபுரி மாவட்டத்தில் இருந்து பால் போவதாகச் சொன்னார்கள். போகக் கூடாது என்று நான் சொல்லவில்லை. மிக அதிக அளவில் போகிறதென்று சொல்ல முடியாது. தர்மபுரி மாவட்டமும் இந்த பால் பண்ணை கழகத்திற்குள் வருவதால் அங்கே கிடைக்கிற பாலை சேலத்திற்கோ, சென்னைக்கோ சேகரித்துக் கொண்டு போக ஏற்பாடு செய்யப்படும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிக நிதி கொடுக்கப்பட வேண்டும், பழைய பாக்கிகளை வஜா செய்ய வேண்டும், அதில் இன்னும் அதிகப்படியான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தாலும் மாநில அளவில் ஒரு அமைப்பு இல்லை. ஆகவே மாநில அமைப்பை ஸ்டேட் பெடரேஷன் என்று உண்டாக்கி, கூட்டுறவு மத்திய வங்கிகளின் மூலம் கடன் கொடுக்க வகை செய்ய அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேமாதிரி தற்போது 2,322 கூட்டுறவு பால் வழங்கு சங்கங்களும், ஒன்றியங்களும் இருக்கின்றன. எல்லாமே நல்ல முறையில் செயல்படுவதாகச் சொல்ல முடியாது. நிதிப் பற்றுக்குறை காரணமாக சரியாகச் செயல்படாது மூடப்பட்டவைகள் பல இருக்கின்றன. அவை எல்லாமே நல்ல முறையில் செயல்படுவதற்கு வட்டார அமைப்பு ஒன்றில் கொண்டுவர யோசனை செய்து கொண்டிருக்கிறோம். வெகு சீக்கிரத்தில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு சிறந்த முறையில் மாற்றி அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

பால் துறையின் அதிகாரியாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். நிர்வாகத்தைப் பார்த்துக்கொள்ளத்தான் ஐ.ஏ.எஸ். அதிகாரி இருக்கிறாரே தவிர, தொழில் நுட்ப யோசனைகள் என்றால்—கால் நடைத்துறைக்கு கால்நடை நிபுணர்கள்தான் இருக்கிறார்கள் பால்துறைக்கு அது பற்றி நல்ல பயிற்சி பெற்ற அதிகாரிகள் தான் இருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரி நிர்வாகப் பொறுப்பை கவனித்துக் கொண்டு வருவதனாலே நல்ல முறையில் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பால் துறையைப் பொறுத்தவரையில் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள், ஒரு மாடு, இரண்டு மாடு என்று வைத்துக்கொண்டிருக்கிற மிகச் சாதாரண மக்களுக்குக் கூட வாழ்வு கொடுக்கக்கூடிய துறையாகும். எதிர்காலத்தில் இது இன்னும் சிறந்த முறையில் செயல்படவேண்டும் என்கிற எண்ணத்தில் இங்கே சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்கள் யாவையும் ஆராய்ந்து இந்தத் துறை செயல்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மேலிடத்தில் நியமிப்பதன் மூலம் பால் பண்ணைகளை எந்த இடத்தில் ஆரம்பிப்பது என்ற பிரச்சினையை எடுத்துக்கொண்டால்....

மாண்புமிகு மாற்றுக தலைவர் : (திரு நா. வீராசாமி) : டாக்டர் ஹாண்டே அவர்கள் சேரைப் பார்த்துப் பேசவேண்டும். பாயிண்ட் ஆப் ஆர்டரா ? விளக்கமா கேட்கிறீர்களா ?

[திரு. மு. கண்ணப்பன்]

துவக்கப்பட்டு, 13, 14 சித்த மருத்துவ மனைகள் அமைக்கப்பட்டதிலே, சில இடங்களிலே அவை வெற்றிகரமாக நடைபெறவில்லை. சில இடங்களிலே, மக்கள் விரும்பவில்லை. கோயில் நிதியை செலவழிக்கின்ற நேரத்தில், அதை வீணாக்காமல் எங்கே தேவையென்பதையறிந்து சித்த மருத்துவ மனையை துவக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். ஆகவே, வருகின்ற ஆண்டுகளில் எந்த எந்த கோயில்களில் உபரி நிதி இருக்கிறதோ, அந்த அந்த கோயில்களில் இந்த சித்த வைத்திய மனைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று நாங்கள் நினைத்திருக்கிறோம்.

கோயில் கல்வெட்டுகளிலிருந்து வரலாறை தயாரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளிலிருந்து நாம் வரலாறுகளைத் தயாரிக்கிறோம். ஒவ்வொரு மாவட்ட வாரியாக கல்வெட்டுகள், செப்பேடுகள் போன்றவற்றிலிருந்து, அவற்றிலிருக்கிற வரலாற்றுச் சான்றுகளை எடுத்து வரலாறு தயாரித்து வருகிறோம். அப்படிக் கூறுகின்ற நேரத்தில் நிச்சயமாக நம்முடைய தமிழ்நாட்டினுடைய வரலாறு தயாரிக்க முடியும் என்ற நோக்கத்தில்தான் அதற்கான முயற்சிகள் எதிர்காலத்திலே மேற்கொள்ளப்படும் என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறேன். இப்படி தயாரிக்க வேண்டுமென்று 7, 8 ஆண்டுகளாக 2 மாவட்டங்களில் அந்த முயற்சியை மேற்கொண்டார்கள். விரைவிலே தமிழாய்ந்த நிபுணர்களைக் கொண்டு, வரலாற்று நிபுணர்களைக் கொண்டு, இத்தகைய பணியிலே அவர்கள் ஈடுபட ஆவன செய்யப்படுமென்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, கோயில்களுடைய நிலத்தையெல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டும், இந்து மதத்திற்கு சம்பந்தப்பட்ட நிலங்களை மட்டும் எடுத்துக் கொள்ளக்கூடாது, ஏன் வேறு மதங்களுடைய நிலங்களை எல்லாம் எடுப்பதில்லை என்று சௌடி சுந்தரபாரதி அவர்கள் குறிப்பிட்டார்கள். கோயில் நிலங்கள் ஏராளமாக இருந்தாலும் அவற்றிற்கு வெவ்வேறு வருமானக் குத்தகை என்று யார் யாரோ அனுபவித்து வருகிறார்கள். லட்சக்கணக்கான ரூபாய் குத்தகை பாக்கி வரவேண்டி இருக்கிறது. அதனாலே சில கோயில்கள் பாதிக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆதலால், கோயில்களுக்குப் பாதகம் இல்லாத வகையில் அந்தக் கொள்கையை செயலாற்ற எதிர்காலத்திலே திட்டம் இட்டிருக்கிறோம்.

காரைக்குடியிலே ஒரு திருமண மண்டபத்தை கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சிதம்பரம் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திருமண மண்டபம் கட்டுவதற்கு ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்டு, அதற்கு வேண்டிய வேலைகள், சீக்கிரத்திலே துவங்க இருக்கிறது. கோயில் உபரி நிதி போக, மீதி தேவைப்படுகிற நிதி, அரசிடமிருந்தும், மற்ற வகையிலேயும் வசூலிக்கப்பட்டு, திருமண மண்டபம் கட்ட முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் களைப் பற்றியெல்லாம் மதிப்பிற்குரிய ஜோதி அம்மையார் அவர்கள் குறிப் பிட்டார்கள். வரதராஜ பெருமாள் கோயிலுக்கு, யுனெஸ்கோ நிதியுதவித்

[திரு. மு. கண்ணப்பன்]

தருவதாகச் சொல்லியிருந்தாலும்கூட, அவர்கள்தான் காலதாமதம் செய்கிறார்களே தவிர, அரசு பொறுத்த வரையிலே ஒன்றுமில்லை. இதுபற்றி பலமுறை கேட்டாலும், இனியும் வற்புறுத்தி, அந்த உதவியைப் பெற்று, முழு முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் கோயிலைப் பொறுத்தவரையிலும், ரூ 4 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ரூ. 70,000 செலவிடப்பட்டிருக்கிறது. பொதுப் பணித்துறையினரிடம் ரிப்பேர் வேலைகள் ஒப்படைக்கப்பட்டு, அதற்கென்று ஒரு உதவி இன்ஜினீயர்கூடப் போடப்பட்டு, அவருடைய மேற்பார்வையிலே அதைச் செய்து வருகிறோம். சமீபத்திலே அந்தக் கோயில் வேலைகள் எப்படி நடைபெறுகின்றன என்று நாங்கள் எல்லாம்கூடப் போய் பார்த்து வந்தோம். அப்பணிகளை சீரிய முறையிலே முடிக்க வேண்டுமென்று அன்றாடம் பணியாட்கள் அயராது வேலை செய்து வருகிறார்கள். அத்தகைய திருப்பணியும் நடக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நிர்வாக அதிகாரிகளைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டிலே, நம்முடைய துறையின்கீழ் உள்ள கோயில்களில் நிர்வாக அதிகாரிகளை நாம் நியமிக்க முயற்சிக்கிறோம். ரூ. 1,000 அளவிலே வருமானம் உள்ள கோயில்களுக்கு நிர்வாக அதிகாரி போட்டால், அவருடைய சம்பளத்திற்கு சரியாகப் போகும் என்று சொன்னார்கள். அங்கே நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதில்லை. ஆனால், 10 கோயில்கள், 15 கோயில்களை ஒன்றாக சேர்த்து, குரூப் செய்து, அவைகளுடைய வருமானத்தைக் கண்காணிப்பதற்கு, செலவைக் கண்காணிப்பதற்கு. சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும். அதைக் கருத்தில்கொண்டு, நிர்வாக அதிகாரிகளைப் போடவேண்டுமென்று யோசனை செய்து கொண்டிருக்கிறோம். எதிர்காலத்திலே அதுவும் செயல்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ரூ. 200 வருமானம் வருகிற கோயில்களிடமிருந்துகூட காண்ட்ரிபியூஷன் கேட்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் பேசுகின்ற பொழுது சொன்னார்கள். ரூ. 1,000 வரை வருமானம் வருகிற கோயில்களுக்கு 100-க்கு ரூ. 2 கொடுத்தால் போதும் என்று வைத்திருக்கிறோம். அந்த நிலைமையிலேதான் காண்ட்ரிபியூஷன் வசூல் செய்கிறோமே தவிர, ஏதோ அந்த ஆலயத்தினுடைய வருமானத்தைப் பாதிக்கிற அளவுக்கு காண்ட்ரிபியூஷன் வசூலிக்கப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயில் சொத்துக்களை, வருமானத்தை வேறு காரியத்திற்கு பயன்படுத்தக் கூடாது, என்று சொன்னார்கள். வேறு நிகழ்ச்சியிலே சொன்ன பதிலையெல்லாம் இங்கே குறிப்பிட்டு சொன்னார்கள். ஆனால், வேறு காரியத்திற்கு பயன்படுத்த வேண்டுமென்று அதே நிகழ்ச்சியிலே தப்புக் கொண்டார்கள். இருந்தாலும் இங்கே பேசியாக வேண்டியிருக்கிறது. வருமானத்தையும் நாம் வேறு காரியங்களுக்குச் செலவு செய்யவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : க்ளாரிபிகேஷன்..........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : அவர் பேசி முடித்த பிறகு கேளுங்கள். நான் அனுமதிக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவர் பேசி முடித்து வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்ட பிறகுதான் நான் எழுந்திருந்தேன். நீங்கள் ஆப்செண்ட் மைண்டாக இருந்திருக்கிறீர்கள்..............

(திரு. தியாகராஜன் எழுந்திருந்தார்) நான் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அவர் சொல்லவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அதைச் சொல்லவில்லை. அதைத்தவிர அந்த சப்ஜெக்ட் பற்றிய கருத்துக்களை அவர் சொல்லி முடித்த பிறகுதான் நான் கேட்கிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Dr. Hande is using strong words as 'absent minded' against the Chair. It is not fair.

(பேரவைத் துணைத்தலைவர் தலைமை).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லும்போது டாக்டர் ஹாண்டே ஏதோ சொல்வதற்காக எழுந்தார். அந்த வாக்கியத்தை முடித்துவிட்ட பிறகு அவர் சொல்லலாம் என்ற நேரத்திலேதான் அவரை கையமர்த்தினேன். நான் உட்கார்ந்த பிறகுதான் அவர் எழுந்தார். ஆகவே, அவர் அந்தக் கருத்தைச் சொல்வதற்கு அனுமதிக்கலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : எனக்குத் தெரியாத, புதிதாக இருக்கின்றன ரூல்ஸ் எல்லாம். நான் சொன்னது என்னவென்றால், இந்த டெய்ரி நிர்வாகத்திற்குக் கூட ஐ.ஏ.எஸ். ஆபீசர்களைப் போடலாம். ஆனால், உற்பத்தி செய்யக்கூடிய டெக்னிக்கல் நிர்வாகத்திற்கு அவர்களை போடக் கூடாது என்பது. இங்கே, ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போடுவதன் மூலம், இன்னொரு இலையை போடுவது பற்றி, அம்பத்தூரிலே போடுவது பற்றி, அவர்கள் நிர்ணயிப்பார்கள். ஆனால், டெக்னிக்கலுக்குப் பம்பாய்க்குப் போகிறோம். பம்பாயிலே டிரெயினிங் பெர்சன் ஒருவர் இருக்கிறார். மிஸ்டர் குரோடி, பம்பாயிலிருந்து வந்தார். அவர் வந்து யோசனை சொன்னார். அவர் யோசனை கொடுக்கின்ற நேரத்திலே டெக்னிக்கல் எக்ஸ்பார்ட்ஸ் அதைக் கேட்டுக் கொள்கிறார்கள். அதை ஐ.ஏ.எஸ். அதிகாரியிடத்தில் சொல்கிறார்கள். இப்படி டெக்னிக்கல் எக்ஸ்பர்ட்ஸை யோசனை கேட்பதற்குப் பதிலாக, அவர்களையே அதிகாரியாகப் போடலாம்.

அங்கிருக்கிற டெக்னிக்கல் எக்ஸ்பார்ட்ஸ் இஸ் சூப்பர் ஐ.ஏ. எஸ். இதற்காக, நீங்கள் டெக்னிக்கல் எக்ஸ்பர்ட்ஸையே சேர்த்துவிட்டால், அங்கே பம்பாயிலே இருக்கிற மாதிரி, இங்கேயும் நிர்வாகம் நடக்கும் என்ற அந்த கருத்தை நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்திய பால் பண்ணைக் கழகத்தினுடைய ஆலோசனையைப் பெற்று, அந்தத் துறையிலே நிபுணர்களாக இருக்கிறவர்களுடைய ஆலோசனையைப் பெற்றுத்தான், பால் பண்ணைகளை, துணைப் பால் பண்ணைகளை அமைப்பதாக இருந்தாலும் செயல்படுகிறார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரியினுடைய யோசனையைப் பெற்று செயல்படவில்லை. அந்தத் துறையிலே பயிற்சி பெற்றவர்களுடைய யோசனையைப் பெற்றுத்தான் பயிற்சி பெறுகிறார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டிலே இருக்கிற அறநிலையங்கள் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பற்றி, புதிய நிறுவனங்களைக் கண்டு பிடிக்கவும், அதேபோல் புதிய நிலையங்களுக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும், அல்லது பல்வேறு சொத்துக்களாக இருந்தாலும் அவையெல்லாம் தனியாருடைய வசதியிலே இருக்கிறது. அதை அரசுக்கு மாற்ற வேண்டும். அதை அரசுக்குக் கொண்டுவர வேண்டும். அவை இருப்பது கண்டு பிடிக்கப்பட வேண்டும். நம்முடைய துறையினுடைய கட்டுப்பாட்டின் கீழ் அவற்றைக் கொண்டு வரவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இதற்காக தனியாக ஒரு அதிகாரியை நியமித்தோம். அவரின் கீழ் பல அதிகாரிகளை நியமித்து, இன்றைய வரையிலே அவர்கள் தேடிக் கண்டுபிடித்திருப்பது 40,247 நிறுவனங்கள். அவைகளுக்கு 1,98,920 ஏக்கர் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன என்று குறிப்பிலேயே கொடுத்திருக்கிறேன்.

இப்படிப்பட்ட இடங்களைப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறோம். 13,000-க்கு மேற்பட்ட அறநிலையங்கள் நம்முடைய பொறுப்பிலே இருந்தாலும், புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டவை 40,000-க்கு மேற்பட்டவை என்று சொல்லி இருக்கிறோம். ஆனால் தனியார் நிறுவனங்களாக இருந்தாலும், அவைகளைச் சேர்ந்த சொத்துக்களாக இருந்தாலும், அவைகளை இத்துறையினர் எடுத்துக்கொள்கிற நேரத்தில், அவர்கள் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். நீதிமன்றத்திலே தடை உத்தரவு பெறுகிறார்கள். இப்படி அரசு நிர்வாகத்திலே சில சிக்கல்கள் இருப்பதாலேதான் தாமதம் ஆகியிருக்கிறதே தவிர, வேறு எந்தக் காரணத்திற்காகவும் தாமதம் ஆகிறது என்று சொல்ல முடியாது. இருந்தாலும், தீவிரமாக கவனம் செலுத்தி உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களைக் கொண்டு எதிர்காலத்திலே நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதைப்போல சித்த வைத்திய நிலையங்களையெல்லாம் நிறையத் துவக்க வேண்டுமென்று உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் பேசிய நேரத்திலே சொன்னார்கள். ஏற்கனவே சில கோயில்களிலே

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அடுத்து, இந்த இலாகாவிலுள்ளவர்களுக்கு பண்டைய நாகரீகத்தையும் நாட்டின் காலசாரத்தையும் பாதுகாக்கும் மாபெரும் பொறுப்பு இருக்கின்றது. எனவே, ஆத்மீகக் கொள்கைப் பற்று உள்ளவர்களேயே அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும். எல்லாம் கட்சிக் கண்ணேட்டத்தோடுதான் இன்று நடைபெறுவதாக எல்லாப் பகுதிகளிலும் குறை சொல்லுகின்ருர்கள். இது தவிர்க்கப்படவேண்டும். அடுத்து இப்போது தமிழில் அர்ச்சனை செய்வது என்ற திட்டமிருந்தாலும் பெரும்பாலும் வடமொழியில்தான் அர்ச்சனை செய்யப்படுகிறது. நான் அடிக்கடி ஆலயங்களுக்குச் செல்பவன் என்ற காரணத்திஞல் இதைப் பார்த்து அறிகின்றேன். தமிழிலேயே அர்ச்சனை செய்யவேண்டும் என்று சொல்லும்போது இதில் ஏதோ மொழிப்பிரச்சினையைக் கிளப்புவதாக யாரும் கருதிவிட வேண்டாம்.

இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நெல்லை மாவட்டத்தில் உள்ள திருக்குறுங்குடிக்குப் பக்கத்திலுள்ள மூகிழுடி என்ற இடத்தில் சுப்பிரமணியம் என்ற ஊழியர். நீண்ட நெடுங்காலமாகப் பணியாற்றி வருகின்றவர். ஒரு மடத்தில் பணியாற்றி வந்தார். அவர் சம்மந்தமான இலாகாவிற்கும் அமைச்சர் அவர்களுக்கும் கமிஷனர் அவர்களுக்கும் மனு கொடுத்திருக்கிருர்கள். இது சம்மந்தமாக துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து "யூனெஸ்கோ" போன்ற உலக ஸ்தாபனங்களிலிருந்து அதிக நிதிஉதவிகளைப் பெற்று ஆலயங்களைப் புதுப்பிப்பது போன்ற பணிகளை மேலும் துரிதப்படுத்த வேண்டும். உதாரணமாக ஸ்ரீவில்லிப்புத்தூரில் உள்ள பெரிய கோயிலைப் புதுப்பிக்கும் திருப்பணியினை மேற்கொள்ளுவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மதுரையிலுள்ள ஆலயமானது மிகமிகப் புராதனமானது. அங்கே வரும் பக்தர்களுக்கு தங்குவதற்காக அதிக விடுதிகளைக் கட்ட வேண்டும். மேலும் இந்தத் துறையின் மூலம் அதிக ஆஸ்பத்திரிகள் போன்றவற்றை கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கெள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பொது விற்பனை வரி மானியக் கோரிக்கையினை மாலையில் எடுத்துக்கொள்ளலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்ருர்கள்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அறநிலையம் மற்றும் பால்பண்ணை வளர்ச்சித் துறையின் மீதான கோரிக்கைகள் மீது மாண்புமிகு அங்கத்தினர்கள் கலந்து கொண்டு சிறந்த கருத்துக்களைச் சொல்லியிருக்கின்ருர்கள். பால் துறையைப் பொருத்த வரையில் அதில் சிறந்த வளர்ச்சி பெற வேண்டும் என்று கூட்டுறவுச் சங்கங்களையும் யூனியன்களையும் ஏற்படுத்தி அவற்றுக்கு எந்தெந்த விதத்தில் உதவிகளைச் செய்யவேண்டும் என்பதற்கான பல யோசனைகளை சொல்லியிருக்கிருர்கள். தமிழகத்தில் சென்ற ஆண்டில் "தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்" என்று ஒன்றினை ஏற்படுத்தி, 1—7—1972 முதல் இக்கழகம் தன் பணியினை மேற்கொண்டுள்ளது. இதை ஆரம்பித்திருப்பதன் நோக்கம் கிராமங்களிலே உற்பத்தியாகும் பாலைச்

[திரு. மு. கண்ணப்பன்]

சேகரித்து பதப்படுத்தி அதிக தேவையுள்ள இடங்களுக்கு அதை அனுப்புவதும் இதஞல் கிராமங்களிலுள்ளவர்களுக்கு, அதாவது மாடுகளை வைத்துக் கொண்டு பால் உற்பத்தியில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு அதிக லாபத்தைப் பெற்றுத் தருவதும் ஆகும். அந்த நோக்கத்தோடுதான் இந்தத் தமிழ் நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம் என்று ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

(திரு. நா. வீராசாமி—தலைமை.)

மேலும் "ஆப்பரேஷன் ப்ளட்" என்ற திட்டத்தின் கீழ் 1972-லிருந்து தொடங்கி ஐந்தாண்டு காலத்தில் ரூ. 8.75 கோடி செலவழித்து இதை மேலும் தீவிரப்படுத்த இருக்கிறேம். இவற்றில் சில குறைபாடுகள் இருந்தாலும் இந்தக் குறைபாடுகள் நீங்குவதற்கும் எதிர் காலத்தில் பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் சீரிய முறையில் செயல் பட்டு வரும் என்ற முறையில் கடந்த ஒரு ஆண்டு காலம் அவர்கள் ஆற்றிய சிறப்பான பணியினைப் பார்க்கும்போது நிச்சயம் அந்த சந்தேகத்திற்கு இடமில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து சென்னையில் பால் வினியோகத்தை பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டிருக்கிருர்கள். அதற்குப் பிறகு தான் 1972-ல் 71,902 லிட்டராக இருந்தது இன்றைக்கு 93,200 லிட்டர் ஒரு நாளைக்கு என்ற அளவிற்கு வினியோகத்தை உயர்த்திருக்கின்ருர்கள். இன்னும் சிறிது காலத்தில் இது ஒரு லட்சம் லிட்டர் என்பதை எட்டிப்பிடிக்கும் என்று திடமாக நம்பலாம்.

இதுபோன்று பால் வழங்கும் "பால் விற்பனை நிலையங்களின்" எண்ணிக்கை 1971-72-ல் 222 என்று இருந்த நிலை மாறி இந்த ஆண்டு அது 250ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதுபோன்ற பால் வாங்குவோர்களுடைய எண்ணிக்கையும் 55,919 என்று இருந்தது இந்த ஆண்டு 67,000 பேர் என்று சொல்லத்தக்க அளவிற்கு உயர்ந்திருக்கின்றது.

இருந்தாலும் சென்னை நகரின் பால் தேவைகளை நம்மால் முழுவதும் பூர்த்தி செய்ய முடியுமா என்ருல் நிச்சயம் முடியாது என்ற நிலைதான் இருக்கின்றது. எனவே தான் இரண்டாவது பால் பண்ணையை ஆரம்பிக்க வேண்டும் என்று கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக திட்டமிட் அம்பத்தூரில் தொழிற்பேட்டைக்கு அருகில் ஒன்றை ஏற்படுத்த தமிழ் நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் முடிவு செய்திருக்கின்றது. இதற்கான பணிகளை இந்திய பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் துவங்கியிருக்கின்ருர்கள்.

அந்தப் பால் பண்ணை வேலை முடிவு அடையும் நிலையில் இருக்கிறது. அதன் மூலம் நாள் ஒன்றுக்கு 2 லட்சம் லிட்டர் பாலை நாம் அங்கே பதனப்படுத்த முடியும். ஆக நமக்குத் தேவைப்படுகிற 4 லட்சம் லிட்டர் பாலை இந்த இரண்டு பால் பண்ணைகளின் மூலம் வழங்க முடியும் பிற்பகல் 1-00

[திரு. மு. கண்ணப்பன்]

குறிப்பாக, பழனியிலே இருக்கிற திருக்கோயில் 52 ஆயிரம் ரூபாயையும் அந்தக் கோயிலுக்கே செலவு செய்வதில்லை, கோயிலுக்கென்று பக்தர்கள் எவ்வளவு செலவு செய்ய வேண்டுமென்று....

திரு. கே. ஏ. மதியழகன் : 52 ஆயிரமா? 52 லட்சமா? பெரிய கோயில் ஆயிற்றே.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மன்னிக்கவேண்டும். 52 லட்சம் தான். பழனி கோயிலிலிருந்து வருகின்ற வருமானத்தை அந்தக் கோயிலுக்கே முழுவதுமாகச் செலவு செய்யவில்லை. அங்கேயுள்ள அறங் காவலர்கள், பக்தர்கள் ஆண்டவனுக்குச் செய்கின்ற எல்லாச் செலவுகளும் போக மீதியிருக்கின்ற பணத்திலேதான் சமுதாயத்திலே தாழ்ந்த நிலையில் உள்ள மக்களுக்காகச் செலவு செய்கிறோம். அங்கே 30 ஊமைக் குழந்தை களுக்குப் பேசுவதற்குக் கற்றுக்கொடுக்கக்கூடிய முயற்சியை மேற்கொள்ளு கின்ற முறையிலே சென்ற ஆண்டிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அங்கே அதற்கான ஒரு பள்ளியைத் துவக்கி வைத்தார்கள். இதையெல் லாம் குறை கூறுகின்ற முறையிலே உறுப்பினர்கள் பேசுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேசவே முடியாத நிலையிலிருந்து 30 குழந்தைகள் பேசுவதற்கும் புத்தகம் படிப்பதற்கும் முடிகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால் இதைவிட சிறந்த திருப்பணி ஆண்டவனுக்கு என்ன செய்யமுடியும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அநாதைகள், ஏழைக் குழந்தைகள் இவர்களுக்காகக் காப்பகங்கள் ஏற்படுத்தி அவர் களுக்கு எல்லாம உதவிகளைச் செய்துவருகிறது. இதையெல்லாம் தவறு என்று சொன்னால் அந்தத் தவறைச் செய்வதற்கு அரசாங்கம் தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த.ந. அனந்தநாயகி : பெர்சனல் எக்ஸ்ப்ளநேஷன் சார்., இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அறநிலையங்களைச் சரியாக, சீராக செப்பனிட்டுவிட்டு, அதற்கான காரியங்களை எல்லாம் செய்துவிட்டு, மீதம் இருக்கிற பணத்திலே இதையெல்லாம் செய்யலாம் என்றுதான் சொன்னேன். பெரிய கோயில்களில் மிச்சம் இருக்கிற பணத்தை ஏழை கோயில்களுக்குக் கொடுத்து உதவி பயன் படுத்தலாம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏழைக் கோயில்களுக்குப் பயன் படுத்தலாம். கோயில்களுக்கே பயன்படுத்துங்கள், கோயில்களுக்கே பயன் படுத்துங்கள் என்று அவர்கள் சொல்வது கோயில் திருப்பணிகளுக்குச் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள் என்றுதான் நினைக்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே 1966-67-ம் ஆண்டிலே 200 கோயில்களுக்குத்தான் திருப்பணி செய்து கொண்டு இருந்தார்கள். இப்பொழுது நாம் 700 கோயில்களுக்கு திருப்பணி செய்து வருகிறோம். வருகின்ற ஆண்டிலே 1000 கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்வதற்கு திட்டமிட்டிருக்கிறோம். இதற்காக அரசாங்க உதவி 50 ஆயிரம் ரூபாய் என்றுதான் இருந்தது. [illegible] பிறகு 2 இலட்சம் ரூபாய் என்று மாறி 4 லட்சம் [illegible]

[திரு. மு. கண்ணப்பன்]

வந்து நின்றது. 5 லட்சம் என்பது மாறி இந்த ஆண்டு அரசாங்க உதவி 6 லட்சம் என்று கொடுத்து இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே கோயில் திருப்பணிகளைக் குறைத்து கோயில் நிதி யிலிருந்து வேறு காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறைபாடுகளையெல்லாம் சொன்னார்கள். அவற்றையெல்லாம் திருத்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தணியோடு சேர்ந்த கோயில்களுக்கும் திருப்பணி வேலைகள் செய்யப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். திருத்தணி கோயி லிலே ஏராளமான நிதி வருமானம் வருகின்றது. எனவே, அதைச் செய்வதில் தடை ஒன்றும் இல்லை. அதைச் சீக்கிரமாகச் செய்வதற்கு, அந்தக் கோயில்களைப் புதுப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு நடைபெற வேண்டுமென்று குற்றச்சாட்டுக்களை சொன்னார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வர்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்படுவதாகவும் அதனால் அரசியல் வந்துவிட்டதாகவும் சில பேர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்சரி, சேராதவர்களாக இருந் தாலும்சரி, கோயில்களில் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டவர்கள் பொறுத்தவரையில் எங்கே எந்தக் குறை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். கட்சி ரீதியிலே குற்றச்சாட்டுச் சொல்லவேண்டுமென்று தவறான கருத்தைச் சொல்கிறார்கள் என்பதைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் எங்கேயும் நடைபெறா வண் ணம் முன்னாலே நடைபெற்றதுபோன்ற பூஜைகள், கோயில் வருமானத் தைச் சீர்செய்ய வேண்டுமென்ற முறையிலே காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அர்ச்சகர்களாக தாழ்த்தப்பட்ட மக்களை நியமிக்க வேண்டுமென்பதற் காக இந்த அரசு சட்டம் கொண்டுவந்திருக்கிறது. அது இந்த மன்றத் திலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். அவர்கள் அதை ஏதோ சாதாரணமாகச் சொன்னார்கள். எந்த அளவிற்கு அதனால் தாழ்த்தப்பட்ட மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஏதோ ஒரு பெரிய உத்தியோகத்தைப் பெற்றது போல, கிடைக்காதது தங்களுக்குக் கிடைத்ததைப்போல அதை அவர்கள் கருதுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயத்திலே அவர்கள் நிலை உயர்வதற்கு, அவர்களுடைய அந்தஸ்து உயர்வதற்கு அப்படிப்பட்ட சட்டத்தை நாம் கொண்டுவந்திருக்கிறோம். அர்ச்சகர்களாக நியமிக்கும் சட்டம் கொண்டுவந்தது, போதாது, அவர்கள் ஐ.ஏ.எஸ். ஆக வரவேண்டுமென்று சொன்னார்கள். ஐ.ஏ.எஸ். உத்தியோகத்திற்கு அவர்களும் வரமுடியாது என்பதில்லை. அவர்களும் வரலாம். ஜனாதிபதி யாகக்கூட தாழ்த்தப்பட்ட மக்கள் வரலாம். ஆனால் அர்ச்சகர்களாக வர

[திரு. மு. கண்ணப்பன்]

முடியாது என்ற நிலை இருந்தது. அந்தத் தடையையும் நாம் நீக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். சாதாரணமாக தாழ்த்தப்பட்ட குடிமகன் தேர்தலிலே போட்டியிட்டு வெற்றி பெற்று ஜனாதிபதியாக வருவதற்கு முடியும். ஆனால் ஆண்டவனைத் தொட்டு வழிபட, அர்ச்சகர்களாக இருந்து மாலைபோட முடியாத நிலைமை இருந்தது. அப்படிப்பட்ட தடையை நீக்கவேண்டுமென்றுதான் நாம் சொல்லுகிறோம்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போழுது தேவஸ்வம் போர்டுபற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே அதைப்பற்றி நான் சொல்லி இருக்கிறேன். நாமே அதைத் திருத்துவது ஆக இருந்தாலும்கூட மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலோடுதான் இங்கே திருத்தத்தைக் கொண்டுவரக் கூடிய நிலைமை இருக்கிறது என்று சட்டத்துறையின் கருத்து இருக்கிறது. எனவே மத்திய அரசிற்கு அனுப்பியிருக்கிறோம். சீக்கிரத்திலே வந்து விடும் என்று எதிர்பார்க்கிறோம்.

தேவஸ்வம் போர்டு ஊழியர்கள் பிரச்சினை பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவற்றையெல்லாம் போக்குவதற்குச் சீக்கிரத்திலேயே முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடமொழியிலே சில கோயில்களில் அர்ச்சனை நடப்பதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே தமிழிலேதான் வழிபாடு நடைபெற வேண்டும். யாராவது விரும்பிக் கேட்டால் வடமொழியிலே நடத்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. யாராவது தமிழிலே கேட்டு, அதை மறுத்திருப்பார்கள் என்றால், எந்தக் கோயிலில் அப்படி நடைபெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்தால் சம்பந்தப்பட்டவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு கருத்துக்களையெல்லாம், கோயில் நிர்வாகம் நல்லமுறையிலே நடைபெற வேண்டும், கோயில் சொத்துக்கள் எல்லாம் சிறந்த முறையிலே நிர்வகிக்கப்பட வேண்டுமென்றெல்லாம் நல்ல பல யோசனைகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். அவைகளைக் கருத்திலே கொண்டு எதிர்காலத்திலே இந்தத்துறை செயல்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வருகின்ற ஆண்டிலே முக்கியமான சில பணிகளைச் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம்.

தமிழகத்திலே ஏழைஎளியவர்களுடைய குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு இல்லாத காரணத்தினாலே எந்த அளவிற்கு அவதிப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியும். அரசாங்கம் பல்வேறு துறைகளிலிருந்து ஊட்டச் சத்துணவு கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. தமிழகத்திலே எந்த எந்தக் கோயில்களில் உபரி நிதியிருக்கிறதோ, அதனைப் பயன்படுத்தி சாதாரண குழந்தைகளுக்குப் பால் வழங்குவதற்கு, மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குப் பால் வழங்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. மு. கண்ணப்பன்]

மதுரையிலே பழமுதிர்ச்சோலை என்ற இடம் இருக்கிறது. தமிழ் நாட்டிலே முருகனுக்கு 6 படைவீடுகள் என்று சொல்வார்கள். 6 கோயில்கள் சிறப்பாக இருக்கின்றன. அவற்றில் ஒன்றான பழமுதிர்சோலை சிறிய கோயிலாக இருப்பதால், அங்கே 25 லட்சம் ரூபாய் செலவிலே புதிய கோயிலை அமைக்க கருதியிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே தமிழ் கவிஞர்களை ஊக்குவிப்பதற்காகச் சிறந்த கவிதைகளைப் பாடுகிற திறமைபெற்றிருப்பவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே—சங்க காலத்திலே இறைவனே பாட்டுப் புலவனாக மாறி சங்கம் ஏறி கவிதை பாடி பாண்டிய மன்னனிடத்திலே பொற்கிழி பெற்ற வரலாறு நமக்கு தெரியும்—அந்த வரலாற்றை மக்களுக்கு உணர்த்துகின்ற வகையிலே அந்த மதுரையிலேயே கவிதைப் போட்டி நடத்தி சிறந்த கவிஞர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களுக்குப் பொற்கிழி வழங்குவதற்கான திட்டமும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்ஆற்காடு மாவட்டத்திலே திருவாமுத்தூர் என்ற ஊரில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே கண்பார்வையற்றோருக்கு உணவு கொடுத்து படிப்பு சொல்லிக் கொடுத்துதவியதாக கல்வெட்டுச் சான்றுகள் இருக்கின்றன. மேலும் அந்தச் சான்றுகளை நாட்டுக்கு உணர்த்துகின்ற வகையிலே கண் பார்வை பள்ளியை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சையில் இருக்கின்ற சோழமகாதேவியில், ராஜராஜசோழனின் பிற்பகல்
தமக்கை குந்தமாதேவி அங்கே இருக்கின்ற திருக்கோயிலில் மருத்துவ 1.30
நிலையம் அமைத்து அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு மருத்துவப்பணியாற்றினார் என்று கல்வெட்டிலிருந்து காண்கிறோம். அத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்தப் பகுதியில் சித்த மருத்துவசாலை ஒன்றினை ஏற்படுத்தவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

இந்தத் துறையிலிருக்கின்ற திருக்கோயில் ஊழியர்களுக்குச் சம்பள உயர்வை அறிவித்திருக்கிறேன். அதைப்பற்றி சில சந்தேகங்களைக்கூட என்னிடம் வந்து கேட்டார்கள். நமது துறையிலிருக்கின்ற கோயில்களில் எல்லாம் ஒரேவிதமான வருமானம் இல்லை. ரூ. 200 வருமானம் உள்ள கோயிலிலிருந்து ரூ. 52 லட்சம்வரை வருமானமுள்ள பல்வேறு கோயில்கள் இருக்கின்றன.

இந்தத் துறையிலுள்ள இந்தக் கோயிலில் பணியாற்றுகிற 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்குச் சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டு ஆண்டு தோறும் ஊதிய உயர்வும் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நீண்டநாட்களாக வைத்து, எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டுமென்று திரு. தேவேந்திரன் அவர்களும், மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும், மேலவையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் பலமுறை கேட்டிருக்கிறார்கள். ஒருவாரத்திற்கு

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் இன்று மாலை 4-30 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-43 மணி அளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

இடைவேளைக்குப்பின் பேரவை மீண்டும் மாலை 4-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் கூடியது.

(6) 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u> : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

" நிதிக்கோரிக்கை எண் 4.—பொதுவிற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,11,31,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following cut motion—

To discuss policy

" That the allotment of Rs. 3,11,31,300 under Demand No. 4—General Sales Tax and other taxes and duties—Administration be reduced by Rs. 100. "

THIRU K. M. SUBRAMANIAM: Sir. I move the following cut motion—

To discuss policy

" That the allotment of Rs. 3,11,31,300 under Demand No. 4—General Sales tax and other taxes and duties—Administration be reduced by Rs. 100 ".

<u>திரு. கே. ஏ. வகாப்</u> : தலைவர் அவர்களே, ஒருமுனை விற்பனை வரி விதித்து, பலமுனை விற்பனைவரி முறையை மாற்றியமைப்பது குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் @ என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 3,11,31,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற என் வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following cut motion—

To discuss about abolition of sales tax on food stuffs—

" That the allotment of Rs. 3,11,31,300 under Demand No. 4—General Sales Tax and other taxes and duties—Administration be reduced by Rs. 100 ".

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்குள்ளன.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u> : தலைவர் அவர்களே, இந்த இலாகா சார்பாக அளிக்கப்பட்டிருக்கிற விவரக் குறிப்பை நான் படித்ததாக எடுத்துக்கொண்டு அவைக் குறிப்பில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **THIRU K. M. SUBRAMANIAM** : Mr. Deputy Speaker, Sir, In spite of the strict orders, this Government does not seem to appreciate that prices are shooting up so far as essential commodities are concerned.

I do not think they realise that in the selling price of any essential commodity, 20 per cent is the incidence of the sales tax. In the small industries there are three stages of purchase. When they buy direct from manufacturers or from wholesaler, there is less incidence. First there is 7½ per cent sales-tax before manufacture and finally where it reaches the consumer, the incidence is 12 per cent. I am very sorry, that this Government does not appreciate that 20 per cent of the cost of essential commodity is incidence of sales tax. This sales tax had been introduced by Rajaji as a compensation for scrapping prohibition and for off-setting that loss of revenue.

So when prohibition has been scrapped now, this Government may seriously consider the question of reducing sales tax. Here we must know one thing. There has been increase of sales tax, when considered to that of 1967-68, by nearly Rs. 50 crores in 1973-74. That means

---

@ 530-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. மு. கண்ணப்பன்]

முன்னால் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவையில் வரவுசெலவு திட்டத்தின் பேரில் விவாதத்திற்குப் பதிலளிக்கின்றபோது இந்த மன்றத்திலே அது அறிவிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த ஆணையை ஏற்றுத்தான் 17 ஆயிரம் கோயில்களில் வேலை செய்கிற 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊழியர்களுக்குச் சம்பள விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. இதனால், ரூ. 60 லட்சம் ஆண்டு தோறும் அதிகமாக செலவாகுமென்று எதிர்பார்க்கிறோம். இதனால் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் ரூ. 30 சம்பளம்—இப்போதும் அதே ரூ. 30 சம்பளம் என்றிருக்கிற நிலையை மாற்றி, அவர்கள் சம்பள உயர்வு பெறுகின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். அறநிலையங்களில் வருகின்ற மொத்த வருமானத்தில், மற்றச் செலவுகளுக்கும் பணம் இருக்க வேண்டுமென்று, 30 விழுக்காட்டிற்கு மேல் நிர்வாகச் செலவுகள் போகக் கூடாது என்று இருக்கிறது.

எனவே அந்த 30 விழுக்காட்டிற்குள் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்ற நிலையில் அந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே ஊதிய உயர்வுக்கு வழிவகை செய்து, சட்டம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு தரப்பட்ட வருமானம் உள்ள கோயில்களின் ஊழியர்களின் சம்பளத்தை முறைப்படுத்துவது பற்றி பிரச்சினை எழுந்தது. அதைப் பரிசீலித்து, கோயில்களை, அவற்றிற்கு வருகின்ற வருமானத்தின் அடிப்படையில், 12 பிரிவுகளாக பிரித்திருக்கிறோம். முதலில், 15 லட்சத்திற்கு மேற்பட்ட வருமானம் உள்ள கோயில்கள் என்று தனியாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட பணியாளர்களுக்கு அர்ச்சகராக இருந்தாலும், நாதஸ்வரம் வாசிப்பவராக இருந்தாலும். எழுத்தாளராக இருந்தாலும் ரூ.112 அடிப்படைச் சம்பளம் கொடுக்கலாம் என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். அடுத்து ரூ. 5 லட்சத்திலிருந்து ரூ. 15 லட்சம் வரை 2-வது நிலையிலேயும் ரூ. 2 லட்சத்திலிருந்து ரூ. 5 லட்சம் வரை 3-வது நிலையிலேயும், ரூ. 1 லட்சத்திலிருந்து ரூ. 2 லட்சம் வரை நான்காவது நிலையிலேயும் ரூ. 50 ஆயிரத்திலிருந்து ரூ. 1 லட்சம் வரை 5-வது நிலையிலேயும், வைக்கப்பட்டிருக்கின்றன. ரூ. 50 ஆயிரத்திற்குக் கீழே வருமானம் உள்ள கோயில்களையும் 5 பிரிவுகளாகப் பிரித்து ரூ. 2 ஆயிரத்திலிருந்து ரூ. 5 ஆயிரம்; ரூ. 5 ஆயிரத்திலிருந்து ரூ. 10 ஆயிரம்; ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ. 20 ஆயிரம்; ரூ. 20 ஆயிரத்திலிருந்து ரூ 30 ஆயிரம்; ரூ. 30 ஆயிரத்திலிருந்து ரூ. 40 ஆயிரம்; ரூ. 40 ஆயிரத்திலிருந்து ரூ. 50 ஆயிரம்; இப்படி ஒட்டு மொத்தமாக 12 நிலைகள் உள்ள கோயில்களாக பிரித்து வருமானத்திற்குத் தகுந்தாற்போல் சம்பள உயர்வு வைத்து சம்பளத்தை நிர்ணயம் செய்யவேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில், இந்த ஆலயங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் அத்தனை பேரும் பயனடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. நீண்டநாட்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த அந்த ஊழியர்களுடைய கோரிக்கையை இன்றைய தினம் நமது அரசு நிறைவேற்றியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. மு. கண்ணப்பன்]

இங்கே பல யோசனைகளையெல்லாம் இந்தத் துறையின் வளர்ச்சிக்காக மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் வரவேற்று, பால் வளத் துறையும் சரி அறநிலையத் துறையும் சரி, சிறந்த முறையில் செயல்பட நல்ல முயற்சிகளை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமல் ஏகமனதாக இக்கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி.கே. தங்கமணி: தலைவரவர்களே, அறநிலைய ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு செய்தது நல்ல செய்தி தான். மதுரையிலே 60 சேவகர்களும் 40 கிளார்க்குகளும் முறையே ரூ. 137, ரூ. 171 என்ற அளவில் கொடுக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கு ச்சம்பள உயர்வு எந்த முறையில் கொடுக்கப்படவிருக்கிறது? சம்பள உயர்வோடு அவர்கள் தங்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். அது எந்த அளவுக்கு கவனிக்கப்பட்டிருக்கிறது?

இராமேஸ்வரம் கோயிலில் எல்லா ஊழியர்களுக்கும் ஒரே மாதிரியான சம்பளம் ரூ. 100 என்று வைத்திருக்கிறார்கள், அதில் பாகுபாடு வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். எந்த முறையில் அவர்களுக்குச் சம்பள உயர்வு இருக்கும்?

இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடி ரோட்டில் கோதண்டராமர் சுவாமி கோயில் இருக்கிறது. மெயின் ரோட்டிலிருந்து ஒரு மைல் சமுத்திரத்திற்குள்ளே போக வேண்டியிருக்கிறது. இந்த ரோடு 6 மாதம் தண்ணீருக்குள்ளே இருக்கிற காரணத்தால், அந்த ஒரு மைல் ரோட்டை போட்டால் அந்தக் கோயிலுக்குப் போகிறவர்களுக்கு வசதியாக இருக்கும் என்று பல மகசர்கள் கொடுத்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் ரோடு போட்டிருந்தாலும் கூட, இன்னொரு ரோடு போட வேண்டும் அந்த ஒரு மைல் ரோட்டைப் போட இந்த இலாக்கா ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் எச் வி. ஹாண்டே: தலைவரவர்களே, பொன்னேரியில் நான்கு வருஷமாக தேர் ஓடவில்லை. அந்தத் தேரை ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். பக்தர்கள் எப்படியாவது இந்த ஆண்டு அந்தத் தேர் ஓட வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, என்னுடைய தொகுதியில் அபிராமி அந்தாதி திருவிழா நடந்தது. அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் நான் கலந்துகொள்ள வாய்ப்பில்லை. என்னை எதிர்த்து இன்றைக்கு மேல் சபை உதவித் தலைவராக இருக்கிற ம. பொ. சிவஞானம் அந்த விழாவிற்கு அழைக்கப்பட்டிருக்கிறார். எல்லோருக்கும் அனுப்புவதுபோல ஒரு இன்விடேஷனை எனக்கு அனுப்பு கிறார்கள். அதில் பங்கு பெற எனக்கு ஏன் வாய்ப்பு தரப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் கூட ஒரு முறை, பெருந்தன்மையாக, [illegible]களுக்கும் வாய்ப்புக் கொடுக்கிறோம் என்று சொன்

Thiru K. M. Subramaniam

an average increase of Rs. 10 per person, whether he is rich, orpoor, beggar or Maharaja. The incidence is not related with the status of the man who purchases. When compared to the lower and middle class men who purchase the essential commodities, the purchase by rich is not much. So incidence is only on poor people who buy these things. So if there is reduction in sales tax, he will be benefited. We must take also measures to bring down prices of essential commodities.

Coming to excise revenue, I think it is Rs. 36 crores this year. Out of the total earnings of Rs. 110 crores from all commercial taxes I think Government can reduce the tax by one per cent.

After all what we are giving from one side, we have to take by the other side. Our people who are poor are affected. Therefore considering these aspects, there is very good scope at least for the removal of the surcharge. I think this Government will surely appreciate that this surcharge is very very uncivilised form of tax and that it must be given up and at least that half a per cent is reduced. On the other hand I feel that certain recommendations have come from some other people to increase the surcharge to finance civic bodies. I hope and trust the Government will not fall a prey to such suggestions.

Secondly, the most curious thing that I have read here is the special concession to polyster fabrics. This Government should have gone through the profit and loss account of polyster manufactures. If they had done that, they would have found that polyster manufacture is many times more paying than the ordinary cotton manufacture. I think in polyster manufacture the average profit per loom is Rs. 100 per day whereas in cotton manufacture it will be only Rs. 15 or 20 for loom per day. I do not understand why this Government gives a concession to polyster especially which manufacture is collaborated by foreign companies. I do not know the reason for reducing the sales tax on polyster fabrics from 3½ to 2½ per cent.

Sir, apart from this, I am coming to a most important point in which I am fairly keenly interested. Sir, it is very unfortunate that the Government has reversed its policy in the matter of horse-race. They had abolished bookies. What is the policy behind it? Who are the people who are betting? It is not the poor people who buy a ticket for Rs. 10 that are effectly works there. It is the richer classes that do this. It is definitely not even the upper-middle class or middle class. By abolition of the bookies system, you are only helping the highest class of people that go to the race. Secondly, after abolition of bookies, betting has not gone down. If I say this the Hon. Minister may turn

round and as me, what is this you are saying "you have to prove this". What can I do to prove this? There is hopelessly heavy blackmarket and betting goes on in the race course. Only thing is that this kind of betting has gone from the official bookies to non-official or unofficial bookies who are operating from hotels. Even yesterday, when I was in the race course, just 3 ft. away from me, rich people were betting with unofficial bookies for several lakhs. There is a reduction in the revenue to Government for the year ending 28th February 1973 compared to the previous year. The reduction is of the order of Rs. 50 lakhs. This is because the Government has given the opportunity for evasion.

If Government has not given this opportunity there will not be evasion. There may be as in the past good revenue to the Government. But to-day all people are evading. It may be said that Government have got their nominees. Even the Inspector-General of Police, poor man, what can he do? How can he watch? I can say that punters are going about and if I say one figure, it will be caught by them. All this I cannot prove it. There was a recent incident of four winners for which Rs. 2 lakhs were bet and Rs. 18 lakhs was returned, and not a pie was payable to Government. Many do not know what is a bookie and who is a punter. You are all good men. Our Ministers do not know about all these things. They are good. But it is only the drunkard who can talk about drinks. Now, the abolition of bookies must be reversed. Bookies system should be reintroduced.

If you want to safeguard the interest of smaller classes of people, I would suggest that you abolish the tickets system. Tickets are bought for Rs. 5, 10 and 20. They are not bought by the richer classes of people. I want to say this seriously, because I know about it. Interested people come and give you certain stories and the Ministry believes it. They want a licence for the race club and at once, you think the reasons seem to be very good and say we will abolish bookies. None of the Ministers is interested in racing and no Minister in the Cabinet knows about racing .... (Laughter)

THE HON. THIRU P. U. SHANMUGAM: I thank Mr. Subramaniam for giving this certificate (Laughter).

MR. DEPUTY SPEAKER: Why not the hon. Member teach the House what is race and all that? Why not he enlighten us by giving some details?

THIRU K. M. SUBRAMANIAM: Sir, if I give all the details of racing to this Legislature, this Cabinet will be the first to abolish racing

in this State. It is such a bad thing, there is so much fraud in it, there is so much of manipulation, there is so much of cheating and so many bad things are happening there. It has to be abolished. Failure to abolish is wrong. (Interruption) No, one need not be a life member. But I am a member of the race club.

MR. DEPUTY SPEAKER : You are damaging yourself, Mr, Subramaniam, for, you said there is so much of fraud, manipulation and all that. Now you say you are a member. By that you are damaging yourself.

*THIRU K. M. SUBRAMANIAM : Every member is not a manipulator, and I want the Hon. Deputy Speaker t o understand that. There are honest members also. Unless there are some honest people also, the race club, cannot exist................

THIRU R. PONNAPPA NADAR : Is the hon.Member a victim to this horse racing?

* THIRU K. M. SUBRAMANIAM : I am clever enough to safeguard myself. I am not so bad as to be cheated by other people. There are lakhs of people who go to the race-people like vegetable vendors, flower vendors, and give away their hard earned money and they get cheated their by bigger people, who can manipulate so many things. Of course, that is a separate question.

So, when there is a race club, Government should seriously think whether the abolition of the bookies is good and whether it is in the interest of the smaller people and whether it is not leading to less revenue for the Government. How much is the loss? In the booklet there it is seen as on 28th February 1973, the total collection is Rs. 95 lakhs as against Rs. 143 lakhs in the previous year, What is the loss? It is about 50 lakhs. When that is the case , why should the Government abolish the bookies.

Not only that. To have better control, Government have put four nominees- 2 were already there and now 2 more have been put. But the unfortunate thing about this is that these people who are nominees of Government are people who do not know anything about racing.

THIRU N. VEERASAMI : The hon. Member Narasimhan who is a nominee is a regular race-goer.

*THIRU K. M. SUBRAMANIAM : I am sorry, I do not know about him. The other nominee, Mr. A. L. Srinivasan, I know What ever it is, the point is this. Sir, I am very serious about it. When I say this it is not for argument's sake, I am saying this to the Minister, I am definitely of the view that two things must take place at once. One is that there must be a reduction of sales-tax at least by half a per cent and abolition of the surcharge. So far as the race club is concerned , there must be at least re-introduced bookies ; for bigger people are betting heavy amounts, in lakhs privately through unofficial bookies. By re-introduction of bookies, Government could get higher revenues from this sources which they are losing just now. Thank you, Sir,.

* திரு. வ. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, இன்றைய தினம் பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும் என்ற தலைப்பின் கீழ் கொண்டு வந்திருக்கின்ற மானியத்தின் மீது என்னுடைய கருத்தையும் இங்கே சொல்ல விரும்புகிறேன். தமிழக அரசு வணிகத் துறை மூலம் அண்மைக் காலத்திலிருந்து, 1966-67-லிருந்து 56·10 கோடி ரூபாய்க்கு ஆரம்பிக்கப்பட்டு, படிப்படியாக வளர்ந்து இன்றைய தினம் 1971-72-ம் ஆண்டுக்குள் ஏறத்தாழ 11·81 லட்சம் ரூபாய் வரி வசூலாகியிருக்கிறது. இது தமிழக அரசின் பெருமுயற்சி என்பதைவிட அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு இதற்குத் துணையாக இருந்திருக்கிறது.

இந்த மன்றத்தில் இந்த வரிகளுடைய வளர்ச்சி பற்றி பல்வேறு கட்சியைச் சார்ந்த நண்பர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். வரி ஏற்றத்தால், வரி நீங்கள் இவ்வளவு அதிகமாக விதிப்பதால், இந்த வரி உயர்வு கிடைத்திருக்கிறது என்று சொன்னார்கள். 1967-க்கு முன்னால் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தவைகளையும், வசூலிக்க முடியாமல் இருந்தவைகளையும் விட்டுவிட்ட காரணத்தால், சில வரிகள் அப்படியே மறைக்கப்பட்டு விட்டதன் காரணத்தால், போதுமான அளவுக்கு நமக்கு கிடைக்காமல் போய் விட்டது.

அண்மைக் காலத்தில் இந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருப்பதற்கு காரணம், கண்டுபிடிக்க வேண்டியவைகளை கண்டுபிடித்தும், முறையான வழிகளில் அவைகளை வசூல் செய்த காரணத்தால் இன்றைய தினம் இந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஆனால் இன்றைய தினம் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியத்தில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்ட போதிலும், ஒரு சில சட்டங்கள் ஏற்கெனவே இருந்தாலும் அவைகளில் சில திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அது முன்பிருந்த சட்டத்துக்கு ஒத்து வராத காரணத்தாலா என்பது அதில் தெளிவாக இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். வண்டியில் அனுப்பப்படும் பொருள்கள், விற்கப்படும் பொருள்கள் அவ்வாறு வரி விதிப்புக்கு உட்பட்டதா என்பதை கண்டுபிடிக்க வண்டிகளை இடையில் நிறுத்தி வைக்க சட்ட ரீதியான முறை 42-வது பிரிவுக்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது. வரி ஏய்ப்பை தடுக்கும் முகத்தான் எடுக்கப்

அடுத்து, நம்முடைய மாநிலத்திற்கு வேறு மாநிலத்திலிருந்து கைத்தறி துணிகள் கொண்டு வருகிறபோது நாம் எந்தவிதமான வரியையும் விதிப்பதில்லை. ஆனால் நம்முடைய மாநிலத்திலிருந்து செல்லுகின்ற துணிகளுக்கு விற்பனை வரி மற்ற மாநிலங்களில் விதிக்கிறார்கள். அத்தகைய மாநிலங்களுடன் தொடர்பு கொண்டு விற்பனை வரி விதிக்கக் கூடாது என்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாலை 5 மணி அடுத்து, முக்கியமான ஒரு விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய மானிய கோரிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். பர்மா அகதிகளுக்கு 50,000 ரூபாய்க்கு மேற்பட்டு வரவு-செலவுத் திட்டங்களில் விதிவிலக்கு அளித்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே இரண்டு ஆண்டு காலம் வரிவிலக்கு அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. இன்றையதினம் திருச்சியிலே உள்ள பர்மா அகதி அரசாங்க கடன் உதவி பெற்றவர்கள் தன்னுடைய கடையில் வைத்திருந்த ஸ்டாக்கை கணக்கெடுத்திருக்கிறார்கள். அதில் value of stock found during inspection on 27th August 1972 5,950 ரூபாய் ஸ்டாக்கை அங்கே வைத்திருக்கிறார்கள். கணக்குப் பார்த்தவர்கள் அதை பத்தால் பெருக்கி இருக்கிறார்கள். The estimated turn over for 72-73 at ten times the value of stock 59,500 ரூபாய்க்கு அங்கே இருக்கின்ற பர்மா அகதி ஸ்டாக்கில் வைத்திருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 5.950 ரூபாய்க்கு மதிப்புள்ள பொருட்களை பத்தால் பெருக்கி 59,500 ரூபாய் கிட்டத்தட்ட 60,000 ரூபாய்—என்று கணக்கு போட்டு, அதற்கு மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வரி செலுத்தவேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, இந்த பர்மா அகதிகளுக்கு புனர்வாழ்வளிக்கின்ற வகையில் வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விற்பனை வரியை எடுத்துக்கொள்வோமானால், சில பொருட்களுக்கு ஒருமுனை வரி விதித்திருக்கிறார்கள். நான் வணிகப் பெருமக்களின் பிரதிநிதி என்ற முறையில் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பலகட்ட வரியை போடாமல் எல்லாப் பொருட்களுக்குமே ஒருமுனை வரி என்பதை ஒரே முனை வரி என்று போட்டுவிட்டால் சிறப்பாக இருக்கும். மத்திய பிரதேச அரசு இந்த ஒரே முனை வரியை கடைப்பிடித்துவருகிறது. ஆகவே, இங்கேயுள்ள நம்முடைய அதிகாரிகளை மத்தியபிரதேசத்திற்கு அனுப்பி, ஒரே முனை வரி விதிப்பு முறைகளைத் தெரிந்து, அதை நம்முடைய தமிழகத்திலும் செயல்படுத்த முடியுமா என்று ஆராயும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்போது சில பொருட்களுக்கு ஒரு முனை வரி விதிக்கிறோம்; சில பொருட்களுக்கு ஒரு முனை வரி விதிக்க முடியாது. ஆக, இப்படி இருமுனை வரி என்பதைவிட ஏதாவது ஒரு கட்டத்திலே ஒரே முனை வரியாக விதித்துவிடுவது நல்லது. அப்படிச் செய்தால் வணிக பெருமக்கள் அரசாங்கத்திற்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள்; இந்த அரசுக்கு இதைவிட அதிகமாக வரி செலுத்த கடமைப்பட்டிருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, செக்ஷன் 7-ல் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வரியைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே சிறு வியாபாரிகளுக்கு ரவா, கோதுமை, சர்க்கரை, பருப்பு வகைகள் கொடுக்கப்பட்டு வந்தன. ஆனால் இப்போது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொருட்கள் எல்லாம் சிறு வியாபாரிகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டபோது, ஏற்கெனவே ஒரு குறிப்பிட்ட அளவு வரியை செலுத்தவேண்டுமென்று நிர்ணயித்திருப்பதால் அதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்படவில்லை. ரவா, கோதுமை, சர்க்கரை, பருப்பு வகைகள் எல்லாம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எடுத்துக்கொள்வதற்கு முன்னால் அவர்களுடைய வியாபாரம் ஒரு லட்சம் ரூபாய்க்கு நடைபெற்றது என்றால் இன்றையதினம் 50,000 ரூபாய் அளவுக்குத்தான் நடைபெறும். ஆனால் அவர்கள் ஒரு லட்சம் ரூபாய்க்கு எவ்வளவு வரி கட்டவேண்டுமோ அதே வரியை 50,000 ரூபாய்க்கும் கட்டவேண்டும். ஆனால் அதிகப்படியாகச் செலுத்தும் வரியை ஒரு ஆண்டு கழிந்த பின்னால் திரும்பப் பெறலாம் என்றிருக்கிறது. ஆக, அரசாங்கம் இவைகளை எல்லாம் பரிசீலனை செய்து, சர்சார்ஜ் விதிப்பை ஓரளவு பரிசீலனை செய்து, மீண்டும் இது இல்லாமல் அல்லது மீண்டும் அடிஷனல் டாக்ஸ் இல்லாமல் செய்து, வியாபாரிகளுக்கு சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, in support of the cut motion given on behalf of my party, I wish to say that the entire Sales Tax Department has to be thoroughly re-organised. I have mentioned it on the floor of the House on a number of occasions but the Hon. Minister does not seem to have paid adequate attention to the plea that I have been making with valid authority. But it is my bounden duty to go on pointing this out so that he may be properly briefed. It is my job to go on pointing this out. Before going to the re-organisation part of it, I want to bring to the attention of Government one serious loss of revenue in a particular sphere.

It has been pointed out in page 13 of the note of the Hon. Minister, regarding Betting Tax, the revenue derived during 1967-68 is Rs. 84 lakhs and it has increased to Rs. 205 lakhs during 1972-73. During 1972-73, an amount of Rs. 95 lakhs has been collected upto the 28th February 1973 as against Rs. 143 lakhs during corresponding period of previous year. The shortfall in receipts in 1972-73 is attributed primarily to the abolition of book-makers which the Government have done in the larger interests of the racing public. This is what is stated. I utterly fail to see the reasonableness of this argument. So many hon. Members had spoken about this. I had mentioned during Anna's time

னார்கள். எனவே, தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் எனக்கும் அழைப்பு அளிக்கப்பட்டிருக்குமேயானால், கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். இன்றைக்கு என்னுடைய வெட்டுத் தீர்மானத்திலே கூட,

"To discuss the steps taken by the Government to revise the scales of pay for all servants in the temples."

என்று குறிப்பிட்டிருந்தேன். ரூ. 10 கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். ரூ. 10 போதாது. புரோவின்ஷியலேஸ் பண்ண வேண்டும், அதற்கான முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு கமிட்டி போட்டு ஆராய்வது கூட நன்றாக இருக்கும். அதற்கு அரசு முன் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, மாண்புமிகு கே. டி.கே. தங்கமணி அவர்கள் தெரிவித்தது போல ரூ. 15 லட்சம் வருகின்ற எல்லாக் கோயில்களிலும் பணியாற்றுகின்ற அரசு ஊழியர்களில் எந்த வகுப்பில் சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கிறார்களோ, அதே முறையில் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். உதாரணமாக, ரூ. 15 லட்சம் வருமானம் வருகிற கோயிலில் பணியாற்றுகின்ற நாதஸ்வர வித்துவான் நான்கு பேர் கொண்ட செட் மொத்தம் 5 பேருக்கு இப்போது இருக்கின்ற சம்பளம் ரூ. 170. மாற்றப்பட்ட சம்பள விகிதத்தில் அவர்கள் ரூ. 250 பெறுவார்கள்.

அத்தோடு. ஆண்டுதோறும். ரூ. 10 இன்கிரிமெண்ட் கொடுக்கப்படும். மேலும், ரூ. 200 வருமானம் உள்ள கோயில்கள் எல்லாம் இருக்கின்றன. அதில் பணியாற்றுகின்ற ஊழியருக்கு, ரூ. 3½ சம்பளமாகக் கொடுக்கப்பட்டு வந்தது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அறிவார். அந்த முறையில் அவர்களுக்கு ரூ. 10 கொடுக்கப்பட்டால், அவர்கள் அதைக் குறைவு என்று கருதமாட்டார்கள். அப்படிப்பட்ட ஊழியர்களையெல்லாம் அழைத்துப் பேசும் போது அவர்களே எதிர்பார்த்தது ரூ. 5தான். ரூ. 10 என்று சொல்கின்றபோது மகிழ்ச்சியோடு சென்றிருக்கிறார்கள். அந்த அளவில் சம்பளம் உயர்த்தப்படும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே பொன்னேரியில் தேரை ஓட்டவேண்டுமென்று கூறினார்கள். அதுபற்றிப் பரிசீலனை செய்து, தேரை ஓட்டுவதற்கு தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கிறோம். 25 ஆண்டுக்கும் மேலாக ஓடாதிருந்த திருவாரூர் தேரையே ஓட்டியிருக்கிறோம். இந்தத் தேரை ஓட்டுவதற்குச் சங்கடமேதும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

விழாவிற்கு அழைக்கவில்லை என்று அம்மையார் சொன்னார்கள். அது அமைச்சரின் வேலை அல்ல. அறங்காவலர்கள் அது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் ம.பொ. சிவஞானம் அவர்கள் இந்த விழாவைத் துவக்கி வைக்க அழைத்திருந்தார்கள். கல்வெட்டைத் திறக்க நான் அழைக்கப்பட்டிருந்தேன். அறிஞர் பெருமக்கள் எல்லாம் சொற்பொழிவாற்றினார்கள். அம்மையார் அவர்களும் சொற்பொழிவாற்றியிருக்கலாம். அதில் ஆட்சேபணையேதுமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி. இராமேஸ்வரத்திலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள வைத்தியநாத சுவாமி கோயிலுக்குப் போவதற்கு சரியான ரோடு இல்லை. அந்த ரோட்டில் தனுஷ்கோடிக்குப் போவதற்கு 7-வது மைலில் கோதண்ட ராமசாமி கோயில் என்று ஒன்று இருக்கிறது. பல பக்தர்கள் போகிறார்கள். ஆறு மாத காலமாக அந்த ஒரு மைல் ரோட்டில் போக முடியாத நிலை இருக்கிறது. அந்த ஒரு மைல் ரோட்டைப் போடுவதற்கு மத்திய சர்க்காரைக் கேட்பதற்குப் பதிலாக கோயில் திருப்பணிப் பகுதியாக இந்த இலாகாவே அதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பக்தர்கள் கோயிலுக்குப் போவதில் இருக்கும் சிரமங்களுக்காகக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் கவலைப்படுவதற்குப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது பற்றி ஆலோசித்து, பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நிதிக் கோரிக்கை எண் 12 க்கு திருவாளர்கள் சௌடி எஸ். சுந்தரபாரதி, ஏ. ஆர். மாரிமுத்து, ஆர். பொன்னப்ப நாடார், ஆ. கு. சுப்பையா ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக்கோரிக்கை எண் 12—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 86,99,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

"நிதிக் கோரிக்கை எண். 10-க்கு திரு. கே. எஸ். கோதண்டராமையா, டாக்டர் எச். வி. ஹண்டே, திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி, திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. சோ. அழகர்சாமி, திரு. ஏ. சுவாமிதாஸ் ஆகியோர் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,02,28,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

[Dr. H. V. Hande] [1973 மார்ச் 26

Then, another important thing I would like to mention is that frequent training and refresher courses may also help tone up the administration. In the medical profession, refresher courses are conducted for the benefit of medical men. But I am not using it. I am sorry and I feel sad about it. That will help us to get some fresh air into our knowledge.

Then, there are four cadres of assessing officers. There are the C. T.Os and their pay scale is Rs. 575—25—600—40—1,000; then there are the J. C. T.Os in the scale of Rs. 550—25—600—35—950; Then there are the D. C. T.Os on Rs. 425—15—550—25—700; The A. C. T. Os are in the scale of pay of Rs. 325—15—500. Dr. Loganathan had recommended in his report in 1959 that there should be only two cadres of assessing officers, instead of the four cadres and they are the C. T. Os and D. C. T. Os. I would like to know what the Government is going to do with that report? After laborious study that report was produced. Now, there is so much difference in the scales of J. C. T. O and C. T O. The present J. C. T. O post can be redesignated as C. T. O. and the present J. C. T. O. post can be abolished. (Interruption.)

This is the reorganisation I am suggesting. In the Income-tax department, the assessing is done straightaway by an officer and he is the assessing authority. Therefore, where the A. C. T. O. is the assessing officer, I would request the Hon. Minister to consider and to reconsider whether it is not worthwhile that his assessing powers be abolished and he be made in charge of collection work. Whether it is not possible to do this may be considered by the Government.

Then again, inspection work is done by too many agencies like the Intelligence Wing. Inspection Wing, the assessing officers and other special squads. Thus there are four agencies. I would suggest that there should be only one agency and that agency should supplement and help the assessing officers. That arrangement would avoid a lot of pinpricks and harrassment to the people concerned. For, sometimes—for they all work with great purpose and enthusiasm—one wing would have harrassed and gone and again another wing would come immediately and harrass the assessee. Then again the assessing officer would start his harassment. All these things happen because they all do not work in a coordinated manner. I would like to know whether it is possible to reconsider all these things.

There is great necessity for the post of Public Relations Officer in the Sales-tax Department. Is it not worthwhile to have P. R. Os. so that the relationship between the officers and the assessees is improved, smoothened and softened? Why not the Hon. Minister consider having Public Relations Officers in D. C's offices and in Board's office? That would remove a lot of heart-burning on the part of assessees.

1973 மார்ச் 26] [Dr. H. V. Hande]

Then the number of posts of D. Cs. had not increased. I had mentioned this during the period when Thiru Mathialagan was the Minister. From 1968 onwards there has not been any increase. When compard to Joint Registrar of Co-operative Societies or District Revenue Officers, the work-load of this department is much more responsible and much more difficult. Therefore increase should be considered.

Then upgrading of D. C. (I) as Joint Commissioner can be considered.

And then departmental people should be the Commissioner and Secretary of the department. In the morning also, I was saying about I.A.S. Officers. I have nothing against I.A.S. officers. I have greatest regard for them. But taking them away for these works is actually like using Benz heavy horse-power for small pulling and vice versa. It should be considered whether it is not possible to have departmental people as Commissioner and Secretary so that these persons with sufficient experience may hope to go up, these medium officers and second -tier officers will have confidence that one day they can also become Commissioner and Secretary so that, it will be an incentive to them. All these can be considered under reorganisation.

Then, one or two small points, I have to refer to. I have given another cut motion and I had moved it—to discuss the need to reduce the rate of sales tax on plastic goods in order to meet out of the competition of manufacturers from other States. I would like the Hon. Minister in conferences or meetings of the States in Delhi, to stress the fact that whatever the tax policy that is pursued by other States, all that should be done in co-ordination with the States that are adjacent to one another. If one State start doing a thing in a particular way, that should not affect the other States or put the other State into a troublesome position. Therefore, I would like to have a categorical statement to be made by the Central Minister and also the State Minister should pursue it properly whenever he gets an opportunity to see to it that all States go about tax collection in a co-ordinated manner. For instance, I wish to bring to the attention of the Hon. Minister about the plastic industry. Manufacturers located in Bombay or elsewhere charge a Central Sales Tax of 3 per cent when they send out

their goods to Tamil Nadu. But manufacturers who have located factories here, often at a higher capital cost, thanks to an earlier start Bombay has had in these lines, have to charge the local purchasers a 3.5 per cent sales tax and a 5 per cent surcharge thereon. In other words if a sale of Rs. 100 worth of goods is from Bombay, the sales tax is 3 per cent. It is Rs. 103. This is "from Bombay". "From Madras" it is more. The sales tax is 3½ per cent. So it is Rs. 100 plus Rs. 3.50. It is Rs. 103.50. Then there is surcharges on sales tax that is 17 paise. So the total is 103·50 plus 17 which is equal to Rs. 103·67. So the difference between the two is 3·67—3·00—67P. So for every Rs. 100, there is 67 P. extra. So from the point of view of buyer, he would prefer buying from Bombay rather than pay higher price here.

(சில உறுப்பினர்கள் எழுந்திருந்து லாபி பக்கம் சென்றார்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:—மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருவர் இருவராக வெளியில் சென்று காபி சாப்பிட்ட உடனே வந்துவிடும்படி கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் கோரம் இல்லாமல் போய்விடும்.

Dr. H. V. HANDE: On consumption goods, even a very thin difference in tax or such Values lends itself to many difficulties and the bigger or more known producers are often placed at a disadvantage. A reduction in the multipoint sales tax rates on plastic goods produced in the State alone can discourage products from northern states finding their way into the local market at an advantage.

The alternatives available are a change in the multi-point sales tax. If it is not possible, what is the alternative. Change in the method of multi-point tax. Of course then the chances for Government to catch the persons will be lost. I know it is like having number of fuses. If one misfires, there are the other fuses. My only solution is to bring it to 103 per cent without surcharge. They can reduce the 2½ per cent. The purchasers at Bombay have a further advantage over plastic units in Tamil Nadu. The Maharashtra Government is giving concession in sales tax on raw materials, which is normally 8 per cent. If the products are sold in the Bombay market, the concession inasmuch as 75 per cent. Because the products attract a sales tax, when the sales is effected inside the State. the State is able to forego a part of the tax on the raw materials. Such a step we believe can be very useful and to small units in the small-scale sector in Tamil Nadu also.

I have given a number of suggestions. I hope and trust they will be properly taken care of by the Hon. Minister. I have given a cut-motion on provision of proper accommodation in sales tax offices.

Persons coming there, like I.T. assessees, have no proper accommodation. I hope when you would 'milch them' (I am using it in a figurative sense) you would do so without tears. Thankyou.

திரு. கே. எ. வகாப்; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சேல்ஸ் டாக்ஸ் மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேச இருக்கிறேன்.

இந்த மானியத்திற்கு நான் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்தாலும் கூட அதை ஆலோசனையாக எடுத்துக் கொள்ள வேண்டும். நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தான் நமது அமைச்சர்களிலேயே அதிகமாகச் சம்பாதிக்கிற அமைச்சராக குடும்பத்தின் செல்லப்பிள்ளையாக இருக்கிறார். ஒரு குடும்பத்தில் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிற பிள்ளை 5 ரூபாய் கேட்டால் உடனே மகிழ்ச்சியோடு கொடுப்பதைப்போல் நமது அரசாங்கத்திற்கு 110 கோடி வரைக்கும் சம்பாதித்துக் கொடுக்கிற அமைச்சர் தம் துறைக்காகக் கோரியுள்ள 3 கோடி சொச்சத்தை நாங்கள் மகிழ்ச்சியோடு தருவதற்குத் தயாராக இருக்கிறோம். இதில் எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. இத்துறை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம் என்று சொன்னார்களே தவிர அன்றைக்கு 64 கோடியாக இருந்தது, இன்றைக்கு 110 கோடியாகி, 117 கோடியாகப் போகிற நிலைதானே இருக்கிறது என்று வெளியில் பேசப்படுகிறது. உலகத்தில் இருக்கிற நாடுகளில் மிக அதிகமாக வரி வசூல் செய்கிற நாடாக இந்திய நாடுதான் இருக்கிறது, அதுவும் தமிழகம் தான் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வறுமையும், தேவையும் உள்ள நாடும் நம் நாடுதான், நம்முடைய வறுமையைப் போக்க, தேவைகளைப் பூர்த்து செய்துகொள்ள வரியை விதிக்காமல் இருக்க முடியாது. இந்த வகையில் நமது அமைச்சர் அவர்கள் மிகச் சாதுர்யமாக நடந்து வருகிறார்கள்.

வரி விதிப்பு முறையிலே இருக்கிற சில பல சங்கடங்களைத்தான் அரசுக்கு எடுத்துக் காட்டி என்னுடைய யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக சிறிய வியாபாரிகளுக்கு இருக்கிற தொல்லைகளை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சிறிய வியாபாரிகள் இன்றைக்கும் சில இடங்களில் விற்பனை வரி அதிகாரிகள் என்றாலே நடுங்குகிற நிலை இருக்கிறது. அதுபோன்ற புகார்கள் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்றாலும் ஒன்றிரண்டு இடங்களில் இருப்பதைக் கூடத் தவிர்க்க வேண்டும். இதற்காகத்தான் மாவட்ட அளவில் வர்த்தகர்கள், அதிகாரிகள் அடங்கிய குழுவைப் போட்டிருக்கிறோம். அதுபோலவே தாலுக்கா அளவிலும் அவர்கள் கலந்துபேசி ஆலோசனைகளைப் பெற இதுபோன்ற குழுக்களை அமைக்கலாம் என்கிற என் யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

If racing has to be abolished in Tamil Nadu, revenues would go to Andhra and other neighbouring States having racing. Unless we take an unilateral stand, it is a necessary evil. I agree.

Members have complained lot of irregularities are going on in the racing club, due to policies pursued by bookies. It is the rich man who goes to the booking. He brings black money and by manipulation, some horses are allowed to win. I do not want to go into details. But it is true that horses are rigged up and a handful of persons are able to tilt the fortunes. Thiru K. M. Subramaniam had spoken about irregularities there. But that apart, why should the State lose much revenues by abolition of these book-makers? After all the rich come and play with black-money with these book-makers. So it is better we revive it and get revenue that is now lost. Let us insulate them from totaliser. In spite of the book-makers lot of other things are going on. Black market booking is now going on. All sections of the House are not for losing this revenue and so let it be revived and let us get back revenue lost. Other States have not done so. Secret book-makers are even now there and they do not come into our purview.

As far as sales tax department is concerned, out of our budget of Rs. 450 crores and odd, due to these commercial taxes we get Rs. 110 crores and expenditure is 264 lakhs. So far as sales tax alone is concerned, the receipt has increased to Rs. 74 lakhs in 1971-72. But the department is not satisfied with the 450 graph. They have fixed up a target in that department. That is what I understand from reliable authority. The Hon. Minister may tell us what is the position from his point of view. I want to give the information I have gathered.

Collection of advance tax in excess of the tax due to be paid during the month of March 1973, this is the position. The assessing officers this year have been madly driven to achieve the target. What is the target? If the normal demand and revenue in an assessment division is Rs. 4 lakhs last year, this year, the target for that office for March 1973 is Rs. 9 to 10 lakhs. In other words, wherever it was Rs. 4 lakhs last year, they have to achieve Rs. 9 to 10 lakhs this year. (Interruption). I have my own channels of information. If that is the case, what would be the result? To achieve Rs. 9 or 10 lakhs, all persons will be harassed. That is why I have given a cut motion No. 1034 to discuss the cases of harassment of the assessees by sales tax officials.

That should be considered. Is it proper to do so? In the process of achieving that target, we have to think of this. What is the quantum of misery the people have to undergo?

Then, the Madras division is very heavy. We have mentioned about this a number of times on the floor of this House. Why don't you make it a lighter division? Why can't you make them uniformly lighter divisions? In the Electricity department they go by load and wherever the load is heavy, it is divided. Why not that sort of thing not be done in this department also? Why cannot the Government make a survey to see that the load is properly distributed?.

In fact, I have given another cut motion to discuss the need to hold a conference of Commercial Tax Officers to review the working of the department. Sixty per cent of the total revenue from Madras division can be divided into Madras North and Madras South and other divisions can also be divided with reference to commercial tax districts. This is a valid suggestion for implementation by Government. I am quite sure that it can be done by the Hon. Minister. I hope he would divide the load of the different divisions on a fair and proper method.

Further, I recommend that there should be a separate department in the Secretariat for the sales-tax work; or this work should come under the Finance Department; that would be still better; it should be under the Finance instead of the Revenue department. If it cannot be put under the Finance Department, let there be a separate department of the secretariat for this. From the point of view of the Government, they are the biggest earner of revenue, but still that department is looked after with a step-motherly look by the Government. To obviate this, to remove the step-motherly treatment given to it, either, it should be taken to the Finance Department or it should have a separate department of the Secretariat.

I personally feel that the officers of this department, like the income-tax officers should be given training. That is very important. Why do you make the merchants allergic to these people?. What is the exact secret of it?. I do not say that something is wrong with every body. But it is very important for the Government to give these officials proper training in tax laws and case laws and there should be conducted frequent refresher courses for tax officers. This is done in the income-tax department and in many States there are separate training institutes for such officers. I am giving valuable suggestions to the Government to implement.

நாம் ஆட்சிக்கு வந்த பிறகு 25 ஆயிரத்திற்கு வரம்பை உயர்த்தினோம். இன்றைக்கு இருக்கிற பண வீக்கத்தில் முன்பெல்லாம் 5 ஆயிரம் வியாபாரம் என்பதே இன்றைக்கு 50 ஆயிரமாக இருக்கிற காரணத்தினால் குறைந்த பட்சம் இந்த வரம்பை 75 ஆயிரமாகவாவது உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று பெஸ்ட் ஆப் ஜெட்ஜ்மெண்டு என்கிறபடி அதிகாரிகள் வியாபாரிகள் தங்களுக்கு 10 ஆயிரம்தான் வியாபாரம் என்றாலும் அதை 40 ஆயிரம் என்று போடக்கூடிய நிலை இருக்கிறது. எல்லா வியாபாரிகளும் ஒழுங்காகக் கணக்குக் கொடுக்கிறார்கள் என்று சொல்லாவிட்டாலும் இதுபோல பெஸ்ட் ஆப் ஜெட்ஜ்மெண்டு என்று போடுகிறபோது ஒழுங்காகக் கணக்குக் கொடுக்கிறவர்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைதான் இருக்கிறது. இதைப்பற்றியும் சிந்திக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் பல மாநாடுகள் போட்டு ஒரு முனை வரி விதியுங்கள், உங்களுக்கு இன்றைக்கு 110 கோடி வந்தால் 150 கோடி வரும்படிக்கான யோசனைகளை நாங்களே கூறுகிறோம் என்கிறார்கள். தமிழ் நாடு வர்த்தகக் கழகம் கூறியுள்ள இந்த யோசனையும் சிந்திக்கப்பட வேண்டும்.

இன்றையதினம் பல பொருள்களுக்கு எக்சம்ஷன் அளித்திருக்கிறோம்.
மாலை 5-30. நான் கூட இந்த அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கைவினைப் பொருள், கோரைப்பாய், மற்றும் எவ்வளவோ பொருள்களுக்கு விலக்கு அளித்திருக்கிறார்கள். அழுகும் பொருள்களுக்கு விலக்கு அளித்திருக்கிறார்கள். எல்லாப் பொருள்களுக்கும் 1 சதவீதம் என்று போட்டு தேவையான அளவு, ரூ. 150 அதையும் அரசாங்கம் செய்ய முயல வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறார்கள்.

பர்மா-இலங்கை அகதிகளைப் பற்றி மாண்மிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு ரூ. 50,000 வரை விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்றாலும் அவர்களுக்கு இன்னும் அதிகம் அளிக்க கடமைப்பட்டிருக்கிறோம். அங்கேயிருந்து பராரியாக வந்திருக்கிறார்கள், இந்த நாட்டுக்கு. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை கூறியது என்னுடைய நினைவிற்கு வருகிறது. இங்கிருந்து வெளிநாடுகளுக்குத் தேயிலைத் தோட்டங்களுக்குச் சென்ற தொழிலாளர்கள், நம்முடைய நாட்டு மக்கள், சிந்திய கண்ணீரின் காரணமாகத்தான் அந்தக் கடலே கூட உப்பாக இருக்கிறதோ என்றார். அவர்களுடைய வேதனையைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற விலக்கை ரூ. 1 லட்சத்திற்கு என்று செய்தால், அகதிகள் என்று சொல்லப்படுகின்ற நமது அருமைத் தோழர்களுக்குப் பெரிய நன்மை செய்ததாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சோதனைச் சாவடிகளிலே நடைபெறுகின்ற குறைபாடுகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இதனால் விவசாயிகள் தொல்லைபடுத்தப்படுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலே ஒருசில சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நல்ல பல முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நாம் வசூலிக்கின்ற வரியிலே, நம்மைவிட அதிகமாக மத்திய அரசு எடுத்துக் கொண்டு போகிற நிலை இருக்கிறது. அதை மாற்றி, ஒரு திட்டத்தை மாநில அரசாங்கம் தயாரித்து, இன்னும் போராடி, மத்திய அரசானது நம்முடைய நாட்டிலே வசூலிக்கின்ற வரியிலே அதிகப்பங்கை கேட்பதற்கு இந்த ஆட்சி முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சினிமாக் கொட்டகைகளிலே வரி ஏய்ப்பு பற்றி இங்கே சொல்லப்பட்டது. நிச்சயமாக அப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. நகரங்களைவிட கிராமப் புறங்களிலே அந்நிலைமை இருக்கத்தான் செய்கின்றது. போலி டிக்கட்டுகளை விற்பது மட்டுமல்ல. ஒரே டிக்கட்டை ரொட்டேஷன் செய்கிற நிலை இருக்கிறது. அதோடு, ஒரு தியேட்டரிலே 500 பேர் இருக்கலாம் என்றால், அங்கு 700 பேர், 800 பேரை அவர்கள் வைத்திருக்கின்ற நிலைகள் எல்லாம் இருக்கின்றன. அதிகாரிகள் எல்லா இடங்களுக்கும் சென்று பார்க்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். இதற்கு என்னுடைய யோசனையாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு சினிமாக் கொட்டகையிலும் இருக்கிற சீட்டுகளை வைத்துக் கொண்டு, பஸ்ஸுக்கு எப்படி ஒவ்வொரு சீட்டுக்கும் வரி போடுகிறீர்களோ, அந்த மாதிரி, ஒரு சினிமாக் கொட்டகையிலே ஆயிரம் இருக்கைகள் இருந்தால் இவ்வளவு என்று நிரந்தரமான வரி கட்ட வேண்டுமென்று ஒரு முறையைக் கொண்டு வந்தால் நலமாகக் கூட இருக்கும் என்று கருதுகின்றேன். உடனே, சினிமாக்கொட்டகைகளில் எங்களுக்கு புல் ஆகாத நேரங்கள் பற்றி என்ன செய்வது என்று கேட்பார்கள். ஆனால், அப்படிப்பட்ட சிரமங்கள் எதுவும் இல்லாத முறையிலே, முன்பு தனியார் பேருந்துகளில் ஏற்படுத்தியிருந்த அந்த முறையைப் போல, இதற்கும் பரிசீலிக்கலாம் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். இன்று பலவிதமான புகார்களுக்கு அது இடமில்லாத நிலையை ஏற்படுத்தும்.

பேரூராட்சிகளிலே இருக்கிற அந்த சினிமாக் கொட்டகைகளிலே அந்த வரியை யெல்லாம் பரிசீலனை செய்வதற்கு நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. தலைவர் அவர்களுக்கும் அப்படிச் சென்று பார்ப்பதற்கு வாய்ப்பு இருந்தால் அதை நல்லமுறையிலே அவர்கள் பயன்படுத்துவார்கள். அப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டைச் செய்தால் நல்ல மாதிரியாக இருக்கும். இன்னும் பல குற்றங்கள் குறைய வழியாக இருக்கும் என்ற என்னுடைய யோசனையைச் சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் கே. எம். எஸ். அவர்கள் ஊழலைப் பற்றிப் பேசினார்கள். குதிரைப் பந்தய மைதானத்திலே நடைபெறுகின்ற ஊழலைப்பற்றிச் சொன்னேன். அவர் கட்சிக்காரர்கள் சொல்கிற அந்த ஊழலைப் பற்றிச் சொல்லவில்லை. அந்தக் குழுவிலே கூட அங்கத்தினராக இருப்பதாகப் பெருமையாகச் சொல்கிறார்கள். அவர்கள் அங்கத்தினராக இருக்கிற இடத்திலே எப்படி ஊழல் நடைபெறுகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

Thiru K. M. SUBRAMANIAM: No, No. I am not a member and I am not responsible for the fraud.

படும் நடவடிக்கை இது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஒரு பொருளை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு போகும் போது சரியான முகாந்திரத்தோடுதான் கொண்டு செல்லுகிறார்கள். டெலிவரி நோட் என்று இருக்கிறது. கிராம முன்சீபின், கிராம கணக்குப் பிள்ளையின் அத்தாட்சியோடு ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்லுகிற விதி இருக்கிறபோது, 42-வது விதியின் பிரிவிற்குப் பதிலாக வேறொரு சரத்தை சேர்த்திருப்பது, ஏற்றி வருகின்ற பொருட்கள் அங்கே சோதனைச் சாவடியில் நிறுத்தி வைக்கப்பட்டு வண்டியின் பிழைப்பும், கொண்டு வருகின்ற விவசாயியும் பாதிக்கப்படுவான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தமிழ்நாட்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் விவசாய வரிகள் தொடர்பாக செய்த விதிகள், பிற விதிகள் ஆகியவற்றின் விதிகளின் அமைப்பை சீரமைக்க தனி அதிகாரி ஒருவரை நியமித்து விவசாய பெரு மக்களுக்கு துணையாக காரியத்தைச் செய்திருப்பதற்காக உண்மையிலே இந்த அரசைப் பாராட்டுகிறேம்.

இன்னும் இந்த விற்பனை வரிச் சட்டத்தின் மூலம் பல்வேறு நுணுக்கமான சட்டங்களை கொண்டு வருவதன் மூலம், சாதாரண ஒரு வியாபாரி கூட, இன்றைய தினம் ஒரு கணக்குப் பிள்ளையை வைத்து கணக்கு எழுதிக்கொண்டிருந்த வியாபாரி ஆடிட்டரின் உதவியை நாடும் அளவுக்கு ஆக்கப்பட்டிருக்கிறது. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், எவ்வளவுக்கெவ்வளவு அவர்கள் வரிகட்ட தயாராக இருந்தபோதிலும் சட்ட நுணுக்கத்தின் மூலம் தப்பிக்க முடியாமல், வழி வகை தெரியாமல், பெரிய அதிகாரிகளுடைய ஆடிட்டர்களுடைய உதவியை நாட வேண்டியிருக்கிறது. இன்றைய தினம் ஒரு பொருள், அது வெல்லமோ, சர்க்கரையோ, வள்ளியோ, மிளகாயோ கொண்டு செல்ல வேண்டுமென்றால், டெலிவரி நோட் இருக்கிறது. பாரம் 20 என்று இருக்கிறது. அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு வியாபாரிக்கு இன்னொரு வியாபாரியால் கொடுக்கப்பட வேண்டும். அல்லது வியாபாரியின் ஏஜெண்டுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற விதியிருக்கிறது. அப்படியிருந்தும், டெலிவரி நோட் கொண்டு வந்தாலும் கூட, முன்சீப் அத்தாட்சி வேண்டும் என்கிறார்கள். முன்சீப், கணக்குப்பிள்ளை அத்தாட்சிஇருந்தால், டெலிவரி நோட் வேண்டும் என்கிறார்கள். இந்த இரண்டும் இருந்தாலும், அதில் ஏதாவது குறை காண்கிறார்கள். அதில்தவறு கண்டுபிடிப்பதால் பல சிறிய விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

இப்படியெல்லாம் பாதிக்கப்படுகிற நேரத்தில், நாம் எவ்வளவு பெரிய திட்டங்களைத் தீட்டியும், நன்மையைச் செய்தும் பயன் இல்லாமல், அவர்கள் சோதனைச் சாவடியில் செய்கிற தவறுகளால் 10 மூட்டை, 20 மூட்டை கொண்டு வருகிற விவசாயி செய்கிற ஏழை பாதிக்கப்பட்டு, அரசின் மீதே குறைபடும் அளவு ஒரு நிலை உருவாகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கல்வி நிறுவனங்களுக்கு சலுகை அளித்திருப்பது, சீருடை, புத்தகங்கள், எழுதுபொருட்கள் ஆகியவை [illegible] வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது பாராட்டுக்குரியவையாகும்.

இன்னும் குறிப்பாக குதிரைப் பந்தயத்தில் இருக்கிற (Brok Makers) என்ற முறையும் தரகர்களையும் நீக்கியிருப்பது அங்கே செல்லுகின்றவர்களுக்கு நல்ல வாய்ப்பாக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் காலையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிடுகின்றபோது, சிறு தொழில் செய்வதற்கு வரியிலிருந்து கடனுக ஏறத்தாழ 27 லட்ச ரூபாய் வழங்குவதாக குறிப்பிட்டார்கள். அதுவும் இந்த மானியத்திற்கு உள்பட்டதாகக் கருதுகிறேன்.

இப்படிப்பட்ட பல்வேறு சாதனைகளைச் செய்கின்ற நம்முடைய அரசாங்கத்தின் மீது பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. இன்றைய தினம் 56 கோடி ரூபாயிலிருந்து ஏறத்தாழ 100 கோடி ரூபாய் அளவுக்கு வரி வசூலானது, வரி கண்டுபிடிப்பும் வரி ஏற்றமும் என்று குறிப்பிட்டேன். அந்த அளவுக்கு இன்றைய தினம் வரி உயர்ந்திருந்தாலும் 3½ சதவிகிதம் என்றிருந்தாலும், இன்னும் வியாபாரிகளுக்கு சர்சார்ஜ் என்று ஒன்றிருக்கிறது. அடிஷனல் டாக்ஸ் என்றிருக்கிறது. இந்த சர்சார்ஜ் என்பது பொதுமக்களிடத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம் என்கிற விதி இருக்கிறது. அடிஷனல் டாக்ஸ் என்பது கையிலிருந்து கொடுக்க வேண்டும். 10 லட்ச ரூபாய் டர்னோவர் ஆகியிருக்கிறது என்றால், லாபம் வந்தாலும், நஷ்டம் வந்தாலும் அவர்கள் தங்களுடைய கையிலிருந்துதான் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலை இருக்கிறபோது வியாபாரிகள் சேல்ஸ் டாக்ஸ் கொடுத்து, அடிஷனல் டாக்ஸ் கொடுத்து பிறகு சர்சார்ஜ் கொடுக்கிறபோது, குறைந்த அளவாக இருந்தாலும்கூட அதில் பெரிய குறையைக் காண இன்றைய தினம் வியாபார சமுதாயத்தில் இருக்கிற சில அரசியல் கட்சித் தலைவர்கள் மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்கள் அதைப் பயன்படுத்திக்கொண்டு வியாபாரிகளுடைய மாநாடுகளில் எல்லாம் குறிப்பிடுகிறார்கள். பார்த்தீர்களா, பார்த்தீர்களா, இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசு வரிக்கு வரி விதித்திருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். இதை நீங்கள் உங்களுடைய கையிலிருந்து எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறார்கள். மக்களிடத்திலிருந்து வசூல் செய்யக்கூடாது என்று அமைச்சர்கள் உத்தரவிட்டாலும், அவர்கள் வசூல் செய்கிறார்களா, இல்லையா என்பதைப் பார்த்தால், எந்த ரூபத்திலாவது சரிக்கட்டிக் கொள்ளுகிறார்கள் என்பதுதான் இதில் இருக்கிற உண்மையாகும்.

அமைச்சரவர்கள் கூட ஒரு முறை சொன்னார்கள். நாங்கள் அடிஷனல் டாக்ஸ் போட்டிருக்கின்ற காரணம், பெரிய பெரிய கம்பெனிகளுக்கு அந்த வரி விதிப்பு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். ஆகவே, அது பெரிய பெரிய கம்பெனிகளுக்கு இருந்தாலும்கூட, சிறிய வியாபாரிகள் கூட இன்றைய தினம் விலை ஏற்றத்தால் 10 லட்ச ரூபாய் டர்னோவரைத் தாண்டிவிடுகிறார்கள் என்பதால் அவர்களும் கட்ட வேண்டியிருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

சாராயக் கடைகள், கள்ளுக் கடைகள் மூலமாக இந்த அரசாங்கத்திற்கு ஏறக்குறைய 40 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. ஏலத்தை எடுத்தவர்கள் இந்த ஆண்டு 2, 3 மடங்கு ஏற்றி எடுத்தவர்கள் எல்லாம் எங்களை விட்டுவிடுங்கள், விட்டுவிடுங்கள், ஓடிப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்தவர்கள் வந்து எடுக்க வேண்டுமென்று சொன்னால் அவர்கள் 12 மாதத்திற்கும் சேர்த்து பணத்தைக் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த நிலையில் ஏலத்தை எடுத்தவர்கள் தூக்கிலே தொங்கலாமா, தற்கொலை செய்து கொள்ளலாமா, பித்துப் பிடித்து அலையலாமா என்று எல்லாம் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கே நாங்கள் இவ்வளவு வரியை வசூலித்துக் காட்டியிருக்கிறோம் என்று அவர்கள்—நாங்கள் வீரர்கள் பாருங்கள், சூரர்கள் பாருங்கள் என்று சொல்லுகிறார்கள். . .

திரு. கே. ஏ. வகாப் : அப்படியானால் அம்மையார் அவர்கள் கள்ளுக் கடைகளுக்கு வரி போடுவதை வரவேற்கிறார்களா, இல்லையா?

* திருமதி த. ந. அனந்தநாயகி : வரியைப் பற்றிச் சொல்லவில்லை. சென்ற வருஷம் 3 ஆயிரம் ரூபாய்க்குப் போனது இந்த வருஷம் ஒரே ஆசை பிடித்து 10 ஆயிரம், 5 ஆயிரம் ரூபாய் என்று எடுத்துக் கொண்டு அவஸ்தைப்படுகிறார்கள். அவர்களும் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தான். வீட்டில் உள்ள முதலைப் போட்டுத்தான் அவர்கள் வியாபாரத்தைச் செய்கிறார்கள். அவர்கள் இப்பொழுது அதைக் கட்ட முடியாத நிலையில் ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின்கீழ் அவர்களுடைய வீடுகளில் இருக்கின்ற தட்டுமுட்டுச் சாமான்களை எல்லாம் தூக்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். இப்படி மக்களை கசக்கிப் பிழிந்துதான் வரியை வசூலிக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பொன் முட்டையிடும் வாத்து ஒருநாள் தீர்க்கப்பட்டால் ஒன்றும் இருக்காது என்ற நிலைக்குத் தான அவாகள் போய்க் கொண்டிருக்கிறார்கள். விற்பனை வரியின் மூலமாக சென்ற ஆண்டு 109 கோடி ரூபாய் வசூலித்தார்கள். இந்த ஆண்டு 117 கோடி ரூபாய்—அதிகமாக 8 கோடி ரூபாய் வசூலிப்போம் என்று சொல்கிறார்கள். "buoyancy of taxes" ஒருவேளை அதனாலே வரும் என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. இப்பொழுது இருக்கின்ற மின்வெட்டிலே. . .

திரு. வ. கிருஷ்ணமூர்த்தி : தமிழகத்திலே மட்டுந்தான் கள்ளுக் கடை, சேல்ஸ் டாக்ஸ் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்களா? பிற மாநிலங்களிலே அம்மையார் அவர்கள் கட்சியைச் சேர்ந்த மாநிலத்திலும், மற்ற கட்சியைச் சேர்ந்த மாநிலங்களிலும் கள்ளுக்கடை, விற்பனைவரி இல்லையென்று குறிப்பிடுகிறார்களா?

*திருமதி த. ந. அனந்தநாயகி : எப்பொழுதும் தமிழர்கள் தனித் திறமை படைத்தவர்களாயிற்றே. அடுத்தவர்களோடு ஏன் ஒப்பிட்டுப் பார்த்து சாமர்த்தியத்தைக் குறைத்துக் கொள்கிறீர்கள்? மதுவிலக்குக் கொண்டு வந்தது ராஜாஜி அவர்கள்தான். நாம் நம்முடைய திறமையைத்

தான் நம்ப வேண்டும். அடுத்தவர்களை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. சென்ற ஆண்டு 109 கோடி ரூபாய் வசூலித்தார்கள். இந்த ஆண்டு 117 கோடி ரூபாய் எதிர்பார்க்கிறார்கள். 1973–74 ஆம் ஆண்டில் 8 கோடி ரூபாய் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அப்படி வசூலிப்பதற்கு சூழ்நிலை சாதகமாகவா இருக்கிறது? மின்வெட்டினாலே வாங்கும் சக்தி குறையப் போகிறது, உற்பத்தி குறையப் போகிறது, விலைவாசிகள் ஏறப் போகின்றன. கடுமையான மின் வெட்டை வைத்துக் கொண்டு 117 கோடி ரூபாய் எதிர்பார்க்கிறோம் என்று சொன்னால் எப்படி எதிர்பார்க்கிறார்கள் என்று புரியவில்லை. விலைவாசி ஏற்றத்திற்கு முக்கியமான காரணமே மல்டி பாயிண்ட் டாக்ஸ்தான். நீங்கள் தம்பிடிக்குத் தம்பிடி என்ற முறையிலே பலமுனை விற்பனைவரி போடுகிறீர்கள். ஆங்காங்கு 5 சதவீதம், 6 சதவீதம் என்ற முறையிலே ஏற்றிவிட்டால் கடைசியிலே மொத்தமாகப் பார்த்தால் 10 சதவீதம், 12 சதவீதம் என்ற அளவிற்கு விலை ஏறிவிடுகிறது.

பலமுனை வரியைப் பல இடங்களிலே இன்றைக்கு நீங்கள் போட்டிருப்பதால் இதனால் வாங்குகிறவர்களுக்கும் நிம்மதி கிடையாது, வியாபாரிகளுக்கும் நிம்மதி கிடையாது. வியாபாரிகள் அவர்களுடைய மாநாடு போட்டு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், ஒரு முனை வரியைப் போடுங்கள், பலமுனை வரி வேண்டாம், ஒருமுனை வரிப் போடுவதால் உங்கள் வருமானம் குறைந்துவிடாது என்று சொல்லுகிறார்கள். ஆனால் நீங்கள் ஒரு முனை வரிப் போட்டால் வசூலிக்க முடியாது, நாங்கள் ஏமாந்து விடுவோம், பல முனை வரியைப் போட்டால்தான் அங்கே போனால் இங்கே பிடிப்போம், இங்கே போனால் அங்கே பிடிப்போம் என்று சொல்கிறீர்கள். ஒரு முனை வரி என்றால் 9 சதவீதம், 7 சதவீதம், 5 சதவீதம் என்று போடுகிறீர்கள். இப்படிப் போட்டால் யார் வரி கொடுப்பார்கள்?

சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் என்று போடும்பொழுது 2 சதவீதம், 3 சதவீதம் என்று போட்டால் அப்படிப் போட்டு வசூலித்துப் பாருங்கள், கட்டாயம் ஏய்க்க வேண்டுமென்ற மனப்பான்மை அவர்களுக்கு ஏற்படாது, அந்த எண்ணமே அவர்களுக்கு வராது. அப்படியில்லாமல் ஒரேடியாக 9 சதவீதம், 7 சதவீதம் என்று போட்டால் அவர்கள் பில் வேண்டாம், டாக்ஸ் வேண்டாம் என்ற முறையிலே தான் பார்ப்பார்கள். வரி போடுகிறபோது குறைவாகவும் அதே நேரத்தில் வருமானம் அதிகமாக வரக்கூடிய வகையிலும் போட வேண்டும். அந்த வழியை நீங்கள் பின்பற்ற வேண்டும். ஒரு முனை வரி என்றால் எக்கசக்கமாகப் போடுகிறார்கள். ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணம் வருகிறது. பல முனை வரி போட்டால், 7, 6 கட்டங்களில் போட்டு அதனால் வியாபாரிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்ற நிலையைத்தான் பார்க்கிறோம்.

இந்த சேல்ஸ் டாக்ஸ் மற்ற மாநிலங்களிலே எப்படிப் போடப்படுகிறது, வசூலிக்கப்படுகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். மகாராஷ்டிராவில் பார்ப்பதற்காக அதிகாரிகளை அனுப்பியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். மற்ற மாநிலங்களுக்கும் அதிகாரிகளை அனுப்பியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அனுப்புவது பெரிய காரியமல்ல. எல்லா மாநிலங்களிலும்

வருகிறது என்றால், ரூ. 150 லட்சம் வருகிறது. "தீஸ் ஆர் ஆல் பீஸ் மீல் டேக்டேசஷன்." இவற்றை ரிவைஸ் பண்ணி வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்.

அடுத்து, எண்டர்டைன்மெண்ட் டாக்ஸ். சினிமாக்காரர்களுக்கு வரி. சர்-சார்ஜ், எண்டர்டைன்மெண்ட் டாக்ஸ் எல்லாம் சேர்த்தால், மொத்தத்தில் 43 சத விகிதம் வரியாகவே போய் விடுகிறது. பாக்கி, நிர்வாகம், டிஸ்டிரிபூயூட்டர் இன்னும் மற்றச் செலவுகள். இது மட்டும் போகாது என்று "திடீர் பறக்கும் படை" போய், திடீரென்று போய்—என்ன கண்டு பிடிக்கிறார்கள் என்றால், சின்னச் சின்ன டிக்கட்டுகளை யெல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு தப்புக் கணக்குப் போட்டாய் என்று பிடித்துக் கொள்கிறார்கள். இந்த டிக்கட்டிலிருந்து அந்த டிக்கட் வரை என்று தப்பாக நோட் பண்ணி வைத்திருந்தால், அதை வைத்துக் கொண்டு, சாமர்த்தியமாக, தப்புக் கணக்கு போடுகிறார் என்று சொல்லிவிடுகிறார்கள்.

<u>திரு கே. எ. வகாப் தலைமை.</u>

ஆனால், ஏமாற்றுகிறவர்கள் என்னவோ, சாமர்த்தியமாக—ரொம்ப ஜோராக ஏமாற்றுகிறார்கள். எப்படி ஏமாற்றுகிறார்கள் என்று என்னைக் கேட்காதீர்கள். அது இலாக்காவுக்குத் தெரியும். சின்ன சின்னத் துண்டை யெல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு, இப்படி தப்புக் கணக்குப் போட்டாய் என்று சொல்லி, 30 நாள் சஸ்பென்ஷன் என்று சொன்னால், இதில் பாதிக்கப்படுகிறவர்கள் யார்? ஒரு 30 நாளுக்கு சஸ்பென்ஷன் என்று சொன்னால், முனிசிபாலிடிக்கு ரூ. 30 ஆயிரம் வருமானம் நஷ்டம்.

ஆகவே, இதைச் செய்யும்போது, எப்படிச் செய்கிறோம் என்று யோசித்துப் பார்த்துச் செய்ய வேண்டும். இதில் முதலாளிக்கு மாத்திரம் நஷ்டம் அல்ல, சமுதாயத்திற்கும் நஷ்டம் வருகிறது. அதிகமாக வரி போட்டால் ஏமாற்றத் தோன்றுகிறது. உண்மையாக வரி கட்டினால், டூரிங் டாகீஸ் நடத்த முடியுமா? முடியாது. அவர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. திரு வகாப் சொன்னதைப் போல, மொத்தமாக ஒரு வரியைப் போடுங்கள். சீட்டுக்கு என்று வரியைப் போடாதீர்கள். படம் நன்றாக இருந்தால் சரி. சில நேரங்களில் ஆகுபேஷன் ரேஷியோ 30 சதவிகிதம், 20 சதவிகிதம் என்று இருக்கும். இதை எல்லாம் உட்கார்ந்து கணக்கு எடுத்துப் பார்த்தால் டூரிங் டாகீஸ் நடத்த முடியுமா? இதை யெல்லாம் யோசித்துப் பார்த்து ஃபாரம் 2 ரிபோர்ட்டில் பல வேலைகளை யெல்லாம் குறுக்க முடியும். இப்படிப் பார்த்தால், அவர்களுக்கும் செலவு குறையும். அரசுக்கு வருமானமும் பெருகும். இதுதான் சாலச் சிறந்தது என்று கூற விரும்புகிறேன்.

அடுத்து, பெட்டிங் டேக்ஸ், ஷோ டேக்ஸ்—இவற்றில் வருமானம் குறைந்திருக்கிறது. பெட்டிங் டாக்ஸ் பற்றி எனக்குத் தெரியாது. இதைக் குறைய விட்டால் ஆபத்து. இவற்றிற்கு அதிக வரி போடுவதால், கொடுமையை மக்களால் உணர முடியாது. உணவுப் பொருள்களுக்கு வரி போட்டால் அதன் கொடுமையை மக்கள் உணருவார்கள். இந்த

வரிகளை அதிமகமாகப் போடுவதால் பெரிய கஷ்டம் ஒன்றும் வந்து விடாது என்பதை இந்த அரசாங்கம் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிலையில், விற்பனை வரி, எண்டர்டைன்மெண்ட் டாக்ஸ் இவற்றை யெல்லாம் பரிசீலனை செய்து எந்த அளவுக்கு இவைகளை எல்லாம் குறைவாகக் கஷ்டம் கொடுத்து அதிகமாக வருவாயைப் பெருக்க முடியுமோ அப்படிச் செய்வது சாலச் சிறந்தது. விற்பனை வரி மூலமாக ஆண்டுக்காண்டு அதிகமாக வருமானம் காட்டவேண்டும் என்ற அளவுக்குக் கூட்டிக் கொண்டே போகக் கூடாது என்பதைத் தாழ்மையுடன் கூறிக் கொண்டு, இந்த மானியத்தில் கூறியிருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

Thiru R. PONNAPPA NADAR: Sir, in support of the cut motions that have been tabled by our party, I would also like to offer a few remarks, regarding this important Demand. Sir, it has been stated that there has been an increase in growth of trade and industries in the State and consequently there has been an increase in revenue. The revenue as anticipated and collected in 1966-67 was Rs. 56·10 crores and the actuals that have been collected in 1971-72 was Rs. 110·82 crores. Now Rs. 117 crores is the estimate for the current year, that is 1973-74. Sir, sales tax is—I do not want to call it an immoral tax, but—a non-moral tax. It is regressive and its incidence is on the purchaser, it affects the poor people and it has been stated that there has been a buoyancy of trade.

Whether there has been buoyancy of trade or not is a debatable point and that is my first submission. Because there has been a rise in prices and there has been inflationary tendencies and flow of money has also preponderent role to play in the economy of our country. What is the effect of the three factors in the matter of collection of sales tax or the 'turnover tax' as it may be adequately called.

I would venture to suggest that the collection that has been made in terms of real money worth is not very appreciable. There has been erosion in the value of the rupee. Even though you may say that the net collection is to the tune of Rs. 117 crores, the real value is only much little. What was Rs. 56·10 crores in 1966-67 would be much more now because the purchasing power of the rupee then was entirely different and the purchasing power of the rupee at the present moment is also different.

So, however much we may advance the argument that there has been a buoyancy in trade, there are growths in economy, it may be pertinent to remark and to say without fear of contradiction that the

sales tax revenue increase is not a healthy sign, even though it is the leading Kama Dhenu of our finances.

I think, this Kama Dhenu came into existence, whatever be the position in other countries, so far as we are concerned, this has been introduced in the wake of prohibition policy introduced by the late lamented Shri Rajaji . At that time, the excise income was the predominant income so far as our State was concerned and when prohibition was introduced, it was only just and proper that some other alternative taxation was imposed and as a result of that, this sales tax came to be introduced and this is continuing even now with its effects on our economy. Whether a single-point taxation or a multi-point taxation will have carried out is a matter to be considered by experts and the Government.

மாலை 6-00

Several committees have been appointed by Government and the expert opinion is to the effect that single point taxation is best assessed in the matter of collection. The principle of taxation is that we should take with as little squealing as possible. But we are killing the goose that lays the golden egg. We are putting the assessees to great harm, on account of the policies pursued by the assessing authorities.

It has been stated on the floor of the House that assessing authorities are a source of menace, if I may be permitted to use that expression. They are treated just like assessees in Income-tax department. That is how sales tax officers are treating the merchant classes as a whole. Even for flimsy mistakes, for small lapses, stringent action is being pursued by the authorities. Representations have been made by the traders to the sales tax authorities. Many members have stressed here that the 'best of judgment' is the potential evil to the traders.

I would say that the authorities sometimes do not believe the accounts and the reasons for not believing the accounts are not stated in the order. That is why the representations from trading community and chamber of commerce. There should be some streamlining and some revision of the policy. I wish some attention is bestowed in this regard. In page 4 it is stated —

"Representations have been made to the Government by the Chambers of Commerce and Industries for simplification and rationalisation of tax structure and statutory procedures and practices. The Government have therefore appointed a Special Officer for streamlining and rationalising the structure of the Tamil Nadu General Sales Tax Act and other similar enactments relating to Commercial Taxes and the rules made thereunder".

Sufficient for me to say that this rationalisation should not be like the one we had in the Transport Department. There the minimum fare was 15 paise before rationalisation. After rationalisation the minimum fare is 30 Paise. That is the increase we got. Such increases should not be resorted to. That is my submission.

Studies have been made to study tax structure in Maharashtra and Gujarat and other States. The visit of officers to these States will be of no avail to us if they use it for simplification of the sales tax law here. There are so many laws, Central Act, State Act, etc. Under the ambit of this department, there are so many laws such that many of us are unable to know all the amendments to the different laws. There are certain amendments on certain sections due to decisions rendered by High Court, Supreme Court and these amendments have been incorporated. But there is no authoritative publication. So, it would be in the interest of the department and trading community if there is authoritative publication of all amendments of the taxation laws of this department.

Some attempt has been made in building residential quarters for officers, as well as for construction of building for commercial tax offices. The convenience for trading community inside these offices should be improved.

In order to enable all dealers and trade associations to have clear knowledge about sales tax laws, the Government have introduced a scheme for supply of copies of Ordinances, Bills, Acts, Press Releases relating to commercial taxes to such of those dealers, trade bodies and associations as register their names under this scheme. Every now and then amendments are made due to decisions of Courts. For benefit of trading public, the law of the land should be made known to them and that should be in the language of the people. So in the matter of publication, I want that there should be more use of Tamil language, so that people may know it better. To obviate the difficulties of merchants not knowing English, Tamil versions of amendments, etc. should be supplied to them. Use of Tamil in abundance is advocated so far as this department is concerned. Let the Hon. Minister kindly make a note of this. I have already indicated that single point tax system is most congenial so far as trading community is concerned. Because of this multi-point system, there has been harassment of trading community and I hope the department would take note of such things and see that the trading community is not put to harassment.

I now come to exemptions under General Sales Tax Act, 1959. It is stated that tax on sale of cement by the factories in Tamil Nadu to Kerala State Electricity Board delivered at Theni railhead for construction

of the Idikki hydro-electric project has been reduced from 8 to 3 percent. I am at a loss to know it. The Electricity Board is at much better position than ordinary purchaser. It is a corporate body. They can pay. This is a matter which requires some more consideration at the hands of the Hon. Minister.

Sales tax on food-grains should be abolished. Thirumathi Anandanayaki also had pleaded for it. I do not want to repeat her arguments. Now that we have a surplus budget, now that Central Government also have already introduced so many taxes, can we not show a gesture? I do hope that the Hon. Minister for Revenue would give some concessions in regard to sales tax on foodgrains.

Sir, another point is regarding surcharge. The surcharge could not be justified on any ground now, eventhough it may be said that the surcharge is imposed in justifiable cases. What is the necessity for this? Of course it was then thought that the finances were slender and the finances were not encouraging, so much so, this surcharge has been introduced. I think it is time that we take away this surcharge. Otherwise, there would be flight of trade and commerce from our State to neighbouring States in case the surcharge is existing here.

Many members have stressed that trade and commerce are fleeing to other States where the tax is at a lower rate. That is the reason why people resort to purchase things from other sources. Therefore, it is time that this surcharge is done away with. There are other things that have been imposed consequent on the refugee problem; Central imposts were made; similarly our State also have made certain increases. Why not put a stop to all these things now? This surcharge can be done away with. I place this for the Hon. Minister's earnest consideration. I think the emergency has ceased and now that our finances are also on sound basis, I think, something may be done in this regard as well.

Sir, I want to make another point regarding Betting and Entertainment Tax Act of 1971. An additional surcharge is levied at 5 per cent on 'betting tax' with effect from the 1st of January 1972. This is varying in respect of Cinematograph and Horse races. Now, the Government are getting that. Why not put a stop to this surcharge? The Hon. Minister may say that our resources may get depleted. I do not think there is cause for apprehension in that regard. I think that aspect also can be gone into by the Hon. Minister.

Now, Sir, regarding horse racing, several things have been said. It may be argued that if we abolish horse racing in our State, the other

neighbouring States, like Andhra as well as Mysore would be benefited. But one thing. There is no horse racing so far as Kerala is concerned and they are not at a disadvantageous position for that. There are other States also where there is no horse race. Why should this immoral betting in the name of revenue be encouraged by the Government? Sir, private betting is prohibited now. But it is legalised. What could not be done by the citizen is done by the Government under a statute. But it may be said that the State has a better right. That may be one of the contentions put forth. I do not think that it holds water. I think it is time that we do away with this horse racing.

Sir, the Tamil Nadu Betting Tax Act of 1935, has been modified and there has been fall in the revenue as indicated in the note, from the collection as on 28th February 1973 which is Rs. 143 lakhs. That is the figure that has been given here. It is one of your election premises about which we only remind you, that you would do away with this horse racing. But now when you are entrenched in power, saddled with authority and power you do not do it. Power corrupts and absolute power corrupts absolutely. That is the reason why this immoral tax is still allowed to continue. I hope the Hon. Minister will do away with this betting tax and it is time that this immoral tax is taken away.

Some of the remarks which I have made whether they are considered beneficial or not, they will have to be taken note of and considered. I have made myself clear and I think the department would be well-advised to see that there should be streamlining of the department in the matter of administration and sufficient instructions should be given to the assessing authorities, for. they have been treating the dealers not quite well. Even if there is some markings in the books, they jump to the conclusion that there is some curious thing and some account is done there. So much so they disbelieve the accounts. Such a plight should not occur. I think the department will take note of these facts and take necessary action.

I hope horse racing will be done away within our State. I am sure that the Hon. Minister will not disappoint this House and disappoint me when I say that horse racing should be taken away in our State.

With these observations let me conclude my speech.

Thank you, Sir.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, விற்பனை வரி சம்பந்தமான மானியக் கோரிக்கையின்மீது ரொம்பவும் உபயோக

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் சங்கத்திலே, "ரேஸ் கிளப்"-பிலே மெம்பர் என்றுதான் சொன்னார்.

திரு. கே. ஏ. வகாப் : உண்மையிலே, இன்றையதினம், எங்களுடைய கட்சியைப் பொருத்த அளவிலே, குதிரைப் பந்தயத்தை எடுத்துவிட வேண்டுமென்ற கொள்கை உடையவர்கள் நாங்கள். நாங்கள் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழக அரசு, பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலே கூட அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அதைப்பற்றிக் குறிப்பிடுவது நல்லது என்று நினைக்கிறேன். அதற்கு அதிகமாக ஊக்கம் தராத அளவிலே மாண்புமிகு ஹாண்டே அவர்கள் கூட படித்துக் காண்பித்தார்கள். வரி விதிப்பானது திடீரென்று குறைந்திருக்கிறது. அதற்குரிய காரணங்கள் என்ன என்று கேட்டார்கள். அதிலே ஊழல் நடப்பதாகக் கூறினார்கள். எனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஊழல்கள் பற்றி, மதிப்பிற்குரிய கே. எம். எஸ். அவர்கள் வழக்கம் போல், அந்த ஊழல்கள் எங்கே நடக்கிறது என்று ஊழல்களிலே அவர்கள் கண்ணாய் இருக்கிற காரணத்தால், அதைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், நல்ல அனுபவத்தை வைத்துக்கொண்டு அவர்கள் பேசுகிறார்கள். இதனால் அழிந்துபோன குடும்பங்கள் ஆயிரமாயிரம் இருக்கின்றன. இன்றையதினம் ஏழைகள் சென்று விளையாட முடியாத அளவிலே அதைச் செய்ய வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையைச் சொல்ல விரும்புகிறேன்.

சினிமாவிலே இருக்கிற பெரிய நடிகர்கள், நடிகைகள் அல்லது கள்ளப் பணத்தை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அது இன்றையதினம் அவற்றை வெளிக் கொணருகிற நாடக மேடையாக, முத்தாரமாக இருக்கிறது என்று சொல்கிற அளவிலே இருக்கிறது என்றால் அதை வரவேற்க வேண்டும். கள்ளப் பணம் எந்த வழியாகவாவது வந்தால், வரியாக வந்தால், அவற்றை வெளிக் கொணருகின்ற முறையிலே, வரி வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டு மென்றுதான் நான் இதைச் சொல்கிறேன்.

மக்களுக்குப் பொருளாதார வசதியைப் பெருக்கி, ஏழை மக்களுக்கு வரி வாய்ப்புகளைக் குறைத்துத்தான் இருக்கிறார்கள். அதே நேரத்திலே, இப்படிப்பட்ட வரிகளை நிச்சயமாக அதிகப்படுத்தத் தான் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சூதாட்டங்களை ஒழிக்க முடியவில்லை யென்றாலும் கூட, பணம் வரவில்லை யென்ற கருத்தைக் கொண்டாகிலும் இன்னும் அதிகமாக வரி வசூலிக்க என்ன கொள்கையை வகுக்கலாம் என்பதுபற்றி, ஆராய்ந்து அரசு அதிக வரி விதிப்பதைப்பற்றி இந்நேரத்தில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதிலே பணக்காரர்கள் விளையாடட்டும். அவர்களுடைய பணத்தை வரியாகப் பெறுவோம். அது கள்ளப் பணமாக இருந்தாலும், நல்லப் பணமாக இருந்தாலும் அதிகப்படியாக இருக்கிற பணத்தை வரியாக வசூலிக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் ஆட்சேபணை கிடையாது. இன்னும் அதிகப்படியான வரிகளை விதியுங்கள் என்று யோசனை கூற விரும்புகிறேன்.

சாராயத்திற்கு ஒருமுனை விற்பனை வரி விதிப்பதாக அறிகிறேன். இங்கே பலமுறை வரியாக ஆக்க வேண்டும். அந்த இடத்திலே வியாபாரிகளுடைய நன்மைக்காக ஒரு வரி கேட்கிறோம். இந்த இடத்திலே சமுதாய மக்களுக்காக பலமுறை வரி விதியுங்கள். எந்த எந்த கட்டத்திலே வரி விதிக்க முடியுமோ, அந்த அந்தக் கட்டத்திலே யெல்லாம் வரி விதியுங்கள். கள்ளுக்கு வரியில்லை யென்று சொல்லும்போது, அது சரியில்லை. கள்ளுக்குக் கூட இப்படிப்பட்ட வரியை விதிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறையிலே பணியாற்றுகின்ற அதிகாரிகள் நிச்சயமாக நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அங்கங்கு குறைபாடுகள் இருக்கின்றன. சில நேரங்களிலே வியாபாரிகளுக்கு அதிர்ச்சி தரக்கூடிய முறையிலே நடந்து கொள்கிறார்கள். வியாபாரிகள் எல்லோருமே நல்லவர்கள் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. எல்லோருமே பூரணமான கணக்கைக் காட்டத் தயாராக இருக்கிறார்கள். அதிகாரிகள் ஒப்புக் கொள்கிறார்களா? நாங்கள் பூரணமாகக் கணக்கைக் காட்டி அவற்றிற்கு வேண்டிய வரியை இன்றைக்குக் கொடுக்கிறோம். அதை விதித்து விட்டால் நீங்கள் எந்தவிதமான கட்டுப்பாடுக்கு உட்பட வேண்டும், அல்லது இந்தக் கணக்கைக் காட்ட வேண்டுமென்றால், அதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு, ஒரு சுமுகமான அளவுக்கு, பயப்படக் கூடியவர்கள் என்ற நிலையை மாற்றி, அதிகாரிகள் நம்பி பழகக் கூடியவர்கள் என்ற முறையிலே ஒரு சுமுகமான சூழ்நிலையை அமைக்கக் கமிட்டிகள் அமைத்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். அந்தக் கமிட்டிகளை மாவட்ட அளவில் மட்டும் அல்லாமல், வட்ட அளவிலும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன்.

• திருமதி த. ந. அனந்தநாயகி : துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே எதிர்க்கட்சிகள் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைப் பேச விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கை மிக மிக முக்கியமான மானியக் கோரிக்கை. ஏறக்குறைய 465 கோடி ரூபாய் உள்ள வரவு-செலவுத் திட்டத்திலே ஏறக்குறைய 150 கோடி ரூபாய் வரையில் மத்திய அரசின் மூலம் பெறுகிறோம். மீதி இருப்பதிலே மூன்றில் ஒரு பங்கு இன்கம் விற்பனை வரி மூலமாக அரசாங்கத்திற்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

விற்பனை வரி போட்ட காலஞ்சென்ற ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் கள்ளுக் கடைகள், சாராயக் கடைகளை மூடிவிட்டு இதை வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். வரிகள் வாங்குவதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிற இந்த அரசாங்கம் விற்பனை வரியையும் வாங்கிக் கொண்டு, கள்ளுக் கடை, சாராயக் கடைகளையும் திறந்துவிட்டு அவற்றின் மூலமாகவும் வருமானத்தை வைத்துக் கொண்டு ஆட்சி நடத்தலாம் என்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அம்மையார் அவர்கள் கூடச் சொன்னார்கள். ரூ. 24,000 என்று கொண்டு வருகிற வியாபாரிகளிடத்தில் ரூ. 26,000 என்று போட்டு வரி கேட்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் ரூ. 26,000 என்று இருப்பதை மிகச் சாமர்த்தியமாகக் குறைத்து ரூ. 24.000 என்று கொண்டு வருகிறார்கள். இதை அவர்கள் கூட ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் அப்படிச் சாமர்த்தியமாகச் செய்து கொண்டு வருவதால், அதிகாரிகளும் அதைச் சாமர்த்தியமாகக் கண்டு பிடித்து வரி போடுகிறார்கள். அந்த ரூ. 26,000-க்கும் 3½ சதவீதம் வீதம் வரி வாங்குவதில்லை.

இணக்கம் செய்து கொள்வதற்கு ஸ்லாப் இருக்கிறது. அதன்படி வரி போடுகிறோம். அந்த இணக்கத்திற்காகக் கொடுக்கப்பட்ட சலுகை சாதாரண சலுகையாக இருக்கலாம். முதலில் ரூ. 10,000-க்குத்தான் கொடுக்கப்பட்டு வந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் அது ரூ. 15,000 என்று உயர்த்தப்பட்டது. இந்த அரசு அதை ரூ. 25,000 என்று உயர்த்தியிருக்கிறது. அதிக பட்சமாக இருந்தது ரூ. 50,000-க்கு வரி போட வேண்டுமென்று முன்பு இருந்தது. அதை ரூ. 75,000 என்று அண்ணா அவர்கள் காலத்தில் உயர்த்தப்பட்டது. இப்போது அதை லட்ச ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். இப்படிக் கொடுத்திருக்கும் சலுகைகள் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டு இருக்கும் இழப்பு ஏறத்தாழ ரூ. 45 லட்சம். கொடுக்கப்படுகிற சலுகை குறைவாக இருந்தாலும், அதனால் அரசுக்கு ஏற்படும் இழப்பு பெருத்த இழப்பாக இருக்கிறது. ரூ. 45 லட்சத்திற்குப் பக்கமாக வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறிய வியாபாரிகளுக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது என்பதை நான் மனப் பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். சிறிய வியாபாரிகளுக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்பதை அடிக்கடி அதிகாரிகளிடம் கலந்து பேசுகிறபோது எடுத்துக் கூறி, அவ்வப்போது யோசனைகளைச் சொல்லி வருகிறேன். தொல்லைகளை எந்த அளவுக்குத் தவிர்க்க முடியுமோ அந்த அளவுக்குத் தவிர்க்கிறோம்.

எல்லோரும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ராஜாஜி அவர்கள் மது விலக்கைக் கொண்டு வந்த காலத்தில் தான் விற்பனை வரியைக் கொண்டு வந்தார்கள். இதை ஒவ்வொரு ஆண்டும் சொல்லி வருகிறார்கள். அவர்களே சொல்லி விட்டார்கள். மது விலக்கிற்கும் விற்பனை வரிக்கும் சம்பந்தம் இல்லை. விற்பனை வரிக்கும் மது விலக்குக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். விற்பனை வரி போட்டதற்கும், மது விலக்கை ரத்து செய்ததற்கும் சம்பந்தம் இருப்பதாக இந்த அரசு ஒப்புக் கொள்ளவில்லை. மதுவிலக்கை எடுத்தபோது முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள்.

கள்ளுக்கடைகளை, பிராந்திக் கடைகளை யாரும் விரும்பித் திறக்கவில்லை—திறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்குப் பின்னாலே தான் திறந்தோம். அது அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும். முதலமைச்சர் அவர்கள் இன்னொரு கருத்தையும் தெரிவித்தார்கள். அகில இந்திய

ரீதியில் இந்தப் பிரச்னையை எடுத்துக் கொண்டு, எல்லா மாநிலங்களிலும் இதை அமுலுக்குக் கொண்டு வந்தால் நாமும் அதை ஒப்புக் கொள்கிறோம். என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தியா முழுவதிலும் பார்த்தால் இரண்டு மாநிலங்களில் தான்—குஜராத், மகராஷ்ட்ரா—அமலில் இருக்கிறது. மற்ற எல்லா மாநிலங்களிலும் ஒரு வகையில் மதுவிலக்கைத் தளர்த்தியிருக்கிறார்கள், ரத்து செய்து விட்டார்கள். அந்த வகையில் தான் நமது மாநிலத்தில் செய்து இருக்கிறோம். ரத்து செய்து இருப்பது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி அல்ல என்பதை அரசு தரப்பில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எசன்ஷியல் கம்மாடிடீஸ்க்குப் போடப்பட்டிருக்கும் வரியைக் குறைக்கக் கூடாதா என்று கேட்கிறார்கள். இப்போது முக்கியமாக உள்ள பொருள்களுக்கு, மக்கள் அத்தியாவசியமாக உபயோகிக்கும் பொருள்களுக்கு வரியைக் குறைக்கக் கூடாதா, உணவுப் பொருள்களுக்கு வரியைக் குறைக்கக் கூடாதா என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவரும் சொன்னார்கள். உணவுப் பொருள்களைப் பொறுத்த வரையில், தமிழ் நாட்டில் தான் நெல்லுக்கு வரி கிடையாது. அரிசிக்கு வரி கிடையாது. பக்கத்தில் இருக்கும் ஆந்திரத்தில் வரி இருக்கிறது. அங்கே இருப்பதால் நாம் போட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. இருக்கிறது என்பதைக் காட்டுவதால் கோபம் வரக்கூடாது. வரத் தேவையில்லை. மேற்கொண்டு எந்தெந்தப் பொருள்களுக்குக் குறைக்க முடியும் என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். எதற்குக் குறைக்கலாம் என்று ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம்.

பருப்பு வகைகளில் வரி ஏய்ப்பு இருக்கிறது. ரூபாய் மூன்று லட்சத்திற்குப் பக்கமாக வெளி நாட்டிலிருந்து பருப்பு தருவிக்கிறார்கள். வரியாகக் கட்டுவது எவ்வளவு என்று கேட்டால் பாதி கூட வரியாக வருவது கிடையாது. பாதிக்குப் பாதி வரியாகக் கொடுப்பது இல்லை. உடனே அம்மையார் அவர்கள் கேட்டாலும், கேட்டு விடுவார்கள், வசூலிப்பதில் திறமைக் குறைவு என்று சொன்னாலும் சொல்லலாம். இருக்கும் சங்கடத்தைத் தெரிவிப்பது நல்லது என்று கருதுகிறேன்.

மத்திய அரசுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். மத்திய அரசின் மீது குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. ரயில்வே மூலமாக, பருப்பு மற்ற பொருள்கள் வருகிறது. ஆர். ஆர். செல்ப் என்று போட்டு எடுத்து வருகிறார்கள். இங்கே வரும் போது எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். யார் பேருக்கு வந்தது, யார் எடுத்துக் கொண்டு போனார்கள் என்ற தகவலைக் கேட்டால் ரயில்வே அதிகாரிகள் கொடுப்பது இல்லை. நமக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் வரி விதிப்பதில் தொடர்பு இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. இதைப் பல முறை தெரிவித்து இருக்கிறோம். இப்போதும் இந்த அவை மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். ரயில்வே இலாகா இது போன்ற வரி விதிக்கும் பொருள்கள் வாகன் வாகனாகக் கொண்டு வந்தால் வரி செலுத்தாது எடுத்துக் கொண்டு போகக் கூடாது. இந்த அரசு கேட்கிறபோது அந்த விவரங்களை அவர்கள் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எப்படி வரிப் போட்டிருக்கிறார்கள், நாம் அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய வழி இருக்கிறதா என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப்போல பம்பாயில் உற்பத்தியாகிற பிளாஸ்டிக் குட்ஸ்க்கு 3 சதவீதம் தான் வரி. ஆனால் சென்னையிலே உற்பத்தியாகிற பிளாஸ்டிக் குட்ஸ்க்கு $3\frac{1}{2}$ சதவீதம் வரிப் போட்டிருக்கிறீர்கள். தொழில் எப்படி அபிவிருத்தியாகும்? எல்லோருமே பம்பாயிலே வாங்கிக் கொண்டால் போதும் என்றுதான் நினைப்பார்கள். $\frac{1}{2}$ சதவீதம் அதிகமாக ஆக்கியிருக்கின்ற காரணத்தினால் தொழிலதிபர்கள் எப்படி உங்கள் பக்கம் வருவார்கள்? தொழில் ஆரம்பிப்பார்கள்?

கார்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் ஆந்திராவிலே குறைச்சலாக இருக்கிறது, ஆனால் தமிழ்நாட்டிலே அதிகம். ஆந்திராவிலே வண்டி வாங்கிக் கொள்ளலாம் என்றுதான் எல்லோரும் நினைப்பார்கள். அண்டை மாநிலத்திலே வரியைக் குறைத்து விற்கக்கூடிய நிலைமை இருக்கும்பொழுது நீங்கள் கூட்டியிருப்பதால் அவர்களிடம் வரியைக் கோட்டைவிடக்கூடிய வழியைத்தான் செய்து கொண்டிருக்கிறீர்கள். அங்கே குறைச்சலாகப் போட்டால் நீங்களும் இங்கே குறைத்துப் போடுங்கள். 3 சதவீதம் என்று நீங்களும் போட்டால்தான் நிறையப் பேர்கள் ரிஜிஸ்டர் செய்து வாங்க முன்வருவார்கள். அண்டை மாநிலத்திற்கும் நமக்கும் எந்தவிதமான மோதலும் இல்லாமல் இங்கேயே எல்லோரும் வாங்கக்கூடிய முறை தேவை, அதுதான் சரியானது.

தமிழ்நாட்டிலே உணவுப் பொருட்களுக்கு வரி விலக்குக் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள். இப்பொழுது அதைக் குறைத்து இருக்கிறீர்கள். வரி என்றாலே காதில் வாங்கிக்கொள்ள மாட்டார்கள். ஆனால் வசூலுக்கு வழியிருந்தால் சொல்லுங்கள் என்று சொல்கிறீர்கள். ஓட்டு வாங்கும்பொழுது வரிகளைக் குறைப்போம், வசதிகளைப் பெருக்குவோம் என்று சொல்லிவிட்டு இன்றைக்கு வரியை தாங்குகிறவர்களுக்குப் போடுகிறோம் என்று மாற்றிக் கொள்கிறீர்கள். உணவுப் பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கக் கூடாது என்ற சூழ்நிலை இருப்பதாலே விலை ஏற்றத்தை இன்றைக்குக் கட்டுப்படுத்துவதற்கு வழியில்லாமல் இருக்கிறது.

கள்ளைவிட உணவுதான் முக்கியம். கள்ளுக்கு வரி கிடையாது இந்த ஆட்சியில், ஆனால் உணவுப் பொருட்களுக்கு வரி, அப்படியானால் உணவுப் பொருட்களைவிட கள்ளுதான் முக்கியம் என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா? உணவுப் பொருட்களுக்கான வரியை எடுத்துவிட்டு கள்ளுக்கு வரி போடுங்கள் வரவேற்கலாம். உணவுப் பொருட்களுக்கு வரிப் போடுவது வருந்தத்தக்கது.

அரியர்ஸ் ஆப் சேல்ஸ் டாக்ஸ் பல ஆண்டுகளாக வசூலிக்கப்படாமல் சில இடங்களிலே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது இந்த இலாக்காவிற்கு நன்றாகத் தெரியும். சில கேஸ்களிலே 5 வருஷம், 10 வருஷம் என்ற அளவிற்குக்கூட பாக்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைக் கட்டுங்கள் என்று சொன்னால் அவர்கள் கட்டாமல் இருக்கிறார்கள். வசூலிக்க வேண்டிய இடங்களில் வசூலிப்பதற்கு தயாராக இருக்க வேண்டும்.

இப்பொழுது—நீங்கள்கூட திருத்தம் கொண்டு வந்திருக்கிறீர்கள்—அதைப்பற்றி உங்கள் கட்சி உறுப்பினரே எடுத்துச் சொன்னார்கள். லாரியை ஏன் பிடித்து வைத்துக்கொள்கிறீர்கள். சரக்கை வேண்டுமானால் எடுத்து வைத்துக்கொள்ளலாம், லாரியை விட்டுவிட வேண்டும், லாரியை பிடித்து வைத்துக் கொண்டால், உங்கள் காரியங்கள் எல்லாம் முடிய 1 வாரம், 10 நாட்கள் வரைக்கும் ஆகும், அதுவரையில் லாரிக்குச் சொந்தக்காரர்களுக்கு வருமானம் இல்லாத நிலைமை ஏற்பட்டு லாரி வாங்கியவர்கள் கதி என்ன ஆகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அழுகும் பொருட்கள், சீக்கிரமாகக் கெட்டுவிடும் பொருட்கள் இருந்தால் அவைகளைக் கூடப் பிடித்தால் சீக்கிரமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இப்பொழுது அதிகாரிகள் பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட், அட்ஹாக் ரிவிஷன் என்ற பெரிய ஆயுதங்களை வைத்துக்கொண்டு அதன் மூலம் வியாபாரிகளையெல்லாம் கிடுகிடு என்று நடுங்க வைக்கக்கூடிய ஆயுதங்களாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். வியாபாரிகள் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டு அதை நம்பாமல் பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் என்றும் அட்ஹாக் ரிவிஷன் என்றும் வைத்திருப்பது அவசியந்தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 25 ஆயிரம் ரூபாய் வரையில் அவர்களுக்கு விதிவிலக்கு தந்திருக்கிறோம் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

ஆனால் யாருக்குக் கிடைக்கிறது? ரூ. 25 ஆயிரத்திற்குக் கணக்குக் கொண்டுபோய்க் கொடுத்தால் ரூ. 26 ஆயிரமாக ஆக்கிவிடுகிறார்கள். "சம் ஹௌ"—எப்படியோ, என்ன ஜட்ஜ்மெண்டோ, என்ன கணக்கோ—எதை வைத்துச் செய்வார்களோ, தெரியாது. ரூ. 23, 24 ஆயிரத்திற்குக் கணக்குக் கொண்டு போய்க் கொடுத்தால், ரொம்ப சாமர்த்தியமாக 1 அல்லது 2 ஆயிரம் கூட்டி, ரூ. 25 ஆயிரமாக்கி விடுகிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், விதிவிலக்கை எல்லோருக்கும் கொடுங்கள். ஒரு லட்சம், $1\frac{1}{2}$ லட்சம் டர்னோவர் இருந்தால், முதல் 25 ஆயிரத்திற்கு என்று சொல்லுங்கள். இதைத் தான் வியாபாரிகள் மாநாடு, மாநாடாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதல் 25 ஆயிரத்திற்கு இவ்வளவு விதிவிலக்கு, என்று சொல்லிவிட்டால் அவர்களும் சரியான கணக்கைக் காண்பிப்பார்கள். அரசுக்கும் லாபம் இருக்கிறது. இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அர்பன் லேண்ட் டாக்ஸ், இது இதில் தான் வருகிறது என்று நினைக்கிறேன். புக்கில் இல்லை. புக்கிலுள்ள மெமோராண்டத்தில் நிலவரி சேர்ந்திருக்கிறது. $1\frac{1}{2}$ கிரவுண்டாகப் பண்ணுங்கள் என்று சொன்னோம். "என் வீடு $1\frac{1}{2}$ கிரவுண்டு" என்று சொல்லி எக்சம்ஷன் பண்ணி இருக்கிறார்கள். இதில் ரூ. 150 லட்சம் வருகிறது. வேறு வழி ஏதுமில்லை என்றால், நிலவரியை எடுத்துக் கொண்டால், நல்ல பேர் வாங்கலாம் என்று இருக்கிறது. மனை, மனையாக வரி போடுகிறார்கள். இதை ரிலைவ் பண்ணலாம். மார்க்கெட் வேல்யூ போட்டு ஒவ்வொரு ஸோனைப் பிரித்து ரூ. 10, 15 ஆயிரம் என்று போட்டு வருகின்ற கணக்கைப் போட்டு, செட் ஆப் அட்மினிஸ்ட்ரேடார்சை வைத்துக் கடைசியில் என்ன

மான கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்ததற்கு நான் தங்கள் மூலம் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்த மானியத்தின் மீது பேசியவர்கள் எல்லாம் இந்த இலாக்கா எப்படி சீர்படுத்தப்படவேண்டுமென்பதற்கு நல்ல யோசனைகளைச் சொன்னார்கள். அதோடு மட்டுமல்லாமல் சில வரி விலக்குகள் அளிப்பதற்கும் யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, பேசிய எல்லா உறுப்பினர்களும் இந்த இலாகாவைப் பற்றி நல்ல கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஒன்றை மட்டும் என்னால் உணர முடிகிறது. 111 கோடி ரூபாய்க்கு மேல் வருமானத்தைத் தேடிய தற்கு சென்ற ஆண்டு, 117 கோடி ரூபாய் இந்த ஆண்டு வருமானம் வரும் என்று எதிர்பார்ப்பதற்கான அறிகுறிகள் வரவு:செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரும் தொகையை வசூலித்துக் கொடுக்கிற இந்த இலாக்கா மிகக் குறைவான தொகையை மானியமாகக் கோருகிறது. தமிழ் நாட்டில் இருக்கிற பல்வேறு இலாகாக்களில் இந்த இலாக்காதான் இவ்வளவு பெருவாரியாக சம்பாதித்துக் கொடுத்துவிட்டு செலவைக் குறைவாகவே செய்கிற ஒரு இலாக்காவாகும்.

எனவே, இத்துறையில் பணியாற்றுகிற ஊழியர்கள் அத்தனை பேர்களையும் நான் இந்த அவையின்சார்பில் பாராட்டுகிறேன். அரசாங்கத்திற்கு உதவியாக இருந்ததற்காக. இங்கொன்றும் அங்கொன்றும் தவறுகள் நடந்திருக்கலாம், இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் அந்தத் தவறுகளைக் கூட உறுப்பினர்கள் பெரிதுபடுத்திச் சொல்லவில்லை. ஆனால் தவறுகள் இருந்தால் அவற்றைத் திருத்திக் கொள்ளவேண்டும். திருத்த வேண்டியது நம் கடமை, திருந்திவிடுவார்கள் என்று நம்புகிறேன்.

பொதுவாகப் பேசிய நண்பர் திரு கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமே இந்தப் பலமுனை விற்பனை வரி போட்டிருப்பதுதான் என்றார். மற்றவர்களும்கூட இந்தத் கருத்தைத் தெரிவித்தார்கள். பலமுனை விற்பனை வரியை ஒருமுனை விற்பனை வரியாக மாற்ற வேண்டும். அதைத்தான் வியாபாரிகள் எல்லாம் கோருகிறார்கள். பலமுனை விற்பனை வரியே கூடாது என்று வாதித்தார்கள். எதை எதை ஒருமுனை விற்பனை வரியாக ஆக்க முடியுமோ, எது எதை ஒருமுனை விற்பனை வரியாக மாற்றுவதன் மூலம் ஏய்ப்புகள் இல்லாமல் இருக்குமோ அதை யெல்லாம் அரசு ஒருமுனை விற்பனை வரியாக மாற்றிக் கொண்டுவருகிறோம். இதை மேற்கொண்டும் மாற்றியமைப்பதற்கு நாம் தனி நபர் ஒருவரை நியமித்து, வருவாய்த் துறை வாரியத்தில் இருக்கிற ஒரு உயர்தர அதிகாரியிடம் இந்தப் பெரும் பொறுப்பை ஒப்படைத்து இதற்கான ஆலோசனைகளை ஆராய்ந்து சொல்லும்படி. கேட்டிருக்கிறோம்,

இந்த இலாக்காவை எப்படிச் சீர்படுத்த முடியும், வரிகளை எப்படி மாற்றியமைக்க முடியும், அரசுக்கு இழப்பு இருக்கக் கூடாது, அதேநேரத்தில் வியாபாரிகளுக்குத் தொல்லை இருக்கக் கூடாது என்பதற்காகத் தனி நபர்

ஒருவரிடம் இந்தப் பெரும் பொறுப்பை ஒப்படைத்து ஆராயச் சொல்லியிருக்கிறோம். இவருடைய அறிக்கையும் விரைவில் வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அது வந்ததற்குப் பிறகு அரசு பரிசிலித்து எது எதை ஒருமுனை விற்பனைவரிக்கு உள்ளாக்க முடியுமோ அவைகளை ஒருமுனை விற்பனை வரிக்கு உள்ளாக்குவதற்கு அரசு தயாராகயிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் விற்பனை வரிதான் என்று சொல்வதை என்னால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. ஒத்துக்கொள்ள இயலவில்லை. விற்பனை வரி மூலம் விலை சிறிது கூடுதலாகியிருக்கலாம். ஆனால் விலையேற்றத்திற்கு இதுதான் காரணம் என்பது இல்லை. விற்பனை வரியைக் குறைத்துவிடுவதன் மூலம் விலை குறைந்துவிடுகிறதா என்றால் குறையவில்லை என்பதை அனுபவம் தெரிவிக்கிறது.

உதாரணமாக, தேங்காய் மீதுள்ள விற்பனை வரியை நாம் குறைத்தோம். தேங்காய் ஒரு ரூபாய்க்குப் பக்கம் இருக்கிறதே, விற்பனை வரியால்தானே இருக்கிறது என்று பல அரசியல் கட்சித் தலைவர்களும், இங்குள்ள பல உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்த பிறகு அரசாங்கம் அறவே அதை விற்பனை வரியிலிருந்து நீக்கினோம். அப்படி நீக்கியதின் மூலம் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ஏறத்தாழ 25 லட்சம் ரூபாயாகும். அந்த அளவிற்கு ஆண்டு ஒன்றுக்கு நஷ்டம் ஏற்பட்டது. அந்த இழப்பைப் பொறுத்துக் கொண்டோம். ஆனால் தேங்காயின் விலை குறைந்ததா என்றால் விலை குறையவில்லை. ஆகவே, விலையேற்றத்திற்கு விற்பனை வரிதான் காரணம் என்று சொல்லவேண்டியதில்லை. இதுவும் ஓரளவிற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும். இது ஒன்றுதான் காரணம் என்று சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தேங்காய் விலை ஏறியதற்கு—வரி விலக்கு அளித்த பிறகும்—கள்ளுக்கடை திறந்ததால் என்று கூறிக் கொள்கிறேன். கள்ளுக்கு தேங்காய் விட வேண்டாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அம்மையார் அவர்கள் சொல்வார்கள் என்று எதிர் பார்த்தேன். கள்ளுக் கடை திறந்தது சென்ற ஆண்டு. தேங்காய்க்கு வரி நீக்கியது 2, 3 ஆண்டுகளுக்கு முன்பாகும். அப்போதிருந்தே குறையவில்லை. இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. அனுபவத்தின் வாயிலாக இதைச் சொல்கிறேன்.

இந்த அரசு சிறிய வியாபாரிகளுக்குக் கொடுத்திருக்கும் விலக்கு ரூ. 25,000 வரை இருக்கிறது. லட்ச ரூபாய் வரையில் வியாபாரம் செய்பவர்கள் அதை இணக்கம் செய்து கொள்ளலாம். காம்பௌண்டிங் செய்து கொள்ளலாம். அப்படிச் சட்டத்தில் சலுகை கொடுத்து இருக்கிறோம். இந்தச்சலுகையை உயர்த்த வேண்டுமென்று திரு. வகாப் அவர்கள் சொன்னார்கள். ரூ. 25,000; ரூ. 75,000 மாக உயர்த்த வேண்டுமென்று

பார்த்தோம். மற்ற மாநிலங்கள் ரத்து செய்வதாகத் தெரியவில்லை. ஆகவே மீண்டும் புக்கீஸ் முறையை கொண்டு வரவேண்டும் என்று ரேஸ் கிளப் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்ற தகவலை மட்டும் இப்போது தரு கிறேன். ஏனென்றால் நாம் எடுத்துக் கொண்ட 1 ஆண்டு முடிந்த பிறகு தான் அதைப் பற்றி யோசிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பொதுவாக, ரேஸ் கூடாது என்று சொன்னவர்கள் தானே நீங்கள். ஏன் குதிரைப் பந்தயத்தை வைத்து நடத்த விட்டுக் கொண்டிருக் கிறீர்கள் என்று கேட்டார்கள். குதிரைப் பந்தயம் இங்கே தமிழ் நாட்டில் வேண்டாம் என்று சொன்னால், அண்டை மாநிலத்தில் போய் குதிரைப் பந்தயத்தில் பணத்தைக் கட்டுவார்கள். எனவே தான் நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறோம். இதில் ஏழைகள் பணம் கட்டு கிறார்கள். ஆகவே உள்ளே போகிறவர்களுக்குக் கட்டணமில்லை என்று விட்டுவிடுங்கள் என்று திரு கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன் னார்கள்.

கட்டணம் இல்லாமல் விட்டுவிட்டால், பணம் இன்னும் அதிகமாகப் போகும். கட்டணம் இருப்பதால் இப்போது வடிக்கட்டி நிறுத்த முடிகிறது. குதிரை மீது பணம் கட்டிவிட்டு சிலர் ஜெயிக்கிறார்கள். பல பேர் வெளியே வரும்போது பார்த்தால் எப்படியிருப்பார்கள் என்று தெரியும். பணத்தை இழந்தவர்கள் நிறைய உண்டு. சம்பாதிப் பவர்களும் உண்டு. குதிரைப் பந்தயத்தைப் பொறுத்த மட்டில் இப்போது இந்த அரசு முடிவு எடுப்பதற்கில்லை. இருக்கின்ற நிலை தொடரும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்த மட்டில், பொதுவாக வரியை குறைக்கக் கூடாதா என்ற கருத்தை எல்லோரும் தெரிவித்தார்கள். அதுவும் சர்சார்ஜை குறைக்கக் கூடாதா என்று எல்லோரும் அழுத்தம் திருத்த மாகச் சொன்னார்கள். சர்சார்ஜ் என்பதில், அடிஷனல் சர்சார்ஜ் போட் டிருக்கிறோம். 10 லட்சம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கிறவர்கள், எவ்வளவு வரி கட்டுகிறார்களோ அந்த வரியில் 5 சதவிகிதம் அரசாங்கத் திற்கு அவர்களே கொடுக்க வேண்டும். அந்தப் பணத்தை பொது மக்களிடத்திலிருந்து வசூலிக்கக் கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறோம்.

இதில் உறுப்பினர் திரு. வ. கிருஷ்ணமூர்த்தி தம்முடைய அனுப வத்தை ஒட்டி ஒன்று சொன்னார்கள். அப்படிப் பேசும்போது, பொது மக்களிடத்தில் வசூலிக்கக் கூடாது என்கிறீர்கள். வியாபாரி ஏதோ முறை யில் வசூலித்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். அரசாங் கத்திற்கும் தெரியும். ஏதோ சார்ஜ் என்று போடுகிறார்கள். அப்படி போட்டு வசூலித்து விடுகிறார்கள். அவைகளைப் பற்றி செலக்ட் கமிட்டியில் முழுமையாக உட்கார்ந்து பேசி, அதைத் தடுப்பது எப்படி என்று முடிவு எடுத்திருக்கிறோம். அதற்குண்டான சட்டங்களை வைத்திருக்கிறோம்.

அவைகள் கண்டுபிடிக்கப்பட்டு தடுக்கப்படும். இந்த வரியில் 50 சதவிகிதத்தை லோக்கல் போர்டுகளுக்குக் கொடுப்பது, அர்பன் டாக்ஸில் கூட லோக்கல் போர்டுக்குக் கொடுப்பது, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சுற்றி யிருக்கிற வளர்ச்சிக்காகக் கொடுப்பது என்ற புதிய யோசனையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலையில் தெரிவித்தார்கள். அதற்காக இந்தப் பணத்தை. ஒதுக்குவதாக இருக்கிறது.

ஆகவே இந்த வரியைத் தள்ள வேண்டுமென்று அங்கத்தினர்கள் கேட்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அங்கத்தினர் திரு வ. கிருஷ்ணமூர்த்தி சொன்னார்கள், விவசாயிகள் விளைபொருளைக் கொண்டு வந்தால், இப்போது இருக்கிற சட்டப்படி கிராம அதிகாரிகளின் சர்ட்டிபி கேட்டுடன் தான் கொண்டு வர வேண்டும்; சொந்த வயலில் விளைந்த விளைபொருட்கள் என்று சர்டிபிகேட் கொண்டுவந்தால் செக் போஸ்டில் இருப்பவர்கள் உள்ளே விடுவார்கள். இதில் சில தவறுகள் சொல் கிறார்கள். கிராம அதிகாரிகளிடம் சர்டிபிகேட் கேட்கிறபோது விவ சாயிகளிடம் தவறுதலாக நடக்கிறார்கள், பணம் கேட்கிறார்கள், பணம் கொடுத்தால்தான் சர்டிபிகேட் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதை எப்படித் தவிர்க்க முடியும் என்று புரியவில்லை. கிராம அதிகாரிகள், கணக்குப் பிள்ளை, மணியக்காரர் கொடுத்தால் போதும் என்றிருப்பதை, ஊராட்சி மன்றத் தலைவர் கொடுத் தால் போதும் என்று திருத்தலாமா என்று நினைக்கிறேன். ஊராட்சி மன்றத் தலைவரும் பணம் வாங்கிவிடுவார் என்று அங்கத்தினர்கள் தெரிவித்தால் வேறு யாரிடம் இந்த சான்றிதழ் வழங்கும் பொறுப்பை ஒப்படைப்பது? யாரிடத்திலாவது ஒப்படைப்பதைத் தவிர வேறு வழி கிடையாது. விவசாயிகளுக்குச் சங்கடம் இல்லாமல் இருப் பதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

பர்மா அகதிகளைப் பற்றித் தெரிவித்தார்கள். ஐம்பது ஆயிரம் ரூபாய் வரையில் வியாபாரம் செய்கிறவர்களுக்கு, பர்மா அகதிகள் என்று அறிவிக்கப்பட்டு, அரசாங்கக் கடன் வாங்கி வியாபாரம் செய்யும் அகதி களுக்கு, 3 ஆண்டுகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருக் கிறோம். இதை ஏன் ஒரு லட்ச ரூபாய் என்று உயர்த்தக் கூடாது என்று கேட்டார்கள். 1 லட்ச ரூபாய் என்று உயர்த்துகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள், அப்போதும் ஏன் 2 லட்ச ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தக் கூடாது என்று கேட்பார்கள். பர்மா அகதிகளைப் பற்றி எனக்கு அக்கறை உண்டு.

திருச்சியில் இருக்கிற பர்மா அகதிகள் படுகின்ற கஷ்டங்களைச் சொன் னார்கள். 5,000 ரூபாய் கடையில் ஸ்டாக் இருந்தது. அங்கே சென்ற அதிகாரி பத்தால் பெருக்கி 50,000 ரூபாய் என்று போட்டு, அதற்கு வரி கட்ட வேண்டும் என்று போட்டுவிட்டார்கள் என்று ஆதாரத்தை வைத் துச் சொன்னார்கள்.

அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறேன். தவறு செய்தால் அதி காரிகளை விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன். பர்மா அகதிகளுக்கு

இப்போது விற்பனை வரி இலாகாவிற்கும், வருமான வரி இலாகாவிற்கும் தொடர்பு இருக்கிறது. வருமான வரி அதிகாரிகளும், விற்பனை வரி அதிகாரிகளும் அடிக்கடிச் சந்தித்துப் பேசுவது உண்டு. இது அரசாங்க ரகசியம் என்றாலும் சொல்கிறேன். விற்பனை வரி அதிகாரிகள் கண்டு பிடித்தால், உடனே அதை வருமான வரி அதிகாரிகளுக்குச் சொல்கிறார்கள். வருமான வரி அதிகாரிகள் கண்டுபிடித்தால் அதை விற்பனை வரி அதிகாரிகளுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இதே போல் ரயில்வே இலாகாவிலும் தொடர்பு ஏற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தொடர்பு ஏற்பட்டால் வரி ஏய்ப்புக் குறையும். மொத்தமாக எவ்வளவு வரி கட்டுகிறார்கள் என்று அறிந்து, அந்த அளவுக்குச் சலுகை கேட்டாலும் அளிக்க முடியும். மற்ற பொருள்களைப் பற்றிச் சொன்னார்கள். எண்ணெய் போன்ற பொருள்கள் மீது விற்பனை வரி பெருகியிருக்கிறது. அவை வெளி மாநிலங்களுக்குப் போகிறது. வெளி மாநிலங்களுக்குச் செல்வதில் பல ஏய்ப்புகள் இருக்கிறது. இந்த மாநிலத்திலிருந்து வெளி மாநிலத்திற்கு விற்பதற்கு எடுத்துச் செல்கிறோம் என்று சொல்லாமல், அங்கே எங்களுக்கு ஒரு கொடௌன் இருக்கிறது, அங்கே எடுத்துக் கொண்டு போகிறோம் என்று சொல்லி அங்கே அனுப்புகிறார்கள். ஆனால் அங்கே உண்மையில் விற்பனை செய்கிறார்கள். அவர்களைப பிடிப்பதில் இந்தத் துறையில் இருக்கும் அதிகாரிகள் முயற்சி எடுத்துக் கொள்ளும்போது தான் வியாபாரிகளைக் கொடுமைப் படுத்துகிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்படி வரி ஏய்ப்பு இருக்கும்போது, நிச்சயமாக இந்த இலாக்கா கடுமையாக இருக்கத் தான் சொல்லியிருக்கிறோம். ஏனென்றால், வரி கட்டாமல் இருப்பவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும். அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்பதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

திரு கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது, பாலிஸ்டர் பைபருக்காக ஏன் சலுகை கொடுக்கிறீர்கள் என்று கேட்டார்கள். மூன்று சதவிகிதத்தை ஏன் இரண்டு சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள். மகாராஷ்டிரத்தில் இரண்டு சதவிகிதம் தான் இருக்கிறது. நமது மாநிலத்தில் 3½ சதவிகிதமாகப் போட்டு இருப்பதால், அங்கே இருந்து வாங்கி வந்தால் டிரான்ஸ்போர்ட் சார்ஜ் குறைவாக இருக்கிறது, 1 கே.ஜிக்கு — எனக்குக் கொடுத்திருக்கிற தகவல்படி பாலிஸ்டர் பைபர் ரூ, 60 ஆகிறது என்றால், டிரான்ஸ்போர்ட் சார்ஜ் 80 பைசாதான் ஆகிறது, அங்கே 80 பைசா கொடுத்து விட்டு வந்து விடலாம், நமக்கு வருகிற மொத்த வரியும் போய் விடுகிறது. ஆகவே அண்டை மாநிலங்களை ஒட்டி நாம் வரியைக் குறைக்க வேண்டிய அவசியம் ஆகிறது.

சமீபத்தில் கேரளா அமைச்சர் திரு பேபி ஜான் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களோடு பேசிய நேரத்தில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் முதலமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்திருப்பது, தென் மாநிலத்தைச் சேர்ந்த விற்பனை வரி இலாகா அமைச்சர்களையெல்லாம் கூப்பிட்டு ஒரு மாநாடு போடுங்கள். 4–5 மாநிலங்கள்— பாண்டிச்சேரி உட்பட — எல்லா மாநிலங்களிலும் உள்ள விற்பனை

வரி இலாக்கா அமைச்சர்களும் உட்கார்ந்து பேசி, ஒரே சீரான விற்பனை வரியைப் போட்டால் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு பொருள்களை கடத்திச் செல்லுவதும் குறையும், வரி ஏய்ப்பும் குறையும், அதைத் தடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நம் முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரத்தில் அப்படி ஒரு மாநாடு கூட்டுவதாக இருக்கிறோம். மற்ற மாநில அமைச்சர்களோடு உட்கார்ந்து கூடிப் பேசி ஒரு முடிவு எடுக்கலாம் என்று இருக்கிறோம். இப்போது கூட அதிகாரிகள் மட்டத்தில் கூடிப் பேசி வருகிறார்கள். தமிழ்நாடு, மைசூர், கேரளா போன்ற மாநிலங்களிலிருந்து அதிகாரிகள் வந்து பேசி வருகிறார்கள். என்னென்ன சலுகைகளை எப்படியெப்படிச் செய்ய முடியும் என்று முடிவு எடுக்கிறார்கள். இருந்தாலும் அமைச்சர்கள் சார்பில் கூடிப் பேசி முடிவு எடுப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு கருத்து திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் துவக்கி மாலை
வைத்த கருத்து, பெரும்பாலோர் ஆதரித்த கருத்து, புக்கீஸ் பற்றிய 6-30
தாகும். இது என்ன விவகாரம் என்று எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். விளக்கினால் ரகசியம் வெளியாகிவிடும், விளக்கமாட்டேன் என்றார். லைசென்ஸ் பெற்ற புக் மேக்கர்ஸ் இருந்தார்கள். குதிரையின்மீது பணம் கட்டும்போது ஒரு ரூபாய் கட்டினால், 10 ரூபாய், 7 ரூபாய் கொடுக்கிறோம் என்கிறார்கள். இந்த குதிரையின்மீது ஒன்றுக்கு 5 பங்கு, ஆறு பங்கு தருகிறோம் என்று அறிவித்து ரசீது போட்டால் அதற்கு வரி இருந்தது. ஆனால், அதில் என்ன செய்வார்கள் என்றால் பெரும் பணக்காரர்கள் ஒன்று என்று சொல்லுவார்கள். திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்தது போல் நடப்பதாக தகவல் வந்திருக்கிறது. ஒன்று என்றால் அது ஆயிரம் என்று வைத்துக் கொள்ளலாம், 10 ஆயிரம் ரூபாயாகவும் இருக்கலாம், அல்லது ஒரு லட்ச ரூபாயாகவும் இருக்கலாம். பயங்கர புள்ளி விவ்ரத்தைச் சொன்னார். 2 லட்சம் ரூபாய் கை ஜாடையாக சொல்லி பணம் கட்டி, 18 லட்சம் ரூபாய் சம்பாதித்துவிட்டதாக ஒருவர் பெயரைச் சொன்னார்கள். இப்படி 18 லட்ச ரூபாய்க்கு வரி இல்லாமல் போய் விட்டது. இது கள்ளப் பணமாக இருக்கிறது. புக் மேக்கர்ஸ் உட்கார்ந்திருக்கிறார்கள். பெரும் பணத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். இந்தக் குதிரையின் பேரில் 10 ரூபாய் கட்டினால், இந்தக் குதிரை வெற்றி பெற்றால் ஒரு பங்குக்கு இரண்டு பங்கு கொடுப்போம் என்பார்கள். இந்த புக்கீஸ் முறை வேண்டாம் என்று முடிவு எடுப்பதற்கு முன்னால் ஆழ்ந்து சிந்தித்தோம். ஓராண்டு காலத்துக்கு ரத்து செய்து எப்படியிருக்கிறது என்று பார்ப்போம் என்று முடிவு செய்தோம். இந்தியாவில் மற்ற மாநிலங்களில் ரத்து செய்யப்படவில்லை. தமிழ்நாட்டில் ரத்து செய்து பின்னால் மீண்டும் யோசிப்போம் என்று ரத்து செய்திருக்கிறோம். இதன் மூலமாக 75 அல்லது 80 லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்படும் என்று தெரிகிறது. இவ்வளவு நஷ்டம் என்றால், ஏன் ரத்து செய்தீர்கள் என்று கேட்கக்கூடும். நாம் ரத்து செய்வதன் மூலம் மற்ற மாநிலங்களும் ரத்து செய்யும் என்று எதிர்

கணக்கில் வரவு வைத்துக் கொள்வார்கள். இந்தமாதிரி அட்வான்ஸாக வசூலித்து அடுத்தாண்டு கணக்கில் அட்ஜஸ்ட் செய்துகொள்வார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதுபோல இதிலே தொல்லைகள் எதும் ஏற்படாமல் இருக்க அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வேன்.

திரு. நா. வீராசாமி : அமைச்சரவர்கள் பதிலளிக்கும்போது விவசாயிகள் உற்பத்திச் செய்கின்ற உணவுப் பொருட்களைக் கொண்டுபோகும்போது "சர்டிபிகேட்" வழங்கப்பட்டிருக்க வேண்டும் ; அதைப் பெறுவதில் சிரமம் இருக்கிறது ; கணக்கப்பிள்ளை, மணியம் சர்டிபிகேட் கொடுப்பதில் சங்கடங்கள் இருக்கிறது என்று சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். அதை மாற்றி அமைக்க பஞ்சாயத்து போர்டு தலைவர்களுக்கு சான்றிதழ் வழங்கக்கூடிய அதிகாரத்தை வழங்கலாமா என்று யோசிப்பதாகவும் சொன்னார்கள். இப்போது பணம் பெறாமல் சர்டிபிகேட் கொடுப்பது சட்டமன்ற உறுப்பினர்கள்தான். இங்கே கூட காலையிலே இரண்டு மணி நேரத்திற்குமேல் சர்டிபிகேட் கொடுக்கிறோம். ஆகவே, இந்த உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் சர்டிபிகேட் வழங்கினால் வசதியாக இருக்கும். அதனால் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் சான்றிதழ் வழங்கினால் போதும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்போது காண்டக்ட் சர்டிபிகேட் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் சட்டமன்ற உறுப்பினர்கள். ஆனால் அவர்கள் விளைபொருட்களுக்கு "சர்டிபிகேட் கொடுப்பது பொருத்தமாக இருக்காது. என்னென்ன பொருள்கள் விளைகின்றன என்று பார்த்து கணக்கப் பிள்ளை, மணியம் இவர்கள் சர்டிபிகேட் கொடுப்பதுதான் நியாயமாக இருக்கும். அவர்கள் சர்டிபிகேட் கொடுப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று சொன்னதால் அதைப்பற்றி யோசிக்கலாம் ; ஊராட்சி ஒன்றியத் தலைவர் கொடுத்தால் போதுமா என்று யோசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னேன். எல்லோரும் இப்படித் தவறு செய்கிறார்கள். அதனால் மாற்ற வேண்டுமென்று சொன்னால் யாரிடமாவது பொறுப்பை ஒப்படைத்துதான் தீரவேண்டும். அதை நல்லமுறையிலே பரிசீலனை செய்து பார்த்து முடிவு செய்யப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : வீராசாமி அவர்கள் இருப்பது சென்னையில், ஆற்காட்டிலே என்ன விளைகிறது என்பது அவருக்கு எப்படித் தெரியும் ?

திரு. நா. வீராசாமி: நான் இருப்பது சென்னையில்தான். இருந்தாலும் சர்டிபிகேட் இருப்பது ஆற்காட்டில்தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் இத்துடன் முடிவுற்றது. இப்பொழுது மானியக் கோரிக்கையின் மீது வாக்கெடுப்பு.

நிதிக்கோரிக்கை எண் 4-க்கு திரு. ஆர்.பொன்னப்பநாடார், திரு. கே எம்.. சுப்பிரமணியம், திரு. கே. எ. வகாப், திருமதி த. ந. அனந்த நாயகி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவை பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக்கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,11,31,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிந்து, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை மாலை 6-52 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

7. பேரவை முன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள்.

A. STATUTORY RULES AND ORDERS.

86. Notification issued with G.O. Ms. No. 2332, Rural Development and Local Administration, dated the 3rd November 1972, in regard to dissolution of the Talanayar Panchayat Union Council with effect on and from the 6th November 1972 and reconstitution of the Panchayat Council with effect on and from the 6th March 1973. [*Laid on the Table of the House under section* 199 (2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958.]

87. Notification issued with G.O. Ms. No. 2190, Home, dated the 21st August 1972 in regard to an amendment to Rule 70 of the Tamil Nadu Children Rules, 1940. [*Laid on the Table of the House under section* 44 (4) *of the Tamil Nadu Children Act*, 1920 (*Tamil Nadu Act IV of* 1920).]

B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

@ 136. Policy Note on Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. (English and Tamil.)

@ 137. Policy Note on Demand No. 4—General Sales Tax and Other Taxes and Duties. (English and Tamil.)

@ 138. Commercial Budget on Dairy Development Department, 1973-74.

@ 139. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill 1973 (L. A. Bill No. 6 of 1973) with Annexure.

@ 140. Annexure to the Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 5 of 1973).

141. Annexure to the Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 4 of 1973).

@ Despatched to Members on 23-3-73.

இணைப்பு I.

(500-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பை காண்க.)

மானியக் கோரிக்கை 10—பால் வழங்குத் திட்டங்கள்

1973–74-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு—ரூ. 2,02,28,900.

பால் பண்ணை வளர்ச்சித் துறை—கொள்கை விளக்கக் குறிப்பு.

உணவு வகைகளில் ஊட்டச் சத்து நிறைந்தது பால். சிறு குழந்தைகள் முதல் முதியோர் வரை நாள்தோறும் பால் உண்டு வருவது அவர்களின் நல்வாழ்விற்கு உறுதுணையாக இருக்கும் என்பது அனைவரும் அறிந்ததாகும். எனவே மக்கள் நல்வாழ்விற்கு உறுதுணை பயக்கும் பாலையும், பாலிலிருந்து கிடைக்கும் மற்ற ஊட்டச் சத்து மிக்கப் பொருள்களையும் எளிய மக்களும் வாங்கி உண்ணும் வகையில் குறைந்த விலையில் கிடைப்பதற்கு வழிவகை செய்தாக வேண்டும் என்ற அடிப்படையில்தான் தமிழக பால் வளர்ச்சிப் பெருக்குத் துறை செயல்பட்டு வருகிறது.

இந்திய துணைக் கண்டத்தின் பெரும்பகுதி மக்கள் விவசாயத்தை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் ஆண்டு முழுவதற்கும், விவசாயத் துறையில் வேலையில்லாக் காரணத்தாலும், வாழ்க்கைக்கு தேவையான ஊதியம் கிடைக்காத காரணத்தாலும், விவசாயப் பெருங்குடி மக்கள் பால் வளர்ச்சித் தொழிலை ஒரு துணைத் தொழிலாக மேற்கொண்டுள்ளனர். நாடெங்கும் பரவிக் கிடக்கும் இவ் விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்யும் பாலினைச் சேகரித்து நகர்ப்புறங்களில் உள்ள மக்களுக்கு வினியோகிப்பதையும், உற்பத்தியாளர்களுக்கு ஒரு நியாயமான விலை கிடைப்பதற்கு வகை செய்வதையும் பால் பெருக்கு வளர்ச்சித் துறை தனது தலையாய பணிகளாகக் கொண்டு செயல்பட்டு வந்துள்ளது.

சுற்றுப்புற சூழ்நிலை காரணமாக பால் வெகுவிரைவில் கெட்டுப் போகக்கூடியதாகையால் பால் கறந்த நிலையில் தொடங்கி அது நுகர்வோர் கரத்தை அடையும் வரை மிகவும் கவனமாக அதைக் காப்பாற்ற வேண்டியுள்ளது. இதனை உரிய வகையில் செய்திடவும், கிராமப் புறங்களில் உற்பத்தியாகும் பாலைச் சேகரித்தல், பதப்படுத்துதல், அனுப்புதல், விற்பனை செய்தல் போன்ற பாற்பண்ணையின்பாற்பட்ட வணிக வளர்ச்சிப் பணிகளைத் திறம்படச் செயல்படுத்தவும், அதே நேரத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து கொடுப்பதற்காகவும் தமிழ்நாடு அரசு சென்ற ஆண்டில் "தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்" ஒன்றினை அமைத்தது. இக் கழகம் தனது முதற்கட்ட பணியாக சென்னையை அடுத்துள்ள மாதவரம் மத்திய பால் பண்ணையின் நிருவாகப் பொறுப்பினை மேற்கொண்டது. அப்பால் பண்ணைக்குத்

தொல்லை இருக்கக் கூடாது, இந்த அளவுக்குச் செய்யக் கூடாது என்பதை அதிகாரிகள் இதன் மூலம் தெரிந்து கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். பர்மா அகதிகளுக்கு மேற்கொண்டு சலுகைகளை அளிக்க முடியுமா என்று யோசித்துத் தான் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நண்பர் டாக்டர் ஹாண்டே பேசும்போது பல நல்ல யோசனைகளைச் சொன்னார்கள். மதராஸில் 60 கோடி ரூபாய்க்குப் பக்கமாக வரி வசூலிக்கிறார்கள். இதை என் இன்னும் கொஞ்சம் லைட்டர் (Ligter) டிவிஷன் ஆக்கக் கூடாது என்றார்கள். நல்ல யோசனைதான். தனிநபர் குழு அறிக்கை வந்த பிறகு இது யோசிக்கப்படும். எப்படி குறைப்பது என்று அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

இன்னொன்று, அந்த இலாக்காவுக்குப் போதுமான இடவசதி கிடையாது. பொதுவாக சென்னையில் இருக்கிற இந்த இலாக்காவின் அலுவலகங்கள் எல்லாம் வாடகைக் கட்டிடத்தில் தான் இருக்கிறன்றன. இந்த இலாக்காவுக்காக தனியாக கட்டிடம் கட்ட வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக விரைவில் இடம் பார்க்கச் சொல்லியிருக்கிறோம். தனித் தனியாக சோனுக்கு (Zone) ஒரு இடம். மத்திய யூனிட் இலாக்காவுக்கு வேறு கட்டிடம். மொத்தமாக ஒரு பெரிய கட்டிடம் கட்ட அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அதையும் கட்டினால் வியாபாரிகளுக்கு வசதியாகவும், அதிகாரிகளுக்கு வசதியாகவும் இருப்பதற்கு வகை ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதிகாரிகளுக் கெல்லாம் டிரெயினிங் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். இது யோசிக்க வேண்டிய ஒன்று.

இப்போது நான்கு பிரிவுகளாக இருக்கிறார்கள். இன்ஸ்பெக்ஷன் விங், பிளையிங் ஸ்குவாட் என்று நான்கு விதமாக இருக்கிறார்கள். நான்கு விதமாக இப்போது தொல்லை கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த நான்கு பிரிவுகளும் தனித்தனியாக சோதனை போட்டாலும், வரி விதிக்கிறவர் ஒருவர் தான். ஸ்தலத்தில் இருக்கிற டெபுடி கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸர் அல்லது அசிஸ்டெண்டு கமர்சிஷியல் டாக்ஸ் ஆபீசர் தான் வரி விதிக்க வேண்டும். யார் சோதனை போட்டாலும் அவர்களிடத்தில் கொடுத்துவிட வேண்டும். இவர்கள் தான் வரி விதிக்க வேண்டும் என்று இருக்கிறது. வியாபாரிகளுக்கு அதனால் தொல்லை ஏற்படாது. பப்ளிக் ரிலேஷன்ஸ் அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது எந்த வகையில் சாத்தியம் என்று தெரியவில்லை. அத்தகைய ஒரு அதிகாரி தேவை தானா என்று பார்த்து அதன் பிறகு செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இந்த இலாக்காவுக்குத் தேவையில்லை என்று சொன்னார்கள். டிபார்ட்மெண்டில் இருப்பவர், டிபார்ட்மெண்ட் ஹெட்டாக இருக்கலாம் என்று சொன்னார்கள். இப்போதும் அத்தகைய அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுக்கு வழிகள் இருக்கின்றன.

நிர்வாகத்தைப் பொறுத்த மட்டில் ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டால் தான் வசதியாக இருக்கும். இது நிர்வாகத்தில் இருப்பவர்களுக்குத் தெரியும். ஸ்தலத்தில் இருக்கின்ற அதிகாரிகளுக்கு உத்தியோக உயர்வு வேறு விதத்தில் எல்லாம் இருக்கும்போது, இதை நாம் எடுத்து விடுவது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து சினிமாக் காட்சி டிக்கெட் மோசடி பற்றி திரு. வகாப் அவர்களும், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் சொன்னார்கள். டிக்கட் மோசடி ஏராளமாக நடக்கிறது. அரசுக்கு அது தெரிய வந்திருக்கிறது. சராசரியாக ஒரு கொட்டகைக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்பதைக் கணக்கிட்டுச் சொன்னார்கள். இப்போது டூரிங் சினிமா கொட்டகை வைத்திருப்பவர்கள் ஒரு நாளைக்கு 7 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். மிச்சம் உள்ள பணம் முழுவதும் என்ன ஆகிறது என்று நீங்களே தெரிந்து கொள்ளலாம். எனவே, அவர்கள் ஏய்ப்பு செய்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. அதைத் தடுக்க பல நடவடிக்கைகளைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதைப் பற்றி நடவடிக்கை எடுப்பது புதிதாக இருப்பதால் தீர யோசித்துத் தான் செய்யவேண்டும். அதைப்பற்றிப் பரிசீலித்துக் கொணடிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சாராயத்திற்கு வரி போடுவதைப்போல கள்ளுக்கும் ஏன் வரிப் போடக் கூடாது என்று கேட்டார்கள். கள்ளுக்கு வரி போடுவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு மரத்திலிருந்து எவ்வளவு கள் இறக்கப்பட்டது, எத்தனை பானைகளில் இறக்கப்பட்டது என்பதையெல்லாம் அதிகாரிகள் மூக்கைப் பிடித்துக் கொண்டு சோதித்துப் பார்ப்பது கஷ்டமாக இருக்கிறது. அதனால்தான் கள்ளுக்கு வரி விதிக்கப்படவில்லை. ஆனால் சாராயத்திற்கு அது உற்பத்தியாகின்ற இடத்திலேயே வரி போடப்பட்டுவிடுகிறது. அது சுலபமாக இருக்கிறது. அதற்கும் பல முனை வரி போட்டால் சிரமமாகத்தான் இருக்கும். அதனால் ஒருமுனை வரியாக் எவ்வளவு போட முடியுமோ அவ்வளவு அதிகமாகச் சாராயத்திற்கு வரி போட்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்டை மாநிலங்களில் இருப்பதைப்போல நமது மாநிலத்திலும் பல பொருட்களுக்கு வரியை நீக்க வேண்டும் அல்லது குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். பல வரிகளை நாமும் குறைத்திருக்கிறோம். வெளிநாடுகளுக்குப் போகக்கூடிய பொருட்களாக இருந்தால் வேறு மாநிலங்களில் சலுகை அளிக்கப்பட்டிருப்பதைப் போலவே நம்முடைய மாநிலத்திலும் சலுகை அளித்திருக்கிறோம்.

உதாரணமாக மகாராஷ்டிர மாநிலத்தில் "பாடி பில்டிங்" செய்வதற்கு வரி இல்லை. நமது மாநிலத்தில் 14 சதவிகிதம் வரி போட்டிருந்தோம். அண்மையில் இலங்கையிலிருந்து டி.வி.எஸ். கம்பெனிக்கு 200 பஸ் பாடி கட்ட வேண்டுமென்று ஆர்டர் கொடுத்தார்கள். அதற்கு வரி விலக்கு வேண்டுமென்று கேட்டார்கள். எப்படி வரி விலக்குக் கொடுக்க முடியும் என்று நான் கேட்டேன்.

3. கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள் ஒன்றியங்கள் ஆகிய வற்றிற்கான ஊர்திகள், பால் குளிர்விக்கும் இயந்தி ரங்கள் மற்ற சாதனங்கள், மற்றும் பால்பண்ணைக் கான கட்டிடங்களுக்கான உதவித் தொகையாக. — 4·00

4. கூட்டுறவு பால் வழங்கு சங்கங்களின் நிருவாக உதவித் தொகைக்காக. — 1·75

மேற்காணும் உதவிகளேயன்றி, பால் உற்பத்தி குறைந்த காலங்களில் பால் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக என்று மாதவரம் பால்பண்ணைக்கும் துறையின் பிற பால் வழங்கு திட்டங்களுக்கும் பால் வழங்கு வோருக்கு அவர்கள் இயல்பாக வாங்கும் விலைகளுக்கு மேல் ஊக்கவிலை என்ற அடிப்படையில் லிட்டர் ஒன்றிற்கு 10 காசு அதிகமாகத் தரப் படுகிறது.

தொழில் நுட்ப உதவிகள்.

"பால் பெருக்க முனைப்புத் திட்டத்தின்" கீழ் தொழில் நுட்பத் தேவைப் பொருள்கள் பெருக்கத் திட்டம் ஒன்று இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பால் உற்பத்திச் செய்யும் உழவர்களுக்கு அவர்களுடைய இல்லங்களிலேயே கால்நடை மருத்துவ உதவிகள் சென்றடையவும், கால்நடைகளின் சிறந்த இனப்பெருக்கத்திற் கான வசதிகளும் கிடைக்கவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆம்பூர், சேலம், உதகை, கோடைக்கானல், திருச்சி முதலிய இடங்களில் நல்லவகையான இனப்பெருக்கத்திற்கு உதவுவதற்காக வளர்க் கப்பட்டு வரும் பொலி காளைகளின் விந்து பால் பண்ணை உழவர்களுக்கு கிடைக்குமாறு வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உறுதுணை பயக்கவென்று வெளிநாடுகளிலிருந்து அயல் இனக் காளைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இனப் பெருக்கத்திற்கு உதவியளிக்கத் தக்க வகை யில் ஜெர்சி இனப் பசுக்கள் 5, ஜெர்சி இனக் காளைகள் 2, ஆகியவை அடங்கிய மூலமந்தையொன்றையும், ஜெர்சி இனக்காளைகள் 15 கொண்ட மற்றொரு மந்தையையும் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதோடு மாநகர்க் கால்நடைகளைச் சுற்றுப்புற பகுதிகளில் வசதியுள்ள இடங் களுக்கு அகற்றவும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அப்படி அமை யும் இடங்களுக்கு கால் நடைகளுக்கான இனப் பெருக்க வசதிகளும், தீவன வசதிகளும், நிருவாக வசதிகளும் நீட்டிக்கப்படும்.

ஊர் நல உதவியாளர்கள் பயிற்சி.

உலக உணவுத் திட்டம் எண். 348 என்று முன்பு தீட்டிய திட்டத்திற்கு உலக உணவுத் திட்டத்தின்கீழ் உதவப்பட்ட நிதி வசதி தற்போது கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள் மூலமும், ஒன்றியங்கள் மூலமும் ஊர்நல உதவியாளர்கள் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்தல், பாற்பண்ணை

நிருவாகம் குறித்த பயிற்சிப் பெறுதலுக்காக உபயோகிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு 1971–72-ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப்பட்ட 51 பணியாளர் களைக் கொண்ட முதல் அணியினர் தொழில்நுட்பத் தேவைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக பால்வழங்கு கூட்டுறவு சங்கங்கள் ஒன்றியங்கள் ஆகியவற்றில் நியமிக்கப்பட்டுள்ளனர். மற்றொரு அணியினரான 48 பேர் 1973 மார்ச் திங்கள் இறுதிக்குள் தங்கள் பயிற்சியை முடிப்பார்கள். இவ்வகையான ஊர்நல உதவியாளர்களுக்காக ஆகும் ஊதியம், படி முதலிய செலவுகள் அனைத்தும் உலக உணவுத் திட்டம் எண். 348-ன்கீழ் பெறப்பட்ட நிதியிலிருந்து படிப்படியாகச் சரிக்கட்டப்படுகிறது. இந்த நிதி உதவி முதலாண்டில் 100 சதவீதமாகவும், இரண்டாமாண்டில் 66⅔ சதவீதமாகவும், மூன்றும் ஆண்டில் 33⅓ சதவீதமாகவும் இருக்கும்.

கால்நடை தீவன உற்பத்தி.

உலக உணவுத் திட்டம் 348-ன்கீழ் இலவசமாகக் கிடைக்கும் மக்காச் சோளம், மற்றும் சொர்க்கம் என்கிற சோளவகை இவற்றைக் கொண்டு கால்நடைக்கான தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இத் தீவனம் பால்பண்ணையிலுள்ள உரிமதாரர்களுக்கும், பால்பண்ணைத் துறைத் திட்டங்களுக்கு நியாய விலையில் பால் வழங்கிடும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. ஒருமணி நேரத்தில் 4 முதல் 6 டன்வரை தீவனம் கலக்கும் இயந்திரமொன்று தற்போது மாதவரத்தில் நிறுவப்பட்டு வருகிறது. மூன்று திங்கள் காலத்திற்குள் அது உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பால் பெருக்க முனைப்புத் திட்டப் பணிகள்.

பால் பெருக்க முனைப்புத் திட்டத்தின் முதல் கட்டமாக மாதவரத்தி லுள்ள மத்தியப் பால்பண்ணையின் செயல்திறன் நாளொன்றுக்கு 50,000 லிட்டரிலிருந்து 90,000 லிட்டர் பதப்படுத்தப்பட்டு வழங்குவதற்கான வகை யில் உயர்த்தப்பட்டுள்ளது. பாற்பண்ணையில் மேற்கொள்ளப்பட்டுள்ள கூடுதல் விரிவாக்கப்பணி முடிவுறும் நிலையில் நாளொன்றுக்கு மத்தியப் பால்பண்ணையில் செயல் திறன் பெருக்கப்பட்டு நாளொன்றுக்கு 1,25,000 லிட்டர் பால் வழங்கும் அளவுக்கு வளர்ச்சியடையும் என்பதை மகிழ்ச்சி யோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் இப் பால்பண்ணை 1969–70-ல் நாளொன்றுக்கு 49,456 லிட்டர் பாலையும், 1970–71-ல் நாளொன்றுக்கு 57,400 லிட்டர் பாலையும், 1971–72-ல் நாளொன்றுக்கு 66,310 லிட்டர் பாலையும் வழங்கி வந்தது என்பதையும் குறிப்பிட விரும்பு கிறேன். இதேபோல பால் வழங்கும் "பால் விற்பனை நிலையங்களின்" எண்ணிக்கை 1971–72-ல் 222 என்றிருந்த நிலை மாறி தற்போது 250 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் பால் வாங்குவோரின் பயனைக் கருதி சென்னை மாநகரில் பால் வழங்குவதற்கான அட்டைகளை விற்பனை செய்யும் நிலையங்கள் ஏற்கனவே 7 மண்டல அலுவலகங்களுடன் செயல் பட்டிருந்த நிலையை மாற்றி தற்போது 3 மண்டல அலுவலகங்கள் ஐயனாவரம், ராயபுரம், இராஜா அண்ணாமலைபுரம், ஆகிய இடங்களில் திறக்கப்பட்டு விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

மகாராஷ்டிரத்தில் இதுபோன்ற தொழில்களுக்கு என்று வரி விதிக்கப் படவில்லை. இங்கே மட்டும் வரி விதிப்பதாக இருந்தால் தொழில் நமது மாநிலத்தைவிட்டுப் போய்விடும் என்றார்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களுக்கு வரி விலக்கு அளித்தால் இங்கே தொழில் பெருகும், வேலைவாய்ப்புக் கிடைக்கும், தொழிலாளர் களுக்கு நல்ல ஊதியம் கிடைக்கும் என்று சொன்னார்கள்.

ஆகவே, இருக்கின்ற நிலைமைகளை உத்தேசித்துப் பார்த்து, நாமும் மற்ற மாநிலங்களைப்போல இப்படிப்பட்டத் தொழில்களுக்கு வரிவிலக்கு அளித்திருக்கிறோம். மேலும் எந்தெந்தத் தொழிலுக்கு வரி விலக்கு அளிக்க முடியுமோ அவைகளுக்கு எல்லாம் விலக்களிக்கும் முறையில் வரிவிதிப்புக் கொள்கையை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, "ராஷனலைசேஷன் ஆஃப் டாக்ஸ்" பற்றிச் சொன்னார்கள். அதை யெல்லாம் பரிசீலித்து எவ்வாறு செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். தீர யோசித்து முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை விளக்குவதற்காக இந்த மானியக் கோரிக்கையின் மீது சம்பிரதாயத்திற்காகக் கொடுத்திருக்கும் வெட்டு தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்று மானியத்தை நிறைவேற்றித் தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பங்களாதேஷ் வரியை எப்ரல் 1-ந் தேதியிலிருந்தும் மத்திய அரசாங்கம் வாபஸ் பெற்றுக்கொண்டார் கள். அதைப் போல இங்கேயும் போட்டிருக்கிற வரியைக் குறைக்க நட வடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நாம் பங்களாதேஷ் வரியைப்பற்றி இங்கே விவாதிக்க வில்லை . விற்பனை வரியைப்பற்றித்தான் விவாதித்தோம். பங்களாதேஷ் வரியைப் பற்றி ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தமிழக அரசின் வருவாயைப் பெருக்குவதற்காகத்தான் அந்த வரியைப் போட்டிருக்கிறோம் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அதைத் தள்ளுபடி செய்ய வேண்டிய தேவை இல்லை என்று கருதுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM :—When the Hon. Minister was saying about book-makers, he was saying that if the figure given is Rs. 1,000 it is calculated as Rs. 10,000. When there are bookies it used to be there. For the information of the Hon. Minister, I would say that when they walk they would just show their two fingers. That means it is Rs. 2 lakhs and it is known only to the backer and the bookee. I would like to know what is the surcharge that is being collected on the Rs. 118 lakhs. What is the expectation ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்களின் வினாவிற்கான புள்ளிவிபரம் என்னிடத்தில் இல்லை. அவர்கள் சொல்லுகின்ற கெடுதல்கள் ஏற்படுகின்றன என்பதை ஒப்புக் கொள்கிறோம். அரசு ஓராண்டு காலத்திற்கு பரீட்சார்த்தமாக "புக் மேக்கர்ஸை" ரத்து செய்திருக்கிறது. அதனால் ஏதாவது பாதிப்பு ஏற்படுமானால் அது பெரும் பணக்காரர்களுக்குத்தான் ; ஏழைகளுக்கு அல்ல.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: அவர்கள் ஒரு 10 பேர்கள்தான் இருப்பார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பணக்காரர்கள் பாதிக்கப்படுவது பற்றி நாம் கவலைப்படவில்லை. ஆகவே, இந்த ஓராண்டு காலம் எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து மேற்கொண்டு முடிவு செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: "காம்பொனன்ட்ஸுக்கு" $2\frac{1}{4}$ சத விகிதம் வரி இருந்தது. அது இப்போது 3 சதவிகிதமாகப் போடப்பட்டிருக் கிறது. அதை பழையபடி $2\frac{1}{2}$ சதவிகிதத்திற்கோ அல்லது 2 சதவிகிதத் திற்கோ கொண்டுவர அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நாங்கள் பொதுவாக இந்த வரி விதிப்பு முறையை எப்படி நல்லமுறையிலே மாற்றி அமைப்பது என்பதைப் பற்றித் தனி நபர் குழுவிடம் யோசனைக் கேட்டிருக்கிறோம். அவர்களுடைய அறிக்கை வந்த பிறகு அதைப்பற்றி பரிசீலனை செய்து அரசு முடிவு செய்யும்.

திரு. வ. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, செக்ஷன் 7-ல் நிர்ண யிக்கப்பட்ட வரியைப் பற்றிச் சொன்னேன். ரவா, கோதுமை, சர்க்கரை, பருப்பு வகைகளை விற்பனைச் செய்வதை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எடுத்துக் கொண்டுள்ளது. ஆனால் ஏற்கெனவே செக்ஷன் 7-ல் விதிக்கப் பட்ட வரியே இப்போதும் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இந்தப் பொருள்களை எடுத்துக் கொள்வதற்கு முன் னால் ஒரு லட்சம் ரூபாய்க்கு வியாபாரம் நடைபெறுகிறது என்றால் இப்போது 50,000 ரூபாய்க்குத்தான் வியாபாரம் நடைபெறுகிறது. ஆகவே, அந்த அளவுக்கு வரியைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதைப் பற்றி பதில் சொல்ல வேண்டாம் என்றுதான் விட்டுவிட் டேன். அவர்கள் சொல்வதைப் பார்த்தால் ஒரு லட்சம் ரூபாய் வியாபாரத் தில் இந்த ரவா, கோதுமை, சர்க்கரை, பருப்பு வகைகள் மட்டும் 50,000 ரூபாய்க்கு இருந்திருக்கிறது. இது நம்பப் கூடியதாக இல்லை. அப்படியே இருந்தாலும் எந்த அளவுக்கு விற்பனை செய்கிறார்களோ அந்த அளவுக்குத் தான் வரி போடுகிறார்கள். இன்கம் டாக்ஸ் டிப்பார்ட்மெண்டிலே ஒரு முறை உண்டு. சென்ற ஆண்டு கட்டிய மாதிரியே அடுத்தாண்டும் கட்ட வேண்டும். பணத்தைக் கட்டிய பிறகு இறுதியில் கணக்குப் பார்த்து, அதிகமாகக் கட்டியிருந்தால் கையில் கொடுக்க மாட்டார்கள், அடுத்தாண்டு

[1973 மார்ச் 26

சொந்தமான போக்குவரத்து மற்றும் பங்கீட்டுப் பிரிவுகள், கோவை மாவட்டம், ஈரோட்டில் இப்பால் பண்ணைக்குப் பால் வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள பால் வழங்கும் அமைப்புகள், அடுத்து செங்கை, வடாற்காடு, தென்னாற்காடு, சேலம், தருமபுரி, கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்களின் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள பாற்பண்ணையின் துணை அமைப்புகளான பால் குளிர வைக்கும் நிலையங்கள், பால் குளிர வைக்கும் இயந்திரங்கள் ஆகிய அனைத்தையும் 1—7—1972 முதல் இக் கழகம் மேற்கொண்டது. "பால் பெருக்க முனைப்புத் திட்டத்தின்" (Operation Flood) பாற்பெருக்குத் திட்டங்களையும் இக்கழகம் செயல் படுத்தும், இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்திய பால் பண்ணைக் கழகம் ரூ. 8·87 கோடியை தாற்காலிகமாக ஒதுக்கியுள்ளது. இந்தத் தொகை முழுவதும் 1972-ம் ஆண்டு தொடங்கி ஐந்தாண்டு காலத்தில் 70 சதவீதம் கடனாகவும் 30 சதவீதம் மானியமாகவும் வழங்கப்படும். "பால் பெருக்க முனைப்புத் திட்டத்தின்" கீழ்ப் பின்வரும் திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இத்திட்டத்தின் ஒவ்வொரு வகைக்கும் செலவிடப்பட உள்ள தொகை பற்றிய விவரமும் இதன்கீழ் கொடுக்கப் பட்டுள்ளது.

	(ரூபாய் இலட்சத்தில்.)
1 சென்னை மாதவரம் பாற்பண்ணையை விரிவாக்குதல்.	27·00
2 புதிய பாற்பண்ணையை ஏற்படுத்துதல்	200·00
3 பாலைச் சேகரித்து வழங்கும் பாற்பண்ணைகளை உருவாக்கிடுதல்.	213·00
4 உழவர்களுக்குத் தொழில் நுட்பத் தேவைப் பொருள்களை வழங்குதல்.	293·00
5 சென்னை மாநகரிலுள்ள கால்நடைகளைப் புறநகர்ப் பகுதிகளுக்கு அனுப்புதல்.	154·00
	887·00

தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம் தற்போது மேற்கொள்ளாத மாதவரத்திலுள்ள கால்நடைப் பண்ணையையும் மதுரையில் செயல்பட்டு வரும் பாற்பண்ணைத் திட்டத்தையும், தொடர்ந்து பால்பண்ணை வளர்ச்சித் துறையே நிருவகித்து வருகிறது. மேலும் இவ்வளர்ச்சித் துறை, தஞ்சை, திருச்சிராப்பள்ளி, மதுரை, முகவை, நெல்லை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள பாற்பண்ணை வளர்ச்சி, பால் சேகரித்தல் போன்ற திட்டங்கள் குறித்துப் பொதுப் பொறுப்பினை வகிப்பதோடு, மாநிலம் முழுவதிலுமுள்ள கூட்டுறவு பால்வழங்கு சங்கங்களின் மீது பொது மேற்பார்வை செலுத்தி அவற்றை நிருவகித்து வரும்.

1973 மார்ச் 26]

பால் உற்பத்தி-பால் பண்ணை வளர்ச்சித் துறையின் ஆணையரே தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகத்தின் நிருவாக இயக்குநராகவும் உள்ளார். மாநிலம் முழுவதிலுமுள்ள கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள், ஒன்றியங்கள், ஆகியவற்றின் பதிவாளராகவும் அவர் பணியாற்றி வருகிறார். இதன் காரணமாக ஒருபுறம் தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், பால்பண்ணை வளர்ச்சித் துறை ஆகியவற்றின் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பதோடு மற்றொருபுரம் பல்வேறு கூட்டுறவுப் பால் வழங்கு சங்கங்களை பால் வளர்ச்சித் துறையின் வளர்ச்சித் திட்டங்களோடு ஒருங்கிணைக்கவும் அவரால் இயலுகிறது.

பால் உற்பத்தியாளர், விவசாயிகளுக்கான உதவிகள்.

கிராமப் புறங்களில் உள்ள உழவர் பெருங்குடி மக்களில் பெரும்பகுதியினருக்கு பாற்பண்ணை துணை வருவாய்க்கு வழி செய்கிறது. மாதவரத்திலுள்ள பால் பண்ணையைச் சார்ந்த மாட்டுப் பண்ணை, பால் பண்ணையின் உரிமம் பெற்றவர்கள், மற்றும் கிராமப் புறங்களில் உள்ள தனிப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து தற்போது பால் பெறப்படுகிறது. எனினும் இது பால்துறையின் மூலம் வழங்கப்படும் பாலில் மிகக் குறைந்த அளவேயாகும். கிராமப்புறங்களில் உற்பத்தியாகும் பால் சேகரிப்பு பெருமளவுக்கு அங்குள்ள கூட்டுறவுப் பால் வழங்கு சங்கங்கள் மூலமாகவே நடைபெறுகிறது என்பதோடு வழங்கப்படும் பாலில் இது பெரும் பகுதியாகும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். கிராமப் புறங்களிலும், புறநகர்களிலும் இத்துறையின் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கான தற்போது பல்வகை உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாகவும், சிறப்பாகவும் பாலைச் சேகரித்தல், பதப் படுத்துதல், விற்பனை செய்தல், ஆகியவற்றோடு, பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ உதவியளித்தல், செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்தல், அக்கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களை நியாயமான முறையில் சீரான அளவில் கிடைக்க வகைசெய்தல். உற்பத்தியாளர்களுக்கும், கூட்டுறவு பால் வழங்கு சங்கங்களுக்கும், கடனாகவும், உதவி தொகையாகவும் நிதி வசதி செய்தல் போன்ற வசதிகள் பால் உற்பத்தித் துறையின் மூலம் அளிக்கப்படுகின்றன. இந்த வகையில் 1973–74-ஆம் ஆண்டிற்காக திட்ட ஒதுக்கீடாக ரூ. 39·75 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகை கீழ்க்காணும் வகையில் பகிர்ந்தளிக்கப்படும்.

	(ரூபாய் இலட்சத்தில்.)
1 கறவை மாடுகள் வாங்குவதற்காக கடனாக அளிக்க இருக்கும் தொகை.	30·00
2 கூட்டுறவுப் பால்வழங்கு சங்கங்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றின் மூலதனத்தில் அரசின் பங்குத் தொகையாக செலவிட.	4·00

இரண்டாவது பால்பண்ணை.

சென்னை மாநகரில் உறையும் மக்கள் தங்களின் அன்றாடத் தேவைக்காக நாளொன்றுக்கு 4 லட்சம் லிட்டருக்கு அதிகமாக பால் பல்வேறு வழிகளில் வாங்கப்படுகிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே மாதவரம் பால் பண்ணை விரிவாக்கப்பட்ட பிறகும்கூட நகர மக்களின் பால் தேவைப் பெருமளவுக்கு நிறைவு செய்ய மேலும் அதிக அளவிலான பால் உற்பத்தியை மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே நாளொன்றுக்கு 2,00,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யும் திறனுடைய இரண்டாவது பால் பண்ணை ஒன்றினை அம்பத்தூரில் தொழிற்பேட்டைக்கு அருகில் ஏற்படுத்த தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது. இந்த இடத்தில் இப்பால்பண்ணையை உருவாக்குவதன் மூலம் இப் பண்ணைக்குத் தேவைப்படும் சாலை வசதி, இரயில் வசதி மற்றும் போக்கு வரத்து வசதிகள் அனைத்தும் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாவது பால்பண்ணையை உருவாக்கும் பணியை தேசிய பால்பண்ணை வளர்ச்சி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் 1974-ஆம் ஆண்டு முடிவுக்குள் இப்பாற்பண்ணை அமைக்கும் பணியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பால்பண்ணைக்கு என்று தொலைவிடங்களிலிருந்தும் பால் பெற வசதியாக இருக்கும் வகையில் ரயில் வண்டித் தொட்டிகள் மூலம் பால் வந்து சேர தனி இருப்புப்பாதை வசதியும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருமணி நேரத்தில் 5,000 லிட்டர் பாலை உலர்த்தும் திறனுடன் நாளொன்றுக்கு 1,00,000 லிட்டர் பாலைப் பதப்படுத்தும் வகையில் ஈரோட்டில் பாலைபண்ணை ஒன்றைத் தொடங்க தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் கருதியுள்ளது. அதேபோல வடாற்காடு மாவட்டம் ஜோலார்பேட்டை—வாணியம்பாடி பகுதியில் நாளொன்றுக்கு 60,000 லிட்டர் பாலைப் பதப்படுத்துவதற்கு மற்றொரு துணைப் பாற்பண்ணையை ஏற்படுத்தவும் இக்கழகம் திட்டமிட்டுள்ளது. அதிகமாக பால் கிடைக்கும் காலங்களில் உபரிப்பாலைப் பயன்படுத்தி, பால் குறைவாகக் கிடைக்கும் காலங்களில் உபயோகித்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் ஒருமணி நேரத்தில் 10,000 லிட்டர்பால் உலர்த்தும் திறனுள்ள பால் மாவுத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை மதுரையில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. வடாற்காடு மாவட்டம் வேலூருக்கு அருகில் தற்போது செயல்பட்டு வரும் பால் குளிர வைக்கும் நிலையம் பால் பதப்படுத்தும் நிலையமாக மாற்றப்பட்டு வருகிறது.

பாலை நிரப்பி வழங்கும் முறையைக் கொண்டுவருவதற்கான திட்டங்களும் செயற்குறிப்பில் உள்ளன.

மதுரை பால் பண்ணை.

மதுரையில் அமைந்துள்ள பால்பண்ணை தற்போது நாளொன்றுக்கு 23,000 லிட்டர் பாலை வழங்கி வருகிறது. இந்த அளவினை மேலும் விரிவாக்கத் திட்டம் உள்ளது. மருத்துவமனைகள், உணவகங்கள், மாணவர் விடுதிகள் முதலியவற்றிக்கு பால் வாங்கப்படுவதைத் தவிர வீட்டுப் பயனுக்காகப் பால் வாங்குவோரின் நலன் கருதி 72 பால் விற்பனை நிலையங்கள் மூலம் தற்போது மதுரையில் பால் வழங்கப்பட்டு வருகிறது. குறைந்த வருவாய் உள்ள வர்களுக்கும், திங்கள் ஒன்றுக்கு ரூ. 300வரை வருவாயுள்ள ஏழை எளிய மக்களுக்கும் குறைந்த விலையில் தரமான பால் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 1970–71-ல் 4,251 குடும்பங்களும் 1971–72-ல் 5,742 குடும்பங்களும் பயனடைந்தன. தற்போது 6,965 குடும்பங்கள் பயனடைந்து வரும் வகையில் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் திட்டமிட்ட வகையில் மதுரையில் பால் மாவுத் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவிய பிறகு மதுரை பால்பண்ணையின் திறனையும் அங்கு கிடைக்கும் பிற வசதிகளையும் துறையின் நலனிற்காக சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. மதுரை பால்பண்ணைத் திட்டம் தனது உள்ளூர்த் தேவைகளை நிறைவு செய்தது போக எஞ்சியுள்ள உபரிப்பாலை மாதவரம் பால்பண்ணைக்குத் தற்போது அனுப்பி வருகிறது.

மாதவரம் பால்பண்ணை.

மாதவரத்தில் செயல்படும் பால்பண்ணைக்குப் பால் வழங்கும் உரிமைதாரர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும், பால்பண்ணையில் தங்கள் கால்நடைகளைச் சேர்ப்பதில் வெளிநபர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் ஒரு வயதுக்கு மேற்பட்ட கிடேரிக் கன்று ஒன்றிற்கு ஒருநாளைக்கு வசூலிக்கப்பட்டு வந்த 2 காசு உரிமக் கட்டணத்தையும், இடவசதிக்காக வசூலிக்கப்பட்டு வந்த 3 காசு கட்டணத்தையும் ரத்து செய்யும்படி அரசு ஆணையிட்டது. மேலும் கால்நடை ஒன்றுக்கு 13 காசாக வசூலிக்கப்பட்ட இடவசதிக் கட்டணத்தை சில நிபந்தனைகளுக்குட்பட்டு 31—5—1973 வரை ரத்து செய்து இச்சலுகையை மேலும் வழங்கியுள்ளது. பால் குறைவாகக் கிடைக்கும் காலங்களில் கூடுதல் ஊக்கத் தொகையாக லிட்டர் ஒன்றுக்கு 10 காசு உரிமதாரர்களும் 1971–72ல் 49 உரிமதாரர்களும் இருந்த நிலைமாறி தற்போது 60 உரிமைதாரர்கள் உள்ளனர். இப் பண்ணையில் இருந்து வந்த மாடுகளின் எண்ணிக்கை 1970–71-ல் 531 ஆக இருந்த நிலை மாறி 1971–72-ல் இதன் எண்ணிக்கை 716 ஆக உயர்ந்தது. தற்போது 849 மாடுகள் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாதவரம் கால்நடைப் பண்ணையில் ஏற்படுத்தப்பட்ள்ள அரசு பால் பண்ணை அங்குள்ள வெற்றிடங்களையும் பிற வசதிகளையும் நன்முறையில் பயன்படுத்திக் கொள்கிறது. கலப்பின மாடுகளுக்கான செய்முறை விளக்கப் பிரிவாகவும், இப்பால்பண்ணை செயல்பட்டு வருகிறது. இப்பால் பண்ணையில் 499 கலப்பின மாடுகளும் இவ்வின வழிவந்த 461 கால்நடைகளும் தற்போது உள்ளன. கால்நடைப் பண்ணையில் 80 ஏக்கர் அளவில் புல் பயிரிடப்படுகிறது. அரசு பால்பண்ணையில் கால்நடைகளுக்கும் உரிமதாரர்களின் கால்நடைகளுக்கும் இப்புல் வழங்கப்படுகிறது.

பால்வழங்கு நிறுவனங்கள்.

கிராமப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு பால் வழங்கு சங்கங்களிடமிருந்து மாதவரம், மதுரை பால்பண்ணைகளுக்கு அதிக அளவில் பால் கிடைத்து வருகிறது. 31—3—1972வரை 23 கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியங்களும், 2,322 கூட்டுறவு பால்வழங்கு சங்கங்களும் இருந்து வந்தன. இவற்றிற்கு முறையே 13.85 லட்சம் ரூபாய், 75.01 லட்சம் ரூபாய் செலுத்தப்பட்ட மூலதனம் இருந்தது. கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியங்களில் (Co-operative Milk Supply Unions) 6,671 தனிப்பட்ட உறுப்பினர்கள் இருந்தனர். இதில் 1,963 சங்கங்கள் இருந்தன. அனைத்துக் கூட்டுறவு பால் வழங்கு சங்கங்களிலுமாக மொத்தம் 290,147 உறுப்பினர்கள் இருந்தனர். 1971–72-ல் அனைத்துக் கூட்டுறவு பால் வழங்கு அமைப்புகள், சங்கங்கள் மூலம் 879.79 லட்சம் லிட்டர் பால் கிடைத்தது.

நொடித்தும், செயல்படாமலும் உள்ள சங்கங்களைச் சீரமைக்கும் திட்டத்தின்கீழ் ஏற்கனவே உள்ள சங்கங்களை 868 தனித்தியங்கும் பிரிவுகளாகச் சீரமைக்கக் கருதப்பட்டுள்ளது. 1971–72-ல் 172 சங்கங்கள் தனித்தியங்கக் கூடிய சங்கங்களாகச் சீரமைக்கப்பட்டன. தற்போது இதுவரை 385 சங்கங்கள் அவ்வாறு சீரமைக்கப்பட்டுள்ளன. சீரமைக்கப்பட்ட சங்கங்களின் பணியை சீரான வழிகளில் நெறிப்படுத்துவதற்காக நிருவாக உதவித் தொகை அளிப்பதற்கான திட்டம் ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது. இந்த நிருவாக உதவித் தொகை படிப்படியாகக் குறைக்கப்படும்.

சில்லறைச் செலவு நிதியிலிருந்து ஊதியம் பெறும் பணியாளரமைப்பின் கீழ் 131 பேர் மாதவரம்பால் பண்ணை, மாநகரிலுள்ள பால் வழங்கும் பிரிவு, ஈரோடு பால் பண்ணை முதலியவற்றில் ஐந்தாண்டுக் காலம் பணி புரிந்துள்ளனர். இவர்களது பதவிகள் 1-12-1972 முதற்கொண்டு முறையான ஊதிய வீதங்களில் ஊதியம் பெறும் பதவிகளாக தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தால் மாற்றியமைக்கப்பட்டன என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறேன். பால் பண்ணை வளர்ச்சித் துறையின் பல்வேறு கிளைகளில் இது போன்று உள்ள 184 பதவிகளை முறையான ஊதிய வீதங்களில் ஊதியம் பெறும் பதவிகளாக மாற்றும் செயற்குறிப்புகள் அரசின் ஆழ்ந்த ஆய்வில் உள்ளன. இதுகுறித்து ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

இறுதியாக பால் பண்ணை வளர்ச்சித் துறை தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றில் பணி புரியும் பணியாளர்கள், தொழிலாளர்கள் அனைவருக்கும் பொங்கல் திருநாளை ஒட்டி கருணை மானியம் ஒன்று வழங்கப்பட்டது என்பதயும் குறிப்பிட விரும்புகிறேன்.

இவ் வகையில் திங்களொன்றுக்கு 200 ரூபாய்க்கும் குறைந்த அடிப்படை ஊதியம் பெறுவோருக்கு ரூ. 75 வீதமும், திங்கள் ஒன்றுக்கு 200 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆனால், ரூ. 300-க்குக் குறைநத அடிப்படை ஊதியம் பெறுவோருக்கு ரூ. 100 வீதமும் இநத மானியம் வழங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

இணைப்பு II.

(500 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: துணைத் தலைவர் அவர்களே,

“ ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும் வாய் எல்லாம் செயல் ”

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய் மொழிக்கிணங்க அறவினையை பன்னெடுங்காலத்திற்கு முன்பே தொடங்கி வைத்து, இன்றளவும் இடையறாது நடைபெற்றிடும் வழியில் அறநிலையங்களையும், அறக் கட்டளைகளையும் முறைமையின் காத்து, அவைகளின் மூலம் சமுதாயத்திலே சமதர்ம மணங்கமழச் செய்து வரும் பழந்தமிழ் நெறிநின்று செயல்படும் இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாக) துறை பற்றிய குறிப்பினை இவ்வவையின் முன்வைத்து அனைவரின் ஆதரவை வேண்டி நிற்கிறேன்.

வரலாற்றுச் சிறப்பையும், வழிபடுவோர் போற்றும் சமயச் சிறப்பையும் ஒருங்கே பெற்று ஒளிர்கின்ற கற்றளிகளும், கலைமிகு திருக்கோயில்களும், நாளும் நற்றமிழ் வளர்த்திடும் நன்மடங்களும் நிறைந்தது தமிழ்நாடு. முடியுடைய மூவேந்தர் காலம் தொடங்கி இன்றளவும் முறைமையான ஓர் வரலாறு கிடைத்திட தமிழர்க்கு உறுதுணை பயப்பட்டவை தமிழகத் திருக்கோயில்கள்தான். வரலாற்றுச் சான்றுகளாகவும், வழிபடுவோர் தம் குறை நீக்கும் இறைவன் உறைவிடங்களாகவும் கருதப்படும் கலைமாட்சி மிக்க இத்திருக்கோயில்களைப் பேணி பாதுகாத்து இனி வரும் சந்ததியினருக்கு அளிக்க வேண்டிய பெரும் பொறுப்பை நிறைவேற்றிடும் வழியில் இத்துறை செயல்பட்டு வருகிறது என்பதை நாடறியும்.

பழந்தமிழர் வாழ்க்கை முறைக்கும், அவர்தம் பண்பாட்டின், கலாசாரத்தின் உறைவிடங்களாக, வெளி உலகிற்கு இன்றளவும், அவைகளைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் கலைமிகு எழிற்கூடங்களாக அமைந்துள்ள இத்திருக்கோயில்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை இவ்வரசு நன்குணர்ந்துள்ளது.

" செயற்கை அறிந்தக் கடைத்தும், உலகத்து
இயற்கை அறிந்து செயல் "

என்ற தமிழ்த் திருமறைக்கு ஒப்ப மக்கள் விரும்பி கைக் கொண்டு வாழும் முறையில் தலையீடு எதுமின்றி அவர்கள் விருப்பத்தினை நிறைவேற்றி வைக்கும் அரசாக இது செயல்பட்டு வருகிறது. திருக்கோயில்கள் தமிழ் நாட்டில் எழுந்த முறைகளையும், அவைகளை எழுப்பிய மன்னர் தம் மன நிலைகளையும், அத்திருக்கோயில்களும் அற நிறுவனங்களும் ஆயிரமாயிரம் ஆண்டு நின்று பயன் அளித்திட அவர்கள் ஏற்படுத்திய " நிவந்தங்களையும் " அவைகளை இன்றளவும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் கல்வெட்டுச் சான்றுகளையும் விரிவாக உணர்ந்ததன் அடிப்படையில் இவ்வரசு இத் துறையில் பெரும் கவனம் செலுத்தி, கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறது. அவைகளின் தொடர்ச்சியாக இவ்வாண்டு வரை நிறைவேற்றிய பணிகளைப் பற்றியும், இனிவரும் ஆண்டில் நிறைவேற்றிட இருக்கிற பணிகளைப் பற்றியும் இவண் எடுத்தியம்பிட விழைகிறேன்.

தமிழ்நாடு அனைத்துமாக இவ்வாண்டுத் தொடக்கம் வரை இத்துறை 157 மடங்களும், 12,038 திருக்கோயில் களும், 832 குறிப்பிட்ட அறக் கட்டளைகளும் ஆக 13,027 அற நிலையங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுள்ளது. இவ்வனைத்து அறநிலையங்களின் மொத்த வருவாய் ரூ. 6,75,00,000 என்று மதிப்பிடப்படுகிறது. இதில் திருக்கோயில் நிலங்களைக் கண்டறிந்து இத்துறையோடு இணைக்குமாறு நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் ஆய்வின் காரணமாக இவ்வாண்டில் 2,162 திருக்கோயில்கள் இத்துறையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள எண்ணிக்கையும் அடங்கும். இத்துறையை நிருவகிப்பதற்காக வருவாய், இந்து சமய அறக்கட்டளைகள் பற்றிய 1959-வது ஆண்டுச் சட்டத்தின் 92-வது பிரிவில் திருக்கோயில்கள், அற நிறுவனங்கள் ஆகியவற்றால் கொடுக்கப் பட வேண்டிய சகாயத் தொகையிலிருந்தும், திருக்கோயில் கணக்குத் தணிக்கைக் கட்டணங்களிலிருந்தும் கிடைக்கிறது. ஆண்டொன்றுக்கு ரூ. 200-க்கும் குறைவு படாத வருவாயினை பெற்ற ஒவ்வோர் அறநிறுவனமும் குறிப்பிட்ட சகாயத் தொகையினை இத்துறைக்குச் செலுத்த வேண்டும் என்று விதிமுறை உள்ளது. இதன் அடிப்படையில் கீழ்க்காணும் வருவாயுள்ள பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் ஆண்டு தோறும் சராசரியாக ரூ. 51 இலட்சம் கிடைத்து வருகிறது.

(1) ஆண்டொன்றுக்கு ரூ. 1,000-க்கும் குறைவாக வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	7,558
(2) ரூ. 1,000 முதல் ரூ. 10,000 வரை வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	4,830
(3) ரூ. 10,000-க்கு மேற்பட்டு ரூ. 1,00,000 வரை வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	566
(4) ரூ. 1,00,000 முதல் ரூ. 5,00,000 வரை வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	60
(5) ரூ. 5,00,000-க்கு மேற்பட்டு, ரூ. 10,00,000 வரை வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	5
(6) ரூ. 10,00,000-க்கு மேற்பட்டு ரூ. 15,00,000-க்கு குறைவாக வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	3
(7) ரூ. 15,00,000-க்கும் மேற்பட்ட வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	5

இவ்வாண்டு இத்துறையின் கீழ் கொண்டு வரப்பட்ட 2,162 புதிய திருக்கோயில்களின் மூலமாக இத்துறையின் வருவாய் ரூ. 52,500 அளவுக்கு கூடுதலாகி உள்ளது.

1973-ம் ஆண்டில் திருக்கோயில்களின் எண்ணிக்கை 15,000-க்கும் மேலாக உயரும் என்றும், அவைகளின் மொத்த வருமானம் சுமார் 7,50,00,000-க்கு உயருமென்றும், அதனால் இத்துறையின் வருமானம் அதிகமாக வாய்ப்பு உண்டென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு பெருகி வரும் இத்துறையின் கீழ் செயல்படும் திருக்கோயில்கள் அனைத்தின் வருவாய் குறித்தும், அறநிலையத் துறையின் பராமரிப்புக்கான செலவுகள் குறித்தும் கீழ்க்காணும் புள்ளிவிவரங்கள் விளக்கமளிப்பவையாக அமையும் என்று எண்ணுகிறேன்.

திருக்கோயில்களின் வருவாய்.

பசலி ஆண்டு.	(ரூபாய்)
1379	4,87,51,314
1380	5,51,65,419
1381	5,55,78,000
1382	6,75,00,000

ஆண்டு. (1)	துறையின் நிருவாகச் செலவு. (2)	தணிக்கைச் செலவு. (3)
	ரூ.	ரூ.
1969-70	32,47,643	9,64,631
1970-71	39,40,636	11,32,260
1971-72	49,74,300	13,76,500
1972-73	58,11,500	12,43,200

புதிதாக ஏற்படுத்தப்பட்ட சில பதவிகள் காரணமாகவும், ஊதிய விகிதங்களில் ஏற்பட்ட உயர்வு காரணமாகவும், புதிய போக்குவரத்துச் சாதனங்கள் காரணமாகவும், 1972-73-ம் ஆண்டிற்கான நிருவாகச் செலவு கூடுதலாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்துறை ஊழியர்களி களின் ஊதியச் செலவுகளும், தணிக்கைச் செலவுகளும் ஆரம்பத்தில் அரசு நிதியினின்றும் செலவிடப்பட்டு, இறுதியில் இந்து சமய அறநிலைய நிருவாக நிதியிலிருந்து திரும்பப் பெறப்படுகின்றன.

திருப்பணிகள்.—வருவாய் வாயில்கள் பெருகியதன் காரணமாக உபரி நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் நிதியிலிருந்து வானுற எழுந்து நிற்கும் இத்திருக்கோயில்களில் காலத்தாற் பழுதுபட்டும், கலைமாட்சி யுறுதோர் கைபட்டும் சிதைவுற்றதுமான பலவற்றைத் திருத்தியமைத்து அவற்றின் அழகு கெடாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது. குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழகத்து சிற்பிகளின் கைவண்ணத்தையெல்லாம் தம் மெய்வண்ணத்தாலே பறைசாற்றி வரும் அரிய சிற்பங்கள் காலத்தால் அழியா வண்ணம் காப்பாற்றப்படுவதோடு, திருமதில்கள் ஓரங்களிலும், கருவறையிலும், சுற்றுச் சுவர்களிலும் கணக்கின்றி இருக்கும் கல்வெட்டுக் களையும், பல்வேறு இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களையும், செப்புப் பட்டையங்களையும், பிற சான்றுகளையும், முறைமையாகப் பாதுகாக்கத் தக்க வகையிலும், காப்போரின்றி சிறு கிராமங்களில் கிடக்கும் அழகுச் சிற்பங்களையும் பாதுகாப்பதற்கான வகையிலும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு தமிழ் மண்ணுக்குரிய சிற்பங்களும், சிலைகளும் அயலார் கரத்தே சென்றடையாவண்ணம் காக்கப்பட்டுள்ளன.

பல நூற்றுக்கணக்கன ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட செம்பு, ஐம்பொன் சிலைளும், கற் சிலைகளும் காண்போர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் அழகுற அமைக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

இவ்வாறு அமைக்கப்பட்ட கலைக்கூடங்கள் கீழ்க்காணும் இரு இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன :—

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.

2. அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்கா (திருச்சி மாவட்டம்).

யி

ஞ்சை மாவட்டம் திருவாரூரில் உள்ள அருள்மிகு தியாகராசர் திருக் கோலில் அம்மாவட்டத்தில் அண்மையில் கிடைக்கப்பெற்ற பல்வேறு சி ளை அழகுற அமைத்து திருக்கோயிலுக்கு வருவோரின் பார்வைக்காக வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டின் மற்ற திருக் கோயில்களில் காணப்படும் கவின்மிகு சிலைகளையும், சிற்பங்களையும் பாது காத்திடும் வகையில் அவைகளின் அழகு குன்றுமலும், காண்போருக்குத் தடையில்லாத வகையிலும் இரும்புக் கம்பிகளால் காப்பு செய்யப்பட்டுள்ளன விலைமதிப்பற்ற தமிழ்நாட்டுச் சிற்பங்களையும் சிலைகளையும் காப்பு செய்வதில் இத்துறை மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

திருக்கோயில் சிலைகள், சிற்பங்கள் ஆகியவைகளன்றி திருக்கோயில் களைப் பாதுகாப்பதிலும், அவைகளைப் புதுப்பித்து திருப்பணிகள் செய் வதிலும் 1967-ம் ஆண்டு தொடங்கி செலவிடப்பட்டு வரும் தொகை குறித்த புள்ளிவிவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு. (1)	திருக்கோயில்களின் எண்ணிக்கை. (2)	செலவிடப்பட்ட தொகை. (3) (ரூபாய்)
1967	200	1,19,00,000
1968	90	35,00,000
1969	130	57,00,000
1970	250	1,17,00,000
1971	450	2,20,00,000
1972	700	3,86,00,000

1973-ஆம் ஆண்டில் இன்னும் அதிகப்படியானத் திருக்கோயில்களை திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கின்றது. முக்கிய மாக கிராமப் பகுதிகளில் உள்ள சுமார் 1,500 திருக்கோயில்களில் திருப்பணி நடைபெற வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது.

இதே போல 1967-68-ஆம் ஆண்டு தொடங்கிய திருக்கோயில் திருப் பணிகளுக்காக அரசின் உதவித் தொகை ரூ. 3 இலட்சம் என்று இருந்த

நிலையை மாற்றி 1968-69 முதல் ரூ. 4 இலட்சமாகவும், 1972-73-ல் ரூ. 5 இலட்சமாகவும் உயர்த்தி, தற்போது ரூ. 6 இலட்சமாக உயர்த்தி இருப்பதும் எண்ணிப்பார்க்கத்தக்கது. சென்ற ஆண்டில் துவங்கப்பட்ட சில முக்கியமான திருப்பணிகளைக் குறித்த விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

(1) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ. 1,94,950 மதிப்புள்ள 7 கிலோ தங்கத்தால் ஒரு தங்கத் தேர் செய்வது தொடங்கப்பட்டது.

(2) திருக்கோயில் சுற்றுப் பிரகாரத் திருப்பணி ரூ. 5 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(3) ரூ. 1,59,250 மதிப்புள்ள 250 கிலோ வெள்ளியால் தேர் ஒன்று செய்யப்பட்டுள்ளது.

(4) ரூ. 3·5 இலட்சம் மதிப்பீட்டில் கடல் அரிப்புத் தடுப்புத் திட்டம் தீட்டப்பட்டு, முக்கிய பாகமாகிய கீழ்ப்பாகத்தில் 590 அடி நீளத்திற்கு வேலை முடிவுற்றது. வடக்குப் பாகத்தில் வேலை தொடர்ந்து நடந்து வருகின்றது.

(5) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ. 2,36,725 மதிப்புள்ள 3½ கிலோ தங்கத்தில் தங்கக் கவசம் செய்யும் பணியும், 5 கிலோ தங்கத்தில் தங்கத் தேர் செய்யும் பணியும் தொடங்கப் பட்டது.

(6) முகவை மாவட்டம், பாகனேரியில் அருள்மிகு புலவநாயகி அம் மன் திருக்கோயில்சார்பில் ரூ. 2 இலட்சத்தில் தேர் ஒன்று செய்து ஓட்டப்பட்டது.

(7) செங்கை மாவட்டம், மதுராந்தகம் அருள்மிகு கோதண்ட ராமசாமி திருக்கோயிலுக்கு ரூ. 2,46,500 செலவில் புதிய திருத்தேர் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது.

(8) மதுரை மாநகரில் அமைந்துள்ள அருள்மிகு மீனாட்சி சுந்த ரேசுவரர் திருக்கோயிலில் வைர முடி ஒன்றும், தங்கக் கவசம் ஒன்றும் ரூபாய் பதினாறு இலட்சம் செலவில் செய்யப்பட்டன.

இவ்வாறு பெருகி வரும் தொகையைக் கொண்டு தமிழ்நாட்டில் பெரும்பாலான திருக்கோயில்களில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவது மகிழ்ச்சியூட்டும் செய்தியாகும்.

திருமண மண்டபங்கள்.—1967-ஆம் ஆண்டு வரையிலும் தமிழ் நாட்டுத் திருக்கோயில்களின் சார்பில் கட்டப்பட்டுள்ள மொத்தத் திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 14 ஆகும். ஆனால் 1967-க்குப் பிறகு

1972 டிசம்பர் திங்கள் வரை தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் சார்பில் துவக்கப்பட்ட திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 169 ஆகும். இவற்றில் 41 திருமண மண்டபங்கள் முழுமையாக முடிவுற்று பயன்படுத்தப் பட்டு வருகின்றன. மற்றவற்றை முடிக்கும் வகையில் விரைவு நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருமணம் நடத்த வசதியான இடமின்றி இடறுற்றோர் பலரின் துயரம் இதன் மூலம் பெருமளவில் களையப்பட்டுவருகிறது.

திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிறைவேற்றப்படும் சமு தாயப் பணிகள்.—தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் தோற்றுவாயை உணர்ந்தால் அவைகள் வெறும் வழிபாட்டு இடங்களாக மட்டும் அமையாமல் சமுதாயப் பணிகளை நிறைவேற்றிடும் அமைப்புகளாகவும், சிற்பம், கலை, கல்வி, மருத்துவம், ஓவியம், நாட்டியம் போன்றவைகளை வளர்க்கும் அற நிலயங்களாகவும், காப்பகங்களாகவும் அமைந்தன என்பது தெளிவாகும். எனவே, இவற்றின் அடிப்படையிலேயே பின்வரும் சமுதாயப் பணிகளை இத்திருக்கோயில்களின் மூலம் இத்துறையினர் நிறைவேற்றி வருகின்றனர்.

கேடில் விழிச்செல்வமாம் கல்விச் செல்வத்தை வாரி வழங்கும் வகையில் தமிழ்நாட்டின் பெரு வருவாய் உள்ள திருக்கோயில்களின் சார்பில் தற்போது 6 கல்லூரிகள் தமிழகத்தில் கீழ்க்காணும் பகுதிகளில் அமைந்து செயல்பட்டுக்கொண்டு வருகின்றன :—

1. அருள்மிகு பழனி ஆண்டவர் கலைக்கல்லூரி, பழனி.

2. அருள்மிகு பழனி ஆண்டவர் செந்தமிழ்ப் பெண்கள் கல்லூரி, பழனி.

3. அருள்மிகு பழனி ஆண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி, பழனி.

4. அருள்மிகு தேவி குமாரி பெண்கள் கல்லூரி, குழித்துறை (கன்னியாகுமரி மாவட்டம் தேவஸ்வம் வாரியத்தினரால் நடத்தப்படுவது).

5. அருள்மிகு பராசக்தி பெண்கள் கல்லூரி, குற்றாலம்.

6. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் கல்லூரி, இராமேஸ் வரம்.

அண்மையில் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த திருநெல்வேலி அருள் மிகு காந்திமதியம்பாள் திருக்கோயில் சார்பில் மகளிர் கல்லூரி ஒன்றும், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் ஓர் மகளிர் கல்லூரியும் துவங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து அங்கு துவக்கப்பட்டிருக்கும் அருள் மிகு சுப்பிரமணியசுவாமி கலைக் கல்லூரிக்கு ரூ. 5 இலட்சம் நன் கொடையாக வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இவைகளேயன்றி மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பழனியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டபாணிசுவாமி திருக்கோயில் சார்பில் திரு. பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியும் தஞ்சை மாவட்டம் திருவெண்காட்டினை அடுத்த மேலையூரில் பூம்புகார் பேரவைக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.

இந்திய மெய்விளக்கத்துறை மற்றும் பண்பாடுகளில் பட்டப்படிப்பிற்கும் மேலான படிப்பிற்கு கல்லூரி ஒன்றினை 1972-ம் ஆண்டில் பூம்புகாரில் தொடங்கப்பட்டது என்பதும் இங்கு நினைவு கூறத்தக்கது.

உயர்நிலை ஆரம்பப் பள்ளிகள்.—தற்போது தமிழ் நாட்டில் திருக்கோயில்களின் நிதியிலிருந்து 13 ஆண்கள் மற்றும் மகளிர்க்கான உயர்நிலைப்பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் 3 பள்ளிகள் 1972–73-ம் ஆண்டில் தொடங்கப்பட்டவைவாகும். 1973-74-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டம் திருக்கடையூர் பிச்சைக் கட்டளை சார்பில் ஓர் உயர்நிலைப்பள்ளியும், முகவை மாவட்டம் பள்ளத்தூரில் அறக்கட்டளையொன்றின் சார்பில் ஓர் உயர்நிலைப் பள்ளியும் துவங்கப்பட இருக்கின்றன.

நாதசுவரப் பள்ளிகள்.—மங்கல ஒலி கூட்டி மக்களுக்கு இன்பம் சேர்க்கும் நாதசுவரக் கலையைப் பேணி வளர்க்கும் வகையில் திருக்கோயில்களின் நிதியிலிருந்து கீழ்க்காணும் இரு இடங்களில் நாதசுவரப் பள்ளிகள் உருவாக்கப்பட்டு தக்க விற்பன்னர்களைக் கொண்டு மாணவர்கள் முறையாகப் பயிற்றுவிக்கப்படுகின்றனர்:—

1. பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் நாதசுவரப்பள்ளி.

2. தஞ்சை மாவட்டம் வலிவலம் அருள்மிகு இருதயகமலநாதசுவாமி திருக்கோயில் நாதசுவரப்பள்ளி.

இவற்றில் பழனியில் 20 மாணவர்கள் நாதசுவர இசையிலும், 10 மாணவர்கள் தவில் இசையிலும், தஞ்சை வலிவலத்தில் 15 மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஊமையர் மற்றும் செவிடர்களுக்கான பள்ளிகள்.—இயற்கையின் படைப்பில் ஊமைகளாய், செவிடர்களாய்ப் பிறந்துவிட்டோர்க்குப் பயிற்சி அளித்துப் பேசவும், எழுதவும், இரு பயிற்சிப்பள்ளிகள் திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் (சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்) மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் ஆகியவற்றின் சார்பில் தற்போது செம்மையாகச் செயல்பட்டுவருகின்றன.

அன்பு இல்லங்கள்.—பேணுவோர் இன்மையால் பெருந்தொல்லைக்காட்பட்டு இறந்தும் உயிர் வாழ்தல் வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்

படும் அனாதைகளைக் காப்பதற்கு அன்பு இல்லங்கள் கீழ்க்காணும் 10 திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றன.—

1. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி,

2. அருள்மிகு நவநீதேசுவரர் திருக்கோயில், சிக்கல், நாகப்பட்டினம், வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

3. அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோவில், வைத்தீசுவரன் கோயில், சீர்காழி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

4. அருள்மிகு சீனுவாசபெருமாள் திருக்கோயில், நாச்சியார்கோயில், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

5. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில், மதுரை.

6. அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி.

7. அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

8. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

9. அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோவில், அய்யன் பாளையம், பல்லடம் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

10. அருள்மிகு திருமலைக் குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழில், தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

சிறுவர் காப்பகங்கள்.—பள்ளிப் பருவத்தை அடைவதற்கு முன்பே தாய் தந்தையரை இழந்துவாடும் சிறுவர்களுக்கும், காலையிலேயே தொழிலுக்குச்செல்லும் தாய்தந்தையர் கவனிக்கமுடியாத சிறுவர்களுக்கும் கீழ்க்காணும் 5 இடங்களில் சிறுவர் காப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இங்கெல்லாம் சிறுவர்களுக்கு இந்து சமய நெறிமுறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.—

1. அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில், திருநாராயணபுரம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

2. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குமாரவயலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், காரமடை, அவிநாசி வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இளம்பிள்ளை, சேலம் மாவட்டம்.

5. அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில், பழனி.

முதியோர் இல்லம்.—சென்ற ஆண்டில் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து முதியோருக்கான இல்லம் நடத்தும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு அதனடிப்படையில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பில் 30 முதியோர்களை சேர்த்துக்கொள்ள வழிவகை மேற்கொள்ளப்பட்டு இவ் வில்லம் 15—2—1973-லிருந்து செயல்பட்டு வருகிறது. தற்போது, மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகிய இரு திருக்கோயில்களின் சார்பில் 20 நபர்களைப் பேணிக் காக்கும் இரண்டு இல்லங்கள் 15—3—1973 முதல் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

மருத்துவ மனைகள்.—வழிபாட்டுக்காக வரும் பயணிகள் உட்பட பொது மக்களின் நலனுக்காக மருத்துவ மனைகளையும் மருந்தகங்களையும் தொடங்க வேண்டியதன் அவசியம் கருதி 23 சித்த வைத்திய மருத்துவ மனைகளையும் ஆங்கிலமுறை மருத்துவமனை ஒன்றினையும் திருக்கோயில்களின் சார்பில் நடத்தி வருகின்றோம். சித்த வைத்திய மருத்துவ மனைகளின் அவசியம் காரணமாக இன்னும் அதிகமான அளவில் இவைகளைத் துவக்க வேண்டுமென்று திருக்கோயில் அறங்காவலர்களுக்கும் நிருவாக அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

நூலகங்கள்.—பொது அறிவினை வளர்ப்பதோடன்றி இந்து சமய நெறியினை நன்குணர்ந்து பயன்பெறும் வகையில் 204 திருக்கோயில்களில் நூலகங்கள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. மேலும், நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் நூலகங்களைத் தொடங்கத்தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

வழிபடுவோருக்கான வசதிகள்.—அருட்தலங்கள் என்று போற்றப்பட்டு நாடோறும் பெருகி வரும் வழிபாட்டுப் பயணிகள் கூடுகின்ற திருக்கோயில்களின் சார்பில் வழிபாட்டுப் பயணிகள் மற்றும் வழிபடுவோர்களின் நலனுக்காக ஓய்வு விடுதிகளையும், பயணிகள் விடுதிகளையும் கட்டும் திட்டம் ஒன்று இருந்து வருகின்றது. இத் திட்டத்தின்கீழ் பல்வேறு திருக்கோயில்களின் சார்பில் வேலைகள் மேற்கொள்ளுவதற்கான வகையில் மதிப்பீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

வழிபாட்டுப் பயணிகளுக்கு விடுதிகள் கட்டுதல்.

ஆண்டு.	ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மதிப்பீடு. (ரூபாய்.)
1969	1,10,700
1970	2,65,800
1971	11,14,000
1972	7,45,500

ஓய்வு விடுதிகளைக் கட்டுதல்.

ஆண்டு.	ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மதிப்பீடு. (ரூபாய்)
1969	6,34,000
1970	10,60,000
1971	5,24,400
1972	5,07,000

இவ்வேலைகள் விரைவாக நடந்துவருகின்றன.

1973 ஆம் ஆண்டில் இவைபோன்ற வசதிகள் இன்னும் பெருமளவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

திருக்கோயில் நிலங்கள்.—திருக்கோயில்களின் சார்பில் பயன்மிக்க காரியங்கள் பலவற்றை மேற்கொள்ளும் அதே நேரத்தில் திருக்கோயில்களின் வருவாயைப் பெருக்கிடும் வகையிலும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் அசையா சொத்துக்களை தனியார் கரங்களிலிருந்து எடுக்கப்பட்டு திருக்கோயில் கணக்கில் சேர்க்கப்பட்டு அவைகளின் மூலம் வருவாய்க்கான நிதி வாயில்கள் பெருக்கப்பட்டுள்ளன. கீழ்க்காணும் விவரம் இத்துறையில் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தெற்றென விளக்கும்.

தமிழ் நாட்டுத் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து அந்நிலங்கள் அனைத்தும் திருக்கோயில்களுக்கே உரியனவாக்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவென்று சிறப்புப் பணியாளர்களாக மாவட்ட வருவாய் அதிகாரி நிலையில் ஒரு தனி அதிகாரியும் மற்றும் 4 தனித் துணை ஆட்சியர்களையும் அவர்களுக்கு உரிய பணியாளர் தொகுதியினையும் பணியில் அமர்த்திச் செயல்பட அரசு அனுமதி அளித்தது. 1971-ம் ஆண்டில் திருக்கோயில் நிலங்களை பொறுத்த ஆய்வுப் பணியினை விரைவுபடுத்துவதற்கு இசைவாக கூடுதல் பணியாளர்களை நியமிக்க அரசு ஒப்பளித்துள்ள சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான எல்லா அசையாச் சொத்துக்களும் உண்மையிலேயே அவைகளின் உடமைகள் பட்டியலில் இடம் பெறவும், அவைகளின் பெயரில் பதிவு பெறவும், சொத்து விவரப் பட்டியலில் முறையாக கணக்கிடப்படவும் திருக் கோயில்களின் உடமைப் பட்டியலிலும் ஆளுகையிலும் இல்லாத சொத்துக்கள் அனைத்தும் அவைகளின் கணக்கில் கொண்டு வரப்பட்டு அந்தச் சொத்துக்களின் வருவாய் முறையாகக் கணக்கிடப்படவும் ஏதுவாக இத்துறை ஏற்படுத்தப்பட்டது. திருக்கோயில் நிலங்கள் முறையான வகையில் குத்தகைக்கு விடப்பட்டுளதா என்றும், ஆக்கிரமிப்பு, அனுமதியில்லாத இருப்பு அல்லது உடமை முதலியன இருக்கின்றனவா என்பதனை சரிபார்க்கவும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், கட்டிடங்கள், மனைகள், முதலியவற்றின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

முதல் நிலை ஆய்வின் காரணமாக இப்பிரிவினரால் கீழ்க்காணும் விவரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

	சமய நிறு வனங்களின் எண்ணிக்கை.	அவைகளுக்குச் சொந்தமான நிலங்களின் பரப்பு (நஞ்சையும், புஞ்சையும்)
	எக்கர்.	சென்ட்
1. ஆய்வின் காரணமாக தமிழ் நாடெங்கும் கண்டுபிடிக்கப்பட்ட அற நிலையத் துறையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத நிறுவனங்கள்,.	40,247	1,98,920·53
2. இவற்றில் ஆய்வாளர்களின் முதல் அறிக்கை பெறப்பட்ட சமய நிறுவனங்கள். அவற்றுள் 2,162 நிறுவனங்கள் துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.	6,000	41,664·08
3. திருக்கோயில் நிலங்கள் உண்மையிலேயே திருக்கோயில் உடைமையிலும் அனுபவத்திலும் இல்லாமல் தனியாரிடம் இருப்பனவாகக் கண்டுபிடிக்கப்பட்ட நிறுவனங்கள்.	15,944	26,065·88 (விவசாய நிலம்) 656·62 (நகர்ப் புற நிலம்).
4. திருக்கோயில் நிலங்களை அவற்றின் உண்மையான உடைமையாக்க நிருவாகிகள் நடவடிக்கை மேற்கொண்ட நேர்வுகள்.	880	2,250·41
5. உண்மையிலேயே திருக்கோயில் உடைமைகளாக ஆக்கப்பட்ட நேர்வுகள்.	186	717·43

மேலும் திருக்கோயில்களுக்கு உரிய குத்தகை குறைவாக உள்ள 33,703·86 ஏக்கர் விவசாய நிலங்கள் மற்றும் 772·89 ஏக்கர் நகர்ப்புற நிலங்கள், மற்றும் 2,218 கட்டடங்களைப் பொருத்தும் சிறப்புப் பணியாளர்கள் அறிக்கை சமர்ப்பித்து உள்ளனர். மேலும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான தரிசாக உள்ள 6,694·87 ஏக்கர் நிலங்களை இலாபகரமான முறையில் பயன்படுத்துவதற்கும் வழிவகைகளைத் தெரிவித்திருக்கின்றனர். இதுகுறித்து இத்துறை அலுவலர்களால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிகள் இணைக்கப்பட்ட-இணைக்கப்படாத தேவஸ்வம்) சட்டம் (1959-ஆம் ஆண்டு 30-வது தமிழ்நாடு சட்டம்).—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு 30-வது சட்டத்தின்படி

கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டத்திலும் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்

படாத தேவஸ்வங்கள் என்று அழைக்கப்படும் சமய நிறுவனங்களை தேவஸ்வம் வாரியம் நிருவகித்து. கட்டுப்படுத்தி, மேற்பார்வை செய்து வருகிறது. இப்பகுதிகளில் உள்ள இதர நிறுவனங்கள் 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் கீழ் வரும். இவைகள் அனைத்தும் கன்னியாகுமரி இந்து சமய உதவி ஆணையாளரின் அதிகார வரம்பிற்குட்பட்டு இருக்கின்றன. கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் மூன்று நியமன உறுப்பினர்களைக் கொண்டது. இதில் ஒருவர் திருவிதாங்கூர் மாநில முன்னாள் மன்னரால் நியமனம் செய்யப்பட்டும் இதர உறுப்பினர்கள் (தலைவர் உட்பட) தமிழ்நாடு அரசால் நியமனம் செய்யப்பட்டும் வருகின்றனர். இந்த உறுப்பினர்களின் பதவிக்காலம் 31—3—1972 முதல் முடிவடைந்துவிட்டது. ஆயினும், இந்த வாரியம் தற்போது செயல்பட்டு வருகிறது.

தேவஸ்வம் வாரியம் அரசு மானியமாக ஆண்டுதோறும் ரூ. 13,68,000 பெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் செங்கோட்டை வட்டத்தில் செயல்பட்டு வரும் தேவஸ்வம் வாரியம் என்னும் அமைப்பை நீக்கி இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத அனைத்து திருக்கோயில்களையும் கண்காணித்து நிருவகித்திட தமிழ்நாட்டில் மற்ற எல்லாப் பகுதியிலும் செயல்பட்டுவரும் இந்து சமய அறநிலைய 1959-வது ஆண்டு சட்டத்தினை முழுமையாக இப்பகுதிகளுக்கும் விரிவாக்கிடும் வகையில் சட்டத்திருத்தத்திற்கு அனுமதி கோரி இவ்வரசு மத்திய அரசை வேண்டியுள்ளது. இது பற்றி விரைந்து செயல்பட வேண்டிய அவசியம் குறித்து பன்முறை மத்திய அரசுக்கு தெரிவித்தும், மத்திய அரசின் அனுமதி இதுவரையில் தரப்படவில்லை என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. இத்திருத்தம் திருக் கோயில்களின் முறையான நிருவாகத்திற்கு கன்னியாகுமரி மாவட்டத்திலும் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த செங்கோட்டைப் பகுதியிலும் உறுதுணை பயக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுக்கோட்டை திருக்கோயில்கள் பராமரிப்பிற்காக ஆண்டுதோறும் ரூ. 4 இலட்சம் பெற்று வருகின்றன. இதுவன்றி, தன்னுடைய வழிபாட்டு இல்லத்தை பராமரித்து வருவதற்காக புதுக்கோட்டையின் முன்னாள் மன்னருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 6,000 அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழில் வழிபாடு.

தமிழ்ப்பெருங்குடி மக்களின் ஒன்றுபட்ட கோரிக்கையை ஏற்கும் வகையில் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் அனைத்திலும் தமிழ் வழிபாட்டு முறை விரிவு படுத்தப்பட்டது. துவக்கத்தில் சிலரின் எதிர்ப்புக் குரல் இருப்பினும் தமிழ்ப்பெருங்குடி மக்களின் நல்லாதரவு காரணமாக தற்போது அனைத்து திருக்கோயில்களிலும் தமிழ் வழிபாட்டு முறை நடைமுறையில் உள்ளது. ஆயினும், வழிபடுவோரின் உரிமையில் இவ்வரசு

தலையிட விரும்பவில்லை என்பதன் காரணமாக வடமொழியில் வழிபாடு செய்ய வேண்டுவோருக்கு உரிய வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. எனினும், தமிழ் வழிபாட்டு முறையை விரும்புவோர் எண்ணிக்கை நாள்தோறும் பெருகி வருவது மன நிறைவை அளிக்கக் கூடியதாக அமைந்துள்ளது.

யுனெஸ்கோ உதவி.

இம் மாநிலத்திலுள்ள வரலாற்று பெருமை வாய்ந்த தொன்மையான திருக்கோயில்கள் சிலவற்றைப் பேணிப் பாதுகாப்பதிலும் புதுப்பிப்பதிலும் "ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம்" தொடர்ந்து அக்கறைகாட்டி வந்துள்ளது. திருவரங்கத்திலுள்ள அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு இந்நிறுவனம் 12,000 டாலர்களை பென்காப்சுலா (ஒருவகை தெளிக்கும் எண்ணெ) உட்பட இந்தியாவில் தயாரிக்கப்படாத பொருள்களின் வடிவில் அத்திருக்கோயிலின் பண்டைக்கால பண்பாடுகெடாத வகையில் சுதை வேலைகளைப் பாதுகாக்கப் பயன்படும் பொருள்கள் மூலம் வழங்கியுள்ளது. 1972–73-ம் ஆண்டில் நான்முகம் கோபுரம் மற்றும் "ஆரியபாதாள் கோபுரம்" ஆகியவற்றின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

யூனெஸ்கோ நிறுவனத்தின் உதவி பெறும் இரண்டாவது திருக்கோயிலாக இராமேஸ்வரத்தில் உள்ள அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலும், காஞ்சிபுரத்திலுள்ள அருள்மிகு வரதராஜசுவாமி திருக்கோயில் மூன்றுவதாகவும், சிதம்பரத்தில் உள்ள அருள்மிகு நடராஜர் திருக்கோயில் நான்காவதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பதை நன்றியுணர்வோடு ஈண்டு குறிப்பிட்டுக் கொள்வதோடு இவைகள் குறித்த கடிதப் போக்குவரத்து இருந்து வருகிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.—

தொல் பொருட்களஞ்சியம்.

கோயில்களின் கலை மற்றும் சிற்பக்கலை ஆகியவைகளைக் காட்டும் தொல்பொருட் களஞ்சியங்களை கீழ்க்காணும் சமய நிலையங்கள் பேணி வருகின்றன.

1. அருள்மிகு அரங்கநாத சுவாமி ஆலயம், திருவரங்கம்.

2. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவர் ஆலயம், மதுரை.

3. அருள்மிகு ஜம்புகேஸ்வரர் ஆலயம், திருவானைக்கால், திருச்சிராப்பள்ளி.

ஆயிரக்கால் மண்டபங்கள் உள்ள கோயில்கள் சிறந்த கலைக்கூடங்களைப் பராமரிக்க முடியும். தற்போது, அவ்வகையான கலைக்கூடங்களை மேலும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திருக்கோயில் திங்கள் ஏடு.

1958-ல் தொடங்கப்பட்டு திங்கள் தோறும் வெளிவரும் "திருக்கோயில்" இதழ் தமிழ் நாட்டில் மட்டுமின்றி அண்டை அயல் நாடுகளிலும் 4,925 சந்தாதாரர்களைக் கொண்டிருக்கிறது. இந்து சமய வேதாந்த கலாச்சார மற்றும் இலக்கியப் பொருள்கள் குறித்தும் தமிழ் நாட்டுத் திருக்கோயில்களின் தொன்மையையும் வரலாற்றையும் சிறந்த முறையில் வெளியிடும் ஏடாக இது அமைந்து, சமய இலக்கிய அறிஞர் பெருமக்கள் நல்ல தரமுற்ற கட்டுரைகளை அளிக்கும் ஒன்றாக மிளிர்கிறது.

சென்ற ஆண்டில் எடுத்த சில குறிப்பிடத்தக்க முடிவுகளில் சிலவற்றை இங்கே எடுத்துரைப்பது பயன்தரத் தக்கதாய் அமையும் என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து சென்ற ஆண்டில் இரு பெரும் சமுதாய நற்பணிகளுக்காக ஒரு பெருந்தொகை செலவிடப்பட்டது. அவற்றில் ஒன்று பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு நிதிக்காக, திருக்கோயில்கள் நிருவாகிகள் தாங்களே முன் வந்து ரூ. 3,49,616.00 அளித்து தம் பங்கினை யாற்றியுள்ளனர். அடுத்து விழியற்றோருக்கு "கண் ஒளி வழங்கும் திட்டத்தின்" கீழ் பல்வேறு இடங்களில் திருக்கோயில்களின் சார்பில் ரூ. 2,27,552.00 கொடுக்கப் பட்டதுடன் திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடத்திலேயே இத்திட்டம் செயல்படுத்தப் பட்டது என்பதையும் பெருமையோடு இங்கே நினைவுகூற விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் திருக்கோயில்களுக்குள் சென்று இறைவனை வழிபடுவதுகூட இயலாது இருந்த நிலை மாறி இன்றைய தினம் தாழ்த்தப்பட்டோர் ஒருவர் கண்டிப்பாக திருக்கோயில் அறங்காவலர் குழுவில் இடம் பெற வேண்டும் என்ற அளவுக்கு விதிமுறைகளில் திருத்தம் செய்து சென்ற ஆண்டு முதல் எல்லாத் திருக்கோயில்களுக்கும் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அறங்காவலராக நியமனம் பெறும் சமுதாய மாற்றம் எந்தச் சந்தடியும் இல்லாமல் நிறைவேற்றப்பட்டது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு திருக்கோயில்களில் அறங்காவலர்கள் பதவி அளிப்பதோடு மட்டும் நின்று விடாமல், பரம்பரை அர்ச்சகர் முறை ஒழிப்பினை யொட்டி தாழ்த்தப்பட்ட வகுப்பினரையும் அர்ச்சகராக்கத்தக்க வகையில் தற்போதைய இந்திய அரசியல் சட்டத்திலேயே திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று இந்திய அரசுக்கு இம்மாநில அரசு 20-11-1972 அன்று கடிதம் எழுதி இதன் தொடர்பாக 11-12-1972, 22-1-1973 ஆகிய இரு நாட்களும் அவர்கள் நினைவுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்றைய தினம் தாழ்த்தப்பட்ட குடிமகன் ஒருவன் திருக்கோயில் அர்ச்சகராக வர முடிகிறதோ அன்று தான் உண்மையான சமதர்ம சமவழ்வை இந்த நாடு பெற்றதாகக் கருத முடியும் என்பதால் இந்திய அரசு இதற்கு ஆவன செய்ய முன்வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1973 மார்ச் 26

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ஒரு நிருவாக அதிகாரியை நியமித்து சீர்மை செய்வது கொள்கையளவில் நலம் பயக்கத் தக்கதாய்த் தோன்றிடினும் திருக்கோயில்களின் நிதி வாயில்கள் இதற்கு இடம் தராத காரணத்தால் ஒரு பகுதிக்குள்ளடங்கும் பல்வேறு சிறிய திருக்கோயில்களை ஒருங்கிணைத்து நிருவாக வசதிக்கு ஏற்ப ஒரு நிருவாக அதிகாரியினுடைய நேரடி ஆளுகைக்குள் அவைகளை கொண்டு வருவதற்கான முடிவு எடுக்கப்பட்டு நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்க் கடவுளாம் முருகக் கடவுள் உறையும் பெருமைக்குரிய ஆறு படை வீடுகளில் ஒன்றான பழமுதிர்ச்சோலை திருக்கோயிலைச் சென்றடைய ஏதுவாக மலையடிவாரத்திலிருந்து நல்ல பாதை வசதி செய்து கொடுக்கக் கருதி ரூ. 5 லட்சம் செலவில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தற்போது வேலை தொடங்கப்பட்டு உள்ளது.

உலகப் பொதுமறையாம் திருக்குறளினை அருளிச் செய்த திருவள்ளுவப் பெருந்தகையின் நினைவாய் சென்னை நகரில் மயிலைப் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயிலை திருப்பணி செய்வித்தும் திருக்கோயிலை அடுத்துள்ள இடத்தில் தற்போது முழுமையடையாத மண்டபத்தை திருத்தியமைத்து சிறந்த கலைக் கோயிலாக உருவாக்கிடும் முயற்சியை மேற்கொள்ள திருப்பணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் புரவலராக தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும், தலைவராக தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் மற்றும் உறுப்பினர்களாக பல்வேறு துறையைச் சார்ந்த அறிஞர் பெருமக்களும் பங்கு கொண்டு செயலாற்றி வருகின்றனர். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாட்டினர்" தம் நன்றிப் பெருக்கின் சின்னமாய் இது அமையும் என்பதால் அனைவரும் இதனை வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

தண்பொழில் சூழ் காவிரிக்கரையோரம் அமைந்து நாடோறும் பல்லாயிரக் கணக்கான மக்களை தம்பால் ஈர்க்கும் அருள்மிகு தாயுமானூர்—உச்சிப்பிள்ளையார் திருக்கோயில்களுக்கு தற்போது வழிபடுவோர் படியேறிச் சென்றிடும் நிலைமை மாற்றி பழனியம் பகுதியில் அமைந்துள்ளது போன்று மலையடிவாரத்திலிருந்து மலையுச்சி வரை செல்ல மின் இழுவை ரயில் (விஞ்ச்) அமைக்க முடிவெடுக்கப்பட்டு அது குறித்த மதிப்பீடுகள் தற்போது தயாரிக்கப்பட்டு ஆய்வில் இருந்து வருகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பழமைச் சிறப்பைப் பெற்று செங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள "திருக்கழுக்குன்றம்" அருள்மிகு வேதகிரீசுவரர் திருக்கோயிலை புதுப்பிக்கவும், செப்பனிடவும், இவ்வாண்டு அரசு ரூ. 1,00,000 நிதி உதவியளித்து உள்ளது.

தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் உபரி நிதி மிகுந்த திருக்கோயில்களின் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகத் திருமணம் செய்து வைக்கும் திட்டம் சென்ற ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டது.

1973 மார்ச் 26]

இதனடிப்படையில், திருக்கோயில்களின் வருவாய்க்குத் தக்கவகையில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குக் குறையாமல் இலவசத் திருமணங்களைச் செய்விக்கவும், ஒரு திருமணத்திற்கு ரூ, 150க்கு மிகாமல் செலவழிக்கப்படவும் திட்டமிடப்பட்டது. மணமக்களுக்கு இத்தொகையிலிருந்து, வேட்டி, புடவை, தாலி முதலியவைகளை இலவசமாக அளிப்பதுடன் திருமணமும் திருக்கோயிலிலேயே நடத்தி வைக்கப்படுகிறது.

ஏழை எளியோருக்கு உதவும் இத்திட்டம் பொது மக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்று வருகிறது. இவ்வாறு செய்யப்படும் திருமணங்களின் எண்ணிக்கை கூடி வருவது மன நிறைவுக்குரியதாகும்.

அடுத்து தமிழகத்து அனைத்துத் திருக்கோயில்களைப் பற்றியும் அவைகளின் வரலாற்றுச் சிறப்பையும் சமயப் பெருமையையும் விளக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கும் அனைத்துத்திருக்கோயில்களையும் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய புத்தகங்கள் வெளியிடுவது சிறப்புடையது என்ற அடிப்படையில் ஏற்கெனவே வெளிவந்த நெல்லை, சென்னை ஆகிய இரு மாவட்டங்களைத் தவிர்த்த மற்ற மாவட்டங்களுக்கான இப்பணியைத் தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது.

<u>முடிவு :</u>

இறுதியாக தமிழ் நாடெங்கணும் மத்திய அரசின் ஆளுகைக்குட்பட்டு தொல் பொருள் துறையின் கீழ் இருந்து வரும் நூற்றுக்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் சரிவர பாதுகாக்கப்படாமல் பழுதுற்று வருவதை வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இத்திருக்கோயில்கள் அனைத்தும் மத்திய அரசின் நிருவாகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது எந்த நியாயத்தின் பாற்பட்டதும் அல்ல என்பது தெளிவு. இத்திருக்கோயில்களின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும், கலையழகு சிறப்பையும் உரிய முறையில் அமைந்த இம்மாநில அரசின் பாதுகாப்பில் இவையனைத்தும் அமையும் நாளே நன்னாள் என்பதில் ஐயமில்லை.

இவ்வரசு அமைந்த [illegible]தொட்டு இன்றுவரை சமய நெறி முறைகளில் அரசு தலையிடா[illegible]பெற்று வந்துள்ளது. தொடர்ந்து இதே கொள்கையின் அடிப்[illegible] செயல்பட இருக்கும் இத்துறையினருக்குத் தமிழ் மக்களின் ஒரு மித்த ஆதரவு வேண்டுமென்று கோரி ஒரு சில பகுதிகளிலிருந்து எதிர்ப்புகள் நியாயமற்ற முறையில் எழும்பிடினும்,

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல்நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"

என்ற பொன்மொழிக்கொப்ப இவ்வரசு செயல்படும் என்று உறுதி கூறி அமைகிறேன்.

[1973 மார்ச் 26

இணைப்பு III.

[56-ம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

மானியக் கோரிக்கை எண்—4.

பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

பொது விற்பனை வரியும் அது போன்ற பிற வணிக வரிகளும் தமிழ் நாட்டுக்குப் பெருமளவு வருவாயைத் தருகின்றன. மாநிலத்திற்குக் கிடைக்கும் வரி வருவாயில் இந்த வரிகள் நீண்ட காலமாகவே பெரும் பங்கு வகித்து வருகின்றன. குறிப்பாக இம்மாநிலத்தில் வாணிபமும் தொழிலும் தற்போது நன்கு வளர்ச்சியடைந்து வருவதற்கேற்ப, இவையும் தொடர்ந்து முக்கிய பங்காற்றி வருகின்றன. 1966—67-ல் வணிக வரிகள் மூலம் ரூ. 56.10 கோடி கிடைத்திருக்க, 1971—72-ல் ரூ. 110.82 கோடி கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

2. வணிக வரித் துறை, கீழ்க்காணும் சட்டங்களைச் செயற் படுத்தி வருகிறது :—

(1) தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

(2) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

(3) தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

(4) தமிழ் நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

(5) தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டம்.

(6) தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

(7) தமிழ் நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(8) தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல் வரி) சட்டம்.

1973 மார்ச் 26]

3. கடந்த ஐந்தாண்டுகளில், வணிக வரித் துறை வசூல் செய்த வருவாய், மற்றும் அத்துறையின் செலவு குறித்த விவரங்கள் பின்வருமாறு :—

ஆண்டு.	வருவாய்.	செலவு.
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1967–68	6,495·21	133 32
1968–69	7,146·76	155·76
1969–70	8,258·38	170·78
1970–71	9,327·43	188 95
1971–72	11,081·99	264·10

1972–73 நிதி ஆண்டில், 1973 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 ஆம் நாள் வரை ரூ. 11,122 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. முந்திய ஆண்டில் இதே கால அளவில் ரூ. 9,595 இலட்சம் வசூல் செய்யப்பட்டது.

4. தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து, சட்டத்தை நிர்வகிக்கையிலும், நீதி மன்றங்களின் சில தீர்ப்புகளின் விளைவாகவும், இச் சட்டத்தின் விதிகள் சிலவற்றைச் செயல்படுத்துவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. இச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் பொருட்டு, இச் சட்டத்தின் விதித் துறைகள் சிலவற்றைத் திருத்துவதற்காக அடங்கல் சட்ட வரைவு ஒன்று 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் சட்ட மன்றப் பேரவையில் முகவுரைக்கப்பட்டது. இச் சட்ட வரைவு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. இறுதியாக, இச்சட்ட வரைவு, "தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்தச்) சட்டம்" (தமிழ் நாடு சட்டம் 31/1972) என்ற பெயரில் சட்டமாக நிறைவேற்றப் பட்டு 1—12—1972 முதல் செயலுக்கு வந்தது. இத் திருத்தச் சட்டத்தின் முக்கியக் கூறுகளாவன :—

(1) இச் சட்டத்தின்கீழ் வணிகர் ஒருவரால் வரியாக வசூலிக்கப்படும் தொகை எதுவும் மொத்த வாணிகத் தொகையில் சேர்க்கப்படக் கூடாது என்பதற்கேற்ப பொருள் விளக்கம் ஒன்று மூலச் சட்டத்தின் 2 (r) பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.

(2) தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3(3) பிரிவின்கீழ் இணைப்புப் பாகங்கள் மீதான வரி வீதம் 2½ சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது.

(3) பதிவு பெற்ற ஒரு வணிகர் நீங்கலாக வேறு ஒருவர் வரி வசூலிப்பதும், பதிவு பெற்ற வணிகர் ஒருவர், இச் சட்டம் அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகள் ஆகியவற்றிற்கு முரணாக வரி வசூலிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

(4) வண்டிகளில் அனுப்பப்படும் பொருள்கள் விற்கப் பட்டுள்ளனவா அல்லது வாங்கப்பட்டுள்ளனவா என்றும், அத்தகைய விற்பனை அல்லது கொள்முதல் இச்சட்டத்தின் கீழ் வரி விதிப்புக்குட்படத்தக்கதா என்றும், அவ்வாறு வரி விதிக்கப்படத்தக்கதாயிருப்பின் மேற்படி வரி செலுத்தப் பட்டுள்ளதா என்றும், உறுதி செய்துகொள்ளும் பொருட்டு, வண்டிகளையும் பொருள்களையும் நிறுத்தி வைப்பதற்கு வகை செய்யும் புதிய பிரிவு ஒன்று மூலச் சட்டத்தின் 42-வது பிரிவிற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்யப்பட்டு அவை, 31—1—1973 அன்று தமிழ் நாடு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளன.

5. தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையின் கீழ் குறிப்பிட்டுள்ள 'ரியர் டம்புகள்' (Rear Dumps), சுமை எடுத்துச் செல்லும் இயந்திரங்கள் (Loadess), பாதை மண்வாரிச் சமனிடும் இயந்திரம் (Scrpers) மண்வாரி டிரக்குகள் (Forklift Trucks) போன்ற மண்வாரி இயந்திரங்களையும் அவை போன்ற பிறவகை இயந்திரங்களையும் வகைப்படுத்துவதில் உள்ள இடர்ப்பாடுகளைக் களையவும், அந்த இயந்திரங்கள் குறித்து வரி வீதத்தை முடிவு செய்யவும் வேண்டி அரசு, மேற்குறிப்பிட்ட இயந்திரங்களை வகைப்படுத்தி, அதனை முதலாம் அட்டவணையில் 55- -வது இனமாகக் குறிப்பிட்டும், மாநிலத்தில் 21—2—1973 முதல் அந்த இயந்திரங்களின் முதல் விற்பனை முனையில் 9 சதவீதம் என வரி வீதத்தை முடிவு செய்தும், அறிவிப்பு ஒன்றை வெளி

யிட்டுள்ளது. இந்த அறிவிப்புக்குப் பதிலாக, தேவையான சட்டம், சட்ட மன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

6. தொழில், வணிக முறைகளின் மாற்றங்கள், நீதி மன்றங்கள் இச்சட்டத்திற்கு அளித்துள்ள பொருள் விளக்கங்கள், சட்டங்களில் உள்ள 'தப்பிக்கும் வழிகள்' (Loopholes) ஆகியவற்றினால் ஏற்படும் சூழ்நிலையைச் சமாளிக்க, சட்டம், பகுதி பகுதியாக அவ்வப்போது திருத்தப்பட்டுள்ளது. வரி அமைப்பு சட்டப்படிக்கான நடைமுறைகள், நடவடிக்கைகள் ஆகியவற்றை எளிதாக்கவும், சீரமைக்கவும் வேண்டும் என வணிக-தொழில்கள் கழகம் அரசுக்கு முறையீடு செய்துள்ளது. எனவே, தமிழ் நாடு பொது விற்பனை வரிகள் சட்டம், வணிக வரிகள் தொடர்பான இது போன்ற பிற சட்டங்கள், மற்றும் அவற்றின்கீழ் செய்யப் பட்ட விதிகள் ஆகியவற்றின் அமைப்பை எளிதாக்கவும், சீரமைக்கவும், அரசு, தனி அதிகாரி ஒருவரை நியமித்தது. இவ்வதிகாரி, விற்பனை வரி மேல் முறையீட்டு தீர்ப்பாயம் மற்றும் அதன் மேல் முறையீட்டு துணை நீதிமன்றங்கள் உட்பட வணிக வரிகள் துறையின் நிர்வாக அமைப்பு ஆகியவை பற்றியும் ஆய்வுரை வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

7. மஹாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் வரி விதிப்பு முறையில் சிறப்பான நன்மைகள் எவையேனும் இருப்பின் அவற்றை நமது வரி விதிப்பு முறையிலும் கடைப்பிடிக்கவியலும் வகையில், அம்மாநிலங்களின் வரி விதிப்பு முறை பற்றி ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க, வணிக வரிகள் துறை உதவி ஆணையாளர்கள் இருவரை அம்மாநிலங்களுக்கு அரசு, முகமையில் அனுப்பியது. குறிப்பாக, சிறு தொழில் களுக்கு விலக்கு அளித்தல், இணைப்பு பாகங்கள் மீதான வரியைத் தள்ளுபடி செய்தல், முதல் முனை வரிக்குப் பதிலாக இறுதி முனைவரி விதித்தல், வணிகர்களுக்கிடையே நடைபெறும் வியாபார நடவடிக்கைகள் மீதான வரிகளுக்கு விலக்கு அளித்தல் ஆகியவை தொடர்பாக அம்மாநிலங்களின் வரி விதிப்பு முறைகள் பற்றி ஆய்வு செய்யுமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அவ்வதிகாரிகள் சமர்ப்பித்த அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

8. முக்கியமான இடங்களில் அமைக்கப்படும் சோதனைச் சாவடிகள் எப்பொழுதுமே, வரி ஏய்ப்பு செய்வதைத் தடுக்க குறிப்பிடத்தக்க அளவில் உதவியாக இருந்து வருகின்றன. ஏற்கனவே, இம்மாநிலத்தில் பல்வேறு இடங்களில் அறுபத்து மூன்று சோதனைச் சாவடிகள் உள்ளன. 1972–73-ல், மதுரை கோட்டத்தில் விருதுநகரைச் சுற்றி நான்கு கூடுதல் சோதனைச் சாவடிகளையும், திருச்சிராப்பள்ளி கோட்டத்தில் ஆவணம் என்னும் இடத்தில் ஒன்றும் அரசு அமைத்துள்ளது.

9. பல்வேறு வணிக அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டியுள்ள வணிகர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுப்பதில் அரசு எப்பொழுதுமே முயற்சி எடுத்து வந்துள்ளது. போதிய இட வசதி இல்லாத வாடகைக் கட்டிடங்களில் இத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்க இயலாது. எனவே, வணிக வரி அலுவலகங்களுக்கான கட்டிடங்கள் கட்டும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. உதகமண்டலம், சேலம், ஆகிய இடங்களில் கட்டப்பட்ட அரசுக் கட்டிடங்களில், ஏற்கனவே வணிக வரி அலுவலகங்கள் செயல்படத் தொடங்கிவிட்டன. 1973–74 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், திண்டுக்கல், தூத்துக்குடி, ஆகிய இடங்களில் வணிக வரி அலுவலகங்களுக்காக கட்டிடங்கள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரில், வணிக வரி மண்டலம் ஒவ்வொன்றிற்கும், தனியாக வணிக வரி அலுவலகக் கட்டிடங்கள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. வணிக வரித் துறை அதிகாரிகளுக்குக் குடியிருப்பு வசதியளிப்பதன் மூலம் அவர்களுக்குக் குறைந்த அளவு வசதிகள் அளிக்கப்பட வேண்டுமென்பதிலும் அரசு அக்கறை கொண்டுள்ளது. 1972–73-ல் மூன்று வணிக வரி துணை ஆணையாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கூட்டு வணிக வரி அதிகாரிகளுக்காக 74 குடியிருப்புகளும், துணை வணிக வரி அதிகாரிகளுக்காக 142 குடியிருப்புகளும் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

10. விற்பனை வரிச் சட்டங்கள் பற்றி எல்லா வணிகர்களும் வாணிபச் சங்கங்களும் தெளிவாக அறிந்துகொள்ளவியலும் பொருட்டு, இத் திட்டத்தின் கீழ் தங்களது பெயர்களைப் பதிவு

செய்துள்ள வணிகர்கள், வணிக நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவற்றிற்கு வணிக வரிகள் தொடர்பான அவசரச் சட்டங்கள், சட்ட வரைவுகள், சட்டங்கள், விதிகள், பத்திரிகை வெளியீடுகள் முதலியவற்றின் நகல்களை வழங்குவதற்கான திட்டம் ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது. இத் திட்டம் 1973 ஜனவரியிலிருந்து செயலில் உள்ளது.

11. தமிழ் நாடு, 1959 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரிகள் சட்டம்—வரி விலக்கு அளித்தலும் வரி வீதக் குறைப்பும்—தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 17-வது பிரிவின்கீழ் வரி விலக்கு அளிக்க அல்லது வரி வீதத்தைக் குறைக்க அரசுக்கு அதிகாரங்கள் உண்டு. 1972–73 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட முக்கியமான வரி விலக்குகளும், வரிக் குறைப்புகளும் வருமாறு :—

(1) பர்மா, இலங்கை அகதிகளால் விற்கப்படும் பொருள்களின் விற்பனைக்குத் தொடக்க நிலையாக 19—4—1972 முதல் இரண்டாண்டு காலத்திற்கு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. ஆனால், அவர்களின் மொத்த பற்று வரவு ஆண்டொன்றுக்கு ரூ. 50,000-க்கு மேற்பட்டிருக்கக்கூடாது. அத்துடன், அவர்கள் அகதிகள் கூட்டுறவு நிதி வழங்கு-வளர்ச்சி வங்கியிலிருந்து வர்த்தகக் கடன்கள் பெற்றிருக்க வேண்டும்.

(2) கல்வி நிலையங்களால் மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படும் நோட்டுப் புத்தகங்கள், எழுதுபொருள்கள், சீருடைகள் ஆகியவற்றிற்கு மட்டும் முன்னர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. மேற்படி நிலையங்கள் தற்போது தமிழ் நாடு, 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படத்தக்க பதிவுக் கட்டணங்களிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.

(3) பம்பாயிலுள்ள கதர், கிராமத் தொழில் ஆணைக் குழுவின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இயங்கிவரும் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களால் விற்பனை செய்யப்படும் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

[1973 மார்ச் 26

(4) சென்னை, ஆவடியிலுள்ள போர்த் தளவாடக் கிடங்கிற்கு பொருள்களை விற்பனை செய்வதால் தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ஒரு விற்பனையாளரால் செலுத்தப்படும் வரி மாநிலங்களுக்கிடையிலான வீதமளவிற்கு அதாவது 3 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ் நாடு மாநிலத்திற்கு வெளியேயுள்ள கிடங்கு ஒன்றிற்காகத்தான் அப்பொருள்கள் வாங்கப்பட்டன என்றும், அப்பொருள்கள் அக்கிடங்கிற்கு அனுப்பப்பட்டு விட்டன என்றும் கண்டுள்ள சான்றிதழை, அத்துறையின் பொருத்தமான அதிகாரியிடமிருந்து பெற்றுத்தர வேண்டும்.

(5) சென்னை, இந்தியன் ஆர்கானிக் கெமிகல்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பாலியெஸ்டர் நெட்டிழைகளின் விற்பனையின் மீதான வரி, தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் 3½ சதவீதத்திலிருந்து முதற்கண் மூன்றாண்டுக் கால அளவுக்கு 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(6) அறிவிக்கப்பட்ட பொருள்களை விற்பனை செய்தல்/வாங்குதல் இவற்றுக்கு தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டத்தின்கீழ் மேல் வரி விதிக்கப்படுவதினின்று விலக்களிக்கப்பட்டுள்ளது.

(7) இடிக்கி புனல் மின்சக்தி திட்ட கட்டுமானப் பணிகளுக்காக கேரள மாநில மின் வாரியத்திற்கு தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சாலைகளால் தேனி இரயில் நிலையத்தில் விற்பனை செய்யப்படும் சிமிட்டியின் மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(8) கன்னியாகுமரி விவேகானந்தர் நினைவுப் பாறையில், இராமகிருஷ்ண பரமஹம்சரின் படம், மற்றும் சுவாமி விவேகானந்தரின் வெண்கலச் சிலை படம் ஆகியவற்றின் விற்பனைக்கும் விற்பனை வரியினின்று விலக்களிக்கப்பட்டுள்ளது.

12. தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைச் சட்டம்.—1967 முதல் 1972 ஆம் ஆண்டு வரை, தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு,

1973 மார்ச் 26]

பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் அரசுக்குக் கிடைத்த வருவாய் பின்வருமாறு :—

ஆண்டு	மொத்த வருவாய். (ரூபாய் இலட்சத்தில்.)
1967–68	4,202
1968–69	4,620
1969–70	5,394
1970–71	6,173
1971–72	7,412

1972–73 ஆம் ஆண்டில், 1973 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28 ஆம் நாள் வரை ரூ. 7,526 இலட்சம் வசூலிக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, கடந்த ஆண்டில் இதே கால அளவில் ரூ. 6,390 இலட்சம் மட்டுமே வசூலிக்கப்பட்டது.

18. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.—1967 முதல் 1972 ஆம் ஆண்டு வரை மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் கிடைத்த வருவாய் பின்வருமாறு :—

ஆண்டு.	மொத்த வருவாய். (ரூபாய் இலட்சத்தில்.)
1967–68	1,027
1968–69	1,062
1969–70	1,256
1970–71	1,400
1971–72	1,571

1972–73 ஆம் ஆண்டில், 1973 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28 ஆம் நாள் வரை ரூ.1,614 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இதே கால அளவில் ரூ. 1,403 இலட்சம் மட்டுமே வசூலிக்கப்பட்டது.

அண்மையில் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 1972 ஆம் ஆண்டு, மத்திய விற்பனை வரி (திருத்தச்) சட்டத்தின் விதித் துறைகள், 1—4—1973 முதல் செயலுக்கு வருமென்று, இந்திய அரசு அறிவித்துள்ளது. அதன் விளைவான மத்திய விற்பனை விதிகளின் திருத்தங்களும், 1—4—1973 முதற்கொண்டு செயலுக்கு வரும்.

14. தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டம்.—தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் வரியானது, எண்ணெய் நிறுவனங்கள் விற்கும் மோட்டார் எண்ணெயின் முதல் விற்பனையின்மீது விதிக்கப்படும் ஒருமுனை வரியாகும். பெரிய எண்ணெய் வழங்கு நிறுவனங்கள், சென்னை எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை ஆகியவற்றின் தலைமை அலுவலகங்கள் சென்னை மாநகரில் இருப்பதால், இங்குப் பெருமளவு வரி வசூலிக்கப்படுகின்றது.

மாநிலத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்வதற்காகத் தமிழ் நாட்டிற்குள் விற்கப்படும் சென்னை எண்ணெய்த் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலையின் பெட்ரோலியத் துணைப் பொருள்களைப் பொறுத்தமட்டில் மாநிலங்களுக்கிடையேயான விற்பனையின்மீது விதிக்கப்படுவது போலவே, 3 சதவீதம் வரி விதிப்பதன்மூலம் அரசு சலுகை வழங்கியுள்ளது. ஆனால், இத்தகைய விற்பனைகள்மீது விதிக்கப்படும் வரியிலிருந்து முற்றிலும் விலக்களிக்க வேறு சில மாநிலங்கள் ஒப்புக் கொண்டிருப்பதால், இம்மாநிலத்திலும் அவ்வாறே விலக்களிக்குமாறு இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. சம்பந்தப்பட்ட எல்லா மாநில அரசுகளும் இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று இந்திய அரசுக்கு இவ்வரசு ஏற்கனவே தெரிவித்துள்ளது. ஆனால், இந்திய அரசு, இம்மாநிலத்தில் பயன்படுத்தப்படும் பெட்ரோலியம் பொருட்களுக்கு ஏற்கனவே விற்பனை விலைக்கு மேல் வரி விதித்துள்ளது. மாநிலங்களுக்கிடையிலான விற்பனையில், இம்மாநில அரசால் விதிக்கப்படும் வரியால் இந்திய எண்ணெய்க் கழகத்திற்கு ஏற்படும் இழப்பினை ஈடுசெய்வதற்காக அவ்வாறு விதித்துள்ளதாக இந்திய அரசு கூறுகிறது. இது குறித்து எடுக்கப்பட வேண்டிய மேல் நடவடிக்கை பற்றி அரசு பரிசீலித்து வருகின்றது.

தமிழ் நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் வரி விதிப்புச் சட்டம், தமிழ் நாடு சட்டம் 8/1972-ஆல் திருத்தப் பட்டுள்ளது. இச்சட்டம், அதன்கீழ் அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது மற்ற தொகை, அரசால் திருப்பித் தரப்பட வேண்டிய தொகை எதனையும் மிக அண்மையிலுள்ள ரூபாய்க்கு முழுமைப்படுத்த வகை செய்கிறது. இத்திருத்தம் 1—4—1973-ஆம் நாள் முதற்கொண்டு செயலுக்கு வரும். இந்திய அரசு ஏறத்தாழ முக்கியமான நாடுகள் அனைத்துடனும் இருதரப்பு உடன்பாடு ஒன்று செய்து கொண்டிருப்பதாலும், அந்நாடுகளில் விமானப் போக்குவரத்து நடத்திவரும் 'ஏர் இந்தியா நிறுவனம்' அரசு வரிகள்/தீர்வைகளிலிருந்து முழுவிலக்கு பெற்றுள்ளதாலும், அனைத்து நாடுகளின் விமானங்களால் வாங்கப்படும் விமான எண்ணெய்க்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட வேண்டும் என இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இந்திய அரசின் விருப்பத்திற்கிணங்க, தமிழ் நாடு அரசு, தமிழ் நாட்டிற்கு/தமிழ் நாடு வழியாக/முறையாக குறிக்க, காலங்களில் விமானப் போக்குவரத்துப் பணியை இயக்குகிற ஒரே வெளிநாட்டு நிறுவனம் ஏர் சிலோன் மட்டுமானதால், ஏர்சிலோன் நிறுவனத்திற்கு விற்கப் பட்ட விமான எண்ணெய்க்காக அதனால் செலுத்தப்பட்ட விற்பனை வரியினை அந்நிறுவனத்திற்குத் திருப்பித்தர ஆணையிட்டுள்ளது. இலங்கையில் ஏர் இந்தியா விமானங்களுக்கு வரிகள் அல்லது தீர்வைகள் விதிக்கப்படுவதில்லை.

மேற்படி சட்டத்தின்கீழ், 1967-ஆம் ஆண்டிலிருந்து 1972-ஆம் ஆண்டுவரையிலான கால அளவில் கிடைத்த வருவாயின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	மொத்த வருவாய் (ரூபாய் இலட்சத்தில்.)
1967–68	514
1968–69	564
1969–70	685
1970–71	716
1971–72	914

[1973 மார்ச் 26

19. வணிக வரிகளினால், மாநில அரசுக்கு எப்பொழுதும் கணிசமான வருவாய் கிடைத்து வந்துள்ளது. இது மாநில மொத்த வருவாயில் சுமார் 30 சதவீதமாகும். வழக்கம்போல் 1972-73லும் வணிக வரி வசூலிப்பதில் வணிக வரித் துறை சிறந்த முறையில் செயலாற்றியுள்ளது. இத்துறையில் சிறந்த மரபுகள் சற்றும் குறையாமல் அரசு எதிர்பார்த்த அளவுக்குச் சாதனை புரிந்துள்ளது. வணிக வரிச் சட்டங்களை நிர்வகிப்பதில், வணிக வரித் துறையின், அதிகாரிகளும், வணிகர்களும் ஒத்துழைத்து இந்தச் சட்டங்கள் மாநிலத்திற்கு முழுமையாக நன்மை பயக்கும் நோக்கத்துடனும், வணிகர்களுக்கும் பொது மக்களுக்கும் எவ்வித இடர்ப்பாடுகளும் ஏற்படாவண்ணமும் ஒன்றுபட்டுச் செயல் படுவர் என அரசு நம்புகிறது.

HOW TO USE THE INDEX

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the man headinigs.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said main headings, i.e., ' Committee(s) ', ' Council(s) ', ' Corporation(s) ', etc.

Various subjects like schools, colleges, conferences, ports, temples and similar other board subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Paper land on the Table of the House are indexed only undr the Main Heading " Papers Laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

A.M/Ad.Motion	...	Adjournment Motion.
Ann.	...	Announcement.
B.O.H.	...	Business of the House.
C.A.	...	Calling Attention to a Matter of Urgent Public Importance.
C.A.St.	...	Calling Attention Statement.

1972-73-ஆம் ஆண்டில் 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி 28-ஆம் நாள் முடிய ரூ. 894 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. முந்திய ஆண்டில், இதே கால அளவில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 797 இலட்சமாகும்.

15. தமிழ் நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டம்.—தமிழ் நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் மூலம் 1967-ஆம் ஆண்டிலிருந்து 1972 வரையிலான கால அளவில் கிடைத்த தொகையின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	மொத்த வருவாய் (ரூபாய் இலட்சத்தில்.)
1967–68	332
1968–69	374
1969–70	384
1970–71	428
1971–72	513

1972-73-ஆம் ஆண்டில் 1973-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28-ஆம் நாள் வரையில் ரூ .584 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. ஆனால், முந்திய ஆண்டின், இதே கால அளவில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 447 இலட்சமாகும். கேளிக்கை வரிச் சட்டத்தின் மூலம் வசூலிக்கப்பட்ட தொகையில், 90 சத விதம் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படுகிறது.

திரைப்பட மாளிகையின் உரிமையாளர்களிடமிருந்து ஒவ்வொரு திரைப்படக் காட்சிக்கும், காட்சி வரியும் வசூலிக்கப்பட்டு, இம் மாநில நிதிக்கு வரவு வைக்கப்படுகிறது.

தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் கேளிக்கை வரி (திருத்த) சட்டத்தின்கீழ், இச்சட்டத்தின்கீழ் செலுத்த வேண்டிய கேளிக்கை வரி மீது, 1972-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாள் முதற்கொண்டு, கூடுதல் மேல் வரி ஒன்று விதிக்கப்பட்டுள்ளது. திரைப்படக் காட்சிகளைப் பொறுத்தவரையில், இவ்வரியானது, திரைப்படக் காட்சிக்கு அனுமதிக்கப்படுவதற்குச்

செலுத்தப்படும் கட்டணம் ஒரு ரூபாய்க்கு மேற்படாதபோது 5 காசாகவும், அவ்வாறு செலுத்தப்படும் கட்டணம் ஒரு ரூபாய்க்கு மேற்படும்போது 10 காசாகவும் இருக்கும். குதிரைப் பந்தயங்களைப் பொறுத்தவரையில், இவ்வரியானது, குதிரைப் பந்தயத்திற்கு அனுமதிக்கப்படுவதற்குச் செலுத்தப்படும் கட்டணம் ஐந்து ரூபாய்க்கு மேற்படாதபோது 50 காசாகவும், அவ்வாறு செலுத்தப்படும் கட்டணம் ஐந்து ரூபாய்க்கு மேற்படும்போது ஒரு ரூபாயாகவும் இருக்கும். இந்தக் கூடுதல் மேல் வரியில் உள்ளாட்சி மன்றங்களுக்குப் பங்கு ஏதுமில்லை.

நிதி திரட்டுதல், கல்வி அல்லது கலாச்சார நடவடிக்கைகள் ஆகியவற்றிற்காக நிறுவனங்களால் காட்டப்படும் திரைப்படக் காட்சிகளுக்கு, குறிப்பிட்ட சில நிபந்தனைகளை அவை நிறைவேற்றுவதற்கு உட்பட்டு, கேளிக்கை வரி செலுத்துவதிலிருந்து அவைகளுக்கு விலக்களிக்க 1970-ஆம் ஆண்டு மே திங்களில், அரசு தீர்மானித்தது. காட்சி வரி, மற்றும் கூடுதல் மேல் வரி செலுத்துவதிலிருந்தும் அத்தகைய காட்சிகளுக்கு விலக்களிக்க அரசு தற்போது முடிவு செய்துள்ளது.

16. தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.—தமிழ் நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின்கீழ், 1967 முதல் 1972 வரையில் கிட்டிய வருவாய் வருமாறு :—

ஆண்டு	மொத்த வருவாய். (ரூபாய் இலட்சத்தில்.)
1967–68	337
1968–69	382
1969–70	390
1970–71	428
1971–72	464

[1973 மார்ச் 26

1972-73-ல் 1973-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28-ஆம் நாள் வரையில் ரூ. 409 இலட்சம் வசூலாகியது. ஆனால் முந்திய ஆண்டில் இதே கால அளவில் ரூ. 415 இலட்சம் வசூலாகியது. கேளிக்கை வரி, காட்சி வரி ஆகியவற்றின்மீது மேல்வரியாக இவ்வரி விதிக்கப்படுகிறது. இவ்வரிவிதிப்பு வாயிலாகக் கிடைக்கக்கூடிய வருவாய் முழுவதும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன.

17. தமிழ் நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.—கிண்டி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் நடத்தப்படும் குதிரைப் பந்தயங்கள் மூலம் தமிழ் நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டத்தின்கீழ் வருவாய் கிடைக்கிறது. 1967 முதல் 1972 வரையில் கிடைத்த வருவாய் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

ஆண்டு.	மொத்த வருவாய். (ரூபாய் இலட்சத்தில்.)
1967–68	84
1968–69	145
1969–70	148
1970–71	182
1971–72	205

1972-73-ல் 1973-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28 ஆம் நாள் வரையில் ரூ. 95 இலட்சம் வசூலாகியுள்ளது. ஆனால், முந்திய ஆண்டில் இதே கால அளவில் ரூ. 143 இலட்சம் வசூலாகியது. 1972-73 ஆம் ஆண்டில் இந்த வரியின்கீழ் வருவாய் குறைந்துள்ளதற்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு :—

(1) குதிரைப் பந்தயங்களில் பங்கு கொள்ளும் பொது மக்களின் நலனுக்கென பணய ஒப்புனர்களை (Book Makers) அரசு நீக்கியுள்ளது.

(2) குதிரைப் பந்தயங்களில் வெற்றி பெற்றதற்காகக் கிடைக்கும் தொகைகளின் மேல் இந்திய அரசு வருமான வரி விதித்துள்ளது.

1973 மார்ச் 26]

தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய கேளிக்கை வரி (திருத்தச்) சட்டத்தின்கீழ் 1972 ஜனவரி முதல் தேதி முதற் கொண்டு குதிரைப் பந்தய வரியின் மீது 5 சதவீத மேல்வரி விதிக்கப்படுகிறது.

தமிழ் நாடு 1935-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம், தமிழ் நாடு சட்டம் 9/1972ஆல் திருத்தப்பட்டது. சட்டத்தின் விதித் துறையின்கீழ் அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது வேறு தொகை, அரசால் திருப்பித் தரப்பட வேண்டிய தொகை எதனையும் அதிக அண்மையிலுள்ள ரூபாய்க்கு முழுமைப் படுத்த இந்தச் சட்டம் வகை செய்கிறது.

'குதிரைப் பந்தய கணிப்புப் பொறி'களின் மீது ஐந்து சதவீதம் மேல்வரி விதிப்பதற்கும், அம்மேல் வரியை கடந்த தேதியான 1—1—1972-லிருந்து விதித்து வசூலிப்பதற்கும் 21—11—1972-ல் அவசரச் சட்டமொன்று சாற்றுரைக்கப்பட்டது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக பின்னர் சட்டப் பேரவையின் சட்டமொன்று இயற்றப்பட்டது.

18. இந்திய அரசு தொடக்கத்தில் உணவு தானியங்கள், உரங்கள் ஆகியவற்றின் வணிகத்தை வட்டார உணவு இயக்குநர் அலுவலகத்தின் வாயிலாகவும், 16—12—1968 முதல் இந்திய உணவுக் கழகத்தின் மூலமாகவும் நடத்தியது. அத்தகைய வணிகங்களினால் இந்த அரசுக்குச் சேரவேண்டிய விற்பனை வரி வசூலிப்பதில் பல ஆண்டுகளுக்குத் தகராறாகவே இருந்தது. தொடர்புடைய பிரச்சினைகள், பலவற்றில், இந்த அரசின் பிரதிநிதிகளும், மத்திய அரசின் பிரதிநிதிகளும் பேச்சு வார்த்தைகள் நடத்திய பிறகு தற்போது உடன்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளது 1—9—1964 முதற்கொண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், விற்பனை வரி செலுத்த வேண்டிய பொறுப்பினை இந்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டம், மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றின்கீழ் வட்டார உணவு இயக்குநர் அலுவலகம், இந்திய உணவுக் கழகம் ஆகியவற்றினால் இதுவரை வசூலிக்கப்பட்ட விற்பனை வரி முழுவதையும் இந்த அரசுக்குச் செலுத்துவதற்கும் இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

Consid.	...	Consideration stage of a Bill This stage includes : (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select /Joint Select Committee, etc.
Consid. Cl.	...	Consideration of clauses of a Bill.
D. E. E.	...	Demands for Excess Expenditure.
Dis. S. D. or D. S. D.	...	Discussion for short duration on an urgent matter of Administration.
D.S.G.	...	Demands for Supplementary Grants.
G.A.	...	Governor's Address.
G.D.	...	General Discussion.
H.A.H. Dis./H.H.D.	...	Half-hour Discussion.
Int.	...	Introduction stage of a Bill.
L.A.	..	Legislative Assembly.
L.C.	...	Legislative Council.
M.	...	Motion.
P.M.	...	Privilege Motion.
R/Res.	...	Resolution.
St.	...	Statement.

Index to Tamil Nadu Legislative Assembly Debates.

SEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

22nd, 23rd, 24th and 26th March 1973.

Volume XXXVII (Nos. 1 *to* 4).

A

PAGES.

ABDUL JABBAR, THIRU V. M.—

Budget, 1973-74, Voting—

Cinchona .. ..
Forest Department .. ..
Capital Outlay on Forests .. .. .. } 388-391

Drinking Water Supply Scheme, Pallappatti .. 366-367

Hospital at Pallappatti, opening of Clinical Laboratory 131-132

ACTS—

Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Act, extension 19-21

AGRICULTURE—

Compost manure depot at Tiruchirappalli, establishment 373-374

Italian experts, visit 372-373

Tapioca Cultivation, Killiyoor 7
Package Scheme 28-27

PAGES.

A—*cont.*

ALAGAMUTHU, THIRU T. P.—

Budget, 1973-74, Voting—

Cinchona .. ..
Forest Department .. .. } 387
Capital Outlay on Forests .. .. ..

ALAGARSAMY, THIRU S.—

Budget, 1973-74, Voting—

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, Milk Supply Schemes 500, 502 518-519

Cinchona .. ..
Forest Department .. .. } 386
Capital Outlay on Forests .. .. ..

Khadi .. .. 419, 423 -425

ALDA FOWLER, THIRUMATHI M.—

Budget, 1973-74, Voting—

Police 176-177

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—

Budget, 1973-74, Voting—

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, Milk Supply Schemes 514-516

General Sales Tax and Other Taxes and Duties—

Administration 561, 579 585, 591 600, 602

Khadi 447

PAGES.

A—*cont.*

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—*cont.*

Budget, 1973-74, Voting:—(cont)·

Motor Vehicles Acts—Administration—

Road Transport Schemes—

Capital Outlay on Road Transport Schemes .. 36, 76-79, 88

Police .. .. 152, 194 -198, 202-205

Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Act, extension 19-21

ARUMUGAM, THIRU C.—

By-Pass road near Madurantakam 24-25

ARUMUGAM, THIRU S.—

Budget, 1973-74, Voting—

Khadi 428-429, 430

Motor Vehicles Acts—Administration—

Road Transport Schemes—

Capital Outlay on Road Transport Schemes ... 70-72

B

BILL(S)—

District Municipalities (Amendment) Bill, 1973 Int. 493-494

Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1973 Int. 494

BOMMAN, THIRU K. H.—

Budget, a973-74, Voting—

Cinchona .. ..
Forest Department .. .. } 385, 398-400
Capital Outlay on Forests .. .. ..

B—*cont.*

BOMMAN, THIRU K. H—*cont.*

Budget, 1973–74, *Voting*—cont.

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes 34. 65–67

Inter-State Bus Services between Ooty and Bangalore 480–481

BUILDINGS—

District Courts and other courts in Erode, construction 365–366

C

CALLING ATTENTION—

Fertilizers, shortage and the consequent hardship to ryots in Thiruthani taluk 382–384

CEMENT.—

Arasu, advertisement for 459–460

CHAIR—

Announcements—

Arrest and release of Thiru S. M. Durairaj, M.L.A. :0

DSG 1973–74, Last hour and date for the receipt of cut Motion 498

Rulings and Observaitons—

Absence of Members—

On a Member of the ruling party raising a point of order and drawing the attention of the Chair to the absence of the Members be onging to the A.D.M.K., the chair observed that it was their privilege to participate in the debate and hence no point of order could arise .. 402

Adjournment Motions—

After a Minister had explained why consent need not be given to adjournment motion a Member could seek only clarification and not start an argument or debate or make allegations .. 490–491

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and observations—cont.

Failure to settle the dispute between the workers and the Management of WIMCO—

Consent was withheld as there was no need to discuss the matter in view of the explanation given by the Minister 148–151

Grave situation arising due to the non-acceptance of the proposal of the Tamil Nadu Government by the Central Government to nationalise the Madras Aluminium company—

Consent was withheld as there was no need to adjourn the other business of the House to discuss the matter after the explanation given by the Minister 381

Right of speech—

Only the Member who had given notice of the motion had got the right to give his views or clarifications or raise questions, and not others .. 483

Serious situation arising out of the closure of a section of Ennore Thermal Plant and the consequent curtailment of electricity production—

Consent was withheld as there was no need to adjourn the House to discuss the matter in view of the explanation given by the Minister .. 482–483,493

Accusation against Chair—

Some Opposition Members accused that the Deputy Speaker expunged those portions of the debate which were unpalatable to the Government as he belonged to the Ruling Party. The Deputy Speaker thereupon observed that he belonged to the Ruling Party only till he assumed his office, and he could not function as such once he assumed office as Speaker. When he took certain steps for the proper conduct of the business of the House, he could not be accused of being partial to the Government 167–168

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Allegations—

Allegations should not be made in a general way.. 354

Vague allegations should not be made against Ministers 155

Debate—

Allotment of time—

The Government Whip raised a point of order that though the Ruling Party had a strength of 175 Members, Opposition Parties were allotted more time. He requested the Chair to see that their interests were not encroached upon by the Opposition members. The Chief Minister endorsed the request. The Chair pointed out that since the Opposition Parties were in a minority, they were given more time than they were entitled to. He, however, suggested that the matter could be discussed in the meeting of the Business Advisory Committee and a decision taken after consulting leaders of parties 387–388

General Criticism—

If specific instances were brought to the notice of Ministers, it would enable the Government to investigate them and also give their reply general remarks which tend to lower the standard of efficiency of a department were not desirable .. 247

Interruptions—

A member should speak without provoking others to interrupt. Even if there were interruptions, a Member who held the floor need not yield. If he provoked others to interrupt, the time taken for such interruptions would be added to the time allotted to the Member 157

CHAIR—*cont.*

Rulings and Observations—*Cont.*

Debate—*cont.*

Deprecating frequent interruptions, the Deputy Speaker observed that such a practice would not only encroach upon the time and business of the House but also curtail the opportunity of other Members who had given their names to speak. If it was thought necessary to contradict the allegations made against a party, the leader of the party might intervene and do it or the other members of that party could do it when they got their chance to speak. Such a practice would help the conduct of the business of the House in a dignified manner 168–170

If a Member who held the floor did not yield, others could not interrupt him and they could tell their views to the Minister 272

Speeches to conform to rules—

Members should speak in the House as per the rules of procedure. Though they might be entitled to speak outside in a particular manner, it was not in order to refer to certain hit notices issued outside and seek permission to speak in the House on the subject matter of those notices .. 232

Truth to be spoken—

During debate, only truth should be spoken and there should be no distortion of truth .. 192

Decorum—

Members should address the Chair 547

Reference to individuals.—

It was not in order to particularise the name of an individual official 215

C—*cont.*

CHAIR—cont.

RULINGS AND OBSERVATIONS—cont.

Reference to Governor.—

A Member should not use the Governor's name for the purpose of influencing a debate 275

Reference to Mayor of Madurai Corporation—

It was not fair to comment about a person not present in the House 259

Expressions used in the House—

"*பொய்யான தகவல்கள்*" (False information). The Member who used the expression was advised to use the expression "*தவறான தகவல்*" (wrong information) 180

Expunction—

It was the responsibility of the person who occupied the Chair to expunge certain expressions used in the House in order to uphold the dignity of the House 163

Matters Sub Judice—

Though a Commission of Inquiry did not possess authority to award punishment, inasmuch as there was reference to the Commission of Inquiry performing judicial functions, considering the dignity of the House and that of the Commission, Members should avoid speaking about the matter pending before that Commission as otherwise it would affect the enquiry as such 197–201

Members.—

Arrest—

It was not necessary to get the permission of the Chair to arrest any Member. It was not incumbent on the Chair to go into the merits of the arrest of a Member. He was only to perform his duty of informing the House at the earliest opportunity possible about the arrest, detention or release of a Member 32

C—*cont.*

CHAIR—*Cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

PRIVILEGE MATTER—

Alleged distorted publication in 'Thennagam' *of the Chief Minister's answer to a question about Tamil Nadu House at Delhi*:—

With reference to the matter of privilege raised against the newspaper 'Thennagam', on 21st March 1973, the Deputy Speaker quoting the following observations of Sir Erskine May

'To print or publish any books or libels reflecting on the proceedings of the House is a high violation of the rights and privileges of the House and indignities offered to the House by words spoken or writings published reflecting on its character or proceedings, have been constantly punished by both the Lords and Commons upon the principle that such acts tend to obstruct the Houses in the performance of their functions by diminishing the respect due to them. Reflections upon Members, the particular individuals not being named or othewise indicated, are equivalent to reflections on the House....'

held that a *prima facie* case of breach of privilege had been made out, as the comments of the paper were not fair, the paper had attributed motive to the Chief Minister, it had also published incorrect and distorted version of the proceedings of the House and had also used undignified language in offering its comments.

C—*cont.*

CHAIR—*Cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Privilege Matter - *cont.*

Alleged distorted publication in 'Thennagam' of the Chief Minister's answer to a question about Tamil Nadu House at Delhi—cont.

The Deputy Speaker added .. .. ..

"However, the House should best consult its own dignity and allow the matter to rest with a warning to the paper to be more careful in future....I would like to take this opportunity to inform the Press that the best criticism is one which is given in a dignified way as is being done now by most of the leading papers. I hope other papers will emulate their example, and offer their co-operation in maintaining the dignity and decorum of Parlimentary democracy" 30–31

Questions and Answers:

Supplementary questions:—

A supplementary should not refer to a policy matter 18

Relevancy:—

Supplementaries should relate to the main question. If the supplementaries were to relate to a particular place, it would not be possible for the Minister to reply 124

CHIDAMBARAM, Thiru C. T.—

Budget, 1973–74, Voting.—

Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, Milk Supply Scheme 510–511

CHILD WELFARE.—

Family and Child Welfare Project at Gummudipoondi, starting 473–474

C—*cont.*

COLLEGE—

Pharmacists Courses at Madurai, selection of students 132–134

CONFERENCE.—

Vice-Chancellors of Southern States, decisions taken 466–467

CO-OPERATIVES.—

Beedi workers' co-operative societies, formation and development 137–139

Taxi-drivers' co-operative societies, details .. 362–365

CORPORATION.—

Madras, construction of an auditorium .. 358

COURT (S)—

Buildings in Erode 365–366

Munsiff's Court for Musiri, establishment .. 365

D

DENNIS, Thiru N.—

Applied Nutrition Programme for Killiyoor .. 119–122

Arasu Cements, advertisement for

Bharata Natyam, steps for development .. 459–460

7–10

Budget 1973–74, Voting—

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes .. 74–76

Civic tax pattern, review 467–471

Consumer Price Index for 1971, details .. 15–

Corporation of Madras, construction of an auditorium 358

D—*cont.*

DENNIS, THIRU N.—*cont.*

Iron deposits in Thiruvannamalai area, survey .. 461–462

Italian Agricultural Experts, visit 372 373

Marine Diesel Engine Factory, starting 456–459

Night service buses betweeen Nagercoil and Trivandrum 479–480

Para-psychological Research Institute, setting up. 134–137

Sea-erosion in coastal areas of Killiyoor, damages. 25–26

Tapioca cultivation, Killiyoor 26–27

Technological University, starting 464–466

Textile Corporation, opening of fair price shops for the sale of controlled cloth 363–362

Trawler Building project at Mandapam, starting.. 473

DEVARAJAN, THIRU M.—

Budget, 1973–74, Voting—

Cinchona, Forest Department, Capital Outlay on Forests 395–396

Police 180–182

DEVENDIRAN, THIRU, A.—

Budget, 1973–74, Voting.—

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959—

Milk Supply Scheme 513–514

DHARMALINGAM, THIRU, N.—

Bus route between Madras and Salem via Thirukkoilur, resumption of services .. 481–482

DURAIMURUGAN, THIRU.—

Budget, 1973–74, Voting—

Police 188–192

D—*cont.*

DURAISWAMY, THIRU S.—

Conference of Vice-Chancellors of Southern States decisions taken 446–447

Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Act, extension 19–21

Panchayat Union Dispensaries, take over by Government 126–131

Television Station in Madras City, location .. 21–23

E

ETTIAPPAN, THIRU P.—

Budget, 1973–74, Voting—

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes .. 63–65

EXPUNCTION—

Budget, 1973–74, Voting—

Police .. .. 160, 165, 166, 179, 182, 187, 201, 258, 259.

F

FACTORIES.—

Marine Diesel Engine Factory, starting of .. 456–459

FINANCIAL BUSINESS—

Budget, 1973–74, Voting—

Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959 498–559

Milk Supply Schemes.
Cinchona
Forest Department
Capital Outlay on Forests, ... 384–418

General Sales Tax and other Taxes and Duties—Administration 560–603

PAGES

F—*cont.*

FINANCIAL BUSINESS—*cont.*

Budget, 1973-74, Voting—*cont.*

Khadi 418–448

Motor Vehicles Acts—Administration
Road Transport Schemes
Capital Outlay on Road Transport Schemes .. 32–105

Police 151–313

D. S. G. (Final) 1972-73 494–497

FINE ARTS—

Bharathanatyam, steps taken for development by Sangeetha Nataka Sangam 7–10

FISHERIES—

Trawler Building Project at Mandapam, starting .. 473

FOOD SUPPLY—

Essential commodities, distribution through fair price shops 142–143, 146

Procurement from dealers, levy increase .. 146–148

FREEDOM FIGHTERS—

Pension, irregular payment, representation .. 1–5

G

GANESAN, THIRU S.—

Budget, 1973-74, Voting—

Administation of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959 523–524

Milk Supply Schemes.
Police 174–176

Irrigation tanks, improvements 477–478

PAGES

G—*cont.*

GOPAL, THIRU M.—

Budget, 1973-74, Voting—

Motor Vehicles Acts—Administration
Road Transport Schemes
Capital Outlay on Road Transport Schemes .. 73–74

GURUSAMI, THIRU N. V.—

Sethusamudram Project, implementation .. 369–372

H

HALF-HOUR DEBATE—

Essential commodities, distribution through fair price shops, request 143–146

HANDE, DR. H. V.—

Budget, 1973-74, Voting—

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. 498, 499, 524–530

Milk Supply Schemes.

Cinchona
Forest Department
Capital Outlay on Forests 385–386

General Sales Tax and other Taxes and Duties—Administration 569–575

Motor Vehicles Acts—Administration
Road Transport Schemes
Capital Outlay on Road Transport Schemes .. 35, 37, 80–86, 103

Police 152, 233–242

Employees of Local bodies, pensionary benefits .. 351–352

Essential commodities, distribution through fair price shops, request (H.H.D.) 144, 145

H—*cont.*

HANDE, DR. H. V.—*cont.*

Failure to give correct information by the Minister for Industries (Point of Order) .. 377–378

Women's Welfare Department, Coimbatore and Ramanathapuram, Work Centres 139–140

HARIJAN WELFARE—

Concessions to Arunthathiyar 140–142

House-sites, Gummudipoondi 18

House-sites, Pennalurpettai 19

HOSPITALS AND DISPENSARIES.—

Pallappatti, Clinical Laboratory, opening .. 131–132

Panchayat unions dispensaries, take over by Government 126–131

I

INDUSTRIES—

Glucose Industries, starting 463–464

J

JAMES, THIRU J.

Arrest of Thiru S. M. Durairaj (Point of Information) 32

Budget, 1973–74 Voting—

Cinchona
Forest Department
Capital Outlay on Forests 386, 402-406

Khadi 419

Motor Vehicles Acts—Administration
Road Transport Schemes
Capital Outlay on Road Transport Schemes .. 33, 34, 35, 36.

Police 153

J—*cont.*

JAMES THIRU J.—*cont.*

Failure to settle the dispute between the workers and the Management of WIMCO (A.M.) .. 149–150

Essential commodities, distribution through fair price shops, request (H.H.D.) 144

JAYARAMAN, THIRU K.—

Glucose Industry, starting 463–464

JOTHI VENCATACHELUM, THIRUMATHI—

Budget, 1973–74, Voting—

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959
Milk Supply Schemes 511–513

Motor Vehicles Act—Administration
Road Transport Schemes
Capital Outlay on Road Transport Schemes .. 36

K.

KALIMUTHU, THIRU K.—

Budget, 1973–74, Voting—

Police 184–188

KANDASAMI, THIRU MANALI C.—

Budget, 1973–74, Voting—

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 502–506

Milk Supply Schemes.

Cinchona
Forest Department
Capital Outlay on Forests 406–409

KANNAPPAN, Thiru M.—
Budget, 1973-74, Voting—
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. 498-502, 531, 532, 538, 544-558.
Milk Supply Schemes.

KARTHEESAN, Thiru V.—
Budget, 1973-74, Voting :
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes .. 67-68

KARUNANIDHI, Dr. M.—
Budget, 1973-74, Voting—
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. 534-539, 559.
Milk Supply Schemes
Cinchona, Forest Department, Capital Outlay on Forests 387
Motor Vehicles Act—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 37
Police .. .. 151, 152, 153, 155, 157, 169, 171, 178, 180, 187, 199, 200, 203, 204, 253, 254, 255, 290-312, 313.
D. S. G. (Final), 1972-73, Presentation 494-497
Nationalisation of Madras Aluminium Company by Tamil Nadu Government disagreement by the Centre (A.M). 380-381

KATHIRAVAN, Thiru K. M.—
Budget, 1973-74, Voting—
Khadi 421-423

KAVERIMANIAM, Thiru C.—
Budget, 1973-74, Voting—
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 516-518
Milk Supply Schemes

KITTAPPA, Thiru N.—
Approved school, Thanjavur, number of boys lodged 474-477
Glucose Industry, starting 463-464
High School for Villianallur, Mayuram 123-126
Pension for family of Thiru. Sankaralinganar .. 5-6
Police investigation work, utilisation of dogs .. 367-3

KOTHANDARAMIAH, Thiru K. S.—
Budget, 1973-74, Voting—
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 499,
Milk Supply Scheme. 519-521
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 33

KRISHNAMOORTHI, Thiru V. (Nellikuppam)—
Budget, 1973-74, Voting—
Police 205-210

PAGES.

K—*cont.*

KRISHNAMOORTHI, THIRU V. (Nellikuppam)—*Cont.*

Budget, 1973-74, Voting—*Cont.*

General Sales Tax and Other Taxes and Duties—Administration 565-569, 601

L.

LABOUR—

Beedi Workers' Co-operative Societies, formation and development 137-139

Cinchona plantations, wage rates to labourers .. 27-29

LANDS—

Panchayat porambokes, tax collected from encroachers 11-15

LATHEEF, THIRU M. A.—

Budget, 1973-74, Voting—

Police 218-233

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 54-58

LOCAL BODIES—

Employees, introduction of pension and gratuity scheme 351-352

M.

MADHAVAN, THIRU S.—

Ennore Thermal Plant, Closure of a section and Curtailment of Electricity production (A.M.) .. 483-493

Failure to give correct information by the Minister (Point of order) 378, 379

PAGES

M—*cont.*

MADHAVAN, THIRU S.—*cont.*

Nationalisation of Madras Aluminium Company by Tamil Nadu Government, disagreement, by the Centre (A.M.) 375-377, 378-380, 381

MANIAN, THIRU P. S.—

Pharmacists courses at Madurai, selection of students 132-134

Taxi-drivers' Co-operative Societies, details .. 362-365

MARIMUTHU, THIRU A. R.—

Budget, 1973-74, Voting—

Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. 499, 500

Milk Supply Scheme.

Cinchona, Forest Department, Capital Outlay on Forests 409-411

Khadi 419, 430-433

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 34

Essential commodities, distribution through fair price shops, request (H. H. D.) 145

Marine Diesel Engine Factory, starting 456-459

MATHIALAGAN, THIRU K. A.—

Budget, 1973-1974, Voting.—

Administration of the Tamil Nadu Hindu Religious & Charitable Endowments Act, 1959 Milk Supply Scheme 530-540

PAGES

M—*cont.*

MATHIALAGAN, THIRU K. A.—*Cont.*

Budget, 1973-74, Voting—*cont.*:

Police 265-277

MEDICAL—

Para-psychological Research Institute, setting up .. 134-137

MILL(S)—

Textile Mills, take over of closed mills, assistance .. 358-360

MINES AND MINERALS—

Iron Deposits in Thiruvannamalai area, survey .. 461-463

MOTION(S)—

Ad. Motions :

Ennore Thermal Plant, Closure of a section and curtailment of electricity production 482-493

Nationalisation of Madras Aluminium Company by Tamil Nadu Government, disagreement by the Centre 374-381

WIMCO, failure to settle the dispute between the workers and the management 148-151

MUNICIPALITY—

Kulithalai Town Panchayat, upgrading 10-11

MUNUSAMI, THIRU R. R.—

Chembarambakkam tank, improvement 478-479

Procurement from dealers, increase of levy 146-148

MURUGAIYAN, THIRU S.—

Budget, 1973-74, Voting :

Cinchona, Forest Department, Capital Outlay on Forests 391-393

MUTHUVEL, THIRU N.—

Budget, 1973-74, Voting :

Motor Vehicles Acts—Administration, Road Transport schemes, Capital Outlay on Road Transport Schemes 53-54

PAGES

N

NARAYANASAMY, THIRU MANNAI, P.—

Budget, 1973-74, Voting :

Khadi 418, 419, 439-448

Fertilizers, shortage and consequent handship to the ryots in Tiruttani taluk (C. A. St.) 382-384

NARAYANASAMY, THIRU M. V.—

Budget, 1973-74, Voting:

Motor Vehicles Acts— Administration. Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 48-50

NATARAJAN, THIRU N. V.—

WIMCO, failure to settle the dispute between the workers and the management (A. M.) 150, 151

NATARASAN, THIRU E. M.—

Budget, 1973-74, Voting :

Cinchona, Forest Department, Capital Outlay on Forests 396-398

NEDUNCHEZHIYAN, Dr. V. R.—

District Municipalities (Amendment) Bill, 1973 .. 493-494

P

PALANISAMY, PULAVAR C.—

Harijan Welfare, concessions to Arunthathiyas .. 140-142

PALANISAMY, THIRU N. K.

Beedi workers' co-operative societies formation and development 137-139

Budget, 1973-74, Voting :

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 34, 45-48

PAGES

P—*cont.*

PALANISAMY, THIRU. N. K.—*cont.*

Ennore Thermal Plant, closure of a section and the curtailment of electricity production (A.M) .. 482–483

Essential commodities, distribution through fair price shops 142–143, 146

Nationalisation of Madras Aluminium Company by the Tamil Nadu Government, disagreement by the centre (A.M.) 378

Sethusamudram Project, implementation 369–372

Technological University, starting 464–466

PANCHAYATS—

Kulithalai Town Panchayat, upgrading 10–11

Nagapattinam Panchayat Union, bifurcation .. 357–358

Part-time clerks, details 353–357

Poramboke lands, tax collected from encroachers .. 11–15

Thiruvenkadu, Perunthottam and Sembanarkoil village Panchayats, upgrading 471–472

PAPERS LAID ON THE TABLE—

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959, Policy Note 604

Agricultural Produce Markets Act, 1959, Notification. 449

Children Act, 1920, Notification 603

Cinchona Department, Commercial Budget, 1973–74. 449

Cinchona Department, Policy Note 449

Dairy Development Department, Commercial Budget-1973-74 604

Demands—Road Transport Schemes, Capital outlay on Road Transport Schemes, speech by Minister for Transport 313

PAGES.

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—cont,

Forests, Policy note 449

General Sales Tax and other taxes and Duties, Policy Note 604

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1973 with annexure 604

Irrigation and Public Works Demands, Minister's Speech 105

Irrigation, Review 105

Khadi and Village Industries Board, Policy Note .. 449

Motor Vehicles Acts—Administration Demand, Minister's speech 106

Nationalised Transport, Review 106

Panchayats Act, 1958, Notification 603

Police, 1972–73, Review 313

Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973 449

Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill 1973, Annexure 604

Registration fee, exemption from payment in respect of the release deed to be executed by the Director of Agriculture, Notification 105

Road Development and Buildings Programme, Review 105, 106

Road Transport, Review 106, 313

State Transport, 1973–74, Commercial and performance Budget 313

Transport Corporation, Employees participation in the Equity Capital 313

Tuticorin Harbour Project and Sethusamudram Project, Review 105

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Water Supply and Drainage Board (Amendment) Bill 1973 449

Water Supply and Drainage Board (Amendment) Bill 1973, Annexure 604

PENSION—

Employees of Local Bodies, Introduction 351–352

Freedom Fighters, irregular payment 1–5

Sankaralinganar, Thiru, pension for family .. 5–6

PERUMAL, THIRU A. R.—

Budget, 1973–74, Voting:

Police 243–251

PERUMAL, THIRU S.—

Budget, 1973–74, Voting:

Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, Milk Supply Schemes 506–509

POINT OF INFORMATION—

Arrest of Thiru S. M. Durairaj 32

POLICE—

Investigation work, utilisation of dogs 367–369

PONNAPPA NADAR, THIRU R.—

Budget, 1973–74, Voting:

Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Acts 1959—Milk Supply Schemes 499, 540–544

Cinchona, Forest Department, Capital Outlay on Forests 385

PAGES.

P—*cont.*

General Sales Tax and other Taxes and Duties—

Administration 560, 585–589, 601

Khadi 429, 435–439

Police 277–289

Essential Commodities, distribution through Fair Price Shops, request (H.H.D.) 144

Nationalisation of Madras Aluminium Company by Tamil Nadu Government, disagreement by the Centre (A.M.) 378

PORTS—

Sethusamudram Project, implementation 309–372

PUBLIC HEALTH—

Applied Nutrition Programme for Killiyoor .. 119–122

PUBLIC WORKS—

Schemes in Gummudipoondi, inspection by Minister for Public Works, details 23–24

R

RAJA, THIRU A. M.—

Budget, 1973–74 Voting:

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 42–45

RAJAMANICKAM, THIRU A.—

Panchayat Union, Nagapattinam, bifurcation .. 357–358

RAJARAM, THIRU G.—

Budget, 1973–74, Voting:

Police 158–166

PAGES.

R—*cont.*

RAMACHANDRAN, THIRU S.—

Budget, 1973–74, Voting:

Motor Vechicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 32 33, 34, 35–37, 40, 52, 61, 78, 83, 84, 86–104

RAMAN, THIRU O. P.—

Budget, 1973–74, Voting:—

Cinchona .. .. }
Forest Department .. .. .. } 384, 385, 386, 411–417
Capital Outlay on Forests .. .. }

RAMASWAMY, THIRU E.—

Cinchona Plantations, wage rates to labourers .. 27–29

ROADS—

By-Pass road near Madurantakam 24–25

S

SADIQ PASHA, THIRU S. J.—

Budget, 1973–74, Voting:

Khadi 437

Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1973 494

SAMPATH, THIRU T. V.—

Budget, 1973–74, Voting:

Motor Vechicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 58–59

Panchayats with a population of five thousand people, upgrading 471–472

PAGES.

S—*cont.*

SANGUMUTHU THEVAR, THIRU S.—

Central Kitchens in Tirunelveli district, number .. 347–351

Panchayat Union Dispensaries, proposal to take over by Government 126–131

Pension for Freedom Fighters, irregular payment, representation 1–5

Tanks near Mukkudal, breaches 479

SANKARALINGANAR—

Pension for family 5–6

SCHOOL (S)—

Appavaram, Gummudipoondi Panchayat Union, opening 123

Central Kitchens in Tirunelveli district, number .. 347–351

Villianallur, Mayuram 123–126

SEA EROSION—

Coastal areas of Killiyoor, damages 25–26

SETHUSAMUDRAM PROJECT—

Implementation 369–372

SHANMUGAM, THIRU P. U.—

Budget, 1973–74, Voting:

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, Milk Supply Schemes 533, 537, 538, 539, 548

General Sales Tax and other Taxes and Duties—Administration 560, 561, 589–602

SIVAPRAKASAM, THIRU D. S. A.—

Panchayats, Part-time clerks, details 353–357

PAGES

S—cont.

SOCIAL WELFARE—
Approved School, Thanjavur, number of boys lodged 474–477

SOUNDARAPANDIAN, THIRU P.—
Compost manure Depot at Tiruchirappalli, establishment 373–374
Kulithalai Town Panchayat, upgrading as Municipality 10–11
Munsiff's Court for Musiri, establishment .. 366

STATISTICS—
Consumer Price Index for 1971, details 15–17

SUBBIAH, THIRU. A. K.—
Budget, 1973-74, Voting :
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959, Milk Supply Schemes 499

SUBRAMANIAM, THIRU K. M.—
Budget, 1973-74, Voting:—
Cinchona .. .. } 393–395
Forest Department .. .. }
Capital Outlay on Forests .. .. .. } 417

General Sales Tax and Other Taxes and Duties—
Administration 560, 561–565, 600

Khadi 426–428

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 33, 38–42 103–104

Police 152

PAGES

S—cont.

Essential commodities, distribution through fair price shops, request for H.H.D. 145
WIMCO, failure to settle the dispute between the workers and management (A. M.) 149

SUBRAMANIAN, THIRU M.—
Building for District Courts and other Courts in Erode, construction 365–366

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—
Budget, 1973–74, Voting:
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, Milk Supply Schemes 498, 500, 509–510
Police 153

SUNDARAM, THIRU O.N.—
Budget, 1973–74, Voting:
Police 153–158

SUPPU, THIRU K.—
Budget, 1973–74, Voting;
Police 152, 210–215

Private Express Buses in Ramanathapuram and Dharmapuri districts, overloading 453–56

SURENDRAN, THIRU M.— 15
Budget, 1973–74, Voting:
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 33, 59–63
Police 215–218
Kothaneri taluk, improvements 479

S—*cont.*

Nationalisation of Madras Aluminium Company by Tamil Nadu Government, disagreement by the Centre (A.M.) 381

SWAMIDHAS, THIRU A.—

Budget, 1973-74, Voting:

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959, Milk Supply Scheme 500

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 50-53

T

TANGAMANI, THIRU K. T. K.—

Budget, 1973-74, Voting:

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, Milk Supply Schemes 557-559

Police 251-265

Ennore Thermal Plant, closure of a section and the curtailment of electricity production (A..M) .. 483, 490, 491-492

Essential commodities, distribution through fair price shops, request (H.H.D.) 143-144

WIMCO, failure to settle the dispute between the workers and the management (A.M.) 148-149 151

TANK (S)—

Chembarambakkam, improvements 478-479

Improvements 477-478

T—*cont.*

Kothaneri, improvements 479

Mukkudal, breaches 479

TAXES—

Civic Tax pattern, review 467-471

TELEVISION—

Station in Madras City, location 21-23

TEXTILE CORPORATION—

Fair price shops for the sale of controlled cloth,, opening 360-369

THOPPUR THIRUVENGADAM, THIRU—

Budget, 1973-74, Voting—

Cinchona .. ..
Forest Department .. ..
Capital Outlay on Forests .. .. .. } 400-402

THYAGARAJAN, THIRU E. S.—

Budget, 1973-74, Voting—

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, Milk Supply Schemes 521-523

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Roa Tdransport Schemes 68-69

Fertilizers, shortage and the consequent hardship to the ryots in Thiruthani taluk (C. A.) 382

PAGES.

T—*cont.*

TRANSPORT AND COMMUNICATIONS—

Bus route between Madras and Salem (via) Thirukkoilur, resumption of services 481-482

Express Buses, private sector in Ramanathapuram and Dharmapuri Districts, overloading 453-456

Inter-State Bus Services between Ooty and Bangalore 479-481

Night Service buses between Nagercoil and Trivandrum 479-480

U

UNIVERSITY—

Technological University, starting 464-466

V

VEERASAMI, THIRU N.—

Budget, 1973-74, Voting.—

General Sales Tax and other Taxes and Duties —Administration 602

VELAPPAN, THIRU C. V.—

Budget, 1973-74, Voting—

Police 177-179

VENKATASWAMY, THIRU B.—

Budget, 1973-74, Voting—

Khadi 419-421

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 33, 103

Police 182-183

PAGES

V—*cont.*

VEZHAVENDAN, THIRU K.—

Cinchona plantations, wage rates to labourers .. 27-29

Family and Child Welfare Project at Gummidipoondi, starting 473-474

House sites for Harijan , Gummudipoondi 18

House sites for Harijans, Pennalurpettai 19

Panchayat poramboke lands, tax collected from encroachers 11-15

Schemes in Gummudipoondi, inspection by Minister for Public Works, details 23-24

School at Appavaram, Gummudipoondi Panchayat Union, opening 123

W

WAGES—

Labourers, Cinchona Plantations 27-29

WAHAB, THIRU K. A.—

Budget, 1973-74, Voting:

Cinchona .. ..
Forest Department .. ..
Capital Outlay on Forests 385

General Sales Tax and other Taxes and Duties—Administration 561, 575-579

Khadi 433-435

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Transport Schemes 33, 34

PAGES

W—*cont.*

WAHAB, Thiru K. A.—*cont.*

Budget, 1973-74, Voting—*cont.*

Police 152, 171-174

Technological University, starting 464-466

Textile Mills, Financial Assistance to take over of closed Mills 358-360

WATER SUPPLY—

Drinking Water Supply Scheme for Pallappatti .. 366-367

WOMEN'S WELFARE—

Work Centres at Coimbatore and Ramanathapuram, establishment 139-140

61611

Y211,31'N73
31N73.3751